திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, இந்த வாகனங்களைப் பதிவு செய்த எண்களை எழுதும்போது ஒரு குறிப்பிட்ட நிறத்தில், ஒரு குறிப்பிட்ட அளவில் தான் எழுதவேண்டுமென்ற வரையறை உண்டா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : குறிப்பிட்ட நிறத்தில் தான் இருக்கவேண்டும் என்பது எனக்குத் தெரியும். குறிப்பிட்ட அளவிலும் இருக்க வேண்டும் என்றுதான் கருதுகிறேன்.

### தமிழ்நாடு மின் கழகக் கணக்காயர் சங்கம்

* 83 வினா.—திரு. சா. மெய்யப்பன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின் கழகக் கணக்காயர் சங்கத்திலிருந்து 1967 டிசம்பர் மாதத்தில் தமிழக நிர்வாகத்திலுள்ள குறைபாடுகளைக் குறிப்பிட்டும் குறைகளை நீக்க வழிகள் உரைத்தும் ஒரு கோரிக்கை மனு அனுப்பப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன்மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) அம் மனுவிலுள்ள கோரிக்கைகளின்மேல் நடவடிக்கை எடுப்பதற்காக அம்மனு மின் வாரியத்திற்கு அனுப்பப்பட்டது.

திரு. சா. மெய்யப்பன் : ஐயா, தமிழைப் பாட போதனை மொழியாகக் கொண்டு பயில்கின்றவர்களுக்கு மின்சார இலாக்காவில் வேலை கொடுப்பதற்கும், வேலையில் உள்ளவர்களுக்குத் துரிதமாக உயர்வு கிடைக்கச் செய்யவும் சலுகை அளிப்பதன் மூலம் தமிழ் ஆர்வத்தைப் பரப்ப இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : நிர்வாக சம்பந்தமாகத்தான் சில கோரிக்கைகள் அனுப்பியிருக்கிறார்கள். மின்சார வாரிய விதி 15-ன்படி பரிந்துரைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

DR. H. V. HANDE : While we are glad that it is under the examination of the Government, may we know from the Hon. Minister the exact details of the representations made and what are the main grievances that this Association has placed in the hands of the Government?

THE HON. THIRU O. P. RAMAN : The grievances represented by the workers relate not to appointments but to the administration of the Electricity Board.

DR. H. V. HANDE : My question relates to the petition submitted to the Government and the Hon. Minister has stated that it is under examination. So I want to know what are the main demands contained in that petition submitted to the Government?

THE HON. THIRU O. P. RAMAN : They relate to some of the proposals that should be carried out by the Electricity Board.



DR. H. V. HANDE : What are the proposals?

THE HON. THIRU O. P. RAMAN : Now I do not have details about them.

### 2. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி

#### (ii) வினா நேரத்தில் முழுவிவரங்கள் அளித்தல்.

DR. H. V. HANDE : Sir, on a point of order. When a question has been asked, it is the business of the Department to supply answer for it. Now the Hon. Minister has stated that the petition has been received and it is under examination. If the Department concerned has supplied . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. சட்டமன்ற நிகழ்ச்சி முறையில் தவறுகள் ஏதாவது இருந்தால் அதை பாயின்ட் ஆப் ஆர்டர் சம்பந்தமான விதிகளின் கீழ்க் கொண்டுவரலாம். ஆனால் இது இலாக்காவிடம் இருந்து அமைச்சர்கள் எல்லாத் தகவல்களையும் சேகரித்து துணைக் கேள்வி கேட்கிறபோது அவைக்கு வழங்கவேண்டும் என்பதாகும்.

DR. H. V. HANDE : Sir, I want to clarify the point. Sir, we have come here to get answers for questions. Now, the point is that the petition has been sent to the Hon. Minister and it is under examination. Are we not entitled to know what are their grievances and is it not incumbent on the Ministry to let us know at least what are their grievances? Is it not the duty of the Hon. Minister to pull up the Department whenever they fail to supply answers. Why are we here ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்வதை ஒப்புக்கொள்கிறேன். ஒரு கேள்வி கேட்கப்பட்டால் அது சம்பந்தமான முழு விவரங்களையும் அமைச்சர்கள் இலாக்காவிடம் இருந்து கோரிப் பெறவேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அதுபற்றி பாயிண்ட் ஆர்டர் எழுப்புவது முறையாகாது. சட்டப்பேரவை விதி முறைகளின்படி வேறு வகையில் இதை எழுப்பலாம்.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 2. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

#### வினா நேரத்தில் முழு விவரங்கள் அளித்தல்—தொடர்ச்சி.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, ஒரு விளக்கம். இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் பேரவைத் தலைவர் அவர்களே 'அமைச்சர்கள் ஒரு கேள்வி சம்பந்தப்பட்ட தகவல்களை எல்லாம் சேகரித்து துணைக்கேள்வி கேட்கிறபோது கொடுக்கவேண்டும்'

1969 ஆகஸ்ட் 22]

என்பதாக அமைச்சர்களைக் கேட்டுக்கொள்வது சரியாக இருக்காதா? எங்களுடைய உரிமைகளைக் காப்பாற்ற வேண்டியவர்கள் தாங்கள்தான்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* : உங்களுடைய யோசனையை ஏற்றுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, it is the business of the Chair to protect the rights of the hon. Members. Why don't you pull up the Minister......

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* : அதைத்தான் குறிப்பாகச் சுட்டிக்காட்டினேன். அமைச்சர்களுடைய கவனத்திற்கு சட்டப் பேரவை விதிகளின்படி வேறுவகையில் கொண்டுவரலாம். பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்புவது சரியல்ல.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்* : தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. ஹாண்டே அவர்கள் பேசும்போது அமைச்சர்களிடத்தில் இருந்து பதிலை வரவழைக்கவேண்டும் என்று வற்புறுத்திச் சொன்னார்கள். பதில் சொல்கிற உரிமை, சொல்லாமல் இருக்கிற உரிமை அமைச்சர்களுக்கு இருக்கிறது இல்லையா?

(டாக்டர் ஹாண்டே, திரு. வினாயகம், திரு. கருத்திருமன் ஆகியோர் ஒரே நேரத்தில் எழுந்தார்கள்.)

*திரு. பி. ஜி. கருத்திருமன்* : அமைச்சர்களைப் பதில் சொல்ல வைக்கின்ற உரிமை இருக்கிறது என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* : கேட்கின்ற வினாக்களுக்கு எல்லாம் அமைச்சர்கள் விடை கொடுத்துத்தான் தீரவேண்டும் என்பது இல்லை. ஆயினும் ஒரு கேள்வி போடப்பட்டால் அதற்கான முழுத் தகவல்களையும் இலாக்காவில் இருந்து அமைச்சர்கள் கோரிப் பெற்றாக வேண்டும். துணைக் கேள்விகள் போடுகிறபோது தேவையான விவரங்களைக் கொடுக்கவேண்டும், ஆகவே, அமைச்சர்கள் கூடுமானவரையில் எவ்வளவு அதிகமான விவரங்களைப் பெற்று துணைக்கேள்விகள் போடுகிறபோது பேரவைக்குத் தருகிறார்களோ அப்போதுதான் அதிகமான பயன் ஏற்படும். கேள்விகளுக்குப் பதில் சேகரிக்க அரசு செலவிடுகிற பணம் எவ்வளவு என்று தெரியும். அப்படி இருக்கிறபோது கேள்விகள் வருகிறபோது அவற்றுக்குப் போதுமான தகவல்களைச் சேகரித்து இலாக்காக்கள் அளிக்கவில்லை என்றால் கேள்வி போட்டுப் பயன் இல்லாத நிலை உருவாகும். ஆகவே துணைக் கேள்விகள் போடுகிறபோது கூடுமான வரையில் அதிகமான விவரங்களைத் தரக்கூடிய வகையில் இலாக்காக்களிடம் இருந்து அதிகமான விவரங்களைப்பெற்று அமைச்சர்கள் வைத்துக்கொள்ள முயற்சிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. பி. ஜி. கருத்திருமன்* : பதில் சொல்ல வேண்டிய உரிமை இல்லை என்று அமைச்சர் அவர்கள் அழுத்தமாகச் சொன்னதன் காரணத்தினால்தான் இதை நான் உரிமைப் பிரச்சினையாகக்



1969 ஆகஸ்ட் 22] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

கருதுகிறேன். பதில் சொல்வதற்கு உரிமை இல்லை என்று சொல்வது முறையா?

THIRU K. VINAYAKAM : Sir, on a point order. Due to some inadvertence, the Chair has skipped over one question and when we drew his attention to it, he stated that he would take it up after all the other quesions have been answered. Now the Chair has declared that the Question Hour is over. May I know how it is in order for the Chair to say that the Question Hour is over when we are hungrily waiting for an answer to that question.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* : கேள்வி கேட்கின்ற நேரத்தில் திரு. கோமதிசங்கர தீட்சிதர் அவர்கள் அவையில் இல்லை. ஆகவே அதை நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன்.

THE HON. THIRU O. P. RAMAN : Sir, I want to make a personal explanation.

MR. SPEAKER : In the Assembly Rules it is stated—

'A Minister to whom a question or a supplementary question is put may decline to answer it on the ground that to answer it would be against public interest.' 'A Minister to whom a supplementary question is put may decline to answer it without notice.'

ஆக இரண்டும் இருக்கிறது. உரிமை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டியே எல்லாக் கேள்விகளுக்கும் அமைச்சர்கள் பதில் தர மறுக்கிறார்களா என்று கேட்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

*திரு. பி. ஜி. கருத்திருமன்* : கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லாமல் இருப்பதற்கு உரிமை இருக்கிறது என்று வலியுறுத்திச் சொன்னார்கள். எங்களுக்கும் அதைக் கேட்பதற்கு உரிமை இருக்கிறது என்பதை வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறோம்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* : உறுப்பினர்களுக்கு கேட்பதற்கும் உரிமை இருக்கிறது, விடையளிக்காமல் இருப்பதற்கு அமைச்சர்களுக்கும் உரிமை இருக்கிறது . . . .

*திரு. சா. மெய்யப்பன்* : சில கட்டுப்பாடுகளுக்குட்பட்டு.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* : அதைத்தான் நானும் சொல்கிறேன், சில கட்டுப்பாடுகளுக்குட்பட்டுத்தான்.

1. It would be against public interest.
2. Without notice.

என்று விதிகளிலே சொல்லப்பட்டிருக்கிறது. எனவே இவற்றின்கீழ் அமைச்சர்கள் மறுப்பதற்கும் இடம் இருக்கிறது. அது இந்த மன்றத்திலே நடக்கின்ற நிகழ்ச்சிதான். 1957-லே இங்கே பேரவைத் தலைவர் கொடுத்திருக்கின்ற தீர்ப்பு இருக்கிறது.

On a point of order raised by a Member that a supplementary question put had not been answered by the Minister, the Speaker observed that he could not force a Minister to answer any question

and that if he did not answer any question and if the Member was not satisfied with the answer given by the Minister, the Member might put a separate question.

என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆக, கேட்கின்ற கேள்விகளுக்குப் பதில் கொடுக்கவேண்டுமென்று அமைச்சர்களைக் கேட்பதற்கு பேரவைத் தலைவருக்கு அதிகாரம் இல்லை.

THIRU K. VINAYAKAM : On a point of clarification, Sir. I know the implications of the questions that are put. May I ask whether the Hon. Minister is right in having information in his possession in the file readily available on the table of the House and withholding information? Is he right in withholding information when a specific question is put to elaborate the grievances as detailed by the deputationists?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அமைச்சர்களிடத்திலே போடுகின்ற கேள்விகளுக்கு உரிய விடைகளை தக்க துறைகளிலிருந்து சேகரித்துப் பதில் தருகிறார்கள். எந்த ஒரு விடையையும் மறுக்கவேண்டுமென்ற எண்ணம் எந்த அமைச்சருக்கும் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உறுப்பினர்கள் கேட்கின்ற வினாக்களுக்குரிய விடைகளைத் தருவதன்மூலம் தக்க விடைகளைக் கொடுத்ததோடு மட்டுமல்லாமல் அரசுக்கும் எடுக்கப்பட்டிருக்கின்ற நடவடிக்கைகளைப்பற்றிய தகவல்களும் கிடைக்கின்றன என்ற திருப்தியும் ஏற்படுகின்றது. கேள்வி கேட்கின்றவர்கள் விடைக்கு வெகுதூரம் சென்று அந்தச் சொல்லோடு தொடர்புடைய வரலாற்றுக்குக்கூட போய்விடுவார்கள். அவர்களுக்கு அதற்கு உரிமை இருக்கிறது. அமைச்சர்களும் நினைவில் உள்ளவற்றைக் கூடுமானவரையில் சொல்கிறார்கள். தங்கள் கையில் உள்ள விடைகளையும் சொல்கிறார்கள். விடைகள் இல்லாதவற்றிற்குத் தனிக் கேள்வி போட வேண்டுமென்று சொல்கிறார்கள். பொது நன்மைகளைக் கருதி பதில் சொல்வதன்மூலம் பல நிலைமைகள் ஏற்படக்கூடிய சூழ்நிலையிருந்தால் சொல்லாமல் இருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் பதிலை வைத்துக்கொண்டே சொல்லாமல் இருக்கலாமா என்று கேட்டார்கள். அவர்கள் பதில் வைத்திருக்கிறார்கள் என்பதை அவர்கள் எப்படிக் கண்டறிந்தார்கள்? அவர்கள் வைத்திருப்பதைக் கண்டறிவது அவர்களுடைய தவறாகும், கண்டறியத் தக்க வகையில் காட்டியதும் தவறாக இருக்கலாம். உறுப்பினர்களுடைய கருத்துக்களை உள்ளத்தில் வைத்துக்கொண்டு எவ்வளவுக்கெவ்வளவு தெளிவாக விடைகளைச் சொல்லமுடியுமோ அந்த அளவுக்கு இந்த அமைச்சரவை ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. பி. ஜி. கருத்திருமன் :* கனம் சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கம் சரி. எந்தக் கேள்விக்கும் கேட்ட அளவில் பதில் சொல்லமுடியாது ; உப கேள்விகளுக்கு உடனடியாகப் பதில் இருக்கமுடியாது. ஆனால் அமைச்சர் அவர்கள் பதில் [illegible] மறுப்பதற்கே உரிமை இருக்கிறது



என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் தவறாகச் சொல்லியிருந்தாலும் இருக்கலாம். முன்னாள் சபாநாயகர் கொடுத்த தீர்ப்பிலே அமைச்சர்கள் மழுப்பலாம், மறுக்கலாம் என்று இருக்கிறது. பாராளுமன்றத்திலே சபாநாயகராக இருந்த திரு. அனந்தசயனம் அய்யங்கார் அவர்கள் பாராளுமன்றத்திலே கேட்கின்ற கேள்விகளுக்கு அமைச்சர்கள் நியாயமான, நேர்மையான பதிலைச் சொல்ல உரிமை உடையவர்கள், அமைச்சர்கள் அப்படிச் சொல்லாவிட்டால் அமைச்சராக இருப்பதற்குத் தகுதியற்றவர்கள் என்று தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். கேட்கின்ற கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதில் சொல்லுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள். மக்களுக்கு கடமைப்பட்டிருக்கிறார்கள், மறுக்கமுடியாது, அதற்கு உரிமை கிடையாது என்று சொல்லியிருக்கிறார்கள் ஜனநாயக முறையிலே எல்லாம் சரியாக நடக்கவேண்டுமென்றால் தகவல் இப்பொழுது இல்லை என்று சொல்லலாம் அல்லது நோட்டீஸ் கேட்கலாம்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* பாராளுமன்றத்திலே திரு. அனந்தசயனம் அய்யங்கார் சொன்னதைப்பற்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது அவர்கள் அங்கே போயிருக்கும் பழக்கம் இருக்கிற காரணத்தாலே . . .

*திரு. பி. ஜி. கருத்திருமன் :* நான் அங்கே இருந்தேன், பழக்கம் என்ன ?

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* இருங்கள் சொல்கிறேன். பாராளுமன்றத்திலே இருப்பதைச் சுட்டிக்காட்டி இங்கே அப்படிச் செய்யவில்லை என்று மறைமுகமாகச் சொல்வதுபோல் படுகிறது. அமைச்சர்கள் கேள்விகளுக்குரிய பதில்களை இலாக்காக்களிலிருந்து வாங்கிக்கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அது வேறு. கொடுக்கிற கேள்விகளுக்குப் பதில்கொடுக்க மறுப்பதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறதா இல்லையா என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். "The Minister is at liberty" என்னை விட ஆங்கிலத்திலே புலமை உள்ளவர்கள், அதிகமாக ஆங்கிலம் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள்.

THIRU K. VINAYAKAM : That is an insinuation. The Hon. Speaker knows much better English than myself. He knows Queen's English and I know King's English.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* நான் யாரைச் சொன்னேன்?

*திரு. கே. விநாயகம்:* என்னைத்தான் சொன்னீர்கள் என்று நினைக்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* நான் அப்படிச் சொன்னவுடன் விநாயகம் அவர்கள் எழுந்திருப்பானேன்? நான் அவர் என்று எங்கே சொன்னேன்? குற்றம் உள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்று கூறுவார்கள். "Liberty" என்றால் என்ன பொருள் என்று எல்லோருக்கும் தெரியும்.

[பேரவைத் தலைவர்] [1969 ஆகஸ்ட் 22

The Minister is at liberty to say that he will not answer a supplementary question. என்று 1957-லே பேரவையை அலங்கரித்த சபாநாயகர் அவர்கள் தீர்ப்பளித்து இருக்கிறார்கள். கேள்விகள் கேட்பதற்கு உரிமை இருக்கிறது, அமைச்சர்கள் விடையளிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்திலே விடை அளிக்க முடியாத நிலைமையும் உண்டு என்பதற்கு நடைமுறை விதிகள் இருக்கின்றன.

(2) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி

(iii) விினாவிற்கு விடையளிக்க அமைச்சர் மறுத்தல்

திரு. டி. மார்டின் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரத்தை வீணாக்கக்கூடாது.

திரு. டி. மார்டின் : நேரத்தை வீணாக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்த விதியின்கீழ் நிற்கிறீர்கள்?

THIRU T. MARTIN : Under Rule 39 (a). I know that the time of the Assembly is precious.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது எல்லாம் வேண்டாம்.

THIRU T. MARTIN : Please allow me. If my mind is goggled, how can I freely express my opinion?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி, நீங்கள் சொல்லுங்கள்.

THIRU T. MARTIN : A Minister to whom a question or supplementary question is put may decline to answer it on the ground.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிலிருந்து நீங்கள் படிக்கிறீர்கள் ?

THIRU T. MARTIN : From the Assembly Rules corrected upto 31st January 1968.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மார்ச் 1968 வரை சரி செய்யப்பட்ட விதிகள் இருக்கின்றன.

திரு. டி மார்டின் : எங்களுக்கு அச்சடித்து இதைத்தான் கொடுத்து இருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. அதற்குப் பிறகும் கொடுத்து இருக்கிறீர்கள்.

THIRU T. MARTIN : The Hon. Speaker may please pass on that copy to me.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிச் செய்வது வேறு. டிபார்ட்மெண்டிலே ஒவ்வொரு முறையும் அச்சடித்துக் கொடுத்து இருக்கிறார்கள்.

THIRU K. VINAYAKAM : That copy has not been communicated to us.

MR. SPEAKER : No, I think it has been supplied to members.



1969 ஆகஸ்ட் 22]

THIRU T. MARTIN : A Minister to whom a question or supplementary question is put may decline to answer it on the ground .....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதைப் படிக்கிறீர்கள் ?

திரு. டி. மார்டின் : ரூல் 39 (எ).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 39(பி) என்று சொன்னீர்களே.

திரு. டி. மார்டின் : ரூல் 39 (எ) என்று சொல்லியிருக்கிறேன் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி, படியுங்கள்.

* THIRU T. MARTIN : Let us calmly approach this problem.

Rule 39 (a) A Minister to whom a question or a supplementary question is put may decline to answer it on the ground that to answer it would be against public interest.

(*b*) A Minister to whom a supplementary question is put may decline to answer it without notice.

The ruling just now quoted by you was given in the year 1957. The present rule 39 (*b*) has been introduced later on. Under the existing rule, the ruling given under a different set of rules cannot hold good. Sir, I want a clear ruling from the Chair regarding this. When a question is put, the Minister can say 'I want notice' or that he will not disclose the information or give the answer, as it would be against public interest. The words used here are 'may decline' and is the Minister right in saying that he *will not* answer ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த மன்றத்தில் 'மே' பற்றிய விவாதம் சென்ற முறையே நடைபெற்றிருக்கிறது. 'மே நாட்' என்று பொருள் பண்ணுவதோடு மட்டுமல்லாமல் உடன்படுகின்ற முறையில்கூடப் பொருள் பண்ணலாம் என்று இந்த அவையிலே அப்போது முதலமைச்சராக இருந்தவர்கள் கூறியிருக்கிறார்கள் என்பதையும் அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே, முன்னே கொடுத்த தீர்ப்புக்கும், சட்டமன்ற விதிமுறைக்கும் மாறுபாடு இல்லை, வேறுபாடு இல்லை. அமைச்சர்கள், அங்கத்தினர்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு விடையளிக்கின்ற நேரத்திலே பொதுநன்மைக்கு உகந்ததாக இருக்காது என்ற காரணத்திற்காக விடையளிக்க மறுக்கலாம். நோட்டீஸ் இல்லாமல் தாங்கள் விடையளிக்க முடியாது என்றும் கூறலாம். இரண்டும் இருக்கிறது. அந்த உரிமையை அமைச்சர் பயன்படுத்த வேண்டுமென்று இப்போதும் நான் சொல்லவில்லை. சில நேரங்களில் அப்படிச் சொல்லுவதற்கு உரிமை இருக்கிறது என்ற சட்டமன்ற விதிமுறையைத்தான் சுட்டிக் காட்டுகிறேன். அதையொட்டி அமைச்சர்கள் கேள்விக்குப் பதில் சொல்ல மறுத்து விட வேண்டுமென்பதை நானும் ஏற்றுக் கொள்ளவில்லை. அமைச்சர்கள் கேட்கப்படுகின்ற கேள்விகளுக்கான பதிலை, விவரங்களை எவ்வளவு விரைவாகப் பெற்றுத் தரமுடியுமோ அவ்வளவு விரைவாகப் பெற்றுத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[1969 ஆகஸ்ட் 22

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்** : என்னைப்பற்றிக் குற்றம் சாட்டப்பட்டு இருப்பதால் ஒரு விளக்கம் தர விரும்புகிறேன். கேட்கப்பட்ட கேள்வி "... நிர்வாகத்திலுள்ள குறைபாடுகளைக் குறிப்பிட்டும் குறைகளை நீக்க வழிகள் உரைத்தும் ஒரு கோரிக்கை அனுப்பப்பட்டதா?" என்பது. அதற்கு விடை "ஆம்" என்று தெளிவாகக் கூறிவிட்டு, "அம்மனுவிலுள்ள கோரிக்கைகளின் மேல் நடவடிக்கை எடுப்பதற்காக அம் மனு மின்சார வாரியத்திற்கு அனுப்பப்பட்டது" என்று பதில் கொடுக்கப்பட்டது. கேட்கப் பட்ட கேள்விக்குத் தேவையான பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே ஒரு துணைக் கேள்வி கேட்டபோது குறிப்பில்லை, தனிக் கேள்வி கேட்டால் விவரம் சொல்ல முடியும் என்று சொன்னால் அதிலே என்ன தவறு இருக்கிறது ?

THIRU K. VINAYAKAM : I believe you have closed the issue. If not, please give us an opportunity.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: தன்னிலை விளக்கம் அளிக்க அமைச்சர்களுக்கு மட்டுமல்லாது இந்த மன்றத்தில் இருக்கின்ற அத்தனை உறுப்பினர்களுக்கும் உரிமை இருக்கிறது. ஆகவே, தவறான விடை கொடுத்து விட்டார் என்ற காரணத்தை வைத்துப் பேசிய நிலைமையில் அமைச்சர் அவர்கள் தன்னிலை விளக்கம் கொடுக்கிறார்கள். அதிலே தவறு எதுவும் இல்லை.

DR. H. V. HANDE : On a matter of personal explanation. I fully appreciate the answer given by the Minister to my question. I fully agree with what the Leader of the House said viz., that the supplementary question must not be far away from the main question. My supplementary question is a simple one immediately connected with the main question. A petition was given and action has been taken. My supplementary question was what the contents of the petition are. I want a ruling from the Chair whether the question is a direct or routine supplementary question or is it far away from the main question. The Speaker can definitely say that this is a supplementary arising directly from the main answer. Being hard and fast in interpreting the rule will not serve any purpose. We should apply our commonsense also. Commonsense says that it is a direct supplementary. May I request the Chair not to be very critical about such questions?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அமைச்சர் அவர்கள், கொடுக் கப்பட்ட கோரிக்கைகளின்பேரில் நடவடிக்கை எடுக்குமாறு இலாகாவுக்கு அனுப்பிவிட்டேன் என்று கூறியிருக்கிறார்கள். நம்மிடத் திலே கூட மனுக் கொடுக்கிறார்கள். நாம் அதை இலாகாவுக்கு அப்படியே அனுப்பிவிடுகிறோம். அந்த மனுக்களிலே என்ன கோரிக்கைகள் இருக்கின்றன என்பதைப் பார்க்கக்கூடிய நிலை சில நேரத்தில் இருக்கும், சில நேரத்தில் இல்லாது போகும் நிலைமை யும் ஏற்படுகிறது. அந்த நிலையில் அந்த மனு இலாகாவுக்கு அனுப் பப்பட்டுவிட்டது என்று சொன்னார்கள். அந்த மனுவில் என்னென்ன கோரிக்கைகள் அடங்கியிருக்கின்றன என்று தனியாகக் கேள்வி போட்டால் தகவலைப் பெற்றுத் தருமாறு கூறுகிறேன்.



1969 ஆகஸ்ட் 22]

**டாக்டர் எச். வி. ஹாண்டே** : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: உங்களுடைய துணைக் கேள்வி மூலக் கேள்வியுடன் தொடர்பு கொண்ட கேள்விதான்.

DR. H. V. HANDE : Sir, I will explain. Does the Speaker think that for answering even a starred question the Minister would not have read the contents of the petition? The very conception of a starred question is to do away with red-tape and compel the attention of the Minister to the question that is asked. The very purpose of my question was to compel the attention of the Minister to the contents of the petition. If a starred question is answered without scrutinising the petition properly, is it within the purview of the Assembly Rules?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : சட்டமன்ற விதிமுறை களுக்கும் இதற்கும் ஒன்றும் இல்லை. கேள்வி கேட்டிருக்கிறார்கள். மனுக் கொடுத்தது ஒரு நேரம், கேள்வி கேட்டது ஒரு நேரம், மனுச் செய்த தேதியில் இலாகாவுக்கு அனுப்பி இருக்கிறார்கள். அதிலே என்னென்ன கோரிக்கைகள் இருக்கின்றன என்று கேட்ட தற்கு விவரங்களைக் கொடுக்கக்கூடிய நிலை இல்லை. தனிக் கேள்வி கேட்டால் என்ன கோரிக்கைகள் என்பது பற்றி அமைச்சர் அவர்கள் விடையளிக்க வாய்ப்பு இருக்கிறது.

### (3) ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

#### (i) சென்னையில் நிகழ்ந்த தீ விபத்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் அவர்கள் சென்னையில் நிகழ்ந்த ஒரு தீ விபத்தைப் பற்றிக் குறிப்பிட்டு ஒற்றி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது அரசினரின் அன்றாட அலுவல்களுக்கு உட்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 41-வது விதியின் கீழ் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவருவார்களானால் விவரமான அறிக்கையை இந்த அவைக்குப் பெற்றளிக்க வாய்ப்பாக இருக்கும் என்ற காரணத்தால் இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

#### கன்னியாகுமரி மாவட்டத்தில் மீனவர்களுக்குப் போலீசாரால் விளைவிக்கப்பட்ட தொல்லைகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அடுத்து, திரு. டி. மார்டின் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் மீனவர்களுக்குப் போலீ சாரால் விளைவிக்கப்பட்ட தொல்லைகளைப்பற்றி விவாதிக்க ஒரு ஒற்றி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதிலே தெளி வான குற்றச்சாட்டுகள் இல்லை. இதுவும் அரசினரின் அன்றாட அலுவல்களுக்கு உட்பட்டதால் இதற்கும் அனுமதி தர மறுக்கிறேன்.

### (iii) ஏழயிரம் பண்ணைக் கிராமத்தில் சட்டம் அமைதி காக்கப்படாமை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மேலும், திரு. மார்டின் அவர்கள் ஏழாயிரம் பண்ணைக் கிராமத்தில் லா அண்டு ஆர்டர் சரியாக நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டைக் கூறி, ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இதுவும் அரசினரின் அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்ட காரணத்தால் இதற்கும் அனுமதி தர மறுக்கிறேன்.

### (4) அறிவிப்பு

### பேரவை நிகழ்ச்சிநிரலில் மாற்றம்.

**மாண்புகு பேரவைத் தலைவர் :** சட்டமன்ற தொடர் கூட்டத்தின் நிகழ்ச்சிநிரலில் சிறு மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. அதை அவைக்கு அறிவிக்க விரும்புகிறேன்.

22nd August 1969 (Friday)—Discussion on the Draft Outline of the Fourth Five Year Plan of Tamil Nadu (1969-1974).

23rd August 1969 (Saturday)—(1) Discussion and Voting of Demands—
- (i) for Grants for Excess Expenditure in the year 1965-66;
- (ii) for First Supplementary Statement of Expenditure for the year 1969-1970.

(2) Introduction of Appropriation Bills.

(3) Discussion on the Draft Outline of the Fourth Five-Year Plan (cont.).

24th August 1969 (Sunday)—Holiday.

25th August 1969 (Monday)—(1) Consideration and Passing of Appropriation Bills.

(2) Discussion on Draft Outline of the Fourth Five-Year Plan of Tamil Nadu (1969-1974) (Last day).

(3) Other Official Resolutions and Bills.

26th August 1969 (Tuesday)— Official Resolutions and Bills.

27th August 1969 (Wednesday)—(1) Discussion on the Report of the Commission of Inquiry on the Agrarian Labour Problems of East Thanjavur District by Thiru A. Ganapatia Pillai.

ஆவணி அவிட்டத்தை முன்னிட்டு இன்று மட்டிலும் மாலை 3 மணிக்குச் சட்டமன்றம் கூடும்.

(2) Consideration and Passing of the Bill to replace Ordinance (viz)., " The Tamil Nadu Agricultural Labourer Fair Wages Ordinance, 1969 (Tamil Nadu Ordinance No. 4 of 1969) ", (3) Other Official Business.

The House will sit from 9 a.m. from 22nd to 26th August 1969 and from 3 *p.m. on 27th August* 1969.



### (5) கவன ஈர்ப்பு.

### அரிசிப் போக்குவரத்துக் கட்டுப்பாடு நீக்கமும், அதன் விளைவுகளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, 41-வது விதியின் கீழ் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் உணவு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டுவருவார்கள் :

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் மழையில்லாமல் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ள இந்தச் சமயத்தில், அரிசிப் போக்குவரத்திற்கு இருந்த கட்டுப்பாட்டை எடுத்ததால் ஏற்பட்டுள்ள விளைவுகள் பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உணவு, வணிகவரித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*** மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்ட எல்லைப்புறங்களிலும் சென்னை மாநகர், கோயம்புத்தூர் நகரின் சுற்றுப்புறங்களிலும் உள்ள சோதனைச் சாவடிகள் தவிர இம் மாநிலத்திலுள்ள மாவட்டங்களுக்கிடையே இருந்த சோதனைச் சாவடிகள் அனைத்தும் 1969 ஜூலை 5-ம் நாள் முதற்கொண்டு அகற்றப்பட்டு விட்டன. அரிசி விலை அதிகரிக்காமல் நிலைப்படுத்தும் நோக்குடன் மாவட்டங்களினிடையே அரிசி தடையின்றி எடுத்துச் செல்வது இயலும் வகையில் சோதனைச் சாவடிகளை எடுத்துவிடும் இந்தத் துணிச்சலான நடவடிக்கையை அரசு மேற்கொண்டது. தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் ஏறத்தாழ 40-லிருந்து 42 லட்சம் டன் வரை அரிசி உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் 1/5 பங்கு மட்டுமே அதாவது 8 லட்சம் டன் அரிசியை மட்டுமே அரசு கொள்முதல் செய்கிறது. எஞ்சிய 32 லட்சம் டன் அரிசி இம் மாநிலத்திற்குக் கிடைக்கிறது. மாவட்டங்களுக்கிடையே உள்ள கட்டுப்பாடுகளை நீக்கிவிட்டால் அந்தந்த வட்டார மக்களின் தேவை, உள்ள இருப்புக்கேற்ப நெல் தடையின்றி எடுத்துச் செல்லப்படும் என்றும் முதலில் விலை திடீரென்று அதிகரித்தாலும் நாளடைவில் அரிசி விலை நிலைத்து விடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

சோதனைச் சாவடிகள் எடுத்துவிடப்பட்ட போதிலும் தமிழ் நாடு 1968-ம் ஆண்டு நெல்—அரிசி (போக்குவரத்துக் கட்டுப்பாட்டு) ஆணை ரத்து செய்யப்படவில்லை. தமிழ் நாடு 1968-ம் ஆண்டு நெல்—அரிசி (போக்குவரத்துக் கட்டுப்பாடு) ஆணை நெல், அரிசி ஆகியவற்றை ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு எடுத்துச் செல்வது குறித்து சில கட்டுப்பாடுகளை விதிக்கிறது. அவ்வாறு எடுத்துச் செல்வதற்கு உரிமையளிக்கும் அனுமதிச் சீட்டு வைத்திருக்காவிட்டால் அதுபற்றி வழக்கு தொடரப்படும் என்றும் அது குறிப்பிடுகிறது, எனவே, அரிசி—நெல் ஆகியவற்றை ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்கு, செல்திறனுள்ள அனுமதிச் சீட்டைத் தொடர்ந்து வைத்து வர வேண்டும் என்பது இதனால் புலனாகும்.

[திரு. ப. உ. சண்முகம்] [1969 ஆகஸ்ட் 22

உரிமம் பெற்ற உணவு தானிய வணிகர்கள் நெல் அல்லது அரிசியை ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு சாலை மூலமாகவோ ரயில் மூலமாகவோ எடுத்துச் செல்ல விரும்பினால் அவர்கள் எடுத்துச் செல்ல விரும்பும் இடத்தைக் குறிப்பிட்டு வட்ட உணவு வழங்கல் அதிகாரிகளிடமிருந்து அனுமதிச் சீட்டு பெறவேண்டும். அனுமதிச் சீட்டின்றி உணவு தானியங்களை எடுத்துச் செல்லும் லாரிகள் கைப்பற்றப்படும். சோதனைச் சாவடிகள் இன்மை, மாவட்டங்களுக்கிடையிலான தடைகளை நீக்கி விட்டது ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொண்டு உணவு தானியங்களை அண்டையிலுள்ள மாநிலங்களுக்குக் கடத்திச் செல்வதையே நோக்கமாகக்கொண்டு மாநில எல்லைப்புறப் பகுதிகளுக்குப் பெரும் அளவில் அரிசி எடுத்துச் செல்லப்படுகிறது என்று புகார் வந்ததனால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த நடவடிக்கைகளினால் மாவட்டங்களுக்கிடையே அரிசி எடுத்துச் செல்லப்படுவதற்கு மீண்டும் கட்டுப்பாடு கொண்டு வரப்பட்டுள்ளது என்று கருத வேண்டியதில்லை.

எல்லைப்புறங்களை விழிப்புடன் கண்காணிக்கும் பொருட்டு குற்றப் புலனாய்வுத் துறையின் கள்ளக்கடத்தல் கண்காணிப்புப் பிரிவை அரசு சீரமைத்துள்ளது. தேவையான சார்நிலைப் பணியாளர்கள், ஜீப் வசதியுடன் காவல்துறை துணைத் தலைவர் பதவி ஒன்றையும் மதுரையில் கூடுதலாகக் காவல் துறை கண்காணிப்பாளர் பதவி ஒன்றையும் ஏற்படுத்தி காவல்துறைப் பிரிவை அரசு மேலும் வலுப்படுத்தியுள்ளது.

மாநில எல்லைகளைச் சுற்றியுள்ள 15 மைல் பகுதி, வரையறுக்கப்பட்ட பகுதியென (Notified area) அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த பகுதிக்குள் உணவு தானியங்கள் எடுத்துச் செல்வது அனுமதிச் சீட்டுகளின் மூலம் முறைப்படுத்தப்படும்.

சோதனைச்சாவடிகளை அகற்றிவிட்டதன் பின்னர் நெல், அரிசி ஆகியவற்றின் விலையில் ஏற்றத்தாழ்வுகள் உள்ளன என்பது இது வரை கிடைத்துள்ள அறிக்கைகளிலிருந்து தெரிகிறது. வெவ்வேறு மாவட்டங்களில் அரிசி விலை ஒரு நிலைக்கு வரும் அறிகுறிகள் தெரிகின்றன. அடுத்த சில திங்கட்களில் நல்ல மழை பெய்தால் நெல் அதிக அளவில் அங்காடிகளுக்கு வருமென்றும் விலை குறையுமென்றும் பொதுவாகக் கருதப்படுகிறது.

உணவு வழங்கல் சோதனைச்சாவடிகளை எடுத்துவிடுவதாலும், உணவு தானியங்களை எடுத்துச் செல்வது குறித்த கட்டுப்பாடுகளை நீக்கி விட்டதாலும் உணவு தானியங்களின் விலையும் நிலையாக இருக்குமென்பதோடு மாநிலங்களில் நெல், அரிசி ஆகியவை தாராளமாகக் கிடைக்கக்கூடும் என்றும் நம்பப்படுகிறது.

சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டதைப் பயன்படுத்திக் கொண்டு வணிகர்கள் அரிசியிருப்பை முடக்கி வைத்தாலும் பெருமளவில் எல்லைப்புறத்தைத் தாண்டி அரிசியைக் கள்ளத்தனமாகக்



1969 ஆகஸ்ட் 22] [திரு. ப. உ. சண்முகம்]

கடத்திச் செல்வது கண்டுபிடிக்கப்பட்டாலும் நிலைமையை மறு ஆய்வு செய்ய அரசு தயங்காது. நெல், அரிசி ஆகியவற்றின் விலைவாசிப் போக்குகளை அரசு கூர்ந்து கவனித்து வருகிறது. சோதனைச்சாவடிகள் அகற்றப்பட்டதனால் பொதுமக்களின் நலனைப் பாதிக்கும் வகையில் விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படாது என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு நிலைமைக்கேற்ப அரசு மேலும் நடவடிக்கை எடுக்கும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: கொள்முதலுக்கான சரியான கொள்கை இல்லாத நிலையில், மழையும் இல்லாத ஒரு சூழ்நிலையில் இது போன்றதொரு கட்டுப்பாட்டை எடுத்ததின் காரணமாக ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள பல பிரதேசங்களில் எந்தளவிற்கு விலை உயர்ந்திருக்கிறது என்பது கனம் அமைச்சர் அவர்களுக்கும் மிகத் தெட்டத் தெளிவாகத் தெரியும் அல்லவா? இந்த நிலைமையைக் கூர்மையாகக் கண்காணித்து வருகிறோம் என்பது மட்டுமல்ல. ஏற்கனவே இருந்த கட்டுப்பாடு காலத்திலும் கூர்மையாகக் கண்காணித்து வரப்பட்டது. மாநில எல்லைகளில் உள்ள செக் போஸ்ட்கள் உள்ள இடங்களில் ஒரு இடத்திற்குச் சென்றபோது ரூ. 30 கொடுத்ததாகவும் ரூ. 50 கொடுத்தால்தான் சோதனை இல்லாமல் விட முடியும் என்றும் சொல்லத்தக்க அளவிற்குக் கட்டுப்பாடு வந்திருக்கும்போது மாநில எல்லை செக் போஸ்ட்களை மட்டும் நம்பியிருந்தால் அது எந்த அளவிற்கு நல்லமுறையில் இருக்க முடியும் என்று கேட்கிறேன். ஆகவே விலைவாசிகள் உயர்ந்து கொண்டே இருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில், மீண்டும் குறைந்த பட்சம் ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்காவது கொண்டு செல்லக் கூடாது என்ற அடிப்படையிலாவது அந்தக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தக்கூடிய அளவிற்கு அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா?

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: விரிவான அறிக்கை ஒன்றைப் படித்தேன். பிற மாவட்டங்களுக்குச் செல்லும் தடையை நீக்கியதால் சில மாவட்டங்களில் விலை ஏறும், சில மாவட்டங்களில் விலை குறையும். இரண்டையும் இந்த அரசு எதிர்பார்த்துத்தான் இந்தத் தடையை நீக்கியது. அப்படி நீக்கும்போதுகூட தெளிவாக இதை உணர்ந்துதான் நீக்கினோம். இரண்டு வாரங்கள் விலைகள் தடுமாறக்கூடும், பிறகு விலை சரிப்பட்டு விடும் என்ற நம்பிக்கையில்தான் செய்தோம். அதன் விளைவாக இன்றைய தினம் ஏறக்குறைய தமிழ்நாடு எங்கும் ஒரே சீரான நிலை இருப்பதாக எங்களுக்கு வந்திருக்கும் குறிப்புகளிலிருந்து தெரிந்து கொண்டிருக்கிறோம். இதற்கு ஒரு உதாரணம் சொல்லலாம் என்று நினைக்கிறேன். மாடு வைத்திருப்பவர், காலையில் பால் கறக்கும்போது கன்றை அவிழ்த்து விடுகிறார். அப்படி அவிழ்த்து விடப்பட்ட கன்று நேரடியாகத் தாயின் மடிக்கு ஓடுவதில்லை. இரண்டொரு முறை அது துள்ளித் திரிந்த பிறகுதான் தாயின் மடிக்குப் போகிறது. அப்படிக் கன்றுக்குட்டி துள்ளி விளையாடுவதுபோல் வியாபாரிகளை அவிழ்த்து விட்டவுடன்

துள்ளிக்கொண்டு ஓடினார்கள். கன்றை எப்போது இழுத்துப் பிடித்துக் கட்ட வேண்டும் என்பது பால் கறக்கிறவருக்குத் தெரியும். அப்படி எப்போது இழுத்துப் பிடித்துக் கட்டவேண்டும் என்பது அரசுக்குத் தெரியும். அதைத் தவறாமல் செய்யும் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(6) அரசினர் மசோதா.

தமிழ் நாடு 1969-ம் ஆண்டு மின்சாரம் வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) திருத்த மசோதா.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1969-ம் ஆண்டு மின்சாரம் வழங்கு நிறுவனங்கள் (கையகப் படுத்துதல்) திருத்த மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இம் மசோதாவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இம் மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

(7) அரசினர் தீர்மானம்.

தமிழ் நாடு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் திட்ட வரைவின்மீது விவாதம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, "தமிழ் நாடு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் திட்ட வரைவைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்" என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

தலைவர் அவர்களே, ஏற்கெனவே கடந்த மார்ச் திங்கள் ஒரு பெரிய புத்தகம் அச்சடித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது ஒருவேளை மறந்து போயிருக்கும் என்று அதைச் சுருக்கி அதன் சாராம்சங்களை மட்டும் தொகுத்து இப்போதும் கொடுக்கப்பட்டிருக்கிறது. 'An approach to the Fourth Plan' என்று முதல் நான்கு பக்கங்கள் இந்தப் புத்தகத்திலேயே கொடுக்கப்பட்டிருக்கிறது. அது தமிழிலும் இருக்கிறது. அதையும் நான் வைத்திருக்கிறேன். நேரமாகிவிட்டது. "நான்காவது திட்டம் பற்றிய பொது நோக்கு" 'An approach to the Fourth Plan' என்பதில் என் கையெழுத்தும் போடப்பட்டிருக்கிறது. அந்தக் கொள்கை விளக்க உரையை * நான் இந்த மன்றத்தில் நிகழ்த்திய சொற் பொழிவாக, என் சொற்பொழிவின் முதல் பகுதியாகக் கருதி அதைப் பதிவேட்டில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று

* 98-102-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.





கேட்டுக்கொண்டு அதிலுள்ள முக்கிய அம்சங்களைப்பற்றி மட்டும் சொல்லி இந்த விவாதத்தைத் தொடங்கி வைக்கலாம் என்று கருதுகிறேன். இத் திட்டம் இங்கு கொடுக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் இது முடியாத ஒரு திட்டமாக இருப்பதால்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது.

நகல் திட்டத்தை அன்றைக்குக் கொடுத்ததற்கு அன்றைக்கு அது முடியாத காரணத்தினால் உங்களது மேலான யோசனைகள், கூறுகிற கருத்துக்கள், இன்னும் இதற்கு இறுதி வடிவம் கொடுக்க மெத்தப் பயன்படும் என்ற காரணத்தால் இந்த விவாதத்தில் நான் மிகவும் உற்சாகம் காட்ட முன் வந்தேன். பொதுவாக, திட்டங்கள் என்பதெல்லாம்கூட, ஏதோ வரையறுக்கப்பட்ட சில சாசனங்கள் அல்ல. கன்டினியூயிங் ப்ராசஸ். நாம் திட்டமிடுகிறோம். அவை சூழ்நிலைக்கேற்ப, சந்தர்ப்பங்களுக்கேற்ப மாறுகின்றன. மாற்றத்தை நாம் விரும்ப வேண்டும். தைரியமாக அவைகளை ஏற்றுக் கொள்ள முன் வர வேண்டும். திட்டங்கள் என்பது வேத ஏடுகள் அல்ல, மாற்றப்படக் கூடாதவை அல்ல. அந்த எண்ணத்திலே நாம் இயட்சியக் குறிக்கோளை, அளவுகளை நோக்கினால் அவ்வப் பொழுது சந்தர்ப்பத்திற்குத் தகுந்தாற்போல், நம்முடைய சமுதாயப் புரட்சியை ஏற்படுத்தி, நாம் வைத்துக்கொண்டிருக்கிற குறிப்பிலே, அவைகளுக்கு மத்தியிலே செய்ய வேண்டியதை மதிப்பீடு செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம். அப்படிப்பட்ட ஒரு மதிப்பீட்டைக் கடந்த காலத்தில், 6 மாத காலத்திலே அந்த மதிப்பீட்டைச் செய்ததன் காரணமாகச் சில குறியீடுகளை நாம் சேரவேண்டிய எல்லைக் கோடுகளை மாற்றியமைத்திருக்கிறோம் என்பதைப் பெருமையோடு இந்த மாமன்றத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தமிழ்நாட்டில் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுக்க வேண்டுமென்ற திட்டம் கூடியமட்டிலே, 1972-ம் வருடத்திற்குள்ளாக எல்லாக் கிராமங்களுக்கும், எல்லாக் குக்கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுக்க வேண்டுமென்பதற்கான திட்டம், இன்றைக்கு இந்தத் திட்டத்திலே செய்யப்பட்ட பெரிய மாறுதலாகும். தமிழ் நாட்டிலுள்ள வறட்சி காரணமாக, படிப்பினை நமக்குச் சொல்லிக் கொடுத்த பாடங்களின் பயனாகத் தமிழ்நாட்டிலேயிருக்கிற எல்லாக் கிராமங்களுக்கும் குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டிய பெரிய மாறுதலைச் செய்திருக்கிறோம். குடிப்பதற்குத் தண்ணீர்கூட கொடுக்க முடியாத அரசாங்கம் போடும் திட்டத்தை ஒரு திட்டம் என்பது தார்மீகப்படிக்கூடத் திட்டம் என்ற நாமத்திலே வைக்கக்கூடிய அருகதையில்லை என்று நான் ஒத்துக் கொள்ளுகிறேன். அது திராவிட முன்னேற்றக் கழகம் தீட்டுகிற திட்டமாகயிருந்தாலும் சரி, காங்கிரசார் உருவாக்குகிற திட்டமாகயிருந்தாலும் சரி, அல்லது மதிப்பிற்குரிய கம்யூனிஸ்ட் கட்சி, அல்லது சுதந்திராக் கட்சி அல்லது எந்தக் கட்சியின் பெயராலே இருக்கட்டும், திட்டங்கள் என்று தீட்டிவிட்டு, குடிப்பதற்குக்

கூட தண்ணீர் கொடுக்க முடியாத திட்டமாகயிருந்தால் திட்டமிடுவதற்கு அருகதையில்லை. மாநில அரசாங்கத்தின் திட்டத்தை மட்டும் கருதவில்லை. விவசாய இலாக்காவும், தொழில் இலாக்காவும் வேறு இலாக்காக்களும் தருகின்ற குறிப்புக்களையெல்லாம் ஒன்றாகப் போட்டு வேடிக்கையாக ஜாபிதா உருவாக்குவது திட்டம் அல்ல. திட்டங்கள் என்பது சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கு, குறிப்பிட்ட குறியீட்டு எண்களை வைத்து நாம் போடுகிற கொள்கை விளக்கம்தான். திட்டத்தை எடுத்துக் கொண்டால், மாநிலத்திலே ஒரு திட்டம், இதேபோல் மத்திய அரசாங்கத்திலே ஒரு திட்டம், தனியார் துறையிலே ஒரு திட்டம். இந்த மூன்றும் சேர்ந்து திட்டம். இவைகளைப்பற்றி அடிக்கடி நாம் விமர்சனம் செய்ய வேண்டும். அதனால் என்ன பலன் வந்தது, எவ்வளவு கோடிக்கணக்கான மூலதனம் ஏற்பட்டிருக்கிறது என்று பார்க்க வேண்டும். வளம் என்னவென்று பார்க்க வேண்டும். பலவீனங்கள் என்ன என்பதைப் பார்ப்பதற்கு, விமர்சனத்திற்கு இந்த வாய்ப்புகள் பயன்பட வேண்டுமென்ற கருத்திலேதான் மாமன்றத்திலே இந்த நகல் திட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

கொள்கைகளை வரையறுப்பதிலே 18 வருஷ காலமாகயிருந்த பெரிய கட்சி தவறியதன் காரணத்தினாலே இத்தனை கோளாறுகள், இத்தனை பலவீனங்கள், மந்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இன்றைக்கு இரண்டு விதமாகச் சொல்ல முடியாத அளவிற்கு எல்லோருமே அப்படி முடிவு செய்திருக்கிறார்கள். உதாரணத்திற்காக ஒன்று சொல்லுகிறேன். மாநில, மத்திய சர்க்கார் உறவுகளைப்பற்றிப் பேசுகிறோம். அதிகாரங்களைப்பற்றிப் பேசுகிறோம். திட்டங்களைப்பற்றிப் பேசுகிறோம். திட்டம் போடுவதற்கு முக்கியமான அம்சங்களாகிய **Credit Policy, Fiscal Policy, Foreign exchange** இவைகள் மூன்றும் பொருளாதார அபிவிருத்தியை நிர்ணயிக்கிற அடித்தளமான குறிக்கோளாகும். **Credit policy** பற்றியோ, **Fiscal policy** பற்றியோ, **Foreign exchange** பற்றியோ இந்த மாநில அரசாங்கங்கள் என்பவை பத்திரிகைகளிலே பார்த்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. பெரிய திட்டத்திற்கு மையமான அடித்தளங்களைப் பற்றி டெல்லி நகர பொழுது போக்கு நிருபர்களுக்குத் தெரிந்த பிறகு மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்குத் தெரிகிறது. நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில் கூடுகிறது. ஏதோ, வேடிக்கையாக, ஊரிலேயிருக்கிற முதலமைச்சர்களெல்லாம் கூடுகிறார்கள், மாநாடு என்று சொல்லக்கூடிய முறையில் இருக்கிறதே தவிர, கொள்கைகளை நிர்ணயிக்கும் பொழுது எவ்வளவு கடன் வசதி பெறவேண்டும், எந்தமாதிரியான வரிகளைப் போடவேண்டும் என்பதைப்பற்றிச் சொல்வதற்கான வாய்ப்புகள் மாநில அரசாங்கங்களுக்கு இன்றைக்கு இல்லை. நேஷனல் டெவலெப்மெண்ட் கவுன்சில் ஒரு நிரந்தர சபையாக இருக்கவேண்டும், அதற்கு ஒரு செக்ரட்டேரியட் இருக்க வேண்டும், நம்முடைய ஊர் அதிகாரிகள் இருக்க வேண்டும். தொடர்ந்து பல காரியங்களை முடிவு செய்ய வேண்டும். உருவாக்க வேண்டுமென்று வற்புறுத்துவதற்குக் காரணமே இது





தான். இதேமாதிரியாகத் திட்டம் சொல்கிற இலட்சியம் இருக்க வேண்டும். அப்படி லட்சியம் இல்லாமல், இங்குதான் போகப் போகிறோம் என்று தெரியாமல், இந்த ஊருக்குப் போகப் போகிறோம் என்று வழி தெரியாமல் ஆரம்பித்ததன் விளைவுதான், இன்று இப்போது நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்பற்றித் தெரியாமல் இருக்கிறது. ஒவ்வொரு திட்டமும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற வேண்டும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றிச் சொல்லும்பொழுது நம்முடைய திட்டம்பற்றிச் சொல்லவில்லை, மத்திய சர்க்காரின் திட்டம். 1980-ஆம் வருஷத்திலே இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால்; 20 சதவீத மக்கள் மிகவும் ஏழ்மையிலேதான் இருப்பார்கள் என்று இந்தத் திட்டத்திலே போட்டிருக்கிறது. இதற்கு என்ன திட்டம் என்று பெயர்? 1980-ம் வருஷத்திலே 20 சதவீத மக்கள் சாப்பாட்டிற்கு இல்லாமல் இருக்கும்படியான ஒரு நிலை இருக்குமானால் அதற்கு திட்டம் என்று சொல்வதில் என்ன பொருள் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. நான் இதை விமர்சனம் செய்வதற்காகச் சொல்லவில்லை. பல கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்த பிறகும் 20 சதவீத மக்களுக்கு உணவு இல்லை என்று இருப்பதிலே என்ன பொருள்? இந்தக் காரணத்தினாலேதான் இன்று போட்டிருக்கும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வரையீடுகள், மதிப்பீடுகள், அதில் செய்யப்படும் மூலதனம் இவைகளை ஆட்சேபிக்கிறோம். இதை மறுபரிசிலனை செய்ய வேண்டுமென்று மத்திய அரசை நாங்கள் வற்புறுத்தியிருக்கிறோம். இந்த மன்றமும் வற்புறுத்தி உறுதி செய்ய வேண்டுமென்று மனதார விரும்புகிறேன். அதற்கு அப்படிச் செய்ய வேண்டுமென்று சொல்வதற்கு இருக்கும் காரணங்கள், திட்டங்கள் என்பவைகள், **'people-oriented plans'** ஆக மக்களுக்காக இருக்க வேண்டும். எந்தவொரு திட்டமாகயிருந்தாலும், திட்டங்கள் என்பது, புள்ளிவிவரங்கள் என்பவைகள் பண்ணைகள் அல்ல, வேடிக்கையாக நிபுணர்கள் சேர்ந்துகொண்டு ஆராய்ச்சி செய்யும் நிலையம் அல்ல. அந்தத் திட்டங்களை மக்கள் நம்ப மாட்டார்கள். திட்டங்கள் என்றால், அவைகள் வாழ்க்கையின் அத்தியாவசியத் தேவைகளை, உணவு அளிப்பதை, உடை அளிப்பதை, குடியிருக்க வீடு கொடுப்பதை, மருந்து கொடுப்பதை, வேலை வாய்ப்பு கொடுப்பதை, உற்பத்தித் திறனும், உழைப்பிற்கான பலன்களைக் கண்ணெதிராக உடனடியாகக் கொடுப்பவைகளைத்தான் திட்டம் என்று ஏற்றுக்கொள்வார்கள், மற்றவைகளை வேடிக்கையாகச் செய்கிற குறிப்புகள்தான் என்று கருதுவார்கள். இன்றைக்கிருக்கும் திட்டங்கள் மனிதனைப் பார்க்கவில்லை. தொழிற்சாலையைப் பார்த்திருக்கிறதே தவிர, மனிதனுக்கு முழுவாழ்வு தரக்கூடிய வகையில் அமையவில்லை. இன்றைக்கு, இந்தத் திட்டங்களை இந்த அளவிலே பார்ப்பதற்குப் பதிலாக, உற்பத்தித் திறனையும், ஏற்பட்ட செலவுகளையும், எப்படிப் பகிர்ந்து கொடுப்பது என்பதையும், எவ்வளவு உற்பத்தி வந்திருக்கிறது என்று இந்தக் கணக்கைத்தான் போட்டுக் கொண்டிருக்கிறோமே தவிர, நாட்டிலே

ஏற்பட்ட அதிகரிப்புச் செலவும், ஏழை எளிய மக்களுக்கு, சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களுக்கு எப்படிப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது என்பதற்கும் வாய்ப்பில்லை. இதே போலிருந்தால், மக்களுக்கும் திட்டங்களுக்கும் என்ன சம்பந்தம்? தங்களுக்கு இந்த அடிப்படை வசதிகளைக் கொடுக்கவில்லை என்ற எண்ணத்தில் மக்கள் உணர்வற்றிருக்கிறார்கள், சம்பந்தப்படுத்திக் கொள்ளவில்லை. அவர்களைக் கிளர்ந்தெழச் செய்ய வேண்டும். புதிய சமுதாயமாக மாற்றி; அவர்களின் உழைப்பை, ஆற்றலை, இன்பத்தைப் பெருக்கச் செய்வதற்கு நாம் புரட்சிக் கதாபாத்திரங்கள் என்ற உணர்வை எழுப்ப வேண்டும். இருபதாண்டுக் காலமாக நாம் எழுச்சியைத் தரவில்லை. இந்த எழுச்சியை தூண்டுவதற்கானத் திட்டங்களாக இன்று வருகிற திட்டங்கள் அமைய வேண்டும்.

இன்றைக்குத் தனியார் துறையைப் பொறுத்தவரையிலே தனியார் துறையை ஆதரிப்பது அல்ல இந்த அரசு. ஆனால் பொதுத் துறைக்கு ஊனம் வராத வகையிலே தனியார் துறையிலும் சில இடங்களிலே சில விதமான நம்பிக்கைகளைக் கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் முன் வரும் என்பதைத்தான் என்னுடைய உரையிலே தனியாகக் கூறி இருக்கிறேன். இன்றைக்கு முக்கியமான அம்சம் மத்திய அரசாங்கத்திலே இருக்கிற பொதுத்துறை. இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையிலே தமிழ் நாடு அரசுக்கு நிரம்பக் கவலை தருவது, இந்தப் பொதுத் துறையிலே நம்முடைய மாநிலத்திற்கு வருவது ஒன்று கூட எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பது, சேலம் ஸ்டீல் பிளாண்ட், சேது சமுத்திரம் திட்டம், அதே மாதிரியாக செக்கண்ட் மைன் கட், நெய்வேலி; பெட்ரோ-கெமிக்கல் பிளாண்ட், கல்பாக்கம் செகண்ட் ஸ்டேஜ் என்ற இந்த திட்டங்கள் இந்த திட்டத்திலே சேர்க்கப்பட்டால்தான் இன்னும் குறைந்தது 10 வருடத்திற்குள்ளாவது இவை உருவாவதற்கான சூழ்நிலை ஏற்படும். இன்றைக்கே இவைகளைத் தள்ளி வைக்கிறோம் என்றால் இன்னும் 15 வருடத்திற்கு இவைகளைத் தள்ளி வைக்கிறோம் என்று தான் பொருள். இதிலே மத்திய அரசினுடைய போக்கு, திட்டத்திலே இவைகள் இடம் பெறாதது, மாநில அரசுக்குக் கவலையை அளிக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுக்கப்படுகிற நேரத்திலே இவைகள் வரவேண்டுமென்பதற்காக இந்த மாமன்றம் வற்புறுத்த வேண்டும்.

நிதி ஆதாரங்களைப் பற்றிப் பேசப்படுகின்றது. இதுவும் அப்படித்தான். மாவுக்குத் தகுந்த தோசை செய்கிறார்கள், மாவை எப்படிச் செய்ய வேண்டுமென்பதற்கான ஆதாரங்களைத் தேடாமல், அதைப் பெருக்க . . . . (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர் மாவு இல்லாமலே தோசை செய்யமுடியுமென்கிறார்கள். ஒருவேளை கம்பன் கண்ட . . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** மாவு இல்லாமல் தோசை சுட முடியுமா? மாவுக்கு ஏற்ற தோசைதான் சுடவேண்டும் என்றேன்.





**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** என்னுடைய கவலை எல்லாம் 20 ஆண்டு காலமாக, இந்தத் திட்டங்களைத் தீட்டுவதற்கு வாய்ப்பாக அதிகாரத்திலே இருந்த கட்சி, அல்லது அந்த கட்சியினுடைய தலைமையின் ஊசலாட்டமான போக்குகள், அதனுடைய பலவீனமான, சஞ்சலமான கொள்கைகள், இவைகள் தான் இன்றைக்கு நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கு எதிராக இருக்கின்றன என்பதேயாகும். அதுதான் காரணம் என்று நான் பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறேன். அதற்கு இருக்கிற காரணம் மந்தம் என்று சொல்கிறோம். விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. இவ்வளவு பெரிய உற்பத்தி, உற்பத்தி என்று புள்ளி விவரங்கள் தான் உற்பத்தி ஆகியிருக்கின்றனவே தவிர, ஏராளமான, பம்பர் கிராப், அமோக விளைச்சல் என்று சொல்கிறோம். இன்னொரு பக்கத்திலே விலைவாசி ஏறுகிறது நாட்டிலே என்று எல்லாவிதமான எல்லா பக்கங்களிலும் கவலை ஏற்புத் தீர்மானம் வருகிறது. ஒரு பக்கத்திலே தொழிலாளி-முதலாளி உறவுமுறைகளைப் பற்றிப் பேசுகிறோம். இன்னொரு பக்கத்திலே வேலை நிறுத்தம், லாக்-அவுட் வருகிறது. ஒரு பக்கத்திலே மாநில அரசு மத்திய அரசு உறவைப் பற்றிப் பேசுகிறோம். மத்திய அரசினுடைய டெபிசிட் பினான்சிங்கினாலே, வரிகளைப் போடுவதால் விலை ஒரு பக்கம் ஏறுகிறது. டியர்னஸ் அலவன்ஸ் கொடுக்கிறார்கள். மத்திய அரசு ஊழியர்களுக்கு அவர்கள் டியர்னஸ் அலவன்ஸ் கொடுக்கும்போது நம்மவர்களுக்குக் கொடுத்த பணம் கேட்டால் இல்லையென்று சொல்லுகிறார்கள். நான் உறவுகளைப்பற்றி சொல்கிறேன். இந்தத் திட்டங்கள் ஊசலாட்டமான, பலவீனங்களாலே ஆக்கப்பட்டிருப்பதனாலே மத்திய அரசினுடைய வரிக்கொள்கை பாதிக்கப்பட்டிருக்கிறது. விலைவாசி ஏறுவதால் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் தகராறு வருகிறது. மாநில அரசுக்கும் அவர்கள் ஊழியர்களுக்குமே தகராறு வருகிறது. இப்படி சமூகப் பிரச்சினைகளாக உருவாகிறவை இந்தக் கொள்கையினாலேதான். இப்படித் திட்டமிட்டிருக்கிறோமே. பெரிய மாறுதல் என்று சொல்லி 20 ஆண்டுக் காலம் நிலச் சீர்திருத்தம் செய்தார்கள். இன்றைக்கு குடியானவன், நிலத்திலே உழுகிறவன் எந்த அளவுக்குப் பலன் பெற்றான்? தொழிலாளர் நலன்களுக்காகப் பல காரியங்களைச் செய்கிறோம் என்று சொன்னார்கள். அந்த நிலங்கள் எல்லாம் யாருக்குப் போய்ச் சேர்ந்தன? நாட்டிலே இருக்கிற 75 பெரிய குடும்பக்காரர்களுக்கும் வெளிநாட்டிலே இருக்கிறவர்களுக்கும் அருமையான கலப்புத் திருமணம் போல கிடைத்திருக்கிறதே தவிர; 20 ஆண்டுகளிலே என்ன பயன் ஏற்பட்டது என்பதை சரியாகச் சொல்லமுடியவில்லை. வர்த்தகர்கள் இருக்கிறார்கள், நாம் பேசுகிறோம்; கள்ளக் கடத்தலைப்பற்றி பேசுகிறோம்; விலைவாசி உயர்வைப் பற்றிப் பேசுகிறோம், பிளாக் மார்க்கெட்டைப் பற்றிப் பேசுகிறோம், இந்த நாட்டிலே விலைவாசியைக் குறைக்க வேண்டும், உற்பத்தியான பொருள்கள் எல்லாம் சாதாரண, பாமர மக்கள் நியாயமான விலையில் வாங்க வேண்டுமென்று சொல்லுகிற நேரத்தில், வர்த்தகச் சூதாடிகளிடத்திலும், கள்ள

[திரு. கே. ஏ. மதியழகன்] [1969 ஆகஸ்ட் 22

மார்க்கெட்காரர்களிடத்திலும், வரியை ஏய்ப்பவர்களிடத்திலும் சமுதாயத்திலே அரசாங்கத்தை பொம்மையாக ஆட்டுவிப்பவனிடத்திலும்தான் பலன்கள் போய் விட்டனவே தவிர, இன்றைக்கு சாதாரண மக்கள் இந்த பலன்களை அடைய முடிந்ததா என்றே நான் கேட்க விரும்புகிறேன். நாட்டு மக்களுடைய அடிப்படைத் தேவைகளை ஆராயக் கடமைப்பட்டிருக்கிறேன். நிதி ஆதாரங்கள் வேண்டும், வேண்டும் என்று நாம் கேட்கிறோம்.

ஏன் இவ்வளவு காலமாகக் காரியங்கள் செய்யப்படவில்லை? பாங்குகளைத் தேசியமயமாக்கவேண்டுமென்று நான் சேர்ந்திருக்கிற கட்சி தன்னுடைய தேர்தல் அறிக்கையிலே பிரகடனம் செய்தது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் முதலமைச்சர்கள் மாநாட்டிலே டெல்லியிலே, பாங்குகளை தேசியமயமாக்க வேண்டுமென்று அழுத்தமாக வற்புறுத்தினார்கள். நல்லகாலம், இன்றைக்கு ஏதோ தோற்றம் மாறி இருக்கிறது. அம்மையார் அவர்கள், பிரதம மந்திரி அவர்கள் தேசியமயமாக்க முன்வந்திருக்கிறார்கள். (குறுக்கீடு) வாழ்க என்று நான் சொல்கிறேன். நல்லதுதான். ஆனால், பாங்குகள் தேசியமயமானது இன்றைக்கு சர்வரோக நிவாரணி அல்ல. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கடிதாசி எழுதினார்கள். அம்மையார் அவர்கள் பதில் எழுதி இருக்கிறார்கள். அரசியல் சூதாட்டத்திற்கு, யாருக்கும் மகுடாபிஷேகம் நடத்துவதற்கு என்பதற்கான வாய்ப்பாக இது கருதப்படுமானால் இந்த நாட்டு மக்கள் மன்னிக்க மாட்டார்கள். பிரதம மந்திரி இந்திராகாந்தி அவர்களுக்குத் தமிழகத்தின் சார்பிலே இதை எடுத்துச் சொல்லி இருக்கிறோம். இன்றைக்கு ரூ. 2,500 கோடி சில பேரிடத்திலே அகப்பட்டு ஏகபோகமாக இருக்கிறது என்றால் அது மாறியாக வேண்டும், மாற்றிவிட்டோம். ஆகவே, தேசியமயமாக்கப்பட்ட பிறகு, மாநிலங்களினுடைய நலன்களுக்கு வழிவகைகள் செய்யப்படவேண்டும். அதுவும் இன்னொரு இன்ஷூரன்ஸ் கம்பெனியாகிவிடக் கூடாது. எல். ஐ. சி. போல் ஆகிவிடக் கூடாது. மெக்கா, ஜெருசலம் போல, அந்தப் புனித ஸ்தலங்கள் போல, பம்பாய் மாநிலத்திலேதான் இருக்கிறது, டெல்லி மாநிலத்திலேதான் இருக்கிறது, வர்த்தகக் குடும்பங்கள். ஏற்கெனவே இருக்கிற வர்த்தகக் குடும்பங்கள் கையிலே இந்த அதிகாரங்கள் சிக்கிவிடக் கூடாது. நம்முடைய மாநிலத்தினுடைய வளர்ச்சிகளைப் பிரதிபலிப்பதாக இந்த பாங்குகள் தேசியமயம் இருக்க வேண்டும்.

அதே மாதிரி உற்பத்திச் சாதனங்களை தேசியமயமாக்கி இருக்கலாம். எத்தனை மாதிரியான வாய்ப்புகள் எல்லாம் இருக்கின்றன? இலாபத்திற்கு ஒரு உச்ச வரம்பு என்று வைத்திருக்கலாம். ஏற்றுமதி இறக்குமதி வியாபாரங்களை, வெளிநாட்டு வர்த்தகங்களை தேசியமயமாக்கியிருக்கலாம். இதற்கான வாய்ப்புகள் இன்றைக்குத் தோற்றுவிக்கப்படுகின்றன. இவைகளையெல்லாம் 18 ஆண்டுகளாகச் செய்யாமல் தாமதப்படுத்திவிட்டோம். மீண்டும் தாமதப்படுத்த வேண்டாம் என்பதற்காகத் தான் சொல்கிறேன்.



1969 ஆகஸ்ட் 22] [திரு. கே. ஏ. மதியழகன்]

மேல்சபையிலே ஒரு சாமியார், ஒரு தம்பிரான் உணவு தானிய வர்த்தகத்தையேகூட தேசியமயமாக்கவேண்டும். அரசு வாணிகமாக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார். குன்றக்குடி அடிகளார் தான் அவ்வாறு கூறியிருக்கிறார். நான் ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், அப்படிச் சாமியார்கள், மடத்திலே இருப்பவர்கள் எல்லாம் வந்து சொல்லுகிற அளவுக்கு இன்றைக்கு ஒரு புரட்சிகரமான கொள்கை உருவாகியிருக்கிறது. இவைகள் எல்லாம் 18, 20 வருஷங்களாகக் காலதாமதப்படுத்தப்பட்டன. இவைகளுக்கான வாய்ப்புகளை ஏற்கனவே பெற்றிருக்க வேண்டும்.

நம்முடைய மறைந்த மாண்புமிகு பேரறிஞர் அண்ணா அவர்கள் இரண்டு—மூன்று யோசனைகளைச் சொன்னார்கள். பாதுகாப்புக்கான செலவுகளை, அங்கு விரயமாகிற செலவுகளை குறைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டதா? அதேமாதிரி பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் செலவுகளை எல்லாம் குறைக்கவேண்டும். டூப்ளிசிட்டி இன் அட்மினிஸ்ட்ரேஷன், சில இரட்டை முறைகள், இவைகளையும் போக்கவேண்டும். இங்கே ஒரு கல்வித்துறை, அங்கே ஒரு கல்வித் துறை; இங்கே ஒரு சுகாதாரத் துறை, அங்கே ஒரு சுகாதாரத் துறை; இங்கே ஒரு பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட், அங்கே ஒரு பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட். கன்கரன்ட் லிஸ்டு என்று வைத்திருக்கிறார்கள். 'கன்கரன்டை' மாற்றச் சொல்லவில்லை. இந்த நிலைமைகள் எல்லாம் ஏழைகளைச் சிரமப்படுத்துகின்றன. இதற்கெல்லாம், குடிதண்ணீர் இல்லை என்று பொருள், மருந்து இல்லை என்று பொருள், சமுதாயம் சீர் செய்யப்படவில்லை என்று பொருள். இந்த யோசனைகளை எல்லாம் அவர்கள் சொன்னார்கள். அவைகள் எல்லாம் எடுத்துக் கொள்ளப்படவே இல்லை. அவைகளுக்கான வாய்ப்புகளை நாம் ஆராயவே இல்லை.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் இருக்கின்றன. பொதுத் துறையிலே நெய்வேலி நிலக்கரி தொழிற்சாலை இருக்கிறது. அதையெல்லாம் நம்மிடத்திலே கொடுத்துவிடலாம். அந்தந்த மாநிலத்திலே இன்னும் நிரம்ப நல்ல வகையிலே நிர்வாகம் செய்யலாம். இன்னும் இலாபம் பெறலாம். இப்படிப்பட்ட ஒரு நிலையை இன்றைக்கு மத்திய அரசு செய்ய வேண்டும். அதேமாதிரிதான் இந்த கொள்கைகள் மாறவேண்டியிருக்கின்றன. நான் இந்த செயற்குறிப்பிலே ஒரு பகுதியிலே கூட கருத்து தெரிவித்திருக்கிறேன். இவைகளைச் செயல்படுத்துவதற்கு நம்முடைய நிர்வாக இயந்திரம் சீர்திருத்தப்படவேண்டும். அது என்னுடைய முன்னுரையிலே இல்லை. நம்முடைய நிர்வாக இயந்திரமே கூட நன்றாகச் செயல்படவேண்டும். அதற்காகத்தான் ரெவின்யூ போர்டை எல்லாம் எடுத்து விட வேண்டுமென்று திட்டம் தீட்டினோம். இவைகளையெல்லாம் இந்த திட்டத்திலே வருகிற அம்சங்கள்தான். இந்தப் பகுதியையும் என்னுடைய உரையிலே இணைத்துக் கொள்ளலாம். அரசியல்வாதிகள் அதிலே சேரவே கூடாது என்று ஒரு வாதம். இது இன்னொரு முக்கியமான அம்சம். கலெக்டர்கள் என்றால் தனி என்றெல்லாம் இருப்பதாலே தான் இவ்வளவு கோடிக்

கணக்காகப் போய்விட்டது. அரசியல்வாதிகளை விட்டுவிட்டு வேறு யார் இந்த நாட்டிலே இன்றைக்கு திட்டத்தை செயல்படுத்துகிறார்கள்? சமூக, பொருளாதார, எல்லாவிதமான திட்டங்களையும் தீட்டுவது அரசியல்வாதிகள் தான். மடாதிபதிகளா, மகந்துகளா, சாமியார்களா? வேறு எங்கோ தவம் செய்துகொண்டிருப்பவர்களா, அல்லது கற்பனையில் இருப்பவர்களா தீட்டுகிறார்கள்? அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆனால் அரசியல்வாதிகள் தான் மக்களின் எண்ணத்தைப் பிரதிபலிக்கிறார்கள், திட்டத்தைத் தீட்டுகிறார்கள். நீங்களும் அரசியல்வாதிகள்தான், நாங்களும் அரசியல்வாதிதான். "மேன் ஈஸ் எ பொலிடிகல் அனிமல்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அரிஸ்டாடல் சொன்னார்கள். அனாதிகாலத்திலிருந்தே சொன்னார்கள். இன்றைக்கு 20 ஆண்டு காலமாக இந்த உயிர் சக்தியான திட்டங்கள், ஜீவ சக்தியான திட்டங்கள் நல்ல நிலைமையில் வருவதில்லை. அரசியல்வாதிகள் இதில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. திட்டத்தை உருவாக்குகின்ற நேரத்தில் அரசியல்வாதிகள் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. அரசியல்வாதிகள் என்றால், எந்தக் கட்சியில் இருந்தாலும் சரி, கதர் சட்டை போட்ட கட்சியாக இருந்தாலும் சரி, கைத்தறிச் சட்டை போட்ட கட்சியாக இருந்தாலும் சரி, அந்தந்த இடங்களில் இருக்கிற மக்களுடைய எண்ணங்களைப் பிரதிபலிப்பவர்கள் இந்த அரசியல்வாதிகள் தான். அதிகாரிகளுக்கு இந்த மாற்றம் ஏற்படவேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேன். நான் உறுதியாகச் சொல்லுகிறேன், பொலிடிகல் விங்தான் இந்தத் திட்டங்களைத் தீட்ட முடியும். அவர்களிடையேதான் மக்களுடைய எண்ணங்கள், ஆர்வங்கள் பிரதிபலிக்க முடியும் வட்டச் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்து யூனியன்களில் இருப்பவர்கள் இவர்களிடையே தான் திட்டத்தைப்பற்றிய எண்ணங்கள் இருக்கும்.

நான் ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சொல்கிறேன் என்று நினைக்கவேண்டியதில்லை. ஏதோ ஒரு பெரிய விஷயம் அகப்பட்டுக் கொண்டு விட்டதுபோல் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கருதிக்கொள்ளத் தேவையில்லை. பீபிள்ஸ் பார்டிஸிபேஷன் என்றெல்லாம் டெல்லியிலுள்ள தலைவர்கள் ரொம்பப் பெருமையாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். பீபிள் என்றால் யார்? ஒன்றுக்கும் உதவாதவர்களா பீபிள்? சமூகத்திலுள்ள எண்ணங்கள், ஆர்வங்கள் அவர்களிடத்திலேயும், அவர்களுடைய பிரதிநிதிகளிடத்திலேயும் தான் பிரதிபலிக்கின்றன. அதிகாரிகள் இருக்கிறார்கள், கலெக்டர் இருக்கிறார், தாசில்தார் இருக்கிறார். என்ஜினீயர் இருக்கிறார். மக்களுடைய பிரதிநிதிகளிடையே உள்ள எண்ணங்களை நிறைவேற்றவேண்டும். ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான மக்கள் பங்கு கொள்கிற பெரிய ஒரு புரட்சிகரமான இயக்கமாக இந்தத் திட்டம் மாறவேண்டும். இல்லாவிட்டால், 10, 15 பஞ்சாங்கமாகத்தான் இருக்கும். இதிலே





ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. திட்டம் போட்டோம். ரூ. 624 கோடிக்குப் போட்டோம். என்ன ஆயிற்று? திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முகூர்த்தம் வைப்பதற்கு இன்னும் நாள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதைக் கூடக் குறைத்துவிட்டார்கள். ரூ. 215 கோடிக்கு நாம் செலவு செய்யவேண்டும். மத்திய அரசு ரூ. 202 கோடி உதவி செய்வதாக இருக்கிறார்கள். நாம் ரூ. 85 கோடிக்கு எப்படியாவது பார்த்து ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். மொத்தம் ரூ. 502 கோடியாகிறது. ரூ. 624 கோடி அளவுக்கு முடியாமல் இருக்கிறது. ரூ. 575 கோடி அளவுக்காவது இருக்கவேண்டும் என்று நாம் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். இறுதி முடிவு எடுக்கவில்லை. உங்களுடைய தயவு செய்திருக்குமானால், உங்களுடைய நல்ல செல்வாக்கு, நல்லெண்ணம் இருக்குமானால், இது கொஞ்சம் அதிகமாகும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

பாங்குகள் நாஷனலைஸ் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளில் இருக்கிற பணத்திற்கும் நாம் கணக்கு பெற்றுக்கொள்ளவேண்டும். நம்முடைய பிரதம மந்திரி அவர்கள்—எல்லோருக்கும் தான், இந்த நாட்டிற்கே தான் அவர் பிரதம மந்திரி—பாங்குகளை தேசியமயமாக்கியது ஒரு முற்போக்கான செயல். ஆனால், காலம் கடந்ததுதான். பரவாயில்லை. அந்த அம்மாள் தைரியமாகப் பாங்குகளை நாஷனலைஸ் செய்துவிட்டார்கள்.

THIRU K. VINAYAKAM : I do not want the Hon. Minister to give a wrong impression, to the public. It is not the Prime Minister that is responsible. It is the party that is behind her namely the All-India Congress Committee which met at Bangalore and which resolved unanimously to direct her to take over all these banks under nationalisation. It is the prerogative of the party that is in power. We gave the direction and she implemented it. Let her not run away with the feeling that she alone is responsible for nationalisation of banks. Let not the Finance Minister here also back her up.

திரு. என். சங்கரய்யா : காங்கிரஸ் கட்சிதான் இதற்குப் பொறுப்பு என்று சொல்லவேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள். ஆனால், காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. நிஜலிங்கப்பா அவர்கள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் பெங்களூரில் நடந்த பிறகு டெல்லியில் நடந்த ரோட்டரி கிளப் கூட்டத்தில்

The Congress Party is in no hurry to nationalise banks.

என்று பகிரங்கமாகக் கூறியிருக்கிறார்கள். அப்படியானால் காங்கிரஸ் கட்சி அதற்கு எவ்வாறு பொறுப்பாகும்?

திரு. பி. ஜி. கருத்திருமன் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், நிஜலிங்கப்பா அவர்கள் டெல்லியில் சொன்னார்கள் என்று கூறினார்கள். முதலில் முதல் அமைச்சர் அவர்கள் காபினட் எக்ஸ்பான்ஷன் இல்லை என்று சொன்னார்கள். அடுத்த நாள் மூன்று அமைச்சர்களைப் போட்டார்கள். அது எந்த முறையில்?

1969 ஆகஸ்ட் 22] [பேரவைத் தலைவர்]

இருக்கிறார்கள். ஆகவே, உறுப்பினர்கள் தங்களுடைய நேரத்தை எவ்வளவு குறைத்துக்கொள்ள முடியுமோ அவ்வளவு குறைத்துக் கொண்டால் நல்லது. திரு. விநாயகம் அவர்கள் 20 நிமிட நேரம் பேசுவார்கள்.

THIRU K. VINAYAKAM : Mr. Speaker, Sir, I have very great pleasure in joining this discussion about the draft Fourth Five-Year Plan of our State. I would like to congratulate the department for having produced a big bulky volume which details many aspects of our plan and at the same time for having produced a summary, just on the eve of this discussion, to enable members to have a cursory view of the entire perspective before us.

I am not one of those who is against planning. As a great economist had pointed out in the past " either we plan or we must be prepared to perish ". There is nothing wrong of the authors who conceived of this Plan. What is the close link between the plan and the party in power here? The party in power here have a egalitarian society in perspective. They gave an impression to the public that the moment they came to power, everything will be available in plenty for the mere asking, that prices will come down the moment they step into the legislature. But what do we find now. Prices are soaring up. After creating that grandiose impression among the people, after giving them a perspective or egalitarian society. They came to power ; I mean the D.M.K. came to power. Believing their promises, they were voted to power by the people. They must know what was the condition of the people when they took over power in this State? Have the promises been fulfiilled? No. It has come to shibboleth. What is the economic condition of the people? Have they now plenty? Have they the rudimentary necessities like food, clothing and houses to live in? We must look at that picture, as an economist. I know the Hon. Finance Minister is a student of economics. He has studied economics well. It is not politics that he should talk but he should look at this question from economic point of view, and not as though what all we had done are wrong. I am not arguing here as a politician but as an economist. While offering my criticism, I am doing so as an economist would have done, faced with the present problem. That is why I say, this party gave a wrong impression to the people, they promised them grandiose things. They promised the people that they will get anything for the more asking, that they will have good water, that they will have enough food, clothing etc. But when they come to realities, when they begin to actually administer things, they find it difficult. Talking to illiterate men in platform is one thing. But when you actually are beset with governmental work, when you come to realities, what is the position now? What has this Government been able to do and what is it they had done? Government is a continuous affair. Yesterday we were here, today you are here and tomorrow somebody will be there. It is a continuous process. Similarly planning is a continuous process. Planning is done for the entire nation and not for one State alone. The entire nation's perspective must be before us when we talk of planning. You said that you will change the entire plan when you come to power. Now you want a plan for Rs. 600



1969 ஆகஸ்ட் 22] [Thiru K. Vinayakam]

crores. But how much money you have locked up in your pet cshemes? You are wasting so much money in the one rupee measure rice scheme. It is because you promised the unenlightened public that the moment you come to power, you will give rice at one rupee per measure to one and all? You are now clinging to that scheme? But at whose cost? At the cost of the exchequer of our State. Rs. 10 crores will be the money that will be going into the drains for this pet concept of your planning viz., one rupee a measure scheme. You have your own views just as I have my own views. You are deceiving the people.

THE HON. THIRU SI. PA. ADITANAR : May I seek a clarification? Is the hon. Member speaking according to his conscience or according to his party dictates? He is advocating costly rice. The D.M.K. is wedded to the principle of cheap rice, cheap food. My learned friend is advocating higher price for rice, for costly rice and costly food. May I know whether in this aspect, he is talking according to his conscience or according to his party dictates?

THIRU K. VINAYAKAM : As I have said in the beginning, I am talking as an economist. An economist has no conscience. It is only the politician that has conscience. I know how you stand to gain by leaning to the party at Delhi.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அரசியல்வாதி இல்லையா?

THIRU K. VINAYAKAM : I am looking at this problem as an economist would consider it. When I am on my legs, I have forgotten I am a politician.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பொருளாதாரம் உங்கள் அரசியலை ஒட்டியதும் இல்லையா?

THIRU K. VINAYAKAM : That is not your concern.

There is a talk of regional imbalances in our country. Who could help this, Sir? These imbalances were there for the past forty or fifty years and they have not been ushered in suddenly. Even when the Britishers were ruling, there were only three States which were forward in the matter of industries, Bombay and Bengal and Madras came last. In the last twenty years we have brought Madras to a place of equality on the economic map of India. We are minimising the effect of the regional imbalances and we ourselves initiated discussion with the Centre that the State should be put on a proper economic basis.

[திரு. செஞ்சி வெ. முனுசாமி—தலைமை]

Now I come to the financial commitment. The late Chief Minister Thiru C. N. Annadurai wanted the write-off of some loans. I understand that. But are we succeeding? You should take up the matter with the Finance Minister of the Centre with whom you are in a position to have your own way and try to convince her that this request should be granted. Our State is after all an agricultural State primarily. We are now trying to convert it into an industrial State also if possible.

Our first concern must be agriculture. The greatest culture as far as I am concerned is agriculture. Agriculture must be revolutionised. You are only talking of the green revolution. You are saying that double-cropping is an innovation by the party that is now in power. Double-cropping was there even before Adam and Eve. From the time the people knew anything about agriculture, this double-cropping had been there. Don't tell us that the high yielding variety has been discovered by you. Who discovered ADT 27? Did you discover it? The Congress Party when it was in power conducted a series of experiments at Aduthurai and finally arrived at ADT 27. You want the people and the country to believe that you have discovered ADT 27, CO 2, and IR 8. This is not the way to mislead the people. First you should advise your own Leftist Friends who have taken up the cudgels against the use of tractors.

திரு. என். சங்கரய்யா: கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த நாங்கள் விஞ்ஞான முன்னேற்றத்திற்குத் தடையாக இல்லை. அதே சமயத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி நாட்டில் மக்கள் வறுமையில் வாடும் நிலை வரக்கூடாது என்பதற்காக ஆட்சேபிக்கிறோம். வேலை வாய்ப்பை அளிக்கும் இதர திட்டங்களை மேற்கொண்டால் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை.

திரு. கே. விநயகம்: வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவது நம் கொள்கைதான். ஆயினும் உற்பத்திப் பெருக்கம் மிக முக்கியமானது. இந்த நிலையில் உற்பத்திப் பெருக்கத்தைத் தடைசெய்யும் இந்தப் போராட்டத்தைவிட வேறு அநியாயம் இந்த நாட்டில் எதுவும் கிடையாது என்பது என்னுடைய கருத்து. You can find alternative jobs for those who will be thrown out of employment on account of the use of tractors. That is a different thing.

THE HON. THIRU SI PA. ADITANAR: On a point of clarification. The hon. and learned Member said that double cropping was in existence even before Adam and Eve were born. If double-cropping was in existence before Adam and Eve, who did the double-cropping?

THIRU K. VINAYAKAM: My friend Mr. Aditan, I thought, is a very well read, educated man who will appreciate a saying from the Biblical days. When we want to refer to anything ancient, we use the expression 'Adam and Eve'. It does not mean that double-cropping was in existence during the time of Adam and Eve, and that we, Mr. Aditanar and Vinayakam, are their grand-children!

திரு. மு. ச. சிவசாமி: கூட்டுறவு அமைச்சர் பெயர் திரு. ஆதித்தனார் என்றே ரெக்கார்டுகளில் இருக்கின்றது. அதை வேறு விதமாகச் சொல்லலாமா என்பது என் கேள்வி.





திரு. கே. விநயகம்: 'னார்' வேண்டுமென்றாலும் சேர்த்துக் கொள்ளுங்கள். என்னுடைய பழைய நண்பர் என்ற முறையில் ஆதித்தன் என்று சொன்னேன். உங்களோடு சேர்ந்த பிறகு 'னார்' சேர்ந்து விட்டது. ஆதித்தனார் என்று வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளலாம்.

Let us not waste our time on this.

As far as industrial development of the State is concerned, the party that is in power has well pointed out to the Centre that the Salem steel plant is very important and that it has got to be included in this Plan. There is no mincing as far as this matter is concerned. The Congress Government when it was in power initiated the entire proceeding with regard to the availability of iron content in the Salem ore and the establishment of the Salem steel plant. Now that you are in power, you have got to urge the Central Government to take it up in the Fourth Five Year Plan itself with its own resources. I have given notice of an amendment to the motion. I hope the House is in possession of it. It reads as follows :

Add at the end the following :

"and after such consideration this House recommends to the State Government to urge upon the Central Government to take up the implementation of Salem Steel Plant immediately in the first year of the Fourth Five Year Plan with its own resources." We must urge upon them to spend. We should not complain afterwards : 'They have refused. They have promised the Steel plant to the people. Why should we not throw away our money?' That should not be our attitude. If you have any influence with the Centre, you should try to get the steel plant implemented during the Fourth Plan period. Never mind about your charges against the Centre. The party in power has been saying that the North is not doing it, the Central Government is not very helpful to us, the Central Government refuses everything and they do not come to our aid. That is a slogan with which I am tired. There are many industries which you could have started within your own limits, with the capacity and finances available with you. We have been suggesting year in and year out on the floor of this House that many industries could be started. They may not be heavy industries, but large-scale and small-scale industries. What is the balance sheet of your administration? How many industries have you started from the day you assumed office? You cannot boast of even one. On the other hand you have been saying that private enterpreneurs have applied and that thirteen applications are pending. Which private individual will come forward to start an industry in your regime? There is no law and order in the State. The moment anybody comes forward to invest 20 lakhs or 30 lakhs, there are your colleagues to create trouble. Gheraoing, which was far away in West Bengal, has come into vogue. The moment any individual starts an industry in the interests of the State and the country, a labour union is started. I start one, you start one and our Friends o fthe Communist Party start one, we quarrel among ourselves, the police does not come to our aid, the capitalist is terrorised

and he wants to give it up. That is the position obtaining in our country. You must create a suitable environment for the enterpreneurs to sink money and start industries. Are we to be happy that he is a Minister, I am an Assembly Member and that you are the Speaker? Are we going to run away with the impression that you have created a healthy environment where law and order is properly maintained so as to attract the capitalist or the entrepreneur to come and risk his money in our State?

I believe, Sir, the Hon. Minister for Finance is a very intelligent person and he knows what I am talking about.

Finally I come to the food policy. I am very much pained to say that the Party in power is going in the wrong tract. They talk about cheap rice and the Hon. Thiru Aditanar has levelled a charge against me that I am for costlier rice. I say that the costlier rice may be supplied to those who want to purchase it. Now your policy is to supply cheap rice. Why not you give it to the entire State and that is my question. You have promised it to the entire State and now you want to run away by saying that the Congress Party while in power introduced statutory rationing only in Madras City and Coimbatore. Why do you want to take shelter under that plea. They had done it according to the situation obtaining in those days. But what have you stated to the electorate? Did you say that you would only copy what the Congress Party had done? No, you have stated that you would supply one-rupee-rice from Kanyakumari to Tirutani. So you have to be blamed for that. Now you can say to the people that it is impossible to give it to all the people. Be honest to yourself and do not play this political drama before the people.

Now I come to the drought problem. Of course there has been drought. Do I differ from you? No. But how have you to tackle this problem? You chose Madurantakam and approached the Prime Minister to visit it. Then one day you collected 2,000 workers—I know from where they had come; they did not work the previous day but came only that day who had shovels and crowbars in their hands and the moment the Prime Minister left Madurantakam, they went away and you did not even pay wages to them. I know you very well and I have been living in this State for a longer time than most of you and I have also been a Member of this House for a long time. But this is not the way you should cheat the Central Government.

* THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, on a point of order. I think, what is implied in the hon. Member's speech is that the Prime Minister of India is capable of being misled and such an implication is possible to-day—Probably my hon. Friend would not have made the allegation two days ago. He has implied that this great Lady who came here was capable of being misled. I ask, Mr. Chairman, is it right that such an aspersion can be cast on the Prime Minister even in an implied manner as he has done

THIRU K. VINAYAKAM : Sir, let me explain my point. There is no insinuation against the Prime Minister. My insinuation is against the Party that is in power.



THE HON. THIRU K. A. MATHIALAGAN : Can an hon. Member make an insinuation against the Party in power also?

THIRU K. VINAYAKAM : That is my charge.

*மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செஞ்சி வெ. முனுசாமி):* மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எழுப்பியது ஒழுங்குப் பிரச்சனையில் வராது என்றாலும் பிரதம மந்திரி இங்கு வந்திருந்தபொழுது தமிழக அரசு நடந்துகொண்ட முறையினைப்பற்றி இந்த மன்றத்திலே எழுப்புகின்ற பிரச்சினைகள் இந்த முறையில் இருந்தால், அவை அங்கே சென்றால் அது நன்றாக இருக்காது. எனவே இது போன்ற வார்த்தைகளைப் பேசக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : I will change it. I will put it in such a manner that it will not offend you or the Prime Minister. Sir, actually no drought relief work was carried out. In fact, she pertinently pointed out some green patches and some good crops in Madurantakam and Chingleput. In spite of that just before the Presidential election, you got Rs. 3 crores. I know how the drought relief work has been carried out there. It has not been properly executed and it is only a waste.

THIRU N. SANKARIAH : Just before the Presidential election the Government got Rs. 3 crores'. என்று கூறியிருக்கிறார்கள். ஜனாதிபதித் தேர்தலுக்காக லஞ்சம் முதலிய குற்றங்களை மத்திய அரசாங்கம் செய்ததாகக் கூறுகிறார்கள். இது முறைதானா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக மூன்று கோடி ரூபாய் கொடுத்தார்கள். அதைத் தவறான எண்ணத்தோடு இந்தியப் பிரதமர் கொடுத்தார்கள் என்று கூறியிருக்கிறார்கள். அதை அவர்கள் வாபஸ் பெறவேண்டும். அவர்கள் அதைத் திரும்பப் பெறவில்லையென்றால் இந்த மன்றத்தின் குறிப்பிலிருந்து அவற்றை எடுத்துவிட வேண்டும். அது தவறான கருத்து. அவர்கள் பேசியது சரியானதல்ல, நம்முடைய மரபுக்கு உகந்தது அல்ல. வேறு எந்த அர்த்தத்திலேயும் அவர்கள் சொல்லியிருக்க முடியாது. இதற்குத் தாங்கள் தீர்ப்பு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செஞ்சி வெ. முனுசாமி) :* இந்தப் பிரச்சினையை எழுப்பாமல் இருந்தால் நல்லது என்று சொல்லியிருக்கிறேன். ஆனால் கிளப்பியிருக்கிறார்கள். மத்திய அரசு மாநில அரசுக்குத் தொடர்ச்சியாகத் தந்துகொண்டிருக்கிறது. மூன்று கோடி தந்திருக்கிறது. மூன்று கோடியை ஜனாதிபதி தேர்தலுக்காகக் கொடுத்ததாகச் சொல்வது சரியல்ல. இதுபோன்ற நிகழ்ச்சிகள் இங்கே நடந்தன என்று நடவடிக்கைக் குறிப்பில் இருந்தால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எப்படிப் பேசியிருக்கிறார்கள் என்பது பொதுமக்களுக்கும் மத்திய அரசிற்கும் தெரியும். எனவே நடவடிக்கைக் குறிப்பில் இருக்கட்டும்.

[1969 ஆகஸ்ட் 22

THIRU K. VINAYAKAM : Sir, if I am to trust my memory—I am sure my memory is always good—I have only stated just before the Presidential election' and I have only pointed out when the amount was given. After all, she is my Prime Minister.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செஞ்சி வெ. முனுசாமி) : அடுத்து ஏ. எம். இராஜா.

(திரு. இராஜா அவர்கள் எழுந்தார்கள்)

THIRU K. VINAYAKAM : Sir, just a minute.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செஞ்சி வெ. முனுசாமி) : உறுப்பினர் அவர்களுக்கு 20 நிமிடம் கொடுக்கப்பட்டது. அவர்கள் 11-20-க்கு ஆரம்பித்தார்கள். 11.47 ஆகிறது. கூடுதலாக 7 நிமிடங்கள் தரப்பட்டு இருக்கிறது. ஆகவே மேற்கொண்டு பேச அனுமதிப்பதற்கில்லை. திரு. ஏ. எம். இராஜா அவர்கள் தொடர்ந்து பேசுவார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அவர்கள் முடித்துவிடப் போகிறார்கள். மேற்கொண்டு 5 நிமிடம் கொடுத்தாலும் பரவாயில்லை, கொடுக்கலாம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செஞ்சி வெ. முனுசாமி) : எதிர்க்கட்சித் தலைவருக்கு ஒன்று தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுக்கு 20 நிமிடங்கள் கொடுக்கப்பட்டன. மேற்கொண்டு 5 நிமிடங்கள் அல்ல, 7 நிமிடங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அவர்களும் பேசி இருக்கிறார்கள். அடுத்தவரைப் பேச இப்பொழுது அழைத்திருக்கிறேன். எனவே, மேற்கொண்டும் அனுமதிக்க முடியாது. திரு. ஏ. எம். இராஜா அவர்கள் இப்பொழுது பேசலாம்.

THIRU K. VINAYAKAM : Sir, let me finish my speech. This is not the way how you should hustle me. I am making a point to help this Government. I am only trying to support this Government. If they are touchy......

MR. CAIRMAN (Thiru Gingee V. Munusamy) : Opportunities must be given to all the hon. Members. An opportunity has already been given to the hon. Member and he has utilised that opportunity. I would not give further time to him. Let the hon. Member, Thiru Raja, continue his speech.

* திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, கனம் நிதியமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற அறிக்கையை ஆதரித்துச் சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாட்டில் ஏற்படப்போகும் மாறுதல்களை எண்ணப் புகுமுன் இந்திய உபகண்டத்தின் இன்றைய அரசியல் நிலையையும் எண்ணிப் பார்க்க வேண்டும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடியும் வரையிலும் மாநிலங்களிலேயும் மத்தியிலேயும் காங்கிரஸ் கட்சி



1969 ஆகஸ்ட் 22] [திரு. ஏ. எம். இராஜா]

தான் ஆட்சிப்பொறுப்பிலே இருந்தது. மத்தியில் இருந்த காங்கிரஸ் கட்சி மாநிலங்களிலேயும் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காரணத்தாலே காங்கிரஸ் கட்சி தன்னுடைய பொருளாதாரக் கொள்கையை நடைமுறைக்குக் கொண்டுவரத் திட்டங்கள் தீட்டி மாநிலங்களிலே நிறைவேற்றி வந்தது.

ஆனால் இன்று அரசியல் நிலைமை மாறி இருக்கிறது. பல்வேறு மாநிலங்களில் காங்கிரஸ் அல்லாத கட்சிகள் ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தப்பட்டிருக்கின்றன. மத்தியில் காங்கிரஸ் கட்சி ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தப்பட்டிருக்கிறது. இன்று இந்திய உபகண்டம் முழுமையும் திட்டங்கள் தீட்டுவது இந்தியப் பேரரசின் கையில் இருக்கிறது. இந்தியப் பேரரசை ஆளுகின்றவர்கள் காங்கிரஸ்காரர்கள். அவர்கள் மக்களிடம் ஒருவிதமான பொருளாதாரக் கொள்கையைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பொருளாதாரக் கொள்கைக்கு ஏற்ப திட்டங்களைத் தீட்டித் தருகிறார்கள். அந்தத் திட்டங்களை காங்கிரஸ் அல்லாத மற்ற கட்சிகள் நிறைவேற்ற வேண்டுமென்ற நிர்ப்பந்த நிலையில்தான் இன்றைய அரசியல் நிலை இருக்கிறது. இந்த நிலை மாற்றப்பட்டாக வேண்டும். இந்தியப் பேரரசு திட்டங்களைத் தீட்டுவது உடனடியாக நிறுத்தப்பட்டாக வேண்டும். அந்த உரிமையை அவர்களிடம் இருந்து எடுத்துவிட்டு அந்தந்த மாநிலங்களே அவரவர்களுடைய திட்டங்களைத் தீட்டிக்கொள்ளவேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டால்தான் இந்த நாட்டில் உண்மையான திட்டங்கள் தீட்டப்படும். மக்களுக்குத் தேவையான, வளர்ச்சிக்கான திட்டங்கள் தீட்டப்படும். ஆகவே, முதற்படியாக இந்தியப் பேரரசு வைத்திருக்கின்ற திட்டக் கமிஷனை உடனடியாக ரத்து செய்து விட்டு மாநிலங்களில் திட்டக் குழுவை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன். ஆனால் மதிப்பிற்குரிய காங்கிரஸ் நண்பர்கள் கூறுவார்கள்—எல்லாக் கட்சிகளுமே நாட்டு நலனுக்காக, மக்கள் நலனுக்காகத்தான் திட்டங்களைத் தீட்டுகின்றன என்று.

நான் இதற்கு ஒரு உதாரணத்தைக் கூற விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் விநாயகம் அவர்கள் கூடக் கூறினார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தப் படுவதற்கு முன்னால் தேர்தல் நேரத்தில் பல வாக்குறுதிகளைக் கொடுத்தனர். அந்த வாக்குறுதிகளில் ஒன்றுதான் படியரிசித் திட்டம். அந்தப் படியரிசி திட்டம் நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு முதற்படியாக கோவையிலும், சென்னையிலும் செயற்படுத்தினோம். ஆனால், காங்கிரஸ்காரர்கள் அதை ஏளனம் செய்கிறார்கள்; தேவையற்ற திட்டம், அவசியமற்ற திட்டம் என்றெல்லாம் குற்றம் சாட்டுகிறார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அது தேவையற்ற திட்டம், அவசியமற்ற திட்டம் என்று எந்த இடத்தில் சொல்லியிருக்கிறோம் என்பதைத் தயவு செய்து அவர்கள் நிரூபிக்க வேண்டும். அது எல்லா இடங்களுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்று நாங்கள் சொல்லியிருக்கிறோமே தவிர, அது தேவையற்ற திட்டம் என்று எங்கே சொல்லியிருக்கிறோம் என்பதை அவர்கள் கூற வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செஞ்சி வெ. முனுசாமி) : சட்டப் பேரவை விதிகளின்படி ஒரு உறுப்பினர் பேசுகின்றபோது இடையே குறுக்கிடக்கூடாது. பேசிய பிறகு ஏதாவது விளக்கம் வேண்டுமென்றால் கேட்டு அதற்கு வேண்டுமானால் பேசிய உறுப்பினர் பதில் அளிக்களாமே தவிர, இடையே குறுக்கே கேள்வி கேட்பது சரியாக இருக்காது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அவர் பேசி முடித்த பிறகு இறுதியாக அவருடைய கேள்வியைக் கேட்கலாம்.

THIRU K. VINAYAKAM : When I was on my legs, I tolerated the interruption of the Hon. Minister for Co-operation as well as many members. I did not question it. When now a wrong impression is being created, the Hon. Leader of the Opposition feels the necessity to intervene to put forth his views to correct the wrong impression. Is it right for you, Sir, to say that he should not do so?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செஞ்சி வெ. முனுசாமி) : மாண்புமிகு விநாயகம் அவர்கள் பேசும்போது அந்தப் பேச்சின் ஒரு பகுதியை எக்ஸ்பஞ்ச் பண்ண வேண்டுமென்றும், ஒழுங்கு முறைக்கு மீறியதாக ஒரு பகுதி இருக்கிறது என்பதைப் பற்றியும் இரு அமைச்சர்கள் தலையிட்டிருக்கிறார்கள். உங்களுடைய பேச்சிலே குறுக்கே கேள்வி கேட்கும் முறையிலே யாரும் குறுக்கிடவில்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : உங்களுடைய கட்சியின் சாதனைகளைப் பற்றி எவ்வளவு வேண்டுமென்றாலும் வானளாவப் புகழ்ந்து பேசிக் கொள்ளுங்கள். எங்களுடைய கட்சியைப் பற்றித் தவறாகச் சொன்னால் அதை நாங்கள் கேட்டுக்கொண்டு சும்மா இருக்க முடியாது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செஞ்சி வெ. முனுசாமி) : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நன்றாக அறிவார்கள்—எதிர்க்கட்சிகள் ஆளும் கட்சிபற்றியும், ஆளும் கட்சி எதிர்க்கட்சிபற்றியும் பேசுவது வழக்கமாக நடந்துவரும் சம்பிரதாயந்தான். ஆகவே, இப்படி நடுவே கேள்விகள் கேட்டுக் குறுக்கிடுவது சரியல்ல.

திரு. ஏ. எம். இராஜா : எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் விநாயகம் அவர்கள் தன்னுடைய பேச்சில் குறிப்பிட்டார்கள், அதைத்தான் நான் குறிப்பிடுகிறேன். படியரிசித் திட்டத்தைத்





திராவிட முன்னேற்றக் கழகம் நிறைவேற்றும் வகையில் முதற்படியாக சென்னையிலும் கோவையிலும் அமல் செய்தது. மாற்றுக் கட்சிக்காரர்கள், குறிப்பாக, காங்கிரஸ் கட்சிக்காரர்கள், இது தேவையற்ற திட்டம், அதிகச் செலவை ஏற்படுத்தக் கூடிய திட்டம், அந்தத் திட்டம் மக்களுக்கு இந்த நேரத்தில் தேவையில்லை என்று கூறினார்கள். அதைத்தான் நான் கூறினேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : எங்கே அப்படிக் கூறினோம் என்று கேட்கிறேன்? தமிழ்நாடு முழுவதும் ஏன் விஸ்தரிக்கவில்லை என்றுதான் கேட்டோம். ஆகவே, உறுப்பினர் மறுபடியும் மறுபடியும் இப்படிப் பேசிக் கொண்டிருந்தால் நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

திரு. ஏ. எம். இராஜா : இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதால் 10 கோடி ரூபாய் அதிகமாகச் செலவாகிறது, அந்தத் தொகையை மத்திய அரசு கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டோம். அப்போதும் கேட்டார்கள்—எங்களைக் கேட்டா இந்தத் திட்டத்தைத் தீட்டினார்கள் என்று. உங்களைக் கேட்டுத் திட்டம் தீட்ட நாங்கள் என்ன உங்கள் அடிமைகளா? கடந்த 20 ஆண்டு காலமாக காங்கிரஸ் அரசு மாநிலங்களிலும், மத்தியிலும் ஆட்சிப் பொறுப்பில் இருந்திருக்கிறது. பல கோடி ரூபாயைத் திட்டம் என்ற முறையிலே செலவு செய்திருக்கிறார்கள். குடிக்கக் கூடத் தண்ணீர் கிடையாது நாட்டிலே.

(காங்கிரஸ் கட்சித் தரப்பில் பல உறுப்பினர்கள்: சென்னையிலே தண்ணீர் இல்லையே, கார்ப்பரேஷன் என்ன செய்கிறது?)

திரு. பி. ஜி. கருத்திருமன் : கடந்த பத்து வருஷமாகக் கார்ப்பரேஷனில் நீங்கள் என்ன செய்தீர்கள்? நேற்றுத்தான் என்னவோ 12,000 கிணறுகளைத் தோண்டப் போகிறோம் என்று சொன்னீர்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செஞ்சி வெ. முனுசாமி) : மாண்புமிகு உறுப்பினர்கள் தயவு செய்து மன்ற ஒழுங்கைக் காப்பாற்றும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஏ. எம். இராஜா : இதுபோன்று இந்தியப் பேரரசு தன்னுடைய திட்டங்களை—நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தீட்டும்போது மாநிலங்களும் அந்தத் திட்டங்களில் பங்கேற்கும் அளவுக்கான உரிமையைக் கொடுக்க மறுக்கிறது. மாநில அரசின் உரிமைகளை மத்தியில் இருக்கின்ற காங்கிரஸ் அரசு . . . .

திரு. பி. ஜி. கருத்திருமன் : காங்கிரஸ் கட்சியைப் பற்றிச் சொல்வார்களேயானால் நாங்களும் தலையிட வேண்டியிருக்கும். மறுபடியும் நையாண்டி பேசிக் கொண்டு போனால் நாங்களும் தலையிட வேண்டியிருக்கும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** திரு. வினாயகம் அவர்களோடு நான் விவகாரம் செய்ய விரும்பவில்லை. இலவசக் கல்வியை திரு. காமராஜ் அவர்கள் கொண்டு வந்தார்கள் என்று சொல்லும்பொழுது (திரு. கே. வினாயகம் : அவர் இனிஷியேட் செய்தார்) காமராஜ் மட்டும்தானா, காங்கிரஸ் கட்சியையும் தான் சேர்த்துக்கொள்வது தானே ? அது மாதிரி, இந்திரா காந்தி அம்மையார் என்றால் ஒரு அடையாளமாகத் தான் சொன்னேனே தவிர, வேறு ஒன்றுமில்லை. நாங்கள் முன்பே சொன்னோம். இப்பொழுதுதான் அம்மையார் அவர்கள் விழித்துக் கொண்டார்கள். நாஷனல் டெவலப்மெண்டு கவுன்சில் கூட்டத்தில் சொன்னோம். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இப்பொழுது இல்லை. நம்முடைய நண்பர் கட்சியைச் சேர்ந்த திரு. ஜோதி பாசு அவர்கள் அங்கே பேசினார்கள். அப்பொழுதே ஒரு ஊசலாட்டம் இருந்தது. இது கட்சிக்குள் இருக்கிற உட்கட்சிப் போராட்டத்தின் கண்ணாமூச்சி விளையாட்டாக முடிந்து விடக்கூடாது. இது காரியங்களின் துவக்கம் தான். பாங்கு நாஷனலைசேஷன் என்றால், முடிவு இல்லை. எல்லாக் காரியங்களையும் இனிதான் செய்து முடிக்க வேண்டும்.

நாம் கொள்கைகளை மாற்றிக்கொள்வதற்குத் தயாராக இருக்க வேண்டும். ஒரு புதிய தோற்றம், ஒரு புதிய நோக்கம் தேவை. ஃப்ரெஷ் லுக் தேவை (திரு. கே. வினாயகம் : நியூ லுக்) இந்த 20 ஆண்டு காலமாகப் பார்க்காத அந்த லுக்கைப் பார்க்க வேண்டும். இன்றைக்கு இந்த விவகாரத்தில் போட்டா போட்டி ஏற்படுவது நல்லதல்ல. நாடு முன்னேறவேண்டும். ராஜா மாடத்தில் யார் இருக்கவேண்டும் என்பதிலே சர்ச்சை. ஜனாதிபதி தேர்தலைப் பார்த்திருக்கிறோம். சிறு கூடாரங்களில் மாறுதல், இந்த நாடகத்தில் கதாபாத்திரம் மாறுதல், நேற்று ஒரு பாத்திரம், மூந்தா நாள் ஒரு பாத்திரம், நாளைக்கு ஒரு பாத்திரம். இந்த பொருளாதாரப் போராட்டங்கள் கூர்மையாகிக் கொண்டு வருகின்றன. சென்ற 20 ஆண்டு காலமாக நல்ல கொள்கைகளைக் கடைப்பிடிக்காமல், ஏதேச்சாதிகாரப் பாதையில் சென்றதினால் தான், திட்டவட்டமான கொள்கை இல்லாததினால் தான், கோடிக் கணக்கான மக்கள் விரும்பும் சமூக, பொருளாதாரப் புரட்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகச் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யவில்லை. காங்கிரஸ் என்று வேண்டுமானால் சொல்லவில்லை. இந்தத் திட்டங்களுக்கு யார் பொறுப்பாளியோ, யார் கரங்களில் கோடிக்கணக்கான ரூபாய் ஒப்படைக்கப் பட்டதோ, யார் கரங்களிலே இப்படிப்பட்ட பெரிய காரியங்கள் ஒப்படைக்கப்பட்டனவோ, அவர்கள் இதில் தவறிவிட்டார்கள். ஆகவே, இந்தக் கொள்கை மதிப்பீடுகள் மாறவேண்டும். கொள்கைகளை மந்திரிகள்தான் நிர்ணயிக்கவேண்டும். கொள்கை பக்கத்திலுள்ள தோழர்கள் தான் நிர்ணயிக்கவேண்டும். கொள்கைகள் நிர்ணயிப்பதை இங்கே உட்கார்ந்துகொண்டிருக்கும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளிடம் விட்டுவிடுவோம் என்றால், அது



ஜனநாயகமாகாது, மக்களுடைய எண்ணத்தை, ஆர்வங்களைப் பிரதிபலிப்பது ஆகாது. அதிகாரிகள் விளக்கங்களைச் சொல்லலாம், திட்டங்களை நிறைவேற்றும் செயல்முறைகளைப் பற்றிச் சொல்லலாம். நாட்டின் தலைவர்கள் தான் இந்தத் திட்டத்தின் இயக்கத்தை ஏற்று நடத்தவேண்டும், அவர்கள் தான் திட்டங்கள் உருவாக்கவேண்டும். திட்டங்களைத் தீட்டுவதை ஐ.ஏ.எஸ். அதிகாரிகளிடத்திலோ, பொருளாதார நிபுணர்களிடத்திலோ அல்லது கீழே உள்ள அதிகாரிகளிடத்திலோ விட்டுவிடுவது என்பது சமூகத்திற்கே ஒரு அபாயம் என்று கருதுகிறேன். மக்களுடைய எண்ணங்கள் இந்தத் திட்டங்களை உருவாக்கக்கூடிய விவாதத்தில் பிரதிபலிக்கவேண்டும். வெறும் புத்தகங்களில் திட்டங்களை உருவாக்கிவிட முடியாது. இவைகளைக் கூட மாற்றி, எறிந்துவிட்டு, எத்தனையோ மாதிரி புதியதாக உண்டாக்கி யிருக்கலாம்.

இன்றைக்கு அப்படித்தான் மாற்றவேண்டும். எல்லாக் கிராமங் களுக்கும் மின்சாரம், எல்லாக் கிராமங்களுக்கும் குடி நீர் என்று புத்தகம் அச்சடித்துச் சொல்லிவிட்டோமே, முன்னாலேயே சொல்லி விட்டோமே என்று சொல்லிக் கொண்டிருக்க முடியாது. அந்தந்த நேரத்திற்குத் தக்கபடி, திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். அப்போதுதான் மக்களுக்கு உண்மையான சேவை செய்தவர் களாக ஆவோம். இதில் கட்சி மாச்சரியம் ஒன்றும் இல்லை. நாம் சுயராஜ்யத்தைப் பெற்றிருக்கிறோம். திரு. வினாயகம் அவர்களும் எங்களோடு இருந்தவர்தான். திரு. கருத்திருமன் அவர்கள் ஜெயிலுக்குப் போனார்களோ, இல்லையோ எனக்குத் தெரியாது. (சிரிப்பு) போகவில்லைபோல்தான் தோன்றுகிறது (சிரிப்பு). நான் பதினொரு முறை ஜெயிலுக்குப் போயிருக்கிறேன். நான் சட்ட மன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் ஒரு வருஷ காலம் ஜெயிலில் இருந்திருக்கிறேன். சுதந்திரம் பெற்று இருபது ஆண்டு களாகியும் நாம் இன்னும் முன்னேறவில்லை. பொருளாதார சுதந்திரத்திற்கும், சமுதாய சுதந்திரத்திற்குமான அடித்தளத்தை நாம் அமைக்க வேண்டும். இன்றைக்கு ஒரு புதிய குறி தென்படு கிறது. இப்போது இருக்கிற காலக்குறி மாறட்டும். 'இங்கே கிரகங்கள் மாறுகின்றன, அங்கே கிரகங்கள் மாறுகின்றன' என்று ஜோஸ்யர்கள்தான் கூறுவார்கள். ஜோஸ்யத்தில் நம்பிக்கை யுள்ளவர்கள் அதைப் பார்த்துக்கொள்ளட்டும். பல கோடி மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டும். வறுமை நிர்மூலமாக்கப்பட வேண்டும். நல்ல முடிவை ஏற்படுத்துகிற நல்ல சம்பவங்களை நாம் முகமலர்ச்சியுடன் வரவேற்று, நல்ல கருத்துக்களை எடுத்துரைத்ததன்மூலம், அந்தக் கருத்துக்களுக்கு வலுவூட்டி, அற்புதமான படைப்பாகப் படைக்க வேண்டுமென்று கூறி, விவாதத்தை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு மணி நேரம் இருக்கிறது. இன்னும் 9 நபர்கள் பேசுவதற்கு பெயர் கொடுத்

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். இந்த மன்றத்தில் எந்தக் கட்சியைப் பற்றியும் பேச உரிமை இருக்கும்போது இன்ன கட்சியைப் பற்றி பேசக்கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுவது, அங்கத்தினர் பேசிக் கொண்டிருக்கும்போது இடையிடையே குறுக்கிட்டு அவருடைய நேரத்தை வெட்டுவது ஒழுங்கான முறையல்ல. அவ்வாறு குறுக்கே தலையிடாது இருக்கும்படி சபாநாயகர் அவர்கள் கவனித்துக் கொள்ளவேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. செஞ்சி வெ. முனுசாமி): ஒரு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது இன்னொரு உறுப்பினர் குறுக்கிடக்கூடாது என்று விதிமுறைகள் தெளிவாக இருக்கின்றன. இப்படிப்பட்ட நேரத்தில் ஒவ்வொரு கட்சியினருக்கும் பேச வாய்ப்பு இருக்கும் நிலையில் ஒரு கட்சியைச் சேர்ந்தவர் பேசிய பிறகு இன்னொரு கட்சியைச் சேர்ந்தவர் பேசும்போது அதற்கு விளக்கம் கேட்கவோ, சொல்லவோ வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இப்படிக் குறுக்கிட்டுப் பேசுவது முறையாக இருக்காது என்று கூறி இனியாவது அமைதி காட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஏ. எம். இராஜா : இந்தியப் பேரரசு திட்டங்களுக்காக மாநில அரசுகளுக்கு முதலில் கொடுப்பதாக ஒப்புக் கொண்ட தொகைகளைப் பின்னர் கொடுப்பதில்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை எடுத்துக் கொண்டால் கூட முதலில் நமக்கு 250 கோடி ரூபாய் கொடுப்பதாக ஒப்புக் கொண்டார்கள். இப்போது எங்களால் 250 கோடி கொடுக்க முடியாது, 202 கோடி ரூபாய்தான் கொடுக்க முடியும் என்று கூறுகிறார்கள். சென்ற ஆண்டு திட்டத்திலே நமக்கு வரவேண்டிய 44 கோடியிலே 40 கோடிதான் வந்திருக்கிறது. காலஞ் சென்ற பேரறிஞர் அண்ணா அவர்களே நிதிநிலை அறிக்கையில் இதுபற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தக் குறைபாடுகளைப் போக்க ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நியமிக்கப்படுகிற நிதி ஆணைக் குழுவை நிரந்தரமாகச் செயல்படச் செய்யவேண்டும். அதற்கான வழிமுறைகளைக் காண வேண்டும். மாநிலங்களின் தேவைகளை அந்தந்த மாநில அரசு தான் உணர முடியும். தமிழ் நாட்டைப் பொருத்தவரை தமிழக அரசு 624 கோடி ரூபாய்க்குத் திட்டங்களைத் தீட்டி அனுப்பியிருக்கிறது. இந்தியப் பேரரசு 'உங்களுடைய திட்டங்கள் அதிகமாக இருக்கிறது, குறைத்துக் கொள்ளுங்கள்' என்று கூறி 502 கோடி ரூபாயாகக் குறைத்திருக்கிறது. நாம் நம்முடைய மாநிலத்தில் இருக்கின்ற கிராமங்கள் அனைத்துக்கும் குடிதண்ணீர் வழங்க முடிவு செய்திருக்கிறோம். இதுபோன்று மாநிலத்தின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதாகக் கூறியிருக்கிறோம். அத்தகைய வாக்குறுதியைக் கொடுத்திருக்கிறோம். இதற்கு நமக்கு





ஆயிரம் கோடி ரூபாய் தேவைப்படுகிறது. அப்படி ஆயிரம் கோடி ரூபாய்க்குத் திட்டம் தீட்டினால்தான் நம்முடைய தேவைகளில் ஒரு பகுதியைப் பூர்த்தி செய்ய முடியும்.

மேலும் தொழில் துறையை எடுத்துக் கொண்டால் தற்போது மத்திய அரசு ஆதரவு பெற்ற திட்டங்கள் ஒன்றுகூட இல்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறைந்தது 100 கோடி ரூபாய் அளவுக்காவது மத்திய அரசு ஆதரவு பெற்ற திட்டங்கள் இருந்திருக்க வேண்டும். அது மறுக்கப்பட்டிருக்கிறது. நமக்குக் கொடுக்க வேண்டிய நிதியைக் குறைக்கிறார்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்போது 10.8 சதவிகிதம் நிதி கொடுத்தார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 5.7 சதவிகிதம் என்ற அளவில் குறைந்திருக்கிறது.

இதற்குக் காரணம் என்ன? காரணம், இந்தியப் பேரரசில் உட்கார்ந்திருப்பவர்கள் வேறு கட்சிக்காரர்களாக இருக்கிறார்கள். மாநிலங்களில் வேறு கட்சிகள் இருக்கின்றன. ஆகவே நான் கூறுவது என்னவென்றால், இந்தியப் பேரரசின் உரிமைகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும். இந்தியப் பேரரசின் அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும். இந்தியப் பேரரசு தன் செலவிற்கு எவ்வளவு தேவைப்படுகிறதோ அந்த அளவிற்கு மாநிலங்களிடமிருந்து மானியமாகப் பெற்றுக்கொண்டு மற்ற அனைத்து வசதிகளையும், வளமான வரித்துறைகள் அனைத்தையும் மாநிலங்களுக்கு மாற்றிவிட வேண்டும். அப்படிச் செய்தால்தான் தமிழகத்தைப் பொறுத்தவரையில் வளமான திட்டங்களைத் தீட்டமுடியும். இந்நேரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டுள்ளதை இங்கு குறிப்பிட்டுவிட்டு என் உரையை முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். "ஒற்றுமையின் பெயரால் பிறரை ஆளடிமையாக்கிட முனைந்திருக்கின்றோம். ஒருமைப்பாட்டினை உருவாக்கிடும் போர்வலின் முனைப்பால் நாட்டின் ஓர் அங்கத்தினைப் பிறிதோர் பரப்பின் அடிமைக்காடென மாற்றிடும் நிலை உருவாகிடும் என்பதைத் தெரிந்திருக்கலாம், தெரியாமலுமிருக்கலாம். இதனை அறிந்து செய்திடினும் சரியே—அறியாமல் ஆணவத்தின் மேலீட்டால் புரிந்திடினும் ஆகட்டும், கொத்தடிமைத்தனத்திற்கு எப்படி நாம் துணை நின்றிட முடியும் என்று கேட்கிறேன்.

பயணத்தின் முடிவு—இலட்சிய முகடு எத்துணைப் புனிதமாக வேனும் இருந்திட்டும். பாரெங்கும் பெருமதிப்புப் பெற்றிடுவோம் என்பதையும் ஒப்பிடுகின்றோம். ஆனால் அதன் விளைவும் பயனும் எம்மை கொத்தடிமை யாக்கிவிடும் என்றால் எப்படி ஒப்பிட முடியும்? துடிக்காமல்—துடிதுடித்துக் கண்டித்துத் தடுத்திடாமல் இருந்திடுவோமோ? நடவாது அது" என்று கூறியிருக்கிறார்கள்.

சமீபத்தில் கேரள அமைச்சரான திரு. மத்தாய் மஞ்சூரான் அவர்கள் பேசும்போது ஒரு கருத்தைக் கூறியிருக்கிறார்கள். கேரளத்திற்கு சுயநிர்ணய உரிமையையும் சுதந்திரத்தையும் அளித்தால்தான் தொழிலாளர் பிரச்சினையையும் மற்ற மாநிலப் பிரச்சினைகளையும் முழுமையாகத் தீர்க்க முடியும் என்று கூறியிருக்கிறார்கள். அதற்காக பாடுபடுவோம் என்றும் கூறியிருக்கிறார்கள். இந்நிலையில் நான் இந்தியப் பேரரசை ஞாபகப்படுத்தக் கூடியதெல்லாம், இந்தியப் பேரரசு முறையாக, நியாயமாக தமிழகத்திற்குக் கிடைக்கவேண்டிய பங்கை கொடுக்காவிட்டால் நிச்சயமாக இந்தியப் பேரரசு இந்தியப் பேரரசாக இருக்காது, தமிழகம் தன்னாட்சி பெற்று விளங்கும் (ஆரவாரம்) என்று கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, தமிழகத்தின் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை இந்த சபை பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. இத்திட்டம் பற்றி என்னுடைய கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக இத்திட்டம் முழுமையும் மாற்றப்பட்டு புதிய ஒரு திட்டம் வகுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துவதின் பேரில் திட்டத்திற்குள்ளே சென்று நான் ஆராயாமல் கொள்கையைப் பற்றி மட்டும் இந்த சந்தர்ப்பத்தில் பேச விரும்புகிறேன். நிதி அமைச்சர் அவர்கள் இதைப் பற்றி முன்னால் பேசியபோது வெகு தீவிரமான கொள்கைகளை எல்லாம் வெளியிட்டார்கள். அவற்றை அப்படியே நான் ஆதரிக்கிறேன். ஆனால் அவர்கள் குறிப்பிடுகிறபோது இந்தத் திட்டத்தைப் போடும்போது எந்தவிதமான லட்சியமும் இல்லாமல் போட்டிருக்கிறார்கள் என்று கூறினார்கள். அப்படியல்ல. திட்டத்திற்கு ஒரு லட்சியத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். எதை அடைவதற்காக இதைப் போடுகிறோம் என்று ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த இலட்சியத்தை அடைந்தார்களா என்று பார்த்தால் அந்த லட்சியத்தை அடையவில்லை. அப்படி ஏன் அதை அடையவில்லை என்பதைப் பரிசீலிப்பதுதான் இன்று இச்சபையின் நோக்கமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அந்த இலட்சியத்தை அடையாத காரணத்தினால் நாட்டில் என்னென்ன நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நாம் உன்னிப்பாக கவனித்துக் கொண்டு வருகிறோம்.

நாட்டில் இன்று தொழில் மந்தம் ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தொழில் மந்தத்தை எப்படிப் போக்குவது? எப்படி இந்தப் பொருளாதார சீர்குலைவைத் தடுத்து நல்லமுறையில் பொருளாதார அமைப்பை அமைப்பது என்ற கண்ணோட்டத்தோடும் எப்படி இந்நாட்டிலுள்ள வறுமையை எதிர்த்துப் போராடுவது, எப்படி இந்த நாட்டிலுள்ள கீழ் தட்டிலுள்ள, அடித்தட்டிலுள்ள மக்களின் உய்வுக்காக வழி காட்டுவது என்பதைப் பற்றித்தான் இத் திட்டத்தின் முழு கவனம் செல்லவேண்டும். அந்த அளவில்





தான் இந்தத் திட்டமும் இருக்கவேண்டும் நம் தேசிய வருவாய் 1960-61-ல் 14,140 கோடி ரூபாயாக இருந்தது. மூன்றாவது திட்டம் முடிவடையும்போது அது 15,930 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. ஆனால் தனி நபர் வருவாய் கடைசியில் 325 ரூபாயாகத்தான் இருந்துவருகின்றது. இந்த வளர்ச்சி போதுமா? 1960-61-லும் ரூ. 325, 1965—66-லும் ரூ. 326 என்றுதான் இருக்கிறது. வருவாய் அதிகரித்திருந்தபோதிலும் ஜனத்தொகையின் வளர்ச்சி அதைச் சாப்பிட்டு விட்டது. இந்த அளவிற்கு நம் தேசிய வருவாய் இருந்தால் நம் நாட்டிலுள்ள வறுமையைப் போக்கிட முடியுமா? என்று பார்த்தால் முடியாது. ஆகவே, நம் தேசிய வருவாயை அதிகரிக்க நாம் ஒரு திட்டம் போடவேண்டும். எந்த முறையில் நாம் திட்டமிட்டால் நம் தேசிய வருவாயைப் பெருக்க முடியும், எப்படி நாட்டிலுள்ள வறுமையைப் போக்க முடியும் என்பதுதான் இன்று நம் முன் உள்ள பிரச்சினை. அதற்கு நாம் உள்நாட்டில் எவ்வளவு தொகையைச் சேகரிக்க முடியும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

நமது வருவாய் கிட்டத்தட்ட 16,000 கோடி ரூபாய் என்றிருக்கும்போது நம் மக்கள் தங்கள் செலவுகள் போக, உணவு, உடை இவற்றிற்கான செலவுகள் எல்லாம் போக எவ்வளவு மிச்சப்படுத்த முடியும் என்பதை கணக்கில் எடுத்துக்கொண்டு தான் நாம் திட்டம் தீட்ட வேண்டியிருக்கிறது. நாம் திட்டம் தீட்டும்போது, நம் தேவைகள் என்ன, நம் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு எந்தளவிற்கு நாம் சக்தியுடையவர்களாக இருக்கிறோம் என்று பார்த்தால் சிறிது சிரமமாகத்தான் இருக்கிறது. நாம் இஷ்டப்படி 5,000 கோடி ரூபாய் போட்டு விடலாம் என்று கூறிக் கொண்டிருக்க முடியாது.

நம் தமிழகத்தின் தேவை என்னவென்று பார்த்தால் இங்குள்ள விவசாயத் துறையை முதலில் எடுத்துக்கொள்ளவேண்டும். என்னைப் பொறுத்தமட்டில் நமது திட்ட இலட்சியத்தை அடைய முடியாமல் போனதற்குக் காரணம் விவசாயத்தில் நாம்போதிய கவனம் செலுத்தவில்லை என்பதுதான். நம் நாட்டில் 70 சதவிகிதத்தினர் விவசாயத்தைத்தான் நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி விவசாயத்தை நம்பியிருப்பவர்களின் வாங்கும் சக்தி அதிகரிக்காமல் இருப்பதினால்தான் இன்று தொழில் துறையில் மந்தம் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம். சாமான்களை வாங்கக் கூடிய சக்தி சாதாரண மக்களிடம் இல்லை என்பதால்தான் தொழில் மந்தம் ஏற்பட்டிருக்கிறது. நாட்டிலுள்ள 30 சதவிகிதத்தினரிடமிருந்து மட்டும் மூலதனத்தை சேகரிக்க முற்பட்டால் தேவையான அளவிற்குக் கிடைக்காது. ஆகவே, நாட்டிலுள்ள எல்லா மக்களிடமிருந்து மூலதனம் பெற, அவர்களிடம் சேமிப்பை ஏற்படுத்துவதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டும். குறிப்பாக, விவசாயிகளிடம் இருந்து அந்த மூலதனத்தைப் பெறக்கூடிய அளவில்

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1969 ஆகஸ்ட் 22

நிலைமை இருக்கவேண்டும். மேலை நாடுகளில் தொழில் புரட்சி நடந்த காலத்தில் எப்படி மூலதனம் சேகரம் செய்தார்கள் என்பதையொட்டி இந்தக் காலத்தில் மூலதனத்தை சேர்க்க முடியாது. அப்போது குறைந்த அளவில் சம்பளத்தைக் கொடுத்து மூலதனம் சேகரித்து தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தினார்கள். ஆனால் இன்றைய நிலைமையில் அது முடியாது. வளர்ந்துள்ள இன்றைய சமுதாயத்தில், அறிவு பெருகியுள்ள இன்றைய சமுதாயத்தில் பழைய கொள்கையைப் புகுத்தி மூலதனத்தை சேகரிக்க முடியாது.

இந்தியாவைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் நம் மூலதனத்தை பெருக்கவேண்டுமென்றால் விவசாயத்தைப் பெருக்கினால்தான், நம் அடிப்படைத் தொழிலான வ்விவசாயத்தில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தினால்தான் இதரத் தொழில்களும் வளர்ச்சியடையும், மூலதனமும் கிடைக்க வழி ஏற்படும். இல்லாவிடில் நமக்குத் தேவையான மூலதனம் கிடைக்காது. அதோடு நம் நாட்டில் விவசாய முன்னேற்றம் ஏற்படாவிட்டால் தொழில்கள் வளர்ச்சியடையாது. தொழில் வளர்ச்சி ஏற்பட விவசாயம்தான் இன்று அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளது. ஆகவே நான் சொல்வது என்னவெனில், விவசாயத்திற்கும் விவசாயத்திற்கு உறுதுணையாக உள்ள தொழில்களுக்கும்தான் ஐந்தாண்டுகளுக்கு திட்டம் தீட்டவேண்டும். அதற்குப் பிறகுதான் மற்றத் துறைகளில் கவனம் செலுத்த வேண்டும். இல்லாவிடில் விவசாயத்துறையில் முன்னேற்றம் காணவும் முடியாது, மூலதனமும் கிடைக்காது. நான் விவசாயி என்ற முறையில் இதைச் சொல்லவில்லை. தொழில் வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணம் விவசாய வளர்ச்சிதான். நம் நாட்டிலுள்ள 70 சதவிகிதம் மக்களிடமிருந்து பணம் புரளவேண்டும். அப்போதுதான் நாம் நமக்கு வேண்டிய மூலதனத்தைத் திரட்ட முடியும். அப்போதுதான் தொழில் துறை வளர முடியும். ஆகவே, இந்தத் திட்டத்தை தள்ளி வைத்து விட்டு புதிய ஒரு திட்டத்தை விவசாயத்தை முன் நின்று செய்யவேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரையில் விவசாயத்திற்கு என்னென்ன தேவை என்று கணக்கிட்டுப் பார்த்தால், இன்று சாகுபடி செய்யக்கூடிய இடம் 1½ கோடி ஏக்கர் இருக்கிறது. அதிலே, தண்ணீர் பாசன வசதி பெற்ற நிலங்கள் 60 இலட்சம் ஏக்கர்கள். பாசன வசதி பெறுதவை பாக்கியுள்ள நிலங்கள். 60 இலட்சம் ஏக்கர்கள் போக, 1½ கோடியிலே 90 இலட்சம் ஏக்கர்களுக்குப் பாசன வசதியில்லாமல் இருக்கிறது. ஆதலால், சாகுபடி செய்வதற்கு லாயக்கான தரிசு நிலங்கள், சர்க்கார் நிலங்கள் மட்டுமல்ல, தனியார் பட்டா வைத்திருக்கும் நிலங்களையும் சேர்த்து 60 இலட்சம் ஏக்கராக்கள் தரிசாகக் கிடக்கின்றன. விவசாயம் செய்ய மக்கள் தயாராகயிருக்கிறார்கள். நாட்டிலே உணவு நெருக்கடி அதிகமாக இருக்கிறது.



1969 ஆகஸ்ட் 22] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

வேலை செய்ய மனிதன் இருக்கிறான். தேவை அதிகமாகி, உணவுப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. எனவே, இந்த நிலங்களையெல்லாம் சாகுபடி செய்வதற்குத் திட்டம் போட்டால் 3,000 கோடி ரூபாய் தமிழகத்திற்கு மட்டும் தேவைப்படுகிறது. இதற்கெல்லாம் பாசன வசதி செய்து கொடுத்துச் செய்வதற்கு, இயந்திரங்களுக்காகச் சொல்லவில்லை, இந்த 3,000 கோடி ரூபாயையும் போட்டு ஐந்தாண்டு அல்லது பத்தாண்டுத் திட்டத்திலே நிறைவேற்றியாக வேண்டும். இப்பொழுது என்ன நடக்கிறது? 502 கோடி ரூபாயில் திட்டம் தீட்டு என்று மத்திய சர்க்காரில் சொல்லுகிறார்கள். 575 கோடி ரூபாய்க்குச் செய்யப் போகிறோம் என்று இந்த அரசாங்கம் கருதுகிறது. ஆனால் நம்மிடத்திலே கொடுக்கப்பட்டிருப்பது 624 கோடி ரூபாய்க்கு. இதில் எந்த திட்டத்தை நிறைவேற்றப்போகிறோம் என்று புரியாமலே இந்தத் திட்டத்தைப்பற்றி நான் என்ன சொல்வது என்று புரியவில்லை. மத்திய சர்க்கார் 502 கோடி ரூபாய்க்கு வரக்களித்திருக்கிறார்கள். இதை அப்படியே விவசாயத்திற்குப் போட்டால், ஆறைந்து, முப்பது என்று வைத்தால், முப்பது ஆண்டுகள் ஆகும். ஆகவே, இந்த 500 கோடியோடு எல்லா வசதிகளையும் சேர்த்து 1,000 கோடி ரூபாயில் திட்டத்தை, கிராமப்புற மக்களுக்கு வசதி செய்து தரும் திட்டத்தைப்போட்டு விவசாயத்திற்காக நீங்கள் நிறைவேற்றினால் உங்களுக்கு அந்த மூலதனம் அடுத்து ஐந்தாண்டுகளிலே கிடைத்துவிடும். நீங்கள் பணத்தைத் தொழிலிலே போட்டீர்களானால், கன்ஸ்யூமர்ஸ் குட்ஸ் கிடைக்க வேண்டும், சாமான்களின் விலையைக் குறைக்கவேண்டும். ஆகவே, தொழிலிலே போடுவதைவிட, விவசாயத்தை அபிவிருத்தி செய்வதன்மூலம்தான், நாட்டிலேயிருக்கும் அத்தனை மக்களுக்கும் உணவு, குறைந்த விலையில் உணவு, வேலை வாய்ப்பு கொடுக்க முடியும். பெருந் தொழிலில் ஒருவருக்கு குறைந்தபட்சம் 10,000 ரூபாயாவது மூலதனம் செய்ய வேண்டும். சிறு தொழில்களுக்கு அவ்வளவு செய்யத் தேவையில்லை. ஆகவே, இதில் கவனம் செலுத்தினால் எல்லோருக்கும் வேலை வாய்ப்புக் கொடுக்க முடியும். அதோடு, போட்ட பணத்திற்கு அடுத்த ஆண்டே பலன் கிடைக்கும். விவசாயத்தில் இன்று பணம் போட்டால் அடுத்த மூன்று மாதங்களில் அறுவடை, அதிகமாகப் போனால் 6 மாதங்களில் அறுவடை எவ்வளவு பணம் விவசாயத்தில் போடுகிறோமோ அவ்வளவுக்கும் உடனடியாக வருவாய் கிடைக்கிறது. இவ்வாறு செய்தால் உணவுப் பொருட்களைக் குறைந்த விலையில் எல்லா மக்களுக்கும் கொடுக்க முடியும். ஆகவே, இந்தத் திட்டத்தை, விவசாயத் திட்டமாக மாற்றிச் செய்ய வேண்டும். எனவே, தொழிலில் மூலதனத்தைப் போடுவதற்குப் பதிலாக, விவசாயத்திற்குப் போட வேண்டும்.

ஆகவே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் விவசாயத்திற்குத் தேவையான பாசனத்திற்கான் மின் சக்தி போக்குவரத்து இதற்காகத்தான் இருக்கவேண்டுமே தவிர, பாக்கி திட்டங்களை ஒதுக்கி

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1969 ஆகஸ்ட் 22

விடவேண்டும். கல்விக்காக 53 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கல்வி அபிவிருத்திக்கு என்ன செய்யப் போகிறோம்? இப்பொழுதிருக்கும் கல்வி முறையே தப்பு. கல்வி முறையையே அடியோடு மாற்றியாகவேண்டும். அதற்காக என்ன கட்டிடங்கள் வேண்டிக்கிடக்கிறது? நாட்டிலேயுள்ள கோடிக் கணக்கான மக்கள் இன்றைக்குப் பிளாட்பாரத்திலே படுத்துக்கிடக்கிறார்கள். அவர்களுக்கு குடிப்பதற்குக் கஞ்சி இல்லை, அவர்களுக்கு வேலை யில்லை, அப்படி யிருக்கும்பொழுது எழுப்புக்கு மாளிகையை ஏன் கட்ட வேண்டும்? டெட் கேபிடலில் முதலீடு போடுவது நியாய மாகாது. இருபதாண்டுக்காலத்திற்குப் பின்னும் இந்த நாட்டில் வறுமையிருக்கிறது. இன்னும் ஒரு பத்தாண்டுக் காலத்திற்குக் கீற்றுக் கொட்டகையைப் போட்டுக்கொண்டு பள்ளிகளை நடத்திக் கொள்ளட்டுமே. எனவே, இதைத் தவிர்த்து விவசாயப் பெருக்கத்திற்காக நாம் பாடுபட வேண்டும். நாட்டிலே அப்பொழுது தான் புரட்சி ஏற்படும். பசுமைப்புரட்சி என்று சொன்னால் அப்போதுதான் ஏற்படும். அதுமட்டுமல்ல, இன்னும் சில காரியங்களை நாம் செய்ய வேண்டியிருக்கிறது.

நிலச்சீர்திருத்தம் சம்பந்தமாக நாம் சில காரியங்களைச் செய்ய வேண்டும். அதற்கு உடனடியாகச் சட்டங்கள் போட வேண்டும். விரிவான நிலச் சீர்திருத்தங்களைச் செய்யவேண்டும். நிலங்கள் துண்டு துண்டாக இருக்கக்கூடாது. நிலச் சொந்தக்காரர்களின் நிலம் ஒரேயிடத்தில் இருக்கவேண்டும். மினிமம் வேஜஸ் ஃபார் அக்ரிகல்சர், கன்ஸாலிடேஷன் ஆஃப் ஹோல்டிங்ஸ் இந்தத் திட்டங்களை நிறைவேற்றி, இதை ஒரு விவசாயத் திட்டமாகப் போட்டால், நாட்டிலே நல்லமுறையில் விவசாயம் நடக்கும். பசுமைப் புரட்சி என்று சொல்லுகிறார்கள். அந்தப் பசுமைப்புரட்சி அப்பொழுதுதான் நடக்கும். அந்தப் புரட்சியின் மூலம் தொழில் நடக்கிற நாடாக இந்த நாட்டை ஆக்குவதற்கு அரசு முற்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொண்டு அமர்கிறேன்.

* **திரு. மு. ச. சிவசாமி :** தலைவரவர்களே, தமிழக அரசின் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை, தமிழக அரசு தீர ஆராய்ந்து முடிவெடுத்திருக்கிறது என்பது வேளாண்மை, சிறுபாசனத் துறைக்கு 60 கோடி ரூபாயும், மின் சக்திக்கு 160 கோடி ரூபாயும், குடிநீர் வழங்குவதற்காக 55 கோடி ரூபாயும், கல்விக்காக 53 கோடி ரூபாயும் ஒதுக்கியிருப்பதிலிருந்து நன்கு தெரிகிறது. இந்தத் திட்டத்தின் மூலபுருஷர்களான, இதைத் தயாரித்த அமைச்சர்களுக்கும், குறிப்பாக நிதி இலாக்கா செயலாளருக்கும் நான் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றுள்ள நாட்டின் நிலைமையில் உணவுப்பொருள்களை எவ்வளவு அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டுமென்பதை மனத்தில் வைத்து அதற்காக 60 கோடி ரூபாயும், உணவு உற்பத்தியைப்



1969 ஆகஸ்ட் 22] [திரு. மு. ச. சிவசாமி]

பெருக்குவதற்கும், தொழில் வளத்தைப் பெருக்குவதற்கும் மின் சாரம் எவ்வளவு அவசியம் என்பதைக் கணக்கிட்டு அதற்காக 169 கோடி ரூபாயும், இன்றையதினம் மக்களுடைய முக்கிய பிரச்சினையான குடிநீரை வழங்குவதை மனத்தில் வைத்து அதற்காக 55 கோடி ரூபாயும் நான்காவது ஐந்தாண்டுத்திட்டத்திலே ஒதுக்கிய தொகைகளில் இந்த நான்கு இனங்களுக்கும் பங்கிட்டு ஒதுக்கியிருப்பதிலிருந்து இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டம், தமிழக அரசு தயாரித்திருக்கின்ற இந்தத் திட்டம், மக்களின் தேவையை மனத்தில் வைத்துத் தீட்டப்பட்டிருக்கிறது என்பது நன்கு புலனாகிறது. அதேநேரத்தில், உணவு உற்பத்தியைப் பற்றி நிதி அமைச்சரவர்கள் அறிக்கையில், இன்று உணவு உற்பத்தி 58 இலட்சம் டன் என்றும், திட்டத்தின் லட்சியம் 79 லட்சம் டன் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஐந்தாண்டுகளில் நாம் அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டிய உணவுப் பொருள்களின் அளவு 21 லட்சம் டன் ஆகும். இதற்காக இந்தத் திட்டத்தில் 1 லட்சத்து 5 ஆயிரம் கிணறுகள் தோண்டுவதற்கும், ஆழப்படுத்துவதற்கும் திட்டமிட்டிருக்கிறார்கள். இது மிக மிக வரவேற்கத் தக்கது.

அத்துடன் நம்முடைய தமிழகத்திலேயிருக்கின்ற 27,000 ஏரிகளுக்கு 14 கோடி ரூபாய் செலவு செய்து அவைகளை மேம்படுத்துவதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். கடந்த மூன்றாவது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் குளங்களை மேம்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட தொகைகளில் எப்படிச் செலவழிக்கப்பட்டன என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லித் தீரவேண்டிய நிலை இருக்கிறது. ஏரிகளை மேம்படுத்துவதற்காக என்று திட்டம் வகுத்து, அதைச் செயல்படுத்துகின்ற நேரத்தில் அங்கிருக்கின்ற குளங்களின் கரைகளை, கண்ணுக்கு மண் தூவுவதைப்போல் கரைகளுக்கும் மண்ணை அள்ளிப் போட்டார்களே தவிர அந்தக் குளம் எவ்வளவு ஆழம் இருக்கிறது என்று கணக்குப் பார்த்துச் செய்தார்களா என்றால் இல்லை. பொதுவாகத் தென்பகுதியிலிருக்கின்ற, குறிப்பாக மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் கரிசல் பூமியாக இருக்கிறது, மானாவாரிக் குளங்களாக இருக்கின்றன. அந்தக் குளங்கள் மேடாகி, குளங்களின் கரைகளும்—நீர்பரப்பளவும் சமநிலையாகத் தெரியும். இந்த நிலையில் ஆயிரக்கணக்கான குளங்கள் இருக்கின்றன. எனவே, இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது, 14 கோடி ரூபாயையும் கரைகளை செப்பனிடுவதில் கவனம் செலுத்த, தண்ணீர் போகக்கூடிய கேட்ச்மெண்ட் ஏரியாக்களை ஆழப்படுத்தினால் உபயோககரமாக இருக்குமே தவிர ஏதோ திட்டங்களை தயாரித்தோம், கரைகளுக்கு மண்ணை அள்ளிப் போட்டோம், திட்டம் நிறைவேறியது என்று அதிகாரிகள் கருதினால், இந்த 14 கோடி ரூபாயும் விரயம்தான் என்பதை அனுபவ ரீதியாகக் கூறுகிறேன். இந்த 14 கோடி ரூபாயையும் செலவு செய்கின்ற காலத்தில், குறிப்பாக

காச்மெண்ட் ஏரியாக்களை ஆழப்படுத்துவதற்கு முக்கியத்துவம் கொடுத்தால்தான் இந்த திட்டம் நல்லமுறையில் நிறைவேறும் என்பதை நான் இந்த சந்தர்பபத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நம் திட்டத்தில் அதிகமாக உற்பத்தி செய்யவேண்டியது 21 இலட்சம் டன்கள் உணவுப் பொருள்கள். குறிப்பாக, மேற்கு தொடர்ச்சி மலையை எடுத்துக் கொணடால், 200 அடி உயரத்திலிருந்து 1,000 அடி உயரமுள்ள பிரதேசங்களை நாம் பார்ப்போமானால், அங்கே குத்துச் செடிகளாக 5 அடியிலிருந்து 10 அடி உள்ள செடிகளைத்தான் காண முடியும். வனம் என்று கருதக்கூடிய அளவுக்கு 40 அடி, 50 அடி, 60 அடி அளவு மரங்கள் அங்கே இல்லை. 10, 15 அடி செடிகளாலே வன உற்பத்தி பெருகுமா என்றால் இல்லை. அங்கு புதர் பகுதிகளாக இருக்கிற பகுதிகளை அழித்து, மரச்சீனியை பயிரிடுவோமானால், 21 இலட்சம் என்ன 41 இலட்சம் டன் அளவு கூட அதிகரிக்க முடியும் என்பதை நான் அரசாங்கத்திற்குக் கூறவிரும்புகிறேன். இந்தத் திட்டத்தில் கிணறுகளை வெட்டினோம். ஆழப்படுத்தினோம், குளங்களுக்கு மண் போட்டோம் என்று கூறினாலும் அப்படிக் கருதுவார்களானாலும், அதை ஏற்றுக் கொள்ள முடியாமல் இருக்க முடியுமே ஒழிய நடைமுறைக்கு உதவாமல் இருக்கும். நடைமுறையில் 21 இலட்சம் டன்னை பூர்த்தி செய்ய வேண்டுமானால் தனியாக இருக்கிற 200 அடி முதல், 500 அடி வரை உள்ள பகுதிகளிலுள்ள வனங்களிலுள்ள புதர் செடிகளை எல்லாம் அழிக்கவேண்டும். அங்கு மரச்சீனியைப் பயிரிட்டால் இலட்சக் கணக்கான டன்களுக்கு உற்பத்தி செய்யமுடியும். இப்பொழுது இருக்கிற 200 அடிக்குமேல் ஆயிரம் அடிக்குள் இருக்கிற பிரதேசங்களில்கூட சொந்த நிலம் வைத்திருப்பவர்கள் மரச்சீனி, சோளம் பயிரிட்டு நல்ல மகசூல் எடுக்கிறார்கள். இதை கவனத்தில் வைத்து வன இலாகா கொஞ்சம் விட்டுக்கொடுத்து, இது எங்களுடைய ஆதிக்கத்தில் இருக்கிறது, இதை நாங்கள் விட்டுக் கொடுப்பதா என்று டிபார்ட்மெண்டல் சண்டை நடத்தாமல் திட்டத்தை பூர்த்தி செய்யவேண்டும்.

பாசன வகைக்காக 39 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் அவனாசி திட்டத்திற்கு 4 கோடியும், பாலாறு பொறந்தலையாறு திட்டத்திற்கு 2.56 கோடியும் பரப்பலாறு திட்டத்திற்கு 1.08 கோடியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் முதலாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்க்கப்பட்டு, கைவிடப்பட்டு, 1968-ம் ஆண்டில் நெல்லை மாவட்ட கலெக்டரால் மீண்டும் பரிசீலனை செய்யப்பட அரசுக்கு சிபாரிசு செய்யப்பட்ட கீரியாறு திட்டத்தினைப் பற்றி நிதி அமைச்சருடைய அறிக்கையில் எதுவுமே குறிப்பிடப்படவில்லை. நெல்லை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் இப்பொழுது ட்ரௌட் ஏரியா, ட்ரௌட் ஏரியா என்று கூறுகிறார்கள். ஆனால் நெல்லை, இராமநாதபுரம் மாவட்டத்தில்



முறையே கோயில்பட்டி, சங்கரன்கோயில், முதுகுளத்தூர் ஆகிய மூன்று பகுதிகளும் நிரந்தர வறண்ட பிரதேசங்கள். ஆண்டு தோறும் மழை இல்லை, பஞ்சம், பஞ்சம் என்று கூப்பாடு எழுப்பப்படுகின்ற இடம் இந்த மூன்று தாலுகாக்களாகும். வைப்பாறு என்ற நதி அங்கே ஓடுகிறது. இந்த கீரியாறு திட்டத்தை அமலுக்குக் கொண்டு வந்தால்—39 கோடி ரூபாய் அளவுள்ள திட்டத்தில் 5, 6 கோடியளவுள்ள இந்தத் திட்டத்தை அமலுக்குக் கொண்டுவந்தால்—நல்ல செழிப்பான கரிசல் மண் பிரதேசத்தை இருபோக நஞ்சைக்குக் கொண்டுவரமுடியும் என்று அரசுக்குச் சொல்ல விரும்புகிறேன். ஐந்து இலட்சம் ஏக்கர் புஞ்சை நிலங்களுக்கு முறையான தண்ணீரைச் செலுத்தினால் குறைந்த பட்சம் 7 இலட்சம் டன் நெல்லை அதிகமாக உற்பத்தி செய்து, 21 இலட்சம் டன்னை பூர்த்தி செய்ய முடியும். அந்த முறையில் மிகமிக பின் தங்கியிருக்கிற சங்கரன்கோயில், கோயில்பட்டி, முதுகுளத்தூர் ஆகிய பகுதிகளை கவனிக்க வேண்டும். ஆண்டுதோறும் பஞ்சம், பஞ்சம் என்று கூப்பாடு எழுகின்ற இந்த பகுதிகளுக்கு ஒரு வரப்பிரசாதம் கொடுக்கின்ற அளவிலே இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நான் குறிப்பிட்ட கீரியாறு திட்டத்தைச் சேர்க்கவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் அரசினரைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, குடிநீர் திட்டத்தைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியாகிய தூத்துக்குடி நகரம் கடற்கரை பிரதேசத்தில் இருக்கிறது. 40,000 மக்கள் இருந்த காலத்தில் அங்கே குடி தண்ணீர் திட்டம் கொண்டு வரப்பட்டு அது 40 ஆண்டுகளாகிறது. இன்றையதினம் அங்கு 1.6 இலட்சம் மக்கள் இருக்கிறார்கள். தண்ணீர் இருப்பதோ 40 ஆயிரம் மக்களுக்குத் தான். இந்த சந்தர்ப்பத்தில் தூத்துக்குடியில் தனியாக துறைமுக தண்ணீர் திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறது. அதன் மூலம் நாள் ஒன்றுக்கு 30 இலட்சம் கேலன் தண்ணீர் அங்கே வந்து கொண்டிருக்கிறது. ஆனால் இந்தத் துறைமுகத் திட்டத்தை 1972-க்குள் நிறைவேற்றினால்கூடத் துறைமுகத்துக்குத் தேவைப்படும் ஒரு மில்லியன் காலன் தண்ணீர்போக எஞ்சுவதில் 10 இலட்சம் காலன் தண்ணீர் தூத்துக்குடிக்குக் கொடுப்பதற்கு நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் வழி செய்யவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மின் சக்திக்காக 169 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னேன். அதில் தூத்துக்குடி அனல் மின்சாரத்தைப் பற்றி நிதி அமைச்சருடைய அறிக்கையில் என்ன இருக்கிறது. ‘இந்திய அரசு ஆவன செய்யவேண்டியது அவசியமாகிறது’ என்று தான் வருகிறது. தூத்துக்குடியில் அனல் மின்சாரத் திட்டத்தை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் போராடிச் சேர்க்கவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் நான் நமது சர்க்காரை கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. மு.ச. சிவசாமி] [1969 ஆகஸ்ட் 22

மீன் துறைக்கு ரூபாய் 10 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. மீனவர்கள் மத்தியில் இன்றையதினம் பெரும் குறையாக இருப்பது விசைப் படகுகள் இல்லை, விசைப் படகுகள் இல்லை என்பது. ஆண்டு ஒன்றுக்கு 902 படகுகள்தான் இப்பொழுது தயாரித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆயிரம் படகுகள் தயாரிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. 98 படகுகள் அதிகமாக தயாரிப்பதன்மூலம் மீனவர்களுடைய குறைகளைப் போக்கமுடியுமா என்றால் முடியாது. இன்றையதினம் உணவு உற்பத்தியில் உப பொருளாக இருக்கக்கூடிய மீன் தொழிலை வளர்ப்பதற்கு குறைந்தபட்சம் ஆண்டொன்றுக்கு 1,500 படகுகளாவது கட்டுகின்ற முறையில் திட்டத்தை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 4 டிராலர்கள் வாங்குவதாக இருக்கிறது. ஆழ் கடலிலேதான் அதிகமாக மீன் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். மத்திய சர்க்கார் தூத்துக்குடியில் ஒரே ஒரு டிராலரை வைத்துக் கொண்டு நாள் ஒன்றுக்கு 2 டன் மீன் பிடிக்கிறார்கள். ஆகையால் 4-க்குப் பதில் 10 அல்லது, 8 டிராலர்களாக திட்டத்தை மாற்றி அமைத்தால் அதன்மூலம் பல இலட்சக்கணக்கான ரூபாய்கள் தமிழக அரசுக்கு இலாபம் கிடைக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.

தூத்துக்குடியிலிருந்து 10 மைலில், திருச்செந்தூரிலிருந்து 15 மைலில், கன்னியாகுமரியிலிருந்து 20 மைலில் பாக்டரி ஷிப்கள் என்ற ஷிப்களைக் கொண்டு நார்வேக்காரர்களும், ஜப்பானியர்களும் மீன்பிடித்து, அங்கேயே டப்பாக்களில் அடைத்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். தமிழகத்தில் தூத்துக்குடிக்கு 10 மைல் தூரத்தில் நார்வேக்காரர்கள், ஜப்பானியர்கள் மீன் பிடிக்கிறார்கள். நாம் ஒரு பாக்டரி ஷிப்பை வாங்கி அந்த தொழிலை நடத்தினால் வெளிநாட்டுச் செலாவணியும் அதிகமாக பெற முடியும், தமிழகத்திற்கும் அதிகமாக இலாபம் கிடைக்கும் என்று கூறிக்கொண்டு இரண்டே இரண்டு வார்த்தைகளைக் கூறி முடித்துக்கொள்ளுகிறேன்.

ரோடுக்காக 21 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிகமான, நெரிசலான போக்குவரத்து திருச்சிக்கும் சென்னைக்கும் மத்தியில் இருக்கிறது. தினசரி ஆக்ஸிடெண்டுகள்; தினசரி 10 லாரிகள் கவிழ்கின்றன இந்த வழியில். நான் சமீபத்தில் ஜெர்மன் நாட்டிற்கு சென்றபோது அங்கே இருக்கிற ரோடுகள் நூல் பிடித்ததுபோல் நேராக இருப்பதைப் பார்த்தேன். போவதற்கு ஒரு பாதை, வருவதற்கு ஒரு பாதை, மத்தியிலே ஒரு வழி. ரோடு ஐலண்டு என்று சொல்லப்படுவதைப்போல் இருக்கிறது. 40 மைலுக்குக் குறைவாக போவதற்கு ஒரு லைன், 40 மைல் வேகத்திற்குமேல் போவதற்கு ஒரு லைன் என்று வைத்திருக்கிறார்கள். நாம் தமிழகமெங்கும் அதைப்போல் மாற்றி அமைக்கா



1969 ஆகஸ்ட் 22] [திரு. மு. ச. சிவசாமி]

விட்டாலும், நாஷனல் ஹைவேஸ் டிபார்ட்மெண்டின் மேற்பார்வையில் இருக்கிற சென்னை—திருச்சி பாதையினை—200 மைல் பாதையினை—இன்னும் கொஞ்சம் அகலப்படுத்தி, இரண்டாக பிரித்து, வளைவுகளை நேராக்கி, அந்த முறையைக் கொண்டு வந்தால் நம்முடைய நாட்டில் இந்த விதமாக நடந்துகொண்டிருக்கிற இந்த விபத்துக்களைத் தடுப்பதற்கு வழி இருக்கும். இவைகளையெல்லாம் கருத்தில்கொண்டு இந்த திட்டத்தில் நான் கூறிய கருத்துக்களை ஒருசில சேர்க்கவேண்டுமென்று கோரி முடித்துக்கொள்கிறேன்.

* திரு. என். சங்கரய்யா: தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய வரைவு குறித்து நடக்கக்கூடிய இந்த விவாதத்தில் இந்த மாநிலத்தினுடைய எதிர்காலம், அகில இந்தியாவிலே போடப்படக்கூடிய திட்டங்களைச் சேர்ந்திருக்கக்கூடிய காரணத்தினால், மாநிலங்களினுடைய பொருளாதாரக் கொள்கைகள், இந்திய ரீதியிலே போடப்படக்கூடிய பொருளாதாரக் கொள்கைகளை சேர்ந்திருப்பதனால் அதைப் பற்றியும் நாம் கவலைப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கடந்த காலத்தில் நாடு அரசாங்கத்தை நடத்தி வந்த காங்கிரஸ்காரர்களைப்பற்றிக் குறிப்பிட்டு வந்தார்கள். ஏன் இவ்வாறு மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றியும் நாடு இப்படிப்பட்ட மோசமான நிலையில் இருக்கிறது என்று சொன்னால் அதற்கு நம்முடைய நாட்டிலே மேலை நாடுகளைச் சேர்ந்த தனிப்பட்ட பெரு முதலாளிகளுடைய முதலீடுகள், மிகக் கணிசமான அளவிலே இருக்கின்றன. தேயிலை, சணல், பெட்ரோல் இரசாயனங்கள் ஆகிய தொழில்களில் அவர்கள் முதலீடு அதிகமாக இருக்கிறது. அவர்கள் ஏராளமான இலாபங்களை சம்பாதிக்கிறார்கள் இங்கு. இதனால் இந்த தேசத்தினுடைய பொருளாதாரம் பாதிக்கப்படுகிறது. இதனுடைய விளைவு என்ன என்று சொன்னால் 1955-ம் ஆண்டிலே இந்திய அரசாங்கம் வாங்கியிருந்த கடன், பப்ளிக் டெட் என்பது, அந்நிய நாடுகளிலிருந்து வாங்கிய கடன் ஒரு சதவிகிதத்திற்கும் குறைவாக இருந்தது. ஆனால், இப்பொழுது 1966-ம் ஆண்டு மார்ச்சில் இந்திய அரசாங்கம் வாங்கியிருக்கக்கூடிய கடன்களில் மொத்தத்தில் 32 சதவிகிதம் அயல் நாடுகளிலிருந்து பெறக்கூடிய அளவுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதுவும் ரூபாய் நாணயத்தின் மதிப்பு குறைக்கப்பட்ட பிறகு இந்திய அரசின் மொத்தக் கடனில் 45 சதவிகிதம் அயல்நாடுகளுக்கு, அயல்நாட்டு முதலாளிகளுக்கு கொடுக்கவேண்டிய கடமை இருக்கிறது. இப்படி அதிகப்படியான அளவுக்கு சார்பு நிலை ஒரு நாட்டிற்கு இருந்தால், அது ஒரு நாட்டினுடைய பொருளாதாரத்தை எவ்வளவு தூரம் பாதிக்கக்கூடியதாக இருக்கும் என்பதை நாம் சற்று ஆழ்ந்து சிந்தித்துப்பார்க்கவேண்டும். இப்பொழுது இதனால் எப்படிப்

பட்ட விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன? மிக்ஸட் எகானமி, கலப்புப் பொருளாதாரத்தை நடத்துவதாக இந்தியப் பேரரசு கூறுகிறது. இது சோஷலிசமும் அல்ல, முதலாளித்துவமும் அல்ல. இது ஒரு மிக்ஸட் எகானமி, கலப்பு பொருளாதாரம் என்று சொல்கிறார்கள். ஆனால், எந்த ஒரு கொள்கையினுடைய விளைவையும் நிர்ணயிப்பதற்கு அது நடைமுறையில் எவ்வாறு விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். அப்படிப் பார்த்தால் இந்திய அரசு சென்று கொண்டிருக்கக்கூடிய மூன்றாவது பாதை, அதாவது மிக்ஸட் எகானமியினால் என்ன விளைவு ஏற்பட்டிருக்கிறது? நாட்டில் இருக்கக்கூடிய தனியார் துறையில் இருக்கக்கூடிய சகல தொழில்களையும் எடுத்துக்கொண்டால், சகல தனியார் துறைகளிலும் இருக்கக்கூடிய அவர்களுடைய சொத்து மதிப்பீட்டிலே 47 சதவிகிதம் சொத்தை 75 ஏகபோக முதலாளிகள் வைத்துக்கொண்டு வருகிறார்கள். காங்கிரஸ் நண்பர்கள் கூறுவார்கள். அதைப் போலவே சுதந்திராக் கட்சி நண்பர்களும் கூறுவார்கள்- தனிப்பட்ட முதலாளித்துவ வளர்ச்சியிலே, ஃப்ரீடிரேட், சுயேச்சையான வியாபாரத்தில், சுயேச்சையான தொழில்களினால் ஏராளமான தொழில்கள் பெருகியிருக்கின்றன, தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்று கூறுவார்கள். 20 ஆண்டு காலமாக இருக்கக்கூடிய தனியார் துறையில் 47 சதவிகிதம் சொத்துக்களை 75 ஏகபோக முதலாளிகள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். தனியார் துறையிலே இருக்கக்கூடிய மொத்தம் பெய்ட்-அப் காபிடலில் செலுத்தப்பட்ட மூலதனத்தில் 75 ஏகபோக முதலாளிக் குடும்பங்கள் 44 சதவிகிதத்தைப் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்திய அரசு ஏதோ ஒரு பிரம்மாண்டமான மூன்றாவது பாதையிலே சென்று கொண்டிருக்கிறோம் என்று சொன்னால், நடைமுறையில் அதனால் என்ன விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைப் பார்க்கவேண்டும். எழுபத்தைந்து முதலாளிகள் ஏகபோக ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, உண்மையிலே பார்க்கப்போனால், இந்த நாட்டில் தொழில் துறை வளரவில்லை, அதனுடைய வருமானமும் உயரவில்லை. இதனுடைய விளைவுகளை நாம் நன்றாகப் பார்க்க முடியும்.

1950-ம் ஆண்டு நாட்டிலுள்ள குடிமகனின் சராசரி வருமானத்தை 1975-ம் வருடத்திற்குள் இரட்டிப்பாக ஆக்கிவிட வேண்டும் என்று இந்திய அரசாங்கம் குறிக்கோளாக வைத்துக் கொண்டார்கள். அதாவது, 25 ஆண்டு காலத்தில் 1950-ம் ஆண்டில் இருந்த சராசரி நபர் வருமானத்தை இரட்டிப்பாக்க வேண்டும் என்பது குறிக்கோள். தற்பொழுது மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட பிறகு திட்டத்தினுடைய வளர்ச்சியினால் நாம் எதிர்பார்த்த பலன் இல்லை. 3.2 சதவிகிதம் வளர்ச்சியை எதிர்பார்த்தோம் ஆண்டு தோறும். ஆனால், ஏற்பட்ட வளர்ச்சி 1.29 சதவிகிதம்தான். இதன் விளைவு என்ன தெரியுமா?





தேசிய சராசரி நபர் வருமானத்தை 1975-ம் ஆண்டிற்குள் இரட்டிப்பாக ஆக்கலாம் என்பது முடியாத காரியமாகிவிட்ட பிறகு, கிறிஸ்துவுக்குப் பிறகு 2005 வருஷங்களில் இந்த லட்சியத்தை எட்டிப் பிடிக்க முடியும் என்று இந்த நாட்டின் காங்கிரஸ் ஆட்சியின் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. இப்படி ஆமைவேகத்தில் போனால், இந்த நாட்டிலுள்ள மக்கள் பொறுத்துக்கொண்டிருப்பார்களா? அல்லது பொறுத்துக்கொண்டிருக்கக்கூடிய இப்படிப்பட்ட நிலைமையை உண்டாக்கிய ஆட்சியைத்தான் சகித்துக் கொண்டிருப்பார்களா? நிச்சயமாக மாட்டார்கள். நாட்டிலுள்ள மக்கள் தொகை வளர்ந்துவரக் கூடிய சூழ்நிலையில், முதலாளித்துவப் பாதையிலோ அல்லது மிக்ஸட் எகானமி என்ற மூன்றாவது பாதையிலோ செல்வதை விட்டுவிட்டு, உண்மையிலேயே நாம் சோஷலிஸ பாதையில் செல்வதன் மூலம்தான் இந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியும்.

இன்னொன்று, நாட்டின் சேமிப்பைப் பற்றி கூறப்படுகிறது. நாட்டில் சேமிப்பு வளர்ச்சி ஏற்படவேண்டுமென்றால், தொழில் வளர்ச்சி ஏற்படவேண்டும், முதலீடு அதிகமாகப் போடவேண்டும். விலைவாசி உயர்ந்திருக்கக்கூடிய காரணத்தினால், வேலையில்லா திண்டாட்டத்தினால் மக்களுடைய வருமானம் உண்மையிலேயே குறைந்துவிட்டது. இந்த சூழ்நிலையில் சேமிப்பை எப்படி பெருக்க முடியும்? ஆகவேதான் மார்க்ஸிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி அடிப்படையில் சில காரியங்களைச் செய்யவேண்டும் என்று கூறுகிறது. அயல் நாட்டுத் தொழில் முதலாளிகள் முதலீடுகள் செய்யப்பட்டதிலிருந்து லாபத்தை எடுத்துச் செல்வதைத் தடைப்படுத்தவேண்டும். அதுமட்டுமல்ல. இன்றைக்கு இந்த நாடு பிற நாடுகளைச் சார்ந்திருக்கிற நிலைமையை அதிகமான அளவுக்குக் குறைக்கவேண்டும். மூல இயந்திரங்கள் பெறுவது, தொழில் நுணுக்க அறிவைப் பெறுவது, முதலியவைகளை வியாபார அடிப்படையிலேதான் அயல் நாடுகளிலிருந்து பெறவேண்டுமே தவிர, பிற நாடுகளை அதிகமாகச் சார்ந்திருக்கும் நிலை நீடித்தால், இந்தியாவின் பொருளாதார சுதந்திரத்திற்கே, அரசியல் சுதந்திரத்திற்கே வரக்கூடிய ஆபத்தை தவிர்க்க முடியாது என்று எங்கள் கட்சி நாட்டு மக்களை எச்சரித்துக்கொண்டு வருகிறது.

தமிழ் நாட்டின் நிலைமையை எடுத்துக்கொள்வோம். எனக்கு முன்பு திரு. மாரிமுத்து அவர்கள் விவசாயிகளைப் பற்றிப் பேசினார்கள். நாங்கள் வேறு கோணத்திலிருந்து பார்க்கிறோம். தமிழ் நாட்டில் 28 லட்சம் விவசாயத் தொழிலாளிகள் இருக்கிறார்கள் என்று கணபதியாப் பிள்ளை கமிஷன் அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய ஏழை விவசாயிகளை, குத்தகை விவசாயிகளை கணக்கில் எடுத்துக்கொண்டால், மொத்த ஜனத்தொகையில் 100-க்கு 70 பேர்கள் இருக்கிறார்கள். 20 ஆண்டு காலத்தில் நிலச் சீர்திருத்தச் சட்டம் என்ன

நன்மையைச் செய்திருக்கிறது. விவசாயத்தைப் பற்றி சொல்லக் கூடிய நேரத்தில், தமிழ் நாடு அரசாங்கம் ஏற்கனவே கொண்டுவந்திருக்கக்கூடிய குத்தகை விவசாயிகளுடைய உரிமைகளைப் பதிவு செய்யக்கூடிய சட்டத்தைத் தான் நிலச் சீர்திருத்தத்தின் ஒரு முக்கியமான அம்சமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே விவசாயப் புரட்சியை ஏற்படுத்த வேண்டுமானால், நிலச் சீர்திருத்தத்தை ஒட்டிய தீவிரமான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும். முன்பிருந்த காங்கிரஸ் அரசாங்கம் காகித அளவில் ஒவ்வொருவருக்கும் 30 ஏக்கர் என்று பிரித்துவைத்துக் கொள்ளக்கூடிய நிலைமையில்தான் நில உச்ச வரம்பு சட்டத்தை அமல் நடத்தியிருக்கிறார்கள். உண்மையிலேயே ஏராளமாக நிலம் வைத்திருக்கும் நிலக்கிழார்கள், நிலப் பிரபுக்கள் இருக்கத் தான் செய்கிறார்கள். உண்மை விளைவு சமுதாயத்தில் கீழ் மட்டத்தில் புரட்சி ஏற்படவில்லை. நேற்று அமைச்சர் திரு. வேழவேந்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள் தமிழ் நாட்டில் நிலம் இல்லாத ஏழை விவசாய மக்கள் ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள், இரண்டு கோடி மக்கள் இருக்கிறார்கள. அவர்களுடைய மனித சக்தியை விவசாயத்தில் ஈடுபடுத்தி, உற்பத்தியைப் பெருக்க வேண்டும். ஏராளமான நிலப்பரப்பை நீர்ப்பாசனத்தின் கீழ் கொண்டுவந்துவிடலாம். ஆனால், விவசாயத் தொழிலாளிகள் நிலம் இல்லாதவர்கள். ஆகவே தான் கூறுகிறோம், நம்முடைய நாட்டில் ஏழை விவசாயிகள் கையில் நிலம் கொடுக்கப்பட வேண்டும். நிலஉச்சவரம்பில் மோசடி நடந்திருக்கிறது. நில உச்சவரம்புச் சட்டத்தை தீவிரமாக அமலாக்கி, அதை முழுமையாகப் பரிசீலித்து, அடிப்படை சீர்திருத்தங்கள், மாற்றங்கள் செய்து, பினாமி நில மாற்றங்களை ஒழித்து, உபரி நிலங்களை ஏழை விவசாயத் தொழிலாளர்கள் கையில் ஒப்படைக்கவேண்டும்.

அதேபோல, விவசாயத் தொழிலாளிகளுக்கு நியாயமான கூலி கொடுக்கப்படவேண்டும். நேற்று இயந்திரத்தைப் புகுத்தும் பிரச்னை விவாதத்திற்கு வந்தது. ஏதோ டிராக்டர்களை உபயோகிப்பதினால் நாம் உற்பத்தியை அதிகரிக்கலாம் என்றெல்லாம் கூறப்பட்டது. ஒரு கோடி விவசாய மக்களின் மனித சக்தியை நிலத்தில் பயன்படுத்தி, அதன் மூலம் உற்பத்தியை அதிகப்படுத்துவது நன்மையா? அல்லது டிராக்டர்களை உபயோகித்து, உற்பத்தியை அதிகரித்து, அதன் மூலம் வருகிற லாபத்தை ஒருசில நில உடைமையாளர்கள், நிலப்பிரபுக்கள் சம்பாதித்துக் கொண்டு போவதை அனுமதிப்பது நன்மையா? நம்முடைய நோக்கம் என்ன? ஒரு சில முதலாளிகள் மட்டும் லாபத்தை சுரண்டிக் கொண்டு போகக்கூடாது. ஏராளமான ஏழை விவசாயத் தொழிலாளிகளின் மனித சக்தியைப் பயன்படுத்தி, அவர்களுக்கு வாழ்க்கை அளிக்கவேண்டும். ஆகவே தான் சொல்கிறோம். நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கும் நிலம் கிடைத்தபிறகு, வேலை





கிடைத்த பிறகு, அவர்களுடைய வேலைப் பளுவைக் குறைக்க, மனித உழைப்பின் சோர்வைக் குறைக்க இயந்திரங்கள் புகுத்தப் பட்டால், அது நிச்சயமாக வரவேற்கக்கூடியதாக இருக்கும். ரஷ்யாவில், சோஷலிஸ நாட்டில், இப்படிப்பட்ட நிலைமை இல்லையா என்று கேட்கிறார்கள். ரஷ்யாவில் நிலப்பிரபுக்கள் இல்லை. தொழிலாளர்களைச் சுரண்டக்கூடிய முதலாளி வர்க்கம் இல்லை. சொத்துக்கள் பூராவும் நாட்டிற்கே சொந்தம். அந்த சூழ்நிலையில், விஞ்ஞான வளர்ச்சியின் மூலம் நாட்டு மக்களுக்கு பலன் இருக்கிறது. இன்னும் அப்படிப்பட்ட நிலைமை இந்த நாட்டில் வரவில்லை. விரல்விட்டு எண்ணக்கூடிய பெரும் முதலாளிகள், நிலப்பிரபுக்கள் லாபத்தில் பெரும்பகுதியை சம்பாதித்துக் கொண்டுபோய் விடுகிறார்கள். ஆகவே, இந்திய நாட்டை அந்த நாட்டோடு ஒப்பிட்டுப் பார்ப்பதில் பிரயோசனம் இல்லை.

இன்றைக்கு தமிழ் நாட்டில் ஏராளமான பெரிய நிலக்கிழார்கள் அதிகப்படியான வருமானத்தை நிலத்திலிருந்து பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து அதிகமான விவசாய வருமான வரி வருவது சாத்தியம் என்று கருதுகிறேன். கைத்தறி சம்பந்தப்பட்டமட்டில், 5 லட்சம் கைத்தறிகள் இருக்கின்றன. பவர் லூம்ஸ் வருவதால் உற்பத்தி பெருகாதா என்பது அல்ல கேள்வி. 5 லட்சம் கைத்தறியாளர்கள் சரக்குகளை விற்பனை செய்வதற்கு முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய சரக்குகளை விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யாமல், மேலும் உற்பத்தியை அதிகரித்துக்கொண்டு போவதில் பலன் இல்லை. அவர்கள் உற்பத்தி செய்த சரக்குகள் விற்பனையாவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை முதலில் எடுக்கவேண்டும். இல்லையெனில், கைத்தறி நெசவாளர்களுடைய வேலை வாய்ப்பு பாதிக்கப்படுகிறது என்பதைப் பார்க்கிறோம்.

அடுத்தாற்போல், தமிழ் நாடு திட்டத்தைப் பற்றிச் சொல்லும் போது ஒன்றைச் சொல்ல வேண்டும். அமைச்சர் அவர்கள் அன்றைக்குக் கூறினார்கள் மின்சார போர்டில், மேட்டூர் அலுமினியம் தொழிற்சாலைக்கு மின்சாரம் சப்சிடியாக வழங்குவதில் சர்க்காருக்கு ஒரு கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது என்று. அது தேவைதானா? வேலை கொடுக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். இப்படி ஒரு கோடியளவில் கொடுப்பதானால், 20, 30 ஆண்டுகளில் அரசே அதன்மூல தனத்தையே கொடுத்த அளவு ஆகிவிடுமே. அதனால். அரசே அந்த தொழில்சாலையை வாங்கி நடத்துவதானால், மிக்க நல்லதாக இருக்கும் என்று நினைக்கிறேன். அப்படிச் செய்தால் இந்த மாநில மக்களுக்கு எவ்வளவோ நலமாக இருக்குமே. அதைவிட்டு, இப்பொழுது தனிப்பட்ட முதலாளிகளுக்கு அல்லவா மின்சார மானியத்தின் மூலம் லாபம் கிடைக்கச் செய்கிறார்கள்.

[திரு. என். சங்கரய்யா] [1969 ஆகஸ்ட் 22

மற்றொன்று, நிலத்திலே இறங்கி வேலைசெய்யாதவர்களெல்லாம் விவசாயிகள் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். என்ன பாடு படுகிறார்கள்? குடையைப் பிடித்துக் கொண்டு, அல்லது வீட்டி லேயே இருந்து கொண்டு வேலை ஆகிறதா என்று கேட்கிறார்கள். அதுதான் இவர்கள் உழவர்கள் என்று தங்களைச் சொல்லுவதற்கு காரணம். இவர்களுக்கும் நிலத்தில் பாடு படும் மக்களுக்கும் எந்த வகையான சம்பந்தமும் கிடையாது. இன்றைக்கு ரூபாய் 9 கோடி இறவைப்பாசனத்திற்கு என்று கொடுக்கிறார்கள் என்றால், 10 ஏக்கர் அல்லது குறைந்த நிலமுள்ளவர்கள் என்றால் சரி. ஆனால், 20 ஏக்கர், 30 ஏக்கர் என்று நிலம் வைத்திருக்கும் பெரு நிலக்கிழார்களுக்கு, விவசாய வருமான வரி செலுத்தக் கூடிய நிலக்கிழார்களுக்கு உதவி கொடுப்பது எதற்காக? இம்மாதிரி பொதுத்துறையிலிருந்து உதவி அளிக்கப் படவேண்டுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நம்முடைய காடுகளைப் பற்றி ஒன்று சொல்ல வேண்டும். நம் காடுகளிலிருந்து ஏராளமான வருமானம் கிடைக்கும். அன்று கூட சந்தன மரங்கள் திருட்டுப் போகின்றன என்று சொல்லப் பட்டது. சாதாரணமாக மரம் வேண்டும் என்று சந்தையில் போய்க் கேட்டால், யானை விலை, குதிரை விலை விற்கிறது. இந்தக் காடுகள் சரியான முறையில் அரசாங்கத்தினால் நடத்தப் பட்டால், மக்கள் மீது வரி போடாமல், சர்க்காருக்கு வேண்டிய பணம் காட்டு வருமானத்திலேயே கிடைக்கும்.

நேரம் அதிகம் இல்லாததால், இரண்டொரு விஷயங்களை மட்டும் குறிப்பிட்டு முடிக்கிறேன். முக்கியமாக ஒன்று. இந்திய திட்டக் கமிஷன் கூறியிருக்கிறது, இந்தத் திட்டம், 'லேபர் இண்டென்ஸிவ்' ஆக இருக்க வேண்டும் என்று. அதாவது, தொழில்களை அதிக மாக்கி, வேலைவாய்ப்புக்களை மக்களுக்குக் கொடுக்க முடியுமா என்று பார்த்துச் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறது. அந்தக் கண்ணோட்டத்தோடு காங்கிரஸ் நண்பர்கள் பார்க்க வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டத்தினால் வாடிக் கொண்டிருக்கும் மக்களுக்கு வேலை வாய்ப்புகளைத் தேடிக் கொடுக்கும் வகையில் திட்டம் அமைய வேண்டும், அதைத்தான் லேபர் இண்டென்ஸிவ் ஆக இருக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். இது இல்லாவிட்டால், இன்றைக்கு கல்லூரிகளி லிருந்து வெளிவரும் ஆயிரக் கணக்கான மாணவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? அவர்களுக்கு யார் வேலை கொடுக்கப் போகிறார்கள்? தொழிலாளிகளுக்கு யார் கொடுப்பது, எப்படிக் கொடுப்பது என்பது போன்ற சிக்கலான பிரச்னைகள் வருகின்றன.



1969 ஆகஸ்ட் 22] [திரு. என். சங்கரய்யா]

இறுதியாக, நிதி அமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையில் பல நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். வளர்ச்சி மன்றத்தில் மாநிலப் பிரதிநிதிகள் இருக்க வேண்டும். உழைப்பவனுக்குப் பங்கு இருக்க வேண்டும். திட்டத்தில் மக்கள் பங்கு எடுப்பதில்லை என்று கூறியிருக்கிறார்கள். தேசிய வளர்ச்சிக் கவுன்சிலின் அடிப்படையில் மாற்றம் வேண்டும். அந்நிய நாட்டுச் சுரண்டல் ஒழிக்கப்பட வேண்டும். பொதுத்துறை மாநில அளவில் நன்று செயல்பட்டு, தமிழ் நாட்டு மக்கள் மூன்றே முக்கால் கோடிப் பேர்களுக்கும், உடை, உணவு, வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும் வகையில் திட்டம் போட்டால்தான், மக்கள் அதில் ஆர்வம் கொள்வார்கள். அதை ஆதரிப்பார்கள் என்று கூறிக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* **திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, நான் இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்ட வரைவு விவாதத்தில் கலந்து கொள்வதின் முக்கிய நோக்கம் மாண்புமிகு நிதியமைச்சர் திட்டம் பற்றிய பொது நோக்கின் முதல் பத்தியில் "இங்கு நடைபெறும் விவாதத்தின் போது தெரிவிக்கப்படும் கருத்துக்கள் ஆய்வு செய்யப்பட்டு அவை பொருத்தமாகயிருக்குமானால் இத் திட்டத்தை இறுதியாகத் தயாரிக்கும் நிலையில் அவற்றைச் சேர்த்துக் கொள்ள இயலும்" என்று கூறியிருப்பதால்தான்.

என்னுடைய தொகுதி மக்களின் உள்ளங்களிலும், வெள்ளி யணைப் பகுதி மக்களின் உள்ளங்களிலும் நீண்டகாலமாகவே கேள்விக் குறியாக இருந்து வருகிறது, குடகனாறுத் திட்டம். இந்தச் சந்தர்ப்பத்தில் அதைப்பற்றிச் சுட்டிக்காட்டுவது சாலப் பொருந்தும் என நம்புகிறேன். குடகனாறுத் திட்டம் பற்றி இம்மாமன்றத்தில் பல ஆண்டுகாலமாகப் பேசப்பட்டு வந்திருக்கிறது என்பதை இம் மன்றத்தின் வரலாற்று ஏடுகள் நமக்கு எடுத்துக் காட்டும். காங்கிரசு ஆட்சி காலத்தில் 1961-ம் ஆண்டில் குடகனாற்றின் கடைக் கோடிப் பகுதியில், வள்ளிப்பட்டி என்கிற ஊருக்கு அருகில் ஒரு சிறிய அணை கட்ட ஆய்வு செய்யப் பட்டது. பொதுமக்களைக்கொண்டு பாதைகள் செப்பனிடப் பட்டன. அளவுக் கற்கள் நடப்பட்டன. மக்கள் மத்தியில் மேற்படி திட்டம் நிறைவேற்றப்படும் என்கிற நம்பிக்கை ஊட்டப் பட்டது. வெள்ளியணைப் பகுதியிலுள்ள ஆறு குளங்களுக்கு நீர் வழங்கவும், ஏழு புதிய குளங்களுக்குத் தண்ணீர் நிரப்பவும் திட்டம் தீட்டப்பட்டது. 2,700 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதியளிக்க வழிவகை ஏற்படும் எனக் கருதப்பட்டது. மூன்றாவது திட்ட வரைவில் சேர்க்கப்பட்டது. காலப் போக்கில் மக்கள் காங்கிரசு அரசை கைவிட்டு விடுவார்கள் என்பதை ஏற்கனவே தெரிந்தோ தெரியாமலோ திட்டத்தை காங்கிரசு அரசு கைவிட்டு விட்டது. 1967 பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று கழக அரசு பதவி ஏற்ற பிறகு முன்னாள் பொதுப்பணித்துறை அமைச்சரும் இன்னாள் முதலமைச்சருமான கலைஞர் அவர்கள் இந்தத் திட்

டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று ஆணையிட்டார்கள். நானும் குடகனாறு திட்டம்பற்றி இம் மாமன்றத்தில் பலமுறை பேசி இருக்கிறேன். கேள்விகள் கேட்டிருக்கிறேன். நம்பிக்கை யூட்டும் வகையில் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் பதில் அளித்துள்ளார். சென்ற ஆண்டு மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்களிடம், நானும் எனது தொகுதி மக்கள் சிலரும் குடகனாறு திட்டம் பற்றி கேட்டபோது அவசியம் பரிசீலனை செய்து ஆவன செய்கிறேன் எனக் கூறினார். 15-8-1969 அன்று முதலமைச்சர் அவர்களையும் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களையும் வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களையும் நானும், தொகுதி மக்கள் சிலரும் சந்தித்துக் கேட்ட போது சிறிய அளவிலாவது நிறைவேற்றித் தருவதாக எடுத்துக் கூறினார்கள். 16—8—1969-ம் தேதி பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று நான் அவரது அறையில் சந்தித்துக் கலந்து பேசினோம். அப்போது நீர்ப்பாசனத் துறை தலைமைப் பொறியாளர் குடகனாறு திட்டத்தை நிறைவேற்றுவதற் குரிய சாத்தியக் கூறுகள் இல்லை என்பதற்குக் காட்டின காரணங் கள் மூன்று. அவற்றில் முதலாவது இந்தத் திட்டத்தினால் அரசுக்கு இலாபம் இல்லை என்பது. இந்தச் சந்தர்ப்பத்தில் நிதி அமைச்சர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்ட கருத்தினை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். சமுதாயத்திற்கு ஒரு திட்டத்தால் லாபம் இருக்கிறதா என்கிற முறையில் அணுக வேண்டுமேயல்லாது அரசுக்கு என்ன இலாபம் என்று பார்க்கக் கூடாது, என்று ஆணித்தரமாக எடுத்துப் பேசினார். பொறியாளர்கள் வகுக்கும் திட்டம், பொறியாளர்கள் தீட்டும் திட்டம், பொறியாளர்கள் காட்டும் திட்டம் அரசுக்கு லாப நோக்குடன் இருக்கவேண்டும் என்று கூறுவது கூடாது. திட்டத்தால் மக்களுக்குப் பயன் உள்ளதா, சமுதாயம் நன்மை அடையுமா என்பதை ஆராய வேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

நான்காவது திட்டம் பற்றிய பொதுநோக்க உரையில் இரண்டாவது பத்தியில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் "நாகரீகம் அடைந்த சமுதாயத்தில் குடிமக்களுக்குக் குடிநீர் கூட கிடைக்காததொரு சூழல் ஏற்படுவதைப் பொறுத்துக் கொள்வது இயலாத காரியம் என்று முடிவு செய்துள்ளோம்" என்று கூறி இருக்கிறார். நான் எந்தப் பகுதி மக்களுக்காக வாதாடுகிறேனோ அந்தப் பகுதி தண்ணீர் இல்லாத பகுதி, நீர்வளம் குறைந்த பகுதி, நிலவளம் நிறைந்த பகுதி. குடிக்கத் தண்ணீர் இன்றி மக்கள் கண்ணீர் வடிக்கும் நிலையிலுள்ள பகுதி. குளிக்கக் கூட தண்ணீரில்லாது மக்கள் அவதிப்படும் பகுதி. குடகனாறு திட்டத்தை நிறைவேற்றுவதால் இந்தப் பிரச்னைகள் தீர்ந்து விடும் என்பதால் மனிதாபிமானத்தோடு அணுகி அப் பகுதி மக்களின் கோரிக்கையை நிறைவேற்ற குடகனாறு திட்டத்தை விரைவில் மறுபரிசீலனை செய்து நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில்





சேர்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பும், கடமையும் இந்த அரசுக்கு இருக்கிறது என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் மாண்புமிகு நிதி அமைச்சர் கொடுத்துள்ள பொது நோக்கு அறிக்கையில் எட்டாவது பத்தியில் "வருங்காலத்தைப் பற்றி எண்ணுகையில் புள்ளி விவரங்களைத் தொகுத்து அதன் அடிப்படையிலே கணக்கும் போடுகிறார்கள். இத்தகைய கணக்கின் மூலம் நாட்டின் வளர்ச்சிக்கு வழிகோல முடியாது" என்று குறிப்பிட்டிருக்கிறார். பொறியாளர்கள் காட்டுகின்ற புள்ளி விபரம் குடகனாற்றில் போதுமான தண்ணீர் வராது, தண்ணீர் வருகின்ற அளவுக்குப் பெய்யும் மழை அளவு குறைவு, நீர்வரத்து அதிகம் இல்லை என்பதாகும். வானம் எவ்வளவு மழை பெய்விக்கிறது என்பது பொறியாளர்களுக்கு எப்படித் தெரியும்? இத்தனை கன அடி தண்ணீர்தான் கிடைக்கும் என்கிற கணக்கு எப்படிப் போடுகிறார்கள்? பொறியாளர்கள் என்ன வர்ணபகவானின் தோழர்களா? அல்லது மேகக் கூட்டங்களின் கூட்டாளிகளா? மேகம் எப்போது வேண்டுமானாலும் கூடும். திமர் திடீரென மழை பொழியும், எதிர் பாராமல் வெள்ளம் வரும். குடகனாற்றில் போதுமான தண்ணீர் வராது என்று எந்தக் கணக்கை வைத்துக்கொண்டு சொல்லுகிறார்கள்? மழை பொழிவது இயற்கையின் சக்திக்கு உட்பட்டு அல்லவா நடக்கிறது. நான் சென்ற மே மாதம் கோடைப் பருவகாலத்தில் அமராவதி ஆற்றுப் பகுதிப் பக்கம் போயிருந்தேன். அமராவதி ஆற்றில் தண்ணீர் நிறைய வந்தது. கோடைக்காலத்தில் தண்ணீர் எங்கிருந்து இவ்வளவு வருகிறது என்று கேட்டேன். குடகனாற்றிலிருந்து வந்து விழும் தண்ணீர்தான் அது என்று அப் பகுதி மக்கள் கூறினர். ஆகவேதான் சொல்லுகிறேன் குடகனாற்றின் கடைப்பகுதியில் சிறிய அணை அமைத்து ஆங்காங்குள்ள குளங்களில் நிரப்பி வைத்தால் விவசாயம் வளர்ச்சியடைய வாய்ப்பாக அமையும், குடிநீர்ப் பிரச்சனையும் தீரும். கேணிகளில் ஊற்றும் ஊறும் என்பதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும், பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களுக்கும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மேலும் நிதி அமைச்சர் திட்ட பொது நோக்கின் இறுதிப் பத்தியில் "வருங்காலத்திற்காகத் துணிவுடனும், உறுதி யுடனும் திட்டமிட வேண்டும் என்னும் கொள்கையையே அரசு ஆதரிக்கிறது" என்பதையும் எடுத்துக் காட்டியுள்ளார். வருங்கால சமுதாயத்தின் நல்வாழ்வுக்காகவும், விவசாயப் பொருளாதார மேம்பாட்டிற்காகவும் குடகனாறு திட்டத்தை நிறைவேற்ற விரைவில் ஆவன செய்ய வேண்டும் என தொகுதி மக்களின் சார்பாகவும், கோடைகாலத்தில் குடிக்கக் கூட தண்ணீர் கிடைக்க வில்லையே என்று வெறும் குடத்தைப் பார்த்து கண்ணீர் வடிக்கின்ற பெண்களின் சார்பாகவும் கேட்டுக் கொள்கிறேன். துணிவோடு

[திரு. பெ. சௌந்தரபாண்டியன்] [1969 ஆகஸ்ட் 22

திட்டத்தை அணுகி உறுதியுடன் செயல்பட வேண்டும் என பணிவோடு கேட்டு எனக்கும் பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி செலுத்தி விடைபெறுகிறேன். வணக்கம்.

* **திரு. ஆ. கு. சுப்பையா :** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் சம்பந்தமாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன். முதலாவதாக, திட்டம் என்பது மக்களுக்கு உரிய திட்டமாக இருக்க வேண்டும். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை பூர்த்தி செய்தபிறகு, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஓய்வு கொடுத்த பிறகு, இன்றையதினம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். இந்தத் திட்டத்தின் மூலமாகவாவது இந்த நாட்டில் உழைத்துக் கொண்டிருக்கிற மக்களுக்குப் பலன் ஏற்படுகின்ற முறையில், திட்டம் அமைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த மூன்று திட்டங்களையும் எடுத்துக் கொண்டால் நாட்டின் பல லட்சக்கணக்கான, ஏன், கோடிக்கணக்கானவர்களுக்கு வேலை யில்லாத வாய்ப்பை ஏற்படுத்துகின்ற முறையில்தான் அமைந்தது. இதன் காரணமாக அந்தத் திட்டங்களினால் சில தனி நபர்கள், சந்தர்ப்பத்தையும் திட்டத்தின் சாதகங்களையும் பயன்படுத்திக் கொண்டு பெரிய பணக்காரர்களாக ஆகியிருக்கிறார்கள். ஆகவே, திட்டம் தயாரிக்கும்பொழுது அதனால் மக்களுக்கு என்ன பலன் ஏற்படும், எவ்வளவு மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வழி ஏற்படும் என்பதை யெல்லாம் கணக்கிட்டுப் பார்த்துச் சிறந்த முறையில் தயாரிக்க வேண்டும்.

தமிழ்நாடு அரசு 624 கோடி ரூபாய்க்குத் திட்டம் தயாரித்திருக் கிறார்கள். தமிழகத்தில் இருக்கிற மக்களுக்குப் பல்வேறு வகைகளிலே செலவழிக்கப்பட வேண்டுமென்ற நோக்கம் தமிழக அரசுக்கு இருந்தாலும், மத்திய அரசும், திட்ட ஆணைக்குழுவும் தமிழகத்திற்கு 502 கோடி ரூபாய்தான் தர முடியும் என்றும், அதற்குள்ளாகத்தான் தமிழக அரசு திட்டம் தயாரிக்க வேண்டும் என்றும் ஆலோசனை சொல்லியிருக்கிறார்கள். இந்த 502 கோடி ரூபாயில் விவசாயத்திற்கு இவ்வளவு, கல்விக்கு இவ்வளவு, தொழில் வளர்ச்சிக்கு இவ்வளவு என்று செலவிடப்பட வேண்டும் என்று திட்ட ஆணைக்குழு ஆலோசனை சொல்கிறது. ஆகவே, மாநிலத் தேவைகளின் அடிப்படையில் திட்டம் போடுவது என்பது நடை முறையில் இல்லை என்பது தெரிய வருகிறது.

இன்றையதினம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கப் பட்டு வருகிறது. இந்த நாட்டில் இன்றையதினம் தொழில்கள் அபிவிருத்தி அடைந்திருக்கிறதா, அதனால் சாதக பாதகங்கள் என்ன என்பதைப் பார்க்கின்றபொழுது ஒரு பலனும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. நாம் பல ஆண்டுகளாகச் சொல்லி வரும் சேலம் உருக்காலையைப்பற்றி எந்தவிதமான வார்த்தையும்



1969 ஆகஸ்ட் 22] [திரு. ஆ. கு. சுப்பையா]

இல்லையென்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். சேலம் உருக்காலையைப்பற்றி மத்திய அரசோ, திட்ட ஆணைக் குழுவோ என்ன சொல்கிறார்கள்? ஏன் தயக்கம் காட்டுகிறார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை. சேலம் உருக் காலையைப்பற்றி அவர்கள் தயக்கம் காட்டுகின்றபோது, நாம் கவலையோடு பார்க்கின்ற நிலைமைதான் இருந்து வருகிறது.

அடுத்தபடியாக, சேதுசமுத்திரம் திட்டம், நெய்வேலி சுரங்கம் இரண்டாம் நிலை, மணலியைத் தலைமையிடமாகக் கொண்டு, பாறை எண்ணெய்—இரசாயனத் தொழிற்சாலை போன்ற திட்டங்கள் நம் நாட்டில் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. இவைகளை யெல்லாம் நிச்சயமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்; நான்காவது திட்டத்தில் சேர்க்க வேண்டும் என்று சிபாரிசு செய்வது மட்டுமல்ல, நாம் தமிழக மக்களின் ஆதரவோடு பெரிய கிளர்ச்சியையும் நடத்த வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

மேலும், இருக்கின்ற தொழிற்பேட்டைகளை முறையாக நடத்தினால் போதுமானது என்பது என்னுடைய அபிப்பிராயம். மேலும் மேலும் தொழிற்பேட்டைகளைத் திறப்பதன் மூலமாக அவை திறம்படச் செயல்பட முடியாத நிலையில் இருக்கின்றன. மேலும் இன்றையதினம் கைத்தறி நெசவுத் தொழில் நசித்துக் கொண்டிருக்கிறது. கைத்தறி நெசவாளர்கள் வேலையற்று, தங்களுடைய தொழிலுக்கு உத்தரவாதமில்லாமல் அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலைமையை அரசாங்கம் கவனித்து அவர்களுடைய குறைகள் அகற்றப்பட வேண்டும்.

அடுத்தபடியாக, தமிழ்நாட்டில் இராமநாதபுரம் மாவட்டமும், அதைச் சார்ந்திருக்கிற அறந்தாங்கி, புதுக்கோட்டையும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கோவில்பட்டி முதலிய பகுதிகளும் பஞ்சப் பிரதேசங்களாக இருக்கின்றன. அந்தப் பகுதி மக்கள் தங்கள் இடத்தை விட்டு வெளியேறி வெளி மாவட்டங் களுக்குச் செல்ல வேண்டிய தரித்திர நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த மாவட்டத்து மக்கள் பல்வேறு தொழில்களைப் பெறுவதற்குரிய முறையில் திட்டத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பகுதியை பின்தங்கிய பிரதேசம் என்று அறிவிக்க வேண்டுமென பிளானிங் கமிஷனே 1964-ம் ஆண்டிலேயே ஆலோசனை சொல்லியிருக்கிறது. ஆகவே, தமிழக அரசு, இதைப் பின்தங்கிய பிரதேசம் என்று பிரகடனப்படுத்தி, மத்திய அரசிலிருந்து நிவாரண வேலைகளுக்காக அதிக நிதி உதவி பெற்று, விவசாயம் வளர்ச்சி பெறுவதற்காக ஆழ்கிணறுகளை வெட்டியும், பூமிக்கடியில் இருக்கும் நீரை விவசாயத்திற்குக் கொண்டுவர முயற்சிகள் செய்தும் அப் பகுதி மக்களை முன்னேற்ற வேண்டும். அதற்காக கோடிக்கணக்கான ரூபாயை மத்திய அரசிலிருந்து உதவியாகப் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஆ. கு. சுப்பையா] [1969 ஆகஸ்ட் 22

மேலும், இராமநாதபுரம் கடற்கரை ஓரமாக இருப்பதால் ரசாயன தொழிற்சாலை ஒன்றை ஆரம்பித்தால், அந்தப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க முடியும். மேலும், சேது சமுத்திரத் திட்டத்தை ஆரம்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், மண்டபத்தில் இருக்கக்கூடிய மீன்வள ஆராய்ச்சி நிலையத்தை கொச்சிக்கு மாற்றப் போவதாக மத்திய அரசு தெரிவித்திருக்கிறது. இந்த மாற்றத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும். மண்டபத்தில் அந்த மீன்வள ஆராய்ச்சி நிலையம் இருந்தால் அந்தப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு வசதி செய்து கொடுக்க முடியும் என்று சொல்லிக் கொள்கிறேன். மேலும், தொழில்களைப் பேணிப் பாதுகாக்கும் முறையில் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். மூலப்பொருள்களோடு இணைந்த தொழிற்சாலைகளை ஏற்படுத்த வேண்டும். இன்றையதினம் பஞ்சாலைகள் மூடப்பட்டு, அதில் வேலை செய்தவர்கள் தொழில் இழந்து நிற்கிறார்கள். அவர்களுக்குத் தகுந்த நிவாரணம் அளிக்க வேண்டும். மேலும் நாகப்பட்டினம் துறைமுகத்தை மத்திய அரசு ஏற்றுக்கொண்டு அதன் வளர்ச்சிக்கு வழி செய்ய வேண்டும். அதன் காரணமாக அந்தப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும், அந்தப் பகுதியும் வளர்ச்சியடைய வாய்ப்பு ஏற்படும். ஆகவே, அதையும் இந்த அரசாங்கம் தன்னுடைய சிபாரிசுகளிலே சேர்த்துக்கொள்ள வேண்டும்.

இன்றைய தினம் பொதுத் துறைகளை எடுத்துக் கொள்வதன் மூலமாக, கிடைக்கும் வருவாயைச் செலவிடுவதற்கு ஈடு கட்ட முடியும் என்று நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சமீபத்தில் நெய்வேலிச் சுரங்கத் தொழிற்சாலையை எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். அதில் வரும் வருவாய் போதுமானதா என்பதையும் பார்க்க வேண்டும். நாகப்பட்டினத்தை கப்பல் துறைமுகங்களை எடுத்து அதில் வரும் வருமானம் மூலமும் பல திட்டங்களை நிறைவேற்ற முன்வருமா, அதன் மூலம் மக்களுக்கும் வேலைவாய்ப்பு பெருகுமா என்பதை அரசு ஆலோசிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, தஞ்சை மாவட்டத்தில் காகிதத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கும், உரத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கும் வேண்டிய வாய்ப்பு வசதிகள் நிறைய இருக்கின்றன. காகிதத் தொழிற்சாலைக்கு வேண்டிய வைக்கோல் ஏராளமாகக் கிடைக்கிறது. அங்கே சுமார் 14 லட்சம் ஏக்கரிலே விளைகிற வைக்கோல் வீணாகிறது. ஆகவே, இந்த வைக்கோலைக் கொண்டு காகிதம் தயாரிக்க ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும். அப்படி அங்கே காகிதத் தொழிற்சாலையை ஆரம்பித்தால், ஆயிரக் கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய வசதி இருக்கிறது. அதேபோல் அந்த மாவட்டத்தில் நாகையில் உரத் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு வேண்டிய வாய்ப்புகள் இருந்து கொண்டிருக்கின்றன. அந்த யோசனையையும் அரசு ஏற்க வேண்டும்.



1969 ஆகஸ்ட் 22] [திரு. ஆ. கு. சுப்பையா]

வேளாண்மையைப் பொறுத்தவரையில் பசுமைப் புரட்சியைப் பற்றி பேசுகின்றோம். பசுமைப் புரட்சி ஏற்படுவதற்கு நல்ல உரங்கள் வைப்பதன் மூலமாக, அதிக தானியங்களை உற்பத்தியாக்கும் வித்துக்கள் மூலமாக நம்முடைய நோக்கத்தை நிறைவேற்ற முடியும். நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 79 லட்சம் டன் உற்பத்தி செய்துவிட முடியும் என்ற நம்பிக்கையோடு திட்டம் தயாரிக்க முற்படுகிறோம். உண்மையில் அந்த நிலையை அடைய வேண்டுமானால், திட்டக் கமிஷன் என்ன சொல்கிறார்கள் ? உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொன்னால், ஏற்பட்டிருக்கிற உணவுப் பற்றாக்குறையைப் போக்க வேண்டுமென்று சொன்னால், தீவிரமான நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவந்தாக வேண்டும், நிலத்தில் நேரடியாக உழுகிறவர்களுக்கு நிலம் கொடுத்தாலொழிய உணவு உற்பத்தியைப் பெருக்குவது என்பது இயலாத காரியம். அடுத்து மற்ற ராஜ்யங்களைவிட நம் ராஜ்யம் நிலச் சீர்திருத்தச் சட்டம் செய்வதில் மிகமிகப் பின்தங்கிய நிலையில் இருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இதை எல்லாம் கவனத்தில் கொண்டு பார்த்தாலும் நாமும் மிகத் தீவிரமான நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்தாக வேண்டும். ஏட்டளவில் இருந்தால் போதாது. உச்சவரம்புச் சட்டம் கொண்டுவந்தோம் என்றால் அந்தச் சட்டத்தை முறையாகத் திருத்தம்செய்து, குடும்பத்திற்குப் பதினைந்து ஏக்கர் வரம்பு கட்டி உபரி நிலங்களை எடுத்து நிலம் இல்லாதவர்களுக்கு வழங்குவதன் மூலமாகத்தான் அதிகமாக உற்பத்தி செய்ய முடியும். இல்லை என்று சொன்னால் ஆண்டுக்கு ஆண்டு பற்றாக்குறை நிலைதான் உருவாகும்.

ஆகவே, கிராமங்களில் வாழ்கிற மக்களின் பொருளாதாரத்தை உயர்த்த வேண்டுமென்று சொன்னால் முதலில் அவர்களுக்குக் குடியிருக்க இடம் வேண்டும். சுதந்திரம் கிடைத்து 25 ஆண்டுகளுக்குப் பிறகு கூட குடியிருப்புப் பிரச்சினை தீர்க்கப்படவில்லையென்றால் பயன் இல்லை. மக்கள் இருப்பதற்கு இடமும், உண்பதற்கு உணவும், உடுத்துவதற்கு உடையும், செய்வதற்கு வேலையும் அளிக்கக்கூடிய திட்டமாக இது உருவாக வேண்டும். விவசாய சீர்திருத்தத்தைப்பற்றி பேசிக் கொண்டே இருப்பதில் பயன் இல்லை. நடைமுறையில் கொண்டுவந்தாகவேண்டும். எத்தனை தொழில்களை ஆரம்பித்தாலும் கூட கிராம விவசாய மக்களது பொருளாதார நிலை உயராத வரையில் தொழில் மந்தம் இருந்து கொண்டேதான் இருக்கும். இன்றையதினம் கிராம மக்கள் வாழ்வதற்கு வழியின்றி நகர்ப்புறங்களைத் தேடி வருகிறார்கள். இந்த நிலை மாறுவதற்கு உடனடியாகத் தீவிரமான நிலச்சீர்திருத்தச் சட்டம் கொண்டு வந்தாக வேண்டும். இல்லாவிட்டால் உணவு விஷயத்தில் நமக்கு மிகப்பெரிய தோல்வி ஏற்படும். பழைய மூன்று திட்டங்களைப் போலவே இதுவும் அமைந்தால் நாட்டில் மிகப் பெரிய பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாகவே ஆவார்கள். நாட்டில் பொதுவாக வறுமையும் பெரிய அளவுக்கு

வேலையில்லாத் திண்டாட்டமும் ஏற்படும். ஏற்படக்கூடிய பெரிய நெருக்கடிகளைத் தவிர்த்தாக வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு அரசாங்கம் நிலச் சீர்திருத்தச் சட்டத்தை உடனே கொண்டு வந்தாக வேண்டும். மேலும் இத் திட்டத்திற்காக அரசாங்கம் கோரும் 624 கோடியையும் கட்டாயம் வற்புறுத்திப் பெற்றேயாக வேண்டும் என்று கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. என். ராஜாங்கம் :** பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்ட உரையின் மீது மற்றவர்களைப் போல எனக்கும் பேச வாய்ப்பளித்ததற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்நியன் ஆண்டபோது திட்டம் என்று பொதுவாக எதுவுமே போடவில்லை. இருந்தும் எத்தனையோ காரியங்களைச் செய்திருக்கிறார்கள். சுதந்திரம் கிடைத்த பிறகு மக்களுக்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின் மக்களுடைய தேவைகளை, ஆசைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்கிற அடிப்படையில் திட்டங்கள் வகுக்கும் நிலை வந்தது. இந்த நாட்டில் வாழ்கின்ற மக்கள் அத்தனை பேர்களுக்கும் உண்ண உணவு, உடுக்க உடை, தங்க இடம் தந்தாக வேண்டும் என்ற கொள்கை அடிப்படையில் திட்டங்கள் தீட்ட ஆரம்பித்தோம். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டுவிட்டன ? பயன் என்ன ? ஆட்சிப்பொறுப்பில் இருந்த நேரு முதல் அவருக்கு ஈடான பெருந் தலைவர்கள் எல்லாம், எதிர்க் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரே குரலில் சொன்னார்கள், "இந்தத் திட்டங்கள் கீழே இருக்கிறவர்களை கீழேயே ஆழ்த்திவிட்டது. மேலே இருக்கிறவர்கள் மேலும் மேலும் மேலே செல்வதற்குத்தான் உதவியிருக்கிறது" என்பதை ஒப்புக் கொண்டார்கள். ஆகவே, இந்தத் திட்டங்களின் மூலம் வேறு எந்தவிதமான பலனையும் காண முடியவில்லை.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. விநாயகம் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்த பிறகு கொண்டு வந்திருக்கும் படி அரிசித் திட்டத்தை விமர்சித்தார்கள். சுதந்திரம் வேண்டும் என்று நாம் கேட்டபோது—எதற்காகச் சுதந்திரம் கேட்கிறீர்கள் என்று அந்நியன் கேட்டபோது நாம் என்ன சொன்னோம். இந்த நாட்டில் எதுவும் கிடைக்கவில்லை என்கிற நிலையை மாற்றி எல்லாம் கிடைக்கும் என்கிற நிலையை ஏற்படுத்துவதற்குத்தான் சுதந்திரம் கேட்கிறோம். மனிதாபிமானத்தை ஒட்டி ஒரு மனிதனை இன்னொரு மனிதன் அடிமைப்படுத்துவதைத் தவிர்க்கவே சுதந்திரம் கேட்கிறோம், இந்த நாட்டை வேறு ஒரு நாட்டைச் சேர்ந்த அந்நியன் ஆள வேண்டும் என்கிற நிலை இல்லை, நாங்களே ஆள முடியும் என்பதைக் காட்ட சுதந்திரம் கேட்கிறோம் என்றெல்லாம் சொன்னோமே, சுதந்திரம் வந்துவிட்டால் பாலாக





ஓடும், தேனாக ஓடும் என்றெல்லாம் சொன்னார்களே, பால் கிடைக்க வேண்டாம், தேன் கிடைக்க வேண்டாம், அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்ட அடிப்படை வசதிகளாவது மக்களுக்குக் கிடைத்ததா என்றால் இல்லை. மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் பலனும் ஏழைகளுக்குக் கிடைக்கவில்லை என்பது நாடறிந்த உண்மை. எல்லோரும் ஒப்புக்கொண்டுள்ளார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் 2½ ஆண்டுகள் தள்ளி இப்போது வருகிறது. வரப் போகிறது என்று விவாதிக்கிறோம். வந்துவிட்டதென்று வாதிக்க முடியாது.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை எடுத்த அன்று படி அரிசி 3½ ரூபாயாக விற்றது. ஆட்சிப் பொறுப்பை எடுத்து ரூபாய்க்குப் படி அரிசியாக விநியோகிக்க முன் வந்த காரணத்தினால் இன்றைக்கு 40 இலட்சம் மக்கள் பயன்படுகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. குடும்பக் கார்டு, ரேஷன் கார்டு முறையில் ஏழை மக்கள் நியாயமான விலையில் அரிசி வாங்குகிறார்கள். அந்த முறையில் இந்த அரசு தன்னுடைய வாக்குறுதியைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். மக்களின் எண்ணங்களை, மக்களின் அபிலாஷைகளை இந்த மன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். முன்னால் ஆட்சிப் பொறுப்பை படி அரிசி எட்டணா விற்ற காலத்தில் எடுத்த காங்கிரஸ்காரர்கள் 400 கோடி ரூபாயையும் விரயம் செய்துவிட்டு படி அரிசி 3½ ரூபாய்க்கு வந்துவிட்ட நிலையில் விட்டுச் சென்றார்கள். அப்போதே நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் ஒன்றைச் சொன்னார்கள். ஜம்மு காஷ்மீர் பகுதி இந்தியாவோடு இணைந்திருக்க வேண்டும் என்பதற்காக 1½ ரூபாய்க்குக் கோதுமையை வாங்கி 1 ரூபாய்க்குக் கொடுப்பதன் மூலம் 10 கோடி நஷ்டத்தை ஆண்டு ஒன்றுக்கு மத்திய சர்க்கார் ஏற்றதே, அதுபோல இந்தப் படி அரிசித் திட்டத்தினால் வருகிற நஷ்டத்தையும் மத்திய சர்க்கார் தான் ஈடுகட்ட வேண்டும் என்றார்கள். மக்களுக்கு மலிவான விலையில் உணவுப் பொருள் வழங்குவதில் நஷ்டம் வந்தால் அதை நஷ்டமாகவே எடுத்துக் கொள்ளவும் கூடாது என்று அறிவித்தார்கள். ஆகவே இத் துறையில் ஏற்படுகிற நஷ்டத்தை நாம் நஷ்டமாகக் கருத முடியாது. மேலும் விஸ்தரிக்க முடியாததற்கு வறட்சி ஏற்பட்டுவிட்டது. இயற்கை பொய்த்து விட்டது. இது கட்சிக்கு அப்பாற்பட்ட நிலை. ஆகவே இதை யோசித்துக் காங்கிரஸ் கட்சியினர் பேச வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் துவக்குவதற்கு முன்னால் இந்த நாட்டில் உள்ள பெரும் குறை—தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்பது நிறைவேறாததுதான். ஐந்து லட்சத்து இருபத்தோராயிரம் மனைகள் தாழ்த்தப்பட்ட அரிசன மக்களுக்கு வழங்க

வேண்டும் என்பது குறிப்பில் இருக்கிறது. அதிலே அப்பொழுது வழங்கப்பட்ட மனைகள் ஒரு லட்சம், ஐந்து ஆண்டுகளுக்கு முன்னாலே 5 இலட்சம் மனைகள் வழங்கப்பட வேண்டிய பாக்கி இருந்தது. இப்பொழுது மேலும் 4 இலட்சம் மனைகள் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆக மொத்தம் 10 இலட்சம் மனைகள் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதற்காக 2 கோடியே 69 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சுதந்திரம் பெற்று 20 ஆண்டுக்காலம் ஆகியும் எந்த ஒரு பிரச்னையாவது அவர்கள் எடுத்துக் கொண்டு முடித்தோம் என்ற நிலைமை இருக்கிறதா என்றால் இல்லை. அப்பொழுது இருந்த அரசாங்கம் இதைச் செய்யவில்லை. இப்பொழுது இருக்கிற அரசாங்கம் **செய்வ**தற்கும் நிதி நிலைமை வசதியாக இல்லை. மத்திய அரசா**ங்கம்** 9 கோடியே சொச்சம், மாநில அரசு 10 கோடி ரூபாயும் ஒதுக்கி இருக்கிறது. இது பற்றாது. நிதி அமைச்சர் அவர்கள், இது குறிப்புதான் என்று சொன்னார்கள், எனவே முடிவு செய்வதற்கு முன்னாலே இதற்காக மேலும் சில கோடி ரூபாய் சேர்த்துக் கொடுத்து பிற்பட்ட மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் மனை வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்தபடியாக விவசாயத்தை எடுத்துக் கொண்டால் விவசாயம் தான் எல்லோரையும் வாழ வைக்கின்ற ஒன்று என்பது யாவரும் அறிந்த உண்மை. பசுமைப்புரட்சிப்பற்றி இதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்காக 70 கிணறுகள், 10 குழாய் கிணறுகள், 4 போர் கிணறுகள், 4 வடிமுனைக் குழாய்கள், 50 மாநிலக் கிணறுகள் தோண்ட வேண்டுமென்று திட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இவற்றை யெல்லாம் நிறைவேற்றினால் மக்கள் உணவுக்காக அவஸ்தைப்படாமல் இருக்கக்கூடிய நிலைமை ஏற்படும். இன்னும் கையேந்தக்கூடிய நிலைமை இந்திய நாட்டில் இருப்பது துர் பாக்கியம்தான். எவ்வளவு நடவடிக்கைகள் நாம் எடுத்தாலும் இயற்கை நமக்குச் சாதகமாக இருந்தால்தான் நல்லது. மின்சாரத்தையும் தண்ணீரையும் குறைந்தது இரண்டு ஆண்டுக் காலத்திற்குள்ளாக எல்லோருக்கும் கிடைக்கும் வகையில் செய்தாக வேண்டும். இந்த அரசாங்கம் எதைச் செய்தாலும் குறிப்பிட்டபடி இதைச் செய்வதற்கு அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு எனக்குப் பேச சந்தர்ப்பம் கொடுத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வரைவு சுருக்கத்தை யொட்டிச் சில வார்த்தைகளைப் பேச முன்வருகிறேன். இந்த





ஐந்தாண்டுத் திட்டத்திலே பல அரிய திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் மிக இன்றியமையாத நீண்ட நெடு நாட்களாக என்னுடைய தொகுதி மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற ஒரு திட்டத்தைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது. அவனாசித் திட்டத்திற்கு 4 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 15 ஆண்டுக் காலமாக ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திலேயும் இது எழுதப்பட்டு காகித அளவில் இருந்ததே அல்லாமல் காரிய அளவில் இல்லை. என்னுடைய அவனாசித் தொகுதியில் 100, 150 வருடங்களாக இருக்கின்ற பனை மரங்கள் எல்லாம்கூட காய்ந்து போகிற பரிதாபகரமான **நிலைமையில்** காட்சியளிக்கக்கூடிய நிலைமை **இருக்கிறது. இந்த** ஐந்தாண்டுத் திட்டத்திலே நிறைவேற்ற வேண்டுமென்று நான் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். நாங்கள் பலமுறை இதைப்பற்றி எடுத்துச் சொல்லியும் கூட, அங்கே தண்ணீர் இல்லை என்று சொல்லி, பிறகு கேரளத்தோடு ஒப்பந்தம் செய்து கொண்டு நிர்ப்பந்தத்தோடு கேரளத்திற்குக் கொஞ்சம் தண்ணீர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படிக் கொடுத்தாலும் இன்னும் அந்தப் பகுதியிலே தண்ணீர் இருக்கிறது, அதைக் கொண்டுவந்தால் நன்றாக இருக்கும். எனவே இதிலே தீவிர அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இயந்திரத் துறையிலேயும், விஞ்ஞானத் துறையிலேயும் முன்னேற்றங்கள் இல்லாத காலத்திலே பாலாறு பக்கம் சென்ற காவிரியை சோழமண்டலத்திற்குக் கொண்டுவந்த நாடு நம்முடைய நாடு. காவிரி எப்பொழுதும் போன இடத்தில் போகவில்லை. புதிதாக சோழ மன்னர்களால் அங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதற்காக நான் ஒரே ஒரு சிறு உதாரணத்தை மட்டும் சொல்லிக் கொள்கிறேன். திருச்சியிலிருந்து கோயம்புத்தூருக்குச் செல்கின்ற பாதையில் 30 மைல் தூரத்திற்குக் காவிரி அணை போட்டிருக்கிறார்கள். அந்த அணை மாத்திரம் இல்லாமலிருந்தால், காவிரி அங்கே போகாது. காவிரி நதியின் அடிப்பகுதியைவிட தென்பகுதி தாழ்வானது என்பதை சாதாரணமாகக் கண்கொண்டு பார்த்தால்கூடத் தெரியும். காவிரியையே அப்பொழுது அப்படிச் செய்திருக்கிறார்கள். என்னுடைய ஜில்லாவிலும் மேல்பக்கமும் மழை பெய்கிறது. தண்ணீர் அங்கேயிருந்து எங்கங்கோ கொண்டு போகப்படுகிறது. நாங்களும் வாழ வேண்டும்—அந்தப் பகுதியில் உள்ளவர்கள் வெளி மாநிலங்களுக்கு ஓயாமல் குடி பெயர்ந்து போய்க் கொண்டிருக்கிறார்கள்—இதைக் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மிக முக்கியமான திட்டத்தைப்பற்றி இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. குடிநீர்ப் பஞ்சம் நாடெங்கும் பரவி இருக்கிறது. சமுத்திரம் சூழ்ந்த இந்த இடத்தில்கூட பஞ்சம் என்று சொல்ல நாம் வெட்கப்படவேண்டும். இஸ்ரேல் நாட்டிலே குடிப்பதற்கு மட்டுமல்ல, விவசாயத்திற்குக்கூட கடல்நீரை மாற்றி பயன்படுத்துகிறார்கள். நாம் இங்கே அதைச் செய்யாமல் இருப்

பதற்கு வருத்தப்பட வேண்டும். அதுமட்டுமல்ல. சந்திரனைப் பிடிப்பதோ, சூரியனைப் பிடிப்பதோ அல்ல, பக்கத்திலே உள்ள கடல் நீரை குடி நீராக்க திட்டம் செய்வது ஒரு பெரிய காரியம் அல்ல. மூன்று நாட்களுக்கு முன்னதாககூட ஹிந்துப் பத்திரிகையிலே ஒரு கட்டுரை இதுபற்றி வந்திருக்கிறது. அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சூரிய ஒளி அதிகமாக இருக்கிறது. அந்த ஒளியிலே ஆவியாக்கி நீரை நல்ல நீராக்கலாம். இன்னும் சில கருத்துக்களையும் நாங்கள் சொன்னோம். என்போன்றவர்கள் சொன்னால் பொறியியல் நிபுணர்கள் அல்ல என்பதால் எடுத்துக்கொள்ளமாட்டார்கள். மக்கள் கழிவு, மனிதக் கழிவு, மற்றக் கழிவு ஆகிய இத்தனையும் சேர்த்து உற்பத்தி செய்யும் மீதேன் காஸ் கொண்டும் சூரிய ஒளியைப் பயன்படுத்தியும் ஆவியை உற்பத்தி செய்து அதன் மூலமாகப் ப்ரோமின் போன்ற பல கெமிக்கல்ஸ் செய்யலாம். இதை நான் 1967-லே ஆரம்பத்திலேயே சொன்னேன். கடந்த 20, 25 ஆண்டுக் காலமாக மீதேன் காஸ் உற்பத்தி செய்து உபயோகித்துக் கொண்டு வருகிறேன். அறிஞர் அண்ணா அவர்கள் வந்து பார்க்கிறேன் என்று சொன்னார்கள். துர்ப்பாக்கியவசமாக வர இயலவில்லை. என் போன்ற சாதாரண மக்கள் சொல்வதைக் காது கொடுத்துக் கேட்க இந்த அமைச்சரவையில் யாரும் இல்லை என்பதை வருத்தத்துடன் தெரிவிக்க வேண்டியிருக்கிறது.

"இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்."

என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். இல்லையே என்று இருப்பவர்களை நிலம் என்ற நல்லாள்கூடப் பார்த்துச் சிரிப்பாள் என்று வள்ளுவர் கூறுகின்றார். கடல் இருக்கிறது. அதிலிருந்து நல்ல நீரை உற்பத்தி செய்து உபயோகப்படுத்த முடியாத நிலையில் நாம் இருப்பதற்காக வருத்தப்பட வேண்டியிருக்கிறது என்பதை வேதனையோடு சொல்லிக்கொள்கிறேன். உற்பத்திப் பெருக்கிற்கும், வேலை வாய்ப்பிற்கும் செய்யவேண்டியவைபற்றி பல கருத்துக்கள் இங்கே பரிமாறப்பட்டன. அதற்கு மாறுபாடான சில கருத்துக்களையும் நான் இங்கே இந்த நேரத்தில் சொல்லாமல் இருக்க முடியாது. அவசியம் சொல்லத்தான் வேண்டியிருக்கிறது. நண்பர் திரு சங்கரய்யா அவர்கள் பேசும்பொழுது டிராக்டர்களைப் பயன்படுத்தினால் வேலைவாய்ப்புக் குறைந்துவிடும் என்று சொன்னார்கள். இதைக் கொஞ்சம் சிந்தித்து நன்றாகச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். நான் என்னுடைய உண்மையான அனுபவத்தைக் கண்கூடாக யாரும் காணக்கூடியதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சாதாரணமாக 2 ஏக்கர், 3 ஏக்கர் வைத்துக்கொண்டு உழவர்களை வாழவைப்பதற்கு பதில் யாளவைக்கலாம் என்று செய்ய வேண்டுமானால் செய்யலாம். ஆனால் பெரிய எக்னமிக்ஹோல்டிங் என்ற முறையிலே இயந்திர முறை எவ்வளவு அவசியம் வரவேண்டும் என்பதை நாம் பார்க்க வேண்டும்.





நமக்குச் சோறு போட்டுக் கொண்டிருக்கின்ற அமெரிக்காவிலே பல பகுதிகளில் 140 ஏக்கர்களுக்குக் குறைவாக இருக்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அங்கே நிலத்திற்கு உச்சவரம்பு கிடையாது. இவ்வளவுக்கு குறைவாக வைத்திருக்கக் கூடாது என்று சட்டமே போட்டு இருக்கிறார்கள். அந்த நாட்டிலே தாங்களும் உண்டு, மற்ற நாடுகளுக்கும் கொடுக்கிறார்கள். அங்கே வேலைவாய்ப்புக்கும் குறைவில்லை. தொழில் வளமும் விஞ்ஞானமும் பெருகியுள்ள ஒரு நாட்டைப் பற்றிக் குறிப்பிடுகிறேனே என்று நினைக்கலாம். என்னுடைய விவசாயத்தை வந்து பாருங்கள் என்று நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். திரு. சங்கரய்யா போன்ற இடது கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த பல நண்பர்கள் வந்து பார்த்திருக்கிறார்கள். அதைப் பார்த்துவிட்டு இயந்திர சாதனங்களை உபயோகப்படுத்துவது நல்லதா, இல்லையா? என்ற முடிவுக்கு வரட்டும். சாதாரணமாக 60 ஏக்கரில் விவசாயம் செய்கிறேன் வாரத்திற்கு—மாதத்திற்கு அல்ல—500 ரூபாய் கூலி கொடுக்கிறேன். மின்சாரத்தைப் பயன்படுத்தி தண்ணீர் இறைக்காமல் பழைய கால முறைப்படி கவலையை வைத்துத் தண்ணீர் இறைத்தால் நிச்சயமாகச் சரிப்பட்டு வராது. ஒரு ஆளுக்கு 120 ரூபாய் கூலி கொடுக்கிறேன். அந்த ஆளுக்கு 3 ஏக்கரைக் கையிலே கொடுத்து விவசாயம் செய்யச் சொன்னால் ஆண்டுக்கு 1,500 ரூபாய் மிச்சம் செய்ய முடியுமா? 2 ஏக்கர், 3 ஏக்கர் வைத்திருக்கக்கூடிய சிறு விவசாயிகள் லாபகரமாக விவசாயம் செய்ய முடியாமல் என்னிடம் அவற்றைக் குத்தகைக்கு விட்டு வேறு தொழில் செய்து சம்பாதிக்கிறார்கள். எனக்குப் போதுமான ஓய்வு இல்லாதிருந்தும் கூட அவற்றை எடுத்துச் செய்கிறேன். அவர்களுடைய நன்மைக்காகவும் நாட்டு நன்மைக்காகவும் செய்கிறேன். மானம் பார்த்த பூமிக்கு 4 சலகை, ஐந்தாறு சலகை கொடுக்கிறேன். முப்பது, நாற்பது ஏக்கரை உழ வேண்டுமென்றால் ஆள் வைத்து உழுவது மிகவும் சிரமம். இயந்திரத்தை உபயோகிப்பதால் வேலை வாய்ப்புக் குறையுமா என்றால் இல்லை; பெருகுகிறது. அமெரிக்கா போன்று அத்தனை காரியங்களையும் இயந்திரத்தைக் கொண்டே செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை. அங்கே ஒரு புருஷன் பெண்டாட்டி ஆயிரம் ஏக்கரை உழும் நிலைமை இருக்கிறது. அந்த நிலைமை வரவேண்டுமென்று நான் சொல்லவில்லை. நம்முடைய நாட்டு பொருளாதார முன்னேற்றத்திற்கு, விவசாய முன்னேற்றத்திற்கு ஓரளவு இயந்திரங்களை உபயோகப்படுத்த வேண்டியது அவசியமாகும். இல்லையென்றால் நாடு அழிந்துவிடும். ராட்சத இயந்திரங்களைக் கொண்டு பல தொழில்களை நடத்துகிறார்கள். மில்களை நடத்துகிறார்கள். மில்களை மூட வேண்டுமென்று அவர்கள் சொல்லுவதில்லை. மில்களில் 200 ரூபாய் கூலி போதாது, 300 ரூபாய் வேண்டுமென்று கேட்கிறார்கள். இவர்கள் இரண்டு ஏக்கர், நான்கு ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்து அதற்குச் சமமாக வரும்படியைக் காட்ட முடியுமா? ஆகவே, கவைக்குதவாத வாதங்களைக் கூற வேண்டாம்.

[திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்] [1969 ஆகஸ்ட் 22

ஒரு சர்க்கரை ஆலையில் பல ஆயிரம் பேர்கள் வேலை செய்கிறார்கள். தினந்தோறும் ஓர் ஆலையில் ஆயிரம் டன் கரும்புக்கு மேல் அரைக்கப்படுகிறது. பண்டை முறைப்படி நாட்டுச் சர்க்கரை செய்தால் எவ்வளவு ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கும்? எவ்வளவு சத்துள்ள சர்க்கரையாகக் கிடைக்கும்! சர்க்கரை வியாதி வராமல் இருக்குமே. அதைக் காந்தியடிகளும், புருஷோத்தம தாஸ் தாண்டன் அவர்களும் 'வெள்ளைப் பாஷாணம்' அது வேண்டாம் என்று சொன்னார்களே, கேட்டார்களா? வேண்டாததற்கெல்லாம் முன்னேற்றக் கண்ணோட்டத்துடன் போகிறவர்கள் விவசாயத் துறையில் முன்னேற்றத்திற்கு ஏன் போகவில்லை என்பதைப் பார்க்கும்போது வருத்தமாக இருக்கிறது.

அடுத்தபடியாக, எல்லாத் துறைகளையும் அரசாங்கந்தான் நடத்த வேண்டும், தனியார் நடத்தக் கூடாது என்று சொல்வது பெரும் தவறு. நம்முடைய நிதியமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் தனியார் துறைக்கும் நல்ல ஊக்கம் கொடுக்கத்தான் வேண்டும் என்று குறிப்பிட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும். 2,700 கோடி ரூபாய் 70 குடும்பங்களில் அடங்கிவிட்டது என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அதை நாங்களும் விரும்பவில்லை. அந்தப் பொருளாதாரம் வேண்டாம். தொழில்களில் போட்டி மனப்பான்மை வேண்டும். வெளிநாட்டில் 5,000 ரூபாய்க்கு அழகான கார் விற்கும்போது, இங்கே 20,000 ரூபாய்க்கு மேல் விற்கப்படுகின்ற மிக மட்டமான அம்பாசடர் காருக்குச் சலுகை கொடுக்க வேண்டுமென்பதை நாங்களும் விரும்பவில்லை. போட்டி மனப்பான்மையைத் தொழிலில் விடுங்கள். நாட்டின் பொருளாதாரமும், வளமும் பெருகும். ஒரு சிலரிடத்திலே நாட்டின் பொருளாதாரம் குவியக் கூடாது என்பதை நாங்களும் ஒத்துக் கொள்ளுகிறோம்.

கண்ட்ரோல் கட்டுப்பாடுகள் இன்னும் நெருக்கமாக வேண்டுமென்று சொல்லுகிறார்கள். நான் என்னுடைய அனுபவத்தைச் சொல்லுகிறேன். சோற்றுக்குப் பற்றுக்குறை; அப்படி இருக்கும்போது விவசாயி கரும்புக்குப் போகிறான். நெல்லைப் போட்டால் அவனுக்குக் கட்டாத விலையில் கொள்முதல் செய்கிறார்கள். அவன் வேறு என்ன செய்வான்? ஏராளமாகக் கரும்பு உற்பத்தி செய்துவிட்டான். தெய்வாதீனமாக மழை இல்லை, மழை நன்றாகப் பெய்திருந்தால் கரும்புக்கு வெட்டுக்கூலி கூடக் கிடைத்திருக்காது. வேண்டாத காரியத்தைச் செய்து குடியானவர்கள் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் கண்ட்ரோல் என்ற கட்டுப்பாடுதான். நான் இதை எல்லாம் கட்சிக் கொள்கையாகச் சொல்லாமல் நல்ல எண்ணத்தோடு சொல்லுகிறேன்; நாட்டுமக்கள் நல்லபடி வாழ வேண்டுமென்பதற்காகச் சொல்லுகிறேன்.

அரசாங்கம் செய்கின்ற பல தொழில்கள் நஷ்டமாகி விடுகின்றன. தனியார் துறையில் லாபம் இருக்கிறது. இந்துஸ்தான் ஸ்டீல் கம்பெனி அரசாங்கத்தால் நடத்தப்படுவது. ரயில்வேயும்



1969 ஆகஸ்ட் 22] [திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்]

அரசாங்கத்தின் சார்பில் இருக்கிறது. கோவைக்கு இந்துஸ்தான் ஸ்டீல் கம்பெனியில் இருந்து ஒரு வாகனில் ஸ்டீல் வந்தது. 50 டன் இருக்க வேண்டிய இடத்தில் 30 டன்தான் இருக்கிறது. ரயில்வே இலாகாவில் 30 டன்தான் இருக்கிறது என்று கேட்டால், அவர்கள் 'நாங்கள் என்ன செய்யட்டும்; க்ளோஸ்டு வாகனில் போடச் சொன்னால் ஓப்பன் வாகனில் போட்டுவிட்டார்கள்' என்று சொல்லுகிறார்கள். யாரைக் கேட்பது? இரண்டும் அரசாங்கத் துறையில் இருப்பதால் யாரையும் கேட்க முடியாது. பொதுமக்கள்தான் நஷ்டத்தை ஏற்க வேண்டியிருக்கிறது. 30 டன்னில் செய்யக்கூடிய பொருள்களை 50 டன்னுக்கும் உண்டான விலையை வைத்துக் கணக்கிடும்போது சாதாரணமாக வாங்குகின்றவன், அடிமட்டத்தில் இருக்கின்றவன் 10 ரூபாய்க்குப் 15 ரூபாய் அதிகமாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது.

நமது அமைச்சர் அவர்கள் கோழிப் பண்ணையை சமீபத்தில் ஆர்டர் போட்டு மூடிவிட்டார்கள். 1½ லட்சம் ரூபாய்க்கு மேல் நஷ்டம். என்னுடைய இடத்தில் 30,000 மூலதனத்தில் ஒரு கோழிப் பண்ணை நடக்கிறது. ஆண்டுக்கு 30,000 ரூபாய் வருகிறது. எல்லாவற்றுக்கும் கணக்கு இருக்கிறது; ஏமாற்றுகிற கணக்கு ஒன்றும் என்னிடம் கிடையாது. அமைச்சர்கள் வந்து வேண்டுமானால் அந்தக் கோழிப் பண்ணையைப் பார்க்கட்டும். அரசாங்கக் கோழிப் பண்ணையில் நஷ்டம் வந்ததற்காகச் சொல்லுகிறேன். ஆகவே, தனியார் துறைக்கு உற்சாகத்தைத் தருவதன் மூலம் பல தொழில்கள் பெருகுவதோடு, நாடு நலம் பெறவும் வழி ஏற்படும். ஒருவரே கொள்ளையடிக்கும் நிலை ஏற்படக்கூடாது. நாட்டு மக்கள் அத்தனை பேரும் செல்வம் பெருகி நலமாக வாழ வேண்டும். அதற்கு வழி வகுக்குமாறு கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவுற்று மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

## (8) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. Statutory Rules and Orders.

112. Notification issued with G.O. Ms. No. 296, Rural Development and Local Administration, dated the 22nd February 1969 in regard to an amendment to the rules relating to the appointment and punishment of officers and servants of municipal councils, published at pages 453 to 454 of Part I-A of the *Fort St. George Gazette*, dated the 1st September 1936. [Laid on the Table of the House under Section 304 (*d*) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]

*B. Reports, Notifications and other papers*

* 44. The Tamil Nadu Relief Undertakings [(Special Provisions) Bill, 1969 (L.A. Bill No. 13 of 1969).]

@ 45. Report of the Commission of Inquiry on the Agrarian Labour Problems of East Thanjavur district.

@ Laid on the Table of the House on 21st August 1969.
* Despatched to Members on 20th August 1969.



## இணைப்பு

[44-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பை காண்க.]

### நான்காவது திட்டம் பற்றிய பொது நோக்கு.

நமது நான்காவது ஐந்தாண்டுத் திட்ட வரைவின் சுருக்க வடிவை சட்ட மன்றத்தின்கண் வைப்பதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். கடந்த வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரில் இம் மன்றத்தில் நான்காவது திட்டத்தின் வரைவு வைக்கப்பட்டதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நினைவு கூறுவர் என்று நம்புகிறோம். இம் மாநிலத்தின் வரைவுத் திட்டத்தைச் சட்டமன்றப் பேரவை விவாதிப்பதற்காக வைக்கப்படும்போது அது இறுதி வடிவம் பெற்ற நிலையில் இல்லையென்பதை நாமறிவோம். இக் காரணத்தாலேயே இப் பேரவையில் அதை விவாதிப்பதால் இன்னும் அதிக பலன் கிட்டக்கூடும். இங்கு நடைபெறும் விவாதத்தின்போது தெரிவிக்கப்படும் கருத்துக்கள் ஆய்வு செய்யப்பட்டு அவை பொருத்தமாகயிருக்குமானால் இந் திட்டத்தை இறுதியாகத் தயாரிக்கும் நிலையில் அவற்றைச் சேர்த்துக்கொள்ள இயலும்.

2. திட்டமிடும் முறை தொடர்ந்து வரக்கூடிய தொன்றாகும். என்பதை உணருதல் முக்கியமாகும். நமது திட்டங்கள் வளைவு நெளிவற்ற தன்மை உடையன என்று எவரும் எண்ணக்கூடாது. மாறி வரும் சூழலுக்கு ஏற்ப நமது திட்டங்களை மாற்றியமைக்க வேண்டியிருக்கும் என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். தேவையான நிதி வாயில்களைத் திரட்டுவதற்கு இன்னும் அதிகப் பலனளிக்கும் முறைகளை நாம் தேடிக் கொண்டேயிருக்க வேண்டும். நமது சமுதாய—பொருளாதார முறையை மாற்றுவது நம் குறிக்கோளாய் இருக்க வேண்டும். இந்தக் கருத்தில் நோக்கின் நமது வரைவுத் திட்டம் மிகவும் புனிதத் தன்மையுள்ளதாக நாம் கருதவில்லை. 1969 மார்ச் முதல் சில திங்களில் நாமே நமது திட்ட நோக்கங்களை மறு பரிசீலனை செய்து, புதிய குறிக்கோள் அளவுகளை முடிவு செய்துள்ளோம். எடுத்துக் காட்டாக, திட்டக் கால அளவிற்குள் கிராம மின் வசதித் திட்டத்தை அனைத்துக் கிராமங்களுக்கும் நீட்டிக்கும் குறிக்கோள் அளவை நாம் ஏற்றுள்ளோம். ஏனெனில், இங்கொன்றும் அங்கொன்றுமாக கிராம மின் வசதித் திட்டத்தை நிறைவேற்றுவதால் நிதி வாயில்களை விரயம் செய்வதாக நாம் கருதுகிறோம். மின் சக்தி உற்பத்திக்காக அதிகம் செலவிடுவதா அல்லது கிராம மின் வசதிக்கு அதிகம் செலவு செய்வதா என்பதே தற்போது நம்முன் உள்ள கேள்விகளாகும். கிராம மின் வசதிக்கு ஆதரவாகத்தான் நமது திட்டத்தை நாம் வேண்டுமென்றே சரிக்கட்டிக் கொண்டிருக்கின்றோம். அதேபோல், அண்மையில் ஏற்பட்ட வறட்சி நிலைமைகளை முன்னிட்டு, கிராம நீர் வழங்குத் திட்டங்களை வலியுறுத்துவதென நாம் முடிவு செய்துள்ளோம். நாகரீகம் அடைந்த சமுதாயத்தில் குடிமக்களுக்கு குடிநீர் கூட கிடைக்காத

தொரு சூழல் ஏற்படுவதை பொறுத்துக் கொள்வது இயலாத காரியம் என்று முடிவு செய்துள்ளோம். எனவே, மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும் குடிநீர் வழங்கும் திட்டத்தை நாம் மேற்கொண்டுள்ளோம்.

3. துறைவாரித் திட்டங்களின் சுருக்கமாக மட்டுமே மாநிலத் திட்டம் இருத்தல் போதாது என்பதை நாம் உணர்கிறோம். மத்திய, மாநில, தனியார் துறைகளில் நமது வலிமை, தளர்வு குறித்து ஆய்வு செய்த பின்னரே மாநிலத் திட்ட வளர்ச்சிக்கு வகை செய்ய வேண்டும். இத் துறைகள் யாவற்றிலும் வளர்ச்சி அடைந்தால்தான் பயன்துய்ப்பு, முதலீடு ஆகியவற்றின் உயர்ந்த நிலைகளுக்கு நமது பொருளாதாரத்தை நாம் உயர்த்த இயலும். எனவே, திட்டத்தை விவாதிக்கையில், இந்த மூன்று துறைகளிலும் முதலீட்டின் அளவுகள், நடவடிக்கைகள் குறித்து நாம் நாட்டம் செலுத்த வேண்டும்.

4. இச் சூழலில்தான் நமது கூட்டமைப்பு முறைக்குத் தொடர்பான சில அடிப்படைச் சிக்கல்களை நாம் ஆராய்வது பொருத்தமாகின்றது. தற்போதைய திட்டமுறை குறித்து உறுதிப்பாடற்ற சூழல் நிலவுகின்றது. அதாவது, பொருளாதாரத்தின் முக்கியக் கூறுகள் குறித்து மத்திய, மாநில அரசுகள் கலந்தாலோசிப்பதற்கான ஒரு சூழ்நிலை உருவாகாமல் உள்ளது. பண, கடன் கொள்கை, நாட்டு வருமானம் குறித்த கொள்கைகளில் மாற்றங்கள், அந்நியச் செலாவணி ஆகிய மூன்றும் பொருளாதார வளர்ச்சியின் நிலைகளை முடிவு செய்கின்றன. இத் துறைகளில் முடிவுகள் எடுக்கையில் மாநில அரசுகள் கலந்தாலோசிக்கப்படுவதில்லை அல்லது அவற்றுக்குத் தகவல் அனுப்பப்படுவதில்லை. பொதுமக்களுக்குத் தெரியுமளவுக்குத்தான் மாநில அரசுகள் அவைபற்றித் தெரிந்து கொண்டுள்ளன. இந்தியக் கூட்டாட்சி முறை ஒருங்கிணைந்து வளர்ச்சி அடைவதற்குக் கடுமையான தடை ஏதேனும் இருக்குமானால், அது மாநிலங்களுக்குரிய பங்கு மறுக்கப்படுவதாகும். தற்போதைய, எதிர்காலத் திட்டங்களைத் தயாரித்து நிறைவேற்றுவதில் மாநிலங்கள் உண்மையான பங்கு வகிக்க வேண்டுமாயின், திட்டமிடும் முறையில் மாநில அரசுகள் அதிக அளவுக்கும் தொடர்ந்து பங்கு கொள்ள வேண்டியது இன்றியமையாதது ஆகும். தேசிய வளர்ச்சிக் கழகத்தில் மாநிலங்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுத்தால் மட்டும் போதாது. திட்டத் தயாரிப்புப் பணியில் மாநிலங்கள் கலந்தாலோசிக்கப்படுவதுடன் திட்டம் தயாரிப்பதில் மாநிலங்கள் உரிய பங்கேற்கச் செய்வதே பொருத்தமானதுமாகும்.

5. மற்றொரு கூறும் உள்ளது. சமூக பொருளாதார முன்னேற்றம் குறித்த நோக்கத்தின் அடிப்படையில் திட்டங்கள் அமைகின்றன. நாட்டின் நான்காம் திட்டத்தில் இவை குறித்து தெளிவாக விளக்கப்படவில்லை. திட்டத்தில், குறிப்பிட்டுள்ள வரையறுத்த குறிக்கோள் அளவுகளை நமது அரசு ஏற்றுக்கொள்ள



V 211, 31 1969
31 N70.2231
61468

வில்லை. நமது மக்களின் வாழ்க்கைத் தரத்தை மாற்றுவதற்கு திட்ட அளவு போதுமானதல்ல என்பதே நம் கருத்து. தற்போதைய திட்டத்தின் மூலமும், முதலீட்டு அளவுகளின் மூலமும் 1980-ம் ஆண்டுக்குள் நமது மக்களில் 20 சத விதத்தினரை வறியர்களாக ஆக்கிவிடும் என்பதை நாட்டு வரைவுத் திட்டமே ஒப்புக்கொள்கிறது. 1980-ம் ஆண்டுக்குள் ஓரளவேனும் மேம்பாடுகளைக் கொண்டுவர இயலாத ஒரு திட்டத்தை ஒரு திட்டம் என்று சொல்வது பொருத்தமன்று. மத்திய அரசும், நாடு முழுவதும் சேர்ந்து திட்டக் குறிக்கோள் அளவுகளையும், வேண்டும் திட்டங்களையும், கொள்கைகளையும் நாட்டில் மாறுபட்ட சூழலுக்கு ஏற்ப மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நாம் கருதுகின்றோம்.

6. மகத்தான ஒரு வளர்ச்சியில் தனியார் துறை முக்கியமான பங்கு வகிக்க வேண்டும் என்பதே நம் கருத்து ஆகும். அரசு என்ற முறையில், அதிகாரங்கள் ஓரிடத்தில் குவிவதையும் ஏகபோக உரிமைகளின் விளைவாக ஏற்படும் திறமையின்மையையும் நாம் எதிர்க்கிறோம். அதேசமயத்தில் கலப்புப் பொருளாதாரத்தில் தனியார் தொழில் முனைவர்களின் பங்கை நாம் ஒப்புக் கொள்ளுகிறோம். தொழில்களில், முதலீடு செய்ய முனையும் ஏராளமானவர்களை ஊக்குவிப்பதன் மூலம் பொருளாதார நிலை முன்னேறும் என்பதில் ஐயமில்லை. இம் மாநிலத்தில் புதிய தொழில் பிரிவுகளை நிறுவுவதில் தனியார் துறைத் தொழில் முனைவர்களுக்கு ஊக்கத்தையும் ஆதரவையும் அளிக்க நாம் விழைகிறோம். அதே சமயத்தில் பொருளாதார நிலையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது என்னும் பொதுவான கொள்கையை நாம் கைவிட்டுவிடவில்லை. தனியார் துறைக்கு ஊக்கமளிக்க வேண்டியதன் அவசியம் பற்றி நாம் அறிவோம். குறிப்பாக, பிற மாநிலங்களில் மும்முரமாகத் தனியார் துறைக்கு ஊக்கமளித்து வருகையில் ஏற்பட்டுள்ள போட்டி நிலைமையைக் கருத்தில் கொண்டு, இத்தகைய ஊக்கமளிப்பது அவசியமாகிறது. எனவே நாம் ஊக்கமளிக்கும் வகையில் ஒரு பட்டியலை வைத்துள்ளோம். மின் சக்தி இல்லாமல் இருப்பதைக் காட்டிலும் அதிகக் கட்டண வீதம் உள்ள மின் சக்தி கிட்டுவது சாலச் சிறந்தது என்று நாம் நம்புகிறோம். மின் சக்தி பயன்படுத்த விழையும் தொழில் உரிமையாளர்களுக்கு இந்த நோக்குடனேயே போதுமான மின் சக்தி வழங்க நாம் முனைந்துள்ளோம். தனியார் துறைக்கென்று ஒதுக்கப்பட்ட தொழில்கள் பெரும்பாலானவற்றைப் பொறுத்த வரையில் அரசு இணைப்புப் பாலமாக அமைந்து தனியார் துறைக்கு அவசியமான ஊக்கமளிக்க வேண்டும் என்று நாம் கருதுகிறோம்.

7. மத்திய பொதுத் துறையைப் பற்றியே இம் மாநில அரசு பெரும் கவலையுறுகிறது. மத்திய பொதுத் துறையில் செய்யப்படும் முதலீடுகள் பொருளாதார, தொழில் முன்னேற்றத்திற்கு அடிப்படையாய் அமையும் முக்கியத் தேவைகளாகும். கடந்த

மூன்று திட்டங்களில் இத் துறையில் பொதுத் துறையில் செய்யப்படும் முதலீடுகள் பொருளாதார, தொழில் முன்னேற்றத்திற்கு அடிப்படையாய் அமையும் முக்கியத் தேவைகளாகும். கடந்த மூன்று திட்டங்களில் இத் துறையில் சில முயற்சிகள் செய்யப்பட்டன. ஆனால், இத் திட்டத்தைப் பொறுத்த வரையில் புதிய முயற்சி எதுவும் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்டு இருக்க வேண்டிய, ஆனால் இதுவரையில் மேற்கொள்ளப்படாத திட்டங்களில் முக்கியமானவை சேலம் உருக்குத் தொழிற்சாலை, சேது சமுத்திரம் திட்டம், நெய்வேலியில் இரண்டாவது சுரங்கத்தை வெட்டுதல், மணலியைத் தலைமை இடமாகக் கொண்டு பாறை எண்ணெய்-இரசாயனத் தொழிற்சாலை ஒன்றை அமைத்தல் ஆகியவை ஆகும். இத் திட்டங்கள் முழுவதும் நிறைவேற்றப்பட வேண்டும் என்றால் 10 ஆண்டுகள் பிடிக்கும். எனவே, இவை குறித்து நடப்புத் திட்டத்தில் தொடக்க முயற்சி செய்யப்பட்டாலன்றி, இவை நிறைவேறுவதற்கு நெடுங்காலம் பிடிக்கும். இது குறித்து மாநில அரசு மத்திய அரசுக்கு மீண்டும், மீண்டும் எழுதியுள்ளது. இது குறித்த நமது நிலையை இம் மன்றம் ஏற்று அதற்கு ஆதரவு அளிக்குமென்று நான் நம்புகிறேன்.

8. இச் சிக்கல்களைப் பற்றி நாம் பேசும்போதெல்லாம் நமது நிதி வளக்குறைவு பெரும் இடர்ப்பாடாக உள்ளது. நமது நாட்டின் தொழில் வளம் பற்றி விளைந்து கொடுக்காத வருங்காலம் பற்றிய நம்பிக்கை இராத நோக்குடனேயே நிலைமை ஆய்வு செய்யப்படுகிறது. வருங்காலத்தைப்பற்றி எண்ணுகையில் புள்ளி விவரங்களைத் தொகுத்து, அதன் அடிப்படையில் கணக்குப் போடுகிறார்கள். இத்தகைய கணக்கின் மூலம் நாட்டின் வளர்ச்சிக்கு வழிகோல முடியாது. வளர்ச்சியிலிருந்து நிதி வாயில்கள் கிடைக்கும். நிதி வளம் வளர்ச்சியின் வாயிலாக அதன் உற்பத்திப் பொருளாகவும் உள்ளது என்பது பெரும்பாலும் உணரப்படுவதில்லை. நம்மிடம் உள்ள நிதிவாயில்கள் பற்றாக்குறையாக இருந்து நமக்கு உடனடியாக நிதிவாயில்களை அதிகப்படுத்த முடியாத காரணத்தினால் வளர்ச்சித் திட்டங்களுக்கு அணை போட்டு அரசுக்கு வந்து சேரக்கூடிய நிதிவாயில்களை நாம் மேற்கொண்டும் குறைக்கிறோம். கடந்த சில ஆண்டுகளின் அனுபவத்தில் இருந்து நாம் இதைத் தெரிந்து கொண்டுள்ளோம். தேசிய நிலையில் திட்டவட்டமான முடிவு எடுக்காதபடியாலும், நம்பிக்கையின்மையாலும் மந்த நிலை மேலும் சீர்கேடு அடைகிறது. தோல்வி மனப்பான்மையை உதறிவிட்டு, கற்பனை வளம் வாய்ந்த திட்டமொன்றை மேற்கொண்டு நாம் துணிந்து செயல்பட வேண்டும். வங்கிகளை நாட்டுடைமையாக்க வேண்டும் என்ற நமது வேண்டுகோள் சீரிய முறையில் பயனளித்துள்ளது. இதன் விளைவாக ஏற்பட்ட உயரிய நம்பிக்கை, சரிவர நிறைவேற்றப்படாத காரணத்தால் அணைந்து போகாதென நாம் நம்புகிறோம். காலஞ்சென்ற நமது மதிப்பிற்குரிய அண்ணா அவர்கள், பொதுத்





துறை நிறுவனங்களைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம், படை ஊற்றத்துக்கு ஊறு நேரா வண்ணம் பாதுகாப்புத் துறையில் சிக்கனம் செய்தல், மத்திய மாநில நிர்வாகத் துறைகளில் "செய்தது செய்தல்" முறையைத் தவிர்த்தல் முதலியவற்றின் அவசியத்தை பன்முறை வலியுறுத்தினார். நமது மிகப் பெரிய பொதுத் துறை நிறுவனங்களை மேற்கொண்டும் சிறந்த முறையில் நிர்வகிப்பதன் மூலம் நாம் மேற்கொண்டும் கணிசமான அளவிற்கு நிதிவாயில்களைத் திரட்ட முடியும் என நாம் கருதுகிறோம். இந்த நிறுவனங்களை நடத்தும் பொறுப்பு சோதனை அடிப்படையில் மாநில அரசிடம் ஒப்படைக்கப்படுமாயின் அவை மேற்கொண்டும் ஆதாயம் தரும் வகையிலும் திறமையாகவும், நடத்தப்படும். நமது படைகளின் திறமையை எள்ளளவும் குறைக்காமல் நமது பாதுகாப்புத் துறையின் செலவில் சிக்கனம் கொண்டு வரப்பட வேண்டும் என்பது நிதிவாயில்களைத் திரட்டுவதற்கான மற்றொரு கருத்துரையாகும். இது கவனமாகவும் அதே சமயத்தில் விரைவாகவும் பரிசீலிக்கப்பட வேண்டும். திட்டத்திற்கான கூடுதல் நிதிவாயில்களைப் பெறுவதில் மத்திய அரசுக்கு உண்மையிலேயே அக்கறை இருக்குமானால், பணியாளர்களிடையே உள்ள செய்ததைச் செய்யும் முறையை அறவே நீக்க வேண்டும் என்ற அவரது மூன்றாவது கருத்தை உடனடியாகச் செயலுக்குக் கொண்டுவர வேண்டும்.

9. தற்போது வகுக்கப்பட்டுள்ள திட்டத்தைவிட, பெரியதொரு திட்டத்தை நமது நாடு மேற்கொள்ள முடியுமென்ற உறுதியான நம்பிக்கை நமக்கு உண்டு. மாநிலங்கள் தற்போது ஒப்புதல் வழங்கியுள்ள திட்டக் குறிக்கோள்களை எய்த முடியும். துணிவுடன் திட்டமிடுவதைவிட கவனமாகக் குறைந்த அளவில் திட்டம் இடுவதில்தான் அதிகம் ஆபத்து உள்ளது என்பதையும் நாம் அறிவோம். வளர்ச்சி தாமதப்படின் வறுமை தாண்டவமாடுகிறது. லட்சக் கணக்கான மக்கள் துயரத்தில் ஆழ்கின்றனர். நல்ல காலம் வருகின்றது என்று நாம் மக்களுக்குப் பல ஆண்டுகளாக உறுதி அளித்து வருகிறோம். அந்நாள் மிகவும் தள்ளிப் போகும் நிலைமையே உருவாகும். இவ்வாறு அணுகும் முறையை தமிழ்நாடு அரசு ஏற்கத் திட்டவட்டமாக மறுக்கிறது. வருங்காலத்திற்காகத் துணிவுடனும், உறுதியுடனும் திட்டமிட வேண்டும் என்னும் கொள்கையையே அது ஆதரிக்கின்றது.

# தமிழ் நாடு சட்டப் பேரவை

---

### சனிக்கிழமை, 1969 ஆகஸ்ட் 23.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்:

*Police protection for fishing boats*

* 84 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state whether Police protection was provided for fishing boats around the shores of Rameswaram, about the 25th April 1968?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ஆம். இராமேஸ்வரம் கடற்கரையோரங்களில் மீன்பிடி படகுகளுக்குக் காவலர் பாதுகாப்பு 21—4—1968 தேதி முதற்கொண்டே அளிக்கப்பட்டது.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** தலைவர் அவர்களே, எதற்காக அந்தப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது? அதற்கான காரணத்தை விவரமாகக் கூற முடியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அங்கிருக்கின்ற படகு உரிமையாளர்களுக்கும் மீன்பிடி தொழிலாளர்களுக்கும் ஏற்பட்ட தகராறின் காரணமாக இந்தப் பாதுகாப்பு தேவைப்பட்டது.

*Dances in hotels in Madras*

* 85 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state whether the Police authorities have permitted 'tonight and every night dance and dine' features in hotels in Madras City?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இல்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** இந்த உணவு விடுதிகளில் இரவு நடனம் சர்வ சாதாரணமாக நடக்கிறதாக அங்கே போய் வருகிறவர்கள் சொல்லுகிறார்கள். "அங்கத்தினர் கோதண்டராமனுக்குத் தெரியுமா? அவர் போய் வந்திருப்பார்" என்று இப்படிச் சொல்லித் தப்பிக்கக் கூடாது. அத்தகைய நடனங்கள் இப்பொழுது அங்கே நடப்பது உண்மை. அது விசேஷமாக அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறதா? அப்படியிருந்தாலும் அந்த அனுமதியை ரத்து செய்ய உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்த நடனங்களுக் அனுமதி அளிக்கப்படுவது என்று இல்லை. 'பப்ளிக் ரிசார் ஆக்ட்' என்ற ஒரு சட்டத்தின்படி, இப்படிப்பட்ட இடங்களி 'காபரே' நடனங்கள் என்ற நடனங்கள் நடத்தலாம். அந் சட்டத்தின்படி அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அதன்படி அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்த நடனங் கள் எப்படி நடைபெறவேண்டும் என்பதற்கு விதிமுறைகள் இருக் கின்றன. அந்த விதிமுறைகளை மீறி அவர்கள் அந்த நடனங்களை நடத்துவார்களானால் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப் பேற்றவுடன், முன்பிருந்ததைவிட அதிகமான விடுதி களில் இதுபோன்ற கவர்ச்சி நடனங்கள் நடத்தப்படுவதாகப் பேசப்படுகிறதே அது உண்மையா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஆக, 'முன்பு இருந்தது' என்பதை கனம் உறுப்பினர் அவர்கள் ஒத்துக்கொண்டதற்காக நன்றி. ஓட்டல்கள் அதிகமாகிவிட்டன. ஆகவே, ஓட்டல் களில் நடனங்களும் அதிகமாகியிருக்கலாம்.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** தலைவர் அவர்களே, ஜப்பான் போன்ற நாடுகளில் இம்மாதிரி இந்த இரவு நடனங்கள் அதிகமாக இருப்ப தால்தான் அதிகமான அளவுக்கு அங்கே டூரிஸ்ட்ஸ் வருவதாகச் சொல்லுகிறார்கள். இம்மாதிரி இரவு நடனங்கள் நடப்பதால் நமது சென்னை மாநிலத்திலும் அதிகமான அளவுக்கு டூரிஸ்ட்ஸ் வருவார்கள் அல்லவா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சுற்றுலா பயணிகள் அதிகம் வரவேண்டும் என்பதற்காக இந்தக் கவர்ச்சியை நாம் பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, சென்னை மவுண்ட் ரோடு பகுதியில் இப்படிப்பட்ட நடனங்கள் நடப்பதாக சாந்தி தியேட்டருக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய சில இடங் களில் ஆபாசமான பட போர்டுகள் தொங்குவதைப் பார்க்கிறோம். அதையும் பார்த்து தடைப்படுத்துவதற்கு போலீசாருக்கு உத்தர விட அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நடனங்கள் பார்த்துத்தான் பல பேர் பாலுணர்ச்சி வயப்படுகிறார்கள். போர்டைப் பார்த்து வரவேண்டிய அவசியம் இல்லை.

**திரு. கே. போஜன் :** முதலமைச்சர் அவர்கள் கூறிய பதிலில் 'காபரே' நடனங்கள் நடத்த சில விதிமுறைகள் இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். அந்த விதிமுறைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சட்டத்தின்படி உரிமை பெற்ற பொதுமக்கள் மனமகிழ் இடங்களிலும் பொதுமக்கள் கூடும் இடங்களிலும் ஆபாசமான நிகழ்ச்சி ஏதும் நடத்தப்படக் கூடாது; அல்லது நடத்த அனுமதிக்கப்படக்கூடாது.



மேற்சொன்ன எந்த இடத்திலும் ஆபாசமாக உடல் தெரியும் படி ஆடைகள் நீக்கப்படும் 'துகிலுரி நடனம்' போன்ற நிகழ்ச்சி கள் நடத்தப்படுவது கண்டிப்பாகத் தடை செய்யப்படுகின்றன.

ஆடையற்ற நிலையில் அல்லது ஒளி ஊடுருவும் அல்லது ஓரளவு ஊடுருவும் ஆடை அல்லது அரைகுறை ஆடையணிந்து ஓரளவு ஆடையற்ற நிலையில் நடன நிகழ்ச்சி நடத்துவதற்கு எவருக்கும் அனுமதி அளிக்கப்படமாட்டாது.

மேற்சொன்ன எந்த இடத்திலும் காம உணர்ச்சியை அல்லது பாலுணர்வைத் தூண்டக்கூடிய வகையில் அமைந்த பாட்டு, உரை நாடோடிப் பாடல், குறிப்புணர்த்தும் அங்க அசைவு ஆகியவை ஏதும் அனுமதிக்கப்பட மாட்டாது.

எந்த ஒரு நிகழ்ச்சியும் குறிப்பிட்ட ஓர் இடத்திற்குள்ளேயே அதாவது மேடை அல்லது அரங்கத்திலேயே நடைபெற வேண்டும் மேற்படி நிகழ்ச்சியில் நடனமாடுபவர் அங்கு வந்துள்ள ஏனை யோருடன் அல்லது பார்வையாளருடன் கலந்து பழகக் கூடாது; அல்லது அவர்களைத் தொட்டுப் பழகக் கூடாது.

இத்தகைய நிகழ்ச்சியில் பங்குகொள்பவர்கள் நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கும்போதே அவர்கள் அணிந்துள்ள எதையும் அல்லது எப்பொருளையும் அல்லது ஆடையில் ஒரு பகுதியை உடலிலிருந்து நீக்கக் கூடாது அல்லது நீக்க அனுமதிக்கப்படக் கூடாது. அவ்வாறு நீக்கியதைப் பிறர் மேல் எறியக் கூடாது.

18 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்கள் இத்தகைய நிகழ்ச்சி எதையும் பார்க்க அனுமதி அளிக்கப்படக்கூடாது.

மேலே குறிப்பிட்ட நிபந்தனைகளில் எதுவேனும் மீறப் பட்டால், சென்னை மாநகர் காவலர் சட்டத்தின் 39-வது பிரிவின் கீழ் அந்த இடங்கள் உடனடியாக மூடப்படுவதற்கு உள்ளா வதுடன் சென்னை மாநகர் காவலர் சட்டத்தின் 40-வது பிரிவின் கீழ் வழக்கும் தொடரப்படக்கூடும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** சென்னை உணவுச்சாலைகளில் இரவு நடனங்கள் என்ற பெயரில் இதுபோன்ற பல ஆபாச நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில விதிமுறைகளைக் கூறினார்கள். அந்த விதிமுறைகளை மீறிய தாக இதுவரை எந்த ஓட்டல் மீதாவது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா ? ஆம் எனில், விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படிப்பட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. விதிமுறைகளை மீறியதாகத் தகவல் வரும்போது காவல் துறையினர் கண்காணிப்புடன் இருந்து அவைகளைக் கவனித்து வருகிறார்கள்.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** தலைவர் அவர்களே, ஓட்டல் களில் இரவு நடனங்கள் நடப்பது பற்றிய விதிகள் அழகாக இருக் கின்றன. அந்த விதிகள் கண்டிப்பாக அமலாக்கப்பட்டால்

நல்லதுதான். இருந்தபோதிலும், நடைமுறையில் அப்படி இல்லாமல் ஆபாசமான நடனங்களே நடைபெற்று வருகின்றன. ஆகவே, தமிழ்நாட்டுப் பண்புக்கு விரோதமான, அன்னிய நாட்டு நாகரிகத்தைப் பரப்பக் கூடிய ஆபாச நடனம் எங்காவது நடைபெற்றால் அதைக் கண்டிப்பாகத் தடைசெய்ய வேண்டும் என்று அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் அம்மையார் அவர்களுடைய மனப்பாங்கில் நான் முழுக்க முழுக்க ஒன்றுபடுகிறேன். மாறுபட்ட கருத்து ஏதும் இல்லை. நம்முடைய நாட்டில் சுற்றுலாக்களை அதிகப்படுத்த வேண்டும். அதன் காரணமாக வெளிநாட்டுக்காரர்கள் அதிகமாக வரவேண்டும் என்று விரும்புகிற காரணத்தால் இப்படிப்பட்ட நடனங்கள் சிற்றுண்டிச் சாலைகளில் இருக்கவேண்டும் என்ற வாதமும் ஒரு புறத்திலே சொல்லப்படுகிறது. ஆனால், அந்தந்த நாட்டுக் கலாசாரங்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்பதில் அந்தந்த நாடுகளுக்கு இருக்கும் அக்கறையைப் போல், நம்முடைய தமிழ்நாட்டுக் கலாசாரம், பண்பு, பண்பாடு இவைகளெல்லாம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதில் தமிழ்நாட்டு அரசுக்கு அதிக அக்கறை இருக்கிறது. காவல் துறையினர் இப்பொழுது கண்காணித்து வருகிறார்கள். அவர்கள் மாறு வேடங்களிலோ அல்லது போலீஸ் உடை அல்லாத வேறு உடையிலோ சென்று, அங்கு எப்படி நடனம் நடைபெறுகிறது என்று கவனிக்கிறார்கள். ஒரு வேளை அதிலேயே ஆழ்ந்து விடுகிறார்களோ என்னவோ தெரியவில்லை. இனிமேல் அது பற்றியும் கவனிக்கப்படும்.

**திரு. சு. துரைசாமி :** மத்திய சர்க்காரின் தலைநகரமாகிய டில்லி நகரில் உள்ள ஓட்டல்களில் சென்னை நகரத்தில் நடைபெறுவதாகச் சொல்லப்படுகிற ஆபாச நடனங்களைவிட ஆபாசமான—உடையே இல்லாமல் கூட—நடனங்கள் நடைபெறுவது இந்த அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்பொழுது பேசப்படுவது, தமிழ்நாட்டுக் கலாசாரத்தைப்பற்றி.

**திரு. கே. என். குமாரசாமி :** இப்படிப்பட்ட நடனங்கள் அனுமதிக்கப்படும்போது சட்டத்தில் உள்ள வரையறைகளுக்குட்பட்டு நடைபெற வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆனால், சட்டத்தை அமல்படுத்துவதாகத் தெரியவில்லை. அப்படிப்பட்ட நடவடிக்கைகள் இதுவரைக்கும் இல்லை. சினிமாக்களில் கூட ஆபாசமான படங்கள் வந்துகொண்டுதான் இருக்கின்றன. அதுமாதிரி இதற்கும் சட்டம் இயற்றியிருந்தாலும், இன்னும் அப்படித் தான் நடக்கும் என்ற கருத்து எனக்கு இருக்கிறது. அதுபற்றி முதல் அமைச்சர் அவர்கள் என்ன கருதுகிறார்கள் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதுபற்றி அம்மையார் அவர்களுடைய கேள்விக்கு நான் விளக்கமாகப் பதில் கூறியிருக்கிறேன்.



**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** தலைவர் அவர்களே, மேற்கு நாட்டு நாகரிகத்தைப் பின்பற்றி இம்மாதிரி உணவு விடுதிகளில் கேளிக்கைகளுக்கு சிறு அளவு கூட இடம் கொடுத்துவிட்டால் நம் நாட்டு மக்களுடைய பண்பாடும், நல்ல மனோ நிலையும் கெட்டுப் போகும் என்பதை அறிந்து இந்த அரசாங்கம் கண்டிப்பாக இதைத் தடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இவை 'காபரே' நடனங்கள் என்ற அளவில்தான் அனுமதிக்கப்படுகின்றன. காப்ரா நடனங்கள் ஆகிவிடுமானால் நிச்சயமாகத் தடுக்கப்படும்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, இப்பொழுதெல்லாம் வரும் சினிமாப் படங்களில் ஆபாச நடனங்கள் உள்ள காட்சிகள் பல இடம்பெறுகின்றன. அந்த சினிமாப் படங்களைப் பார்த்துத்தான் மக்கள் தங்களுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்வது விதிமுறை. ஆகவே, மாநில அரசு, மத்திய அரசுக்கு, இப்படிப்பட்ட சினிமாப் படங்களில் நடன நிகழ்ச்சிகளையே விட்டு விடும்படி ஆலோசனை கூறுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** படங்களைப் பார்த்து வாழ்க்கையை அமைத்துக் கொள்வதில் கனம் உறுப்பினர் அவர்கள் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** இரவு நடனங்கள் பற்றிய கேள்விகள் இந்த அவையில் முன்பொரு முறை வந்து, அப்பொழுது சர்க்கார் இதுபற்றி போலீசாரிடம் விட்டு நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார்கள். அந்த உறுதிக்கும் பிறகு, என்ன காரணத்தினாலோ அந்த நடனங்கள் இன்னும் அதிக அளவில் ஆபாசமாக நடைபெற்று வருகின்றன. இதனைத் தடுப்பதற்கு பழைய போலீசாருக்குப் பதிலாக வேறு போலீசாரைப் போட்டு, குழு ஒன்று அமைக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்த உண்மையை நேரில் கண்டு கனம் உறுப்பினர் சொல்லுகிற காரணத்தால் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆபாச நடனங்கள் ஆடுவது எப்படி தடைப்படுத்தப்பட வேண்டிய ஒன்றோ, அது எப்படி குற்றத்திற்குரியதொன்றோ அதேபோல் அதைக் காண்பவர்களும் குற்றத்திற்குரியவர் என்ற அடிப்படையில் சட்டத்தைத் திருத்தவும் ஆபாச நடனங்கள் ஆடுகிறவர்கள் மீது நடவடிக்கைகள் எடுப்பதுபோன்று அதைப் பார்த்து ஆதரவு கொடுப்போர் மீதும் நடவடிக்கைகள் எடுப்பதற்குரிய சட்டத்தை அரசு இயற்றுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படி சட்டங்கள் செய்ய முடியாது. அதுபோன்ற சட்டத்தைச் செய்வதும் முறையாக இருக்காது.

*திரு. வி. கே. கோதண்டராமன் :* காவல் துறையினர் இதைக் கண்காணித்து வருகிறார்கள் என்றும், அதைக் கண்காணிக்கப் போகக்கூடிய நேரத்தில் சில வேளைகளில் அவர்கள் மெய்மறந்து விடுகிறார்கள் என்ற உண்மையையும் முதல் அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். ஆகவே இவற்றைக் கண்டுபிடித்து நடவடிக்கைகள் எடுக்கக் கூடிய அளவிற்கு காவல் துறையினரை மட்டும் நம்பாமல் நகரசபைத் தலைவர்களுக்கும் மன்ற உறுப்பினர்களுக்கும் கூட அந்த அதிகாரத்தை கொடுக்க உத்தேசமுண்டா ?

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* திரு. கோதண்டராமன் அவர்கள் அங்கு செல்லவேண்டுமென்று முயற்சிக்கிறார் என்பது புரிகிறது. அதற்கு சட்டசபை ரீதியான அங்கீகாரத்தையும் கோருகிறார் என்பதும் புரிகிறது.

THIRU K. VINAYAKAM : Sir, to put a serious question, may I know whether the Hon. Chief Minister has encouraged this kind of night dances of a nude nature and has he ever witnessed one such dance as to get experience about it? I also want to know whether his Government also support it or not.

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* அரசு இதை அனுமதிக்கவில்லை. இந்த நடனங்கள் தமிழ்நாடு கலாசாரத்தைப் பாதிக்கக் கூடியவை என்பதை விநாயகம் அவர்கள் இங்கு வருவதற்கு முன்பே நான் இங்கு சொன்னேன்.

*திரு. ரா. ராமச்சந்திர துரை :* அரசாங்கத்தால் விதிக்கப்பட்டிருக்கிற இந்த விதிமுறைகளுக்கு மாறாகத்தான் அந்த நடனங்கள் நடப்பதாகக் கேள்விப்படுகிறேன். எனவே, அதற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுப்பதற்கு அரசு முன்வருமா ? அது போல் சினிமா விளம்பரங்களும் போடுகிறார்கள் அல்லவா ? அந்த விளம்பரங்களில் கூட அரை ஆடைகள் உடுத்தியுள்ள ஆபாசமான விளம்பரங்களைப் பார்க்கிறோம். ஆகவே, அதன் மீது நடவடிக்கைகள் எடுக்க அரசு முன்வருமா ?

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* சிற்றுண்டி விடுதிகளில் நடக்கிற நடனங்களில் இன்றிருக்கிற விதிமுறைகள் எங்கு மீறப்படுகின்றனவோ அங்கு இன்னும் தீவிரமாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் இந்த சட்டசபையில் கேட்கப்பட்டுள்ள இந்தக் கேள்விகளின் அடிப்படையில் போலீசார் வெகு தீவிரமாக அதைக் கவனிப்பார்கள் என்றும் நான் நம்புகிறேன். ஆபாசச் சுவரொட்டிகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள்.

ஆபாசச் சுவரொட்டிகளில் எது ஆபாசம் என்று நிர்ணயிப்பது தான் சங்கடமாக இருக்கிறது. அதற்காகப் போடப்பட்டிருக்கிற குழு அந்த வேலையைக் கவனித்து வருகிறது. என்றாலும், இவை ஆபாசம் என்று குறிப்பிடும்போது அது சுவரொட்டிகளில் மட்டுமல்ல, அப்படிப்பட்ட சிற்பங்கள் கூட இருக்கின்றன, ஆலயங்களில் கூட அரை ஆடை உடுத்திய நிலையிலுள்ள சிற்பங்கள் இருக்





கின்றனவே என்று அதைத் தங்களுக்கு ஆதரவாகக் காட்டி வாதாடுகிறார்கள். இது ஒரு சிக்கலான பிரச்னையாக இருக்கிறது. இருந்தாலும் கூடுமான வரையிலும் சாலையோரங்களில் மக்களைக் கவரக் கூடியமுறையில் உள்ள சுவரொட்டிகளைப் பார்த்துக் கொண்டு சாலைகளில் நடப்பவர்கள் விபத்துக்களுக்கு உள்ளாவதைத் தடுக்கிற வகையில் நாம் சில விதிமுறைகளைக் கையாளலாம் என்று கருதுகிறோம்.

*Market around Mada Streets in Mylapore*

* 86 Q.—THIRU N. S. V. CHIHAN :- Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether an unauthorised market has sprung up around the Mada Streets in Mylapore, Madras, in recent times; and

(*b*) the steps taken by the Police to remove the obstruction to the pedestrian traffic ?

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* (அ) மயிலை மாடவீதிகளைச் சுற்றி அனுமதிபெறாத அங்காடிகள் இப்பொழுது ஏற்பட்டவையல்ல. ஆனால், பல ஆண்டுகளாகவே அவை அங்கு இருந்து வருகின்றன. பழ வியாபாரிகளும், காய்கறி வியாபாரிகளும், மயிலைத் தெற்கு மாடவீதியில் தங்கள் கடைகளைப் பரப்பி வைத்துக் கொண்டு நடந்து செல்வோர் போக்குவரத்துக்குத் தடையாக இருக்கின்றனர்.

(இ) காவலர் குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை நடவடிக்கை எடுக்கின்றனர். ஒவ்வொரு நாளும் காவலர்கள் அங்கு இருக்க முடியாததால் காவலர்கள் இல்லாதபோது இந்த வியாபாரிகள் தங்களுடைய வியாபாரத்தை நடத்துகிறார்கள். தெற்கு மாடவீதியில் மட்டும் போக்குவரத்திற்கு இடையூறு விளைவித்ததற்காக மயிலையிலுள்ள காவலர்கள் 1967-ம் ஆண்டில் 124 நேர்வுகளிலும், 1968-ம் ஆண்டில் 575 நேர்வுகளிலும் வழக்குகள் பதிவு செய்துள்ளனர். காய்கறி அங்காடி மட்டுமே வைத்துக் கொள்ளப் படுவதற்காக கோயில் நிலமொன்று கேட்கப்பட்டது. ஆனால் அவ்வாறு பயன்படுத்துவதற்கு கோயில் அதிகாரிகள் மறுத்து விட்டனர். எனவே, புதிய அங்காடி ஏற்படுத்துவதில் மேற்கொண்டு எதுவும் செய்வதற்கில்லை. அவ்வப்போது சோதனை செய்வதன் மூலம் இந்தத் தடைகள் அகற்றப்படுமாறு காவலர்கள் பார்த்துக் கொள்வர்.

*திரு. என். எஸ். வி. சித்தன் :* இதுபோன்ற கடைகளை ஏற்படுத்துவதால் பொதுவாக அங்கு போய் வருபவர்களுக்கும், இறை வழிபாட்டுக்குச் செல்பவர்களுக்கும் அதிக இடைஞ்சல் ஏற்படுகிறது. ஆகவே, ஒரு வழிப்பாதையாக அதை அரசாங்கம் அறிவித்து அங்கு செல்பவர்களுக்கு வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்யுமா ? இனிமேல் இதுமாதிரி ஏற்படாத அளவிற்கு காவல்துறையினர் கண்காணிப்போடு இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஒருவழிப் பாதையாக பாதை அமைப்பதால் காய்கறிகள் விற்று அன்றாடம் வாழ்க்கை நடத்தும் ஏழை எளிய மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு விடுவார்கள். ஆகவே சிறிது மனிதாபிமானத்தோடு கவனிக்க வேண்டிய பிரச்னையாகும் இது. போக்குவரத்திற்கு இடையூறாக வைக்கப்பட்டால் காவல் துறையினர் தலையிடுவது முறையாக இருக்கும். இப்போது கூட அடிக்கடி பாதிக்கப்படுகிற ஏழை எளிய காய்கறி வியாபாரிகள் அமைச்சர்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் சந்தித்து தங்கள் குறைகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதை ஒரு மனிதாபிமான பிரச்னையாக நோக்கவேண்டியவர்களாக இருக்கிறோம்.

**திரு. கே. விநாயகம் :** மைலாப்பூரில் மட்டும் இந்த நடைபாதை மார்க்கெட் வைத்திருப்பதாகக் குறை சொல்கிறார்கள். அதோடு மாம்பலம் போன்ற இடங்களில் எல்லாம் இப்படிப்பட்ட அங்காடிகளை பரப்பிவிட்டு போலீஸார் அதைத் தடுக்காமல் பார்த்துக் கொள்வதற்கு கலைஞர் கருணாநிதி மார்க்கெட், நெடுஞ்செழியன் மார்க்கெட் என்றெல்லாம் போட்டு அங்கு போலீஸ்காரர்கள் வந்து நடவடிக்கைகள் எடுக்கமுடியாத அளவிற்கு அந்த வியாபாரிகள் செய்து வருகிறார்கள். அந்தக் கட்சிக்காரர்களும் அதைப் பார்த்துக்கொண்டு ஒன்றும் செய்யமுடியாத நிலையில் செயலற்று இருக்கிறார்கள். இது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் சரி, அரசியல் வாதிகளின் பெயர்களைப் போட்டுக் கொண்டு அதிகாரிகளை மிரட்டக் கூடாது என்று உத்தரவு பிறப்பிப்பார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தியாகராய நகரில் இருந்த கடைகள் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருந்ததை முன்னிட்டு புகைவண்டி நிலையத்தின் அருகாமையில் உள்ள கடைகளை அகற்றுவதற்காக மாநகர ஆட்சி மன்றம் முயன்றபோது அதை எதிர்த்துப் போராட்டம் நடத்தியவர் அந்தப் பகுதியிலுள்ள ஒரு பெரும் காங்கிரஸ் தலைவர் என்பதை விநாயகம் அவர்களுக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். பெயர்களை வைத்துக் கொண்டு தப்பித்துக் கொள்ளலாம் என்று எண்ணுகிறார்கள் என்று சொன்னார்கள். அவர்களுக்கு நான் ஒன்று ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அண்மையில் மாநகராட்சி மன்றம் பெரம்பூருக்கு அருகாமையில் உள்ள ஒரு இடத்தில் கருணாநிதி நகர், காமராஜ நகர் என்றெல்லாம் பெயர் வைத்திருந்த பல குடிசைகளை இரண்டு வாரங்களுக்கு முன்பு இரண்டையும் சேர்த்து பிரித்திருக்கிறார்கள் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**திரு. என். வரதராஜன் :** நடைபாதைகளில் இருக்கும் அங்காடிகள் போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கின்றன, விபத்துக்கள் ஏற்படுவதற்கு காரணமாக இருக்கின்றன. ஒரு பக்கத்தில் போலீசார் அத்துமீறுகிறார்கள் என்ற புகாரும் இன்னொரு பக்கத்தில் அங்காடிகள் வைத்திருப்பவர்கள் அத்து மீறுகிறார்கள் என்ற புகாரும் ஏராளமாக எழுந்துகொண்டிருக்கின்றன. ஆகவே





நகரசபை உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள், போலீஸ் அதிகாரிகள் இவர்களைக் கொண்டதொரு குழுவை அமைத்து ஆங்காங்கு இவற்றை ஒழுங்குபடுத்துவதற்கு ஏதாவது ஒரு முயற்சியை அரசு மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நல்ல யோசனை. இதைப் பற்றி அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** இந்த பாதையோரங்களில் உள்ள காய்கறிக் கடைகள் பொறுத்தவரையில் அதன் பின்னால் மனிதாபிமான பிரச்னை ஒருபுறமிருக்க அங்கு சுகாதாரக் கேடான நிகழ்ச்சிகள் நிறைய நடைபெறுகின்றன. சமீபத்தில் ஆனந்த விகடனில் கூட ஒரு கட்டுரை எழுதப்பட்டிருந்தது. குருவிக்காரர்கள், பிச்சைக்காரர்கள், குஷ்டரோகிகள் இவர்களெல்லாம் அங்கு அதிகமாக நடமாடுகிற நிலையில் சுகாதாரக் கேடுகள் நேரிடுகிறது, அவற்றைப் பற்றிய படங்களும் அதில் வெளி வந்திருந்தன. ஆகவே அப்படிப்பட்ட சுகாதாரக் கேடுகளை அகற்றுவதற்கு உரிய முறையில் அவசர நடவடிக்கைகள் எடுத்து கடைகள் மட்டுமாவது இருக்கிற அளவில் ஆவன செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சுகாதாரத்தைப் பாதிக்காமலும், போக்குவரத்துக்கு இடைஞ்சல் இல்லாமலும் அந்தக் கடைகள் இருப்பதுபற்றி அரசு அவ்வளவாக கவலைப்படவில்லை. அவைகளுக்கு இடைஞ்சல் தருகிற விதத்தில் அந்தக் கடைகள் அமையுமானால் அதில் காவல்துறையினர் தலையிடுவது சரி என்று அரசு கருதுகிறது. பத்திரிகைகள் பற்றிச் சொன்னார்கள். சுகாதார நிலைக்கு கேடாக இருக்கின்றன என்று அவற்றை அகற்றும் நேரத்தில் அதையும் படம் பிடித்துப் போட்டு ஐயையோ இவைகளையெல்லாம் அகற்றுகிறார்களே என்று எழுதுவதும் அந்தப் பத்திரிகைகள் தான்.

**திரு. மா. பா. சாரதி :** நடைபாதைகளில் உள்ள கடைகள் அல்லது குடிசைகள் இவைகளை அகற்றுவதைப்போல் நடைபாதைக் கோவில்களையும் அகற்றுவதற்கு இந்த அரசு முற்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கேள்வி காய்கறிக் கடைகளைப் பற்றியது. கோவில்களைப் பற்றியதல்ல.

**திரு. எம். பூபதி :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கடைகள் வைத்திருக்கிற ஏழை தொழிலாளர்களைப் பாதுகாக்கிற முறையில் கோவில் அதிகாரிகளைச் சந்தித்து முயற்சி செய்ததாகக் கூறினார்கள். மீண்டும் அப்படி முயற்சி செய்து புதுக் கடைகளை உருவாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அறநிலைய அமைச்சர் அவர்கள் அந்த நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

## முன்னாள் தேசிய படையினருக்கு உதவிப் பணம்

*87 வினா.—திரு. கரு. சிமைச்சாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திய தேசிய ராணுவ ( I.N.A. ) படையில் பணியாற்றியவர்களுக்கு தமிழக அரசு உதவிப்பணம் கொடுக்க முடிவு செய்துள்ளதா ?

(இ) ஆம் என்றால், விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) தகுதியுள்ள விடுதலைப் போராட்ட வீரர்களுக்குச் சில நிபந்தனைகளுக்குட்பட்டு, திங்கள் ஒன்றுக்கு ரூ. 50 வீதம் உதவித் தொகை கொடுக்கும் திட்டம் ஒன்றை 1—10—1966-லிருந்து அரசு செயலுக்குக் கொண்டு வந்தது. அதன்பிறகு, முன்னாள் இந்திய தேசியப்படையினருக்கும் கீழ்க்கண்ட நிபந்தனைக்குக்குட்பட்டு, 1966 நவம்பரில் அரசு இந்த திட்டத்தை நீட்டித்துள்ளது :—

(1) உதவித்தொகை பெற விண்ணப்பம் செய்யும் முன்னாள் இந்திய தேசியப் படையைச் சேர்ந்த ஒருவர், தாம் இந்திய தேசியப்படையில் பணியாற்றியதற்கான அத்தாட்சிப்பத்திரம் ஒன்றை டில்லியிலுள்ள அனைத்து இந்தியத் தேசியப்படை விசாரணை-உதவிக்குழுவிடமிருந்து வாங்கித் தரவேண்டும்.

(2) முன்னாள் இந்திய தேசியப் படையைச் சேர்ந்த ஒருவருக்கு அவருடைய உறவினர்களிடமிருந்து கிடைக்கும் உதவி உட்பட, எல்லா வழிகளிலும் கிடைக்கும் வருமானம் திங்கள் ஒன்றுக்கு ரூ. 100-க்கு மேற்படக் கூடாது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, பெரியார் ராமசாமி அவர்களின் கருஞ்சட்டைப் படையில் பணியாற்றியவர்களுக்கும் உதவிப்பணம் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இது, விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்டவர்களைப்பற்றிய விஷயம்.

THIRU B. VENKATASWAMY: May I know from the Hon. Minister how many such sufferers are being given pension under this I.N.A. scheme ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** 1876.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, அப்படி தமிழ் நாட்டிலே எத்தனை பேர்கள் ஐ.என்.ஏ, இயக்கத்தை சேர்ந்தவர்கள் பென்ஷன் பயனை அடைந்துள்ளார்கள் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவர்களுடைய கேள்விக்குப் பதில் சொன்னேன். 1,876 பேர்கள்.





**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், மத்திய சர்க்காரிலேயிருந்து அத்தாட்சி பெறுவது அவ்வளவு லேசான காரியம் இல்லை. ஆகவே, அவர்களுடைய அசோசியேஷன் இருக்கிறது. அந்த அசோசியேஷனிலிருந்து அத்தாட்சிப் பத்திரம் கொடுத்தால் போதாதா ? 100 என்பதை 200 என்னும் அளவுக்கு ஆக்கும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவர்கள் மிகவும் வலிமை வாய்ந்த குழு ஒன்றினை அமைத்திருக்கிறார்கள். அங்கிருந்து பெறுவது சுலபம். 100-ஐ 200-ஆக ஆக்குவது மத்திய அரசு செய்யும் உதவியைப் பொறுத்தது.

**திரு. என். மருதாசலம் :** தலைவரவர்களே, விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்ட தியாகிகள் விண்ணப்பம் செய்தும், வந்து விசாரணை செய்தும் இன்னும் பலபேர்களுக்கு தியாகிகள் நிவாரணம் கொடுக்கவில்லை. அதைப்பற்றி அரசாங்கம் யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்த 2¼ வருஷத்திலே அந்தத் தியாகிகள் 3,948 பேர்களுக்கு அந்த உதவிப்பணம் தரப்பட்டிருக்கிறது. இது ஒன்றும் குறைந்த தொகை அல்ல.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவரவர்களே, தேசியப்படையில் பணியாற்றியவர்களுக்குக் கொடுக்கும் உதவித் தொகையை நமது மாநில சர்க்கார் மட்டும்தான் கொடுக்கிறதா ? இதற்கு மானியமாக இந்திய சர்க்கார் ஏதாவது கொடுக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மத்திய அரசிடமிருந்தும் ஒரு விகிதம் வருகிறது.

**திரு. ஏ. எம். ராஜா :** தலைவரவர்களே, இந்திய தேசியப் படையிலே பணியாற்றியவர்கள் 1,800 பேர்களுக்கு உதவிப்பணம் கொடுப்பதாக முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த 1,800 பேர்களும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களா ? அல்லது மற்ற மாநிலத்தைச் சேர்ந்தவர்களும் இந்த உதவித் தொகையை நமது மாநிலத்திலிருந்து பெறுகிறார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்தான் பெரும்பாலும் இருக்கிறார்கள். வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்களின் தொகை குறைவாக இருக்கலாம். ஆனால் அந்தக் கணக்கு என்னிடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள் 88, 89, 90 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

[1969 ஆகஸ்ட் 23

## குறைந்த விலையில் பால் விநியோகம்

*91 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு உணவு, வணிக வரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை, திருப்பூர் போன்ற நகரங்களில் குறைந்த விலைக்கு நல்ல பால் தரும் திட்டத்தை விரிவுபடுத்தும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, கோவை, திருப்பூர் போன்ற நகரங்களில் ஏராளமான தொழிலாளர்கள் குறைந்த வருமானத்தோடு வாழ்கிறார்கள். அவர்களுக்கு இந்தக் குறைந்த விலையிலே நாம் சத்துள்ள பால் கொடுத்தால் அவர்கள் நல்ல உடல் வளத்தோடு பாடுபட வசதியாக இருக்கும். அதனால் நாட்டின் உற்பத்திக்கும் பயன்படும். ஆகவே, அமைச்சரவர்கள், சென்னை, மதுரைக்குக் கொடுப்பதைப்போல், கோவை, திருப்பூர் நகரங்களுக்கும் குறைந்த விலையில் பால் கொடுக்க விரைவில் நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மதுரையிலே 'யுனிசெஃப்' ஆதரவோடு நாம் குறைந்த விலையில் கொடுக்க ஒத்துக் கொண்டிருக்கிறோம். மற்ற இடங்களில் விரிவுபடுத்தத் தற்சமயம் எதுவும் திட்டமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : இதுபோன்று குறைந்த விலையில் பால் கொடுக்கும்பொழுது அந்தப் பாலின் தரம் நன்றாகயில்லை என்றும், அண்மையிலே சென்னையிலே கொடுக்கப்பட்ட பால் மிகவும் கெட்டுவிட்டது என்று சென்னை பொது மருத்துவ மனையிலேகூட அதை வாங்க மறுத்துவிட்டார்கள். மாதவரம் பால் சொஸைட்டியில் வழங்கப்படும் பாலில் புழுக்கள் இருந்ததாகச் செய்திகள் வந்துள்ளன. அத்தகைய புகார்கள் வந்தனவா ? அதன் மீது ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டதா ? இனிமேல் அப்படி நடக்காமல் இருப்பதற்கு முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இரண்டு, மூன்று கேள்விகளை ஒன்றாகச் சேர்த்துக் கேட்டிருக்கிறார்கள். பால் பவுடர் கொஞ்சம் பழைய பவுடராகயிருந்த காரணத்தால் சென்ற வாரம் வரையில் பாலில் கொஞ்சம் வாசனை வீசியது என்று பால் பண்ணையிலிருந்த அதிகாரிகளே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்த வாரம் முதற்கொண்டு நல்ல பால் பவுடர் வந்து விட்டதால் டோன்ட் மில்க்கில் அந்த நிலையில்லை. புழுக்கள் இருந்தன என்று சொல்வது சரியல்ல. பாலை வாங்கிக்கொண்டு போகின்றவர்கள் புட்டியைக் கழுவாமல் மறுநாள் கொண்டுவந்து



1969 ஆகஸ்ட் 23]

கொடுக்கிறார்கள். அதிலே ஒட்டிக்கொண்டிருக்கும் பால் அப்படியே நின்றுவிடுகிறது. புட்டியைக் கழுவும்பொழுது சிலவேளைகளில் அவைகள் தப்பிவிடுவதால் நிறம் மாறுகிறது. அதைப் புழுக்கள் என்று சொல்லுகிறார்கள். அது சரியல்ல. நான் பொதுமக்களை இந்த நேரத்தில் வேண்டிக் கொள்வது, பால் புட்டியை வாங்கிச் செல்லுபவர்கள் வீட்டிலே பாலைக் கொட்டியதற்குப் பிறகு, புட்டியைச் சுத்தம் செய்தாவது வைக்க வேண்டும், அவ்வாறு செய்து புட்டியை ஒப்படைக்க வேண்டுமென்று பணிவன்போடு வேண்டிக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது, மதுரை நகரத்திலே 'யுனிசெஃப்' உதவியோடு வழங்கப்போவதாகச் சொன்னார்கள். அதேமாதிரி கோவை, திருப்பூர் நகரங்களுக்கும் அவர்கள் உதவியைக் கேட்டுக்கொண்டு அளிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கேட்டுப் பார்க்கலாம். அவர்கள் உதவினால் கட்டாயம் தந்துவிடலாம்.

## *Pandiyan Express*

*92 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(a) whether the Railway Ministry has consulted the State Government on the running of the Pandiyan Express in this State; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இந்த பாண்டியன் எக்ஸ்பிரஸ் விடுவதால் திருநெல்வேலி எக்ஸ்பிரஸின் நேரம் மாற்றப்பட்டிருக்கிறதா ? அதனால் திருநெல்வேலி எச்ஸ்பிரஸில் வருபவர்களுக்கு அசௌகரியம் இருக்கிறது என்று ஏதாவது புகார் வந்திருக்கிறதா ? இரண்டாவது, திருநெல்வேலியானது திருநெல்வேலி மாவட்டத்திற்குத் தலைநகரமாகவும், குமரி மாவட்டத்திற்கு அருகில் இருப்பதாலும், திருநெல்வேலி தெற்குக் கோடியில் இருப்பதாலும், திருநெல்வேலியும் பாண்டிய நாட்டின் ஒரு பகுதி என்று கருதி, திருநெல்வேலிவரை அதை விஸ்தரிக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு இந்த அரசு சிபாரிசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீண்ட கேள்வி கேட்டிருப்பதால் இதுபற்றிய விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

*[1969 ஆகஸ்ட் 23*

The General Manager, Southern Railway, has now reported that the proposed additional metre gauge express train between Madras Egmore and Madurai on the chord line to be called Pandiyan Express will be introduced with effect from 1st October 1969, that the down train from Madras Egmore to Madurai will leave Madras Egmore at 21-00 hrs. and that the up train will leave Madurai at 18-25 hrs. These trains will have only limited stops. The General Manager has also stated that on the introduction of the Pandiyan Express, the 119 Madras-Tirunelveli Express will be timed to leave Madras Egmore at 18-10 hours as against 18-50 hours and arrive at Tirunelveli by 11-20 hours instead of 12-05 hours. In the return direction No. 120 Tirunelveli-Madras Egmore Express will leave Tirunelveli at 15-00 hours instead of at 15-05 hours and arrive at Madras Egmore at 8-35 hours as at present. As the railways have decided to run an additional train in the night from Egmore to Madurai, though not to Tirunelveli, it was decided that the request was not necessary.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற காலத்தில் உறுப்பினர்கள் போவதற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. எனவே, இரயில்வே துறையோடு தொடர்புகொண்டு உறுப்பினர்களுக்கு என்று படுக்கை வசதியுள்ள அல்லது உறுப்பினர்கள் விரும்புகின்ற வகுப்பில் இடம் தருகின்ற சூழ்நிலையை அரசு ஏற்படுத்துமா? முன்னாள் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் இருந்தபொழுது மத்திய சர்க்காரோடு தொடர்புகொண்டு மாநில அளவில் சுற்றுப்பிரயாணம் செய்ய பாஸ் வாங்க முயற்சி செய்கிறோம் என்று சொன்னார்கள். அதுபற்றிய விவரம் ஏதாவது உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** முயற்சி தொடர்கிறது.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, இன்று குமரி மாவட்டத்தில் இரயிலே இல்லை என்ற சூழ்நிலை இருக்கிறது. திருநெல்வேலி நகரம், மாவட்டத் தலைநகரமாகவும், மாவட்டத்தின் மத்தியிலே இருப்பதாலும் இந்த இரண்டு மாவட்டங்களிலும் இருப்பவர்கள் திருநெல்வேலி எக்ஸ்பிரஸில் வருவதால் அதிகமாக நெருக்கடியிருக்கிறது. ஆகவே, பாண்டியன் எக்ஸ்பிரசை மதுரையிலிருந்து விடுவதற்குப் பதிலாக, நெல்லையையும் பாண்டிய நாட்டின் ஒரு பகுதியாகக் கருதி, இதை நெல்லைவரை விஸ்தரிக்க இந்த அரசு சிபார்சு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

ம.ப. 9-30

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இதுபோன்ற கோரிக்கையை கனம் அங்கத்தினர் அவர்கள் அனுப்பினால் மத்திய அரசுக்கு சிபார்சு செய்யலாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் முயற்சி தொடர்கிறது என்று சொன்னார்கள். தொடர்ந்து கொண்டே இருக்குமா ? எதற்குள்ளே நிற்கும், எப்பொழுது நிற்கும் ?



*1969 ஆகஸ்ட் 23]*

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ரயில்வே வண்டி தொடர்ந்து கொண்டே இருக்கிற காரணத்தினால் ரயில்வே வண்டியில் போகின்ற விஷயமும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இப்பொழுது மாநில அரசு அந்தச் செலவுகளை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற நிலைமை இல்லாமல், அப்படிப்பட்ட செலவுகளை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்வதாக இருந்தால்—ஏனென்றால், ரயில்வே இலாகா மத்திய அரசின் கீழ் இருக்கிற காரணத்தினால், அவர்களே அந்தச் செலவுகளை ஏற்றுக்கொள்வது நலமாக இருக்கும். அங்கு இருக்கிற பாராளுமன்ற உறுப்பினர்களும் அந்த முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இந்த சந்தர்ப்பத்தில் ஒரு விஷயத்தைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மாண்புமிகு மறைந்த முதல் அமைச்சர் திரு. அண்ணாதுரை அவர்கள் என்னிடம் இந்த விஷயத்தைச் சொன்னபொழுது, நான் சம்பந்தப்பட்ட ரயில்வே அமைச்சரை சந்தித்து கேட்டபொழுது, அதற்கான செலவுகளை மாநில சர்க்கார் கொடுக்குமேயானால், ரயில்வே பாஸ் கொடுப்பதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை என்று சொன்னார்கள். ஃபர்ஸ்டு கிளாஸ் டி.ஏ. யில் பணத்தை நாம் தானே கொடுக்கவேண்டும். மத்திய சர்க்காருக்கு அதில் ஆட்சேபணை இல்லை. தயக்கம் மாநில சர்க்காரிடத்தில் தான், மத்திய சர்க்காரிடத்தில் இல்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தொடர்கிறது என்று சொன்னால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏற்கனவே சொன்ன வாக்குறுதி இருக்கிறது, தொடர்ந்து பேசி உடனே நடவடிக்கை எடுத்தால், இரண்டு மாதங்களுக்குள் கூட காரியம் முடிந்துவிடும். ஆகவே, சர்க்கார் இதில் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்த வாக்குறுதி என்று பழைய ஞாபகத்தில் சொல்லுகிறார்கள் என்று நினைக்கிறேன். முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதி என்று திருத்திக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாநில அரசு இதற்கான செலவுகளை ஏற்றுக்கொண்டால், மத்திய அரசாங்கம் இதற்கு அங்கீகாரம் அளிப்பது கஷ்டமான காரியம் அல்ல, அளித்துவிடுவார்கள். நாம் கூறுவது என்னவென்றால், ரயில்வே இலாகா மத்திய சர்க்காரிடம் இருப்பதால், நமது உறுப்பினர்கள் பணம் இல்லாமல் ரயிலில் செல்வதை அவர்கள் அனுமதிக்க வேண்டும் என்பதுதான்.

**திரு. என். சங்கரய்யா :** அமைச்சர் அவர்கள் இந்தக் கேள்விக்கு பதில் அளிக்கும்பொழுது, இந்த ரயிலை விடுவதற்கு முன் மத்திய அரசு மாநில அரசைக் கலந்துகொள்ளவில்லை என்று சொன்னார்கள். இந்த மாநிலத்தில் ரயில்கள் விடுவது பற்றி மாநில அரசு ஆழ்ந்த அக்கறை கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாநில அரசைக் கலந்துகொண்டு, இப்படிப்பட்ட ரயில் விடுவது பற்றி மத்திய அரசு முடிவு செய்யவேண்டும் என்பதை மாநில அரசு மத்திய அரசினிடத்தில் வற்புறுத்துவார்களா ?

[1969 ஆகஸ்ட் 23

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தக் கருத்தை மத்திய அரசுக்கு சொல்லிவருகிறோம்.

திரு. பெ. சீனிவாசன் : பாண்டியன் எக்ஸ்பிரஸ் குறைந்த அளவு விருதுநகரிலிருந்து புறப்படுகிற அளவுக்கு இந்த அரசு சிபார்சு செய்யுமா ?

(பதில் இல்லை)

திரு. என். கிட்டப்பா : பாண்டியன் எக்ஸ்பிரஸ் விடுவது போல, சோழன் எக்ஸ்பிரஸ், சேரன் எக்ஸ்பிரஸ் விடுவதற்கு மத்திய அரசாங்கத்தினிடம் கூற நமது அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நண்பர் கிட்டப்பா எக்ஸ்பிரஸ் விடுவது பற்றி கூட சிபார்சு செய்யலாம்.

THIRU K. VINAYAKAM : Whereas we are grateful to the Central Government for the concession of introducing the Pandiyan Express, will the Government represent to the Central Government that in the interests of the people travelling by this Express they should introduce more third class bogies to help the poor people than first and second class bogies? Will this Government take up this matter with the Central Government ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூன்றாவது வகுப்பில் அப்படி இட நெருக்கடி வருமானால், நிச்சயம் மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்படும்.

### கும்பகோணத்தைச் சுற்றியுள்ள வளைவுபாதை

*93 வினா.—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணத்தில் நடைபெற்ற மகாமகத் திருவிழாவை முன்னிட்டு அமைக்கப்பட்ட வளைவுப் பாதையின் பராமரிப்பை அரசு ஏற்றுக் கொள்ளுமாறு கோரி ஏதேனும் மனுக்கள் வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) குறிப்பிடப் பட்ட சாலையைப் பேணி வருவதற்காக அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, திருவள்ளியக்குடி, புத்தூர், மேலமாருயம், செனப்பாடு, அனக்குடி, அம்மாப்பேட்டை கிராமத்து மக்களிடமிருந்து 22—2—1968-ல் அரசாங்கத்துக்கு முறையீடு வந்துள்ளது.

(இ) அங்கத்தினரால் குறிப்பிடப்பட்ட கும்பகோணத்தைச் சுற்றி அமைக்கப்பட்ட வளைவு பாதையை ஆணை எண் நிலை 2567, தேதி 4—12—1968 படி அரசு தன் பராமரிப்பிற்கு ஏற்றுக் கொண்டிருக்கிறது.



1969 ஆகஸ்ட் 23]

திரு. ஆர். நாகசுந்தரம் : தலைவர் அவர்களே, கும்பகோணத்தில் மகாமக திருவிழாவை முன்னிட்டு பக்தர்களுக்கு வசதியாக வளைவு பாதைகள் அமைத்து, போக்குவரத்தை மிகவும் சுலபமாக்கி, போலீஸ் பந்தோபஸ்தெல்லாம் செய்து, சென்னையிலிருந்து தட்டுப்பாடு இல்லாமல் போதுமான அளவுக்கு பால் சப்ளை செய்து, ஒரு சிறு அசம்பாவிதம் கூட இல்லாமல், எல்லா வசதிகளையும் செய்து தந்தது. இந்த அரசு தானே, அதையாவது காங்கிரஸ் தரப்பில் பாராட்டினார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எல்லோரும் பாராட்டித்தான் செய்தார்கள்.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்த பாதை அமைப்பதற்கு செலவு எவ்வளவு ஆயிற்று ? நகரசபை எவ்வளவு ஏற்றுக் கொண்டது, அரசாங்கம் எவ்வளவு செலவு செய்தது என்பதைச் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தப் பாதை அமைப்பதற்கு ரூ. 6.50 லட்சம் செலவு ஆயிற்று. பாராமரிப்புக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 96,000 செலவு ஆகும் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. நகரசபை இதில் பங்கு கொண்டதாகத் தெரியவில்லை.

### River Projects

*94 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the number and names of river projects in Hosur taluk that have been taken up for investigation in 1968; and

(b) the position in which they stand ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) 1968-ல் ஒரே ஒரு திட்டம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. கெல்வாரஹல்லி அருகில் பொன்னியாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைப்பதே இத்திட்டமாகும். இத்திட்டம் உள்ளூர் அலுவலர்களின் விவரமான ஆய்வில் உள்ளது.

THIRU K. S. KOTHANDARAMIAH : We requested the construction of about four or five small dams in Hosur taluk where there are no facilities for irrigation. The investigation has been going on for decades. The cost of each is about three to four lakhs only. Our Government have stated in the Irrigation budget that they would be able to sanction small schemes costing below fifteen lakhs. The cost of all these dams put together will not go beyond fifteen lakhs. Instead of allowing this to drag on for a number of years, will the Government see that they are implemented soon ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பல ஆண்டுகளாக இப்படிப்பட்ட திட்டங்கள் பரிசீலனையில் இருக்கின்றன என்ற விவரம் இல்லை. 1968-ம் ஆண்டில்தான் இந்த பொன்னியாற்றின் குறுக்கே கெல்வாரஹல்லி அருகில் இந்த நீர்த்தேக்கம் கட்டுகிற பிரச்சினை ஆராயப்பட்டது. 1967-ம் ஆண்டிலிருந்து Forming of a reservoir across the Chinnar. Forming of a reservoir across the Doddahalla near Anchetty village in Hosur taluk. பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இதுபற்றி அனுமதி கோரப் பட்டிருக்கிறது. அனுமதி கிடைத்தவுடன் நடவடிக்கை எடுக்கப் படும்.

THIRU B. VENKATASWAMY : In the Fourth Five-Year Plan the Doddahalla Scheme has been included. The Hon. Minister has stated that the scheme is under investigation. May I know whether the Fourth Five-Year Plan is correct or the Hon. Minister's answer is correct ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The scheme is included in the tentative Fourth Five-Year Plan. The draft has been sent to the Central Water and Power Commission and we are awaiting clearance.

திரு. அ. மாரிமுத்து : தலைவர் அவர்களே, தஞ்சைப் பகுதியிலே குட்டந்தைக்கு அருகாமையில் உள்ள மண்ணியாறு பாசனத் திட்டமும், பழவாறு வடிகால் திட்டமும் எப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்வி தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்தது.

* 95 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to connect South Pennar and Sanath Kumara Nadhi in Hosur taluk with a view to ensure adequate and perennial supply of water to hundreds of tanks in that taluk ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : There are three hundred and fifty tanks in Hosur taluk. Of these about fifty tanks are scattered here and there. The other tanks are connected with one another, because they are in valleys. If the source tanks are filled, all the other tanks will get supply. The entire taluk could be brought under wet irrigation. In these circumstances will the Government make an investigation?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The total number of tanks in Hosur taluk is 622. The hon. Member's suggestion will be considered.





THIRU B. VENKATASWAMY : Even in the District Development Council we are pressing for the investigation of the scheme for connecting Sanath Kumara Nadhi and South Pennar. So will the Government come forward to construct a dam across the Sanath Kumara Nadhi at Byragondapalli from which the water can be supplied to the Hosur Cattle Farm and Silk Farm?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : We will examine the proposal.

* 96 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any scheme under consideration to supply water to the Appakudal tank by constructing a branch channel from the Mettur channel near Irattarkaradu; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. எம். ராஜா : தலைவர் அவர்களே, இந்தக் கிளை வாய்க்காலுக்கு வேண்டிய தண்ணீர் சுமார் 150 கன அடி தண்ணீர் இருந்தால் போதும். தஞ்சாவூரில் நிலத்திற்கு அடியில் உள்ள தண்ணீரை பயன்படுத்தி, தேவையான அளவிற்குத் தண்ணீர் விடப்படுகின்ற நிலைமையில், வறண்ட பகுதியில் ஆப்பக்கூடல் குளத்துக்கு கிளை வாய்க்கால் மூலம் தண்ணீர் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : 1960-ம் ஆண்டில் இது பரிசீலிக்கப்பட்டு, சாத்தியம் இல்லை என்று கைவிடப்பட்டது. இப்பொழுது இருக்கிற நிலைமையில் அதிகமான பூமிக்கு தண்ணீர் கொண்டு வருவதற்கு வாய்ப்புகள் இல்லை.

திரு. சி. வீரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து, மழைக் காலங்களில் உபரித் தண்ணீர் வருவதை சேலம் மாவட்டத்திற்கு வாய்க்கால் மூலம் கொடுக்க சர்க்காரிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்வி வேறாக இருப்பதால், சேலத்தைப் பற்றித் தகவல் இங்கே இல்லை.

திரு. அ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, தற்சமயம் அப்படிப் பட்ட திட்டம் இல்லை என்றாலும், அணையில் அதிகமாகத் தண்ணீர் இருந்து வழிந்து ஓடும் காலங்களில் தண்ணீர் விடுவதற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நிரம்பத் தண்ணீர் வழிந்தாலும் கொடுப்பது சாத்தியமில்லை என்றுதான் முடிவு இருக்கிறது.

[1969 ஆகஸ்ட் 23

*Government Bus*

*97 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether the Director of State Transport Department ordered a free lift for college students in a Government bus from Mount Road to Arts College about the 12th August 1968?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவர் அவர்களே, விடை, ஆம்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவர் அவர்களே, மாணவர்களை இந்த மாதிரி கட்டணம் இல்லாமல் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு அழைத்துப் போவது ஒரு தவறான முன்மாதிரியாக ஆகாதா? தவறு செய்ய மாணவர்களைத் தூண்டுவது ஆகாதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவர் அவர்களே, மாணவர்கள் சமுதாயத்தின் இடையே நிலவும் அமைதி தொடர்ந்து நீடிக்க வேண்டிய சூழ்நிலையில் இந்தத் துணை வினாவிற்குப் பதில் அளிப்பது பொதுநன்மைக்கு ஏற்றதாக இருக்காது என்று கருதுகிறேன்.

DR. H. V. HANDE: Sir, I understand that the Government have proposed to stop 'Students Special' buses and pass on the responsibility of running them to the Principals of Colleges. Is it absolutely necessary that they should stop them? I know that some students have been guilty of some impropriety in stopping these buses. But will not the proposal to hand them over to the Principals of Colleges be a reactionary measure—almost like a punitive action? So, will the Government reconsider their decision in regard to this matter?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்வியின் பதிலிலிருந்து எதாவது இன்பர்மேஷன் கேட்கலாமே அல்லாது, இப்படி நடந்தால், அப்படி நடக்காதா, இது நடக்காதா, அது நடக்காதா என்று சொல்வதெல்லாம் முறையாகாது. அடுத்து, திரு. சித்தன்.

THIRU K. VINAYAKAM: Sir, may I know under what circumstances did the Director of Transport order that the students should be given a free lift from one place to another and whether such a free lift is given frequently? Also, whenever the students threaten the Director, do they succumb to these kinds of activities and under such icrcumstances if the Hon. Members of the Legislature also threaten the Hon. Minister, will he be prepared to give us a free lift?



1969 ஆகஸ்ட் 23]

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** வேறு ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது, இப்பொழுது மாணவர்களிடையே நிலவும் சமாதான சூழ்நிலை நீடிக்கும் பொருட்டு, அந்தக் கேள்விக்குப் பதில் கொடுக்க வேண்டாம் என்று அமைச்சர் சொன்னார்கள். மேலும் துணைக் கேள்விகளைக் கேட்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. வினாயகம் அமைதியான சூழ்நிலையை கெடுக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

THIRU K. VINAYAKAM: Sir, on a point of order. You have rightly observed that I can ask for information. I am asking, under what circumstances, did the Director of Transport give a free lift on that particular day?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர், கிளர்ச்சி செய்தார்கள், ஆதலால் கொடுத்தேன் என்று சொல்லவில்லை, ஆகவே சட்டமன்ற உறுப்பினர்கள் கிளர்ச்சி செய்தால் கொடுப்பார்களா என்று கேட்பதற்கு இடம் இல்லை. அப்படிப்பட்ட செய்தியை அமைச்சர் கொடுக்கவில்லையே.

THIRU K. VINAYAKAM: Sir, my first part of the question is, under what circumstances did the Director give a free lift ......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சித்தன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே என்னுடைய கேள்வி, 12—8—1968-ம் நாளன்று 25-ஏ பேருந்து வழித் தடத்தில் மவுண்ட்ரோட்டிலிருந்து கலைக்கல்லூரிக்கு மாணவர்களை கட்டணம் இல்லாமல் அழைத்துச் செல்ல மாநிலப் போக்கு வரத்து அதிகாரிகள் ஆணையிட்டார்களா என்பது. அதற்கு அமைச்சர் அவர்கள், "ஆம்" என்று பதில் அளித்தார்கள். எந்தச் சூழ்நிலையில், எதற்காக அப்படி ஆணையிடப்பட்டது என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட சம்பவம், ஒரு ஆண்டுக்கு முன்னால் நடைபெற்றது. அதைப் பற்றி மீண்டும் விவாதித்து, துணைக் கேள்விகள் எழுப்புவது, பொதுநன்மைக்கு ஏற்றதாக இருக்காது. நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும்; இனி நடப்பவை நல்லவைகளாக இருக்கட்டும் என்று ஆசை கருதுகின்ற காரணத்தால், மேற்கொண்டு துணைக் கேள்விகளை போடுவது பொதுநன்மைக்கு இடையூறாக இருக்கிறது என்கிற காரணத்தால், அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கேள்வி, கேள்வி 98.

*Eradication of Beggary*

*98 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Labour be pleased to state whether the Union Government have sought the views of the State Government on the eradication of beggary?

[1969 ஆகஸ்ட் 23

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: பிச்சை எடுத்தலைத் தடுப்பது, அதைக் கட்டுப்படுத்துவது பற்றியும், அதிலும் குறிப்பாக குழந்தைகளைத் திருடிக் கொண்டுபோய் அவர்களைப் பிச்சையெடுக்கும் தொழிலில் ஈடுபடுத்துவதைத் தடுப்பது பற்றியும் கருத்து தெரிவிக்குமாறு இந்திய அரசு இம்மாநில அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் கோரிக்கைக்கு நம் மாநில அரசு கருத்து தெரிவித்திருக்கிறதா ? தமிழகத்தில் பிச்சை எடுப்பது அதிகமாக இருக்கிறது. குறிப்பாக வெளிநாட்டவர்கள் வரும்போது, அவர்களுக்கு மிகுந்த தொல்லை கொடுக்கிறார்கள். அவற்றைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, பிச்சை எடுக்கிற இந்த நிலை பற்றி ஆராய்ந்து பார்க்கின்றபோது, நம்முடைய மாநிலத்தை மற்ற மாநிலங்களோடு, மற்ற மாநிலங்களில் குழந்தைகளை வைத்து பிச்சை எடுப்பதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நம் மாநிலத்தில் அது குறைவாகத்தான் இருக்கிறது என்கின்ற கருத்து ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி மத்தியில் ஒரு மாநாடு நடந்தபோது, அப்பொழுது பொறுப்பேற்றிருந்த மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் அங்கே கருத்துரைகளை வழங்கியிருக்கிறார்கள். அதைப் பற்றித் தீவிரமாக ஆராய வேண்டும் என்று சொல்லி, இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஆப் போலீஸ் அவர்கள் சில சிபாரிசுகளைச் செய்திருக்கிறார்கள். அவற்றில் ஒன்று, நம் மாநிலத்தில், குறிப்பாக நகரப் பகுதிகளில், புண்ணியத் தலங்களில், இந்தத் தொல்லையைத் தடுக்க, ஏற்கனவே இருக்கும் பிச்சை தடுப்புச் சட்டம், சில்ட்ரன்ஸ் ஆக்ட் போன்றவற்றை தீவிரமாக அமல் செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இரண்டாவதாக, நகராட்சிகள் முன்வந்தால், அவர்கள் ஸ்பெஷல் ஹோம்கள் நடத்துவதற்கு நிதி ஒதுக்குவதில் தீவிரம் காட்ட வேண்டும்.

அடுத்து, ஒரு தனி போலீஸ் அமைக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இறுதியாக, ஒரு சமுதாய நல வாரியம் அமைக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவற்றை ஒப்புக்கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கருத்துக்களை அமுலாக்கும் வகையில், அரசாங்கம் முன்னோடியாக, தண்டையார்ப்பேட்டையில் ஏறக்குறைய ரூ. 10 லட்சம் அளவில் சென்ற ஜூன் மாதத்தில் ஒரு இரவலர் விடுதியை நடத்த அனுமதி வழங்கியிருக்கிறது.

Thiru K. VINAYAKAM : Sir, on a point of order. Rules are very clear that questions must be precise and should not be ambiguous. At the same time answers also must be precise and should not be unduly long. Whenever an Hon. Minister has got a long answer to read—as if it is a public lecture—why not that answer be placed on the Table of the House so that we may read and consume it and then put supplementary questions ?



1969 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்குத் தகவல் கொடுக்கும்போது அப்படிச் செய்யலாம். ஆனால், இப்பொழுது துணைக் கேள்விக்கு விடையாக அளிக்கும்போது, நீண்ட பதிலை அச்சடித்துக் கொடுப்பது என்பது முடியாத காரியம். நீண்ட விடையாக இருந்தால் அச்சடித்துக் கொடுக்க வேண்டும் என்று விதியிருக்கிறது. ஆனாலும், துணை வினாவிற்கு நீண்ட விடை அளிக்கக் கூடாது என்று விதி எதுவும் இல்லை.

திரு. ஜெ. பெள்ளி கௌடர் : தலைவர் அவர்களே, பிச்சை எடுப்பதில் கை, கால், கண் ஊனமானவர்களுக்கு அரசு உதவி செய்ய ஆலோசனை செய்வார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : ஏற்கனவே இப்படிப்பட்ட கை, கால் ஊனமானவர்களுக்கு உதவியளிக்க மாதம் ரூ. 10 அளவில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. புதிய அரசு வந்த பிறகு, இது போதாது என்று கருதி, ரூ. 15 என்ற அளவிற்கு உயர்த்தியது. எந்த நகராட்சியாவது முன்வந்து அவர்களுக்கென்று விடுதி நடத்துவதானால், தனி நபர் ஒருவருக்கு ரூ. 15 என்ற அளவில் ஒதுக்கிக் கொடுக்க அரசு தயாராக இருக்கிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தலைவர் அவர்களே, நீண்ட பதில் அளிக்கக் கூடாது என்று விதி இல்லை என்று சொன்னீர்கள். அதே போல நீண்ட கேள்விகளையும் அனுமதிக்கக் கூடாதா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய விதிமுறைகள் எல்லாம் நாம் எல்லோரும் சேர்ந்துதான் வகுத்திருக்கிறோம். நாம் கேட்கிற கேள்வி சுருக்கமாகவும், தெளிவாகவும் இருக்கவேண்டும். மூலக் கேள்விக்கு விடை நீண்டதாக இருந்தால் அதை அச்சடித்து கொடுப்பார்கள். ஆனால் துணைக் கேள்விக்கு விடை சொல்வதை முன்கூட்டியே அச்சடிக்க முடியாது. ஆகவே, அமைச்சர்கள் நீண்ட விடையாகத்தான் பதில் சொல்ல முடியும். அமைச்சர்கள் சுருக்கமாக விடையளித்தால் திருப்தியாக இல்லையென்று சில உறுப்பினர்கள் சொல்கிறார்கள். ஆகவே, உறுப்பினர்களைத் திருப்திப்படுத்தும் காரணத்தை முன்னிட்டும் சில சமயங்களில் நீண்ட விடையாக, விளக்கமாகச் சொல்ல வேண்டியிருக்கிறது. விடை சுருக்கமாக இருக்க வேண்டுமென்று சொன்னால், அமைச்சர்கள் பதிலைச் சுருக்கமாகச் சொல்லித் தப்பித்துக் கொள்வார்கள். ஆகவே, துணைக் கேள்விகளுக்கு நீண்ட விடையாக அளிக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் அப்படிச் சொல்ல வேண்டிய நிலைமை உண்டாகிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தலைவர் அவர்களே, அமைச்சர்கள் சத்துள்ள பதிலாக, சுருக்கமாகச் சொல்ல வேண்டும். இரண்டு வரிகளில் சொல்ல வேண்டியதை, பதினைந்து வரிகளில் சொல்கிறார்கள். சுருக்கமாக, மனதில் ஆழப் பதியும்படியாகச் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்லோரும் திருவள்ளுவராக, எல்லோரும் கோவைக் கம்பராக ஆகிவிட முடியாது.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, "சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதுதான்" பொதுவான முறை. அமைச்சர்கள் ஒரே சொல்லில் பதில் சொன்னாலும், விளக்கமாகப் பதில் சொல்லவில்லையென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கும் படியான நிலைமை இருக்கிறது. எந்த அளவுக்குச் சொன்னால் விளங்கிக்கொள்வார்களோ, அந்த அளவிற்குச் சொல்ல வேண்டிய நிலை ஏற்படுவதால், விடை சற்று நீண்டதாகப் போய்விடுகிறது. ஆகவே, அவ்வப்போது கேட்கக் கூடிய கேள்விக்குத் தக்கவாறு விடையும் அமைகிறது. சுருங்கச் சொல்லி விளங்க வைப்பது தான் பொதுவாக இருந்துவரும் முறை.

THIRU K. VINAYAKAM : On a point of clarification, Sir. The main question is very clear. The main answer was "No". That also is clear. The Hon. Minister should anticipate what type of supplementary questions will be asked. The department supplies the Minister with anticipated questions and answers. That is the usual practice. It is not as if the file should be brought here and that the Minister should read out a lengthy answer so as to tire us all here.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் இலாகாவிலே இருந்து கொடுத்திருக்கிற விளக்கத்தைத்தான் அளித்திருக்கிறார்கள். மூலக் கேள்வியாக இருந்து விடை நீண்டதாக இருந்தால் முதலிலேயே விடையை அச்சடித்துக் கொடுத்துவிடுவார்கள். இது துணைக் கேள்வியாக இருக்கிற காரணத்தால், முன்கூட்டியே விடையை அச்சடித்துத் தர முடியாது. மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கிற கேள்விக்குத் தக்கபடி முழுமையான அளவில்தான் பதில் கொடுக்கப்பட வேண்டியிருக்கிறது. அடுத்த **வினா 88.**

**திரு. வி. கே. கோதண்டராமன் :** பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார். 98-வது கேள்வி, "மத்திய அரசு, பிச்சை எடுப்பதை ஒழிப்பது பற்றி" என்று இருக்கிறது. ஆனால் அதற்குப் பதில் வரும்போது, 'பிச்சைக்காரர்கள் பிச்சை எடுப்பதைப் பற்றி" என்று சொல்லப்பட்டதே, அது சரியா? மத்திய அரசு பிச்சை எடுக்கிறதா? மத்திய அரசு பிச்சை எடுப்பதை ஒழிப்பது பற்றி என்று இருக்கிறதே, அது சரியா? (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நாம் படிக்கிற நேரத்தில், **'மத்திய அரசு'-க்குப் பக்கத்தில் 'கமா' போட்டிருக்கிறதே அதைப் புரிந்துகொள்ள வேண்டும். படிக்கவேண்டிய முறையோடு படித்தால் பொருள் விளங்கும். எப்படிப் படிக்கவேண்டும் என்ற முறைக்காகத்தான் 'மத்திய அரசு' என்பதற்குப் பின்னால்** 'கமா' போட்டிருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவருடைய கண்ணாடி சரியில்லை **போல் தெரிகிறது.**



**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, பிச்சை எடுப்பதை ஒழிப்பதுபற்றி, மத்திய அரசு இம்மாநில அரசின் கருத்தினைக் கேட்டிருக்கிறதா என்று கேள்வி கேட்டிருந்தால் பொருத்தமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நண்பர் திரு. கோதண்டராமன் அவர்கள் மொழிபெயர்ப்புத் துறையில் இவ்வளவு திறமையாக இருப்பதற்காக அவரைப் பாராட்டுகிறேன்.

### வறட்சி நிவாரணம்

* 38 **வினா.**—திரு. கொளத்தூர் கோதண்டம்,
திரு. சு. துரைசாமி,
திரு. என். எஸ். வி. சித்தன்,
திரு. ஆர். கருப்பையா,
திரு. வை. சுவாமிநாதன்,
திரு. சி. கோவிந்தசாமி,
திரு. என். கிட்டப்பா,
திரு. பெ. சௌந்தரபாண்டியன்,
திரு. கே. விநாயகம்,
டாக்டர் எச். வி. ஹாண்டே,

**மாண்புமிகு நிதி அமைச்சர்** தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் வறட்சி நிவாரணத்திற்காக தமிழ் நாடு அரசு எவ்வளவு ரூபாய் செலவழித்தது?

(இ) மத்திய அரசு கொடுத்த தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) பேரவைத் தலைவர் அவர்களே, 16—8—1969 வரையில் வறட்சி நிவாரண நிதிக்காக செலவு செய்துள்ள தொகை 14,55,98,445 ரூபாய்.

**(இ) இதுவரையில் மத்திய சர்க்காரிடமிருந்து பெற்றுள்ள** தொகை 11,25,00,000 ரூபாய் ஆகும்.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டவாரியாக எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது? ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி எந்தெந்தப் பணிகளுக்குச் செலவு செய்யப்பட வேண்டுமென்று வரையறை ஏதேனும் செய்யப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் தலைவர் **அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்திற்கு 1 கோடியே 89 லட்சம்; வட ஆற்காடு மாவட்டத்திற்கு 2 கோடியே 35 லட்சம்; தென்** ஆர்க்காடு மாவட்டத்திற்கு 1 கோடியே 38 லட்சம்; தஞ்சாவூர் **மாவட்டத்திற்கு 49 லட்சம்; திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு** 75 லட்சம்; மதுரை மாவட்டத்திற்கு 1 கோடி 24 லட்சம்; இராம

**நாதபுரம் மாவட்டத்திற்கு 1 கோடியே 98 லட்சம்; திருநெல்வேலி** மாவட்டத்திற்கு 70 லட்சம், சேலம் மாவட்டத்திற்கு 89 லட்சம், தருமபுரி மாவட்டத்திற்கு 63 லட்சம் ; கோயம்புத்தூர் மாவட்டத் **திற்கு 1 கோடியே 69 லட்சம்; நீலகிரி மாவட்டத்திற்கு 10 லட்சம்;** கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 20 லட்சம், மற்றும் பொதுவான குடிநீர் வசதிகளுக்காக 60 லட்சம் ரூபாய் என்ற வகையிலே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் கொடுத்துள்ள தொகைக்கு மேலே செலவு ஏற்பட்டிருக் கிற காரணத்தாலே, இந்த முழுத் தொகையையும் மத்திய சர்க் காரே கொடுக்க வேண்டுமென்று இந்த அரசு வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. கே.ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, இப்** போது கொடுத்திருக்கிற 11 கோடியே 25 லட்சத்தோடு இன்னும் மூன்று கோடி ரூபாய் அதிகமாகவே செலவு செய்திருக்கிறோம். இந்த பஞ்ச நிவாரண நிதியை முழுவதும் மானியமாகக் கொடுக் கப்பட வேண்டுமென்று நானும் முதலமைச்சர் அவர்களும் கேட்பது மட்டுமல்ல, இந்தச் சட்ட மன்றத்திலுள்ள எல்லாத் தரப்பு உறுப்பினர்களும் வற்புறுத்தினால் நல்லது. எல்லா உறுப் பினர்களும் இதை வற்புறுத்திச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, இந்தத் துயர் தணிப்பு வேலைகளுக்குப் பணம் செலவழிப்பதிலேயே அக்கறை காட்டப்படுகிறதேயொழிய, சரியான இனங்களுக்குச் சரியாக **செலவு செய்யப்படவில்லையென்று புகார் வருகிறதே, அதனால்,** சரியான காரியங்களுக்குச் சரியான முறையில் செலவிடப் பட்டிருக்கிறதா என விசாரணை செய்ய ஒரு கமிஷனை இந்த அரசாங்கம் நியமிக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்தக் கேள்வி சரியான கேள்வி அல்ல. உறுப்பினர்கள் பொதுக்கூட்டங்களிலே வைத்துக் கொள்ளக்கூடிய புகாரே ஒழிய, இந்தச் சபையில் எழுப்பக் கூடிய கேள்வியாக இல்லை. எந்த ஒரு குறிப்பிட்ட ஆதாரமும் **இல்லாமல், இப்படி பொதுவான முறையில் கேள்விகள் போடுவது** சரியல்ல.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கனம் அங்கத்தினர் அவர்கள் இந்தக் கேள்வியை பொதுக்கூட்டத்திலே வைத்துக்கொள்ளலாம் என்றால், அமைச்சர் அவர்களும் பொதுக்கூட்டத்திலே இந்த பதிலை வந்து சொல்வார்களா ? அப்படி பொதுக்கூட்டத்திலே **பதில் சொல்வதற்கு ஏற்பாடு செய்வார்களா?**

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** சரியாக எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல், பொதுப்படையாகக் கேள்விகள் கேட்பது சரியல்ல.





**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் ஆயிரம் தடவை சொல்வேன். எங்களுக்கு கேள்வி கேட்க உரிமையிருக்கிறது. கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது. மக்களைத் திருப்திபடுத்துவதற்காக நாங்கள் கேள்விகள் கேட்கிறோம். மக்களைத் திருப்திப்படுத்த வேண்டியது உங்களுடைய பொறுப்பாகும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, வறட்சி நிவாரணப் பணம் சரியாக, ஒழுங்காகச் செலவிடப்படுகிறது. என் பகுதியைச் சேர்ந்த அரூர் ஊராட்சி ஒன்றியத்தின் தலைவரும், காங்கிரஸ் எம்.எல்.ஏ.-யும் ஆனவர் எனக்கு நேராகப் பேசிய கூட்டத்தில், வறட்சிப் பணி வேலைகள் நல்முறையில் நன்கு நடைபெறுகின்றன என்று கூறி, எனக்கு ஒரு பாராட்டுப் பத்தி பத்திரமும் வழங்கி அதில் அவர் குறிப்பிட்டிருக்கிறார் என்பதை கனம் எதிர்க் கட்சித் தலைவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அது எங்களுடைய பெருந் தன்மையைக் காட்டுகிறது. ஆகவே, எங்களுக்கு பொறுப்பு இருக்கிறது. பொறுப்பற்ற முறையில் வேலைகளைச் செய்ய மாட்டோம்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்வது, பொறுப்பாக இருக்க வேண்டுமென்பது— எங்களுடைய காரியங்கள் சரியாக இல்லையென்றால் கேளுங்கள், நான் பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன். நாங்கள் மக்கள் நம்பிக்கை பெற்று இங்கு வந்திருக்கிறோம். திரு. சித்தன் அவர்கள் இந்த ஊரில், இந்த வேலை செய்யப்படவில்லையென்று குறிப்பிட்டுச் சொன்னால், இந்த மன்றத்தில் பதில் சொல்லவும், மன்ற நடவடிக்கைகளுக்கும் உதவியாக இருக்கும். பொதுவாகச் சொல்லிவிட்டால் என்ன செய்வது ? இந்த ஆட்சிக்கு வறட்சி வேலைகளின் நிமித்தம் மேலும் நல்ல பெயர் வருகிறதே, அதற்கு மாசு கற்பிக்க முடியவில்லையே என்று எண்ணிக்கொண்டு கேட்பது முறையல்ல.

**திரு. ஆர். கருப்பையா :** பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்ச துயர் தணிப்புப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகையானது திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு ஒரு கோடி ரூபாய்க்குக் குறைவாக இருக்கிறது. இந்த மாவட்டத்தில் அரியலூர், பெரம்பலூர், முசிறி, உடையார்பாளையம் தாலுக்காக்கள் பஞ்சப் பகுதியாக இருக்கின்றன. ஆகவே, திருச்சிக்கு அதிகமான தொகை ஒதுக்கித் தர அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** வறட்சிப் பணி வேலை களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை குறைவாக இருக்கிறது, அதிக **மாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. எல்லா மாவட்டங்** களுமே பஞ்சத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நாம் **நிவாரண** வேலைகளை சில வரம்புகளுக்கு உட்பட்டு **செய்து வரு**

கிறேம். எந்த இடத்திலே என்ன காரியங்கள் செய்யப்பட வேண்டுமென்பதை உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னால், அரசாங்கம் அதைச் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் 76 லட்சம் ரூபாயில் எவ்வளவு செலவாகியிருக்கிறது ? இன்னும் திருச்சி தாலுக்காவில் மணிகண்டம் பகுதி பஞ்சப் பகுதியாக இருந்தும் அப்படி டிக்ளேர் செய்யப்படாது இருப்பதனால் இதுபோன்ற பகுதிகளை பஞ்சப் பகுதியாக அறிவித்து அதிகத் தொகை ஒதுக்கி—வறட்சி நிவாரண வேலைகளைச் செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** திருச்சி மாவட்டத்திற்கு 76 லட்சம் ஒதுக்கப்பட்டது. 73 லட்சம் ரூபாய் செலவாகி விட்டது. இன்னும் இரண்டு லட்சம் சொச்சம் தான் இருக்கின்றன. மொத்தத்தில் 96 சதவிகிதம் செலவழிக்கப்பட்டு விட்டதாக கூறப்படுகிறது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, இந்தத் தொகை நிரந்தரமாகப் பயன்தரும் திட்டங்களுக்காகச் செலவிடப்பட்டதா ? அல்லது தற்காலிக நிவாரணம் அளிக்கும் திட்டங்களுக்காகச் செலவிடப்பட்டதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தற்காலிகப் பயன் தரும் திட்டங்களுக்காகவும் செலவிடப்பட்டிருக்கிறது. நிரந்தரமான பயன் அளிக்கும் திட்டங்களுக்காகவும் செலவிடப்பட்டிருக்கிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, பஞ்ச நிவாரணப் பணிகளுக்காகச் செலவிடப்படும் தொகை ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாகச் செலவிடப்படுகிறது. ஆகவே அரசு ஊராட்சி ஒன்றியங்களை—என்ன என்ன ஆக்கப் பணிகளுக்கான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்று கேட்டு விவரமான அறிக்கை பெற்று சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த முயற்சியில் கடிகாரத்தில் 24 மணி நேரம் இருக்கிறது என்றால் ஒரு நாளைக்கு 28 மணி நேரம் என்று சொல்லக்கூடிய அளவில் முதல் அமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும், அதிகாரிகளும் ஈடுபட்டு வருகிறார்கள். அதன் காரணமாகத்தான் நான்கு மாதங்களுக்குள் அதிக அளவில் நிவாரண வேலைகளை முடிக்க முடிந்திருக்கிறது. இது ஒரு அமைச்சர் பொறுப்பில் இருந்தாலும் எல்லா அமைச்சர்களும் சுற்றுப்பயணம் செய்து பார்வையிட்டு வருகிறார்கள். இந்த வேலைகளைக் கவனிக்க தனியாகவே ஒரு போர்டு மெம்பர் இருக்கிறார். ஆகவே, இந்த வேலைகள் சரியான முறையிலேயே நடந்துவருகின்றன. தவறு நடந்துவிடுமோ என்று பயப்பட வேண்டியதில்லை.





THIRU K. VINAYAKAM : While being grateful for the wonderful relief work which the Government have been doing to alleviate distress in the drought stricken areas, may I know, when the Prime Minister visited our State and she was taken to the Madurantakam lake to inspect the relief work, whether two thousand workers were brought from the neighbouring area and made to pretend that they were working with spades and shovels and that after her departure most of them were disbanded even without payment of wages? Is that the way in which we made her understand that there is very severe drought in our State?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு திரு. விநாயகம் கூறியது முழுவதும் உண்மைக்கு மாறான விஷயமாகும். ஏனென்றால் வெளி ஊர்களில் இருந்து ஆட்கள் கொண்டுவரப்பட்டு தமிழ்நாடு வறட்சியால் பாதிக்கப்பட்டு வேலை வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது என்று பொய்யாக இந்தியப் பிரதமரிடம் காட்டி பணம் பெற வேண்டிய அவசியம் இந்த அரசுக்கு இல்லை. இப்படி காங்கிரஸ் கட்சி கொறடா கூறுவது தமிழ்நாட்டில் வறட்சி நிலைமை இல்லாதது போலவும், இப்படி ஒரு பயங்கர நிலை இருப்பதுபோல கற்பனை காட்டி பிரதமரிடம் பணம் பெற முயன்றது போல தமிழக அரசின் மீது குற்றம்சாட்டுவது வறட்சிப் பகுதியில் உள்ள மக்களது நன்றி உணர்வைப் பெற முடியாத கருத்தாகும்.

மதுராந்தகம் ஏரி வேலையைப் பார்வையிட ஒரு குழு போட வேண்டியதில்லை. நானே வருகிறேன். திரு. சித்தன் வரட்டும்—காங்கிரஸ் கட்சி கொறடா வரட்டும்—இல்லையென்றால் எதிர்க் கட்சித் தலைவரே வரட்டும். 50 மைல்களுக்குள் இருக்கிறது. மாலையிலேயே சென்று பார்த்து வரலாம். எந்த அளவுக்கு ஏரியில் தூர் வாறப்பட்டிருக்கிறது என்பதும், ஏரியின் கரைகள் உயர்த்தப்பட்டு இருக்கின்றன என்பதும் தெரியும். முன்பு முதல் அமைச்சராக திரு. காமராஜ் அவர்கள் இருந்தபோது மதுராந்தகம் ஏரி தூர் வாறப்படவேண்டும் என்று சொன்னதற்கு, வாறினால் அந்த மண்ணை எங்கே கொண்டுபோய்க் கொட்டுவது என்றார்கள். இப்போது அந்த மண் எங்கே கொண்டுபோய்க் கொட்டப்பட்டிருக்கிறது என்று பார்த்தால் 7 மைல் தூரத்திற்கு அழகான சாலை ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் பார்த்து வரலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, whereas there is a feeling that sufficient control has not been exercised in certain parts of the State at the point where these works are executed such as for instance the Ramanathapuram district, will the Government exercise severe control on the exact *modus operandi* or the method of expenditure on the works in these parts? Especially in districts like Ramanathapuram where the amount allotted is already very low in spite of the fact that it is a worst affected district and is a chronically drought affected area, will the Government take us into confidence and tell us exactly how much work has been done talukwar or firkawar ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு திரு. ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டதுபோல தாலுக்கா வாரியாகவும் கொடுக்கலாம். ஊர் வாரியாகவும் கொடுக்கலாம். இனங்கள் வாரியாகவும் கொடுக்கலாம். கண்டிரோல் எதுவுமே இல்லாதது போல இதற்கென்று புது அமைப்பை ஏற்படுத்த வேண்டியதில்லை. எல்லாவிதமான கண்டிரோல்களும் இப்போதே இருக்கின்றன. ரெவின்யூ இலாக்கா மூலமாகச் செயல்படுகிறது என்றால் நிதி இலாக்கா அவ்வப்போது அதைக் கண்காணித்துக் கொள்ள தனிப் பிரிவாகவே செயல்படுகிறது. எவ்வளவு கண்டிரோல்கள் இருந்தும் சில இடங்களில் தவறுகள் நடக்கக்கூடும். தவறு நடக்கின்ற இடங்களில் அதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கவும், தவறு நடக்காமல் கண்காணித்துக் கொள்ளவும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இக்கேள்வியைக் கொடுத்த ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு துணைக்கேள்வி என்கிற முறையில் பத்து துணைக் கேள்விகள் கேட்கப்பட்டுவிட்டன. துணை மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் இது பற்றி விவரமாகவும் பேச முடியும். ஆதலால் மேற்கொண்டு துணைக் கேள்விகள் அனுமதிக்க மறுக்கிறேன். அடுத்த கேள்வி 89 எடுத்துக் கொள்ளப்படுகிறது.

*Tamil Nadu Government Raffle Scheme*

*89 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state, whether raffle tickets of the State Government with the same numbers in the same series were traced in Tiruchirappalli district about the month of November 1968 ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஆம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோலவே பரமக்குடியில் ஒரு லாட்டரிச் சீட்டில் நம்பர் இல்லாமல் இருந்தது என்கிற புகார் வந்ததே, இதுமாதிரி இனி ஏற்படாமல் இருக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : திருச்சியைப் பற்றிய விவரம்தான் என்னிடம் இருக்கிறது. பரமக்குடி பற்றிய விவரம் கொடுக்கப்பட்டால் அதுபற்றி விசாரித்து பதில் அளிக்கத் தயாராய் இருக்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : சபாநாயகர் அவர்களே பரிசுச் சீட்டுகளில் இதுபோல இரண்டு சீட்டுக்கு ஒரே நம்பர் வருவதும், நம்பர் இல்லாமலேயே சீட்டு வருவதும் யாது காரணத்தினால் என்று அரசாங்கம் கருதுகிறது ? ஒரு இடத்தில் பரிசு சீட்டு ஏஜண்டு ஒருவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அவருடைய அட்வான்ஸ் பறிமுதல் செய்யப்பட்டது என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தகவல் இல்லை.



திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, இப்படி பரிசுச் சீட்டு நம்பரில் பிழை இருந்தது என்றால், அது அச்சுப் பிழையா அல்லது வேறு யாராவது அச்சடித்ததால் ஏற்பட்ட பிழையா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இவ்வளவு பெரிய காரியத்திலே சிறு தவறு நிகழ வாய்ப்பு இருக்கிறது. இந்த மாதிரித் தவறுகள் ஏற்படாது திருத்தப்பட்டு வருகிறது. இது திருச்சியிலே நடந்த சம்பவம். அந்த ஊர் பரிசுச் சீட்டு எஜென்ட் கன்னையன் என்பவர் பரிசுச் சீட்டுப் புத்தகம் வந்த உடன் சப்-ஏஜென்ட் ஐசாக் என்பவரிடம் ஒரு புத்தகத்தைக் கொடுத்தார். ஐசாக் என்பவர் அந்தப் புத்தகத்தில் கே. 185295 என்ற டிக்கெட்டைக் கிழித்து விற்று விட்டு அடுத்த டிக்கெட்டைப் பார்த்தால் அது கே. 185296 என்று இல்லாமல் கே. 185295 என்றே இருந்தது. அதற்குப் பின்னால் நான்கு டிக்கட்டுகளைப் பார்த்த நேரத்தில் கே. 185298 என்ற டிக்கட் அதிலே இல்லாமல் இருந்தது. மொத்த எண்ணிக்கை சரியாக இருந்தது; ஒரு எண் இல்லை; ஒரு எண் இரண்டு முறை அச்சடிக்கப்பட்டு விட்டது. அவர் உடனே அதைப் பற்றி திருச்சி கலெக்டர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். அந்த ஐந்து டிக்கெட்டுகளும் கலெக்டர் அவர்களால் திருப்பிப் பெறப்பட்டு அது இங்குள்ள பரிசுச் சீட்டு டைரக்டர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு தவறு திருத்தப்பட்டு மீண்டும் விற்பனை ஆயிற்று. இந்த மாதிரி மறுபடியும் நடக்கக் கூடாது என்பதற்காக ஒவ்வொரு டிக்கட் நம்பரையும் கருவூலத்திலேயே செக் செய்த பிறகுதான் விற்பனைக்கு அனுப்ப வேண்டுமென்ற முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. டி. மார்டின் : ஆரம்பத்தில் இந்த லாட்டரிச் சீட்டுக்கு இருந்த அமோக வரவேற்பு வர வரக் குறைந்து இப்போது மிகவும் குறைவாக இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா ? ஆகவே, இந்தத் திட்டத்தை அரசாங்கமே முன்வந்து விட்டுவிடும் நோக்கம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : வரவேற்புக் குறைந்து விட்டது என்று சொல்வது அவ்வளவு சரியானது அல்ல. குறைய வேண்டுமென்பது திரு. மார்டின் அவர்களுடைய ஆசையா என்பது எனக்குத் தெரியவில்லை. சில நேரங்களில் கொஞ்சம் குறைவது பொருளாதார மந்தத்தைப் பொருத்தது. இதற்கு உற்சாகமான வரவேற்பு இருக்கிறது என்பதைப் பற்றி அடுத்த கேள்விக்குப் பதில் சொல்லும்போது கூறுகிறேன்.

*90. Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Finance be pleased to state the net profit gained by the State Government through raffles till the last draw in January 1969?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பரிசுச்சீட்டு நடத்தியது மூலமாக 1969 ஜனவரித் திங்கள் குலுக்கல் வரை மாநில அரசுக்கு ரூ. 270 லட்சம் நிகர ஆதாயம் கிடைத்துள்ளதென மதிப்பிடப் படுகிறது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது இதன் மூலம் ரூ. 2,70,00,000 ஆதாயம் கிடைத்தது என்று சொன்னார்கள். இந்தத் தொகையில் இருந்து எந்தெந்தத் துறைக்கு எவ்வளவு எவ்வளவு செலவிடப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்தத் துறைக்கு என்பதல்ல; மொத்த வருவாயும் நிதித்துறையிலே கணக்கிடப்படுகிறது. இதிலே கொள்கை அறிவிப்பு செய்யப்பட்டது, சமுதாய நலத் திட்டப் பணிகளுக்காக மக்களுக்குப் போய்ச் சேரக்கூடிய நிலையில் குடிதண்ணீர்த் திட்டம் போன்ற அடிப்படைக் காரியங்களுக்குச் செலவு செய்யவேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நிதித்துறைக் கணக்கைப் பொறுத்தவரை மொத்த வருவாயில் இதுவும் சேர்த்துக் கொள்ளப்படும்; இன்ன இனத்தில் இருந்து வந்த தொகையை இதற்குத்தான் செலவு செய்யவேண்டுமென்ற இலக்கண முறை கிடையாது.

திரு. ஏ. ஆர். பெருமாள் : மற்ற மாநிலங்களில் முதல் பரிசுத் தொகை 2½ லட்சம், 5 லட்சம் என்று போட்டிருக்கும் காரணத்தால் நம்முடைய மாநிலத்தில் விற்பனை குறைவு என்ற கருத்து நிலவுகிறது. ஆகவே, நம்முடைய மாநிலத்திலும் பரிசுத் தொகையை 2 லட்சம் அல்லது 3 லட்சம் என்று உயர்த்துவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணம் சரியானது அல்ல. ஏனென்றால் நாம் மற்ற மாநிலங்களைப் போல் அல்லாமல் வேறு ஒரு மாதிரியான முறையை வைத்திருக்கிறோம். மராட்டிய மாநிலமும் நாம் கையாளும் முறையைக் கையாளுவதாகத் தெரிகிறது. நாம் ஒவ்வொரு வரிசைக்கும் பத்து லட்சம் டிக்கட்டுகள் என்று வைத்து இதற்கு முன்பு வரை 2½ லட்சம் ரூபாய் ஒவ்வொரு பிரிவுக்கும் பரிசுகளாகக் கொடுத்து வந்ததை தற்போது 3½ லட்சம் ரூபாய் அளவுக்குப் பரிசுகளாகக் கொடுக்கிறோம். ஒரு வரிசைக்கு மொத்தம் 611 பரிசுகள் கொடுக்கிறோம். முதல் பரிசு ஒரு லட்சம், இரண்டாவது பரிசு பத்தாயிரம், முன்பு ஐந்தாக இருந்தது இப்போது பத்தாக உயர்த்தப்பட்டிருக்கிறது. மூன்றாவது பரிசு ஆயிரம் ரூபாய், முன்பு 50 ஆக இருந்தது தற்போது 100 என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. 100 ரூபாய் பரிசு 500 ஆக மொத்தம் 3½ லட்சம் ரூபாயை ஒவ்வொரு வரிசைக்கும் பரிசாகக் கொடுக்கிறோம். பஞ்சாப் போன்ற மற்ற மாநிலங்களில்—நான் மற்ற மாநிலங்களைக் குறைகூறுவதாகக் கருத வேண்டாம்—மொத்தம் 70 லட்சம் ரூபாய்க்கு விற்றிருந்தால் மொத்தத்தில் 5 லட்சம் ரூபாய், இரண்டு லட்சம் ரூபாய் என்று பரிசு கொடுக்கிறார்கள். ஆகவே, நம்முடைய மாநிலத்திலேதான் ஒவ்வொரு வரிசைக்கும் 3½ லட்சம் ரூபாய் பரிசாகக் கொடுப்பதன் மூலமாக அதிகமான அளவுக்குப் பரிசுகளாகக் கொடுக்கிறோம். பொதுமக்களும் இதை நன்றாகப் புரிந்து கொண்டு நல்ல வகையில் பரிசுச் சீட்டுகளை வாங்க முன்வரவேண்டும்.



திரு. நா. வீராசாமி : பொதுவாக வெளி மாநிலங்களில் இருந்து வெளியிடுகின்ற பரிசுச் சீட்டுகள் தமிழகத்தில் விற்பனை ஆகக் கூடிய காரணத்தால் நம்முடைய பரிசுச் சீட்டுகளின் விற்பனை கொஞ்சம் குறைந்திருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நான் அதை ஒத்துக் கொள்ளத் தயாராக இல்லை. திரு. மார்டின் அவர்களுடைய கவலையையும் தீர்த்துவிடுகிறேன். நம்முடைய பரிசுச் சீட்டுகள் கடந்த குலுக்கல்கள் வரை 10 கோடி ரூபாய்க்கு மேல் விற்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பத்து கோடி ரூபாய் அரசிற்கு வந்த வருவாய் அல்ல. மொத்த டிக்கட் விற்பனைத் தொகை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

THIRU K. VINAYAKAM : Sir, on a point of order. When the previous question was under discussion, I was asking for an opportunity to put a supplementary question. You have stated that when the next question is taken up, you would give me an opportunity......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானா சொன்னேன் ! நான் அப்படி எந்த அஷ்யூரன்சும் கொடுக்கவில்லை.

THIRU K. VINAYAKAM : Please look into the official proceedings.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது திரு. பழனிவேல் ராஜன் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வருவார்கள்.

## 2. அவையுரிமைக் கேள்வி.

## திரு. பி. ஜி. கருத்திருமன் மீதும் " நவசக்தி நாளிதழ் " மீதும்.

* THIRU PALANIVEL RAJAN : Mr. Speaker, Sir, I seek your consent to raise the folowing matter of privlege against Thiru P. G. Karuthiruman, Leader of the Opposition and also the editor and publisher of the Tamil Daily " Navasakthi " for the publication of the statement alleged to have been given by Thiru P. G. Karuthiruman, Leader of the Opposition at page 3 of the issue of "Navasakthi", dated 20—8—1969 :

" That the following statement, viz.,

[Thiru Palanivel Rajan] [1969 ஆகஸ்ட் 23

"பல உறுப்பினர்கள் குறிப்பாக ஆளும் கட்சிக்கு ஆதரவாக உள்ள உறுப்பினர்கள் கொண்டுவந்த ஒத்தி வைப்புப் பிரேரணைகள் எல்லாம் சபையில் கொண்டுவரப்பட்டு, வாசிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் என்னுடைய தீர்மானம் மட்டும் அது மாணவர்களையும் கல்லூரி மூடப்பட்டதையும் பற்றிய முக்கியமான ஒன்றாக இருந்தும் கூட எந்தவித நியாயமும் இன்றி நிராகரிக்கப்பட்டிருக்கிறது".

He has cast reflection on the conduct of the Hon. Speaker in the discharge of his functions and has also imputed partiality to the Hon. Speaker which is violation of the rights of the House.

Again by the statement :

'கனம் சபாநாயகர் தனது அறையில் அனுமதி கொடுத்திருந்தும் கூட அதற்கு மாறாக, சபையில் கொண்டுவரப்பட முடியாமல் நிராகரிக்கப்பட்டிருந்தாலும்'

The Hon. Leader of the Opposition has made a false statement reflecting on the character and conduct of the Hon. Speaker thereby constituting violation of the privilege of the House.

Again by the statement:

'இது குறித்து கனம் சபாநாயகருக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்குமிடையே நடந்த வாக்குவாதங்கள் முழுவதையும் சபை நடவடிக்கைகளிலிருந்து நீக்கிவிடுமாறு முதலமைச்சர் கேட்டிருக்கிறார். இது சட்டம் ஒழுங்கைக் காக்கத் தவறும் சர்க்காரின் பொறுப்பற்ற போக்கை மக்கள் கண்ணிலிருந்து மறைக்க ஆளுங்கட்சியின் மற்றொரு பாரபட்சமான நடவடிக்கையே இது. மேலும் மாணவரின் குறைகள் என்று ஏதாவது சொன்னாலே சர்க்காருக்கு உடல் நடுங்குகிறது'

He has cast aspersion and also attributed motives to the Hon. Chief Minister in the discharge of his duties as a member of this House. The statement in question arises out of the incident which took place in this House on 19—8—1969. The Hon. Leader of the Opposition had given notice of an adjournment motion on which the Hon. Speaker was pleased to withhold consent. Arising out of the withholding of the consent, the Hon. Leader of the Opposition made certain remarks on the floor of the House. The Hon. Chief Minister in the discharge of his duties as a member of this House invited the attention of the Chair that there should be no discussion on the floor of the House on it and requested that the entire discussion may be expunged. The Hon. Speaker was pleased to order expuncton. Arising out of this incident, the alleged statement appeared in page 3 of the newspaper in question, viz. "Nava Sakthi", dated 20th August 1969. It is a lengthy statement. I have extracted three portions which to my mind amount to a breach of privilege of the rights of this House.



1969 ஆகஸ்ட் 23]

As far as rights and privileges of this House are concerned, according to Article 194 (3) of the Constitution and in view of the fact that our privileges are not codified, the privileges of this House are similar to the privileges of the members of the British House of Commons. In the British House of Commons, I will be able to show that one of the highest acts of breach of privilege is casting aspersion on the conduct of the Hon. Speaker. Philip Laundy in his book 'Office of Speaker' has stated :—

"No personage throughout the structure of British Parliamentary government occupies a higher pinnacle of prestige than the Speaker of the House of Commons. He embodies in his own person the dignity of the nation's representative Assembly. Each individual member receives and is entitled to expect, the same consideration from him."

Further, a very outstanding authority on privileges as far as the British House of Commons is concerned, viz., Sir Thomas Erskine May in his 'Parliamentary Practice' says that reflections on the character of the Speaker and accusation of partiality in the discharge of his duty amount to a high violation of the rights and privileges of the House. Sir, number of cases can be quoted from British House of Commons to show that any aspersion on the conduct of the Speaker would amount to a high violation of the rights of the House.

Even in our Madras Assembly, in 1967 a case of breach of privilege had arisen. I shall refer to it. An hon. Member of the Madras Assembly raised a point of order and told the Hon. Speaker that he had been raising his hand to put a question for the past half an hour but that the Hon. Speaker had not given him opportunity to put any supplementary but that he was sorry to state that the Hon. Speaker had given opportunity to put supplementaries only to members of the ruling party and not to persons like him, belonging to the Opposition, even though they in the Opposition were raising their hands. The hon. Member then continued saying that this situation should not continue. He also requested the Hon. Speaker to decide whether he would allow such concession only to members of the ruling party or to members of the Opposition also. Thereupon the Hon. Speaker held that there was a *prima facie* case of breach of privilege and *suo motu* referred it to the Privileges Committee. The Privileges Committee also unanimously held that there was a prima facie case of breach of privilege. The hon. Member concerned was asked to appear before the Privileges Committee. The hon. Member concerned said that he never meant any disrespect to the House or to the Chair. But the Committee unanimously pointed out that words used by him cast reflections on the integrity and impartiality of the Hon. Speaker, whereupon the hon. Member concerned expressed his regret. Then the matter was dropped. It may be pertinent to point out that Thiru P. G. Karuthiruman was a member of the Privileges Commtitee at that time.

As far as this matter is concerned, the Hon. Leader of the Opposition is alleged to have said that the Hon. Speaker was adopting two standards with regard to disposal of adjournment motions, one standard with regard to motions brought forward by the Opposition Party and another standard with regard to motions brought forward by members of parties who are in coalition or who belong to the ruling party. My submission to you, Sir, would be this. Irrespective of the relevancy of the material in question and irrespective of the fact whether the allegation brought forward is based upon fact, the mere fact that it casts reflection on the Speaker's conduct, which could never be discussed on the floor of the House, it amounts to gross breach of privilege of the House. Speaker's conduct can never be discussed on the floor of the House except by a motion of 'no confidence against the Speaker'. Any aspersion cast on the Speaker would definitely amount to gross breach of privilege.

The second extract is as follows :—

'கனம் சபாநாயகர் தனது அறையில் அனுமதி கொடுத்திருந்தும் கூட அதற்கு மாருக, சபையில் கொண்டுவரப்பட முடியாமல் நிராகரிக்கப்பட்டிருந்தாலும்'

The Hon. Leader of the Opposition is alleged to have said that the Speak· gave permission to him in his Chamber. Nowhere has the Speaker admitted that permission was given in his Chamber to the Hon. Leader of the Opposition to bring forward this motion. When such is the case, to say that the Speaker had given permission in his Chamber to raise the motion, Definitely amounts to 'misrepresentation'. There is insinuation that here again the Speaker had adopted double standard, one standard in his Chamber and another on the floor of the House. My submission is that by a reference like this to the Speaker, a *prima facie case* of breach of privilege has arisen. If there are allegations against the Speaker, it could be brought forward only by a motion of 'no confidence' against him, on the floor of the House. Any reflection, otherwise, on his conduct amounts to gross breach of privilege. As I said earlier, our Parliamentary freedom is based on the principle that Speaker's decision is final. It is immaterial whether the decision is based on false report or not. When there was a discussion on your refusing to give permission to the Hon. Leader of the Opposition to move his motion, the Hon. Chief Minister in his capacity as a member of this House drew your attention that the Assembly proceedings should not show that there was a discussion on the Speaker's ruling and that it would lower the prestige of the House, that it would diminish the reputation of this House if proceedings were to show that a person of the stature of the Hon. Leader of the Opposition attempted to question the Speaker's decision. The Hon. Leader of the Opposition attributed motives to the Hon. Chief Minister that he was heading a Government which could not maintain law and order and such a person wanted to suppress facts and was now pleading



for expunction of the proceedings. He has thus imputed motives against the Hon. Chief Minister, a member of this House. My submission is that this amounts to misrepresention. Imputing motives against a member of the House, and more so, against the Chief Minister, is a breach of privilege of this House. It is most unfortunate that a seasoned pariliamentarian like the Hon. Leader of the Opposition should set unhealthy precedents by casting reflections on the Speaker, in the statement issued to Press. I am quite sure that the statement was issued in the heat of the moment. No statement should be made to any newspaper or even on the floor of the House which casts reflections on the conduct of the Speaker. Attributing motives against a member of the House and more so against the Hon. Chief Minister is also a breach of privilege of the House. The matter is of recent occurrence. A *prima facie* case has been made out and I request that suitable action may be taken.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகரவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் என்பேரில் உரிமைப்பிரச்சினை கொண்டு வந்திருக்கிருர்கள். உரிமைப் பிரச்சினை கொண்டுவருவதற்கு யாருக்கும் உரிமையிருக்கிறது, அதை இல்லை என்று மறுக்கவில்லை. ஆனல் இந்த நிகழ்ச்சி நடந்ததற்கும், உரிமைப் பிரச்சினை கொண்டு வருவதற்கும் இடையில் எவ்வளவு நாள் இருக்கிறது என்பது முக்கியமான பிரச்சினை. 19-ஆம் தேதி நடந்த நிகழ்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பத்திரிகையிலே வந்தது 20-ஆம் தேதி.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இன்று 23-ஆம் தேதி. நான் நடந்தது பூராவும் சொல்லுகிறேன். அதற்கு எனக்கு உரிமையிருக்கிறது. இதற்குக்கூட உரிமைப்பிரச்சினை இருக்காது என்று நினைக்கிறேன். பத்திரிகையிலே அறிக்கை விடுத்ததை நான் பூரண பொறுப்போடு ஏற்றுக்கொள்ளுகின்றேன். அதிலிருந்து தப்பித்துக் கொள்ள நான் தயாராக இல்லை. அதாவது பத்திரிகையிலே கொடுத்த அறிக்கை, அதை வைத்து சபாநாயகரை மீறி ஏதோ குற்றச்சாட்டு சாட்டுவதாக அவர்கள் கூறியிருக்கிருர்கள். நான் குற்றச்சாட்டு சாட்ட வேண்டுமென்ற எண்ணத்தில் இல்லை. நடந்த நிகழ்ச்சியை சொன்னேனே தவிர, குற்றச்சாட்டு சாட்ட வேண்டுமென்ற எண்ணத்திலே, குற்றச்சாட்டு என்று சொல்லும்படியான நிலையிலே சொல்லவில்லை. அதற்காக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்து இதைச் செய்து கொள்ளுங்கள் என்று அவர்கள் கூறிய ஆலோசனைக்காக என்னுடைய மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். குற்றச்சாட்டு என்ருல் என்ன குற்றச்சாட்டு? சபாநாயகரவர்கள் கொடுத்த தீர்ப்பு தவறு என்று நான் சொல்லவில்லை. அறையிலே சொன்ன சமயத்தில் சபையிலே எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னதை நான் பூரண பொறுப்புடன் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** இந்த இடத்திலே ஒரு விளக்கம். 16-ஆம் தேதி அலுவல் ஆய்வுக்குழு நடந்த நேரத்தில், அப்பொழுது எல்லாக் கட்சித் தலைவர்களும் வந்திருந்த நேரத்தில், எந்தப்பொருள்பற்றி ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்தார்களோ அந்தப்பொருள்பற்றி அவையிலே விவாதிப்பது நாட்டிற்கும், நமக்கும் நல்லதுதானா என்ற கேள்வியை நான் எழுப்பியது உண்டா, இல்லையா ?

***திரு. பி. ஜி. கருத்திருமன் :*** வேண்டுமென்பது, வேண்டாமென்பது வேறு விஷயம். எத்தனையோ விஷயங்களை வேண்டாமென்று சொல்லலாம்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** 16-ஆம் தேதி நடந்த அலுவல் ஆய்வுக்குழுவிற்கு எல்லாக் கட்சித் தலைவர்களும் வந்திருக்கிறார்கள். அந்த நேரத்தில், எதிர்க்கட்சித் தலைவாவர்கள் எந்தப் பொருள்பற்றி ஒரு ஒற்றி வைப்புத் தீர்மானம் கொடுத்தார்களோ அந்தப் பொருள்பற்றி அவையிலே பேசுவது நாட்டிற்கும், கட்சிக்கும் நல்லதுதானா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டது உண்மையா இல்லையா என்று சொல்ல வேண்டும்.

***திரு. பி. ஜி. கருத்திருமன் :*** ஏற்றுக்கொள்வது, ஏற்றுக் கொள்ளாதது வேறு விஷயம்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** என்னுடைய கேள்விக்குப் பதில் என்ன ? நான் அவ்வாறு கேட்டுக்கொண்டது உண்மையா, இல்லையா ?

***திரு. பி. ஜி. கருத்திருமன் :*** இதிலிருந்து அது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்று ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள் என்பது தெரிகிறது.

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** நான் கேட்டது உண்டா, இல்லையா ?

***திரு. பி. ஜி. கருத்திருமன் :*** நான் இல்லை என்று சொல்லவில்லை. அந்த நிலையிலே இதை விவாதிப்பது நல்லதா கெட்டதா என்று பிரச்சினையே தவிர, அந்தப் பிரச்சினையைத் தள்ளிவிடுவது என்பது வேறு விஷயம். அதைத் தவறாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதைச் சட்டசபையிலே கொண்டு வந்து தள்ளியிருப்பார்களானால் வேண்டாமென்று சொல்லவில்லை. 16-ஆம் தேதி யன்று நான் கொடுத்ததற்கு, 19-ஆம் தேதி காலையில் 9-55 மணிக்கு என்னிடம் நோட்டீஸ் வழங்கப்பட்டது.

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** 14-ஆம் தேதி நாம் கூட்டத்தை ஒற்றிவைத்தோம். 15-ஆம் தேதி விடுமுறை. 16-ஆம் தேதிய அலுவல் ஆய்வுக் குழுவில் பேசினோம். 19-ஆம் தேதி முடிவைக்



கொடுக்கக்கூடிய நேரத்திலே, நீங்கள் சட்டசபைக்கு 10 நிமிடங்கள் கழித்துத்தான் வந்திருக்கிறீர்கள். 10 நிமிடங்கள் கழித்து வந்த காரணத்தினால், கேள்வி நேரத்தில் பணியாளர்கள் உள்ளே நுழையக்கூடாது என்ற எண்ணத்தினால் காத்திருந்தார்கள். கேள்விநேரம் முடிந்தபிறகு தங்களிடம் கொடுக்கப்பட்டது.

***திரு. பி. ஜி. கருத்திருமன் :*** 18-ஆம் தேதி பேசவேயில்லையா ? 18-ஆம் தேதி பேசியபொழுது என்ன பேசினோம்? ஆய்வுக்குழுவிலே பேசியதைப்பற்றி நீங்கள் பேசும்பொழுது, அதற்கு உரிமை இருக்கும்பொழுது நானும் கேட்பதற்கு உரிமையிருக்கிறது. நீங்கள், நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னது உண்டா, இல்லையா என்று கேட்க விரும்புகிறேன். 18-ஆம் தேதி காலையிலே தனியாகப் பேசும்பொழுது அடுத்த நாள் எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னது உண்மையா இல்லையா ?

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** அதற்கெல்லாம் அன்றைக்கே பதில் சொல்லியிருக்கிறேன்.

***திரு. பி. ஜி. கருத்திருமன் :*** ஆகவே, சபாநாயகர் கொடுத்த தீர்ப்பு தவறு என்று சொல்லி அதை நான் மீறியிருக்கிறேன் என்று சொன்னால் அது தவறு. சபாநாயகர் கொடுத்த தீர்ப்பு தவறு என்று நான் சொல்லவில்லை. அவ்வளவு புத்தியில்லாதவன் நான் அல்ல. சபாநாயகர் கொடுத்த தீர்ப்பு என்று சொல்லவில்லை. இந்தச் சபையிலேயும், பாராளுமன்றத்திலேயும் நான் இருந்ததைச் சொன்னார்கள். அவ்வாறு சொன்னதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். எனவே, அவ்வளவு புத்தியில்லாதவன், கட்சியிலே, கட்சித் தலைவனாக இருக்க முடியாது. பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் பேசினேன் என்று சொன்ன சமயத்தில், இது எவ்வளவு பெரிய விஷயம் என்று நீங்களே ஏற்றுக்கொண்டு இருக்கிறீர்கள். நான் தனியாகப் பேசிய நேரத்தில், எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னது உண்டா, இல்லையா ? அதை மறுப்பது என்பது பிரச்சினை அல்ல. எத்தனையோ ஒற்றிவைப்புத் தீர்மானங்களைப் படித்திருக்கிறார்கள். அவைகள் முக்கியமா இல்லையா என்பது வேறு பிரச்சினை. அவர்கள் தீர்ப்புக் கொடுத்து விட்டார்கள் என்னும்படியான நிலையில் அதைத் தவறு என்று சொல்லவில்லை. எதிர்க்கட்சித் தலைவராகயிருந்தும், நான் அதிகமாக ஒற்றிவைப்புத் தீர்மானங்களைக் கொண்டுவருவதில்லை. இந்தப் பிரச்சினையைப்பற்றி நான் நேரடியாக விசாரித்து வந்தேன், அப்படியிருக்கும்பொழுது இதைப்பற்றிச் சொல்லுவதற்குக்கூட சந்தர்ப்பம் இல்லையே என்றுதான் கேட்க நினைக்கிறேன். அதைக் கொண்டுவந்து, அதில் உங்கள் தீர்ப்பு எப்படியிருந்தாலும் அதை ஏற்றுக் கொண்டிருப்போம்.

வெளிநடப்பு நடந்ததற்கான பிரச்சினைகளை முதலமைச்சரவர்கள் நடவடிக்கைக் குறிப்பில் இருக்க வேண்டாமென்று சொல்லி நீங்கள், சபாநாயகரவர்கள் தள்ளிவிட்டீர்கள்,

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1969 ஆகஸ்ட் 23

"முதலமைச்சரை எப்படிச் சொல்லலாம்?" என்று கேட்டார்கள். யாருக்கும் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. அதற்காகத்தான் என்னை உட்கார வைத்திருக்கிறார்கள். நாங்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்த நேரத்தில், முன்னாள் முதலமைச்சர் இருந்தபொழுது, தர்மமற்ற ஆட்சி, செயலற்ற ஆட்சி, நியாயமற்ற ஆட்சி என்று சொல்லியிருக்கிறேன். அதற்கு உரிமைப்பிரச்சினை கொண்டு வந்திருப்பதுதானே? மந்திரிசபையின்மீது எந்தக் குற்றச்சாட்டையும் சாட்டலாம், எதையும் சொல்லலாம், சொல்வதற்கு உரிமையிருக்கிறது, ஜனநாயகத்தில் எதிர்க்கட்சிக்கு அந்த உரிமை இருக்கிறது. பெரிய வக்கீல் படித்த அவர்கள், "முதலமைச்சர்மீது இப்படிச் சொல்லலாமா?" என்று கேட்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். தலைவரவர்களே, எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பேசும் பொழுது, இந்த அமைச்சரவையின்மீது எந்தக் குற்றச் சாட்டையும், எதையும், எப்படியும் சொல்லலாம் என்று சொன்னார்கள். அப்படிச் சொல்ல, அவ்வளவு பொறுப்பற்ற தன்மையில் எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இருக்கிறார்களா? சொல்வதற்கான ஆதாரத்தை வைத்துக்கொண்டுதான் சொல்ல வேண்டுமென்று அவர்கள் ஒத்துக்கொள்ளுகிறார்களா இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** ஆதாரத்துடன் சொல்வதை நீங்கள் ஏற்றுக்கொள்ளலாம், விசாரணைக்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். நான் இன்னும் சொல்லப் போகிறேன். சப்ளிமெண்ட்ரி கிராண்டிலே ஒரு மணி நேரம் சொல்லப் போகிறேன். இப்பொழுது வருகிறது. ஆகவே, முதலமைச்சரவர்கள் பொறுப்பற்றவர் என்று சொல்ல, தவறு இழைத்து விட்டார் என்று சொல்லக்கூட உரிமை இல்லையா? சொன்னால், ஐயோ, இப்படிச் சொல்லிவிட்டார்களே என்று சொல்லுகிறார்கள். **ஐயா, இதை உங்கள் கட்சிக்குள், வைத்துக்கொள்ளுங்கள், மாலை** போடுங்கள், வேண்டாமென்று சொல்லவில்லை. நாங்கள் தவறுகளைச் சொல்லத்தான் இருக்கிறோம். தவறைத் தவறு என்று சொல்லக்கூடாதா, என்ன? ஆகவே, நான் உரிமையை மீறவில்லை. சபாநாயகர் பதவிக்கு எந்தவிதமான இழுக்கோ, மாசோ கற்பிக்க முற்படவில்லை என்று நான் சொல்லுகிறேன். அதற்கு மீறி, நீங்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டால் அதையும் நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பேரவைத் தலைவரவர்களே, **மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல்ராஜன் அவர்கள் எதிர்க்** கட்சி தலைவர் மாண்புமிகு திரு. கருத்திருமன் அவர்கள்மீது **கொண்டு வந்திருப்பது உரிமைப் பிரச்சினையாகும். இது எப்படி** உரிமைப் பிரச்சினையின்கீழ் வருகிறது என்பதற்கான நீண்ட விளக்கங்களை ஆதாரங்களோடு திரு. பழனிவேல்ராஜன் அவர்கள்



1969 ஆகஸ்ட் 23] [திரு. மு. கருணாநிதி]

இங்கே எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் அதற்கான விளக்கங்களுக்கு மறுப்புரைகள் எதுவும் தராமல் இங்கே 19-ஆம் தேதி நடந்த நிகழ்ச்சியைப்பற்றி மறுபடியும் விமர்சித்தாரே தவிர, திரு. பழனிவேல்ராஜன் அவர்கள், உரிமைப் பிரச்சினையின்கீழ் வருகிறது என்று சொன்னதற்கான விளக்கங்களுக்கு எந்த விதமான மறுப்பும் தரவில்லை. சட்டசபையின் நடவடிக்கைகளில், அன்றைய தினம் நடந்த சில விவாதங்கள் இந்த மன்றத்தினுடைய மரபை மீறி நடைபெற்றதால் அவைகள் நடவடிக்கைக் குறிப்பிலே ஏறுதல் தகாது என்ற அளவில் நான் முதலமைச்சர் என்னும் முறையில் மாத்திரம் அல்ல, இந்த மன்றத்திலேயுள்ள எந்த ஒரு உறுப்பினருக்கும் இருக்கின்ற உரிமை உணர்வோடு அந்த உரிமையைப் பயன்படுத்திக்கொண்டு, சபாநாயகராகிய தங்களைப் பார்த்து, இதை, இந்த விவாதத்தை, சட்டமன்ற நடவடிக்கைப் **புத்தகத்திலிருந்து எடுத்துவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். இதிலே சில வார்த்தைகள் என்று நீக்கினால் அதற்குத் தரப்பட்ட பதில் தனித்தனியாகத் தொடர்பின்றி நின்று** விடக்கூடும். ஆகவே, தொடர்பின்றி அவைகள் சட்டமன்ற நடவடிக்கைப் புத்தகத்தில் இருக்கக்கூடாது என்ற காரணத்தினால் அந்தப் பொருள்பற்றிய விவாதத்தை, தங்களுக்கும், எதிர்க் கட்சித் தலைவருக்கும் நடந்த பேச்சுக்கள், இடையிலே நான் குறுக்கிட்டுச் சொன்ன அந்த வார்த்தைகள் உட்பட அனைத்தையும் **எடுத்துவிடுவது இந்தச் சபையின் மரபுக்கு, மாண்புக்கு, பெரு**மைக்கு ஏற்றவகையில் அமையும் என்கின்ற காரணத்தால் அவற்றை எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். தாங்களும் அவற்றைச் சட்டமன்ற நடவடிக்கைப் புத்தகத்திலிருந்து எடுத்துவிட வேண்டுமென்று ஆணை பிறப்பித்தீர்கள். சட்டமன்ற புத்தகத்திலிருந்து சில விஷயங்களை எடுத்துவிட வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கிறார்கள் என்றால் அவைகள் ஏடுகளிலும் வருதல் ஆகாது என்ற பொருளில், பத்திரிகை நிருபர்கள் தாங்கள் முதலிலே விஷயங்களைக் குறித்துக் கொண்டாலும், பிறகு அவைகள் தங்கள் செய்தி ஏடுகளில் வராமல் பார்த்துக்கொள்ளுவது தலையாய கடமை என்று கருதி அவைகளைப் பத்திரிகைகளில் வெளியிடவில்லை.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் நவசக்தி என்கின்ற நாளிதழ் ஒன்றில் இதுபற்றிய முழு விவரங்களையும் தெரிவித்து ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்தார்கள். அந்த அறிக்கை அந்தப் பத்திரிகையிலே மாத்திரம்தான் வந்திருப்பதாக அறிகிறேன். அது எல்லாப் பத்திரிகைகளுக்கும் தரப்பட்ட அறிக்கையாகக்கூட இருக்கக் கூடும். மற்றப் பத்திரிகைகள் எல்லாம், இது சபையினுடைய நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடப்பட்ட விஷயங்களைக் கொண்ட அறிக்கையாக இருக்கிற காரணத்தால் போடுவது முறையாகாது என்று அந்த

அறிக்கையைப் போடாமல் விட்டுவிட்டார்கள் என்பதும் இதிலிருந்து நன்றாக நமக்குத் தெரிகிறது. ஆகவே, பத்திரிகையில் வந்திருக்கிற விஷயத்தில் சபாநாயகர் அவர்கள் தவறாக நடந்து கொண்டார்கள் என்று அப்பட்டமாகச் சொல்லாவிட்டாலும் தவறாகத்தான் நடந்து கொண்டார்கள் என்ற பொருள்படும்படியான அந்தக் கருத்தினைத்தான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதிலே தந்திருக்கிறார்கள். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல்ராஜன் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டினார்கள்.

முதலமைச்சர், சட்டம், ஒழுங்கு, அமைதி நிலைநாட்டப்படவில்லை என்பதை மறைப்பதற்காகத்தான் இவைகளை எல்லாம் எடுத்து விடக் கோரினார் என்று குற்றம் கூறுவது முறையாகாது. அந்தக் குற்றங்களை ஆதாரத்தோடு அவர்கள் சொல்வார்களானால், அவைகள் ஒப்புக் கொள்ளத்தக்க நிலைமையிலே இருந்தால், நாங்கள் அதற்குப் பரிகாரம் தேடக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்தப் பரிகாரங்கள் நாங்கள் மன்னிப்புக் கேட்பதாகவும் இருக்கலாம், அல்லது இந்த அமைச்சர் பதவியிலிருந்து விலகுவதாகவும் இருக்கலாம். அதற்காக நாங்கள் என்றைக்கும் தயாராக இருக்கிறோம். ஆனால் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் சாட்டியிருக்கிற குற்றமே, நாட்டில், சட்டம் அமைதி கெட்டிருக்கிற நேரத்தில் நான் மறைக்கின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறேன் என்று கூறுவது உள் நோக்கம் கற்பிப்பதாக இருக்கிறது. சபையில் உள்நோக்கம் கற்பித்துப் பேசுவது அல்லது சபை நடவடிக்கைகளைப்பற்றி உள்நோக்கம் கற்பித்துத் தவறுதலாக அறிக்கைகள் விடுவது நல்லதல்ல. அதைத்தான் மாண்புமிகு திரு. பழனிவேல்ராஜன் அவர்கள் இங்கே, வெகு விளக்கமாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

இன்னும் சொல்லப்போனால், இந்தச் சர்க்காருக்கும் அந்த நிகழ்ச்சிக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. ஏதோ தனிப்பட்ட நிறுவனத்தில் நடந்திருக்கிற நிகழ்ச்சி அது. போலீஸாருடைய தலையீட்டை அவர்கள் கேட்டிருப்பார்களானால் இவர்கள் அந்தக் கோரிக்கையை நிறைவேற்றி இருக்கக் கூடும். ஆக, முழுக்க, முழுக்கச் சர்க்காருக்குச் சம்பந்தம் இல்லாத ஒரு நிகழ்ச்சியை ஒற்றிவைப்புத் தீர்மானமாகக் கொண்டுவந்ததைப்பற்றித்தான் சபாநாயகர் அவர்கள் சேர்க்கக் கூடாது என்று கூறி இருக்கிறார்கள். இப்பொழுது, சேர்க்கப்பட்டது முறையா, இல்லையா என்பதல்ல பிரச்னை. அந்த நடவடிக்கைகள் சட்டமன்ற ஏட்டிலே இருக்கக் கூடாது என்று தெரிவித்தபிறகும், ஏடுகளிலே வரக்கூடாது என்று அறிவித்த பிறகும், அதை ஏடுகளிலே வரத்தக்க விதத்தில் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அறிக்கையாகவிட்டது முறை அல்ல. அதைத்தான் திரு. பழனிவேல்ராஜன் அவர்கள் உரிமைப் பிரச்னையாகக் கொண்டு வந்திருக்கிறார்கள்.





எதிர்க் கட்சித் தலைவர்மீது உரிமைப் பிரச்னை வருவதை ஆளும் கட்சியினராகிய நாங்கள் உள்ளபடியே விரும்பவில்லை. எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள்மீது கொண்டிருக்கிற நீண்ட நாள் அன்பு மாத்திரம் காரணமல்ல. எதிர்க் கட்சித் தலைவர் உரிமைப் பிரச்னைக்கு ஆளாகி இருக்கிறார் என்ற மன்றத்தினுடைய மரபுக்கு முதலிலே ஆரம்பமிடக்கூடாது என்பதுதான் என்னுடைய எண்ணமாகும், ஆளும் கட்சி வரிசையிலே உள்ள அனைவருடைய எண்ணமாகும். அந்த அறிக்கையை நான் உள்நோக்கத்தோடு விடவில்லை என்று நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒப்புக் கொள்வார்களானால் சபாநாயகர் அவர்கள், முதல் தடவையாக, இது இந்தச் சபையிலே விவாதிக்கப்பட்டது என்கின்ற அளவோடு விட்டுவிட்டு, இதை உரிமைக் குழுவுக்கு அனுப்பாமல் இருக்க அவர்கள் நடவடிக்கை எடுக்கலாம் என்கின்ற சிபாரிசினை நான் செய்துகொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்தான் இதுபற்றிய முடிவினை இப்பொழுது அறிவிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : முடிவை நான் நாளைக்குத் தெரிவிக்கிறேன்.

அடுத்து, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொதுமுக்கியமான காரியத்திற்கு அறிவிப்புக் கொடுத்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர் திரு. கரு. சீமைச்சாமி அவர்கள் இருக்கையில் இல்லை.

## 3. அறிவிப்புகள்.

### (i) மதுரை பல்கலைக் கழக ஆட்சிக்குழுவிற்கான தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்காகக் கீழ்க்கண்ட ஐவருடைய பெயர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளன :—

1. திரு. பி. கே. மூக்கையா தேவர்.
2. திரு. அ. லெ. சுப்பிரமணியம்.
3. திரு. பெ. மலைச்சாமி.
4. திரு. என். எஸ். வி. சித்தன்.
5. திரு. டி. தங்கப்பன்.

அவர்களில் திரு. டி. தங்கப்பன் தன் வேட்புத்தாளை திரும்பப் பெற்றுக் கொண்டதால், முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஒத்திருப்பதால், அதாவது நான்கு என்பதால், திரு. பி. கே. மூக்கையா தேவர், திரு. அ. லெ. சுப்பிரமணியம், திரு. பெ. மலைச்சாமி, திரு. என். எஸ். வி. சித்தன்

ஆகிய நான்கு வேட்பாளர்களும் மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

**4. அரசினர் மசோதாக்கள்.**

**(i) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு கூடலூர் ஜென்மம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 4/69.)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, 1969-ம் ஆண்டு கூடலூர் ஜென்மம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 4/69) மீதான ஆய்வுக்குழுவின் அறிக்கையை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பேரவைக்கு அளிப்பார்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1969-ம் ஆண்டு கூடலூர் ஜென்மம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண். 4/69) மீதான ஆய்வுக்குழுவின் அறிக்கையை* பேரவைக்கு அளிக்கிறேன்.

**5. 1965-66-ம் ஆண்டில் அதிகப்படி செலவிற்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, 1965-66-ம் ஆண்டில் அதிகப்படியான செலவிற்கான மானியக் கோரிக்கைகள். இதிலே டிஸ்கஷன் வேண்டியதில்லை, துணைமானியக் கோரிக்கைகள்மீது டிஸ்கஷன் வைத்துக் கொள்ளலாம். இதை வாக்கெடுப்புக்கு விடலாம்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, "பொதுக்கணக்குகள் குழுவின் பரிந்துரைகளின்மேல் ஆளுநர் அவர்களின் இசைவுபெற்று, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 20—8—1969 தேதிய அறிவிப்பில்ª கண்டுள்ள நிதிக் கோரிக்கைகளுக்காக தனித் தனியாக கோரப்பட்டுள்ள தொகைகளை அரசுக்கு வழங்க வேண்டும்" என முன் மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பூராவிற்குமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஆமாம் பூராவிற்கும்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்ட தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிதிக்கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு கோரிய தொகைகள் வழங்கப்பட்டன.

THIRU K. VINAYAKAM : Even supposing that the Grants that we are going to approve relate to expenditure incurred some years back, the rules are very clear that the demands for grants will have to be moved and voted here. We may be short of time But that does not mean that we should hustle things.

---

* Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 23rd August 1969.

ª 204-207ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



மொத்தம் ஏற்றுக்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது என்ன பொதுக்கூட்டமா? மொத்தம் ஏற்றுக்கொள்வதாகத் தெரிவிப்பதற்கு.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பொதுக் கூட்டம் இல்லை. சட்டசபையில் சில மரபுகள் இருக்கின்றன.

THIRU K. VINAYAKAM : I am very serious about maintaining some order in the House. I have been trained like that. I cannot help it.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் விநாயகத்தினுடைய கருத்தை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் விதிமுறைகள் என்று சொன்ன நேரத்திலே அது நடைமுறைக்குக் கொஞ்சம் வசதியாக இருக்கவேண்டுமென்று சில நேரத்திலே அதை மாற்றிக் கொள்ளுகிறோம். அந்த வகையிலே ஒவ்வொரு முறையும் நிதியமைச்சர் எழுந்து கொள்ள வேண்டும், நானும் எழுந்துகொள்ள வேண்டும். (திரு. கோ. பூவராகன் : இட் இஸ் யுவர் ட்யூட்டி). ட்யூட்டி தான், காலத்தையும் நேரத்தையும் வீணாக்காது . . . .

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாக்கெடுப்பு எப்படி எடுப்பது என்பதை பேரவைத் தலைவர் அவர்களே முடிவு செய்ய வேண்டுமேயொழிய, பேரவை முடிவுசெய்யவேண்டிய காரியம் அல்ல என்பது சட்டப் பேரவைகளின் 71(2)-வது உள்விதியை வாசித்தால் தெரியும். அதில்—

The Speaker shall determine the method of taking votes by division என்று இருக்கிறது.

ஆகவே, தனியாக விடுவதா, எப்படி விடுவது என்பதெல்லாம், the Speaker shall decide.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர் பழைய ஞாபகத்திலே பேசுகிறார். இந்த விதி எப்படி ஓட்டு எடுக்கவேண்டுமென்று இருக்கிறது, அதாவது வாய்ஸ் ஓட்டா, டிவிஷனா என்பதை சபாநாயகர் முடிவுசெய்ய வேண்டுமென்று இருக்கிறதேயொழிய இதுமாதிரி எல்லாவற்றையும் எடுத்து பாஸ் பண்ணவேண்டுமென்று சொல்லமுடியாது. இப்பொழுது சௌகரியத்திற்காக சொல்லப்பட்டதே அதை வைத்துக்கொண்டு அவர் தப்பர்த்தம் கூறுவது முறையல்ல.

THIRU K. VINAYAKAM : On a point of privilege. Sir. An ex-Speaker quotes something from the Rules Book and tries to mislead you, mislead me, mislead the Government and mislead the entire House. He may be through he may be well read. But he must know what he is talking. He cannot get away. You should pull him up and take him to task. This is not the way.

**6. 1969-70-ம் ஆண்டிற்கான கூடுதல் செலவு குறித்த முதல் துணை நிதி அறிக்கை மீது பொது விவாதம்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, 1969-70-ம் ஆண்டிற்கான செலவு குறித்து முதல் துணை நிதி அறிக்கைமீது பொது விவாதம், திரு. ராமச்சந்திர துரை அவர்கள்-

* திரு. ரா. ராமச்சந்திர துரை : சபாநாயகர் அவர்களே, துணை மானியக்கோரிக்கையின்மீது நடைபெறுகின்ற . . .

டாக்டர் எச். வி. ஹாண்டே : கட்மோஷன்ஸ் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வாக்கெடுப்பின்போது தான்.

திரு. ரா. ராமச்சந்திர துரை : துணை மானியக்கோரிக்கையின் மீது நடைபெறுகின்ற விவாதத்தில் பங்குகொண்டு என்னுடைய கருத்துக்களை இந்த மன்றத்தில் அறிவிப்பதற்குச் சந்தர்ப்பம் அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். 1962-67-ம் ஆண்டுகளுக்கிடையே காங்கிரஸ் ஆட்சி நடந்துகொண்டிருந்த நேரத்தில் . . . .

Thiru K. VINAYAKAM : On a point of order, Sri. A Supplementary demand is something like a regular budget demand in which the Minister will have to move the Demand who ever has given notice of a cut motion will have to move it, and then only the discussion should start. Why are you upsetting the entire procedure followed previously?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பொது விவாதம். இப்பொழுது கட் மோஷன் மூவ் பண்ணுவது இல்லை. அதற்குப் பிறகு மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு எடுக்கப்படும்போது தான் கட் மோஷன்ஸ்.

Thiru K. VINAYAKAM : You want to simplify and save time.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பொது விவாதம்- மந்திரி அவர்கள் இப்பொழுது பேசவேண்டியதில்லை- மானியக் கோரிக்கையை பேரவைக்கு அளித்த நேரத்தில் அச்சடித்த புத்தகத்திலிருந்து நீண்ட உரையைப் படித்துவிட்டார்கள் அமைச்சர் அவர்கள். இப்பொழுது பொது விவாதம்- விவாதம் முடிந்தவுடன் வோட்டு எடுக்கப்படும். வோட்டு எடுக்கிற நேரத்தில் மற்ற நிகழ்ச்சிகள்-எல்லாவற்றையும் போட்டு குழப்பிக்கொண்டிருக்கிறீர்களே ? திரு. ராமச்சந்திர துரை.

திரு. ரா. ராமச்சந்திர துரை : தலைவர் அவர்களே, 1962-67-ல் காங்கிரஸ் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்த நேரத்தில் இந்த நாட்டில் இயற்கையின் கோளாறின் காரணமாக பஞ்சம் ஏற்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் துணை மானியக் கோரிக்கையின் பேரில் விவாதமும், வாக்கெடுப்பும். பிறகு நம்முடைய நிகழ்ச்சி நிரலில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிய விவாதம் தொடரும் என்று போடப்பட்டிருக்கிறது. இன்றைக்கு முழுக்க இந்த மானியக்கோரிக்கையையே வைத்துக் கொள்ளலாமா அல்லது ஒரு குறிப்பிட்ட நேரத்தை இதற்கு ஒதுக்கிவிட்டு, ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிய விவாதத்தைத் தொடரலாமா?



மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஒரு மணிக்கு இதை முடித்தாக வேண்டும். ஒரு மணி அடித்தவுடன் அதற்கு மேலே இதைத் தொடரக் கூடாது. ஒரு மணிக்குள் மந்திரி பதில் சொல்கிற அளவிற்கு நாம் வரம்பு முறையை நிர்ணயித்துக்கொண்டு, இதை முடிப்பதற்கு ஏற்பாடு செய்தால் உபயோகமாக இருக்கும்.

திரு. ரா. ராமசந்திர துரை : 1962-67-ல் இந்த நாட்டில் இயற்கைக் கோளாறின் காரணமாக மழையின்மையால் பஞ்சம் ஏற்பட்டது. அப்படி பஞ்சம் ஏற்பட்டிருந்த நேரத்தில் இப்பொழுது ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கிற தி.மு.க. எதிர்க் கட்சியாக இருந்த நேரத்தில், இந்த மகானுபாவன்கள் காலத்தில் பஞ்சம் என்று எதிர்க்கட்சியிலிருந்து பேசினார்கள். இப்பொழுது இந்த நாட்டில் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. பஞ்சத்திற்குப் பதிலாக வரட்சி என்று பெயரை மாற்றியிருக்கிறார்கள்- நாட்டில் இப்பொழுது பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. தமிழக அரசு ஆட்சி பீடத்தில் அமர்ந்ததற்குப் பிறகு இந்த நாட்டில் நீதி, நிர்வாகம் சம்பந்தமாக பல குழப்பங்கள் ஏற்பட்டு, மக்கள் மிகவும் ஒரு நெருக்கடியான நிலையிலே இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்கள் ஒப்புக்கொள்ளதான் வேண்டும். ஆனால், எதிர்க்கட்சியில் இருக்கிற தி.மு.க. வேற்று மனிதர்கள் அல்ல (குறுக்கீடு) ஆனால் கட்சியில் இருக்கிற தி.மு.க. வேற்று மனிதர்கள் அல்ல- 200 ஆண்டுகளுக்கு வெள்ளையர்கள் இந்த நாட்டை ஆண்டார்கள். நமது முன்னாள் முதல் அமைச்சர் அவர்கள் 'கித் அண்டு கின்' என்று சொல்வார்கள். ரத்தத்திற்குள் ரத்தம், சதைக்குள் சதை என்று சொல்வார்கள். அவர்கள் ஆளுவதைப்பற்றி காங்கிரஸ் கட்சிக்கு வெறுப்போ, அதிருப்தியோ எதுவும் கிடையாது. ஆனால் ஆட்சியில் அவர்கள் இருக்கிற இந்த நேரத்தில், மக்களுக்கு ஒரு நெருக்கடியான நிலை ஏற்பட்டிருக்கிறது. தேர்தல்களுக்கு முன்னால் அவர்கள் சில வாக்குறுதிகள் கொடுத்தார்கள். இரண்டே முக்கால் ஆண்டுகள் ஆகியும், அவைகள் அனைத்திலும் ஒன்றைக்கூட நிறைவேற்றியிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இந்த நிர்வாகத்தில் பல ஊழல்கள் இருக்கின்றன. உதாரணத்திற்கு நிர்வாகத்தில் நடைபெறுகிற ஊழல்கள் ஒன்றிரண்டைப்பற்றி ஆதாரபூர்வமாக தகவல்களைக் கொடுக்க இங்கு நிற்கின்றேன்.

நாமக்கல் கல்லூரி நிறுவப்படுவதற்கு பொது மக்களிடமிருந்து பணம் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. கனம் அமைச்சர்களும், அங்கத்தினர்களும் கொஞ்சம் அமைதியாக கேட்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நாமக்கல் கல்லூரி நிறுவப்படுவதற்கு பல லட்சக்கணக்கான ரூபாய் பொது மக்களிடமிருந்து வசூல் செய்யப்பட்டிருக்கிறது. அந்த வசூல் கல்லூரிகள் என்ற பெயரால் ஒரு டிக்கட் அடிக்கப்பட்டிருக்கிறது. கல்லூரி என்ற பெயரால் ஒரு டிக்கெட் அடிக்கப்பட்டிருக்கிறது. கல்லூரிகள் என்ற பெயரால் அடிக்கப்பட்ட டிக்கெட்களின் வரவு செலவு கணக்குத் தான் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள், வரவு செலவு கணக்குப் புத்தகத்திலே வந்திருக்கிறது. ஆனால், கல்லூரி என்ற பெயரால் அடித்த டிக்கெட்டை

அவர்கள் மக்களிடையே கொடுத்திருக்கிறார்கள், பணம் வசூல் செய்திருக்கிறார்கள். அந்த டிக்கெட்கள் மக்களிடையே இருக்கின்றன, கல்லூரி என்ற பெயரால் கொடுக்கப்பட்ட அந்த டிக்கெட்களினுடைய வரவு செலவுக் கணக்குகள் கணக்குப் புத்தகத்திலே வரவில்லை.

அத்துடன், நமது மாண்புமிகு அமைச்சர் திரு. முத்துசாமி அவர்களிடத்திலே ரூ. 4,051 ஒரு பஞ்சாயத்துத் தலைவர் நன்கொடையாகக் கொடுத்திருக்கிறார்கள். இந்த ரூ. 4,051 வரவு செலவு கணக்குப் புத்தகத்தில் வரவில்லை என்று காணுகின்ற நேரத்தில், இந்தப் பணம் எந்த வகையிலே போனது, யாரிடத்தில் இந்தப் பணம் இருக்கிறது என்பதைக் காணுகின்ற நேரத்தில், இதற்கு அமைச்சர் அவர்கள் தகுந்த பதில் கொடுத்தால் அதை ஏற்றுக்கொள்வதற்கு தயாராக இருக்கிறேன். ஆனால் அமைச்சர் அவர்கள் இல்லை. இதற்கு ஆதாரங்கள் கொண்டுவந்திருக்கிறேன். ஆதாரம் இல்லாமல் இல்லை. சபாநாயகர் அவர்களின் அனுமதியின் பேரில் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்னிடம் காட்டாமல் எப்படி ? நான் அது என்னவென்று பார்க்கவேண்டாமா ?

(பேரவைத் தலைவரிடம் ஒரு காகிதம் கொடுக்கப்பட்டது.)

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** ரூ. 4,051 நன்கொடையாக அளிக்கப்பட்டு, அவர்கள் அந்தப் பணத்தை வாங்குகிறார்கள் இந்தப் படத்தில். அந்தப் பணமானது வரவு செலவு கணக்குப் புத்தகத்தில் வரவில்லை. அத்துடன் ஒரு பஞ்சாயத்து தலைவர் ஒரு ரூபாய் பொது மேடையிலே கொடுத்தார். இன்னொரு பஞ்சாயத்து தலைவர் ஒரு ரூபாய் பொது மேடையிலே கொடுத்தார். ரூ. 1, 11 பைசா பொது மேடையில் தரப்பட்டதாக கணக்குப் புத்தகத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், கேள்விப்படுவது இந்த பஞ்சாயத்து தலைவர்கள் ரூ. 101 கொடுத்தார்கள் என்று தான். அந்த பஞ்சாயத்து தலைவர்களே அதை நிரூபிக்கத் தயாராக இருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். இந்த நிலைமையைப் பார்க்கின்ற நேரத்தில் பொது மக்களிடையே வசூல் செய்யப்படுகின்ற பணமானது எவ்வளவு தவறான பாதையிலே போகிறது என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் இருந்தால் பதில் சொல்லலாம்; ஆனால் அமைச்சர் அவர்கள் இல்லை.

அடுத்தபடியாக புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டிக் கொள்வதற்கு . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நிதி அமைச்சர் அவர்கள் ½ மணி நேரம் வேண்டும் என்று சொல்லுகிறார். எதிர்க்கட்சித் தலைவர் ஒரு மணி நேரம் வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். ஆக, மொத்தமாக இந்த விவாதத்திற்கே இரண்டு மணி நேரம் தான் இருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு ஒரு மணி நேரம், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ½ மணி நேரம் என்றால், மற்ற உறுப்பினர்களுக்கு பேசுவதற்கு வாய்ப்பு அளிக்க முடியுமா ? இருக்கின்ற நிலைமையைச் சொல்கிறேன். ஆகவே, ஒரு மணி நேரம், ½ மணி நேரம் என்பதெல்லாம் முடியாத நிலை. விவாதத்திற்கு மொத்தத்தில் இருக்கிற நேரத்தை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு கட்சியிலும் ஒவ்வொரு உறுப்பினர் பேசக்கூடிய நிலைமை தான் உண்டாகும். திரு. ராமச்சந்திர துரை, நீங்கள் சீக்கிரம் முடியுங்கள். முற்பகல் 11-00





**திரு. முனு ஆதி :** தலைவர் அவர்களே, எதிர்க்கட்சிக்குத் தலைவருக்கு ஒரு மணி நேரம் கொடுத்துவிட்டு, மற்ற உறுப்பினர்களுக்கு நேரம் கொடுக்கவில்லை என்றால், அது எப்படி சரியாகும் என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சரி, அதுபற்றி பின்னர் பார்த்துக் கொள்ளலாம்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** அடுத்தபடியாக, புறம்போக்கு நிலங்களை வீடு கட்டுவதற்கு என்று வீடு இல்லாதவர்களுக்குக் கொடுக்கலாம் என்று இருக்கிறது. அரசாங்கமும் அனுமதி வழங்கலாம் என்று இருக்கிறது. பொறுப்புள்ள ஒரு உறுப்பினர் ஒரு பொதுவான புறம்போக்கு நிலத்தில் ஒரு குடிசையைப் போட்டிருக்கிறார். அந்தக் குடிசையை ரூ. 22,000-க்கு விலைபேசி, ரூ. 2,000 அட்வான்ஸ் தொகையும் வாங்கியிருக்கிறார். (குறுக்கீடு) ஆதாரம் கொண்டு வந்திருக்கிறேன். (ஒரு குரல் : பெயரைச் சொல்லுங்கள்.) பெயரை இந்த அவையில் சொல்ல வேண்டாம் என்று பார்க்கிறேன். ரூ. 22,000 என்று சொல்லி, உறுப்பினர் மனைவியின் பெயரில் அதை வைத்துக் கொண்டு (குறுக்கீடு) ஆதாரத்துடன் தான் பேசுகிறேன். ஆதாரம் வைத்திருக்கிறேன். புறம்போக்கு நிலத்தில் இருக்கும் அந்தக் குடிசையை அந்த உறுப்பினர் தன் மனைவியார் பெயரில் எழுதிக் கொடுத்து, பத்திரம் இங்கே போட்டோ காபி வைத்திருக்கிறேன். (குரல்கள்: பெயரைச் சொல்லுங்கள்) இந்த சபையிலே பெயரை சொல்ல வேண்டாம் என்று எண்ணுகிறேன். இதோ போட்டோ காபிகள் இருக்கின்றன, பத்திரமும் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தாங்கள் என்ன படிக்கிறீர்களோ அதை என்னிடம் கொடுக்க வேண்டும். முன்னால் நோட்டீஸ் கொடுத்தபோதே கொடுத்திருக்கலாமே. (திரு. ஆர். கருப்பையா : சொல்லிவிட்டுக் கொடுப்பார்கள்) சொல்லிவிட்டுக் கொடுப்பதா ? அது எப்படி ?

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** தலைவர் அவர்களே, இந்த போட்டோக்களைத் தங்களிடம் கொடுக்கிறேன். (போட்டோக்கள் பேரவைத் தலைவருக்கு அனுப்பப்பட்டன).

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** தலைவர் அவர்களே, உறுப்பினர், உறுப்பினர் என்று சொல்கிறார்கள். அவர் எம்.எல்.ஏ. வா அல்லது வேறு யாராவதா ?

(பல குரல்கள் : எஸ். எஸ், யார் என்று சொல்லுங்கள்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** அவர் ஒரு எம்.எல்.ஏ. தான். ஆளும் கட்சியைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர். (குரல்கள் : பெயரைச் சொல்லுங்கள்.) சொல்ல வேண்டாம் என்று பார்த்தேன். சபாநாயகர் சொல்ல வேண்டும் என்று சொன்னால் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பெயரைச் சொல்லுங்கள்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** கோபால், எம்.எல்.ஏ. அவர்களுடைய மனைவியார் பெயரில் பத்திரம் இருக்கிறது. அவர் காட்டியிருப்பது என்னவென்றால்' முன்பு தான் ஜமீந்தாரிடத்திலிருந்து அது விலைக்கு கொடுக்கப்பட்டது என்று கூறியிருக்கிறார். 1932-ல் அந்த நிலம் கொடுக்கப்பட்டது என்கிறார். ஆனால், 1926-க்குப் பிறகு ஜமீந்தார்களுக்கு புறம்போக்கு நிலங்களை விற்க உரிமை கிடையாது. அது சட்டம், ஆகவே, 1932-லே அவர் அந்த இடத்தை வாங்கியிருந்தாலும், அது செல்லாது. அப்படிப்பட்ட இடத்தை, வீடு இல்லாதவர்களுக்குக் கொடுக்கப் படவேண்டிய புறம்போக்கு நிலத்தை அவர் ஆக்ரமித்துக் கொண்டு, ரூ. 22,000 விலைபேசி, காரியங்கள் செய்திருக்கிறார். ஒரு பொறுப்புள்ள உறுப்பினர் அப்படிச் செய்திருக்கிறார். அப்படிச் செய்கிறவர்கள் இந்த நிர்வாகத்தில் இருக்கும்போது, எவ்வளவு ஊழல்கள் இருக்கின்றன என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்று அமைச்சரைப் பற்றி ஒரு விவகாரம் இருக்கிறது. அதைப் பற்றி விவாதிக்க வேண்டும் என்றால், குறைந்தது ஒரு அரை மணி நேரமாவது வேண்டியிருக்கும். சந்தர்ப்பம் அளித்தால், விவாதிக்கத் தயாராக இருக்கிறேன்.

எனவே, இம்மாதிரியான ஊழல்கள் இந்த ஆட்சியில் இருக்கின்றன. அப்படி ஊழல்கள் இல்லாமல், குறைபாடுகளைக் களைந்து, நாட்டில் அமைதி நிலவும் அளவில் நிர்வாகம் செய்ய வேண்டும் என்று கூறி, பேச சந்தர்ப்பம் அளித்ததற்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, இரண்டு விவகாரங்களைச் சொன்னார்கள். இரண்டு குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள். முக்கியமாக, நாமக்கல் கல்லூரியில் வசூல் செய்யப்பட்டதாகவும், இரண்டு, மூன்று வகையில் கணக்குகள் தயாரிக்கப்பட்டதாகவும் சொன்னார்கள். இதுபற்றி இதற்கு முன்பே இந்த மன்றத்தில் விவாதிக்கப்பட்ட விஷயம் இது திரு. பூவராகன் என்று நினைக்கிறேன் அவர்கள் எழுப்பியதன் பேரில் விவாதிக்கப்பட்டது.

இன்னொன்று, அமைச்சரிடம் ரூ. 4,051 பஞ்சாயத்துத் தலைவர் கொடுத்ததாகவும், அது கணக்கில் எங்கும் வரவில்லை என்றும் சொன்னார்கள். இப்பொழுது அந்த அமைச்சர் சபையில் இல்லை. அவர்கள் இங்கே இல்லாததால், அதற்குப் பதில் சொல்லாததால்,



உறுப்பினர் சொன்னதெல்லாம் சரி என்று ஆகாது. ஆகவே, அப்படிப்பட்ட குற்றச்சாட்டு இருக்குமானால், அதைத் தெளிவாக சபாநாயகரிடம் முறையாக எழுதிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைப் பற்றி சம்பந்தப்பட்ட அமைச்சரைக் கலந்து கொண்டு, பதில் அளிக்கும் நேரத்தில் அதற்குப் பதில் கூற முடியும். சமாதானம் சொல்லாவிட்டால், அவர்கள் சொன்னதெல்லாம் சரியானதே என்கிற அபிப்பிராயம் வெளியிலே ஏற்படாமல் இருப்பதற்காகச் சொல்லுகிறேன். இந்தக் குற்றச்சாட்டைக் குறித்து, ஏன், என்ன நிலையில அது கணக்கில் வரவில்லை, குற்றச்சாட்டிற்கு சமாதானம் என்ன என்று கூறுகிறேன். அவர்கள், அந்தக் குற்றச்சாட்டை எழுதி, கையெழுத்துப்போட்டு, சபாநாயகரிடம் தாக்கல் செய்யவேண்டும். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் இதை ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** பேரவைத் தலைவர் அவர்களே, ரூ. 4,051 சம்பந்தப்பட்ட விஷயம் 'கிராம நலம்' என்கிற புத்தகத்தில் அமைச்சர் அவர்களிடம் கொடுப்பது, வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதிருக்கட்டும். நீங்கள் எழுதிக் கொடுங்கள்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** சரி, பொறுப்பேற்றுக் கொள்கிறேன். எழுதிக் கொடுக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்னிடம் அதைக் கொடுங்கள்.

* **திரு. ஆ. கருப்பையா :** தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்து, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு நாட்டில் மழை பெய்யாததன் காரணத்தால், பஞ்சம் ஏற்பட்டு இருந்தாலும், நமது தமிழ் நாட்டு அரசின் சிறந்த நிருவாகத் திறமையின் காரணத்தால், மக்கள் சுபிட்சமாகவே வாழ்வதைக் காண்கிறோம். எனக்கு முன்னால் பேசிய காங்கிரஸ் நண்பர், முன்னால் பஞ்சம் வந்தது, அப்பொழுது என்னென்ன செய்தார்கள் என்று சொன்னார்கள். சிந்தித்துப் பார்த்தால் தெரியும். இந்த சர்க்கார் என்னென்ன செய்கிறார்கள் என்று. முன்பு பஞ்சம் வந்தகாலத்தில். முன்பிருந்த சர்க்கார் நல்ல முறையில் செயல்படவில்லை. ரோட்டில் பட்டினிப் பிணங்கள், மக்கள் செத்துக் கிடந்ததைக் கண்டோம். அதற்குத்தான் மக்கள் சரியான பாடம் கற்பிக்க வேண்டும் என்று காத்திருந்து, 67-ல் தமிழக மக்கள் ஏகோபித்து, அவர்களை வீழ்த்தினார்கள். அப்படியிருந்தும், இன்றைக்கு இதைச் சொல்லுகிறார்கள். பஞ்சம் என்று இருந்தாலும், பஞ்சமே இல்லை என்று சொல்லக் கூடிய அளவில் தான் காரியங்களைச் செய்துவருகிறார்கள் நம் அரசு. தக்க இடத்தில் தட்டிக் கேட்டு, எங்கள் முதலமைச்சர் திறமை

[திரு. ஆ. கருப்பையா] [1969 ஆகஸ்ட் 23

காரணமாக, பணங்களை வாங்கி, தமிழக மக்களுக்கு எல்லா வகையிலும் வசதிகளைச் செய்து, பொருள் உதவி முதலியவைகளும் செய்து பஞ்ச நிவாரண வேலைசெய்கிறார். குளங்களை ஆழப்படுத்தியும், கிணறுகளை ஏற்படுத்தியும், நல்ல முறையில் பணி புரிந்து வருகிறார்கள். அவற்றைக் கண்டு தமிழக மக்கள் பூரிப்போடு இருப்பதை நாடே அறியும். ஆனாலும், இந்தப் பஞ்சத்தை அடியோடு ஒழிக்க வேண்டும் என்றால், சில முற்போக்கான காரியங்களைச் செய்ய வேண்டிய நிலையில் அரசு இருக்கிறது. மழை பல காலம் பெய்யாமல் இருந்து, சில காலத்தில் பெய்யும்போது, அந்தத் தண்ணீரை நல்ல முறையில் பயன் படுத்தும் அளவில், குளங்களை ஆழப்படுத்தி வைத்திருக்கிறோம் என்றாலும், கால்வாய்கள் சீர்செய்யப்படாததால் தண்ணீர் வீணாகிறது. என்னுடைய தொகுதி பற்றி சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில், கங்கைகொண்டான் குளம் என்று பெயர் கொண்டிருந்தாலும்கூட, அங்கே கங்கையும் இல்லை, தண்ணீரும் இல்லை. ஆகவே, அது பஞ்சப் பிரதேசமாகக் காட்சியளிக்கிறது. ஆகவே, அரசு இதற்கு ஒரு நல்ல வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திருநெல்வேலியிலிருந்து கங்கைகொண்டான் குளத்திற்கு ஒரு கால்வாய் இருந்திருக்கிறது. அது இப்போது தூர்ந்துபோய் இருக்கிறது. அந்தக் கால்வாய் மீண்டும் செப்பனிடப்பட்டால், நீர் நிரப்பப்பட்டு, அந்தப் பகுதியில் விவசாயம் செய்வதற்கு வழிவகை ஏற்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், கடனா நதியிலிருந்து ஒரு கால்வாயை வெட்டி மானூர் குளத்திற்குக் கொண்டுவந்தால், வீணாகும் தண்ணீர் குளங்களில் நிரப்பப்பட்டு, தேக்கி வைத்து, விவசாயத்திற்குப் பயன்படுத்தலாம். இந்தக் கால்வாயின் மூலம் அந்தப் பகுதியிலுள்ள 5 ஆயிரம் ஏககர் நிலங்கள் விவசாயத்திற்குப் பயன்படும்படிச் செய்யலாம். இந்தக் கால்வாயைப்பற்றி நான் பலமுறை கூறியுள்ளேன். ஆகவே மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டு முடித்துக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பஞ்ச துயர்தணிப்பு வேலைகளுக்காக திருநெல்வேலிக்கு 70 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அண்மையில் திருநெல்வேலியில் மழை பெய்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி மழை பெய்திருந்தாலும், ஒதுக்கப்பட்ட பணத்தின் அளவைக் குறைக்காமல், இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது). மழை பெய்திருந்தாலும், கங்கைகொண்டான், கோயில்பட்டி முதலான பகுதிகள் வறட்சிப் பிரதேசங்களாகவே இருந்து கொண்டிருக்கின்றன. (மணியடிக்கப்பட்டு, அடுத்த உறுப்பினர் ஹாண்டே அழைக்கப்பட்டார்).



1969 ஆகஸ்ட் 23] [திரு. ஆ. கருப்பையா]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் பேசுவதற்கு ஐந்து நிமிடங்களுக்கு மேல் எடுத்துக்கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Dr. H. V. HANDE : Mr. Speaker, Sir, I shall take up only two Demands for my criticism. The first Demand 8-A relates to Milk Supply Schemes. Even during the question-hour this particular subject was raised. For the past few months we are getting bad milk full of stink and dirt and it is practically rejected by the persons who are dealing with it, viz., women of the Madras City. I have received a number of complaints regarding this matter and I would request the Government to take up the matter very seriously and examine it. It is not a frivolous allegation that I am making in this House and I take full responsibility for it. There have been a number of complaints for the past two months and they have assumed an acute form in the last two months. I am told that inside the Milk Colony a number of unwanted and unhealthy practices are going on and I would request the Government to appoint a One-man Committee or a responsible officer to go into the working of the Milk Schemes especially at Madhavaram and immediately set right the defects found there.

Then I come to Demand 9—District Administration and Miscellaneous. Under this Demand, the Government have sanctioned staff for manning the Civil Supplies check-posts in Coimbatore, Tirunelveli, Salem and South Arcot districts. Only sometime ago a news item had appeared in the newspapers that check-posts were going to be abolished. Now, we find that under this Demand an extra amount is asked for. What is that sort of confusion in the minds of the Government? At one time they say that the checkposts would be abolished and at another time they say that they want an extra amount for manning check-posts. This is very, very shocking and I want the Hon. Minister to answer this point when he replies to the debate. My submission is that this is an unwanted expenditure. Either we should have check-posts in a thorough manner or we should abolish them altogether. If we abolish the checkposts it would be very convenient for the poor farmers to convey their rice or paddy. Of course, the Government have permitted an ordinary person to convey 10 measures of rice but actually this will not solve the problem unless we remove the checkposts. Sir, we are aware that there are certain chronically deficit areas and the problem of those pockets will not be solved. For instance, there is chonically deficit area in the Ramanathapuram district and also in the district adjoining Tiruchirappalli like Madurai. Unless we allow rice to be transported to those deficit areas we will not be able to solve the problem. Now, the Government procure 8 to 9 lakhs of tonnes and the balance left is nearly 50 lakhs of tonnes which have to be properly distributed. In this connection, I am very happy to read in newspapers that on an experimental basis the checkposts are being abolished but suddenly this particular item of

expenditure confuses me. The Government have, in the light of experience, ordered the partial removal of the check-posts but by asking for more do they purpose to reintroduce check-posts on the advice of department heads. My submission is that instead of adopting a half-hearted measure like this, they should completely remove the check-posts so that they may not again be put into the pitiable position of having to re-consider the whole matter. Sir, I have been allotted five minutes and I have finished my speech in five minutes.

திரு. வி. கே. கோதண்டராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, மழையில்லாத காரணத்தினால் விவசாயமே பாதிக்கப்பட்டுள்ள இந்தநேரத்தில், விவசாயத்தை அபிவிருத்தி செய்து உணவுப் பெருக்கம் செய்ய வேண்டும். குடிநீர் கிடைப்பதற்கான திட்டங்களை ஏற்படுத்த வேண்டும். வேலையில்லாதவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்பதற்காக, பஞ்ச நிவாரண வேலைகளை உடனடியாக ஆரம்பித்து நடத்த வேண்டும். அதற்கு வேண்டிய மிகப் பெரிய தொகையை ஒதுக்கித் தர முன்வந்திருக்கிற இந்தச் சர்க்காரை நான் வரவேற்கிறேன். அதேநேரத்தில் இன்றைக்கு விவசாயத்திற்கு வேண்டிய தண்ணீர் கிணற்றில் இல்லாத நிலைமை இருக்கிறது. ஆகவே, போதுமான அளவு தண்ணீர் கிடைப்பதற்கு, எவ்வளவு தொகை செலவானாலும் அதற்காக வேண்டிய பணத்தை அரசு ஒதுக்கித் தரவேண்டும்.

மேலும், விவசாயிகள் பஞ்சகாலத்திலே, முன்பு வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். 1965-66-லே தஞ்சை மாவட்டத்திலே குத்தகை பாக்கிகளைத் திருப்பிக் கட்ட முடியாத நிலை ஏற்பட்டபொழுது, குத்தகை பாக்கிதாரர்கள் நான்கு தவணைகளிலே திருப்பிச் செலுத்தலாம் என்ற நிலை ஏற்பட்டது. மழையில்லாத காரணத்தால் திருப்பிக் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. அவர்களுடைய தவணைக் காலம் நீட்டிக்கப்பட வேண்டும். அவர்கள் திருப்பிச் செலுத்துகிற நிலை வரைக்கும் அவர்கள்மீது எந்தவிதமான வழக்கையும் தொடர முடியாத அளவிற்கு அரசு வழிவகை செய்ய வேண்டும். இப்பொழுதே மடாலயபதிகளும், கோவில் சொந்தக்காரர்களும், நிலப்பிரபுக்களுக்கும் விவசாயிகள்மீது எட்டாயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகளைத் தொடர்ந்திருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணமெல்லாம், ஏழை விவசாயிகளை எப்படியாவது நிலங்களிலிருந்து வெளியேற்றிவிட வேண்டும் என்பதுதான். ஆகவே, அரசு இதிலே தீவிரமான கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு தஞ்சை மாவட்டத்திலே போலீஸ் கொடுமைகள் சொல்ல முடியாத அளவுக்கு இருக்கின்றன. பல கிராமங்களிலே இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்கள் கொடூரமாகத் தாக்கப்பட்டு வருகிறார்கள். கொடுமைப்படுத்துவது மட்டுமல்ல; பெண்களையும் கற்பழிக்கக்கூடிய அளவிற்கு நிலைமை மிக



மோசமாகப் போய்க்கொண்டிருக்கிறது. அந்த மாவட்டத்திலே இருக்கிற போலீஸ் அதிகாரி நான்கைந்து வருடமாக ஒரே இடத்தில் இருந்துக்கொண்டு, காங்கிரஸ்காரர்களுக்குப் பக்கபலமாக அவர்கள் சொல்லுவதை எல்லாம் செய்துக்கொண்டு, மிராசுதார்கள் வீட்டில் தங்கிக் கொண்டு அவர்கள் என்னென்ன திட்டங்களைப் போடுகிறார்களோ, அவைகளையெல்லாம் செயல் படுத்திக்கொண்டு, கெடுபிடி செய்து வருகிறார். உதாரணத்திற்கு ஒன்றுமட்டும் சொல்ல விரும்புகிறேன். நமது முதலமைச்சர் மாண்புமிகு திரு. மு. கருணாநிதி அவர்கள் பிறந்த ஊரான திருக்குவளையில் அரிஜன மக்கள் வசிக்கும் பகுதிகளில் இரவு பனிரெண்டு மணிக்கு, ஒரு மணிக்குப் போலீஸ்காரர்கள் போய் அந்த மக்களைத் தாக்கியிருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, மிக மோசமாக நடந்துகொண்டிருக்கிறார்கள். அந்த தாழ்த்தப்பட்ட மக்களைத் தாக்கும்போது, ‘ இதுதான் கருணாநிதி அடி ’, ‘ இதுதான் அண்ணாதுரை அடி ’ என்று சொல்லிச் சொல்லி அடித்திருக்கிறார்கள். இந்தச் சர்க்காருக்குக் களங்கத்தை உண்டுபண்ண வேண்டுமென்பதற்காக போலீஸ்காரர்கள் இப்படிச் செய்கிறார்கள். மேலும், வலிவலம் தேசிகருக்குப் பக்கபலமாக, அவர் சொல்கிறபடியெல்லாம் போலீஸ்காரர்கள் நடந்துகொள்கிறார்கள். அடுத்து, கீவளூரிலும் வலிவலம் தேசிகர் சொல்வதுதான் நடக்க வேண்டும் என்ற முறையில் அந்தக் கிராமத்து மக்களைத் தாக்கி, அவர்களை முட்டிக்கால் தோப்புக்கரணம் போடச் செய்திருக்கிறார்கள். இது பற்றி சாந்தி சமாதான சர்வோதய ஊழியர்கள் வெளியிட்ட அறிக்கையும் இந்தச் சர்க்காருக்கு அனுப்பப்பட்டது.

ஆகவேதான் போலீஸ்காரர்களுடைய இப்படிப்பட்ட மோசமான போக்கின் காரணமாக அங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் மத்தியில் இன்றைக்கு பெரிய அளவுக்கு கொதிப்பு ஏற்பட்டிருக்கிறது, அமைதி நிலைகுலையக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு போலீஸ்காரர்கள் மிராஸ்தாரர்களுக்குப் பக்கபலமாக இருந்துக்கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்களுக்குப் பக்கபலமாக இருந்துகொண்டிருக்கிறார்கள். இந்தச் சர்க்கார் தலையிடவில்லை என்று சொன்னால் முன்பு இருந்த காங்கிரஸ் ஆட்சியைப் போலவே தான் இந்த அரசாங்கமும் நடைபெறுகிறது என்கிற கருத்து உண்டாகிவிடும்.

அடுத்து, இன்று கவர்ன்மெண்டு டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்கள் மத்தியில் அடிக்கடி போராட்டமும், சச்சரவும் ஏற்பட்டு வருகிறது. அவற்றைத் தவிர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஹை பவர் கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறதே தவிர, அதன் தீர்ப்பை இன்னமும் வெளியிடவில்லை. அதை உடனடியாக வெளியிடவேண்டும்.

டி.வி.எஸ்., எஸ்.ஆர்.வி.எஸ். போன்ற பெரிய டிரான்ஸ்போர்ட் முதலாளிகளை எல்லாம் உடனடியாக ஒழித்துக் கட்டவேண்டும். உடனடியாக ஒழிக்க முடியாவிட்டாலும் எப்படி லாண்டு சீலிங் கொண்டு வந்தோமோ, அதுபோல ஒரு சர்வீஸ் என்றால் 5 பஸ்கள்

[திரு. வி. கே. கோதண்டராமன்] [1969 ஆகஸ்ட் 23

தான் வைத்திருக்கலாம், பத்து பஸ்கள் தான் வைத்திருக்கலாம் என்பதாகவாவது ஒரு கட்டுப்பாட்டு விதியைக் கொண்டுவர வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவு சொஸைடிகளில் கைத்தறித்துணிகள் பெரும் அளவுக்கு ஏராளமாகத் தேங்கியிருக்கின்றன. அதன் காரணமாக கைத்தறி நெசவாளர்களுக்கு வேலை கிடைக்காத நிலை இருக்கிறது. அந்தத் தேக்கத்தை நீக்க உடனடியாக தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

வீடு கட்டும் திட்டமானது தீவிரமாக விஸ்தரிக்கப்படவேண்டும். உண்மையில் வீடு இல்லாதவர்களுக்கு வீடு கிடைப்பதை விட வீடு உள்ளவர்களுக்கே வீடு கிடைக்கிறது. அதைத் தவிர்த்து வீடு இல்லாதவர்களுக்கு வீடு கிடைக்கும்படியான நடவடிக்கையை இந்த அரசு எடுத்துக்கொள்ளவேண்டும்.

குடிதண்ணீர் பிரச்சினையை சமாளிக்க 12 ஆயிரம் குழாய்களை சென்னை நகரத்தில் வைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருப்பது போல ஒவ்வொரு கிராமத்திற்கும், நகரத்திற்கும் ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

சிவில் சப்ளை லாரி டிரைவர்கள், க்ளீனர்கள் இப்போது இரவு பகலாக வேலை செய்ய வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு விடுமுறை கிடையாது. இதையும் கவனித்து அவர்களுக்குப் போதுமான ஓய்வு கிடைக்கும்படியாகவும் செய்யவேண்டும்.

ஊட்டியில் உள்ள என்.ஜி.ஓ.-வினருக்கு 1922-ஆம் வருடம் ஹில் அலவன்சு என்பதாகக் கொடுக்கத் தீர்மானித்தார்கள். 47 ஆண்டுகளாக அதே தொகை கொடுக்கப்பட்டு வருகிறது. இதையும் கவனித்து உயர்த்துவதற்கு ஆவன செய்யவேண்டும்.

சர்க்கார் ரப்பர்தோட்டத் தொழிலாளர்களுடைய ஊதிய விகிதம் 1958-இல் நிர்ணயிக்கப்பட்டது. பத்து ஆண்டுகளுக்கு மேலாகியும் அதில் எந்தவிதமான மாற்றமும் இல்லாத காரணத்தினால் அதைப்பற்றியும் பரிசீலிக்கவேண்டுமென்று கோருகிறேன்.

ஏற்கனவே காங்கிரஸ் கட்சியினரால் நிலச்சீர்திருத்தச் சட்டம் கொண்டுவந்தபோது 5 நபர்கள் அடங்கிய குடும்பத்திற்கு 15 ஏக்கரா என்று வைக்கவேண்டுமென திராவிட முன்னேற்றக் கழகமும் மற்ற எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து வற்புறுத்தியது என்றாலும், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிற்பாடு அதை அமுல்படுத்தாமல் இருக்கிறது, அதையும் அமுல்படுத்தவேண்டும்.



1969 ஆகஸ்ட் 23] [திரு. வி. கே. கோதண்டராமன்]

இன்றைக்கு 500 ரூபாய்க்கு மேற்பட்டவர்களுக்கு வீட்டு அலவன்சு அளிக்கப்பட்டிருக்கிறது. பணக்காரர்களுக்கு மேலும் இத்தகைய சலுகை அளிக்கவேண்டுமா என்பதை யோசிக்க வேண்டும்.

கடலூரில் சலவைத் தொழிலாளர்கள் தங்களையும் ஷெட்யூல்ட் வகுப்பினர்களோடு சேர்க்கவேண்டுமென்பதற்காக க்ரூப் க்ரூப்பாக உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். இதையும் கவனிக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் தொடர்ந்து நமக்கு மத்திய சர்க்கார் உதவி கிடைக்காதிருக்க முயற்சி செய்தும் கூட நமது முதல் அமைச்சர் அவர்கள் 11 கோடி ரூபாயை வறட்சிப்பணிக்காகப் பெற்றிருக்கிறார்கள். இதுபோல இன்னும் அதிகமாகப் பெறுவதில் கவனம் செலுத்த வேண்டும்.

சினிமாப் படத் தொழிலுக்கு ஆயிரம் ரூபாய் என்பதை நூறு ரூபாய் என்று ஆக்கப்பட்டிருக்கிறது. கோடிக்கணக்கில் சம்பாதித்து வருகிற அவர்களால் அதைக் கட்ட முடியாதா என்பதையும் இந்த நேரத்தில் யோசிக்கவேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சினிமாப் படத்தின் மூலமாக ஆயிரம் ரூபாய் என்று இருந்து வந்த காலத்திலேயே 25 ஆயிரம் ரூபாய்தான் வருமானம் வந்தது. கோடிக்கணக்கில் வருமானம் வரவில்லை என்பதை பொதுவுடைமைக் கட்சிக்காரருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* திரு. க. மு. கதிரவன் : தலைவர் அவர்களே, துணைமானிய மதிப்பீட்டை ஆதரித்து இன்றையதினம் பேச வாய்ப்பளித்த தலைவருக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைய அரசு தமிழகத்தில் ஏற்பட்டுள்ள வறட்சி நிலையைக் கருத்தில் கொண்டு தீவிர நடவடிக்கைகள் எடுத்து 17 கோடி ரூபாய் செலவில் வறட்சி நிவாரண வேலைகளை செய்து வருவது குறித்து உண்மையில் நாம் அனைவரும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

அதற்கடுத்தபடியாக இந்த அரசு பின்தங்கியோர் இனத்தின் எண்ணங்களை கருத்தில் கொண்டு தகுதி எண்களை 40 சதவிகிதம் ஆக்கியிருப்பது உண்மையில் அத்தனைபேர்களுமே பாராட்ட வேண்டிய கடமைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறோம்.

அடுத்து, நான்காவது ஐந்தாண்டுத் திட்ட புத்தகத்தைப் பார்க்கும்போது அவற்றிலே நான் சார்ந்திருக்கிற தென்காசி தொகுதி சம்பந்தப்பட்ட எந்தத் திட்டமும் இடம் பெறாததைக் கண்டு வருத்தமுற்றாலும்—முதல் பக்கத்திலேயே இந்த

நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இறுதி வடிவம் பெறவில்லை என்பதைக் காண்கிறபோது ஓரளவுக்கு நிம்மதி கிடைத்தது. ஆகையால் நான் சொல்கிற திட்டங்களில் நல்ல திட்டங்கள் இருந்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனையும் சேர்த்துக் கொள்வார்கள் என்று நான் நினைக்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் விவசாயம் அதிகமாகச் செய்கிற பகுதியாகும். தொழில்கள் அதிகம் இல்லாத பகுதி. அமைச்சர் அவர்கள் கூட இதனைக் கண்டிருப்பார்கள் என்று கருதுகிறேன். சற்றேறக்குறைய 70 வருடங்களுக்கு முன்னால் இருந்த நிலங்களே இன்றும் அங்கிருக்கின்றன. அந்த நிலங்கள் விரிவாக்கப்படவில்லை என்பது உண்மையாகும். ஆனால் 70 வருடங்களுக்கு முன்னால் இருந்த ஜனத்தொகை இன்றைக்கு அங்கே இல்லை. பெரும் அளவு பெருகியிருக்கிறது என்கிறபோது வேலையில்லாத் திண்டாட்டமும் அந்தப் பகுதியில் எவ்வளவு பெருகியிருக்கும் என்பதை நாம் கணக்கிட்டுக் கொள்ளலாம். ஆகவே, என்னுடைய பகுதியில் தொழிற்சாலைகள் அதிக அளவுக்கு அமைக்க இந்த அரசாங்கம் முன்வர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசாங்கம் முழு முயற்சியாக எடுத்துக் கொண்டிருப்பது உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டுமென்பதாகும். அதற்காக தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்ற வேண்டும் என்பதும், இருபோகத்தை மூன்று போகமாக மாற்றவேண்டும் என்பதும், ஒருபோகத்தை இருபோகமாக ஆக்க வேண்டும் என்பதும் ஆகும். எங்கள் பகுதியைப் பொறுத்தவரையில் தென் மேற்குப் பருவக் காற்றின் மூலம் மழை கிடைக்கிறது.

இன்று தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிற வறட்சி நிலைக்குக் காரணம் வடகிழக்குப் பருவக்காற்று பல ஆண்டுகளாகப் பொய்த்து வருவதுதான். சில வருடங்களுக்கு முன்னால் தென்மேற்குப் பருவ மழை பொய்த்த காரணத்தினால் எங்களது மலைப்பாங்கான இடங்களிலும் வறட்சி நிலை ஏற்பட்டது. அதுமட்டும் அல்ல. அந்தத் தொகுதியில் உள்ள குளங்கள் எல்லாம் குட்டங்கள், கிண்ணம் போன்ற நிலையில்தான் இருக்கின்றன. பெரிய குளங்களே இல்லாத குறைதான் காணப்படுகிறது.

அங்கே கிணறுகளை வெட்டுவது என்றால் 70 அடிகளுக்குக் கீழே போக வேண்டும். ஆகவே தண்ணீர் தட்டுப்பாடு இருக்கிறது. அதைத் தவிர்க்கச் செங்கோட்டையை அடுத்திருக்கிற குண்டாற்றில் கண்ணுப்பள்ளி அணைக்கட்டும் அனுமன் நதியில் அடைவி நயினார் அணைக்கட்டும் கட்டினால் செழிப்புள்ள இருபோக பூமிகள் முப்போகமாக்கப்படலாம். ஒருபோக பூமிகள் இரண்டு போகமாக ஆக்கப்படலாம். ஆகவே, அந்த அணைக்கட்டையும் கட்டுவதற்கு இந்த அரசாங்கம் யோசிக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.





அடுத்தப்படியாக இன்றையதினம் வாய்க்கால் பிரச்சினை கவனிக்கப்பட்டாக வேண்டும். ஒரு மைல் தூரத்தில் ஒரு குளம் இருக்கும். அதற்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்கு 9 மைல்கள் சுற்றி வாய்க்கால் வரும். இதன் காரணமாக காலவிரயம் ஆகிறது. நீர் விரயமும் ஆகிறது. குறிப்பாக கீழப்புலியூரில் இருந்து சுந்தரபாண்டி குளத்திற்கு பாட்டாக்குறிச்சியைச் சுற்றி கால்வாய் வருகிறது. இதனால் எத்தனை காலவிரயம், எத்தனை நீர்விரயம் ஆகிறது என்பதைப் பார்க்க வேண்டும். ஆகவே கீழ்ப்புலியூரில் இருந்து நேரிடையாக சுந்தரபாண்டி குளத்திற்குத் தண்ணீர் போக ஒரு வாய்க்கால் வெட்டினால் எந்தவிதமான கால விரயமும், தண்ணீர் விரயமுமின்றி செல்ல முடியும். இதையும் இந்த அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் பகுதிகளில் உள்ள காடுகளில் கூப்புகள் விடுகிறார்கள். அப்படிக் கூப்புகள் விடுகிறபோது அங்காங்குள்ள ஊற்றுக்களில் இருந்து வருகிற ஓடைகளின் ஓரத்திலுள்ள மரங்களைக் கூட சில இடங்களில் வெட்டி எறிந்து விடுகிறார்கள். அவ்வாறு ஓடைகளின் அருகிலுள்ள மரங்களை வெட்டக் கூடாது. ஓடைகளில் இருந்து இத்தனை தூரத்திற்குப் பிறகு உள்ள மரங்களைத்தான் வெட்ட வேண்டுமென்ற சட்டத்தை அரசாங்கம் கடைப்பிடிக்க வேண்டுமென்று கூறி இந்தத் துணை மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

* திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, துணை மதிப்பீட்டின் பேரிலே பேச வாய்ப்பளித்தமைக்காக முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக, தேசத்திலே இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற வறட்சி நிலைமை காரணமாக பாதகமான சூழ்நிலை ஏற்பட்டிருந்தாலும், அதை நிவர்த்திக்க அரசு முயற்சியை ஓரளவு மேற்கொண்டிருப்பது பாராட்டத்தக்கது என்றாலும் அது போதுமானதாக இல்லையென்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த நிவாரண வேலைகளுக்காக அரசாங்கம் 17.6 கோடி ரூபாய் செலவிடத் திட்டமிட்டிருந்ததில் இதுவரை 14.3 கோடி ரூபாயைச் செலவிட்டிருப்பதாகத் துணை மானியக் கோரிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. நமது தமிழ் நாட்டில் வறட்சி ஏற்பட்டிருக்கும் பகுதிகளில் பாதி வேலை கூட நடைபெறவில்லை. அதிகமான அளவுக்கு நிவாரண வேலைகள் செய்ய வேண்டிய கடமை அரசுக்கு இருப்பதை உணர்ந்து அதைத் தீவிரப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய பகுதியாகிய பல்லடம் தாலுகாவிலுள்ள வறட்சிப் பகுதிகளுக்கு அமைச்சர் அவர்கள் வருகிறபோது கிட்டத்தட்ட 140 குட்டைகளைக் கட்டவேண்டுமென்று மனுக் கொடுக்கப்பட்டு

[திரு. கே. என். குமாரசாமி] [1969 ஆகஸ்ட் 23

இதுவரை 30 குட்டைகள்தான் கட்டுவதற்குமேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. அந்தப் பகுதியில் கடந்த மூன்று ஆண்டுகளாக மழை இல்லாத காரணத்தால் வேலை இல்லாமல் விவசாயக் கூலிகள் கஷ்டப்படுகின்ற நிலையை மாற்றி அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கும், விவசாயத் துறையில் அதே நேரத்தில் அபிவிருத்தி செய்வதற்குச் சந்தர்ப்பம் ஏற்படும் என்ற அடிப்படையின் காரணமாக, துரிதமாக நிவாரண வேலையை அந்தப் பகுதியில் மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன்கள் கிணறு அடிவெட்டுக்குக் கொடுக்கப் பட்ட பணம் நிவாரண வேலை காரணமாக நிறுத்தப்பட்டு விட்டது. அந்தப் பகுதி விவசாயிகள் ஆயிரம் பேர் கிணறு அடிவெட்டு லோன் வேண்டுமென்று விண்ணப்பம் செய்தும் அந்த மனுக்கள் பைசல் செய்யப்படாமல் அப்படியே இருக்கின்றன. பஞ்சாயத்து யூனியன்களிடம் கேட்டால் அரசாங்கம் அந்தப் பணத்தை நிறுத்திவிட்டது என்று சொல்லுகிறார்கள். அந்தப் பகுதி விவசாயிகளுக்கு அந்த லோன் கொடுக்காவிட்டால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்படும். ஆகவே, அவர்களுக்கு லோன் கொடுக்க பஞ்சாயத்து யூனியன்களுக்குப் பணம் கொடுத்து அவர்களுடைய மனுக்களைப் பைசல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்துப் பகுதிகளில் கூட்டுறவு நில அடைமான வங்கிகள் மூலமாகக் கடன்களை வசூல் செய்வதை ஓராண்டுக் காலம் நிறுத்தி வைக்க வேண்டுமென்று கேட்டும் கூட கூட்டுறவு வங்கிகள் விவசாயிகளைத் துன்பப்படுத்தியும், மிரட்டியும், சொத்து முதற்கொண்டு ஜப்தி செய்தும் கடன்களை வசூல் செகிறார்கள். அரசாங்கம் அந்தக் கடன்களை வசூல் செய்வதை நிறுத்தி வைக்க வேண்டுமென்று ஆலோசனை கூறியும் கூட, அதை மத்திய நில அடைமான வங்கி ஏற்றுக் கொள்ளவில்லை என்ற நிலையில் விவசாயிகள் நிர்ப்பந்தப்படுத்தப்பட்டு வசூலிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஒரு பிரச்சினை ஏற்பட்டு அந்தப் பிரச்சினையைத் தீர்க்க ஒரு வழியைச் செய்தும் கூட அதைச் செயல்படுத்தமுடியாத நிலைமையில் வங்கிகள் நடந்து கொள்ளுமானால் அது பற்றிச் சர்க்கார் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்தப் பிரச்சினைக்கு என்ன தீர்வைக் காண்பது என்பதை உங்கள் முடிவுக்கே விட்டுவிடுகிறேன்.

குடிதண்ணீர்ப் பிரச்சினையை 1971-ம் ஆண்டுக்குள் பூர்த்தி செய்து விடலாம் என்ற அடிப்படையில் முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அது பெரும் பிரச்சினை. பாசன வசதிப் பகுதிகளில் இருந்து குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க நீண்ட திட்டத்தைப் போடவேண்டும். இதிலே அரசு விரைவாக முடிவு எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.



1969 ஆகஸ்ட் 23] [திரு. கே. என். குமாரசாமி]

மூடப்பட்ட ஆலைகளைப் பொறுத்தும் அரசாங்கம் தேசிய கார்ப்பரேஷனை அமைத்தும் கூட இன்னும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் இரவில் கூட வேலை கிடைக்காமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையைப் போக்க உடனடியாக முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். பொருளாதாரப் பிரச்சினை காரணமாக இது நீடித்துக் கொண்டு போகும் நிலை இருந்தால் நீண்ட நெடும் காலம் ஆவதன் காரணமாக தொழிலாளர்கள் புண்படும் நிலைமை இருக்கிறது. இதிலே அரசாங்கம் சீக்கிரம் முடிவு எடுக்கவேண்டும். இதிலே காலதாமதம் ஏற்படுவதால் மிகவும் மோசமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பெண்கள் இரவில் வேலை செய்யக் கூடாது என்று சட்டம் இருக்கிறது. அவர்கள் எப்போதும் இரவில் வேலை செய்யக் கூடாது. அந்தச் சட்டத்தையும் ஒழுங்கையும் மீறி பெண்கள் இரவிலே வேலை செய்கிற துர்ப்பாக்கியமான நிலைமை அந்தப் பிரதேசத்தில் ஏற்பட்டிருக்கிறது. இதை யெல்லாம் அரசு கணக்கில் எடுத்து துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை மட்டும் சொல்லிக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்ளுகிறேன்.

* **திரு. எம். கோபால் :** தலைவர் அவர்களே, இந்தச் சபையிலே என்னுடைய உரிமை பறிபோகிற அளவுக்கு, நான் மோசடி செய்ததாக சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் பேசினார். நான் ஆதாரத்தோடு கேட்கிறேன்; சபை முன்னால் ஆதாரத்தை வைக்கிறேன். அந்தப் பகுதி 109-ம் நம்பர் புலியூரை சேர்ந்தது. அந்தப் பகுதியில் நாங்கள் இன்று நேற்று வந்தவர்கள் அல்ல; பாட்டன் காலத்தில் இருந்து, முப்பாட்டன் காலத்திலிருந்து வாழ்ந்து வந்தவர்கள். என் பெயரில் 1932-ம் ஆண்டில் பட்டா செய்து தரப்பட்டது. ஆக நானே அதை அனுபவித்து வந்தேன். 1949-ல் என் மனைவி பெயருக்குப் பத்திரம் தாக்கல் செய்து செட்டில்மென்ட் ஆகிவிட்டது. இன்றைக்கு அது அந்தப் பத்திரத்தின் பேரில் அந்த அம்மையாரின் பேரில் மாற்றப்பட்டது. அந்த அம்மையாரும் அதன்பேரில் பல கடன்களை வாங்கி இருக்கிறார்கள். இன்று வரையில் அந்த நிலத்தின் பேரில் 19,000 ரூபாய் கடன் இருக்கிறது. அந்த உறுப்பினர் பேசும்போது போட்டோ எடுத்ததாகச் சொன்னார்கள். நான் அந்தக் குறிப்பிட்ட பத்திரிகை அதை நிரூபிக்க வேண்டுமென்று கோரி ஒரு வழக்குத் தொடர்ந்திருக்கிறேன். என் பெயரில் அவதூறாகவும், என்னைச் சார்ந்த கட்சிக்கு அவதூறு ஏற்படும் வகையிலும் எழுதியதால் பூவிருந்தவல்லி கோர்ட்டில் வழக்கு கொடுத்து நடைபெற்று வருகிறது. நான் வைத்திருக்கின்ற ரெக்கார்டுகளை எல்லா உறுப்பினர்களும் பார்க்கட்டும். கார்ப்பரேஷன் டாக்ஸ் கட்டியிருக்கிறேன். பட்டா பத்திரங்களையும் காண்பிக்கிறேன். அவற்றைச் சபாநாயகரிடம் சமர்ப்பிக்கிறேன். நான் கடந்த பத்தாண்டு காலமாக மாநகராட்சி

உறுப்பினராக இருந்திருக்கிறேன். பல கமிட்டிகளிலும் அங்கத்தினராக இருந்திருக்கிறேன். இப்போது இரண்டு வருஷ காலமாக சட்டமன்ற அங்கத்தினராக இருக்கிறேன். அப்படி ஒரு நிலத்தை நான் மோசடியாகப் பெற்று பட்டா செய்து கொண்டேன் என்பதை நிரூபித்தால் நான் பதவியை மட்டுமல்ல; என்னுடைய கட்சி என்ன தண்டனை கொடுத்தாலும் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால் அப்படிச் செய்கின்ற பல காங்கிரஸ் நண்பர்கள் இருக்கிறார்கள்; அவர்களை நான் சுட்டிக் காட்டவும் முடியும். இப்போது கூட நேரிலே காட்டுவேன் அத்தகைய காங்கிரஸ் நண்பர்களை. இந்த ரெக்கார்டுகளை சபாநாயகர் அவர்களிடம் அளிக்கிறேன். வணககம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. ராமச்சந்திர துரை அவர்கள் ஆளும் கட்சி உறுப்பினரான மாண்புமிகு கோபால் அவர்கள் மீது ஒரு அவதூறு குற்றச்சாட்டை, அவர் ஒரு நிலத்தை அபகரித்துக் கொண்டார் என்ற குற்றச்சாட்டை இந்த மாமன்றத்திலே எடுத்துரைத்தார். அதற்கு எந்த ஆதாரத்தை வைத்துச் சொன்னார் என்று தெரியவில்லை. பத்திரிகையிலே அதுபற்றி எழுதப்பட்டது என்று சொல்லலாம். அந்தப் பத்திரிகைகள் எல்லாம் காங்கிரஸ் பத்திரிகைகள் அல்ல என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பல முறை இங்கே வாதாடியிருக்கிறார்கள்.

நான் அந்தப் பத்திரிகை எந்தக் கட்சியைச் சேர்ந்தது என்று கவலைப்பட வில்லை. ஆனால் அந்தப் பத்திரிகை மீது மாண்புமிகு உறுப்பினர் திரு. கோபால் அவர்கள் ஒரு வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். அப்படி ஒரு வழக்கு தொடர்ந்திருக்கிற நேரத்திலே ஒரு உறுப்பினர் இங்குள்ள இன்னொரு உறுப்பினர் மீது ஒரு அவதூறான குற்றச்சாட்டைச் சுமத்தியிருப்பது நியாயம் தானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அல்லது திரு. கோபால் அவர்கள் அப்படி தவறுதான் செய்தார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமச்சந்திர துரை அவர்கள் நிரூபிக்க வேண்டும். இல்லாவிடில் அவர்கள் தவறான தகவலை இந்தச் சபையில் கொடுத்ததற்காக வருத்தமாவது தெரிவித்துக் கொள்ள வேண்டும். இதை நான் சபாநாயகர் அவர்களது கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

* **திரு. எம். ஆர். கண்ணன் :** தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என் கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இன்று சென்னை நகருக்கு கிடைத்துள்ள கமிஷனர் அவர்கள் நல்ல திறமையாளவர். அவர்களுடைய நிர்வாகம் நீண்ட நாட்கள் இருக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன். அதே முறையில் சென்னை நகருக்குக் கிடைத்திருக்கும் கலெக்டர் அவர்களும் சிறப்புக்குரியவர்கள். அவர்கள் இரண்டு பேர்களும் சென்னை நகரின் நலனுக்காக நல்லமுறையில் பாடுபட்டு வருகிறார்கள்.





இன்று, தண்ணீர்ப் பஞ்சம், தண்ணீர்ப் பஞ்சம் என்று சொல்லப்படுகிறது. இந்தத் தண்ணீர்ப் பஞ்சத்திற்கு யார் காரணம் என்பதை ஒரு சிறிது நேரம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். காங்கிரஸ் நண்பர்கள் ஏதாவது சொன்னால் கோபித்துக் கொள்கிறார்கள். இந்த இருபது ஆண்டுகாலமாக அவர்கள் கட்சி ஆட்சி செலுத்தி வந்திருக்கிறது. பத்து ஆண்டு காலமாக திராவிட முன்னேற்றக் கழகம் சென்னை நகராட்சி மன்றத்தின் பொறுப்பை வகித்து வருகிறது. இந்தப் பத்தாண்டு காலமாக சென்னை நகருக்குத் தண்ணீர் வசதி செய்து தரவேண்டுமென்று மாநகராட்சி மன்றம் வற்புறுத்தி வந்திருக்கிறது. ஆனால் இது வரையில் இருந்து வந்த காங்கிரஸ் கட்சி ஆட்சி அதைக் கவனிக்கவில்லை. ஆக, இருபது ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் இதைக் கவனியாது இருந்த காரணத்தினால்தான் சென்னை மக்கள் குடி தண்ணீர் கிடைக்காமல் இன்று கஷ்டப்படுகிறார்களே தவிர ஏதோ திராவிட முன்னேற்றக் கழகம் வந்த பிறகுதான் தண்ணீர்ப் பஞ்சம் வந்து விட்டதுபோல் பேசுகிறார்கள். கூட்டங்களும் போட்டுச் சொல்கிறார்கள். இது தவறானதொரு போக்காகும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் ப்ரப்போசலை ஏற்று அமல் படுத்தியிருந்தால் சில ஆண்டு காலத்திற்கு முன்னதாகவே சென்னை நகருக்குத் தண்ணீர் வசதி கிடைத்திருக்கக் கூடும். ஆகவே இன்றைய தண்ணீர் தட்டுப்பாடு நிலைக்குக் காரணம் அன்றைய காங்கிரஸ் ஆட்சியே. திராவிட முன்னேற்றக் கழகம் நகராட்சி மன்றப் பொறுப்பில் இருப்பதால் தண்ணீர் கொடுத்துவிட்டால் பிறகு காங்கிரஸ் கட்சிக்காரர்கள் என்றுமே சென்னையில் தலையெடுக்க முடியாது என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் அப்படிச் செய்தார்கள்.

அப்படியிருந்தும் கூட திராவிட முன்னேற்றக் கழகம் தன்னால் முடிந்த அளவிற்கு மக்களுக்குத் தொண்டு செய்ததால் சென்னையில் ஒரு காங்கிரஸ்காரர் கூட வெற்றி பெற முடியாத அளவிற்கு நிலைமை ஏற்பட்டது. ஆகவே, இன்றைய தண்ணீர்ப் பஞ்சத்திற்கு முழு முழுக் காரணமாக இருந்தது சென்ற கால காங்கிரஸ் ஆட்சிதான்; திராவிட முன்னேற்றக் கழகம் அதற்கு எந்தவிதத்திலும் பொறுப்பில்லை. ட்யூப் வெல்ஸ் போடுவதற்கு காண்ட்ராக்ட்க்கு விடுகிறார்கள். அதில் இருபது அடி இறக்கிவிட வேண்டும் என்றுதான் கண்டிஷன் இருக்கிறது. அப்படி இருபது அடி இறக்கிவிட்ட பிறகு காண்ட்ராக்ட்காரர்கள் அதை அப்படியே நிறுத்திவிடுகிறார்கள். ஒரு டிவிஷனுக்கு முப்பது குழாய்க் கிணறுகள் என்றால் அப்படி மொத்தம் மூவாயிரம், நாலாயிரம் குழாய்க் கிணறுகள் அமைத்தும் தண்ணீர் தட்டுப்பாடு இருக்கிறது. ஆகவே தண்ணீர் கிடைக்கும் அளவிற்கு குழாய்க் கிணறுகள் போடவேண்டுமென்று காண்ட்ராக்ட் எக்ரிமெண்டில்

[திரு. எம். ஆர். கண்ணன்] [1969 ஆகஸ்ட் 23

ஒரு திருத்தம் இருந்தால் சிறப்பாக இருக்கும். பேசின் ப்ரிட்ஜை அகலப்படுத்த வேண்டுமென்று பல ஆண்டுகளாக கோரப்பட்டு வருகிறது. அந்த வேலையை இன்னும் எடுத்துக் கொள்ளவில்லை. ஆகவே, அந்த வேலையை உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

பேசின் ப்ரிட்ஜ் போக்குவரத்து மிகுதியானதொரு இடமாகும். பேசின் ப்ரிட்ஜை, அதை ஒருவழிப் பாதையாக ஆக்கிவிட்டதால் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதை அவசியம் கவனித்து ஆவன செய்ய வேண்டும்.

எனது தொகுதியான பேசின் பிரிட்ஜ் தொகுதி மிகவும் பிற்பட்டதொரு பகுதியாகும். கடந்த இருபதாண்டு காங்கிரஸ் ஆட்சியில் குறிப்பாக சில பகுதிகளை அவர்கள் கவனிக்காமல் இருந்து வந்தார்கள். அங்கெல்லாம் ஏழை மக்கள் குடிசைகள் போட்டுக் கொண்டு வாழ்கிறார்கள். அவர்கள் எல்லோரும் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரிப்பவர்கள் என்ற எண்ணத்தை வைத்துக் கொண்டு அந்தப் பகுதியில் எந்தவித மான அபிவிருத்தி வேலைகளும் செய்யப்படவில்லை. குடிசை வாழ் பகுதிகள் பேசின் ப்ரிட்ஜிலிருந்து திருவொற்றியூர் வரையில் இருக்கிறது. பல தலைவர்கள் பெயரால் நகர்கள் என்ற அமைப்பில் இருக்கிறது. அங்கு தக்க அபிவிருத்தி வேலைகள் செய்யப்பட வேண்டும். அங்கு விளக்கு வசதிகள் கிடையாது. அதையும் நல்லமுறையில் ஏற்படுத்தித் தரவேண்டும்.

கொருக்குப்பேட்டை ரெயில்வே கேட், தண்டையார்ப்பேட்டை ரெயில்வே கேட் என்று இரண்டு இருக்கின்றன. அவற்றை மூடி விட்டால், திறக்க ஒரு மணி நேரம்கூட ஆகிறது. ஒரு பகுதி யிலிருந்து மறு பகுதிக்குப் போக முடியாது. அதனால் மேற்குப் பகுதி குடிசைவாழ் மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள்.

மேற்குப் பகுதியில் எந்தவிதமான சுகாதார வசதிகளும் கிடையாது. கேட்டின் இந்தப் பகுதியிலிருந்து கிழக்குப் பகுதிக்கு வரவேண்டுமென்றால் மிகவும் தாமதமாகிறது கேட்டுள் மூடிவிடப்பட்டால் . . . ஆகவே பிரசவக் காலத்தில் கூட அந்தப் பகுதி மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே இந்த இரண்டு கேட்களில் ஏதாவது ஒன்றுக்கு ஒரு ஓவர் ப்ரிட்ஜ் அல்லது அண்டர் ப்ரிட்ஜ் அமைத்துத் தந்தால் அங்குள்ள மக்களுக்கு வசதியாக இருக்கும்.

அடுத்தபடியாக, குடிசைப் பகுதிகள் சர்க்காருக்குச் சொந்த மான நிலங்களில் இருக்கின்றன, கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான நிலங்களில் இருக்கின்றன, சென்ட்ரல் கவர்ன்மென்ட்டுக்கு சொந்த மான நிலங்களில் இருக்கின்றன. அந்த நிலங்களிலுள்ள குடிசைப் பகுதிகளை நல்லமுறையில் அபிவிருத்தி செய்து சுகாதார வசதி கள் ஏற்படுத்தித் தரவேண்டும். சென்னையில் சொத்து வரி நல்ல முறையில் வசூலிக்கப்படவில்லை. கமிட்டி ஒன்று ஏற்படுத்தி



1969 ஆகஸ்ட் 23] [திரு. எம். ஆர். கண்ணன்]

சில பகுதிகளை செக் செய்தால் தெரியும், ஐம்பது சதவிகிதத்திற்கு மேற்பட்ட வீடுகளில் இருந்து நியாயமான சொத்து வரி செலுத்தப் படவில்லை என்பது, ஏழை மக்களின் வீடுகளில்தான் நல்லமுறை யில் சொத்து வரி வசூலிக்கப்படுகிறதே தவிர மற்ற வீடுகளில் நல்லமுறையில் சொத்து வரி வசூலிக்கப்படவில்லை. ஆகவே அதுவும் நல்லமுறையில் வசூல் செய்யப்பட வேண்டுமென்றும் அப்படிச் செய்தால் கமிஷனர் அவர்களுக்கு மேலும் சிறப்பு ஏற்படும் என்றும் கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்,

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, நம் மாநிலத்தில் இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கக் கூடிய வறட்சி நிலை மிகப் பயங்கர மானதாக இருக்கிறது. அதைப் போக்குவதற்காக நம் தமிழக அரசு முடிந்த அளவிற்கு மத்திய அரசோடு வலுவாக வற்புறுத்தி 11 கோடி ரூபாய் வரையில் பெற்றிருக்கிறது. இருந்தாலும் கூட நம் நாட்டில் ஏற்பட்டிருக்கக் கூடிய வறட்சி நிலையைப் போக்கு வதற்கு இப்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதியும், செய்யப்படும் துயர் துணிப்பு வேலைகளும் போதுமா என்பதை சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும். கிராமப்புறங்களில் ஏற்பட்டுள்ள வறட்சி நிலை காரணமாக சாதாரணமாக விவசாயத்தில் ஈடுபட்டிருக்கக் கூடிய விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் எந்தவித மான வருமானமும் இல்லாமல், எந்தவிதமான வேலையும் இல்லா மல் மிகவும் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில் துயர் தணிப்பு வேலைகளுக்காக பலவிடங்களில் பணம் ஒதுக்கப்பட்டு கண்மாய் வேலைகள், சாலை வேலைகள் கிணறுகளை ஆழப்படுத்தும் வேலைகள் போன்ற வேலைகளைக் கொடுத்து ஆண்களுக்கு இரண்டு ரூபாய், பெண்களுக்கு ஒரு ரூபாய் ஐம்பது பைசா என்ற விகிதத்தில் கொடுத்து வருகிறார்கள். இன்று அரிசி போன்ற பொருள்களின் விலைகள் உயர்ந்திருந்தாலும் இந்தத் துயர் தணிப்பு வேலைகளினால் இரண்டு வேளையில்லாவிட்டாலும் ஒருவேளையாவது சாப்பிட முடிகிறது.

எங்கள் நெல்லை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் துயர் தணிப்பு வேலைகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை 70 லட்சம் ரூபாய். அங்கு மிக வறட்சியான பகுதிகளாக மூன்று நான்கு தாலுகாக்கள் இருக்கின்றன. இரண்டு மூன்று ஆண்டுகளாக வரட்சியால் ஓரளவு பாதிக்கப்பட்டு இந்த ஆண்டு அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பல ஊர்களில் குடிப்பதற்குக் கூடத் தண்ணீர் இல்லாமல் நான்கைந்து மைல்கள் வெளி இடங்களுக்குச் சென்று, அந்த ஊர்க்காரர்கள் இந்த ஆள்களை வரவிடாமல் தடுக்கக் கூடிய அளவிற்கு, குடி தண்ணீர் கொண்டு வரவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இந்நிலையில் அங்குள்ள விவசாயிகளுக்கு இதற்கு முன்னால் அவர்கள் சர்க்காரிடமிருந்து வாங்கிய கடன்கள், கூட்டுறவுக் கடன்கள் இவைகளைத் திரும்பச் செலுத்தக்கூடிய

கஷ்டம் இருக்கிறது. இதற்கு முன்னால் தவணைகளில் வசூல் செய்து வந்ததை முன் பஞ்ச காலங்களில் ஒத்திவைத்திருந்தார்கள். அப்படி ஒத்திவைக்கப்பட்ட தவணைகளையும் இப்போது மொத்தமாக கொடுக்க வேண்டுமென்று ஜப்தி முதலிய நடவடிக்கைகளை எடுப்பதின் காரணமாக அவர்கள் கஷ்டத்திற்காளாகிறார்கள். பஞ்ச நேரங்களில் தவணைகளை, சர்க்கார் கடன்கள் ஒத்திவைக்கப்பட்ட காலங்களில் ஒத்திவைக்கப்பட்ட தவணைகளை அது பத்து வருடத் தவணையாக இருந்தால் ஒத்திவைக்கப்பட்ட தவணைகளை 11-வது வருடம் வசூல் செய்ய வேண்டும் என்று அதை ஒத்திவைக்க வேண்டுமே தவிர இந்த வருடம் ஒத்திவைக்கப்பட்டதை அடுத்த வருடம் இரண்டையும் சேர்த்து வசூல் செய்யும் முறைதான் இன்று இருந்து வருகிறது. ஆகவே பத்து வருடத் தவணை என்றால் 11-வது வருடத்திலிருந்து அதை வசூலிக்கக் கூடிய முறையில் தவணை முறையில் திருத்தம் செய்ய வேண்டும்.

விவசாயிகள் இன்று சர்க்காரிலிருந்து கிணறுகளை ஆழப்படுத்த, விவசாய அபிவிருத்தி வேலைகள் செய்ய என்று இப்படி பல கடன்கள் வாங்கியிருக்கிறார்கள். இப்போது பத்து வருடத் தவணை என்று அவை இருப்பதை 15 வருடத் தவணையாகவாவது உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேநேரத்திலே கிராமப் பகுதிகளில், வறட்சிப் பகுதிகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் குறைந்த ஊதியத்தை வைத்துக் கொண்டு அவர்களுக்குக் கிடைக்கும் பொருள்கள், தானியப் பொருள்கள் விலை உயர்ந்துவிட்ட காரணத்தினால், அவைகளை வாங்க முடியாமல் ஒரு வேளை இரண்டு வேளை என்று சாப்பிட முடிகிறதே தவிர 3 வேளை சாப்பிட முடியவில்லை. கஞ்சிகூடக் குடிக்க முடியவில்லை. எனவே, குறைந்த விலையில் கோதுமையையோ அரிசியையோ அந்த வறட்சிப் பகுதிகளில் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

*மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எதிர்க் கட்சி வரிசையிலிருந்து பேசிய பெருமதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ராமச்சந்திரன் அவர்கள் நாமக்கல் கல்லூரியிலே ஊழல் ஏதோ நடைபெற்றுவிட்டதாகச் சிலபல குற்றச்சாட்டுக்களையும், என்னை மாசுபடுத்திச் சொல்லும் வகையில் கூறப்பட்டதாகவும் சொல்லப்படுவதால் நான் அதற்கு விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நாமக்கல்லில் கலைக்கல்லூரி ஒன்று அமைப்பதற்காக 1967-ம் ஆண்டில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவில் சர்வ கட்சியைச் சார்ந்தவர்களும் அங்கம் வகித்தார்கள். இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பல்வேறு ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், ஊர்ப் பெருமக்கள் ஆகிய அவ்வளவு பேர்களையும் கொண்ட குழுவாக அது அமைக்கப்பட்டது. அதன் தலைவராக





நான் நியமிக்கப்பட்டேன். அந்தக் குழுவின் செயலாளராக கோட்டாட்சித் தலைவரவர்கள் அரசாங்கத்தின் அனுமதியோடு நியமிக்கப்பட்டார். அதுவல்லாமல் பொருளாளர் ஒருவரும் அந்தக் குழுவாலே தேர்ந்தெடுக்கப்பட்டார். கல்லூரி வசூல் முழுவதையும் நாமக்கல்லில் உள்ள ஸ்டேட் பாங்க் அக்கவுண்டில் வைக்க வேண்டுமென்ற விதிமுறைகள் ஆக்கப்பட்டது. அப்படிப் போடும் கணக்கு பொருளாளர் பெயராலே போட வேண்டும், பணத்தை எடுப்பதற்கு பொருளாளர், செயலாளர் ஆகிய இருவரும் கூட்டுக் கையொப்பமிட்டு, குழுவின் ஒப்புதல் பெற்று காரியங்களை ஆற்ற வேண்டுமென்ற விதிமுறைகளெல்லாம் அப்பொழுது செய்யப்பட்டது. முதலிலே அந்தக் குழு அமைக்கப்பட்டபொழுது நாமக்கல்லில் ஒரு கல்லூரி மட்டுமே அமைக்க வேண்டுமென்ற அடிப்படையில் அந்தக் குழுவினுடைய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆகவே, அந்த அடிப்படையில் வேண்டுகோள்களும் அச்சிடப்பட்டன. ரசீது புத்தகங்களும் அச்சிடப்பட்டன. ஆகவே; முதலில், ரசீதில், நாமக்கல் கலைக் கல்லூரி நன்கொடை என்று போட்டு வசூலித்து வந்தார்கள். குழுவின் ஆர்வத்தின் காரணமாக, இரண்டு கல்லூரிகள் அமைக்கப்பட வேண்டுமென்றும், ஆண்கள் கல்லூரி ஒன்று, பெண்கள் கல்லூரி ஒன்று அமைக்க வேண்டுமென்றும், ஆகவே, அந்த வகையில் வசூலை நடத்த வேண்டுமென்றும் விரும்பிக் கேட்டுக்கொண்டார்கள். அந்த அடிப்படையிலே இரண்டு கல்லூரிகளுக்கும் சேர்த்து வசூல் செய்ய முடிவெடுக்கப்பட்டு, அதற்குப் பின்னால் தொடர்ந்து அச்சிடப்பட்ட ரசீதுகளில் கலை கல்லூரிகள் நன்கொடை என்று போடப்பட்டது. அவைகளெல்லாம் அந்தந்த உறுப்பினர்கள் அல்லது ஆங்காங்குள்ள ஊராட்சி ஒன்றியத் தலைவர்களிடம் கொடுக்கப்பட்டு, அவர்கள் வசூல் செய்து தரும் பொறுப்பை மேற்கொண்டார்கள். அப்படி மேற்கொண்டிருக்கும் நேரத்தில் பள்ளிக்கூட மாணவர்களிடமிருந்தும் நன்கொடை பணம் பெறப்பட்டது. அவைகளுக்கு டிக்கெட்டுகள் அச்சிட்டு வழங்கப்பட்டது.

இந்த நிலையில் நிதி வசூலை மேலும் தீவிரப்படுத்தவும், குறிப்பிட்ட காலத்திற்குள் நிதி வசூலை முடிக்கக் கருதியும் நம்முடைய பெருமதிப்பிற்குரிய புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் குன்றுடையான் என்ற நாடகத்தை நடத்த வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டது. அதன்படி நாடக டிக்கெட்டுகள் அச்சிடப்பட்டு, அவைகள் அந்தந்த ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மூலமாக வழங்கப்பட்டன. நாடகம் நடத்தப்படும் நாளன்று நான் அங்கு சென்றிருந்தேன். எதிர்பாராதவகையில் அன்று எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் வர முடியவில்லை. நாடக டிக்கெட்டுகள் விற்ற அந்தப் பணத்தை ஊராட்சி மன்றத் தலைவர், என்னுடைய நினைவு சரியாக இருக்குமேயானால், 4,051 ரூபாய் என்று கருதுகிறேன், அதை ஒரு பள்ளிக்கூட விழாவின்போது மேடையில் என்னிடத்தில் கொடுத்தார்கள். உடனடியாக, நான் அதை

கோட்டாட்சித் தலைவரிடம் கொடுத்து அது பொருளாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்தச் செய்தி கிராம நலம் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அந்தச் செய்தியை வைத்துக்கொண்டு, அது கணக்கிலே வரவில்லை என்று குற்றம் சாட்டியிருப்பதாக நான் கேள்விப்பட்டேன்.

அந்த குன்றுடையான் நாடக வசூல் முழுவதும் கணக்கில் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. இந்த இரண்டாண்டு காலத்தில் ஏறக்குறைய 11 இலட்சம் ரூபாய்க்கு மேல் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. அதிலே 10 இலட்சம் ரூபாயை கல்லூரிகள் கட்ட வேண்டுமென்ற விதிப்படி கட்டப்பட்டது. மீதியிருப்பது அந்தக் கல்லூரிக் குழுவினுடைய, ஏற்கனவே விதித்த முறைகளின்படி பேங்க் அக்கவுண்டில் போடப்பட்டிருக்கிறது. இதற்கான கணக்குகள் முழுவதும் பொதுக்குழுவினால் ஏற்படுத்தப்பட்ட செயற்குழுவால் தணிக்கை செய்யப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், செயற்குழு, தணிக்கைக்குழு அமைத்து அந்தத் தணிக்கைக் குழுவில் பல்வேறு கட்சியைச் சார்ந்தவர்களும் அங்கம் வகிக்கிறார்கள். அவர்கள் ஆடிட் செய்தார்கள். அதுமட்டுமின்றி இல்லாமல், முறையான ஆடிட்டரிடம் கொடுத்து, அரசாங்கத்தில் அங்கீகாரம் பெற்ற ஆடிட்டரிடம் கொடுத்து கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு அதற்கு ஒப்புதல் தந்திருக்கிறார்கள். எவ்வளவு டிக்கெட்டுகள் அச்சிடப்பட்டன, எவ்வளவு விற்கப்பட்டன, எவ்வளவு நன்கொடை ரசீதுகள் அச்சிடப்பட்டன, எவ்வளவு விற்கப்பட்டன என்ற கணக்குகள் அத்தனையும் மொத்தமாக ஆடிட் கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. கிராமநலம் பத்திரிகையில் குறிப்பிட்டிருக்கிற பணம் கணக்கிலே வரவில்லை என்று சொல்லி, போட்டோ இருப்பதை எடுத்து வைத்துக் கொண்டு சொல்கிறார்கள். இதைக் கேள்விபட்ட அந்த ஊராட்சி மன்றத் தலைவரே அந்தக் குழுவினிடத்தில் எழுதிக் கொடுத்திருக்கிறார், இதிலே என்னுடைய சொந்தப் பணம் எதுவுமில்லை, குன்றுடையான் நாடகத்திற்காக, என்னிடத்திலே கொடுத்திருந்த டிக்கெட்டுகளை விற்பனை செய்த தொகையாகும், அமைச்சர் அவர்கள் வரும்பொழுது அவர்கள் கையிலே கொடுக்க வேண்டுமென்று கொடுக்கப்பட்டது. என் சொந்தப் பணம் இல்லை, வசூல் செய்து தரப்பட்ட பணம் என்று எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். பணத்தை எடுத்துக்கொள்ளும் அளவுக்கு இருந்தால், கிராம நலத்திலே அந்தப் படத்தைப் போட்டு கையாள்வது என்றால் அது கேட்பதற்கு மிகவும் விந்தையான செய்தியாக இருக்கிறது.

இன்றைக்கும் எதிர்க்கட்சித் தலைவரானாலும், அவரால் நியமிக்கப்பட்ட குழுவோ அல்லது மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமச்சந்திர துரை அவர்களோ எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் வந்து தணிக்கை செய்வதற்குத் தயாராக வைக்கப்பட்டிருக்கிறது. இந்த மாநிலத்திலேயே கல்லூரிகளுக்காக அமைக்கப்பட்ட குழுக்களில் முறையாகக் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு, அச்சிடப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் பெருமை எங்களுக்கு உண்டு என்று எடுத்துச்





சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, ஒருவர் கொடுத்திருக்கும் நோட்டீசுக்கு, தேவையான விளக்கம் கல்லூரி குழுவால் தரப்பட்டிருக்கிறது. ஆனால் அவைகளை யெல்லாம் மறந்து, ஏதோ பெரிய ஊழல் நடந்துவிட்டது போலப் பேசுவது பொறுப்புள்ள எதிர்க்கட்சி உறுப்பினருக்குப் பொருந்தாது என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன். ஆகவே, கிராமநலத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் அந்தப் பணம், தனிப்பட்ட ஒருவர் கொடுத்தது அல்ல, டிக்கெட் மூலம் வசூல் செய்த பணத்தை மொத்தமாகச் சேர்த்துக் கொடுத்திருக்கிறேன் என்று ஊராட்சி மன்றத் தலைவரவர்கள் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அந்த டிக்கெட்டுகளின் கணக்குகள் புத்தகத்திலேயே அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. அந்தக் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டிருக்கின்றன. அந்தப் புத்தகத்தை வேண்டுமானாலும் பெருமதிப்பிற்குரிய ராமச்சந்திர துரை அவர்களுக்குக் காட்டுவதற்கு நான் தயாராக இருக்கிறேன். இன்னும், நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் கருத்திருமன் அவர்கள் வேண்டுமானாலும் அதைப் பரிசீலனை செய்வதற்கு எந்த இடத்திலும் காட்டத் தயார். அந்தக் கணக்கிலே கோளாறு இருந்தால் அதனால் ஏற்படும் குற்றத்தை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன், அதற்குரிய தண்டனைகளைப் பெற்றுக் கொள்ளவும் நான் தயாராக யிருக்கிறேன்.

ஆகவே, களங்கமில்லாமல், ஊர்ப்பெருமக்கள் அனைவரும் சேர்ந்து, ஊரிலுள்ள உழவரிலிருந்து பெருமக்கள் வரையிலும், சர்வகட்சித் தலைவர்களும் சேர்ந்து ஒரு காரியத்திற்காக, நல்ல பணிக்காக செய்யும்பொழுது அதற்குக் களங்கத்தைக் கற்பிக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். எவ்வளவோ பிரச்சினைகளைப்பற்றி பேச வேண்டிய இராமச்சந்திர துரை அவர்கள் இப்படி ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை இனிமேல் இந்த மன்றத்தில் கூறாமல் இருப்பது அவருடைய கௌரவத்திற்குப் பொருத்தமாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டு நான் இந்த விளக்கத்தைச் சொல்லி முடிக்கிறேன்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** தலைவரவர்களே, இந்த நோட்டீசிலே அச்சிடப்பட்டிருக்கும் குற்றச்சாட்டானது 4,051 ரூபாய் வரவு-செலவுக் கணக்கில் வரவில்லை. இன்னின்னார் கொடுத்தார்கள் என்று கொடுத்தவர்களின் பெயர்கள் இதிலே போடப்பட்டிருக்கிறது. ஒரு ரூபாய் கொடுத்தவர்களிலிருந்து 11 பைசா கொடுத்தவர்களிலிருந்து இந்தக் கணக்கில் வருகிறது. ஆனால், கிராமநலத்திலே போடப்பட்டிருக்கும் இந்த 4,051 ரூபாயை பிரசிடெண்டினால் கொடுக்கப்பட்டிருப்பதாக வரவு இல்லை.

**திரு. சா. மெய்யப்பன்:** தலைவரவர்களே, இன்று அனைவரும் இந்தக் கோரிக்கையை ஒரு மணிக்கெல்லாம் முடித்தாக வேண்டும். இது உரிமைப் பிரச்சினை போல், அமைச்சருக்கும்,

அல்லது சட்டசபை உறுப்பினருக்கும் மற்றொரு சட்டசபை உறுப்பினருக்கும் உள்ள வாதமாக வந்துகொண்டிருக்கிறது. ஆகவே, ஒரு மணிக்குள் முடிக்க வேண்டியிருப்பதால், இதை உரிமைப் பிரச்சினையாக மாற்றிக்கொண்டு, அந்தத் துணை மதிப்பீட்டின் விவாதத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது உரிமைப் பிரச்சினை அல்ல. ஒரு உறுப்பினர் குற்றச்சாட்டு ஒன்றைக் கூறினால் அதற்கு விடையளிப்பது தேவையானது தான். அதற்கு விடையளிக்க தேவையான நேரம் இருக்க வேண்டியதுதான். ஆகவே, இதை உரிமைப் பிரச்சினை என்று இன்னொரு நேரத்திற்கு எடுத்துக் கொள்ள முடியாது.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** இதைப்பற்றி விசாரணை நடத்தினால் அதை நான் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, சட்டமன்ற உறுப்பினர் திரு. கோபால் அவர்கள் நான் கூறியதற்கு மறுப்பு கொடுத்ததாகக் கேள்விப் பட்டேன். நான் அந்தச் சந்தர்ப்பத்தில் இங்கு இல்லை. அவர் பெயருக்குப் பட்டா இருப்பதாகக் கூறுகின்றார். அவர் பெயருக்குப் பட்டா இல்லாமல் அதற்கு ஸ்டே ஆர்டர் கேட்டு வாங்குவதற்காக அவர் போயிருக்கிறார். அந்தப் பட்டாவை இந்த மன்றத்திலே சமர்ப்பித்தால், அதைத் திரும்பப்பெற்றுக்கொள்வதற்கும் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் முத்துசாமி அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு அதைப்பற்றி விசாரணை நடத்தினால் நான் ஏற்றுக்கொள்கிறேன் என்று திரு. ராமச்சந்திர துரை அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்தில் குன்றுடையான் நாடகத்திற்காக விற்ற பணம் சேர்க்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த ரூ. 4,051 டிக்கட் விற்ற பணத்தோடுதான் சேர்ந்திருக்கிறது. அந்தப் பணத்தை தனியாக ஒரு விழாவிலே அமைச்சரிடத்திலே அவர் கொடுத்திருக்கிறார். ஆக, டிக்கட் இந்த நம்பரிலிருந்து இந்த நம்பர் வரை விற்கப்பட்ட பணத்தில் அது அடங்கியிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்திருக்கிறார். உறுப்பினர் கேட்ட அந்த விசாரணையினுடைய முடிவுக்குப் பிறகு எந்த நிபந்தனையை ராமச்சந்திர துரை அவர்கள் ஏற்றுக் கொள்ளுகிறார்கள் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** தலைவர் அவர்களே, இதில் நான் குறிப்பிடுவது என்னவென்றால், ரூ. 1 வாங்கியது கூட, தனிப்பட்ட நபரிடமிருந்து வந்தது என்ற கணக்கு இதில் வந்திருக்கிறது. அதைச் சேர்த்திருக்கிறார் என்று சொன்னால், எந்தப் பொதுப்



பணத்தில் என்று சொன்னால் நான் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறேன். ஆனால் அந்தப் பணத்தை ஏற்றுக் கொண்டதாகக் கூறுகிற நேரத்தில், இதற்குத் தனியாகக் கணக்கு வரவில்லையே என்பதுதான் பிரச்னை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** குன்றுடையான் நாடகத் திற்காக டிக்கட் விற்கப்பட்டது. இந்த நம்பரிலிருந்து இந்த நம்பர்வரை டிக்கட்டுகள் விற்கப்பட்டன, மொத்த வசூல் இவ்வளவு என்று கணக்கிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த வசூலிலேயே ரூ. 4,051 வசூலும் அடங்குகிறது. இதை வசூலித்தவர் தனிப்பட்ட முறையிலே அமைச்சரிடத்திலே கொடுத்திருக்கிறார். அதைத்தான் அமைச்சர் விளக்கமாகச் சொன்னார். இப்பொழுதும் விசாரணை தேவை என்று சொல்லுகிறாரா, இல்லை என்று சொல்லுகிறாரா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அப்படி என்றால், இந்த நாடகத் திற்கு டிக்கட் விற்றதன் மூலமாக வரவு ரூ. 4,051 என்று இருக்க வேண்டும் அல்லவா ? வசூல் செய்யப்பட்டது, இந்த நாடகத் தின் மூலமாக இந்த வசூல் என்று இருக்கவேண்டுமல்லவா என்பது தான் எனக்குரிய சந்தேகம்.

* **மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தலைவரவர்களே, நாடகத் திற்காகப் பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள டிக்கட்டுகள் அச்சடிக் கப்பட்டு பல பேரிடத்திலே கொடுக்கப்பட்டன. வாங்கிச் செல்கிற வர்கள், உரியவர்களிடத்திலே கையெழுத்து போட்டுக் கொடுத்து விட்டு அதை வாங்கிச் செல்கிறார்கள். விற்ற டிக்கட்டுகளுடைய தொகையையும் மீதி இருக்கக்கூடிய டிக்கட்டுகளையும் கொண்டு வந்து அந்தப் பொறுப்பாளரிடத்திலே கொடுக்கிறார்கள். ஆக, யார் யாரிடத்திலே எவ்வளவு எவ்வளவு கொடுக்கிறோம் என்று அந்த அக்கவுண்டைத்தான் எழுதுவோமே தவிர, ரூ. 1 டிக்கட் யார் யார் வாங்கினார்கள் என்பதையெல்லாம் கணக்கிலே எழுதுகிற வழக்கம் இதுவரையிலே இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நன் கொடையாக யாராவது கொடுப்பார்களானால் நன்கொடைக்கான ரசீதெல்லாம் வந்திருக்கும். அல்லது தனிப்பட்ட முறையில் கொடுத்தால் வந்திருக்கும். ஒரு ரூபாய் டிக்கட் விற்ற தொகை, என்று அந்தத் தொகையினுடைய அளவுதான் போடப்படும் தவிர, டிக்கட் வாங்கியவர்களுடைய பெயர்கள், 3 இலட்சம் பேர் டிக்கட் வாங்கினார்களானால் அந்த 3 இலட்சம் பெயர்களும் கணக்கெடுக்கப்படும் என்பது நான் கண்டிராத புதுமையாகும். அதே போல் இந்த டிக்கட்டுகளை வாங்கிச் சென்று ஊராட்சி மன்றத் தலைவர், விற்ற தொகையை என்னிடத்திலே கொண்டு வந்து கொடுக்கிறார். கொடுத்த பணத்தை உடனே நான் உரிய வரிடத்திலே சேர்க்கிறேன். அதற்காக அவர் விளக்கம் கொடுக் கிறேன் என்று விளக்கம் எழுதியிருக்கிறார். 'நான் நன்கொடை யாக வசூலிக்கவில்லை, சொந்தப் பணத்தைக் கொடுக்கவில்லை, குன்றுடையான் நாடகத்திற்காக வசூலிக்கப்பட்ட பணம்' என்று

எழுதியிருக்கிறார்கள். அடுத்து, இந்த நோட்டீஸ் அச்சடிக்கப்பட்டதைப்பற்றிக் கொடுக்கப்பட்ட விளக்கம். அதற்குரிய விளக்கத்தை உரிய ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களே எழுதிக் கொடுத்திருக்கிறார். ஆகவே, இது கணக்கிலே வரவேண்டுமென்று கேட்பது எந்த வகையிலே பொருத்தம் என்று தெரியவில்லை. ஆதவே, இதைப்பற்றி விசாரணை மேலும் தேவை என்று திரு. ராமச்சந்திர துரை கருதுவார்களானால் அந்த விசாரணைக்கு நான் தயாராக இருக்கிறேன். ஆனால் அந்த விசாரணை முடிவுக்கு அவர் என்ன கட்டுப்படுகிறார் என்பதை இந்த மாமன்றத்தில் அறிவிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** தலைவர் அவர்களே, இந்த விசாரணைக்கு நானும் தயாராக இருக்கிறேன். அதில் என் முடிவு, நான் சொல்வதிலே குறை இருந்தால் இந்த மன்றம் என்ன தீர்ப்பளிக்கிறதோ அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவரவர்களே, ராமச்சந்திர துரை அவர்களுடைய ஒரு குற்றச்சாட்டின்மீது இந்த வகையிலே முடிவெடுக்கப்படுகிறது.

அடுத்தபடியாக, கோபால் அவர்களுக்குப் பட்டா இல்லை என்று சொன்னார். பட்டா இருப்பதற்கு போட்டோ காப்பி இங்கே இருக்கிறது. '. . . ஷை கிராமம் 150 நெம்பர் பட்டாதார் வே. முனுசாமி குமாரன் கோபாலுக்கு கொடுத்த ரொக்க பட்டா என்னவென்றால் . . .' என்று ஆரம்பமாகிறது. இது 7—4—1932-ல் செய்து கொடுக்கப்பட்ட பட்டாவாகும். இதற்கு என்ன விளக்கம் அளிக்கிறார் உறுப்பினர் ?

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** நான் கூறியது இந்தப் பத்திரத்தில் பட்டாவை வாங்கிக் கொடுப்பதாகத்தான் காட்டியிருக்கிறாரே தவிர, பட்டா கையில் இருப்பதாகக் காட்டவில்லை. அந்த வீட்டிலே . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நீங்கள் குறிப்பிட்டது பட்டாவே கிடையாது என்று. நான் சவால் விடுகிறேன் என்று அப்பொழுது சொன்னீர்கள். இதற்கு என்ன பதில் அளிக்கிறீர்கள் ? என்று கேட்கிறேன்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** நான் பத்திரத்தை வைத்துத்தான் சொல்கிறேன். பட்டா அவர்களுக்கு இருக்கிறதா ? அவர்களுக்கு இருந்திருந்தால் கிரயம் செய்கின்ற நோக்கிலே இந்தப் பட்டாவை அவர்களுக்கு மாற்றிக் கொடுத்திருக்கலாம். பட்டா கையில் இல்லாத காரணத்தினால் அவர் பட்டா வாங்கிக்கொடுப்பதாகச் சொல்கிறார்.





**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பத்திரத்திலே உள்ளதைச் சொல்லுகிறபோதும் அதையும் பத்திரமாகச் சொல்லவேண்டும். 'பட்டாவே இல்லை, நான் சவால் விடுகிறேன், ஏதோ ஒரு நிலத்தை ஏற்று யாருக்கோ விற்றுவிட்டார், அவருக்கு அருகதையில்லாத நிலம், யாருடையதையோ, யாருக்கோ கொடுத்துவிட்டார்' என்பதுதான் தங்களுடைய குற்றச்சாட்டு. பட்டா அவருக்கு இருக்கிறது. இதற்கு என்ன சொல்கிறீர்கள் என்பதுதான் என்னுடைய கேள்வி.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** தலைவர் அவர்களே, அந்தப் பட்டா எந்த ஆண்டிலே கொடுக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 1932-லே.**

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** 1932-லே என்றார்கள். எந்த ஜமீந்தாரிடத்திலே வாங்கியதாகப் பட்டா காட்டுகின்றது ? 1926-வது ஆண்டிற்குப் பிறகு ஜமீந்தார் அந்த நிலத்தை விற்பதற்கோ வேறு எதுவும் செய்வதற்கோ உரிமை கிடையாது. அவர்கள் அப்படி விற்றிருந்தாலும்கூட, மாற்றிக் கொடுத்திருந்தாலும் கூட செல்லத்தக்கது அல்ல . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பட்டா கொடுக்கிற நேரத்திலே விற்பதற்கே பேச்சு வராது. சர்க்கார் புறம்போக்கு நிலத்திற்குத்தான் பட்டா . . .

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** ஜமீன் எஸ்டேட்ஸ் அபாலிஷன் ஆக்ட்படி . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இதுப் பற்றியும் விசாரணைக்கு அவர் உட்படுகிறாரா, சபையினுடைய முடிவை அவர் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறாரா ?

**திரு. ரா. ராமச்சந்தி துரை :** அதற்கும் நான் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தலைவர் அவர்களே, இந்த விசாரணை எந்த முறையில் அமையவேண்டும் ? அதற்காக நாம் யாரிடத்தில் விவரங்களைக் கொடுக்கவேண்டும் ? அதை எப்படி, நேரடியாக அவர் கொடுக்க வேண்டுமா ? அல்லது பத்திரிகைகளிலே அவர் அதைப்பற்றி வெளியிடுவாரா ? அதற்கு விளக்கம் அளிக்க வேண்டுமென்று சபைத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர் இப்பொழுது எழுப்பியிருக்கிற பிரச்னையை எந்த முறையிலே விசாரித்து முடிவெடுக்கலாம் என்பதைப்பற்றி நான் நாளைக்கு தீர்ப்பளிக்கிறேன்.

இன்னொன்று, நம்முடைய சட்டமன்ற விதிமுறைகளிலேயும் மரபிலேயும் ஒன்றை சொல்லிவிடுவது வழக்கம். இந்த அவையில் பேசுகின்ற உறுப்பினர்கள், தங்களுடைய பேச்சுக்கு ஆதாரமாக

ஏதாவது ஒரு பத்திரிகையோ, நோட்டீஸ்களையோ படிக்கின்ற நேரத்தில் இந்தத் துண்டு நோட்டீஸ்களை இவர்கள் கொடுத்தார்கள், நான் கூறி விட்டேன் என்று அவையிலே விட்டுவிட முடியாது. அதை இந்த மன்றத்திலே உறுப்பினர் கொடுக்கின்ற நேரத்தில் அந்த நோட்டீஸிலே, அந்த பத்திரிகையிலே என்ன கூறப்படுகின்றதோ அதை இந்த மன்றத்திலே பேசுகின்ற உறுப்பினர் கூறியதாகத் தான் பொருளாகும். அதற்கு அவர் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். பத்திரிகையிலே வந்ததை நான் சொன்னேன், இல்லையென்றால் விட்டுவிட்டுப் போங்களேன் என்று சொல்லி விட்டுப் போகக்கூடிய நிலையிலே இருக்க முடியாது. அந்த வகையிலே யாரோ ஒரு உறுப்பினர், தொகுதியிலுள்ள ஒருவர், மாண்புமிகு உறுப்பினரிடத்தில் மனு ஒன்றைக் கொடுத்த நேரத்தில், அதில் இருக்கிற குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாமல் இருந்த காரணத்தினால், அந்தக் குற்றச்சாட்டைக் கொடுத்த உறுப்பினர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். ஆகவே, இன்னொரு மரபையும் கூட நாம் மேற்கொள்ளலாம். இப்பொழுதுதான் நாடாளுமன்றத்திலே ஒரு முறை மேற்கொள்ளப் படுகின்றது என்று சொன்னார்கள். எந்த ஒரு உறுப்பினராவது வேறு உறுப்பினர் மீது, அல்லது அமைச்சரவையிலே இருக்கிற அமைச்சர் மீது குற்றங்கள் சாட்டுவதாக இருந்தால், ' நான் இன்ன உறுப்பினர் மீது சில குற்றங்கள் சாட்டப்போகிறேன்—குற்றத்தை என்ன குற்றம் என்று சொல்லத் தேவையில்லை—நான் சில குற்றங்களைச் சொல்லப் போகிறேன் என்று பேரவைத் தலைவரிடத்திலே கூறி விட்டால் அவர் அன்று அந்த உறுப்பினரும் அந்த அமைச்சரும் இடத்திலே இருப்பதற்கும் அவர்கள் கூறுகின்ற கூற்றுக்கு விடை அளிப்பதற்கும் வழி செய்ய முடியும். ஆகவே, அந்த முறையை இனி இந்த அவையிலே பேசுகின்ற உறுப்பினர்கள் பின்பற்ற வேண்டுமென்றும் நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. டி. மார்டின் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் குறிப்பிட்ட தீர்ப்பில் ஒரு உறுப்பினர் இந்த மன்றத்தில் ஒரு மனுவைக் காட்டியதாகவும் அந்த மனுவின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்ட நேரத்தில் அது உரிமைப் பிரச்னையாக வந்தது என்றும் கூறி இருக்கிறீர்கள், அல்லவா? ஆகவே, இந்த மன்றத்திற்குள் அவர் ஒரு மனுவைக் கொடுத்த நேரத்தில் அந்த மனுவில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான், அந்த உறுப்பினர் மீது உரிமைப் பிரச்னை எடுத்ததாகச் சொல்லவில்லை. அந்த உறுப்பினர் குற்றம் புரிந்ததாக நீதிமன்றத்திலே வழக்கு தொடரப் பட்டது, அதைச் சொல்கிறேன்.

அவர் செய்த குற்றம், அவர் செய்ததெல்லாம் தனது தொகுதியிலிருந்து ஒருவர் மனு கொடுக்க, அந்த மனுவை அவர் முதல் அமைச்சர் அவர்களிடத்திலே இந்த அவையிலே கொடுத்தார். அப்பொழுது அந்த மனுவிலே கூறப்பட்டிருக்கிற குற்றச்சாட்டு



நிரூபிக்கப்படாமல் இருந்த காரணத்தினால், பொய்யான குற்றத்தைக் கூறினார் என்பதற்காக உறுப்பினர் மீது நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அப்படிப்பட்ட ஒரு நிலைமை இருக்கிறது என்பதை சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்து கொள்வது நலம்.

*THIRU T. MARTIN : I want to say one thing for the guidance of all the hon. Members. It is an important matter. When a person presents a petition here, he takes up responsibility for the contents of that petition. Having presented a petition, he could not take umbrage under privilege and non-suit a person who has filed a suit for damages or files a complaint for malicious damages or prosecution or any other thing. Whatever legal remedy which is open to the third parties will not be prevented under the umbrage of privilege. That is the thing. But here he has made certain allegations against the Hon. Minister . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த நிகழ்ச்சியை நான் சொல்லவில்லை. வேறு ஒரு நிகழ்ச்சியை நமது மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்தேன்.

**திரு. சா. மெய்யப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மணி இப்பொழுது 12-10 ஆகி விட்டது. ஒரு மணிக்கு வாக்கெடுப்பு நடத்தியாகவேண்டும். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பேசவேண்டியிருக்கிறது. இவர்களுக்கு 20 நிமிஷம், அவர்களுக்கு 20 நிமிஷம். இப்பொழுது உறுப்பினர்கள் பேசுவதற்கே நேரம் இல்லை. இந்த நிலையில் என்ன செய்யவேண்டும் என்பதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், அவை முன்னவரும் கலந்து முடிவு செய்துவிடுவது நலம். திரு. சா. மெய்யப்பன்.

**திரு. சா. மெய்யப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கை விவாதத்தின் மீது பேசுவதற்கு 5, 6 தடவைகள் பெயர் கூப்பிடப்பட்டு, 7-வது தடவையாக இப்பொழுது பேச ஆரம்பிப்பதில் வெற்றி அடைந்திருக்கிறேன். இந்தத் துணை மானியக்கோரிக்கையில் பேசுவதற்கு ஐந்து நிமிடங்கள் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஐந்து நிமிடங்களில் நான் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்கள் பலவற்றிலிருந்து ஒன்றை எடுத்துப் பேசுவதே முடியாத காரியமாக இருக்கும். பணம் கொடுக்கல், வாங்கல் என்ற முறையில் சிறிது அளவுடன் விவாதிப்பதைக் காட்டிலும், எல்லாவற்றையும் விவாதித்தால் மிகவும் நல்லது என்று நினைக்கிறேன். அதில் 9-வது மானியக் கோரிக்கைக்கு, உணவு கள்ளக்கடத்தல் என்ற பெயரால் திருவாடானை தொகுதி, காரைக்குடித் தொகுதியில் தஞ்சாவூர் கண்காணிப்பு போலீஸ் புரியும் அநீதிகளை விவாதிக்க ' என்று ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். அதை முக்கியமான பிரேரணையாகக் கொள்கிறேன். நேற்று இதே அவையில்

[திரு. சா. மெய்யப்பன்] [1969 ஆகஸ்ட் 23

பலவிதமான தீர்மானங்களும், பலவித விவாதங்களும் நடந்தன. எனது மதிப்பிற்குரிய நண்பர், மார்க்சிஸ்டு கட்சித் தோழர் அவர்கள் ஒரு கேள்வியை எழுப்பினார்கள். நேற்று மறுபடி 41-வது விதியின் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்தார்கள். அதற்கு நம்முடைய உணவு அமைச்சர் அவர்கள் மிக அழகாக ஒரு கன்றுக்குட்டி கதையைச் சொன்னார்கள். கன்றுக்குட்டியின் கதையை எடுத்துக்கொண்டாலும், அவர்கள் சொன்ன கன்றுக்குட்டி கிராமப்பக்கத்திலுள்ள கன்றுக்குட்டி, பட்டணத்து கன்றுக்குட்டி அல்ல என்று சொல்கிறேன். காரணம், கன்றுக்குட்டியை கட்டு அவிழ்த்துவிட்டவுடன் துள்ளித் துள்ளி ஓடும். ஆகவே, அது உயிருள்ள கன்றுக்குட்டி, கிராமப்புறத்திலுள்ள கன்றுக்குட்டி. கன்றுக்குட்டி கதை சொல்லும்பொழுது மாட்டை விளைநிலமாகவோ அல்லது நெல்லாகவோ சித்தரித்தார்கள். மாட்டுக்குச் சொந்தக்காரராக அரசை சித்தரித்தார்கள். கன்றுக்குட்டி மக்களுக்காகக் கட்டுப்பாட்டில் இருந்து கொண்டிருந்தது, இப்பொழுது மறுபடியும் கட்டவிழ்த்து விடப் பட்டிருக்கிறது மக்களுக்காக என்று அவர்கள் சித்தரித்துக் காட்டினார்கள். அதற்கு அடுத்தாற்போல் கறவைக்காரர்கள் கட்டவேண்டும் என்று சொன்னது, ரெவின்யூ டிபார்ட்மெண்டு, விஜிலன்ஸ் அதிகாரிகள் செய்யக்கூடிய முறையை நான் சற்று உருவகப்படுத்திப் பார்த்தேன். கிராமப்புறத்திலுள்ள கன்றுக்குட்டி அவிழ்த்துவிடப் பட்டவுடன், அது தன் தாய் மடியிலிருந்து பால் குடிக்கப்போகும். பால் குடிக்கப்போகும் பொழுது பால் சுரக்கும். அப்படி உள்ளதை உங்களுடைய கறவைக்காரர் என்ன செய்கிறார்கள் என்றால், கன்றுக்குட்டி மடியைக் கவ்வியவுடன் பால் சுரந்து விடுகிறது, சுற்றுக்கறவை மாடாக இருக்கிறது, நல்ல மாடாக இருக்கிறது, அந்த நிலையில் உடனே அதை அடித்து, துன்புறுத்தி, மறுபடியும் கட்டிப்பிடித்து, தஞ்சாவூர் மாட்டுப் பால் என்றெல்லாம் உங்களிடம் பொய்யான விவரங்களைக் கொடுத்து, அந்த மக்கள் அவஸ்தைப்படுகிறார்கள். நீங்கள் வைத்திருக்கிற கறவைக்காரர்கள்—நீங்கள் தான் மாட்டுச் சொந்தக்காரர்கள்—இராமநாதபுரம் ரெவின்யூ அதிகாரிகள்—அங்குள்ள நிலை எப்படி இருக்கிறது என்று சொன்னால், அவர்கள் மக்களை மாட்டு மந்தையைப் போல, வாயில்லா ஜீவன்களாக நினைத்து, நடத்துகிறார்கள். மாடு அடிபடுகிறது, அதைப் பார்த்துக் கொண்டிருக்கிற நிலை இருக்கிறது. வெளியிலே எடுத்துச் சொல்லப்போனால், திருவாடானை, காரைக்குடி எம்.எல்.ஏ.க்கள் மந்திரியிடம் சொன்னால், வண்டியை ஓட்டிக் கொண்டு போக முடியும், நெல்லைத் தான் எடுத்துக் கொண்டு போக முடியும் என்று அரட்டிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அந்த மக்கள் கடிதம் தந்திருக்கிறார்கள். அதையும் அமைச்சர் அவர்களிடத்தில் கொடுத்திருக்கிறேன். உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1969 ஆகஸ்ட் 23] [திரு. சா. மெய்யப்பன்]

மேலும் கன்றுக்குட்டி தாய்ப் பாலை சுவைத்துக் கொண்டிருக்கும் சமயத்தில் அதை பிரித்துக் கொண்டு போய்விடுகிறார்கள். தஞ்சாவூர் மாட்டுப் பால் என்று விதை நெல்லைக் கூட ஏற்றி வைத்துக்கொண்டு போய்விடுகிறார்கள். கன்றுக்குட்டி எப்படி பால குடிக்கும்? பசுங்கன்றுக்குட்டி பெரியதாகப் போனால் பல கன்றுக்குட்டிகளை ஈன்று தரும். நீங்கள் தானே சொந்தக்காரர், மாடு அடிபடுவதை எப்படி சொந்தக்காரர்கள் பார்த்துக் கொண்டு இருப்பார்கள் என்பதைத் தான் அரசுக்கு வலியுறுத்த விரும்புகிறேன். இதைப்போல நீண்ட நெடுங்காலமாக நடக்கிறது. அண்ணா ஆட்சியில் இது போன்று நடக்கிறதா என்று அமைச்சர் அவர்கள் கூடக் கேட்டிருக்கிறார்கள். சொல்லுவதற்கே வெட்கமாக இருக்கிறது. ஆட்சியில் இருக்கிறவர்களிடத்தில் குறை இல்லை. ஆட்சி வைத்திருக்கிற கறவைக்காரர்கள் பேரில் தான் குறை. இதை நீங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

இன்னொன்றையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதே நிலை நீடிக்குமானால் மக்களாகிய அந்த கன்றுக்குட்டி அடிபட்டு, கன்றுக்குட்டிக்கு உயிரும் இருக்குமானால், அது சீறி, கொந்தளித்து எழுந்து, விபரீதமான நிலைமைகள் ஏற்படும். எங்களைப் போன்றவர்கள் சற்று நிதானிக்கவேண்டும், இது போன்று செய்யக்கூடாது என்று வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். மூன்று கேஸ்கள் ஏற்பட்டிருக்கின்றன. கண்ணங்குடியிலும், பக்கத்து கிராமத்திலும் ஜீப் வண்டியில் வந்து, அடித்து, துன்புறுத்தி, எடுத்துக்கொண்டு போகிறார்கள். கேஸ் தஞ்சாவூர் எல்லையில் பிடிக்கப்பட்டிருக்கிறது. ஆவுடையார் கோவிலில், வண்டி ஓட்டிக்கொண்டு போகிறவர்கள், கார் ஓட்டிக்கொண்டு போகிறவர்கள் கண்டக்டர்கள் பேரிலும் கேஸ்கள் போடப்பட்டிருக்கின்றன. மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் தண்டனையும் கிடைக்கிறது. அந்தப் பொருள்களும் பறிமுதலாகின்றன. இந்த சூழ்நிலை நீடிக்காமல் இருக்கவேண்டும். இதைப் பெருக்குவதற்கு நீங்கள் உதவி செய்யக் கூடாது. இந்த மான்ய கோரிக்கைகளை நல்ல அளவிலே நல்ல முறையிலே பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த அளவில் அமர்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: சபாநாயகர் அவர்களே, குறிப்பிட்ட நேரத்தில் இந்த விவாதத்தை முடிக்கவேண்டும் என்னும் படியான சட்டவிதிகள் இருப்பதினால் (மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது நேரம் 12-20; 12-40-க்கு முடித்துவிடுங்கள்) அதிகம் பேசாமல் போனாலும், சில பொதுவான கருத்துக்களை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சுருங்கச் சொல்லி விளங்க வைப்பது நல்லது). பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் இதற்காக இன்னொரு நாள் கேட்கக்கூடாதா என்று கூட எங்கள் கட்சியிலுள்ளவர்கள் கேட்டார்கள். (குறுக்கீடு) நிதி ஒதுக்கீடு மசோதா பற்றிய விவாதத்தின்போது பேசிக்கொள்ளலாம் என்ற நிலையும் இருக்கிறது.

இந்தத் துணை மானியக் கோரிக்கைகளில் இரண்டு முக்கியமான விஷயங்கள். வரட்சி நிவாரணத்திற்காகவும் பணம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. அதற்காகவும், மற்றும் இருக்கும்படியான சில முக்கியமான காரியங்களுக்காகவும், மானியக் கோரிக்கைகளைக் கேட்டிருக்கிறார்கள். வரட்சி நிவாரண நிதி எந்த நிலையில், எப்படிச் செலவழிக்கப்பட்டது என்பதற்குச் சரியான கணக்குக் கொடுக்க வேண்டியது சர்க்காருடைய பொறுப்பு. அந்த நிலையில், பொறுப்பாக, அக்கறையாகச் செய்ய வேண்டும் என்பதற்கு, நிச்சயமான திட்டம் இருக்கிறதா என்றால், அப்படிப்பட்ட திட்டம் இருப்பதாகத் தெரியவில்லை. ஏனென்றால், சட்டமன்றம் ஆரம்பிக்கும் போதே, தமிழ் நாட்டில் எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்துபோய்விட்டன, என்ற முறையில் நிதி அமைச்சர் ஒரு அருமையான கருத்தைச் சொன்னார்கள். இவர்களுடைய வரட்சிக் கணக்கு எப்படியிருக்கிறது ? முதலிலே மூன்று கோடியாக இருந்தது, ஆறு கோடியாகி, பிற்பாடு 10 கோடியாகி, கடைசியில் 18 கோடியாகியிருக்கிறது. இந்தப் பதினெட்டுக் கோடியில் இந்த வரட்சியைத் தீர்த்திருக்க வேண்டும் அல்லவா ? இவர்களுடைய திட்டப்படி, பதினெட்டுக் கோடி கொடுத்தால், வரட்சியைத் தீர்த்திருக்க வேண்டும். அவர்களுடைய கணிப்புப் படி வரட்சி இல்லாமல் செய்திருக்க வேண்டும். ஆனால், நிலைமை என்ன ? இன்றைக்குப் பார்த்தால், அது இன்னும் எத்தனை கோடியில் கொண்டு போகுமோ. அதற்கும் கணக்குத் தெரியவில்லை. கணக்கும் சரியில்லை.

"When the State Government demanded money from the Centre to meet the drought situation; the D.M.K. leaders went on revising the figures so often that people began to have serious doubts. When some persons pointed out that such constant revision of figures would make the Centre suspicious, the D.M.K. leaders declared that certain interested people were preventing the Centre from helping the State ".

அதைத்தான் திரு. கோதண்டராமன் சொன்னார்கள், காங்கிரஸ் தடுத்து நிற்கிறது என்று. நாங்கள் அப்படிச் சொல்லவில்லை. தாராளமாகக் கொடுங்கள் என்றுதான் சொன்னேன். பிரதமரிடம் கூட, அதிகமாகக் கொடுங்கள் என்று நான் சொன்னேன். பிரதமர் இங்கே வந்த போது கூட சொல்லியிருக்கிறேன். அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று. என்னைவிட பொறுப்புள்ளவன் யாரும் அந்தவகையில் சொல்லியிருக்க மாட்டார்கள். அதற்கு மேலும் வாங்கியாகிவிட்டது. இத்தனை கோடி ரூபாயையும் இரண்டு மூன்று மாதத்தில் செலவழித்தாகியிருக்கிறது. அதிகாரிகள் எங்கே ? திட்டம் எங்கே ? செலவுகள் எல்லாம் எங்கே செய்யப்பட்டது ? கேட்டால், மதுராந்தகத்தில் தூர் வாரி இருக்கிறது என்கிறார்கள். மதுராந்தகம் குளத்திலா போட்டுவிட்டார்கள் ? இதெல்லாம் திட்டமிட்டு செய்யாத காரணத்தால் . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் விநாயகம் அவர்கள் மதுராந்தகம் ஏரியைப் பற்றி மட்டும் பேசியதால், அதற்கு மாத்திரம் பதில் அளித்தேன். பதினெட்டுக் கோடியையும் அங்கேயே செலவழித்ததாகச் சொல்லவில்லை.



**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஒரு உதாரணத்திற்காகச் சொன்னேன். பதினெட்டுக் கோடி என்றால், பெரிய திட்டமாக இருக்க வேண்டும். எந்த எந்த இடங்களில், என்னென்ன செய்யப் பட்டது, எவ்வளவு செலவு என்பதையெல்லாம் கொடுத்திருந்தால் நலமாக இருந்திருக்கும். அப்படி ஒரு விவரத்தை அச்சடித்துக் கொடுத்திருந்து, அதைச் சபையில் வைத்து, டிஸ்கஸ் பண்ண வேண்டும், இரண்டு நாட்களுக்கு விவாதித்திருக்க வேண்டும். அது இந்த மன்றத்திலே விவாதிக்கப்பட வேண்டும். அப்பொழுது தெரியும், எந்த எந்த ஜில்லாவில், எவ்வளவு தூரம் செலவழிக்கப் பட்டது என்பதெல்லாம். இது என்ன சாதாரணமாக இருக்கும் வரட்சியா ? என் தொகுதியில், தென்னை மரங்கள் காய்ந்து போயிருக்கின்றன. டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சிலில் கேட்டால், கலெக்டர் யோசனை செய்கிறேன் என்று சொல்லுகிறார்கள். பதினெட்டுக் கோடி செலவழித்தும், என் தொகுதியிலுள்ள கிராமத்தில் இருக்கும் 10,000 தென்னை மரங்கள் தூக்கநாயக்கன் பாளையத்தில் காய்கின்றன. அவ்வளவு தூரம் இருக்கும் வரட்சி இது. சாதாரண வரட்சியல்ல. அற்புதமான வரட்சி, ஹனுமான் வால்போல நீட்டிக் கொண்டே போகிறது . . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, 'கணக்கு வழக்கு இல்லை' என்று சொல்லுகிறார்கள். அதை நிரூபிப்பார்களா ? வாங்கிய பணத்திற்குக் கணக்கு எல்லாம் இருக்கிறது. இல்லை என்று சொல்வதை நிரூபிக்க என்ன ஆதாரம் ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இல்லை என்பதை நிரூபிப்பது இருக்கட்டும். அதைச் சபையில் வைக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. பதினெட்டுக் கோடி வந்ததே . . . .

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பத்து வருஷமாகச் சட்ட சபையில் இருந்திருக்கிறேன், 20 வருஷமாகச் சட்ட சபை உறுப்பினராக இருக்கிறேன், அவ்வளவு அனுபவம் இருக்கிறது என்றெல்லாம் சொல்லுகிறார்கள், நம் எதிர்க் கட்சித் தலைவர். கணக்குகள் இருக்கின்றன. அக்கவுண்டெண்ட் ஜெனரல் தணிக்கை இருக்கிறது. அதிலேயும் விவரங்களைத் தெரிவிக்க, எதிர்க்கட்சித் தலைவரையே (பலத்த சிரிப்பு) தலைவராகக் கொண்ட பப்ளிக் அகவுண்ட்ஸ் கமிட்டி இருக்கிறது. ஆகவே, இது ஒன்றும் அமைச்சர் கருணாநிதி வீட்டுக் கணக்கோ, எங்கள் வீட்டுக் கணக்கோ இல்லை. இது நாட்டு நிர்வாகத்தைப் பொறுத்தது. இப்பொழுதுதான் கொஞ்ச நேரத்திற்கு முன்னால் நான் அவ்வளவு முட்டாள்தனமாக இருக்கிறவன் அல்ல, அப்படியிருந்தால் எப்படித் தலைவராக வருவது என்றெல்லாம் சொன்னார்கள். நாங்கள் அப்படிச் சொல்லவில்லை. புத்திசாலித்தனத்தைப்பற்றி எதற்காகச் சந்தேகம் வந்ததோ தெரியவில்லை. இப்பொழுது

[திரு. கே. ஏ. மதியழகன்] [1969 ஆகஸ்ட் 23

கூட, இந்த ஊரிலே மோசடி இருந்தது என்று நிரூபிக்கட்டும். இப்படியெல்லாம் பின்னால் இருப்பவர்கள் சொல்லட்டும். ஆனால், இவர்களே, முக்கியமாக, பொறுப்புவாய்ந்த ஒரு எதிர்க் கட்சித் தலைவர், 20 ஆண்டுக்காலம் ஆட்சிசெய்த கட்சியைச் சார்ந்தவர், மாநிலத்தின் பப்ளிக் அகவுண்ட்ஸ் கமிட்டியின் தலைவர், கணக்கு கிடையாது என்றால், அது எப்படியிருக்கிறது? சொன்னால் கோபம் வரும், பொதுக்கூட்டம், பொறுப்பற்ற பத்திரிகை என்றால் கோபம் வருகிறது. ஆனால், குற்றம் என்று சொன்னால், அதற்குப் பதில் அளிக்கத் தெரியாமல் இல்லை, பதிலளிக்க முடியாமல் இல்லை. ஆனாலும், அதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டே இருந்தால், அதை நாடு ஏற்றுக் கொள்ளாது. மன்றத்திலே சொன்னாலும், வெளியிலே இருப்பவர்கள் அறிந்து கொள்ளட்டும், அவர்களுடைய நிலை என்ன என்பதை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : என்னுடைய குற்றச்சாட்டு என்ன? கொடுத்த பணத்திற்குச் சரியான செலவு கணக்கு இருக்கிறதா? அதேபோலத்தான், 1969-ம் ஆண்டு ஆடிட் ரிபோர்ட் ரிபோர்ட்டில், இந்தச் சர்க்கார் வந்த பிறகு தவறான முறையில் கணக்கு வைத்திருக்கிறது என்பதை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். (குறுக்கீடு) ஒரு பானை சோற்றுக்கு, ஒரு சோறு பதம் போதாதா? இவர்களுடைய கணக்கு வைக்கும் திறமைக்கு எடுத்துக் காட்டாக இருக்கிறது. அதில்,

Collections not brought under Public Account

Under the Treasury Rules of the State when a Government servant is permitted to handle in his official capacity monies received, not on behalf of the Government, but in connection with the affairs of a Government institution or non-government institution, such monies should be included in the public account as distinct from the Consolidated Fund of the State. The rules further lay down that only such monies pertaining to the funds which have not been set up under any Statute or Act or authority of Government and are absolutely unofficial in character should be kept out of the public account.

Certain collections made with the approval of the State Government and handled by Government servants, in connection with the Second International Conference of Tamil Studies were not accounted for in the public account but were credited to separate accounts with the State Bank of India.

என்று கூறப்பட்டிருக்கிறது. இதைப் பொறுப்புள்ள எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையில் தான் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அதிலே சொல்லியிருப்பது, தனியாக வசூல் பண்ணினார்கள் என்பதுதான்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : கணக்கு வைக்கத் தெரியவில்லை, கணக்கில் ஊழல் நடந்திருக்கிறது என்று இருக்கிறது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : அதிலே எங்கே கணக்குச் சரி இல்லை என்று சொல்லியிருக்கிறது . . . .



1969 ஆகஸ்ட் 23]

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : ஊழல், தவறு வர வேறு என்ன இருக்க முடியும்? அதற்காகத்தான் ஒரு கமிஷன் போடுங்கள் என்கிறேன் . . .

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : ஒழுங்காகச் சொல்லுங்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : ஒழுங்காகத்தான் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : நிரூபிக்க வேண்டும் என்றால், "நான் பொறுப்புள்ளவன், முட்டாள்களுக்குத் தலைவனா?" என்பது. இது புத்திசாலித்தனம்தான் . . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : ஆடிட் ரிபோர்ட்டில், அக்கவுண்டன்ட் ஜெனரல் சொல்வதைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : என்ன சொல்லியிருக்கிறார்?

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : சரியான கணக்கு வழக்கு வைக்கப் படவில்லை என்றுதான் . . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : சர்க்கார் கணக்கு வழக்குச் சரியாக வைக்கவில்லை என்று எங்கே எழுதியிருக்கிறது? வாசியுங்கள் பார்க்கலாம்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : தனியாக ஸ்டேட் பாங்கியில் போட்டோம். வீட்டிலே வைத்து விடவில்லை . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : கொஞ்சநாள் போனால், பாக்கெட்டில் வைத்திருக்கிறோம் என்பார்கள் . . .

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : மக்கள் சொல்லுவார்கள். விட்டுவிடுவார்களா என்ன. மக்களுக்குத் தெரியும் எது சரி என்று.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : கணக்கு விஷயத்தில் பார்த்தால், இந்தச் சர்க்கார் வந்தபிறகு, எதுவும் முறையாக நடைபெறவில்லை என்ற குற்றச் சாட்டை அகவுண்டன்ட் ஜெனரல் சொல்லியிருக்கிறார். அடுத்தபடியாக, சீரணிப் படையை எடுத்துக் கொண்டால் . . .

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் தணிக்கை அதிகாரி சொல்லுகிறார்கள் என்று எடுத்துக் காட்டுகிறார்கள். இது நீண்ட நாட்களாகப் பெரும் அளவில் குறைபாடுகளை எடுத்துச் சொல்லுவது வழக்கம். ஆகவே, இன்னின்ன கணக்கு வரவில்லை என்றால், அதைக் கவனிக்க பப்ளிக் அகவுண்ட்ஸ் கமிட்டி இருக்கிறது. இந்த ஆண்டு பப்ளிக் அகவுண்ட்ஸ், நிர்வாகத்தில்

வருகின்ற கணக்குகள், இவர்களுடைய தலைமையின்கீழ் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி ஆராயப் போகிறது. அந்த சமயம் சம்பந்தப் பட்ட அதிகாரிகள் பதில் சொல்லப் போகிறார்கள். தவறுகளுக்குச் சமாதானம் சொல்லப் போகிறார்கள். இது ஒன்றும் புதிதாக வந்திருப்பது அல்ல. இதற்குமுன் இப்படி வரவில்லை என்பதும் இல்லை. அவர்களுடைய பதில்களை, சமாதானங்களை பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி ஏற்றுக்கொள்கிறதா இல்லையா என்பதைப் பொறுத்து முடிவுகள் எடுப்பார்கள். அப்படி ஆராய்ந்து பார்க்க முழு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இப்பொழுது இதைப்பற்றிச் சொல்லவேண்டிய அவசியமே இல்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, என்னுடைய நிலைமை என்னவென்றால், பணம் எப்படிச் செலவழிக்கப்பட்டது, செலவழிக்கப்பட்டிருக்கிற பணம் முறையாக, செலவழிக்கப் பட்டிருக்கிறதா ? செலவழிக்கப்பட்டதெல்லாம் முறையாகக் கணக்கு வைத்துச் செலவு செய்யப்பட்டிருக்கிறதா என்பதுதான்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, உலகத் தமிழ் நாட்டுக் கணக்கு, அரசாங்கத் தொடர்பு கொண்டு செல வழிக்கப்பட்ட கணக்கு அல்ல. அது அரசாங்கத்துடன் இணைக்கப் பட்ட காரியம் அல்ல. அந்த மாநாட்டிற்கு அரசாங்கம் சிலபல உதவிகளைச் செய்தது. அரசாங்கத்திற்கும், உலகத் தமிழர் மாநாட்டுக் கணக்கு வழக்கிற்கும் சம்பந்தமில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, அரசாங்கத் திற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையென்றால் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியில் எப்படி வந்திருக்கிறது ? 30 லட்சம் ரூபாய் செலவு செய்யலாம் என்றால் அரசாங்கத்திற்குப் பொறுப்பு இருக்கிறதா, இல்லையா ? அல்லது, யாரோ மாநாடு நடத்தினார்கள், யாரோ செலவு செய்தார்கள் என்று சொல்லிவிடுங்கள். எப்பொழுது அக்கவுண்டண்ட் ஜெனரல் ஆடிட் வருகிறதோ, அப்பொழுது சர்க்காருக்கும் பொறுப்பு இருக்கிறது என்பதை ஒத்துக் கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக இன்னொன்று. சிரமிப்படைக்குத் தாராள மாகச் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அது கான்ட்ராக்ட் பேசிஸ் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

Bulk of the expenditure (69%) was on purchase of materials for construction of schools. The works were let out on contract in most cases.

Materials costing Rs. 0.66 lakh purchased mostly in March-April 1968 by departmental officers had been handed over to Brigade leaders between March and August 1968 and their utilisation on works had not been verified.





பணத்தை எங்கேயோ வாங்கினார்கள், எங்கேயோ போட்டார்கள். அதை வெரிபிகேஷன் செய்யவில்லை. சாப்பாட்டுக்கு, அதாவது ஃபீடிங் சார்ஜஸுக்குக்கூட கணக்கு இல்லாமல் இருக்கிறது.

The admissibility of payments totalling Rs. 0.40 lakh made for feeding charges of volunteers for certain works could not be verified in audit as the prescribed attendance registers were not maintained.

கணக்கு சரியாக இல்லை. யாரோ கணக்கு எழுதினார்கள், யாரோ செலவு செய்தார்கள், கணக்கு சரியாக இல்லை என்று அக்கவுண்டன்ட் ஜெனரல் சொல்கிறார். உதாரணத்திற்காகத்தான் இதைச் சொல்கிறேன். எல்லா இடங்களிலும் தவறு நடந்திருக்கிறது என்று பூரணமாகச் சொல்லவில்லை. இது மக்களுடைய பணம். மக்களுடைய வரிப் பணம். மக்களுடைய வரிப்பணம் வீணாகாமல் இருக்க வேண்டும், மக்களுக்கு நீங்கள் நல்ல காவலர்களாக இருக்க வேண்டும் என்று சொல்வதற்கு எனக்கு உரிமை இல்லையா ? நாங்கள் 13 கோடி ரூபாய்க்குக் கணக்கு வைத்திருக்கிறோம் என்பதை நீங்கள் நிரூபித்தால் அதைப் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். கணக்கு வைப்பதை நல்ல முறையில் வைக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியின் தலைவராக இருக் கிறார்கள். அந்த ஆடிட் ரிப்போர்ட்டில், அந்தப் பணம் இப்படிச் செலவு செய்யப்பட்டது, இதற்காகச் செலவழிக்கப்பட்டது, என்பது கடந்த இரண்டு அல்லது இரண்டரை ஆண்டுகளாக மட்டும் வைக்கப்படுகின்ற கணக்குகளா, அல்லது தொடர்ந்து இருபது அல்லது முப்பது வருடங்களாக வைக்கப்படுகின்ற கணக்குகளா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தொடர்ந்து எங்களுடைய சர்க்காரிலே கணக்கு வைக்கப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்கள்கூட செய்த தப்புக்கு விசாரணை நடத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இவர்கள் தனி அவ தாரம் . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இவர்கள் எல்லாம்தான் தனிப் பெரும் அவதாரங்கள். முதலமைச்சர் அவர்கள் தப்பே நினைக் காதவர்கள், உங்களைப்பற்றி ஊரில் எல்லாம் பேசுகிறார்கள். மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்கள் மணியைப் பார்க்கிறார்கள். ஒரு மணிவரைக்கும் நான் இன்னும் பேச வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மணியைக் காட்டினால் என்ன அர்த்தம் ? நான் இன்னும் பேசவேண்டியிருக்கிறது. மேலும் 1967-லே குடிசைகளில் தீ பிடித்ததைப்பற்றி ரிப்போர்ட் கொடுத் திருக்கிறார்கள். உடனே, தீ வைத்தவர்களைக் கண்டுபிடிக்க வில்லை. 'நெறிகட்ட, தரம் கெட்ட காங்கிரஸ்காரர்கள் தீ

வைத்தார்கள்' என்று சில பத்திரிகைகளிலே பிரசாரம் செய்தார்கள். இதை அரசியல் நோக்கோடு செய்தார்கள். அதுமட்டுமல்ல. உயர்தர போலீஸ் அதிகாரி, இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ் அவர்கள்கூட இதுபற்றி அறிக்கை விட்டார்கள். அந்த ரிப்போர்ட்டில் என்ன இருக்கிறது ? காங்கிரஸ்காரர்கள் தீ வைத்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்த அறிக்கையில் 'காங்கிரஸ் கட்சி தூண்டிவிடவில்லை' என்று இருக்கிறது. காங்கிரஸ்காரர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தாலும், காங்கிரஸ் கட்சி தூண்டிவிடவில்லை என்று கூறப்பட்டிருக்கிறது. காங்கிரஸ்காரர்களாகிய புட்டு, பத்மநாபன் என்ற நபர்கள் லால்பகதூர் சாஸ்திரி சங்கத்தைச் சேர்ந்தவர்கள்மீது குற்றம் சாட்டப்பட்டது. மறைந்துவிட்ட பேரறிஞர் அண்ணா அவர்கள்கூட, 'காங்கிரசில் இருக்கிற சில காங்கிரஸ்காரர்கள் இதைச் செய்திருக்கலாம், ஆனால் காங்கிரஸ் கட்சி இப்படிச் செய்ய வேண்டுமென்று அவர்களைத் தூண்டிவிடவில்லை' என்று அப்பொழுதே சொன்னார்கள்.

**திரு. கே. விநாயகம் :** தலைவர் அவர்களே, அப்பீலில் ஒரு வழக்கு இருக்கும்போது, குற்றவாளி என்று அவர்களை நிரூபிக்க முடியுமா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** திராவிட முன்னேற்றக் கழகத்தை சேர்ந்த 34 பேர்களைக் கைது செய்தீர்களே, ஏன் அவர்களை விட்டுவிட்டீர்கள் ? உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதால் அதற்கு அப்படிச் செய்வதா ? அவர்கள் குற்றவாளிகள் அல்ல என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்த 34 பேர்களில் யார் யார் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை சொல்ல முடியுமா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அப்படியானால் இவர்களும் காங்கிரசின்பால் அனுதாபம் உள்ளவர்களாக இருக்கலாம் அல்லவா ? தாங்கள் காங்கிரசைச் சேர்ந்தவர்கள் இல்லையென்று அவர்கள் சொன்னார்களே, மீண்டும் காங்கிரஸ்காரர்கள் செய்தார்கள் என்று ஏன் சொல்கிறீர்கள் ? குடிசைவாழ்மக்கள் ஆசைக்காக குடிசைகளுக்குத் தீ வைத்துக் கொண்டார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மீண்டும் தவறான கருத்தையே சொல்கிறார்கள். காங்கிரஸ்காரர்கள் இதை செய்தார்களா, இல்லையா என்பதல்ல கேள்வி. 'காங்கிரஸ்காரர்கள் குற்றம்சாட்டப்பட்டார்கள். ஆனால் காங்கிரஸ் கட்சி தூண்டிவிடவில்லை' என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.





**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அரசியல் காரணங்களுக்காகத் தூண்டுதல் செய்தார்கள் என்று சொன்னார்கள். இதெல்லாம் ஷேக்ஸ்பியர் எழுதிய ஷைலாக் கதையில் வருகின்ற 'ஒரு சொட்டு இரத்தம் இல்லாமல் ஒரு பவுண்ட் சதையை எடுத்துக் கொள்ளுங்கள்' என்று சொல்வதுபோல்தான் இருக்கிறது. இத்தனை ஆயிரம் குடிசைகள் தீப்பிடித்தனவே, ஏன் உடனடியாகக் கண்டு பிடிக்கப்படவில்லை. 'ஆறிய கஞ்சி பழைய கஞ்சி' என்று சொல்வார்களே அதுபோல அப்பொழுதே அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படவில்லை. சட்டம், அமைதியைப் பாதுகாக்க சர்க்கார் தவறிவிட்டது. அப்படி உடனடியாக நடவடிக்கை அப்பொழுது எடுக்கப்பட்டிருந்தால், இரண்டு தினங்களுக்கு முன்னாலே நடைபெற்ற தீவிபத்துககள மீண்டும் நடந்திருக்காது. இப்போது ஃபயர் பிரிகேடில் தண்ணீர்கூட இல்லை. முன்பு தீப்பிடித்த சமயத்தில் ஐ.ஜி. அவர்கள் ஒரு அறிக்கை வெளியிட்டார்கள். குடிசைகளுக்குத் தீ வைப்பது காங்கிரஸ் கட்சி, காங்கிரஸ்காரர்கள் என்ற ஒரு நிலைமையை உண்டுபண்ணி விட்டார்கள். இப்படிச் செய்துவிட்டால் போதுமா ? சர்க்கார் எந்தப் பிரச்சினையை எடுத்துக் கொண்டாலும் அதனை முழுமையாகத் தீர்க்கவில்லை. மேலும் பிரச்சினை பக்கத்தில் போவதற்குக் கூட அவர்கள் பயப்படுகிறார்கள்.

அடுத்ததாக, மாணவர்கள் பிரச்சினை தீர்நததாகத் தெரியவில்லை. நான் இதைச் சொல்கிறேன் என்றால், மாணவர்களைத் தூண்டிவிடுவதற்காக நான் சொல்லவில்லை. யார் தவறு செய்தாலும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மாணவர்களுடைய வாழ்க்கை பாழாகக்கூடாது, அவர்களுடைய வாழ்க்கைக்குத் தீங்கு நேரிடக்கூடாது. யார் தவறு செய்தாலும், தவறு செய்பவர்களைத் தண்டிக்க வேண்டும். இந்த வருஷத்தில் என்ன நடந்தது ? தேசீய நோக்கு கொண்ட மாணவர்களை, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள், 'அரசியலை விட்டு விலக வேண்டும்' என்று சொன்னார்கள். காரைக்குடியில் நடந்த நிலைமை என்னவென்பதை அறிய நான் நேரில் சென்று விசாரித்தேன். இதுவரைக்கும் அந்தக் கல்லூரியில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் வெற்றி பெற்றுக்கொண்டு வந்தார்கள். இப்போது வேறு எண்ணமுள்ள மாணவர்கள் தலைவர்களாக வந்திருக்கிறார்கள். அந்த மாணவர்கள் அந்த வெற்றியை விழாவாகக் கொண்டாடியிருக்கிறார்கள். இதைக்கண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள், விழாக் கொண்டாடிய மாணவர்களை உதைத்தார்கள், அடிபட்ட மாணவர்கள் ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள். நான் அந்தக் கல்லூரியின் பிரின்சிபாலைச் சந்தித்துக் கேட்டேன். புருஷோத்தமன் என்ற மாணவர் அடிபட்டு ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள். ஆனால் பிரின்ஸ்பால், கபடி ஆட்டம் ஆடியதால் அந்த மாணவரின் கண் கெட்டுப் போனது என்று சொல்கிறார். அதுமட்டுமல்ல. சர

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1969 ஆகஸ்ட் 23

போஜி கல்லூரியிலும் இதே நிலைமைதான். ஒவ்வொரு கல்லூரியிலும் அரசியல் காரியங்களுக்காகத் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் மற்ற மாணவர்களை அடிப்பதாகக் கேள்விப்படுகிறேன். சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். எந்தக் கட்சியில் தவறு நடந்தாலும், தவறு தவறு தான். இந்த அரசாங்கம் எந்தப் பிரச்சினையையும் தீர்க்கவில்லை.

ஊட்டியில் நடந்த ஒரு சம்பவத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன். அங்கு கலெக்டர் என்ற ஒரு புண்ணியவான் இருக்கிறார். 'எதிர்க் கட்சித் தலைவர் என்னையல்லவா வந்து பார்க்க வேண்டும்? ஏன் என்னை வந்து பார்க்கவில்லை?' என்று சொல்லுகிறாராம் அவர். உங்களுடைய ஆட்சியில் நான் போய் அவரைப் பார்க்க வேண்டுமாம். இருபதாயிரம் பேர் கொண்ட ஒரு கூட்டத்தை அமைதிப்படுத்த, அமைதியைக் காக்கப் போயிருந்த என்னை, வந்து பார்க்கவில்லை என்று கலெக்டர் கூறுகிறாராம். அங்கு இருந்த நிலைமை என்ன என்பதைக் கவனிக்க வேண்டும். பேன்ட் போட்டவர்களையெல்லாம் உதைக்கும்படியான நிலைமை ஏற்பட்டது. அதற்கு கலெக்டர் உடந்தையாக இருந்திருக்கிறார். பேன்ட் போட்டவர்கள் எல்லாம் வெளியே தலைகாட்ட முடியாத நிலைமை இருந்தது. கல்லூரியிலிருந்து வீட்டுக்குப் போய்க்கொண்டிருந்த ஒரு மாணவன் ஒரு கடைக்குள் போய் பேன்ட்டை கழற்றிவிட்டு, வேஷ்டியைக் கட்டிக்கொண்டு போக வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இந்த நிலைமையில் 'எதிர்க் கட்சித் தலைவர் ஏன் வந்து என்னைப் பார்க்கவில்லை?' என்று கலெக்டர் கேட்கிறார். அரசாங்கம் இதையெல்லாம் பரிசீலனை செய்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THE HON. THIRU P. U. SHANMUGHAM: On a point of Order Sir.

THIRU K. VINAYAKAM: It should not be a point of disorder.

THE HON. THIRU P. U. SHANMUGHAM: The Hon. Speaker has to decide that and not the hon. Member Thiru Vinayakam. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது போலீஸ்காரர்களும், மாவட்டக் கலெக்டரும் மாணவர்களை அடித்து உதைத்தார்கள் என்று சொன்னார். இந்த அவையிலே கலெக்டரும் இல்லை. போலீஸ்காரர்களும் இல்லை. அவர்கள் இல்லாதபோது அவர்களைப் பற்றிப் பேசுகின்றார்களே. அதற்கு ஆதாரம் இருக்கிறதா, அப்படிப் பேசலாமா என்பதற்குத் தலைவர் அவர்கள் சட்டபூர்வமாக விளக்கவேண்டும்.

**திரு. கே. விநாயகம்:** போலீசார் மாணவர்களை அடித்து உதைத்தார்களா இல்லையா? கலெக்டர் இருக்கிறாரா, இல்லையா?



1969 ஆகஸ்ட் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாவட்டத் தலைவர் அவர்களும் மாவட்டக் காவல்துறைத் தலைவர் அவர்களும் இங்கே இல்லை என்று சொன்னாலும் அத்துறைகளுக்குப் பொறுப்பேற்றிருக்கிற அமைச்சர்கள் இங்கே இருப்பதன் காரணத்தினால் அவர்களைப் பற்றிக் குற்றஞ்சாட்டுவதும், விடை அளிப்பதும் இந்தச் சபை ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவே இருந்து வருகிறது. தனிப்பட்ட ஒருவர் பெயரைச் சுட்டிப்பேசுவதுதான் தவிர்க்கப்படவேண்டும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நீலகிரி மாவட்டக் கலெக்டர் மாணவர்களை அடிக்கும்படி போலீஸ்காரர்களை தூண்டிவிட்டார்கள் என்று சொன்னார். அதை நிரூபிப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** கலெக்டர் மாணவர்களைச் சந்தித்திருக்கிறார். உங்களை அடித்து நொறுக்குவேன் என்று பேசியிருக்கிறார். எத்தனை சாட்சிகள் வேண்டும்? ஒரு விசாரணை என்று போடுங்கள், நான் நிரூபிக்கிறேன். அதுமட்டுமல்ல. அமைதியைக் காக்க நான் அங்கே சென்றிருக்கிறேன். எதிர்க் கட்சித் தலைவர் வந்து என்னைப் பார்த்திருக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார். உங்களுடைய அட்மினிஸ்ட்ரேஷனில் கலெக்டர்கள் நடந்துகொள்கிற முறை உங்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும் என்றே இவற்றைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரமாகிவிட்டது. மாவட்ட நிர்வாகம் பற்றிப் பேசுவதற்கு வேறு பல வாய்ப்புகளும் இருக்கின்றன. இப்போது . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** தயவு செய்து ஐந்து நிமிடங்கள் கொடுங்கள். முடித்துவிடுகிறேன். மனுநீதி ஆட்சியில் மணி அடித்தால் நீதி கிடைக்கும் என்பார்களே, அது போல நீதி வழங்குவதாகச் சொல்கிறார்களே, மதுரையில் ஒரு டாக்டர் எம்.எல்.ஏ. ஒருவருடைய மகன்—25 ஆயிரம் பேர்களுக்கு கருத்தடை ஆப்பரேஷன் செய்ததாகப் பொய்க்கணக்கைக் கொடுத்து எத்தனையோ லட்சம் ரூபாய்களை மோசடி செய்திருக்கிறார். அவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? ஜாலியாக உலாவி வருகிறார். அவரை மீண்டும் வேறு இடத்தில் வேலைக்கு வைத்தே இருக்கிறார்கள், இதுதான் நீதியா? அவர் ஏன் தண்டிக்கப்படவில்லை? பல லட்சம் ரூபாய்களை பொய்க்கணக்கு எழுதி மோசடி செய்து, அதுவும் கண்டுபிடிக்கப்பட்ட பின் அவரை ஏன் டிஸ்மிஸ் பண்ணவில்லை?

மதுரை பால்பண்ணையைப் போய்ப் பார்த்தேன். நன்றாகத்தான் நடப்பது போல எனக்குத் தெரிந்தது. ஏழெட்டு லட்சம் மோசடி நடந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இந்தக் குற்றங்கள் எல்லாம் இந்த ஆட்சியினர்களால் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றனவா, இல்லையா?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இந்தக் குற்றங்கள் எல்லாம் 67-க்குப்பின் தானே நடந்திருக்கின்றன. மதுரை டாக்டர் செய்த மோசடி கண்டுபிடிக்கப்பட்டு என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது? ஏன் வேறு இடத்தில் அவர் வேலைக்கு அமர்த்தப் பட்டிருக்கிறார் ?

போக்குவரத்துத் தடைகள் ரத்துசெய்யப்பட்டுவிட்டன, மா வட்டத்திற்கு மாவட்டம் தானியங்கள் செல்வதில் தடை இல்லை என்று அறிவிப்புச் செய்கிறீர்கள். உடனே லாரியை மறிக்கிறீர்கள். மடக்குகிறீர்கள், பறிமுதல் செய்கிறீர்கள், ஏன் ? இந்த அரசாங்கத் திற்கு அறிவிப்பு அரசாங்கம் என்றே பெயர்வைத்து விடலாம். பட்டுச்சேலையைக் கடன் கொடுத்துவிட்டு பின்னால் முக்காலியைத் தூக்கிக்கொண்டு போனான் என்பார்களே அதுபோல . . .

(**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அண்ணா சொன்னது) அண்ணா சொன்னார் என்றால் நான் சொல்லப்படாதா ? நான் சொல்லித்தான் அண்ணா சொன்னார். ஒரு பக்கம் தடைகள் எல்லாம் நீக்கப்படுகின்றன என்கிற அறிவிப்பைச் செய்கிறீர்கள். இன்னொரு பக்கம் தடை, ஒரே குழப்பமான நிலைதான். இது எதனால் வருகிறது ? எந்தக் காரியத்தையும் யோசித்துச் செய்லாற்ற இயலாத சர்க்கார் இது. மைதா, கோதுமை மீதான கட்டுப்பாடு எடுக்கப்படுகிறது என்று அறிவிப்பு வருகிறது. அதன் கீழேயே கட்டுப்பாடு கொண்டுவரப்படும் என்று வருகிறது. அப்படியானால் மேலே போட்ட உத்தரவு என்ன ஆயிற்று ? எதையும் முன்யோசனையின்றிச் செய்வது, அதிகாரிகள் சொன்ன வுடன் உடனே மாற்றிக்கொள்வது என்றால் இது ஒழுங்கான சர்க்காரா ? புத்தி உள்ள சர்க்காரா ?

On a Point of Clarification and not on a Point of Order Sir. Let not the hon. Member Thiru Vinayakam be worried about that.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மைதா, ரவை மீதான கண்ட்ரோல் எடுக்கப்படுகிறது என்று உத்தரவு போட்டதாகவும், உடனே கண்ட்ரோல் கொண்டுவரப்படும் என்று உத்தரவு போட்ட தாகவும் சொன்னார். புத்தி இல்லாத சர்க்கார் என்பதாக எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மிக்க பெருந்தன்மையோடு தம்முடைய விசாலமான புத்தியைக் காட்டினார். பரவாயில்லை. நான் பத்திரி கையில் விடுத்திருந்த அறிக்கையின் முன் பகுதியையும், பின் பகுதியையும் மட்டும் குறிப்பிட்டு நடுவில் உள்ளவற்றை விலக்கிச் சொல்வது எதிர்க் கட்சித் தலைவருடைய பொறுப்பற்ற தன்மை யைத்தான் குறிக்கும். நான் கொடுத்த அறிக்கை—விலைகள் குறைவாக இருப்பதன் காரணத்தினால் மைதா, ரவை மீது கண்ட்ரோல் எடுக்கப்படுகிறது. ஆனால் இதைக் கொண்டு அவற்றை ஒளித்து விலையேறுவதற்குக் கள்ளமார்க்கெட்காரர்கள் முயன்றால் மீட்டும் கண்ட்ரோல் கொண்டுவருவதற்கு இந்தச் சர்க்கார் தயங்காது என்பதுதான். இது புத்தியற்ற செயலாக எதிர்க் கட்சித் தலைவருக்குத் தோன்றினால் என்ன செய்வது ?



**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஜில்லாவிட்டு ஜில்லா அரிசி போக லாம், தடை எடுக்கப்பட்டுவிட்டது என்றார்கள். எதற்காக லாரியை வழியில் நிறுத்தி மடக்குவதும், பறிமுதல் செய்வதும் நடைபெறுகிறது ? இது யோசித்துச் செயலாற்றுகிற பொறுப் புள்ள தன்மையைச் சேர்ந்ததா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பொறுப்போடு பேச வேண்டும். கோபம் அறிவை இழக்கச் செய்யும் என்பார்கள். அறிவை இழந்திருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஒரு மாவட்டத்திற்கும் இன்னொரு மாவட்டத்திற்கும் அரிசி செல்வதற்கு இருந்த தடையை எடுத்தபோதே நான் சொன்னேன். இப்போதும் விவரமாகச் சொல்கிறேன். தடை எடுப்பதன் மூலம் விலை சமனப்படும் என்று கருதினோம். கால்குலேடெட் ரிஸ்க் என்றபடி தடை எடுக்கப்பட்டவுடனேயே அரிசி முழுவதும் பிரபலமான கோவை மாவட்டத்தை நோக்கிச் செல்ல ஆரம்பித்தது. ஆகவேதான் ஒரு தாலுக்காவில் இருந்து அரிசி அனுப்பப்படுகிறபோது அது எந்த இடத்திற்குப் போகிறது என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்று குறிப்பிட்டோம். அரிசி விலை ஒரேயடியாக ஏறினால் கட்டுப்பாடு கொண்டுவரலாம் என்பதாகவே குறிப்பிட்டோம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அறிவு நிறைந்த அமைச்சருக்கு நான் சொல்லிக்கொள்வது எல்லாம் இப்போது அரிசி விலை ஏறி விட்டது என்பதை ஒப்புக்கொண்டீர்கள் இல்லையா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நான் கட்டுப்பாடு எடுத்த வுடன் விலை ஏறிவிட்டது என்று சொல்லவில்லை. சொல்லாத ஒன்றைச் சொன்னதாகச் சொல்வது எதிர்க் கட்சித் தலைவருடைய பொறுப்பற்ற தன்மையையே காட்டுகிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஆகவேதான் உணவுப் பிரச் சினையைப் பற்றி பூராவாக, விவரமாக விவாதிக்க இரண்டு நாள் விவாதம் வைத்தால் போகிற உத்தரவுகள் எப்படி இருக்கின்றன, நடைமுறைகள் எப்படி இருக்கின்றன என்பதைப் புள்ளிவிவரங் களோடு எடுத்துச் சொல்லத் தயாராய் இருக்கிறேன். இப்போது நேரம் இல்லாத காரணத்தினால் இத்துடன் முடித்துக்கொள் கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அமைச்சருக்குள்ள நேரத்தையும் எடுத்துக்கொண்டு தடபுடலாகப் பேசி முடித்திருக் கிறார்கள். பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு மணிக்கு மணி யடித்து விடுவார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்மீது எங்களுக்குக் கோபம் இல்லை; அரசாங்கத்திற்கு ஆத்திரம் இல்லை. நானும் அவரும் ஒரே ஜில்லாக்காரர் என்பதால் அல்ல. ஒரே ஜில்லாவாக இருந்தாலும் ஜில்லாக்காரருடைய நிர்வாகத்தைப் பாராட்டுகிறேன் என்று சொல்லுகின்ற பெருந்தன்மை—பெருந் தன்மை என்று சொன்னால் அவர்களுக்குக் கோபம் வரும்—தாராள மனப்பான்மை . . .

திரு. பி. ஜி. கருத்திருமன் : நம்ம ஊர்க்காரர் இப்படியெல்லாம் தப்பு பண்ணுகிறாரே, நல்லபடியாக நடக்கக்கூடாதா என்று சொல்லும் நிலைதான்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : துணை மானியக் கோரிக்கையின் விவாதத்தில் பல்வேறு உறுப்பினர்கள் கலந்துகொண்டு பேராதரவு கொடுத்ததற்காக இந்த அரசின் சார்பில் முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வறட்சி நிவாரணப் பணியைப் பொருத்தவரை மேற்கொண்டு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுதான் இந்த விவாதத்தில் மையமாக இருந்தது. உணவுக் கொள்கையும் வந்துவிட்டுப் போனது. நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு ராமச்சந்திர துரை அவர்களும் ஏதோ சில குற்றச்சாட்டுகளை எழுப்பினார்கள்.

நாட்டிலே ஏற்பட்டுவிட்ட பெரிய உற்பாதத்தைத் தடுக்கும் வகையில் முயற்சிகளை மேற்கொண்ட நிலையிலே மத்திய சர்க்காரில் இருந்து அனுதாபத்தோடு உதவி புரிய முன் வந்துள்ளார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்திரா காந்தி அம்மையாருக்கும் எங்களுக்கும் ரொம்ப நெருக்கம் என்றும், அவர்களுக்கு உறவு இல்லையென்றோ, ரத்தாகிவிட்டது என்றோ எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லக்கூடும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : எனக்கும் இந்திரா காந்திக்கும் உறவு ரத்தாகிவிட்டது என்று எப்போது சொன்னேன்? அவ்வாறு சொன்னதை வாபஸ் வாங்கவேண்டும்,

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மேலவையிலே திரு. ராஜாராம் அவர்கள் சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : திரு. கருத்திருமன் அவர்கள் அதை மறுப்பதில் இருந்து அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது என்பதை உணர்த்துகிறார் என்று அறிந்து கொள்ளுகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சண்டை மூட்டிவிட வேண்டுமென்பது உங்களுடைய ஆசை.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : சண்டை மூட்ட வேண்டுமென்பதிலே எங்களுக்கு ஆசை இல்லை. சேர்ப்பதிலேதான் ஆசை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சர்க்காருடைய ஆசை ரொம்ப தாராள மனப்பான்மையோடு இருக்கிறது. இது பாலைவனைப் போய்ப் பஞ்சாங்கம் கேட்டது மாதிரி இருக்கிறது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மேல்சபை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் 'உங்களுடைய முதல் மந்திரிக்குத்தான் பிரதம மந்திரியிடம் செல்வாக்கு இருக்கிறது; எங்கள் கட்சிக்குச்





செல்வாக்கு இல்லை' என்ற மாதிரியாகப் பேசினார்கள். அவர் உங்களுக்கும், எங்களுக்கும் எல்லோருக்கும் பிரதம மந்திரிதான். திரு. கருத்திருமன் அவர்கள் இரவு 10½ மணிக்கு நடந்த காரியத்தை வைத்துக் கொண்டு உறவு அற்றுவிட்டது என்று சொல்லுவது சரியாகாது. ஜனாதிபதி தேர்தல் முடிவு தெரிந்து 24 மணி நேரத்திற்குள் அந்த நிலை ஏற்படுகிறது என்றால் அது சரியல்ல. மத்திய அரசு இந்த அரசிடம் காட்டுகின்ற பரிவு உணர்ச்சிக்கு முதலமைச்சர் அவர்கள் சார்பிலும், தமிழக அரசு சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுவதோடு, இந்தக் காரியத்திற்கு மேலும் உதவி செய்ய முன்வரவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் பேசினார்கள். சில பேர் பாராட்டினார்கள். பாராட்டிப் பேசிக் கொண்டிருந்தால் சுறுசுறுப்பு இருக்காதே என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் காரசாரமாக கடுமையான முறையிலே எங்கெல்லாமோ நுழையப் பார்த்தார். ஏதோ பலையைத் தெல்லி எலியைப் பிடிக்க முயற்சி செய்தார். இவ்வளவு பெரிய புத்தகத்தை எடுத்துப் பார்த்தும் அவரால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. ஏதேனும் தவறுகள் இருந்தால், கணக்கு சரியாக வைக்காத நிலை இருந்தால் அதைக் கவனிக்க அக்கவுண்டன்ட் ஜெனரல் இருக்கிறார். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டித் தலைவராக இருக்கிறார். ஏதோ பெரிய கணக்கைக் கண்டு பிடித்துவிட்டது போல் பேசினார்கள். கணக்கே வைக்கவில்லை; உரிய நேரத்தில் பாங்கிலே போடவில்லை என்றெல்லாம் சொல்லவில்லை. உலகத் தமிழ் மாநாட்டு நடைமுறையிலே அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருந்த காரணத்தால் இந்த வளையத்திற்குள் கொண்டுவர வேண்டுமென்றுதான் சொன்னார்கள். மாநாட்டு வசூலிலே நான்கு லட்சத்தை எடுத்துக் கொண்டார்கள், எட்டு லட்சத்தை அபேஸ் செய்து விட்டார்கள் என்றெல்லாம் சொல்லவில்லை. அதே போன்றுதான் பிராஸ்பரிடி பிரிகேட் பற்றிச் சொன்னதும். அதிலும் மோசடி ஒன்றும் இல்லை. விவரம் எழுதியிருக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

"Rs. 0.51 lakh had been reimbursed to "Brigade Leaders" and Presidents of Panchayats towards value of materials purchased by them for school building works: the quality and quantity of the materials were not verified by the departmental officers"

அதைத்தான் சொல்லியிருக்கிறார்கள். பெரிய நிர்வாகத்திலே சிறு சிறு தவறுகள் இந்த மாதிரி ஏற்படக்கூடும். அடுத்து—

"Materials costing Rs. 0.66 lakh purchased mostly in March-April 1968 by departmental officers had been handed over to Brigade Leaders between March and August 1968 and their utilisation on works had not been verified".

செய்தார்களா இல்லையா என்பதைப் பார்க்கவில்லை. செய்திருக்கக் கூடும், செய்யாமலும் இருக்கக்கூடும்.

'As at the end of August 1968, materials purchased for Rs. 1.56 lakhs remained unutilised as construction of the buildings had not started'.

1.5 லட்சம் செலவு செய்யப்படவில்லை. பெரிய தொகையைச் செலவு செய்யக்கூடிய இடத்திலே மண்டிக் கடையைப் போல் ஒவ்வொரு வாரமும் கருத்திருமன் வீட்டுக்குப் போய்க் கணக்கைக் கொடுத்துக் கொண்டிருக்க முடியாது. ஒதுக்கப்பட்ட தொகைகள் சீராக செலவழிக்கப்பட்டுத்தான் வருகின்றன. பரந்து இருக்கின்ற நிர்வாகம். ஏதோ பண்ணையிலே காரியம் நடப்பது மாதிரிச் செய்ய முடியாது. அது அதற்கு முறைகள் உண்டு. பொதுப் பணத்தைப் பயன்படுத்தும்போது குற்றம் இருந்தால் கூறவேண்டியதுதான். இருப்பினும் நல்ல வகையிலே இந்தச் சர்க்காரின் பணிகளை நிறைவேற்றுவதில் ஒத்துழைத்த பொதுமக்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

குடிதண்ணீர்த் திட்டத்திற்கு 15 கோடி ரூபாய் செலவு செய்வது என்று திட்டமிட்டு இதுவரையில் 4.87 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டதில் 4.36 லட்சம் ரூபாய் பல்வேறு மாவட்டங்களிலே செலவு செய்யப்பட்டிருக்கிறது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். செக் போஸ்டுகளைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். இவை எல்லாம் நிரந்தரமான உணவுக் கொள்கை என்ற முறையிலே கொள்ளக் கூடாது. அந்தந்த நேரத்திற்குத் தகுந்த மாதிரி செய்வதுதான் சமாளிக்கின்ற முறை. அடுத்த ஆண்டும் வறட்சி ஏற்படுமோ என்ற அபாயகரமான நிலைமை இருக்கிறது. இப்போது தமிழகத்தில் ஏற்பட்ட வறட்சியான நிலைமையைச் சமாளிப்பதற்கு ஒத்துழைத்த தமிழ்நாட்டு மக்களைப் பாராட்டுகிறேன். கலெக்டர்களைப் பாராட்டுகிறேன், அதிகாரிகளைப் பாராட்டுகிறேன், பொதுமக்கள் தலைவர்களைப் பாராட்டுகிறேன். பெரிய துயரைத் துடைப்பதற்காக ஒத்துழைத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு உபமானியக் கோரிக்கைகளை ஏகமனதாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : Sir, on a point of clarification . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேரம் இல்லை; ஒரு மணிக்கு வாக்கெடுப்பு.

THIRU K. VINAYAKAM : Sir, a sum of about Rs. 18 crores has been spent on the Drought Relief Works. It is a continuous process, I admit—May God forbid of it—and the drought may be repeated next year. But will the Hon. Minister give an assurance that a paper will be placed on the Table of the House giving details about the relevant activitis carried out here and there, the work carried out and the amount spent for it and also how much benefit has been derived by the people?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I will place it day after tomorrow. Every day we are getting reports.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இனி வாக்கெடுப்பு.

(7) 1969-70-ம் ஆண்டுக்கான கூடுதல் செலவுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

(அ) வருவாய் கணக்கில் செலவு.

**கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிகள் சட்டம்—நிர்வாகம்.**

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 100 under Demand No. 2—Motor Vehicles Acts—Administration.'

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்.**

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 200 under Demand No. 3—General Sales Tax and Other Taxes and Duties—Administration.'

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 5—பத்திரப் பதிவுத்துறை.**

THE HON. THIRU K. A. MATHIALAGAN : On the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 100 under Demand No. 5—Registration Department'.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.**

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 400 under Demand No. 8—Head of State, Ministers and Headquarters Staff'.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

[1969 ஆகஸ்ட் 23

**கோரிக்கை எண் 8-A —பால் வழங்கு திட்டங்கள்.**

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 200 under Demand No. 8A—Milk Supply Schemes'.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும் பல்வகையும்.**

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 600 under Demand No. 9—District Administration and Miscellaneous'.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 11—சிறைச் சாலைகள்.**

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 100 under Demand No. 11—Jails.'

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 12—காவல் துறை.**

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 400 under Demand No. 12—Police.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 13—கல்வி.**

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 400 under Demand No. 13—Education.'

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.



1969 ஆகஸ்ட் 23]

**கோரிக்கை எண் 14—மருத்துவம்.**

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 10,00,500 under Demand No. 14—Medical.'

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம்.**

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 400 under Demand No. 15—Public Health.'

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 17—மீனளம்.**

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 100 under Demand No. 17—Fisheries.'

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 19—கூட்டுறவு.**

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 300 under Demand No. 19—Co-operation.'

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 20—தொழில்கள்.**

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 1,20,000 under Demand No. 20—Industries.'

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 1,20,00,000 under Demand No. 25—Welfare of the Scheduled Tribes, Castes and other Backward Classes'.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 26—பாசனம்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 100 under Demand No. 26—Irrigation'.

நிதிக் கோரிக்கை பேரவையின முடிவிற்கு விடபபட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 28—பொதுப் பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திரச்சாதனங்களும்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 300 under Demand No. 28—Public Works—Establishment and Tools and Plant.'

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 30—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 100 under Demand No. 30—Road Transport Schemes'.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 31—பஞ்சத் துயர் தணிப்பு.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a futher sum not exceeding Rs. 14,30,00,000 under Demand No. 31—Famine Relief.'

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.



கோரிக்கை எண் 33—பல்வகை.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 300 under Demand No. 33—Miscellaneous.'

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 34—எழுதுபொருள்—அச்சுத் துறை.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 100 under Demand No. 34—Stationery and Printing'.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

(ஆ) வருவாய்க் கணக்குக்கு புறம்பான மூலதனச் செலவு

கோரிக்கை எண் 40—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 10,00,600 under Demand No. 40—Capital Outlay on Industrial Development'

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 200 under Demand No. 41—Capital Outlay on Irrigation'.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 42—பொதுப் பணிகள் மூலதனச் செலவு.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceed ing Rs. 700 under Demand No. 42—Capital Outlay on Publi Works'.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 46—அரசாங்க வாணிபத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு.**

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 100 under Demand No. 46—Capital Outlay on Schemes of Government Trading'.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 46—எதிர்பாராச் செலவு நிதிக்குத் தொகை ஒதுக்குதல்.**

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 5,00,00,000 under Demand No. 46A—Appropriation to the Contingency Fund'.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**(இ) கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும், கடனைத் திருப்பிக் கொடுத்தலும்**

**கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும்.**

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 1,00,00,100 under Demand No. 47—Lands and Advances by the State Government'.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

(3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

**(i) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) மசோதா.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) மசோதாவை இப்பேரவைக்கு அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அறிமுகம் செய்ய மாண்புமிகு அமைச்சரவர்கள் அனுமதி கோருவார்கள்.

(4) அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

**(ii) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) மசோதா.**

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I move—

"That leave be granted for the introduction of the Tamil Nadu Appropriation (No. 5) Bill, 1969".



The motion was put and carried and leave was granted.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

(3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

**(iii) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 6) மசோதா.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 6) மசோதாவை இப்பேரவைக்கு அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அறிமுகம் செய்ய மாண்புமிகு அமைச்சரவர்கள் அனுமதி கோருவார்கள்.

(4) அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

**(iii) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 6) மசோதா.**

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I move—

"That leave be granted for the introduction of the Tamil Nadu Appropriation (No. 6) Bill, 1969."

The motion was put and carried and leave was granted.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவுற்றன. மீண்டும் பேரவை திங்கட்கிழமை, ஆகஸ்ட் 25-ம் தேதி காலை 9 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

(8) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

'Nil'.

B. *Reports, Notifications and other papers.*

46. Report and Proceedings of the Select Committee on the Gudalur Janmam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1969 (L.A. Bill No. 4 of 1969) (English and Tamil).

## இணைப்பு

[44-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### தமிழ்நாடு சட்டப் பேரவை

அறிவிப்பு—20-8-1969]

### கோரிக்கைகள் பற்றிய அறிவிப்பு

### 1965-66-ம் ஆண்டில் அதிகப்படி செலவிற்கான மானியக் கோரிக்கைகள்.

பொதுக் கணக்குகள் குழுவின் பரிவுரைகளின்மேல். ஆளுநர் அவர்களின் இசைவு பெற்று, பின்வரும் மானியக் கோரிக்கைகள் 1965-66 ல் மேற்கொண்ட அதிகப்படி செலவினத்தைச் சரிக்கட்ட பேரவைமுன் வைக்கப்படும். அவையாவன :—

| | | | | ரூ. |
|---|---|---|---|---|
| கோரிக்கை. | II | மோட்டார் வண்டிகள் சட்டம்—நிர்வாகம். | மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார் .. .. .. | 49,583 |
| ,, | III | பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம். | மாண்புமிகு உணவு வணிகவரி அமைச்சர் அவர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார் .. .. .. | 76,897 |
| ,, | VI | மாநிலச் சட்ட மன்றம் .. .. | மாண்புமிகு கல்வி சுகாதார அமைச்சர் அவர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார் .. .. .. | 48,194 |
| ,, | VII | தேர்தல்கள் .. .. .. | மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார். | 15,953 |



| | | | | |
|---|---|---|---|---|
| ,, | X | நீதி நிர்வாகம் .. .. — | மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார் .. .. .. | 14,93,556 |
| ,, | XI | சிறைச்சாலைகள் .. — — | மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார் .. .. .. | 39,322 |
| ,, | XVI | வேளாண்மை .. — — | மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் அவர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார் .. .. .. | 29,21,722 |
| ,, | XVII | மீனவம் .. .. .. .. | மாண்புமிகு வேளாண்மை-அரிசன நல அமைச்சர் அவர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார் .. .. .. | 8,71,065 |
| ,, | XIX | கூட்டுறவு .. .. .. — | மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார் .. .. .. | 54,935 |
| ,, | XXI | சின்கோனா .. .. .. .. | மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார் .. .. .. | 50,651 |

| | | | | ரூ. |
|---|---|---|---|---|
| டி | XXV | பழங்குடி மக்கள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன். | மாண்புமிகு வேளாண்மை-அரிசன நல அமைச்சர் அவர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார் .. .. .. .. | 5,46,216 |
| டி | XXVI | பாசனம் .. .. .. .. | மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார் .. .. .. .. | 15,68,239 |
| டி | XXVII | பொதுப் பணிகள்—பணிகள். .. | மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார் .. .. .. .. | 34,17,452 |
| டி | XXVIII | பொதுப் பணிகள்—பணியாளரும். கருவிகளும், இயந்திர சாதனங்களும். | மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார் .. .. .. .. | 3,64,476 |
| டி | XXX | சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள். | மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார் .. .. .. .. | 3,46,246 |
| டி | XXXI | பஞ்சத் துயர் தணிப்பு .. .. | மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார் .. | 8,28,996 |
| டி | XXXIV | எழுது பொருள்-அச்சுத்துறை .. | மாண்புமிகு பின் தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார் .. .. .. .. | 10,56,664 |
| டி | XXXVI | ஏனைய பலவகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும். | மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார் .. | 40,035 |
| டி | XLIV | சாலைப் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு. | மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார் .. .. .. .. | 3,86,506 |
| டி | XLV | காட்டுவள மூலதனச் செலவு .. | மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார் .. .. .. .. | 49,794 |
| டி | XLVI | ஓய்வூதியத்தை மொத்தமாக்குதல். | மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிவார் .. | 17,914 |
| | | | மொத்தம் .. | 1,42,44,415 |

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்த மாநிலத்தினுடைய சூழ்நிலையைப் பொறுத்தும், அங்கு ஏற்படும் தன்மையைப் பொறுத்தும் அவர்கள் சில முடிவுகள் எடுக்கக்கூடும். இங்கும் இரண்டு துறைகளும் ஒருவர் தலைமை யின்கீழ் நீண்ட பெருங்காலமாக இருந்து, இரண்டு துறைகளிலும் நாளுக்கு நாள் பணிகள் பெருகியதன் காரணத்தால், அவை தனித் தனி அதிகாரிகளின்கீழ் இருக்குமானால் செம்மையாக, விரைவாக செயல்கள் நடைபெறும் என்று கருதி இரண்டாகப் பிரித்திருக் கிறார்கள். இரண்டாகப் பிரித்ததன் காரணமாக நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றனவே தவிர, குறையவில்லை.

THIRU K. VINAYAKAM : Sir may I request the hon. Minister to tell us what were the difficulties experienced by the Government when there was no bifurcation of these Departments and out of this bifurcation what are the extra benefits that have accrued ? We want a concrete answer instead of a general answer. "ஏற்கனவே தொல்லைகள் இருந்தன. இப்பொழுது நன்மைகள் இருக்கின்றன" என்று சொல்லலாம்.

This is not the type of answer we want.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைக் கேளுங்கள். எம்மாதிரி விடை வேண்டும் என்று கேட்கக் கூடாது.

திரு. கே. விநயகம் : கேட்கலாமே.

I want a definite answer instead of a general answer.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1966-ம் ஆண்டுக்கு முன்பே இத்தகைய யோசனை இருந்து, 1966-ம் ஆண்டு முந்தைய அரசு இருந்தபோது முடிவு எடுக்கப்பட்டது. அத்தகைய முடிவு எடுக்கப்பட்டதற்குக் காரணம் பணிகள் பெருகி யிருப்பதுதான். விரைவாக நடைபெறுவதற்கு, செம்மையாக நடைபெறுவதற்கு, சீராக நடைபெறுவதற்கு, ஒழுங்காக நடை பெறுவதற்கு, வகையாக நடைபெறுவதற்கு இரண்டும் தனித் தனியாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப் பிரிக்கப்பட்ட தற்குப் பின்னால் பார்க்கும்போது, முன்னைவிட செயல்கள் விரை வாக நடைபெவதற்கு வழிகள் ஏற்பட்டிருக்கின்றன.

திரு. சி. கோவிந்தராசன் : ஒரே இலாக்காவில் இரண்டு உயர் பதவிகள் டி.எம்.எஸ்., டி.எம்.இ. என்று இருப்பதால் அவர்கள் வேலை செய்யக்கூடிய முறையில், இருவரும் யார் யாருக்கு எந்த எந்தப் பொறுப்பு என்று அறியாத காரணத்தால், 'போஸ்டிங்ஸ்' முதலிய பல்வேறு காரியங்களில் தொல்லைகளும் சிக்கல்களும் வருகின்றன. இதனால் காலதாமதம் ஏற்படும் காரணத்தால், டி.எம்.எஸ்.-க்கு என்னென்ன பொறுப்புகள், டி.எம்.இ.-க்கு என்னென்ன பொறுப்புகள் என்று அமைச்சர் அவர்கள் விளக்க முடியுமா?



மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, துவக்கத்தில் சில சிக்கல்கள் இருந்து, அவை நாளாவட்டத்தில் தவிர்க்கப்பட்டு, இப்பொழுது அந்தச் சிக்கல்கள் பெரும்பாலும் குறைந்துவிட்டன. இரு அதிகாரிகளுக்கும் அவரவர்களுக்குரிய துறைகள் என்ன என்ன என்று வரையறுக்கப்பட்டிருக்கின்றன. முன்பு கூட, கல்வித் துறை ஒரே இயக்குநரின் கீழ்தான் இருந்து வந்தது. பணிகள் பெருகிப் பெருகி, துவக்கக் கல்விக்கு ஒரு இயக்குநரும், உயர்துவக்கக் கல்விக்கு ஒரு இயக்குநரும், கல்லூரிக் கல்விக்கு ஒரு இயக்குநரும் தனித்தனியாகப் போட வேண்டி வந்தது. அதைப்போன்று பணிகள் பெருக்கத்தை யொட்டித்தான் அந்த நிலைமைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவரவர்களுக்குரிய பணிகளும் வரையறுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. வி. எஸ். எஸ். மணி : இன்றைக்கிருக்கும் D. H. S. பதவியில் உள்ள அம்மையாருக்கு முன்பு எத்தனை தடவை பதவி நீடிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது? இனிமேலும் அவர்களுடைய பதவியை நீடிக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. தனிக் கேள்வி போடவும்.

## உடற்பயிற்சி ஆசிரியர்கள் ஊதியம்

*100 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடை யளிப்பாரா—

தகுதி பெற்ற உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு ஊதியத்தை உயர்த்தும் எண்ணம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை. இருந்த போதிலும் உயர்நிலை சான்றிதழ் பெற்றுள்ள உடற்பயிற்சி ஆசிரியர் களுக்கு தற்போது வழங்கப்படுகின்ற தனிச்சம்பள மான்யம் ரூ. 5-ஐ மாதம் ஒன்றுக்கு ரூ. 10 ஆக 6—1—1969-லிருந்து உயர்த்தப் பட்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த உடற்பயிற்சி ஆசிரியர்களிட மிருந்து அரசுக்கு ஏதேனும் கோரிக்கை வந்ததா ? அந்தக் கோரிக்கை என்ன? அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : உடல் பயிற்சி ஆசிரியர்கள் சங்கத்திடமிருந்து கோரிக்கை வந்தது. முதல் கிரேட், இரண்டாம் கிரேட் என்று தனித்தனியாகப் பிரித்து, அவரவர்களுக்குரிய சம்பளத்தில் உயர்வு தரவேண்டும் என்று கோரிக்கை விட்டிருக்கிறார்கள். முதல் கிரேட் ஆசிரியர்களுக்கு ரூ. 140-5-180-10-250 என்று சம்பள விகிதம் இருக்க வேண்டும் என்றும், இரண்டாம் கிரேட் ஆசிரியர்களுக்கு ரூ. 125-5-200 என்று சம்பள விகிதம் இருக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கையை

எடுத்து வைத்திருக்கிறார்கள். 1960-ம் ஆண்டுக்கு முன்பு முதல் கிரேடுக்கு ரூ. 50-2-70-2½-95 என்ற விகிதத்திலும், இரண்டாவது கிரேடுக்கு ரூ. 45-2-75 என்ற விகிதத்திலும் இருந்தது. 1—6—1960-க்குப் பிறகு ரூ. 90-4-110-3-140 என்ற விகிதத்தில் இரண்டு கிரேடையும் ஒன்றாக ஆக்கினார்கள். அதிக தகுதி உள்ளவர்களுக்குத் தனிச்சம்பளம் ஐந்து ரூபாய் தருவது என்று இருந்தது. 6—1—1967-லிருந்து அந்த ஐந்து ரூபாய் என்பது பத்து ரூபாய் ஆக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய சம்பளத்தை ரூ. 125-5-175 என்ற விகிதத்தில் உயர்த்தலாம் என்ற அளவுக்கு பள்ளிக் கல்வி இயக்குநர் பரிந்துரை செய்திருக்கிறார். அது பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. எம். பூபதி:** பள்ளியாசிரியர்கள் ஒருவருக்கு 30 மாணவர்கள் என்ற விகிதம் இருக்கிறது. அது மாதிரியாக உடல் பயிற்சி ஆசிரியர்களுக்கும் ஏதாவது விதி இருக்கின்றதா ? எத்தனை மாணவர்களை அவர்கள் தயார் செய்யவேண்டும் என்ற முறை ஏதாவது இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

**திரு. டி. மார்டின் :** ஃபிஸிகல் எஜுகேஷன் இன்ஸ்ட்ரக்டர்ஸ் தற்சமயம் அதிகமான பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். எனவே, ஒவ்வொரு பள்ளியிலும் உறுதியாக ஃபிஸிகல் எஜுகேஷன் இன்ஸ்ட்ரக்டர்ஸை அபாயின்ட் பண்ணவேண்டும் என்ற விதிமுறை இருக்கிறதா ? அல்லது அந்தவிதமான ஃபிஸிகல் எஜுகேஷன் இன்ஸ்ட்ரக்டர்ஸ் அபாயின்ட் செய்யப்படாமல் மற்ற உபாத்தியாயர்களை வைத்து டிரில் போன்றவை சொல்லிக் கொடுக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** தலைவர் அவர்களே, வேலை இல்லாமலிருக்கின்ற உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு வேலை தேடித் தருவதற்கான வழிமுறைகளைப் பரிசீலித்துப் பார்க்கலாம். ஆனால், கனம் உறுப்பினர் அவர்கள் கேட்பதுபோன்று, எந்த எந்தப் பள்ளியில் இல்லை, இருக்கிறார்கள் என்ற விவரம் முழுவதும் இங்கு இல்லை. தனிக் கேள்வி போட்டால் அதுபற்றி அறிந்து, நடவடிக்கைகள் எடுக்கலாம்.

*Uniform for Teachers*

* 101 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether it is proposed to prescribe uniform for teachers in elementary and secondary schools in the State?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** சில உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கும் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கும் வேறுபாடு தெரியாத காரணத்தால் உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கும் அங்குள்ள ஆசிரியர்களுக்கும் சீருடை வழங்க அரசு முன்வருமா?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாணவர்களும் ஆசிரியர்களும் அம்மாதிரி சீருடை அணிந்து வருவது நல்லது என்ற கருத்தை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. நான் செல்கிற இடங்களிலெல்லாம் கூடுமானவரை சீருடை முறையை மேற்கொள்ளுவது நலம் பயக்கும் என்று கேட்டுக் கொள்வதுண்டு. ஆனால், வற்புறுத்தும் அடிப்படையில், மாணவர்கள் கட்டாயம் சீருடை அணிந்து தீரவேண்டும், ஆசிரியர்கள் கட்டாயம் சீருடை அணிந்து தீரவேண்டும் என்று உத்தரவிட்ட நிலை இப்பொழுது இல்லை. இந்த வேண்டுகோளை யடுத்து பல பள்ளிகளில்—ஆண்கள் பள்ளிகளிலும் பெண்கள் பள்ளிகளிலும்—மாணவர்கள் சீருடை அணிந்து வருகின்றனர். சில பள்ளிகளில் ஆசிரியர்களும் சீருடை அணிந்து வருகிறார்கள். அவர்களைக் கேட்டுக் கொள்ளுவதன் மூலமாக இந்த சீருடை அணியும் திட்டத்தை நிறைவேற்றும் கொள்கையைத்தான் நாம் கடைப்பிடித்து வருகிறோம். ஆண்டுதோறும் நடைபெறுகின்ற ஆசிரியர்கள் தினம், மாணவர்கள் தினம் போன்றவைகளில் சீருடைகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. சீருடைகள் வழங்கபட்டும் வருகின்றன.

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, கல்வி அதிகாரிகள் இம்மாதிரி ஆசிரியர்களை சீருடைதான் அணிந்து வரவேண்டும் என்று ஏதாவது அறிவுரை கூறியுள்ளனரா ? அல்லது சில இடங்களில் கல்வி அதிகாரிகள் இம்மாதிரி சீருடை அணிந்து தான் ஆசிரியர்கள் வரவேண்டும் என்று வற்புறுத்துகிறார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கல்வி அதிகாரி அறிவுரை கூறி வருகிறார்கள். வேண்டுகோள் விடுத்து வருகிறார்கள். கேட்டுக்கொண்டும் வருகிறார்கள். ஆனால், சட்டப்படி வற்புறுத்தி வரவில்லை.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, தனியார் துறையினர் நடத்தும் பள்ளிகளில் சீருடை அணியவேண்டும் என்று கட்டாயப்படுத்தி, ஆசிரியர்களும் மாணவர்களும் சீருடை அணிந்து வருவதைப் பார்க்க அழகாக இருக்கிறது. ஆனால், நமது சர்க்கார் நடத்தும் பள்ளிகளில் அந்த முறையைக் கையாளவில்லையே, அதற்கு என்ன காரணம் ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, வற்புறுத்துவதன் காரணமாக, அரசாங்கமே செய்து தரவேண்டும் என்ற நிலை ஏற்படுகிறது. அந்த நிலை ஏற்பட்டால் அரசாங்கத்திற்குப் பெரும் செலவு ஏற்படும். ஆகவே, தைத்துக் கொள்ளும் உடையை நல்ல சீருடையாகத் தைத்துக்கொள்ளும் நிலைமை ஏற்பட்டால் நன்றாக இருக்கும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிற நிலையில் இருந்து வருகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, at present teachers attend the schools with various kinds of dresses. There is a tendency on the part of the boys to imitate the teachers and

## தமிழ் நாடு சட்டப் பேரவை.

---

திங்கட்கிழமை, 1969 ஆகஸ்ட் 25.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

### மருத்துவக் கல்வி இயக்குநர் பதவி

*99 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ் நாடு மருத்துவக் கல்வி இயக்குநர் பதவியை எடுத்து விடுகின்ற செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, டி.எம்.இ., டி.எம்.எஸ். ஆகிய இந்த இரண்டும் தனித்தனி இலாக்காவாக எப்போது, ஏன் பிரிக்கப்பட்டன? இனிமேலாவது அந்த இரண்டு துறைகளிலும் இருக்கின்ற சிக்கல்களைத் தவிர்ப்பதற்கு அவற்றை ஒருங்கிணைக்கின்ற ஏற்பாடு ஏதாவது செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1966-ம் ஆண்டு வரையில் இரண்டு துறைகளும் ஒருவருடைய தலைமையின் கீழ்தான் இயங்கி வந்தன. இரண்டும் தனித் தனியாக இருப்பது நல்லது என்ற கருத்தின் அடிப்படையில் 1966-ம் ஆண்டிலிருந்து தனி மருத்துவக் கல்வி இயக்குநர் நியமிக்கப்பட்டார். சென்ற இரண்டரை ஆண்டு காலமாக இந்த இரண்டும் தனித் தனியாக இயங்கி வருகின்றன. ஆகவே, ஒன்றாக இருந்ததைப் பிரித்தால் நன்மை ஏற்படும் என்று கருதித்தான் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. மீண்டும் ஒன்றாக ஆக்கும் நிலைமை இப்பொழுது ஏற்படவில்லை.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, பக்கத்திலிருக்கின்ற ஆந்திர மாநிலத்தில் அதிகமான மருத்துவக் கல்லூரிகளும், தலைமை மருத்துவ மனைகளும் இருந்தாங்கூட, மூன்று பொறுப்புக்களும் ஒரேயொருவர் தலைமையில் இருப்பதாகத் தெரியவருகிறது. அப்படி நம்முடைய தமிழகத்திலும் செய்வதற்கான முயற்சியை அரசு எடுக்குமா?

boys also come dressed like teachers. Uniform will add decorum and dignity to the teachers and the teaching profession. On this score will the Government be pleased to enforce uniform?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்வதைப் போன்று சீருடைகளால் பல நன்மைகள் இருக்கின்றன என்பதை அரசு உணருகிறது. சிறப்பான நிலைமையையும் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்துவதற்கு இந்த சீருடைகள் வழிவகுக்கும் என்பதை அரசு உணருகிறது. ஆனால் இதை வற்புறுத்துகிற அளவிலே அரசு இல்லை, வேண்டுகோள் விடுக்கிற அளவிலே, கேட்டுக்கொள்ளுகிற நிலையிலேதான் இது நடைபெற்று வருகிறது.

### மாநகர் பள்ளி ஆசிரியர்களின் சம்பள விகிதம்

* 102 வினா.—**திரு. எம். பூபதி :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குத் தரப்படும் சம்பள விகிதம் 90—4—110—5—140 என்ற முறையில் சென்னை மாநகரத்திலுள்ள தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு மேற்கூறிய 2-ம் கட்ட சம்பள விகிதத்தில் ரூ. 3 மட்டுமே சம்பள அதிகரிப்பு கொடுப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(இ) இந்த வித்தியாசத்தைப் போக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(ஆ) இல்லை.

**திரு. எம். பூபதி :** தலைவர் அவர்களே, தற்சமயம் சென்னை மாநகராட்சியால் கொடுக்கப்படுகின்ற அந்தச் சம்பள விகிதத்திற்கு ஏற்ப ஒரு ஆசிரியருக்கு எத்தனை மாணவர்கள் என்ற விகிதாசாரம் எவ்வாறு இருக்கிறது ? அதேமாதிரி தனியார் பள்ளிகளில் கொடுக்கப்படுகின்ற அந்த சம்பளம் குறைந்திருக்கிற காரணத்தால் இங்கு விகிதாசாரமும் குறைந்துள்ளதா என்பதை விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு அரசுத் துறையாலும், தனியார் துறையாலும், மாநகராட்சித் துறையாலும், ரூ. 90—4—110—3—140 என்ற விகிதத்திலேதான் சம்பளம் தரப்படுகிறது. 4—5—1961-ல் சென்னை மாநகராட்சி மன்றம், மாநகராட்சி மன்றம் நடத்துகிற பள்ளி ஆசிரியர்களுக்கு 90—4—110—3—140 என்பதை மாற்றி 90—4—110—5—140 என்று தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறார்கள். 110-க்குப் பிறகு 3 என்பதை 5 என்று அவர்கள் மாற்றியிருக்கிறார்கள். அரசாங்கம் அவர்களுக்கு இந்தக் கூடுதலாக ஆகிற செலவை, மாநகராட்சி





மன்றம் தன்னுடைய நிதியிலிருந்து செலவழிக்க வேண்டும் என்று திட்டவட்டமாக சொல்லி, மற்ற பள்ளிகளுக்கு எந்த அளவுக்கு உதவி அளிக்கப்படுகிறதோ அதே அளவிலேதான் மாநகராட்சிக்கும் அரசு அளிக்கிறது. இந்த அதிக உயர்வை அளிப்பதை மாநகராட்சி மன்றம் தன் பொறுப்பிலேயே ஏற்றுக் கொண்டிருக்கிறது.

**திரு. டி. மார்டின் :** ஸ்பீக்கர் சார், கார்ப்பரேஷன் ஹையர் எலிமெண்டரி ஸ்கூலில் பணி புரிகின்ற பி.டி. டீச்சர்களுக்கு மற்ற ஹைஸ்கூல்களில் பணிபுரிகின்ற பி.டி. டீச்சர்களுக்குரிய சம்பளம் கொடுக்கப்படவில்லையென்றும், எலிமெண்டரி ஸ்கூலில் பணியாற்றுகின்ற செகண்டரி கிரேட் டீச்சர்களுக்கு செகண்டரி கிரேட் டீச்சர்களுக்குரிய சம்பளம் அளிக்கப்படும் என்று அரசு அறிவித்தும் இன்னும் அநேக இடங்களில் அத்திட்டம் நிறைவேற்றப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ? நடப்பு ஆண்டிலேயே இந்த இரண்டுவிதமான பேதத்தை ஒழித்து ஓரே நிலையை அரசு கொண்டுவருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லையென்றாலும் செக்கண்டரி கிரேட் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் கீழ்நிலை வகுப்பிலே, லோயர் கிரேடிலே பயிற்சி பெற்ற ஆசிரியர்களுடைய சம்பளத்தைப் பெறுகிறார்கள் என்ற நிலை ஏற்பட்டாலும், அவர்கள் சம்பளத்தைப் பொறுத்த வரையிலே ஓரே அளவில் இருக்கும்படியாக கொண்டு வரவேண்டுமென்று தீர்மானம் போட்டு அதை ஓரே ஆண்டில் நிறைவேற்றாமல் 3, 4 ஆண்டுகளில் நிறைவேற்றலாம் என்று கணக்கிட்டு, அந்த வகையிலே 12,500 ஆசிரியர்களுக்கு என்று மொத்தமாகக் கணக்கிட்டு, அதில் முதல் ஆண்டு 5,000, இரண்டாவது ஆண்டு 3,000, என்று கணக்கிட்டு, இனிமேல்தான் அதை நிறைவேற்றவேண்டும். உறுப்பினர் சொல்லுகிற கருத்து கோரிக்கையாக வைக்கப்பட்டிருக்கிறது. அது பரிசீலனையில் இருந்து வருகிறது.

**திரு. சி. கோவிந்தராசன் :** தலைவர் அவர்களே, கார்ப்பரேஷனில் இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கு 90—4—110, அதற்குப் பிறகு வருடாந்திர உயர்வு 5 வீதம் 140 வரைக்கும் போகிறது. நம்முடைய அரசுப் பள்ளிகளில் வேலை செய்யக்கூடிய ஆசிரியர்களுக்கு முதலில் ரூ. 4 ஆண்டு உயர்வும் பிறகு ரூ. 3 என்றும் வைக்கப்பட்டிருப்பது நியாயத்திற்கும் நீதிக்கும் பொருந்தாமல் இருப்பதனால், 90—4—110-க்குப் பிறகு, ஆண்டு உயர்வு ரூ. 4-க்குப் பிறகு ரூ. 3 என்று வராமல் 5 ரூபாய் என்றுதான் இருக்க வேண்டுமென்று, அந்த அளவில் மாற்றுவதற்கு அரசாங்கம் முன் வருமா என்று கேட்க விரும்புகினே்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 3-ஐ 5- ஆக மாற்றுங்கள் என்று கேளுங்கள். நியாயத்திற்கும் நீதிக்கும் பொருந்தாமல் இருப்பதனால் என்று கேள்வி நேரத்திலே சொல்லக்கூடாது.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இந்த விதம் ஏற்கனவே ஏற்பட்டு இருந்து வருகிறது. எல்லாப் பள்ளிகளுக்கும் ஒரே அடிப்படையாக அது கையாளப்படுகிறது. மாநகராட்சிமன்றம் தன்னுடைய நிதியிலிருந்து இந்த வசதியைச் செய்கிற நிலையில் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறார்கள். நியாயமும் நீதியும் இல்லை என்பதல்ல பிரச்னை. நிதி இல்லை என்பதுதான் பிரச்சினையாக இருந்து வருகிறது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, சென்னை மாநகராட்சி, நகராட்சிகள், தமிழ்நாட்டு அரசாங்கம், ஆகியவற்றினால் நடத்தப்படும் பள்ளிகளுக்கும் தனியாரால் நடத்தப்படும் பள்ளிகளுக்கும் இத்தகைய வேறுபாடுகள் இருப்பதை முன்னிட்டு, இதனைத் தவிர்க்க தனியார் எவரேனும் புதிய பள்ளிகள் துவக்க விரும்பினால், விதிமுறைகள் வகுத்து, அதன்படி அனுமதி அளிக்கின்ற முறையை அரசு கொண்டு வர இருக்கிறதா என அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்பொழுது அப்படிப்பட்ட விதிமுறை ஒன்றும் இல்லை. இதையெல்லாம் ஆராய்வதற்காக தனிப்பட்ட ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் பல்வேறு பிரச்சினைகளை ஆராய்ந்து, அரசுக்கு அறிக்கை சமர்ப்பிப்பார்கள். அந்த அறிக்கையை அரசு ஆராய்ந்து அதன் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள் 103, 104, 105 ஆகியவை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

## அரிசன நலப் பள்ளிகள்

*106 வின.—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமங்கலம் தாலுகா சாப்பீர் பஞ்சாயத்தைச் சேர்ந்த சங்கரலிங்கபுரத்தில் அரிசன நல மேலாதாரப் பள்ளிகள் (Government Harijan Welfare Senior Basic School) கட்டடம் கட்ட இதுவரை என்ன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** 1967-68-ம் ஆண்டில் ஒரு கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவரவர்களே, இது சாப்டூர் பஞ்சாயத்து என்று இருக்க வேண்டும், சாப்பீர் என்று இருக்கிறது. இந்தப் பள்ளி எந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது, இத்தனை ஆண்டுகளாக கட்டடம் இல்லாது இருப்பதற்குக் காரணம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, 1966-ம் ஆண்டு இந்தக் கட்டடம் கட்ட வேண்டுமென்று அரிசன வெல்பேர் இலாகா மூலமாக முடிவெடுக்கப்பட்டது. 1966–67-ல் இதற்காக ரூ. 10,000 ஒதுக்கப்பட்டது. ஆனால், அதைக்



கட்டுவதற்காக கான்ட்ராக்ட் எடுத்த கான்ட்ராக்டர் ரூ. 5,770 செலவு செய்துவிட்டு, மேற்கொண்டு கட்டடத்தைக் கட்டாமல் விட்டுவிட்டார். எனவே அந்த மாவட்ட நல அதிகாரி இதை சேடப்பட்டி பஞ்சாயத்து யூனியன் கமிஷனரிடத்திலே ஒப்படைத்து அந்த வேலையை முடிக்குமாறு செய்தார். ஆனால், மீண்டும் அதே ஒப்பந்தக்காரர் அதைக் கட்டி முடிக்கவில்லை. இரண்டாவதாக, பஞ்சாயத்து யூனியன் கமிஷனரிடத்திலே ஒப்படைத்து 1968-ம் ஆண்டு கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய கேள்வி இந்தப் பள்ளிக்கூடம் எந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது என்பது. 1966–67-ல் முடிவெடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். இரண்டு முறை கால நீட்டிப்புக் கொடுத்தும்கூட அந்த கன்ட்ராக்டர் கட்டி முடிக்கவில்லை என்று சொன்னார்கள். அவர்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, கட்டி முடித்ததாகத்தான் இறுதியிலே பதிலில் சொன்னேன். என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற தகவல் தற்போது இல்லை. பள்ளி எந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது என்றும் தகவல் இல்லை. கட்டடம் கட்டுவதற்காக 1966-ம் ஆண்டு செயற்குறிப்பு போடப்பட்டது. அதற்காக ரூ. 10,000 ஒதுக்கப்பட்டது. ஒப்பந்தக்காரர் முதலாவதாகக் காலதாமதம் செய்து வந்திருக்கிறார். அதற்குப் பிறகு அந்த வேலை சேடப்பட்டி பஞ்சாயத்து யூனியன் கமிஷனரிடத்திலே ஒப்படைக்கப்பட்டது. அப்பொழுதும் அதே ஒப்பந்தக்காரர் கட்டி முடிக்கவில்லை. பிறகு, அவர் வேறொரு ஒப்பந்தக்காரரிடத்திலே கொடுத்து அந்தக் கட்டடத்தை கட்டி முடித்தார்கள். கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது 1968-ம் ஆண்டு.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister whether there are any special schemes with this Government for the construction of more Harijan Welfare Schools in the State?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, அரிசன நல இலாகா பள்ளிகளுக்குக் கட்டடங்கள் இப்பொழுதும் கட்டிக்கொண்டுதான் வருகிறோம். புதிய செயற்குறிப்பும் இருக்கிறது. ஆனால் எந்த நேரத்தில் எந்த இடம் என்ற தகவல் இப்போது என்னிடம் இல்லை.

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவர் அவர்களே, இந்த அரிசன நல இலாகாவினால் நடத்தப்படுகின்ற பள்ளிகளைப்போல் தமிழகத்திலே பல்வேறு பகுதிகளிலே நடத்தப்படுகின்ற பள்ளி விடுதிகளுக்கு போதுமான கட்டடங்கள் இல்லாமல், ஆரம்ப காலத்திலே அப்பொழுது இருந்த எண்ணிக்கைக்குப் போதுமானதாக இருந்தாலும் இப்பொழுது அதிகமாக மாணவர்கள் சேர்க்கப்படுகின்ற காரணத்தால், இடவசதி இல்லாமலிருந்து வருகிறது. குறிப்பாக திண்டிவனம் போன்ற பகுதிகளிலே இது பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. இதன்மீது சர்க்கார் உடனடியாக என்ன

நடவடிக்கை எடுக்கவிருக்கிறது? இதைப்பற்றி ஆராய உடனடியாக ஒரு குழு அமைத்து, சொந்தக் கட்டடங்கள் இல்லாத இடங்களில் கட்டடங்கள் கட்டித் தருவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** ஆண்டு தோறும் 10 சதவிகிதம் மாணவர்களை மேற்கொண்டு சேர்க்க வேண்டுமென்றுதான் இப்பொழுது நியதி இருக்கிறது. போதிய கட்டடங்களை சர்க்கார் கட்டிக்கொண்டுதான் வருகிறது. எந்த எந்த இடங்களிலே இப்பொழுது கட்டி வருகிறோம் என்ற தகவல் இல்லையென்றாலும் தேவையான இடங்களில் தேவையான அளவு கட்டிக்கொண்டுதான் வருகிறோம்.

* 107 வினா.—திரு. எம். இராமன் : மாண்புமிகு வேளாண்மை-அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசன நல பாடசாலைகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகை கொடுக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது கொடுக்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) & (இ) அரிசன நல பாடசாலைகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்களும் அரசு ஊழியர்களே. வீட்டு வாடகைப்படி அவர்களுக்கும் உண்டு.

**திரு. இல. பலராமன் :** பின்தங்கிய பகுதிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு குடியிருப்பதற்கு வேண்டிய வசதி இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு தனி இடம் கொடுத்து, வீட்டு மனை கொடுத்து, வீடுகள் கட்டித் தருவதற்கு அரசாங்கம் மேற்கொண்டாகிலும் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன். மலைப் பகுதிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களின் நிலையும் இதே நிலைதான், அவர்களுக்கும் வீடுகள் இல்லாத ஒரு பெருங்குறை இருப்பதினால், அவர்கள் தங்குவதற்கு வேண்டிய வீட்டு வசதி செய்வதற்கு அரசாங்கம் மேற்கொண்டாகிலும் நடவடிக்கை எடுத்து ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** கல்வி இலாகாவில் பணி புரியும் ஆசிரியர்களைப் போலவே, அரிசன நலத்துறையில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் வீட்டு வாடகைப் படி முதலிய எல்லாம் கொடுக்கப்பட்டு வருகிறது. மலைப் பகுதிகளில் வாழ்கிற ஆசிரியர்களுக்கும் மலைப் பகுதிகளிலே அரிசன நலத்துறை மூலம் தனியாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். பொதுவாக அரிசன நலத் துறையில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதுபற்றி இந்த இலாகா பரிசிலனை செய்துகொண்டு வருகிறது.



**உணவு உற்பத்தியைப் பெருக்க இசையைப் பயன்படுத்தல்.**

* 108 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

உணவு உற்பத்தியைப் பெருக்க இசையைப் பயன்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதா, அல்லது இந்தத் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இது சம்பந்தமாக இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** நமது கல்வி அமைச்சர் அவர்கள் சில ஆண்டுகளுக்கு முன்னால், எதிர் வரிசையில் இருந்தபொழுது நாதசுவர இசை இசைப்பதன் மூலம் உணவுப் பொருள்களின் உற்பத்தியை அதிகரிக்கலாம் என்ற யோசனையைத் தெரிவித்தார்கள். அந்த யோசனை அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இதற்காக பல முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இதற்காகச் செய்த ஆராய்ச்சியில் முதலில் அவர்கள் இசை இசைப்பதன் மூலம் பூச் செடிகள் வளர்வதற்கு முயற்சி செய்தார்கள். பிறகு காய்கறி உற்பத்தியை அதிகரிப்பதற்காக முயற்சி செய்தார்கள். சாருகேசி ராகத்தில் நாதசுவர இசை இசைப்பதன் மூலம் நல்ல வளர்ச்சி ஏற்படுவதாக சொல்லப்படுகிறது. டி.கே.எம்-6 என்ற நெல் பயிர் வளர்வதற்கு சாருகேசி ராகத்தில் நாதசுவரத்தை இசைத்ததன் மூலம் நல்ல பலன் கிடைத்ததாகத் தெரிகிறது. சி.ஓ. 25 என்ற நெல் ரகத்திற்கு 5 ஏக்கர் இடத்தை எடுத்து, அதற்கும் நாதசுவரத்தின் மூலம் சாருகேசி ராகத்தில் காலையில் ½ மணி நேரம் இசை இசைத்ததன் மூலம் நல்ல பலன் கிடைத்திருக்கிறது. 60 சதவிகிதம் அதிகப்படியான வளர்ச்சி ஏற்பட்டது என்று குறிப்பிடப்படுகிறது. சிதம்பரநாதன்பேட்டை என்ற இடத்தில் வயலின் இசை இசைத்ததன் மூலமும், சீர்காழியில் சாருகேசி ராகத்தில் நாதசுவரம் இசைத்ததன் மூலமும் எ.டி.டி. 7, எ.டி.டி. 9, சி.ஓ. 25 ஆகிய பயிர் ரகங்கள் கூடுதலான வளர்ச்சியைக் கொடுத்திருக்கிறது. 36 சதவிகிதம் முதல் 52 சதவிகிதம் வரையில் அதிகமாக விளைந்திருப்பதாக ஆராய்ச்சியின் முடிவுகளிலிருந்து தெரிய வருகிறது. பாண்டிச்சேரியில் இதுமாதிரி முயற்சி 10 இடங்களில் செய்து பார்க்கப்பட்டிருக்கிறது. அங்கே ஆங்கிலம், ஹவாய் மியூசிக், ஃப்ளூட் (புல்லாங்குழல்) இசைப்பதன் மூலம், ஓம் இசை இசைத்ததன் மூலம் நல்ல பலன் கிடைத்திருப்பதாகவும் தெரிய வருகிறது. 8 சதவிகிதத்திலிருந்து 58 சதவிகிதம் வரை விளைச்சல் அதிகமாக ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் மேலாக நமது கோயம்புத்தூரில் இருக்கிற ஆராய்ச்சி நிலையத்தில்

அவர்களும் இந்த முயற்சியில் ஈடுபட்டார்கள். இரண்டு அறைகளில் இசை இசைக்காத பயிரையும், இசை இசைக்கின்ற பயிரையும் வைத்து, மண் வளம் ஒரே தரமாக வைத்து, அறையின் மேலே நான்கு பக்கங்களிலும் நாதசுவரத்தின் மூலம் சாருகேசி, சகானா மற்றும் ஒரு ராகம் நவரச கானடா இசைத்து ஆராய்ச்சி செய்து பார்த்தார்கள். ஆனால், இசையின் மூலம் பயிர்கள் வளர முடியாது என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆகவே, இந்த ஆராய்ச்சிகளில் இரண்டிலும் எது சரி என்ற முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை.

**திரு. மு. ச. சிவசாமி:** தலைவர் அவர்களே, கிழக்கு ஜெர்மன் நாட்டிலே ஹார்மோன் பெர்டிலைசர் பில்ஸ் தயாரித்து, பல மூட்டைகள் யூரியா, சல்பேட் உரங்கள் போடுவதற்குப் பதிலாக, ஹார்மோன் சல்பேட் பில்ஸ் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தக் கேள்வி இசையைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்க முடியுமா என்பதைப் பற்றியது.

**திரு. மு. ச. சிவசாமி:** உணவு உற்பத்தியைப் பெருக்குவது பற்றித்தான் கேட்கிறேன். கிழக்கு ஜெர்மன் நாட்டில் ஹார்மோன் பெர்டிலைசர் பில்ஸ் கண்டுபிடித்திருக்கிறார்கள். பல மூட்டைகள் யூரியா, சல்பேர் உரங்கள் போடுவதற்குப் பதிலாக, ஒரு சில பில்லைசப் போட்டால் போதும் என்று சொல்கிறார்கள். அவர்கள் இந்தியாவோடு கூட்டுச் சேர்ந்து தயாரிப்பதற்கும் தயாராக இருக்கிறார்கள். எனவே, சட்டமன்ற உறுப்பினர்கள் சிலரும், விவசாய நிபுணர்கள் சிலரும் அடங்கிய ஒரு தூதுகோஷ்டியை கிழக்கு ஜெர்மன் நாட்டிற்கு அனுப்பி, பரிசீலனை செய்து, அப்படிப்பட்ட பில்லை இங்கேயே தயாரிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

(பதில் இல்லை.)

**திரு. கே. என். குமாரசாமி:** பயிர்கள் இசையின் மூலமாக வளர்வது பற்றி ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். அந்த ஆராய்ச்சியில் பயிர்கள் உரம் இல்லாமலே வளருமா அல்லது வேலையில்லாத் திண்டாட்டம் என்று சொல்கிறார்களே, அதைப் போக்குவதற்கு ஒவ்வொரு கிராமத்திற்கும் சில இசை நிபுணர்களை அனுப்பி இசை இசைத்து உரம் இல்லாமல் வளர்வதற்கு இந்த அரசு அந்த ஆராய்ச்சியை ஏற்றுக்கொண்டு, ஏதாவது செயல்படப்போகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இசையால் பயிர் விளையும் என்று முடிவு எடுக்கப்பட்டால், சாருகேசி, சகானா, நவரச கானடா என்ற ராகங்களை இசைப்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் வேலைக்கு அமர்த்தப்படலாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இசை இசைப்பதன் மூலம் சில பகுதிகளில் வளர்கிறது, சில பகுதியில் வளரவில்லை என்று சொன்னார்கள், சுருதியோடு கூடிய இசையா, சுருதி இல்லாத இசையா, எந்த இசைக்கு வளர்ச்சி அதிகமாகிறது என்று சொல்லமுடியுமா? சுருதியுடன் இசைக்கும் இசைக்கு விளைச்சல் அதிகமாகிறது என்று சொன்னால், அதற்கான செலவு என்ன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?



**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இசை என்றாலே சுருதியோடுதான் வரவேண்டும். சுருதியில்லாமல் இசை இல்லை. அது இசை ஆகாது, அது கத்தலாகும். அதற்கான செலவு என்ன என்பதைப்பற்றிய குறிப்பு இப்பொழுது என்னிடம் இல்லை.

**திரு. கரு. சீமைச்சாமி:** நாதசுவர இசை என்று சொன்னால் பெரிய நாதசுவர வித்வான்கள் வாசிக்கிறார்களா ? அல்லது புதிதாக உள்ளவர்கள் இசை வாசிக்கிறார்களா ? பெரிய நாதசுவர வித்வான்கள் வாசிப்பதன் மூலம் நல்ல விளைச்சல் ஏற்படுகிறதா, அல்லது கற்றுக்குட்டிகளை வைத்து வாசிப்பதன் மூலம் வளர்ச்சி அதிகமாகாமல், குறைந்து போய்விடுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** அப்படிப்பட்ட நிலை எதுவும் இல்லை. இசை என்றால், கற்றுத் தெரிந்தவர்கள் தான் இசை இசைப்பார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** ஒரு மணிநேரம் நல்ல இசை இசைப்பதற்கு எவ்வளவு செலவாகும் என்பதை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறு துறை அமைச்சரிடம் இக் கேள்வியைக் கேட்கவேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** செலவு குறைவாகத்தான் இருக்கும் என்று கருதுகிறேன். பல இடங்களில் டேப் ரிகார்ட் இசைத்தட்டுகளை வைத்துத்தான் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். ஒரு முறை இசை இசைப்பவர்களுக்குப் பணம் கொடுத்து ரிகார்டு செய்துவிட்டால், இசைத்தட்டுகள் மூலம் பல முறை பல இடங்களில் இசை இசைத்துக்கொள்ளலாம்.

**திரு. எம். எஸ். மணி:** தலைவர் அவர்களே, ரயில் தண்டவாளத்தின் மேல் ஓடுகிறபோது, ஒரு இசை ஏற்படுகிறது. அதன் மூலம் ரயில் தண்டவாளத்தின் கரை ஓரங்களில் இருக்கிற நிலங்களிலெல்லாம் அதிக விளைச்சல் கிடைக்கிறது என்று ஒரு ஆராய்ச்சியின் முடிவு வந்திருக்கிறதே ? அது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** அந்த ஆராய்ச்சியின் முடிவு கனம் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்திருக்கலாம். இங்கு குறிப்பிட்டிருப்பது சாருகேசி, சகானா போன்ற ராகங்களில் இசை இசைப்பதைப்பற்றித்தான். இரயில் ஓடுகிறபோது ஏற்படும் இசையின் ராகத்திற்கு என்ன பெயர் என்று சொல்ல முடியாது.

[1969 ஆகஸ்ட் 25

**திரு. வ. ஜார்ஜ் :** அமைச்சர் அவர்கள் தனது பதிலில் இசை இசைப்பதன் மூலம் பல இடங்களில் நல்ல பலன் அளித்திருப்ப தாகக் கூறினுர்கள். எனவே, அரசாங்கத் தோட்டங்களிலும், குறிப்பாக பாக்கேஜ் ஸ்கீம் அமுலில் உள்ள தஞ்சாவூர் ஜில்லா போன்ற இடங்களில் இந்த இசை இசைக்கும் திட்டத்தை பரவ லாக அமுலாக்கி, கூடுதல் விளைச்சலை ஏற்படுத்துவதற்கு இந்த அர சாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** பல ஆராய்ச்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அண்ணமலைப் பல்கலைக் கழகத்தின் மூலம் செய்த ஆராய்ச்சியிலிருந்தும், பாண்டிச்சேரியில் செய்யப்பட்ட ஆராய்ச்சியிலிருந்தும், அதிக விளைச்சல் உண்டா கிறது என்று முடிவு கூறுகிறது. ஆனுல், அரசாங்கத்தின் சார்பில் இருக்கிற கோவை ஆராய்ச்சிக்கூடத்தில் செய்யப்பட்ட ஆராய்ச்சி யில் அதிக விளைச்சல் வருவதற்கு வழியில்லை என்று கூறப்பட்டிருக் கிறது. இன்னும் இதுபற்றி முடிவு எடுக்கவில்லை. முடிவு எடுத்த பிறகுதான், எந்தெந்த இடத்தில் எப்பொழுது இப்படிப்பட்ட முயற்சியை மேற்கொள்ளலாம் என்பதுபற்றி அரசாங்கம் ஆலோசனை செய்யும்.

## கோதுமை ஒதுக்கம்

*109 விஞ.—**திரு. ஆ. கு. சுப்பையா :** மாண்புமிகு உணவு, வணிகவரித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1968-69-ல் முதல் மூன்று கால் ஆண்டுகளுக்கும் முறையே தமிழ் நாட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள கோதுமை எவ்வளவு ?

(இ) ஒதுக்கப்பட்டுள்ள அளவு விநியோகத்திற்கு கிடைத்ததா ?

(உ) துண்டு விழுந்திருந்தால் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) 1968 ஏப்ரல் முதல் டிசம்பர்வரை தமிழ்நாட்டிற்கு 78680 டன்கள் கோதுமை ஒதுக்கப் பட்டன.

(இ) இவற்றில் 75213 டன்கள் எடுத்து விநியோகம் செய்யப் பட்டன.

(உ) குறிப்பிட்ட மாதத்திற்குள் ஒதுக்கபட்ட கோதுமையை எடுத்துக்கொள்வதில் சில சமயங்களில் சில சங்கடங்கள் ஏற்பட்ட தால், சிறு துண்டு விழுந்தது.

**திரு. கே. என். குமாரசாமி :** சார், அமைச்சர் பதில் சொல்லும் போது, 78,000 சொச்சம் டன் கோதுமை ஒதுக்கப்பட்டதாகவும், அதில் ஒரு பகுதி கோதுமைதான் விநியோகிக்கப்பட்டதாகவும், பாக்கி 3,000 டன் என்றும் சொன்னுர்கள். என்ன காரணத்தால் இம்மாதிரியான பாக்கி ஏற்பட்டது?



1969 ஆகஸ்ட் 25]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, ஒதுக்கப்பட்டது 78,680 டன்கள் ; அதில் 75,213 டன் எடுத்து விநியோகம் செய்யப்பட்டது. அந்த வகையில் 3,000 டன் குறை வாக எடுக்கப்பட்டது. அதற்குக் காரணம், லாரி போக்குவரத்து சரியாகக் கிடைக்கவில்லை. கொடுப்பதில் காலதாமதம் ஏற்பட் டது. அதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எழுதினேம். மத்திய சர்க்கார், சிகப்புக் கோதுமை கொடுக்க முடியாது. வெள்ளைக் கோதுமை வேண்டுமானுல் கொடுக்கிறேம் என்று கொடுத்தார்கள்.

**திரு. எம். சுரேந்திரன் :** சபாநாயகர் அவர்களே, உணவுப் பொருள்கள் பற்ருத இடங்களில், கோதுமை தாராளமாகக் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. இருந்தாலுங்கூட, பல இடங்களில், கிராமப்புறங்களில் இரண்டு மூட்டை என்றுதான் கோதுமை அளிக்க முடியும் என்று சொல்லப்படுகிறதே, அது இங்கே அமைச்சர் குறிப்பிடும் நிலைக்கு, அங்கே இருக்கும் நிலை மாறுபாடாக இருக்கிறதே. அதைத் தவிர்க்க சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, கோது மையைப் பொறுத்தவரையில், வாங்கும் விலையைவிட குறைவான விலைக்கு விற்கிறேம். அதன் காரணமாக, கள்ளத்தனமாக வியா பாரம் நடக்கிறது என்று சர்க்காருக்கு புகார்கள் வந்தன. ஆகவே, எந்த எந்த கிராமங்களில் தேவையிருக்கிறதோ அதைப் பொறுத்து அந்த அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கோதுமை நிறைய இருக்கிறது. ஆனுல் கிலோ 75 பைசாவிற்கு என்று விற்க யார் முன் வந்தாலும், அவர்களுக்கு எவ்வளவு கோதுமை வேண்டுமானுலும் கொடுக்க, அதைத் தமிழ்நாட்டு எல்லைக்குள் விற்கக் கொடுக்கத் தயாராக இருக்கிறேம்.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, பொதுவாக இப் பொழுது கோதுமை தமிழ் நாட்டில் அதிகமாகப் பயன்படுத்தப் பட்டு வருகிறது. இப்பொழுது பஞ்ச நிலை ஏற்பட்டிருக்கும் போது, கோதுமை சாப்பிடுவதை ஊக்குவிக்க, விலையையும் குறைத்திருக்கிறது. அப்படிக் குறைத்த விலைக்கு ஈடாக மத்திய சர்க்காரிடமிருந்து மானியம் கேட்டு வாங்கி பஞ்ச நிலையில் மக்களைக் காப்பாற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, இந்த விலைக் குறைப்புக்கே அவர்கள் சமாதானம் கேட்டுக்கொண்டு இருக்கிறுர்கள். மானியம் கேட்டால் கொடுக்க மாட்டார்கள். ஆகும் செலவை நாங்கள் ஏற்றுக்கொள்ளுகிறேம் என்று சொல்லும்போதே அதை ஏற்க மறுக்கிறுர்கள். கோதுமை சாப்பிடு வதைப் பரப்ப, 'கோதுமை நாள்' என்று ஒவ்வொரு ஊராட்சியும்

[1969 ஆகஸ்ட் 25

கொண்டாட வேண்டும் என்று சொல்லி, கோதுமையை இலவசமாகக் கொடுக்க 1,000 டன் கோதுமை அனுப்பியிருக்கிறோம். பரப்ப ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

**திரு. கே. வினாயகம் :** சார், கோதுமை உணவு நல்ல சத்துள்ள உணவு என்பதால், இப்பொழுது அமைச்சர்கள் உட்பட பிரசாரத்தில் இறங்கி இருக்கிறார்கள். இப்பொழுது கூடவா கோதுமையை உட்கொள்ளும் அளவு, 'கன்ஸம்ஷன் லெவல்' ஏறாமல் இருக்கிறது? ஏறவில்லையா? தமிழர்கள் கோதுமை சாப்பிடக்கூடாது என்று ஒரு காலத்தில் இவர்கள் சொன்னது உண்மையா? இப்பொழுது அதைச் சாப்பிடச் சொல்லி பிரசாரம் செய்வதற்கு காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, கோதுமையைச் சாப்பிடக் கூடாது என்று திராவிட முன்னேற்றக் கழகமோ, இங்கே அதைச் சார்ந்தவர்களோ, யாருமே பிரசாரம் நிச்சயம் செய்தது கிடையாது. ஒன்று மட்டும் சொல்லவேண்டும். அரிசி சாப்பிடுகிறவர்களுக்கு புத்தி மந்தம் என்று பெரிய மனிதர் சொன்னதைக் கண்டித்துப் பேசியிருக்கிறோம். நாங்கள் கோதுமைப் பிரசாரம் செய்த பிறகு இப்பொழுது கோதுமையின் 'ஆஃப் டேக்', அதாவது மக்கள் வாங்குவது அதிகமாக வளர்ந்து இருக்கிறது. இருந்தாலும், நாங்கள் எதிர்பார்த்த அளவுக்கு வளரவில்லை.

**திரு. தி. பொன்னுமலை :** தலைவர் அவர்களே, இந்த கோதுமை சம்பந்தமாக, ஆரம்பத்தில் கிராமங்களில் அவ்வளவு வரவேற்பு இல்லாவிட்டாலும், தற்போது கோதுமைக்கு தமிழகத்தில் கிராக்கி இருக்கிறது. ஆனால் கொடுக்கும்போது, இரண்டு மூட்டை நான்கு மூட்டை என்றுதான் கொடுக்கிறார்கள். ஆகவே, தேவையான அளவிற்கு, ஜனங்கள் தேவைக்குப் பூராவாக வாங்கும் அளவிற்கு கொடுக்கும் அளவில் ஏற்பாடுகள் செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, கோதுமை எவ்வளவு வேண்டுமென்றாலும் அரசிடம் ஸ்டாக் இருக்கிறது. கொடுக்கவும் தயாராக இருக்கிறோம். ஆனால், குறைவான விலையில் விற்கவேண்டும். சில பேர் இதைக்கொண்டு கள்ள வியாபாரம் செய்வதாக அரசுக்கு தகவல் வந்ததால், அந்த அந்த இடத்தில் மக்கள் தேவைக்குத் தக்கபடி அந்த அந்த மாவட்ட ஆட்சித் தலைவரே கொடுக்க வேண்டும் என்று உத்தரவு போட்டு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்த கேள்வி, 110.

THIRU K. VINAYAKAM : On a point of personal explanation. Sri, when I asked a question the Hon. Minister levelled a charge against somebody not in this House.

அரிசி சாப்பிடுவதனால் புத்தி மந்தமாகிறது என்று சொன்ன அந்தப் பெரிய மனிதர் யார் என்று சொல்ல வேண்டும் . . . .



1969 ஆகஸ்ட் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன் இல்லையே.

THIRU K. VINAYAKAM : The Hon. Minister cannot run away with a statement like that. This is not the way in which a question should be answered.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதெல்லாம் பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன் என்பதன் கீழ் வராது என்பதை உறுப்பினர் உணர வேண்டும்.

THIRU K. VINAYAKAM : Please listen to me.. யார் அந்தப் பெரிய மனிதர்? ஏதோ அந்த மனிதர் சொன்னதற்காக, அதனால் தான் தாங்கள் அதை எதிர்த்துப் பிரசாரம் அப்பொழுது செய்ததாகச் சொல்கிறார்கள். அதற்கு ஆதாரம் இருக்கிறதா?

Is there any documentary evidence which could be brought at this stage or at a later stage, that it has been said by a big man.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வினாயகம் கேட்கும் போது, இந்தக் கோதுமை உணவு கூடாது என்று சொன்னார்கள் என்றார்கள். அதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? அப்படிச் செய்யவில்லை என்று அமைச்சர் சொன்னார்கள்.

**திரு. கே. வினாயகம் :** நாளைக்கு ப்ரொட்யூஸ் பண்ணுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவரும் நாளைக்கு ப்ரொட்யூஸ் செய்வார்கள். ஆனால், அது பர்சனல் எக்ஸ்ப்ளனேஷனில் வராது.

**திரு. கே. வினாயகம் :** உப கேள்விக்கு இடம் கொடுக்கவில்லை என்பதால், இது வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன் என்றால் அதை முறையோடு பயன்படுத்த வேண்டும் என்று திரு. வினாயகத்திற்கு சொல்ல விரும்புகிறேன்.

**திரு. கே. வினாயகம் :** முறையோடுதான் கேட்டிருக்கிறேன். உப கேள்விக்கு இடம் கொடுத்திருந்தால், இது வராது. அமைச்சரும் முறை தவறி பதில் சொல்லக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முறை தவறி பதில் சொன்னால், அதற்கான நடவடிக்கை எடுக்க உறுப்பினர்களுக்கு வாய்ப்புக்கள் இருக்கின்றன. என்ன வாய்ப்பு என்பதை நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள். விதிமுறையெல்லாம் அச்சடித்து உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்த நேரத்தில் எதைச் சொல்லவேண்டும் என்று தெரிந்து கொள்ள வேண்டும். ஏதாவது சொல்ல வேண்டும் என்றால், 'பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன்' 'பாயிண்ட் ஆப் ஆர்டர்', என்று எழுந்து பேசுவது சரியாகாது.

**திரு. கே. வினாயகம் :** உப கேள்விக்கு இடமளித்திருந்தால், இப்படி எழுந்திருக்க வேண்டியதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது சரியாகாது.

[1969 ஆகஸ்ட் 25

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, ஒரு சிறு விளக்கம். அங்கத்தினர் அவர்கள், கோதுமை உட்கொள்ளக் கூடாது என்று நாங்கள் பிரசாரம் செய்ததற்கு ஆதாரம் இல்லாமல் தான் சொல்லவில்லை, ஆதாரத்தை நானே கொண்டு வந்து கொடுப்பதாகச் சொன்னார்கள். அரிசி சாப்பிடுவதால் புத்தி மந்தம் என்று சொன்ன பெரிய மனிதர் பெயரை இங்கே இழுக்க வேண்டாம் என்று விரும்புகிறேன். அப்படி இழுத்து அவருக்கு இழுக்கு தேட அங்கத்தினர் முயற்சிக்கிறார். அந்த முயற்சி செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

THIRU K. VINAYAKAM : Now that the Hon. Minister has risen on a personal explanation, I may also add to that personal explanation. I am not afraid of any big names being brought upon here. That is not my object. But that is a totally irrelevant charge against one great personage which is not substantiated by any documentary evidence. That is my point.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'இர்ரெலவண்டா' இல்லையா என்பதை இப்பொழுது முடிவு பண்ண முடியாது. அவர் பெயரைச் சொல்லத் தயாராக இருக்கிறார்.

திரு. கே. விநாயகம் : பெயரைச் சொல்லாவிட்டால், யார் சொன்னார், யார் சொல்லவில்லை என்பது எப்படித் தெரியும்.

That statement was never made by anybody.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கேள்வி.

### கோயில் நிலங்களிலிருந்து நெல் கொள்முதல்

* 110 வினா.—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு உணவு, வணிக வரித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களிலிருந்து நெல் கொள்முதல் செய்யும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களில் விளையும் நெல்லில் கோயில்களின் தேவைக்குப் போக எஞ்சியுள்ள நெல் முழுமையும் கொள்முதல் செய்யப் படுகிறது.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இம்மாதிரி கொள்முதல் செய்வதால், கோவில்களில் உள்ள ஊழியர்களுக்கு சம்பளம் போன்றவைகள் கொடுப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, சிறிய கோவில்களைப் பொறுத்தவரையில், கொள்முதலிலிருந்து விதிவிலக்கு அளிக்க சர்க்கார் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இப்பொழுது இருக்கும் விதிகளின்படி, எந்த எந்த கோவில்களுக்கு எவ்வளவு தேவையோ அதை அந்த அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயித்து, அது போக மிச்சத்தை கொள்முதல் செய்கிறார்கள்.



1969 ஆகஸ்ட் 25]

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, அவ்வாறு கோவில்களிலிருந்து மொத்தம் உற்பத்தியில் இவ்வளவு கொள்முதல் என்பதற்கு ஏதாவது 'பார்முலா' வைத்திருக்கிறார்களா ? ஆண்டு தோறும் இவ்வளவு விளைந்தால் இவ்வளவு கொள்முதல் என்று இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆண்டுதோறும் எவ்வளவு கோவில்களிலிருந்து என்று தற்சமயம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம். இப்பொழுது ஒவ்வொரு கோவிலுக்கும் தேவைக்கு எவ்வளவு என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயித்து, அது போக எஞ்சியதை அரசுக் கணக்கில் எடுத்துக்கொள்கிறார்.

திரு. என். ராஜாங்கம் : தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு ஏக்கராவிற்கு இவ்வளவு கொள்முதல் என்று அரசாங்கம் விதித்திருக்கிறதே, அதேபோல கோவில் நிலங்களிலிருந்தும் வாங்க ஏதாவது விதி இருக்கிறதா, அல்லது அவற்றிற்கு வேறு விதியா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கோவில்களுக்கு என்ன விதி என்பதை முன்பே சொல்லிவிட்டேன்.

திரு. அ. மாரிமுத்து : தலைவர் அவர்களே, இந்தக் கோவில் நிலங்களுக்கும் உச்சவரம்பு கொண்டுவர இந்த அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனிக் கேள்வி போடவும்.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோவில்களுக்கு அளக்க வேண்டிய நெல்லை உடனடியாக அளக்காமல் காலதாமதம் செய்து, பின்னால் பணமாகக் கொடுக்கிறார்கள். ஆகவே, அதைத் தடுத்து, நெல்லாகவே கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இதுவரையில் இந்தமாதிரியான புகார் எதுவும் அரசாங்கத்திற்கு வரவில்லை. புகார் வந்தால் அதைப் பரிசீலிக்கும்.

### Government Pleaders and Public Prosecutors

* 111 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of (i) Government Pleaders and (ii) Public Prosecutors appointed in the districts during 1967–68?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (1) அரசாங்க வக்கீல்கள்—7.

(2) அரசாங்க வழக்குரைஞர்கள்—2.

THIRU K. VINAYAKAM : Are such appointments made out of considerations like integrity, practice at the bar and ability to handle cases or on a political party basis?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, கேள்வியிலுள்ள முன்பகுதியைப் பின்பற்றிச் செய்யப்படுகிறது.

திரு. இல. பலராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த மாவட்டங்களில் யார் யாரை நியமித்திருக்கிறார்கள் என்று அவர்களுடைய பெயரை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, குறிப்பிட்ட மாவட்டத்தைப்பற்றிக் கேட்டால் பதில் சொல்லலாம்.

**சப்-மாஜிஸ்ட்ரேட் முதலியவர்களின் ஓய்வு பெறும் வயது.**

* 112 வினா—திரு. கரு. சீமைச்சாமி: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சப்-மாஜிஸ்ட்ரேட்டுகள், அடிசனல் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகள் பதவியிலிருந்து ஓய்வு பெறும் வயதை அதிகரிக்க உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் என்றால், எப்போது அமலாக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ): இதுவரை இருந்துவரும் நிலையை நீடிக்க அரசு முடிவு செய்துள்ளது.

Thiru T. MARTIN: Mr. Speaker, Sir, recently the Hon. Chief Justice of the Tamil Nadu High Court would appear to have said that judicial experience is a very prime factor in the dispensation of justice and the retirement age of Subordinate Judges and Presiding Officers of all Courts should be raised to gain the experience which is necessary for the dispensation of justice. May I know whether the Government is aware of the observation made by the Hon. Chief Justice and, if so, whether any steps have been taken to implement his suggestion?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, வயதானவர்களுக்கு மட்டும் அனுபவமும் அறிவும் இருக்கிறதென்பதை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. வயதைப்பற்றி இரண்டுவிதமான கருத்துக்கள் இருக்கின்றன. ஒன்று ஓய்வுபெறும் வயதை 58 ஆக உயர்த்தவேண்டுமென்பது. மற்றொன்று ஓய்வு பெறும் வயது 55 ஆகவே இருக்க வேண்டுமென்பது. இந்த இரண்டு வித கருத்துக்களையும் பரிசீலித்து, இப்போதைக்கு இருந்துவரும் நிலையை நீடிப்பதே நல்லது என்று அரசாங்கம் கருதுகிறது.

THIRU T. MARTIN: Sometime back some District Judges were granted extension. Afterwards it was stopped. May I request the Hon. Minister to state whether he will reconsider the order and raise the age of retirement of at least the District Judges?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, சில பேர்களுக்கு எக்ஸ்டன்ஷன் கொடுத்த கருத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. முன்னாலே இருந்த அரசாங்கம் மாவட்ட நீதிபதிகளுக்கு



ஓய்வுபெறும் வயதை 55-லிருந்து 58 ஆக உயர்த்த முடிவுசெய்தது. இந்த அரசாங்கம் புதிதாக பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னர், அரசாங்கத்திலே பணியாற்றுகின்ற அனைவருக்கும் ஒரேவிதமான விதிமுறை இருக்க வேண்டுமென்றும், நீதித்துறையிலே மாவட்ட நீதிபதிகள் போன்றோருக்கு வயது 58 ஆகவும், மற்றும் மாவட்ட துணை நீதிபதிகள் போன்றோருக்கு 55 ஆகவும் இருப்பதால் அவர்களுடைய பிரமோஷன் பிராஸ்பெக்ட்ஸ் குறைவாக இருப்பதால், ஓய்வு பெறும் வயது 55 என்பது எல்லோருக்கும் ஒரேவிதமாக இருக்க வேண்டுமென்றும் முடிவு செய்து ஆணையிட்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM: Does the Minister accept the theory that especially in the legal profession the more you grow older, the more mature your brain becomes and, if he accepts it as correct, will the Government reconsider the proposal for raising the age-limit for retirement for members of the Benches?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, என் போன்ற இளைஞர்கள் அதை ஒத்துக்கொள்ளத் தயாராக இல்லை.

*Remission to Prisoners*

* 113. Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) Whether the Government proposes to grant remission of sentences to prisoners during the Gandhi Centenary year; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இம்மாநிலத்திலுள்ள சிறைச்சாலைகளில் தண்டனை அனுபவித்து வரும் கைதிகளுக்கு, காந்தியடிகள் நூற்றாண்டு விழாவினையொட்டி தண்டனைக் காலத்தில் சிறப்புத்தள்ளுபடி அளிப்பதற்கு ஏற்கெனவே அரசு ஆணைகள் வெளியிட்டுள்ளது. இது சம்பந்தமான உத்திரவு —10—1968 அன்று அமுலுக்கு கொண்டுவரப்பட்டது.

(இ) தண்டனைக் காலத்தைக் குறைக்கும் அளவு, கீழ்க்கண்டவாறாகும்:

| கைதிகளின் வகை | சிறப்புத் தள்ளுபடி |
|---|---|
| 1 மதுவிலக்குக் கைதிகள் மது விலக்குச் சட்டத்தின் கீழான குற்றங்களுக்குத் தண்டிக்கப்பட்ட கைதிகள். | அவர்களின் தண்டனைக் காலத்தில் ¼ பங்கு (கால் பகுதி). |
| 2 மூன்றாண்டுகள் வரையில் தண்டனை அனுபவித்து வரும் கைதிகள். | இரண்டு திங்கள்கள். |
| 3 மூன்றாண்டுகளுக்கு மேல் ஐந்து ஆண்டுகள் வரையில் தண்டனை அனுபவித்து வரும் கைதிகள். | மூன்று திங்கள்கள். |
| 4 ஐந்து ஆண்டுகளுக்கு மேல் பத்து ஆண்டுகள் வரையில் தண்டனை அனுபவித்து வரும் கைதிகள். | ஆறு திங்கள்கள். |
| 5 பத்து ஆண்டுகளுக்கு மேல் தண்டனை அனுபவித்துவரும் கைதிகள், ஆயுள் தண்டனைக் கைதிகள் உள்பட. | ஓராண்டு. |

மேலே வழங்கப்பட்ட சிறப்புத் தள்ளுபடி கடன் கைதிகளுக்கு அனுமதிக்கப்படமாட்டாது.

THIRU K. VINAYAKAM : Whereas an incident like the Gandhi Centenary falls once in a way and it is a rare occasion in any nation's life, considering the propriety and the nature of the centenary celebrations, will the Government consider the possibility of releasing all kinds of prisoners and emptying all the jails irrespective of the crimes they have committed or the sentences of imprisonment imposed upon them, and earning a good name if possible?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே இதே கேள்வியைத் திரும்பத் திரும்பக் கேட்டார்கள். பொருள் ஒன்று தான். குற்றம் செய்தவர்களைத் தண்டனைக்கு உள்ளாக்க வேண்டு மென்பதுதான் மகாத்மா காந்தி அவர்களே ஒத்துக்கொண் டிருக்கிற கொள்கை. காந்தியடிகளின் வரலாற்றைப் படித்தவர் களுக்கு இந்த உண்மை நன்கு தெரியும். மேலும், காந்தியடிகள் தான் குற்றம் செய்ததாக ஊகித்துக்கொண்டு அதற்குப் பரிகார மாக தண்டனையையும் அவர் விதித்துத் கொண்டிருக்கிறார். அப் பேர்ப்பட்ட காந்தியடிகள் இருந்த கட்சியைச் சேர்ந்தவர்கள், குற்றம் செய்தவர்கள் எல்லோரையும் வெளியே விட்டுவிடுங்கள் என்று சொல்வது பொருத்தம் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கரு. சீமைச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, காந்தி யடிகளின் நூற்றாண்டு விழாவையொட்டி, தூக்குத் தண்டனை பெற்ற கைதிகளின் தண்டனை நிறைவேறாமல் இருக்கிற பட்சத்தில் அந்தத் தூக்குத் தண்டனையை ஆயுள்கால தண்டனையாக மாற்றி யுள்ளதா ? அப்படிப்பட்ட சம்பவம் நடந்ததா? அப்படி நடை பெறுமானால், தூக்குத் தண்டனையை ஆயுள்கால தண்டனையாக மாற்ற அரசாங்கம் உத்தேசிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட தேதியைக் குறித்து அனுப்பி, அந்தத் தேதியிலிருந்து அதற்குப் பின்னாலே, யார் யாருக்கு அந்தத் தண்டனை நிறை வேற்றப்படாமல் இருந்தாலும், அந்தத் தண்டனை பெற்றிருந்தாலும், அதனை ஆயுள்கால தண்டனையாக மாற்றப்பட வேண்டுமென்று அரசு உத்தரவிட்டிருக்கிறது.

## கனிப்பொருள் படிவங்கள்

* 114 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமீபத்தில் கனிப்பொருள்களை கண்டுபிடிக்க செய்த ஆய்வினால் தமிழகத்தில் பொன், ஈயம், பாக்சைட், மைக்கா அலுமினியம் முதலியவைகள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப் பட்டனவா ?

(இ) ஆம், எனில், எங்கெங்கே, எவ்வளவு இருப்பதாக் கண்டு பிடிக்கப்பட்டது?



மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இம்மாநிலத்தில் அண்மையில் நடத்தப்பட்ட கனி வள ஆராய்ச்சிகள் மூலம் செம்பு, ஈயம், அலுமினிய கனிப்பொருள் வெர்மிகுலைட் என்னும் ஒரு வகை மைக்கா ஆகியவை கிடைப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. தங்கக் கனி கிடைப்பதாக அறிவிக்கப்படவில்லை.

(இ) மேற்குறிப்பிட்ட கனிபொருள் கிடைப்பது குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(1) தென் ஆர்க்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், மாமந்தூரில் செம்பும், துத்தநாகமும் சேர்ந்த ஈயம் கிடைப்பதாக அறிவிக்கப்படுகிறது. 0.65 சதவீதம் செம்பும், 2.00 சதவீதம் ஈயமும், 2.7 சதவீதம் துத்தநாகமும் அடங்கிய சுமார் 8 லட்சம் டன் ஈயம் கிடைப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

(2) மதுரை மாவட்டம், கோடைக்கானல் வட்டம், கோடைக்கானலின் தென் மேற்கில் 28 கிலோ மீட்டர் தொலைவில் கோனலாற்றுப் பகுதியில் அலுமினியம் தயாரிப்பதற்கு தேவைப் படுகிற " பாக்சைட் " கனி கிடைக்கிறது. இங்கு சுமார் 22.3 லட்சம் டன் பாக்சைட் கிடைக்கும் என்று மதிப்பிடப்படுகிறது. இதில் சுமார் 10 லட்சம் டன் பாக்சைட் நல்ல தரம் உள்ளதாகும்.

(3) வட ஆர்க்காடு மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்தில் " வெர்மிகுலைட் " என்னும் ஒரு வகை மைக்கா கிடைக்கிறது. இப்பகுதியில் சுமார் 1.9 லட்சம் டன் வெர்மிகுலைட் கனி கிடைப்ப தாக மதிப்பிடப்படுகிறது.

* 115 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தமிழகத்தில் நெல்லை போன்ற கடற்கரைப் பகுதிகளில் மோனசைட் மணல் இருப்பதாக அணுசக்தி இலாகா அறிவித் துள்ளது தமிழக அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) உறுப்பினர், திருநெல்வேலி மாவட்டத்தைக் குறிப்பிடுகிறார். திருநெல்வேலி மாவட்டத்தின் கடற்கரைப் பகுதிகளில் 'மோனசைட்' மணல் இருப்பதாக அணுசக்தித்துறை அறிவித்துள்ளதாக அரசுக்குத் தகவல் இல்லை. அத்தகைய அறிவிப்பு ஒன்றையும் வெளியிடவில்லை யென்று அணுசக்தி துறையும் உறுதிப்படுத்தியுள்ளது. எனினும், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மணவாளக்குரிச்சியைச் சுற்றிலும் 5 சதவீதம் வரையில் மோனசைட் அடங்கிய கடற்கரை மணல் பெருமளவு இருக்கிறது. மேலும், இந்த மோனசைட் மணலில் 55 சதவீதம், 'இல்மெனைட்', 7 சதவீதம் செந்நிற ஒண் மணிக்கல், 3 சதவீதம் கனிமக்கல், படிகக்கல் அடங்கியுள்ளது. மேற்பரப்பிற்குக் கீழ் 8 அடி ஆழமுடையதாக இம்மணல் காணப் படுகிறது. இந்த 'மோனசைட்டில்' சிறு அளவு தோரியமும், யூரேனியமும் அடங்கியுள்ளது.

[1969 ஆகஸ்ட் 25

*116 வினா.—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில், அழகர்மலைக் குன்றுகளின் அடிவாரப் பகுதிகளில் சில உலோகப் பொருட்கள் கிடைப்பது பற்றிய உண்மை அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், இது பற்றி ஆய்ந்து அறிய அரசுக்கு உத்தேசமுண்டா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) 1959–60-ம் ஆண்டில் இந்தியப் புவியியல் ஆய்வு நிறுவனம் அழகர்மலைப் பகுதியில் புலனாய்வுகளை மேற்கொண்டது. பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த கனிப்பொருள் படிவம் எதுவும் அந்தப் பகுதியில் காணப் படவில்லை என்று அப்புலனாய்வுகள் புலப்படுத்தின.

(இ) இவ்வினா எழவில்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் கோடைக்கானல் அருகில் அலுமினியம் தயாரிப்பதற்குத் தேவைப்படுகிற 'பாக்சைட்' கிடைப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைத் தோண்டி எடுப்ப தற்கு என்ன முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எங்கெங்கே என்ன, என்ன கிடைக்கிறது என்பதாக முதலில் பொது சர்வே நடத்தப்படு கிறது. பிறகு அந்த அந்த இடத்தில் அந்தப் பொருள்கள் தோண்டி எடுக்கப்படுவது பொருளாதார வகையில் ஏற்ற அளவுள்ளதாக கிடைக்குமா என்பது பரிசீலிக்கப்பட வேண்டும். பிறகே அந்த முயற்சியில் இறங்க வேண்டியிருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** நமது ராஜ்யத்தில் கிடைக்கிற பாக்சைட் இந்த ராஜ்யத்தில் இருக்கிற அலுமினியத் தொழிற் சாலைக்குப் போதுமானதாகக் கிடைக்கிறதா? அப்படியானல் அவற்றை எடுக்க போதிய திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கனி வள ஆராய்ச்சி தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. எந்த, எந்த பகுதியில் கிடைக்கிறது என்பது பொறுத்திருந்து பார்த்துத்தான் சொல்ல வேண்டும்.

**திரு. எம். மேத்தா :** பேரவைத் தலைவர் அவர்களே, கோடைக் கானல் அருகில் அலுமினியத் தொழிலுக்கு வேண்டிய பாக்சைட் கிடைப்பதாகச் சொன்ன காரணத்தினால் அங்கே அலுமினியத் தொழிற்சாலையை ஆரம்பிக்க முடியுமா என்று கேட்க ஆசைப்படு கிறேன்.



1969 ஆகஸ்ட் 25]

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அது ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்குத் தேவையான அளவு கிடைக்குமா என்பதைப் பொறுத்தே இருக்கிறது.

**திரு. டி. மார்டின் :** * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கனிவளத்தைப்பற்றிய கேள்வி யில் * * அதைப்பற்றி சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அதைவிட்டுவிட்டு கேள்வி போடுங்கள்.

**திரு. டி. மார்டின் :** ஸ்பீக்கர் சார், * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** * * அதற்கும் கனிவளத்திற்கும் என்ன சம்பந்தம்? நான் அதை அனுமதிக்க முடியாது.

**திரு. டி. மார்டின் :** Sir, I will modify the question. நெல்லை மாவட்டத்தில் கனி வளத்தைப்பற்றிய ஆராய்ச்சி செய்த தாகக் கூறினார்கள். ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் அதிகமான தங்கம் கிடைக்கிறதா, வெள்ளி கிடைக்கிறதா என்பதை ஆராய்ச்சி செய்து பார்த்தார்களா? அந்தவிதமான ஆராய்ச்சி செய்திருந்தால் முடிவு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** * * அவர் சொல்கிற பொருள்கள் அங்கே கிடைப்பதாகத் தெரிய வில்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** திரு. மார்டின் அவர்கள் அதைப் * * பற்றிச் சொல்லக்கூடாது என்ற காரணத்தினால் அமைச்சர் சொல்வதும் சரியல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தேர்தலைப்பற்றிச் சொல்லப் பட்டவற்றை நான் நடவடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன்.

**திரு. மு. ச. சிவசாமி :** நெல்லைமாவட்டக் கடற்கரையோரங் களில் கிடைக்கிற கார்னெட் மணலை மைனிங் லைசென்ஸ் இல்லாத தனிப்பட்டவர்கள் எடுத்துச் சென்றுகொண்டிருக்கிறார்கள். அதைத் தடுத்து நிறுத்த அரசு உடனடியாகத் தீவிர கவனம் செலுத்துமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அங்கத்தினர் தகவல் கொடுத்தால் அந்தத்துறைக்கு அனுப்பி பரிசீலிக்கப்படும்.

**திரு. நா. வீராசாமி :** தமிழகத்தில் இருக்கிற கனிவளங்களை எடுக்க மைனிங் லைசென்ஸ் வாங்கவேண்டியிருக்கிறது. கட்டண மும் அதிகமாக இருக்கிறது. மைனிங் லைசென்ஸ் விதிமுறைகள்,

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

கட்டணம் எல்லாம் எப்போதோ ஏற்படுத்தப்பட்டது. ஆகவே ஏழை மக்களும் கனிவளங்களை எடுத்துப் பயன்பெறத்தக்க அளவு கட்டணங்களைக் குறைத்து, விதிமுறைகளைத் தளர்த்துவார்களா?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* கனம் அங்கத்தினர் சொன்னதுபோல இந்த விதிமுறைகள் கட்டணங்கள் எல்லாம் எப்போதோ ஏற்படுத்தப்பட்டது. கனி வளம் என்பது சமுதாயத்திற்குச் சொந்தம். அரசாங்கமே இதை எடுத்து எப்படி சமுதாய முழுமைக்கும் பயன்படச் செய்யலாம் என்று யோசித்துக்கொண்டு வருகிறது. ஆகவே இன்றுள்ள நிலையில் பழைய கட்டண விகிதத்தை உயர்த்தி கட்டுப்பாட்டை அதிகப்படுத்தலாமா என்று தான் யோசிக்க வேண்டியிருக்கிறது. கட்டணத்தைக் குறைக்கக் காரணம் இல்லை.

THIRU K. VINAYAKAM : Sir, whereas it has been stated that our Tamil Nadu is very rich in very valuable minerals and that they have not been excavated as yet and whereas it has been stated that a geological survey of our State has not been done on a scientific and rational basis but has been done just it, an haphazard way whenever suggestions have been made, will the Government venture to undertake a geological survey of the entire State by a qualified team of able Engineers and find out what exactly is found because even before the General Elections our friends have been sayingதென்னகத்தில் என்ன இல்லை, வெட்டினால் வெள்ளி, தட்டினால் தங்கம், இடித்தால் இரும்பு என்பதாக திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பேசி வந்தார்களே, இவற்றை கண்டுபிடித்து எடுக்க திராவிட முன்னேற்றக் கழகம் முயற்சிக்குமா?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* ஆட்சியில் உள்ளவர்கள் வெட்டினால் வெள்ளி, தோண்டினால் தங்கம், இடித்தால் இரும்பு என்று சொன்னதில் தவறு இல்லை. கேள்வியின் முன் பகுதியில் நல்ல கருத்தைச் சொன்னார்கள். பின்னால்தான் அதன் தரத்தைக் குறைத்துவிட்டார்கள். தமிழ்நாட்டில் மட்டும் அல்ல, இந்தியாவிலேயே கனிப்பொருள்கள் கிடைக்கக்கூடிய வாய்ப்பைப்பற்றிய ஆராய்ச்சியை மிகக் குறைவாக எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஐ.நா. சபையின் உதவியுடன் ருஷ்ய எக்ஸ்பர்ட்டுகளை வைத்து இப்போதுதான் புதிதாக ஆராய்ச்சி தொடங்கப்பட்டிருக்கிறது. முதலில் நாடு முழுவதும் எந்த எந்தப் பகுதியில் என்ன என்ன கிடைக்கக்கூடும் என்கிற பொதுச்சர்வே நடைபெறுகிறது. பிறகு எந்த எந்தப் பொருள்கள் எந்த எந்தப் பகுதியில் கிடைக்கும் என்கிற ஆராய்ச்சி நடைபெறும்—அதன்பின்னர் அந்த அந்தப் பகுதியில் எந்த எந்த அளவுக்கு அந்தப் பொருள் கிடைக்கும் என்கிற ஆராய்ச்சி இயந்திரங்களைக்கொண்டு தோண்டி எடுத்து நடத்தப்படுகிறது. ஆகவே, இந்த விரிவான ஆராய்ச்சி நடைபெற்றால் நிச்சயம் நாங்கள் நினைக்கிறபடி அதிகமான கனி வளத்தைப் பெற முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.





*Products of Footwear Production-cum-Training Units*

* 117 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Isdustries be pleased to state—

(a) Whether the products of the Footwear Production-cum-Training Units in the State are exported to foreign countries ; and

(b) if so, the names of such countries?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

*திரு. ஏ.எம். இராஜா:* தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில்லை என்று கூறினார்கள். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படாததற்குக் காரணம் தரக் குறைவா? அல்லது போதுமான அளவில் உற்பத்தி செய்ய முடியாத குறையா? எப்படியிருப்பினும் இனியாகிலும் ஏற்றுமதி செய்ய முயற்சிகளை அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* கனம் அங்கத்தினர் தம்முடைய கேள்வியில் " whether the products of the Footwear Production-cum-Training Units in the State are exported to foreign foreign countries என்றே கொடுத்திருக்கிறார்கள். ஆகவே ஏற்றுமதி செய்யவேண்டுமென்பதுதான் நோக்கம். உற்பத்தி பெருகி தரமும் உயருமானால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வாய்ப்பு ஏற்படும்.

*திரு. சி. வீரமணி :* பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாநிலத்தில் கையினால் செய்யப்படும் மிதியடிகளின் தேக்கத்தினால் இத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் அருந்ததியர் சமுதாயம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த பாதிப்புக்கு முக்கிய காரணம் பாட்டா போன்ற பெரிய நிறுவனத்தார்கள் அதிக அளவில் உற்பத்தி செய்வதுதான். ஆகவே, கைத்தறித் துணிக்கு ஆதரவு அளிக்க சப்சிடி வழங்கப்படுவதுபோல கையினால் செய்யும் மிதியடிகளுக்கு சப்சிடி வழங்கி, பொதுமக்கள் மத்தியில் விளம்பரத்தை ஏற்படுத்தி, ஏழை அருந்ததியர் சமுதாயத்தைக் காக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* பெரிய தொழிற்சாலைகளிலும் நம் தொழிலாளர்கள்தான் வேலை செய்கிறார்கள். அவர்களுடைய வேலை பாதிக்கும்படியாக அரசாங்கம் எதையும் செய்யக்கூடாது. எனினும் இந்தத் தொழிலாளர்களுக்கும் அரசாங்கம் நவீன கருவிகளை வழங்க இப்போதே நடவடிக்கை எடுத்திருக்கிறது. கும்பகோணத்தில் ஒரு கண்காட்சியில் இந்த நவீன கருவிகளைப் பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. கையால் மிதியடி தயாரிப்பவர்களுக்கு இப்போதே அரசாங்க சார்பில் நவீன கருவிகள் எல்லாம் வழங்கப்பட்டு வருகின்றன.

[1969 ஆகஸ்ட் 25

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, மத்திய அரசு பல வெளிநாடுகளுக்கு நம்முடைய நாட்டிலிருந்து மிதியடிகளை அனுப்புவதற்கு ஒப்பந்தம் செய்துகொண்டிருப்பதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வந்து இருக்கின்றன. இந்தியாவிலேயே, உத்திரப்பிரதேசம், தமிழகம் ஆகிய இந்த இடங்களில்தான் தோல் தொழில் நல்ல வளர்ச்சியை அடைந்திருக்கிறது. எனவே தமிழ் நாட்டில் இந்தத் தொழிலை மேலும் அபிவிருத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அனுமதி கொடுக்கவேண்டுமென்று கேட்க நம்முடைய அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தாலுங்கூட நாம் இங்கே உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலைகள் சிறிய அளவிலேதான் இருக்கின்றன. எனவே நம்முடைய தேவைக்கு உற்பத்தியானது சரியாக இருக்கும். நாம் இங்கே Footwear Production-cum-Training Units தான் வைத்து இருக்கிறோம்.

### தமிழ்நாட்டிலுள்ள பப்ளிக் டிரஸ்டுகள்

* 118 வினா.—திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு அற நிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் தற்போதுள்ள பப்ளிக் டிரஸ்டுகளின் எண்ணிக்கை என்ன ?

(இ) இவற்றிற்கு உடைமையாக உள்ள மொத்த நிலம் எவ்வளவு, மாவட்டவாரியாக ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) பத்தாயிரத்தி தொளாயிரத்தி மூன்று.

(இ) மாவட்ட வாரியாக பப்ளிக் டிரஸ்டுகளின் உடைமையாக உள்ள மொத்த நிலம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | திருச்சிராப்பள்ளி | 45,944 ஏக்கர் |
| 2. | தஞ்சாவூர் | 89,190 ,, |
| 3. | கோயமுத்தூர் | 11,738 ,, |
| 4. | நீலகிரி | 429 ,, |
| 5. | சேலம் | 3,186 ,, |
| 6. | தர்மபுரி | 3,424 ,, |
| 7. | செங்கற்பட்டு | 8,327 ,, |
| 8. | வட ஆர்க்காடு | 4,556 ,, |
| 9. | தென் ஆர்க்காடு | 21,931 ,, |
| 10. | மதுரை | 11,880 ,, |
| 11. | இராமநாதபுரம் | 25,853 ,, |
| 12. | திருநெல்வேலி | 32,928 ,, |
| 13. | கன்னியாகுமரி | 1,309 ,, |
| | மொத்த நிலம் | 2,58,699 ஏக்கர் |



1969 ஆகஸ்ட் 25]

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவா அவர்களே, இந்த பப்ளிக் டிரஸ்டுகள் சொந்தமாக 20 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேலே சாகுபடி செய்யக்கூடாது என்று இருக்கிற சட்டம் கறாராக அமல் செய்யப்படுகிறதா ? குத்தகை பாக்கி இருக்கக்கூடிய குத்தகைதாரர்களை நிலத்திலிருந்து வெளியேற்றக்கூடாது என்று அரசாங்கம் தக்க உத்திரவு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : டிரஸ்ட் நிலங்களிலே டெனன்ட்டாக இருப்பவர்களை நிலங்களைவிட்டு வெளியேற்றக் கூடாது என்று டெனன்ட்ஸ் ப்ரொடெக்ஷன் ஆக்டிலே இருக்கிறது. வெளியேற்றப்படவில்லை என்றுதான் நினைக்கிறேன். ஏதாவது குறையிருந்தால் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

THIRU K. VINAYAKAM : Is it a fact that trusts of this kind are exempted from the Land Ceiling Act?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : டிரஸ்ட் நிலங்களிலே 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் விவசாயம் செய்யலாம் என்று இருக்கிறது. மிச்சமுள்ள நிலங்களை அந்தந்த டெனன்ட்டுகளே விவசாயம் செய்யலாம். அந்த டெனன்ட்டுகள் 5 ஏக்கர்தான் விவசாயம் செய்யலாம். பாக்கியுள்ள நிலங்களை புது டெனன்ட்டுக்கு விடலாம் அல்லது ஃபார்மிங் சொசைட்டிக்கு விடலாம் என்று இருக்கிறது.

### அரசுப் பணியாளருக்கு வீட்டு வசதி

* 119 வினா.—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட்டங்கள் தோறும் (taluks) வீட்டுவசதிக் கழகத்தால் அரசுப் பணியாளர்களுக்கு வீடு கட்டித் தரும் செயற்குறிப்பினை அரசு வகுத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போதிருந்து அமல் படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) ஆம்.

(இ) குடியிருப்பு இடவசதி மிக நெருக்கடியாக இருக்கின்ற வட்டத் தலைமையிடங்களில், உள்ள நிதி வசதியைப் பொறுத்தும் மாவட்டத் தலைமை இடங்களுக்கு வேண்டிய வசதிகளை ஓரளவுக்குப் பூர்த்தி செய்த பின்னரும் மத்திய அரசின் வாடகைக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் மாநில அரசு ஊழியர்களுக்கு புது குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

திரு. கொளத்தூர் கோதண்டம் : இதுபோன்று எந்தெந்த மாவட்டத் தலைமை இடங்களில் எந்தெந்த வட்டத் தலைமை இடங்களில் குடியிருப்பு வீடுகள் அரசாங்க ஊழியர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

[1969 ஆகஸ்ட் 25

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தின்கீழே பல மாவட்டங்களிலே வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டு இருக்கின்றன. ஆர்.டி.ஓ. டிவிஷன்களிலும் கட்டப்பட்டிருக்கின்றன. தாலூகா ஹெட்குவார்ட்டர்ஸ்களிலேயும் கட்டப்பட்டிருக்கின்றன. இதிலே மூன்று பிரச்னைகள் இருக்கின்றன. ஒன்று பண வசதி இருக்கவேண்டும். மாவட்டத் தலைநகரங்களிலே எல்லாம் போதுமான அளவுக்கு வீடுகள் கட்டப்பட்டிருக்கவேண்டும். அதற்குப் பிறகு தாலூகாக்களிலே வீடுகளுக்குக் கிராக்கி இருந்தால் எடுத்துக்கொள்கிறார்கள். பல இடங்களில் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. பல இடங்களில் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். பல இடங்களில் கட்டுவதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

Name of place and number of houses constructed and alloted already to Government servants :—

| *Place.* | *Total Number of (Flats)* |
|---|---|
| Madras City | 1040 |
| Coimbatore City | 336 |
| Salem | 96 |
| Sengulam (Tiruchi) | 360 |
| Kajamalai (Tiruchi) | 306 |
| Devanampattinum, Cuddalore | 60 |
| Madurai | 204 |
| Palayamcottai | 306 |
| Thanjavur | 210 |

Name of places and number of houses under construction :—

| *Place.* | *Total Number of Flats.* |
|---|---|
| Kodambakkam-Pudur | 24 |
| Peters Road scheme | 160 |
| Foreshore Estate | 42 |
| *Coimbatore district* | |
| Kavundampalayam | 94 |
| Gandhipuram | 84 |
| | (64 flats are completed). |
| *Vellore* (North Arcot district) | 24 |
| *Salem* (Judges Bungalow) | 40 |
| *Dharmapuri* | 82 |
| *Chingleput district*— | |
| Kancheepuram Phase I | 56 |
| ,, Phase II | 152 |



1969 ஆகஸ்ட் 25]

Name of places and number of houses proposed to be constructed with reference to availability of funds :—

| *Place.* | *Number of Flats.* |
|---|---|
| Kavundampalayam (Coimbatore Phase II) | 808 |
| Church Hill area, Ooty | 32 |
| Dharmapuri | 20 |
| Salem | 292 |
| Thanjavur (Phase II) | 384 |
| Cuddalore | 375 |
| Ramanathapuram | 68 |
| Singampuneri (Ramnad district) | 20 |
| Tirupathur | 28 |
| Sivaganga | 44 |

திரு. கே. பி. எஸ். மணி : ஐயா, சர்க்கார் சிப்பந்திகளுக்கு வீட்டுவசதியில்லாத காரணத்தாலே அவர்கள் மனைகளை வாங்கி வீடுகள் கட்டிக்கொள்ளக்கூடிய வசதிகள் இல்லாத காரணத்தால் பலவித நிர்ப்பந்தத்திற்கு ஆளாகிற நிலைமையை உத்தேசித்து அரசாங்கத்திடம் அதற்காக போதுமான பொருளாதார வசதியில்லாததால் கூட்டுறவு காலனிகள் மூலம் அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கலந்துபேச அரசாங்கம் முயற்சியெடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : கூட்டுறவு வீடு கட்டும் சொஸைடிகள் மூலமாக பல இடங்களிலே சொஸைடிகள் ஏற்படுத்தி கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி ஏற்படுத்தினால் அரசாங்கம் உதவிசெய்யத் தயாராக இருக்கிறது. பத்து அல்லது 20 உறுப்பினர்கள் ஷேர் போட்டு சேர்ந்து ரிஜிஸ்டர் செய்துகொண்டு மனுப்போட்டால் வீடு கட்டுவதற்குப் பணம் வழங்கப்படுகிறது.

மதுரை வீட்டுவசதி வாரியத்தால் ஒதுக்கப்பட்ட வீட்டு மனைகள்

* 120 வினா—திரு. கரு. சிமைச்சாமி : மாண்புமிகு அற நிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை வீட்டு வசதி போர்டு கொடுக்கும் அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகளின் கிரயம் ஒரு மனை ரூ. 5,000-லிருந்து ரூ. 6,500 ஆக உயர்த்தப்பட்டதா ?

(இ) ஆம் என்றால், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) ஆம். மனையின் விலை ரூ. 5,000-லிருந்து ரூ. 6,500 ஆக உயர்த்தப்பட்டது.

(இ) இந்த நிலங்களின் உடைமையாளர்கள் கொடுத்த விண்ணப்பங்கள் மீது, கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்காகக் கூடுதல் வீதத்தில் இழப்பீடு கொடுக்க வேண்டுமென்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இதன் காரணமாகக் கொடுக்க வேண்டிய

இழப்பீட்டுத் தொகை கூடியதால் நிலத்தின் மதிப்பு ஏறத்தாழ இரு மடங்காக உயர்ந்துள்ளது. நீதிமன்றம் கூடுதல் இழப்பீடு வழங்கியதன் காரணமாக மாநில வீட்டு வசதி வாரியத்தின் ஒதுக்கீட்டுக்குழு 22—2—1968 அன்று கூடியபோது மனை ஒன்றின் விலையை ரூ. 5,000-த்திலிருந்து ரூ. 6,500 ஆக உயர்த்த முடிவு செய்துள்ளது.

**திரு. கரு. சீமைச்சாமி :** சார், 5,000-லிருந்து 6,500 ஆக உயர்த்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். சமீபத்திலே வீடு ஒதுக்கப்பட்டவர்களுக்கு கிரவுண்டை வாங்கினவர்கள் மேலும் 1,500 கட்டவேண்டுமென்று மதுரை வீட்டு வசதி போர்டு கேட்டிருக்கிறது. ஏற்கனவே 6,500 கொடுத்ததுபோக இப்பொழுது 1,500 இன்னும் கேட்பதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** 5,000 என்பதோ 6,500 என்பதோ முடிவான விலையல்ல. மேலும் உயர்த்தப்படலாம். இது டென்டேடிவ்தான். நிலத்தை அக்வயர் பண்ணியபொழுது அதிகாரிகள் நிலத்திற்கு மதிப்புப்போடுகின்றபொழுது அக்கம் பக்கத்து நிலத்தின் பத்திரங்களை வைத்துப் போடுகிறார்கள். நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் கோர்ட்டிற்குச் சென்று பணம் போதாது என்று கேஸ் போடுகிறார்கள். அதனால் பணம் அதிகமாக கொடுக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. இதன் காரணமாக 62,22,410 ரூபாய் அதிகமாகிறது. அதனால் மொத்தத்தில் 1,22,50,000 ரூபாய் கொடுக்கவேண்டியதாயிற்று. டபுள் தி அமௌண்ட் கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டால் அதிகமாக 1,500 ரூபாய் வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நிலவுடைமையாளர்களிடமிருந்து எக்கர் ஒன்றுக்கு எவ்வளவு வீதம் அக்வையர் செய்யப்பட்டது? அந்த நிலத்தைப் பகிர்ந்து கொடுக்கும்போது இவ்வளவு அதிகமாக ஐயாயிரம், ஆறாயிரம் என்ற அளவுக்கு இருக்கக் காரணம் என்ன? நிலத்தை வாங்கியதற்கும் அதைப் பங்கிட்டுக் கொடுப்பதற்கும் இடையிலே இவ்வளவு வித்தியாசம் இருப்பதற்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** நிலம் வாங்குகின்றபோது அதற்குண்டான விலையை லாண்ட் அக்விசிஷன் ரூல்ஸ்படி நிர்ணயம் செய்கிறார்கள். பிறகு மேடு பள்ளத்தைத் தூர்த்துச் சமப்படுத்துகிறார்கள்; ரோடு போடுகிறார்கள்; பாலம் கட்டுகிறார்கள்; லைட் வசதி ஏற்படுத்திக் கொடுக்கிறார்கள்; குடிதண்ணீர் வசதி செய்கிறார்கள்; ஸ்கூல் போன்ற வசதிகளைச் செய்கிறார்கள். இவ்வளவும் செய்து கொடுக்கும் காரணத்தால் டெவலப்மென்ட் சார்ஜஸ் அதிகமாகப் போகிறது. ஆகவே, விலையும் அதிகமாகிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** எக்கர் ஒன்று சராசரி என்ன விலைக்கு வாங்கப்பட்டது?





**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு விலைக்கு வாங்கியிருக்கும் காரணத்தால் இவ்வளவு என்று உறுதியாகச் சொல்ல முடியாது.

அரசு தரிசு நிலங்கள்.

* **103 வினா.—திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை வட்டம் கிழக்குப் பஞ்சாயத்துக்கு உட்பட்ட பொட்டப்பனையூரில் சர்க்கார் தரிசு நிலத்தில் மரம் வளர்ப்புக்காக எடுக்கப்பட்ட நிலங்கள் எத்தனை ஏக்கர்கள்?

(இ) அதற்கான செலவு தொகை எவ்வளவு?

(உ) எத்தனை மரங்கள் நடப்பட்டன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) 50 ஏக்கர்கள்.

(இ) ரூபாய் 6,505.05.

(உ) 23,450 மரங்கள்.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** அந்த இடத்தில் என்ன மரங்கள் வைக்கப்பட்டன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பனைமரம்; அக்கேஷியா அண்டு அரபிகா.

**திரு. எம். பூபதி :** தலைவர் அவர்களே, நடப்பட்ட மரங்களில் எத்தனை தற்சமயம் உயிரோடு இருக்கின்றன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நல்ல கேள்வி. 23,450 மரங்களில் ஆயிரம் உயிரோடு இருக்கின்றன.

* **104 வினா.—திரு. இரா. மாணிக்கவாசகம் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை வட்டம், 24, வீரபாண்டி பஞ்சாயத்து சின்னத் தடாகம் பகுதியில் தரிசாக உள்ள சுமார் ஆயிரம் ஏக்கர் நிலத்தை நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வழங்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கோவை தாலுகா 24 கெ. வீரபாண்டி கிராமத்தில் ஆனைக்கட்டி மலைப்பகுதியில் மொத்தம் 6,554.61 ஏக்கர் தீர்வை ஏற்படாத தரிசு புறம்போக்கு பூமி உள்ளது. இதில் 5,800 ஏக்கர் பூமி காட்டு இலாகாவின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. மீதமுள்ள 754.61 ஏக்கர் பூமியில் 502.78 ஏக்கர் பூமி கல்லாங்குத்தாகவும் சரிசமமில்லாமலும் காட்டு ஓடையாகவும் இருப்பதால் விவசாயத்திற்கு ஏற்றதாக இல்லை. எஞ்சியுள்ள 251.83 ஏக்கர் பூமி மட்டும் 92 பேருடைய ஆக்கிரமிப்பில் இருந்து விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. அவைகளை ஆக்கிரமிப்புதாரர்களுக்கே பட்டா செய்வதற்காக நடவடிக்கைகள் கோவை தனித் தாசில்தார் செய்து வருகிறார். மேலும் இந்தப் பகுதியில் விவசாயத்துக்கு ஏற்ற வேறு புறம்போக்கு பூமிகள் ஒன்றும் இல்லை.

### Survey of lands

*105 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Government is proposing to introduce modern methods of survey of lands in the State;

(b) if so, the details of the new methods of survey; and

(c) how soon would they be introduced?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

THIRU K. VINAYAKAM: Whereas it has been stated that the survey methods adopted by our Government are most archaic in that they do not provide all the details necessary as far as survey records are concerned, and whereas this new method has been experimented in other States and foreign countries also, will the Government think of introducing cadestral method of survey?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: The present system is done by diagonal and offset method. Formerly the triangular method was adopted. Cadestral survey is only initial survey. We have no such proposal pending before the Government.

THIRU K. VINAYAKAM: Whereas the survey records reveal only the extent, boundaries, etc., and does not reveal the ownership of the land, will the Government order that the name of the owner or the present occupier or the encroacher whoever is in possession of the land should also be included in the suvey records and will the Government seriously consider my suggestion?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** யார் நில உரிமையாளர்கள் என்பதற்கான தஸ்தாவேஜுகள், பதிவேடுகள் இப்போதே இருக்கின்றன. சர்வேயில் இருந்து தீரவேண்டுமென்று இல்லை. யாருடைய பொசஷனில் இருக்கின்றன என்பதற்கான நிலைமைகளும் ஆராயப்பட்டு வருகின்றன. சாகுபடிதாரர்களைப் பொறுத்தவரை ரெக்கார்டு ஆப் டெனன்சி சட்டம் நிறைவேற்றப்பட்டிருப்பதால், யார் யார் எந்த நிலத்தில் இருக்கிறார்கள் என்பதற்கான ரெக்கார்டுகள் இருக்குமாதலால் அது சர்வேயிலும் இடம் பெறவேண்டுமென்று சொன்னால் அதற்காக எடுத்துக் கொள்ளக்கூடிய வேலை அவசியமாகவோ பொருத்தமாகவோ இல்லை.

THIRU B. VENKATASWAMY: Sir, a majority of the civil and criminal cases arise only from boundary disputes. So will this Government come forward to fix up the stones properly and check them every year to avoid such civil and criminal cases?

**மாண்புமிகு திரு. கே.ஏ. மதியழகன்:** எல்லா கிரிமினல் வழக்குகளும் இதனால்தான் வருகிறது என்பதை ஒத்துக்கொள்ள முடியாது. சில வழக்குகள் வரலாம். கல்லும் சில இடங்களில் சரியாக இல்லாமல் இருக்கக்கூடும். எந்த அளவுக்குத் தவறாக இருக்கிறதோ அதைத் திருத்தி அமைக்க அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### (2) அவையுரிமைக் கேள்வி.

திரு. பி. ஜி. கருத்திருமன் மீதும், 'நவசக்தி' நாளிதழ் மீதும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் ராஜன் அவர்கள் 23—8—1969 அன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மீதும், அவருடைய அறிக்கையை வெளியிட்ட நவசக்தி நாளிதழ் மீதும் ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்பினார்கள். அவருடைய வாதத்தையும், அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்தையும், அதற்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்த விளக்கத்தையும் கேட்டு நான் இன்று தீர்ப்புக் கூறுவதாகக் கூறியிருந்தேன். அது பற்றிய என்னுடைய தீர்ப்பை இப்போது கூறுகிறேன்.

20—8—1969 நாளிட்ட நவசக்தி நாளிதழில், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பெயரில் ஓர் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதில் பேரவைத் தலைவர் எந்தத் தீர்மானத்திற்கு அனுமதி தர மறுத்தாரோ அது வெளியிடப்பட்டுள்ளது. எடுத்துக்கொள்ளுவதற்கான என் இசைவை அறையில் கூட அளிக்காத நிலையில், இசைவு அறையில் அளிக்கவில்லை என்பதை 19–8–1969 அன்று அவையிலும் தெளிவாக்கிவிட்ட நிலையில், அறையில் ஒப்புக்கொண்டு அவையில் மறுத்து விட்டார் என பேரவைத் தலைவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

19–8–1969 அன்று, இவ் அவையில் எழுப்ப அனுமதி மறுக்கப்பட்ட ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் இரண்டு; அவற்றுள் ஒன்று, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்களுடையது; அவ்வாறாகவும், ஆளுங் கட்சிக்கு ஆதரவாக உள்ளவர்கள் தீர்மானத்தை அவைக்குக் கொண்டுவந்து நிராகரிக்கிறார்; என் தீர்மானத்தை மட்டும் அறையிலேயே நிராகரிக்கிறார் என பேரவைத் தலைவர் மீது நடுநிலைமை மீறிய குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சபையின் மரபு கைவிடப்படும் நிலை ஏற்படக்காணும் எந்த உறுப்பினர்க்கும் அதைப் பேரவைத் தலைவர்க்குச் சுட்டிக்காட்டும் உரிமையிருக்க, அதையொட்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவற்றைச் சட்டசபை நிகழ்ச்சியிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று கேட்டிருக்க, அதைப் பொறுப்பற்ற போக்காகும் என்று குற்றம் சாட்டியுள்ளதோடு, பேரவைத் தலைவரும், ஆளுங் கட்சியின் அப் பொறுப்பற்ற போக்கிற்குத் துணை போகிறார் என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

[பேரவைத் தலைவர்] [1969 ஆகஸ்ட் 25

இந்தியப் பாராளுமன்றம், வழிகாட்டியாக ஏற்றுக்கொண்டிருக்கும் சர். தாமஸ் எர்ஸ்கின் மே அவர்களின் பாராளுமன்ற நடைமுறை விதிகள் பேரவைத் தலைவர் செயல் பற்றியோ, அவர்கள் அளித்த தீர்ப்பு பற்றியோ விவாதிப்பது கூடாது, குறை கூறக்கூடாது எனத் தெளிவாகக் கூறுகின்றன.

ஆனல் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களோ பேரவைத் தலைவர்மீது இல்லாத பெரிய பெரிய குற்றங்களைச் சாட்டியுள்ளார்.

மாண்புமிகு இப் பேரவை உறுப்பினர்களுக்கு வழங்கப் பட்டிருக்கும் உரிமையைப் பழித்துள்ளார்.

மேலும் நம் சட்டப் பேரவை விதி 68-எ பேரவைத் தலைவர் அனுமதி பெருத எதுவும் வெளியிடப்படுதல் கூடாது எனக் கூறுகிறது. அனுமதி மறுக்கப்பட்டவற்றை வெளியிடுவதால் பேரவைத் தலைவருக்கு உண்டாகும் இடர்ப்பாட்டினைச் சுட்டிக்காட்டி இப் பேரவையின் மரபையும் கண்ணியத்தையும் பலரும் போற்றக் காப்பாற்றிய முன்னுள் அவைத் தலைவர் பெருமதிப்பிற்குரிய டாக்டர் கிருஷ்ண ராவ் அவர்கள் 13—2—1953-ல் பேரவைத் தலைவரால் மறுக்கப்பட்டவையும் வெளியிடப்படுதல் கூடாது எனத் தீர்ப்பளித்துள்ளார்.

ஆகவே இந்த அறிக்கையை வெளியிட்டதால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களும் அந்த அறிக்கையைத் தம்முடைய பத்திரிகையில் வெளியிட்ட 'நவசக்தி' ஆசிரியரும் வெளியிடுவோரும் உரிமை மீறிய குற்றம் புரிந்துள்ளனர் என்பது தெளிவாகப் புலனுகிறது.

ஆனல், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அந்த அறிக்கையை எந்தவித உள்நோக்கத்தோடும் வெளியிடவில்லை எனத் தெரிவித்து,

"With reference to the privilege matter raised against me to-day and the statement made by me and published in the Tamil Daily 'Navasakthi', dated 20th August 1969, I am to state that the statement was not made by me with any motive whatsoever."

எனக் கடிதம் எழுதியுள்ளமையால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் செயல், உண்மையில் உரிமை மீறிய செயலாகும் என்ருலும், மேல் நடவடிக்கை எதுவுமின்றி இந்த அளவோடு விட்டு விடலாம் எனக் கருதுகிறேன்.

'நவசக்தி' நாளிதழ்மீது, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல்ராஜன் அவர்கள் எழுப்பிய உரிமைக் கேள்விக்கு, பேரவைத் தலைவர் அனுமதி பெருத, பேரவைத் தலைவரால் அனுமதி மறுக்கப்பட்ட எதையும் வெளியிடக்கூடாது என்று தெளிவாக உணர்ந்திருந்தும்கூட அதை வெளியிட்டிருக்கிற நவசக்தி 'நாளிதழ்' தன் வருத்தத்தை இதுவரையில் தெரிவிக்கவில்லை என்ற காரணத்திஞல், அதைத் தெரிவிக்குமென்று எதிர்பார்த்து அதன் மீது அளிக்க வேண்டிய தீர்ப்பை நான் நிறுத்திக் கொள்கிறேன்.



1969 ஆகஸ்ட் 25]

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** உள்நோக்கம் எதுவுமில்லை என்று கூறியிருக்கிறேன். என் பொறுப்பின்மீதுதான் அந்தப் பத்திரிகை அதை வெளியிட்டிருக்கிறது. ஆகவே, அதன் மீது உள்ள நடவடிக்கையையும் பூர்ணமாக விடப்பட வேண்டும். இல்லை, அதன் மீது மட்டும் தனியாக உரிமைப் பிரச்சினை எழுப்புவது என்ருல் நான் என் கடிதத்தை வாபஸ் வாங்க வேண்டிய நிலையில் இருக்கிறேன். அதை வெளியிட்டதில் எனக்கு உள்நோக்கம் எதுவுமில்லை என்று கூறியிருக்கிறேன். ஆகவே, பூர்ணமாக அதன் மீதுள்ள நடவடிக்கையையும் விட்டு விட வேண்டும். இல்லாவிடில் என் கடிதத்தை வாபஸ் வாங்கிக் கொள்கிறேன். உரிமைப் பிரச்சினை இருக்கிறது என்ருல் எடுத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க் கட்சித் தலைவரவர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் தேவை இல்லை என்று பேரவைத் தலைவர் அறிவித்து விட்டார். அப்படி அறிக்கை வெளியிடுவது எவ்வளவு பெரிய உரிமை மீறிய செயல் என்பதை டாக்டர் கிருஷ்ண ராவ் அவர்கள் கொடுத்துள்ள தீர்ப்பிலிருந்து படித்துக் காட்டுவது முறையாக இருக்கும் எனக் கருதுகிறேன்..

. . . . "If a Member or newspaper has no right to publish a question or amendment before its admission, it follows that they cannot publish a question or amendment when it has been disallowed. It would be too much to contend that the mere fact that the Speaker has disallowed a question or a resolution or amendment, may be on some technical ground would debar a Member from giving a publicity to his well-ment efforts in the public cause. Such a publication of disallowed questions, resolutions or amendments by the Member who had given notice of them necessarily involves also the contempt of the Speakers authority inasmuch as it amounts to a resort to the public Press for ventilation of the grievances arising from the disallowance of the question, resolution or amendment. It places the Speaker in difficult circumstances, for the Speaker himself cannot rush to the Press in defence of his disallowance. It is therefore necessary that a wholesome convention should be established in this House as in the House of Commons that Members should not publish or countenance the publication in the Press of questions or resolutions or amendments not admitted.

எனத் தெளிவாகக் கூறியிருக்கிருர்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எந்த உள்நோக்கத்தோடும் அந்த அறிக்கையை வெளியிடவில்லை என்று சொன்ஞர்கள். அதையொட்டி எந்தவிதமான நடவடிக்கையும் தேவையில்லை என்று நான் முடிவு எடுத்திருக்கிறேன். அதேபோல் எந்த அறிக்கையாக இருந்தாலும் இந்தப் பேரவையின் உரிமையை மீறுகின்ற நிலையில் எந்தப் பத்திரிகை வெளியிட்டாலும் அது உரிமையை மீறிய செயல் என்பதை அந்தப் பத்திரிகை உணரவேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எந்தவித உள்நோக்கத்தோடும் அதை வெளியிடவில்லை என்று சொன்ஞலும் அப்படி ஒரு அறிக்கை அவர்களிடமிருந்து வருவது இந்த மன்றத்திற்கு ஒரு மதிப்பாகவும், பெருமையாகவும், ஒரு

மரபாகவும் இருக்கும் என்ற காரணத்தினுல்—உரிமைக் குழுவிற்கு அனுப்புவதாக இல்லை—அதன் மீது தீர்ப்பளிப்பதை நிறுத்தி வைத்திருக்கிறேன் என்றுதான் சொல்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** வெளிநடப்பு நடத்தினேம். அதற்குக் காரணம் கொடுக்க வேண்டும் என்று விஷயத்தை மட்டும் சொல்லியிருக்கிறேன். எந்தவிதமான உள்நோக்கமும் கிடையாது. அப்படிச் சொல்லும்போதும், சபாநாயகர் அவர்களின் தீர்ப்புக்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. அப்படித் தெரிவிக்க நாங்கள் தயாராயில்லை. அதை ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். There is motive behind it. என்று சொல்லியிருக்கிறேன். அதை ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். நான் கையெழுத்துப் போட்டுக் கொடுத்ததைத்தான் அவர்கள் பிரசுரம் செய்திருக்கிருர்கள். ஆகவே அவர்களுக்கும் அதில் எந்தவிதமான உள்நோக்கமும் இருக்க முடியாது. அதற்குப் பூர்ண பொறுப்பு என்னுடையதுதான். ஆகவே உள்நோக்கம் இல்லை என்று சொல்லும்போது அது அந்தப் பத்திரிகையைச் சேர்ந்ததுதான். அப்படியிருக்க, உங்களை விட்டு விடுகிறேன். ஆனல் அதை ஒரு கை பார்த்துக்கொள்கிறேன் என்று இருக்கக் கூடாது. சபையின் கண்ணியத்தையும், மதிப்பையும் பற்றி சிந்தித்துத்தான் சொன்னேன். தாங்கள் கொடுக்கும் தீர்ப்புக்கு எப்போதும் நாங்கள் தலைவணங்குகிறேம். சபையில் கொண்டுவர சந்தர்ப்பம் இல்லை என்று தான் சொன்னேனே தவிர உள்நோக்கம் எதுவுமில்லை. ஆகவே, அதையும் விட்டுவிடுவதுதான் கண்ணியமாக இருக்கும் என்று உங்களுக்கு நான் சிபாரிசு செய்கிறேன்.

### 3. கவன ஈர்ப்பு.

### மூடப்பட்டுள்ள பஞ்சாலைகளைத் திறக்காததால் தொழிலாளரின் வேலையின்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு காரியத்தை திரு. பூபதி அவர்கள் மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

***திரு. எம். பூபதி:** தலைவர் அவர்களே, "மூடிக் கிடக்கின்ற பஞ்சாலைகள் 27-ல் 5 பஞ்சாலைகளையாவது உடனடியாகத் திறக்க நடவடிக்கை எடுப்பதாகத் தமிழக சர்க்கார் கூறிய வாக்குறுதி காலங் கடந்து விட்டதால் 15,000 தொழிலாளர்கள் வேலை வாய்ப்பிழந்து வாடிக் கிடக்கும் பொதுமுக்கியத்துவமும் அவசரமும் வாய்ந்த விஷயத்தை" நான் மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, இம் மாநிலத்தில் மீண்டும் செயல்படும் நிலையில் போதிய அளவு வளமுள்ள மூடப்பட்ட ஆலைகளை எடுத்து நடத்துவதற்காக தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தை இந்த அரசு நியமித்துள்ளது.



தொழில்கள் (மேம்படுத்துதல்-முறைப்படுத்துதல், சட்டத்தின் விதிகளின்படி கோயம்புத்தூரில் உள்ள 5 ஆலைகளை எடுத்து நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும்படியும், இந்த ஆலைகளுக்காக தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தை அதிகாரமளிக்கப் பட்ட கட்டுப்பாடு நிறுவனமாக நியமிக்கும்படியும் மாநில அரசு இந்திய அரசைக் கேட்டுக் கொண்டது. இந்த 5 ஆலைகளாவன :—

(அ) கம்போடியா ஆலை

(இ) கஸ்தூரி ஆலை

(உ) கிருஷ்ணவேணி ஆலை

(எ) ஓம் பராசக்தி ஆலை

(ஐ) ஸ்ரீரங்க விலாஸ் ஆலை

இவை அனைத்தும் கோயம்புத்தூரில் அமைந்துள்ளன. ஓம் பராசக்தி ஆலையை மேற்கொள்ளுவதற்காக, இந்திய அரசிடமிருந்து அண்மையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. ஏனைய நான்கு ஆலைகளையும் மேற்கொள்ளுவதற்கான ஆணைகள் விரைவில் எதிர் பார்க்கப்படுகின்றன.

தொழில்கள் (மேம்படுத்துதல்-முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் ஆலைகளை மேற்கொள்ளவும், 1967-ம் ஆண்டு பஞ்சாலை நிறுவனங்கள் (நிறுவனங்களை நிர்வகித்தல், கலைத்தல், மறுபடியும் அமைத்தல்) சட்டத்தின் கீழ் நடத்துவதற்குமான நடைமுறை தொடக்க வேலைகளை முடிப்பதற்கான பஞ்சாலைக் கழக நிலையிலும் அரசு அளவிலும் விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆலைகளைத் திரும்பத் தொடங்குவது குறித்து, ஊதியங்கள், வங்கிக்குச் செலுத்தவேண்டிய நிலுவைகள், பணிச்சுமைகள் முதலியவற்றை முடிவு செய்வதற்காகப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. பஞ்சு வாங்குதல், தேவையான தொழில் நுட்பப் பணியாளர்களை வேலைக்கு அமர்த்தல் ஆகியவற்றிற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.

தொழில் உறவுகளையும் நிதிப் பொறுப்புக்களையும் குறித்த பிற சட்டங்களினுல் இந்த ஆலைகளின் நிர்வாகம் கட்டுப்படுத்தப் படாமலும் இந்த ஆலைகள் நன்கு திறம்படச் செயல்படுவதற்கு இடர்ப்பாடு ஏற்படாத வகையிலும் இந்த ஆலைகளை நன்கு நிர்வகிப் பதற்காக இந்த ஆலைகளில் கடந்த கால பொறுப்புக்கள் அனைத் தையும் (வங்கிகள் வழங்கிய கடன்கள் நீங்கலாக) குறிப்பிட்ட கால அளவுக்கு செல்திறனற்றவையாகச் செய்ய அரசுக்கு அதிகார மளிப்பது அவசியமெனக் கருதப்படுகிறது. இந்த ஆலையின் செலவில் 51 சதவிகிதத்தை மேற்கொள்ள இசைந்துள்ள தேசிய பஞ்சாலை நிறுவனம் இந்த ஆலைகளை மேற்கொள்ளுமுன் இத் தகைய சட்டமொன்று இயற்றப்பட வேண்டுமென்ற நிபந்தனையை விதித்துள்ளது. இது குறித்த மசோதா ஒன்று சட்ட மன்ற நடப்புக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்பட்டுள்ளது.

[திரு. செ. மாதவன்] [1969 ஆகஸ்ட் 25

இச்சட்டம் குடியரசுத் தலைவரின் இசைவு பெற்று செயலுக்கு வந்தவுடன் நாம் இந்த ஆலைகளை மேற்கொண்டு அவற்றை மீண்டும் திறக்க இயலும்.

* **திரு. எம். பூபதி :** தலைவரவர்களே, பல மில்கள் மூடப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, வாசுதேவா, கம்போடியா போன்ற மில்கள் 30 மாதங்களுக்கு மேலாக மூடிக்கிடக்கின்றன. அதன் காரணமாக அவர்கள் பட்டினி கிடந்து இறந்துவிடுகின்ற சூழ்நிலை உள்ளது. சிலர் குடும்பத்தை நடத்த முடியாமல், விஷத்தைக் குடித்து இறந்து இருக்கின்றார்கள். இந்தப் பரிதாபகரமான நிலை மேலும் நீடிக்கிறது. இந்த ஐந்து மில்களும் எப்பொழுது திறக்கப்படும் என்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ? மேலும், மறைந்த முதலமைச்சரவர்கள் கொடுத்த உறுதிமொழியைப் பாது காக்கும் வகையிலே ஏனைய மில்களையும் திறக்கும்வரை பாதுகாப்பு நிதி வழங்க இந்த நேரத்திலே இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஆலைகளைத் திறப்பது பற்றி ஏற்கனவே இதிலே சொல்லியிருக்கிறேன். சட்டப்படி எடுக்க வேண்டிய முயற்சிகளையெல்லாம் எடுத்ததற்குப் பின்னாலே இங்கே, சட்டமன்றத்தில் வரவிருக்கும் சட்டம் நம்மாலே ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமாக்கப்பட்ட பின்னால் இந்த 5 மில்களைப் பற்றி விரைவாகச் செயல்படுத்த முடியும். முன்னாள் முதலமைச்சர் கொடுத்த உறுதிமொழி என்று சொன்னார்கள். என்ன உறுதிமொழி என்று சொல்லவில்லை. எனக்குத் தெரிந்தவரையில், ஒரு விகிதாசாரத்தைத் தொழிலாளர்கள் தந்தால் அதைப்போன்ற விகிதாசாரத்தை அரசாங்கம் தரும் என்று உறுதி தந்தார்கள். ஏற்கனவே, இரண்டு லட்சம், மில்களுக்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே முயற்சியை மீண்டும் தொழிலாளர்கள் எடுப்பார்களேயானால், அந்த உறுதிப்பாடம் மீண்டும் நிறைவேற்றப்படும்.

### (4) அரசினர் மசோதாக்கள்.

### (i) தமிழ் நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 5) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண். 23/69).

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பிரேரபிக்கிறேன் :—

" தமிழ் நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 5) மசோதா* (சட்டப்பேரவை மசோதா எண். 23/69) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவு வாரியான ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

*23-8-1969ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1969 ஆகஸ்ட் 25] [திரு. கே. ஏ. மதியழகன்]

இரண்டாம் பிரிவு, 3-ம் பிரிவு, அட்டவணை, முதல் பிரிவு, முகப்புரை, நெடுந்தலைப்பு பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவரவர்களே, " தமிழ் நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 23/69) நிறைவேற்றப்பட வேண்டும் " என முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

### (ii) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 6) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 24/69).

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பிரேரபிக்கிறேன் :—

" தமிழ் நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 6) மசோதா* (சட்டப்பேரவை மசோதா எண் 24/69) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "

**திரு. கரு. சீமைச்சாமி :** தலைவரவர்களே, நிதி ஒதுக்க மசோதா மீது . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்ளப் போகிறீர்கள்?

**திரு. கரு. சீமைச்சாமி :** நான்கு பாயிண்ட்டுகள் மட்டும்தான். 10 நிமிஷங்கள் போதும்.

இந்த மசோதாமீது நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டை எதிர்நோக்கியிருந்த இந்த வறட்சியைத் தமிழக அரசு மிகவும் சிறப்பாக சமாளித்தது என்பதைக் குறித்து நான் தமிழக அரசையும், முதல்வர் திரு. கருணாநிதி அவர்களையும் வெகுவாகப் பாராட்டுகிறேன். நேற்று இங்குக் கேள்வி நேரத்திலே என்னுடைய கட்சியைச் சார்ந்த சட்ட மன்ற உறுப்பினர் மதிப்பிற்குரிய டாக்டர் ஹாண்டே அவர்களும், மற்றும் திரு. சித்தன் அவர்களும் இராமநாதபுரம் ஜில்லாவிலே சரியாக வேலை நடக்கவில்லை என்ற கேள்விக்குறியோடு சொன்னார்கள். அம்மாதிரி இல்லை என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இராமநாதபுரம் ஜில்லாவில் வேலைகள் மிகவும் சிறப்பாக நடக்கின்றன. இராமநாதபுரம் ஜமீன் பகுதியாகும். முன்னூறு ஆண்டுகளாக வெட்டப்படாத குளங்கள், 200 ஆண்டுகளாகக் கவனிக்கப்படாத சில கால்வாய்கள் மராமத்துகள் வெகு சிறப்பாக நடந்து வந்திருக்கின்றன என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இருந்தாலும், இராமநாதபுரம் ஜில்லாவிற்கு

* 23—8—1969-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஒதுக்கப்பட்ட பணம் போதவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இராமநாதபுரம் ஜில்லாவைப் பொறுத்தவரையில் அதிகப்படியான விவசாயிகளுக்குப் பாசன வசதி செய்து கொடுக்கும் வகையில் சமுதாயக் கிணறுகளை அதிகமாக வெட்ட வேண்டுமென்றும், அதிகப்படியான பாசனத்திற்கு, அதிகமாகப் பணம் ஒதுக்க வேண்டுமென்றும் கேட்டிருந்தார்கள். சட்ட அமைச்சர் மாண்புமிகு திரு. மாதவன் அவர்களும் அதிகப்படியான சமுதாயக் கிணறுகள் வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். ஆகவே, அதற்கு அதிகமான பணத்தைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ஜூன் மாதத்திலே, சாத்தூர் உபதேர்தலுக்கு முன்பு, முதுகுளத்தூரில் ஒரு சம்பவம் நடந்தது. அங்கு கருப்பையா என்ற ஒருவரை, வழக்கு சம்பந்தமாகப் பிடித்து, அவரை மொட்டையடித்து, மீசையைப் பியத்து, குமரய்யா என்று கருது கிறேன், போலீசாரால் அவமானப்படுத்தியதாகச் செய்தி யிருந்தது. சாத்தூர் உபதேர்தலிலே காங்கிரஸ்காரர்கள் இதை மையமாக வைத்துப் பேசினார்கள். அம்மாதிரி, ஒரு போலீஸ் அதிகாரி இந்த ஜனநாயக காலத்திலே, அதுவும், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி செய்யும் காலத்திலே செய்தது பெரிய தவறு என்று சாத்தூருக்கு வந்திருந்த சமயத்தில் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களிடம் எடுத்துச் சொல்லி, அவர்கள் கடுமையான நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். ஆகவே, நான் மீண்டும் சொல்லிக்கொள்ளுகின்றேன், அவர்கள்மேல் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இராஜபாளையம் தொகுதியிலே சங்கரபாண்டியபுரம் என்ற ஊரில், சமீபத்திலே வழக்கு சம்பந்தமாக 6, 7 பேர்களைப் பிடித்து வந்து போலீஸ் ஸ்டேஷனிலே வைத்தார்கள். அங்கு அவர்களை அடித்ததன் காரணமாக ஒருவர் மரணம் அடைந்துவிட்டார். அவர் மரணம் அடைந்ததற்குப்பிறகு, ஏதோ அவர்கள் சீட்டு விளையாடியதாகவும், அதற்காகப் பிடித்துக்கொண்டு வந்ததாகவும், பிறகு அகால மரணம் ஏற்பட்டதாகவும் சொன்னார்கள். ஆனால் இம்மாதிரி நிகழ்ச்சிகள் இராமநாதபுரம் ஜில்லாவில் இரண்டு நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. அவர்கள் ஏதோ கொலை செய்த மாதிரி அடித்துக் கொன்றிருக்கிறார்கள். எனவே, இராஜபாளையம் போலீஸ் ஸ்டேஷனில் உள்ள அதிகாரிகள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சமீபத்திலே, கீழ்த் தஞ்சையிலே டிராக்டர் போராட்டம் நடந்தது. நமது அருமை இடது சாரித் தோழர்கள், இயந்திரப் புரட்சி வேண்டுமென்று சொல்பவர்கள், டிராக்டர்மூலம் உழக் கூடாது, மாடுகளால்தான் உழ வேண்டுமென்று கிளர்ச்சி நடத்தினார்கள். அப்பொழுது தமிழக அரசு, வேண்டுமென்று கிளர்ச்சி செய்தால் அவர்கள்மேல் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னது. கிளர்ச்சி செய்த இடது கம்யூனிஸ்ட்டார்மீது





கடுமையாக நடவடிக்கை எடுத்து கைது செய்தார்கள். அதற்குப் பிறகு அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, இப்படி ஏதாவது காரியத்தைச் செய்த பிறகு, அவர்களை விடுதலை செய்வது நியாயம்தானா? இதேபோல் பூந்தாழங்குடியிலும் வாபஸ் செய்யப்பட்டது. இப்படி வாபஸ் பெறுவதால், பெரிய போராட்டங்களை நடத்திக் கட்சி வளர்ச்சிக்காகப் போராடுகிறார்கள்.

**திரு. என். சங்கரய்யா :** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். பூந்தாழங்குடியில் வாபஸ் பெறப்பட்டது என்று சொன்னார்கள். அவ்வாறு வாபஸ் பெறுவதற்கு, அவர்களுடைய கட்சித் தலைவர் திரு. மூக்கையா தேவர் அவர்களும் கையெழுத்திட்டு அரசாங்கத்திற்கு மகஜர் அனுப்பப்பட்டது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.

**திரு. கரு. சீமைச்சாமி :** ஆகவே, கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன். இதேபோல் விட்டால், நாளைக்கு சென்னையிலே டாக்சிகள் ஓடக்கூடாது, ரிக்ஷாக்கள்தான் ஓட வேண்டுமென்று சொன்னால் அதற்கும் சட்டம் இயற்றப்படுமா? மில்களிலே இயந்திரங்களைக் கொண்டு நூற்கக்கூடாது, கையினால்தான் நூற்க வேண்டுமென்று சொன்னால் இந்தச் சர்க்கார் அப்படி ஒரு சட்டத்தைப் போடுவார்களா என்று கேட்க விரும்புகிறேன். எனவே, தஞ்சையிலே. அதுவும் கீழ்த் தஞ்சையிலே சிலபேர்கள் போராட்டம் நடத்தியதற்கு அரசாங்கம் இரங்குமானால், அது தவறான பாதையிலே செல்லுகிறது என்றுதான் அர்த்தம். பாம்புக்குப் பால் வார்த்து வளர்ப்பதுபோல் இல்லாமல், நீங்கள் அவர்களுக்கு எந்த விதமான ஒரு உதவியையும் செய்யக்கூடாது, கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

விவசாயக் கல்லூரியைப்பற்றி ஒன்றைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். மதுரையிலே விவசாயக் கல்லூரி மூடப்பட்டிருக்கிறது. அங்கு வேலை பார்க்கின்ற ஆசிரியர்கள் விவசாயப் பட்டதாரிகளாக இருக்க வேண்டும் என்றும், அப்படி அல்லாதவர்களை நீக்கிவிட்டு, விவசாயப் பட்டதாரிகளைப் போடவேண்டுமென்றும், விவசாயக் கல்லூரி பிரின்ஸ்பால், பி.எச்.டி. பட்டம் பெற்றவராக இருக்க வேண்டுமென்றும் போராட்டம் நடத்தினார்கள், உண்ணாவிரதம் இருந்தார்கள். அவர்கள் செய்த வழி தவறாகயிருந்தாலும்கூட, அவர்களுடைய கோரிக்கை நியாயமானது என்றுதான் எனக்குப் படுகிறது. அவர்கள் செய்த நடைமுறை சரியில்லை என்று கருதி, கல்லூரி மூடப்பட்டிருக்கிறது. அவ்வாறு மூடப்பட்ட காரணத்தால் அங்கு பீதி ஏற்பட்டிருக்கிறது. எனவே, கல்லூரியை உடனடியாகத் திறக்க வேண்டும், மாணவர்களைச்

சமரசப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளித்த தலைவரவர்களுக்கு நன்றிகூறி வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

* **மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மாண்புமிகு உறுப்பினர் திரு. சீமைச்சாமி அவர்கள் கோவையிலுள்ள விவசாயக் கல்லூரி (குறுக்கீடு), மதுரை விவசாயக் கல்லூரி மாணவர்களும், கோவைக் கல்லூரி மாணவர்களும் சேர்ந்துதான் அந்தப் போராட்டத்தை நடத்தினர்கள். அவர்களது கோரிக்கை 1967-ஆம் ஆண்டிலேயே முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதாவது, விவசாயம் படித்த பட்டதாரிகள்தான் அவர்களுக்கு முதல்வராக வர வேண்டுமென்று கோரிக்கை. ஏற்கனவே, இந்தக் கல்லூரிகள் துவக்குவதற்கு முன்னாலே, விவசாயம் படித்த பட்டதாரிகள் இல்லாத காரணத்தினால், விஞ்ஞானம் படித்த பட்டதாரிகளை வைத்துக் கல்லூரிகள் துவக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், விவசாயம் படித்த பட்டதாரிகள் வேண்டுமென்ற கோரிக்கை எழ எழ, அது 1967-ஆம் ஆண்டிலே அது முடிவுற்றுவிட்டது. 1967-க்குப் பிறகு விவசாயப் பட்டதாரிகளையே நியமிக்க வேண்டுமென்றும், விஞ்ஞானப் பட்டதாரிகளை நியமிப்பது இல்லை என்றும் அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. அதனையும் அவர்களுக்கு அறிவித்திருக்கிறேன். அது ஒன்றை மாத்திரம் அவர்கள் கோரிக்கையாக வைத்திருக்கவில்லை. 1967-ம் ஆண்டிலிருந்து விவசாயம் படித்தவர்களைத்தான் நியமிக்க வேண்டும், விஞ்ஞானம் படித்தவர்களை நியமிப்பதாக இல்லை என்று அரசாங்கம் முடிவெடுத்ததற்குப்பிறகும் மீண்டும் மீண்டும் அதை வலியுறுத்திச் சொன்னார்கள். இங்கே இருந்து இயக்குநர் அவர்களும் கோவைக்குச் சென்று விளக்கவுரை தந்தார்கள். கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் விளக்கவுரை தந்தார்கள். இருந்தாலும் இரண்டு கல்லூரி மாணவர்களும் இதனையே பிடிவாதமாக வைத்துக்கொண்டு, விவசாயம் படித்தவர்கள்தான் இருக்க வேண்டும், விஞ்ஞானம் படித்தவர்கள் இருக்கக்கூடாது என்று சொல்கிறார்கள். ஏற்கனவே விஞ்ஞானம் படித்தவர்களை வேலைக்கு அமர்த்திவிட்ட காரணத்தால் படிப்படியாகத்தான் அவர்களுக்கு வேறு வாய்ப்புத் தரவேண்டும். அவர்கள் விவசாயம் என்பதைத் தனியாகப் படிக்கவில்லையென்றாலும், விஞ்ஞானத்தையே படித்தவர்களாக இருந்தாலும், வேலைக்கு அமர்த்தப்பட்ட பிறகு, விவசாயப் பிரிவில் அக்கறைகொண்டு பிளாண்ட் பத்தாலஜி என்கிற சிறப்புக் கல்வியைப் படித்திருக்கிறார்கள். அதேபோன்று தாவர இயல்களையெல்லாம் படித்திருக்கிறார்கள். விவசாயத்திற்குரிய சிறப்புக் கல்விகளையெல்லாம் அவர்கள் படித்து, அதிலே பல ஆண்டுக்காலமாக அனுபவம் பெற்றுத்தான் இன்றைக்கு ஆசிரியர்களாகவும் ட்யூட்டர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களைக் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் மாற்றி அமைக்கமுடியுமேதவிர, திடீரென்று வேறு வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கு இன்றைக்கு அரசாங்கத்திலே வாய்ப்பு இல்லை, ஆனாலும் மேற்கொண்டு





விவசாயம் படிக்காத, வெறும் விஞ்ஞானம் படித்தவர்களை அமர்த்துவதில்லை என்று மாணவர்களுக்கு விளக்கம் தரப்பட்டிருக்கிறது.

* **திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவின்மீது நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்று தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கக்கூடிய வறட்சியைப்பற்றி முதலிலே, நாம் அது சுலபமாகத் தீர்ந்துவிடும் என்று எதிர்பார்த்தாலும், பிறகு அது கடுமையாக இருக்கிறது என்று கருதிச் சுமார் 20 கோடி ரூபாய் செலவு செய்யவேண்டுமென்ற அபிப்பிராயத்திற்கு வந்திருக்கிறோம். நல்ல முயற்சி. நாம் கொடுக்கும்படியான உதவிகள் சாதாரண விவசாயிகளுக்குக் கிடைப்பதில் பெருந்தொல்லைகள் இருக்கின்றன. வருகிற காலத்திலே இந்த தொல்லைகளையெல்லாம் அப்புறப்படுத்தவேண்டிய அவசியத்திலே நாம் இருக்கிறோம். இன்றைக்குச் சிறிது மழை பெய்கிறது என்ற மனப்பான்மையிலே தமிழ் நாட்டிலே வறட்சி தீர்ந்துவிட்டது என்ற மனோபாவம் நமக்கு வந்துவிடக்கூடாது என்று அழுத்தம் திருத்தமாக அரசினருக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். எனது தொகுதியான மதுரை மாவட்டத்திலே இருக்கக்கூடிய பாளையம், வேடசந்தூர் பகுதிகளிலே சிறிது மழை பெய்திருந்தாலும், வருகிற ஓராண்டுக் காலத்தில் எந்தவிதமான மாறுதலும் ஏற்படாது என்ற பயங்கரமான சூழ்நிலை இருக்கிறது. விவசாயிகளுக்குத் தானியம் இல்லை, அவர்கள் கையிலே காசில்லை, உழவு மாடுகளுக்குத் தீவனம் கொடுக்கக்கூட வசதி இல்லை. வறட்சி நிவாரணமாக, அடிக்கிணறு வெட்டுவது போன்ற வேலைகளை ஏற்கனவே செய்ததுபோல், வருகிற காலத்திலே, ஏதாவது குறித்த அளவுக் கடன் உதவி செய்து அவர்களை வாழவைக்க வேண்டிய நிலை, ஓராண்டுக் காலத்திற்கு அந்தப் பெரியப் பொறுப்பை நமது அரசு ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். ஆகவே, இதையும் இந்த நிவாரண வேலையின் ஒரு பகுதியாகக் கொள்ளவேண்டுமென்று அரசினரை நான் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமத்திலிருக்கிற அரிசன மக்களுக்கு இன்றைக்கு மிகப் பெரிய சிரமம் ஏற்பட்டிருக்கிறது. ஓரளவு மழை பெய்து, விவசாயம் செய்து விவசாயிகளுக்குக் கூலி கிடைத்தாலும்கூட, உணவு தானியம் கிடைப்பதிலே சிரமம் இருக்கிறது. ஓரளவிற்குக் கோதுமை இருக்கிறது என்று சொன்னாலும், தமிழ் நாட்டிலே கோதுமை சாப்பிடும் பழக்கம் அதிகமாக இல்லை என்பதை நாம் உணருகிறோம். இன்றைக்குக் கோதுமையைப்பற்றிப் பிரசாரம் செய்து வருகிறோம். பிரசாரத்தின்மூலம் நகர்ப்புறத்திலே அபிவிருத்தி ஏற்படுகிறது என்று நாம் கருதுகிறோம். மைலோ, சோளம் மத்தியப் பிரதேசத்திலே அதிகமாக இருப்பதாகச் சொல்கிறார்கள். நாம் முயற்சி எடுத்து அந்த சோளத்தையேக் கிராமப்புறங்களுக்குக் கொடுக்க வேண்டும். இன்றைக்கிருக்கிற மைலோ. சோளம் நல்லதாக இல்லை என்று மக்கள் கூறுகிறார்கள்.

[திரு. என். வரதராஜன்] [1969 ஆகஸ்ட் 25

கிராம மக்கள் அதை வாங்குவதிலே சங்கடப்படுகிறார்கள். ஆகவே, நல்ல உணவைக் கிராம மக்களுக்கு வழங்குவதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வருகிற 6, 7 மாதங்களில் சர்க்கார் கவனிக்க வேண்டிய முக்கியமான பிரச்னைகள் நான் மேற்கூறிய இரண்டும் என்று அரசுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அடுத்து, ஆசிரியப் பெருமக்கள் ஏற்கனவே சிரமங்கள் அனுப வித்து வருகிறார்கள். கல்வித் துறையிலே ஆசிரியர் அல்லாதவர் களுக்குத்தான் ஓய்வுபெறும் வயது 55-ஆக இருக்கும் என்று அரசு அறிவித்து இருக்கிறது. இன்று சாதாரண ஆசிரியர்கள்கூட 55 வயதிலேயே ஓய்வுபெற வேண்டுமென்ற நிலையை ஏற்படுத்தினால் அவர்களுடைய வாழ்க்கையில் மிகவும் சிரமங்கள் ஏற்படும். ஆகவே, இன்றைக்குப் பஞ்சாயத்து யூனியன்களிலும் நகராட்சி களிலும் உள்ள பள்ளிகளில் 58 வயது வரையில் ஆசிரியர்களை வைத்துக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துவது நல்லது என்று கருதுகிறேன். 60 வயதுவரை சாதாரணமாக மானேஜ்மெண்ட் பள்ளிகளிலே இருக்கலாம் என்று உத்தரவிட்டிருக்கிறோம். அதே போல் இந்தப் பள்ளிகளிலும் 58 என்று உத்தரவிடுவது சாலச் சிறந்ததாக இருக்கும். ஆசிரியர் சங்கங்களிலும் இவ்வாறு கோரிக்கை எழுப்பப்பட்டிருக்கிறது.

தொழில் நெருக்கடியான காலம், வறட்சி மிகுந்த காலம், அதைத் தீர்ப்பதற்கு முயற்சி எடுத்திருக்கும்படியான சமயத்திலே புதுக்கோட்டைப் பகுதியிலே இருக்கக்கூடிய காவேரி மில்லிலே மாதத்திற்குச் சுமார் ரூ. 40 அளவுச் சம்பளம் குறைத்துக் கொண்டால் தான் மில்லை ஓட்டமுடியும், சம்பளம் கொடுக்கமுடியும் என்று அதன் உரிமையாளர் கூறி, அதை லேபர் கமிஷனர் ஒத்துக் கொள்கிறார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. சம்பளம் குறைத்துக் கொள்ளலாம் என்று சொல்லும் நிலைமைக்கு அரசே வருமானால், தனியார் இலாபம் இல்லை. மில்களை மூடிவிடுகிற நிலைமைக்கு வரப்போகிறோம் என்று சொல்லி, சம்பளத்தைக் குறைத்துவிடுகிற சூழ்நிலை ஏற்படும். இன்று, விலைகள் உயர்ந்துகொண்டு வரு கின்றன. வறட்சிக் காலம். கொள்கை அளவிலே சம்பளத்தை வெட்டத் தயாராயில்லை என்பதற்கு நம் தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சையிலே இன்றைய தினம் ஏராளமான போலீஸ் இருப்பதன்மூலமாக அங்கு விவசாயிகள்மீது கடுமையான அடக்கு முறைகள் நடப்பதற்கு அது உதவியாக இருக்கிறது என்பது ஏற்கனவே கூறப்பட்டு வருகிறது. அரசு அதைக் கவனிக்க வேண்டும். இன்றைக்குத் தஞ்சையிலே யார் விஷப் பாம்புகளாக இருக்கிறார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். அங்கு ஏற்பட்டிருக்கிற கிளர்ச்சிகளுக்கு யார் காரணம் என்பது எல்லாம் அங்குள்ள விவசாய மக்களுக்குத் தெரியும், நாமும் அறிவோம்.



1969 ஆகஸ்ட் 25] [திரு. என். வரதராஜன்]

டிராக்டர்கள் கூடாது என்று விவசாயிகள் சொல்கிறார்கள். எல்லாவேலைகளையும் இயந்திரமயம் ஆக்க வேண்டுமா என்று எல்லாம் ஆராயவேண்டியது அவசியம். இன்றைக்கு நாட்டிலே இயந்திரங்களை எல்லாவற்றிலும் புகுத்துவது, ஆட்டோமேஷன் கொண்டு வருவது, இவைகளால் வேலையில்லாத் திண்டாட்டம் மேலும் பெருகும், பட்டாளிகள் உழைப்பாளிகள் இவர்கள் மத்தியிலே மேலும் வேலையில்லாத் திண்டாட்டம் வளரும், ஆகவே மெஷின்கள் தேவையா, இல்லையா என்ற சர்ச்சைகள் இருந்து வருகின்றன. இது வர்க்கக் கலவரத்தைத் தூண்டுவதற்காக சிலர் உபயோகப்படுத்துகிறார்கள் என்று பார்ப்பது தவறு. வேலையில்லாப் பிரச்சினை அதிகமாகிக் கொண்டிருக்கும் ஒரு நாட்டிலே இன்றைக்கு ட்ராக்டர்களையோ ஆட்டோமேஷனையோ விரும்புவோமானால் அது பிரச்சினையை மோசமாக்கும் என்ற கவலையோடு பரிசீலிக்கவேண்டும். சென்ற தனி நபர் தீர்மானத்தின்மீது நடந்த விவாதத்தில் இந்த ஆட்டோமேஷனுக்கு எதிர்ப்பு இருந்தது. கருத்தால் உழைக்கும் படித்தவர்களை இது எவ்வளவு பாதிக்கும் என்று பார்த்தோம். அதேபோல் டிராக்டர்கள் உழைப்பாளிகளை பாதிக்கும் என்பதையும் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட விஷயங்களை நாம் தீர ஆலோசித்துப் பரிசீலிக்க வேண்டும். டிராக்டர்கள் தேவையா, இல்லையா என்ற பிரச்னையை அரசு ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும். யாரோ ஒருவருக்கொருவர் எதிராகக் குற்றம் சொல்லும் பிரச்சினையாக இதை வர்ணிக்கக் கூடாது. உண்மையான, யதார்த்தமான பிரச்சினைகளை மூடி மறைக்கக்கூடிய நேரத்தில் டிராக்டர் எதிர்ப்புப் போராட்டமாக வெடிக்கிறது. இப்படிப்பட்ட கிளர்ச்சிகளிலே கைது செய்வதும், விடுதலை செய்வதும் சர்க்காருடைய யதார்த்தமான உரிமை. இதற்கு ஏதோ ஒரு பட்டத்தைச் சூட்டி, விஷப் பாம்புகளை ஆதரிக்காதீர்கள் என்று சொன்னார்கள். அதற்கு நான் கடுமையான பதில் அளிக்க விரும்பவில்லை. ஆனால் தஞ்சையிலே இருக்கக்கூடிய போலீஸ் அத்துமீறிய நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும். விவசாயிகள் கோரிக்கைகளை வற்புறுத்திக் கொண்டே டிராக்டர் கொண்டுவரவேண்டாமென்று வற்புறுத்திக் கொண்டே உணவு உற்பத்தியிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையிலே போலீஸ் அக்கிரமங்கள் தொடராமல் பார்த்துக் கொள்ளவேண்டு மென்று கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: தலைவரவர்களே, இந்த நிதி ஒதுக்க மசோதாவை ஆதரித்தாலும், ஆதரிக்காவிட்டாலும் அது நிறைவேறப் போகிறது. இருந்தாலும் என்னுடைய கருத்துக்களைச் சொல்லும்படியான வகையிலே நேற்று உப மானியக் கோரிக்கையிலே போதிய நேரம் கிடைக்கவில்லை. ஆகையால் இதில் தலையிட்டுப் பேச வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. ரூபாய் 250 கோடி வரைக்கும் இந்த ஆண்டு பட்ஜெட்டிலே போட்டு, சப்ளிமெண்டரி பட்ஜெட்டிலே 27 கோடி ரூபாய்க்கு நிதி ஒதுக்கல் செய்கிறோம். வரிப் போடுவதோ, வரி வசூல்

செய்வதோ சர்க்காருடைய கடமை. ஆனால் போடும்படியான வரி, வசூலிக்கப்படும்படியான வரி, மக்களுடைய பூரண நலத்திற்காகப் போய் சேருகிறதா என்பதுதான் பிரச்சினை. வரியை வசூல் செய்து, அதைச் சர்க்காரிலே உள்ளவர்கள் சொந்த காரியங்களுக்கு, அவரவர்கள் காரியங்களுக்காகச் செலவு செய்து வருவதுதான் ஜனநாயகத்திற்குப் பொருந்தாது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இவ்வளவு கோடி ரூபாய் வந்து விட்டது. இதை நடந்திருக்கிற காரியங்களோடு கவனிக்கும் போது எவ்வளவு காரியங்கள் நடந்திருக்கின்றன என்று பார்க்க வேண்டும். இந்த தி.மு.க. அரசு வந்ததற்குப் பின்னால் 65 கோடி ரூபாய் அதிகமாக வருவாய் கிடைத்திருக்கிறது சர்க்காருக்கு. இவ்வளவு வந்தும் இதற்கு முன்னாலே இருந்த சௌகரியங்கள் இப்பொழுது உள்ளனவா என்பதுதான் கேள்வி.

ஒன்றும் வேண்டாம், ரோடுகளை எடுத்துக் கொள்வோம். முன்னால் இருந்த பராமரிப்புச் செலவுகள் இப்பொழுது இருந்தும் வசதிகள் குறைவு. நாமும் ரோடிலே போய்க்கொண்டிருக்கிறோம். அமைச்சரவர்கள் சொன்னார்கள், என்னுடைய கட்சிக் கொறடா, விநாயகம் அவர்கள் ரோடுகளில் குழிகள் அதிகமாக இருக்கிற காரணத்தால் ஒரு பிரசவம் வழியிலே நடந்துவிட்டது தெரியுமா என்று கேட்டதற்கு, சுகப்பிரசவத்திற்கு நன்றி என்று. ஆகவே, இவர்கள் திட்டம் என்னவென்றால், ரோடுகளில் குழி வெட்டி, சுகப் பிரசவம் ஆகட்டும், ஆஸ்பத்திரிக்குக்கூட போக வேண்டியதில்லை என்றுகூடச் சொல்லி விடுவார்கள்போல் இருக்கிறது. அப்படி ஒரு நிலைக்குக் கொண்டுவந்து விடவேண்டாம் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். ரோடு பராமரிப்புக் கிடையாது, புது ரோடுகள் போடுவது கிடையாது. பிரச்சாரம் செய்வதில் என்னவோ குறைவு இல்லை. அதைச் செய்கிறோம், இதைச் செய்கிறோம் என்று சொல்கிறார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் என்னென்ன செய்யப் போகிறார்கள் என்றுதான் பார்க்க வேண்டும்.

அமைச்சர்கள் தலையீடு எவ்வளவு தூரம் இருக்கிறது என்பதைப் போன வருஷம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தபொழுது குறிப்பிட்டேன். 640 விண்ணப்பங்கள் இந்தச் சட்டசபையில் கொடுத்தேன். சட்டசபையில் கொடுக்கக்கூடாது, தனியாகக் கையெழுத்துப் போட்டு சீஃப் செக்ரடரியிடம் கொடுக்க வேண்டும் என்று சொல்லி, டிசம்பர் மாதம் என்னிடம் கொடுத்துக் கையெழுத்து வாங்கிக்கொண்டு போனார்கள். எத்தனை விண்ணப்பங்கள் பைசலாகியிருக்கின்றன. எத்தனையோ பேர்கள் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள். எவ்வளவு தூரம் அக்கிரமங்கள் நடக்கின்றன. எவ்வளவு பேர்கள் கீழே இருப்பவர்கள் மேல் உத்தியோகத்திற்குப் போடப்பட்டிருக்கிறார்கள்? எவ்வளவு பேர்கள் வீதியிலே வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள்? அதுபற்றிக் கடிதங்கள் வந்திருக்கின்றன, அவை அனுப்பப்பட்டும் இருக்கின்றன. கேட்டால் கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கிறார்களா என்று சொல்வார்கள்.



ஆகவே, குற்றச்சாட்டு என்னவென்றால், சிங்கம்புணரியில் ஒரு பெரிய ஆஸ்பத்திரி கட்டிக்கொண்டார்கள், மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள். ஆஸ்பத்திரி கட்டிக்கொள்ளட்டும், வேண்டாம் என்று சொல்லவில்லை. மக்கள் நன்மைக்காக ஆஸ்பத்திரிகள் கட்ட வேண்டியதுதான், வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், தமிழ் நாட்டிலுள்ள அத்தனைக் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்தும் பணம் வசூல் செய்துதான் அதைக் கட்டவேண்டுமா என்பதுதான் பிரச்னை. இப்பொழுது புது அமைச்சர் அவர்கள் வந்தார்கள். புது முகம் அறநிலைய அமைச்சர் அவர்கள், அவர்கள் என்ன செய்தார்கள்? புதுக்கோட்டையில் ஒரு கல்லூரி கட்டவேண்டும் என்று சொல்லி, கோவில்களில் இருக்கிற பணத்தையெல்லாம், அங்கங்கே போய் உட்கார்ந்து டெப்யூடி கமிஷனரைக் கூப்பிட்டுக்கொண்டு வசூல் செய்திருக்கிறார்கள். குறிப்பாக, கோயம்புத்தூர் ஜில்லாவில் ரூ. 1,23,000 கோவிலில் இருக்கக் கூடிய பணத்திலிருந்து, ஒரே நாளில் அங்கு போய் உட்கார்ந்து டொனேஷனைக் கேட்டு வசூலித்திருக்கிறார்கள். அவர்களெல்லாம் மனச்சாட்சியோடா கொடுத்தார்கள்? அமைச்சர் அவர்கள் தன்னுடைய செல்வாக்கைத் துஷ்பிரயோகம் செய்யக் கூடாது. அமைச்சர் அவர்களுக்குச் செல்வாக்கு இருந்தால், மக்களிடம் போய் கேட்டு, மக்களிடமிருந்து வசூல் செய்யட்டும், வேண்டாம் என்று சொல்லவில்லை. கல்வி சம்பந்தமான விஷயங்களுக்கு நிதியை மாற்றலாம் என்று சட்டம் போட்டிருந்தாலும், அந்தந்த ஊரிலிருக்கும்படியான கல்வியைப் பரப்புவதற்குப் போகட்டும், மாவட்டத்தில் இருக்கும்படியான கல்வியைப பரப்புவதற்குப் போகட்டும், வேண்டாம் என்று சொல்லவில்லை. எங்கேயோ புதுக்கோட்டையில் கல்லூரி கட்டுவதற்கு . . . .

* **மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா:** தலைவர் அவர்களே, ஏதோ நான் புதுக்கோட்டைக் கல்லூரிக்காக மாவட்டந்தோறும் சென்று பணம் வசூல் செய்ததாகச் சொல்கிறார்கள். அதுவும் குறிப்பாகக் கோவை மாவட்டத்தில் ரூ. 1,23,000 வசூல் செய்ததாகச் சொல்கிறார்கள். நான் பதவி ஏற்றபிறகு இன்னும் கோவை மாவட்டம் பக்கமே போகக்கூட இல்லை என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கல்லூரிக் கமிட்டி என்று ஒன்று இருக்கிறது. அந்தக் கமிட்டியிலிருந்து ஒவ்வொரு கோவிலுக்கும், பெரிய தனவந்தர்களுக்கும், பொது மக்களுக்கும் அழைப்புக் கொடுத்திருக்கிறார்கள், பணம் கொடுக்க வேண்டுமென்று. கோவில்களில் டிரஸ்டி போர்டு தீர்மானம் போட்டுப் பணம் கொடுக்கிறார்கள். எனக்கு அதில் ஒரு சம்பந்தமும் இல்லை. அந்தக் கமிட்டியில் நான் மெம்பர் கூட கிடையாது. ஏதோ அந்தப் பகுதியிலிருந்து அமைச்சராக வந்துவிட்டேன். அதைத்தவிர நான் எந்தப் பாவமும் அறியவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** ரொம்ப சந்தோஷம். இந்தக் கல்லூரிக்குக் கோவை கோவிலிலிருந்து ரூ. 1,23,000 வந்திருக்கிறது. ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். தான் போகவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். (குறுக்கீடு) இதுதான் தப்பித்துக்

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1969 ஆகஸ்ட் 25

கொள்வது என்பது. என்னுடைய புகார் அமைச்சர் அவர்கள் கமிஷனர் செல்வாக்கை உபயோகப்படுத்தி, புதுக்கோட்டைக் கல்லூரிக்குப் பணம் வந்திருக்கிறது கோவை கோவிலிலிருந்து. வந்திருக்கிறதா வரவில்லையா என்பதுதான் பிரச்னை. மந்திரி அவர்கள் தானே நேரில் போய் உட்கார்ந்து வசூல் செய்யவேண்டுமென்பதில்லை. இங்கிருந்து ஒரு ஜாடை சொன்னாலே போதாதா? அங்கு நேரில் போய் மீட்டிங்கில் உட்கார்ந்து கேட்கவேண்டுமா? அமைச்சர் அவர்கள் அவர்களுடைய செல்வாக்கை உபயோகப் படுத்தியிருக்கிறார்கள் . . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு எப்பொழுதும் ஒரு பழக்கம் உண்டு. முதலில் ஒன்று சொல்வார்கள். பின்னால் அதை மாற்றிக்கொள்வார்கள். பின்னால் அமைச்சர் அவர்கள் ஜாடை காட்டினார்கள் என்று சொன்னார்கள். எல்லோரும் கேட்டுக் கொண்டிருந்தோம். அமைச்சர் அவர்கள் அங்கே போய், உட்கார்ந்து பணம் வாங்கிக் கொடுத்தார் என்று முதலில் சொன்னார்கள். பிறகு அமைச்சர் இங்கிருந்து ஜாடை காட்டினார் என்று சொல்கிறார்கள். இங்கிருந்து ஜாடை காட்டினால் கோயம்புத்தூருக்குத் தெரியுமா என்றுகூடச் சந்தேகமாக இருக்கிறது. அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருக்கிறார். இதற்கெல்லாம் சட்டம், விதிமுறைகள் இருக்கின்றன. எந்த நிதியிலிருந்து எப்படிக் கொடுக்கலாம் என்று விதிகள் இருக்கின்றன.

கூட்டுறவுச் சங்கங்களும் தங்கள் நிதியிலிருந்து எதெதெற்குக் கொடுக்கலாம் என்பதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. பணத்தை எந்தெந்தக் காரியத்திற்குக் டைவர்ஷன் செய்யலாம், டைவர்ஷன் செய்வதற்கு யாருக்கு அதிகாரம் இருக்கிறது என்றெல்லாம் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் ஏதாவது விதி மீறப்பட்டிருக்கிறதா? எந்த விதி மீறப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுங்கள். சக அமைச்சர் நண்பர் சுப்பையா அவர்கள் தொகுதி புதுக்கோட்டைக்குப் பக்கத்துத் தொகுதி. புதுக்கோட்டைக்கு ஒரு கல்லூரி வேண்டும் என்பது ரொம்ப நாளையப் பிரச்னை. அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினரே பொறுப்பில் இருக்கிறார்கள். அவர்களே பல முறை அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறார்கள். கல்லூரி கட்டுவதற்குப் பணம் வசூலித்ததில் சட்ட முறைப்படி என்ன தவறு இருக்கிறது என்பதை ஆதாரத்தோடு சுட்டிக் காட்டினால் நாங்கள் பதில் சொல்லத் தயாராக இருக்கிறோம். முதலில் ஒன்று சொன்னார், பிறகு அமைச்சர் ஜாடை காட்டினார் என்று மாற்றிக் கொண்டார். இனிமேல் என்ன சொல்லப்போகிறார் என்பது தெரியவில்லை.

**திரு. பி.ஜி. கருத்திருமன்:** சட்டவிரோதமாகச் செய்திருந்தால் கிரிமினல் பிராசிகியூஷனுக்குப் போகவேண்டும், மிஸ் அப்ரோபிரியேஷன் என்று போகவேண்டும். சட்டசபையில் வந்து பேச





1969 ஆகஸ்ட் 25] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

முடியாது. சட்டத்தை இந்த மாதிரிப் போட்டுவிட்டு, சட்டத்தின் அடியில் புகுந்துகொண்டு, சட்டவிரோதம் இல்லையே என்று சொல்வதில் பிரயோசனம் கிடையாது. மனச்சாட்சி என்று ஒன்றிருக்கிறது என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். அமைச்சர் அவர்கள் தனது செல்வாக்கைப் பிரயோகித்தாரா, இல்லையா என்பதுதான் பிரச்னை. சட்டத்தின் அடியில் புகுந்துகொண்டு, சட்டப்படிதான் செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்வதில் பலன் இல்லை. அந்த நிலையிலேதானே சட்டம் போடப்பட்டிருக்கிறது? பணம் வந்ததா, இல்லையா அமைச்சர் அவர்களுடைய செல்வாக்குப் பிரயோகிக்கப்பட்டதா, இல்லையா என்பதுதான் பிரச்னை. அவர்கள் போகவில்லை, ஜாடைகூடக் காட்டவில்லை என்றால்; பணம் எப்படித்தான் வந்தது? என்ன நடந்தது, மனச்சாட்சியோடா பணம் கொடுத்தார்கள்? அவர்கள் எங்களிடத்திலேயே சொல்லியிருக்கிறார்கள். 'எங்களுக்கு ப்ரெஷர் வருகிறது, டெப்யூடி கமிஷனர் சொல்லுகிறார்' என்று சொல்லுகிறார்கள். அமைச்சர் அங்கே போகவேண்டிய என்பதில்லை. அவர்கள் எழுதிக்கொடுக்க வேண்டுமென்றால் டிரஸ்டு போர்டில் இருப்பவர்கள் யாராவது அப்படி எழுதிக் கொடுப்பார்களா? சட்டம் போடப்பட்டிருக்கிறது, கோவாப்ரேடிவ் துறையில் கூட சட்டம் கொண்டுவந்து, கட்சி தர்பார்தானே நடக்கிறது. சட்டம் கொண்டுவந்து கூட்டுறவு சங்கங்களிலிருந்து பணத்தை எல்லாம் எடுத்துக்கொள்ள வேண்டும், கோவில் பணத்தையெல்லாம் கல்விக்கு எடுத்துக்கொள்ளலாம் என்றுதானே சட்டம் கொண்டு வந்தீர்கள். உங்களுடைய சௌகரியத்திற்கு வேண்டியதைச் செய்துகொள்ளலாம் என்றுதானே சட்டம் போடப்பட்டிருக்கிறது. மெஜாரிடி அதற்காகத்தானே இருக்கிறது. கோவைக் கோவிலிலிருந்து புதுக்கோட்டைக் கல்லூரிக்குப் பணம் வந்திருக்கிறதா, இல்லையா என்பதுதான் பிரச்னை, அதுதானே குற்றச்சாட்டு. மந்திரி அவர்கள் நேரில் வந்து சொல்லியா செய்யவேண்டும்? கலெக்டர் வசூல் செய்கிறார் என்றால், அவரே மக்களிடம் போய் வசூல் செய்கிறார்களா? சர்க்கார் உத்தரவு போட்டுத்தான் லோன் வசூல் நடக்கிறது. மக்களாகவே மனச்சாட்சியோடு கொடுக்கிறார்களா? . . .

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா:** கோவில் பணம் வந்ததா, இல்லையா என்று கேட்கிறார். முதலில் அப்படி பணம் வந்ததா, இல்லையா என்பது எனக்குத் தெரியாது. எனக்கும், அதற்கும் சம்பந்தம் இல்லை. பக்கத்திலுள்ள புதுக்கோட்டை எம்.எல்.ஏ. தான் அந்தக் கமிட்டியின் செயலாளர். அவர்களைக் கேட்டிருந்தால் தெரியும். அவர்களைக் கேட்க வேண்டும். நான் அந்தக் கமிட்டியில் கூட இல்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அமைச்சர் செய்தாலும் சரி, எங்கள் பக்கம் இருக்கும் எம்.எல்.ஏ. செய்தாலும் சரி, தப்பு என்றால் தப்புதான். மனுநீதிச் சோழனுடைய ஆட்சி நடக்கிறது என்று சொல்கிறார்கள். மணி அடித்தவுடன் நியாயம் சொல்லி

றோம் என்று சொல்கிறார்கள். பெற்ற தகப்பன், தன் மகனாயிருந்தாலும், அவன் பேரில் தேரை ஏற்றிவிட்டான். எங்கள் பக்கம் இருக்கும் எம்.எல்.ஏ. செய்தாலும், தவறு தவறுதான். ஆனால், அவர்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? கோவை கோளினிலிருந்து வசூலிக்க என்ன அதிகாரம் இருக்கிறது? அடேயப்பா, அதற்கெல்லாம் எங்களுக்கு சக்தி இருக்கிறதா? நாங்கள் சொல்லிக் கேட்பார்களா? அவ்வளவு செல்வாக்கு எங்களுக்கு இருக்கிறதா?

உத்தியோக உயர்வை எடுத்துக்கொண்டாலும் கூட, ஊழல்கள் அதிகமாக இருக்கின்றன. இப்பொழுது இருக்கும்படியான நிலை என்னவென்றால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது, ஏதோ திட்டம் போட்டிருக்கிறோம். இருப்பவர்களுக்கே, வேலை வாய்ப்புகள், பிரமோஷன்ஸ் கொடுப்பதில், சர்க்கார் துறையில், அநேக ஊழல்கள் நடக்கின்றன. அதைப்பற்றி எனக்குக்கூட ஒரு வேண்டுகோள், ரெப்ரசண்டேஷன் வந்திருக்கிறது. டி.எம்.எஸ். ஆபீசில் குடும்பக் கட்டுப்பாடு நிலையத்தில் ஒருவருக்கு பிரமோஷன் கொடுப்பதற்கு அட்ஹாக் ரூல்ஸ் இருந்தபோதிலும், 100 பேர்களுக்குத் தாண்டி கீழே இருப்பவருக்கு பிரமோஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது, பேச்சுத் திறமை என்று சொல்லி. இந்த நியமனத்தை பப்ளிக் சர்விஸ் கமிஷன் மூலம் செய்தாலும் பாதகம் இல்லை. வேண்டியவர்களுக்கு, மிகவும் கீழே இருப்பவர்களுக்கு, ஒருவருக்கு பிரமோஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. கையெழுத்துப் போட்டுக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், சர்க்கார் உத்தியோகத்தில் இருப்பவர்கள் கையெழுத்துப் போட்டு கொடுக்க முடியுமா? அவர்கள் நேரடியாக எங்களிடம் வந்து சொல்கிறார்கள். நான் அதை இங்கே சொல்கிறேன்.

அடுத்தபடியாக, சர்க்கார் அறிக்கைகள் விடுவதில் ஒன்றும் குறைவில்லை. மில்களை எடுத்துக் கொள்கிறோம் என்று பத்திரிகையில் அறிக்கை விடுகிறார்கள். ஐந்து மில்களை எடுத்துக்கொள்ளப் போகிறோம், ஐந்து மில்கள் திறக்கப்படுகின்றன என்ற அறிக்கை வெளியிடுகிறார்கள். அங்கே போய் அவர்களுக்கு வேலை இருக்கிறதா என்று பார்த்தால், இல்லை. கார்ப்பரேஷன் அமைக்கிறோம், நாளைக்கு மில்களை திறக்கப் போகிறோம் என்று சொல்கிறார்கள். திறக்கப்படப் போகும் மில்களின் பட்டியலையும் வெளியிடுகிறார்கள். சொல்வதில் ஒன்றும் குறைவு கிடையாது. செயலில் எதுவும் அவர்கள் செய்வதில்லை என்ற குற்றச்சாட்டைத்தான் நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த விவசாயக் கல்லூரி பற்றி சில விஷயங்களை கனம் சீமைச்சாமி அவர்கள் சொன்னார்கள். அமைச்சரும் பதில் சொன்னார்கள். அமைச்சருடைய பதிலை ஓரளவிற்கு நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். ஏனென்றால், மாணவர்களாக இருப்பவர்கள், அவர்கள் தான் இருக்க வேண்டும், இவர்கள்தான் இருக்க வேண்டும் என்றெல்லாம் கேட்பது நல்லதல்ல. அப்படி ஒவ்வொரு நிர்வாகத்திலும் இப்படி இப்படித்தான் இருக்க வேண்டும் என்று கேட்பது





என்று வந்து விட்டால், அப்புறம் சர்க்காரே இப்படித்தான் நடக்க வேண்டும் என்று கேட்டார்கள். அந்தப் போக்கு நல்ல போக்கு அல்ல. ஆனால், மாணவர்களுக்குக் குறை இருக்கிறதா என்று பார்த்து, அப்படிக் குறைகள் இருந்தால் அவற்றைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மதுரைக் கல்லூரியில் மாணவர்களுக்குப் படிக்க வசதியாக விடுதிகள் கிடையாது என்ற குறை இருக்கிறது. அவர்களுக்கு இன்னும் சில குறைகள் இருக்கின்றன. அந்தக் குறைகளைத் தீர்க்க வேண்டும். அப்படிப்பட்ட குறைகளில் ஒன்று, படித்துப் பட்டம் பெற்ற பிறகு, அவர்களுக்கு கெஜட்டட் ராங்காக உத்தியோகம் கொடுக்கப்பட வேண்டும் என்பது. அவர்கள் போலவே, மிருக வைத்தியக் கல்லூரியில் படித்தவர்களுக்கும், இன்னும் எஞ்ஜினியரிங் கல்லூரியில் படித்தவர்களுக்கும், கெஜட்டட் ராங்க் இருக்கிறது. எங்களுக்கும் அப்படி வேண்டும் என்று கேட்கிறார்கள். அதைக் கவனித்து சர்க்கார் ஆவன செய்ய வேண்டும். ஒரே வகையாகப் படித்து, டெக்னிகல் எஜுகேஷன் படித்தவர்களுக்கு ஒரே தரமான சம்பளம், வேலை, இவைகளெல்லாம் கொடுக்கப்பட்டால் தான் நலமாக இருக்கும். சர்க்கார் அவற்றை ஆராய்ச்சி செய்து, அந்தக் காரியத்தைச் செய்வதாக வாக்குறுதி கொடுத்தால், மாணவர்கள் மீண்டும் கல்லூரிக்குச் சென்று படிப்பார்கள் என்று சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மதுரைக் கல்லூரியைப் பொறுத்து, இட வசதி இல்லை என்று சொல்வதாகத் தெரியவில்லை. இரண்டாவதாக ஆசிரியர்களுக்கு அதிகப்படியான சம்பளம் கொடுக்க வேண்டும், கெஜட்டட் ராங்க் தரவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இன்றைக்கு வெடரினரி காலேஜ் மாணவர்கள் அதுபோன்ற போராட்டத்தை நடத்தி, அதன் மூலமாக, அந்த இலாகாப் பணியாளர்களுக்கு கெஜட்டட் ராங்க் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்றாலும், சர்க்கார் அலுவலகங்களில் இருக்கும் நிலையையும் கவனிக்க வேண்டும். ஒரு இலாகாவில் அப்படி கொடுக்கப்படும்போது, மற்ற மற்ற இலாகாக்களில் உள்ள அத்தனை பேரும் கெஜட்டட் பதவியாக இருக்க வேண்டும் என்று விரும்புவார்கள். அதற்கு அரசாங்கத்தில் பெரிய மாறுதல் செய்ய வேண்டும். அதுபற்றி ஆலோசித்துக் கொண்டு இருக்கிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன்: சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும். நேற்றுகூட முதல் அமைச்சர், தவறுகளை நாங்கள் கண்டு பிடிக்கவில்லையா என்று கேட்டார்கள். எப்பொழுது? ஒரு புகார் சொன்னேன். மதுரையில் ஆத்தூர் பஞ்சாயத்து யூனியன் கணக்கில் 25,000 பேர்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு சிகிச்சை செய்ததாக பொய்க் கணக்கு எழுதி இருப்பதாகச் சொன்னோம். அதைக் கண்டுபிடித்தேன் என்றால் அது பெரிய சாமர்த்தியம் ஆகுமா? முதலிலேயே தடுத்து நிறுத்தியிருக்க வேண்டாமா? நடந்த பிறகு செய்திருக்கிறார்கள்.

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1969 ஆகஸ்ட் 25

முதலிலேயே தடுத்து நிறுத்தாதது பெரும் குற்றம். நடந்த பிறகு உடனடியாக நடவடிக்கை எடுக்காதது ஒரு பெரும் குற்றம். அதை முதலிலேயே கண்டு பிடிக்காததும் குற்றம். குற்றம் நடந்ததற்குப் பிறகு நடவடிக்கை எடுக்காதது மன்னிக்க முடியாத பெரும் குற்றம். 25,000 பேர்களைக் கண்டு பிடித்தோம் என்கிறார். திருட்டு போயிற்றே, கொஞ்சமா? மூன்று லட்சம் போன பிறகு தெரிந்தது. 10,000 போகும்போதே ஏன் கண்டுபிடிக்கவில்லை? அதே மாதிரிதான், பால் பண்ணையிலும். லட்சக்கணக்கான ரூபாய் மோசடி. எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. நிதி அமைச்சர் சொல்கிறார். மலையைத் தோண்டி எலியைக் கண்டு பிடித்தார் என்று. ஒரு குடம் பாலுக்கு ஒரு சொட்டு மோர்தான் வேண்டும் பால் கெடுவதற்கு, ஒரு குடம் மோரா வேண்டும்? ஒரு துளி மோர் இருந்தால் போதுமே. இந்த மாதிரி நடவடிக்கை எடுக்காமலே இருந்து, சர்க்காரே வேண்டுமென்று, செய்துவிட்டு, நாங்கள் கண்டுபிடிக்கவில்லையா என்றால் என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? காங்கிரஸ்காரன் செய்தால் என்றால், இவர்களுடைய அருமைப் பத்திரிகையில், இன்னாருடைய மாமனுக்கு மகனுக்கு இன்ன உறவுள்ள இன்னார் என்று கொட்டை எழுத்தில் பரம்பரையை எல்லாம் போடுகிறார்களே? இவர்களுடையதையும் அப்படிப் போடவேண்டுமே. ஏன் போடவில்லை? குடும்பக் கட்டுப்பாடு என்பதில், காங்கிரஸ்காரர்கள் அதைச் செய்தார்கள், இதைச் செய்தார்கள் என்கிறார்கள். அறிவாள் கொண்டு அறுத்தார்கள், காங்கிரஸ்காரர்கள், பசி என்றபோது, வயிற்றை அறு என்றார்கள் என்றெல்லாம் பொறுப்புள்ள குடும்பக் கட்டுப்பாடு அமைச்சர் பேசுகிறார்கள். புத்தி சரியான புத்தி என்று சொல்ல முடியுமா? 16 பிள்ளை பெற்றவருக்கு ஓராயிரம் பரிசு கொடுத்தார்கள் என்று சொல்லுகிறது அந்தப் பத்திரிகை. அது நியாயம் உள்ளதா? அரசியல் நேர்மை உள்ளதா?

கவர்ச்சி கூடாது என்கிறார்கள். கவர்ச்சியாக அரை நிர்வாணமாக இருந்தால் தவறு என்கிறார்கள் முதல் அமைச்சர். இப்படிக் கவர்ச்சிப் படம் போடும் பத்திரிகை ஆசிரியரை உள்ளே தள்ள வேண்டாம்? முதலமைச்சர் அரை நிர்வாண, இன உணர்ச்சியைத் தூண்டும் படங்களுக்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்கிறார்கள். இதுவும் கவர்ச்சிப்படம் தானே. கவர்ச்சிப் படம் தானே போட்டு தொலைக்கிறான். அது உரிமைப் பிரச்சினையாக வராதா? யார் கவர்ச்சிப் படம் என்று போடுகிறார்கள். இந்த அம்மாவினுடைய படம் அடுத்த வாரம் வரும் என்று போடுகிறானே தன் பத்திரிகையில்? ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? தகுந்த நடவடிக்கை எடுத்து அந்தப் பத்திரிகையை ஏன் நிறுத்தக்கூடாது? நிறுத்துவோம் என்று ஏன் சொல்லக்கூடாது?

இன்னும் எத்தனையோ குற்றங்கள் இருக்கின்றன. காலேஜ் அட்மிஷனில் குற்றம், அமைச்சர் எங்கே கையெழுத்துப் போட்டு கொடுத்தார்களா என்றால், கையெழுத்துப் போட்டுக் கொடுத்து விட்டால் இங்கே உட்கார்ந்து இருப்பார்களா? மருத்துவக் கல்



1969 ஆகஸ்ட் 25] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

லூரி அட்மிஷன் பற்றி புகார்கள் வந்திருக்கின்றன. ஐயா, இப்படி நடந்து போயிற்றே, நல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும், நீங்கள் நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்றுதான் சொல்லுகிறேன். ஒரு மாணவி, மூன்று பாடங்களில் டி-ப்ளஸ் எடுத்தவள்; கணக்கு, கெமிஸ்ட்ரி, நேசுரல் சயன்ஸ் ஆக மூன்றிலும் டி-ப்ளஸ் எடுத்திருக்கிறாள். இங்கிலீஷில் எ, இந்தியில் பி-ப்ளஸ், எஸ்.எஸ்.எல்.சி.-யிலே ஏற்கனவே 450 வாங்கியிருக்கும் மாணவி. அந்தக் கல்லூரியிலேயே முதலாவதாக இருந்த மாணவி. உடனே என்ன ஜாதி என்பார்கள். என்ன ஜாதியாக இருந்தால் என்ன? படிப்பில் முதலாவதாக இருக்கிற ஜாதி; மூன்று டி-ப்ளஸ் வாங்கிய ஜாதி. அந்த மாணவிக்கு இடம் இல்லை. அதே கோயம்புத்தூர் ஜில்லாவிலே முதல் தடவை பல்டி அடித்துவிட்டு, பி.யு.சி.-யில் இரண்டாவது தடவையாக செப்டம்பரில் பாஸ் செய்த மாணவனுக்கு இடம் கிடைத்திருக்கிறது. அதைத் தவறு என்று ஏன் சொல்லக் கூடாது? நிரூபிக்க வேண்டும் என்றால், பட்டியலைக் கொடுங்கள், சொல்லுகிறேன், நான் சொல்லுகிறேன். இப்படித் தள்ளப்பட்ட மாணவர்களுக்கு இண்டர்வ்யூ வையுங்கள், பார்க்கலாம்.

இன்னொரு விஷயம், ஜெனரல் ஆஸ்பத்திரியில் ஒரு டாக்டர்; அவருடைய மகனுக்கு போன வருஷம் இடம் கிடைக்கவில்லை, முயற்சி பண்ணிப் பார்த்தார்கள். இந்த வருஷம் கிடைத்திருக்கிறது. எப்படி? இண்டர்வியூவில் 75-க்கு 75 கிடைத்திருக்கிறது. அப்படிக் கிடைக்க வேண்டுமென்றால், ஃபர்ஸ்ட் கிளாசாக இருந்திருக்க வேண்டும். அதோடு, என்.சி.சி., அதைத்தான் தொலைத்துப் போட்டார்களே, அது இல்லாமல், பேச்சிலே நல்ல திறமை இருந்திருக்க வேண்டும். 75-க்கு 75 போடப்பட்டதாக தகவல் கிடைத்திருக்கிறது. அப்படிப் போட்டும், லிஸ்டில் வரவில்லை. எனக்குக் கிடைத்த தகவல்படி, 75 கிடைத்தும், ஐந்து மாணவர்களைத் தள்ளினால்தான் இவனுக்கு இடம் . . . .

திரு. மா. இராசாங்கம்: தலைவர் அவர்களே, யார் யாருக்கு இடம் கொடுக்க வேண்டும் என்று உயர்நீதி மன்றம் தீர்ப்புக் கொடுத்திருப்பதை எதிர்க் கட்சித் தலைவர் மறுத்துப் பேசுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: உயர்நீதி மன்றம் இருக்கட்டும். லிஸ்டை வெளியிடுங்கள், அப்பொழுது வாய்ப்பு இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற தேர்வுக் குழுவிலே முறையாக நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டை கூறுகிறார்கள். மூன்று டி-ப்ளஸ் வாங்கிய மாணவருக்கு இடம் கிடைக்கவில்லை என்கிறார்கள். எனக்குக் கிடைத்த தகவலிலே, தேர்வுகள் நடத்தும்போது, கேள்விகள் கேட்கிறார்கள். எந்தக் கேள்விகளுக்கு பரிட்சையில் எழுதி மார்க்குகள் வாங்கியிருக்கிறார்களோ அந்தக் கேள்விக்கு மீண்டும் பதில் கேட்கிறார்கள். அதிலே வாய் மொழிப்பதில் அளிக்காவிட்டாலும், எழுத்து

மூலமாக எழுதி அவற்றிற்கு பதில் எழுதச் சொல்லி அதைப் பார்த்தும் மார்க் எண்கள் போடுகிறார்கள். எந்தக் கேள்விகளுக்கு பதில் எழுதி, டி, டி-ப்ளஸ் வாங்கியிருக்கிறார்களோ, அதே கேள்விகளுக்கு தேர்வுப் பரிட்சையில் எழுதும்போதுகூட சரியான முறையில் பதில் கொடுக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். நேர் முகமாகப் பரிட்சை செய்து அப்பொழுது சரியான பதில் கொடுத்திருந்தால்தான், பூரண மார்க் போட அனுமதி இருக்கிறது. அதோடு, வகுப்பு வாரியாக தேர்ந்து எடுக்க வேண்டியிருக்கிறது. பிற்பட்ட சமுதாயத்திற்கு ஒரு மதிப்பு எண் என்றும், தாழ்த்தப்பட்ட அரிசன மக்களுக்கு ஒரு மதிப்பு எண் என்றும், அந்த அந்த சமுதாயங்களுக்கு ஏற்றம் தருவதற்காக மதிப்பு எண்களை ஏறத்தாழ வைத்திருக்கிறோம். அனைவருக்கும் ஒரே நிலை என்று வைக்கவில்லை.

மூன்றாவதாக, மார்க் லிஸ்டுகளை எல்லாம் காட்ட வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்கிறார். வழக்கு மன்றத்தில் நீதிபதிகள் கேட்கும் போதுதான் அந்த மார்க் லிஸ்ட் காட்டப்படுகிறது. கடந்த ஆண்டில் இதுபற்றி 40 வழக்குகள் நீதிமன்றத்தில் தொடரப்பட்டன. ஆனால் இந்த ஆண்டில் ஐந்தாறு வழக்குகள்தான் செய்யப்பட்டிருக்கின்றன. வழக்கு மன்றத்தில் நீதிபதிகள் கேட்கும்போதுதான் மார்க் லிஸ்ட் கொடுக்க அனுமதிக்கப்படுகிறது. கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்வதுபோல் எந்த இடத்திலும் மார்க் லிஸ்ட் காண்பிக்க அனுமதிக்கப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால் நாங்கள் போட்ட கமிட்டியே நாங்கள் கேட்டால்கூட, அந்த லிஸ்டைக் கொடுக்க அந்தக் கமிட்டிக்கு அனுமதியில்லை. இதுபற்றி வழக்கு தொடரப்பட்டு, நீதிபதிகள் மார்க் லிஸ்ட் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்கும்படியான நேரத்தில்தான் அதைக் கொடுக்க, அந்தக் கமிட்டியினர் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தாங்கள் போட்ட கமிட்டியார்கூட மார்க் லிஸ்ட் கொடுக்க அனுமதி இல்லை என்கிறார். அவர்கள் போட்ட கமிட்டியார்கூட அவர்கள்மீது நம்பிக்கை வைக்கவில்லை என்கிறார். வழக்கு மன்றத்தில் 200 பேர்கள் போனால், ஏதோ இரண்டொருவருக்குத்தான் நியாயம் கிடைக்கிறது. இந்த ஆண்டு ஐந்தாறு பேர்தான் வழக்கு மன்றத்திற்குப் போனதாலேயே, நாங்கள் தேர்வை ரொம்ப நன்றாக நடத்திவிட்டோம் என்று பொருள் அல்ல. கடந்த ஆண்டு நாற்பது பேர்கள் வழக்கு மன்றத்திற்குப் போனார்கள் என்று சொல்லும்போது, கடந்த ஆண்டு நாங்கள் தவறாக நடந்துவிட்டோம் என்பதை அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொள்கிறார்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு 40 பேர்கள் வழக்குமன்றத்திற்குச் சென்றார்கள். இந்த ஆண்டு ஐந்தாறு பேர்தான் வழக்கு



மன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். அதிகப்படியான குறைகள் மக்களின் மத்தியிலே இல்லையென்பதையே இது எடுத்துக்காட்டுமேயொழிய, கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வதுபோல், கடந்த ஆண்டு நாங்கள் தவறு செய்துவிட்டோம் என்று பொருள் அல்ல. மேலும், கடந்த ஆண்டு போடப்பட்ட வழக்குகள் தவறு என்று வழக்கு மன்றத்திலே நிரூபித்துவிட்ட பிறகு, தேர்வு முறையாக நடந்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்டிய பிறகு, இந்த ஆண்டு வழக்குகள் குறைந்திருக்கின்றன.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, நியாயமான வழக்கு விசாரணை வேண்டும். அதற்காக ஒரு கமிஷனைப் போடுங்கள், அதற்கு நீங்கள் தயாராக இருங்கள். இந்தக் கமிட்டியின்மீது நம்பிக்கை இல்லை. நீதி விசாரணை வேண்டும், ஊழல் நடந்துவிட்டது, ஒரு கமிஷனை உடனடியாகப் போடவேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, அரசாங்கம் அமைத்த கமிட்டியின்மீது நம்பிக்கையில்லை என்று கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லும்போது, அரசாங்கம் போடக்கூடிய கமிஷன்மீது நம்பிக்கையில்லையென்று எப்போது சொல்லப் போகிறார்கள் ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதிலேயும் நம்பிக்கையில்லாவிட்டால், நம்பிக்கையில்லையென்றுதான் சொல்வேன். நான் கேட்பதெல்லாம் நீதி விசாரணை நடத்துங்கள். நீங்கள் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறீர்கள். ஹைகோர்ட் ஜட்ஜ்மீது நம்பிக்கையில்லையென்றால், உரிமைப் பிரச்சினை கொண்டு வரலாமே? நீங்கள் தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறீர்கள். நாங்கள் இந்த விஷயத்தை விடமாட்டோம். அங்கே ஊழல் நடந்திருக்கிறது. பணம் நடமாடியிருக்கிறது, நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். ஒரு கமிஷனைப் போடுங்கள். சர்க்காருக்கு 50 சீட்டுகள் என்று ரிசர்வ் செய்திருந்தார்கள். பிறகு அது 20 சீட்டுகளாகக் குறைக்கப்பட்டன. சர்க்காருக்கே 200 சீட்டுகள் என்று என்று நீங்கள் சொல்லிவிடுங்கள், அதற்காக அப்படி ஒரு சட்டத்தையும் செய்துவிடுங்கள் என்றுதான் நான் சொல்கிறேன்.

**திரு. மா. இராசாங்கம் :** தலைவர் அவர்களே, கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ஏதோ கல்லூரி தேர்விலே பணம் விளையாடியிருப்பதாகச் சொன்னார். அது உண்மையானால், அவர் சாட்சி பூர்வமாக நீதிமன்றத்திலே வழக்குத் தொடருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, அதற்காகத்தான் கமிஷனைப் போடுங்கள் என்று சொல்கிறேன். கமிஷனைப் போடுங்கள், நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். ஒரு கமிஷனைப் போட்டு, அதை நிரூபிக்க நான் தவறினால், நான் ஜெயிலுக்குக்கூடப் போகத் தயாராக இருக்கிறேன். எங்கள் கட்சியும் அதற்குத் தயாராக இருக்கிறது. அரசாங்கம் கமிஷன் போடத் தயாராக இருக்கிறதா?

[1969 ஆகஸ்ட் 25

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கமிஷனைப் போட்டால்தான் நிரூபிக்கிறேன் என்று சொல்கிறார். இப்போதேகூட இந்த மன்றத்திலே நிரூபிக்கலாம். தக்க ஆதாரங்களுடன் இதே மன்றத்தில் நிரூபித்துக் காட்டட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சர்க்கார்மீது குற்றம் சாட்டலாம், அதற்குச் சர்க்கார் பதில் சொல்லலாம். இந்த அவையிலே பேசும்போது, பேசுவதற்கு என்று ஒரு முறை இருக்கின்றது. பேசுகின்ற நேரத்திலே பொதுவான முறையில் குற்றச்சாட்டுகளைக் கூறக்கூடாது. தக்க ஆதாரங்களுடன்தான் குற்றச்சாட்டுகளைக் கூற வேண்டும். 'நீங்கள் கமிஷனை வையுங்கள், நான் ருசுப்படுத்துகிறேன்' என்று நீங்கள் சொல்வது இந்த மன்றத்திலே பேசக்கூடிய பேச்சாக இல்லை. ஆதாரத்தோடு குற்றம் சாட்டுங்கள். பொதுவாகக் குற்றச்சாட்டு செய்வது இந்த மன்றத்திலே நல்லது அல்ல. குற்றச்சாட்டுகள் செய்யும்போது, அவை தெளிவான குற்றச்சாட்டுகளாக, ஆதாரப் பூர்வமான குற்றச்சாட்டுகளாக இருக்க வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மூன்று 'டி-ப்ளஸ்' வாங்கியிருக்கிறான் ஒரு மாணவன், அந்த மாணவனுக்கு இடம் கிடைக்கவில்லை. ஆனால் முதலிலே பெயிலாகி, இரண்டாம்தரமாகப் பாசானவனுக்கு இடம் கிடைத்திருக்கிறது. இதிலே என்ன நியாயம்? நீதி விசாரணை நடத்த வேண்டுமென்பதுதான் என்னுடைய கேள்வி. அப்போதுதான் எனக்குப் பாதுகாப்பு கிடைக்கும்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** கடந்த ஆண்டு நேர்முகத் தேர்வில் குறைந்த மார்க் வாங்கியவன், இந்த ஆண்டில் அதிகமான மார்க் வாங்க வழியில்லையா? வழி இல்லையென்று எப்படிச் சொல்ல முடியும்? கடந்த ஆண்டில் சிலபல குறைகளினால் தேறாமல் போயிருக்கலாம். கடந்த ஆண்டில் பெயிலானவர் இந்த ஆண்டில் தேற முடியாதா என்ன? அவனுக்கு வாய்ப்பு கிடைக்காதா என்ன?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவனுக்குக் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. பலவிதமான முறையில் குற்றச்சாட்டுகள் பேசப்படுவதற்கு நீங்கள் வழி செய்யவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். எல்லோருக்கும் பரிட்சை வைத்துப் பார்க்கலாம். 'டி-ப்ளஸ்' வாங்கியவன் தகுதியையும் பார்க்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆதாரமான சம்பவங்கள் இருந்தால் வழக்குமன்றத்திற்குச் செல்வதற்கு இடம் இருக்கிறது. நீங்கள் பணம் விளையாடியது என்று சொன்னீர்கள், எங்கே, எப்போது, யாரிடத்தில் பணம் விளையாடியது என்பதைத் தெளிவாக சொல்லுங்கள். எதிர்க்கட்சித் தலைவர் தமக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லையென்று நினைக்க வேண்டியதில்லை. இந்த மன்றத்தில் பாதுகாப்பு அளிப்பதற்கு பேரவைத் தலைவர் இருக்



1969 ஆகஸ்ட் 25] [பேரவைத் தலைவர்]

கிறார். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு வரம்புக்குள்தான் பேச வேண்டும். பணம் விளையாடிற்று என்று பொதுவான குற்றச்சாட்டு சொல்லத் தேவையில்லை. தெளிவாக, இன்னார், இந்த இடத்தில் பணம் கொடுத்தார்கள் என்று ஆதாரத்தோடு சொல்ல வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதைச் சொல்ல வேண்டுமென்றால் ஒரு கமிஷனைப் போடுங்கள். எனக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். சாட்சி சொல்கிறவர்களுக்கும் பாதுகாப்பு வேண்டும். அதற்குத்தான் நீதி விசாரணை வேண்டுமென்று கேட்கிறேன். வெளியிலே மக்கள் மத்தியிலே சொல்லப்படுவதைச் சொல்வதற்குத்தான் இங்கே பொறுப்புள்ள எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிறேன். முதலமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள்? பொது மக்கள் மத்தியில் பேசப்படுவதைத்தான் சொன்னேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மருத்துவக் கல்லூரியில் இடம் தருவதற்காக பணம் வாங்கியதாக எதிர்க்கட்சித் தலைவர் சொல்கிறார். பல பேர் பத்திரிகைகளில் பார்த்திருப்பீர்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவரும், முன்னாள் அமைச்சருமான திருமதி லூர்தம்மாள் சைமன்தான் பணம் வாங்கியதாகப் பத்திரிகையில் செய்தி வந்தது. அதுமட்டுமல்ல, அவர் கைது செய்யப்பட்டு, பின்னர் பொறுப்பில் விடப்பட்டிருக்கிறார்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர் அப்படிச் சொல்லும்போது, நானும் இங்குள்ள அமைச்சர்களைப்பற்றி குற்றம் சாட்டிச் சொல்லலாம் அல்லவா ? காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர், காங்கிரஸ் அமைச்சராக இருந்தவர் என்றெல்லாம் சொல்கிறார் என்றால் நான் சொல்வதற்கும் உரிமை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பணம் விளையாடிற்று என்று குற்றம் சாட்டுகிறீர்கள், இந்த மன்றத்திலே பேசுகின்ற நேரத்தில் பாதுகாப்பு எப்போதும் இருக்கிறது. ஆனால், பணம் விளையாடிற்று என்று நீங்கள் சொன்ன நேரத்தில் முறையாக, ஆதாரங்களோடு சொல்லியிருந்தால் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுத்திருப்போம். இன்னார், இந்த இடத்தில் பணம் கொடுத்தார், அதை வாங்கினார்கள் என்று தெளிவாகச் சொன்னால் நடவடிக்கை எடுக்க வழிவகை உண்டு. பொதுவான குற்றச்சாட்டுகளுக்கு இங்கே இடம் இல்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பணம் விளையாடியிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்கிறார்களா ? அங்கே இவர் நூறு வாங்கினார், இங்கே அவர் நூறு வங்கினார், அவர் இந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்று சொல்லலாமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அவர் கைது செய்யப்பட்டு பொறுப்பில் விடுவிக்கப்பட்டிருக்கிறார். இது ஊரெல்லாம் அறிந்த விஷயம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** உங்களுடைய பக்கத்தில் கைது செய்யப்படாமல் இருப்பவர்கள் 200 பேர்களுக்கு மேல் இருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மீண்டும் மீண்டும் எதிர்க்கட்சித் தலைவர் அதையே திருப்பிச் சொல்கிறார். அவருக்குச் சொல்வதெல்லாம், பொதுவான குற்றச்சாட்டுகளாக இல்லாமல், ஆதாரபூர்வமான குற்றச்சாட்டுகளாகக் கூறுங்கள். பொதுவாகப் பேசிக்கொண்டே போனால், அது மன்றத்தினுடைய நேரத்தையும், நடவடிக்கைகளையும் கெடுப்பதாக இருக்கும். எதிர்க்கட்சித் தலைவருக்கு நிறைய சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பொறுமையை இழந்துவிட்ட நிலையில் பணம் விளையாடியது என்று சொல்கிறார்கள். யார் கையில் விளையாடியது, எந்தக் கட்சி பக்கம் விளையாடியது என்று அவர்கள் சொல்லவில்லை. இந்தக் கட்சிப் பக்கம் விளையாடியதாக அவர்களும், அந்தக் கட்சி பக்கம் விளையாடியதாக நாங்களும் நினைக்க இடமளிக்கிறது. ஆகவே யார் கையில் விளையாடியது, எந்தக் கட்சியில் விளையாடியது? ஆதாரம் இருந்தால் தைரியமாக அவற்றை இந்தப் பேரவையின் முன் வைத்து எதிர்க்கட்சித் தலைவர் பேச வேண்டும். அதைவிட்டு பொறுப்பற்ற தன்மையில் பேசுவது எதிர்க் கட்சித் தலைவருக்கு அழகல்ல.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மருத்துவக் கல்லூரி அட்மிஷனில் பணம் விளையாடியதாக குற்றம் சாட்டினார்கள். குற்றஞ் சாட்டுவதற்கு நிரம்ப உரிமையிருக்கிறது. உரிமையை மறுக்கவில்லை. ஆனால் குறிப்பாக ஆதாரத்தோடு குற்றஞ்சாட்டுகிற உரிமையை அவர் பயன்படுத்த வேண்டும். ஆனால் ½ மணியாக நானும் கவனித்துக்கொண்டு வருகிறேன். அவர்கள் நோக்கம் எல்லாம் மாலைப் பத்திரிகையில் தலைப்பு வரவேண்டும்—' மருத்துவக் கல்லூரியில் ஊழல் '—' விசாரணைக்கு கமிஷன் போடச் சொன்னார் மறுத்து விட்டார்கள் ' என்கிற செய்தி வரவேண்டும் என்கிற பிரச்சார நோக்கத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளது போல இருக்கிறது. காரணம், எதிர்க்கட்சித் தலைவர் இந்த மன்ற உறுப்பினர்தான். இந்தச் சட்டமன்றமும் பூரண அதிகாரம் வாய்ந்த ஒரு சபை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே இங்கு இருக்கிறார்கள். மன்ற உறுப்பினர்களில் அதிகமான பேர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே மந்திரிகளாக இருக்கிறார்கள். இதைவிட உயர் அதிகாரம் பெற்ற மன்றம் ஜனநாயக அமைப்பில் இல்லை. இங்கே பேசப்படுகிற பேச்சுக்களுக்கும் பாதுகாப்பு இருக்கிறது. வெளியில் சொன்னால் வேறு விஷயம். ஆனால் எதையும் தைரியமாக இங்கே எடுத்துச் சொல்லலாம். ஆகவே எதிர்க்கட்சி தலைவர் பேசும்போது இன்னார் பணம் கொடுத்திருக்கிறார், இன்னாருக்குக் கொடுத்திருக்கிறார் என்று ஆதாரத்தோடு சொல்ல





வேண்டும். ஆதாரத்தோடு பேச வேண்டும். பொதுப்படையாகக் குற்றஞ் சாட்டக்கூடாது என்று தாங்களும் கூறினீர்கள். ஆயினும் ½ மணியாக எதிர்க்கட்சித் தலைவர் தம் போக்கில் பொதுப்படையாக ஆதாரம் ஏதுமின்றி குற்றஞ்சாட்டி வருவது மன்ற நடவடிக்கையைத் தடை செய்கிற நோக்கம் கொண்டதுபோலவே இருக்கிறது. பிரச்சார நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டதாகவே இருக்கிறது. ஒரு பையன் டி-ப்ளஸ், டி-ப்ளஸ், டி-ப்ளஸ் என்று வாங்கியிருக்கிறான், அவனுக்குக் கிடைக்கவில்லை, பணம் விளையாடிற்று என்று பொதுப்படையாகவே பேசுகிறார்கள். ஒரு பையன் இந்தக் காலத்தில் டி-ப்ளஸ், டி-ப்ளஸ் என்று வாங்கினான் என்றால் அது பையன் பெற்ற மார்க்கு இல்லை. சில பெற்றோர்கள் பெற்ற மார்க் . . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இதை நிரூபிப்பார்களா ? பையன் பெற்ற மார்க் இல்லை, தகப்பனார் பெற்ற மார்க் என்கிறாரே, இதை எந்த ஆதாரத்தோடு சொல்கிறார் என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இதை ஆதாரத்தோடு தான் சொல்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதை நிரூபி. எந்த ஆதாரத்தோடு சொல்கிறான் ? இதற்கு ஆதாரம் கொடுத்தால் நானும் பணம் விளையாடிற்று என்பதற்கு ஆதாரம் கொடுக்கிறேன்.

**திரு. மு. ச. சிவசாமி :** இந்த அவையில் பேசுகின்றபோது பண்பின்றி அமைச்சர்களைப் பார்த்து ' நீ ' என்று பேசலாமா ?

**திரு. பு. செ. முத்துச்செல்வன் :** எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பற்ற தன்மையில் பேசக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பொறுப்போடுதான் பேசுகிறேன். பையன் பெற்ற மார்க் இல்லை. தகப்பனார் பெற்ற மார்க் என்று சொன்னது மாணவர் சமுதாயத்தையே இழிவுபடுத்துவதாகும். இதை நிரூபியுங்கள். நானும் நிரூபிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கோபமாக—சத்தம் போட்டுப் பேசுவதனால் நான் பயந்துவிட மாட்டேன். அவர் குற்றம் சாட்டிவிட்டாரே என்கிற கோபமும் எனக்கில்லை. ஆதாரமில்லாத குற்றச்சாட்டைப் பொதுப்படையாகக் கூறி அதற்கு ஒரு உருவம் தீட்டக் கூடாது என்பதுதான் என் கருத்து. எதிர்க் கட்சித் தலைவர் திரும்பத் திரும்ப ஆதாரம் இல்லாது பேசி வருவதன் மூலம் மன்ற நடவடிக்கையைத் தடுக்கிறார். ஆதாரம் இல்லாது பேசி தவறான பிரச்சாரத்தைத் தோற்றுவிக்கிறார். ஆகவே, ஒன்று அவர் தன்னுடைய பேச்சை மாற்றிக் கொண்டு தொடர வேண்டும், அல்ல என்றால் ஆதாரங்களைக் கொடுத்து அந்தக் கருத்தைத் தொடர வேண்டும்,

[திரு. கே. ஏ. மதியழகன்] [1969 ஆகஸ்ட் 25

பாராளுமன்றத்தில் ஒரு நல்ல மரபை வைத்திருக்கிறார்கள். அரசாங்கத்தின் மீதோ, அமைச்சரவையின் மீதோ ஆதாரமின்றி ஒரு குற்றச்சாட்டை சுமத்திவிட்டுப் போக முடியாது. அமைச்சர் நாலாயிரம் ரூபாயைத் தூக்கிக் கொண்டு போய்விட்டார் என்று சொல்லிவிடலாம். அப்படிச் சொல்லி அதுவும் பத்திரிகையில் வந்துவிட்டால் உண்மைக்கு மாறான தவறான கருத்து மக்கள் இடையே ஏற்பட்டுவிடும். மாண்புமிகு சுப்பையா அவர்கள் கோவில் பணத்தை விரயம் செய்துவிட்டார் என்று சொல்லி விட்டார்கள். அப்படி என்ன செய்துவிட்டார்? ஒரு நல்ல காரியத்திற்காக இதுபோல முன்னால் இருந்த திரு. பக்தவத்சலம் அவர்கள் செய்யவில்லையா? இப்படி ஆதாரமின்றி பலஹீனமான வாதத்தை வைத்து அவையில் கவர்ச்சிகரமாகப் பேசி ஒரு துஷ்பிரச்சாரத்தை நடத்த அனுமதிக்கக் கூடாது. ஒரு மந்திரி மீது, அல்லது அரசாங்கத்தின் மீது குற்றஞ்சாட்டுவதற்கு முன்னால் அது சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகளை முதலில் பேரவைத் தலைவருக்குத் தாக்கல் செய்துவிட்டுத்தான் பேச வேண்டும் என்பதாக நம்முடைய விதிமுறைகளைக்கூட பாராளுமன்றத்தில் உள்ளதுபோல திருத்துவதற்கு தாங்கள் யோசிக்கலாம். ஆகவே இப்படி எதிர்க் கட்சித் தலைவர் ஆதாரமின்றி பேசுவது முறைதானா என்பதற்கு தாங்கள் ஒரு தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, இதற்கு தாங்கள் ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன். பணம் விளையாடியது என்று எதிர்க் கட்சித் தலைவர் தெளிவாகச் சொன்னார்கள். மருத்துவக் கல்லூரிக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்க ஒரு குழு போடுகிறோம். சர்வகலாசாலை மார்க் 200. வாய்மொழி மூலம் கேட்கப்படுகிற கேள்விகளுக்கு 75 மார்க் வைத்து குழுவினர் மார்க் போடுகிறார்கள். இந்த இரண்டையும் கூட்டி யார் அதிக மார்க் வாங்கியிருக்கிறார்களோ அவர்களேதான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இதில் எங்கே தப்பு நடைபெற இடமிருக்கிறது? அந்த மார்க் லிஸ்டு வங்கியில் தான் இருக்கிறது. நீதிமன்றம் கோருகிறபோது அது சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றே வைக்கப்பட்டிருக்கிறது. நீங்களே இதற்கு ஒரு முடிவு எடுக்கலாம். அந்த லிஸ்டுப்படி அதிகமான மார்க்குகள் வாங்கியுள்ளவர் யார் தேர்ந்தெடுக்கப்படவில்லை, குறைந்த மார்க் வாங்கியவர் யார் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நிரூபிக்கட்டும். இந்த முறைப்படி இல்லாது எங்கே பணம் விளையாடியது என்று நிரூபிக்கட்டும். இது பற்றி நீங்களே விசாரிக்கலாம். சர்வகலாசாலை மார்க் 200. குழுவினர் மார்க் 75—இந்த 275 மார்க்குகளில் அதிகமான மார்க்குகள் வாங்கியுள்ள யார் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பதை நிரூபிக்கட்டும். தாங்கள் எந்த ஆதாரத்தை கேட்டாலும் கொடுக்க அரசாங்கம் தயாராய் இருக்கிறது.



1969 ஆகஸ்ட் 25]

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அமைச்சர் அவர்கள் 'டி-ப்ளஸ் வாங்கியுள்ள பையன் அந்த மார்க் வாங்கவில்லை, தகப்பனார் வாங்கிய மார்க்' என்றார்கள். அதை அவர் நிரூபிக்கட்டும். பணம் விளையாடியது என்பதை நான் நிரூபிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** ஏன் ஓடி ஒளிகிறீர்கள்?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** நான் ஓடி ஒளியவில்லை; அதை நிரூபியுங்கள். இதை நான் நிரூபிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தச் சபையில் ஒருவர் பேச, மற்றொருவர் கேட்க, பிறகு தங்களுக்கு வாய்ப்பு வருகின்ற நேரத்தில் பேசிக்கொள்வது என்ற மரபைத்தான் நாம் கடைப்பிடிக்க வேண்டும். இந்த மன்றத்தில் நான் இல்லாவிட்டால், நான் எழுந்து போய்விட்ட பிறகு நீங்கள் அப்படிப் பேசினால் பரவாயில்லை. நீங்களே, இந்த மன்றத்தினுடைய நடவடிக்கைகளை நடத்துவதற்கு ஒருவரை நியமித்துவிட்டு அவரை இங்கே உட்கார வைத்துவிட்டு பிறகு நீங்களாகவே பேசிக் கொண்டிருந்தால் அது என்ன முறை? எந்தப் பேச்சையும் நிதானத்திலே பேசவேண்டும். ஆத்திரத்திலே பேசுவதிலே என்ன பயன்? எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லும்பொழுது நிதானத்தோடு சொல்லவேண்டும். ஆத்திரத்தோடு சொல்லக் கூடாது. நிதியமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள்....

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Sir, I have been misrepresented.

**திரு. வி. எஸ். கோவிந்தராஜன்:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை. நான் சொல்கிறேன். அதற்குப் பிறகு நம்முடைய அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள், டி-ப்ளஸ், டி-ப்ளஸ், டி-ப்ளஸ் வாங்கியவனுக்கு இடம் கிடைக்கவில்லை என்று எதிர்க் கட்சித் தலைவர் சொன்னதற்கு விளக்கம் சொன்னார்கள். டி-ப்ளஸ், டி-ப்ளஸ் வாங்கியவர்களிடம் என்ன கேள்விகள் கேட்கப்பட்டனவோ, அதே கேள்விகளைக் கேட்டபொழுதுகூட சரியானபடி விடையளிக்காததால் இங்கே மார்க் கிடைக்கவில்லை, அதனால் தான் டி-ப்ளஸ், டி-ப்ளஸ் பெற்றும்கூட இடம் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** நிதியமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பலத்த குரலில் பேசுவதால் உண்மையாகிவிடாது. டி-ப்ளஸ் என்பது ஒரு அம்சம். டி-ப்ளஸ் வாங்கியவர்கள் அவர்களாகவே வாங்காமல் என்று சொல்வதற்கு முன்னதாகவே அவர்கள் ஆரம்பித்துவிட்டார்கள்.

[திரு. கே. ஏ. மதியழகன்] [1969 ஆகஸ்ட் 25

டி-ப்ளஸ் என்பது ஒரு அம்சம். டி-ப்ளஸ் வாங்கியவர்களிடம் அங்கே என்ன கேள்விகள் கேட்டார்களோ அதையே ஓரலாகக் கேட்டபொழுது அவர்கள் பதில் சொல்லவில்லை, பரிட்சையில் என்ன கேள்விகள் கேட்கப்பட்டனவோ அந்தக் கேள்விகளையே கேட்டபோதுகூட அவர்கள் பதில் சொல்லவில்லை. அதையெல்லாம் பார்த்துத்தான் செய்திருக்கிறார்கள். மூல விவாதத்திற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. எல்லா டி-ப்ளஸும், அவர்களே வாங்கினார்கள், இப்படிச் சில பெற்றோர்கள் என்று சொன்னவுடனே அவர்கள் ஏதோ ஒரு கொம்பைப் பிடித்துக் கொண்டதுபோல் அதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதை எடுத்துப் பாருங்கள். இதற்காகத்தான் நான் டேப் ரிக்கார்டர் வையுங்கள் என்று சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நான் என்ன சொன்னேன் என்பதைப் பார்க்கலாம். அப்புறம் திருத்தி விட்டார்கள் என்று சொல்வார்கள். பெற்றவர்கள் வாங்கினார்கள் என்று நான் சொல்வதற்கு முன்னாலேயே . . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** டி-ப்ளஸ் பெற்றோர்கள் வாங்கினார்கள் என்றுதான் சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** உரக்க நீங்களும் பேசலாம், நாங்களும் பேசலாம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் தங்களுடைய கருத்தைச் சொல்லும்பொழுது, முடிக்கவில்லை, முடிப்பதற்கு முன்னதாகவே எதிர்க்கட்சித் தலைவர் குறுக்கிட்டதாகச் சொன்னார்கள். மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நியாயமான பதிலைச் சொல்ல வேண்டும். ஏனென்றால் தொழில் அமைச்சர் அவர்கள் அமைச்சரவையின் சார்பில் என்று சொல்லி இருக்கிறார்கள். நாங்களும் வலியுறுத்திக் கேட்க விரும்புகிறோம். மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் மூன்று கேள்விகளைக் கேட்டார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அமைச்சர்கள் கொடுத்த விளக்கத்தை ஒப்புக் கொள்கிறார்களா அல்லது தொழில் அமைச்சர் அவர்கள் தெரிவித்தபடி வங்கிகளில் வைக்கப்பட்டிருக்கின்ற மார்க்குகளை எடுத்துப் பார்க்கலாம் என்று சொல்கிறார்களா அல்லது எதுவுமே இல்லாமல் இப்படித்தான் பேசிக் கொண்டிருக்க போகிறார்களா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தொழில் அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன் ; நீதி விசாரணை வையுங்கள். நானும் வருகிறேன். ஊழல் நடந்திருக்கிறது, தவறு நடந்திருக்கிறது என்பதை அப்பொழுது நிரூபிக்கிறேன். அப்படியில்லை என்று சொன்னால் நான் என்ன தண்டனை கொடுத்தாலும்



1969 ஆகஸ்ட் 25] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

ஏற்றுக்கொள்கிறேன். வங்கியிலே மார்க்குகளை வைத்திருப்பதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்ளிகேஷன் போட்ட மாணவர்களையும் கொண்டுவர வேண்டும், யுனிவர்சிடியில் கேள்வித் தாள்கள் இருக்கலாம், யுனிவர்சிடியிலே டி-மார்க் வாங்கியதே தவறு என்ற முறையிலே சொல்கிறார்கள். யுனிவர்சிடி கேள்வித் தாள்களை யெல்லாம் தருவித்து வங்கியிலே இருக்கிற மார்க்குகளை எல்லாம் தருவித்து அந்த மாணவர்களை யெல்லாம் கூப்பிட்டுப் பார்க்கலாம். அவர்கள் செய்தது எல்லாம் சரியென்று சொன்னால் நான் என்ன தண்டனை கொடுத்தாலும் அதை ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** டி-ப்ளஸ் டி-ப்ளஸ், வாங்கியவனுக்கு கிடைக்கவில்லை என்று சொன்னார்களே, அந்த மாணவனை விட்டே வழக்குமன்றத்தில் வழக்குப்போட எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்யட்டும். அதற்காக ஆகும் செலவை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். எதிர்க் கட்சித் தலைவர் அந்த மாணவனை விட்டே வழக்குப் போடச் செய்வார்களா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சில பேர்களுக்கு ஜீரோ மார்க் போட்டிருக்கிறார்கள். சில பேர்களுக்கு 75 மார்க் போட்டிருக்கிறார்கள். பி-ப்ளஸ், ஏ-ப்ளஸ் வாங்கியவர்களுக்கு 75 மார்க்குகள் போடப்பட்டு இருக்கிறது. . . .

**திரு. நா. வீராசாமி :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும் பொழுது ஜீரோ மார்ச் வாங்கியதாகச் சொன்னார்கள். மார்க்குகள் ரகசியமாக வங்கியில் வைக்கப்பட்டிருக்கிறது. எப்படி எதிர்க் கட்சித் தலைவருக்குத் தெரிந்தது ? அதைத் தெரிவிக்க வேண்டும். ஏனென்றால் இந்த மன்றத்தையே நம்பிக்கையில்லாததாக அது ஆக்கிவிடும். அதை அவர்கள் தெரிவித்தாக வேண்டும்.

*** மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப் பிரச்னையை ஆதாரத்தோடும் நிதானத்தோடும் பரிசீலிக்க வேண்டும். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் யார்மேல் தப்புச் சொல்கிறார்கள் ? இருநூறு மார்க்கு போட்டது தப்பு என்றால் அது யுனிவர்சிடியைக் கேட்க வேண்டும். குழுவினர் 75 மார்க் போட்டது தப்பு என்றால் அது அந்தக் குழுவைக் கேட்க வேண்டும். குறைவாக வாங்கியவர்களுக்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது, அதிகமாக வாங்கியவர்களுக்கு இடம் கொடுக்கப்படவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னால் அதுபற்றி பரிசீலிக்கலாம். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய கட்சியின் ஆட்சிக் காலத்திலே மார்க் லிஸ்டை எரித்தார்கள். எங்களுடைய காலத்திலே வைத்திருக்கிறோம். (ஆரவாரம்) எங்கள் ஆட்சியின்மேல் கசப்புணர்ச்சியை உண்டாக்குவதற்காக அவர்கள் இப்படிச் சொல்வது சரியல்ல. இன்னார் இவ்வளவு வாங்கியிருக்கிறார்கள், இவர்களுக்குக் கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டுச் சொன்னால் விசாரிக்கலாம்.

[திரு. செ. மாதவன்] [1969 ஆகஸ்ட் 25

இந்தக் குழுவினுடைய தலைவராக இருந்த உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரே முன்பு அறிஞர் அண்ணா அவர்களுக்கு இதுபற்றி ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதிலே யுனிவர்சிடியிலே அதிகமாக மார்க் வாங்கியவர்கள் மிகச் சாதாரணமான அறிவுகூட இல்லாதவர்களாக இருக்கிறார்கள் என்று எழுதியுள்ளார்கள். நீதிமன்றத்திலே இந்த வாதமும் வைக்கப்பட்டது. நீதிமன்றமும் இதுபற்றித் தீர்ப்பு வழங்கியுள்ளது. எனவே எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நீதிமன்றம் ஏற்றுக் கொண்டதைக்கூடத் தப்பு என்று சொல்வது பொருத்தம் அல்ல. குறைவாக வாங்கியவர்களுக்கு இடம் கிடைத்திருக்கிறது, அதிகமாக வாங்கியவர்களுக்குக் கிடைக்கவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லி நிருபித்தால் அது குற்றம். 75 மார்க் போட்டதிலே என்ன தவறு என்று சொன்னாலும் விசாரிக்கத் தயாராக இருக்கிறோம். இதை விட்டு விட்டு பிசைந்த மாவையே பிசைந்து கொண்டிருப்பது சரியல்ல. போன முறையும் இதையேதான் சொன்னார். இந்த முறையும் அதையேதான் சொல்லுகிறார். தைரியம் இருந்தால் விவரமாக இன்ன தவறு நடந்திருக்கிறது என்று கூற முன் வரட்டும். நாங்கள் இந்த விளக்கத்தை எங்கள் சார்பாக வைத்து விட்டோம். அவர்கள் சார்பாக இன்னின்ன முறையில் இன்னின்ன தவறுகள் நடந்திருக்கின்றன என்ற தகவல்களைக் கொடுக்கட்டும். அதிலே முடிவான தீர்மானத்தை இந்த மன்றமே எடுத்துக் கொள்ளட்டும். அந்த முடிவை நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இவர்கள் போட்ட மார்க்கை விடக் குறைவாக வாங்கியவர்கள் லிஸ்டில் இருந்தால் அதைப் பற்றிக் கூறட்டும் என்று கூறுகிறார்கள். என்னுடைய குற்றச்சாட்டு அதுவல்ல. (ஆளும் கட்சி வரிசையிலிருந்து எதிர்ப்புக் குரல்கள்) சும்மா சத்தம் போடாதே ; நீ யார் சத்தம் போடுவதற்கு ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், தாம் இந்த மன்றத்திலே எதிர்க் கட்சித் தலைவராக இருக்கிறோம் என்ற நினைவோடு பேச வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். நீங்கள் பேசுகின்ற நேரத்திலே உங்கள் தரப்பில் இருந்தும் குரல்கள் எழுப்பப்படுகின்றன; இந்தத் தரப்பில் இருந்தும் எழுப்பப்படுகின்றன. அவர்களும் இந்த மன்றத்தில் இருக்கக் கூடிய உறுப்பினர்கள்தான் என்பதை மறந்து அவர்களைப் பார்த்து தெருவிலே போகிறவர்களைப் பேசுவதைப் போல் பேசுவது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு முறையாகாது. இந்த மன்றத்தின் மாபையும், கௌரவத்தையும் காக்கும் முறையில் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேச வேண்டும்.

அமைச்சர் அவர்கள் தெளிவாக இரண்டு விஷயங்களை எடுத்துச் சொன்னார்கள். மாணவர்கள் பரிட்சையிலே வாங்கிய மார்க்கிலே அரசு ஒன்றும் செய்ய முடியாது. குழு நியமித்திருக்கிறார்கள்; அவர்கள் கையில் கொடுத்திருக்கும் மார்க் 75. அந்த 75 மார்க்கை



1969 ஆகஸ்ட் 25] [பேரவைத் தலைவர்]

அவர்கள் எப்படிப் போட்டார்கள்; அதிலே தவறு நடந்திருக்கிறதா என்பதை யெல்லாம் குழுவைத்தான் கேட்க வேண்டும். அவர்கள் கொடுத்த மார்க், பரிட்சையில் பெற்ற மார்க் இரண்டையும் கூட்டிப்பார்த்து அதிலே குறைந்த மார்க் வாங்கிய மாணவனுக்கு இடம் கொடுத்துவிட்டு அதிகமாக மார்க் வாங்கிய மாணவனுக்கு இடம் கொடுக்காமல் இருந்தால் அது அரசாங்கத்தின் குற்றம். அதிலே என்ன குற்றத்தை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறுகிறார்கள்; யாரிடத்திலே பணம் கொடுத்திருக்கிறார்கள் என்பதை யெல்லாம் தெளிவாகச் சொல்லவேண்டும். நீங்கள் கமிஷன் வையுங்கள் என்று சொல்லுகிறீர்கள். அதை இந்த மன்றமே விசாரிக்கலாம். நீங்கள் கொடுக்க வேண்டிய தகவலை இந்த மன்றத்திலே கொடுத்தால் நானே பொறுப்பேற்று விசாரித்து முடிவு செய்யத் தயாராக இருக்கிறேன். ஆகவே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த அளவோடு விவாதத்தை நிறுத்திக் கொண்டு அதற்கான ஆதாரங்களைக் கொடுக்க வேண்டுமே தவிர, பொதுவான குற்றச்சாட்டுகளாகக் கூறிக் கொண்டிருக்கக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நாங்கள் கேட்பது அதுவல்ல. டி.பிளஸ், டி.பிளஸ் மார்க் வாங்கியவர்கள் என்று சொல்லும்போது அது மாணவர்கள் வாங்கிய மார்க் அல்ல; யாரோ வாங்கிய மார்க் என்று சொல்லித் தப்பித்துக் கொண்டுபோய் விட்டார்கள்; பெற்றோர்கள் வாங்கிய மார்க் . . . .

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஐ அப்ஜக்ட் சார்; ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். திருப்பித் திருப்பி ஒரே விஷயத்தை நான் சொன்னேன் என்று சொல்கிறார்கள். நான் என்ன சொன்னேன் என்பது மன்றத்திலே இருக்கிறது. பெற்றோர்கள் வாங்கினார்கள் என்று நான் சொன்னதாக அவர்கள் மீண்டும் மீண்டும் இந்தச் சபையில் சொல்லுவதை அனுமதிக்கக் கூடாது. அதிலே ஒரு முடிவு பண்ணாமல் நான் விடுவதற்கில்லை; நானும் அவர் மாதிரிதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் ஒன்றைக் கூறினார்கள் என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள். அமைச்சர் அவர்கள் அப்படிக் கூறவில்லை என்று சொல்லுகிறார்கள் என்று சொன்னால் அதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதுதான் மரபு. அப்படிக் கூறவில்லை என்று சொன்ன பிறகும் அதையே பேசிக் கொண்டிருப்பது முறையல்ல. இப்படியே பேசிக் கொண்டு சென்றால் மேற்கொண்டு விவாதத்தைத் தொடர அனுமதி தர முடியாத நிலைமை ஏற்படும். இந்த விவகாரத்தில் சாட்ட வேண்டிய குற்றச்சாட்டு இன்னது; பையன் இவ்வளவு மார்க் வாங்கி இடம் கிடைக்கவில்லை; அதற்குக் காரணம் இது. இந்தப் பையனுக்கு இடம் கிடைத்திருக்கிறது; இவன் பணம் கொடுத்ததால் இடம் கிடைத்தது ; பணம் யார் கொடுத்தது ; எந்தப் பையனுக்கு இடம் கிடைத்தது ; எந்தப் பையனுக்கு இடம்

கிடைக்கவில்லை என்பதற்கான ஆதாரங்களை எல்லாம் என்னிடத்திலே கொடுக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அந்த அளவோடு இந்த விவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். இதிலே தவறு நடந்திருக்குமானால் அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ள அமைச்சர்கள் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, அந்த ஆதாரங்களோடு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுவதுதான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு அழகு. இதே நிலையில் மீண்டும் விவாதம் தொடருமானால் பேசுவதற்கு அனுமதி தரமுடியாத நிலைமைக்கு வர வேண்டியிருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : நிரூபிக்க வேண்டுமென்றால் எனக்கும் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். மார்க்குகள் பூராவையும் பப்ளிக் ஆகச் சொல்லுவார்களானால், ஒரு கமிஷன் நியமிப்பார்களேயானால் எல்லாவற்றையும் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். கமிஷன் போடுகிறேன் என்று சொல்லட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அந்தக் கமிஷன் நானேதான்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : அப்படியானால் அந்த மார்க்குகள் பூராவையும் சட்டசபையில் வையுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நான் பொறுப்பேற்றுக் கொள்ளுகிறேன் என்றால் இந்த மன்றம் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறது என்று தான் அர்த்தம். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மார்க்கை சட்டசபையில் வையுங்கள் என்று கூறுகிறார்கள். தவறுகள் என்னென்ன என்பதைத் தாங்கள் என்னிடத்திலே கொடுங்கள். இந்த அவையிலே கூற வேண்டுமென்ற தேவை கூட இல்லை. என்னுடைய அறையிலே வந்து தெளிவாக இன்னின்ன தவறுகள் என்று எழுதிக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்தால் அதை விசாரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : மதிப்பெண்களை வைக்க வேண்டுமென்று அடிக்கடி கூறுகிறார்கள். உயர்நீதி மன்றத்திலே இந்தப் பிரச்சினை எழுந்தபோது குழு அங்கத்தினர்கள், தலைவர்களுடைய வாதம் " யார் யாருக்கு எவ்வளவு மதிப்பெண்கள் போட்டோம் என்பது வெளியே தெரிந்தால் அது எங்களுக்கு ஆபத்து ; அப்படிப் பகிரங்கமாகக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் நாங்கள் குழுவிலே பணி செய்ய மாட்டோம் " என்று அறிவித்தார்கள். இந்த வாதத்தை உயர்நீதி மன்றம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதற்குப் பின்னர்தான் தனிப்பட்ட மாணவன் ' எனக்கு அதிகமான மார்க் வந்திருக்கிறது ; ஆனாலும் என்னைத் தேர்ந்தெடுக்கவில்லை ' என்ற குற்றத்தைச் சாட்டிக் கொண்டு வந்தால் உடனடியாக வங்கியில் டெபாசிட் செய்யப்பட்ட



மதிப்பெண்கள் பட்டியலை நீதிபதியிடத்திலே கொடுத்து அவர்களே பார்த்து, மாணவனுடைய வாதம் உண்மையாக இருக்குமானால் பரிகாரம் காண்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. உங்களை நாங்கள் நீதிபதியாக வைத்துக் கொள்ளுகிறோம். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த மாணவனுக்கு இவ்வளவு மதிப்பெண்கள் கொடுத்திருக்க வேண்டும் ; அவனுக்கு இடம் கிடைத்திருக்க வேண்டும் ; தவறு நடந்திருக்கிறது என்று கூறுவார்களானால் தாங்களே அந்த மதிப்பெண்களைப் பார்த்து தீர்ப்பு வழங்கலாம். இந்த அரசாங்கம் இதற்குத் தயாராக இருக்கிறது ; எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தயாரா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இப்போது நிதி ஒதுக்க மசோதா விவாதத்திற்குப் பதில் கூறுவார்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்க மசோதாவின் பேரில் மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொன்னதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எழுப்பினார்கள். அந்தப் பிரச்சினைகள் எழுப்பப்பட்டாலும் சபாநாயகர் அவர்கள் குறிப்பிட்டது போல் இந்த மன்றத்தினுடைய நடவடிக்கைகளினால் முழுப் பயன் அடைகின்ற வகையில் மக்களுக்குப் பலன் அளிப்பதாகவும், நம்முடைய மாநிலத்தின் நிர்வாகத்தைச் செம்மைப்படுத்துவதாகவும் அமைய வேண்டுமென்பதற்காக நீங்கள் எடுத்துக் கொள்ளுகின்ற முயற்சிக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தமிழ்நாட்டில் இந்தச் சோதனையான நேரத்திலே வறட்சி நிலைமையைச் சமாளிப்பதற்கு பல்வேறு கட்சியினரும், அரசாங்க ஊழியர்களும், பொதுமக்களும் நல்ல வகையில் இயற்கையின் உற்பாதத்தை சமாளிப்பதை ஒரு அறைகூவலாக எடுத்துக் கொண்டதால்தான் இந்த அளவுக்குச் சிறப்பாகக் காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. இவைகளிலே எந்தவிதமான சேதாரமும் ஏற்படாமல், எந்த விதமான தவறான வழிகளிலும் பணம் பயன்படுத்தப்படாமலும் இருக்க வேண்டுமென்பதற்காகப் பல பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்த நிதி ஒதுக்கீட்டு மசோதாவின் மீது சொன்ன நல்ல கருத்துக்களை வரவேற்கிறேன். தஞ்சை விவசாயத் தொழிலாளர்கள் பற்றிச் சொல்லும்போது கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் மீது பரிவோடு நடந்து கொண்டதாக திரு. சீமைச்சாமி அவர்கள் சொன்னார்கள். திரு. வரதராஜன் அவர்கள் பேசும்போது அதற்கு நேர்மாறாகச் சொன்னார்கள். தஞ்சை ஜில்லா விவசாய மக்கள் பற்றி வருகிற மசோதாக்களில் பேச வாய்ப்பிருப்பதால் அதுகுறித்து மேலும்

[திரு. கே. ஏ. மதியழகன்] [1969 ஆகஸ்ட் 25

விவாதிக்க நான் இப்போது முன்வரவில்லை எனக் கூறிக் கொண்டு இந்த நிதி ஒதுக்கீட்டு மசோதாவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, with regard to the admissions to the Medical Colleges, much heat has been produced. I want to raise a particular point and I want the Hon. Minister to clarify it. Whenever the Ministry appoint a Committee to examine it, it is not the business of the Committee to say that the marks which are allotted by them must be kept secret. Even in the case of the Union Public Service Commission Examinations, marks have been published. For instance, my younger brother who scored brilliant marks could secure only three zeros in the Union Public Service Commission Examinations and those marks had been printed in the book. So, the Ministry must give instructions to the Committee so as to enable them to publish them. Otherwise, let the Government not put them in the Committee.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்களின் விடையிலிருந்து தெளிவு பெறுவதற்கு விளக்கம் பெறலாமே தவிர யோசனை சொல்லக் கூடாது.

DR. H. V. HANDE : Sir, that point has been unanswered. We are granting nearly Rs. 20 crores and after all I will take only three minutes to clarify my point. Sir, much heat has already been produced and I do not want further heat to be produced. It is the business of the Ministry to say to the Members of the Committee, 'We are going to publish it and if there is any chance of their being manhandled, we will give the police protection'. If this facility for publication is provided, this sort of misunderstanding can be cleared. At the same time the students also can know what marks they have scored, whether they have got 30 or 35 marks out of 75. The Hon. Minister for Health or the Hon. Minister for Finance can clarify this point.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தக் குழுக்கள் அமைப்பதற்கு, தேர்ந்தெடுப்பதற்கு, ஒரு மரபு கையாளப்பட்டு வருகிறது. அந்த மரபின் அடிப்படையில்தான், அந்த வழிமுறைகளின் அடிப்படையில்தான் இனிமேலும் குழுக்கள் அமைக்கப்படும். அதில் குற்றங்குறைகள் இருந்தால், அவற்றைச் சுட்டிக் காட்டினால் அவற்றைத் தவிர்க்கவும் நீக்கவும் வழிவகைகள் தேடலாம். சர்வீஸ் கமிஷன் அல்லது வேறு பல குழுக்கள் அமைக்கப்படும்போது சில மரபுகள் அல்லது வழிமுறைகள் கையாளப்பட்டு வருகின்றன. அவ்வழிமுறைகள்தான் இப்போதும் கையாளப்பட்டு வருகின்றன. இனிமேலும் அப்படித் தான். குற்றங்குறைகளைச் சுட்டிக்காட்டினால் அவற்றைத் தீர்க்கலாம். புது வழிமுறையை ஏற்படுத்த இயலாது. குற்றங் குறைகளைத் தவிர்க்க வழிகள் தேடலாம் சுட்டிக்காட்டப் பட்டால் . . . .



1969 ஆகஸ்ட் 25]

THIRU K. VINAYAKAM Sir, on a point of further clarification.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யோசனை சொல்லாதீர்கள்.

திரு. கே. விநாயகம் : யோசனை சொல்ல மாட்டேன்.

Sir, much confusion has been created on the issue of selection of candidates for the M.B.B.S. Course. It is not as it every body can go to the High Court in the form of a writ or appeal in support of his claim and set right the defect. That is why we the Members belonging to the Opposition and the Ruling Party are asking the Government whether they will publish the entire thing or appoint a Judicial Commission to go into those things and then give a clear picture about them. Let them clear the issue to show that they are above board. Sir, you can pin me down under the Rules of the Assembly and ask me to resume my seat and I have to obey you. But that is not the way to clear the misunderstanding created in the country. Let them publish a big list containing particulars like, how many applied for the course what marks they got and the communities to which they belonged and also how did they fare in the interview. If these particulars are given, we can tell the country, 'The D.M.K. Party is above suspicion and they are very good people.' So, let them say 'yes' or 'no' to my point regarding enquiry.

திரு. நா. வீராசாமி : ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நம் சட்டமன்ற விதிகளில் எந்த விதியின் கீழ் அவர்கள் பேசுகிறார்கள் என்பதை தயவு செய்து தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : Sir, every Member has got a right to ask for further clarification. So, let the hon. Member read the Rules and then raise his point of order.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குப் பதில் சொல்ல நான் இருக்கிறேன். பாயின்ட் ஆஃப் ஆர்டர் இருக்கிறதா இல்லையா என்று சொல்ல நான் இருக்கிறேன்.

THIRU K. VINAYAKAM : Sir, it is a waste of time.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யார் டயத்தை வேஸ்ட் செய்கிறார்கள் என்று எனக்குத் தெரியும்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதற்கு முன் ஆண்டுகளை விட சென்ற ஆண்டும் இந்த ஆண்டும் தெளிவான முறையில்தான் மருத்துவக் கல்லூரித் தேர்வைப் பொறுத்தவரையில் நடைபெற்றிருக்கிறது. குழப்பம் என்பது, ஒரு சிலரிடம் என்ன ஏற்பட்டாலும் குழப்பம் ஏற்படுகிறது. அப்படிக் குழப்பம் ஏற்படுகிறவர்களிடத்தில்தான் இப்போதும் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. பெரும்பான்மையான மக்கள் இந்த அரசிடம் நம்பிக்கை வைத்துத்தான் இருக்கிறார்கள். சென்ற ஆண்டு நாற்பது, ஐம்பது பேர்களுக்கு குழப்பம் ஏற்பட்டு

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1969 ஆகஸ்ட் 25

வழக்குமன்றத்திற்குச் சென்றார்கள். நீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டது. இங்கு உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகள் அனைத்தும் அங்கு கேட்கப்பட்டு வழக்கறிஞர்கள் வாதாடக் கூடிய அளவிற்கு வாதாடி ஒரு நீதிபதியல்ல, இரண்டு மூன்று நீதிபதிகள் இருந்து தீர்ப்பளித்த பிறகு இந்த ஆண்டு நான்கு பேர்களுக்குக் குழப்பம் ஏற்பட்டு தீர்ப்புகளும் வந்திருக்கின்றன. அதை நாடு வரவேற்கிறது. எல்லோரும் திருப்திகரமாக இருக்கிறார்கள். இதற்கு முன்னால் இருந்த ஆண்டுகளை விட சென்ற ஆண்டும் இந்த ஆண்டும் திட்டவட்டமாக தெளிவாக நடைபெற்றிருக்கிறது. ஆகவே, இந்த அரசுக்கு எந்த ஐயப்பாடும் இல்லை. பிறருக்கும் எந்தவித ஐயப்பாடும் இல்லை என்பதைத் தெளிவாகச் சொல்ல முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி.

"தமிழ்நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 6) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 24/1969) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவு 2, அட்டவணை, குறுந்தலைப்பு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 6) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 24/69) நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

### (5) தமிழ்நாடு நான்காவது ஐந்தாண்டுத் திட்ட வரைவு மீதான விவாதம்—தொடர்ச்சி.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, I move the following amendment :—

Add at the end the following :—

and while on such consideration, this House gives its general approval and acceptance of the Draft Outline of the State's Fourth Five-Year Plan placed before it.

This House resolves that the State Government should convey to the Government of India the strong feeling of the people of Tamil Nadu in the following matters :

(i) In regard to the quantum of Central assistance this House views with regret the decision of the Planning Commission and the Government of India to reduce the assistance for the State's

3897

# Index to Tamil Nadu Legislative Assemlly Debates,

SIXTH SESSION OF THE FOURTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

(22ND, 23RD AND 25TH TO 28TH AUGUST 1969).

**Volume XXII (Nes. 1 to 6)**

TABLE OF CONTENTS.

*Friday*, *22nd August* 1969.

PAGES.

Personnel of the Government of Tamil Nadu ... i–iv
Principal Officers of the Tamil Nadu Legislative Assembly ... ... ... ... ... v
List of Members of the Tamil Nadu Legislative Assembly with their constituencies ... ... vi–xii
1. Questions and Answers ... ... ... 1–26, 26–31
2. Points of Order—
(i) Extension of question-hour ... ... 26
(ii) Supply of full information during question-hour ... ... ... ... ... 31–36
(iii) Minister's refusal to answer questions ... 36–39
3. Adjournment motions—
(i) Fire out-break in Madras City ... ... 39
(ii) Police harassment of the coastal fishermen in Kanyakumari district ... ... ... 39
(iii) Non-maintenance of law and order situation in Ezhayirampannai village ... ... 40
4. Announcement—
Change in the Business of the House ... ... 40
5. Calling Attention—
Lifting of ban on transport of rice and its consequences ... ... ... ... 41–44
6. Government Bill—
The Tamil Nadu Electricity Supply Undertakings (Acquisition) Amendment Bill, 1969 ... 44

*Friday*, 22nd *August* 1969—cont.


| | PAGES |
|---|---|
| 7. Government Motion— | |
| Discussion of the Draft Outline of the Fourth Five-Year Plan of Tamil Nadu ... | 44–97 |
| 8. Papers laid on the Table ... ... ... | 97–98 |

*Saturday*, 23rd *August* 1969.

| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... | 105–137 |
| 2. Privilege Matter— | |
| Thiru P. G. Karuthiruman's statement and its publication in 'Navasakthi' ... ... | 137–147 |
| 3. Announcements— | |
| (i) Election to the Madurai University Senate ... | 147–148 |
| (ii) The Tamil Nadu Appropriation (No. 5) Bill, 1969 ... ... ... ... ... | 202 |
| (iii) The Tamil Nadu Appropriation (No. 6) Bill, 1969 ... ... ... ... ... | 203 |
| 4. Government Bills— | |
| (i) The Tamil Nadu Gudalur Janmam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1969 (L.A. Bill No. 4 of 1969) ... | 148 |
| (ii) The Tamil Nadu Appropriation (No. 5) Bill, 1969 ... ... ... ... ... | 202–203 |
| (iii) The Tamil Nadu Appropriation (No. 6) Bill, 1969 ... ... ... ... ... | 203 |
| 5. Voting on Demands for Grants for Excess Expenditure in the year 1965–69 ... ... | 148–149 |
| 6. General discussion on the First Supplementary Statement of Expenditure for the year 1969–70 ... ... ... ... ... | 149–196 |
| 7. Voting on Demands for Grants for Furhter Expenditure in 1969–70 ... ... ... ... | |

A. EXPENDITURE ON REVENUE ACCOUNT.

| | |
|---|---|
| DEMAND No. 2. Motor Vehicles Acts—Administration | |
| " 3. General Sales Tax and Other Taxes and Duties—Administration | 197 |
| " 5. Registration Department | |
| " 8. Head of State Ministers and Headquarters staff | |




*1969 ஆகஸ்ட் 25]* [Thiru K. A. Mathialagan]

Plan from Rs. 250 crores as earlier promised to Rs. 202 crores and requests that the amount should be increased so as to make possible the fulfilment of a Plan of Rs. 624 crores;

(ii) this House feels that it is unfortunate that the Government of India are not proposing to start any new project in the Central sector in this State during the Fourh Five-Year Plan period; and in particular this House urges that the Government of India should proceed expeditiously with the implementation of the following Central sector projects, the economic viability and technical feasibiliy of which have been well established :—

(1) Salem Steel plant

(2) Sethusamudram project

(3) Second mine cut at Neyveli

(4) Expansion by 200 MW. of the installed capacity of the Kalpakkam Atomic Energy Plant; and

(iii) the State Government should move the Government of India to accord early approval for the setting up of a Fertilizer Project at Tuticorin and for a petro-chemical complex at Manali; and

(iv) this House further urges the Government of India to entrust with the State Government the Managements of all public sector undertakings like Neyveli Lignite Corporation, etc., in order to ensure greater profitability and efficiency.'

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* இப்பொழுது மணி 12 ஆகிவிட்டது. இன்னும் 1½ மணி நேரம் தான் இருக்கிறது. எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கால் மணி நேரம் வேண்டுமென்று சொன்னார்கள். 14 பேர்கள் பேசுவதற்குப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு உறுப்பினரும் ஐந்து நிமிஷங்களுக்குள் பேசி முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

*திரு. க. இராமமூர்த்தி :* மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, இந்த நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் குறிப்பின்மீது பேசுகின்ற நான், சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

(திரு. ந. தருமலிங்கம் தலைமை)

இந்த நான்காம் ஐந்தாண்டுத் திட்ட நகலைச் சமர்ப்பித்த அமைச்சரவர்கள் சில தனிப்பட்ட குறிப்புகளைச் சொன்னார்கள். அவர்கள் சொல்லுகின்ற நேரத்திலே, இந்த ஐந்தாண்டுத் திட்டம் தீட்டப்படும் நிலைமையும், இது எப்படி அனுமதிக்கப்படுகிறது என்ற நிலைமையையும் சொல்லி, இதற்காக இருக்கின்ற நேஷனல் டெவலெப்மெண்ட் கவுன்சிலினுடைய நடவடிக்கைகளைப்பற்றி அவர்களுடைய கருத்துரைகளைச் சொன்னார்கள். அவர்கள் சொல்லுகின்ற நேரத்தில், நேஷனல் டெவலெப்மெண்ட் கவுன்சில் என்பது பொழுதுபோக்குச் சங்கம் போன்று இருக்கிறதே தவிர,

[திரு. க. இராமமூர்த்தி] [1969 ஆகஸ்ட் 25

உரிய அளவிலே நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பரிசீலனை செய்யவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். எனக்கிருந்த வேதனையெல்லாம், அந்தப் பொழுதுபோக்குச் சங்கத்திலே, நேஷனல் டெவலெப்மெண்ட் கவுன்சில் என்று சொல்லுகின்ற அந்தப் பொழுதுபோக்குச் சங்கத்திலே, இந்தச் சர்க்காரின் பிரதிநிதிகள் ஒரு அங்கம் வகித்தார்கள், அவர்கள் அந்தப் பொழுதுபோக்குச் சங்கத்திலே எந்த அளவிலே பொழுது போக்கினார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. ஒன்று, இவர்கள் நம்முடைய இந்த மாநிலத்தினுடைய தேவைகளைக் குறிப்பிட்டு அங்கே, போராடியிருக்க வேண்டும், அல்லது அது பொழுது போக்குச் சங்கமாக விளங்குகிறது, ஆகவே நான் பங்கெடுத்துக் கொள்ளமாட்டேன் என்று சொல்லியிருக்க வேண்டும். இந்த இரண்டையும் சொல்லாமல், அங்கே கருத்துரைகளைச் சொல்வதும், இங்கே வந்து பொழுதுபோக்குச் சங்கம் போல் இருக்கிறது என்ற குற்றச்சாட்டைச் சொல்வதும், மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் அல்லது இந்த மாநில அரசுக்கும், மற்ற மாநில அரசுகளுக்கும் இடையே வேற்றுமைகளை, சண்டைகளை வளர்ப்பதாக இருக்குமே தவிர நல்ல சூழ்நிலை இருக்காது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னொன்று, வெறும் பிரச்சாரத்திற்காக இருக்கிறதே தவிர, பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் அமையவில்லை. விரிவான திட்டம் என்று சொல்லி சில குறிப்புகளைத் தந்திருக்கிறார்கள். அதில் ஒன்று, எல்லாக் கிராமங்களுக்கும், தமிழகத்திலே இருக்கிற எல்லாக் கிராமங்களுக்கும் மின் வசதி செய்து தருவது. அடுத்தது, எல்லாக் கிராமங்களுக்கும் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்த்து வைப்பது. இவற்றிலே எந்த அளவிலே இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலமாக நிறைவேற்றயிருக்கிறார்கள் என்ற நிலைமையைப் பார்த்தால் இவர்களால் அதைச் செய்ய முடியுமா என்ற பிரச்சினை எழுகிறது. திட்டங்களைப் பற்றி இவர்கள் இன்னமும் முடிவெடுக்கவில்லை என்று தெரிகிறது. இந்த இரண்டு பிரச்சினைகளுக்கும் இவர்கள் பதில் சொல்லியாக வேண்டும். ஐந்தாண்டுத் திட்டங்களையும், மற்ற நிலைமைகளையும் இந்த மன்றத்தின் முன்னாலே வைத்து, அதன்மூலம் இந்த நாட்டிற்குப் பயனைத் தேட வேண்டுமே தவிர, வெறும் பிரச்சாரத் திற்காக வைத்து, நாங்கள் இவைகளையெல்லாம் செய்வோம் என்று சொல்வதைத் தவிர, முடிக்கின்ற காலத்தில் முடித்தார்களா என்றால் முடிக்கவில்லை என்றுதான் நாங்கள் பல நேரத்திலே காண்கிறோம். இப்பொழுது இதற்காகக் குறிக்கோளாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர, இதைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை அமைத்திருக்கிறார்களா என்றால் இல்லை. நான்காவது ஐந்தாண்டுதிட்டக் குறிப்பிலே தெளிவாக அவர்கள் சொல்லவில்லை.



1969 ஆகஸ்ட் 25] [திரு. க. இராமமூர்த்தி]

இன்னொன்று, கிராமப் பஞ்சாயத்து, பஞ்சாயத்துப் பெருமன்றங்களுக்குப் போதுமான நிதி ஒதுக்கீடு இந்த ஐந்தாண்டுத் திட்ட வரைவுக் குறிப்பிலே எடுக்கப்படவில்லை. இவர்கள் கிராமங்களை, இந்த நாட்டின் முன்னேற்றப் பகுதிகளாகச் செய்கிறோம் ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலமாக என்று சொல்கிறார்களே தவிர, ஐந்தாண்டுத் திட்டங்களில் கிராமங் களுக்கு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்களா என்றால் இல்லை என்றே சொல்லலாம். இப்பொழுது வந்துள்ள பஞ்சத் துயர் தணிப்பு நிதியை வைத்துக் கொண்டு, மத்திய சர்க்கார் கொடுத்த பணத்தை வைத்துக் கொண்டு, அந்தச் செலவுகளை முடிக்கிறார்களே தவிர, கிராமப் பஞ்சாயத்து, பஞ்சாயத்துப் பெருமன்றங்களுக்கு சென்ற ஆண்டு செய்ய வேண்டிய இந்தப் பஞ்சத் துயர் தணிப்பு வேலைகளின் மூலம் மாற்றி விட்டார்களே தவிர, பஞ்சத் துயர் தணிப்பு வேலைகளுக்காகத் தனியாகப் பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்துப் பெருமன்றங்களும் ஒவ்வொரு ஆண்டும் செய்ய வேண்டிய வேலைகளைத் தொடர்ந்து செய்யக்கூடிய நிலையில் இல்லை. அந்த வேலைகளை நிறுத்தி, அந்தப் பணத்தை, அதற்கான நிதி ஒதுக்கீட்டைக் குறைத்துவிட்டு, அதைப் பஞ்சத் துயர் தணிப்பு வேலைகளுக்காக உபயோகப்படுத்திக் கொண்டார்களே தவிர, புக் அட்ஜஸ்ட்மெண்ட் செய்தார்களே தவிர, இவைகள் பிரச்சாரத் திற்காகச் செய்ததுதானே தவிர, உண்மையாகப் பார்க்கும் பொழுது, கிராம அபிவிருத்தி வேலைகள் நடைபெறவில்லை.

இன்னொன்று, பல திட்டங்களைக் கொடுக்கிறார்கள். மத்திய சர்க்காரிடம், புதிய தொழிற்சாலைகளை அமைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். மத்திய சர்க்கார் புதிய முதலீடு செய்து, புதிய திட்டங்களைப் போட்டு, புதிய தொழிற்சாலைகளை உண்டாக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அவ்வாறு உண்டாக்கவில்லை என்று குற்றச்சாட்டைச் சொல்லுகிறார்கள். நான் இவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அமைத்திருக்கும் தொழிற்சாலைகளை நீங்கள் எந்த அளவுக்குப் பாதுகாத்திருக்கிறீர்கள்? நெய்வேலியை ஒழுங்காக நடத்து கிறார்களா? அங்கே, தொழிலாளர்களிடையே சிக்கல் ஏற்பட்ட பொழுது, அங்கே அதற்கான பாதுகாப்பு தரப்பட்டதா? அது போலவே, இரயில்வே இலாக்காவிற்கு ஏதாவது பாதுகாப்பு தரப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன். இந்த மாநிலத்திலே எந்தத் தகராறு ஏற்பட்டாலும், எந்த மாதிரி ஏற்பட்டாலும், மத்திய சர்க்காரினுடைய ஆலைகளை, மத்திய சர்க்காரின் நிறுவனங்களைத் தகர்ப்பதிலே, ஈடுபடும்பொழுது, போதுமான அளவிலே, நல்ல அளவிலே நடவடிக்கை எடுக்காத ஒரு சர்க்காரை நாம் இங்கே வைத்துக்கொண்டு, மத்திய சர்க்காரைப் பார்த்து, எங்கள் மாநிலத்திலே தொழிற்சாலைகளை நடத்துங்கள், முதலைக் கொண்டு வாருங்கள் என்று கூற நமக்கு என்ன உரிமையிருக்கிறது?

[திரு. க. இராமமூர்த்தி] [1969 ஆகஸ்ட் 25

அதைப்போலவே, பணத்தை ஒதுக்கும்பொழுது எப்படிச் செலவிடுகிறார்கள். படியரிசித் திட்டம் என்று சொல்லுகிறார்கள். இதற்காக 8 கோடி, அதற்காக 10 கோடி என்று சொல்லி, எதெது இந்த நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு ஒழுங்காக அமையாதோ அந்த வீணான செலவுகளுக்குச் செலவு செய்துவிட்டு ஆயிரம் கோடி தாருங்கள், நாங்கள் நாட்டை முன்னேற்றிவிடுகிறோம் என்று சொல்லக்கூடிய அளவில் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கும்வரையில், ஆயிரம் கோடி ரூபாய் அல்ல 4,000 கோடி ரூபாய் வந்தாலும் இந்த நாட்டை முன்னேற்ற முடியாது. ஒழுங்காகத் திட்டங்களைப் போட்டு, இதை யெல்லாம் செய்ய வேண்டுமே தவிர, இதற்கு மத்திய சர்க்கார் கொடுக்க வில்லை, மத்தியப் பேரரசு, ஏகாதிபத்திய அரசு என்று சொல்லிக் கொண்டிருக்கும் நிலைமை இருக்கக் கூடாது. நீங்களும் மத்திய சர்க்காரிலே இல்லையா ? உங்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் இல்லையா ? மத்திய அரசு பேரரசு என்று சொன்னால் அதை நடத்துவதில் உங்களுக்கும் பொறுப்பிருக்கிறது அல்லவா ? மத்தியப் பேரரசு என்று சொன்னவுடனே உங்கள் உறவு விட்டுவிடுகிறதா ? அது பேரரசு, இது சிற்றரசு என்று சொல்லிக் கொண்டிருப்பது விளம்பரத்திற்காக இருக்குமே தவிர வேறொன்று மில்லை. (மணியடிக்கப்பட்டது) இன்னும் சில நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 14 உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. நேரம் ஒன்றரை மணிக்கும் குறைவாக இருக்கிறது. உங்களுக்கு ஐந்து நிமிடங்களுக்கு மேல் கொடுத்தால், ஒவ்வொரு உறுப்பினருக்கும் அவ்வாறு அதிகமாகக் கொடுக்க வேண்டியிருக்கும். ஆகவே, தயவு செய்து, உறுப்பினர்கள் ஐந்து நிமிடங்களுக்குமேல் எடுத்துக்கொள்ள வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

திரு. சி. வே. வேலப்பன் : துணைத் தலைவரவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பரிசீலனையில் நானும் என்னுடைய ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் குறிப்பை நமக்குக் கொடுத்திருக்கும் பொழுது, அந்தக் குறிப்புகளை நன்றாகப் பார்க்கின்றபொழுது, மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரம் இல்லாத காரணத்தால், மத்திய சர்க்கார் திட்டங்களைத் தீட்டுகின்ற பொழுது மாநில அரசைக் கலக்காத காரணத்தால், மாநில அரசினுடைய நோக்கம் நிறைவேற்றப்பட முடியாத நிலையில் இருக்கிறது என்பது தெள்ளத் தெளிவாகத் தெரியப் படுத்திக் கொண்டிருக்கிறது. ஆகவே, மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரங்கள் தேவை, தேவை என்று மற்ற எல்லா உறுப்பினர்களும் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான வழிவகைகளை இந்த அரசு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.



1969 ஆகஸ்ட் 25] [திரு. சி. வே. வேலப்பன்]

அதோடு, இப்பொழுது இந்தக் குறிப்பில் கண்டிருப்பது இறுதியான முடிவு அல்ல, இன்னும் உறுப்பினர்கள் நல்ல திட்டங்களைக் கொடுப்பார்களேயானால் அந்தத் திட்டங்களையும் சேர்த்துக்கொள்ள இயலும் என்று குறிப்பில் கண்டிருக்கிறது. அந்தக் குறிப்பைப் பார்க்கின்றபொழுது, சட்டமன்ற உறுப்பினர்கள் இப்பொழுது திட்டங்களைக் கொடுத்தாலும், நல்ல திட்டங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்று அரசு தெரிவிக்கிறது. ஆகவே, இந்தத் திட்டங்களை ஆரம்பத்தில் போடும்பொழுதே, சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்து, அந்தந்தத் தொகுதியில் இருக்கின்ற குறைபாடுகளை எப்படி நீக்க வேண்டுமென்று, குறிப்பாக ஒரு நல்ல திட்டங்களைக் கேட்டிருக்க வேண்டும். அப்படிக் கேட்டிருந்தால், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் இருப்பார்கள் அந்த வகையிலே இப்பொழுது என்னுடைய சொந்தத் தொகுதியிலேயிருக்கும் ஒருசில குறைபாடுகளைச் சொல்லி, அந்தத் திட்டங்களையும் அவசியம் சேர்த்துக்கொள்ள வேண்டும். பெரிய முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தும்வகையில் நான் இந்தத் திட்டங்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பல ஆண்டுக்காலத்திற்கு முன்பாக என்னுடைய தொகுதி மட்டுமல்ல, சேலம் மாவட்டத்திலிருக்கின்ற திருமணிமுத்தாறு, பொன்னியாறு என்ற திட்டம் பயனுள்ள திட்டம் பொதுமக்களும் அப்பொழுதிருந்த அமைச்சர்களிடத்தில் முறையீடு செய்தார்கள். இருந்தும் இன்னும் அது நிறைவேற்றப்பட முடியாத நிலை யிருக்கிறது. இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் குறிப்பில் தற்போது அதை எடுக்கும் வகையிலே அதுபோன்ற திட்டங்களைச் சேர்த்துக் கொள்ள இயலும். அதற்காகச் சில கோடி ரூபாய்கள் கேட்கப்பட்டிருக்கிறது. இது காவிரியில் மேட்டூர் அணைக்குப் பக்கத்திலுள்ள பிரச்சினை. இந்தத் திருமணிமுத்தாறு, பொன்னியாறு என்ற திட்டத்தைச் சேர்த்துக்கொள்ள வேண்டு மென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். அடுத்து, நான் சார்ந்திருக்கும் தொகுதியில் திருமணிமுத்தாறு-பொன்னியாறு திட்டம், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எனது தொகுதியில் முக்கிய பெரிய திட்டமாகும். ஆகவே, இந்தத் திட்டத்தை அவசியம் சேர்க்கவேண்டுமென்று கேட்டு, நான் சார்ந்துள்ள பகுதியிலிருக்கின்ற ராஜா வாய்க்கால் திட்டத்தைப் பற்றி ஒருசில கருத்துக்கள் கூற விரும்புகிறேன். காலம் அதிகமாக இல்லாத காரணத்தால்—நான் அதிகம் பேசாது இருக்கின்ற காரணத்தால்—தயவு செய்து துணைத் தலைவர் அவர்கள் இரண்டு நிமிடம் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் சார்ந்திருக்கின்ற அந்தப் பகுதியை 1952-லிருந்து வாய்க்காலில் அனுமதியின்றி தண்ணீர் எடுக்கின்ற பகுதியாக அரசு செய்துவிட்டது. காரணம், பெர்மிட் கொடுக்கிற நேரத்தில் 50 ஏக்கர் அதிகமாக இருக்கிறது என்று தவிர்த்தும், உரிய

[திரு. சி. வே. வேலப்பன்] [1969 ஆகஸ்ட் 25

காலத்தில் கொடுக்காமல் விட்டதும்தான். அதன் காரணமாக, மக்கள் தொடர்ந்து தண்ணீர் எடுத்து, அந்தப் பகுதியிலே உள்ளவர்கள், முன்னால் இருந்த அரசை நம்பி, திட்டங்கள் தீட்டி— பல கோடி ரூபாய் திட்டங்கள் என்று கூடச் சொல்லலாம்— இப்பொழுது பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பல இலட்சம் ரூபாய்களை செலவிட்டு அவர்கள் திட்டம் தீட்டி, தண்ணீர் எடுக்கின்ற நிலையில், இன்றைய அரசு அதனைத் தீவிரமாகப் பரிசீலித்து, முன்பிருக்கிற ஆயக்கட்டுகளைப் பாதிக்காத வகையில் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தண்ணீர் கொடுப்பது தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் அது நியாயமான பிரச்னை என்பதை உணர வேண்டும். முந்திய அரசு அதை செய்யாத காரணத்தாலே, முன்பு ஆயக்கட்டில் விவசாயம் செய்த விவசாயிகளும், தண்ணீர் எடுத்துக் கொண்டிருந்த விவசாயிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை மேற்கொள்ளுவதற்கு, அந்த வாய்க்கால்களை மராமத்து செய்வதற்கு சில இலட்சம் ரூபாய்கள் இருந்தால் போதும். அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கு சில இலட்சம் ரூபாய்களே போதுமாகையால், அதைச்செலவிட்டு, அந்த வாய்க்கால்களை மராமத்து செய்கின்ற வகையிலே புதிதாக எதிர் நோக்கி இருக்கிற இந்த திட்டத்தையும் நிறைவேற்றி, தண்ணீர் வசதியையும் அளித்து, முன்பிருந்த விவசாயிகள் பாதிக்கப்படாமலிருக்கும் வகையில் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று இந்த அமைச்சரவையைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பகுதியில் ஏரி, குளங்கள் ஏராளமாக இருக்கின்றன. அதிகாரிகள் திட்டங்களை நிறைவேற்றுகின்றபோது, சட்டமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் இவர்களைக் கலக்காத காரணத்தால் இந்த நல்ல திட்டங்கள் கூடக் கைவிடப்பட்டன. இனிமேல் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை எடுக்கின்றபோது சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரையும் கலந்து, திட்டத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று பணிவோடு தெரிவித்து, இந்தத் திட்டத்தின்மீது பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. மா. இராசாங்கம்: துணைத் தலைவரவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்ட நகலை வரவேற்று என்னுடைய கருத்தாக சிலவற்றை சொல்ல முன் வருகிறேன். இதுவரைத் தீட்டப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்களைப்பற்றி ஒருகணம் நினைத்துப் பார்க்க வேண்டும். இதுவரை போட்ட 3 ஐந்தாண்டுத் திட்டங்களும் ஏழைகளுக்காக போடாத ஐந்தாண்டுத் திட்டங்கள். (திரு. விநாயகம் குறுக்கீடு) அதை நான் சொல்லவில்லை. ஏழைகளுக்காகப் போடவில்லை என்று நந்தா சொல்லியிருக்கிறார். அருமை நண்பர் விநாயகத்திற்குத் தெரியும், நந்தா எங்கள் கட்சிக்காரர் அல்ல என்பது. The three Five-Year Plan did not touch the poor class



1969 ஆகஸ்ட் 25] [திரு. மா. இராசாங்கம்]

யாரைத் தேடிப் போயிருக்கின்றன போட்ட மூன்று ஐந்தாண்டு திட்டங்களும்? ஏழைகள் என்ன 2 சதவீதமா இருக்கிறார்கள். இந்த நாட்டில்? ஏறத்தாழ 80 சதவீதத்திற்கு மேல் இருக்கிறார்கள் ஏழைகள். ஆக, போட்டு முடிந்த ஐந்தாண்டுத் திட்டங்கள், வெளிநாட்டிலேயிருந்து வாங்கிய ஏராளமான பணம், யாருக்குப் போயிருக்கிறது? 20 சதவிகிதம் உள்ள பணக்காரர்களுக்காக அந்தத் திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். ஆக, இனிமேல் வருகிற திட்டங்கள் ஏழைகளை அண்டி வருகிற திட்டமாக இருக்க வேண்டும். போட்ட மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களும் மக்களால் வரவேற்கப்படவில்லை என்பதற்கு ஆதாரம் இருக்கிறது. போட்டவை பெரிய திட்டங்கள் தான். ஆனால் பெரிய வேலைகள் எல்லாம் நடந்திருக்கின்றன. அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

சாதாரணமாக, ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்படுத்திய அணைக் கட்டுகளில் கான்டிராக்டு எடுத்தவர்கள் இன்றைக்குப் பணக்காரர்களாகியிருக்கிறார்கள். இரயில் ஏறி, குந்தா ஸ்கீமுக்கு எப்படிப் போவது என்று தெரியாதவர்கள் எல்லாம் இன்றைக்கு வீட்டுக்கு பெரிய இரயிலையே கொண்டு வந்தார்கள், அவ்வளவு வசதியோடு வந்திருக்கிறார்கள். கான்டிராக்டர்களைத் தேடிச் செலவு செய்திருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஏழைகளுக்கு அந்தத் திட்டங்களால் பயன் ஏற்பட வேண்டும். உதாரணமாக, தூத்துக்குடி துறைமுகத் திட்டம், பெரிய திட்டம். அந்தப் பெரிய திட்டத்தை, ஜனநாயக முறைப்படி கணக்கிட்டு பார்த்தால் பொதுமக்கள் வரவேற்கவில்லை. காங்கிரஸ்காரர்கள் நிறைவேற்றி இருக்கிற திட்டங்களை பொதுமக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை; அதனால்தான் தூத்துக்குடியில் அருமை நண்பர் சிவசாமி அவர்கள் வந்திருக்கிறார்கள். பொதுமக்கள் அந்தத் திட்டத்தை ஒத்துக்கொள்ளவில்லையென்று தான் பொருள். ஒரு சர்க்கார் போட்ட ஒரு திட்டத்தை வாக்கெடுப்பு விடும்போது ஜனநாயக முறைப்படி அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லையென்றால் அது ஒரு பயனற்ற திட்டமாக இருக்கிறது என்றுதான் பொருள்படும். வைகை ஸ்கீமை நடத்தி வைத்திருக்கிறார்கள், வரவேற்கிறோம். ஆனால், அங்கிருந்து வந்திருப்பவர் அடுத்த எதிர்க்கட்சிக்காரர் தான். லோயர் காம்ப் இருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியும். திருச்சி பாய்லர் தொழிற்சாலை நிறைவேற்றி இருக்கிறார்கள். அருமை நண்பர் மணி வந்திருக்கிறார். பரம்பிக்குளம்-ஆளியாறு வந்திருக்கிறது. யார் வந்திருக்கிறார்கள்? எப்படி வந்திருக்கிறார்கள்? ஏழைகளுக்கு அது போய்ச் சேரவில்லை. ஏழைகளுக்குப் போய்ச் சேருகிற திட்டத்தை தான் போட வேண்டுமெயொழிய, ஏழைகளுக்குப் பயன்படாத திட்டங்களாக இருக்கக் கூடாது.

நேற்று முன்தினம் விநாயகம் அவர்கள் உணவுப் பிரச்னையைப் பற்றிச் சரியாகச் சொன்னார்கள். இல்லாமை என்று ஒரு நிலைமையும் இருக்கிறது. இருந்தும் இல்லாமை என்றும் ஒரு நிலைமை இருக்கிறது. அரிசி கிடைத்துக் கொண்டிருந்த காலத்தில்,

[திரு. மா. இராசாங்கம்] [1969 ஆகஸ்ட் 25

குளங்களிலே தண்ணீர் பெருகிய காலத்தில், வாய்க்கால்களிலே தண்ணீர் நிரம்பி இருந்த காலத்தில், சர்க்கார் கொள்கையின் காரணமாக, அரிசிக்காக மக்களை நீங்கள் வீதியிலே நிற்க வைத்தீர்கள். ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். எங்களுக்கு இப்பொழுது பற்றாக்குறை இருக்கிறது. அதைக் கூட நாங்கள் சொல்லவில்லை. மழை இல்லாத நேரத்திலே கூட, இந்தச் சர்க்கார் மின்சாரத்தை வெட்டியது கிடையாது. மின்சார சீர் திருத்தம் எப்படி இருக்கிறது ? நீங்கள் மக்களை க்யூ வரிசையில் நிற்க வைத்தது மட்டுமல்ல. அரிசி கேட்டு வந்தவர்களைச் சுட்டிருக்கிறார்கள். கோயம்புத்தூருக்கு மட்டும் ஏன் அரிசி, சென்னைக்கு மட்டும் ஏன் அரிசி என்று வினாயகம் அவர்கள் கேட்பது வாடிக்கை. ஒரு படி அரிசி போடவில்லையென்று அவர் சொல்ல முடியாது. எல்லாருக்கும் போடவில்லையென்று தான் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இரஷ்ய நாட்டைப்பற்றி அவர்களுக்குத் தெரியும். அது வளர்ந்துள்ள நாடு என்பதும் அவருக்குத் தெரியும். அவர்கள், முன்னேற்றப் பாதையை நோக்கித்தான் நாங்கள் நடந்து கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். படி அரிசி போடப்படுகிறது.

பல திட்டங்களைப் பற்றிச் சொல்லும்போது ரோடுகளைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அதில் நாஷனல் ஹைவேஸ் தன்னுடைய பங்கினை தமிழ்நாட்டில் சரியாகச் செய்யவில்லை. ஏதோ ஒருகாலத்தில் கன்னியாகுமரி முதல் இமாலயம் வரை போட்ட ரோடு தவிர, அடுத்த நெடுஞ்சாலைகள் விடப்பட்டிருக்கின்றன. மாநில சர்க்கார் சொல்லியும் மத்திய சர்க்கார் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. மதுரையிலிருந்து மேற்கு பகுதி, மதுரையை ஒட்டி பாதி மதுரை மாவட்டத்தினுடைய முழு பாதி 80 சதவிகிதம் மேற்கு பகுதியில் இருக்கிறது. நாஷனல் ஹைவேஸ் ரோடுகளை மேற்குப் பகுதியில் போட்டாக வேண்டும்.

பின் தங்கிய வகுப்பினர்களைப்பற்றி நன்கு ஆராய்ந்து பார்க்க வேண்டும். முதலமைச்சர் இருக்கும்போது கூட இதைப்பற்றி, பின்தங்கிய வகுப்பினர் மாநாட்டில் கூறி இருக்கிறோம். பின் தங்கிய வகுப்பினர் என்று இருக்கிறார்கள். பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்றும் இருக்கிறார்கள். பின்தங்கிய வகுப்பினர் என்பது இயற்கையாகத் தெரிகிறது. பிற்படுத்தப்பட்ட மக்கள் என்பதில் செயற்கை இருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் ஏன் பின் தங்கினார்கள் என்பதையும் ஏன் பிற்படுத்தப்பட்டார்கள் என்பதையும் ஆராய்ந்து எப்படி எப்படி செயல்பட வேண்டுமோ அப்படிச் செயல்பட வேண்டுமே தவிர, ஏதோ ஒரு விதத்தில் மட்டும் அவர்களுக்கு வழி கொடுப்பதாகக் கூறுவது தவறு. பின்தங்கிய மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக இருக்கிற காரணத்தால், உத்தியோகத்தில் வாய்ப்புக் கொடுக்கும்போது குறைந்தபட்சம் இவ்வளவு என்று அவர்களுக்கு ஒதுக்க வேண்டும் என்று கூறுவதை இவர்கள் தடுப்பது, கசாப்பு கடைக்காரனிடம் ஆட்டைத் தள்ளிவிடுவதாக இருக்கிறது என்று சொல்லி, ஏழைகளை



1969 ஆகஸ்ட் 25] [திரு. மா. இராசாங்கம்]

சுற்றியே இந்தத் திட்டம் வரவேண்டும், மற்றவர்களுக்குப் போவதைவிட ஏழைகளுக்காக இருக்க வேண்டுமென்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. கே. பி. எஸ். மணி : மதிப்பிற்குரிய துணை சபாநாயகர் அவர்களே, இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிப் பேசும்போது அந்தத் திட்டம் அமைக்கப்பட்டிருக்கிறதை நோக்கும்போது கூட வேடிக்கையாக இருக்கிறது. இந்த நாட்டுக்குத் தேவையான அளவுக்கு இந்தத் திட்டத்திலே ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. இதைப் பல ஆண்டுகளாகவே சொல்லி வருகிறோம், இந்தத் திட்டம் தயார் செய்கிற முறையே தவறு என்று. குறிப்பாக, ஒரு அலுவலகத்திலே, விவசாயத்தை எடுத்துக்கொண்டால், விவசாயத்திலே அனுபவப் பட்ட, தெரிந்த, அவர்கள் என்னதான் படித்திருந்தாலும், நேர்முகமாகப் படித்த அதிகாரிகளைக் கொண்டு, அல்லது பல ஆண்டுகள் அனுபவப்பட்ட அதிகாரிகளைக் கொண்டு திட்டம் தீட்டினாலொழிய இந்த இலாகா நம்முடைய திட்டத்தில் முறையாக வராது. கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப் பார்க்கும் பொழுது அவைகளெல்லாம் ஏழைகளுக்காகவே தீட்டப்பட்டது என்று சொன்னார்கள். அவைகளின் பலன் கடைசி வரையில் நேரடியாக ஏழைகளுக்குப் போய்ச் சேரவில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மையாகும். இந்தத் திட்டத்தின் பலன் நேரடியாக ஏழைகளுக்குப் போய் சேருகிறதா என்று பார்த்தால், இல்லவே இல்லை. பற்றாக்குறை இருக்கிறது. வருகிற ஆண்டுகளில் திட்டத்தை தீட்டும்பொழுது, அமைப்பு முறையை ஏற்படுத்தும்பொழுது, உண்மையிலேயே நல்ல பரீட்சார்த்தமாக உள்ள, அனுபவம் உள்ள அதிகாரிகளையே அதில் நியமிக்க வேண்டும். இப்பொழுது இருக்கும்படியான நிலையைப் பார்க்கும் பொழுது ஒரே இலாகாவில் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றுகின்ற செயலாளரோ, டைரக்டரோ இல்லை. இந்த ஆண்டுக்கு ஒரு இலாகா, அடுத்த ஆண்டுக்கு ஒரு இலாகா, 6 மாதங்களுக்கு ஒரு இலாகா என்று அவர்களை மாற்றிக் கொண்டே இருக்கிறார்கள். இந்த நிலையில் அவர்கள் மக்களுடைய தேவைகளை அறிந்து, திட்டங்களைத் தீட்டுகின்ற அளவுக்கு நுண்ணிய கருத்துக்களைச் சொல்கிற அளவுக்கு, ஏழைகளுக்கு இந்தத் திட்டங்களின் பலன்கள் போய்ச் சேருகிற அளவுக்கு அவர்கள் அனுபவம் வாய்ந்தவர்களாக இருப்பதில்லை. காரணம், வருடத்திற்கு ஒரு முறை இவர்கள் வேறு துறைக்கு மாற்றப் படுவது தான். மேலும், அந்தத் துறையில் அனுபவம் இல்லாதவர்கள், டெக்னிகலாகப் படித்து பட்டம் பெறாதவர்கள் பொறுப்பில் இருக்கக் கூடாது. உதாரணமாக, அக்ரிகல்சுரல் துறையை எடுத்துக் கொண்டால், பி.எஸ்.ஸி. படித்துப் பட்டம் பெற்றவராக இருக்க வேண்டும். எலெக்ட்ரிகல் துறை என்றால் அவர் நிச்சயம் என்ஜினியரிங் படித்து, பட்டம் பெற்றிருக்க வேண்டும். அந்தந்தத் துறையில் பொறுப்பிலுள்ளவர்கள் அந்தந்த

டெக்னிகல் துறையில் தேர்ச்சி பெற்றிருந்தால் தான், திட்டங்கள் முறையாகத் தயார் செய்யப்பட்டு, மக்களை நேரடியாகத் தொடுவதற்கு வசதியாக இருக்கும். இந்த நாட்டிலுள்ள மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், மலைவாசிகள் போன்ற மக்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையை பார்க்கும்பொழுது, அது போதாது என்று தான் சொல்லவேண்டியிருக்கிறது. இந்த நாடு பூராவிலும் இருக்கிற மக்களில் மொத்தத் தொகையில் இவர்கள் எல்லோரும் சேர்ந்து கிட்டத்தட்ட 63 சதவிகிதம் இருக்கிறார்கள். இதிலே குறிப்பிட்டிருக்கிற தொகை யானைப் பசிக்கு சோளப் பொறி போடுவது போல் தான் இருக்கும். சகோதரர் திரு. ராஜாங்கம் அவர்கள் குறிப்பிட்டதுபோல, பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று ஒரு தனி இலாகா ஏற்படுத்திவிட்டு, ஒரு டைரக்டரையும் போட்டுவிட்டு, அவருக்கு கீழே சில அதிகாரிகளை நியமித்துவிட்டால் மட்டும் அவர்கள் கஷ்டம் தீர்ந்துவிடாது.

உதாரணத்திற்குச் சொல்கிறேன். எருவுக்கு கடன் கொடுக்கிறார்கள், பம்பு செட்டுக்குக் கடன் கொடுக்கிறார்கள். பம்பு செட்டு யாருக்குப் போகிறது? கொஞ்சம் வசதி படைத்தவர்களுக்குத் தான் பம்பு செட் போய் சேருகிறது. அப்படிப்பட்ட வசதி படைத்தவருக்குக் கீழே வேலை செய்பவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஒரு முதலாளியிடம் இருக்கும் கிட்டத்தட்ட 10 பண்ணையாட்கள், விவசாயக் கூலிகள், அத்துக் கூலிகள், இவர்களைத் தொடுகிற அளவுக்கு நாம் திட்டங்களைப் போடுகிறோமா என்றால் இல்லை. கீழ் மட்டத்தில் இருப்பவர்களுக்கு, கீழ்த்தளத்தில் இருப்பவர்களுக்கு திட்டங்களின் பலன் போய் சேரவில்லை. அவர்கள் வாழ்க்கை மேம்படுவதற்கு, அவர்கள் வாழ்க்கைத் தரம் உயருவதற்கு, ஏழை மக்களுக்கு திட்டங்களின் பலன் போய் சேருவதற்கு தகுந்த முறையில் திட்டங்கள் தீட்டப்படவேண்டும். இதுவரையில் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டிருக்கிறோம். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தொடங்க இருக்கிறோம். ஏதாவது ஒரு துறையை எடுத்துக்கொண்டால், அகில இந்தியாவையும் எடுத்துக்கொண்டால், தமிழகத்தை எடுத்துக்கொண்டாலும், அந்தத் துறையில் செய்யவேண்டிய பணிகள் முறையாக முடிந்துபோயிருக்கிறது என்ற அளவுக்கு, மக்களுக்கு அது சம்பந்தமாக குறையே இல்லை என்ற அளவுக்கு ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. சாதாரணமாக குடியிருப்பு வசதியை எடுத்துக்கொண்டால், சுதந்திரம் கிடைத்து 22 ஆண்டுகள் ஆகியும், இந்த நாட்டிலே உள்ள ஏழை மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு குடியிருப்பு வசதி செய்யப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. ஒருவன் சாகும்போது சொந்த மண்ணில் சாகிறேன் என்று சொல்லக் கூடிய அளவுக்காவது 5 செண்டு நிலம் கொடுக்கும்படியான ஒரு நிலையை ஏற்படுத்தி, அந்த அடிப்படை வசதியையாவது செய்துதரவேண்டும். இப்படிப்





பட்ட நிலை இருக்கும்பொழுது, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு சுதந்திர இந்தியாவில் தேசிய மனப்பான்மை, நாஷனல் ஸ்பிரிட் எப்படி வரமுடியும்? வயிற்றுச் சோற்றிற்கே அவர்கள் திண்டாடுகிற நிலையில் இருக்கும்பொழுது, அவர்களுக்கு இது ஒரு மிகப் பெருங் குறையாக இருக்கிறது. அவர்கள் குடியிருப்பதற்கு இந்த அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் வகை செய்து கொடுக்கவில்லை. பிற்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், தேசத்திற்காக உழைக்கிறவர்கள், விவசாயிகள், அலுவலகங்களில் கீழ்மட்டத்தில் வேலை செய்யும் பியூன்ஸ், மற்ற சர்வெண்ட்ஸ் இவர்களின் உழைப்பை பயன் படுத்திக்கொள்ளவேண்டும். ஒரு சிலருடைய அறிவுத் திறனால் மட்டும் நாடு முன்னேறிவிட முடியாது. 'மேன் பவர்' தேவை. கீழ்மட்டத்தில், கீழ்த்தளத்தில் உள்ள மக்களைத் தொடுகின்ற அளவுக்கு திட்டங்கள் தீட்டப்படவேண்டும். நாடு முன்னேற வேண்டுமானால், வருங்கால சமுதாயம் இன்புற்றிருக்கவேண்டு மானால், சமாதானமான நிலைமை தேசத்தில் ஏற்பட வேண்டுமானால், சுபிட்சம் ஏற்படவேண்டுமானால், எல்லோரும் வாழவேண்டும். ஒவ்வொரு திட்டத்திலும் ரோடுகள் அபிவிருத்தி, எலக்டிரிஸிடி அபிவிருத்தி என்று சொல்கிறார்கள். அதற்காக கோடிக்கணக்கான ரூபாய்கள் ஒதுக்குகிறார்கள். ஆனால், அவைகள் முறையாக செய்யப்படவில்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலாவது லிங்க் ரோட்ஸ், அதாவது சேரிகளில் இருக்கிற மக்களுக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பிற்பட்ட மக்களுக்கு, மலைவாசி மக்களுக்கு அவர்கள் வசிக்கும் இடங்களுக்கு ரோடு வசதி செய்துதரவேண்டியது அத்தியாவசியம். . . .

(மணி அடிக்கப்பட்டது).

* திரு. சி. வீரமணி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களின் கனவை நினைவாக்குகிற வகையில் சேலம் எஃகு தொழிற்சாலைக்கு ரூ. 10 கோடி ஒதுக்கி ஒரு பெரிய திட்டத்தை ஏற்படுத்தியிருப்பதற்காக சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மதிப்பிற்குரிய எதிர்க்கட்சி கொறடா அவர்கள் பேசும்பொழுது, 'நீங்கள் ஏன் இந்தத் திட்டத்தை மத்திய அரசைக் கேட்காமல், மத்திய அரசோடு வாதாடாமல் நீங்களே ஏன் பணத்தை செலவழித்துச் செய்கிறீர்கள், இதை அவர்களே செய்யட்டும்' என்று பேசி, ஒரு திருத்தத் தீர்மானத்தையும் கொடுத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையிலே இந்தத் திட்டம் நிறைவேறக் கூடாது என்ற எண்ணத்திலே அப்படிச் சொல்லியிருக்க மாட்டார்கள் என்று எண்ணுகிறேன். மதுவிலக்குச் சட்டத்தை அமுல் படுத்துவதற்கு எங்களுக்கு மத்திய அரசிடமிருந்து சப்ஸிடி வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டபொழுது, மதிப்பிற்குரிய திரு. விநாயகம் அவர்கள் பம்பாயில் காங்கிரஸ் மாநாட்டில் பேசும்பொழுது, 'மதுவிலக்குச் சட்டத்தை அமுல் படுத்துவதற்காக சப்ஸிடி என்ற வகையிலே பணத்தை நீங்கள்

தமிழக அரசுக்குக் கொடுத்தால், அது எங்களுடைய முதுகிலே குத்துவது போன்று' என்று குறிப்பிட்டார்கள். சேலம் எஃகு ஆலையை நிறுவும்படி ஏன் மத்திய அரசை கேட்கக்கூடாது என்று கூறுகிறார்கள். வரக்கூடிய திட்டத்திற்கு மத்திய அரசு பணத்தை தரக்கூடாது என்ற உள்நோக்கத்தோடு, அப்படிப்பட்ட ஒரு நிலையில் அவர்கள் சொல்லுகிறார்கள் என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக, பழைய காங்கிரஸ்காரர்கள் போட்ட ஒரு திட்டத்தை ஒட்டியும் அரிசனங்களுடைய முன்னேற்றத்திற்கு, வருங்கால நாட்டில் போகப் போக முன்னேற்றத்தை உத்தேசித்து திட்டங்களைப் போடவேண்டும். அரிசனங்களிலே மொத்தத்திலே பல பிரிவுகள் இருக்கின்றன. அரிசனங்களில் இன்னும் மிகவும் தாழ்த்தப்பட்ட மக்கள், இன்னும் முன்னுக்கு வாராதவர்கள், அருந்ததியர்கள் சமுதாயம், பள்ளர்கள் சமுதாயம், ஷெட்யூல்ட் ட்ரைப்ஸ் இவர்கள் மிகவும் கீழ்த்தரமான குடும்பங்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வசிப்பதற்கு வீடுகள் இல்லாமல் இருந்துகொண்டிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களை முன்னேற்றுவதற்கு திட்டங்களைப் போடவேண்டும். கமிஷனர் ஃபார் ஷெட்யூல்டு காஸ்ட்ஸ் அண்டு ஷெட்யூல்டு டிரைப்ஸ் 1966-67-ம் ஆண்டு ரிபோர்ட்டில் சொல்லியிருக்கிறார் :—

"Even among the Scheduled Castes and Scheduled Tribes, there are poorer and still poorer sections, neglected and even more neglected sections. The same kind of programme for upliftment, cannot, therefore apply uniformly to all sections. It is necessary to pay special attention to the problem and advise separate programmes for different classes amoung the Scheduled Caste and Scheduled Tribes. One possible way of doing this would be to draw up a list of those among them who require special attention, before special programmes can be formulated for them. இப்படிப்பட்ட நிலையிலே இருக்கிற கீழ்மட்டத்திலுள்ள மக்களுக்கு, இன்னும் முன்னுக்கு வராத மக்களுக்கு நாம் ஆராய்ந்து பார்த்து, திட்டங்களைப் போடுவதற்கு முன்னால், தகுந்த திட்டங்களைப் போடுவதற்கு வழிவகை செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, தமிழகத்தில் 5 லட்சம் வீட்டு மனைகள் அரிசனங்களுக்குக் கொடுக்கப்படவேண்டியிருக்கிறது. அதற்கு கிட்டத்தட்ட ரூ. 8 கோடி தேவைப்படுகிறது. ஆனால், இப்பொழுது ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 14 கோடி. அப்படி ஒதுக்கப்பட்ட தொகையில் அரிசனங்கள் மனைக்கு ஒதுக்கப்பட்டிருப்பது ரூ. 2 கோடி தான். இந்தப் பணம் போதாது. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டங்களை பரிசீலனை செய்யும் பொழுது, வீட்டுமனைகளுக்கு அவர்கள் ஒரு புதிய திட்டம் தீட்டிக்கொடுக்கவேண்டும். லாட்டரிச் சீட்டுகளில் வரும் பணத்தையாவது ஒதுக்கி, இந்தப் புண்ணியமான காரியத்தை இந்த அரசு செய்யவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்தபடியாக, திருமணிமுத்தாறு-பொன்னியாறு திட்டத்தைப்பற்றி திரு. வேலப்பன் அவர்கள் விரிவாகப் பேசினார்கள். இது 1960-ம் ஆண்டிலிருந்து பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. காங்கிரஸ் ஆட்சி இருந்தபொழுது மத்திய அரசு இதற்கு அனுமதி அளித்தது. ஆனால், காங்கிரஸ்காரர்கள் அரசியல் காரணத்திற்காக அதைக் கொண்டுவராமல் விட்டு விட்டார்கள். இதற்கு ஆகக்கூடிய மொத்த செலவு ரூ. 3 கோடி 12 லட்சம். இதனால் 10,000 ஏக்கராவிற்கு மேலே பாயக்கூடிய நிலை இருக்கிறது. கிட்டத்தட்ட 5,000 டன் உற்பத்தித் திறன் இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு பெரிய திட்டத்தை வகுக்க வேண்டும் என்று போன பட்ஜெட்டில் நான் கேட்டபொழுது, —வாக்கெடுப்பின் போது கேட்டபொழுது—மதிப்பிற்குரிய திரு. ஆறுமுகம் அவர்கள் 'மற்ற மாவட்டங்களுக்கு இவ்வளவு திட்டங்கள் தந்திருக்கிறீர்களே, இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை எங்களுக்குத் தரவில்லையே?' என்று கேட்டபொழுது, பேரறிஞர் அண்ணா அவர்கள் நான்கு விரல்களைக் காட்ட, அப்பொழுது பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தத் திட்டம் சேர்க்கப்படும் என்று உறுதி கூறினார்கள். ஆனால் நாங்கள் பார்க்கும் போது, இந்த நான்காவது திட்டத்திலே, திருமணிமுத்தாறு-பொன்னியாறு திட்டம் சேர்க்கப்படவில்லை. எப்படியாவது அதைச் சேர்க்க வேண்டும். அப்படிச் சேர்த்து சேலம் மாவட்டத்திற்கு நல்ல வசதி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே நீர் வழங்கும் திட்டத்திற்காக ஏறத்தாழ ஐந்து கோடிக்குமேல் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால், என்னுடைய தொகுதியைப்பற்றியும் சொல்ல வேண்டும். சங்ககிரியில் தண்ணீரே இல்லாமல் இருக்கிறது. அதன் பக்கத்திலுள்ள பள்ளிபாளையம் பகுதியில் ஆறு ஓடுகிறது. அங்கிருந்து குழாய்கள் மூலம் என்னுடைய சங்ககிரிக்கு தண்ணீர் கொண்டு வரும் காரியத்தைச் செய்தால், நலமாக இருக்கும். ஆகவே, இதை மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் கருணைகூர்ந்து குறித்துக் கொள்வார்கள் என்று நம்பி, பேச வாய்ப்பளித்ததற்காக நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

* திரு. அ. மாரிமுத்து : உதவி சபாநாயகர் அவர்களே, இந்த நான்காவது திட்ட வரைவின் மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஆண்டாண்டு தோறும், திட்டங்கள்தான் நிறைவேறி வருகின்றனவே தவிர, செயல் முறையில், அதுவும் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்து, அதிலும் நான் சார்ந்துள்ள ஆடுதுறைப் பகுதியில் விவசாயிகளின் நிலையில் குறைபாடுகள் இருந்துக் கொண்டே இருக்கின்றன. நம்முடைய தமிழக அரசின் முதல்வராக இருக்கின்ற, மாண்புமிகு முதல் அமைச்சர், சென்ற ஆண்டு, பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்த காலத்தில், குடந்தைப் பக்கத்திலே, கல்லூரி ஒன்றில் கருத்தரங்கு நடத்தி,

விவசாயிகளின் குறைகளை கேட்டறிந்து, அதன் பிறகு அமைச்சர் இந்தக் கருத்தரங்கில், மண்ணியாறு-பழவாறு திட்டங்களைப் பற்றித்தான் அதிகமாக விவசாயிகள் குரல் எழுப்பியிருக்கிறார்கள், இன்னும் இரண்டு ஆண்டு காலத்தில் அதைப் பார்த்துச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன் என்று வாக்குறுதி அளித்தார்கள். மண்ணியாறு, பழவாறு சம்பந்தப் பட்ட விவசாயிகள் பெரிதும் இந்த வருஷத்தில், எத்தகைய முறையில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது அமைச்சர் களுக்கும், குறிப்பாக அதிகாரிகளுக்கும் நன்றாகத் தெரியும். இந்த ஆண்டு ஆடுதுறை பகுதியைச் சேர்ந்த, திருப்பனந்தாள் வட்டாரத்தில் 32,000 சொச்சம் ஏக்கர் நிலத்தில், 12,000 சொச்சம் ஏக்கர் நிலம் இருபோக சாகுபடியாக இருந்தது, இந்த ஆண்டில் 8,000 சொச்சம் ஏக்கர் நிலம்தான் இருபோகச் சாகுபடிக்கு ஏற்றது என்று கண்டு, வலிவுள்ளவர்கள், வசதி படைத்தவர்கள், சாகுபடி செய்யும் நிலை இருந்தது. மண்ணியாறு, பழவாறு தண்ணீர் வாராததால், அங்கே அப்படிப்பட்ட குறைபாடு இருக்கிறது, என்பதை அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த அவையில் தஞ்சை மாவட்டம் தான் தமிழகத்தின் தலை சிறந்த மாவட்டம் என்று எல்லா அங்கத்தினர்களும் சொல்லுகிறார்கள். அங்கே உணவு உற்பத்தி செய்யும் 80 சதவிகிதம் விவசாயிகள் எத்தகைய நிலையில் இருக்கிறார்கள் என்பதும் இந்த அவையிலுள்ள அங்கத்தினர் களுக்கு நன்கு தெரியும். இரண்டு, மூன்று ஆண்டுகாலமாக, உற்பத்திப் பண்ணக் கூடிய விவசாயிகளுக்கும், அந்தத் தொழிலில் ஈடுபட்டு, அந்தத் தொழிலைக் கையாண்டுவரும் விவசாயக் கூலிகளுக்கும் இடையில் கூலித்தகராறு ஏற்பட்டு, அதன் காரணமாக ஏற்பட்டிருக்கும் அவல நிலையைப் பற்றி மீண்டும், மீண்டும், சொல்ல விரும்பவில்லை. அதெல்லாம் அத்தனைபேர் களுக்கும் தெரியும். தீர்வு காணமுடியாத நிலையில், இந்த அரசு எந்த வகையில் திட்டத்தைத் தீட்டினாலும், நல்ல முறையில் அதற்குத் தீர்வு காண முடியாது.

அடுத்தபடியாக, இந்த வறட்சி நிவாரணத்திற்காக தஞ்சைக்கு தரக்கூடிய 45 லட்சம் ரூபாயையும் அந்த அந்த வட்டாரத்திற் குரிய, பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் தலைவர்களை அழைத்து செலவழிப்பதாக இருந்தால் நல்ல முறையில் இருக்கும். எங்கள் தொகுதியாகிய திருப்பனந்தாள் வட்டாரத்தில், பஞ்சாயத்து தலைவருடைய அபிப்பிராயத்திற்கு இணங்க தூர்ந்து போன குட்டைகள் போன்றவற்றை தூர் எடுக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது, அதிகாரிகள் நிர்ணயிக்கும் அளவில் இருந்ததேயல்லாமல், நல்ல முறையில் செயல்படவில்லை என்பதை இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, மேட்டூர் தண்ணீரை நம்பி தஞ்சை மாவட்டத்திலுள்ள விவசாயிகள் படாத பாடுபடுகிறார்கள். இந்த ஆண்டும் தீர்வு காணாத முறையில் இருக்கிறது. அமைச்சர்கள் வருவார்கள்,



மக்களிடம் இந்த ஆண்டு தீர்வு காண்கிறோம், அச்சப்படத் தேவை யில்லை என்று சொல்லிவிட்டுப் போகிறார்களே தவிர, நல்ல முறையில் செயல்படவில்லை. புதிய நிலத்தை எடுத்துப் பயிர் செய்ய மேட்டூர் தண்ணீர் எங்களுக்குத் தேவையில்லை என்று சொல்லி, ஆண்டாண்டுக்கும், கிராமங்கள் தோறும் நல்ல முறையில், பாதாள நீரைப் பயன்படுத்தும் திட்டத்தை அமைத்துத்தர வேண்டும் என்பதுதான் எங்களுடைய பெரிய ஆசை. அப்படிப் பட்ட திட்டத்தை இந்த அரசு செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஏழை எளிய அரிசனங்கள் வாழும் பகுதியில், குடியிருப்பி லிருந்து அவர்கள் அகற்றப்படும் நிலை இருக்கிறது. தஞ்சையில் அதி தீவிர சாகுபடியில் பெரும்பங்கு எடுக்கும் விவசாய மக்கள், கீழ்த் தஞ்சையிலும், மற்ற இடங்களிலும் எந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அரசு எண்ணிப்பார்த்து, அதற்குத் தீர்வு காணவேண்டும். அதை விட்டு, இந்தத் தரப்பில் ஒவ்வொன்றையும் சொல்வதும், அந்தத் தரப்பிலிருந்து இந்த திட்டம் அந்த திட்டம் என்று சொல்வதும், லாவணி போன்ற முறையில் இருக்கிறதே என்று நாட்டு மக்கள் அறிந்திருக் கிறார்கள். அந்த முறையில் இல்லாமல், அவையில் அங்கத்தினர்கள் கட்சி சார்பற்ற முறையில், திட்டங்களை தீட்டி செயல்பட முயற்சிக்க வேண்டும்.

* திரு. எம். சுரேந்திரன்: உதவி சபாநாயகர் அவர்களே, திட்டம் என்று சொல்லுவது, ஒரு லட்சியத்தைத் தீர்மானம் செய்து, அதை அடைவதற்கு காலவரையை நிர்ணயித்து, அடைவதற்கான முறையாக திட்டம் அமைகிறது. நம் நாட்டிலே நாம் நடத்தி வைத்திருக்கிற மூன்று திட்டங்களும் தொடர்ந்து நடந்திருந்தும் கூட, அதிலே ஏற்படவேண்டிய பலன்கள் ஏற்படா மல் போய்விட்டது என்பதைப் பலபேர்களும் கூறியிருக்கிறார்கள். இப்பொழுது நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் இன்னமும் முடிவான கட்டத்திற்கு வரவில்லை என்று திட்ட அறிவிப்பிலே கூறப்பட்டிருக்கிறது. மத்தியிலே திட்டமே இல்லாமல் சில காலம் விட்டு விட்டு இருக்கின்ற நிலையில், மீண்டும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் தொடரும்போது, துண்டு பட்டுப்போன, தொடர்பு இல்லாமல் போன நிலைகள். புதிதாகச் செயல்பட வேண்டிய முறையில் திட்டம் அமையவேண்டும் என்று கருது கிறேன். அப்படிப் பார்க்கும் போது, திட்டம் நிறைவேறு வதற்கான முறைகளிலே, இதுவரையில் கவனம் செலுத்தி வந்த முறைகள் சரியானது அல்ல என்று பலரும் கருதியிருக்கிறார்கள். முதலிலே திட்டம் என்று சொன்னால், இந்த தேசத்திலே இருக்கிற மனித சக்தி இருக்கிறதே, அந்த மனித சக்தியை முழுவதாகப் பயன்படுத்தும் முறையில் திட்டம் அமையவேண்டும் என்ற பொதுவான கருத்து இருக்கிறது. மனித சக்தியைப் பயன் படுத்தக் கவனம் செலுத்தாமல், பணம் எங்கிருக்கிறது, எவ்வளவு பணம் வேண்டும் என்ற வகையிலேயே நிர்வாகத்தின் கவனம்.

[திரு. எம். சுரேந்திரன்] [1969 ஆகஸ்ட் 25

செல்லுகிறது. அந்த வகையில் அநேகம் முறைகள் இருந்துக் கொண்டு இருக்கின்றன. அதன் காரணமாக, ஒவ்வொரு திட்டமும் முடியும் போது, மனித சக்தி அதிகமாக மிஞ்சும் நிலை ஏற்படு கிறது. அதாவது வேலையில்லாத் திண்டாட்டம் ஒவ்வொரு திட்டத்தின் முடிவிலும் மிக அதிகமான அளவில், எண்ணிக்கை ஏறிக்கொண்டு இருக்கும் நிலை இருக்கிறது. குறைந்து கொண்டு வரும் நிலை வரவில்லை. திட்டத்தின் பலன் சாதாரணமக்களுககுக் கிடைக்க வேண்டும் என்றால், குறைந்தபட்சம், உணவு, உடை, வீடு என்ற அளவில் நிறைவேறுவதற்கான பாதையில் செல்ல வேண்டும். அப்படிச் செல்வதற்குக் குறைந்த பட்சம் வேலை நிலை இருக்க வேண்டும், திட்டத்தின் முதல் படி, நிலத்திலிருந்து உண்டாகிற பொருள்களைக் கவனிக்க வேண்டும். நிலச் சீர் திருத்தம் விவசாயச் சீர்திருத்தம் எல்லாம் செய்து முடிக்கவில்லை. நிலத்திலிருந்து கிடைக்கும் திரவப் பொருள், கனிப்பொருள் இவை முதலிலே கவனிக்கப்படவேண்டும். ஆனால் அப்படிக் கவனிக்கப்பட வில்லை. வேறு முறையாக மேல் நாடுகளில் போல் பெரிய பெரிய தொழில்கள் ஏற்படவேண்டும், பெரிய பெரிய கட்டடங்கள் உண்டாக வேண்டும் என்கிற முறையில் திட்ட கர்த்தாக்களுடைய கவனம் சென்று கொண்டு இருக்கிறது என்று தோன்றுகிறது.

நான் ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். மேட்டூரிலே அலுமினியம் தொழிற்சாலை ஒன்று இருக்கிறது. அங்கே போட்டிருக்கிற மூலதனம், அந்தப் பகுதியிலே போட்டிருக்கிற தொழிற்சாலைகளின் மூலதனங்களை விட அதிகம். அந்தத் தொழிற்சாலையில் பல புதிய இயந்திரங்களை நிறுவியிருக்கிறார்கள். அந்த அலுமினியம் தொழிற்சாலையினால் ஏற்பட்ட பலன் என்ன என்பதைப் பார்க்கும்போது, அவ்வளவு பெரிய தொழிற்சாலையிலே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற நிலையான தொழிலாளர்களின் எண்ணிக்கை 490 தான். பெருவாரியான தொழிலாளர்களுக்கு வேலையளிக்கும்படியான நிலைமை அந்தத் தொழிற்சாலையில் இல்லை. இந்த அலுமினியத் தொழிற்சாலைக்கு மின்சாரம் வழங்குவதற்காக நாம் ஒரு கோடி ரூபாய் நஷ்டம் அடைந்திருக்கிறோம். இந்தத் தொழிற்சாலையினால் அரசாங்கத்திற்கும், மின்சார வாரியத்திற்கும் தான் நஷ்டம். நாட்டிலே இருக்கிற மனித சக்தியைக் கணக் கிட்டுப் பார்க்கிற நேரத்தில் இப்படிப்பட்ட பெரிய தொழிற்சாலை கள் இருந்தும், போதிய நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வில்லையென்பதை இந்தநேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆகவே, மனித சக்தியை பூரணமாகப் பயன்படுத்த வேண்டு மென்றால், ஆங்காங்கே சிறுசிறு தொழில்கள் வளரவேண்டும். கிராமம் கிராமமாக மனித சக்தியைப் பயன்படுத்தும் முறையில் திட்டங்கள் அமைய வேண்டும். இப்படிப்பட்ட சிறுசிறு தொழில் கள் சம்பந்தமான திட்டங்களோடு, நாம் நிலச்சீர்திருத்தத்தையும், விவசாய சீர்திருத்தத்தையும் அவசரமாகச் செய்ய வேண்டும். நாம் நிலச்சீர்திருத்தத்தில் உறுதியான கொள்கையோடு இருக்க



1969 ஆகஸ்ட் 25] [திரு. எம். சுரேந்திரன்]

வேண்டும். இங்கே கோவிலுக்கு நிலம், மடத்திற்கு நிலம் என்று வேறு வேறு கோணங்களில் இருந்து வருகின்றன. எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் பெரும் நிலச்சுவான்தார்கள் தான் நிலங்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் சாதாரண விவசாயிகள், நிலத்தில் பாடுபடும் விவசாயிகளுக்கு நிலம் இல்லாமல் போகும் நிலைமையே தொடர்ந்து நீடித்துக் கொண்டு போகமுடியாது. எனக்கு முன்னால் பேசிய மதிப்பிற் குரிய உறுப்பினர்கள், ஹரிஜனங்களுக்கு ஒதுக்கியிருக்கிற நிதி போதாது என்று பேசினார்கள். ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி போதுமா, போதாதா என்பதைவிட, நாம் ஹரிஜன மக்களுக்கு என்ன செய்திருக்கிறோம், நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை வரையறுத்துக் கொள்ள வேண்டும். என்னுடைய தொகுதியில் பாலமலை என்ற பகுதி இருக்கிறது. அந்தப் பகுதியில் நடந்து செல்லக்கூடிய நல்ல பாதை வசதிகள் இல்லை. இதைப்பற்றி நான் பலமுறை இந்த மன்றத்தில் சொல்லியிருக்கிறேன். அந்தப் பகுதி மக்கள் பாதைவசதி இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அரசு இதைக் கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என் தொகுதியிலே தோணிமடுவு என்ற ஒரு திட்டம் இருக்கிறது. இந்தத் திட்டத்திற்கு 25 லட்சம் ரூபாய் ஆகும் என்று சொல்லப்படுகிறது. இந்தத் திட்டம் நிறை வேற்றப்பட்டால் நூற்றுக்கணக்கான விவசாயிகள் பலன் அடை வார்கள். அரசு இதைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அலுமினியம் தொழிற்சாலையிலேயிருந்து ஓடும் கழிவுநீர் ஆற்றிலே கலக்கிறது. அதைத் தடுத்து நிறுத்தினால், நூற்றுக் கணக்கான விவசாயிகளுக்குப் பாசனம் செய்ய வழி உண்டாகும் என்று கூறிக்கொள்கிறேன். ஆகவே, இதையும் திட்டத்திலே சேர்த்துக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, பாதை விஸ்தரிப்புப் பற்றிக் கூற விரும்பு கிறேன். மேட்டூரிலிருந்து சேலம் செல்லும் பாதையானது முன் காலத்தில் இருந்ததுபோல் இருக்கிறது. முன்பு பத்து பஸ்கள் ஓடிக்கொண்டிருந்த பாதையில் இப்போது நூற்றுக்கணக்கான பஸ்களும், லாரிகளும் ஓடுகின்றன. ஆனால் பாதை முன்பு இருந்ததைப்போலவே, விஸ்தரிப்பு அடையாமல் இருந்து வரு கிறது. இதன்காரணமாக போக்குவரத்துக்கு இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. ஆகவே, அந்தப் பாதையை நல்ல முறையில் விஸ்தரிப்பு செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் பல விஷயங்களைப் பற்றிப் பேச விருப்பம் இருந்த போதிலும் நேரம் குறைவாக இருப்பதால், இவ்வளவு நேரம் பேச அனுமதியளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. சு. துரைசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின்மீது என்னுடைய கருத்துக்

களைச் சொல்லலாம் என்று விரும்புகிறேன். இந்த நாட்டைப் பொறுத்தவரையில், தமிழக சர்க்காருக்கு டெல்லி சர்க்கார் மகத்தான துரோகத்தைச் செய்துவிட்டார்கள், தமிழ்நாட்டுக்கு நியாயமாகக் கொடுக்க வேண்டியதைக் கொடுக்காமல் புறக்கணித்து விட்டார்கள் என்ற என்னுடைய கருத்தைச் சொல்லிக்கொள்கிறேன். தமிழ்நாடு அரசு செலவழிக்கவேண்டியது 300 கோடி ரூபாய், மத்திய அரசு உதவி 202 கோடி ரூபாய் ஆக மொத்தம் 502 கோடி ரூபாய் திட்டத்தில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் வரையப்பட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்திற்கு மத்திய அரசு மிகமிகக் குறைந்த அளவே உதவியாக அளித்திருக்கிறது. அதேநேரத்தில் மற்ற மாநிலங்களுக்கு அளித்த தொகைகளையும் எண்ணிப்பார்த்தால் மிகக் குறைவான தொகை நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்பது நன்கு தெரியவரும். அஸ்ஸாம் மாநிலத்தை எடுத்துக்கொண்டால், மாநில சர்க்கார் செலவழிப்பது 5.50 கோடி ரூபாய் ஆகும். அதே நேரத்தில் மத்திய அரசு செலவழிப்பது 220 கோடி ரூபாய் ஆகும். பீகார் மாநிலத்தில் மாநில அரசு 103.6 கோடி செலவழிக்கும்போது, மத்திய அரசாங்கம் 338 கோடி ரூபாய் செலவழிக்கிறது. ஒரிஸா மாநில அரசு செலவழிப்பது 20.50 கோடி ரூபாய், ஆனால் மத்திய அரசாங்கம் 160 கோடி ரூபாய் அளவிற்குச் செலவழிக்கிறது. ராஜஸ்தானத்தில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக மாநில அரசு ஒதுக்கியுள்ள தொகை 18.96 கோடி ரூபாய். மத்திய அரசாங்கம் அந்த மாநிலத்தில் செலவழிக்கும் தொகை 220 கோடி ரூபாய். உத்தரப்பிரதேசம் 425 கோடி ரூபாய் செலவழிக்கத் திட்டமிட்டிருக்கிறது. அந்த மாநிலத்திற்கு மத்திய அரசாங்கம் 526 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இப்படியெல்லாம் பார்க்கிற நேரத்தில் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பது நன்கு விளங்குகிறது.

தமிழ்நாடு 300 கோடி ரூபாய்க்கு போட்டு அனுப்பிய திட்டத்தை டெல்லி சர்க்கார் 202 கோடியாகக் குறைத்துவிட்டது. அதேநேரத்தில் வடக்கே இருக்கிற அஸ்ஸாம், உத்தரப்பிரதேசம், ராஜஸ்தானம் போன்ற மாநிலங்களுக்கு ஏராளமான அளவில் தொகையை உயர்த்தியிருக்கிறார்கள். இந்தியா பூராவும் ஒரே நாடு, இந்த நாடு ஒருமைப்பாடாக இருக்க வேண்டுமென்று கருத்துத் தெரிவிக்கிற நேரத்தில், டெல்லி சர்க்கார் தமிழக சர்க்காருக்கு மகத்தான துரோகத்தைச் செய்திருக்கிறது என்ற குற்றச்சாட்டைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. மத்திய சர்க்கார் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பெயரால் இந்த மாநிலத்திற்குக் கொடுக்கும் தொகை பூராவையும் செலவழிக்க முடியாத நிலைமையில் இருக்கிறோம். 1967-68-ல் மத்திய அரசாங்கம் திட்டத்திற்காக ஒதுக்கியதொகை 34 கோடியே 41 லட்சம் ரூபாய் ஆகும். ஆனால், நாம் வாங்கியிருக்கிற கடனுக்காக, நாம் திருப்பித் தர வேண்டிய தொகை 27.27 கோடியாக இருக்கிறது. மத்திய அரசாங்கம் கொடுக்கும் 34 கோடி ரூபாயில் கடனை நாம் திருப்பித்



தருவது 27 கோடி ரூபாய் ஆகிறது. ஆகவே, நாம் மீதியைத் தான் 7 கோடி ரூபாய் அளவைத்தான் பயன்படுத்திக் கொள்ள முடிகிறது. ஆண்டுதோறும் நாம் திருப்பித் தருகிற நிலை இருக்கிற காரணத்தால், நம்முடைய பகுதியில் திட்ட வேலைகள் குறைந்துவிடுகின்றன. மத்திய அரசாங்கத்திடம் இந்தக் குறையினை எடுத்துச் சொல்லி, அந்தத் தொகை பூராவையும் மானியமாகப் பெற தமிழக அரசு முயற்சி செய்ய வேண்டும். ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு, ஆண்டுக்கு பத்து கோடி தருவதாக வைத்துக் கொண்டாலும், குறிப்பிட்ட காலத்தில் தராததால், முழுத் தொகையும் செலவழிக்கப்படாமல் தொகை மிச்சப்படுகிற நிலை ஏற்படுகிறது. இம்மாதிரி மிச்சப்படுகிற தொகை இதுவரைக்கும் 10 கோடி ரூபாயை மத்திய அரசு கொடுக்காமல் இருக்கிறது. விடுபட்ட பணத்தை, மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் எடுத்துச் சொல்லி பெறுவதற்கு முயல வேண்டும்.

இன்றைக்கு நாட்டிலே உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்றால் நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். நீர்ப்பாசன வசதிக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். நீர்ப்பாசனத் திட்டத்தில் புதிய திட்டம் எதுவும் கொண்டுவரப்படவில்லை. 'அவினாசி திட்டம்' என்ற பெயராலே உள்ள ஒரு கருத்தை இதற்கு முன்னாலே இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கருத்து என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. அப்பேர்ப்பட்ட திட்டத்தை உடனடியாகச் சேர்க்க வேண்டும். சிறுபாசனத் திட்டத்திற்கும் மத்திய அரசாங்கம் செலவழிக்கவில்லை. இங்கு கொடுக்கப்பட்டிருக்கிற புத்தகத்தைப் பார்த்தால் தெரிகிறது. மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், சிறுபாசனம், மின்சக்தி, சாலைப் போக்குவரத்து, வீட்டுவசதி, தொழிலாளர் நலன், நகர்ப்புற வளர்ச்சி போன்ற இப்படிப்பட்ட திட்டங்களுக்கு ஒரு பைசா கூட கொடுக்கவில்லை. இந்த நாட்டில் ஏழ்மை இருக்கிறது, வறுமை இருக்கிறது என்று சொல்கிறார்கள். இன்றைக்கு நாட்டில் இருக்கிற கிராமத்து மக்களுக்குக் குடிப்பதற்குக்கூட தண்ணீர் வசதி இல்லை. நியாயமான பணிகளுக்குப் பணத்தைச் செலவழிப்பதற்கு இன்றைக்கு மத்திய அரசாங்கம் மறுத்துக் கொண்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நமக்கு ஒரு பைசா கூட மத்திய சர்க்காரில் இருந்து இந்தத் துறைகளுக்கு உதவி கிடைக்கவில்லை என்பதை நம் அரசாங்கம் வற்புறுத்தி எடுத்துச் சொல்லி—நாட்டின் ஒருமைப்பாட்டைப் பற்றிப் பேசிப் பயன் இல்லை, நான் முன்பு குறிப்பிட்டதைப்போல வடமாநிலங்களுக்கு ரூ. 300 கோடி, ரூ. 400 கோடி என்று கொடுத்து, நம்முடைய மாநிலத்திற்கு மட்டும் துரோகம் செய்தால் நாட்டின் ஒருமைப்பாடு எப்படி நிலைக்கும் என்பதை எடுத்துச் சொல்லி—நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்தவரை தமிழ்நாட்டுக்கு மிகப் பெரிய துரோகத்தைச் செய்திருக்கிறார்கள்.

அதை நீக்கி நியாயத்தைப் பெறுவதற்கு இந்த அரசாங்கம் போராட வேண்டுமென்ற கருத்தை எடுத்துச் சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* THIRU K. S. KOTHANDARAMIAH: Hon. Deputy Speaker, Sir, I rise to say a few words about the Draft Fourth Five-Year Plan. The Hon. Speaker has allotted five minutes for each speaker. The subject is difficult and delicate and at the same time gigantic. As the time allowed is very short, I will confine myself to one or two points.

The times have changed. Fourteen banks have been nationalised. The financial situation is changing. The Hon. Prime Minister has promised to spend crores of rupees for the Plan. We read in newspapers that the Government of West Bengal and certain other States have written to the Union Government asking them not to finalise the Plan abruptly and hastily, but to review and recast the entire Plan. I request the Hon. Minister for Finance to make a proposal or pass a resolution for stopping the finalisation and for reviewing and recasting the Plan and send it to the Union Government.

Originally we envisaged an investment of Rs. 624 crores for the Plan. The Planning Commission reduced it to Rs. 502 crores. Again the State Government is pressing for a Plan of Rs. 575 crores. In the amendment of the Hon. Minister, he has requested that the Plan amount should be of the order of Rs. 624 crores. The discussion here is not yet finished and we do not know what the Union Government is going to do. So it is better to send a resolution suggesting a review and the allotment of some more funds. Our Government has decided to extend electricity to the entire State and so we may require some more funds. I will say a few words about the taluk which I represent. Hosur Taluk has been suffering from severe drought for the last five years. This year also rains have failed. The drought has become chronic and very calamitous. In the District Development Council we discussed these things. There are not sufficient roads there. A master plan has been prepared for the roads in this taluk and the total amount required for implementing the master plan is about 75 lakhs. Since the past one hundred years not a single bridge has been constructed over any river there. We require about five big bridges costing Rs. 6 to 7 lakhs each and five small bridges costing about Rs. 5 lakhs each. All these will cost about Rs. 75 lakhs. There are six hundred tanks. Most of them were in zamindari areas and the zamindars neglected the tanks. The tanks have become silted. To repair each tank we require some bulldozers. The repairs of about six hundred tanks may cost one crore of rupees. For the repair of tanks, for the construction of bridges and dams, etc., we require at least Rs. 2 crores for the Hosur taluk. The drought and its effects are very severe and they will continue for some more time. Every year we have incurred a loss of Rs. 7 to 8 crores and in the last five years of drought we would have



incurred a loss of about Rs. 35 crores. Because of failure of crops the people had to borrow from money lenders or from Government. They have to pay about Rs. 35 lakhs towards loans taken from co-operative societies and about Rs. 20 lakhs towards loans taken from Government. There is a lot of difficulty for the people. Unless the plan provides a lot of money for providing all the requirements, I am afraid the taluk will continue to be very backward and people will continue to suffer. Our Government was kind enough to sanction the Doddahalla Scheme costing about Rs. 98 lakhs. It has been included in the Draft Fourth Plan and had been sent to the Union Government for approval. It may take about one or two years. But in the meanwhile work has to be commenced. The Draft Outline says:

"Being comparatively simple schemes preliminaries can be completed well in time for implementation to start in right earnest by at least the middle of the fourth plan period. As such a lump-sum provision of Rs. 225 lakhs has been made for all the schemes in the fourth plan."

Sir, already two years are over. I request the Hon. Minister to sanction at least some amount so that work may be commenced and the people suffering from drought may be given some work. With these words I close my speech.

* புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட வரைவை இங்கே கொண்டு வந்திருப்பதை ஆதரித்து, வரவேற்றுப் பேச முற்படுகிறேன்.

1971-ஆம் ஆண்டுக்குள் தமிழகத்திலுள்ள கிராமங்கள்தோறும் மின்னொளி சிறக்கச் செய்ய வேண்டுமென்ற குறிக்கோளோடும், 1973-74-க்குள் 79 லட்சம் டன் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற குறிக்கோளோடும், கூட்டுறவுத்துறையில் நல்ல பயன்களை ஏற்படுத்தி மக்களைச் செழிக்கச் செய்ய வேண்டுமென்ற குறிக்கோளோடும், பல்வேறு தொழிற்சாலைகளை ஏற்படுத்தி வெளிச் சந்தையைக் கைப்பற்ற வேண்டுமென்ற குறிக்கோளோடும், அறிவியல் அடிப்படையில் (Agronomy) அக்ரானமி என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே, அவ்வகையில் அறிவியல் வேளாண்மை சிறக்கச் செய்யவேண்டுமென்ற குறிக்கோளோடும், கல்வித்துறையில் 40 கல்லூரிகளை ஏற்படுத்தவேண்டுமென்ற குறிக்கோளோடும், ரூ. 624 கோடி அளவிற்குத் திட்ட வரைவினை நம் அரசு உருவாக்கியுள்ளது. மத்திய அரசு இதற்கு உறுதுணையாக இருந்து முழு அளவில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வழிவகை செய்யவேண்டும். அப்படிச் செய்யாமல் நம்முடைய திட்டத்தைச் சுருக்குமானால் அதற்குரிய காரணம் என்ன என்பதையாவது சொல்லவேண்டும். இங்கே இருக்கக்கூடிய அருமை காங்கிரஸ் நண்பர்கள் வெளிப்புறத்தைமட்டும் சுற்றிச் சுற்றி வருகிறார்களே தவிர இந்த நாட்டின் அகநிலை, அகவாழ்க்கையை எண்ணிப் பார்க்கவில்லை. இங்கே குறிப்பிட்டிருக்கும் திட்டங்களில் எவை எவை

இந்த நாட்டிற்குத் தேவையில்லை, உணவு உற்பத்தி பெருகியாக வேண்டியதில்லையா, எந்தத் திட்டம் தேவையில்லாதது என்பதை காங்கிரஸ் நண்பர்கள் அறுதியிட்டுச் சொல்ல முடியுமா ? அல்லது மத்திய அரசுதான் இந்த நாட்டுக்கு இது தேவையில்லாத திட்டம் என்று எதையாவது எடுத்துக் காட்ட முடியுமா? எனவே காங்கிரஸ் நண்பர்களும், மற்றவர்களோடு சேர்ந்து, அரசோடு சேர்ந்து இந்தத் திட்டம் அப்படியே செயலாற்றப்பட முழு அளவில் ஒத்துழைப்பைத் தர வேண்டுமென்று அவர்களை நான் இந்த நேரத்தில் விரும்பி, வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாகப் பார்க்கிறபோது நம்முடைய அரசு ஆற்ற வேண்டிய பணிகளையும் ஆற்றியிருக்கும் பணிகளையும் பலாச் சுளையை எடுத்துப் பகிர்ந்து வைப்பதைப் போல வைத்திருக்கிறது. அருமை காங்கிரஸ் நண்பர்களோ அந்தப் பலாப் பழத்தைத் திருப்பிப் போட்டு முள் குத்துகிறதே, முள் குத்துகிறதே என்பதைப் போல பேசுகின்றார்களே தவிர பலாச்சுளைகளைப் போல ஆற்ற வேண்டிய பணிகளையும், ஆற்றியிருக்கின்ற பணிகளையும் தனித்தனியாக எடுத்து வைத்திருப்பதை எண்ணிப்பார்க்கவில்லை என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

எனவே இந்த அரசு ஆற்றியிருக்கிற நல்ல பணிகளை வரவேற்க வேண்டும், ஆற்றவேண்டிய பணிகளை எடுத்துச் சொல்லவேண்டும். குறைகள் இருந்தால் களைவதற்கு எடுத்துக்காட்டவேண்டும். அப்போதுதான் மக்கள் நலன் பாதுகாக்கப்படும். மக்கள் நலனைவிட காங்கிரஸ்காரர்கள் தங்கள் கட்சி நலனையே பார்ப்பதாகத் தெரிகிறது. மக்கள் நலனைப் பார்க்காது கட்சி நலனைப் பார்ப்பது கூடச் சரியில்லை. காரணம், மக்கள் நலனை எண்ணிப் பார்க்காத எந்தக் கட்சியும் இந்த நாட்டில் இருக்க முடியாது என்பது தெள்ளத் தெளிந்த உண்மையாகிவருகிறது என்பதைக் காங்கிரஸ் நண்பர்கள் நன்றாக உணரவேண்டுமென்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பொதுவாகப் பார்க்கிறபோது தமிழகத்திலே புன்செய் நிலங்களுக்கு அன்றைக்கே வரி கொடுக்காமல் இருக்க வரிவிலக்குக் கொடுக்கப் பட்டு இருந்தது. பாண்டிய நெடுஞ்செழியனைப்பற்றி குடபுலவியனார் பாடிய பாடலிலே அந்தக் கருத்தை அவர் வலியுறுத்தியிருப்பதை நாம் காணலாம்.

"... வித்திவா னோக்கும் புன்புலங் கண்ணகன்
வைப்பிற் றாயினு நண்ணி யாளும்
இறைவன் றாட்குத வாதே, யதனால்
அடுபோர்ச் செழிய, விகழாது வல்லே
நிலனெளி மருங்கி னீர்நிலை பெருகத்
தட்டோ ரம்ம விவட்டட் டோரே
தள்ளா தோரிவட் டள்ளா தோரே."



என்று கூறியிருக்கின்றார். புன்செய் நிலங்களுக்கு வரி விலக்குக் கொடுத்து இருக்கிறார்கள். இன்றைக்கும் நாம் வரிவிலக்குக் கொடுத்திருக்கிறோம். நின்நாட்டில் நிறையப் புன்செய் நிலங்கள் இருக்கின்றன, அவற்றினால் அரசுக்கோ, நாட்டுமக்களுக்கோ பிரயோஜன் இல்லை. அவற்றை நன்செய் நிலமாக ஆக்கவேண்டுமென்று புலவர் கூறுவதாக அமைகிறது இப்பாடல். வானோக்கி இருக்கின்ற புன்செய் என்று கூறுகின்றார். எனவே நம்முடைய தமிழக அரசும் புன்செய் நிலங்களை நன்செய் நிலங்களாக ஆக்கவும் மேய்ச்சல் நிலங்களையும் பொட்டல் நிலங்களையும் புன்செய் நிலங்களாக ஆக்கவும் முயற்சியெடுத்துக் கொள்ளவேண்டும். தனிப் பட்டவர்களுடைய கையிலே உள்ள புன்செய் நிலமாக இருந்தாலும் சரி, மேய்ச்சல் நிலமாக இருந்தாலும் சரி அவற்றைத் திருத்தி நன்செய் நிலமாக்கக் கடன் கொடுத்து, அதாவது மானியத்தோடு கூடிய கடனைக் கொடுத்து உதவ அரசு முன்வரவேண்டும். (மணியடிக்கப்பட்டது.) என்னுடைய தொகுதியை எடுத்துக் கொண்டு பார்க்கும்பொழுது .... (மணியடிக்கப்பட்டது).

*** திரு. என். மருதாசலம்:** உதவி சபாநாயகர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மீது என்னுடைய கருத்துக் களைக் கூற விரும்புகிறேன். இந்த நாட்டிலே உள்ள விவசாய மக்களைச் செழிப்படையச் செய்வதற்கும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கும் திட்டங்கள் தீட்டியிருக் கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்து நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் இப்பொழுது நடைமுறையில் இருக்கிறது. அப்படி இருந்தாலும்கூட இந்த நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியவில்லை. விவசாயிகளுடைய கஷ்டங்கள் ஒழியவில்லை. ஆகவே திட்டத்திலே குறைபாடுகள் இருக்கின்றன. விவசாயத்தைச் செழிப்படையச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். விவசாயம் செழிப்படைந்தால்தான் உணவு தானியத்தை நாம் அதிகமாகப் பெருக்கமுடியும். வறட்சியாக உள்ள இடங்களை எல்லாம் செழிப்படையச் செய்வதற்கு அரசாங்கம் கால்வாய்களைக் கொண்டுவந்து அதன்மூலமாக செழிப்படையச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்குப் பதிலாக இன்றைக்கு அதிகமாகக்கூடிய சூழ்நிலைதான் இருக் கிறது. இன்றைக்கு ஐந்து மில்கள் கமிஷனர் மூலமாக எடுக்கப் பட்டிருக்கின்றன. பாக்கியுள்ள மில்களின் நிலைமை என்ன ஆயிற்று ? படிப்படியாக அவற்றையும் எடுப்பதற்கு முயற்சி எடுக்கப்படுகிறதா அல்லது அப்படியே விட்டுவிடப் போகிறார்களா என்று தெரியவில்லை. இந்த நிலைமையை வளரவிடாமல் உடனடியாக எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களில் பெரும்பாலோர் விவ சாயிகளாக இருக்கிறார்கள். சர்க்காரிலிருந்து 1,500 ரூபாய்

கிணறு வெட்டுவதற்காகக் கடன் கொடுக்கிறார்கள். முதலிலே 750 ரூபாய் கொடுக்கிறார்கள். அந்த 750 ரூபாயை வாங்கியவுடனே பாக்கிப் பணம் வாங்குவதற்கு ஒரு வருஷம் ஆகியும் இன்னும் கிடைக்கவில்லை. பாக்கிப்பணம கிடைப்பதில் உள்ள காலதாமதத்தை அரசு போக்கவேண்டும்.

பல கல்லூரிகளிலே தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு—2,000 ரூபாய் வருமானம் இருந்தால் சம்பளச் சலுகை உண்டு—1,500 ரூபாய் வருமானம் என்று கணக்கு வைத்துக்கொண்டு சில கல்லூரிகளிலே பிரின்ஸ்பால்கள் அவர்களுக்கு சம்பளச் சலுகை கொடுக்க மறுக்கிறார்கள். அரசு உடனடியாக எல்லாக் கல்லூரி பிரின்ஸ்பால்களுக்கும் இதைப்பற்றி அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உடனே தாக்கீது அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்றைக்கு இருக்கிற நிலைமையைப் பரிசீலித்து வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவேண்டும். மதுக்கரை பிர்க்காவிலே கால்வாய்ப் பாசனம் கிடையாது, அங்கே மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அந்த விவசாயிகளுக்குக் கடன் கிடைப்பது துர்லபமாக இருக்கிறது. விண்ணப்பம் போட்டால் ஒரு மாதத்திற்குள் பரிசீலனைசெய்து கடன் கொடுக்கவேண்டும். என்னதான் அத்தாட்சிகள் எல்லாம் கொடுத்தாலும்கூட விண்ணப்பம் போட்டு கடன் கிடைப்பதற்கு ஒரு வருஷம் ஆகிவிடுகிறது. இப்படி இருந்தால் எப்படி அவர்கள் விவசாயத்தைப் பெருக்கமுடியும்? எனவே அரசு நல்ல முறையிலே இதைக் கவனித்து நடவடிக்கை எடுக்கவேண்டும். விவசாயத்தைச் செழிப்படையச் செய்வதற்கும், தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. க. ர. நல்லசிவன்** : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்த ஐந்தாண்டுத் திட்ட வரைவின்மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இதிலே சிலவற்றைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதையே நானும் வற்புறுத்த விரும்புகிறேன். சமுதாய பொருளாதார முறையை மாற்றுவது நம்முடைய குறிக்கோளாக இருக்கவேண்டும் என்று அறிக்கையிலே ரெவின்யூ அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்தக் காரியத்தைச் செய்வதற்கு மத்திய அரசு, மாநில அரசு, மக்களுடைய ஒருங்கிணைந்த கருத்து இவற்றையொட்டிச் செய்வதன் மூலமாகத்தான் இந்தத் திட்டம் ஜனங்களுடைய திட்டமாக அமைய முடியும். கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களினால் மக்களுக்குப் பயன் இல்லை. காரணம், முன்பு இருந்தவர்கள் ஏகபோகமாக நாட்டை ஆண்டுகொண்டிருந்தார்கள். நாட்டிலே செழிப்பை உண்டாக்கியதற்குப் பின்னால் சமத்துவம் என்றார்கள். சமத்துவம் இல்லையென்றால் எவனும் நம்பிக்கையோடு உழைக்க மாட்டான்; எனவே முதலிலே சமத்துவம் வேண்டும் அதைத்தான் இன்றைக்குச் சரித்திரம் நிறைவேற்றி





கொண்டிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தால்தான் எல்லோரும் பயன்பெறமுடியும். நாகரிகமுள்ள இந்தக் காலத்தில் குடிநீர் கொடுக்கமுடியாத நிலைமை இருப்பது கூடாது. அதைப் போக்க முயற்சியெடுக்கிறோம் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். இரண்டு, மூன்று ஆண்டுகளுக்குள் எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்கின்ற முயற்சிக்கு நான் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். முன்னால் பேசிய மணி அவர்கள் சொல்லியதுபோல் குடியிருப்புக்களும் இந்த ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் பூரணமாக ஏற்பாடு செய்ய வேண்டும். இந்தக் காரியத்தை நாம் நிறைவேற்றவில்லையென்றால் எத்தனை ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டாலும் அவற்றின் மூலம் ஜனநாயகம் நிலைக்காது. மதிப்பிற்குரிய ரெவின்யூ அமைச்சர் அவர்கள் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அதிலே சேலம் உருக்காலை, சேதுசமுத்திரத் திட்டம், நெய்வேலியிலே இரண்டாவது சுரங்கள் வெட்டுவது, கல்பாக்கத்தில் 200 மெகாவாட் அணுசக்தி அதிகரிப்பது, தூத்துக்குடி உரத் தொழிற்சாலை அமைப்பது இவற்றை வலியுறுத்தி திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள். நாங்கள் மனப்பூர்வமாக இதை ஆதரிக்கிறோம். மத்திய அரசாங்கம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நிறைவேற்றாவிட்டால் என்ன செய்யலாம் என்பதையும் நாம் முடிவுசெய்ய வேண்டும். வேண்டுகோள் விடுவது ஒரு முறை. வேண்டுகோளுக்குப் பலன் இல்லாவிட்டால் என்ன செய்ய வேண்டும் என்பதையும் நாம் முடிவுசெய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

எனக்குத் தெரிந்தவரையில் இங்கே சேலம் தொழிற்சாலை துவங்குவதைப்பற்றிச் சொல்லக் கேட்டுக் கேட்டுக் காதே செவிடாகிவிட்டது. சேலம் தொழிற்சாலை, சேதுசமுத்திரத் திட்டம், நெய்வேலியிலே சுரங்கம் தோண்டுவது ஆகியவற்றிலே திட்டவட்டமாக என்ன செய்யவேண்டுமென்று முடிவு செய்து நடவடிக்கை எடுத்துக் கொண்டால் மத்திய அரசாங்கம் இன்றைக்கு இருக்கக் கூடிய நிலைமையில் நிச்சயமாக ஏற்றுக் கொள்ளுவார்கள்.

அடுத்தபடியாக, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே புதிய நீர்ப்பாசனத் திட்டங்கள் சிலவற்றைப் போட்டிருக்கிறார்கள். பவானி ஆற்றிலே அவனாசித் திட்டம் என்று போட்டிருக்கிறார்கள். பவானி ஆற்றில் இப்போது இருக்கக்கூடிய வாய்க்கால்களுக்கே தண்ணீர் கொடுக்க வகையும் இல்லை; வக்கும் கிடையாது. இரண்டு லட்சம் ஏக்கருக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டியிருக்க வருஷா வருஷம் ஒரு லட்சம் ஏக்கருக்குத்தான் தண்ணீர் போகிறது. மீண்டும் அந்த ஆற்றிலே எப்படிப் புதிய திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்று தெரியவில்லை. இதைப் பற்றி அழுத்தம் திருத்தமாக சர்க்கார் யோசிக்க வேண்டும். பழைய வாய்க்கால்களைப் புதுப்பிக்காமல் ஏதோ பொய் மானைத் துரத்திக் கொண்டு போவது போல் இந்தத் திட்டத்தை மேற்கொள்ளுவதால் பயன் எதுவும் இல்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் எல்லா

மக்களும் பயன் துய்க்கும் முறையில் புரட்சிகரமானதாக அமைய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

* திரு. கே. முருகேசன் : மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களே, தமிழ்நாடு நான்காவது ஐந்தாண்டுத் திட்டங்கள் மீது சில வார்த்தைகள் சொல்லவும், தருமபுரி மாவட்டத்தில் செய்ய வேண்டிய சில காரியங்களைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்லவும் வாய்ப்பளித்தமைக்காக முதலில் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தருமபுரி மாவட்டம் சேலத்திலிருந்து பிரிக்கப்பட்டும் தன் நிறைவுபெறாத ஒரு மாவட்டம். பிரிக்கப்பட்டு மூன்று நான்கு ஆண்டுகள் ஆகிறது. ஒரு பிற்பட்ட பகுதியாகவே தமிழகத்தில் இருக்கிறது. சொல்லப் போனால் மழையின்மையால் வறட்சியால் பாதிக்கப்பட்ட தருமபுரி மாவட்டத்திற்கு ரூபாய் 63 லட்சம்தான் இதுவரை ஒதுக்கப்பட்டிருக்கிறது. சட்டசபை உறுப்பினர்களும், பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர்களும் அரசினரை—மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களையும் தருமபுரி மாவட்டத்திற்குக் குறைந்தது ஒரு கோடி ரூபாயாவது கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார்கள். கொடுத்தது போக இன்னும் அதிகத் தொகையை அரசு வழங்குமாறு இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

வருகிற 1971-72-ம் ஆண்டுக்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின் வசதியும், குடிநீர் வசதியும் செய்து முடிப்பதாகக் கூறியிருப்பதைக் கேட்டு மிக்க மகிழ்ச்சி. மின் விளக்குகளே இல்லாத கிராமம் இருக்கக்கூடாது. மின் விளக்குகளுக்கு ஏற்படும் மின் கட்டணத்தைப் பஞ்சாயத்து யூனியன் நிதியிலிருந்து கொடுக்க ஏற்பாடு செய்தால், எல்லாக் கிராமங்களுக்கும் மின் வசதி எந்த விதத் தடையும் இல்லாமல் கொடுக்கலாம். தன்னிறைவு கொண்ட பஞ்சாயத்துக்கள் தவிர, பண வசதியற்ற பஞ்சாயத்துக்களின் மின் செலவை, யூனியன் ஏற்றுக் கொள்ளலாம் என என் எண்ணத்தைத் தெரிவிக்கிறேன்.

சேலம் தருமபுரிக்குச் சம்பந்தப்பட்ட ரெயில்வே செஸ் நிதி சுமார் 34 லட்சம் ரூபாய் இருக்கிறது. அதைத் தருமபுரி மாவட்டத்திற்குத் தனியாக பாதித் தொகையை அதாவது 17 லட்சம் ரூபாயை மாவட்ட அபிவிருத்திக்கு உதவும் வகையில் பிரித்து உடனடியாகத் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மற்றும் தருமபுரிக்கு நடுவண் நூல் நிலையம் (லோகல் சென்ட்ரல் லைப்ரரி) இன்னும் சேலத்திலிருந்து பிரித்துக் கொடுக்கப்படாமலே இருக்கிறது. அதன் பொது நிதியை இரண்டாகப் பிரித்து தனித் தனியே இயங்க ஆணை பிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் தருமபுரி மாவட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அதற்குத் தனியாகச் செயல்படக்கூடிய 'சீஃப்



எஜுகேஷனல் ஆபீசர்' ஒருவரை நியமித்துத் தரவேண்டுகிறோம். இதே போன்றுதான் தருமபுரி மாவட்டத்திற்குத் தனியாக அக்ரிகல்சுரல் எஞ்சினியரிங் டிப்பார்ட்மென்ட் வேண்டுமென்று நாங்கள் கேட்டுக் கொண்டு வருகிறோம். இதைப் பிரித்துக் கொடுத்தால் விவசாயப் பெருங்குடி மக்கள் பெரிதும் பயனடைவார்கள். இதையும் அரசு கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெற்றுள்ள சின்னாறு அணைத் திட்டத்திற்கு ரூ. 108 லட்சம் செலவில் ஓர் அணை கட்ட ஏற்பாடு செய்துள்ளதைக் கண்டு மிக்க சந்தோஷம். இந்தத் திட்டம் ஏற்கனவே மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பி. பிரிவில் இடம் பெற்று, முடிவு பெறாமல், நான்காவது திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த அரசு அந்தத் திட்டத்திற்கு இந்த ஆண்டே நிதி ஒதுக்கீடு செய்து தருமபுரி மக்களுக்கு ஒரு சிறந்த பணியாக வழங்க, திட்டத்தை எடுத்துக் கொள்ளவும், அட்மினிஸ்ட்ரேட்டிவ் சாங்ஷன் வழங்குமாறும், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் வருகிற செப்டம்பர் மாதத்திலேயே அதற்கு அடிக்கல் நாட்ட வேண்டுமென்றும் தொகுதி மக்கள் சார்பாகவும், தருமபுரி மாவட்ட மக்களின் சார்பாகவும் கேட்டுக் கொள்கிறேன். இந்த அணைத் திட்டத்தினால் தருமபுரி வட்டமே ஓர் செழிப்புள்ள பிரதேசமாகும். விவசாயத்திலும், அதிக உற்பத்தி பெருக்கில் கவனம் செலுத்தும் அரசு, உடனடியாக என் வேண்டுகோளை ஏற்கவேண்டும் எனக்கேட்டுக் கொள்கிறேன். இதனால், பாலக்கோட்டில் ஏற்படப் போகும் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு வேண்டிய தண்ணீர் தட்டுப்பாடு இல்லாமலும், பாப்பாரப்பட்டி, தருமபுரி, கடகத்தூர், சோகத்தூர் போன்ற பெரிய ஏரிகளுக்கு நிரந்தர நீர்ப்பாசன வசதி ஏற்படும். ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் பயனடையும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக, ஒகனேக்கல் நீர் மின் நிலையத்தைப் பற்றி திட்டத்தில் இடம் பெற்றும், மாண்புமிகு நிதி அமைச்சர் அறிக்கையில் அதைப் பற்றி ஒன்றுமே கூறப்படவில்லை. திட்டம் பரிசீலனை செய்யப்பட்டு, ஓர் சிறந்த திட்டத்தை இந்த அரசு மைசூர் அரசுடன் பேசி அந்த அணைத் திட்டத்தையும் நிறைவேற்றக் கோருகிறேன். ஒகனேக்கல் நீர்வீழ்ச்சி ஓர் இயற்கை சொழுமிய ரம்மியமான காட்சி. தமிழ்நாட்டில் குற்றாலத்திற்கு அடுத்தது அதுதான். அங்கு நல்ல சுற்றுலா மாளிகை கிடையாது. ஒகனேக்கலில் ஓர் டூரிஸ்ட் சென்டர் ஆக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. சி. கோவிந்தராஜன் : துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திற்கான நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நகல் பற்றிய விவாதத்தை துவக்கி உரை நிகழ்த்தும்போது

[திரு. சி. கோவிந்தராஜன்] [1969 ஆகஸ்ட் 25

நிதியமைச்சர் அவர்கள் பல கருத்துக்களைக் கூறினார்கள். அந்தக் கருத்துக்களில் பெரும்பாலானவைகள் வரவேற்கத் தக்கவை; எங்களுக்கு அதில் உடன்பாடு உண்டு. மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைத் தீட்டி முடித்த பிறகும் கூட மேலும் பெரிய பெரிய முதலாளிகள் தான் மேலும் வளர்ந்திருக்கிறார்கள்; ஏகபோக மூலதனம் வளர்ந்திருக்கிறது; மேலும் அந்நிய மூலதனத்தின் சுரண்டலும் அதிகமாகி இருக்கின்றது. நிலச் சீர்திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டும் பயன் ஏற்படவில்லை. ஒரு திட்டம் நிறைவேற்றப்பட்டால் அந்தத் திட்டத்தின் விளைவை எங்கே பார்க்க வேண்டுமென்று சொன்னால் மக்களுடைய வயிற்றுப்பசி அந்தத் திட்டத்தின் மூலமாக நீங்கி இருக்கிறதா என்று பார்க்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இவைகள் எல்லாம் நல்ல கருத்துக்கள். இவை தமிழக அரசின் கொள்கையாக மாறி இந்த ஐந்தாண்டுத் திட்டத்தை இறுதியாக பரிசீலித்து முடிக்கும் தருவாயில் இந்தக் கொள்கைகளின் அடிப்படையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் திட்டத்தை அமைக்க வேண்டுமென்று விரும்புகிறேன். திட்டம் மக்களுக்காகத்தான் என்று அனைவரும் பேசுகிறோம். மனித சக்தியை அதிகம் பயன்படுத்தவேண்டும் என்று திட்டக் கமிஷனும் சொல்லுகிறது. அந்த முறையிலே பார்த்தால் இது லேபர் இன்டென்சிவ் ஸ்கீமாக இருக்க வேண்டும். மனித சக்தியை உபயோகப்படுத்தும் திட்டமாக இருக்கவேண்டும். இன்று விவசாயத் துறையிலே விவசாயக் கூலிகள் வேலை கிடைக்காமல் உபரியாக இருக்கிறார்கள்; தொழில் துறையிலே தொழிலாளர்கள் உபரியாக இருக்கிறார்கள். ஆண்டுதோறும் ஒரு லட்சம் மாணவர்கள் கல்லூரியில் படித்து வெளிவருகிறார்கள். இவர்களுக்கெல்லாம் வேலை உத்தரவாதம் செய்யப்படக்கூடிய முறையில் திட்டங்களை அமைக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறேன்.

திட்டத்தைத் தீட்டும்போது அமைச்சர்கள் அரசியல் தலைவர்கள் உட்கார்ந்து முடிவு செய்கிறார்கள். மிகப் பெரிய அதிகாரிகளுடைய ஆலோசனைகளைக் கேட்கிறோம். இடையில் இருக்கக்கூடிய அதிகாரிகள், குமாஸ்தாக்களுடைய ஆலோசனைகளைக் கூடக் கேட்டுத் திட்டத்தைத் தயாரிப்பது நலமாக இருக்கும்.

நம்முடைய மாநிலத்திலே மூன்று லட்சம் மீனவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, ஆழ்கடல் மீன் பிடிக்கும் திட்டத்தைத் தனியார் துறைக்கு விடாமல் கூட்டுறவுத் துறையிலே விடப்பட வேண்டும். அதோடு படகுகளை விநியோகம் செய்வதையும் கூட்டுறவுத் துறையிலே செய்யவேண்டும். நமது மாநிலத்தில் ஐந்து லட்சம் கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். கைத்தறி நெசவுத் தொழில் எப்படிப்பட்ட நிலைமையில் இருக்கிறது என்பது நமக்கெல்லாம் நன்றாகத் தெரியும். இந்த ஐந்து லட்சத்தில் பெரும்பகுதியினர் தற்போது கூட்டுறவுத் துறையில்



1969 ஆகஸ்ட் 25] [திரு. சி. கோவிந்தராஜன்]

இல்லை. பெரும்பகுதியினரைக் கூட்டுறவுத் துறைக்குக் கொண்டு வரும் முறையில் கூட்டுறவு இயக்கத்திற்கு அரசு பங்கு மூலதனத்தை அதிகமாகச் செலுத்தவேண்டும். தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணிகளில் விற்பனைக்கும் வழி செய்ய அரசு முன்வர வேண்டும்.

நமது நாட்டில் காடுகள் மூலமாக நல்ல வருமானம் கிடைக்க வழிவகைகள் இருக்கின்றன. விலை உயர்ந்த சந்தன மரங்கள் திருட்டுப் போவதாக அறிகிறோம். விலை உயர்ந்த இதர மரங்கள் கூட திருட்டுப் போவதாக அறிகிறோம். இவைகளை எல்லாம் அரசு இலாகாவே பொறுப்பேற்று விற்பனை செய்யவேண்டும்; காண்டிராக்டுக்கு விடக் கூடாது; இதன் மூலம் அரசுக்கு அதிக வருவாய் கிடைக்கும்.

இண்டஸ்ட்ரியல் கூட்டுறவுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். சர்க்கார், தொழிற்சாலைகளுக்கும் தொழிலாளர்களுக்கும் நிவாரணம் என்ற முறையில் பல தொழில்களை நடத்தும் போது தொழிலாளர்கள் ஏற்கனவே அனுபவித்து வந்த சலுகைகள் பறிக்கப்படாமல் இருக்கும் முறையில் பாதுகாப்பு வேண்டும்.

இப்போது கொண்டுவரப்படக்கூடிய, "ரிலீஃப் அண்டர் டேக்கிங்ஸ் ப்ரொவிஷன்ஸ்" பில்லில் அப்படிப்பட்ட அந்த ஷரத்துக்கள் இருக்கின்றன. அதைப் பரிசீலித்து தற்போதைய சட்டங்கள் மூலம் தொழிலாளர்கள் அனுபவித்து வரும் சலுகைகள் பாதிக்கப்படாமல் இருக்க வழிசெய்ய வேண்டும். நம் மாநிலத்தில் 31 பின்தங்கிய வட்டங்கள் இருக்கின்றன. நம் மாநிலத்தின் நிலப்பரப்பில் 40.86 சதவிகிதம் அவைகள் உட்கொண்டிருக்கின்றன. இந்தப் பிரதேசங்கள் பூராவும் மழை இல்லாததால் நீர்ப்பாசன வசதி மிகவும் குறைவாக இருப்பதால் பின்தங்கிய பகுதிகள் என்று கூறப்படுகின்றன. ஆகவே அந்தப் பின்தங்கிய பிரதேசங்களில் அதிகக் கவனம் செலுத்தி வேண்டிய ஏற்பாடுகளை இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் செய்யவேண்டும். அதற்கான ஏற்பாடுகள் இதில் இருக்கவேண்டும். மலை வாழ் பகுதி மக்கள், கொல்லிமலை போன்ற இடங்களில் உள்ள மக்கள், நல்ல சுபிட்சமாக வாழ்வதற்குப் பதிலாக அங்குள்ள நிலச் சொந்தக்காரர்களுள் லேவாதேவிக்காரர்களுள் இவர்களின் ஊடுருவல் காரணமாக அவர்கள் விளைவிக்கும் எல்லாப் பொருள்களையும் வாங்கி அந்த மக்களின் வாழ்க்கையை பாழாக்கும் ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அப்படிச் செய்வதைத் தடுத்து அந்த மலைவாழ் பகுதி மக்களைப் பாதுகாக்கக் கூடிய திட்டங்கள் தீட்டப்படவேண்டும். கடலூர் துறைமுக அபிவிருத்தித் திட்டம் பற்றி சென்ற ஆண்டே சொன்னார்கள். நான்காவது ஐந்தாண்டுத்

திட்டத்தில் வரும் என்று. அத்துறைமுக அபிவிருத்திக்கான வேலைகளை துரிதமாக ஆரம்பித்து அதை முடிப்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்யவேண்டுமென்று கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, on behalf of the Swatantra Party I wish to offer a few remarks on the Fourth Five-Year Plan which was presented a few days ago. Sir, in spite of the number of Plans we have been drawing, it is really a great tragedy that to-day the most important and basic amenity that a man needs viz., water, is not available to-day. That is the tragic manner in which we have been planning for the past 15 years. Yesterday I had an opportunity to go to my constituency itself and I asked a number of people what was their basic problem. The only problem that my constituents told me was, 'We are not bothered about anything else. Please give us some drinking water.' This is the opinion of the people all over the State and this is the position in cities like Madurai, Coimbatore and other major cities. This state of affairs is a reflection on the pathetic manner in which we have been planning for nearly a decade and half. How is it that we are having the water problem? What is the main reason for it? It is due to bad planning. Water especially for the City was originally planned for a population of nearly 7 lakhs of people and at that time I was studying in the Fourth Form and I distinctly remember I was asked, what was the population of the Madras City and I answered that the population was 7 lakhs. So that was planned 30 years ago and how that quantity of water would be sufficient for the present population. This is all due to had planning and that is my fundamental question. We have not devoted sufficient time to this water problem whereas we have been dabbling and devoting more time to various problems like nationalisation of banks—I do not want to go to into it as it is a Central subject—and the nationalization of text-books. We are going to have complete nationalisation of text-books. We are going to have nationalisation of transport in a severe manner. Then we are going to divide the country and the States into different zones districtwar or talukwar—for the purpose of distribution of foodgrains and compartmentalise them—and the Civil Supplies Department and the Highways Department are engaged in this problem and they have no time to look into the basic water problem. In this connection, with the permission of the Chair, I shall quote some excerpts from the issue of 'The Sunday Standard', dated 21th August 1969. It is stated—

'Corporation officials and the City Council have been far too complacent in the past. When the monsoon failed, the Corporation did not act till February'.

That is bad planning.



Then again I shall quote some excerpts from 'The Hindu', dated 20th August 1969. It runs as follows :—

'A new water works station of the same capacity and head as that in Kilpauk is under erection in Prakasa Mudali Road in Thyagarayanagar to take care of the southern half of the City. No satisfactory explanation (except that the Council did not give prompt approval) is forthcoming as to why two years after the underground tank was built, the overhead balancing tank is yet to be constructed and the necessary pumps are yet to be installed or as to why the re-designed mains have been ready for quite some time but have not been brought into use.'.

This only shows how badly we have been planning for solving the water problem.

Next I come to the Agriculture Department. Here again I will read some excerpts from the Draft Outline of the Fourth Five-Year Plan. On page 36 in paragraph 7 it is stated—

'This serious shortfall in production of foodgrains was however partially offset from the point of view of the impact on State income by the rise in the production of sugarcane in terms of gur . . . . .' So, there has been a shortfall. I am not accusing this Government and it has been legacy of the previous Government but ultimately this Government is also responsible for the shortfall in agricultural production. The only satisfaction is that it has been offset by the rise in the production of sugarcane in terms of gur. The basic reason for the shortfall is that for the last decade or so we have been adopting anti-agricultural measures with the result that the agriculturists are made to run away from the most important task of producing food. The measures which we think are progressive and would help the tenants are rigorous in nature and they prevent the agriculturists from producing what we want.

Then I come to another aspect of agriculture. It might be stated that it is not possible to produce more but I can challenge that if only modern methods are employed in the agricultural industry, it is possible to increase production. It has been possible for a private agency, TAFE, having 200 acres to industrialise agriculture and increase production. So, it should be possible to increase production by modern methods. In this connection, I would suggest that the industries in the Madras City also could have their own agricultural farms and they can produce foodgrains by modern methods and can feed their own workers by supplying rice or paddy at a cheaper rate. If that is done, it would be an eye-opener to others but unfortunately we are involved in ideological conflicts and pet theories.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

Now I come to education. With regard to education, we have been spending Rs. 53 crores. My submission is that the education we give to the students drives them as frogs in the well and they do not have ample opportunity to get employment outside the

State. The problem of educated unemployed is a very serious one. Whatever education we give to them should be employment-oriented. Are we to be slaves to pet theories and regionalism? In this connection, I wish to quote some excerpts from "The Hindu", dated 28th July 1969. It is stated in its editorial—

"In recent years the performance of students from Bombay, Madras and Calcutta in Central Service examinations has deteriorated in comparison with that of students from Delhi and Punjab. The high schools and colleges of the Delhi area particularly have shot ahead in the improvement of standards. It is therefore of particular interest to observe how Delhi University, which is under the wing of the Central Government, is planning the introduction of the regional language, which happens to be Hindi in its geographsical area. . .

Then it is stated—

"But the colleges will first find out how many students want to study in this medium and sections will be formed only on that basis."

So, there is no compulsion.

Whatever medium the student wants, he can take that medium. The colleges will find out how many students want to study in such and such medium and sections will be formed only on that basis. However, every student, no matter what the medium, will be required to attain a high level in the knowledge of English, so that he can use the reference books in the library. Further it is planned that even in the regional language sections, some lectures will be delivered in English because some of the leading professors are not fluent in Hindi, and it would be unfair to deprive the students of their teaching. What a wonderful point? I hope the Hon. Minister for Education will take note of this.

(The Hon. Speaker sounded the gong.)

DR. H. V. HANDE: Since the Leader and the Deputy Leader of my party are not taluking, I may be given three or four minutes more.

THIRU D. S. AUTHIMOOLAM: He is making the finest speech. He may be given some more time.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்: பைனஸ்ட் ஸ்பீச் என்றால் மற்றவர்கள் உரையெல்லாம் இல்லையா?*

DR. H. V. HANDE: I say, in the name of language, don't make our students frogs in the well. Let us see what the colleges in Delhi are doing. Let us correct the mistakes. Let us re-orient our educational policy.



Next is industrial sector. Agriculture accounts for 50 per cent and industries for 25 per cent. I do not want to talk of public-sector undertakings. They are a miserable failure. Let us see what the "Indian Express" has to say on this. In its issue, dated 6th April 1969 it says as follows :—

"The crores of rupees invested in public sector plants giving virtually no return, constitute one of the major reasons for the continuing poverty of millions."

About Rs. 3,200 crores have been invested in 55 public sectors plants. What was the return in 1967–68? A net loss of Rs. 35 crores. Who is to pay the loss? To throw money in this fashion is nothing short of criminal when 50 per cent of Indian children are under-nourished. The paper goes on giving other reasons also. Let us remember that the poor tax-payer has to share the loss, for no fault of his. That is the story of Central Government public sector undertakings. Why repeat the same mistake in the State also by starting more public sector undertakings here? Let us re-orient our industrial policy. Let us face facts and see that we no longer venture on these public sector projects yielding no returns but only loss. Clearly formulate your policy; say such and such schemes only will be started by us, which would yield us profit. Say your views clearly.

About a year ago, I had the unique privilege to say for the first time in this House that we will not get Salem Steel Plant. I was the first to say that on our own we could start Pelletisation Plant. The revered Anna called me and told me that it was a brilliant idea and that he would have it examined. The idea emanated from me 1½ years ago and I am glad that it had been given attention by this Government and that Pelletisation Plant is coming. I am thankful to this Government for the same.

Now I come to the so-called private entrepreneurs, starting the so-called private project. But it is not so in reality because they borrow the bulk of the capital from State financial undertakings. Lot of loans are also taken from Government. No risk is taken by them. There is no question of efficiency there. If it is a private sector, it should run on competitive economy with public sector. But it is not so here. These private entrepreneurs here depend entirely on Government help. That is the result of permit-licence-raj we are having. That is why our party, Swatantra Party, is attacking the very system, "permit-licence raj". That should be removed. Ours is the first party to cry hoarse against that system. Ours is a unique approach, different from that of other parties. I was glad when our Hon. Minister for Industries said publicly some months ago that it is the permit-licence-quota system at the Centre that is holding up the starting of many industries in the State. Our Party is totally against that. Let us try to put into action what we say. Let us not say one thing now and wait for its fruition for four or five years.

திரு. பி. ஜி. கருத்திருமன்: சபாநாயகரவர்களே, இப்பொழுது விவாதித்துக்கொண்டிருக்கும்படியான நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்திலே, என் கட்சியின் கருத்துக்களையும் நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். முதலாவதாக, ஏற்கெனவே கொடுக்கப்பட்ட அந்த வரைவைக் கொடுத்ததற்கு முன்னாலே சில கருத்துக்களையும் அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், முதல் ஐந்தாண்டுத் திட்டம் நடந்து, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் நடந்து, மூன்றும் ஐந்தாண்டுத் திட்டமும் நாம் சுதந்திரம் பெற்றதற்குப் பின்னாலே நடத்தப் பட்டது. ஆனால் நான்காம் ஐந்தாண்டுத் திட்டம், 66-ம் வருஷத்திலேயே ஆரம்பிக்க வேண்டிய திட்டம், மூன்றாண்டு களாகியும் ஆரம்பிக்கவில்லை. ஏதோ ஓரளவு ஆரம்பித்து, இப்பொழுது 70-ம் வருஷத்திலே ஆரம்பிக்க வேண்டுமென்ற நிலை யிருக்கிறது. இதற்கு அடிப்படைக் காரணம் என்ன? இவர்கள் பொறுப்பு, அவர்கள் பொறுப்பு என்று குற்றஞ்சாட்டி பிரயோசனம் இல்லை. இதற்கு அடிப்படைக் காரணம் என்னவென்று பார்க்க வேண்டும். முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு, 2,400 கோடி ரூபாயும், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 5,400 கோடி ரூபாயும், மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 11,000 கோடி ரூபாயும் போட்டு திட்டங்களைப் போட்டோம். இத்தனை திட்டங்கள் போட்டும்கூட, ஓரளவு நாம் அந்த இலட்சியத்தை அடைந்திருந்தாலும்கூட, பூரணமாக மக்களுக்கு வசதி செய்து கொடுக்க முடியவில்லை என்று ஆளும்படியான கட்சி மட்டுமல்ல, நாம் எல்லோரும் சொல்லிக்கொண்டுதானிருக்கிறோம். அதற்கு அடிப்படைக் காரணம் அரசியல் கட்சிகள்தான் என்று எல்லா அரசியல் கட்சிகளையும் குற்றம் சாட்டுகிறேன். மக்களிடத்திலே போய், மக்களுக்கும் இதில் பங்கிருக்கிறது, இதில் இருக்க வேண்டும், ஊதியத்தை மிச்சப்படுத்த வேண்டுமென்று மக்களும் பங்குகொள்ள வேண்டும், கடினமாக உழைக்கவேண்டும், உற்பத்தியைப் பெருக்கவேண்டும், சமுதாயத்திற்குச் சொந்தமாக சொல்ல மறந்துவிட்டோம். மலிவான பிரசங்கம் செய்யப்பட்டதே தவிர, இதில் செய்யவில்லை. நாங்கள் பதவிக்கு வந்தால் மூன்று படி போடுகிறோம் என்று பொறுப்பற்ற முறையிலே பேசி, மக்களின் வாக்குகளைப் பெறத்தான் முயற்சி செய்யப்பட்டதே தவிர, மக்களிடத்திலே சென்று, உங்களுக்கும் இதில் கடமையிருக்கிறது என்று சொல்லத் தவறிவிட்ட காரணத்தினால்தான் இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் நெருவளையில் தள்ளிப் போய் விட்டது. நிதியமைச்சரவர்கள் ஹிட்லர் பாணியில் பிரசங்கம் செய்தார்கள். முன்னால் இருக்கும்படியான கட்சிகள், அரசியல் கட்சிகள், இருபதாண்டுக் காலத்தில் அதைத் தீர்த்துவிட்டார்கள், நாங்கள் தனிப்பெரும் அவதாரங்கள் இதோ வந்திருக்கிறோம் என்று சொன்னார்கள். முன்னால் இருந்த கட்சி ஒன்றுமே சாதிக்காமல் சென்றுவிட்டதா? 30 இலட்சம் டன்னாக இருந்ததை 45 லட்சம் டன்னாகச் செய்தது யார்? 67-லே 69 லட்சம் சாதித்து விட்டோம் என்று சொல்கிறார்கள். ஏ.டி.டி. 27-ஐ நாங்கள்தான் கண்டுபிடித்தோம் என்றுகூட சொன்னார்கள். நாங்கள் செய்ததைப் பாராட்டுவதற்கான பண்புகூட, பண்பு குறைந்தவர்கள் என்று சொல்லவில்லை. பண்புடையவர்கள்தான். யார் இந்தத் திட்டங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்தது? திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் பிளானிங் கமிஷனில் இருக்கும்பொழுது ஒன்றுமே செய்யவில்லையா? இவர்கள் சொல்லுகிறார்கள், பூராவும் குட்டிச்சுவர் செய்துவிட்டார்கள் என்று. நாங்கள் வந்துதான் மாடிக்கு வந்திருக்கிறார்கள் என்னும் படியான பிரச்னையைச் சொன்னார்கள். நான் கேட்கிறேன், நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் என்பது தொடர்ந்து வந்த திட்டமா? அல்லது தி.மு.க. கட்சி வந்த பிறகு போட்ட திட்டமா? எத்தனையோ ஆண்டுகளாகத் தொடர்ந்து வந்த திட்டமாகும். அதிலே, புதிதாக இவர்கள் ஏதேனும் சாதித்திருக்கிறார்களா? நாங்கள் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் சாதனைகளைச் சாதித்திருக்கிறோம். இதற்காக, வெளிநாட்டு நிபுணர் கமிட்டியைப் போட்டாலும் சரி, அல்லது எந்த நிபுணர் கமிட்டியைப் போட்டாலும் சரி, அவர்கள் இந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில், அது மத்திய சர்க்கார் ஆனாலும் சரி, ராஜ்ய சர்க்காரானாலும் சரி, தவறு செய்து விட்டார்கள் என்று தீர்ப்புக் கொடுத்தால், நான் இந்தச் சபையிலே மட்டும் அல்ல, எந்தத் தண்டனையையும் நான் ஏற்றுக் கொள்ளத் தயாராகவிருக்கிறேன். இவர்கள் பத்து வருஷங்களாக கார்ப்பொரேஷனுக்கு வந்தார்கள். இன்னும் தண்ணீர் இல்லை என்ற குறைதான். எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், திட்டங்கள் போடுகிறோம், அதில் சில கஷ்டங்கள் இருக்கலாம். அது மனித இயல்பு. அதற்காக, ஒன்றுமே செய்யவில்லை, நாங்கள் வந்துதான் செய்தோம், அவர்கள் இருபது வருஷங்களாகச் செய்ததை நாங்கள் 20 மாதங்களிலேயே குட்டிச்சுவர் பண்ணுவதற்குத் தயாராகயிருக்கிறோம் என்று சொல்வது. அதற்கு வேண்டுமானால் மாலை போடுங்கள். நாம் மக்களுக்குச் சொல்லத் தவறிவிட்டோம். கடினமாக உழைக்க வேண்டுமென்று சொல்வதற்கு அரசியல் கட்சிகள் பயப்படுகின்றன. அதனால் ஏற்பட்ட தாமதமே தவிர வேண்டுமென்று செய்யப்பட்டது அல்ல. உற்பத்தி பெருக வேண்டும், உற்பத்தி பெருக வேண்டுமென்று சொன்னால் எப்படிப் பெருகும்? போட்ட திட்டங்கள், முன்னேற்றமான விவசாயம், அதற்குமேல் கட்டுப்படியாகக் கூடிய விலை, அதற்கு எந்தச் சர்க்காராவது வந்திருக்கிறதா? மத்திய சர்க்காரையும் சேர்த்துத் தான் சொல்லுகிறேன். மத்திய சர்க்கார் பெரிய தனிப்பெரும் அவதாரம் என்று சொல்லவில்லை. அந்த உணவு அமைச்சரை அன்றும்தான் சொன்னேன். இன்றும்தான் சொல்லுகிறேன். மத்திய சர்க்கார் சொன்ன விலைதான் என்றீர்களே, இப்பொழுது ரூ. 2 ஏற்றியிருக்கிறீர்களே, அவர்கள் சொல்லித்தான் செய்தீர்களா? மத்திய சர்க்கார் ஏற்றவில்லையே. எனக்குக் கடிதம்

எழுதியிருக்கிறார்கள், நாங்கள் எந்த விலையைக் கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ளுகிறோம் என்று, என்றீர்களே, இப்பொழுது நீங்களே ஏற்றியிருக்கிறீர்களே. இதையெல்லாம் எடுத்துச் சொன்னேன். கட்டுப்படியாகிற விலை இருக்கவேண்டும், நியாயமான விலை இருக்கவேண்டும், அரசியல் காரணங்களுக்காக, மலிவான பிரசாரங்கள் இருக்கக்கூடாது என்ற நிலைதான் இருக்க வேண்டும். நாங்கள்தான் திட்டத்தையும் போட்டோம், திட்டத்தையும் நிறைவேற்றியிருக்கிறோம். ரஷ்யாவிலே 6 ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டும்கூட பூரணமாக நிறைவேற்றப் படவில்லை. அங்கே மக்களுக்கு எல்லா சௌகரியங்களும் கொடுக்க வில்லை. இங்கே, 1971-க்குள்ளாக எல்லா கிராமங்களுக்கும் மின்சார வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். வரவேற்கிறோம். ஆனால் நிச்சயமாக முடியாது, நான் சொல்கிறேன் ; இப்பொழுது கொடுக்கப்பட்ட 30,000 கிராமங் களுக்கு எப்படி கொடுக்கப்பட்டிருக்கிறது ? அந்த அந்த ஊரிலே கம்பங்கள் இருக்கின்றன. பூரணமாக கரண்ட் வந்திருக்கிறதா ? இந்த ஊரிலிருந்து அந்த ஊருக்கு—அந்த ஊரில் கிணறு இருந்தால்—ஒரு கம்பத்தை நட்டு அந்த ஊரில் மின் இணைப்பு கொடுக்கப்பட்டதாகக் கணக்கு வந்திருக்கிறது. 'பார்த்தீர்களா', என்று சொல்லிக் கொள்ளலாம். தி.மு.க. அரசு வந்து 1971-க் குள்ளாக பூராவுக்கும் மின்சாரம் இருக்கும் என்று சொல்லிக் கொள்ளலாம். ஆனால் 1971-க்குள்ளாக பூரா இடங்களிலும் கம்பம் இருக்கலாம். பத்து இடத்திலே கம்பம் போட்டால் மின்சார விஸ்தரிப்பா என்ன ? இது முடியாத சமாச்சாரம். நாங்களும் தான் சொன்னோம், எல்லோருக்கும் வீடு கொடுக்கிறோம், எல்லோருக்கும் பூமி கொடுக்கிறோம் என்று. அதுதான் எங்கள் இலட்சியம். நீங்கள் கொடுத்தீர்களே. தீ பிடிக்காத வீடுகள், உலகத்திலேயே இல்லாத ஓர் அதிசயம். பாங்கே தீ பிடித்து எரிகிறது, அங்கே. அதை அணைக்க முடியவில்லை. ஆக எதிலும் நியாயமாக, நடந்துகொள்ளவேண்டும். யாரையும் குற்றம் சாட்டவில்லை. பழைய கதையைச் சொல்லுவதை நிறுத்திவிடுங்கள். 'காங்கிரஸ்காரன் தப்பு பண்ணினான்' என்று சொல்லுகிறீர்கள். அதற்குத்தான் மக்கள் தீர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். தனிப்பெரும் அவதாரம் வந்திருக்கிறீர்கள். இதற்கு முயற்சி செய்யுங்கள். எங்கள் மேல் குற்றம் சொல்லிப் பிரயோசனம் இல்லை. (குறுக்கீடு.) ஆமாம், தனிப் பெரும் அவதாரம் வந்திருக்கிறீர்கள். (குறுக்கீடு.) அது 10-வது அவதாரம், கல்கி அவதாரம். உங்களுக்குத்தான் நம்பிக்கை இல்லையே, நீங்கள் என் ஐயா அதைப்பற்றிப் பேசுகிறீர்கள். நம்பிக்கையில்லையென்கிறீர்கள். மடாதிபதி இல்லை என்றீர்கள், மடாதிபதிகளை முன்னால் கொண்டுவந்து வைத்திருக் கிறீர்கள். பேசுவதற்கும் கொள்கைக்கும் நடப்பதற்கும் சம்பந்தமே கிடையாது. மின்சார வசதி வரட்டும், வேண்டா மென்று சொல்லவில்லை, நாங்கள் உற்பத்தி பண்ணினோம், நீங்கள் நீட்டினீர்கள் கம்பியை (சிரிப்பு). நீங்கள் என்னசெய்தீர்கள் ?





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கம்பி நீட்டினார்கள் என்று சொன்னால் வேறு ஒரு பொருள்படும். (திரு. பி. ஜி. கருத்திருமன் : எலெக்டிரிசிட்டி கம்பி.) கம்பி நீட்டி விட்டார்கள் என்றால் ஓடிப் போய் விட்டார்கள் என்று பொருள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இது என்ன சென்னைத் தமிழா ? மின்சாரக் கம்பிகளை நான் சொல்கிறேன். ஆக, இந்த நிலையிலே இந்த திட்டங்கள் போடப்பட்டிருப்பதைப் பூரணமாக வரவேற் கிறேன். இதற்கு முழு ஆதரவும் கொடுக்கிறோம். எங்களுக்கு என்று ஏதாவது செல்வாக்கு இருக்குமானால் அதைப் பயன்படுத்தி இவைகளை நிறைவேற்ற உறுதுணையாக இருப்போம். கொஞ்சம் பயனுள்ளதை, ஜாக்கிரதையாக நிறைவேற்ற வேண்டுமென்பது தான் எங்களுடைய ஆவலே தவிர வேறு ஒன்றும் கிடையாது.

சேலம் ஸ்டீல் பிளாண்ட்—உடனே சொல்வார்கள், இது முன்னாலே இருக்கக்கூடிய சர்க்கார் போட்ட திட்டம்—அப்ளிகேஷன் போடப்பட்டிருக்கிறது என்று சொல்வார்கள். அதை சீக்கிரம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றுதான் கேட்டுக் கொள்ளுகிறேன். பாராளுமன்றத்திலே அங்கத்தினராக இருந்த சமயத்திலேகூட வேண்டுமென்று நான் சொன்னேன். சேது சமுத்திரம் திட்டம் வேண்டியதுதான். இரண்டாவது பிராஜக்ட், நிச்சயமாக எடுத்துக்கொள்ளவேண்டும். கல்பாக்கத்திலே இருப்பதை துரிதமாக நடத்தவேண்டுமென்பதிலே அபிப்பிராய பேதம் கிடையாது. துறைமுகங்களைப் பற்றி சொல்லவே வேண்டிய தில்லை. பூரண ஒத்துழைப்பு கொடுக்கிறோம் நாங்கள். இந்த திட்டங்களை மட்டுமல்ல, சிறு துறைமுகங்களை எல்லாம் கவனிக்க வேண்டும். நாகப்பட்டினம், கன்னியாகுமரியில் கொளச்சல் போன்ற துறைமுகங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட வேண்டும். அதாவது, ஆழப்படுத்துதல், இன்னும் அத் துறைமுகங்களுக்கு வேண்டிய வசதிகளை எல்லாம் செய்யவேண்டும். அத் துறை முகங்களை சீர் செய்து, ஏற்றுமதி-இறக்குமதி இவைகளையெல்லாம் அதிகமாக ஆக்க, அதற்கான வாய்ப்பினைக் கொடுககவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்கடுத்தபடியாக, சில முக்கியமான விஷயங்கள் என்ன வென்றால், எத்தனையோ அணைகளைக் கட்டினோம். அதனால் பாதிக்கப் பட்டவர்கள் இருக்கிறார்கள். சுதந்திரம் பெற்றதற்குப் பின்னாலே முதன்முதலாகக் கட்டிய அணை கீழ் பவானி அணைக்கட்டுதான். அதனாலே பாதிக்கப்பட்ட சில கிராம மக்கள் இருக்கிறார்கள். ராஜா நகர், பசுந்தோட்டம், பூத்தகுடி, வாலி போன்ற கிராமங்களில் இருக்கக்கூடியவர்கள் இந்த அணையைக் கட்டியதன் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு உதவி செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம். பழைய சர்க்காரில் செய்தீர்களா என்று கேட்பீர்கள். செய்தோம், மின்சார விஸ்தரிப் பெல்லாம் செய்யப்பட்டது. தண்ணீர் பற்றாக்குறையாக இருக்கும் சமயத்திலே, மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டு மக்கள்

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1969 ஆகஸ்ட் 25

பாதிக்கப்பட்டிருக்கிறார்களே, அவர்களுக்கு, அப்பகுதிகளில் கிணறுகளை ஆழப்படுத்துதல், மற்ற வசதிகளைச் செய்து கொடுத்தல் மூலமாக வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மலைப் பிரதேசங்கள் எல்லாம் இருக்கின்றன. தாளவாடி பிர்க்கா பகுதிகள் எல்லாவற்றுக்கும் போக்குவரத்து வசதிகள் செய்து தரவேண்டும். மாஸ்டர் ப்ளான் ஒன்று போட்டு, இந்தப் பகுதியிலிருந்து இந்தப் பகுதிக்கு போவதற்கு வழி என்ற முறையில் திட்டங்களை நிறைவேற்ற சர்க்கார் முன்வரவேண்டும்.

அடுத்தபடியாக, அணைக்கட்டு திட்டத்திலே ஆறு எங்கே ஓடினாலும் அது இந்திய தேசத்திற்கு சொந்தம். எந்தப் பகுதியிலே தண்ணீர் அதிகமாக இருக்கிறதோ அங்கிருந்து வேறு பகுதிக்குத் தண்ணீர் கொண்டு செல்வதுதான் நியாயமான முறை. ஆனால் மதிப்பிற்குரிய நிதியமைச்சர் அவர்கள் ஒரு பெரிய சாதனையைச் செய்திருக்கிறார்கள். நீங்கள் ஏன் பாராட்ட மறுக்கிறீர்கள், நம்முடைய ஊராயிற்றே நீங்கள், நம்முடைய மாவட்டத்தைச் சேர்ந்தவராயிற்றே நீங்கள் என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு நிரம்பப் பாராட்டு கொடுக்கப்போகிறேன். கேரளத்திலே ஒப்பந்தம் செய்து விட்டோம் பார்த்தீர்களா ? என்ன சாதனை சாதித்துவிட்டோம், இந்த எதிர்க்கட்சித் தலைவர் ஆதரிக்கிறாரா என்று கேட்கிறார்கள். நான் ஆதரிக்கிறேன். கேரள-தமிழ் நாட்டு ஒப்பந்தத்தை வரவேற்கிறேன். நீங்கள் அங்கிருந்து தண்ணீர் கொண்டுவர வழி செய்திருக்கிறீர்கள். ஆனால், பவானியில் இருக்கிற தண்ணீரை ஏன் ஐயா கேரளத்திற்கு கொடுத்தீர்கள் என்று கேட்டோம். இது மிகவும் அநியாயமானது, நல்லதல்ல என்ற கருத்தையும் சொல்லிவிட்டோம். அதைத் தடுக்கவேண்டுமென்ற நிலை அல்ல, கேரளத்திலிருந்து ஏன் தண்ணீரைத் திருப்புகிறீர்கள் ? அங்கே தேவைக்குப் போதுமான தண்ணீர், அதிகமாக உள்ள தண்ணீர், மேற்குக்கடலில்—அரபிக் கடலில்—போய் விழுகிறது. அந்த தண்ணீரை எல்லா மக்களும் பயன்படுத்திக்கொள்ளவேண்டுமென்றுதான். அந்த தண்ணீரை கேரள மக்களும் பூரணமாக பிரயோசனப்படுத்திக்கொள்ளவேண்டும். அவர்களும் பயன்படுத்திக்கொள்ளட்டும், வேண்டாமென்று சொல்லவில்லை. அதற்கு மேல் ஏனைய தண்ணீரை நாம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

அடுத்து, பரம்பிக்குளம்-ஆளியாறு பிராஜக்ட்டில் கூட ஓரிடத்தில் விட்டுக்கொடுத்துவிட்டோம். கீழ் பவானியிலேயிருந்து 2.5 மில்லியன் டி.எம்.சி. அளவு அவர்களுக்கு கொடுப்பதாக—அணையை அவர்கள் கட்டிக்கொடுப்பதாக ஒப்பந்தம். ஏற்கனவே, கீழ் பவானியிலே இருக்கும்படியான தண்ணீர் பாசன வசதிக்காக 2 வருடம் விடமாட்டேன் என்று சொல்லிவிட்டிருக்கிறார்கள். தண்ணீர் அதிகமாக இருந்து கொடுத்தால் பரவாயில்லை. ஏற்கனவே பாசன வசதியற்ற நிலையில் 2½ மில்லியன் டி.எம்.சி. கொடுத்தால், இங்கு எப்படி தண்ணீர் கிடைக்கும். சிறுவாணி



1969 ஆகஸ்ட் 25] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

யிலிருந்து 1½ மில்லியன் டி.எம்.சி. தண்ணீர் கூட பெறவேண்டியது தான். அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். '2½ மில்லியன் டி.எம்.சி. நீராறிலிருந்து அதிகமாக வருகிறது. அதனால் இதைக் கொடுத்துவிட்டால் என்ன' என்று கேள்வி எழுப்பலாம். ஒருவர் அங்கே அதிகமாக சாப்பிட்டால் இங்கே பசி தீர்ந்துவிடுமா என்ன ? அவர்கள் அதிகமாக சாப்பிடுகிறார்கள் என்று சொல்வது ? அமைச்சர்கள் நன்மை செய்துகொள்வதைப்பற்றி ஒன்றும் இல்லை. உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி பகுதியிலிருந்து அமைச்சர்கள் வருகிறார்கள். அவர்கள் எல்லாம் நன்மை செய்துகொள்ளட்டும், வேண்டாமென்று சொல்லவில்லை. அமைச்சர்கள் என்றால் அந்தப் பகுதியில் செய்துகொள்ளட்டும், யார் தடுத்தார்கள் ? அது பிறருக்கு இடராக இருக்கக்கூடாது. அமைச்சருக்கு உரிமை இல்லையா என்று கேட்கலாம். நாங்கள் ஏற்கனவே அனுபவித்த உரிமை இருக்கிறது. கருத்திருமன் பேச்சுக்கு மறுப்பு என்று போடுகிறார்கள். நான் எம்.எல்.ஏ. இல்லையா ? அமைச்சர் என்றால் எல்லா சௌகரியங்களும் செய்து கொள்ளட்டும், நியாயமாக செய்யவேண்டும். நாணயமாக இருக்க வேண்டும். அதிலே ஆட்சேபணை ஒன்றும் கிடையாது. 2½ மில்லியன் டி.எம்.சி. அதிகமாக தண்ணீர் வருவதாலே இலட்சம் ஏக்கர் பாசன வசதி கிடைக்கும் என்று கூறி இருக்கிறார்கள் அல்லவா ? அதிகமான பாசன வசதியை நாங்கள் பெற்றிருக்கிறோம் என்று பெருமையாக கூறும் அதே அமைச்சர் 2½ மில்லியன் டி.எம்.சி. கொடுத்தால் குறைந்துவிடும் என்றும் தெரிந்துகொள்ளவேண்டும். பிறகு அவர் சொல்கிறார், அதெல்லாம் ஆவியாகப் போகிறது, வாய்க்காலெல்லாம் மாடர்னைஸ் செய்து ஆவியைக் குறைக்கலாம் என்று. பாயைப் போட்டு மூடினால் மேலே போகிறதைக் கூடத் தடுக்கலாம்

(சிரிப்பு).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆவியாகப் போகிறது, மாடர்னைஸ் செய்கிறோம் என்று யாரும் சொல்லவில்லை. கால்வாயாக இருக்கும்பொழுது, தண்ணீர் ஊறிக்கொண்டு, பக்கத்தில் தண்ணீர் வீணாகப் போகிறது. ஆகவே, சிமெண்டு காங்க்ரீட் போட்டால், தண்ணீர் பூராவும், சேதம் இல்லாமல் போகும் என்று தான் சொல்லப்பட்டது. பாய் போடுவதாக எதிர்க்கட்சித் தலைவர் தான் சொல்கிறார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : நீங்கள் மட்டும் ஆலோசனை சொல்லலாம். நான் சொல்லக்கூடாதா என்ன ? பாய் போட்டால், மக்கள் போய் படுத்துக் கொள்ளலாம்; 2½ அடிக்கு பாய் போட்டால் ஏர் கண்டிஷன் மாதிரி இருக்கும், படுத்துக் கொள்ளலாம் என்று கூட இனிமேல் நீங்கள் சொல்வீர்கள். இதற்கெல்லாம் திட்டம் எங்கே வைத்திருக்கிறீர்கள் ? எங்கே திட்டம் ? மாடர்னைஸ் பண்ணுவது என்றால், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் என்று சொல்வீர்கள். உடனே இந்திய சர்க்கார் பணம் கொடுக்கவில்லை, பணம் இல்லை என்று

சொல்வீர்கள். இப்பொழுது இருக்கும்படியான பிரச்னை தண்ணீர் பிரச்னை, பவானி மக்களுக்கு இருக்கும்படியான உரிமை. மறைந்த முதல் அமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் சனவரி 16-ம் தேதி இரவில் என்னிடம் இதைப்பற்றிப் பேசினார்கள். 'பவானி பற்றி என்னப்பா'? என்று கேட்டார்கள். அது கூடாது, அதற்கும், இதற்கும் சம்பந்தம் கிடையாது, பவானி என்பது தனி, காவேரி டெல்டா பிரதேசத்தைச் சேர்ந்தது என்று சொன்னேன். அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். இல்லாவிட்டால் அவர்கள் இரண்டு வருடங்களுக்கு முன்னமேயே கையெழுத்து போட்டிருக்க மாட்டார்களா? அவர்களுக்கு அறிவு இல்லை என்று அர்த்தமா? அவர்கள் சாதிக்காததை நீங்கள் சாதித்துவிட்டீர்கள் என்று அர்த்தமா, அவருக்கு இழுக்குத் தேடுவதா? திரு. சி. சுப்பிரமணியம் அவர்களையும் கலக்கவேண்டும்; உங்களையும் கலக்க வேண்டும்' என்று சொன்னார். 'நீ என்ன சொல்கிறாய்?' என்று கேட்டார்கள். 'இது இங்கு இருக்கும்படியான தண்ணீர், சம்பந்தம் இல்லாத ஒப்பந்தம் செய்தால் நன்றாக இருக்காது, பாக்கியிருக்கும்படியான ஒப்பந்தத்தை நீங்கள் செய்து கொள்ளுங்கள்' என்று சொன்னேன். அவர்களும் ஏற்றுக் கொண்டார்கள். இப்பொழுது இருக்கும்படியான முதல் அமைச்சர் அவர்கள் காவேரியில் இருக்கிற ஹேமாவதி அணையைக் கட்டிவிடலாம் என்று சொல்கிறார்கள். அங்கேயும் ஹேமாவதி அணையைக் கட்டிவிடுவதாக இருக்கிறார்கள். பவானி தண்ணீரை திருப்பிவிடவில்லை என்று சொல்கிறார்கள். அதிகமாகச் சொல்ல வேண்டுமென்றால், சபாநாயகர் அவர்களே, தவறாக நினைத்துக் கொள்ளவேண்டாம். ஒரு வயதானவருக்கு இரண்டு மனைவிகள் இருந்தாளாம். அவர்களில் ஒருவள் வயதான மனைவி, மற்றொருவள் வயதில் குறைந்த மனைவி . . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, ஒரே விஷயம். தமிழக மக்களுடைய நன்மையை' உத்தேசித்து நான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அந்த ஒப்பந்தம் கையெழுத்து ஆவதற்கு முன்பு, ஏதேனும் தடை செய்யவேண்டும், ஒப்பந்தம் செய்துகொள்ளக்கூடாது என்ற எண்ணம் இருந்தால் இப்படிப் பேசலாம். ஒப்பந்தம் கையெழுத்தாக வேண்டும் என்றால், ஒப்பந்தம் நிறைவேற வேண்டும் என்றால், தயவுசெய்து நான் கேட்டுக்கொள்கிறேன். இது போன்ற டீடைல்ஸுக்குள் போய், ஏதேதோ பேசி, எங்களை பதில் சொல்லவைக்கவேண்டும் என்று முயற்சி செய்யவேண்டாம். ஒப்பந்தம் கையெழுத்தாகும் வரையில் நாங்கள் கொஞ்சம் அமைதியாக இருக்கிறோம் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** ஒப்பந்தம் வேண்டாம் என்று சொல்லவில்லை, ஒப்பந்தம் செய்துகொள்ளட்டும். ஆனால்; எங்களுடைய கஷ்டத்தைக் கூட சொல்லக்கூடாதா, இதைச் சட்ட





சபையில் வைத்து ஏன் கேட்கவில்லை? அல்லது கட்சித் தலைவர்களை வைத்து ஏன் கேட்கவில்லை?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அணை கட்டிக் கொள்ளலாம் என்று அனுமதி தந்துவிட்டார்கள் என்று சொல்கிறார்கள். பலதடவை முதல் அமைச்சர் அவர்கள் அணை கட்டுவதற்கு அனுமதி தரவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த ஒப்பந்தம் 1974-ல் முடியவேண்டிய ஒன்று. அடிப்படை காரணத்தை இரு அரசுகளையும் சேர்ந்த அதிகாரிகள் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று தான் சொல்லியிருக்கிறார்கள். அணைக்கட்டு கட்டுவதற்கு அனுமதி அளிக்கவில்லை என்று பல தடவை சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** முதல் அமைச்சர் அவர்கள் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள் என்றால், மனப்பூர்வமாக நன்றி செலுத்துகிறேன். கட்சியின் சார்பாக நன்றி செலுத்துகிறேன். பத்திரிகையில் வந்தது செய்தி. காரணம் என்ன? இந்த விஷயத்தை சபையில் வைத்து விவாதித்திருக்கலாம். அல்லது கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் விவாதித்திருக்கலாம். அப்படி அவர்கள் சொல்லியிருந்தால் அவருடைய கரத்தை பலப்படுத்த நான் தயாராக இருக்கிறேன். என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். 2½ மில்லியன் டி.எம்.சி. தண்ணீர் கொடுப்பதென்றால், கீழ் பவானியில் இருக்கும்படியான நிலை என்ன ஆவது? . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது. 15 நிமிஷம் தான் கேட்டீர்கள். சீக்கிரம் முடிக்கவேண்டும். அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கவேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இது ஜீவாதாரப் பிரச்னை. தண்ணீர் பிரச்னை.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, நான் பதில் சொல்வதை நாளைக்கு வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாமா? பெரிய பிரச்சினையை எடுத்துக்கொண்டு ரொம்ப விரிவாகப் பேசுகிறார். அதற்கு நான் விரிவாக பதில் கொடுக்க வேண்டுமென்றால், கடைசியில் 3 அல்லது 3½ மணிக்கு மேல் ஆகிவிடுமே?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இரண்டு மணிக்குள் முடித்து விடுகிறேன். நாளைக்கு வேண்டுமானால் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லலாம். இப்பொழுது அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும்படியான திட்டத்தில் . . . .

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** பாயிண்டு ஆப் ஆர்டர், ஸார். வருஷத்திற்கு 8 மாதம் பார்லிமெண்டு கூட்டம் நடக்கிறது. இங்கே 10 நாட்கள், 8 நாட்கள் கூட்டம் நடக்கிறது. நான்காவது

ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிப் பேசுவதற்கு அரை நாள். இது என்ன சட்ட சபையா? எனக்கு ஒன்றும் புரியவில்லை. இது மாதிரி தெரிந்திருந்தால் நான் பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் சண்டை போட்டிருப்பேன். இன்று இத்துடன் விவாதத்தை முடித்துக்கொண்டு, நாளைக்கு மந்திரி அவர்கள் பதிலை வைத்துக் கொள்ளலாம். இரண்டு மணிக்கு எங்களை சாப்பிடுவதற்கு அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அலுவல் ஆய்வுக் குழுவில் தாங்களும் ஓர் உறுப்பினர். அங்கு நீங்கள் இதற்கு இவ்வளவு நாள் வேண்டும் என்று கேட்டிருக்கவேண்டும். அதை விட்டுவிட்டு, சட்டசபையா, அதுவா, இதுவா என்று சொல்வது முறையாகாது. அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் இதுபற்றி வற்புறுத்தியிருக்க வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கடைசியாக ஒரே ஒரு கருத்தைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்துக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் கொடுத்த திருத்தத்தில் நான்காவது பகுதியில்

'this House further urges the Government of India to entrust with the State Government the managements of all public sector undertakings like Neyveli Lignite Corporation etc., in order to ensure greater profitability and efficiency

என்று கூறப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்கார் திட்டங்களை எல்லாம் எடுத்து மாநில சர்க்கார் நடத்துவது என்றால், மத்திய சர்க்கார் பெரிய திட்டங்களை மேற்கொள்ளுவதற்கு உள்ள வாய்ப்பு குறைந்து போய்விடும். மத்திய சர்க்கார் ஏற்படுத்தும்படியான திட்டங்களிலே அதிக லாபம் கேட்கலாம். அதில் அதிகப்படியான லாபப்பகுதியைக் கேட்பதற்கு உரிமை இருக்கிறது. இது மாதிரி மத்திய சர்க்கார் பெரிய கட்டடங்கள் கட்டி போட்ட பெரிய திட்டங்களையெல்லாம் இவர்களுக்கு தானம் கொடுத்துவிட்டுப் போய்விடவேண்டும் என்று சொல்வார்களேயானால், நிலைமை என்ன ஆகும்? நாளைக்கு எந்த சர்க்கார் வரப்போகிறது என்பது தெரியாது. மத்திய சர்க்கார் பெரிய திட்டங்களை போட்டால், அதைச்சுற்றி சப்ஸிடியரி இண்டஸ்டிரீஸ், பிரைமரி இண்டஸ்டிரீஸ் இருக்கும். உதாரணமாக நெய்வேலித் திட்டம் ஏற்பட்டதினால், அதைச்சுற்றி எத்தனையோ தொழிற்சாலைகள் அமைப்பதற்கு வாய்ப்பு இருந்தது. நான்காவது பகுதியை நீக்கிவிட்டால், அந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள முடியும் என்ற நிலையிலே, இதை நீக்கிவிடவேண்டுமென்று சர்க்காருக்கு சிபார்சு செய்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவுற்றது. மீண்டும் நாளைக் காலை 9 மணிக்கு பேரவை கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.



## 6. பேரவை முன் வைக்கப்பட்டுள்ள ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

113. Notification issued with G.O. Ms. No. 1823, Revenue, dated the 19th September 1968 in regard to an amendment to the Revenue Department Notification No. 5125, dated the 15th November 1961 published at page 1767 of Part II Section I of the *Fort St. George Gazette* dated the 15th November 1961. [Laid on the Table of the House under section 8 (4) of the Madras Public Premises (Eviction of Unauthorised Occupants) Act, 1960 (Madras Act 27 of 1960).]

### B. *Reports, Notification and other papers.*

@ 47. The Tamil Nadu Contingency Fund Amendment Bill, 1969 (L.A. Bill No. 14 of 1969).

@ 48. The Tamil Nadu Repatriates (Bar of Proceedings) Bill, 1969 (L.A. Bill No. 15 of 1969).

@ 49. The Holdings (Stay of Execution Proceedings) (Tamil Nadu Amendment) Bill, 1969 (L.A. Bill No. 16 of 1969) with annexure.

@ 50. The Tamil Nadu Panchayats (Second Amendment) Bill, 1969 (L.A. Bill No. 17 of 1969).

@ 51. The Tamil Nadu Electricity (Taxation on Consumption) Amendment Bill, 1969 (L.A. Bill No. 18 of 1969) with annexure.

@ 52. The Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1969 (L.A. Bill No. 19 of 1969).

@ 53. The Tamil Nadu Agricultural Labourer Fair Wages Bill, 1969 (L.A. Bill No. 20 of 1969).

@ 54. The Tamil Nadu General Sales Tax (Third Amendment) Bill, 1969 (L.A. Bill No. 21 of 1969).

† 55. The Tamil Nadu (Appropriation (No. 5) Bill, 1969 (L.A. Bill No. 23 of 1969).

† 56. The Tamil Nadu Appropriation (No. 6) Bill, 1969 (L.A. Bill No. 24 of 1969).

---

@ Despatched to Members on 22nd August 1969.
† Despatched to Members on 23rd August 1969.

## தமிழ் நாடு சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1969 ஆகஸ்ட் 26.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்விகள் 121 முதல் 128 வரை பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

### செங்கற்பட்டு மாவட்டத்தில் நெல் கொள்முதல்.

* 129 வினா.—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு உணவு, வணிகவரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் 1967-68-ல் கொள்முதல் செய்ய நிர்ணயிக்கப்பட்ட நெல் அளவு எவ்வளவு? கொள்முதல் செய்தது எவ்வளவு?

(இ) மதுராந்தகம் வட்டத்தில் கொள்முதல் செய்ய நிர்ணயிக்கபட்ட அளவு எவ்வளவு? கொள்முதல் செய்தது எவ்வளவு?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) காலண்டர் ஆண்டு 1967-க்கு செங்கற்பட்டு மாவட்டத்துக்கு நிர்ணயிக்கப்பட்ட கொள்முதல் இலக்கு 47,000 டன்கள் அரிசி கொள்முதல் செய்யப்பட்ட அளவு 48,370 டன்கள் அரிசி. காலண்டர் ஆண்டு 1968-க்கு இலக்கு 70,000 டன்கள் அரிசி. கொள்முதல் செய்யப்பட்ட அளவு 46,613 டன்கள் அரிசி.

(இ) காலண்டர் ஆண்டு 1967-க்கு மதுராந்தகம் வட்டத்துக்கு இலக்கு 13,500 டன்கள் அரிசி. காலண்டர் ஆண்டு 1967-க்கு கொள்முதல் செய்யப்பட்ட அளவு 14,117 டன்கள் அரிசி. காலண்டர் ஆண்டு 1968-க்கு இலக்கு 20,500 டன்கள் அரிசி. கொள்முதல் செய்யப்பட்ட அளவு 16,756 டன்கள் அரிசி.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, நெல் கொள்முதல் என்ற முறையில், ஒரு ஏக்கராவிற்குக் குறைவாக நிலம் வைத்திருக்கும் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்வதில்லை என்ற முறை இருப்பதாக அமைச்சர் அவர்கள்

குறிப்பிட்டார்கள். ஆனால், திருச்சி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், ஒரு ஏக்கருக்கு உட்பட்டு நிலம் வைத்திருக்கும் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்கிறார்கள் என்று முறையீடுகள் அனுப்பியிருக்கிறார்கள். அதுபற்றி அரசு நடவடிக்கை எடுத்ததா ? இனிமேல் ஒரு ஏக்கருக்கு உட்பட்டு நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்து நெல் கொள்முதல் செய்வதில்லை என்ற முடிவை அரசு எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, ஒரு ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்து கொள்முதல் செய்யக்கூடாது என்று அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அப்படி எங்காவது தவறுதல் நடந்திருக்கிறது என்று கனம் உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால் அதுபற்றி விசாரிக்கலாம்.

**திரு. கரு. சீமைச்சாமி :** ஒரு மாவட்டத்தில் இத்தனை டன் கொள்முதல் செய்யவேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அதைக் குறிப்பிட்ட காலத்திற்குள் கொள்முதல் செய்யவேண்டும் என்ற முறையில் ரெவினியூ அதிகாரிகள் கட்டாயக் கொள்முதல் செய்கிறபோது விவசாயிகளிடம் கெடுபிடி செய்கிறார்கள். இதனால் விவசாயிகள் பெருமளவுக்குப் பாதிக்கப்படுகிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இதை எளிதாக்கும் முறையில் அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இலக்கு நிர்ணயித்து, அந்தந்த மாவட்ட அதிகாரிகள் அந்த இலக்கைப் பூர்த்தி செய்யவேண்டும் என்று உத்தரவிட்டோம். ஆனால், இந்த ஆண்டைப் பொறுத்த மட்டில், நாம் எந்த மாவட்டத்திலும் இலக்கை எட்டிப் பிடிக்கவில்லை. வேறு எந்த முறைகளைக் கையாண்டு கொள்முதல் செய்வது என்று கனம் உறுப்பினர் புதிய யோசனை சொன்னால் அதுபற்றி யோசிக்கலாம்.

THIRU K. VINAYAKAM : After the calendar year 1967-68, the target fixed for procurement has been exceeded so far as procurement in that district is concerned. Is there any truth in the propaganda that the ex-Chief Minister had advised the people not to give their yield for procurement whereas in actual practice the Government themselves say that more than the target fixed has been realised?

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I do not quite understand whom the hon. Member means by the term 'ex-Chief Minister'.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அளித்த பதிலிலிருந்து எழக்கூடிய விதத்தில், கொள்முதலைச் சிறப்பாக நடத்துவதற்கு ஆலோசனை கூறும் வகையில்



ஆங்காங்கு கிராமத்தில் சர்வ கட்சிக் கமிட்டி அமைத்து, கொள்முதலுக்குத் துணைசெய்ய ஏற்பாடு செய்தால், அப்பாவி சிறு விவசாயிகளைத் தொந்தரவு செய்யாமல், அதே நேரத்தில் பெரிய நிலக்கிழார்களிடம் மிச்சம் விட்டுவைக்காமல் கொள்முதலைச் சிறப்பாக நடத்துவதற்கு உதவியாக இருக்குமே, அதைப்பற்றி அரசு யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கிராமங்களில் குழுக்கள் அமைத்துக் கொள்முதல் செய்யலாம் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் ஒரு யோசனை சொல்லியிருக்கின்றார்கள். அதிகாரிகளே போய்க் கொள்முதல் செய்யும்போதே கொடுப்பதற்கு மறுக்கிறவர்கள் இருக்கும்போது ஒரு குழு அமைத்தால் கொள்முதல் அதிகமாகும் என்பதிலே அரசாங்கத்திற்கு நம்பிக்கை இல்லை. இப்பொழுதிருக்கும் முறைதான் சிறந்த முறை என்று அரசாங்கம் வைத்திருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Sir, on a point of personal explanation. When I used the term 'ex-Chief Minister' in my supplementary, I only meant Thiru M. Bhaktavatsalam and I did not mean Thiru Annadurai whom I would have termed as 'late Chief Minister' if I wanted to refer to him. I am not having any motive. There was so much propaganda from your side that Thiru Bhaktavatsalam was against the procurement policy of your Government in Chingleput district whereas you have actually procured more than the target fixed by yourself. So, does the party in power admit that that was only a false propaganda?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, முன்னால் தமிழகத்து முதலமைச்சராக இருந்த ஒருவர், கொள்முதலுக்கு நெல் கொடுக்கவேண்டாம் என்று பிரசாரம் செய்தார் என்று நாங்கள் சொன்னோம், பிரசாரம் செய்தோம் என்றும், அப்படியும் அதிகமாகக் கொள்முதல் செய்திருக்கிறோம் என்றும் சொல்லுகிறார்கள். முன்னாள் முதல் அமைச்சர் அப்படியொரு மாநாட்டையே போட்டு நடத்தினார் என்பது நாடறிந்த உண்மை. அப்படியிருந்தும் மக்கள் கொடுத்திருக்கிறார்கள் என்றால், அது இந்த அரசாங்கத்தின்மீது மக்கள் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது; முன்னாள் முதலமைச்சர்மீது மக்கள் எவ்வளவு அவநம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதையும் காட்டுகிறது.

### *Rice Shops at Arni*

*130 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state whether about 300 persons entered rice shops on 28th November 1968 at Arni and distributed rice among themselves and paid Rs. 1.25 per measure to the owners?

[1969 ஆகஸ்ட் 26

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 28—11—1968 அன்று மாலை ஆரணியில் சுமார் 100 பேர் அரிசிக் கடைகள்முன் கூடி கடைகளிலிருக்கும் அரிசியை ரூ. 1.25-க்கு இரண்டு லிட்டர் வீதம் தங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கோரினர். கூட்டத்தைக் கண்டு அஞ்சிய கடைக்காரர்கள் ஒவ்வொருவரும் சுமார் 50 படி அரிசியைத் தாமாகவே கூட்டத்திலிருந்தோருக்கு இரண்டு லிட்டர் ரூ. 1.25 வீதம் கொடுத்து பணம் பெற்றுக் கொண்டனர்.

உறுப்பினர் அவர்கள் கூறியுள்ளபடி 300 பேர் கடைகளில் நுழைத்து தாமாகவே அரிசியைப் பகிர்ந்துகொண்டு படிக்கு ரூ. 1.25 வீதம் கொடுத்தார்கள் என்பதற்கு ஆதாரம் இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, அரிசி விலையும் அரசாங்கத்தின் அரிசி விநியோக முறையும் சீராக இல்லை, ஒருசில இடங்களில் குறைந்த விலைக்கு அரிசி போட்டு அதன்மூலம் மக்கள் பலனடையும்போது, ஏனைய இடங்களில் அதிகமான விலை கொடுத்தும் அரிசி கிடைக்கவில்லை என்பதால் மக்கள் கொதிப் படைந்திருக்கிறார்கள் என்பதை அரசு உணருகிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அரிசி விலை சீராக இல்லை என்று கனம் உறுப்பினர் சொல்வது எனக்குப் புரியவில்லை. எந்த மாவட்டத்தில் அரிசி விலை அதிகமாக இருந்திருந்தாலும், எந்த மாவட்டத்தில் அரிசி விலை குறைவாக இருந்திருந்தாலும், இப்பொழுது புதிதாகப் போட்ட உத்தரவின் படி தமிழகம் முழுவதும் ஒரே சீரான விலைதான் இருக்கிறது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மக்கள் கொதிக்கவில்லை. வீடுகளில் உலைகள்தான் கொதிக்கின்றன.

திரு. டி. மார்டின் : ஸ்பீக்கர் சார், இந்தச் சம்பவம்பற்றிப் போலீசில் ஏதாவது புகார் செய்யப்பட்டுள்ளதா ? அம்மாதிரி இருந்தால், அதனுடைய விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நான் பதில்சொல்லும் போது சொன்னேன், இதற்கு ஆதாரம் ஏதும் இல்லை என்று.

### *Textool Factory in Coimbatore District*

*131 Q.—Thiru N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government has constituted a Committee to examine the use of Textool Factory in Coimbatore district?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பஞ்சாலைக் கருவிகள், தொழிற் சாலையின் சிக்கல்கள், அதனைப் பல்வகைப்படுத்துவதற்கான வாய்ப்புகள், அதனை முழுமையாகப் பயன்படுத்துவது ஆகியவை குறித்து ஆராய்வதற்காக, குழு ஒன்றினை அரசு அமைத்துள்ளது.



1969 ஆகஸ்ட் 26]

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குழு அறிக்கை கொடுத்திருக்கிறதா ? கொடுத்திருந்தால் என்னென்ன சிபாரிசு செய்திருக்கிறார்கள் ? எவற்றை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நிபுணர்களும், நிதித் துறைச் செயலாளரும் சேர்ந்து, அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். அந்த அறிக்கையிலே, இதுவரையில் கம்பெனி உற்பத்தி செய்த பொருள் களையல்லாது, வேறு சில பொருள்களை உற்பத்தி செய்ய வாய்ப்புக் கொடுத்தால், லாபம் வரலாம் என்று இருக்கிறது. அந்த அறிக்கையைப் பரிசீலித்து வருகிறோம்.

திரு. எம். பூபதி : தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் மேற் கொண்டு இன்ஜினீரிங் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யச் சொல்லியிருப்பதாகச் சொன்னார்கள். அந்தத் தொழிற்சாலை பஞ்சாலைக்குத் தேவையான சாதனங்களைச் செய்து வந்தது. அங்கே ட்ராக்டர் உற்பத்தி செய்ய முடியும், கார்கள் கூட உற்பத்தி செய்ய முடியும் என்ற நிலை இருப்பது அமைச்சருக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். அதைப்பற்றி என்ன கருதுகிறார்கள் ? சுமார் 4,500 தொழிலாளிகள் வேலைசெய்யக் கூடிய இடத்தில் இப்பொழுது 600 பேர்கள்தான் பணிசெய்து வருகிறார்கள். இந்த நிலையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அது ஒரு தனியார் நிறுவனம். அவர்கள் உற்பத்தி செய்த பொருள்கள் விற்பனை ஆகவில்லை. ஆகவே, மூடி இருந்தார்கள். அரசாங்கத்திற்கும் இதற்கும் எத்தகைய சம்பந்தமும் இல்லை. தொழில் வளரவேண்டும் என்பதற்காக, அரசாங்கம் தொழிற்சாலைக்கு உதவிகள் செய்ய முன்வருகிறது. அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டது போல், ட்ராக்டர் செய்யவும் வாய்ப்பு இருக்கிறது என்றும் ஒரு யோசனை கூறப்பட்டிருக்கிறது. ஆனால், இப்பொழுது உற்பத்தி செய்யப் படுகிற ட்ராக்டர்களே விலை போகின்றனவா ? அங்கத்தினர் போன்றவர்கள் ட்ராக்டர்களைப் பயன்படுத்த விடுவார்களா என்ற சந்தேகம் இருக்கிறது. அதுபற்றி ஒரு முடிவு எடுத்த பிறகு லாகாரமாக நடத்த முடியுமானால், பணம் கொடுத்து நடத்த ஏற்பாடு செய்யலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : வேறு சில பொருள்களை உற் பத்தி செய்ய அனுமதித்தால் லாபகரமாக இருக்கும் என்று அமைச்சர் கூறுகிறார்கள். அப்படி என்னென்ன பொருள்கள் உற்பத்தி செய்யப் போகிறார்கள் ? அனுமதிக்குத் தடையான காரணங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அமைச்சர் சொல்லவில்லை, திருத்திக் கொள்ள வேண்டும், அறிக்கையில் நிபுணர்கள் சொல்லி யிருக்கிறார்கள். அந்த நிலை உண்மைதானா, நஷ்டம் ஏற்படாமல் நடக்க வேண்டும் என்பதையெல்லாம் பரிசீலனை செய்து கொண்டி ருக்கிறது. முடிவு எடுத்த பிறகு என்னென்ன பொருள்களை உற்பத்தி செய்யமுடியும் என்று தீர்மானிக்க முடியும்.

[1969 ஆகஸ்ட் 26

### *Pelletisation Plant at Salem*

* 132 *Q.*—Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Industries be pleased to state:—

(*a*) whether National Mineral Development Corporation has offered the services of the corporation and its assistance for the exploitation of Salem Magnite iron ore;

(*b*) whether this corporation has advised against the setting up of a pelletisation plant at Salem; and

(*c*) if so, for what reasons?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.*

*(இ) இல்லை.*

*(உ) இந்த வினாவிற்கு இடமில்லை.*

Thiru K. VINAYAKAM: Sir, if the National Mineral Development Corporation has offered its services to exploit the Magnite iron ore in Salem, why not this Government utilise its services?

*மாண்புமிகு திரு. செ. மாதவன்: முதலிலேயே என்னுடைய பதில் 'இல்லை' என்று இருக்கும்போது, எப்படி உதவியைப் பெறுவது?*

Thiru K. VINAYAKAM: Sir, is it not a fact that a communique issued by the Government has appeared in the Dailies regarding this offer by the National Mineral Development Corporation? Also, have the Government already set up this Pelletisation Plant?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் : எப்பொழுதுமே பத்திரிகைச் செய்தியை வைத்து, கேள்வி கேட்கக் கூடாது. அது தவறாக இருக்கலாம். அதற்கு உறுப்பினர் இப்பொழுது சொன்னதையே ஆதாரமாகச் சொல்லலாம். அரசாங்கத்திற்குத் தெரிந்தவரை எந்த கம்யூனிகேஷனும் இஷ்யூ பண்ணினதாக இல்லை. நடந்ததெல்லாம், அந்த அதிகாரி தலைமைச் செயலாளரைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். கருத்துக்கள் பரிமாறிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பத்திரிகையில் வந்தமாதிரி கருத்துக்கள் சொல்லவில்லை என்று தலைமைச் செயலாளர் குறிப்பு அனுப்பியிருக்கிறார்கள். நம்முடைய பெல்லிடைஸேஷன் ப்ளாண்ட் நம்முடைய திட்டத்திலேயே சேர்த்திருக்கிறோம். குழுவும் சிபாரிசு செய்திருக்கிறது. மத்திய அரசு நான்காவது திட்டம் பற்றி முடிவு எடுக்கும்போது, நம்முடைய திட்டமும் நிறைவேறும் என்ற நம்பிக்கை இருக்கிறது.*

### *திருமங்கலம் கால்வாய்*

* 133 *வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வைகை நீர்த்தேக்கத்தில் இருந்து பாசனத்துக்குப் பயன்படுத்தப்படுகிற "திருமங்கலம் கால்வாயை"த் திருமங்கலம் வரை விரிவுபடுத்தும் உத்தேசம் உண்டா?*



1969 ஆகஸ்ட் 26]

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : இல்லை.*

*திரு. என். எஸ். வி. சித்தன் : வைகை நீர்த்தேக்கத்தில் திருமங்கலம் கால்வாய் என்று இருந்தாலும், அதிலிருந்து திருமங்கலத்திற்குத் தண்ணீர் வருவதில்லை. 'மாடர்னைசேஷன் ஆப் வைகை கனால்ஸ்' என்ற திட்டம் மூன்று கோடி ரூபாயில் செயல்படுகிறது. அப்படி நவீனமாக்கிய பிறகு இந்தத் திட்டத்தினால் எஞ்சும் தண்ணீரைத் திருமங்கலத்திற்குக் கொடுக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.*

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திருமங்கலம் கால்வாயின் ஆயக்கட்டு 10,384 ஏக்கர். மெயின் கனாலை நவீனமாக்கிய பிறகு 1,000 ஏக்காராவிற்குப் பாசன வசதி ஏற்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதற்கும் அதிகமாகவே 2,014 ஏக்காராவிற்கு இப்பொழுது பாசனம் கிடைக்கிறது. மேற்கொண்டு வாய்ப்பில்லை.*

### *பெரியாறு அபிவிருத்தித் திட்டம்*

* 134 *வினா.—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பெரியாறு அபிவிருத்தித் திட்டம் எந்த ஆண்டில் எவ்வளவு மதிப்பீட்டில் போடப்பட்டது?*

*(இ) இத்திட்டம் நிறைவேற்றப்படுவதில் காலதாமதத்திற்கான காரணங்கள் யாவை?*

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) பெரியாறு அபிவிருத்தித் திட்டம் 1966-67-ம் ஆண்டில், ரூபாய் 4¼ கோடி மதிப்பீட்டில் போடப்பட்டது.*

*(இ) மத்திய, நீர், மின் விசைக்குழுவின் ஒப்புதல் கிடைத்த பின், இத்திட்டம் மேற்கொள்ளப்படும்.*

*திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, பெரியாறு பாசனப் பகுதியில், இருபோக நிலங்கள் இருந்தும், கடந்த மூன்று ஆண்டுகளாக தண்ணீர்ப் பற்றுக்குறை காரணமாக ஒருபோகமாக இருக்கிறது. பெரியாறு கால்வாய் வெட்டப்பட்டதிலிருந்து, இது வரைக்கும் மராமத்து எதுவும் செய்யப்படாமல் பழுது அடைந்திருக்கிறது. இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த மத்திய சர்க்காரைக் கேட்டு, நம்முடைய அரசு ஆவன செய்யுமா?*

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது நான்காவது திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்காருடைய அனுமதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.*

*திரு. கரு. சீமைச்சாமி : சார், பெரியாறு அபிவிருத்தித் திட்டத்திற்கு ரூ. 4¼ கோடி 1966-67-ல் ஒதுக்கி இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. எப்பொழுது அனுமதி கிடைக்கும்? காலதாமதமானால், நம் அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?*

[1969 ஆகஸ்ட் 26

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான்காவது திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. முடிவு செய்யும்போது, இதுவும் முடிவு செய்யப்படும்.

## தேளூர் அணைத் திட்டம்

*135 வினு.—திரு. ஆர். கருப்பையா : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் வட்டம் விளாங்குடி ஓடையின் குறுக்கே அணை கட்டி ஏரிகளில் நீர் நிலைக்கச் செய்து பாசன அபிவிருத்தி செய்யும் தேளூர் அணைத்திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத்திட்டம் உள்ளூர் அதிகாரிகளின் ஆய்வில் உள்ளது.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத் தினுல் அங்குள்ள எத்தனை ஏரிகளில் தண்ணீர் தேக்க முடியும், பாசனத்திற்கு வசதியாக எத்தனை ஏக்கர் நிலங்கள் என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூன்று ஏரி களுக்குப் பாசன வசதி கிடைக்கும்—தெள்ளப் பெரியேரி, பள்ளங்குழி ஏரி, விளாங்குடி ஏரி. 87.49 ஏக்கராவிற்குப் பாசன வசதி கிடைப்பதற்கும், புதிதாக 41.05 ஏக்கருக்குப் பாசனவசதி கிடைப்பதற்கும் வாய்ப்பு இருக்கிறது. இதன் மதிப்பீட்டுத் தொகை ரூ. 1,80,000.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எவ்வளவு காலத்திற்குள் நிறைவேற்றப்படும் என்பதை அறிய லாமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : விரைவாக நிறை வேற்ற முயற்சி எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகள் 136, 137, 138 மூன்றும் பிற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## குறுகிய தூர பஸ் கட்டணங்கள்

*139 வினு.—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குறுகிய தூர பஸ்களில் பிரயாணம் செய்யும் பயணி களுக்கான பஸ் கட்டணத்தைக் குறைக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் என்ருல், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : (அ) இல்லை.

(இ) வினுவிற்கு இடமில்லை.



1969 ஆகஸ்ட் 26]

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், தூரம் செல்லக்கூடிய பஸ்களிலே, ஒரு இரண்டு, மூன்று பர்லாங்கு தூரம் போவதா னுலும் நான்கு அணுவிற்குக் குறைவாக இல்லாமல், அதிகப் படியான கட்டணம் வசூல் செய்கிருர்களே, அது போன்ற இடங்களிலே கட்டணத்தைக் குறைக்க வேண்டும், அல்லது குறுகிய தூர பஸ்களை விடுவதற்கு ஏற்பாடு செய்யவாவது வேண்டும். அப்படிச் செய்ய முடியுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : குறுகிய தூர பஸ்கள் இப்பொழுதே ஓடிக்கொண்டுதான் இருக்கின்றன. அவைகளுக்கு கிலோ மீட்டர் ஒன்றுக்கு 2½ பைசா கட்டணம் வசூலிக்கப் படுகிறது. அந்தக் கட்டணத்தைக் குறைக்கின்ற எண்ணம் அரசுக்கு இல்லை.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு அரசுப் போக்குவரத்திலே உள்ள கட்டணங்கள் இதர மாநிலங் களில் உள்ள கட்டணங்களைவிடக் குறைவாக இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அது பற்றிய விவரங்களை அமைச்சர் அறிவிப்பார் களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : தலைவர் அவர்களே, அதை ஒட்டிய தகவல், எல்லா மாநிலங்களுக்கும், கையில் இப் பொழுது இல்லை. தமிழகத்தில் கட்டணம் கிலோ மீட்டர் ஒன்றுக்கு 2½ பைசா; ஆந்திராவில் கிலோ மீட்டர் ஒன்றுக்கு 3.1 பைசா; கேரளத்தில் கிலோ மீட்டர் ஒன்றுக்கு 3 பைசா; மைசூரில் ஒரு கிலோ மீட்டருக்கு 5 பைசா ; இன்னும் மற்ற மாநிலங்களிலும் தமிழகத்திலுள்ளதை விட, நம்முடைய கட்டணத்தைவிட, அதிக மாக இருக்கிறதேயன்றி, தமிழகத்திலிருப்பதை விடக் குறைவாக இருக்கவில்லை.

THIRU T. MARTIN : The Central Government in their railways grant concession tickets to students during holidays. May I request the Hon. Minister to state whether this Government will come forward to grant such concession tickets in all the Government buses or whether there is any proposal to give such concession to students to travel in long and medium distance buses?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : தலைவர் அவர்களே, நம் முடைய பஸ் போக்குவரத்திலே உள்ள நஷ்டம் எல்லாம் குறைந்து லாபம் வருகிற நேரத்தில் அதுபற்றி யோசிக்கப்படும்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, இப்போது பஸ் களிலே மாணவர்கள் ஸ்பெஷல் என்றும், எம்.எல்.ஏ.-க்கள் ஸ்பெஷல் என்றும் ஓடுகின்றனவே, அதைப்போல, செகரடேரியட்டில் பணி புரிகிற கெஜட் பதிவில்லாத ஊழியர்களுக்கும் ஸ்பெஷல் பஸ் விட அரசு யோசனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : தலைவர் அவர்களே, அதைப்பற்றி ஆராய்ந்து, செகரடேரியட்டில் பணிபுரிகிற கெஜட் பதிவில்லாத ஊழியர்களுக்கு ஸ்பெஷல் விடுவது சாத்தியக்கூறுகள்

இல்லையென்று முடிவு செய்யப்பட்டது. செகரடேரியட்டில் பணி புரிகின்ற கெஜட் பதிவில்லாத ஊழியர்கள் பல்வேறு இடங்களில் குடியேறியிருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் இருக்கும் இடங்களுக்கெல்லாம் சென்று அழைத்துவருவது என்பது முடியாத காரியம் என்று முடிவு எடுக்கப்பட்டது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஒரு கிலோமீட்டர் தூரத்திற்கு 2½ பைசாவென்றும், மைசூர், கேரளா போன்ற மாநிலங்களில் 3 பைசா, 3½ பைசா என்றும் கட்டணம் வசூலிப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அவைகள் எல்லாம் மலைப் பிரதேசங்கள். ஆகவே, அங்கு இரண்டு மடங்கு அதிகமாகச் செலவாகிறது. ஆகவே, அதையொட்டிப் பார்க்கின்ற நேரத்தில் அங்கிருப்பதைவிட இங்குதான் கட்டணம் அதிகமாக இருக்கிறதென்பதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, நான் கூறிய கட்டணங்கள் மலைப்பிரதேசத்தில் இல்லாத சமவெளியில் ஓடுகிற பஸ் கட்டணம்தான். கேரளாவில் மலைப்பிரதேசத்தில் ஓடுகிற பஸ்களுக்குக் கட்டணம் 50 சதவீதம் இதைவிடக் கூடுதல் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செஞ்சி வெ. முனுசாமி :** தலைவர் அவர்களே, அரசும், தனியார் பஸ் உடைமையாளர்களும் ஒன்றுகூடிப் பேசி, கிலோ மீட்டர் தூரத்திற்கு 2 பைசா, 3பைசா என்றிருந்ததை ஒருமுகப்படுத்தி, ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு 2½ பைசா வீதம் கட்டணம் வசூலிக்க வேண்டும் என்று முடிவெடுத்தார்கள். இந்தக் கட்டண வீதம் 1968 ஏப்ரல் மாதத்திலிருந்து அமலுக்கு வரும் என்று சொல்லப்பட்டது. ஆனால் அப்படிச் சொன்ன பிறகும், சில தனியார் பஸ்களில் 3 பைசாவீதம் வசூலித்து வருகிறார்களே, இது அரசுக்குத் தெரியுமா ? அப்படியானால் அவர்கள்மேல் அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நாம் சொன்ன யோசனையைக் கேட்டுக்கொண்டு, அவர்கள் நம் வழிக்கு வருவதாகத் தெரியவில்லை. ஆகவே, நாம் அவர்கள் வழிக்குப் போகலாமா என்பதை யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, குறுகிய தூர பஸ் என்பது எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது ? சென்னை நகரத்திற்குள் ஓடுகிற பஸ் எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது ? வெளியூர்களுக்குச் செல்லும் பஸ்களை எந்த அடிப்படையில் குறுகிய தூர பஸ் என்றும், நீண்ட தூர பஸ் என்றும், கணக்கிடுகிறார்கள் ? உதாரணமாக, தாம்பரம் வரை செல்கிற பஸ் குறுகிய தூர பஸ்ஸா, அல்லது நீண்ட தூர பஸ்ஸா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, குறுகிய தூரம், நீண்ட தூரம் என்று வகைப்படுத்துவது எவ்வளவு கிலோ மீட்டர் தூரம் என்பதைப் பொறுத்தது அல்ல. பொதுவாக



மாவட்டத்தைவிட்டு, வேறு மாவட்டம் செல்கிற பஸ்களை நீண்ட தூரம் என்கிறோம். அதேபோல் மாவட்டத்திற்குள்ளேயே ஓடுகிற பஸ்களை குறுகிய தூரப் பேருந்து என்கிறோம் மேலும் சென்னை நகரத்திற்குள்ளே ஓடுகிற பஸ்களை தனியாக நகரப் பேருந்து என்றும், அதாவது டவுன் பஸ் என்றும், வகைப்படுத்தியிருக்கிறோம்.

*Quarterly Tax for Buses*

*140 *Q.*—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(*a*) The grace time granted for the bus operators for payment of the quarterly tax for quarter ending 30th June 1968 and for the quarter ending 30th September 1968 ; and

(*b*) if so, how the fact was communicated to the operators and on what date the communication was issued?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) 30-6-68-ல், 30-9-68ல் முடிவடைந்த காலாண்டுகளில் பேருந்துகளில், லாரிகள் ஆகியவற்றிற்கு வரி செலுத்துவதற்கான கடைசி தேதிகள் முறையே 15-4-1968, 15-7-1968 தேதிகளாகும். ஆனால் கடைசி தேதிகள் முறையே 30-4-1968, 31-7-1968 வரை நீட்டிக்கப்பட்டன. 30-6-1968 தேதியோடு முடிவடைந்த காலாண்டிற்கு வரி செலுத்துவதற்கான சலுகைக் காலத்தை நீட்டித்து 11—4—1968 அன்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. 30-9-1968 தேதியுடன் முடிவடைந்த காலாண்டிற்கு 12-7-1968 தேதியன்றும், 22-7-1968 தேதியன்றும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

(இ) கடிதம் மூலம் கேட்டவர்களுக்குக் கடிதம் மூலம் பதில் அனுப்பப்பட்டிருக்கின்றது. இவ்வறிப்புகள் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டன. பத்திரிகைக் குறிப்புகளும் வெளியிடப்பட்டன.

THIRU K. VINAYAKAM : Whereas the request was made by bus operators for extension of concession time in the matter of payment long ago, they got this communication in writing after the lapse of concession date. Is that a fact?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** நான் ஏற்கெனவே, முன்னாலே, விவரமாகச் சொன்னேன். அதாவது 15—4—1968 அன்று கட்டவேண்டிய வரிக்குக் காலம் நீட்டித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை 11-4-1968 அன்று ஆணைகள்மூலம் வெளியிட்டோம். அரசின் கெஜட்டிலும், பத்திரிகைக்குறிப்பு மூலமும் வெளியிடப்பட்டது. அடுத்த காலாண்டுக்கு ஆன அறிவிப்பும் மூன்று நாட்களுக்கு முன்னதாக அறிவிக்கப்பட்டது.

**திரு. கரு. சீமைச்சாமி :** தலைவர் அவர்களே, ரெகுலர் பஸ்களில் சீட்டிற்கு இவ்வளவு என்று கட்டணம் வசூலிக்கிறார்கள். மதுரையிலிருந்து டூரிஸ்ட் பஸ்கள் ரெகுலராக சென்னைக்கு வந்து

கொண்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இதனைக் கண்டுபிடித்ததாகச் சொன்னார்கள். இதன்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது ? ரெகுலர் பஸ்களில் வசூலிக்கப்படும் கட்டணமே இந்த டூரிஸ்ட் பஸ்களுக்கும் வசூலிக்கப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** சாதாரண பஸ்களுக்கு என்ன வசூல் செய்கிறோமோ அதே அளவுதான் டூரிஸ்ட் அதாவது சுற்றுலா பேருந்துகளுக்கும் வரி விதித்து, ஜூலை மாதம் முதல் அதே வரியை வசூல் செய்து வருகிறார்கள்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, காலாண்டு வரியைத் தள்ளிப் போடுவதற்குக் காரணம் என்ன? அவர்கள் தள்ளிப் போடும்படிக் கேட்டுக்கொண்டார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** பஸ் உடைமையாளர்களும், லாரி உடைமையாளர்களும் கேட்டுக்கொண்டதன் காரணமாக பதினைந்து நாட்களுக்கு இந்த காலாண்டு வரி வசூல் நீட்டிக்கப்பட்டது.

## அரசு போக்குவரத்துத் துறையில் டிரைவர்கள் கண்டக்டர்கள் நியமனம்

*141 வினா.—**திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு போக்குவரத்துத் துறையில் டிரைவர்கள், கண்டக்டர்கள் நியமன வயதை உயர்த்த இந்த அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், உத்தேசித்துள்ள வயது வரம்பு என்ன ?

(உ) இவர்களது பயிற்சி காலத்தை உயர்த்த அரசு உத்தேசித்து உள்ளதா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) இல்லை.

(இ) இந்த வினா எழவில்லை.

(உ) இல்லை.

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, விபத்துக்களைத் தடுப்பதற்காக பயிற்சிக் காலத்தை அதிகரித்து, டிரைவர்கள், கண்டக்டர்கள் போன்றோரின் வயதை அதிகரித்து, பஸ் விபத்தை தடுக்க முடியுமா ? இதைப்பற்றி அரசு ஆலோசனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்து மிக நல்ல கருத்து, ஏற்றுக்கொள்ளக்கூடியது. நாம் ஏற்கெனவே இந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டாகிவிட்டது. ஆகவே, மேலும் வயதை உயர்த்த வேண்டியதில்லையென்று குறிப்பிட்டேன். முன்பு 18 வயதில் டிரைவர்களும் கண்டக்டர்களும் இருக்கலாம் என்று ஒப்புக்



கொள்ளப்பட்டது. ஆனால் கடந்த ஏப்ரல் மாதம் முதற்கொண்டு, டிரைவர் வேலைக்குக் குறைந்த பட்சம் வயது 28 ஆக இருக்க வேண்டும் என்றும், கண்டக்டர் வேலைக்குக் குறைந்த பட்சம் 25 வயதாக இருக்க வேண்டும் என்றும் அரசு ஆணையிட்டிருக்கிறது. மேலும் பயிற்சிக் காலத்தை முன்னால் இரண்டு மாதங்கள் இருந்ததை இப்போது டிரைவர்களுக்கு மூன்று மாதங்களாக நிர்ணயித்து அரசு உத்தரவிட்டுள்ளது. இதற்குக் காரணம் என்னவென்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். கடந்த பல ஆண்டுகளாக ஏற்பட்ட விபத்துக்களையெல்லாம் புள்ளிவிவரங்களாகச் சேகரித்து, அலசி ஆராய்ந்து பார்த்ததில் பேருந்துகளை ஓட்டிச் சென்றவர்கள் வயது 18-க்கு மேலும், 20-க்குக் கீழாகவும் இருந்தது. ஆகவே, இதைக் கருத்திற்கொண்டு அரசு இப்போது புதிய சீர்திருத்தம் செய்துள்ளது.

**திரு. இல. பலராமன் :** அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது ஓட்டுநர்களுக்கு 28 வயது என்று நிர்ணயித்திருப்பதாகச் சொன்னார்கள். இதன் காரணமாக தற்போது வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிற ஓட்டுநர்களில் 28 வயதுக்குக் குறைவானர்கள் இருந்தால் வேலையில் இருந்து நீக்க என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** ஏற்கனவே வேலையில் அமர்ந்திருக்கிறவர்களுக்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. சி. வீரமணி :** பொதுவாக டிரைவர்களும், கண்டக்டர்களும் அனுபவமும் தேர்ச்சியும் இல்லாத காரணத்தினால் பல இடையூறுகள் ஏற்படுகின்றன. பொது மக்களிடம் பண்போடும் அன்போடும் அவர்கள் நடந்துகொள்ள தேர்ச்சிபெற்ற அதிகாரிகளால் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட ஒரு பயிற்சிப் பள்ளியை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** ஏற்கனவே பயிற்சிப் பள்ளி வைத்து எப்படி டிக்கெட் கொடுக்கவேண்டுமென்று சொல்லி கொடுப்பதோடு கூட பொதுமக்களிடம் எப்படி மரியாதையாகவும் பண்பாகவும் நடந்துகொள்ளவேண்டுமென்பதும் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. பள்ளியில் கற்றதை அனுபவத்தில் காட்டுவது இல்லை.

**திரு. சி. கோவிந்தராசன் :** கண்டக்டர்கள் நியமனம், டிரைவர்கள் நியமனம் பற்றியும் விபத்து தடுப்பு பற்றியும் விசாரிக்க காலஞ்சென்ற நீதிபதி சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் நியமிக்கப்பட்ட உயர்மட்டக்குழு ஏதாவது பரிந்துரைகள் செய்திருக்கிறார்களா ? அப்படியானால் அவை என்ன?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** அதுபற்றி தனியாகக் கேள்விபோட்டால் பதில் சொல்ல முடியும்.

[1969 ஆகஸ்ட் 26

**திரு. நா. வீராசாமி :** அடிக்கடி விபத்து ஏற்படுவதற்குக் காரணம், இளம் வயது டிரைவர்கள் இருப்பது தான் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பொதுவாக ஓட்டுநர்களுக்கு 28 வயதுக்கு மேல் இருக்கவேண்டும். கண்டக்டர்களுக்கு 25 வயதுக்கு மேல் இருக்கவேண்டும் என்றால் வாழ்நாளில் பாதிப் பங்கு கழிந்துவிடுகிறது. ஆகவே ஓட்டுநர்களுக்கு 28 வயது என்பதை 25 வயது என்பதாகவும், கண்டக்டர்களுக்கு 25 வயது என்பதை 22 வயது என்பதாகவும் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** விபத்துக்களுக்குக் குறைந்த வயது காரணம் என்று நான் கூறவில்லை. கடந்த பல ஆண்டுகளாக ஏற்பட்டு வந்துள்ள விபத்துக்களின் புள்ளிவிவரங்களை அலசி ஆராய்ந்து பார்த்ததில் 18 வயது முதல் 28 வயதுக்குள் உள்ள டிரைவர்கள் சம்பந்தமான விபத்துக்கள் தான் இருந்தன. அதன்காரணமாக டிரைவர்களுக்கு 28 வயது என்றும், பொதுமக்களிடம் பண்போடும், மரியாதையோடும் பழக கண்டெக்டர்களுக்கு 25 வயதாவது இருக்கவேண்டும் என்றும் ஏப்ரல் மாதம் முதல் தான் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இது தேவையில்லை என்று அனுபவத்தில் தெரிந்தால் குறைக்கவும் செய்யலாம், இன்னமும் கூட்டவேண்டுமென்றால் கூட்டவும் செய்யலாம்.

**திரு. க. இராமமூர்த்தி :** தற்போதுள்ள டிரைவர்களில் நன்றாக ஓட்டத் தெரியாதவர்களுக்கு—மறுபடியும் பயிற்சி தர ஏற்பாடு செய்யப்படுமா ? சரியான முறையில் ஓட்டவில்லை என்று புகார்கள் எழுதினாலும் சரியான நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என்பதும் உண்மையா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** ஒரு முறை பயிற்சி கொடுக்கப்பட்டவர்களுக்கு மறுமுறை பயிற்சி கொடுப்பது என்பது வழக்கத்தில் இல்லாத நிலைமை. பயிற்சி பெற்று தொழில் நடத்துகிறபோது தவறு செய்தால் தவறிய குற்றத்தின் கீழ் அது வருமே தவிர பயிற்சிக்குறைவு என்று எடுக்க முடியாது. எந்த ஒரு ஊழியரைப்பற்றியாவது குறிப்பிட்டு புகார் தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** தமிழக அரசு போக்குவரத்து, ஓட்டுநர் பயிற்சிப் பள்ளியை நடத்துகிறது. பயிற்சி பெறுகிறவர்களை உடனடியாக அரசு போக்குவரத்தில் வேலைக்கு வைத்துக்கொள்கிறார்களா ? அல்லது 2 ஆண்டுகள் கழித்து அவர்கள் ஹெவி வெகிகிள் ஓட்ட அனுமதி பாட்ஜை பெற்றவுடன் வேலைக்கு அமர்த்திக்கொள்கிறார்களா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இதற்குத் தனிக்கேள்வி போட்டால் விவரம் அறிந்து பதில் சொல்கிறேன்.



1969 ஆகஸ்ட் 26]

*Nanganallur Co-operative Building Society*

* 142 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether fresh elections to the Board of Nanganallur Co-operative Building Society Limited, were ordered in September 1966?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** நங்கநல்லூர் கூட்டுறவுக் கட்டிடச் சங்கத்திற்கு அத்தகைய ஆணை எதுவும் பிறப்பிக்கப் படவில்லை.

Dr. H. V. HANDE : Sir, this is a question about Co-operatives, and so will the Hon. Minister transfer this question to the Hon. Minister for Co-operation because I put that question as a result of the number of complaints received with regard to the Co-operative Department. Will the Hon. Minister tell us whether any complaints were received with regard to the functioning of this Building Society and whether they have been looked into by the Joint Registrar of Co-operative Societies and if so, the action taken by him with regard to the complaints brought to his notice?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு என்று சொன்னால் கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் கூட்டுறவு அமைச்சர் பொறுப்பில் இல்லை. பொதுவாக 22,400 கூட்டுறவுகள் இருக்கின்றன. வீடு கட்டுகிற கூட்டுறவுகள் நமது அறநிலைய அமைச்சர் மேற்பார்வையில் இருக்கின்றன. பால் பண்ணைக் கூட்டுறவுகள் உணவு அமைச்சர் மேற்பார்வையில் இருக்கின்றன. மீன்பிடி தொழில் சம்பந்தப்பட்ட கூட்டுறவுகள் மீன்.இலாக்க அமைச்சரிடம் இருக்கின்றன. ஸ்பின்னிங் மில் ஷுகர் மில் கைத்தறிகள் சம்பந்தப்பட்ட கூட்டுறவுகள் தொழில் அமைச்சரிடம் இருக்கின்றன. இப்படியாக 5 பிரிவுகள் இருக்கிற காரணத்தினால் அந்த அந்தத்துறை சம்பந்தப் பட்டவரை அந்த அந்த அமைச்சரிடம் கேள்விகள் போகிறது என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா:** நங்கநல்லூர் வீடு கட்டும் கூட்டுறவு சொசைடி சம்பந்தமாக 25—9—1966-இல் ஜெனரல்பாடி கூட்டப்பட்டு அந்த ஆண்டு வரவுசெலவுக் கணக்கை ஒத்துக்கொள்ள முடியாது என்று தீர்மானம் போட்டார்கள். அதனால் எல்லா டைரெக்டர்களும் ராஜீநாமாச் செய்து விட்டார்கள். 4—12—1966-இல் மீண்டும் ஜெனரல்பாடி கூடி ராஜீநாமாச் சம்பந்தமாகப் பரிசீலனை செய்தபோது வோட்டு எடுப்பில் 101,101 ஆக இரு பிரிவுகள் ஏற்பட்டன. தலைவர் தம்முடைய ஓட்டை சாதகமான பிரிவுக்குப் போட்டார். அதன்காரணமாக மெஜாரிடி இருப்பதாகக் கொண்டு அந்த டைரெக்டர்களே மேற்கொண்டு தொடர்ந்து இருக்கலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது. இரண்டு கோஷ்டிகள் இருப்பதனால் யார் பதவியில் இருந்தாலும் ஒருவர் மற்றொருவரைப்பற்றி, குறைகள் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். பொருளாதாரம் சம்பந்தப்பட்டவரை குறைபாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் நடைமுறையில் சில குறைகள்

இருக்கின்றன. 15 பேர் கையெழுத்துப்போட்டு ஜெனரல் பாடியை கூட்டவேண்டுமென்றால் கூட்டவேண்டும் என்பது பை லா. அப்படி பலமுறை கேட்டும் ஜெனரல்பாடி கூட்டப்படவில்லை. ஆகவே அதற்கான விளக்கங்கள் கோரப்பட்டிருக்கின்றன. சரியான விளக்கம் தரப்படாவிடில் அந்த சொசைடியை சூப்பர்சீட் பண்ணும்படியான நடவடிக்கையைத்தான் மேற்கொள்ளவேண்டியிருக்கும். வேறு அதிகமான தகவல் என்னிடம் இல்லை.

Dr. H. V. HANDE : Sir, whether it is a fact that complaints to the effect that certain plots were given to certain relatives of the Directors themselves and whether they were brought to the notice of the Registrar and whether the Registrar has examined them and if so, what is the report of the Registrar on those complaints?

*மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :* அந்த சொசைடியை சூப்பர்சீட் பண்ணுவதாலும் அதற்கான காரணங்களில் இது ஒன்றாக இருக்கும். சமாதானம் கேட்டிருக்கிறார்கள். பதில் வந்தபிறகே மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பரிசீலிக்கப்படும்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* நங்கநல்லூர் வீடு கட்டும் கூட்டுறவு சொசைடி சம்பந்தப்பட்ட கேள்வி இது.

*திரு. எஸ். ஜே. ராமசாமி:* தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை அமைச்சர் பதில்சொல்லும்போது இத்துறை பலபேர்களிடம் பகிர்ந்துகொடுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள், எல்லாம் ஒன்றாக இருக்கவேண்டுமென்று கருதுகிறார்களா?

*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :* ஒரேயிடத்திற்கு வர வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அதிகமான அலுவல்களை நானே மேற்கொள்ளவேண்டுமென்ற எண்ணமும் இல்லை. 22,400 கூட்டுறவுகள் இருக்கின்றன என்று நான் குறிப்பிட்டதற்குக் காரணமே பல அமைச்சர்கள் பார்ப்பது நல்லதாக இருக்கும் என்பதை உணர்த்துவதற்காகத்தான்.

### அழகர்கோயில் தேவஸ்தானம்.

** 143 விஞ.—திரு. என். எஸ். வி. சித்தன் :* மாண்புமிகு அற நிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், அழகர் கோவில் தேவஸ்தானத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக என்னென்ன அபிவிருத்திப் பணிகள் நடைபெற்றுள்ளன ?

(இ) புதிதாக எந்தெந்தக் கட்டடங்கள் கடந்த இரண்டு ஆண்டுகளில் கட்ட ஆரம்பிக்கப்பட்டன ? அவைகளெல்லாம் கட்டி முடிக்கப்பட்டனவா ?





*மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா:* (அ) தல்லாகுளத்தில் ஸ்ரீகள்ளழகர் தேவஸ்தானத்தைச் சேர்ந்த துணைக்கோவிலான ஸ்ரீ பிரசன்ன வேங்கடாசலபதி கோவிலில். திருப்பணி முடிவு பெற்றதும் 1967-ம் ஆண்டில் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

(இ) கடந்த இரண்டாண்டுகளில் புதிதாகத் திருப்பணி எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

### தமிழ்நாடு மின்சார வாரியத் தலைவர்.

** 114 விஞ—திரு. டி. மார்டின் :* மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில மின்சார வாரியத்துக்குத் தனியாக ஒரு தலைவரை நியமிப்பதற்குப் பதிலாக, மின்சாரத் தலைமைப் பொறியாளரையே அவரது அலுவல் காரணமாக தலைவராக நியமிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

*மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :* (அ) இல்லை.

(இ) இவ்விஞவிற்கு இடமில்லை.

Thiru T. Martin : In the present State Electricity Board, the Chairman is an I.A.S. Officer who is not a technically qualified Engineer. There is only one technically qualified Engineer representing the Engineering Department in the Board. May I request the Hon. Minister to state whether there is any proposal before the Government to appoint at least four Chief Engineers representing the department in the Board and make the Board a technical board so that it can take technical decisions more quickly and expeditiously?

*மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :* இப்பொழுது இருக்கிற மின்சார வாரியத்தின் ஐந்தாவது செக்ஷன் உட்பிரிவு 2-வது விதியின்படி மின்சார வாரியத்தின் உறுப்பினராக இருப்பவர்தான் சேர்மனாக இருக்கலாம். வாரியத்தில் அதிகாரியாக இருப்பவர் சேர்மனாக இருக்கமுடியாது. தலைமைப் பொறியாளர் அதிகாரியாக இருக்கிற காரணத்தாலே அவர் இருக்கமுடியாது.

*திரு. நா. வீராசாமி :* இப்பொழுது மின்சார வாரியத்தில் சீஃப் ஆப்பரேஷன் எஞ்சினியர், சீஃப் கன்ஸ்ட்ரக்ஷன் எஞ்சினியர், சீஃப் டிஸ்ட்ரிப்யூஷன் எஞ்சினியர், சீஃப் எஞ்சினியர் என்று நான்கு பொறியாளர்கள் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? இருக்கின்ற பதவிகளிலே இரண்டு ஆண்டுகள்தான் பணியாற்றலாம் என்று இருக்கிறது. இதன்காரணமாக, அடிக்கடி மாறுதல் ஏற்படுவதால் பாதகம் ஏற்படுகிறது. எனவே நான்கு ஆண்டுகள் இருக்கலாம் என்று மாற்றுவதற்கு அரசாங்கம் முன்வருமா?

*மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :* அப்படியொன்றும் கட்டாயமான விதி இல்லை.

[1969 ஆகஸ்ட் 26

THIRU K. VINAYAKAM : Whereas according to the Act, the Board should consist of a minimum of three persons and a maximum of seven persons, it does not say that only I.A.S. officer should be there. At present there are six I.A.S. officers and only one technical person who knows something about electricity, in the Board. With a view to tctive the efficient working of the Board, will this Government come forward with an amendng Act, to make the Board more technical instead of having Finance Secretary, Agriculture Secretary and Industries Secretary who know nothing about electricity?

***மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :*** இப்பொழுது இருக்கிற மின்சார வாரியத்தினுடைய அமைப்பு, சட்டதிட்டங்கள் எல்லாம் மத்திய அரசினால் இயற்றப்பட்டதாகும். அதற்குட்பட்டுத்தான் இப்பொழுது நடைபெற்று வருகிறது.

THIRU T. MARTIN : In a small State like Kerala, there are three or more Chief Engineers in the Electricity Board. May I request the Hon. Minister to state whether this Government will appoint more Chief Engineers in the Electricity Board for its proper functioning?

***மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :*** இப்பொழுது இருக்கிற முறையிலே ஒருவர்தான் தலைமைப்பொறியாளர். வேறு மூன்று பேர்களும் தலைமைப் பொறியாளர்களாக இருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட வேலைகள் இருக்கின்றன. நான்கு பேர்கள் இருக்கிறார்கள். நான்கு பேர்களில் ஒருவர் தலைமைப் பொறியாளராக இருக்கிறார். புதிதான முறை இப்பொழுது வேண்டியதில்லை என்று கருதுகிறேன்.

**கன்னியாகுமரி மாவட்டத்தில் புதிதாக ரப்பர் தோட்டங்கள்**

****145 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் :*** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் புதிதாக ர தோட்டங்கள் போட அரசு முடிவு செய்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

***மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :*** (அ) & (இ) தற்போது 1873 ஹெக்டேர் பரப்பளவில் ரப்பர் தோட்டங்கள் வைக்கப்பட்டுள்ளன. 1969-70-ம் ஆண்டில் இந்தப் பரப்பளவை மேலும் 200 ஹெக்டேர் அளவுக்கு அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

***திரு. என். எஸ். வி. சித்தன் :*** இந்த ரப்பர் தோட்டங்களிலிருந்து ஆண்டு ஒன்றுக்குக் கிடைக்கும் ரப்பரின் அளவு, அதன் மதிப்பு இவற்றைக் கூற முடியுமா ?

***மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :*** இந்த ரப்பர் தோட்டம் 1960-ஆம் ஆண்டில்தான் தொடங்கப்பட்டது. பலன் கொடுப்பதற்கு குறைந்தது 7 ஆண்டுகள் ஆகும். இரண்டு



1969 ஆகஸ்ட் 26]

ஆண்டுகளாக ரப்பர் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். 1967-68-ல் 1,095 ரூபாய் மதிப்புக்கும் 1968-69-ஆம் ஆண்டில் 1,24,706 ரூபாய் மதிப்புக்கும் ரப்பர் எடுக்கப்பட்டிருக்கிறது. பதினாறு ஆண்டுகள் கழித்தால் ரப்பர் முழு அளவிலே கிடைக்கும். எனவே போகப் போக அதிக லாபம் வரும் என்று எதிர்பார்க்கிறோம்.

***திரு. ஆர். கருப்பையா :*** ரப்பர் மரத்திலிருந்து எடுக்கப்படுகிற ரப்பர் பாலிலிருந்து ரப்பர் ஷீட் போன்றவற்றை தயாரிப்பதற்காக ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தவேண்டுமென்று அரசுக்கு அங்கிருந்து கோரிக்கை வந்திருக்கிறதா ? ஆம் எனில் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

***மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :*** இப்பொழுதே தொழிற்சாலை ஏற்படுத்தியிருக்கிறோம். இயந்திரங்களை வாங்கிக்கொண்டிருக்கிறோம். இது விரிவுபடுத்தப்படும்.

***திரு. எஸ். ஜே. ராமசாமி :*** இந்த ரப்பர் இருக்கிறதே, இது நன்றாக சம்பாதிக்கக்கூடிய ஒன்று. நீலகிரி மாவட்டத்திலே கொஞ்சம் இருக்கிறது. கேரளாவுக்கும் நமக்கும் இடையில் உள்ள பார்டரில் சில இடங்களில் இருக்கிறது. இதைப்பற்றி நல்ல முறையிலே ஆராய்ச்சிசெய்து விஸ்தரித்தால் அன்னியச் செலாவணி கிடைக்கும். எனவே இந்த ரப்பர் உற்பத்தியை அதிகப்படுத்த திட்டம் இருக்கிறதா ?

***மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :*** இப்பொழுது இருக்கிற நிலையில் நாகர்கோவிலில்தான் சீதோஷ்ண ஸ்திதி ரப்பருக்குப் பொருத்தமாக இருக்கிறது. ஆண்டுதோறும் அதிகமாகச் சாகுபடி செய்வதற்கு முயற்சி செய்கிறோம். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 2,000 ஏக்கர் சாகுபடி செய்ய திட்டம் போட்டிருக்கிறோம். இதைத்தவிர இலங்கையிலிருந்து வருகிற அகதிகளுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்க இன்னும் 2,000 ஏக்கர் சாகுபடி செய்யத் திட்டம் வைத்திருக்கிறோம். இப்படியே விருத்தி செய்துகொண்டு போகலாம்.

***திரு. நா. சௌந்தரபாண்டியன் :*** தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட இருக்கும் ரப்பர் தொழிற்சாலையிலே என்ன என்ன பொருள்கள் உற்பத்திசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது ? இதை இன்னும் தீவிரப்படுத்தி விரைவில் உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

***மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :*** முழு விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

***திரு. இல. பலராமன் :*** ரப்பர் தோட்டங்கள் நல்ல வருவாய் உள்ள தொழிலை ஏற்படுத்தக்கூடியவையாக இருக்கின்றன. நம்முடைய மாநிலத்திலே எங்கு எங்கு ரப்பர் உற்பத்தியாகும்

என்று ஆராய்ச்சி செய்யப்பட்டதா? எங்கு எங்கு உற்பத்தியாகும் என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** அதற்கான முழு விவரம் இல்லை. இருந்தாலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பருக்கான சீதோஷ்ண ஸ்திதி இருக்கிறது என்று கூறுகிறார்கள். மேற்கொண்டு தகவல் இல்லை. இருந்தால் பரிசீலனை செய்யலாம்.

சாத்தான்குளம் துணை வட்டம்

*** 121 வினா—திரு. டி. மார்டின்:** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்தில் சாத்தான்குளம் சப் தாலுக்காவோடு உடன்குடி ஊராட்சி ஒன்றிய கிராமங்களை சேர்த்து தனி தாலுக்காவாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. டி. மார்டின்:** தலைவர் அவர்களே, இந்த தாலுகாக்கள் எந்த அடிப்படையிலே அமைக்கப்படுகின்றன? திருச்செந்தூர் தாலுகா பெரிய அளவிலே இருப்பதாலே சாத்தான்குளம் சப்தாலுகா பகுதியையும், உடன்குடி பஞ்சாயத்து ஒன்றியத்தை யும் சேர்த்து சாத்தான்குளம் தாலுக்கா என்று அமைக்க அரசாங்கத்திடம் நடவடிக்கைக் குறிப்பு ஏதாவது இருக்கிறதா? ஆம் என்றால், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இல்லை என்று சொன்னேன். திருச்செந்தூர் தாலுகா பெரிதான தாலுகா என்பதும் அல்ல. சாத்தான்குளம், உடன்குடி இரண்டையும் சேர்த்து சுதந்திரமான தாலுக்காவாகச் செய்வதற்கும் உத்தேசம் இல்லை.

**திரு. நா. வீராசாமி:** இந்த தாலுகாக்கள், மாவட்டங்கள் எல்லாம் 100 ஆண்டுகளுக்கு முன்னாலே வெள்ளைக்காரன் ஆண்ட காலத்தில் பிரிக்கப்பட்டவை அப்பொழுது இருந்த ஜனத்தொகை, வருவாய், எல்லையமைப்பு பொறுத்து பிரிக்கப்பட்டவை. இப்பொழுது ஜனத்தொகை அதிகமாகி இருக்கிறது. வருமானம் அதிகமாகியிருக்கிறது. இதையெல்லாம் அடிப்படையாக வைத்து தமிழகம் பூராவும் இருக்கிற தாலுகாக்களை மீண்டும் பரிசீலனை செய்து குறைந்த ஜனத்தொகையையும், ஓரளவுக்கு வருமானத்தையும் கணக்கில் கொண்டு பரிசீலிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?



**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** 200 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த விவகாரங்கள் எல்லாவற்றையும் நாம் தள்ளிவிட முடியாது. புதுமையான எதையும் நாம் வரவேற்கமுடியாது. எது எது பயன்படத்தக்கதாக இருக்கிறதோ அதை நாம் வைத்துக் கொள்ள வேண்டும். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் பழைய தாலுக்காக்களை வைத்துக்கொள்ள வேண்டும் என்பதும் கொள்கை அல்ல, ஒரே நாளிலே எல்லாவற்றையும் மாற்ற வேண்டும் என்பதும் அல்ல. அவ்வப்பொழுது உள்ள நிலைமைகளைப் பொறுத்து நிர்வாகச் சீர்திருத்தத்தையொட்டி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. டி. மார்டின்:** சப் தாலுகாவில் இருந்து தாலுகா சென்டருக்குப் போவதற்கு அதிக நேரம் ஆகிறது. இதனால் டெபுடி தாசில்தார்கள் உடனடியாகக் காரியங்களைச் செய்ய முடியாத நிலைமை இருக்கும் காரணத்தால் அவர்களுக்கு ஸ்கூட்டரோ, மோட்டார் சைக்கிளோ வாங்கிக் கொடுக்கும் திட்டம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அப்படிப்பட்ட திட்டம் எதுவும் இல்லை. நிர்வாக சௌகரியங்களுக்காகத் தாலுகாக்கள் பிரிக்கப்பட்டு வருகின்றன. சாத்தான்குளம், உடன்குடி தாலுகாக்களை பிரிக்கும்படியான பரிசீலனை இல்லையென்றுதான் சொன்னேனே தவிர, எப்பொழுதுமே பிரிக்கப்படாது என்று அங்கத்தினர் கருதிக் கொள்ள தேவையில்லை.

சர்க்கரை ஆலைகளுக்குச் சொந்தமான நிலங்கள்

*** 122 வினா—திரு. என். சங்கரய்யா:** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நில உடைமை உச்ச வரம்பு சட்டத்தின் கீழ் (சென்னை சட்டம் 58/1961) 40,42, பிரிவுகளின்படி சர்க்கரை ஆலை போர்டு Sugar Factory Board வரம்புக்கு மேற்பட்ட அதிக நிலம் வைத்துக் கொள்ளவும், வாங்கவும் தமிழகத்தில் எத்தனை சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது?

(இ) அவ்வாறு அனுமதிக்கப்பட்ட அதிக நிலத்தின் மொத்த அளவு என்ன?

THE HON. THIRU K. A. MATHIALAGAN:

(*a*) and (*b*):

| Serial number and name of the Sugar Factory (1) | Extent permitted. (2) |
|---|---|
| | ACRES. |
| 1. South India Steel and Sugar Limited Mundiyampakkam, South Arcot district .. .. .. .. | 39·82 |
| 2. E. I. D. Parry Limited, Nellikuppam. | 18·71 |
| Total .. | 58·53 |

[1969 ஆகஸ்ட் 26

*Complaint against Revenue Officials in North Arcot District*

*123 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Finance be pleased to state whether the North Arcot District Development Council has complained of excess by Revenue Officials about the 21st September 1968?

**மாண்புமிகு. திரு. கே.ஏ. மதியழகன்:**

ஆம். ஆனால் தேவையான தகவல் கொடுக்கும் பட்சத்தில் தான் அதிகாரிகளின் மேல் நடவடிக்கை எடுப்பதாக மாவட்ட ஆட்சியாளர் உறுதி அளித்தபோதிலும் குறிப்பான சம்பவங்கள் பற்றிய தகவல் ஏதும் தெரிவிக்கப்படவில்லை.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** அங்கே என்ன நடந்தது என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** விவரமாக எதுவும் இல்லை. யாரும் உருப்படியாகச் சொல்ல முன் வருவதில்லை. அப்படி ஊழல் நடக்கிறது, இப்படி ஊழல் நடக்கிறது என்று சாதாரணமாகச் சொல்லுகிறார்களே தவிர, குறிப்பிட்டுச் சொல்லுவதில்லை. ஆளும் கட்சியானாலும் எதிர்க்கட்சியானாலும் இப்படித்தான் சொல்லுகிறார்கள். கொள்முதலில் கெடுபிடியாக இருக்கிறார் என்று மிராசுதார்கள் சொல்லுகிறார்கள். எந்த அதிகாரி அப்படி இருந்தார் என்று சொல்ல முன்வருவதில்லை. வட ஆர்க்காடு மாவட்ட கலெக்டர் அவர்கள் எந்த அதிகாரி அப்படி நடந்து கொண்டார் என்று அறிந்து நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னார்கள்.

**திரு. என். கிட்டப்பா:** தஞ்சையிலுள்ள மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி அவர்கள் அந்த மாவட்டப் பொது மக்களிடத்திலும், சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலும் இழிவு படுத்தும் முறையில் நடந்து கொள்ளுவதாக அரசாங்கத்திற்குப் புகார் வந்துள்ளதா? அப்படி இருந்தால் அவரைப் பொது மக்களோடு அதிகமான தொடர்பு இல்லாத துறைக்கு மாற்ற அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கேள்வி, பாலாற்றங் கரைப் பகுதியைப் பற்றியது. நீங்கள் காவேரிக் கரையைப் பற்றிக் கேட்கிறீர்கள்.

**திரு. மா. பா. சாரதி:** வட ஆர்க்காடு மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டத்தில் இதுமாதிரித் தகராறுகள் எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை. எந்தவித சம்பவமும் நடக்கவில்லை. அப்படி இருக்க இந்தக் கேள்வியை அட்மிட் செய்து பதில் அளிக்க முன் வந்துள்ளது எப்படி என்று தெரியவில்லை. வட ஆர்க்காடு மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கே இது பற்றித் தெரியாமல் இருக்கும்போது கேள்வி எப்படி அட்மிட் செய்யப் பட்டது?



1969 ஆகஸ்ட் 26]

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இது சபாநாயகர் பதில் சொல்ல வேண்டிய கேள்வி. திருநெல்வேலி உறுப்பினரால் கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. அப்படி ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்பதுதான் விடை.

**திரு. இல. பலராமன்:** வட ஆர்க்காடு மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டத்தில் ஆட்சித் தலைவரிடம் எல்லா உறுப்பினர்களும்—ஆளும் கட்சி உறுப்பினர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஒரு அதிகாரியைப் பற்றிப் புகார்களைக் கூறினார்கள். வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கிறேன், அரசாங்கத்திற்கு அனுப்புகிறேன் என்று சொன்னார்கள். இந்தக் கேள்விக்குரிய பதிலில் இருந்து நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரிவதால் பொதுமக்களும் மற்றவர்களும் ஏமாற்றத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். இது பற்றிய நிலைமை என்ன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** ரொம்பவும் தப்பான கேள்வி. எந்த அதிகாரி மீது எந்த உறுப்பினர் எந்தத் தேதியில் எந்த இலாகாவுக்கு புகார் அனுப்பினார் என்பதைப் பற்றிக் கூற வேண்டுமே தவிர, ஏதோ அமைச்சருக்கு அதைப் பற்றி ஏற்கனவே தெரிந்தது போலவும், அவரைப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காகப் பதில் சொல்லுவது போலவும் கூறுவது அவ்வளவு சரியானது அல்ல.

**திரு. இல. பலராமன்:** அந்த மாவட்ட உணவுப் பங்கீட்டு அதிகாரி பேரில் கூறப்பட்ட புகார்கள் என்ன ஆனது?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தனியாகக் கேள்வி போட்டு தகவல்களைப் பெற்றுக் கொள்ள உறுப்பினருக்கு உரிமை இருக்கிறது.

**திரு. ஏ. சி. நரசிம்மன்:** மாவட்ட உணவு விநியோக அதிகாரி அவர்கள் உறுப்பினர்கள் குற்றம் சாட்டியதன் பேரில் மாற்றம் செய்யப்படவில்லை; அவர்கள் மீது ஏற்கனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பல்வேறு குற்றங்களைக் கண்டுபிடித்த காரணத்தால் அவருடைய மாற்றத்தைப் பற்றிக் கலெக்டர் அவர்களே சர்க்காருக்குப் பரிந்துரைத்தார் என்பது உண்மையா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அப்படியும் இருக்கலாம். மாண்புமிகு திரு. பலராமன் அவர்கள் கவனிக்க வேண்டிய ஒன்று.

*Assignment of dry lands to farmers*

*124 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Finance be pleased to state:—

(*a*) whether the Government proposes to assign dry poromboke lands to landless farmers in Thanjavur District; and

(*b*) whether it is a fact that a special staff has been sanctioned for this purpose and stationed at Orathanad, Gandarvakottai, Pattukottai and Mannargudi?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:

(a) Yes Sir.

(b) Special staff has been sanctioned for assignment work in Tiruthuraipoondi, Arantangi, and Orathanad Taluks and in Gandarvakottai Sub-Taluk, in Thanjavur District.

THIRU K. VINAYAKAM: Sir, may I know how many acres of land are available in this district for assignment?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Sir, I have no information. I want notice.

திரு. வை. சுவாமிநாதன்: திருச்சி மாவட்டத்தில் அந்தமாதிரி அதிகாரிகள் நியமிக்கப்பட்டு இந்த வேலையைச் செய்து வருகிறார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தமிழ்நாட்டில் இந்த ஆண்டு ஒரு லட்சம் ஏக்கர் தரிசு நிலங்களை ஒப்படை செய்து கொடுக்க வேண்டுமென்று 40 யூனிட்டுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு யூனிட்டிலும் ஒரு தாசில்தார், இரண்டு ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள், ஒரு அசிஸ்டென்ட், மூன்று பியூன்கள் இருக்கிறார்கள். இவ்வாறு பல்வேறு இடங்களிலும் நியமிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. திருச்சியைப் பற்றிய விவரம் தற்போது என்னிடம் இல்லை.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி: தஞ்சை மாவட்டத்திலுள்ள கிராமங்களில் அரிசனங்களுக்காக ரிசர்வ் செய்யப்பட்ட புறம்போக்குகள் இருக்கின்றன. ஆனால் அவற்றைப் பல நிலக்கிழார்கள் சாகுபடி செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. அவர்களை வெளியேற்றி அரிசன மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று அந்த மக்களிடமிருந்து கோரிக்கை வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அது பற்றிய விவரம் இல்லை.

திரு. என். கிட்டப்பா: தஞ்சை மாவட்டத்தில் தருமபுரம், திருவாடுதுறை, திருப்பனந்தாள் ஆதீனங்களுக்குச் சொந்தமான தரிசாகக் கிடக்கும் புஞ்சை நிலங்களை நிலமற்ற ஏழை விவசாயிகட்கு கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மடாலயங்களுக்கு நிலங்களில் உள்ள உரிமைகளை எப்படி நிர்ணயிப்பது என்ற தலைப்பின்கீழ் வருகிற கேள்வி இது.

திரு. கே. பி. எஸ். மணி: பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு, கந்தர்வக்கோட்டை தாலுகாகளில் பஞ்சமர் தரிசு என்று தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்பட்ட நிலங்கள் எவ்வளவு இருக்கிறது ? அதை சர்வே செய்து அந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்க அரசு முன்வருமா ?



மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மூலக் கேள்வியில் இருந்து இந்தக் கேள்வி எழவில்லை.

திரு. மூ. மாரிமுத்து: தஞ்சை மாவட்டத்தில் மட்டும் இப்படிப் பட்ட புஞ்சைப் புறம்போக்கு நிலங்கள் எத்தனை ஏக்கர் ? இவை ஏழை விவசாயிகளுக்கு வழங்கப்படுமா ?

(பதில் இல்லை.)

* 125 வினா.—திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திண்டிவனம் வட்டம், வேப்பேரி கிராமத்தில் எத்தனை ஏக்கர் இனாம் நிலங்கள் உள்ளன ?

(இ) மேற்படி நிலத்தை நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்குப் பட்டா செய்து கொடுக்கும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறதா ?

(உ) இல்லை என்றால் இனிமேலாவது பரிசிலனை செய்யும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) 29.50 ஏக்கர்.

(இ) பயிரிடும் குத்தகைக்காரர்களுக்குப் பட்டா வழங்கப்படுவதற்கென முடிவு செய்யப்பட்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால், தமிழ்நாட்டுச் சிறு இனாம்கள் (ஒழிப்பு ரயத்துவாரி மாற்றம்) சட்டத்தில் கண்ட விதித் துறைகளின் கீழ் பட்டா பெற அவர்களுக்கு உரிமையுண்டு.

(உ) பட்டா வழங்குதல் குறித்த சட்டப்படிக்கான விசாரணை முடிந்த பிறகு, பயிரிடத்தக்க நிலங்களில் ஒப்படை செய்வதற்கு நிலம் எஞ்சியிருக்குமானால், சாதாரண தர்க்காஸ்து விதிகளின் கீழ் வருவாய்த் துறை அதை நிலமற்ற ஏழைகளுக்கு ஒப்படை செய்யும்.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்: இனாம் ஒழிப்புச் சட்டத்திற்குப் பிறகும் இந்த நிலங்கள் எந்தப் பணக்காரர்களிடம் இருந்தனவோ அதே பணக்காரர்களிடத்தில்தான் இன்னும் இருக்கின்றன. அவற்றைப்பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்று மனு செய்திருக்கிறார்கள். அவர்கள் பணக்காரர்களாக இருந்தாலும் சரி அல்லது ஏழைகளாக இருந்தாலும் சரி, இதுவரையில் மனு போட்டவர்கள் யார் யார் என்ற விவரத்தைத் தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அதற்கு முதலிலேயே பதில் சொன்னேன். இது இனாம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் வருகிறது. இனாம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் ஸ்டாச்சுட்டரி செட்டில்மென்ட் முதலில் செய்வார்கள். அதை செட்டில்மென்ட் ஆபீசர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். யார் யாருக்குப் பட்டா

[1969 ஆகஸ்ட் 26

வழங்குவது இந்த இனம் சட்டத்தின்கீழ் என்பதுபற்றிய விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. அதற்குப் பிறகு இந்த நிலங்கள் மிராசுதார்களுக்குப் போகலாமா அல்லது குத்தகை எடுத்திருப்பவர்களுக்குப் போகலாமா என்பதற்குச் சில விதிச் முறைகள் இருக்கின்றன. அதுபோக மிச்சம் இருந்தால்தான் நிலமற்ற ஏழைகளுக்குக் கொடுக்கிற பிரச்னை எழுகிறது.

**திரு. க. மு. ராசகோபால் :** உத்தரமேரூர் வட்டத்தில் பில்லாஞ்சிமேடு இனம் ஒழிப்புக் கிராமத்தில் நூறு ஏக்கர் நிலம் ஒருவரிடமிருந்து எடுக்கப்பட்டு யாரிடமிருந்து எடுக்கப்பட்டதோ அதே கன்னியப்ப முதலியார் என்பவருக்கு உத்தரமேரூர் வட்ட தாசில்தார் முத்துகிருஷ்ண ரெட்டியார் 66 ஏக்கர் 22 சென்ட் பட்டா செய்து கொடுத்திருக்கிறார். ஆகவே அந்த நிலத்தை எடுக்க ஆவன செய்து அவற்றை ஏற்கனவே பயிர் செய்து வந்த ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** திண்டிவனத்திற்கும் உத்தரமேரூருக்கும் ரொம்ப தூரம் இருக்கிறது. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** வேப்பேரி கிராமம் இனம் தாருடையது. பூராவும் நன்செய் நிலங்கள். அமைச்சர் அவர்களின் பதிலில் 29½ ஏக்கர் என்று சொன்னார்கள். அது, குறைந்தபட்சம் 150 ஏக்கர்ளுக்கு மேல் இருக்கும். கொடுக்கப்பட்டிருக்கும் கணக்கு தவறு என்று தெரிகிறது. அதை மறுபரிசீலனை செய்து சரியான கணக்கைக் கொடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** சரியான கணக்கைக் கொண்டுவருவார்களேயானால் அரசு மிகவும் சந்தோஷப்படும். உறுப்பினர் அவர்களுக்கும் அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும்.

### *Posts of Grama Sevikas and Mukya Sevikas*

* 126 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state :

(a) whether the institution of Grama Sevikas and Mukya Sevikas would be abolished;

(b) if so, how soon; and

(c) whether alternative jobs will be provided to the affected persons?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) தற்பொழுது இப்பதவியை, எடுத்து விடுவது பற்றி எந்த யோசனையும் இல்லை.

(இ) & (உ) கேள்விகளுக்கு இடமில்லை.



1969 ஆகஸ்ட் 26]

**திரு. கே. விநாயகம் :** கிராம சேவிகைகள், முக்கிய சேவிகைகள் இவர்களுக்குள்ள வித்தியாசம் என்ன ? இவர்கள் செய்யும் பணிகள் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** ஆறு கிராமங்களுக்கு இரண்டு கிராம சேவிகைகள். அந்தக் கிராமங் களுக்குச் சென்று குடும்ப நலத் திட்டம், சிக்கன சீரமைப்பு, வீடுகளில் தோட்டங்கள் போடுவது போன்றவைகள் பற்றி இவர்கள் பிரசாரம் செய்ய வேண்டும். அவர்கள் அரசாங்கத் திட்டங்கள் பற்றி பிரசாரம் செய்ய வேண்டும். ஆங்காங்குள்ள பெண்களை ஒன்றாகச் சேர்த்து மகளிர் மன்றங்கள் அமைத்து அவற்றின் மூலம் வேலைவாய்ப்புகள் கொடுப்பது, அவர்களுக்கு ஒரு அரசியல் விழிப்புணர்ச்சி வரும் வகையில் நாட்டு நடப்புகளை அறியக் கூடிய அளவிற்கு ஒரு வேகத்தை ஏற்படுத்துவது போன்ற பணிகளில் இவர்கள் ஈடுபடுகிறார்கள். ஆறு கிராமங்களில் இரண்டு கிராம சேவிகைகள் வேலை செய்வதை மேற்பார்வையிடுவதற்கு ஒரு முக்கிய சேவிகை இருக்கிறார். இந்த ஆறு கிராமங்களையும் முக்கிய சேவிகை சென்று பார்வையிட வேண்டும். இவர்கள் மாவட்ட பெண்கள் நல அதிகாரியிடத்தில் பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள்.

**திரு. பெ. சீனிவாசன் :** கிராம சேவிகைகள், முக்கிய சேவிகைகள் இவர்களை நீக்குவதில்லை என்ற கொள்கை நிரந்தரமானதா அல்லது தற்காலிகமானதா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** ஆறு கிராமங்களை இரண்டு கிராம சேவிகைகள் கவனிப்பதற்கு கிராமங்களில் போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தாலும் பெண்கள் தனியாகச் சென்று திரும்புவதற்குரிய வாய்ப்பில்லாத காரணத்தாலும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பணிகளைப் பூர்ணமாகச் செயல்படுத்த முடியவில்லை என்று ஏற்கனவே பல புகார்கள் வந்திருக்கின்றன. இந்த அரசு பொறுப்பேற்றவுடன் பல காரியங்களைச் செய்ததோடு, மறைந்த முதல் அமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆலோசகராக இருந்த மதிப்பிற்குரிய திரு. முருகேச முதலியார் அவர்கள் இந்த கிராம சேவிகைகள் எல்லாம் சரியான முறையில் பணியாற்றவில்லை, ஆகவே அவர்களை வேலை நீக்கம் செய்யவேண்டுமென்று ஆலோசனை கூறினார்கள். ஆனால் அப்படி திடீரென்று வேலை நீக்கம் செய்யக் கூடாதென்று முன்னாள் முதலமைச்சர் அவர்கள் நினைத்து அவர்கள் சரியான முறையில் வேலை செய்யவில்லையென்றால் வேறு வேலைகள் இருந்தால் கொடுப்பது அல்லது வேலையை ஒழுங்காகச் செய்வதற்கு வேறு முறையில் அந்தப் பணிகளை மாற்றியமைப்பது அல்லது ஓர் இடத்தில் வேலை தருவது என்ற முறையில் ஆராய்ச்சி செய்யுமாறு பணித்தார்கள். அந்த வகையில் இன்று இயக்குனர் அவர்கள் அந்தப் பெண்களுக்கு எந்தமாதிரி வேலைகள் கொடுப்பது, யார், யாரை மேற்பார்வையிடுவது, எந்தவிதமான வேலைகள் எப்படி

தரப்படலாம் என்பதைப்பற்றி யெல்லாம் பரிசீலனை செய்து அரசுக்கு ஓர் அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களது அறிக்கை இன்னும் அரசாங்கத்திற்கு வந்து சேரவில்லை. இருந்தாலும் அவர்களை வேலையிலிருந்து நீக்கம் செய்வது என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை.

**திரு. என். வரதராஜன் :** கிராம சேவகிகள், முக்கிய சேவகிகள் இவர்களை வேலையிலிருந்து நீக்காவிட்டாலும் அவர்களுடைய இன்றைய வேலைகளில் அபிவிருத்தி காண்பதற்கு அரசு புதுத் திட்டம் ஏதாவது தயாரிக்குமா? அவர்களது வேலைகளைப்பற்றி கிராமப்புறங்களில் மிகப் பெரிய அதிருப்தி இருப்பதால் அதில் ஒரு மாறுதல் காண அரசாங்கம் முயற்சிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அதைத் தான் சொன்னேன். வேறு எந்தவிதமான பணிகள் தருவது என்பதுடன் அதில் பல பேர்கள் ஆசிரியர் பயிற்சி பெற்றுள்ளார்கள். அவர்களை ஆசிரியர் பணியில் அமர்த்துவது என்ற அளவில் கூட இவைகளைப் பற்றி யெல்லாம் பரிந்துரை செய்ய அனுப்பப்பட்டிருக்கிறது. இயக்குனர் அவர்கள் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த அறிக்கையின்பேரில் தான் முடிவு எடுக்க வேண்டும். மாற்று வேலைகள் கொடுப்பது, என்னென்ன வேலைகள் கொடுப்பது, எந்தமாதிரிச் சீரமைப்பு செய்வது என்பது பற்றி யெல்லாம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

## *Cultivation of Pineapple*

* 127 Q.—Thiru K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased **to state :**

(a) whether "pineapple" cultivation is being encouraged in our State;

**(b) if so, the places where they are grown in plenty; and**

**(c) the amount of subsidy given to ryots who do this cultivation?**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) ஆம்.

(இ) கன்னியாகுமரி, நீலகிரி, சேலம் மாவட்டங்களில் ஏறக்குறைய 800 ஏக்கரில் பயிரிடப்படுகிறது.

(உ) உதவித்தொகை எதுவும் வழங்கப்படுவதில்லை.

Thiru K. S. KOTHANDARAMIAH : Sir, this is the only fruit which is not only tasty but also it could be preserved for a long time without much cost and difficulty. I learn that there is great demand for this fruit not only in European fresh fruit markets but also in the United States. We can get much foreign exchange by exporting it to those countries. The climate in our



State is suitable for its cultivation. May I therefore request this Government to give encouragement to cultivation of this fruit?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இதைப் பயிரிடுவதற்காக குடியானவர்கள் மத்தியில் இதுபற்றி அதிகமாக கடன் கேட்டோ அல்லது அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்றோ விண்ணப்பங்கள் வரவில்லை. இருந்தாலும் அரசாங்கம் பழ ரசத்தின் முக்கியத்துவத்தை அறிந்து அயல் நாடுகளுக்கு எந்தளவிற்கு அனுப்ப முடியும் என்பதை உணர்ந்து அதிகமாக அதைப் பயிரிட வேண்டும் என்பதில் அக்கறை காட்டிக் கொண்டு வருகிறது.

**திரு. மு. ச. சிவசாமி :** மேற்குத் தொடர்ச்சி மலையில், 2,000, 4,000 அடி உயரத்தில் உள்ள பிரதேசங்களில் இந்த அன்னாசி நன்றாக வளர்ந்து பயன் தரக்கூடியதாக இருக்கிறது. எனவே நிலம் குத்தகைக்குக் கேட்டோ அல்லது பண உதவி கேட்டோ முன்வந்தால் அரசாங்கம் அதை ஊக்குவித்து அதற்கான முயற்சிகளில் ஈடுபடுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இது வரையிலும் நிலத்தை குத்தகைக்குக் கேட்டோ அல்லது கடன் கேட்டோ யாரிடமிருந்தும் எந்தவித விண்ணப்பமும் வரவில்லை. அப்படி வருமானால் அரசாங்கம் அதுபற்றிப் பரிசீலனை செய்யும்.

Thiru B. VENKATASWAMY : May I know from the Hon. Minister the places where climate is suitable for cultivation of this pineapple and where it can come up nicely?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இப்போதிருக்கிற தகவலிலிருந்து கன்னியாகுமரி, நீலகிரி, கூடலூர் தாலுக்கா பகுதிகளில் நல்லமுறையில் அந்த பயிர் அதிகமாக உற்பத்தியாகிறது. சேலம் மாவட்டத்திலுள்ள கொல்லி மலையில் ஏறக்குறைய 400 ஏக்கர் நிலத்தில் இந்தப் பழம் பயிராக்கப்படுகிறது. குறிப்பாக ஹரிஜன நல இலாகாவிடம்தான் அந்த கொல்லி மலையில் இருக்கிற பழத் தோட்டத்தின் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

## தென்னார்க்காடு மாவட்டத்தில் மண்வள ஆய்வுக் கூடங்கள்

* 128 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பார:—

(அ) தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள தாலுக்கா தலைமை இடங்களில் மண்வள ஆய்வு நிலையங்களை அமைக்கும் திட்டம் ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், அவைகள் எப்போது நிறுவப்படும்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) தென் ஆற்காடு மாவட்டத்தின் வட்டத் தலைமையிடங்களில் மண்வளச் சோதனை ஆய்வுக் கூடங்கள் ஏற்படுத்தும் செயற் குறிப்பு எதுவும் இல்லை. எனினும், கடலூரில் மண்வளச் சோதனை ஆய்வுக் கூடம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இது தென் ஆற்காடு திருச்சிராப்பள்ளி மாவட்டங்களின் தேவையை பூர்த்தி செய்கிறது.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : சார், சிதம்பரம் தாலுக்காவில் ஒருசில இடத்தைத் தவிர மற்ற இடங்களில், ஸ்ரீமுஷ்ணம், சேத்தியாத்தோப்பு போன்ற இடங்களில் புஞ்சை நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. ஆதலால், தென்னார்க்காடு மாவட்டத்தில் எல்லாத் தாலுக்காக்களிலும் ஏராளமாக மேடுகளாக, புஞ்சை நிலங்கள் இருக்கின்றன. எனவே, அங்கு மண்வள ஆய்வுக்கூடம் ஏற்படுத்துவது இப்பொழுதிருக்கக்கூடிய உணவுத் தட்டுப்பாட்டின் காரணமாக, அதிகமாக உணவு உற்பத்தி ஏற்படக் காரணமாக இருக்குமல்லவா ? ஆகவே, திரும்பவும் பரிசீலனை செய்து, நடவடிக்கை எடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இங்கு கோயம்புத்தூர், கடலூர், கோவில்பட்டி ஆகிய மூன்று இடங்களில் உள்ளதைத் தவிர மற்ற ஆடுதுறை, மதுரை, காஞ்சிபுரம், குடியாத்தம் இந்த இடங்களில் உள்ள நிலையங்கள் எல்லாம் அவைகள் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளனவோ அந்தந்த மாவட்டத்திலே இருக்கின்ற மண் வளத்தை யெல்லாம் ஆய்வு செய்து வருகிறார்கள். ஆனாலும் இதன் அவசியத்தை அரசாங்கம் உணருகிறது. அதற்காக மேலும் 3 நடமாடும் ஆய்வு நிலையங்கள், ஒன்றை கோயம்புத்தூரிலும், ஒன்றை ஆடுதுறையிலும், ஒன்றை கோவில்பட்டியிலும் ஏற்படுத்தும் திட்டம் ஒன்றை ஆலோசித்து வருகிறது. மேலும் 1969-70-ல் சேலத்தில் இப்படிப்பட்ட மண்வளச் சோதனை ஆய்வுக்கூடம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சிகள் செய்து வருகிறது. இதைத் தவிர, இந்திய-ஜெர்மன் வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களுக்கு மண்வள சோதனை ஆய்வுக்கூடம் நீலகிரியில் அமையக்கூடும். தனியார் இதிலே ஈடுபட்டால் அவர்களை ஆய்விலே ஈடுபடுத்தும் வகையில் கருவிகளைக் கடனாக மற்றவர்களுக்குத் தந்து அதிலே ஈடுபட உதவி செய்ய ஏற்பாடு செய்கிறது. ஒவ்வொரு இடத்திலும் நிலையங்களை வைக்க வேண்டுமென்றால் இலட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்ய வேண்டியிருப்பதால், அவசியத்தை உணர்ந்து, வேண்டு மென்று கருதினால் அதற்கான முயற்சிகளை எடுக்கும்.





Madras City Improvement Programme.

*77. Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether the Madras Corporation has sought, from the President of the World Bank loans for its Madras City Improvement Programme about the 23rd November 1968?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஆம்.

DR. H. V. HANDE: Sir, the Hon. Minister, in his answer, has stated that the Tamil Nadu Government have sought loan from the World Bank. May I know what is the likely amount that we are going to get and how it is going to be spent and whether it is going to be spent in the congested areas of the City or in improving bigger roads or highways? What is the programme at the disposal of the Government?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவரவர்களே, மாநகராட்சி தெரு விளக்கு வசதியை மேம்படுத்துவதற்காகவும், போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காகவும், 1968-ம் ஆண்டு நவம்பர் திங்களில் உலக வங்கியிடம் ரூபாய் 10 கோடி கேட்கப் பட்டது. கேட்கப்பட்ட கடனுக்கு ஒப்பளிப்பு வழங்குவது பற்றி உலக வங்கியிடமிருந்து எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. ஆகவே, கடன் தொகைக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பின்னர்தான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்பொழுது என்னென்ன வேலைகள், அதனை எப்படிச் செய்ய வேண்டுமென்பது பற்றிப் பரிசீலிக்கலாம்.

DR. H. V. HANDE: Sir, when the amount was asked for from the World Bank, the Madras City Corporation or the Tamil Nadu Government must have had some scheme to implement. What was the scheme the Government had in their mind and also whether they have asked this particular loan through the Government of India or they themselves have asked it directly?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : உலக வங்கியினுடைய தலைவர் இங்கே வந்திருந்தபொழுது, மாநகராட்சி மன்றத் தலைவர், அவர்களை நேரில் கண்டு, தெருவிளக்குகளை மேம்படுத்து வதற்காகவும், போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காகவும் ரூபாய் 10 கோடி வேண்டுமென்று கேட்டார்கள். அவர்கள் அது பற்றிப் பரிசிலனை செய்து தகவல் அனுப்புவதாகச் சொன்னார்கள். இதுவரையில் தகவல் ஏதும் வரவில்லை. அப்படி வராததால் என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டுமென்பதுபற்றிய விளக்கம் இல்லை.

திரு. கே. விநாயகம்: உலக பாங்கு தலைவர் இங்கு வந்த பொழுது நம்முடைய மாநகராட்சி மேயர் அவர்கள் நேரடியாக வந்து, எங்களுக்கு இவ்வளவு பணம் வேண்டுமென்று கேட்டார்களா ? அல்லது இவ்வளவு திட்டங்கள் இருக்கிறது,

இவ்வளவு செலவு ஆகிறது. அரசாங்கம் இவ்வளவு தரும், போதாததற்கு நீங்கள் இவ்வளவு தாருங்கள் என்று கேட்டார்களா ? அப்படி ஏதாவது கணக்கு வைத்துக் கேட்டார்களா ? இல்லையென்றால் தோராயமாக 20 லட்சம், 30 லட்சம், 3 கோடி கொடுங்கள் என்று கேட்டார்களா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : உலக வங்கியின் தலைவர் இங்கே வந்தபொழுது, பல்வேறு துறையைச் சார்ந்தவர்களும் அவர்களை அணுகினார்கள். அதுபோல், மாநகராட்சி மன்ற மேயரும் அணுகி, மாநகராட்சியினுடைய பல்வேறு திட்டங்களுக்கும் 10 கோடி ரூபாய் நீங்கள் கொடுத்தால் வசதியாக இருக்கும் என்று கேட்டார்கள். அவர்கள், அந்த உலக வங்கியிலேயிருந்து என்னென்ன திட்டங்கள் என்று கேட்டிருந்தார்களானால், அனுப்பத் தயாராகயிருப்பார்கள். மேற்கொண்டு விவரங்கள் இல்லை.

## கல்லர் ஓடையின் குறுக்கே பாலம்

* 136 வினா.—திரு. ஆர். கருப்பையா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர்-உடையார்பாளையம் சாலையில் கள்ளங்குறிச்சிக்குக் கீழ்புரம் கல்லர் ஓடையில் பாலம் கட்டுவது குறித்து மனு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். கருப்பையா : தலைவரவர்களே, இந்தக் கல்லர் ஓடையில் பாலம் கட்டுவது குறித்து, அந்தப் பகுதி திராவிடக் கழகத் தோழர் உண்ணாவிரதம் இருந்ததன் காரணமாக, அதிகாரிகளால் உடனே ஆவன செய்யப்படும் என்ற நம்பிக்கையின் பேரில் உண்ணாவிரதத்தைக் கைவிட்டார். அதைப்பற்றி அரசாங்கத்திற்குக் குறிப்பு வந்ததா? அப்படியில்லை என்றாலும், அது பின்தங்கிய பகுதியாக இருப்பதால் அங்கிருந்து செல்வதற்கு வேறு வசதியே கிடையாது. எனவே, அதையொட்டி, உடனடியாக இந்த வறட்சி நிவாரணத் திட்டத்திலேயாவது அதைச் சேர்த்து அந்தப் பாலத்தைக் கட்ட சர்க்கார் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : உண்ணாவிரதம் யார் இருந்தார்கள் என்பது குறித்துத் தகவல் ஏதும் வரவில்லை. இப்படிப்பட்ட அவசியமான வேலைகளுக்கு, அதனை முடிப்பதற்காக உண்ணாவிரதம் இருந்துதான் காரியத்தை ஆற்ற வேண்டுமென்ற



அளவிற்கு அரசாங்கம் பின்தங்கியிருக்கவில்லை. ஆனால், எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய எல்லா வசதிகளையும், நிதி நிலைமைகளையும் பொறுத்துத்தான் செய்ய வேண்டியிருக்கிறது. கல்லர் ஓடையைக் கடக்கும் இடமும் வழியும் கள்ளன்குறிச்சி தேவஸ்தானத்தைச் சேர்ந்தது. அரியலூர் உடையார்பாளையம் பாதையில் அதிகமான இடைவெளிகள் செப்பனிட வேண்டியும் குறுக்கே பாலங்கள் கட்ட வேண்டியும் உள்ளன. இப்போது இந்தப் பாலத்தை அமைத்தால்கூட, எல்லாப் பள்ளங்களையும், பாலங்களையும் இந்தப் பாதையில் செப்பனிட்டாலொழிய மேற்படி பாதை உபயோகமாய் இருக்காது. இந்தப் பாலம் கட்டுவதற்கு சுமார் ரூ. 6.5 லட்சம் தேவைப்படும் என்று மதிப்பிடப்படுகிறது. ஆகவே, தற்போது இது சாத்தியமில்லை என்று கருதப்படுகிறது.

திரு. ஆர். கருப்பையா : தலைவரவர்களே, அந்தப் பாலம் கட்டும்படியான இடம் கள்ளங்குறிச்சி தேவஸ்தானத்தில் இருப்பதாகவும் எனவே, கட்ட முடியாத நிலையிருப்பதாகவும் சொன்னார்கள். ஆனால், தேவஸ்தானத்தார் அந்த இடத்தை அரசாங்கத்திற்கு விட்டுக் கொடுப்பதாகவும் சொல்லி விட்டார்கள். எனவே, இனி மேலாவது அரசு அந்தப் பாலத்தை அமைப்பதற்கு வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தேவஸ்தானம் ஒத்துக் கொண்டாலும் அந்தப் பாலம் அமைக்கப்பட்டாலும், அந்தப் பாதையில் வேறுபல பாலங்களையும் செப்பனிட வேண்டியிருக்கும். நிதிநிலை சீராகி வருகிறபொழுது அதுபற்றிக் கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

## வெள்ளிமலைப்பட்டினம் பஞ்சாயத்தை பிரித்தல்

* 137 வினா.—திரு. இரா. மாணிக்கவாசகம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை வட்டம், தொண்டாமுத்தூர் பஞ்சாயத்து யூனியனிலுள்ள வெள்ளிமலைப்பட்டினம் பஞ்சாயத்தைப் பிரிக்க மக்களிடம் இருந்தும், பஞ்சாயத்திலிருந்தும் விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

(உ) அப்படி நடவடிக்கை எடுக்கவில்லையெனில் இனிமேலாவது நடவடிக்கை எடுக்கும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) நரசீபுரம் ஊராட்சியை, நரசீபுரம், வெள்ளிமலைப் பட்டினம் ஆகிய இரண்டு ஊராட்சிகளாகப் பிரிக்கும் செயற் குறிப்பை, நரசீபுரம் ஊராட்சி கேட்டுக் கொண்டதன் மேல், 1970-வரையில் ஒத்திபோட அரசு முடிவுசெய்துள்ளது. இந்த

ஊராட்சியில் நீர் வழங்குத் திட்டத்தை நிறைவேற்றி முடிப்பது ஊராட்சிக்கு இயலும்படிச் செய்வதற்காகவே இவ்வாறு முடிவு செய்யப்பட்டுள்ளது.

(உ) இவ்வினா எழவில்லை.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* கேள்வி, கோவை வட்டம், தொண்டாமுத்தூர் பஞ்சாயத்து யூனியனைப் பற்றியது. எனவே, அதுபற்றிக் கேட்க வேண்டும்.

*திரு. க. இராமமூர்த்தி :* தலைவரவர்களே, இந்த வெள்ளிமலைப் பட்டினம் பஞ்சாயத்தைப்போல, தமிழகத்தின் பல பஞ்சாயத்துக்கள், அதிலே இருக்கின்ற உப கிராமங்கள் பிரிந்து போக வேண்டுமென்று விரும்பினாலும்கூட, இன்றைக்கிருக்கும் அமைப்பின்படி பஞ்சாயத்து தீர்மானம் போட வேண்டியிருக்கிறது, பஞ்சாயத்துப் பெருமன்றம் தீர்மானம் போட வேண்டியிருக்கிறது, அப்படிப் பட்ட நேரத்திலே பல்வேறு காரணங்களுக்காகப் பிரிந்துபோகும் நிலை அனுமதிக்கப்படாத நிலை இருக்கிறது. எனவே, உரிய முறையிலே தகுந்த காரணங்கள் இருந்தால் பிரிந்து செல்ல வழி வகை செய்யப்படுமா ? அதுபோல் திண்டிவனம் பகுதியில், பெலாகுப்பம் கிராமத்தில் முட்டியூர் என்ற இடத்தில் அப்படிப் பட்ட நிலை இருப்பது தெரியுமா?

*மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :* கூடுமானவரையில் பிரிவினையைத் தவிர்க்க வேண்டுமென்பது நம்முடைய நோக்கமாகும். அவர் கேட்ட அந்த ஊரைப்பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

THIRU K. VINAYAKAM : Sir, whereas there are many genuine requests coming from the local people regarding the bifurcation of panchayats and whereas even the previous Government did not take a decision over it and whereas this Government are in a lurking mood, may I know whether the Government have taken any decision to bifurcate them or continue the status quo? Let the Hon. Minister make that very clear in the interests of the people.

*மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :* தலைவரவர்களே, ஊராட்சி மன்றங்களைப் பிரிப்பது என்பது, நீண்ட காலமாகக் கேட்கப் பட்டும், செயல்படாமல் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட நிலை இல்லை. கேட்பது அத்தனையையுமே பிரித்துக் கொடுத்துவிடாமல், அவசியமானவற்றை மட்டும் பிரிக்க வேண்டுமென்ற கருத்தை மேற்கொண்டுள்ளது. ஆகவே, அந்தந்த ஊராட்சி மன்றத்தின் வேண்டுகோள்களை அங்கேயிருக்கக்கூடிய ஊராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியம், மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில் ஆகியவைகளினுடைய ஆலோசனையின் பேரில், மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின்படி நம்முடைய இயக்குநர் அவர்கள் முடிவு எடுக்கிறார்கள். மேற்கொண்டு விளக்கம் தேவையென்றால், அரசாங்கத்திற்கு வருகின்றது. கூடுமானவரையில்,



ஊராட்சி மன்றங்களைப் பிரிக்கிறோம் என்றால், அது தனியாகச் செயல்படும் அளவுக்கு வருமானம் முக்கியமாக இருக்க வேண்டும். பெயரளவில், எண்ணிக்கையை அதிகப்படுத்துவதால் மட்டும் ஜனநாயகத்திலே வெற்றியடைந்துவிட்டதாகக் கருத முடியாது. வயபில் யூனிட்டாக, அதாவது இயங்குகிற தன்மைக்கு ஏற்றதாக இருக்கிறதா என்று பரிசீலித்து, இயங்குகிற தன்மைக்கு ஏற்றதாக இருக்குமானால், அவ்வப்பொழுது நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

## திருவள்ளுவர் படங்கள்

* 138 வினா.—*திரு. கரு. சீமைச்சாமி :* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளுவர் படத்தை ஒரு குறிப்பிட்ட வியாபாரிகளிடம் தான் வாங்க வேண்டும் என்று பஞ்சாயத்து யூனியன்களுக்கு அரசு உத்திரவிட்டு இருக்கிறதா ?

(இ) ஆம் என்றால், அதன் விவரம் என்ன?

*மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :* (அ) ஆம்.

(இ) திரு. வேணுகோபால் சர்மா வரைந்துள்ள திருவள்ளுவர் படத்தை ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், இந்த உள்ளாட்சி அமைப்புகள் நடத்தும் பள்ளிகள், ஏனைய நிறுவனங்கள் வாங்கிக் கொள்ளலாம் என்று அரசாங்கம் பரிந்துரைத்துள்ளது.

*திரு. கரு. சீமைச்சாமி :* சார், இந்த திருவள்ளுவர் படத்தை இனிமேல் அரசாங்கமே அச்சடித்து வெளியிடுவதற்கு ஏதாவது உத்தேசம் உண்டா ?

*மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :* அப்படிப்பட்ட பிரச்சினையும் இங்கே வந்தது. ஆனால் இவற்றைப் பரிசீலனை செய்து இந்த வேணுகோபால் சர்மா தீட்டிய படங்களே போதும் என்று அரசு ஆணை பிறப்பித்தது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Kural is an immortal work having universal application. On that basis the author of Kural is respected and worshipped. Similarly for Telugus, there is Poet Vemana. He is comparable to Tiruvalluvar, author of Kural. He is revered and respected by Telugus. Will the Hon. Minister be pleased to tell us whether he would give permission to have portrait of Poet Vemana. in schools, wherein there is Telugu majority?

THE HON. THIRU M. MUTHUSWAMY : I have no information and I want notice.

[1969 ஆகஸ்ட் 26

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி(■) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

## (2) ஒத்திவைப்புத் தீர்மானம்

## திருச்சி மாவட்டம் காட்டூர் கோத்தாரி சர்க்கரை ஆலையில் கரும்பு அரைக்கப்படாமை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் ஆர். கருப்பையா அவர்கள் திருச்சி மாவட்டத்திலுள்ள காட்டூர் கோத்தாரி சர்க்கரை ஆலையில் 11—8—1969 நாள் அன்று ஆலை பழுதுபட்டதால் 15,000 டன்களுக்கு மேல் உள்ள கரும்பு அரைக்கப்படாமல் இருக்கிற நிலையை விவாதிக்க வேண்டுமென்பதற்காக இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டுமென்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது தனியாருடைய நிறுவனம். மேலும், அவர் 41-வது விதியின் கீழ் கவன ஈர்ப்பு தீர்மானம் கொடுத்திருக்கிறார். ஆகவே, இதற்கு அனுமதி தரவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (3) அறிவிப்புகள்

### (அ) அவையுரிமைக் குழுவிற்குத் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஓர் அறிவிப்பு 1969-70-ம் ஆண்டுக்கான அவையுரிமைக் குழுவிற்கு (Privileges Committee) மேற்கொண்டும் இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு கீழ்க்கண்ட இரண்டு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டார்கள்:—

1. திரு. எம். சுரேந்திரன்.
2. திரு. நா. கிருட்டிணன்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது இரண்டிற்கு ஒத்திருப்பதால், இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

### (ஆ) அவையினர் குழுவிற்குத் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மேலும் ஓர் அறிவிப்பு. 1969-70-ம் ஆண்டுக்கான அவையினர் குழுவிற்கு (House Committee) மேற்கொண்டும் இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு கீழ்க்கண்ட இரண்டு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டார்கள்:—

1. திரு. சோ. அழகர்சாமி,
2. திரு. டி. கங்கப்பன்.



1969 ஆகஸ்ட் 26] [பேரவைத் தலைவர்]

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது இரண்டிற்கு ஒத்திருப்பதால் இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

அடுத்து, அவை முன்னவர் அவர்கள் ஒரு தீர்மானத்தை இப்பொழுது அவையில் கொண்டு வருவார்கள்.

## (4) அரசினர் தீர்மானம்

### விதி 41 (3)-ஐ தளர்த்தல்

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, " தமிழ் நாடு சட்டப் பேரவையின் 41 (3)-வது விதியின்கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டிற்கு மேற்பட்ட விஷயங்களைக் கொண்டு வரக் கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும் " என்ற தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு திரு. மார்டின் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டுவருவார்கள்.

## 5. கவன ஈர்ப்பு

### (அ) இராமநாதபுரம் மாவட்டம், ஏழாயிரம் பண்ணை கிராமத்திலும், சுற்றுப்புற கிராமங்களிலும் சட்ட, அமைதி காக்கப்பட வேண்டியதன் அவசியம்.

**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ்

" தற்சமயம் இராமநாதபுரம் மாவட்டத்தில் சாத்தூர் பகுதியில் ஏழாயிரம் பண்ணை கிராமத்திலும், அதைச் சுற்றிலுமுள்ள கிராமங்களிலும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்து நடந்து கிராம மக்கள் மத்தியில் அமைதியின்மையும், பீதியும் ஏற்பட்டுள்ள நிலைமையில் சட்டமும், அமைதியும் அப் பகுதி கிராமங்களில் நிலைநிறுத்தப்படவேண்டிய நிலைமை பற்றிய "

அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, ஏழாயிரம் பண்ணை மாரியம்மன் கோயிலின் உடைமை, ஆட்சியுரிமை குறித்து 1920-ஆம் ஆண்டிலிருந்தே நாடார்குலபெருமக்களுக்கும், தேவர்குலபெருமக்களுக்கு மிடையே மனக்கசப்பு இருந்து வந்திருக்கிறது. நாடார்கள், நாட்டியல் நீதிமன்றத் (Civil Court) தீர்ப்பின் மூலம் இந்தக் கோயிலின் ஆட்சியுரிமையைப் பெற்றனர். இக்கோயிலின் ஆண்டுப் பங்குனித் திருவிழாவின்

[திரு.மு. கருணாநிதி] [1969 ஆகஸ்ட் 26

போது இரண்டு வால் புலிவேடம்தாங்கி ஆடிக் காண்பிக்கப்பட்டு வருவது வழக்கம். இத்தகைய செயல் இருவகுப்பாரிடையே தவறான எண்ணத்தை ஏற்படுத்தின. இவ்விரு வகுப்பாரிடையே ஏற்பட்டுள்ள வேற்றுமைகளை அகற்றுவதற்காக, 1950-ல் அமைதிக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அது முதற்கொண்டு புலிவேடம் ஆடிக்காண்பிக்கும் வழக்கம் கைவிடப்பட்டது. இவ்விரு இனத்தாரும் 1968-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் வரை இணக்கமாகவே வாழ்ந்து வந்தனர்.

1968 டிசம்பரில் ஏழாயிரம் பண்ணை கூட்டுறவுச் சங்க நாடார் தலைவருக்குப் பதிலாகத் தேவர் ஒருவர் நியமிக்கப்பட்டார். தேவர் தலைவரிடம் பொறுப்புகளை ஒப்படைக்க நாடார்கள் மறுத்தனர். அதன் விளைவாகக் கூட்டுறவுச் சங்கம் இரண்டாகப் பிரிக்கப் பட்டது. நாடார்கள் தமக்கெனத் தனியே ஒரு சங்கத்தை அமைத்துக்கொண்டனர். அதுமுதல் கொண்டு தேவர்களுக்கும், நாடார்களுக்குமிடையே பகைமை வளர்ந்தது. இருவகுப்பாரிடையே நிலவிவரும் உள்ளக் கசப்பைத் தூண்டிவிடும் வகையில் கீழ்க்காணும் சில நிகழ்ச்சிகள் நேர்ந்தன.

( i ) முன்னாள் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் மறைவு குறித்து வருத்தம் தெரிவிக்க ஏழாயிரம் பண்ணையிலுள்ள கடைகள் அனைத்தும் 3—2—1969 அன்று மூடப்பட்டபோது திரு. கனகராஜ் நாடார் என்பவர் காப்பி வழங்கினார். இதை திரு மாரியப்பதேவர் என்பவர் கண்டித்தார்.

( ii ) மாரியம்மன் கோயிலை ஒட்டிய மேற்குப்புறச் சுவற்றிற்கு அண்மையில் பொதுச் சாலைப் புறம்போக்கில் தேவர்கள் சிலர் மூன்று பெட்டிக் கடைகள் அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து அவற்றை அகற்றுமாறு வருவாய்த் துறை அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டனர். இதனாலும் கசப்பு வளர்ந்தது.

( iii1969 மே திங்களில், தேவர்களின் தாக்குதல்கள் முதலிய நிகழ்வுகளுக்கு மாறாக நாடார்கள் புகார் செய்தனர். இந் நிகழ்ச்சிகள் குறித்து தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. நாடார்கள் செய்து கொண்ட முறையீட்டின் பேரில், சிவகாசி வருவாய்க் கோட்ட அதிகாரி காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர், காவல் துறைக் கண்காணிப்பாளர் ஆகியோர் அக் கிராமத்திற்கு நேரிலே சென்று ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட அமைதிக் குழு ஒன்றை அமைத்தனர். இந்த அமைதிக்குழு 1969 மே திங்களிலிருந்து செவ்வனே செயல்பட்டது. புகார் அல்லது மனு எதுவும் வரவில்லை.

( iv ) 29—7—1969 அன்று இரவு "கேப்பை தாளடியில்" தீ மூண்டது. இத் தீ உடனே அணைக்கப்பட்டது. இத் தீவிபத்தினால் மிகவும் சொற்பமான சேதம் ஏற்பட்டது. கேப்பைத் தாளடியின் உரிமையாளர் திரு. மாரியப்ப நாடார் காவல் நிலையத்தில்



1969 ஆகஸ்ட் 26] [திரு. மு. கருணாநிதி]

கொடுத்த புகாரில் எவர் மீதும் தாம் சந்தேகப்படுவதாக அதில் தெரிவிக்கவில்லை. தேவர்கள் தாங்கள் வசிக்கும் தெருக்களில் கல்வீச்சு நடந்ததாகவும் தேவர்களுக்குத் தொல்லைகொடுப்பதற்காகவே நாடார்கள் தீ மூட்டினர் என்றும் தேவர்கள் வாய்மொழிப் புகார் செய்தனர்.

( v ) 30—7—1969 அன்று, நாடார் வகுப்பில் முக்கிய உறுப்பினராகிய அந்தோனி என்பவர் ராமமூர்த்தி தேவர் என்பவரால் அரிவாளால் வெட்டப்பட்டார். அந்தோனிக்கு வலது கையில் மேற்புறத்தில் காயங்கள் ஏற்பட்டன. இதைத் தொடர்ந்து வழக்கு ஒன்று பதிவுசெய்யப்பட்டு குற்றவாளி கைது செய்யப் பட்டு அவர் மீது குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சி வகுப்புக் கலவரமாயில்லாத போதிலும், அதற்கு வகுப்புச்சாயம் பூசப்பட்டது. இவ்விரு இனத்தாரிடையே உள்ள பகைமை மேலும் வளர்ந்ததால் 50 தேவர்கள் மீதும், 50 நாடார்கள் மீதும் குற்றவியல் நடை முறைச் சட்டக் கோவையின் 107-வது பிரிவில் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டது. கலவரப் பகுதியில் காவல் வைக்கப்பட்டது. அமைதிக்கு ஊறுவிளைவித்தால் தண்டிக்கப்படுவர் என்று இதில் தொடர்புடைய அனைவரும் கடுமையாக எச்சரிக்கப்பட்டனர்.

நாடார், தேவர் ஆகிய இரண்டு வகுப்புப் பிரதிநிதிகளையும் கொண்ட கூட்டம் ஒன்றை 9—8—1969 அன்று சாத்தூரில் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் கூட்டினார். கூட்டத்தில் கலந்து உரையாடிய பின்னர் இரு தரப்பினரும் அமைதியைப் பேணுவதாக ஒப்புக் கொண்டனர். நாடார் குலபெருமக்களும் தங்கள் கடைகளைத் திறக்கவும் தேவர் பெருமக்கள் தொழிலாளர்களுடன் பயிரிடத் தொடங்கவும் ஒப்புக்கொண்டனர். மேலும், நாடார்கள் தங்களிடம் குத்தகைக்காரர்களாகப் பணிபுரியும் தேவர்களை நீக்குவதில்லையென்றும் ஒப்புக்கொண்டனர். காவல் பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தொடர்ந்து வைத்து வருமாறு சிவகாசி, காவல் துறைத் துணைக்கண்காணிப்பாளருக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது. நிலைமை இப்பொழுது கட்டுக்கடங்கியுள்ளது. அரசு நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது.

* THIRU T. MARTIN : Even day before yesterday there was stone throwing and the market was closed and there was no peace there. The villagers are not able to go to the Police station to make complaint because the Police station is in a lonely place. Apprehending the danger for the people residing there, may I request the Hon. Chief Minister to state in the circumstances that effective steps will be taken to shift the Police station to a public place so that it will be possible for persons to approach the Police station without any danger?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: 24-ம் தேதி அன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, கல் எறி சம்பவம் ஒன்று நடந்திருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. அதிலே இரண்டு காவலர்களுக்குக் காயம் ஏற்பட்டிருப்பதாகவும் தகவல் வந்திருக்கிறது. ஆயுதம் தாங்கிய போலீசார் இரண்டு செக்ஷன் அனுப்பப்பட்டார்கள். அதற்குப் பிறகு 3 செக்ஷன் இப்பொழுது அங்கே அனுப்பப்பட்டு காவல் புரிந்து வருகிறார்கள். போலீஸ் ஸ்டேஷனை மாற்றுவது சம்பந்தமாகவும் அங்கிருந்த சப் இன்ஸ்பெக்டரைக் கூட—அவர் ஒரு தேவர் குலத்தைச் சேர்ந்தவர்—மாற்றவேண்டுமென்று மாண்புமிகு மார்டின் அவர்கள் தலைமைச் செயலாளரிடத்திலே ஒரு புகார் செய்துள்ளார்கள். அது பற்றியும் கவனிக்கப்பட்டது. ஆனால், அவர் தேவரும் அல்ல, நாடாரும் அல்ல, வேறு வகுப்பைச் சேர்ந்தவர் என்ற தகவல் வந்துள்ளது. அது உண்மை என்றும் தெரியவில்லை, அதை ஊர்ஜிதப்படுத்தவும் இல்லை. எந்தவிதமான அசம்பாவிதமும் ஏற்படாதவாறு கண்காணிப்பாக இருக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களையும், ஐ.ஜி. ஆப் போலீஸ் அவர்களையும் கேட்டு இந்த அரசு ஆணை பிறப்பிக்கும் என்று சொல்வதோடு திரு. மூக்கையா தேவர் அவர்கள் குழுக்கள் அமைத்து அமைதிப்படுத்தி விட்டு வந்திருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. ஆக, அமைதியான சூழ்நிலையை இரு வகுப்பாரும் ஏற்படுத்தவேண்டுமென்பதுதான் இந்த அரசினுடைய வேண்டுகோள் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU T. MARTIN: Sir, the Hon. the Chief Minister has referred to my representation to the Chief Secretary. I went and made representations before the Chief Secretary and requested him to take steps to keep peace and order in that village. I never made a request about the Sub-Inspector but made an oral request to the Chief Secretary regarding the shifting of the Police station to a public place so that the aggrieved parties could go to the Police station whenever there is any apprehension of any danger in reporting the offence.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: இப்பொழுதே அந்தக் காவல் நிலையம் பேருந்து நிலையத்திற்கு அருகாமையில் இருப்பதாகத்தான் சொல்லப்படுகிறது. ஆனால், அவர்கள் சொல்கிற அந்தக் குறைபாடு உள்ளதாக இருக்குமானால், அதை நிவர்த்திப்பதற்கு அரசு ஆவன செய்யும்.

### (ஆ) மதுரை மாவட்டத்தில் தண்ணீர் பற்றுக்குறையும் காமாலை நோயும்

DR. H. V. HANDE: Sir, I wish to call the attention of the Hon. Minister for Education to a matter of urgent public importance, namely, the deteriorating water-supply position in Madurai resulting in widespread prevalence of jaundice and untold hardship to the residents of the City.



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்**: தலைவர் அவர்களே, வைகை ஆற்றின் நீர்வடிப்பு வேலைமுறைகளிலிருந்து மதுரை நகராட்சிக்குத் தேவைப்படும் நீர் பெறப்படுகிறது. ஆற்றுப் படுகை "நிறை ஓதப்பரப்பாக இருக்கும்போதும் ஆற்றில்" குறைந்து ஓடும்போதும் நகராட்சிக்கு நாள்தோறும் சுமார் 60 லட்சம் காலன் தண்ணீர் கிட்டுகிறது, நீரோட்டம் இல்லாதவிடத்தும் அல்லது ஆற்றுப் படுகை "நிறை ஓதப்பரப்பாக இல்லாதவிடத்தும் நாளொன்றுக்குக் கிட்டும் தண்ணீரின் அளவு 25 லட்சம் காலனுக்குக் குறைந்துவிடும். (பொதுவாக பிப்ரவரிக்கும் ஜூனுக்கும் இடைப்பட்ட) இந்தக் கால அளவில் இயல்பான அளவுக்குத் தண்ணீர் கிட்டுவதற்கு ஆற்றுப் பரப்பு ஓதம் நிறைந்திருக்கச்செய்யும் வகையில் 15 அல்லது 20 நாட்களுக்கு ஒருமுறை வைகை நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் விடப்படுகிறது. இவ்வாண்டில் மிகவும் பாதகமான பருவநிலை இருப்பதின் காரணமாக, வைகை அணையில் உள்ள தண்ணீர் ஒரு முறைகூட பாசனம் செய்வதற்கும் போதாத நிலையில் உள்ளது. ஆகவே, 1969 ஏப்ரலில் வைகை நீர்வடிப்பு வேலைமுறையிலிருந்து கிட்டும் தண்ணீரின் அளவு நாளொன்றுக்கு சுமார் 45 லட்சம் காலன். இந்த அளவு 1969 ஜூனில் நாளொன்றுக்கு 20 லட்சமாகக் குறைந்து விட்டது.

மதுரைக்குத் தண்ணீர் கூடுதலாக வழங்குவதற்காக, வைகை ஆற்றங்கரையில் பத்து ஆழ்துளைக்கிணறுகள் வெட்டி இந்தக் கிணறுகளிலிருந்து தண்ணீர் பெறவும் தற்போதுள்ள நீர்ப் பெருங்குழாய்கள் மூலமாக மதுரைக்குத் தண்ணீர் வழங்கவும் முடிவுசெய்யப்பட்டது. இவ்வேலைத் திட்டத்திற்கு ரூ. 9.40 லட்சம் செலவாகுமென்று மதிப்பிடப்படுகிறது. ஏற்கெனவே துளைக்கிணறு ஒன்று வெட்டப்பட்டு வேலைதொடங்கியுள்ளது. மேலும் ஐந்து துளைக் கிணறுகள் வெட்டப்பட்டு விரைவிலேயே பயனளிக்கக்கூடும். எஞ்சிய கிணற்று வேலைகள் யாவும் முடிக்கப்பட்டு, 1969 செப்டம்பர் முதல் வாரத்திற்குள் பயன்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சேகரிப்புக் கிணறு திட்டம் மூலமாக வைகை ஆற்று அடிமட்ட நீரைப் பெறும் செயற்குறிப்பு ஒன்றும் ஆலோசனையில் உள்ளது. சேகரிப்புக் கிணறு திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு 50 லட்சம் காலன் நீர் பெறக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வேலைத் திட்டத்திற்கான செலவு மதிப்பீடு ரூ. 17 லட்சம் ஆகும்.

1969 ஜனவரியிலிருந்து ஜூன் வரையுள்ள கால அளவில், 61 பேர்களுக்கு மஞ்சள் காமாலை நோய் கண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நகரத்தில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டபோது ஜனவரி முதல் மார்ச்சு வரையில் (46) காமாலை நோய் கண்டவர்களின் எண்ணிக்கை அடுத்த மூன்று மாதங்களில் இருந்ததைக் காட்டிலும் அதிகமாகவே இருந்தது. க்ளோரின் மருந்து கலந்தும் சாதாரண முறையால் இந்நோய் உண்டாக்கும் நுண்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1969 ஆகஸ்ட் 26

யிர்கள் கொல்லப்படுவதில்லே என்றும் காரணமாக, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகப் பொதுமக்கள் நீரைக்காய்ச்சிக் குடிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். இந்நகரில் பொதுவாக துப்புரவு நிலே சரிவர பேணப்பட்டு வருகிறது.

DR. H. V. HANDE: Sir, out of the jaundice cases, how many persons actually died and whether the Government have investigated as to the source of this jaundice and whether it is due to water pollution or some other reason?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலேவர் அவர்களே, 46 பேர்கள் காமாலே நோயினுல் இந்த குறிப்பிட்ட காலத்திற்குள் பாதிக்கப்பட்டார்கள். அவர்களில் எவ்வளவு பேர்கள் இறந்தார்கள் என்பதைப் பற்றி இப்பொழுது குறிப்புகள் இல்லே. ஆனுல், அங்கே இருக்கிற தண்ணீரின் மூலம்தான் இந்த நோய் ஏற்படுவதாலும், குளோரின் கலந்தும் பயன்படாத காரணத்தினுலும், அதற்குப் பிறகு எச்சரிக்கையாகத் தண்ணீரைக் காய்ச்சிக் குடிக்க வேண்டுமென்று அப்படிப்பட்ட முன்னெச்சரிக்கை செய்யப்பட்டு வருகிறது. மேற்கொண்டு இப்பொழுது பெரும்பாலும் இந்த நோய் தணிந்து, நல்ல சூழ்நிலே இருப்பதாக அறியப்படுகிறது.

DR. H. V. HANDE: The Hon. Minister has made a statement that nearly Rs. 9 lakhs would be required for digging these wells in the bed of the Vaigai River and one well has been completed. May I know when the remaining 8 wells will be finished and whether the work has started and when the Municipality is likely to commission these wells and take water from them?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலேவர் அவர்களே, ரூ. 9,40,000 செலவழிக்கப்படும். ஒரு துளேக் கிணறு வெட்டப்பட்டிருக்கிறது. மற்ற ஐந்தும் செப்டம்பர் முதல் வாரத்திற்குள் முடிந்து தண்ணீர் வழங்கவேண்டும் என்ற முறையில் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

## (இ) புதுக்கோட்டை காவிரி நூற்பு-நெசவு ஆலே கதவடைப்பு

* திரு. சி. கோவிந்தராசன்: தலேவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"சென்ற ஓராண்டு காலமாக புதுக்கோட்டையிலுள்ள காவிரிப் பஞ்சாலேத் தொழிற்சாலே மூடப்பட்டுக் கிடக்கிறது. இதனுல் தொழிலாளர்களும், தொழிலாளர் குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். சமீப காலமாக அந்தத் தொழிற்சாலேயின் நிர்வாகிகள் அதைத் திறப்பதென்றுல் ஒவ்வொரு தொழிலாளியும் தங்கள் மாதச் சம்பளத்தில் ரூ. 50-ஐக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று நிர்ப்பந்தித்து வருகிருர்கள். இந்தப் பிரச்சினேயில்



1969 ஆகஸ்ட் 26] [திரு. சி. கோவிந்தராசன்]

தலேயிட்டு சமரசம் செய்ய வந்த தொழிலாளர் ஆணேயாளர் சம்பள வெட்டு கூடாதென்று முதலாளிக்கு ஆலோசனே கூறுவதற்குப் பதிலாக தொழிலாளர்கள் 50 ரூபாய்க்குப் பதிலாக 40 ரூபாய் சம்பளவெட்டை ஒத்துக் கொள்ளலாமென்று 6—8—1969 அன்று ஆலோசனே நல்கியிருக்கிருர். இது மாநிலம் முழுவதிலுமுள்ள பஞ்சாலேகளில் முதலாளிகள் சம்பளவெட்டைக் கொண்டு வருவதற்கு வழிகோலியாக ஆகிவிடுமாதலால் பஞ்சாலேத் தொழிலாளர் அனேவரும் பரபரப்படைந்துள்ளனர்."

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: தலேவர் அவர்களே, புதுக்கோட்டை காவிரி நூற்பு-நெசவு ஆலே நிர்வாகத்தினர் கதவடைப்பு செய்வதாக அறிக்கை யிட்டதைத் தொடர்ந்து, 2—8—1969 முதல் இந்த ஆலே அடைக்கப்பட்டது. முறையின் மரபுப்படி அமைந்த நடுவர் தீர்ப்பின்படி சென்னே, தொழிலாளர் துறை சிறப்புத் துணே ஆணேயாளர் முடிவெடுத்ததற்கிணங்க, முடிவுசெய்யப்பட்ட புதிய வேலேச் சுமைகளே ஏற்றுச் செயல்படுத்த தொழிலாளர் மறுத்ததினுல் இந்தக் கதவடைப்பு ஏற்பட்டது. இதில் சுமார் 1,100 தொழிலாளர் பணியாற்றி வருகின்றனர்.

கதவடைப்பு செய்வதற்கு முன்பே இந்த ஆலே பல இன்னல்களுக்கு உள்ளாயிற்று. தமிழ்நாடு அரசின் உத்தரவாதத்தின் மேல் வங்கி கொடுத்த ரூ. 18.7 லட்சம் முன்பணத் தொகையைப் பெற்று கோயம்புத்தூர் லட்சுமி ஆலே கம்பெனி நிர்வாகத்தினரால் இந்த ஆலே நடத்தப்பட்டு வந்தது. இந்த நிதி உதவி பெற்றிருந்த போதிலும் போதிய நிதியின்மை காரணமாக இந்த ஆலே மீண்டும் வேலே தொடங்குவதற்கு இயலவில்லே. இந்த ஆலேயை மீண்டும் செயல்படுத்துவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகள் அனேத்தும் பலனளிக்காது போனதால், 1951-ம் ஆண்டு தொழிற் சாலேகள் (வளர்ச்சியும்-முறைப்படுத்தலும்) சட்டத்தின்படி இந்த ஆலேயை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென 1969 ஜூலேயில் இந்திய அரசை இம்மாநில அரசு கேட்டுக்கொண்டது. இதற்கிடையே இந்த ஆலே தொழிலாளர் சார்பாக காவிரி ஆலே தேசியத் தொழிலாளர் சங்கம், திருச்சி மாவட்ட திராவிட பஞ்சாலேத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம் ஆகிய இவ்விரண்டு தொழிலாளர்ச் சங்கங்களும் தொழிலாளர்த்துறை ஆணேயாளருக்கு பின்வருமாறு முறையீடு செய்து கொண்டன.

ஸ்ரீ மீனுட்சி ஆலேயைச் சேர்ந்த திரு. தியாகராச செட்டியாரின் துணேயைக் கொண்டு மீண்டும் இந்த ஆலேயைத் துவக்கமுடியும் என்றும், அரசு கொடுக்கக்கூடிய எத்தகைய உத்தரவாதத்தின் பேரிலும் வங்கியிடமிருந்து அவர் வேண்டிய தொகை பெறக்கூடுமென்றும், இதற்கு ஆவன செய்ய இத்துறை உதவிபுரிய வேண்டுமென முறையிட்டுக்கொண்டன.

இதுபற்றி மேற்சொன்ன திரு. தியாகராச செட்டியாருக்கு எழுதிக்கேட்டபோது தாம் ஆலேயை ஏற்று நடத்த இயலும் என்று அவர் உறுதி கூறினுர். ஆனுல் அவர் இந்த ஆலே சிக்கனமாகச் செயல்பட வேண்டுமெனின் தொழிலாளர்கள் தங்கள்

அகவிலைப்படியில் 50 சதவீதத்தை குறைத்துக்கொள்ள ஒப்புக் கொள்ளவேண்டும் என்றார். எனினும் ஆண்டு இறுதியில் கிடைக்கும் ஆதாயங்களைக்கொண்டு இழப்பினை ஈடு கட்டுவது இயலுமாயின், அவ்வாறு குறைக்கப்பட்ட தொகையை தாம் கொடுப்பதாகவும் ஒப்புக்கொண்டனர். அவ்வாறு அகவிலைப்படித் தொகை கொடுத்தலை ஒத்திப்போடுதலை முன்னர் குறிப்பிட்ட இரு சங்கங்களும் கொள்கையளவில் ஒப்புக்கொண்டிருந்தபோதிலும், இந்த வெட்டு அளவு மிகவும் அதிகம் என்றும் அதைக் குறைக்க வேண்டும் என்றும் கருதினர். திருச்சி மாவட்ட பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் தொகை கொடுத்தலை ஒத்திப்போடுவதை எதிர்த்தது. மேலும், திருச்சி மாவட்ட ஆலைத் தொழிலாளர்ச் சங்கம், ஊதியங்களில் நிலையான வெட்டு ஏற்படாவண்ணம் சில ஏற்பாடுகள் வகுக்கப்படவேண்டும் என்று ஆலோசனை கூறியது. மேற்சொன்ன ஊதியக்குறைப்பு அல்லது ஒத்திப்போடுதல் ஏற்பாட்டைத் தவிர்க்க முடியுமா என்பதற்கு வழிவகைகளை ஆராயுமாறு திரு. தியாகராச செட்டியார் கேட்டுக் கொள்ளப் பட்டார். ஊதியத்தில் ஒத்திப்போடப்பட்ட தொகை சம அளவுப் பங்குகளாக மாற்றப்படலாம் என்ற மாற்று யோசனையை அவர் தெரிவித்தார். இந்தக் கருத்துரையை தொழிலாளர் சங்கங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளவில்லை. குறைக்கப்படக் கருதிய தொகையை திங்கள் ஒன்றுக்கு தொழிலாளர் ஒருவருக்கு ரூ. 40 என்று குறைப்பதாக திரு. தியாகராச செட்டியார் இறுதியில் ஒப்புக்கொண்டார். இந்தக் கருத்துரை மேலே 2-வது பாராவில் குறிப்பிட்டுள்ள இரு சங்கங்களும் ஒப்புக்கொண்டன. இந்த நேர்வில்மட்டும் இதுதான் சாத்தியமான நடவடிக்கையாக இருந்தாலும், ஊதியத்தை குறைக்கும் வகையில் செய்யப்படும் எந்தவித உடன்பாட்டுக்கும் தொழிலாளர் நலத் துறை துணையாக நிற்காது. ஏனெனில் இந்த ஏற்பாடு வசதியற்ற ஒரு முன்னிகழ் வாகவே ( precedent ) கருதப்படக்கூடும். இத்தகைய சூழ்நிலைகளில் மேலும் இந்த இரு சங்கங்களும் திரு. தியாகராசர் செட்டியாருடன் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்தி 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 18(1) பிரிவின்படி ஓர் உடன்பாடு செய்துகொண்டனர்.

ஊதியம் குறைத்துக்கொடுப்பது அல்லது ஊதியம் கொடுப்பதில் ஒரு பகுதியை ஒத்திப்போடுவது ஆகியவற்றுக்கு வகை செய்யும் இத்தகைய உடன்படிக்கைகளுக்கு தொழிலாளர் துறை ஆதரவு தருவது விரும்பத்தக்கது அல்ல. எனினும் சுமார் ஓராண்டுக்கு மேலாக தொழிலாளர் வேலையின்றி இருந்ததாலும், தொழிலாளர் கள் வருங்கால வைப்புநிதியில் அவரவர் பெயரில் சேர்ந்து வந்த தொகைகள் அனைத்தையும் செலவு செய்து விட்டதாலும் தொழிலாளர்கள் மீண்டும் வேலையேற்றுக்கொண்டதே பாராட்டுக் குரியது என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இந்த நேர்வில் நடப்பாண்டில் கிடைக்கும் ஆதாயங்களில் ஒத்தி





வைக்கப்பட்ட ஊதியத் தொகையை முதல் செலவாக கொடுப்பது என்று நிர்வாகம் ஒத்துக்கொண்டது என்பதை இங்கு குறிப்பிடலாம். ஊதியத்தில் ஒரு பகுதியை பங்கு மூலதனமாக வாயினும் (எடுத்துக்காட்டு—கணபதி ஆலை, திருநெல்வேலி) அல்லது ஊதியம் கொடுத்தலை ஒத்திப் போடுவதற்காயினும் (எடுத்துக்காட்டு—திருமூர்த்தி ஆலை, உடுமலைப்பேட்டை), அல்லது ஊதியத்தில் ஒரு பகுதியை நிலையான வைப்பீடுகளாக மாற்றுவதற் காயினும் (எடுத்துக்காட்டு—ஜோதி ஆலை) வகை செய்கின்ற இத்தகைய உடன்படிக்கைகள் மற்ற இடத்தில் உள்ள பஞ்சாலைத் தொழிலாளர்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்டன. மொத்தத்தில், நாளை 27—8—1969 அன்று, ஒப்பந்தப்படி, இந்த ஆலை திறக்கப்பட இருப்பதால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், தொழில் சங்கங்களும் துணை நிற்கவேண்டும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

* **திரு. சி. கோவிந்தராசன் :** தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலை 1968 ஆகஸ்ட் 2-ம் தேதியிலிருந்து மூடப் பட்டிருக்கிறது. இப்படி மூடியிருப்பது நியாயமற்றது என்று லேபர் கமிஷனர் தந்திகளும், கடிதங்களும் அனுப்பியும், அவர்கள் தொடர்ந்து கதவடைப்புச் செய்திருக்கிறார்கள். இதை இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்டின்படி முதலாளிக்கு அவகாசம் கொடுக்காமல், ரெபரன்ஸ்க்கு விட்டிருக்கவேண்டும். அப்படிச் செய்யாததால், தொழிலாளிகளுடைய பசியையும் பட்டினியையும் பயன்படுத்திக்கொண்டு, இப்படிப்பட்ட நிர்ப்பந்தத்தைக் கொடுக்கும் வழி செய்யப்பட்டிருக்கிறது . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விளக்கம் கேட்கவேண்டுமே யல்லாது ஒரு பிரசங்கமே செய்யக் கூடாது.

**திரு. சி. கோவிந்தராசன் :** இப்பொழுது, லேபர் கமிஷனர் ரூ. 40 சம்பள வெட்டை ஒப்புக்கொள்ளச் சொல்லி ஆலோசனை கூறியிருப்பது சரியல்ல என்பதை அரசு ஒத்துக்கொள்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, இந்த ஆலை ஒரு ஆண்டு காலமாக மூடியிருப்பதாக உறுப்பினர் சொன்னார்கள். இந்த ஆலை திறக்கப் படவேண்டும் என்று மூன்று தொழிற் சங்கங்களில் இரண்டு சங்கங்கள் ஒப்புக்கொண்டு, ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இது 18(1) என்ற செட்டில்மெண்டில் வருகிறது. 12(3) என்ற முறையில் அரசாங்கம் செய்திருக்கும் ஒப்பந்தம் இல்லை. ஆகவே, அங்கே இருக்கும் நிர்வாகத்தினரும், தொழில் சங்கங்களும் சேர்ந்து செய்துகொண்ட ஒப்பந்தம். அரசாங்கத்திற்கு இதிலே பொறுப்பு இல்லை என்பதைத் தெளிவு படுத்த விரும்புகிறேன். திறந்தால் போதும் ஒரு ஆண்டுக்குப் பிறகு, பக்கத்து ஆலைகளில் வேலைசெய்யும் தொழிலாளிகள் தினக்கூலி ரூ. 3 கிடைத்தாலும் போதும் என்று இருந்தார்கள். ஆகவே, அவர்களாக வந்து அரசாங்கத்திற்குச் சொன்ன

யோசனைகளை ஏற்றுக்கொண்டு, இந்த ஆலை நாளை திறக்கப்பட இருக்கிறது. ஆகவே, உறுப்பினர் முழு ஒத்துழைப்புத் தந்து உதவவேண்டும் என்று மறுபடியும் கூறிக்கொள்ளுகிறேன்.

**திரு. சி. கோவிந்தராசன் :** சங்கங்கள் ஒப்புக்கொண்டு இருக்கின்றன என்று அமைச்சர் சொன்னார்கள். திருச்சி ஜில்லா பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் பெருவாரியான அங்கத்தினர்களைக் கொண்டது. மத்திய ஊதியக் குழு ரூ. 140-க்குக் குறையாமல் இருக்கவேண்டும் என்று பஞ்சாலைத் தொழிலுக்கு நியமிக்கப்பட்ட முதல் சம்பளக் குழு சிபாரிசு செய்தது. இரண்டாவது குழுவும் அதையே கூறாகச் சொல்லிற்று. அப்படியிருந்தும், இந்த ஏற்பாட்டை, லேபர் கமிஷனர் செய்திருப்பது சரியல்ல. 40 ரூ. குறைப்பது என்பதை திருச்சி ஜில்லா பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. வற்புறுத்துவதால், மேலும் தொழில் தகராறுதான் ஏற்படும். ஆகவே, சம்பள வெட்டு இல்லாமல் மில்லைத் திறக்கச் செய்ய வேண்டும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** இறுதியாகவும் விளக்க வேண்டுகின்றேன் திராவிட முன்னேற்றக் கழக சார்புள்ள பஞ்சாலை தொழிலாளர் சங்கமும், காங்கிரஸ் ஆதரவுபெற்ற ஐ.என்.டி.யு.சி.யும் மொத்தமாகச் சேர்ந்து வந்து எங்களைத் தூண்டி ஒப்பந்தத்திற்கு உடன்பட்டிருக்கிறார்கள். ஆனால், அங்கத்தினர் குறிப்பிடும், ஏ.ஐ.டி.யு.சி. மாற்று யோசனை வழங்கலாம் என்றது. இந்த ஆலை இரண்டு முறை விபத்துக்கு ஆளாகியிருக்கிறது. இந்த மில்லைத் திறந்து கூலி ஓரளவு கிடைத்தால் போதும் என்று தொழிலாளிகள் சொன்னதாலும், அரசுத் தரப்பில் மத்திய சர்க்காருக்கு மற்ற ஆலைகளைப்போல் சிபாரிசு செய்திருக்கிறோம் என்றாலும், இந்த நேரத்தில் திறந்தால் போதும் என்ற அளவில் ஒப்பந்தம் செய்திருக்கிறது. ஆகவே, குழந்தை பிறக்கட்டும், பிறகு பெயர் வைக்கலாம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

## (6) தமிழ் நாடு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் திட்ட வரைவு மீதான விவாதம் (தொடர்ச்சி).

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்ட வரைவின் மீது நடைபெற்ற விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நல்ல வகையில் கலந்துகொண்டு மேலான கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அந்த வகையில் அவர்களுக்கெல்லாம் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்தத் தீர்மானத்திற்கு நான் முன்மொழிந்திருக்கின்ற திருத்தத்தையும் நிறைவேற்றித் தருமாறு கேட்க அவை



மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தத் திட்டத்தை முழுமைப் படுத்துவதற்கும், அதில் அபிவிருத்திகளைச் செய்யவும், நல்ல பல யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அவை ஒவ்வொன்றையும் இங்கே குறிப்பிட்டுப் பேசாமல் இருந்தால், அரசாங்கம் அவற்றைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை என்று யாரும் கருதிக் கொள்ளத் தேவையில்லை. சாத்தியக் கூறுள்ளவற்றை திட்டத்தில் சேர்க்கவும், அதன் மூலம் திட்டத்தை முழுமைப்படுத்தவும், அரசாங்கம் எல்லாவிதமான நடவடிக்கையும் எடுக்கும் என்று இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக பல்வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டன. மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் குறிப்பாக சேலம் இரும்பாலைக்காக மத்திய சர்க்காரிலிருந்து பெருந் தொகையைப் பெறவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். அதற்கு அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. எம். இராஜா அவர்கள், ப்ளானிங் கமிஷன் சரியாக வேலை செய்யவில்லை, ஆகவே, நிரந்தரமாக ஒரு குழு, பைனான்ஸ் கமிஷன் போன்று இருக்க வேண்டும், மாநில அளவிலும் திட்டங்களை உருவாக்க அமைப்புக்கள் இருக்கவேண்டும் என்றார்கள். அது ஒரு புதிய சிந்தனை. அந்தச் சிந்தனையின் மூலமாக, ஏற்கனவே திட்டங்களால் ஏற்பட்ட தோல்வி தவிர்க்கப்படலாம் என்றார்கள். அது ஒரு நல்ல அனுகூலமாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. டெவலப்மெண்ட் கவுன்சிலுக்குப் பதிலாக, நிதி நிர்வாகங்களைக் கவனிக்க மாநில அளவில் நிரந்தரமாக; மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் ஒரு தொடர்புப் பாலமாக இருந்து, மாநிலப் பிரதிநிதிகள் டெல்லியில் நிரந்தரமாக இருக்கவேண்டும் என்கிற யோசனையையும் அவ்வப்பொழுது சொல்லிக் கொண்டு வருகிறோம். நான் என்னுடைய, முன்னுரையில் சொல்லியபடி, மானிடரி க்ரெடிட் பாலிசி, பிஸ்கல் பாலிஸி, வரி விதிக்கும் பணி, இன்னும் அந்நியச் செலாவணி போன்ற விவகாரங்களில் மாநிலத்தை மதிப்பதேயில்லை.

மாண்புமிகு உறுப்பினர் பிரஜா சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. மாரிமுத்து அவர்கள், ஐந்தாண்டுத் திட்டங்கள் விவசாயத் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை, தொழில் அபிவிருத்திக்கே முதலிடம் கொடுத்திருக்கிறது, விவசாய வருமானம் பெருகாததால், தொழில் மந்தமாகிவிட்டிருக்கிறது, ஆகவே விவசாயத் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய வகையில் காரியங்களைச் செய்யவேண்டும் என்று வெகு அழுத்தமாக எடுத்துரைத்தார்கள்.

இந்தக் கருத்தை இன்றைக்கு உணர்ந்திருக்கிற காரணத்தால் பொதுவாக ஐந்தாண்டுத் திட்டங்களும், குறிப்பாக நம்முடைய திட்டமும் வகுக்கப்பட்டு; தமிழ்நாட்டிலே விவசாயப் புரட்சியை

[திரு. கே. ஏ. மதியழகன்] [1963 ஆகஸ்ட் 26

ஏற்படுத்தி, உணவு உற்பத்தியை அதிகரிக்கவேண்டுமென்று வகைப் படுத்திச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மார்டின் அவர்கள், ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு இந்த 500 கோடி ரூபாய் போதாது, ஆயிரம் கோடி ரூபாய் வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். தொகை இன்னும் எவ்வளவு அதிகமானாலும், நாம் இலக்கை அடைய முடியுமா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவசாமி அவர்கள், தூத்துக்குடி அனல் மின்சார நிலையத்தைப்பற்றியும், மீன்வளத் துறையிலே செய்யப்பட வேண்டிய காரியங்களைப்பற்றியும் சொன்னார்கள். அடுத்து, அவனாசி தொகுதி உறுப்பினர் அவர்கள் அவனாசித் திட்டம், மேல் பவானித் திட்டம் முதலியவை ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கருத்து என்ன என்பது எனக்குத் தெரியவில்லை. கீழ்பவானி, மேல்பவானித் திட்டங்கள் அரசின் ஆய்வுக் கட்டத்திலேதான் இருக்கின்றன. இவை யோசித்துச் செய்யப்பட வேண்டிய விஷயங்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, என்னுடைய கருத்து என்ன என்பது தெரியவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நேற்று பூராவும் நான் பேசியது புரியவில்லையென்று அவர் சொல்வது எனக்குக் கஷ்டமாக இருக்கிறது. ஏற்கெனவே பவானியிலிருந்து தண்ணீரை கேரளாவுக்கு கொடுத்து விட்டீர்கள். அந்தத் தண்ணீரை ஒப்பந்தத்தில் சேர்க்காமல் இருந்தால் அதை நாம் உபயோகப் படுத்திக்கொள்ளலாம். கீழ் பவானிக்குத் தண்ணீர் இல்லை. கீழ் பவானிக்குத் தண்ணீர் கிடைத்தால்தான் நமக்கு இலாபகரமாக இருக்கும். அமைச்சர் அவர்களுக்கு நான் விடுக்கும் வேண்டுகோள் என்னவென்றால், அவனாசித் திட்டம் வருவதற்கு வழி செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, 'ஒன்றை ஆயிரம் தடவை சொல்வதாலேயே, அது உண்மையாகி விட முடியாது' Thousand arguments will not alter a fact மேல் பவானித் திட்டம் என்று சொல்கிறார்கள். மேல்பவானியைப் பற்றி இவருடைய அபிப்பிராயம் என்ன என்று தெரியவில்லை. மேல் பவானியைப்பற்றி இந்த மன்றத்திலே சொல்லவில்லை. அந்தப் பகுதி மக்களின் நலன்களை, அந்த மக்களின் சௌகரியங்களை முன்னிட்டுத்தான் செய்ய வேண்டும் என்று அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது என்பதைத்தான் சொன்னேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பையா அவர்கள், நாகப்பட்டினத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது பற்றியும், மண்டபத்திலே இருக்கிற மீன்வள ஆராய்ச்சி நிலையம் கொச்சிக்கு மாற்றப்படுவதைப்பற்றியும் எடுத்துரைத்தார்கள். மண்டபத்தில் இருக்கிற மீன்வள ஆராய்ச்சி நிலையம் கொச்சிக்கு மாற்றப்பட



1969 ஆகஸ்ட் 26] [திரு. கே. ஏ. மதியழகன்]

மாட்டாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், திருச்சிராப்பள்ளி மாவட்டததிலுள்ள குளித்தலை உறுப்பினர் திரு. பெ. சௌந்தரபாண்டியன் அவர்கள் குடகனாறு திட்டத்தையும் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் சென்னை நகரத்தினுடைய குடிநீர் நெருக்கடியைப்பற்றிக் குறிப்பிட்டு, முன்யோசனையுடன் நடவடிக்கை எடுத்திருந்தால் இந்த நெருக்கடியைத் தவிர்த்திருக்கலாம் என்றும் சொன்னார்கள். மேலும், இராணுவச் செலவு குறைக்கப்படுவதற்கு இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை மாற வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அது மாற வேண்டுமா, வேண்டாமா என்பது அரசியலைப் பொறுத்தது. இராணுவச் செலவு குறைக்கப்பட வேண்டும் என்று அவருடைய குருநாதன் திரு. ராஜாஜி அவர்கள்தான் சொல்லிவந்தார்கள். இந்தியாவினுடைய வெளிநாட்டுக்கொள்கை மாறுவதாக இருந்தால் மெதுவாக மாறட்டும். இதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பதைக் குறிப்பிடுகிறேன். இதைத்தான் மறைந்துபோன பேறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். டூப்ளிகேஷன் ஆப் ஒர்க்ஸ் செய்வதாலே வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, குடிநீர்பற்றி யோசனை சொன்னார்கள். இரண்டு மூன்று விஷயங்களைப் பற்றிச் சொல்லிவிட்டு இதை எடுத்துச் சொல்கிறேன்.

குறிப்பாக ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் நமக்கெல்லாம் ஏற்பட்டிருக்கிற நல்வாய்ப்பு அம்சம் என்னவென்றால், இந்தத் திட்டம் இன்னும் இறுதி வடிவம் பெறவில்லை. இதற்கு முன்னால், பதினான்கு பாங்குகள் தேசியமயமாக்கப் பட்டிருக்கின்றன. இதை நான் குறிப்பிடுகிற நேரத்தில், பிரதம மந்திரி இந்திரா காந்தி அம்மையாருக்கு சூட்டப்பட்ட மகுடாபிஷேகத்திற்கோ, அல்லது உட்கட்சிப் போராட்டத்திற்கோ இடையில் நடைபெறும் வாய்ப்பாகக் கருதிவிடாமல், சமதர்ம சமுதாயத்தை ஏற்படுத்த இதை முன்னோடியாகக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்திச் சொல்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், பாங்குகள் தேசியமயமாவதை நாங்கள் ஏன் வரவேற்கிறோம் என்பதைக் குறித்து விளக்கியிருக்கிறார்கள்.

இன்றைக்கு 14 பாங்குகள் தேசியமயமாக்கப்பட்டன என்றால், அதிலே இருக்கிற 2,700 கோடி ரூபாய் மூலதனத்தை ஒரு குறிப்பிட்ட 14 குடும்பங்கள்தான் நிர்வகித்து வந்தன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். 2,700 கோடி ரூபாயை நிர்வகித்து வருகிற அதிகாரம் அந்த 14 குடும்பங்களுக்குத்தான் இதுவரை இருந்து வந்தது. இன்றைக்கு அந்த அதிகாரம் அந்த தனிப்பட்ட 14 குடும்பங்களிடமிருந்து எடுக்கப்பட்டு, நாட்டு மக்களின் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்றுதான் அர்த்தம்.

[திரு. கே. ஏ. மதியழகன்] [1969 ஆகஸ்ட் 26

தனிப்பட்ட 14 குடும்பங்கள் இதிலே போட்டிருக்கிற மூலதனத்திற்கும், 2,700 கோடிக்கும் நெருங்கிவரக் கூட வாய்ப்பு இல்லை. அந்த அதிகாரம் இன்றைக்கு அரசினுடைய கைக்கு மாற்றப்பட்டிருக்கிறது. மக்களுடைய கைக்கு மாற்றப்பட்டிருக்கின்றது என்றுதான் பொருள். வர்க்க சூதாட்டத்திற்கும், லாப வேட்டைக்கும், சிலபேர் முதலாளிகளாவதற்கும் பயன்பட்டு வந்தவை இன்றைக்கு சமதர்ம சமுதாயத்தை உண்டாக்குவதற்கான ஒரு நல்ல வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்குக் கள்ளச் சந்தையிலே உலவுகிற பணம், கறுப்புப் பணம், வர்க்கச் சூதாட்டம் இவற்றிற்கெல்லாம இவை உதவியாக இருந்தன. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. விநயகம் அவர்கள், அக்ரிகல்சுரல் ரெவல்யூஷனைப்பற்றி குறிப்பிட்டுச் சொன்னார்கள். விவசாயத்தில் முதலீடு செய்வதற்கான காரியங்களை மேற்கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டார். நம் இந்தியாவின் பிரதம மந்திரிஅவர்களும், மற்றவர்களும் இதில் அக்கறை காட்டிச் செய்தால் நாம் சமதர்ம சமுதாயத்தை அடைவதற்கு எளிதில் வழி ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தந்தப் பகுதிகளிலுள்ள பாங்குகள் அந்தந்த இடங்களைப் பிரதிபலிப்பவைகளாக இருக்க வேண்டும். எல்.ஐ.சி. போல எல்லா பாங்குகளையும் மாற்ற வேண்டும். முன்பு இவைகளில் யாரோ சில தனவந்தர்கள் ஆதிக்கம் செலுத்தினார்கள். இப்போது அதிகாரிகள் ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்ற நிலைமை ஏற்பட்டால், நாம் எதிர்பார்த்த பலன் கிடைக்காமல் போய்விடும். இப்போது இந்த நிறுவனத்தில் இருக்கிற டைரக்டர்கள், மானேஜிங் போர்டில் வரக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. அதை முதலில் தடை செய்ய வேண்டும். சட்ட மன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மக்களுடைய எண்ணங்களைப் பிரதிபலிப்பவர்கள் ஆகியோர் இந்த ஸ்தாபனங்களில் பங்குகொள்ளவும், மாநில அரசு பங்குகொள்ளும் வாய்ப்பு ஏற்படவும்.வகை செய்ய வேண்டுமென்று பிரதம மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நமக்குள் இருந்த பல பரிட்சை எல்லாம் முடிந்துவிட்டது என்று அப்படியே விட்டுவிடுவார்களானால் இந்த 18 வருஷங்களாக, இருபது வருஷங்களாக என்ன நிலைமை இருந்ததோ அதுவேதான் நீடிக்கும். நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும் பிரதமருக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். பாங்குகள் தேசவுடைமை ஆக்கப்பட்டதன் மூலம் கிடைக்கிற பணத்திலிருந்து மாநிலங்களுக்கும் சரியான பங்கு கிடைக்கக்கூடியதாக இருக்க வேண்டும். ஆகவே பிரதமர் அவர்களும் எல்லா மாநில முதல் அமைச்சர் அவர்களையும், நிதி அமைச்சர் அவர்களையும் டெல்லியில் வெகுசீக்கிரமாகவே கூட்டி எல்லோருடைய மேலான ஆலோசனைகளையும் கலந்து எப்படி எப்படி அந்தப் பணத்தை நிர்வகிப்பது,



1969 ஆகஸ்ட் 26] [திரு. கே. ஏ. மதியழகன்]

செலவழிப்பது என்பதுபற்றி எல்லாம் முடிவு எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, பணம் வந்திருக்கிற காரணத்தினால் இன்னும் அதிகமான திட்டங்களைச் சேர்க்க வாய்ப்பு இருக்கிறது. இதையும் புனராலோசனை செய்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நான் கொடுத்திருக்கிற தீர்மானத்திற்குத் திருத்தமாக 'This House further urges the Government of India to entrust with the State Government the managements of all public sector undertakings like Neyveli Lignite Corporation etc., in order to ensure greater profitability and efficiency' என்பதான நான்காவது

பகுதியைத் தவிர்த்துவிடலாம் என்று சொன்னார்கள். நாம் நிறைவேற்றுகிற தீர்மானம் இந்த அவையில் ஏகமனதாக நிறைவேற்றப்படவேண்டுமென்ற காரணத்தினால் நான் அவரது கோரிக்கையை ஏற்றுக்கொள்கிறேன். ஆகவே, இந்தப் பகுதியை விட்டுவிட்டே தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சில பிரச்சினைகளைப் பற்றிக் குறிப்பிட்டதை நான் கவலையோடு, வருத்தத்துடன்தான் கவனித்தேன். அதில் ஒன்று. பரம்பிக்குளம் ஆளியாறு திட்ட ஒப்பந்தம்—பவானி திட்டத்தைப்பற்றிப் பேசினார்கள். அந்த விவாதத்திற்குள் போக நான் விரும்பவில்லை. யார் மீதும் குற்றஞ்சாட்ட விரும்பவில்லை. ஒன்றே ஒன்றை எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் விளக்க முடியும். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும், நானும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. சாதிக் பாட்சா அவர்களும் நன்றாக ஆலோசனை செய்து கலந்துகொண்டுதான் கேரள முதல் அமைச்சர் அவர்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டோம். கீழ் பவானி மக்களுக்கும் இது நன்றாக தெரியும். இதனால் நமக்கு எந்தவிதமான பிரதிகூலமும் ஏற்படவில்லை. 11 ஆண்டுகாலமாக முடிவுக்கு வர முடியாது இருந்த ஒரு பிரச்சினையில் கேரள மாநில முதல் அமைச்சர் அவர்களும், நம்முடைய மாநில முதல் அமைச்சர் அவர்களும் ஒரு நல்ல முடிவு ஏற்படுவதற்கு, ஒரு ஒப்பந்தம் ஏற்படுவதற்கு வழிவகுத்ததற்காக கோவை மாவட்ட மக்கள். கீழ் பவானி மக்கள் வாழ்த்துகிறார்கள். இதையே தேர்தல் விஞ்ஞாபனமாக வைத்து பெருந்துறை தேர்தல் நடந்தது. அவர் போய்விட்டார்கள்—வருந்துகிறோம். ஆனால் மக்கள் பெருமளவுக்கு அவருக்கு வாக்களித்ததற்குக் காரணமே இந்த ஒப்பந்தம் தான். இதுபற்றிய எல்லா விவரங்களும் வேண்டுமென்றால் யார் என்னிடம் தனியாக வந்தாலும் விளக்கத்

தயாராய் இருக்கிறேன். இந்த ஒப்பந்தத்தினால் நமக்கு நஷ்டம் எதுவும் வரவில்லை.

**திரு. கே. வினாயகம் :** கீழ் பவானித் திட்டத்தின்படி இப்போது நாம் ஒப்பந்தம் செய்துகொள்ளாமல் இருந்தால் எவ்வளவு கன அடி தண்ணீர் கிடைக்கும்? ஒப்பந்தம் செய்துகொண்ட காரணத்தினால் இந்த அளவு கன அடி தண்ணீர் கிடைப்பது குறைந்துதானே இருக்கிறது? அப்படிக் குறைந்திருப்பது நஷ்டம் தானே. இது விவசாயிகளுக்குப் பாதகம் இல்லையா? எப்படி அமைச்சர் அவர்கள் நமக்கு நஷ்டம் எதுவும் இல்லை என்று கூற முடியும் I mean the quantity of water? Is it not going to be reduced?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இதை விவாதத்திற்குரிய விஷயமாக ஆக்க நான் விரும்பவில்லை என்று முதலிலேயே சொன்னேன். இரு மாநிலங்கள் ஒப்பந்தம் செய்துகொள்கிறபோது இருமாநில மக்களின் நலனையும் முன்னிட்டே இதுபற்றிய விவரங்களை வெளிப்படையாக நான் இப்போது வெளியிட முடியாது இருக்கிறேன். அதன்காரணமாகத் தான் இதுபற்றிய விவரங்களை யார் தனியாக வந்து கேட்டாலும் கொடுக்கத் தயார் என்று கூறினேன். மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டிய விஷயம் இது. அரசியல் பிரச்சாரத்திற்காக எதையும் செய்யலாம் என்கிற நிலை கூடாது. அவர்களுக்கு கீழ் பவானி மக்களிடத்தில் எவ்வளவு அக்கறை இருக்கிறதோ அதைவிட எங்களுக்கும் பல படி அதிகமான அக்கறையும், பொறுப்பும் இருக்கிறது. இந்தத் திட்டத்தினால் ஒன்றரை லட்சம் ஏக்கராவுக்கு மேல் புதிய பாசன வசதியைப் பெறுகிறது.

எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு தவறான குற்றச்சாட்டைச் சாட்டினார்கள். உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி பகுதிக்கு—நான் பிறந்த பகுதி, பொதுப் பணித்துறை அமைச்சருடைய பகுதி—கொண்டுபோய்விட்டதாகச் சொன்னார்கள். கொஞ்ச நேரத்திற்குத்தான் இது ருசிகரமான வாதமாக இருக்கும். நியாயமாக ஒரு பகுதிக்குச் சேரவேண்டியதை—நாங்கள் அமைச்சராக இருக்கிறோம் என்பதன் காரணமாகக் கிடைக்காமல் இருக்கச் செய்வது நியாயமாகுமா என்பதையும் எதிர்க் கட்சித் தலைவர் எண்ணிப்பார்க்கவேண்டும். அப்படியும் இதில் இல்லை. இந்தத் திட்டத்தினால் மிகவும் பஞ்சப் பிரதேசமான பல்லடம், தாராபுரம் தாலுக்காக்கள் தான் பயன்படபோகின்றன. ஒருவேளை திரு. கருத்திருமன் அவர்களுடைய ஊர் அந்த வழியில் இருந்தால் அவர்கள் ஊருக்குக் கொண்டுபோனார்கள் என்கிற வாதம் சரியாகுமா? 11 ஆண்டுகாலமாக நிறைவேற்றப்படாதிருந்த திட்டம் இப்போது நிறைவேறுகிறது. 1½ லட்சம் ஏக்கரா பாசன வசதி பெறும். ஓர் ஒப்பந்தம் என்றால் இரண்டு மாநில மக்களுக்கும் நன்மை



பயக்கக்கூடியதாகத் தான் இருக்கவேண்டும். இதனால் கோயம்புத்தூர் குடிதண்ணீர்ப் பிரச்சினை தீர்க்கப்படும். அதேமாதிரி மின்விசைத் துறையில் நன்மை ஏற்படும். 'கம்பிகள் போடுகிறார்கள், கரண்டு வராது' என்று எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார். கம்பி இல்லாது எப்படி அவர் கரண்டு கொண்டு வருவார்களோ தெரியாது. கம்பிகள் போடப்படுமானால் அதுவே ஒரு நல்ல முன்னேற்றமாக நான் கருதுகிறேன். அரசியல் வாதத்திற்காகச் சொல்லவில்லை. உள்ளத்தூய்மையோடு சொல்கிறேன். இந்த ஒப்பந்தத்தை கீழ் பவானி மக்களே ஆதரிக்கிறார்கள்.

**திரு. க. ர. நல்லசிவன் :** இந்த ஒப்பந்தம் காரணமாக பவானி ஆற்றில் இருந்து ஓரளவு தண்ணீர் குறைகிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன். இந்த ஒப்பந்தம் காரணமாக கோயம்புத்தூரில் இருக்கக்கூடிய 15 லட்சம் மக்களுக்கு குடிக்கத் தண்ணீர் கிடைக்கிறது. கோவை நகர குடிதண்ணீர் பிரச்சினை தீருகிறது. இரண்டாவது, முன்பு இருந்த அரசாங்கம் 2½ லட்சம் ஏக்கருக்குப் பாசனத்திற்குத் தண்ணீர் விட்டுவிட்டு 1½ லட்சம் ஏக்கராவை அநாதையாக விட்டு விட்டுப் போய்விட்டார்கள். இந்த ஒப்பந்தத்தின் மூலம் இந்த 1½ லட்சம் ஏக்கராவுக்கு பாசன வசதி ஏற்படும். தேச ஐக்கியத்தைப்பற்றியும், ஒருமைப்பாட்டைப் பற்றியும் பேசுகிற எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்த ஒப்பந்தத்தை ஏன் எதிர்க்கிறார்? நானும் அந்தப் பகுதியில் வாழக்கூடியவன் தான். இந்த ஒப்பந்தத்தினால் கீழ் பவானிப் பகுதி பாதிக்கப்படாது என்கிற வாக்குறுதியை அரசாங்கம் கொடுத்திருக்கிறது. அண்டை மாநிலத்தோடு ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டுமென்றால் நாமும் கொஞ்சம் விட்டுக்கொடுத்துத் தான் ஆகவேண்டும். இதன்மூலம் மேலும் தீர்க்கப்படாதிருக்கிற பல பிரச்சினைகள் தீர்ந்து நம் மாநிலத்திற்கு நன்மை ஏற்படக்கூடும். அப்படி இருக்கும்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதை ஏன் எதிர்க்கவேண்டும்?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது சாயம் வெளுத்துவிட்டது. முன்னாலே கீழ்பவானியிலிருந்து தண்ணீர் விடவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பட்டினி கிடந்தார்கள். ஏற்கனவே தண்ணீர் விடவில்லை என்று பட்டினி கிடந்த அவர்கள் இப்பொழுது இதை ஆதரிக்கிறார்கள் ஆதரிக்கட்டும். அவர்கள் கூட்டணி. பெருந்துறைத் தேர்தலில் கிடைத்த வெற்றிபற்றிச் சொன்னார்கள். துரதிருஷ்டவசமாக மீண்டும் தேர்தல் அங்கே வந்திருக்கிறது. இன்னும் ஆறு மாதத்திலே தேர்தல் வரலாம். மக்கள் அப்பொழுது என்ன சொல்கிறார்கள் என்பதைப் பார்த்துக் கொள்ளலாம். அது அல்ல பிரச்சினை. காங்கிரஸ்காரர்கள் என்ன என்னவோ எல்லாம் [illegible], மக்கள் எங்களுக்கா ஓட்டுப்போட்டார்கள்? எனவே அது அல்ல பிரச்சினை. திரு நல்லசிவன் அவர்கள் சொல்வது மிகவும் வேடிக்கையாக இருக்கிறது. இப்

பொழுதே கீழ்பவானியிலிருந்து தண்ணீர் கிடைக்கவில்லை, ஆகஸ்டிலிருந்து, மார்ச் வரையிலும் இரண்டரை லட்சம் ஏக்கர்களுக்குத் தண்ணீர் கிடைக்கிறதா? அப்படியிருந்தால் அவநாசித் திட்டம் மேல் பவானித் திட்டம் இவற்றை நிறைவேற்றலாமே? இப்பொழுதே தண்ணீர் கிடைக்கவில்லை. இதற்காக திரு. நல்லசிவன் அவர்கள் உண்ணாவிரதம் இருந்து இருக்கிறார்கள். இப்பொழுது அவர்களே தண்ணீர் வரும் என்று சொல்கிறார்கள். இன்னும் கொடுக்கப்போகின்ற நிலைமை இருப்பதால் தண்ணீர் இன்னும் குறையும் என்பதுதான் என்னுடைய வாதம். ஆகவே, கொடுக்கக் கூடாது என்பதுதான் நான் சொல்லிக்கொள்வது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** திரு. நல்லசிவன் அவர்கள், அப்படியேயிருந்தாலும் தியாக மனப்பான்மை வேண்டும் என்று சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் நான் சொல்வது என்னவென்றால் குறையவே குறையாது என்பதுதான். தாராபுரம் தாலுகாவிற்கு புதிய ஆயக்கட்டிற்கு தண்ணீர் இதன் மூலம் கொடுக்கமுடியும். இதைச் சொன்னால் கேலி செய்கிறார்கள். கேலியைப்பற்றிக் கவலைப்படப்போவதில்லை. பல பேர்கள் இப்பொழுது ஒழுங்கீனமாகத் தண்ணீர் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒழுங்கீனங்களை அவர்கள்மாதிரி ஆதரிக்கமுடியாது . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நாங்கள் ஆதரிக்கவில்லை. நாங்கள் சொல்கிறோம். ஒழுங்கீனங்கள் இருந்தால் யாராக இருந்தாலும் சரியே. தைரியம் இருந்தால் நடவடிக்கை எடுங்கள் என்றுதான் சொல்கிறோம்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதைத்தான் செய்யப் போகிறோம். தவறாகத் தண்ணீர் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு நாட்களாக அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. யார் யாருக்குத் தண்ணீர் போய்ச் சேரவேண்டுமோ அவர்களுக்குச் சேரவேண்டும். அதற்கு எல்லாம் கணக்குகள் இருக்கின்றன.

(திரு. பி. ஜி. கருத்திருமன் எழுந்தார்)

அனுமதிக்கப்போவதில்லை. உங்களுடைய வாய்ப்புகள் முடிந்து விட்டன. டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்டபொழுதுகூட நான் அதைத்தான் சொன்னேன். இன்னும் இதைத் தவிர பொதுவான நலன்கள் வரக்கூடியதைப் பொறுத்து நாம் இதை ஒத்துக் கொள்வதிலே ஒன்றும் கெட்டுவிடவில்லை என்று சொன்னேன். இராணுவம் இருக்கிறது என்றால் எங்கே துப்பாக்கி, எங்கே விமானம், எங்கே படைவீரர்கள் என்று கேட்பதா? ஒரு முதலமைச்சர் அவர்களும் இன்னொரு முதலமைச்சர் அவர்களும் கூடிப் பேசிச் செய்கிறார்கள் என்றால், அவர்கள் யாருடைய நலத்தையும் பறிகொடுத்துவிடுவார்கள் என்பதல்ல. ஒன்றரை லட்சம் ஏக்கராக்களுக்கு சிமிண்ட் வாய்க்கால்கள் போட்டு





60 கோடி, 70 கோடி ரூபாய்வரை இந்த நாட்டிலே விரயமாக்கி விட்டு, பெரிய நகரம், தொழில் நகரம் அதைச் சுற்றியுள்ளவர்களுக்குக் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாத நிலைமை இருக்குமானால் அதற்காக கேரள முதலமைச்சர் அவர்களும் நம்முடைய முதலமைச்சர் அவர்களும் பக்குவமாகப் பேசி ஒரு முடிவுக்கு வந்து அதிகாரிகள் மட்டத்திலே விவரங்கள் திரட்டப் படுகின்ற இந்த நேரத்திலே அதைக் கெடுக்கிற வகையிலே, அதைப் பாழாக்குகிற வகையிலே பேசினால் அது கீழ்பவானி மக்களுக்கு உதவி செய்வதாகவா பொருள்? உணவு உற்பத்தியை தரை மட்டமாக்குகிறது என்று தான் பொருள். கோயம்புத்தூர் நகர மக்கள் தண்ணீர் இல்லாமலே செத்து மடியட்டும் என்று முன்னெச்சரிக்கையாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறுகிறார்களா ? இன்றைக்கு அவர்கள் இதைப்பற்றி உட்கார்ந்து பேசட்டும். நான் அவர்களுக்கு அறைகூவல் விடுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கோயம்புத்தூர் மக்கள் பட்டினி கிடக்கட்டும் என்று எந்த இடத்திலே நான் சொன்னேன் ? இதுமாதிரி ஹிட்லர் பிரசங்கம் செய்தால் முடியாது. நான் எங்கே அப்படிச் சொன்னேன் ?

The Hon. THIRU K. A. MATHIALAGAN : It amounts to that.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ' நோ '. நான் அப்படிச் சொல்லவில்லை. கோயம்புத்தூர் மக்களுக்குத் தண்ணீர் கொடுக்கக்கூடாது என்று நான் எங்கே சொன்னேன் ? கோயம்புத்தூருக்குக் கொடுக்கவேண்டும், ஆதரிக்கிறேன் என்றுதான் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பலமாகப் பேசுவதால் சரி என்று நினைத்துக்கொள்ளாதீர்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நீங்கள் அடித்துப் பேசுகிறீர்களே, நான் எங்கே அப்படிச் சொன்னேன் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்தத் திட்டத்தை எதிர்ப்பதின் மூலம் கோயம்புத்தூர் மக்களுக்கு இந்தத் திட்டம் கூடாது என்று சொல்கிறீர்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதனால் நீங்கள் சொல்வதையெல்லாம் நான் ஏற்றுக்கொள்வதா ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I am not yielding.

THIRU P. G. KARUTHIRUMAN : I am also not yielding. I have to explain.

நான் எங்கே சொன்னேன் ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கோயம்புத்தூர் மக்களுக்குக் குடிநீர் கொடுக்கக்கூடாது என்று நீங்கள் சொன்னதாக அமைச்சர் அவர்கள் சொல்லவில்லை.

The Hon. THIRU K. A. MATHIALAGAN: It amounts to denying drinking water facility to Coimbatore people.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இன்றைக்கும் நான் சொல்கிறேன். என்னுடைய கட்சியின் சார்பாக நான் இதை ஆதரிக்கிறேன். வேண்டாமென்று சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இன்னும் தெளிவாகச் சொல்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கு எந்த விதமான அச்சவுணர்ச்சியும் தேவையில்லை. கீழ் பவானி மக்களிடத்திலே எதிர்க்கட்சித் தலைவருக்கு அக்கறை நிரம்ப இருக்கலாம். அதைக்காட்டிலும் முதல் அமைச்சர் அவர்களுக்கும் எங்களுக்கும், எங்களுடைய கட்சிக்காரர்களுக்கும் தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் இருக்கும் அக்கறை குறைவான தல்ல. எனவே எந்தவிதமான பாதகமும் ஏற்படவில்லை, மாறாக நலன்கள்தான் ஏற்பட்டிருக்கின்றன. கீழ் பவானி மக்களுக்கும், கோயம்புத்தூர் மக்களுக்கும் நலன்கள் ஏற்பட்டிருக்கின்றன. 12 ஆண்டுகாலமாக 60 கோடி 70 கோடி ரூபாய் முடக்கிவைக்கப் பட்டிருக்கிறது. இதன்மூலம் 2 லட்சம் ஏக்காரவில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு வாய்ப்பிருக்கிறது. பொது நன்மையையொட்டிச் சில நிலைமைகளைச் சொல்லக்கூடாது என்றால் அவர்கள் புரிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள். இந்த நாட்டு மக்களுக்கு எங்களிடத்திலே நம்பிக்கை இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொண்டு நான் அடுத்த விஷயத்திற்குப் போகிறேன்.

ஐந்தாண்டுத் திட்டங்கள், மூன்று திட்டங்களைப் போட வில்லையா, நாங்களும் செய்யவில்லையா, நீங்கள் இரண்டு ஆண்டுக் காலத்தில் என்ன சாதித்துவிட்டீர்கள் என்று கேட்கிறார்கள். நான் மறுக்கவில்லை. புள்ளிவிவரங்கள் உயர்ந்திருக்கின்றன, உணவு தானியம் உயர்ந்திருக்கிறது. 15, 20 வருஷங்களிலே மாறுதல்கள் ஏற்பட்டிருக்கலாம். உற்பத்தி அதிகரித்திருக்கிறது, பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. ஆனால் அதன் பலன்கள் யாரைப் போய்ச் சேரவேண்டுமோ அவர்களைச் சேர்ந்ததா ? உணவு உற்பத்தியை அதிகரிக்கிறோம் என்று சொல்லிவிட்டு அமெரிக்க கோதுமைக் கப்பல் இங்கே நிற்கிறது என்றால் என்ன நிலைமை ? உணவு உற்பத்தி அதிகமாகிவிட்டது என்று சொல்லிவிட்டு இங்கே செக் போஸ்டுகள், ஊருக்கு ஊர் ரேஷன் கடைகள் இருந்தால் என்ன மாறுதல் ஏற்பட்டிருக்கிறது ? உணவு, உடை, வீடு, மருந்து, வேலைவாய்ப்பு இவையெல்லாம் அவசியமானவை. சாதாரண ஏழை மக்களுக்கு இவை போய்ச் சேரவேண்டும்.

உற்பத்தியின் அளவு என்ன என்று பார்ப்பதைவிட, பெருகி யிருக்கும் செல்வம், பொருளாதார அபிவிருத்தி எப்படிப் பகிர்ந்து கொடுக்கப்பட்டிருக்கிறது, ஏழை எளியவனுக்கும், சமூகத்தின் அடித்தளத்தில் இருப்பவனுக்கும் எப்படிப் பகிர்ந்து கொடுக்கப் பட்டது என்பது தான் பிரச்சினை. இதிலே இன்னும் பெரிய மாறுதல்கள் ஏற்பட வேண்டுமென்பதைப் பற்றித்தான் நான் சொல்ல வந்தேன்.



நம்முடைய பிரதம மந்திரி மாண்புமிகு இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் முதமைச்சர் அவர்களுக்கு இரண்டு கடிதங்களை எழுதியுள்ளார்கள். அதிலே சேலம் இரும்பாலை பற்றியும், தூத்துக்குடியில் ஏற்பட இருக்கிற இரசாயனத் தொழிற்சாலை பற்றியும், சேது சமுத்திரத் திட்டம் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். நிலச் சீர்திருத்தத்திலே ஒரு முன்னேற்றத்தைச் செய்ய வேண்டுமென்பதைப் பற்றியும் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதிலே பொதுவான கருத்துக்கள்தான் இருக்கின்றன. அந்தக் கருத்தின் அடிப்படையில் மேலும் தொடர வேண்டுமென்பதற்காக அந்தக் கடிதத்தை நான் இந்த மன்றத்தில் படிக்கிறேன் :

" Dear Shri Karunanidhi,

You wrote me on the 2nd May 1969, regarding Central projects in which Tamil Nadu is interested. I am deeply aware of the importance which the State Government attaches to the Salem-Neyveli Project. However, as you probably know, the Steering Group on Iron and Steel, which was set up at the instance of the Planning Commission submitted its report only recently. It is still being studied. The nature of the issues is such that its examination will take some time. I am sure you will appreciate that we cannot proceed in a hurry to the major investment decisions inherent in setting up a new steel plant. The continuing constraint on our resources makes this doubly difficult. When the time comes to decide on the creation of additional steel capacity, the points made in your letter will naturally be taken into account. On similar considerations, a decision on the second mine cut at Neyveli, as you will appreciate, will also have to wait." என்று சொல்லியிருக் கிறார்கள். இது 0.5 மிலியன் தொழிற்சாலைதான்; மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. இந்தத் திட்டத்தை உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதை இந்த மன்றம் வற்புறுத்த வேண்டும்.

" The Ministry of Transport are still examinig the economic viability of the Sethusamudram Project.

You have expressed surprise that the Tuticorin Fertiliser Project has not been mentioned in the Draft Fourth Plan. The Plan makes a provision of Rs. 262 crores for new fertiliser plants in the public sector. Since the Tuticorin project will not be an exclusive public undertaking, it is not mentioned in the Fourth Plan document. This does not mean that it will not receive the necessary encouragement and support from the Central Government. I understand that the examination of the feassibility report is nearing completion. I am asking the Ministry of Petroleum and Chemicals to ensure that an early decision is taken, subject to the economic viability of the project being established and the necessary resources being found."

[திரு. கே. ஏ. மதியழகன்] [1969 ஆகஸ்ட் 26

என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதிலே சமாதானங்கள்தான் சொல்லப்பட்டிருக்கிறது. பொதுத் துறையிலே அமைய வேண்டிய காரியம் என்ற வகையில் இதைச் சேர்ப்பதற்கான காரியத்தை நாம் செய்யவேண்டும்.

இன்னொரு கடிதம்—மாண்புமிகு உறுப்பினர் மாரிமுத்து அவர்களும், நண்பர் நல்லசிவம் அவர்களும், சங்கரையா அவர்களும், எங்கள் கட்சியைச் சேர்ந்த நண்பர்களும் விவசாயத் தொழிலாளர்கள், சாகுபடிதாரர்கள், குடியானவர்கள் நிலச் சீர்திருத்தச் சட்டத்தினால் பயன் பெறவில்லை; மந்தத் தன்மையில் உற்சாகமின்றி இருக்கிறார்கள்; அவர்கள் உற்சாகம் பெற்றால்தான் உற்பத்தி பெருகும்; அந்த அடிப்படையில் நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் செய்யப்பட வேண்டுமென்ற கருத்துக்கிணங்க பிரதம மந்திரி அவர்களும், இத்தகைய காரியங்களுக்கெல்லாம் தன்னுடைய ஒத்துழைப்பு இருக்கும் என்றும், இவற்றையெல்லாம் வேகமாக நிறைவேற்ற வேண்டுமென்றும் ஆகஸ்டு 18-ம் தேதியன்று எழுதியிருக்கிறார்கள்.

"In the process of agricultural transformation which is already taking place in many parts of our country, the small farmers have lagged behind; where they are tenants, their handicaps have been greater and the incentives for them even weaker. Landless labourers have been dissatisfied about not getting their due share of the increased output. These developments are undesirable in themselves, and are also likely to jeopardize the progress we desire in our rural economy. May I commend to you to consider formulating ways and means by which the following can be ensured :—

(i) Guarantee of a fair share of fertilizer, seeds and irrigation facilities to the small farmer.

(ii) Ensuring security of tenures and fair regulation of rents.

The recent technological advances in agriculture have led to unprecedented increases in productivity and land values. The temptation to resume lands has never been so intense. In the absence of stringent safeguards there is real danger that tenant cultivators, specially the smaller ones, will be overwhelmed should another wave of resumption occur. It has been the general experience that any attempt to record tenancies, without absolute protection from eviction to tenants may lead to large-scale disposessions in the guise of 'voluntary surrenders'. Therefore, it is vital that such a development should be prevented.

(iii) Effective enforcement of ceilings, of which there has been considerable evasion in the past, and distribution of surplus land to landless agriculturists.

(iv) Consolidation of holdings within a specified period of time.

(v) Expansion of employment opportunities for the landless labourers by working out viable programmes of rural works.



1969 ஆகஸ்ட் 26] [திரு. கே. ஏ. மதியழகன்]

இந்தக் காரியங்கள் எல்லாம் ரொம்ப வேகமர்க நடைபெற வேண்டும். இதற்கு மத்திய அரசு உதவி இருக்குமென்று சொல்லுகிறார்கள். பசுமைப் புரட்சியை இந்தத் தமிழகத்திலே ஏற்படுத்த வேண்டுமென்று இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட கடந்த இரண்டரை வருட காலமாக முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இவைகளை எல்லாம் உள்ளடக்கி தீர்மான ரூபத்திலே அனுப்புவதற்கு எல்லாத் தரப்பிலும் நல்ல கருத்துக்களை வழங்கினார்கள். அந்தக் கருத்துக்களுக்கெல்லாம் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நம்முடைய நகல் திட்டம் இன்னும் செழுமையாக நிறைவேற்றப்பட நல்ல கருத்துக்களைக் கூறிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்து, திருத்தத்துடன் கூடிய தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

THIRU K. VINAYAKAM : Sir, as the amendment proposed by the Government is a more comprehensive one which includes projects including the Salem Steel Plnt, I beg leave to withdraw my amendment.

திரு. வினாயகம் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய திருத்தம், நான்காம் பகுதியை நீக்கி, வாக்கெடுப்புக்கு விடப்படுகிறது.

பேரவை முன் உள்ள கேள்வி :

Add at the end of the following :—

'and while on such consideration, this House gives its general approval and acceptance of the draft outline of the State's Fourth Five-Year Plan placed before it.

This House resolves that the State Government should convey to the Government of India the strong feeling of the people of Tamil Nadu in the following matters :—

(i) In regard to the quantum of Central assistance this House views with regret the decision of the Planning Commission and the Government of India to reduce the assistance for the State's Plan from Rs. 250 crores as earlier promised to Rs. 202 crores and requests that the amount should be increased so as to make possible the fulfilment of a Plan of Rs. 624 crores;

(ii) this House feels that it is unfortunate that the Government of India are not proposing to start any new project in the Central sector in this State during the Fourth Five-Year Plan period; and in particular this House urges that the Government of India should proceed expeditiously with the implementation

of the following Central sector projects, the economic viability and technical feasibility of which have been well established :—

(1) Salem Steel Plant

(2) Sethusamudram Project

(3) Second mine cut at Neyveli

(4) Expansion by 200 m. w. of the installed capacity of the Kalpakkam Atomic Energy Plant; and

(iii) the State Government should move the Governnment of India to accord early approval for the setting up of a fertilizer project at Tuticorin and for a petro-chemical complex at Manali.

அரசினர் திருத்தம் நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருத்தப்பட்ட மூலத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

பேரவை முன் உள்ள கேள்வி :

"That the draft outline of the Fourth Five-Year Plan of Tamil Nadu be taken into consideration.

'and while on such consideration, this House gives its general approval and acceptance of the draft outline of the State s Fourth Five-Year Plan placed before it.

This House resolves that the State Government should convey to the Government of India the strong feelings of the people of Tamil Nadu in the following matters :—

(i) In regard to the quantum of Central assistance this House views with regret the decision of the Planning Commission and the Government of India to reduce the assistance for the State's Plan from Rs. 250 crores as earlier promised to Rs. 202 crores and requests that the amount should be increased so as to make possible the fulfilment of a Plan of Rs. 624 crores;

(ii) this House feels that it is unfortunate that the Government of India are not proposing to start any new project in the Central sector in this State during the Fourth Five-Year Plan period; and in particular this House urges that the Government of India should proceed expeditiously with the implementation of the following Central sector projects, the economic viability and technical feasibility of which have been well established :—

(1) Salem Steel Plant

(2) Sethusamudram Project.

(3) Second mine cut at Neyveli

(4) Expansion by 200 m. w. of the installed capacity of the Kalpakkam Atomic Energy Plant; and

(iii) the State Government should move the Government of India to accord early approval for the setting up of a fertilizer project at Tuticorin and for a petro-chemical complex at Manali."

அரசினர் தீர்மானம், திருத்தப்பட்டபடி, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.



## (7) அரசினர் மசோதாக்கள்.

(அ) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு மின்சக்தி (பயன்படுத்துவதற்கு வரி விதித்தல்) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 18/69).

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1969-ம் ஆண்டு மின்சக்தி (பயன்படுத்துவதற்கு வரி விதித்தல்) திருத்த மசோதா * (சட்டப் பேரவை மசோதா எண் 18/69) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

பஞ்சாலைத் தொழிலினால் செலுத்தப்பட வேண்டிய மின்சக்தி வரி, பயன்படுத்தப்படும் மின்சக்தியின் விலையில் நாற்பது சதவீதம் என்று விதத்தில் மதிப்பிடப்பட்டு வந்தது. நெருக்கடியான நிலைமையை எதிர்நோக்கியிருந்த பஞ்சாலைத் தொழிலுக்கு இடர் தணிப்புக் கொடுக்க வேண்டிய பொறுப்பு மாநில அரசுக்கு இருந்ததால் பஞ்சாலைகள் பயன்படுத்தும் மின்சக்தி குறித்த வரி வீதத்தை நாற்பது சதவீதத்திலிருந்து முப்பது சதவீதமாகக் குறைக்க வேண்டியது அவசியம் என்று கருதப்பட்டது. அதற்கிணங்க, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு 1969-ம் ஆண்டு மின்சார (பயன்படுத்துவது குறித்த வரி விதித்தல்) திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் 3/1969) 29—7—1969 அன்று சாற்றுரை செய்தார். அந்த அவசரச் சட்டத்திற்குப் பதிலாக இம்மசோதா கொண்டுவரப்படுகிறது.

நெருக்கடி நிலைமையை எதிர்நோக்கியுள்ள பஞ்சாலைத் தொழிலுக்கு அரசு அளித்துள்ள இடர்தணிப்பை இம்மன்றம் வரவேற்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இம் மசோதாவை நிறைவேற்றித் தரவேண்டுமென இம் மாமன்றத்தை நான் கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, while welcoming this measure, I wish to seek a few clarifications from the Hon. Minister. Firstly, is this Bill meant to re-start the mills already closed due to financial reasons or to prevent the mills that are likely to be closed? Secondly, we are cutting down the taxation by 10 paise and what is the extra expenditure that the Electricity Board and the Government are going to incur on account of this measure. Every measure will bring fourth revenue to the Government but in this case the revenue will be reduced and so I want to know the loss of income incurred by the Government. Thirdly, whether the amount that has been released by the Government is going to benefit the workers or some intermediaries and whether there is an agency of the Government to ensure that this amount is going to be effectively given to the concerned workers? I want clarification on these points from the Hon. Minister.

* 20—8—1969-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவர் அவர்களே, பொதுவாக தொழில் வளர்ச்சிக்காக இப்போதுள்ள வரிவிகிதத்தை 40 சதவீதத்தில் இருந்து 30 சதவீதமாகக் குறைக்கவேண்டுமென்று ஏற்கனவே பரிசீலித்து முடிவு செய்ததன் காரணமாக தாற்காலிக நிவாரணமாக இதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறோம். எல்லா ஆலைகளுக்குமே இந்த வரிவிகிதத்தின் பயன் கிட்டும் என்று கருதுகிறோம். இதனால் வாரியத்திற்கு நஷ்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை, தொழிலாளர்களுக்கு ஒரு நன்மை அளிக்கும் அளவில் பஞ்சாலைகள் திறக்கப்பட வேண்டுமென்ற நல்ல கருத்தின் அடிப்படையில்தான் இந்த வரி விகிதத்தை ஓரளவு குறைத்திருக்கிறோம். நம் நிதி நிலைமைக்கு ஏற்ற முறையில் இப்போதுள்ள நிலையில் இவ்வளவுதான் செய்ய முடியும் என்ற காரணத்தினால் தான் 40 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாகக் குறைத்திருக்கிறோம். இதற்கு மேல் இப்போதுள்ள சூழ்நிலையில் குறைக்க முடியாதிருப்பதால் இந்த அளவில் 30 சதவீதமாகக் குறைப்பதாக முடிவு செய்திருக்கிறோம்.

THIRU K. VINAYAKAM: Sir, I want a further clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலிலேயே கேட்டிருக்கலாமே, ஒன்றாகப் பதில் சொல்லியிருப்பார்கள்.

THIRU K. VINAYAKAM: Sir, by this kind of concession shown to the consumers reduction from 40 per cent to 30 per cent what would be the total loss incurred by the Board?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** வாரியத்திற்கு இதன் மூலம் 40 லட்சம் ரூபாய் அளவிற்கு நஷ்டம் வருகிறது என்ற தோராயமான கணக்குதான் இருக்கிறது. தெளிவான கணக்கு இல்லை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1969-ம் ஆண்டு மின்சக்தி (பயன்படுத்துவதற்கு வரி விதித்தல்) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 18/69) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2, 3, முதல் பிரிவு, முகப்புரை, நெடுந்தலைப்பு இவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU O. P. RAMAN: Sir, I move—

'That the Tamil Nadu Electricity (Taxation on Consumption) Amendment Bill, 1969 (L.A. Bill No. 18 of 1969) be passed.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.





### (ஆ) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 14/1969)

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Mr. Speaker, Sir, I rise to present the Bill* for further amending the Tamil Nadu Contingency Fund Act, 1954.

According to section 267 (2) of the Constitution of India, the Legislature of the State can by law establish a Contingency Fund in the nature of an imprest which will be placed at the disposal of the Governor for enabling him to make advances out of such fund for the purpose of meeting unforeseen expenditure pending authorisation of such expenditure by the Legislature by law under Article 205 or 206.

The Madras Contingency Fund Act, 1950, created a Contingency Fund of Rs. 1 crore drawn from the Revenue Reserve Fund. In 1953–54, when the State was partitioned, the Contingency Fund Act, 1954, was passed fixing the amount of the Contingency Fund at Rs. 75 lakhs to be transferred from the Consolidated Fund of the State to the Contingency Fund. The size of the Contingency Fund was again raised to Rs. 1.50 crores in 1959 by an amending Act of the Legislature. Since then there had been an enormous increase in scope and range of activities of Government and the need for enhancing the Contingency Fund was again felt in 1965 when the Government had to step in to purchase foodgrains on a large scale to maintain the flow of supplies to Madras City and certain other areas, and the corpus of the Fund was raised to Rs. 5 crores.

Honourable Members are aware of the unprecedented drought conditions prevailing in the State for the past several months. Government have undertaken a number of drought relief measures and sanctions to the tune of Rs. 17.6 crores have so far been issued. Since expenditure on relief works could not brook postponement, the need arose to raise the corpus of the Contingency Fund in July last from Rs. 5 crores to Rs. 10 crores. As the Legislature was not in session an Ordinance had to be promulgated to enhance the corpus of the Contingency Fund from Rs. 5 crores to 10 crores. This Bill is intended to replace the said Ordinance. I commend this Bill for the acceptance of this House.

Sir, I move—

"The Tamil Nadu Contingency Fund (Amendment) Bill, 1969 (L.A. Bill No. 14/69) be taken into consideration."

*** திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவர் அவர்களே, இப்போது சபையின் முன்னால் 'கண்டின்ஜன்ஸி ஃபண்ட்' பத்து கோடி ரூபாயாக இருக்க வேண்டுமென்ற ஒரு திருத்த மசோதாவை நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ளார்கள். எதிர்பாராத

---

* Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 20th August 1969.

செலவினங்களுக்காக பத்து கோடி ரூபாயை ஒரு சர்க்காரிடம் ஒப்படைக்க வேண்டியது அவசியந்தானா என்று யோசிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். பொதுவாக சபை கூடாத காலங்களில் எதிர்பாராத செலவினங்கள் வருகிறபோது அதை அனுமதிப்பதற்காக கண்டின்ஜன்ஸி ஃபண்ட் ஒன்று வைக்கவேண்டுமென்று அரசியல் அமைப்புச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னால் ரூ. 75 லட்சமாக இருந்தது ஐந்து கோடியாகி இந்த ஆண்டு அதை பத்துக் கோடியாக ஆக்க வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கையில் வேலைத் திட்டங்களுக்காக தொகைகள் அனுமதிக்கிறோம். தேவைக்கு அதிகமாகச் செலவழிக்கும்போது கண்டின்ஜன்ஸி ஃபண்டிலிருந்து சாதாரணமாகக் கொடுப்பது கிடையாது. ஒரு புதிய வேலையை எடுத்து முடிக்க வேண்டுமென்றால் சர்க்கார் சட்டசபை அனுமதி பெறாமல் செய்யவேண்டியிருக்கிறபோது கண்டின்ஜன்ஸி ஃபண்டிலிருந்து அதற்குத் தோராயமாக ஒரு அனுமதியைக் கொடுக்கலாம் என்பதற்காகத்தான் இப்படி ஒரு கண்டின்ஜன்ஸி ஃபண்ட் வைக்கவேண்டுமென்று அரசியல் அமைப்புச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ள தொகையைவிட மிக அதிகமாகச் செலவழிக்கிறபோது அத் தொகையை கண்டின்ஜன்ஸி ஃபண்டிலிருந்து எடுத்துக் கொள்ள முடியாது. அதை கன்ஸாலிடேடட் ஃபண்டிலிருந்து நேராக எடுத்துச் செலவழித்த பிறகு சப்ளிமெண்டரி பட்ஜெட்டை சட்டசபைக்குக் கொண்டு வந்து ராட்டிஃபிக்கேஷன் செய்து கொள்கிறார்கள். ஆகவே அதிகமாகச் செலவழிக்கப்பட வேண்டிய தொகையை கண்டின்ஜன்ஸி ஃபண்டிலிருந்து இதுவரையில் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. ஆதலாலே, புதிய வேலைத் திட்டப்படியோ, இருக்கும் திட்டத்தில் 50,000 ரூபாய்க்கும் மிக அதிகமாகச் செலவழிக்கும்பொழுது, நியூ சர்வீசஸ் ஸ்கீம்படி செலவழிக்க வேண்டுமென்று விதி இருக்கிறது. ஆகவே, இம்மாதிரி விதிமுறைகள் இருக்கும்பொழுது கண்டின்ஜன்ஸி ஃபண்ட் என்ற பெயராலே, 10 கோடி ரூபாய் அளவில், சபைமுன் அனுமதியைப் பெறாமல் செலவு செய்வது என்பது அவ்வளவு சரியானதுதானா? இப்பொழுது 5 கோடி ரூபாய்க்கு அனுமதி இருக்கிறது. எதிர்பாராத செலவுகளுக்காக 10 கோடி ரூபாய் அளவிற்குத் தேவைப்படுகிறது என்றால் உடனடியாகச் சட்டசபையைக் கூட்டி அனுமதி பெற்று செலவழிக்க முடியும். ஆகவே, இந்தப் பத்து கோடி ரூபாய் என்பது ஒரு நாளிலே, இரண்டு நாளிலே, ஒரு மாதத்திலே செலவழிக்கக் கூடிய காரியம் அல்ல. ஆகவே, சர்க்கார் அனுமதிக்கப்பட்ட இந்த 5 கோடி ரூபாய் செலவான பிறகு, மேற்கொண்டு ஆகும் செலவுகளுக்குப் பணம் தேவைப்பட்டால், உடனடியாகச் சட்டமன்றத்தைக் கூட்டி அனுமதி பெற்றுச் செய்ய வேண்டும். அதுதான் முறையாக இருக்கும். 10 கோடி ரூபாயைத் தந்து, இஷ்டப்படி செலவு



செய்துவிட்டு, பிறகு சட்டமன்றத்தில் வைக்க வேண்டுமென்பது சரியாக எனக்குப் படவில்லை. ஆகவே, இந்தத் திருத்தத்தை கனம் நிதியமைச்சரவர்கள் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

திரு. க. இராமமூர்த்தி: தலைவரவர்களே, இன்றுள்ள கன்டின்ஜென்ஸி ஃபண்டு பில்லிலே 10 கோடி ரூபாய் புதிதாக அனுமதிக்க வேண்டுமென்று கேட்கின்ற காலத்திலே, 10 கோடி ரூபாயை அனுமதித்துக் கொடுப்பதற்கான காரணத்தைச் சொல்லுகின்ற நேரத்திலே, துயர் தணிப்பு நடவடிக்கைகளுக்காகவும், பஞ்ச நிவாரண நடவடிக்கைகளுக்காகவும் அரசு எதிர்பாராச் செலவுகளை எதிர் நோக்க வேண்டும், அதற்காக இந்த 10 கோடி ரூபாய் தேவை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒன்றை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன், குறிப்பிட்ட ஆண்டுக் காலத்திற்குத் தான் தேவை என்பதை இந்த பில்லில் சேர்த்திருந்தால், பின்னால் வரவிருக்கும் சிக்கல்களைத் தவிர்க்க ஏதுவாகயிருந்திருக்கும். பஞ்ச நிலை காரணமாக, இந்த ஆண்டு எதிர்பாராதவகையில் 10 கோடியாக உயர்த்தப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், இதை நிரந்தரமாக்கி விட்டால், பட்ஜெட் சமர்ப்பிக்கப்படும் நிலையில் அதற்கு வேண்டிய முக்கியத்துவம் இல்லாத நிலைமைகள் மாறிவிடும். சர்க்கார் எப்பொழுது வேண்டுமானாலும், சட்டசபையைக் கூட்டாமலேயே, சட்டசபையைக் கலக்காமலேயே, அனுமதி இல்லாமலேயே பணத்தை எடுத்துக் கொள்ளலாம், என்று சட்டம் நிறைவேற்றி கொண்டால் அது இந்தச் சபையினுடைய நடவடிக்கைகளுக்கும், எண்ணங்களுக்கும் போதுமான பிரதிபலிப்பாக சர்க்கார் தரப்பிலே இருக்காது என்ற நிலைமை ஏற்படும். சர்க்கார் அபிவிருத்தி வேலைகளையெல்லாம் இந்த மன்றத்திலே கலக்காமல் செய்து விட்டு, அதைச் சொல்லுகின்ற நிலைமைதான் இருக்குமே தவிர, அதைத் தெரிவிக்கின்ற நிலைமைதான் இருக்குமே தவிர, அரசுக்கு ஆலோசனை கூறுவதாக இந்தச் சபை இருக்காது. எனவே, கன்டின்ஜென்ஸி பில்லைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டுக்கு என்று இப்பொழுது வைத்துக் கொண்டால், பின்னாலே எதிர்பாராதவிதமாக இன்னும் தொடர்ந்து பஞ்சநிலைமைகள், தமிழகத்திலேயுள்ள வறட்சி நிவாரண வேலைகளுக்கு வேண்டுமானால் அவ்வப்பொழுது அந்தந்த ஆண்டுகளிலே நிலைமைகளுக்குத் தகுந்தபடி கன்டின்ஜென்ஸி பில்லை உயர்த்துவதுதான் சரியான முறை என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

அதைப்போலவே, இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கன்டின்ஜென்ஸி பில்லின் கீழ் 10 கோடி ரூபாய் அளவிலே சர்க்கார் செலவு செய்யலாம். அதே நேரத்தில், இப்படிப்பட்ட வேலைகளைச் செய்யும் நேரத்தில், இப்படிப்பட்ட அடிப்படையிலே செய்கிறார்கள் என்பதை அரசாங்கம் இந்த

அவைக்குச் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. அனுமதியை மட்டும் பெற்றால் போதாது. அதன் நடவடிக்கைகளைப் பற்றிய விவரம் இந்தச் சபையின் கவனத்திற்கு உரிய முறையிலே தரப்பட வேண்டும். சபையிலுள்ள அங்கத்தினர்களைக் கொண்டு அபிவிருத்தி வேலைகளில் இனிமேல் ஆலோசனை செய்யப்படும் என்ற உறுதி மொழியையும் இந்த அவையிலே தந்தார்கள். நான் நிச்சயமாகச் சொல்லிக்கொள்ள முடியும், உறுப்பினர்களைத் தகுந்த முறையில், நல்ல முறையில், உரிய முறையில், உரிய காலத்திலே கலந்து கொண்டு எந்தப் பகுதியிலும் செய்யவில்லை என்பதை நான் அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றைக்குமகூட மாவட்ட அபிவிருத்தி மன்றத்திலும், பஞ்சாயத்துப் பெருமன்றங்களிலும், நகராட்சி மன்றங்களிலும் சட்டமன்ற உறுப்பினர்களை என்ன வேலைகள் செய்கிறார்கள் என்று தெரிவிக்கின்ற அளவிலேதான் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அபிவிருத்தியைப் பொறுத்தவரையில், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அபிவிருத்திகளுக்கும் தொடர்பு இல்லை என்ற நிலை இருக்கிறது. இப்படியிருப்பதால் பல்வேறு இடங்களில் ஊழல்கள், சரிவர இந்த வேலைகள் நடைபெறாத நிலைமைகள் நிலவிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, கன்டின்ஜென்ஸி பில்லைப்போட்டு, பணத்தை அதிகமாகப் பெறுவதிலே கவனம் செலுத்துவதால் மட்டும் பிரயோஜனம் இல்லை. உரிய முறையில் அதைச் செலவு செய்வதற்காக, இந்த மன்றத்தின் அங்கத்தினர்களுக்கும் உரிய பங்கை, உரிய வாய்ப்பை அளிக்கும் வகையில் சர்க்கார் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த பில்லில் இந்த ஆண்டுக்கு மட்டும் உயர்த்திக் கொடுப்பதற்கு அவைக்கு ஏதும் ஆட்சேபணையில்லை என்று கூறி, அரசும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

* THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, I wish to say a few words on the Bill introduced in the Legislative Assembly of Tamil Nadu to increase the amount in the Contingency Fund from Rs. 5 crores to Rs. 10 crores. The object of the Bill is stated as follows : " The State Government would be incurring considerable expenditure towards drought relief measures in different parts of the State and as the expenditure had to be met from the Contingency Fund, it was considered necessary to increase the amount from Rs. 5 crores to Rs. 10 crores. " The object of the Bill is very reasonable, and also laudable. From the experience of mine, I can say that there are 31 taluks in our State badly affected by drought and this Government have been attending to relief works with expedition. I am glad to say that the Hon. Finance Minister, Hon. Minister for Local Administration and Hon. Chief Minister all came to my taluk and considered drought conditions there and a considerable amount had been spent in my taluk towards drought relief. Considering the magnitude and also calamitous nature of the drought, I think



there must be enough and adequate funds at the disposal of Government to spend for such unforeseen contingencies and situations so that when people approach them or when they go to villages or taluk headquarters, they can promise some amounts for immediate works.

With regard to treatment of M.L.As. I wish to endorse the views of the hon. Member Thiru Ramamoorthy. With regard to expenditure, M.L.As. are ignored. Our views are not taken into account; we feel there should be more check and arrangements for proper accounting. I want to state in this connection that Collectors have discretionary funds with them and they can spend from that fund for unforeseen contingencies. The amount could also be given to Collectors to be added to their discretionary funds instead of to the Panchayat Union Councils; then the Collectors can spend from that for drought relief works, etc. We need not approach other authorities for funds. The Collectors also can spend the amounts properly. With these words I wish to say that the Bill may be passed and the amount in Contingency Funds be increased from Rs. 5 crores to Rs. 10 crores.

THIRU K. VINAYAKAM : Here is a Bill which seeks to increase the amount to be put into Contingency Fund from Rs. 5 crores to Rs. 10 crores. What is the object of this Contingency Fund? Whenever the Government is beset with unforeseen circumstances when they could not come to the Legislature with a regular demand. . . . . .

THE HON. THIRU K. A. MATHIALAGAN : 'Unforeseen' means that which cannot be foreseen.

THIRU K. VINAYAKAM : I know that. When an unforeseen contingency comes, you can spend the amount from Contingency Fund and then come to this House for approval. The object is of course nice. Previously the amount was Rs. 1 crore. It was reduced to Rs. 75 lakhs, since the commitments were less. Afterwards in 1952, it was raised to Rs. 5/ crores. Now it is sought to be raised to Rs. 10 crores. What is the snag behind it? This drought is not going to be a continuous affair. It is likely to disappear soon. So we should not allow the commitment to continue for ever. We cannot give a wide power to Government and give so much money to them to be used according to their wish. That is not correct. Ten crores! The way in which the amount is being utilised in the drought stricken areas the Speaker knows and the entire House knows. (Interruption) The Speaker is above all these things. But he is very mindful of what works are being carried on in his constituency. I will not drag him into this mess. More often these kinds of works are executed through the panchayat unions. They do not have an approved list of contractors. What happens? They call a ptrty man and entrust the work to him. If I happen to be the Chairman of a council, I would call my

[Thiru K. Vinayakam] [1969 ஆகஸ்ட் 26

party man and ask him to execute the work without calling for tenders. Then it is my job to throw away the money, ask him to do something and tell me after he has spent the money.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : On a point of order, Sir, The Member must substantiate his point. There is no use of telling that partymen were called and entrusted with the execution of work without calling for tenders. When was it done and who was the party man?

THIRU K. VINAYAKAM : The Minister raises a point of order for cornering me to bring in specific instances on the floor of this House. This is a thing which can be gone into. My allegations are general——I admit.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : But it is a very serious allegation, Sir.

THIRU K. VINAYAKAM : I am not trying to run away from my allegations. I have been given plenty of instances in my own constituency as well as in other constituencies where party people were sent for and contracts given.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The allegation is about financial dishonesty.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* நம்முடைய எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் சர்க்கார் செய்கின்ற தவறுகளைச் சுட்டிக் காட்ட வேண்டாமென்று நான் சொல்லவில்லை. சுட்டிக்காட்டுங்கள். பொதுவாக, கட்சிக்காரர்களுக்குக் கொடுத்துவிட்டார்கள், அவர்களுக்கு வேண்டியவர்களுக்குக் கொடுத்துவிட்டார்கள், என்று இல்லாமல் குறிப்பிட்டுச் சொல்லுங்கள். குறிப்பாக, திருத்தணித் தொகுதியிலே இன்னின்ன புகார், இன்னின்ன குற்றங்கள் இருக்கின்றன என்று சொல்லுங்கள், விசாரிக்க வழி ஏற்படும்.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :* தலைவரவர்களே, கனம் உறுப்பினர் எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் தன்னுடைய தொகுதியிலும் வேறு பல தொகுதிகளிலும் கட்சி ஆட்களை அழைத்து வேலைகளைச் செய்யச் சொல்லி, ஏதோ வேலைகளைச் செய்யச் சொல்லி, செய்திருக்கிறார்கள் என்று ராடிஃபிகேஷன் பெறுகிறார்கள் என்றெல்லாம் குற்றம் சொன்னார்கள். பிற தொகுதிகளில் கூட அவர் சொல்ல வேண்டாம். திருத்தணியிலாவது சொல்லட்டும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்களைக் கூப்பிட்டு, என்னென்ன வேலைகளை நாங்கள் செய்யச் சொன்னோம் என்று சொல்லட்டுமே.



1969 ஆகஸ்ட் 26]

*திரு. பி. ஜி. கருத்திருமன் :* குற்றச்சாட்டு என்றால் இன்ன அரசியல் கட்சி என்று சொல்லவில்லை. கட்சி என்று சொன்னால் பார்டி, பார்டி என்று சொன்னால் கான்ட்ராக்டர், கான்ட்ராக்டர் என்று சொன்னால் இன்டரஸ்டட் கான்ட்ராக்டர்ஸ். முன்னால் இருந்த முதலமைச்சரவர்கள், பொதுவாக அங்காடிப் பேச்சுக்களும் மார்க்கெட் பேச்சுக்களும், என்று சொன்னார்கள். இன்ன கட்சி என்று சொன்னார்களா? உங்களுடைய கட்சிக்காரர்கள் செய்தார்கள் என்று சொன்னார்களா? ஆகையினாலே பொதுவாக இருக்கிறதாக அதை கருதிக்கொள்ள வேண்டும். இத்தனை கோடி ரூபாய் வீணாகி இருக்கிறது என்று தான் சொல்கிறார்கள்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* திரு. விநாயகம் என்னுடைய கட்சிக்காரர்கள் இருந்தால் எங்களுடைய ஆட்களைத்தான் கூப்பிடுகிறோம் என்றார். கட்சி இல்லை என்று சொல்லவில்லை.

*திரு. பி. ஜி. கருத்திருமன் :* தனியாகக் காங்கிரஸ் கட்சி என்று சொல்லவில்லை.

THIRU K. VINAYAKAM : I stand by my statement.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியதைப் போல் கன்டிராக்டர்கள் தான் அந்தக் கட்சிக்காரர்கள் என்றால் அவர்கள் ரிஜிஸ்டர்ட் கன்டிராக்டர்கள். இந்தக் கட்சிக்காரர்கள் வேண்டியவர்களாக இருந்தார்கள், கூப்பிட்டுக் கொடுத்தார்கள் என்று குறிப்பிட்டு குற்றச்சாட்டைச் சொல்லுங்கள், பொதுவாகச் சொல்லுவீர்களானால் அவர்களால் பதில் சொல்ல முடியாது.

THIRU K. VINAYAKAM : If the Government is not shy of an enquiry, may I ask them to constitute a committee . . . . .

THE HON. THIRU P. U. SHANMUGAM : On a point of order, Sir, How can the hon. Member say we are shy?

THIRU K. VINAYAKAM : If you are *not shy*.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Why do you want a committee?

THIRU K. RAMAMOORTHY : I will give specific instances.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* திரு. இராமமூர்த்தி கொஞ்சம் உட்காருங்கள். எந்த இடத்திலே எழுந்து நிற்பது? எதற்கெடுத்தாலும் நாங்கள் சொல்லுகிறோம் ஒரு கமிட்டி அமையுங்கள், விசாரிக்கலாம் என்றால் அந்தக் கமிட்டி அமைத்தால் காரியமே நடக்காது போய்விடும்.

*திரு. பி. ஜி. கருத்திருமன் :* இந்த அவையிலே நன்றாகச் சொல்லுங்கள். கமிட்டி அமைத்தால் காரியமே ஆகாது இந்த சர்க்கார் இருந்தால் என்று புரிந்துகொள்ள முடிகிறது.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* நீங்கள் இங்கேயே சொல்லுங்கள். பரிசீலனை செய்வதற்கு அமைச்சர்கள் இருக்கிறார்கள்.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :* குழு அமைக்க வேண்டும், அல்லது சர்க்கார் கட்சியைச் சேர்ந்தவர்கள் செய்வதிலே நம்பிக்கைப்படாமல் இருந்தால் குழு அமைக்க வேண்டுமென்று கோறடா கேட்கிறார்கள், அதை எப்படி நம்புவார்கள்? இங்கே சொல்லட்டும், குழு ஏன் கேட்கிறார்கள் ?

THIRU K. VINAYAKAM : Sir, I am very strong in my statement and I stand by it; you cannot ask a member to bring an instance which is to be cleared here on the floor of this House. I am asking you to constitute a committee so that the entire working can be gone into.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* இதுபோன்ற பேச்சை இந்த அவையிலே அனுமதிக்க முடியாது.

THIRU K. VINAYAKAM : I have freedom of speech.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* உங்களுக்குப் பேசுவதற்கு உரிமை இருக்கிறது. அதை மறுக்கவில்லை. அந்த உரிமை ஒரு வரம்பிற்கு உட்பட்டுத்தான். அந்த உரிமை இருக்கும்போது, 'வேக் அலிகேஷன்ஸ்', பொதுவான குற்றச்சாட்டுகளைக் கூறக் கூடாது, தெளிவான குற்றச்சாட்டுகளைக் கூற வேண்டும். அது தான் அந்த வரம்பு. அந்த வரம்புக்கு உட்பட்டு சொல்லுங்கள். பொதுவான குற்றச்சாட்டுகளைச் சொல்ல வேண்டாம், தெளிவான குற்றச்சாட்டுகளைக் கூறுங்கள். குற்றச்சாட்டைக் கூறுவதற்கு திரு. விநாயகம் அவர்கள் ஏன் பயப்பட வேண்டும்? வரிசையாக அடுக்குங்களேன் ஒன்று, இரண்டு என்று.

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, I rise on a point of order. The hon. Member makes an allegation here. The Members on the Treasury Benches counter the allegation made by the hon. Member. Who is to find out the truth of the allegation and the counter-allegation? What is the machinery provided for in the rules to find out the truth of the allegations made on the floor of this House?

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* அது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. (திரு. மார்டின் நின்று கொண்டிருந்தார்). நீங்கள் உட்காருங்கள் மார்டின். இந்த இந்த இடங்களிலே குற்றங்கள், தவறுகள் நடந்திருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்லட்டும், அந்தத் தவறுகளுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அது உண்மையா, தவறா என்று சொன்னால் தெரிகிறது. நாமெல்லாம் காணாது வேறு யாராவது வந்தா அந்த குற்றத்தைக் காண வேண்டும் ? ஒவ்வொரு இடத்திலும் இன்ன ஆளுக்கு இன்ன வேலை கிடைத்திருக்கிறது, அவர் இன்ன கட்சிக்காரர் என்று திரு. விநாயகம் அவர்கள் குற்றம் கூறட்டும். அந்தக் குற்றத்தை அமைச்சர்கள் மறுக்கிறார்களா என்று பாருங்கள். எந்த அளவிற்கு மறுக்கப்படுகிறது, பாருங்கள். 236 உறுப்பினர்கள் அமர்ந்துள்ளோம். நாமெல்லாம் தெரிந்து கொள்ளாமல் அதற்கு வேறு ஆளா வரவேண்டும்? பொதுவான குற்றச்சாட்டைப்பற்றிப் பேசுவது என்றால் நேரம்தான் வீணாகிறது. தெளிவான குற்றம் கூறுங்கள், பொதுவான குற்றம் கூறாதீர்கள்.



THIRU K. VINAYAKAM : On grounds of discretion I am not now divulging these instances. I will give these instances to the Minister in private so that he may go into them. Increase of the sum in the Contingency Fund will be only opening the flood gates for the Government to commit more mistakes. The Fund is so huge that they can draw any amount from the reservoir of ten crores. That is why I am opposing this Bill. The Government should not be clothed with the power to dabble with this large sum of ten crores which may lead to encouragement of the growth of their own party at the expense of my party.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* அதுதான் வேண்டாமென்று சொல்வது ?

*மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :* மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எதிர்பாராச் செலவு நிதிச் சட்டத்தை திருத்துவதற்கான இந்த மசோதாவின்மீது ரூபிகரமான விவாதம் நடந்ததை நான் பாராட்டுகிறேன். நம்முடைய நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள் ஓர் அச்ச உணர்வைத் தெரிவித்தார்கள். இதிலே எந்த அச்ச உணர்வும் தேவை இல்லை. ஏதோ அரசாங்கம் பணத்தைச் செலவழிக்கிறது என்று பயப்படுவதற்கும் எந்த முகாந்திரமும் இல்லை. இந்த மாமன்றத்திற்கு இந்த அதிகாரங்கள் இருக்க வேண்டுமென்பதும், இந்த மாமன்றத்தினுடைய அனுமதியோடு, இதற்கு ஒரு முத்திரை கொடுத்தால் அது முடிகிறது என்பதும் எல்லோரும் ஒத்துக் கொண்ட ஒன்று. இருந்தாலும் ஒரு அரசாங்கத்தினுடைய அன்றாட நடவடிக்கைகள் தொடர்வதற்கு கன்டின்ஜென்ஸி ஃபண்டு வேண்டுமென்று வைத்துள்ளோம். எதிர்பாராமல் வரக் கூடும், மழையும் வரக் கூடும், வெயிலும் வரக் கூடும், ப்ளட் கேட்ஸ்ஸும் வரக் கூடும், கேட்ஸ் போய்விடவும் கூடும். ஆகவே, அதற்காக பெரிய நிபுணர்கள், ஜனநாயகவாதிகள், இந்தியாவுக்கு கொடுத்த

[திரு. கே. ஏ. மதியழகன்] [1969 ஆகஸ்ட் 26

அரசியல் சட்டத்திலே இருக்கிற விதியின்படி. இது செய்யப்படுவதே தவிர, புதிதாக முன்னேற்றக் கழகம், அதனுடைய மந்திரிகள் வந்து, திடீரென்று எல்லாம் அனுமதித்து கணக்கிலே செலவு செய்வதற்காக இது எடுக்கப்படவில்லை. ஆந்திர பிரிவிற்கு முன்னாலே ஒரு கோடி ரூபாய் என்று இருந்து அதற்குப் பிறகு 1959-லே 1½ கோடியாகி, 1966-வது வருஷத்திலே தமிழ்நாடு பூராவும் பஞ்சம், பட்டினியால் பலபேர் செத்த நேரத்தில் தமிழ் நாட்டிலே . . . .

திரு. பி. ஜி. கருத்திருமன் : எத்தனை பேர்கள் செத்தார்கள் பஞ்சம் பட்டினியால் என்ற புள்ளிவிவரத்தைச் சொல்லவேண்டும். இது மாதிரி வேக் அலிகேஷன்ஸ் கூடாது. சென்ற ஆட்சியில் பஞ்சம் பட்டினியால் எத்தனை பேர்கள் செத்தார்கள் என்பதற்குப் புள்ளிவிவரம் வேண்டும்.

பி.ப. 12 00 மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : செவிலிமேடு என்ற கிராமத்தில் பூந்தமல்லிக்கு மூன்று மைல்களுக்குப் பக்கத்தில் முன்னாள் முதல் அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் ஊரில் ஒரு அம்மாள் (குறுக்கீடு) பெயர் இருக்கிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : பஞ்சம் பட்டினியினால் செத்தவர்கள் எத்தனை பேர்கள் என்பதைச் சொல்லவேண்டும். லிஸ்டு வேண்டும். (குறுக்கீடு) இன்றைக்கு முடியாவிட்டால் நாளைக்கு வைக்கட்டும். (குறுக்கீடு) சபாநாயகர் அவர்களே, பாதுகாப்பு வேண்டும். வாய் திறந்து திருவாயால் சொல்ல வேண்டும் எவ்வளவு பேர் செத்தார்கள் என்று, வேக் அலிகேஷன்ஸ் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவரிடம் பாதுகாப்புக் கேட்கிற நேரத்தில் பேரவைத் தலைவரின் ஆணையையும் மதிக்க வேண்டும். இரண்டு பேர்களும் ஒவ்வொருக்கொருவர் பேசிக்கொண்டிருந்தால் எப்படி? நீங்கள் குறுக்கிடுவதற்கு அமைச்சர் அவர்கள் இடம் கொடுக்க வேண்டும். நீங்களும் நிற்கிறீர்கள், அமைச்சர் அவர்களும் நிற்கிறார்கள். அவர்களும் பேசுகிறார்கள். நீங்களும் பேசுகிறீர்கள். எப்படி அது முறையாகும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : 1962-வது வருடத்தில் . . . .

THIRU T. MARTIN : Sir, On a point of order. When you are standing the Hon. Minister is also standing.

THIRU K. VINAYAKAM : Sir, on a point of order. You have given a ruling that no vague allegation should be made on the floor of the House without substantiating it with concrete instances. So, is the Hon. Minister justified in stating that a number of deaths had taken place. . .



1969 ஆகஸ்ட் 26] [திரு. கே. விநாயகம்]

பல கோடிக்கணக்கான மக்கள் இறந்தார்கள் என்று சொன்னார்கள். நம் ஊரில் இருக்கிற மக்களே 3 கோடி தான். தயவு செய்து கணக்குக் கொடுக்க வேண்டும் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் நீங்களும் கேட்கிறீர்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் கேட்கிறார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தயவுசெய்து தாங்கள் தீர்ப்புக் கொடுக்க வேண்டும். பஞ்சத்தால் இறந்தார்கள் என்றால், எத்தனை பேர்கள் இறந்தார்கள் என்று சொல்லவேண்டும் . . .

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அவர் அப்ஸ்ட்ராக்ட் செய்கிறார். உணவு நெருக்கடி ஏற்பட்ட நேரத்தில் ரூ. 5 கோடி செலவு செய்யப்பட்டது . . . .

திரு. பி. ஜி. கருத்திருமன் : பஞ்சத்தில் இறந்தவர்கள் லிஸ்டு வேண்டும் . . . .

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : எங்கேயோ போகிறீர்களே? விஷயத்திற்கு வரலாம் . . . .

திரு. பி. ஜி. கருத்திருமன் : தயவுசெய்து பஞ்சத்தினால் எத்தனை பேர்கள் இறந்தார்கள் என்பதைச் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பல பேர்கள் இறந்தார்கள். உங்களிடத்தில் அல்ல, உங்கள் கட்சியைச் சேர்ந்த முதல் அமைச்சர் அவர்களிடத்திலேயே நிரூபித்திருக்கிறேன். சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகளை எடுத்துப் பாருங்கள். ரெவின்யூ ரிகார்டில் போட்டிருக்கிறது. ஒரு விஷயத்தைச் சொன்னால், பலமாகப் பேசினால் அதில் என்ன அர்த்தம் இருக்கிறது?

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : சபையில் பேசுகிறபொழுது அங்கத்தினர்கள் ஆதாரத்தோடு பேசவேண்டியது முறை என்பதை ஒப்புக் கொள்கிறோம். ஆனால், கடந்த காங்கிரஸ் ஆட்சி காலத்தில் பஞ்சத்தினால், பசியினால், வாடி எத்தனையோ பேர்கள் கிணற்றில் விழுந்து செத்தார்கள். கைத்தறி நெசவாளர்கள் செத்தார்கள். இதெல்லாம் பத்திரிகையில் வந்திருக்கிறது. அதை நிரூபிக்க வேண்டும் என்று திரு. கருத்திருமன் அவர்கள் சொன்னால், அதை எடுத்து இந்தச் சபையில் சமர்ப்பிக்கத் தயாராக இருக்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அதே மாதிரி இந்தச் சர்க்கார் பற்றி எத்தனையோ பத்திரிகையில் வந்திருக்கிறது . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி ஒருவர் பேசிக்கொண்டிருக்கும்பொழுது இன்னொருவர் பேசினால் என்ன அர்த்தம்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** சொல்லவந்த விவகாரத்தை விட்டுவிட்டு வேறு எங்கேயோ ரொம்ப தொலைவிலே போய்விடுகிறார். எதிர்பாராத உணவு நெருக்கடி ஏற்படுகிற பொழுது, பஞ்சம் ஏற்படுகிறது. உடனே தானியத்தைக் கொடுக்க வேண்டும் என்றால், சட்டசபையை கூட்டக் கூடாது என்பது அல்ல, அதற்கு அதிகாரம் இல்லை என்பது அல்ல. சில வேளைகளில் எதிர்பாராமல் செலவுகள் ஏற்படுகின்றன. இப்பொழுது ரூ. 5 கோடி என்றிருக்கிறது. அதை ரூ. 10 கோடி என்று உயர்த்துகிறோம். ரூ. 5 கோடி என்றாலும், ரூ. 10 கோடி என்றாலும் ஆபத்து ஏற்படுகிற சமயத்திற்காகத் தான் இந்த ஏற்பாடு. ரூ. 5 கோடி, ரூ. 10 கோடி என்று வளர்கிறது. நாம் முன்னேற்றம் அடைகிறோம். விவகாரங்களில் முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கிறோம். இம்மாதிரியான செலவுகள் வருகிற நேரத்தில், உடனே செய்ய வேண்டியிருக்கிறது. ரூ. 10 கோடி பார்ப்பதற்குப் பெரியதாக இருக்கிறதே தவிர, வேறு ஒன்றுமில்லை. 1968-ம் வருடத்தில் ரூ. 70 கோடி அளவில் நம்முடைய ரெவின்யூ பட்ஜெட் இருந்தது. இன்றைக்கு ரூ. 268 கோடியாக இருக்கிறது. ரூ. 70 கோடி எங்கே, ரூ. 268 கோடி எங்கே ? முன்பு ரூ. 5 கோடியாக இருந்தது இப்பொழுது ரூ. 10 கோடியாக ஆகிறது.

ஒரு தவறான கருத்து இந்த மன்றத்தில் ஏற்பட்டிருக்கிறது. ஏதோ பணம் ரூ. 10 கோடி என்றால் ஒரு காகிதம், ஹோட்டலில் சாப்பாட்டு டிக்கெட்டு கிழிப்பதுபோல கருதுகிறார்கள். இதற்கு எல்லாவிதமான வரம்புகளும் உண்டு. எல்லாவிதமான ஆடிட்களும் உண்டு. கடைசியில் பப்ளிக் அகௌண்ட்ஸ் கமிட்டி பரிசீலனை உண்டு. பப்ளிக் அகௌண்ட்ஸ் கமிட்டித் தலைவரும் இருக்கிறார். ஒரு காலணாவுக்குக் கூட கணக்கு உண்டு. அப்படிக் கொடுப்பதைக்கூட இந்த மன்றம் அனுமதிக்க வேண்டும். ரூ. 10 கோடி செலவு செய்து விட்டால், ஏதோ செலவு செய்துவிட்டார்கள் என்று அது ஏற்றுக்கொள்ளப்படுவது அல்ல. இந்த நிலைமைகளெல்லாம் மிகத் தெளிவாக இருக்கிறது. ஆளுனரிடத்தில் சும்மா கையிலே கொடுத்து வைத்திருப்பதைத் தவிர, இந்தச் சட்டமன்றத்தில் தான் அதற்கான அனுமதி வழங்க வேண்டும். செலவு செய்யப்பட்டிருந்தால்கூட, முன் அனுமதி இல்லாத செலவு தான். எதிர்பாராத காரியங்களுக்காகத் தான் இது சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. வளர்கிற நம்முடைய தமிழக வரவு-செலவு விவகாரங்களிலே, நான் சொன்னதைப் போல, கன்டின்ஜென்ஸி பண்டு என்பது 4 சதவீதமாகும். நியாயமான காரியங்களுக்கு, முறைப்படி வகைப் படுத்தப்பட்டுத்தான் செலவழிக்கப்படும். இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ. 2 கோடி செலவு செய்திருக்கிறோம். வட ஆற்காடு மாவட்டத்திற்கு ரூ. 2½ கோடி செலவு செய்திருக்கிறோம். இப்படி நிலைமைகள் வளர்ந்து கொண்டே போகின்றன, தேவைகள் வளர்ந்து கொண்டே போகின்றன. நமக்கு வேண்டிய காரியங்களும் பெரியவர்களாகிறோம்.





சட்டமன்றத்திற்கு இருக்கிற அதிகாரம், சட்டமன்றத்திற்கு இருக்கிற வாய்ப்புகள், உரிமைகள் இவைகள் பறிக்கப்பட்டு, தான்தோனித்தனமாக செலவு செய்ய இந்தத் தொகை ஒதுக்கப் பட்டிருக்கிறது என்று ஒரு நாளும் ஆகிவிடாது. எனவே, அருள் கூர்ந்து இந்த மசோதாவை ஆதரித்து, நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** சபாநாயகர் அவர்களே, அருள் கூர்ந்து உங்களைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், நிதி அமைச்சர் அவர்கள் சென்ற காங்கிரஸ் ஆட்சியில் 1965-ம் வருடம் பஞ்சத்தால், பட்டினியினால் பல பேர்கள் வாடி, செத்திருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை சாட்டியிருக்கிறார்கள். தயவுசெய்து ஒன்று அதை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும். அல்லது எவ்வளவு பேர் செத்தார்கள் என்ற கணக்கை இன்று இல்லாவிட்டாலும் நாளைக்காவது தரவேண்டும். பஞ்சம், பட்டினியால் செத்தார்கள் என்பதை நிரூபிக்கப் போகிறார்களா ? தயவுசெய்து தாங்கள் தீர்ப்புக் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏதாவது ஒன்றை எடுத்து வைத்துக்கொண்டு . . . . (குறுக்கீடு) (எதிர்க் கட்சித் தலைவர் எழுந்தார்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார் என்று கேட்கலாம். கொஞ்சம் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒழுங்குமுறைக்கு உட்பட்டு நடக்கிறாரா? அதற்கு முதலில் சபாநாயகர் அவர்கள் தீர்ப்புச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. விநாயகம்:** ஒரு விளக்கம். ரூ. 5 கோடி கன்டின்ஜென்ஸி பண்டு இப்பொழுது ரூ. 10 கோடியாக உயர்கிறது. ஆகவே, அப்பொழுது பட்டினியால், பஞ்சத்தால் செத்தவர்கள் 5 பேர்கள் என்றால், இப்பொழுது 10 பேர்களா ? அதைப்போல் இப்பொழுது டபிள் பங்கா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன இது? இது ஒரு விளக்கமா? (திரு. கே. விநாயகம்: கிளாரிபிகேஷன்.) ரூ. 5 கோடி ரூ. 10 கோடியானால், அப்பொழுது செத்தவர்கள் 5 பேர்கள் என்றால், இப்பொழுது அது 10 பேர்களா என்று கேட்பது ஒரு கிளாரிபிகேஷனா. வள்ளுவர் படத்தை இங்கே வைத்துக் கொண்டு தான் இருக்கிறோம். என்ன சொற்களைச் சொல்லவேண்டும் என்பதை ஆராய்ந்து பார்த்துச் சொல்லவேண்டும். ஒரு கண்ணியமான முறையிலே வாதங்கள் போக வேண்டும். செத்தார்கள் என்று சொன்னால், எத்தனை பேர்கள் செத்தார்கள்

என்று கேளுங்கள். 5 கோடி ரூபாய் இருந்தபொழுது 5 பேர்கள் செத்தால், 10 கோடி ரூபாய்க்கு 10 பேர்கள் செத்தார்களா என்று கேட்பது கிளாரிபிகேஷன் கேட்பது ஆகாது. குறளை கையில் வைத்திருக்கிறோம். வள்ளுவர் படத்தை வைத்திருக்கிறோம்.

"நயன்இலன் என்பது சொல்லும் பயன்இல
பாரித்து உரைக்கும் உரை."

என்று திருவள்ளுவர் கூறியிருக்கிறார்.

(எதிர்க்கட்சித் தலைவர் எழுந்திருந்தார்)

உட்காருங்கள். இப்பொழுது மாண்புமிகு அமைச்சருடைய கோரிக்கை வாக்கெடுப்பிற்கு விடப்படுகிறது . . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஸார், நான் தங்களுடைய ரூலிங் கேட்டேன். அமைச்சர் அவர்கள் சொன்னதை ஒன்று வாபஸ் பெறவேண்டும், அல்லது நிரூபிக்க வேண்டும். அது பற்றித் தங்கள் ரூலிங் கேட்டேன். (குரல்கள் : ரூலிங், ரூலிங்) மதிப்பிற்குரிய அமைச்சரவர்கள் காங்கிரஸ் ஆட்சியில் பஞ்சத்தாலும், பட்டினியாலும், பல பேர் செத்தார்கள் என்று சொன்னார்கள். இந்த மாதிரிக் குற்றச்சாட்டை ஒன்று வாபஸ் பெற வேண்டும், அல்லது அதற்கான புள்ளிவிவரங்களைக் கொடுக்க வேண்டும். அதுபற்றி சபாநாயகர் அவர்கள் தங்களுடைய தீர்ப்பைக் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் சொன்னதற்கு, உறுப்பினர் திரு. ஆசைத்தம்பி, 'தருகிறேன்' என்று சொல்லியிருக்கிறார்கள். அவரும் அதை இந்த அவையில் தான் சொல்லியிருக்கிறார்கள்.

**சில குரல்கள் :** மினிஸ்டர் என்ன சொல்லுகிறார்கள் ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அமைச்சர் என்ன சொல்லுகிறார் என்பதையும் கேட்டுவிட்டுச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆசைத்தம்பி ஆளும் கட்சியைச் சேர்ந்தவர். அவர்கள் கொடுப்பதாகச் சொன்னால், அதை ஆளும் கட்சி கொடுப்பதாகத்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த விவாதத்தை அதோடு நிறுத்திக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அப்பொழுது மட்டும், திரு. இராமமூர்த்தி கொடுக்கிறேன் என்றபோது, விநாயகம் கொடுக்க வேண்டும் என்று சொன்னீர்களே. அதற்கு மட்டும் அப்படி, இவர்கள் சொன்னால் . . . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னின்ன இடங்களில் இன்னின்ன . . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எங்களுக்கு ஒரு முறை, அவர்களுக்கு ஒரு முறையா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எதிர்க் கட்சித் தலைவர் ஒரு நல்ல முறையைக் கையாள வேண்டும். எப்பொழுது பேச வேண்டும் என்றாலும், எழுந்து பேச முடியாது என்பதை எதிர்க் கட்சித் தலைவர் உணரவேண்டும். நான் சொல்லிக் கொண்டே இருக்கிறேன், நீங்கள் பாட்டுக்குப் பேசிக் கொண்டிருந்தால், எப்படி ? திரு. விநாயகம் கொடுக்கவில்லை, திரு. இராமமூர்த்தி கொடுக்கிறார்கள் என்றால், இராமமூர்த்தி இன்னின்ன இடங்களில் இன்னின்ன தவறுகள் நடைபெற்று இருக்கின்றன என்பதைச் சொல்ல வேண்டும். அமைச்சர் பதில் சொல்லிக் கொண்டு இருக்கும் போதே, நடு நடுவே எழுந்து பேசுவதானால், எப்படி ?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** தவறுகள் என்பது, அறிக்கையிலோ, மற்றபடியோ என்றால் சரி, வேறு விதமான தவறுகள் பற்றிச் சொல்லும்போது, சொல்லாவிட்டால், அப்பொழுதே ஏன் பேசவில்லை, அப்படிப் பட்டதையெல்லாம் பேசுகிறபோதே சொல்லியிருக்க வேண்டும் என்பீர்கள். தவறான செய்திகளைக் குறிப்பிடும் போது, குறுக்கிடுவதற்கு, நியாயமான, ஜனநாயக முறைப்படி எதிர்க் கட்சித் தலைவருக்கு உரிமை இருக்கிறது. பிறகு எதற்காக இங்கே என்னை உட்கார்த்தி வைத்திருக்கிறார்கள் ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வாதத்தில் குறுக்கீடு தேவை; ஆனால், தேவையற்ற குறுக்கீடு, அதிகமான குறுக்கீடுகள் கூடாது ; கண்ணியத்தோடு, மரபோடு, குறுக்கீடுகள் தேவைதான். ஆனால், அமைச்சர் பேசிக் கொண்டே இருக்கும்போது, ஏதாவது கருத்துச் சொல்ல வேண்டும் என்றால், அதற்கும் அமைச்சர் இடம் கொடுக்கிறார்களா, இல்லையா என்பதைக் கூடப் பார்க்காமல் குறுக்கிடுவது சரியல்ல. அமைச்சர் இடம் கொடுத்தாலொழிய . . .

(திரு. கருத்திருமன் எழுந்தார்)

மேலும் சபாநாயகர் நிற்கும்போது, மற்ற உறுப்பினர்கள் எழுந்து நிற்கக் கூடாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நீங்கள்தான் நின்று கொண்டே இருக்கிறீர்களே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் என்ன மணிக் கணக்காகவா நிற்கப் போகிறேன் ? சபாநாயகர் நிற்கிறார் என்றால், உட்கார மாட்டாரா ? அந்த அளவிற்குப் பொறுமை காட்டக் கூடாதா ? ஆகவே, ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்த சபையில் இரண்டு மூன்று நாட்களாகவே, உறுப்பினர்கள் நடந்து

கொண்டிருக்கிற மாதிரியைப்பார்த்தால் எங்கெங்கேயோ இருந்து வாடை அடிக்கிறது என்ற ஐயப்பாடு எனக்கு வந்திருக்கிறது. தமிழ் நாடு சட்ட மன்ற மரபைக் காக்கும் வகையில், தமிழ் நாட்டிற்குப் பெருமை தேடும் வகையில் . . . . . (திரு. பி. ஜி. கருத்திருமன் : அடங்கியிருக்கிறதா ?) அடங்கி இருக்கத் தேவையில்லை. அப்படிச் சொல்லவில்லை.

THIRU K. VINAYAKAM : Sir, you have stated that we are getting inspiration from outside. 'எங்கிருந்தோ வாடை அடிக்கிறது' என்றால் ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் எவ்வளவு அழுத்தத்தோடு சொல்லுகிறார்களோ, அவ்வளவு அழுத்தத்தோடு நானும் சொல்லுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எவ்வளவு வேகமாகப் பேசவேண்டும் என்று இருந்தாலும், பேச உரிமை இருக்கிறது. ஆனால், வேகம் சொல்லிலே இருக்கக் கூடாது, பொருளிலே இருக்க வேண்டும். பேச உரிமை இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆனாலும், இரண்டு மூன்று நாட்களாக, நம்முடைய சட்ட மன்றத்திலே, பேசுகின்ற பேச்சுக்கள், வாதங்கள், நம்முடைய தமிழ் நாட்டின் பெருமையைக் காக்கக் கூடிய நிலையில் இல்லை, கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வருகிறது என்ற வருத்தம் எனக்கு மட்டுமல்ல, அத்தனை உறுப்பினர்களையும் சார்ந்தது என்பதைச் சொல்லுகிறேன். பெருமையும் எனக்கு மட்டுமல்ல. சட்ட மன்றம் நல்ல முறையில் நடக்கவில்லை என்றால், அது எல்லோரையும் பாதிக்கிறது. இந்தப் பேரவையிலே பலமுறை சொல்லியிருக்கிறேன், சொற்களிலே வேகத்தை ஏற்றாதீர்கள், சூட்டைக் கொடுக்காதீர்கள், பொருளில் சொல்லுங்கள். அதைத்தான் சொல்லுகிறேன். குறுக்கீடு வேண்டாம் என்று சொல்லவில்லை. குறுக்கீடுகள் அதிகமாக இருக்கக் கூடாது ; குறுக்கீடு செய்ய அமைச்சர் அனுமதி கொடுக்க வேண்டும், அப்பொழுதுதான் அவருடைய பேச்சில் குறுக்கிடமுடியும். அவர் இடம் கொடுக்கவில்லை ... என்றால் சொல்ல முடியாது. கடைசியில் விளக்கம் கொடுங்கள், வாய்ப்புக் கொடுக்கிறேன்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே அங்கத்தினர்கள் பேசும் போது, ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள், இன்னொரு கட்சியைப் பற்றி ஒட்டுமொத்தமாகக் குற்றம் சொல்ல உரிமை இருக்கிறது. எதிர்க் கட்சித் தலைவருடைய போக்கைப் பார்த்தால், ஒரு கட்சியைப் பற்றிக் குற்றம் சாட்டும்போது, அதை நிரூபிக்க வேண்டும், அப்படி நிரூபிக்க முடியாமல் போனால் அது ஒழுங்கு முறைக்கு விரோதமானது என்று குறிப்பிடுகிறார்கள். அது தவறான போக்கு என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.



காங்கிரஸ்காரர்களுடைய இருபது ஆண்டு ஆட்சியில் நாட்டைக் குட்டிச் சுவராக்கி விட்டார்கள் என்று சொல்ல எனக்கு உரிமை இருக்கிறது. காங்கிரஸ் ஆட்சி காலத்தில் எத்தனையோ பேர்கள், பட்டினியால், பஞ்சத்தால் இறந்தார்கள், செத்தார்கள் என்று சொல்ல அமைச்சருக்கும், அங்கத்தினர்களுக்கும் உரிமை இருக்கிறது. அதை நிரூபிக்க வேண்டும் என்று கேட்க இவர்களுக்கு உரிமை கிடையாது. அப்படி அவர்கள் உரிமை கேட்பது முறையல்ல என்பதைத் தாங்கள் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பலர் எழுந்தார்கள்.)

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நானும் அப்பொழுது சொல்லலாம், இவர்கள் ஆட்சியில் லஞ்சம், ஊழல்கள் மலிந்து விட்டன என்று.

**திரு. கே. விநாயகம் :** நானும் இவர்கள் பணத்தையெல்லாம் வசூல் செய்து கட்சிக்காகச் செலவழிக்கிறார்கள் என்று சொல்ல எனக்கும் உரிமை இருக்கிறது, அவற்றை நிரூபணம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை அல்லவா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆசைத்தம்பி சொல்லியதை நான் அப்படியே ஒப்புக் கொண்டு விட்டதாகக் கருதிப் பேசக்கூடாது . . . (குறுக்கீடு) என்னைத்தான் பேச விட மாட்டேன் என்கிறீர்களே ? ஸ்பீக்கர் என்று பெயரை வைத்து விட்டு, பேச விடாவிட்டால், எப்படி ? இங்கே இராமமூர்த்தி, விநாயகம், அங்கே மார்ட்டின், மற்றவர்கள், எல்லோரும் எழுந்து கொள்வதாக இருந்தால், எப்படிப் பேசமுடியும் ? நானே ஆசைத்தம்பி சொன்னவற்றை ஏற்றுக்கொள்ளவில்லை. பொதுவாகக் குற்றச்சாட்டு சொல்லும்போது, கூடுமானவரையில் குற்றச்சாட்டை ஆதாரத்தோடு கூறவேண்டும். பொதுவான குற்றச்சாட்டு கூடாது என்றுதான் சொல்லிவருகிறேன். இந்த மன்றத்திலேயே பல தடவை சொல்லியிருக்கிறேன். இதற்கு முன்பும் இருந்த பேரவைத் தலைவர்கள் பொதுவான குற்றச்சாட்டு கூடாது என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். எந்தக் குற்றச்சாட்டாக இருந்தாலும், ஆதாரத்தோடு கூறவேண்டும். பொதுவான குற்றச்சாட்டுகளைக் கூறவேண்டாம் என்று இரு தரப்பிற்கும் கூற விரும்புகிறேன்.

THIRU T. MARTIN : Sir, on a point of order. Just a few minutes back the Hon. Speaker has given a ruling. In that ruling the Hon. Speaker has given time to the Hon. Minister and also the hon. Member, Thiru Asaithambi to produce certain documents or evidence with regard to the starvation deaths before this House. Now, the hon. Member, Thiru Asaithambi wants you to reconsider your decision already given. Now, I want to know whether the earlier ruling given by the Hon. Speaker stands or has been revoked by the Hon. Speaker.

[1969 ஆகஸ்ட் 26

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நம்முடைய மார்ட்டின் அவர்கள் சபையில் நிகழ்ச்சிகளைக் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். கடைசியாக நான் சொன்னேன், இருதரப்பிலிருந்தும், யார் பேசினாலும் குற்றச் சாட்டுச் சொல்வதானால், ஆதாரத்தோடு சொல்ல வேண்டும் என்று கடைசியாகக் கேட்டிருக்கிறேன். அதற்குப் பிறகு திரு. மார்ட்டின் எழுந்து இப்படிக் கேட்டால், அதற்கு என்ன பொருள் ?

இப்பொழுது, அமைச்சருடைய கோரிக்கை பேரவையின் வாக்கெடுப்பிற்கு விடப்படுகிறது. பேரவை முன் உள்ள கேள்வி:—

"தமிழ் நாடு 1969-ம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 14/69) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டதாக அறிவிக்கப்பட்டது.

எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு முறை கோரப்பட்டது.

[எண்ணிக் கணித்து வாக்கெடுப்பு எடுப்பதற்காக மணி ஒலிக்கப்பட்ட பின்னர்]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன் உள்ள கேள்வி :

"தமிழ் நாடு 1969-ம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 14/69) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவுகள் இரண்டு, மூன்று, முதல் பிரிவு, முகப்புரை, நெடுந்தலைப்பு இவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, "தமிழ் நாடு 1969-ம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 14/69) சட்டமாக நிறைவேற்றப்படவேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.



1969 ஆகஸ்ட் 26]

**(இ) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு துயர்தணிப்பு நிறுவனங்கள் (சிறப்பு விதித்துறை) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 13/69).**

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move :—

"That the Tamil Nadu Relief Undertakings (Special Provisions) Bill* (L.A. Bill No. 13 of 1969) be taken into consideration."

**திரு. க. இராமமூர்த்தி :** பேரவைத் தலைவர் அவர்களே, என் பெயரால் கொடுக்கப்பட்டிருக்கிற என்னுடைய திருத்தத்தை நான் பிரேரேபிக்கிறேன்.

"That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of . . . . members (. . . members from the Assembly and . . . members from the Council) to consider the Tamil Nadu Relief Undertakings (Special Provisions) Bill, 1969 (L.A. Bill No. 13 of 1969) and that the following Members of this House be selected to serve on such a Joint Select Committee (names of Members to be furnished later)."

THIRU K. VINAYAKAM : Sir, I second the amendment.

MR. SPEAKER : The motion and the amendment are now before the House for discussion.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்தவரையில், இது தமிழகத்தினுடைய தொழில் துறையில் மிக மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். தொழில் துறையோடு இதனை ஒப்பிட்டுப் பார்த்தால் பின்னால் வர இருக்கிற தமிழகத்தில் தொழில்கள் வளருவதற்கும், தொழில்கள் பெருக்கத்திற்கும் தடையாக இருந்து தடைப்படுத்து வதற்கும் இந்த மசோதா வழிவகை செய்கின்ற முறையில், தொழில் சரித்திரத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. இந்த மசோதாவினுடைய பொதுவான நோக்கம், இன்றைய தினம் தமிழகத்திலே மூடப்பட்டுள்ள பஞ்சாலைகளை, நூல் ஆலைகளை, நூற்பாலைகளை சர்க்காரே கைவசப்படுத்த வேண்டுமென்பதுதான். மூடப்பட்டுள்ள பஞ்சாலைகளில் பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர் களுக்கும், பாதிக்கப்பட்டுள்ள தொழில் நிறுவனங்களுக்கும் நிவாரணமாக இந்த மசோதா அமைய வேண்டும். அதற்காகவே இன்றையதினம் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காக மட்டுமல்லாமல், இதுபோன்ற நிலைமை எப்போது ஏற்பட்டாலும், சர்க்கார் நினைக்கிற நேரத்தில் தொழில் நிறுவனங்களை ஏற்றுக்கொள்ளலாம், ஏற்று நடத்தலாம் என்ற ஒரு பெருவாரியான அதிகாரத்தைக்

* Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 18th August 1969.

கோரும் வகையில் இந்த மசோதா அமைந்திருக்கிறது என்ற ஒரு
அபாயத்தை இப்போது சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைய
தினம் இந்தச் சர்க்கார் மிகுந்த அளவிலே தனியார் துறையை
வரவேற்கிறது, தொழிலதிபர்களை தமிழகத்திற்கு வந்து புதிய
தொழில்களைத் துவக்குங்கள் என்று வரவேற்கிறது. என்றாலும்
கூட, இன்றையதினம் இந்த மசோதாவின் காரணமாக தொழிலதி
பர்களுக்கு ஆர்வம் நல்ல வகையில் ஏற்படுமா என்பதை நாம்
எண்ணிப் பார்க்க வேண்டும். தொழில்களை நடத்திக்
கொண்டிருப்பவர்கள், இந்த ஆட்சிக்கு மாறான எண்ணம்
கொண்டவர்களாக இருந்தால், இந்தச் சர்க்காருக்குப் பிடிக்காத
வர்களாக இருந்தால் பயமின்றி, சுதந்திரமாக தொழில்களை நடத்த
முடியுமா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். இது சட்டமாக
நிறைவேற்றப்படுமேயானால், தொழில் சுதந்திரம் அவர்களுக்கு
இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முக்கிய
நோக்கமாகச் சொல்லப்பட்டிருப்பது,

'A Bill to enable the Government to make special provisions for a limited period in respect of industrial relations, financial obligations and other like matters in relation to industrial undertakings the running of which is considered essential as a measure of preventing, or of providing relief against, unemployment.'

அதேநேரத்தில் இந்த மசோதாவினுடைய மற்ற குறிக்கோள்களைப்
பற்றிச் சொல்கின்ற நேரத்தில்,

'The Government may take over such mills as are entrusted to them by Central Government'.

என்பதாகச் சொல்லி, பின்னாலே வருகின்ற நேரத்தில், அடிக்கடி
இதுபோன்ற தொழில் நிறுவனங்கள் செயல்படாத நிலைமை
ஏற்படுகின்ற நேரத்தில் எல்லாம், இதனால் தொழில் மந்தப்
படுகின்ற நேரத்தில் எல்லாம் அந்தத் தொழிலை ஏற்று நடத்த
வேண்டுமென்ற நிலைமை நாளையதினம் இந்தச் சர்க்காருக்கு
ஏற்படலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெரும்
முதலீடு போட்டு நடந்துகொண்டிருக்கிற தொழிற்கூடங்களை
யெல்லாம் சர்க்கார் எந்த நேரத்திலே எடுத்துக்கொள்ளுமோ என்ற
பயத்தில் தொழிலதிபர்கள் இருக்கிறார்கள். இன்னொன்றுகூட
இதிலே இருக்கிறது. இதிலே அரசியல் நிலைமை தலையிட்டு,
தொழிலை சீராக நடத்த முடியாத நிலைமை ஏற்படலாம். அரசியல்
கட்சிகள், தொழிற்சங்கங்கள் இவைகள் தொழிலதிபர்களை ஆட்டி
வைக்கின்றன என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். எந்த
ஒரு அரசியல் கட்சிக்கு ஒரு குறிப்பிட்ட தொழிற்கூடம் பிடிக்க
வில்லையோ, அந்தத் தொழில் தனியாரிடம் இருக்கக்கூடாது என்ற
எண்ணம் ஏற்படுகிறதோ, அந்த நேரத்தில் எல்லாம் சர்க்கார்





அந்தத் தொழிலை ஏற்றுக் கொள்ளும் வாய்ப்பை இந்தச் சட்டம்
செய்து கொடுக்கிறது. இந்தச் சட்டம் தமிழ் நாட்டினுடைய
தொழில் வளர்ச்சிக்கும், தொழில் பெருக்கத்திற்கும் நல்லதாக
இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த
மசோதா ஒரு பகுதியை மட்டுமே சொல்கிறது. எந்தெந்தச்
சூழ்நிலையில் தொழிற்சாலையை சர்க்கார் ஏற்று நடத்தலாம் என்று
சொல்கிறதே தவிர, இருக்கின்ற சூழ்நிலையை, நிலவுகின்ற
சூழ்நிலையின் தன்மையைப்பற்றித் தெளிவாகச் சொல்லவில்லை
என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த
மாதிரியான சூழ்நிலை நிலவுகிறது என்பதை யார் நிர்ணயிப்பது
என்று சொல்லப்படவில்லை. எங்கோ இருக்கிற அதிகாரிகளோ,
அரசுப் பொறுப்பில் இருப்பவர்களோ, அல்லது சில நேரங்களில்
பின்னாலே இருந்துகொண்டு ஆட்டிப் படைப்பவர்களோ தான்
இந்தச் சூழ்நிலையை நிர்ணயிக்க வேண்டும். இதன் காரணமாக
தமிழகத்தில் தொழில் மந்தப்படும். இதன் காரணமாக தொழில்
துறையில் சுதந்திரம் இருக்காது என்பதையும் சொல்லிக்
கொள்கிறேன். முன்னேறியுள்ள நிறுவனங்கள் சில அரசியல்
காரணங்களுக்காக பாதிக்கப்படுகின்ற தன்மையும், அதன்
காரணமாக சர்க்காரே அவற்றை ஏற்று நடத்துகின்ற தன்மையும்
நிலையும் ஏற்படலாம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.
உதாரணத்திற்கு நான் சொல்ல வேண்டுமானால் சமீபத்தில்
ஏற்பட்ட இந்துப் பத்திரிகை ஸ்ட்ரைக்கைச் சொல்ல முடியும்.
அது ஏற்பட்டதற்கான சூழ்நிலையை விரிவாகப் பேசியிருக்கிறோம்.
அப்படிப்பட்ட சூழ்நிலை உண்டாக்கப்பட்டு அதை அரசாங்கமே
எடுத்துக்கொள்ளவேண்டும் என்கிற நிலை வந்தால் பத்திரிகைத்
துறை வளருமா? பத்திரிகைத் துறை மட்டும் அல்ல. எல்லாத்
துறைகளிலும் உள்ள தொழில் நிறுவனங்களுக்குப் பாதுகாப்பு
இருக்காது. ஆகவே, குறிப்பிட்ட காரணத்தை மட்டும் வைத்து
மூடப்பட்டிருக்கிற பஞ்சாலைகளை ஏற்றுக்கொள்ள வகை செய்யும்
வண்ணம் இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டுமென்று
விரும்புகிறேன். இதுபோல மற்ற தொழில் நிறுவனங்களை
எடுத்துக்கொண்டாக வேண்டிய சூழ்நிலை வருகிறபோது அந்த
நேரத்திற்கு அதற்கு மசோதா கொண்டுவரப்படலாம். அதற்காக
இப்போதே இந்த மசோதாவில் ஒரு பிரிவு சேர்க்கவேண்டும்
என்கிற அவசியம் இல்லை. பின்னால் இதுபோன்ற நிலை வேறு
தொழில் நிறுவனங்களில் ஏற்பட்டால் எடுத்துக்கொள்ளவேண்டி
வரும் என்கிற ஒரு காரணத்தைக் காட்டி சர்வாதிகார
மசோதாவாக இதை நிறைவேற்ற வேண்டியதில்லை என்று சொல்லி
அமைச்சர் அவர்கள் இதை ஜாயிண்ட் செலெக்ட் கமிட்டிக்கு
விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1969 ஆகஸ்ட் 26

* திரு. எ. பாலசுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவைக் குறித்து என் கட்சியின் சார்பாக சில முக்கியமான கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இந்த மசோதாவின் நோக்கம் நல்லது. ஆலைகளை மூடிவிட்டு, உற்பத்திச் சக்திகளை இயந்திரங்களை அப்படியே போட்டுவிட்டு பொதுவாக நாட்டுக்கு நஷ்டத்தை அதிகரிக்கச் செய்யும் போக்கு வளர்ந்து வருகிற ஒரு காலகட்டத்தில், பொருளாதார மந்தம், நெருக்கடி என்ற பெயரால் தம்முடைய லாபப் பேராசை நோக்கோடு உழைப்பாளிகளைத் தெருவில் நிறுத்திவிடுகிற போக்கு ஆலை முதலாளிகளிடையே வளர்ந்து வருகிற நெருக்கடியான இந்தக் காலக்கட்டத்தில் மூடப்பட்ட ஆலைகளை, தொழில் நிறுவனங்களை அரசே எடுத்து நடத்த அதிகாரம் எடுத்துக்கொள்வது என்பது மிகவும் நல்லது. இப்படிப்பட்ட அதிகாரத்தை கட்டாயமாக அரசே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பது என் விருப்பம். கொஞ்ச காலமாகவே இப்படிப்பட்ட அதிகாரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று எங்கள் கட்சியின் சார்பிலும் வற்புறுத்தி வந்திருக்கிறோம். இப்படிப்பட்ட நல்ல நோக்கத்தோடு கொண்டு வரப்படுகிற இந்த மசோதாவில் மிக ஆபத்தான பிரிவும் இருக்கிறது.

The road to hell is paved with good intentions.

என்று சொல்வார்கள். நரக லோகத்திற்குப் போகிற பாதைக்கு நல்லெண்ணங்களாகிய கற்கள் போடப்படுகின்றன என்று. அப்படி நல்ல எண்ணங்கள் தவறான இடத்திற்குக் கொண்டுபோய்விடக் கூடாது என்றுதான் நான் மிகவும் கவலைப்படுகிறேன்.

இந்த மசோதாவின் நான்காவது பிரிவில் ஏ. பி. என்ற இரண்டு பகுதிகள். முதல் பகுதியில் சில சட்டங்களை நிறுத்தி வைக்க அரசாங்கம் அதிகாரம் கேட்கிறது. விதி 4-பி பிரிவில்

"all or any of the contracts, assurances of property. agreements, settlements, awards, standing orders or other instruments in force . . . . . shall be suspended."

என்பதாகக் கேட்டிருப்பது குறிப்பாக தொழிலாளர்களையும் சரி, முதலாளிகளையும் சரி, ஆக இரண்டு சாராரையும் பாதிக்கத்தக்க விதத்தில் அமைந்திருக்கிறது. இப்படி ஒரு யோசனை அரசாங்கத்திற்கு ஏன் வந்தது என்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. The Industrial Employment (Standing Orders) Act இதை நிறுத்தி வைப்பது, The Industrial Disputes Act, தொழில் தகராறுகள் சட்டம், இதை நிறுத்தி வைப்பது, The Minimum Wages Act—, குறைந்த பட்ச ஊதியச் சட்டம்—இதை நிறுத்திவைப்பது The Madras Shops and Establishments Act,



1969 ஆகஸ்ட் 26] [திரு. எ. பாலசுப்பிரமணியன்]

இந்தச் சட்டங்கள் எல்லாம் நீண்டநெடுங்காலமாகப் போராடி பெற்றிருக்கக்கூடிய குறைந்தபட்ச உரிமைகள். நம்முடைய நாட்டில் தொழிலாளர்களுக்கு என்று இருக்கக்கூடிய சட்டங்களே அற்பசொற்பம். அவற்றையும் உயிரைக் கொடுத்துப் போராடி சாதிக்கவேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட சட்டங்களை நிறுத்தி வைக்கக் கோரிக்கை—அதுவும் துயர் தணிப்பு என்று கூறிக் கொண்டு வந்தாலும் கூட—நான்கணுவுக்கு ஒருவன் வேலை செய்கிறபோது 2 அணுவுக்கு வேலை செய்ய ஆட்கள் வருகிற நேரத்தில் இப்படிச் செய்வது தொழிலாளர்களுக்கு மிகுந்த பேராபத்தாக முடியும். அதற்கு நாம் இடமளிக்கக் கூடாது. நாட்டில் need-based minimum wage என்பதாக தேவையை அடிப்படையாகக் கொண்ட குறைந்தபட்ச ஊதியம் வேண்டும் என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். அதுதான் நியாயம் என்பதை இந்தப் பக்கத்தில் உள்ளவர்களும், அந்தப் பக்கத்தில் உள்ளவர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறோம் Need-based minimum wage is a desirable objective என்பதாக லோக் சபாவில் காங்கிரஸ்காரர்களே சொல்லியிருக்கிறார்கள். அப்படி நாட்டில் தேவையை அடிப்படையாகக் கொண்ட குறைந்த பட்ச ஊதியம் கோரப்படுகிற நேரத்தில் மினிமம் வேஜஸ் ஆக்டை நிறுத்தி வைப்பது என்பது சரியா? இதை நிறுத்திவைக்க அதிகாரம் கேட்பது ஒப்புக்கொள்ளத்தக்கது அல்ல. ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல. அதைக் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். அந்தப் பக்கத்தில் இருந்தே இந்த 4—ஏ.பி. பிரிவுகளை வாபஸ் பெறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொழில் மந்தம் ஏற்படுகிறது, சரக்கு தேக்கம் ஏற்படுகிறது என்றால் இதற்கு யார் பொறுப்பு? தொழிலாளர்கள் எப்படிப் பொறுப்பு? லாபப் பேராசையினால், உற்பத்தியாகும் பொருள்களை முதலாளிகள் கள்ளச்சந்தையிலும் மற்ற இடங்களிலும் தள்ளி உள்நாட்டுச் சரக்கை அதிக விலைக்கு ஏற்றுவதனால் உள்நாட்டுச் சந்தை சுருங்கிவிடுகிறது. இது லாபப் பேராசையினால் ஏற்படுகிற கஷ்டம். இந்தக் கஷ்டத்திற்குக் கொஞ்சம்கூட தொழிலாளர்கள் பொறுப்பு இல்லை. இதற்கு தொழிலாளர்கள் சம்பளத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்பது பெரிய அநீதி. நேற்று கூட லேபர் கமிஷனர் வேறு ஒரு தொழில் நிறுவனத்தில் 40 ரூபாய் சம்பளத்தை தொழிலாளர்கள் குறைத்துக் கொள்ளவேண்டுமென்ற யோசனையைச் சொல்லியிருக்கிறார் என்பது குறிப்பிடப்பட்டது. இந்த நிலையில் துயர் தணிப்பு மசோதாவில் இப்படிப்பட்ட ஒரு பயங்கரமான பிரிவையே சேர்ப்பது மிகமிகத் தவறானதாகும். இதனால் மற்ற மற்ற தொழில் நிறுவனங்களிலும் ஊதியத்தைக் குறைக்க நிர்ப்பந்தம் ஏற்படுத்தும் ஒரு வாய்ப்பு ஏற்படும். நம் நோக்கம் அது அல்ல. விளைவு அங்கே கொண்டுபோய்விடும். நோக்கம் வேறு, விளைவு வேறு.

ஆகவேதான் 4-பி பிரிவுக்கு

In clause 4 (b), after the words 'standing orders' and before the words 'or other', insert the following :—

"except such agreements, settlements, awards and standing orders which confer benefits on employees"

என்பதாக ஒரு திருத்தமே எங்கள் பக்கத்தில் இருந்து கொடுக்கப் பட்டிருக்கிறது. நான்காவது ஏ பிரிவையே எடுத்துவிடவேண்டும் என்றும் மற்றொரு திருத்தமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஃபார்ம் லேபருக்கு fair wage வேண்டும் என்பதற்கு சட்டம் கொண்டு வருகிறோம். நாளைக்கு அது வருகிறது. ஃபார்ம் லேபருக்கு **fair wage** வேண்டும் என்று கோருகிற இந்தக் காலகட்டத்தில் குறைந்தபட்ச சம்பளச் சட்டத்தையே நிறுத்தி வைப்பது என்பது அரசின் கொள்கைக்கு உகந்தது அல்ல. கட்டாயமாக இது தொழிலாளர் உலகத்தில் கசப்பையும், அதிருப்தியையும், கஷ்டத்தையும் ஏற்படுத்திவிடும். எதிர் காலத்தைப் பெரிதும் பாதிக்கும். வேறு மாநிலச் சட்டத்தில் இது போல இல்லையா என்று கேட்கலாம். மூடப்பட்ட மில்களை எப்படி மகாராஷ்டிராவில் எடுத்து நடத்துகிறார்கள் என்பதைப் பார்க்கும்படி திரு. சுப்பிரமணியம் சொன்னபோதே நான் குறிப்பிட்டேன். தயவுசெய்து மகாராஷ்டிர சட்டத்தைப் பார்க்காதீர்கள், என்பதாக. அவர்கள் 1½ ரூபாய் கொடுத்து வேலை வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். எந்தவிதமான பாதுகாப்பும் கிடையாது. அதை நாம் பின்பற்றினால் நமக்கு களங்கத்தை ஏற்படுத்திவிடும். ஆகவே இதைப்பற்றியெல்லாம் நன்கு பரிசீலிப்பதற்காக இதை ஜாயின்ட் செலெக்ட் கமிட்டிக்கு அனுப்புவது உசிதமாக இருக்கும் என்பதாக மார்க்ஸிஸ்டு கட்சியின் சார்பில் கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Sir, I wish to offer a few remarks on this Bill. I am afraid this is a Bill with far-reaching implications which will ultimately land this Government into a number of complications. This Bill has been brought forward because of the Central Act 29 of 1967. The Central Act provides that the Central Government could go into the working of any textile mills, take over those mills which were not working satisfactorily and ultimately hand them over to the State Government. A number of mills in Tamil Nadu, Maharashtra, Gujarat and other States are not working in the proper manner and are incurring losses. This is due to the prevailing economic condition. There is no one to buy the cloth manufactured by the mills. There is a glut in the market. The mills are not able to sell their goods. Let us take Tamil Nadu. Suppose the closed mills are reopened and they produce cloth. The cloth has to be marketed. There will definitely be a glut. Who will be responsible for marketing? Is it the Government or who else is it? This is definitely a Bill which needs reference to a Select committee and there is no doubt about it.



What is the degree of the commitment of the Central Government? If we take over the mills under this Act, what will be the extra expenditure to the Government? If we are under the impression or hallucination or the pleasant illusion that by taking over the mills we will be earning some revenue to the exchequer, I am afraid we are living in a fool's paradise. As a person believing in the trade union movement, I agree with Mr. A. Balasubramanian. There are several provisions under which workers will be adversely affected. With regard to minimum wages, it is definitely necessary that the Government should suspend that clause. Otherwise, once the Act is in the hands of the Government, you will find that the officer would try to extract more work from the workers. That was what happened in England before the Industrial Revolution and a lot of work was extracted from 10 or 15-year old boys. But our Hon. Ministers for Industries and Labour are men of great enlightenment and I am not casting aspersion against them. At any rate, we are giving a very dangerous and powerful Bill in the hands of the Government. Even now there are certain Departments which employ a number of workers for a number of months without paying wages and without training them fully. After the officer concerned is satisfied that a person has completed the training, he will be employed on a temporary basis for nearly eight or ten months and then only he will be taken on a regular basis. He also will have to work for many more hours than a protected employee. I am quite sure that the Government will give serious consideration to this aspect of the matter.

Then I come to another point. I find that there is mismanagement of a number of mills. Are we sure that this will not lead to further mismanagement of a number of other mills? It is quite possible that some of the misguided entrepreneurs may be induced to think that if they mismanage the mills, those mills will be taken over by the Government. So, this may be an incentive for further mismanagement of the mills. That is a most dangerous aspect of the matter. Also, are we not putting a moratorium on efficiency? A number of persons who are running the mills efficiently will be tempted to go in the wrong path. I request the Hon. Minister to consider this aspect of the matter.

Then it is stated in the Statement of Objects and Reasons appended to the Bill that "it is proposed to enact a special legislation to freeze all past liabilities for a limited period (except bank loans)". Of course, bank loans have become our loans after the nationalisation of banks. But there might be a number of other loans taken by the mills through some agency and if we freeze them it is something like appropriation of property and

it would affect the very fundamental right guaranteed under the Constitution itself and I request the Hon. Minister to consider this aspect of the matter also.

Then it is stated in that statement that " it is considered desirable to empower the Government not only to declare textile mills but any industrial undertaking, as a relief undertaking in the larger interests of the economy of the State ". Here I agree with the hon. Member, Thiru Ramamurthi that tomorrow even a newspaper or for that matter any other industry might come under this Bill whenever a serious labour trouble is engineered voluntarily or involuntarily. Whatever it is, this will act as a sort of incentive to the persons who want undesirable things to happen. Such persons may use this Act as a tool and engineer labour trouble. If there is a serious labour trouble, the economy of any private industry or banks will be in doldrums and this Act may be applied in such cases. Such unhealthy practices should be avoided and I request the Hon. Minister to consider this aspect of the matter.

Lastly, I would give some concrete, suggestions to the Government. Anyway the Bill is going to be passed into law and it would find a place in the statute. Let at least some mills taken over by the Government be run on the basis of diversification. Let not the Government manufacture cotton cloth only and let them manufacture diversified goods according to the needs of the market. If that is done it would be really useful not only to the mills but also to the markets and labourers. I hope the Hon. Minister will consider this aspect of the matter. With these words, I wind up my speech.

*திரு. க. ர. நல்லசிவன் :* மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை நான் பொதுவாக வரவேற்கிறேன். சமீபத்திலேதான் உலகத் தொழிலாளர்கள் தினத்தை தேசம் பூராவும் நாம் கொண்டாடினோம். எல்லாத் தொழிலாளர்களும் சேர்ந்து அவர்களுடைய முயற்சியின் மூலமாக தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புச் சட்டங்களையெல்லாம் இயற்றவேண்டுமென்று போராடி அவையெல்லாம் இயற்றப்பட்டன. இந்தச் சட்டங்களை, சர்க்கார் துறையிலே நடக்கக்கூடிய ஸ்தாபனங்களாக இருக்கலாம், அல்லது தனியார்களுடைய ஸ்தாபனங்களாக இருக்கலாம், எதுவாக இருந்தாலும் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கின்ற இந்தச் சட்டங்களை எந்த முறையிலேயும் குறைக்கவோ அல்லது மாற்றவோ கூடாது. அதைக் கருத்தில் கொள்ளவேண்டும். அப்படி ஏதாவது செய்தால் நிச்சயமாக ஒரு பெரிய எதிர்ப்பு, கடுமையான எதிர்ப்பு இருக்கத்தான் செய்யும். ஏனென்றால் நீண்டநாட்களாகப் போராடிப் பெற்ற ஒன்றை குறிப்பிட்ட காலத்திலே குறிப்பிட்ட காரணத்திற்காக நீக்கி விடுவது என்று அரசாங்கம் முயற்சி செய்தால் தொழிலாளர் இயக்கமானது அதை எதிர்க்கத்தான் செய்யும். இந்த



மசோதாவிலே இரண்டு மூன்று முக்கியமான சட்டங்களைச் செயலற்றதாக்கக்கூடிய வகையில் பிரிவுகள் இருக்கின்றன, அவற்றை ரத்துச் செய்யவேண்டுமென்று என்னுடைய கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன். அதைத்தவிர இதையெல்லாம் பரிசீலிப்பதற்காக பொறுக்குக் குழுவிற்கு இதை அனுப்புவது அவசியம் என்பதைச் சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. ஆ. கு. சுப்பையா :* பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை பொதுவாக வரவேற்கிறேன். நாம் தொழில்களைத் தேசியமயமாக்கும் காலகட்டத்தில் இருந்தாலும் தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கும் முறையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்போது தொழிலாளர்களுடைய உரிமைகளைப் பறிக்கக் கூடிய முறையில் சில ஷரத்துக்கள் இருப்பதன் காரணமாக இதைப் பரிசீலிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை முன்னால் பேசிய எல்லாக் கட்சி அங்கத்தினர்களும் பேசியிருக்கிறார்கள். ஆகவே, இதைப் பரிசீலனைக்கு விடுவதன் மூலமாக தொழிற்சங்கங்களின் ஆலோசனையைக் கேட்க வசதி ஏற்படும். அதற்குப் பதிலாக அவசர அவசரமாக இந்த மசோதாவை நிறைவேற்றுவதன் மூலமாக, 22 ஆலைகள் மூடப்பட்டதன் காரணமாக 16,000 குடும்பங்கள் எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமல் இருக்கும் நிலையில், நல்ல நோக்கத்தோடு அந்த ஆலைகளை அரசாங்கமே எடுத்து நடத்துவதன் மூலமாக அவர்களுக்கு வாழ்வளிக்க முயற்சிக்கும் நிலையிலே, அவர்களுக்கு ஏற்கனவே அளிக்கப்பட்ட சில உரிமைகள் பறிக்கப்படும் அளவுக்குச் சில ஷரத்துக்கள் இந்த மசோதாவிலே சேர்க்கப்படுமானால் அது அந்த நோக்கத்திற்கே விரோதமாக அமையும். ஆகவே, இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு விட வேண்டுமென்று எங்களுடைய கட்சியின் சார்பில் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* *திரு. கே. என். குமாரசாமி :* தலைவரவர்களே, இந்த மசோதாவின் பேரிலே பிரஜா சோஷலிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மசோதா மூடப்பட்ட ஆலைகள் சம்பந்தமாக, சீரழிந்து போன ஆலைகள் சம்பந்தமாக எடுத்து நடத்துகிற உரிமையை, சீரமைப்பு ஸ்தாபனத்திற்கு அதிகாரம் கொடுக்கின்ற ஒன்றாகும். இதிலே தொழிலாளர்களின் நலன்களைப் பாதிக்கும் வகையில் சில ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. ஒன்றை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். மூடப்பட்ட ஆலைகள் சம்பந்தமாக அரசாங்கத் தரப்பில் இருந்து தொழிற்சங்கப் பிரதிநிதிகளோடு கலந்து பேசுகின்றபோது, அவை எதனால் மூடப்பட்டன என்பதைப் பரிசீலிக்கின்ற நேரத்திலே, அந்த ஆலைகள் 'மிஸ் மானேஜ்மெண்ட்' காரணமாக மூடப்பட்டனவே தவிர வேறு

காரணங்கள் இல்லை என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. முக்கூட்டு கமிட்டிகள் மூலமாகப் பேசுகின்றபொழுதே தெளிவாகக் கூறப்பட்டது. அந்த ஆலைகளை அரசு எடுத்து நடத்த வேண்டுமென்று தொழிற்சங்கத் தரப்பில் கூறப்பட்டது. அப்படி அரசாங்கம் எடுத்து நடத்துகின்ற முடிவையொட்டி இந்த மசோதா வந்திருக்கிறது. அந்த மில்களின் சொத்துக்களின் பேரில் கடன் இருக்குமானால் அதைக் கோர்ட்டின் மூலமாக ரிட் போட்டு அரசாங்கம் எடுத்து நடத்துவதைத் தடுத்து நிறுத்தி விடாமல் இருக்கும் வகையில் இந்த மசோதாவிலே வழிவகைகள் செய்ய வேண்டும். மில் முதலாளிகள் தரப்பில் இருந்து இடைஞ்சல்கள் வரக்கூடாது என்பதற்காகத்தான் சட்டம் கொண்டுவருவதற்கு முன்னாலேயே அமைச்சர் அவர்களிடத்திலே ஆலோசனை கூறப்பட்டது. ஐ.டி.ஆர். ஆக்ட் படி எடுக்க வகை செய்கிறது. இடைஞ்சல்கள் வரக்கூடாது என்ற நிலையிலே இந்த மசோதா வருகிறபோது தொழிலாளர்களுடைய உரிமைகள் பாதிக்கப்படுகின்ற அளவிலே ஷரத்துக்கள் இருப்பது சரிதானா என்பதைப் பற்றிச் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். தொழிலாளர்களுக்கு உரிமைகள் வழங்கப்படுவது மூலமாக, செட்டில்மென்ட்கள் எல்லாம் அமுல் ஆவதால், ஆலையின் பளு அதிகமாகிறது என்று யாரும் சொல்லவில்லை. இதற்கு முன்னால் அரசாங்கம் போட்ட கமிட்டிகளின் விசாரணைக் குழுவும் தொழிலாளர்களுக்கு அதிகமான சம்பளம் இருப்பதன் மூலம், உரிமைகள் அதிகமாக வழங்குதலினால் மில்களின் பளு அதிகமாகியுள்ளது என்று கூறவில்லை. இந்த நிலைமையிலே மில் நிறுவனத்தின் பளுவை குறைக்க தொழிலாளர்கள் தியாகம் செய்யவேண்டுமென்ற அடிப்படையில் இந்த மசோதா வருவது சரியானது அல்ல. இதனால் தமிழ்நாடு முழுவதும் இருக்கக் கூடிய மற்ற மில்களும் இப்படிப்பட்ட பிரச்சினையை உருவாக்க ஏதுவாகும். தொழிலாளர்களுக்கு நல்ல உரிமைகள் கொடுத்து, ஒப்பந்தங்கள் பாதிக்கப்படாத வகையிலே இந்த மசோதாவை நிறைவேற்றுவதற்கு, அதிகாரம் வழங்குவதிலே எந்தவித ஆட்சேபணையும் இல்லை. ஆகவே, இதை உடனடியாக நிறைவேற்றி விடாமல் கமிட்டியின் மூலமாக தொழிற்சங்க அனுபவம் உடையவர்களுடைய கருத்துக்களை எல்லாம் பெற்று, சட்டத்திற்கு விளக்கம் சொல்லி, எப்படி தொழிலாளர்கள் நலன் பாதிக்கப்படாது ஆலைகளை எடுத்து நடத்த வாய்ப்பு உள்ளது என்பதைக் கண்டு இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லிக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

*** திரு. எம். சுரேந்திரன் :** சபாநாயகர் அவர்களே, இன்று நாட்டிலே பொதுவாகச் சொல்லப் போனால், தொழிலாளர்களுடைய உரிமைகளை அதிகப்படுத்திக் கொண்டு வருவதும், முதலாளிகளுடைய உரிமைகளை குறைத்துக் கொண்டு வருவதுந்தான் நடந்து கொண்டிருக்கும் நிலைமை. இப்படி இருந்து



கொண்டிருக்கும் நிலைமையில்தான் தமிழ்நாட்டில் பல தொழிற்சாலைகள் மூடி இருப்பதும், அதைத் திறப்பதற்கு கடன் அளித்து உதவி செய்தும் முடியாத நிலையிலே அரசாங்கமே ஏற்றுக் கொள்ளவேண்டுமென்ற முடிவுக்கு வந்து அந்த முடிவை நிறைவேற்ற இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களுடைய நலனைப் பாதுகாப்பதற்காக என்ற எண்ணத்தோடுதான் இந்த மசோதா வந்திருக்கிறது என்று கருதுகிறேன். தொழிலாளர்களுடைய நலனைப் பாதுகாக்கின்ற முன்னேறுகின்ற காலகட்டத்தில் அவர்களுடைய நலன்களைப் பாதிக்கின்ற முறையில் ஒரு மசோதா வந்திருக்கிறது. அது வரவேற்கக் கூடிய ஒன்றாக இருக்க முடியாது.

இந்த மசோதாவினுடைய 4-வது விதியில் இருக்கின்ற ஷெட்யூலில் மசோதாவைக் கொண்டு வந்தது பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலே, தொழிற்சாலைச் சட்டம் என்று சொல்லுகின்ற சட்டம் இருசாராருக்கும் சம்பந்தப்பட்டதாக இருக்கிறது. தொழிற்சாலையை எப்படி வைத்துக் கொள்ள வேண்டும், என்னமாதிரி இருக்க வேண்டுமென்பதைப்பற்றியெல்லாம் கூறுகின்ற அதே நேரத்திலே தொழிலாளர்களுக்கான லீவ், நஷ்ட ஈடு, மற்ற வசதிகளைப் பற்றியும் அதிலே கூறப்பட்டுள்ளது. தொழிற்சாலை சட்டம் என்று சொல்லும்போது தொழிற்சாலையை வைத்துக் கொள்ள வேண்டிய விதிமுறைகளுக்கு விலக்கு அளிக்கலாம் என்று சொல்லுவது பொருத்தமாக இருக்கலாம். அதே சமயத்தில் தொழிலாளர்களுடைய லீவ் வசதி, மற்ற வசதிகள் மாற்றப்படுமானால், நிறுத்தி வைக்கவேண்டுமென்று சொன்னால் எப்படிப் பொருத்தமாக இருக்கும் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

தொழிற் தகராறு சட்டம் இருக்கிறது. உண்மையிலேயே சொல்லப்போனால் அந்தச் சட்டம் தொழிலாளர்களுக்குப் பயன்படாமல் இருக்கிறது. அனுபவரீதியாகப் பயன்படாமல் இருக்கிற அந்தச் சட்டத்தைக் கூட நிறுத்தி வைக்க இந்த அரசுக்கு உரிமை வேண்டுமென்று இந்த மசோதாவிலே கூறப்பட்டிருக்கிறது. அடுத்த சட்டம், குறைந்த பட்ச சம்பளச் சட்டம். நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற சம்பளமே கூட குறைந்தபட்சமான தேவைகளை நிறைவேற்றுகிற சம்பளமாக இல்லை. ஆகவே, அந்தச் சட்டத்தையும் இந்த மசோதாவின்படி நிறுத்தி வைக்க என்ன வாய்ப்பு இருக்கிறது என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே, இந்த மசோதா இந்த முறையிலே இருப்பது, அதுவும் உண்மையிலேயே திராவிட முன்னேற்றக் கழக அரசினுடைய சார்பில் கொண்டு வந்திருப்பதைப் பார்க்கிறபோது வேதனைப்படுகிறேன். இந்த அரசு தொழிலாளர்களுடைய நலன்களைப் பாதுகாப்பதற்காகவே இருந்து கொண்டிருக்கிறது என்று நான் நம்பிக் கொண்டிருக்கிறேன். அவர்களும் அதை

ஒவ்வொரு தடவையும் அழுத்தி அழுத்திச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். அப்படி இருக்கும் நிலைமையில் இம்மாதிரி ஷரத்துக்களை இந்த மசோதாவில் சேர்த்திருப்பது வேதனை அளிக்கின்ற ஒன்று. வருங்காலம் பற்றிய எண்ணத்திலேயே மாறுதல் செய்ய வேண்டுமோ என்ற எண்ணம் கூட ஏற்படுகிறது. இந்த ஆலைகளை மட்டுமல்லாது மற்றத் தொழிற்சாலைகளையும் எடுத்துக் கொள்ளும் அதிகாரம் இந்த மசோதாவிலே வேண்டுமென்று கேட்கப்பட்டிருப்பதை நண்பர் ராமமூர்த்தி அவர்கள் கண்டித்துப் பேசினார்கள். ஒருவேளை அவர்கள் தேசத்திலே ஏற்பட்டிருக்கக் கூடிய நிலைமைகளை, ஏற்பட்டிருக்கக்கூடிய மாற்றத்தைக் கூட, அவருடைய அணியில் ஏற்பட்டிருக்கக்கூடிய மாற்றத்தைக் கூடப் புரிந்து கொள்ளாமல் பேசுகின்ற பேச்சோ என்று தோன்றுகிறது.

பி.ப. 1-00 சமீபத்தில்தான் 14 பாங்குகள் தேசீயமயமாக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் இருக்கிற தொழிற்சாலைகளை எல்லாம் வருங்காலத்தில் கட்டாயமாக அரசு எடுத்துக் கொள்ளவேண்டிய காலகட்டத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறோம். இப்படிப் போய்க்கொண்டிருக்கும் காலகட்டத்தில் வருகிற தடுப்புகளையும், இடுக்கண்களையும் தாண்டிக் கொண்டு போக முடியும் என்பதை நேற்றைய செய்தி நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறது. அப்படி வெளிப்படுத்தியிருக்கும் நேரத்தில் கூட இப்படிப்பட்டதொரு கருத்து வாலிபரான திரு. ராமமூர்த்தி அவர்கள் மூலமாக வந்ததைக் கண்டு உண்மையிலேயே ஆச்சரியப்பட்டேன். ஆக, இந்த மசோதாவினால் தொழிலாளர்களின் நலன்கள் எதுவும் பாதிக்கப்படக்கூடாது என்று இந்த அரசு உறுதி அளிக்க வேண்டும். அதிகப்படியான உரிமைகளை வழங்குவதற்கு இந்த நேரத்தில் முடியாது என்று சொன்னாலும் தொழிலாளர்களுக்கு இப்போதுள்ள உரிமைகள் பாதிக்கப்படக் கூடாது என்ற உறுதியான கருத்து இந்த அரசுக்கு இருக்கவேண்டும். அந்த முறையில் இந்த மசோதா அமைய வேண்டும். அதற்கு அனுசரணையாக எனக்கு முன் பேசிய கட்சித் தலைவர்கள் எல்லாம் கூறியதுபோல் இதை ஒரு கமிட்டிக்கு விட்டு அந்தக் கமிட்டி பரிசீலித்து இதைச் சட்டமாக ஆக்குவது நல்லது என்று எனக்கும் தோன்றுகிறது. நான் முன்பு நினைத்தது அப்படிச் செய்தால் வெகு காலதாமதமாகுமே, இது விரைவில் நிறைவேற்றப்பட வேண்டுமே, இப்போதே நிறைவேற்றப்படவேண்டுமே என்று முதலில் நினைத்தேன். ஆனால் இங்கு பலரும் பேசியதற்குப் பிறகு அதைக் கவனித்ததில் ஒரு கமிட்டிக்கு இதை அனுப்பி வைத்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் இதை முடிக்கவேண்டுமென்று சொல்லலாம். சமீபத்தில் கூடலூர் ஜன்மம் எஸ்டேட்ஸ் சம்பந்தமாக ஒரு கமிட்டிபோட்டு விரைவாக ஒரு முடிவுக்கு வந்ததுபோல் இதற்கும் ஒரு கமிட்டி போட்டு விரைவாக குறிப்பிட்ட





காலத்திற்குள் முடிவு எடுக்கவேண்டும் என்ற முறையில் இந்த சபை முடிவெடுக்கவேண்டும். அதற்குப் பிறகு இந்த மசோதா சட்டமாக ஆக்கப்படவேண்டுமென்று கூறி அமர்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : ஆன் எ பாயின்ட் ஆஃப் பெர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன். இந்த மசோதாமீது நான் பேசிய பேச்சைக் குறித்து திரு. சுரேந்திரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதன் பேரில் நான் ஒரு விளக்கம் கொடுக்க விரும்புகிறேன். இந்தியாவிலே அல்லது தமிழ்நாட்டிலே இருக்கிற எல்லாத் தொழில்களையும் சர்க்கார்தான் ஏற்றெடுத்து நடத்தவேண்டும் என்ற கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கையைப்போல் எங்கள் கட்சி போகவில்லை. நாங்கள் தனியார் துறையையும் ஆதரித்துக் கொண்டுதான் இருக்கிறோம். அதேநேரத்தில் இந்த மசோதாவில் எந்த இடத்திலாவது தொழிலாளர்களுக்கு தீங்கு விளைவிக்கிறது என்றால் அதை அகற்ற பக்கத்தில் இருப்பவர்களை விட நாங்கள் அதிக ஆர்வம் உள்ளவர்களாக இருக்கிறோம். இளைஞர்களால்தான் இதுபோன்ற உருப்படியான யோசனைகளைச் சொல்லமுடியும் என்பதை என் பேச்சு நிரூபித்திருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, இளைஞர்கள், வயதானவர்கள் என்பது வயதைப் பொறுத்ததல்ல. இருக்கும்படியான துடிப்பையும் வலுவையும் பொறுத்துத்தான் இருக்கிறது. பேசிவிட்டால் மட்டும் இளைஞர் அல்லது இளமையில்லாதவர் என்று ஆகிவிடாது. இந்த மசோதாவைப் பொறுக்குக் கமிட்டிக்கு விட வேண்டுமென்று அநேகமாக எல்லாக் கட்சிகளைச் சார்ந்தவர்களும் சொல்வது குறித்து நான் சந்தோஷப்படுகிறேன். இது சாதாரண மசோதா அல்ல. இது பண விஷயமான மசோதா கூட. ஏகப்பட்ட சர்க்கார் பணத்தைப் போட்டு கஷ்டப்படக்கூடிய தொழில்களை எடுத்து நடத்தும் மசோதா இது. சர்க்கார் தொழில் நடத்துவது என்பது வேறு, கெட்டிருக்கும் ஒரு தொழிலை எடுத்து நடத்துவது என்பது மற்றொன்று. சர்க்கார் தொழில் நடத்த வேண்டாமென்று சொல்லவில்லை. நிறைய நடத்தட்டும். நன்றாக நடத்தி, சீராக நடத்தி, லாபம் பெறுவதாக இருந்தால் எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்கமுடியாது. இந்த மசோதாவில் இரண்டு பகுதிகள் உள்ளன. இன்டஸ்ட்ரி என்பதில், எந்தத் துறையை வேண்டுமென்றாலும் எடுத்து நடத்தலாம் என்ற நிலையில் இது இருக்கிறது. தொழில் அதிபர்கள் கெட்டிக்காரர்கள். சில பேர்களைப் பற்றிச் சொல்லவேண்டியதேயில்லை. ஒரு சொத்தும் இல்லை என்று சொல்லி இன்கம் டாக்ஸை எல்லாம் ஏமாற்றி, தொழிலாளர்களுக்கு எல்லாம் பணம் கொடுக்காமல், எங்களிடம் ஒன்றுமே இல்லை என்று சொல்லிக் கொண்டு, இருப்பதையெல்லாம் ட்ரஸ்ட் என்று எழுதிக்கொண்டு இருக்கும் பெருந்தன்மை படைத்த பெரும் முதலைகள் உலாவிக்கொண்டிருக்கிறார்கள், பெரிய

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1969 ஆகஸ்ட் 26

பதவிகளையெல்லாம் வகித்துக்கொண்டும் இருக்கிறார்கள். தொழில் நடத்தி நஷ்டம் ஏற்பட்டுவிட்டது என்று கூறி யாரோ கொடுத்த பணத்தை வைத்துக்கொண்டு தொழில் நடத்தி உள்ள பணத்தை . . . .

THIRU V. S. S. MANI: It is an insinuation against the mercantile Community.

திரு. பி. ஜி. கருத்திருமன்: நீங்கள் ஏன் கோபித்துக் கொள்கிறீர்கள்? ஏன் கோபித்துக் கொள்கிறீர்கள் என்று தெரிகிறது. கம்யூனிஸ்ட்கள் பேசுகிற பேச்சுக்களையும், திட்டு வதையும் பார்த்தால் இதில் என்ன இருக்கிறது? வியாபாரிகள் தவறு செய்கிறார்கள், பதுக்குகிறார்கள் என்று சொல்கிறார்கள். செய்கிறார்கள் ஆகவே சொல்கிறார்கள். குறிப்பிட்டு இன்னார் என்று சொன்னால் அதை நிரூபிக்கவேண்டும். அப்படி நிரூபிக்க வேண்டிய காலத்தில் அதை நிரூபிப்போம். பெரிய ஆள்களுக்கு உதவி செய்யக்கூடிய முறையில் இந்த மசோதா அமையக் கூடாது. கோவையில் பல மில்கள் மூடப்பட்டுக் கிடக்கின்றன. அந்த நூற் பாலைகளை எடுத்து நடத்தவேண்டும் என்ற எண்ணத்தை ஆதரிக்கிறேன். அதில் எந்தவித அபிப்பிராயபேதமும் இருக்க முடியாது. ஆனால் முதலில் அதைப்பற்றி அறிய வேண்டிய பொறுப்பு இருக்கிறது. ஏன் அவைகள் மூடப்பட்டன என்று பார்க்கவேண்டும். அதை ஆராய்ந்து பார்த்தால் ஒரு மில்லில் கிடைக்கக் கூடிய லாபத்தை எடுத்து வேறொரு மில் ஆரம்பித்து அதை மிச்சமாக்கியிருக்கிறார்கள். இப்படிப் பல மில் முதலாளி கள் செய்திருக்கிறார்கள். அதுதான் அதிலுள்ள இரகசியம். நேரடியாக ஒரு கமிஷன் போட்டு விசாரிப்பார்களேயானால் அது தெரியும். ஒரு மில் பல குட்டிகள் போட்டிருக்கின்றன. வேறு விதமாக அவைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. வேறு வேறு பெயர்களில் முதலாளிகள் தொழில்களை வைத்துக் கொண்டு, மில் களையும் வைத்துக்கொண்டு இன்கம் டாக்ஸ் முதலியவைகளில் இருந்து தப்பித்துக்கொண்டு பெரிய மனிதர்களாகத் திரிந்து கொண்டிருக்கிறார்கள். மில்களை மூடக்கூடியவர்கள் வேறு தொழில்களில் பணத்தைப் போட்டுவிட்டு பங்களாக் கட்டிக் கொண்டு நன்றாகத்தான் இருக்கிறார்கள். இங்கு பார்த்தால், பணம் வேண்டும் என்று சொல்கிறார்கள். இதை ஆராயவேண்டும். 29 மில்களை எடுத்துக் கொண்டால் 15 மில்களில் இந்த நிலை. எந்த மில்கள் நன்றாக நடக்கின்றனவோ அங்கு ஒரு ஷிப்ட் அதிகமாகக் கொடுத்து யார் யார் வேலை செய்து வருகிறார்கள் என்று பார்த்து அந்தத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கவேண்டியது சர்க்கார் கடமை. சர்க்கார் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள் கிறேன் என்று கூறி திடீரென்று இதுமாதிரி ஒரு மசோதா கொண்டுவந்து எல்லாவற்றையும் எடுத்துவிட்டால் என்னவாகும்? நன்கு நடக்கிற மில்கள் கூட தப்புக் கணக்கு காட்டி எடுத்துக்



1969 ஆகஸ்ட் 26] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

கொள்ளப்படுகிற நிலை ஏற்படலாம். நான் ஒரு தொழிலதிபர் அல்ல. தொழில் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. நான் ஒரு விவசாயி. After all I am a lay man. ஆனால் நடக்கிறதை வைத்து தெரிந்து கொள்ளும் ஒரு சக்தி என்னிடம் இருக்கிறது. எந்தத் தொழில் நிறுவனமும் கோடிக்கணக்கான ரூபாய் போட்டு நஷ்டம் வந்தால் உடனடியாக தொழிலாளர்கள் நலன்கள் கெடுகின்றன என்று அவைகளை எடுத்துக்கொள்கிற வாய்ப்பு ஏற்படலாம். யாருக்காவது உதவி செய்யவேண்டு மென்று சர்க்கார் நினைப்பார்களானால், யாருடைய தயவையாவது பெறவேண்டுமென்று விரும்பினால் இந்த மசோதாவை அடிப்படை யாகக் கொண்டு உதவலாம். அப்படி உதவவேண்டிய ஒரு நிலை ஏற்படும். ஆகவே, இதை ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும். அதோடு, மூடப்பட்டுள்ள மில்களை நன்கு விசாரணை செய்து பார்க்க வேண்டும். அது சம்பந்தப்பட்டவர்களின் சொத்துக்கள், வசதிகள் எல்லாவற்றையும் பார்ப்பார்களேயானால் கஷ்டப்படுபவர்கள் தொழிலாளர்களே தவிர, முதலாளிகள் அல்ல. தொழிலாளர்களுக்கு நன்மை ஏற்படுகிறதென்றால், அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கும்படியான ஒரு நிலையிருந்தால் அதை வர வேற்கிறோம். இப்போது ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டிருக் கிறது. பாங்குகளை தேசீயவுடமையாக்கி ஒரு பெரும் முன்னேற்றப் பாதையில் போய்க்கொண்டிருக்கிறோம். 14 பாங்குகளை தேசிய வுடமையாக்கியதன் காரணமாக அதிகப்படியான பலத்தை பொது மக்களின் நலனுக்காக, விவசாயிகளின் நலனுக்காக, தொழில் அபிவிருத்திக்காக உபயோகிக்கும் ஆரம்பக் கட்டத்தில் இருக்கிறோம். தேசீயமாக்கப்பட்ட பாங்குகளின் வசதிகளைப் பெருக்கி இன்டஸ்ட்ரீஸில் ஈடுபடச்செய்யவேண்டும். பொது மக்களின் சேமிப்புப் பணம்தான் பாங்குகளில் இருக்கின்றன. அந்தப் பாங்கிலே இருக்கும் மிச்சம், பாங்கிலே இருக்கும் அதிக வசதிகள், இம்மாதிரி தொழில்களுக்கும் போடும் நிலையிலே, லாபகர மாக, நஷ்டமில்லாத முறையிலே, மசோதாவாகச் செய்தால், தப்பிப்பதற்காக இல்லாமல், உபயோககரமாக இருக்கும் வகை யிலே அமைய வேண்டும். அவசரம் அவசரமாகச் சட்டத்தைக் கொண்டு வந்து, இரண்டு நாட்களுக்கு முன் கொடுத்து, திடீ ரென்று செய்வதை விட, ஆலோசனை செய்து, பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பி, 2, 3 மாதங்களிலேகூட, அடுத்த தொடர் கூட்டத்திலே கூட எடுத்து நடத்தி விடலாம். குறிப்பிட்ட நாட்களுக்குள், குறிப்பிட்ட மாதத்திற்குள் செய்ய வேண்டுமென்ற நிலையைக்கூட கொண்டு வந்துவிடலாம். ஆகவே, இந்த மசோ தாவைப் பொறுக்குக் கமிட்டிக்கு விட வேண்டுமென்ற அந்தத் தீர்மானத்திற்கு என்னுடைய ஆதரவைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

* மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்திலே அரசாங்கம் எடுத்து நடத்த உத்தேசித்திருக்கும்

சில தொழிற்சாலைகளைப்பற்றி நிவாரணம் பெற ஒரு சட்டம் அரசாங்கத்தின் சார்பிலே கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதிலே பல அங்கத்தினர்களும், கருத்துக்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களிலே முத்தாய்ப்பு வைத்தது போன்றிருந்தது, எதிர்க்கட்சித் தலைவரவர்களின் கருத்தாகும். எனக்கு அதைக் கேட்டதிலே மட்டற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களா இப்படிப்பட்ட கருத்துக்களையெல்லாம், பொன்னான வார்த்தைகளிலே முத்து முத்தாக உதிர்க்கிறார்கள் என்ற மகிழ்ச்சி என்னுடைய உள்ளத்தில் கரைபுரண்டு ஓடியது. காரணம், இந்தச் சட்டமன்றத்திலே பலமுறை, ரொம்ப ஆவேச மாக, எழுந்தால் ஆவேசமாக பேசுவார்கள். பேசியதற்குப் பின்னால் புன்முறுவலோடு உட்காருவார்கள். அப்படி எழுந்திருக் கும்பொழுது ஆவேசமாகப் பேசியிருக்கிறார்கள் இந்த மன்றத்திலே பலமுறை. "உங்களுடைய ஆட்சிக்காலத்தில், திராவிட முன்னேற் றக்கழகம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றபிறகு, 27 ஆலைகள் மூடப் பட்டனவே, என்ன பயங்கரம், என்ன பயங்கரம், இந்த ஆட்சி தானே அதற்குப்பொறுப்பு" என்றெல்லாம் அடிக்கடி பேசுவார்கள். அப்படியெல்லாம் பேசிய நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இந்த ஆலைகளெல்லாம் மூடப்பட்ட காரணம் என்ன தெரியுமா? கொள்ளையடித்தவர்கள், பணத்தைக் கொள்ளையடித்து, எங்கேயோ சேர்த்து வைத்து விட்டார்கள், திரும்பவும் அந்த ஆலைகளுக்குப் போடாததன் காரணமாகத்தான் தொழிலாளர் களுக்கு இந்த நிலை முதலாளிகளால்தான் இப்படிப்பட்ட நிலை. யார் பேசுவது? நம்முடைய காங்கிரஸ் கட்சித் தலைவர், எதிர்க் கட்சித் தலைவரவர்கள். என்னுடைய கையிலே மாலையிருந்தால் உடனடியாக அவருடைய கழுத்தில் போட வேண்டுமென்ற ஆசை யெல்லாம் ஏற்பட்டது. இந்த அருமையான கருத்தை, இன்றைக்கு தமிழ்நாட்டு மக்கள் உணரச் செய்ததற்காக நான் அரசாங்கத்தின் சார்பில் பணிவான, நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டு விட்டது என்பது இன்றைக்கு எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய சூழ்நிலை நம்முடைய சட்ட மன்றத்தில் ஏற்பட்டிருக்கிறது. அவர்களும், அவரது கட்சியைச் சார்ந்த நண்பர் திரு. இராமமூர்த்தி அவர்களும் பேசியது விந்தை யாக இருக்கிறது. டாக்டர் ஹாண்டே அவர்களும் அதை ஒப்புக் கொண்டு பேசிவிட்டார்கள் என்பதுதான் எனக்குக் கொஞ்சம் வேதனையாக இருக்கிறது. இந்தச் சட்டத்தின் மூலமாக ஏதோ ஒரு தொழிற்சாலையைப் பிடித்துக்கொள்வதாகப் பேசிவிட்டார் களே என்று வருத்தப்படுகிறேன். திரும்பவும் இந்த மசோதாவை அவர்கள் படித்துப் பார்க்க வேண்டுமென்று மிகப்பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த அரசாங்கத்திற்கு ஒரு தொழிற் சாலையை எடுத்துக்கொள்வதற்கும், அதற்குச் சட்டம் கொண்டு வருவதற்கும் அதிகாரம் இல்லை என்பதையும் நான் தெரிவித்துக்





கொள்ளுகிறேன். இந்தச் சட்டமும் அப்படிப்பட்ட நோக்கத் தோடு கொண்டுவரப்பட்டது அல்ல என்று தெளிவாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். எந்தத் தொழிற்சாலையையும், நூற்பாலை யானாலும் சரி, அல்லது வேறு எந்தத் தொழிற்சாலையாகயிருந் தாலும் சரி, அதை எடுக்கக் கூடிய சட்டம் தனியாக இருக்கிறது. ஐ.டி.ஆர். ஆக்ட் என்றிருக்கிறது. அந்தச் சட்டம் மத்திய சர்க்காரின் சட்டம். இப்படிப்பட்ட தொழிற்சாலைகள் எடுக்கும் அதிகாரம் மத்திய சர்க்காருக்குதான் இருக்கிறது, எங்களுக்கு, எங்களுடைய ஆட்சிக்கு இல்லவே இல்லை. நண்பர் இராமமூர்த்தி அவர்களும், எதிர்க்கட்சித் தலைவரவர்களும், நிச்சயமாக ஏதோ ஒரு புதிய சட்டதைக்கொண்டுவந்து, இங்கே ஒரு தொழிற்சாலையை எடுக்கப்போகிறார்கள் என்று பேசியதும், நம்முடைய பொது வுடைமைக்கட்சியைச் சார்ந்தவர்கள், ஏன் எடுப்பதிலே தயக்கம் என்று கேட்கிறார்கள். அப்படி, இதிலே இல்லாததை பேசக் கூடிய சூழ்நிலை வந்துவிடுகிறது. அதிலே அரசியலைக் கொஞ்சம் நுழைத்தார்கள், அரசியல் இருந்தால்தான் சுவையாக இருக்கும் என்று அரசாங்கத்திற்கு தேவையில்லாத ஒரு தொழிற்-சாலையைத் தொடலாமா என்று கேட்டார்கள். இந்த விளக்கத்தை, திரும்பவும் இந்த மசோதாவை படித்து அந்த மாதிரி அதிகாரம் இல்லை என்று உணரும்படி கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த அதிகாரம் இருப்பதாக அவர்களே கற்பித்துக்கொண்டு, இந்த மசோதாவைப் பொறுக்குக் கமிட்டிக்கு விட வேண்டும் என்று சொல்கிறார்கள். தயவு செய்து அதை மட்டும் திரும்பப் பெற்றுக் கொண்டு இந்தத் திருத்தத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பொறுக்குக் கமிட்டிக்கு விட வேண்டுமென்று கேட்பது நியாயம், அவர்களுக்கு உரிமையிருக்கிறது, அதைத் தவறு என்று சொல்லமாட்டேன். பொறுக்குக்குழுவிற்கு விட வேண்டுமென்று சொல்லும்பொழுது, சில காரணங்களைக் கூறிக் கேட்க வேண்டும். பெரிய மசோதா, பல கருத்துக்கள் அடங்கிய மசோதா, பொது மக்களின் கருத்துக்களை அறிய வேண்டிய மசோதா, பல இடங் களில் சுற்றிப்பார்த்து கருத்துக்களைக் கேட்க வேண்டிய மசோதா, இப்படிப்பட்ட மசோதாக்களைத்தான் பொறுக்குக் குழுவிற்கு விட வேண்டுமென்று முடிவெடுப்பது வழக்கம். ஆனால், அவர்கள் சொன்ன காரணமெல்லாம், காங்கிரஸ் கட்சி சார்பிலே, இது அதிகாரம் கொடுக்கிறது என்ற ஒரு காரணத்தை மட்டும் சொன் னார்கள். சர்வாதிகாரம் கொடுக்கக்கூடிய மசோதா என்று சொன் னார்கள். எந்தச் சர்வாதிகாரமும், எந்தப் பிரிவுகளிலும் இந்தச் சட்டத்திலே இல்லை என்பதை காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்கும் எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கும் தெளிவாகக் கூறி, பொறுக்குக் கமிட்டிக்கு விட வேண்டுமென்ற திருத்தத் தீர்மானத்தைத் திரும்பப்பெற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையில் இருக்கிறேன்.

நண்பர் இராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள், யாருக்கு அந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது, என்று. விளக்கமாக இருக்கிறது, அரசாங்கத்திற்கு என்று எப்பொழுதுமே அப்படித்தான் போடுவது வழக்கம். அதற்குப் பின்னாலே விதிகளை அரசாங்கம் எப்படி அமல் நடத்துவது என்று செய்யும் வழக்கம் நமக்கிருக்கிறது. அதிமாக அதைப்பற்றித் தெரிவிக்கக்கூடாது என்று நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். தனியார் துறையை மேற்கொள்வதற்காக, ஏதோ, ஒன்றை செய்வதற்காக இங்கு இப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்ற எண்ணத்தை மாற்றிக் கொள்ளுவார்கள் என்ற நம்பிக்கையும் எனக்கிருக்கிறது.

பொதுவுடைமைக் கட்சியிலும், மற்றக் கட்சியின் சார்பிலும், தொழிலாளர்களுக்காகப் பரிந்து பேசப்பட்டது. அந்த உண்மையான உணர்ச்சிகளை இந்த அரசாங்கம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மறுக்காது. தொழிலாளர்களால் உருவாக்கப்பட்ட இந்த அரசு, அவர்கள் கட்சிகளாலே ஆதரிக்கப்பட்ட இந்த அரசு தொழிலாளர்களுக்குப் பாதகமாக இருக்காது. சுதந்திராக்கட்சித் தலைவர் டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள், பொதுவுடைமைக் கட்சியுடன் ஒன்றுபடுகிறேன் என்று. அதில் எனக்குக் கொஞ்சம்கூட வியப்பு ஏற்படவில்லை. சுதந்திராக் கட்சியைச் சேர்ந்தவராகயிருந்தாலும்கூட, டாக்டர் ஹாண்டே அவர்கள் தொழிலார்களுக்காகப் பரிந்து பேசக்கூடியவர் என்பது தெரியும். தொழிலாளர்களுக்குப் பேசக்கூடிய பொதுவுடைமைக் கட்சியின் கருத்தை அவர்கள் ஆதரித்ததையும் நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளுகிறேன். ஆகவே, தொழிலாளர்களுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படக்கூடாது என்ற நல்லெண்ணத்தை இங்கேயுள்ள தோழமைக் கட்சிகளெல்லாம் தொடர்ந்து கூறின. தொழிலாளர்களுக்கு எந்தவிதமான பாதகமும் இருக்கக் கூடாது என்ற கருத்தில் அரசாங்கத்திற்குக் கொஞ்சம் கூட கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால் அப்படிப்பட்ட ஒரு கருத்தை வைத்துக் கொண்டு, பொறுக்குக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று சொல்வதுதான் வேதனையாக இருந்தது. பொறுக்கு குழுவிற்கு விட்டால் பெரிய ஆபத்து; தொடர்ந்து இப்படிப்பட்ட ஆலைகளை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். அதற்கு ஆபத்தாக அமைந்துவிடும். ஆனால் அப்படிப்பட்ட ஒரு ஆபத்தைச் சுட்டிக்காட்டுவேன் என்று முன்கூட்டியே, திறமை வாய்ந்த தலைவர்கள், பொதுவுடைமைக் கட்சியில் இருப்பதால், திறமையாக எடுத்துச் சொன்னார்கள். குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக பொறுக்குக் குழுவின் சிபாரிசை நாம் பெற்றுவிடலாம் என்று எனக்கு அறிவுரை சொன்னார்கள். இப்படிப்பட்ட ஒரு எதிர்ப்பு இருக்கும் என்று அரசாங்கத்தின் சார்பில் எடுத்துச் சொல்வோம் என்று அவர்கள் ஊகித்துக் கொண்டதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. பொறுக்குக் குழுவிற்கு விடுவது அவசியம்தானா என்பதை ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட





மசோதாவிலே சொல்லியிருப்பதெல்லாம், ஏதோ அரசாங்கத்திற்குத் தேவையான தனியாரிடம் இருக்கும் ஆலைகளை அல்லது தொழிற்சாலைகளை எடுப்பதற்காக அல்ல என்று நன்றாகத் தெரியும். ஒன்றுமே செய்ய முடியாமல், தொழிற்சாலை மூடப்பட்டு, தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டால் அவர்களுக்கு அரசாங்கத்தின் சார்பிலே பரிகாரம் காண வாய்ப்பிருக்கிறதா என்று திரும்பத் திரும்ப பரிசிலித்ததற்குப் பின்னால் ஒரு முடிவுக்கு வருகிறோம். அந்த முடிவுக்கு வந்து, இந்தத் தொழிற்சாலைகளை அரசாங்கம் எடுத்து நடத்தினால் தொழிலாளர்களுக்கு ஒரு நல்ல சூழ்நிலை ஏற்படும் என்ற முடிவுக்கு வந்தபின்னால், முடிவுக்கு வர வேண்டுமென்று தொழிலாளர் தலைவர்களெல்லாம் மீண்டும் மீண்டும் கேட்டதற்குப் பிறகு, நீங்கள் இப்பொழுது நினைத்துப் பார்க்கலாம், இரண்டாண்டுக் காலமாகத் தொழிலாளர் தலைவர்களெல்லாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்திய பிறகு இப்படிப்பட்ட சூழ்நிலை வந்தது.

ஆக, திடீரென்று எடுத்தோம், கவிழ்த்தோம் என்ற அளவிலே போவது இந்த சட்டத்தினுடைய நோக்கம் அல்ல. இப்படி நாம் முடிவெடுத்ததற்குப் பின்னாலே மத்திய அரசுக்கு தெரிவிக்கிறோம். ஐ.டி.ஆர். ஆக்டின் படி தொழிற்சாலையை நாங்களே எடுத்து நடத்துவதற்கு அனுமதி தாருங்கள் என்று கேட்கிறோம். அனுமதி தந்ததற்குப் பின்னாலே வேறு யாரிடத்திலும் விடப்போவதில்லை. நம்முடைய ஆட்சி இயந்திரமே அங்கு செல்லவிருக்கிறது. அப்படிச் சென்று, அந்த வழியிலே எடுக்கும்போது என்னென்ன பாதகம் இருக்கிறது என்பதை நாம் கொஞ்சம் சிந்திக்கவேண்டும். இந்த பாதகமெல்லாம், இந்த தொல்லைகளை எல்லாம் உண்டாக்கியது முதலாளிதான், அவன்தான் காரணமாக இருக்கவேண்டும், அவன்தான் பாதகத்திற்குக் காரணம் என்று சொல்லுகின்ற உணர்ச்சியை நான் மதிக்கின்றேன். ஆனால் காரியாம்சத்திலே, செயலளவிலே நாம் அந்த தொழிற்சாலையை நடத்தவேண்டுமானால் என்னென்ன பாதுகாப்பு வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் நாம் சிந்தித்து பார்க்கவேண்டும். அதைப் பற்றித் தான் சொல்லியிருக்கிறோம். இரண்டே இரண்டு பிரிவிலே சொல்லியிருக்கிறோம். ஒரு பிரிவு கொடுத்து வைத்த கடன் தொகைகளைப் பற்றியது. அவைகளையெல்லாம் வசூலிப்பதை நிறுத்தி வைப்பதற்கு அதிகாரம் கேட்கிறோம். நாமே சென்று, நம்முடைய மக்களுடைய பணத்தை போடுகின்ற போது, அந்தப் பழைய கடன்களை, நம்மிடத்திலிருந்து, அரசாங்கத்திலிருந்து வசூலிப்பதற்கு ஒரு இடைக்கால தடை பிறப்பிப்பதற்கு அதிகாரம் பெறுகிறோம். அதுவும் கூட இடைக்காலம், அதுவும் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. இன்னொரு பாகத்தை பொறுத்த அளவிற்கு தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், தொழிலாளிகள் சம்பளத்தைக் குறைக்கலாமா. பல்லாண்டுகாலம் போராடிப் பெற்ற, சட்டத்தை கொண்டு பெற்ற குறைந்த சம்பளத்தைக் கூட நிறுத்தி வைக்கலாமா, உலகமே ஒப்புக்கொண்ட தொழிலாளர்

[திரு. செ. மாதவன்] [1969 ஆகஸ்ட் 26

தகராறுகளை தீர்த்து வைக்கக்கூடிய சட்டத்தினுடைய நோக்கத்தை மாற்றலாமா என்றெல்லாம் கேட்கப்பட்டது. சுதந்திராக் கட்சியும் சேர்ந்து கேட்டதை நோக்கும்போது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்படுகிறது. ஒருகாலும் எங்களுக்கு அப்படிப்பட்ட எண்ணம் ஏற்படாது. ஆனால், அப்படிப்பட்ட சூழ்நிலை, அந்த மாதிரி தீர்த்து வைத்து, பழைய பாக்கிகளை முதலாளிகளுக்கு கொடுத்ததற்குப் பின்னாலே அந்த தொழிற்சாலையை எடுத்து நடத்தினோம் என்றால் என்ன ஆகும்? அதுவும் கோவை மாவட்டத்திலிருந்து வரக்கூடிய தொழிலாளர் தலைவர்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படிப்பட்ட முதலாளிகள் என்னென்ன பாக்கிகள் வைத்து, எத்தனை தரம் பேச்சு வார்த்தைகள் நடத்தி இருக்கிறோம் என்பது இங்கே உள்ளவர்களுக்கு நன்றாகத் தெரியும் இப்படிப்பட்ட பாக்கிகள் வைப்பவர்களை நீங்கள் ஏன் குற்றவாளிகள் சட்டத்தின்கீழ் கொண்டு வரக்கூடாது என்று எங்களைக் கேட்டது எனக்கு நினைவிற்கு வருகிறது. எங்கள் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களும் திருப்பி அவர்களைக் கேட்டதும் நினைவிற்கு வருகிறது. 'தொழிலாளர் தலைவர்களே, உங்கள் தரப்பிலிருந்து ஒரு உறுதியைத் தருகிறீர்களா? அப்படிப்பட்ட குற்றவாளிகள் சட்டத்தின்கீழே அவர்களைப் பிடித்து, அதற்குப் பிறகு இந்த தமிழக அரசின் சார்பிலே பணம் இல்லை என்று ஆலைகள் மூடப்பட்டால் நீங்கள் என்னை கோபித்துக் கொள்ளாமல் இருப்பீர்களா', என்று கேட்டார்கள். இங்கே இருக்கிற நண்பர்கள்கூட அங்கே இருந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது தொழிலாளர் தலைவர்கள் ஒன்றும் சொல்லவில்லை. அப்படி சொல்லாமல் உள்ள காரணத்தாலே தொழிலாளர் தலைவர்கள் தவறு செய்து விட்டார்கள் என்பது கூட என்னுடைய குற்றச்சாட்டு அல்ல. ஆனால், அது உண்மை. முழு முதலை அமுக்கி விட்டான் என்று சொல்லலாம். ஆனால் அன்றாட கூலிக்குப் கூட வகையில்லாத இன்றைய தொழிலாளர்களுடைய தலைவர்கள், இவ்வளவு தொல்லைகள் இருப்பதன் காரணமாக நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம் என்று சொல்வதற்கு அங்கே முடியவில்லை. ஆக, தொழிலாளர் சார்பிலே எந்தவிதமான பாதகமும் ஏற்படக் கூடாது என்பதிலே எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை. ஆட்சேபணை இல்லை என்று சொல்கிறீர்களே, எப்படித்தான் நிறைவேற்றப் போகிறீர்கள் என்று கேட்கலாம். அவர்கள் அதைத்தான் எதிர்பார்க்கிறார்கள். அவர்களுடைய ஒத்துழைப்பைத்தான் நான் கேட்க விரும்புகிறேன். இப்பொழுது நாங்கள் பின்பற்றியிருக்கக் கூடிய முறை, இதை எடுத்துக் கொள்ளப்போகும் முறை, இனி மேலும் பின்பற்றப் போகிறோம் என்று உறுதி கொடுக்கப்போகிற முறை இதைப்பற்றி கூற வேண்டுமானால் எந்தெந்த ஆலைகளை, எந்தெந்த தொழிற்சாலைகளை நாம் எடுப்போம் என்று முடிவு செய்கிறோமோ அந்த ஆலைத் தொழிலாளர் தலைவர்களை எல்லாம் கூட்டி, பேசி, பழைய பாக்கிகள் ஏராளமாக குவிந்து கிடக்கின்றன, இதை



1969 ஆகஸ்ட் 26] [திரு. செ. மாதவன்]

உடனடியாகக் கொடுத்துவிட்டு எடுங்கள் என்று சொன்னால், மக்கள் பணத்திலிருந்து கொடுக்க வேண்டும். எங்களால் முடியுமா? முடியாததை வற்புறுத்தவேண்டாம். ஆகவே, கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள், இலாபம் வந்தவுடனே உங்களுக்குத்தான் முதல் கடமையாக தரப்படும் என்று சொல்லி, உறுதியைத் தரப் போகிறோம்.

ஓர்க்-லோட், அந்த ஆலையினுடைய நிர்வாகத்தைப் பெற்றதற்குப் பின்னாலே எவ்வளவு வேலை அளவு உங்களாலே செய்யப்பட்டால், இந்த தொழிற்சாலையை, ஆலையை நடத்தமுடியும் என்பதை நீங்களே பேசித் தீர்த்து அதை ஒப்புக்கொண்டால் அந்த வேலைத் திட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கு எங்களுக்கு அனுமதி தாருங்கள். ஏற்கனவே முடிவெடுத்ததன் காரணமாக, முதலாளிகளோடு நீங்கள் ஏராளமாக ஒப்பந்தங்கள் செய்திருக்கிறீர்கள். அதன் காரணமாக எத்தனையோ தொழிற்சாலைகளிலே எத்தனையோ அவார்டுகள் கிடைத்திருக்கின்றன. ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள எங்களை நோக்கி குறுகிய காலத்தில் இதை நிறைவேற்ற வேண்டுமென்றால் எங்களால் முடியுமா? தொழிலாளர் தலைவர்களே நீங்கள் யோசித்துப் பாருங்கள். ஆகவே எங்களாலே முடியாது என்று ஒப்பந்தம் பேசியதற்குப் பின்னாலேதான் இந்த அரசாங்கம் எந்த ஆலையானாலும் எடுக்கும். சட்டம் எங்களிடத்திலே இருக்கிற காரணத்தாலே தொழிலாளர்களுடைய உரிமையை புறக்கணித்து, சட்டத்தைப் பயன்படுத்தி தொழிலாளர்களுக்குப் புறம்பாக எந்த ஆலையையும் எந்த தொழிற்சாலையையும் எடுக்கமாட்டோம் என்ற உறுதியை இந்த சட்டமன்றத்திலே பகிரங்கமாக இந்த தொழிலாளர் தலைவர்களுக்கு என்னாலே தரமுடியும். இதைத்தான் தரமுடியும். ஆனால் சட்டத்திலேயே போடாதீர்கள் என்று சொன்னால் எதிர்பாராத சூழ்நிலை ஏற்பட்டால், எப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படுமோ நம்மாலே சொல்ல முடியாது; ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலையில் சட்டம் தேவை என்பதை நான் உங்களுக்கெல்லாம் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் ஒன்று சொன்னார்கள். மராட்டியத்தைப் பாருங்கள் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்களென்றும், தான் உடனே இந்த அமைச்சரவையை பார்த்து, பார்க்காதீர்கள் என்று சொன்னதாகவும் அறிவுரை சொன்னார்கள். அவர்கள் கூறுகின்ற அறிவுரை இந்த நாட்டு பாட்டாளி வர்க்கத்துக்கு பயன்தருமானால், அதை ஏற்றுக்கொள்வதற்கு இந்த அரசு துளிக் கூடத் தயங்காது. ஆனால் அவர்களுடைய கட்சி ஆட்சி செய்யும் கேரளத்திலே இப்படிப்பட்ட ஒரு சட்டம் இருக்கிறது. உத்தரப்பிரதேசத்திலும் ஒரு சட்டம் இருக்கிறது. இந்த ஆட்சி, இந்தக் கட்சி என்று அல்ல. இந்தச் சட்டம், அரசாங்கம் அந்த ஆலைகளுக்கு, தொழிற்சாலைகளுக்குப் பொறுப்பேற்கின்றபோது, சில சங்கடங்கள்

அவற்றிற்கு ஏற்படாமல் தடுப்பதற்காக ஏற்பட்ட சட்டமே தவிர, இன்னொருவரை ஒழிக்க வேண்டுமென்றோ, இன்னொருவருக்கு பாதகம் ஏற்படுத்தவேண்டுமென்ற கெட்ட எண்ணத்திலோ, தீய எண்ணத்திலோ கொண்டு வந்ததாக அவர்கள் கருதக் கூடாது. இப்பொழுது கூட கேரள மாநிலத்திலே காங்கிரஸ் கட்சி அரசாங்கம் இருக்கிறது என்று சொல்வார்களோ என்ற சந்தேகம் வந்தது. அவ்வமயம் பிரஜா சோஷலிஸ்ட் கட்சி ஆட்சியிலிருந்தது என்று நினைக்கிறேன். ஆக சமத்துவக் கட்சி காலத்திலே கூடக் கொண்டுவரப்படலாம். அவர்கள் கொண்டு வந்ததாலே நாங்கள் கொண்டு வருவதை நீங்கள் ஆதரிக்கவேண்டுமென்று கேட்பதாக கருதக் கூடாது. உறுதியைத் தான் கேட்கிறேன். அப்படி வருகின்ற எந்த நாளிலும் சரி, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்களை அழைத்துப் பேசி, அதற்குப் பின்னாலே நாங்கள் முடிவெடுக்கத் தயாராக இருக்கிறோம். காரணம் எங்கள் உள்ளத்திலே தொழிலாளர்களுக்குப் பாதகம் ஏற்படக் கூடாது என்பதிலே உறுதி உண்டு. அவர்களுக்கு பாதகம் ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் கொஞ்சங்கூடக் கிடையாது. அந்த உறுதியைத்தான் நான் உங்களிடத்திலே கொடுத்துக்கொண்டு, இந்த சட்டம் உண்மையிலே யாருக்கும் தீங்கு அளிப்பதற்காக இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஐ.டி.ஆர். ஆக்டின்கீழ் எடுக்கப்படுகிற தொழிற் சாலைகள், ஆலைகள், இவைகளை நடத்துவதற்கு சில சங்கடங்கள் நமக்கு வாராமல் இருப்பதற்கு ஒரு பாதுகாப்பு சட்டம் தான் இது. இது இந்திய நாட்டிலே நீண்டகாலமாக இருக்கக்கூடிய சட்டம். நீண்டகாலத்திற்குப் பின்னாலே இப்பொழுது கொண்டு வருகிறோம். அப்படி கொண்டு வரக்கூடிய துர்ப்பாக்கியம் நூற்பாலைகள் மூடப் பட்டதனால் ஏற்பட்டது. எல்லா கட்சித் தலைவர்களும் இந்தச் சட்டத்தை முழுமனதோடு ஏற்றுக்கொள்ளுங்கள். எந்த தொழிற் சாலையிலாவது தொழிலாளர்களுக்குப் பாதகம் ஏற்பட்டாலும் அதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் கொஞ்சங்கூடத் தயங்காது அதைத் தடுக்கும் என்று தலைவர்களுக் கெல்லாம் தெரிவித்துக் கொண்டு, உடனடியாக இது சட்டமாக ஆக்கப்பட்டால், சில நாட்களுக்குள்ளாகவே, இந்த தொழிற் சாலைகளைத் துவக்க முடியும். அதற்காக 51 சதவிகிதம் பணத்தை டெல்லி அரசிடத்திலும் பெறமுடியும். அதற்கு இந்த மசோதா உடனடியாக சட்டமாக்கப்படவேண்டும் என்று டெல்லி ஆட்சி அடிக்கடி எங்களிடத்திலே கேட்டுக்கொண்டு வருகிறது. ஆகவே இதை உடனடியாக சட்டமாக ஆக்கித்தரவேண்டுமென்று மறுபடியும் விரும்பி, வேண்டி, கேட்டுக்கொண்டு, முடிக்கிறேன், வணக்கம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பேசின சமயத்திலே இந்த நெசவு செய்யும்போது ஒரு இழை நகருவதைப்போல் பேசினார்கள்.





என்னைப் பாராட்டினார்கள், நன்றி. ஆனால், அதே சமயத்திலே நாம் தனியாக இருப்பதுபோலவும், தி. மு. கழக ஆட்சிக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லாதது போலவும் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே இந்த ஆலைகள் எல்லாம் மூடவில்லைபோலவும் அவர்கள் பேசினார்கள். 1967-க்குப் பிறகு தான் இந்த 27 ஆலைகள் மூடப்பட்டன. அதற்குக் காரணங்கள் சொல்லியிருக்கலாம். நீங்கள் அப்பொழுதே நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச் சாட்டை நான் சாட்ட விரும்பவில்லை. இவ்வளவு காலத்திற்குப் பிறகாவது நீங்கள் நடவடிக்கை எடுத்ததற்காக நன்றி. அவர்கள் பாராட்டுதலைத் தெரிவித்தபோது, குறுக்கிட வேண்டாமென்று சொல்லியதால் கடைசிவரை பொறுத்துக்கொண்டிருந்தேன். 1967-ம் வருடம் மார்ச் மாதம் 6-ம் தேதிக்குப் பிறகுதான் மூடப்பட்டன என்பது குறிப்பிலே இருக்கவேண்டுமென்பதற்காகத் தான் இதைச் சொன்னேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** அமைச்சர் அவர்களின் விளக்கத் திற்குப் பின்னாலே ஒன்று மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மசோதா எந்த தொழில் கூடத்தையும் எடுத்துக் கொள்கிற வகையிலே வகை செய்ய வில்லை என்று அமைச்சர் அவர்கள் ஆரம்பத்தில் குறிப்பிட்டார்கள். பின்னால் அவர்களுடைய பேச்சு நேர்மாறாக இருந்தது. ஸ்டேட்மெண்டு ஆஃப் ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீஸன்ஸ் என்று சொல்கிறபொழுது இந்த மசோதாவின் பகுதியிலே ஒரு குறிப்பு இருக்கிறது.

It is considered desirable to empower the Government not only to declare textile mills, but any industrial undertaking, as a relief undertaking in the larger interests of the economy of the State.

என்று கண்டிருக்கிறது. ஆகவே, இந்த அரசு எந்த அதிகாரத்தை விரும்புகிறது என்பது இந்த மசோதாவிலே தெளிவாக்கப் பட்டிருக்கிறது. இதை எப்படிப் பயன்படுத்துகிறீர்கள் என்பதில் அவர்கள் பேரில் நம்பிக்கைக் குறைவு கிடையாது, எப்பொழுதும் பயன்படுத்துவதற்கு இந்த மசோதாவில் இடம் இருக்கக்கூடாது, தேவைப்படுகிற நேரத்தில் இப்படிப்பட்ட மசோதாவை நிறை வேற்றிக் கொள்ளலாம், அப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் இருக்கின்றன என்று சொன்னேன். தொழில் கூடங்களை எப்படி எடுத்துக்கொள்வது, யார் நிர்வாகம் செய்வது என்பதற்கான வழிவகை செய்யப்படவில்லை என்று சொன்னதற்கு, அமைச்சர் அவர்கள் விதிகள் மூலம் அதற்கு வகை செய்யலாம் என்று சொன்னார்கள். அதையே சட்டத்திலும் செய்யலாம். இருந்தாலும், அமைச்சர் அவர்கள் சொல்வதை அந்த அளவில் ஏற்றுக் கொள்கிறேன். மற்றபடி, 'இந்து' பத்திரிகை பற்றி நான் குறிப்பிட்டு அரசியலுக்கு இழுக்கவேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. வெறும் உதாரணத்திற்காகச் சொன்னேன். யார் மீது என்ன தவறு என்பதைச் சொல்லவில்லை. அமைச்சர் அவர்கள் அரசியலைப் புகுத்தவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை நிறைவேற்றித்தான், தொழிலாளிகளுடைய முன் பாக்கிகளை சட்டத்தின் மூலமாகத்தான் நிறுத்திவைக்கவேண்டும் என்ற அம்சம் கிடையாது. இதற்கு முன்னால் கூட நிறுத்தப்பட்ட ஆலைகளிலே அரசாங்கமும், நாங்களும் பேசி உடன்பாடு ஏற்பட்டு, அந்த ஆலைகள் இப்பொழுது அந்த உடன்பாட்டின் பேரில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. சட்டத்தைத் திருத்தித் தான் இதைச் செய்யவேண்டும் என்பது அல்ல. தொழிலாளர்கள் ஆலைகளுடைய நிலைமைகள் என்ன என்பதைப் புரிந்துகொண்டு, அதற்கொப்ப செயல்படத் தயாராக இருக்கிறார்கள். அதனால், சட்டம் திருத்தப்படாமலேயே இந்தக் காரியங்களைச் செய்வதற்கு வழி உண்டு என்பதை அமைச்சர் அவர்களின் ஞாபகத்திற்குக் கொண்டு வருகிறேன்.

DR. H. V. HANDE : I want to seek clarification on one or two points. The Minister said in his reply that if this Bill was passed, immediately the Government was likely to get Central assistance to the tune of 51 per cent. Can we know the exact terms of the talk between the Central Government and the State Government, who will be ultimately responsible for the running of the mills, to what extent the State will have powers and to what extent there will be Central interference? I request the Minister to explain the position.

In his reply the Minister gave a hint that I did not follow the exact implications of the Bill. I did follow the implications and I mentioned in my speech that this Bill was a result of the Central Act 29 of 1967. There is a part of the Bill which says that not only textile mills but also any 'industrial undertaking', are within the scope of this Bill. That is why I asked whether this Bill was a direct result of the Central Act of 1967 or whether it conferred more powers than those contemplated in the Central Act.

**திரு. என். சங்கரய்யா :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதா குறித்து அமைச்சர் அவர்கள் இப்பொழுது பேசும் பொழுது தொழிலாளர்களின் உரிமைகளை பாதிப்பதற்கான நோக்கம் இல்லை என்று சொன்னார்கள். அவசரமாக இருக்கக்கூடிய காரணத்தினால் இந்த சட்டத்தை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். என்னுடைய கட்சியின் சார்பில் வற்புறுத்துவது என்னவென்றால், அவசரம் என்றால், அதற்கு மட்டும் அதிகாரத்தைக் கொடுக்கக்கூடிய ஷரத்துக்களைக் கொண்டு இந்த மசோதாவை நிறைவேற்றிக்கொள்ளலாம். தொழிலாளர்களுடைய உரிமைகளை பாதிக்கக்கூடிய ஷரத்துக்களை இப்பொழுது சட்டபூர்வமாக ஆக்கவேண்டாம். தொழிலாளர்கள் நிச்சயமாக அரசாங்கத்தை கலந்துகொண்டு, தேவையான ஒப்பந்தங்கள் செய்துகொண்டு, அவர்களுக்கு இஷ்டபூர்வமாக, நிலைமைகளை



ஏற்படுத்திக்கொள்ள முடியும். தேவையானபொழுது, அரசாங்கம் தொழிலாளர்களுடைய உரிமைகளைப்பற்றி பாதிக்கக்கூடிய ஷரத்துக்களைப் பின்னாலே ஒரு திருத்த மசோதாவாகக் கூட கொண்டு வந்து சேர்த்துக்கொள்ளலாம். இப்பொழுது மூடப்பட்டுள்ள பஞ்சாலைகள் மட்டும் அல்ல, பொதுவாக பல மில்கள் மூடப்பட்டு, இப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலைமை ஏற்படலாம். துயர் தணிப்பு நடவடிக்கை என்ற முறையில், விரிவான தொழிலாளர் கொள்கைகள் அடிப்படை அம்சத்தில் பாதிக்கப்படுகின்றன என்ற அம்சத்தை ஏற்றுக்கொண்டு, இந்த சட்டத்தை நிறைவேற்றிவிட்டு, தொழிலாளர்கள் உரிமைகளை பாதிக்கக்கூடிய விஷயங்களை நாம் பிறகு முடிவு செய்துகொள்ளலாம் என்ற யோசனையை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

* **மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நண்பர் திரு. இராமமூர்த்தி அவர்கள் என்னுடைய ஜாதி, வக்கீல் ஜாதி. ஏதாவது வாதத்தில் தோல்வி ஏற்பட்டால், பெரும்பாலும் ஒப்புக்கொள்வதில்லை. 'நான் சரியாக எடுத்துச்சொல்லவில்லை என்பது தெரிகிறது' என்று ஆரம்பிப்போம். மீண்டும் ஒரு முறை எடுத்துச் சொல்கிறேன். 'டிக்ளேர்' என்றால் எடுப்பது என்று அர்த்தம் அல்ல. எடுப்பது என்றால் அக்விஸிஷன் பண்ணவேண்டும். ஐ.டி.ஆர். ஆக்ட் இருக்கிறது. ஐ.டி.ஆர். ஆக்டின் கீழ் எடுக்கப்பட்ட ஒரு தொழிற்சாலையை துயர் தணிப்பு சட்டத்தின் கீழ் வரவேண்டும். டிக்ளேர் செய்வதற்கு அதிகாரம் இருக்கிறது. எடுப்பது என்ற பொருளில் அவர் பேசக்கூடாது. எடுத்துவிட்டால், துயர் தணிப்பு சட்டத்தின் கீழ் இருந்தால் தான் அந்தத் தொழிற்சாலையை நடத்த முடியும் என்பது என்னுடைய விளக்கம். தொழிற்சாலையை எடுத்துக்கொள்ளப்போகிறோம் என்று தயவு செய்து அவர்கள் பொருள் கொள்ளக்கூடாது என்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் லிக்விடேஷன் ஆக்ட், அதாவது 1967-ம் ஆண்டு சட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அது மத்திய அரசின் சட்டம். அது வேறு ஒரு காரணத்திற்காகக் கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டத்தைக் கூட இதிலே சொல்லவில்லை. எந்தச் சட்டத்தின் கீழ் எந்தத் தொழிற்சாலை எடுக்கப்பட்டாலும், ஐ.டி.ஆர். ஆக்டின் கீழ் எந்தத் தொழிற்சாலை எடுக்கப்பட்டாலும் அதை எடுத்து நடத்தும்பொழுது சில சங்கடங்கள் வருகின்றன. பழைய கடன் கொடுக்கவேண்டும், அர்ரியர்ஸ் ஆஃப் ஸாலரி கொடுக்கவேண்டும். இப்படிப்பட்ட சங்கடங்களை நிறுத்தி வைப்பதற்கு, இடைக்கால நிவாரணமாக—ஐந்து வருஷங்கள்தான் நிறுத்திவைக்கலாம், அதற்கு மேல் நிறுத்திவைக்க முடியாது—எங்களுக்கு அதிகாரம் தரப்படுகிறது என்பதை சொல்லிக் கொள்கிறேன். எப்படிக் கொடுக்கிறோம் என்பதற்கு விவரங்கள் கேட்டார்கள். என்.டி.ஸி. கார்ப்பரேஷன் என்று அவர்கள்

வைத்திருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் மாநில டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் என்று நாம் வைத்திருக்கிறோம். அவர்கள் 51 சதவிகிதம் தருகிறார்கள். நாம் 49 சதவிகிதம் தருகிறோம். இரண்டு பேர்களும் சேர்ந்து ஒரு குழுவைப் போடுகிறோம். குழுவின் சார்பில் இது நடக்கப்போகிறது. ஆதரைஸ்டு கண்டிரோலர் என்று ஒருவர் இருப்பார். ஐ.டி.ஆர். ஆக்டின் கீழ் ஆதரைஸ்டு கண்டிரோலர் என்பவர் இருப்பார். நம்முடைய ஸ்டேட் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷனிலிருந்தே இருக்கட்டும் என்று கேட்டோம். அதை என்.டி.ஸி. நாஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் ஒப்புக்கொண்டு விட்டது. ஆகவே, இருவரும் ஒரு தொழிலைப் பொறுப்பேற்று, இடைக்கால நிவாரணத்திற்காக நடத்துகிறோம் என்பது பொருள்.

நம்முடைய தொழிற்சங்கத் தலைவர் மீண்டும் அதே கருத்தைச் சொன்னார்கள். தொழிலாளர்களுக்கு பாதகம் ஏற்பட்டுவிடுமோ என்ற நினைப்பில், பாதகம் ஏற்பட்டுவிடுமோ என்ற சந்தேகத்தை எழுப்பியிருக்கிறார்கள். எந்தத் தொழிற்சாலையையும் எடுப்பதற்கு முன்னாலே தொழிலாளர்கள் தலைவர்களை அரசாங்கத்தின் அளவிலே கூப்பிட்டுப் பேசி, அவர்கள் ஏற்றுக்கொண்டதற்குப் பின்னாலே, இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி எடுத்துக்கொள்வதற்கு நாம் தயாராக இருக்கிறோம். அவசரம் அவசரமாக ஒரு தொழிற்சாலையை எடுத்துக்கொண்டு, அதன் காரணமாகத் தொழிலாளிகளுக்குப் பாதகம் ஏற்பட்டுவிடுமோ என்ற சந்தேகம் அவர்கள் உள்ளத்தில் இருக்கிறது. அந்தச் சந்தேகத்தை அறவே நீக்குவதற்கு நான் அவர்களுக்குத் தருகிற உறுதியெல்லாம், எந்தத் தொழிற்சாலையையும், இப்பொழுது எடுக்கப்போகிற ஆலைகளையும் சரி, இன்னும் எடுக்கப்போகிற தொழிற்சாலைகளையும் சரி, எடுப்பதற்கு முன்னால் தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்துப் பேசி, அவர்களெல்லாம் சேர்ந்து எடுக்கவேண்டாம் என்று சொல்லி விட்டால், நான் எடுக்க மாட்டேன் என்ற உறுதியை உங்களுக்குத் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். அப்படி நீங்கள் எடுக்க வேண்டாம் என்று சொல்லிவிட்டால், இந்த சட்டத்தைப் பயன்படுத்தி நிச்சயம் அந்தத் தொழிற்சாலையை எடுக்கமாட்டோம் என்று உறுதி தருவதற்குத் தயாராக இருக்கிறேன். அந்த உறுதியைத் தான் உங்களுக்குத் தர முடியும். அந்த உறுதியின் பேரில் நம்பிக்கைவைத்து, தொழிலாளர் தலைவர்கள் எல்லாம் இந்தச் சட்டத்தின் கீழே எந்த இடத்திலாவது தொழிலாளர்களைப் பாதிக்கக்கூடிய அளவுக்கு நடப்போமானால், அதை எடுத்துக் காட்டிப் பேசி, அதிலிருந்து அரசாங்கத்தைத் தவிர்த்துக் கொள்வதற்கு உங்களுக்கு ஒரு வாய்ப்புத் தரத் தயாராக இருக்கிறோம் என்ற உறுதியை இந்த மன்றத்தில் மீண்டும் தருகிறேன். இந்த மசோதாவை ஏகமனதாக சட்டமாக நிறைவேற்றி, ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் அனுமதியோடு திரு. இராமமூர்த்தி அவர்களின் திருத்தம் திரும்பப் பெற்றுக் கொள்ளப்படுகிறது.

பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1969-ம் ஆண்டு துயர் தணிப்பு நிறுவனங்கள் (சிறப்பு விதித்துறை) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 13/69) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு பிரிவு வாரியாக மசோதா ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 3.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, பேரவைமுன் உள்ள கேள்வி—

"பிரிவு 3, மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

THIRU K. RAMAMURTHI : Sir, I move the amendment standing in my name with a slight alteration, with the permission of the Speaker. Sir, in my amendment, the word 'only' may be deleted and 'also' may be inserted. The idea is that the management shall also be consulted. I move my amendment, viz :—

In clause 3, after the words 'be a relief undertaking', add the following :

"and such declaration shall also be at the request of the management expressing its inability to run industry."

THIRU K. VINAYAKAM : Sir, I second the amendment.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, இதற்கு அதிக விவாதம் தேவையில்லை என்று எங்கள் கட்சியின் சார்பில் சொல்லுகிறேன். இந்த நிறுவனங்களை 'டிக்ளேர்' செய்யும்போது அல்லது எடுக்கும்போது, அந்த அந்தத் தொழில் தலைவர்களையும், அந்தத் தொழிலைச் சேர்ந்தவர்களையும் கலந்து கொள்ள வேண்டும் என்கிற ஒரே ஒரு காரணத்திற்காகத்தான் இதைக் கொண்டு வருகிறேன். இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அமைச்சரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் மகிழ்ச்சியையெல்லாம் இந்த திருத்தத்தால் கெடுத்துவிடுகிறார்கள். இப்படிப்பட்ட முதலாளிகளை விட்டு வைக்கலாமா என்றார்கள் எதிர்க் கட்சித் தலைவர் ;

[திரு. செ. மாதவன்] [1969 ஆகஸ்ட் 26

அங்கத்தினர் அவர்களையே கேட்டுக் கொண்டு செய்யும்படி கேட்கிறார்கள். இதை ஏற்றுக் கொண்டால், எதிர்க் கட்சித் தலைவருடைய கருத்து போய்விடுகிறது. எல்லாம் செய்துவிட்டு, ஏப்பம் விட்டவர்கள், அரசாங்கம் எடுத்துக் கொள்ளவேண்டும் என்றார்கள். இன்றைன்று, காங்கிரஸ் கட்சியிலேயே இருந்து இப்படி அங்கத்தினர் கேட்பது சரியாக இல்லை. அங்கத்தினர் கேட்பது என்னவென்றால், மக்கள் பணத்தைப் போடுவதற்கு முன்னால், நாம் யோசிக்க வேண்டும். ஆனால், அவர்கள் கேட்பது, மக்கள் பணத்தைப் போடுவதற்கு முன்னால், முதலாளிகளுடைய தயவைக் கேட்டு ஒத்துக்கொள்ளவேண்டும் என்கிறார்கள். அதோடு, அவர்கள் சொல்வது அவர்களுடைய தலைவர் சொல்வதற்கு நேர் எதிராக, கொள்கையில் முரண்பாடாக இருக்கிறது. மேலும் திருத்தத்திற்குத் திருத்தம் கொடுப்பதே சரியாகாது. ஏதோ பேச வாய்ப்புக் கிடைத்தது. வற்புறுத்துவதானால், மக்கள் பணத்தை முதலாளிகள் தயவைப் பார்த்துப் போடவேண்டும் என்று ஆகும். ஆகவே, அதை ஏற்றுக்கொள்வதற்கில்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** என்னுடைய திருத்தம் என்பது நான் மூவ் செய்த பிறகுதானே ? ஆகவே, அதற்கு ஒரு திருத்தம் என்று சொல்ல முடியாது. நான் தங்களிடம் கொடுத்தேன். அதை இங்கே பிரேரேபிக்கும்போது, தங்கள் அனுமதியைப் பெற்று, திருத்தத்தோடு மூவ் செய்கிறேன்.

இந்தத் திருத்தத்தின் மூலம் எனக்கும் எங்கள் கட்சித் தலைவருக்கும் ஏதோ கருத்து வேறுபாடு, கொள்கை வேறுபாடு என்கிற நிலையைக் காட்டும் அளவில் இருப்பதாக அமைச்சர் சொன்னார்கள். அப்படியில்லை. நான் சொல்வது, 'ஆல்ஸோ பி கன்ஸல்டட்' என்றுதான். எல்லா முதலாளிகளையும் அழித்து விடுகிறோம் என்று சொல்வதானால், சரி, நாங்கள் ஆதரிக்கிறோம். தயாராக இருக்கிறோம். ஆனால், இவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்றால், குறிப்பிட்ட முதலாளிகளை விட்டு விடுவார்கள், சிலரை மட்டும் செய்வார்கள். இந்த நிலை வரக் கூடாது என்று தான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். அதனால் என்னுடைய கட்சித் தலைவருக்கும் எனக்கும் எந்த விதமான கொள்கை வித்தியாசமும் இல்லை. அப்படிப்பட்ட பாவனை ஏற்படும் அளவில் சொல்வது சரியில்லை.

அவையின் அனுமதியோடு, திருத்தம் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

### பிரிவு 4.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைமுன் உள்ள கேள்வி—

"பிரிவு 4 மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."



1969 ஆகஸ்ட் 26]

**திரு. என். சங்கரய்யா :** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 4-வது பிரிவிலே,

"(எ) என்ற உப பிரிவையும் அட்டவணையையும் நீக்க வேண்டும்"

என்கிற திருத்தத்தை முன்மொழிகிறேன்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** திரு. சங்கரய்யா முன்மொழிந்த திருத்தத்தை நான் வழி மொழிகிறேன்.

**திரு. சி. கோவிந்தராசன் :** தலைவர் அவர்களே, செக்ஷன் 4, பகுதி (பி)-யில் கீழ்க்கண்ட திருத்தத்தைப் பிரேரேபிக்கிறேன் :—

In clause 4 (*b*), after the words 'standing orders' and before the words 'or other', insert the following :

"except such agreements, settlements, awards and standing orders which confer benefits on employees."

**திரு. என். சங்கரய்யா :** நான் வழிமொழிகிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி :** சார், என்னுடைய கீழ்க்கண்ட திருத்தை முன்மொழிகிறேன்.

After sub-clause (*a*) of clause 4, the following provision shall be added.

"Provided that the provisions of the enactments which are beneficial to labour shall not be curtailed."

**திரு. எம். சுரேந்திரன் :** நான் இதை வழி மொழிகிறேன்.

**திரு. என். சங்கரய்யா :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நான்காவது பிரிவில் (எ) என்ற உப பிரிவும், அட்டவணையும் நீக்கப்படவேண்டும் என்று நான் கொடுத்திருக்கும் திருத்தம் முக்கியமானது. அமைச்சரவர்கள் பொதுவிவாதத்தின்போது, வேறு சில மாநிலங்களைப் பற்றி சொன்னார்கள். கேரளாவில், முன்பு வேறொரு ஆட்சியின்போது செய்யப்பட்டது. காரணம் என்னவென்றால், இப்படிப்பட்ட தொழிலாளிகளைப் பாதிக்கும், அவர்கள் உரிமைகளைப் பறிக்கும் ஷரத்துக்களைக் கொண்டு வருவது, தொழிலாளர்களுடைய ஆதரவில் இருக்கும் ஆட்சிக்கு அசாத்திய மானது. இப்பொழுது இங்கே வந்துள்ள மசோதா, துயர் தணிப்பு முயற்சி, தேசியமாக்கும் முயற்சி அல்ல. அப்படித் தொழிற் சாலைகளை எடுக்கும்போது குறைந்தபட்ச உரிமைகளைப் பாதிக்கக் கூடாது. ஆகவே, இந்தச் சட்டம் என்று வந்தால், சட்டத்திற்கு கட்டாயம் என்று வருகிறது. ஆகவே, அரசாங்கம் சட்டத்தின் ஷரத்துக்கள் பயன் படாது என்றாலும், இண்டஸ்ட்ரியல் எம்ப்ளாய்மெண்ட் ஸ்டாண்டிங் ஆர்டர்கள், தொழில் தகராறு சட்டம், குறைந்த பட்ச கூலிச் சட்டம் இவற்றைப் பூரணமாக நிறுத்தி வைக்கலாம் என்று வரும்போது, அரசாங்கத்திற்கு

[திரு.என்.சங்கரய்யா] [1969 ஆகஸ்ட் 26

சங்கடமாகத்தான் போகும். தொழிற்சாலையில் தொழிலாளிகளுக்கு குறைபாடுகள் இருந்தால், அந்தக் குறைபாடுகளை முறையிட்டுக் கொள்ள, நாட்டில் இருக்கக் கூடிய இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் படி அவர்களுக்கு இருக்கும் வாய்ப்புக்கள் கெடுபட்டுப் போகின்றன. குறைகளை, குறைபாடுகளை சட்டபூர்வமாகச் சொல்வதற்கு வழியில்லை. அதே நேரத்தில் உரிமைகள் போகின்றன. இந்திய நாட்டில் தொழில் உரிமைகள் எதுவுமே இல்லாமல் இருந்த ஆரம்பகாலத்திற்கு, டாக்டர் வாடியா, திரு. கல்யாணசுந்தரம் அவர்களுடைய காலத்திற்குக் கொண்டு போய்விடும். அரசாங்கம் தொழிலாளர்களைக் கலந்து கொள்ளாமல் செய்ய மாட்டோம், என்று சொல்லலாம், அதே நம்பிக்கையில், தொழிலாளிகளை நம்பி, சட்ட ரீதியாக ஏற்படும் கட்டாயத்தை எடுத்துவிட்டு, உங்கள் நன்மைக்குத் தேவையான முறையில் செய்கிறோம் என்று ஒரு ஒப்பந்தத்திற்கு வாலண்டரி ஒப்பந்தம் ஒன்றைச் செய்ய நிலைமை ஏற்பட்டால், அது சுயேச்சையாக ஏற்பட்டதாக இருக்கும். அது நாட்டில் தொழிலாளிகள், ஜனநாயகம் பாதிக்கப்படாத நிலை இருக்கும். அதற்கு உதவிகரமாக இருக்கும்.

இன்றைக்கு நெருக்கடி இருப்பதால், இந்தப் பஞ்சாலைகள் மட்டுமல்ல, வேறு எந்தத் தொழிலையும் நடத்தும் நிலைமை வரலாம். ஏராளமான தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருப்பார்கள். அப்பொழுது அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கலாம். அப்படியில்லையென்றால், தாங்கள் நடத்தும் தொழிற்சாலையிலேயே மதிப்புக் கொடுக்கவில்லை என்று அரசாங்கத்தைச் சொல்லி, ஏகபோக முதலாளிகள் அதை ஒரு நொண்டிச் சாக்காகப் பயன்படுத்துவார்கள். கட்டாயமாக நொண்டிச் சாக்காகப் பயன்படுத்துவார்கள். அப்பொழுது தமிழ் நாட்டில் இரண்டு கேடிகரியான தொழிலாளர்கள் ஏற்படுவார்கள். தொழிலாளர்களுடைய உரிமைகள் கொண்ட தொழிலாளர்கள் என்றும், தொழில் தகராறு செய்ய முடியாது வாய்ப்புக்கள் கிடைக்காத தொழிலாளர்கள் என்றும் இரண்டு பகுதித் தொழிலாளர்கள் ஏற்படுவார்கள். ஆகவே, அவர்கள் உரிமை போய், அடிமை நிலை ஏற்படும். அப்படிப்பட்ட நிலை இல்லை என்று அமைச்சர் வாக்குறுதி கொடுத்தால், அதை ஏற்றுக் கொள்ள எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபமும் இல்லை. ஆனால் இந்த ஷரத்துக்கள் தேவை. இந்த ஷரத்துக்கள் மூலம், இந்தச் சட்டத்தை நிறைவேற்றி, அரசாங்கம் தொழில்களை ஏற்றுக்கொள்ள முடியும். தொழிலாளர்களை வைத்து ஒப்பந்தத்தின் மூலமாக நிச்சயமாக தொழில்களை நடத்த முடியும். சட்ட ரீதியாக நம் பொறுப்புபற்றி சில அடிப்படை உரிமைகள் இன்னவை என்பதை இந்த ஷரத்து பாதிக்கப்படுவதால், இது கவலை அளிக்கக்கூடிய விஷயமாக இருக்கிறது. ஆகவே தயவுசெய்து இந்த அரசாங்கம் இந்தத் திருத்தத்தை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1969 ஆகஸ்ட் 26]

* **திரு. எம். சுரேந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் அளித்திருக்கிற திருத்த ஷெட்யூல் முழுசாக எடுத்துவிட வேண்டுமென்பதல்ல. நான்காவது விதி, (எ) உபவிதியில் இருக்கிற, ஷெட்யூலில் இருக்கிற எல்லாமே இதற்கு வேண்டும் என்று இருப்பதிலே, 'தொழிலாளர்கள் நலன் சம்பந்தப்பட்ட சட்ட விதிகள் இல்லாத மற்ற விதிகள்' என்று சேர்த்திருக்கிறோம். தொழிலாளர்கள் நலன்கள் பாதிப்பது இல்லையென்று அமைச்சர் அவர்கள் உறுதியளித்திருந்தாலும்கூட, சட்டம் என்று வந்தால், அந்தச் சந்தர்ப்பத்தில் இருக்கின்ற நிர்வாகிகளும், அதிகாரிகளும், அமைச்சர்களும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. மாறி மாறி, வேறு வேறு அதிகாரிகள் வேறு வேறு அமைச்சர்கள், வந்து கொண்டிருக்கின்ற நேரத்திலே நிர்வாகம் செய்ய வருபவர்களும் வேறு வேறு ஆட்களாக வரலாம். நான் செய்கிறேன் என்று சொல்லி வாதாடுவதற்கு இடம் இருக்கிறது. தொழிலாளர் நலனிலே அக்கறை கொண்ட அரசின் சட்டத்திலே இப்படி வருவது நல்லது அல்ல. தொழிலாளர்கள் நலன்கள் பற்றி ஒரு விதி அதிலே இருப்பது நல்லது என்று என்னுடைய சார்பிலே வலியுறுத்தி, நான் அளித்திருக்கிற திருத்தை வற்புறுத்துகிறேன்

* **மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, இந்த வாதங்கள் எல்லாம் பேசப்பட்டன. அவை எல்லாவற்றிற்கும் ஏற்கெனவே பதில் தரப்பட்டிருக்கின்றன. மீண்டும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். தொழில்களை அரசாங்கம் வலிந்து ஓடி எடுத்துக் கொள்வதாக யாரும் நினைத்துவிடக் கூடாது. ஒரு தொழிலை அரசாங்கம் எடுத்துக்கொள்வது, ஒரு ஆலையை அரசாங்கம் ஏற்று நடத்த வேண்டுமானால், அரசாங்கத்தின் தரப்பிலே சில திட்டங்கள் தரப்படுகின்றன. அரசாங்க அலுவலாளர்கள் ஏதோ செய்து விடுவார்கள் என்று நினைக்கிறார்கள். அப்படி அல்ல. ஒரு ஆலையை எடுத்து நடத்த வேண்டுமென்றால், ஒர்க் லோடு என்ன இருக்க வேண்டும், அங்கு வேலைசெய்யும் தொழிலாளர்களுக்குச் சம்பள விகிதம் என்ன இருக்க வேண்டும், எத்தனை பேருக்கு வேலை கொடுக்க முடியும், எப்போது, எந்த அளவிற்கு லாபம் கிடைக்கும் என்பன போன்ற விஷயங்களை முதலில் ஆராய வேண்டும். அப்படி ஆராய்ந்து பார்த்த பின்னர்தான், அது அரசாங்கத் தரப்பில் எடுத்துக்கொள்ளப்படும். அதற்குத்தான் சட்டங்கள் கொண்டு வரப்படுகின்றன.

இதுகுறித்து, தொழிலாளர் தலைவர்கள் கருதினால், எந்த ஆலையை இந்தச் சட்டத்தின்கீழ் எடுப்பது என்று முடிவு செய்வதற்கு முன்னாலே, இந்த மன்றத்திலே உள்ள எதிர்க் கட்சித் தலைவர்கள் எல்லாம் ஒன்றுகூடி, முடிவு செய்து, அதன்பிறகு எடுக்கத் தயார். நான் முன்பு சொன்ன திட்டங்களை ஏற்றுக் கொண்டால்தான் ஆலையை ஏற்று நடத்த முடியும் என்பதை எங்கள் தரப்பில் சொல்கிறேன். அது வேண்டாமென்று நீங்கள் சொல்லிவிட்டால் ஆட்சேபணை இல்லை. தொழிலாளர்கள் இதற்குத்

தயாராக வந்தால், எந்தத் தொழிலாளருக்கும் பாதகம் ஏற்படாமல், பாதுகாப்பதற்கு பொறுப்பான தொழிலாளர்கள் குழுவை அமைத்து, அந்தக் குழுவில் தொழிலாளர்கள் எந்தெந்த அளவில் சம்பளம்பெறுவது, பழைய பாக்கியை விட்டுக் கொடுப்பது என்று இந்தச் சட்டத்தின்கீழ் எங்கள் தரப்பிலே வைக்கிறோம். நீங்கள் எல்லாம் ஒப்புக்கொள்ள முடியாத நிலை வந்துவிட்டால், நாங்கள் வைத்தது சரியில்லையென்று நீங்கள் தீர்ப்பளித்துவிட்டால் அதற்குத் தலைவணங்க இந்த அரசு தயாராக இருக்கிறது. இதை ஏற்றுக்கொண்ட மறுதினமே, எந்த ஆலையை எடுப்பது என்பதை உங்களிலே தலைவராக உள்ளவர்கள் முடிவு செய்யலாம். குழுவினுடைய முடிவை இந்த அரசாங்கம் உடனே ஏற்று செயல்படும்.

பிரிவு 4-க்கு மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் என். சங்கரய்யா, சி. கோவிந்தராசன், வி. கே. கோதண்டராமன், கே. என். குமாரசாமி, எம். சுரேந்திரன் ஆகியோரால் முன் மொழியப்பட்ட திருத்தங்கள் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, தோல்வியுற்றன.

பிரிவு 4 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவுகள் 5, 6, 7, அட்டவணை, முதல் பிரிவு, முகப்புரை நெடுந் தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டன.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

'That the Tamil Nadu Relief Undertakings (Special Provisions) Bill, 1969 (L.A. Bill No. 13 of 1969) be passed.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிந்து பேரவை மீண்டும் நாளை மாலை 3.00 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

### (8) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. *Statutory Rules and Orders*

'NIL'

### B. *Reports, Notifications and other papers.*

@ 57. The Tamil Nadu Electricity Supply Undertakings (Acquisition) Amendment Bill, 1969 (L.A. Bill No. 22 of 1969) with Annexure.

@ 58 Annexure to the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1959 (L.A Bill No. 19 of 1969).

---

@ Despatched to Members on 23rd August 1969.

## தமிழ்நாடு சட்டப் பேரவை

### புதன்கிழமை, 1969 ஆகஸ்ட் 27.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் பிற்பகல் 3 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

### திரு. எஸ். எஸ். வாசன் அவர்கள் மறைவு குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இராஜ்ஜிய சபையின் உறுப்பினரான திரு. எஸ். எஸ். வாசன் அவர்கள் 26—8—1969 அன்று மறைந்த செய்தியை இப் பேரவைக்கு ஆழ்ந்த வருத்தத்துடன் அறிவிக்கின்றேன். அவர் தமிழ் நாடு சட்டப் பேரவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் 3—4—1964 அன்று இராஜ்ஜிய சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். தமிழ் வார இதழான "ஆனந்தவிகடன்" பத்திரிகையை நிறுவியவர். அவர் ஒரு நல்ல எழுத்தாளர். இந்தியத் திரைப்படத் தயாரிப்பாளர்களில் குறிப்பிடத்தக்கவர். 1968-ம் ஆண்டு ஆரம்பத்தில் சென்னையில் நடந்த இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் தீவிரமாக ஈடுபட்டதுடன், அவ்வமயம் நடந்த பேரணிக் காட்சியின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தவர்களுள் ஒருவர்.

இப் பேரவையின் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் தெரிவிக் கின்றேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த எஸ். எஸ். வாசன் அவர்கள் டெல்லி மாநிலங்கள் அவையில் இந்தச் சட்டப் பேரவை உறுப்பினர்களால் தேர்ந் தெடுக்கப்பட்டு, நற்பணியாற்றியவர்கள் ஆவார்கள். அவர்கள் கலை உலகத்திலும், இலக்கிய உலகத்திலும், அரசியல் உலகத்திலும் நல்ல ஈடுபாடு கொண்டு, உழைப்பால் முன்னேறி வந்தவர்கள் ஆவார்கள்.

1928-ம் ஆண்டு பெரியார் அவர்கள் நடத்திய 'குடியரசு' பத்திரிகையில் தொடர்பு கொண்டு, அதன் பிறகு தமிழ் நாட்டிலேயே வார ஏடுகளுக்கு வழிகாட்டத்தக்க விதத்தில் 'ஆனந்தவிகடன்' என்கின்ற கிழமை இதழைத் தொடங்கி, அதன் மூலமாகத் தமிழ் நாட்டின் கலை, கலாசாரம், பண்பாடு இவை களுக்கெல்லாம் மெருகேற்றத் தக்க நிலையில் எழுத்துப் பணி புரிந்தவர், அவர். கலை உலகத்தில் அவர் தமிழ்நாட்டிலே மட்டு மல்லாமல் வட மாநிலங்களிலும் நல்ல வெற்றிக் கொடியினை

நாட்டுகின்ற அளவுக்குப் புகழ் வாய்ந்தவர். தமிழ்நாட்டினுடைய சரித்திரச் சான்றுகள் மிக்க திரைப்படங்களையும் இலக்கியச் சான்றுகள் மிக்க படங்களையும் அவர் வெளியிட்டதன் மூலமாகத் தமிழ் மக்களினுடைய ஏகமனதான பாராட்டைப் பல தடவை பெற்றிருக்கின்றார்கள்.

உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற நேரத்தில், அந்த மாநாட்டின் பெரும் வெற்றிக்குச் சிகரமாக அமைந்த ஊர்வலச் சிறப்புக்கு அவர் பெரும் காரணமாக இருந்தார். அப்படிப்பட்ட நல்லவரை, காங்கிரஸ் இயக்கத்தில் கொள்கைப் பிடிப்போடிருந்து பணியாற்றிய உத்தமரை இன்று நாம் இழந்திருக்கின்றோம். அவரை இழந்து தவிக்கின்ற நாட்டுக்கும், அவருடைய குடும்பத் தாருக்கும் ஆழ்ந்த இரங்கலை நான் தெரிவித்துக் கொள்ளு கின்றேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துக்கூறிய கருத்துக்கள் பூராவையும் நான் ஆமோதிக்கிறேன். திரு. எஸ். எஸ். வாசன் அவர்கள் கண்ணியத்திற்கும் கடின உழைப்பிற்கும் எடுத்துக்காட்டாக விளங்கியவர்கள். கடின உழைப்பின் மூலம் எவ்வளவு தூரம் ஒருவர் சிறந்து உயர்ந்து விளங்க முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக திரு. வாசன் அவர்கள் இவ்வளவு நாட்களாக வாழ்ந்து வந்தார்கள்.

சாதாரண குடும்பத்தில் பிறந்து, சாதாரணமாக அவர் வாழ்க்கையை ஆரம்பித்து, நல்ல பத்திரிகை ஆசிரியராகத் திகழ்ந்தார். பத்திரிகை நடத்துவதில் எத்தனையோ விதம் இருக்கலாம். ஆனால், அவர் உயர்ந்த தன்மையில், பரந்த உள்ளத்தோடு, தேசியப் பிடிப்போடு, மக்களுக்கு தேசீய உணர்ச்சியையும் இலக்கிய அறிவையும் கலை அறிவையும் கதைகளின் மூலமாக, காப்பியங்களின் மூலமாக தம்முடைய வார இதழைப் பயன்படுத்தி சிறப்பானதொரு பணியைத் தமிழ் நாட்டு மக்களுக்கு மட்டுமல்லாமல், உலகத்திலிருக்கும் அத்தனை தமிழ் மக்களுக்கும் புரிந்து இருக்கிறார் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தொழிலாளர்களிடத்தில் அவர் மிகவும் அன்பாகவும் பண்பாகவும் நடந்து கொண்டார். அவர் சினிமாத் தொழிலில் ஈடுபட்டிருந்தாலுங்கூட, அந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களிடமும், பத்திரிக்கையில் பணியாற்றியவர்களிடமும் நல்ல முறையில் நடந்துகொண்டார். அவருடைய நிறுவனத்தில் பணியாற்றிவிட்டு வெளியேறும்படியானவர்கள் எந்தவிதமான மனக் கசப்பும் இல்லாமல், பூரண நிறைவோடு செல்வதுண்டு. ஏனென்றால், அவர்கள் உழைத்ததற்கு ஏற்ற ஊதியத்தை கொடுத்து, வாழ்க்கையில் முன்னேறுவதற்கு வழிகாட்டியாக இருந்தார்கள். தன்னிடத்தில் வேலை செய்துவிட்டுப் போன திரு. கல்கி அவர்கள் சிறப்பானதொரு வார இதழைத் துவக்கு



வதற்கு அவர் காரணமாக இருந்தார். அன்னார் மறைந்தது நமது முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல, தமிழ் நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியாவிற்கே பெரியதொரு நட்டமாகும், சினிமா உலகுக்கும் பெரிய நட்டமாகும். ஆகவே, சபையினுடைய இரங்கலை மறைந்த திரு. வாசன் அவர்களுடைய குடும்பத் தாருக்கும், தமிழக மக்களுக்கும் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மறைந்தவருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்குமாறு கேட்டுக் கொள்ளு கின்றேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.)

## 2. வினாக்கள்-விடைகள்.

### (வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. ர. நல்லசிவன் அவர்கள் பெயரில் உள்ள கேள்வியை திரு. மாரிமுத்து அவர்கள் கேட்பார்கள்.

### அரசுப் பெரிய மருத்துவ மனையில் சட்டப்பேரவை உறுப்பினர் மரணம்

1. குறுகிய கால வினா.—**திரு. க. ர. நல்லசிவன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 20—8—1969-ம் நாள் சென்னையிலுள்ள சர்க்கார் பெரிய மருத்துவ மனையில் காலமான சட்டசபை உறுப்பினர் சண்முக சுந்தரம் அவர்கள் கடைசியாக என்ன கோளாறினால் காலமானார்?

(இ) அவர் 16—8—1969-ம் நாள் ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டபின் அவரது உடலின் எல்லாப் பகுதிகளும் எக்ஸ்ரே படம் எடுக்கப்பட்டதா?

(உ) இல்லையெனில் காரணம் யாது?

(ஏ) இவரைச் சரியான முறையில் மருத்துவர்கள் கவனிக்க வில்லை என்ற கருத்து பொது மக்களிடம் ஏற்பட்டுள்ளது என்பது சர்க்காருக்குத் தெரியுமா?

(ஐ) மருத்துவமனையில் எந்த வகையில் சிகிச்சை அளிக்கப் பட்டது? எதனால் காலமானார், இதற்குக் காரணமானவர்கள் யார் என்பதைக் கண்டுபிடிக்க ஒரு விசாரணைக் குழுவை சர்க்கார் அமைக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** (அ) தொடை எலும்பு முறி வினால் குருதிக் குழாய் அடைப்பு ஏற்பட்ட காரணத்தால் அவர் மரணமடைந்தார்.

(இ) இல்லை.

[1969 ஆகஸ்ட் 27

(உ) எந்தெந்த இடங்களில் எலும்பு முறிந்திருக்கும் எனச் சந்தேகம் ஏற்பட்டதோ அந்த இடங்களில் மட்டும் கதிர் வீச்சு (எக்ஸ்ரே) படம் எடுக்கப்பட்டது.

(எ) இல்லை.

(ஐ) அவசியமான எல்லா வகைச் சோதனைகளும் செய்யப்பட்டன.

(1) அதிர்ச்சிக்காக ரத்தம் செலுத்தப்பட்டது.

(2) முகத்தில் ஏற்பட்ட காயங்களுக்காக ஓட்டுறுப்பு அறுவை செய்து காயங்கள் தைக்கப்பட்டன.

(3) முட நீக்கியல் அறுவை மருத்துவரால் எலும்பு முறிவு சீர் செய்யப்பட்டு, ஊசி சொருகி சிகிச்சை அளிக்கப்பட்டது.

(4) தலையில் ஏற்பட்ட காயங்களுக்கு நரம்பியல் அறுவை மருத்துவரின் கருத்தும் பெறப்பட்டது.

மரணத்தின் காரணம் ஏற்கனவே மருத்துவ முறையில் அறுதியிட்டுள்ளபடியால், இதற்கு விசாரணை ஆணைக் குழுவை அமைக்க வேண்டிய செயற்குறிப்பு இல்லை.

## *Hartal in Koradacheri*

*146 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Chief Minister be pleased to state whether hartal was observed in Koradacheri in Thanjavur district following the fatal attack on a mirasdar about the 29th January 1969?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** 29—1—1969 அன்று ஹர்த்தால் ஏதும் நடைபெறவில்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவர் அவர்களே, அந்தக் குறிப்பிட்ட மிராசுதாரின் பெயர் என்ன? அவர் கொலை செய்யப்பட்டதற்கு என்ன காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது? கொலை செய்தவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அந்த நிலக் கிழாரின் பெயர் நடேச வாண்டையார் என்பதாகும். அவருடைய கொலை சம்பந்தமாக நாகப்பன் என்பவரும், மேலும் இருவரும், ஆக மூன்று குற்றவாளிகள் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. வழக்கு தற்போது நாகைப்பட்டினம் செஷன்ஸ் கோர்ட்டில் விசாரணையில் இருக்கிறது. கொலை, கிசான் தகராறு காரணமாக ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. குற்றவாளிகள் மூவரும் தற்போது சிறையில் இருக்கிறார்கள்.

## *All-India Services Officers*

*147 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Chief Minister be pleased to state whether the intake of All-India Services Officers in the Tamil Nadu Government decreased in 1967-68?



1969 ஆகஸ்ட் 27]

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நமது மாநிலத்தின் அனைத்திந்தியப் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் அதிகாரிகளின் எண்ணிக்கை, இந்திய ஆட்சிப் பணியை (ஐ.ஏ.எஸ்) பொறுத்த வரையில் மட்டுமே குறைந்துள்ளது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, 1967-68-இல் நமது மாநிலத்தின் அனைத்திந்தியப் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை குறைந்ததற்குக் காரணம் என்ன? இந்தத் தொகை அதிகரிக்கப்படுமா? அல்லது படிப்படியாகக் குறைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** 1966-67-இல் நம் மாநில அரசின் சார்பாக 9 பேர்கள் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டு அவர்களும் ஒப்புதல் அளித்த பிறகு 4 பேர்கள் மட்டும் போதும் என்று தெரிவித்தார்கள். ஒன்பது பேர்களும் அறிவிக்கப்பட்டுவிட்ட காரணத்தினால் முதலில் அறிவித்த 9 பேர்களே இருக்கட்டும் என்று அனுமதித்துவிட்டார்கள். அடுத்த ஆண்டு முன்கூட்டியே இவர்கள் அறிவித்துவிட்ட காரணத்தினால் 5 பேர்கள் அளவுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. கே. விநாயகம்:** அகில இந்தியப் பணிக்கு ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை மட்டும் பங்குகொள்கிறோமே, மருத்துவத் துறையிலும், பொறியியல் துறையிலும் அனைத்திந்தியப் பணிக்கு நாம் ஏன் சேர்த்துக்கொள்ளக் கூடாது? நம் மாநிலத்தில் இருக்கிற ஊழியர்கள் வெளி மாநிலத்திற்கும், வெளிமாநிலத்தில் இருக்கிற ஊழியர்கள் நம் மாநிலத்திற்கும் ஏன் வரும்படியாகச் செய்யக் கூடாது, அரசாங்கம் மறுப்புத் தெரிவித்ததற்குக் காரணம் என்ன? இது லாபகரமாக இருக்காதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அனைத்திந்தியப் பணிக்கு ஐ.ஏ.எஸ். மாத்திரம் அல்ல, ஐ.பி.எஸ்., ஐ.எப்.எஸ். போன்றவைகளும் இருக்கின்றன. மருத்துவப் பணி போன்றவைகளுக்கு அகில இந்திய ரீதியில் செயல்பட வேண்டிய அவசியம் இல்லை என்ற ஒரு திட்டத்தை வரையறுத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, திரு. விநாயகம் அவர்களுடைய கருத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லை.

## மாயூரம் நகர தெருக்களின் பெயர் மாற்றம்

*148 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், மாயூரம் நகரில் 14-வது நகர மன்ற வார்டிலுள்ள சில தெருக்களின் பெயர்களை மாற்றக் கோரி மாயூரம் நகர மன்றம் தீர்மானம் அனுப்பியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

[1969 ஆகஸ்ட் 27

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* (அ) ஆம்.

(இ) மாயூரம் நகராட்சியிலுள்ள தெருக்களின் பெயர்களை மாயூரம் நகராட்சி மன்றம் தீர்மானித்தவாறு மாற்றும்படி அரசு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கட்டளை பிறப்பித்துள்ளது.

*திரு. என். கிட்டப்பா :* தலைவர் அவர்களே, மாயூரம் நகரத்தின் தற்போதைய பெயர் வடமொழியில் இருப்பதால், தென்னிந்திய சைவசித்தாந்தக் கழகம் இலக்கியத்தில் உள்ளதுபோல திருமயிலாடுதுறை என்று அதன் பெயரை மாற்றவேண்டுமென்று கோரி அரசுக்கு விண்ணப்பம் அனுப்பியுள்ளதா ?

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* அப்படி எதுவும் வந்ததாகத் தெரியவில்லை. நல்ல யோசனை. வந்தால் அதுபற்றி அரசு யோசிக்கும்.

### தீ அணைக்கும் படையினர் சம்பள விகிதங்கள்

*149 வினா.—*திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :* மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையிலுள்ள மாநில தீயணைக்கும் பணிமனைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் சம்பள விகிதத்தை மாற்றியமைக்க கோரி 10—7—1967-ல் வானூர் தொகுதி எம்.எல்.ஏ. மூலமாக கொடுக்கப்பட்ட மனு மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது ?

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* சென்னையிலுள்ள தமிழ் நாட்டுத் தீயணைக்கும் படையின் மாநிலப் பணிக்களரியில் பணிபுரியும் தொழிலாளர்களின் சம்பள விகிதத்தை மாற்றியமைக்க கோரும் மனு எதுவும் 1967-ம் ஆண்டு ஜூலைத் திங்களில் வானூர் தொகுதி எம்.எல்.ஏ. மூலம் பெறப்படவில்லை.

THIRU K. VINAYAKAM : Whereas the personnel working in these fire services are doing very laudable service and whereas their scales of pay are not so commensurate with the services rendered by them, will this Government think of the possibility of revising their scales of pay?

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* தமிழ்நாடு தீ அணைக்கும் பணிமனையில் வேலை புரிகின்றவர்களின் சம்பள விகிதங்களை மாற்றி அமைக்கும் ஆணையைப் பிறப்பிக்க கமிஷனர் கருதியுள்ளார். ஆகவே, அதுபற்றிய குறிப்பை அனுப்பியுள்ளார். அதுபற்றி யோசிக்கப்படுகிறது.



1969 ஆகஸ்ட் 27]

### *National Cadet Corps*

*150 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether the Director-General of National Cadet Corps had any discussions, with the Tamil Nadu Government about the middle of April 1968?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* இல்லை.

DR. H. V. HANDE : Now that we do not have the N.C.C. training in our State and in view of the absence of such training our boys are losing a number of job opportunities in the Defence services where the N.C.C. training will be useful, will this Government reconsider the matter, without treating it as a prestige issue and come to a decision to start N.C.C. in our State and then think of finalising other formalities later on?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தலைவர் அவர்களே, என்.ஸி.ஸி. பயிற்சி பற்றி அதனுடைய இயக்குநர் அவர்கள் முதல் அமைச்சர் அவர்களுடன் மே மாதத்தில் பேசினார்களா என்பது கேள்வி. அதற்கு இல்லை என்று சொன்னேன். பேசவேண்டுமென்ற விருப்பத்தை முன்னால் தெரிவித்தார்கள். மாண்புமிகு முதல் அமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் அப்போது தம் வெளிநாட்டுச் சுற்றுப்பயணம் முடிந்த பிறகு பேசலாம் என்றார்கள். அதற்குப் பிறகு 1968-ஆம் ஆண்டு ஜனவரி 23-ஆம் தேதித் தீர்மானம் பற்றி இந்திய அரசின் உள்துறை அமைச்சரோடு பேசியபோது உள்துறை அமைச்சர் இணங்கவில்லை. ஆகவே இங்குள்ள இயக்குநரோடு பேசிப் பயன் இல்லை என்பதாக அந்தப் பேச்சு நடைபெறாது கைவிடப்பட்டது. இதற்குப் பிறகு பல்வேறு கடிதப் போக்குவரத்துகள் நடைபெற்றுள்ளன. நம்முடைய கோரிக்கைக்கு மத்திய அரசு அநேகமாக இணங்கியுள்ளது. கட்டளைச் சொற்கள் ஆங்கிலத்தில் இருக்கலாம் என்றும், என்.ஸி.ஸி. மாணவர்களின் விருப்பப்படி இருக்கட்டும் என்றும் ஒப்புக் கொண்டுள்ளார்கள். ஆனால் ஆங்கிலக் கட்டளைச் சொற்களுக்கு இணையான இந்தி கட்டளைச் சொற்கள் தெரிந்திருப்பது நடைமுறையில் அவசியம் என்கிற காரணத்தினால் சொல்லிக்கொடுக்கப்படும் என்றார்கள். நாங்கள் நடைமுறையில்—ப்ராக்டீஸ்—என்ற அடிப்படையில் வேண்டியதில்லை என்று எழுதியிருக்கிறோம். அநேகமாக நம்முடைய கோரிக்கைகளுக்கு மத்திய அரசு இணங்கி வருகிற காரணத்தினால், கூடியவரையில் நல்லதொரு முடிவு ஏற்படும் என்று கருதுகிறேன்.

*திரு. ம. பொ. சிவஞானம் :* 1968 ஜனவரி 23-ம் தேதி மன்றம் நிறைவேற்றிய தீர்மானத்தில், ராஜ்ய அளவில் தமிழ் மொழியும், தொடர்புக்கு ஆங்கில மொழியும் போதும், மூன்றாவது மொழியாக இந்தி தேவையில்லை என்று முடிவு கட்டினோம். மேலவையில் கல்வி அமைச்சர் ஒரு கேள்விக்கு பதில் அளிக்கிறபோது ஆங்கிலத்தில் என்.ஸி.ஸி. கட்டளைச் சொற்கள் இருக்கும் என்றும், சம்பிரதாயத்திற்காக இந்தி வார்த்தைகள் சொல்லிக்கொடுக்கப்படும்

என்றுர்களே, அப்படியானுல், இந்தியை ஏற்றுக்கொள்கிற உத்தேசம் அரசுக்கு உண்டா? நம்முடைய தீர்மானம் மாற்றிக் கொள்ளப்படுகிறதா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** என்.ஸி.ஸி. கட்டளைச் சொற்கள் 1958 வரை ஆங்கிலத்தில் தான் இருந்தன. அதற்குப் பிறகுதான் இந்திக்கு மாற்றப்பட்டது. நாம் ஆங்கிலத்திலேயே இருக்கவேண்டும் என்று சொன்னேம். மத்திய அரசு அதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறது. ஆயினும் அந்த ஆங்கிலச் சொற்களுக்கு இணையான இந்திச் சொற்கள் நூறு—நூற்று இருபது மட்டும் நடைமுறையில் தெரிந்திருக்க கற்றுக்கொடுக்கப் படும் என்றுர்கள். அதைத் தெரிந்துகொள்வதில் தவறு இல்லை, ஆனுல் நடைமுறையில் இருக்கக் கூடாது என்று நாங்கள் வற்புறுத்தியிருக்கிறேம்.

THIRU T. MARTIN : Last year N.C.C. was abolished in our State. In the prospectus for 1969–70 for Medical College in page 4 it is said that all other conditions being equal, preference will be given to candidates proficient in games, etc., and service in N.C.C. and Scouting, etc., will also be considered. May I request the Hon. Minister to state whether this is not an anochronism? Will the Government come forward to carry out the change in all the educational curriculum?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஏற்கனவே பி.எஸ்.சி. படித்தவர்கள் ஒருகால் என்.ஸி.ஸி. பயிற்சி பெற்றிருக்கக்கூடும். போன ஆண்டு பி.யு.ஸி. படித்தவர்கள் என்.ஸி.ஸி. பயிற்சி பெற்றிருக்க முடியாது. ஆகவே இந்த விதி அதிகமாகக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னெரு விஞப்பட்டியலையும் உடன் எடுத்துக் கொள்ளலாம். விஞ எண் 176.

## அரசு செய்திப்படங்கள்

*** 176 விஞ.—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவிற்கு விடையளிப்பாரா—

அரசு வெளியிடும் செய்திப் படங்களைத் தொகுத்து கிராமப் பகுதிகளில் இலவசமாகக் காட்டுவது குறித்த செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. மு. கருணநிதி :** இல்லை.

**திரு. பி. எஸ். மணியன் :** தலைவர் அவர்களே, அரசாங்கம் செய்யக்கூடிய நல்ல காரியங்களைப்பற்றிய விவரங்கள் கிராமப் புறங்களிலே பரவாமல் தடைபடுகின்றன. அந்தக் குறையைப் போக்குவதற்காக அரசாங்கம் செய்கின்ற நல்ல காரியங்களை யெல்லாம் கிராமப்புறங்களிலே பரப்புவதற்காக செய்திப்படமாக எடுத்து வெளியிட அரசு முன்வருமா?



**மாண்புமிகு திரு. மு. கருணநிதி :** இப்பொழுது எடுக்க பட்டுள்ள செய்திப்படங்கள் 35 மில்லிமீட்டர் மூலம் எடுக்கட பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்று அரசாங்கம் செய்த சாதனைகள் நிறைந்த செய்திப் படங்களை 16 மில்லிமீட்டருக்குக் குறைத்து எடுத்து கிராமங்களிலே வெளியிட வேண்டும். அதைப்பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

## அரசு மருத்துவ மனைகள்

**■ 151 விஞ.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட விஞவிற்கு விடையளிப்பாரா—

மாயூரம் அரசினர் மருத்துவ மனையில் தண்ணீர் பற்றுக்குறை உள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாயூரம் அரசினர் மருத்துவ மனையில் கோடையில் தண்ணீர் பற்றுக்குறை ஏற்படுகிறது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, மாயூரம் அரசினர் மருத்துவ மனையில் தண்ணீர்ப் பற்றுக்குறை, படுக்கைப் பற்றுக் குறை, மருந்துப் பற்றுக்குறை அதிகமாக இருப்பதால் அதைப் போக்குவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மூலக்கேள்வி தண்ணீர் பற்றுக்குறை பற்றித்தான். அங்கே இரண்டு கிணறுகள் இருக்கின்றன. கோடை காலத்திலே தண்ணீர் இல்லாது வற்றிவிடுகின்ற காரணத்தாலே இறக்கப்பட்டிருக்கின்ற குழாயை நீர்மட்டம்வரை செலுத்த முடியாமல் இருப்பதாலே சில திங்கள்கள் பற்றுக்குறை ஏற்பட்டது. அதற்காக 6 அங்குலம் வட்டமுள்ள குழாய் இறக்கப்பட்டு தண்ணீர் கொண்டுவருவதற் கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்த முயற்சிகள் நிறைவேற்றப்படுகின்ற நிலையில் விரைவில் தண்ணீர் பற்றுக்குறை தீர்க்கப்பட்டுவிடும்.

*** 152 விஞ.—திரு. ஆர். கருப்பையா :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் அரசாங்க மருத்துவ மனையில் 'எக்ஸ்ரே' பிரிவு அமைத்து எவ்வளவு காலம் ஆகிறது?

(இ) தற்போது அது செயல்படுகிறதா?

(உ) இல்லையெனில், உடனடியாக செயல்படுத்தும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ): அரியலூர் அரசு மருத்துவமனையில் எக்ஸ்ரே பிரிவு, நவம்பர் 1968 முதல் செயல்பட்டு வருகிறது.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1969 ஆகஸ்ட் 27

*153 வினா.—திரு. கு. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி நகரில் இருக்கும் அரசினர் மருத்துவ மனையை விஸ்தரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. கு. கிருஷ்ணமூர்த்தி: பழனி நகரில் இருக்கும் அரசினர் மருத்துவ மனைக்குப் போதிய இடம் இல்லாத காரணத்தினால், கட்டடம் கட்டுவதற்கு வசதியில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பக்கத்திலே உள்ள காலியிடங்களைக் கட்டாய ஆர்ஜிதம் செய்து அதை விஸ்தரிக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அங்கே டி.பி. வார்டும், ஆர்தோபீடிக் வார்டும், ஆக ஒவ்வொன்றுக்கும் 10, 10 படுக்கைகள் விதம் கொண்ட வார்டுகள் கட்டவேண்டுமென்று இயக்குநர் திட்டத்தை அனுப்பிவைத்திருக்கிறார்கள். அதற்கான முயற்சிகளை 1970-71-ஆம் ஆண்டிலே எடுத்துக்கொள்ளலாம் என்ற அளவுக்குத்தான் இப்பொழுது முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

### வளவனூர் அரசு உயர்நிலைப்பள்ளி

*154 வினா—திரு. மு. ராமன்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

வளவனூர் அரசினர் உயர்நிலைப்பள்ளியில் விஞ்ஞானப் பிரிவு ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 1967-68-ம் ஆண்டு முதலே வளவனூர் அரசினர் (சிறுமி) உயர்நிலைப்பள்ளியில் பத்தாவது வகுப்பில் விஞ்ஞானம் (இரசாயனம்) விருப்பப் பாடமாக துவக்கி வைக்கப்பட்டது.

### *Ragging in Colleges*

*177 *Q.*—THIRU T. MARTIN : Will the Hon. Minister for Education and Wealth be pleased to state—

(*a*) Whether it is a fact that three students who played mischievous pranks on girl students were removed from Madurai Medical College ;

(*b*) if so, the details thereof ; and

(*c*) the number of students who were removed from Government Colleges for such offences in July 1967?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம், உண்மை.

(இ) 13—7—1967 அன்று கல்லூரி மாணவர்கள் மூன்று பேர் மாணவிகளிடம் இழி விளையாட்டுகளில் (Ragging ஈடுபட்டனர். அந்த மூன்று மாணவர்களும் தற்காலிகமாகக் கல்லூரியிலிருந்து



1969 ஆகஸ்ட் 27]

விலக்கப்பட்டனர். இந்த நிகழ்ச்சி பற்றி ஒரு விசாரணை நடந்தது. அவர்கள் சமாதானத்தைப் பரிசீலித்து அவர்கள் குறிப்பிட்ட காலம் வரை கல்லூரியிலிருந்து விலக்கப்பட்டனர். பின்னர் அவர்களை இம் மாநிலத்தின் வேறு மருத்துவக் கல்லூரிகளுக்கு மாற்றும்படி உத்திரவிடப்பட்டது.

(உ) தமிழ்நாட்டில் உள்ள வேறெந்த மருத்துவக் கல்லூரியிலும் இத்தகைய நிகழ்ச்சி எதுவும் நிகழவில்லை.

THIRU T. MARTIN : Speaker, Sir, year after year we find that ragging is going on in all colleges, especially in medical colleges, and we are told that new students who seek admission in the colleges are put to innumerable difficulties. May I request the Hon. Minister to give an assurance to this House that this year the said practice will not be repeated in the Government Medical College?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1967-68-ஆம் ஆண்டிலே மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, இவற்றில் ஒரு சில இரண்டு, மூன்று கல்லூரிகளிலே மட்டும்தான் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் ஈடுபட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கோயம்புத்தூர் பொறியியல் கல்லூரியில் மூன்று பேர்கள் விடுதியை விட்டும், கல்லூரியை விட்டும் நீக்கப்பட்டார்கள். மதுரை மருத்துவக் கல்லூரியில் மூன்று பேர்கள் ஓர் ஆண்டுக்காலம் நிறுத்திவைக்கப்பட்டு பிறகு தஞ்சை மருத்துவக் கல்லூரியில் சேர்க்கப்பட்டார்கள். மூன்றாவது வகுப்புப்படித்த ஒருவர் நிறுத்தி வைக்கப்பட்டார். இரண்டாவது வகுப்புப் படித்தவர்கள் ஆறு மாத காலம் நிறுத்திவைக்கப்பட்டார்கள். பிறகு திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். 1968-ஆம் ஆண்டிலே ஒரே ஒரு நிகழ்ச்சிதான் நடைபெற்றது. அதற்காக ஆறு மாத காலம் விலக்கிவைக்கப்பட்டதற்குப் பிறகு வேறு ஒரு கல்லூரியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இந்த ஆண்டு எந்த விதமான நிகழ்ச்சியும் இல்லை. 1968-ஆம் ஆண்டிலே எல்லாக் கல்லூரி முதல்வர்களுக்கும், விடுதி கண்காணிப்பாளர்களுக்கும் இதிலே ஈடுபடுகின்றவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசாங்கம் உத்திரவிட்டது. சென்ற ஆண்டு ஒரு நிகழ்ச்சிதான் நடந்தது இந்த ஆண்டு எதுவும் வரவில்லை. எனவே கண்காணிப்பாகத்தான் இருந்து வருகிறார்கள்.

### *Retirement age of teachers*

*178 *Q.*—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) Whether there is any proposal to refix the retirement age of the teachers in elementary, higher elementary and high schools in Tamil Nadu; and

(*b*) if so, the particulars thereof ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை. (இ) வினா எழவில்லை.

**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் ஆசிரியர்கள் வயதான நேரத்திலே ஓய்வு பெறுகின்ற பொழுது ஏராளமான குடும்ப உறுப்பினர்களைப் பரிபாலிக்க வேண்டிய நிலை இருக்கின்ற காரணத்தாலே அவர்களுடைய ரிடையர்மெண்ட் 'ஏஜை' உயர்த்த வேண்டுமென்று ஏதாவது கோரிக்கை வந்துள்ளதா ? வந்திருந்தால் அப்படி உயர்த்துவதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்பொழுதே மற்றத் துறையிலே பணியாற்றுகின்றவர்கள் ஓய்வுபெறுகின்ற வயதைவிட ஆசிரியர்களின் ஓய்வுபெறுகின்ற வயது அதிகமாக வைக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது இருக்கிற நிலைமையில் எந்த வகையிலும் அதை உயர்த்துவதாக இல்லை. ஓய்வுபெறக்கூடிய நிலையில் இல்லாத மற்றவர்கள் எல்லாம் 55 வயதாக குறைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள், ஓய்வுபெறக்கூடிய நிலையில் இருக்கின்றவர்கள் அதை இன்னும் நீடித்தால் வாய்ப்பாக இருக்கும் என்று சொல்கிறார்கள். உதவிபெறுகின்ற துவக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு ஓய்வு பெறும் வயது 60 ஆகவும் உதவிபெறுகின்ற உயர்நிலைப்பள்ளிகளைப் பொறுத்தவரையில் 58 ஆகவும் இருக்கிறது. பஞ்சாயத்து, முனிசிபல் கவுன்சில், டிஸ்டிரிக்ட் போர்டு, கவர்ன்மெண்ட் பள்ளிகளில் பணியாற்றுகின்றவர்களுக்கு 58 வயதாக ஓய்வுபெறுகின்ற வயது நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### *"Mannargudi formula"*

* 179 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. Minister for Finance be pleased to state what are the salient features of the "Mannargudi formula" regarding the wages to be paid by the landholders to the agricultural labourers?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The hon. Member has asked about the salient features of the Mannargudi formula. It has already become obsolete and inoperative consequent on the promulgation of the ordinance on agricultural wages. It has been replaced. So I think it may not be useful to point out the salient features of the Mannargudi formula. In fact the Ganapathia Pillai formula has replaced it and we have met today to give legislative approval to the Ganapathia Pillai formula.

THIRU K. VINAYAKAM : May I know from the Hon. Minister whether the recommendations of Mr. Ganapathia Pillai on this issue are an improvement over the Mannargudi formula and whether the recommendations of Mr. Ganapathia Pillai on this wage ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : We will discuss it as the second item after question hour. The second item in the



agenda after question hour has been put down as the consideration of the Report of Mr. Ganapathia Pillai. When that item is taken up, there will be ample opportunity to discuss this.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மன்னார்குடி ஃபார்முலா என்று ஏற்கனவே விவசாயிகளும், விவசாய சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், மிராசுதார்களும் ஒப்பந்தம் செய்து கொண்டதைக் கூட கலெக்டர் அவர்கள் இருந்து நிறைவேற்ற முடியாமல் குழப்பம் ஏற்பட்டது சர்க்காருக்குத் தெரியுமா ? ஏற்கனவே உள்ள ஃபார்முலாவே திண்டாடும்போது கணபதியாப் பிள்ளை ஃபார்முலா வேறு வந்து திண்டாட வேண்டுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு விநாயகம் அவர்களுக்குச் சொன்ன பதிலைத்தான் அவர்களுக்கும் சொல்ல விரும்புகிறேன். அந்த அறிக்கையின் மீது ரொம்ப விஸ்தாரமாக விவாதம் நடத்தவேண்டுமென்று அவர்கள்தான் கேட்டிருக்கிறார்கள். அந்த விவாதத்தின்போது எல்லாவற்றையும் விவாதிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதைப் பற்றிய விவாதம் வர இருக்கின்ற காரணத்தால், இதிலே துணைக் கேள்விகள் தேவையில்லை.

**திரு. கே. விநாயகம் :** கணபதியாப் பிள்ளை ஃபார்முலாவைப் பற்றி விவாதிக்கும்போது மன்னார்குடி ஃபார்முலாவைப் பற்றிக் குறிப்பிடலாமா ? அப்படிக் குறிப்பிடலாம் என்று சொன்னால் ஏற்றுக்கொள்கிறேன். இல்லையென்றால் இதிலே துணைக் கேள்வி கேட்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** குறிப்பிடலாம்.

### விரிவான குடிவாரச் சட்டம்

* 180 வினா.—திரு. எஸ். இராமச்சந்திரன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இம்மாநிலத்தில் குடிவாரச் சட்டங்களை ஒருங்கிணைத்து விரிவான குடிவாரச் சட்டம் ஒன்றை இயற்றும் செயற்குறிப்பு தற்பொழுது எந்த நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மசோதா ஒன்று தயாராகிக் கொண்டிருக்கிறது.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** இந்த விரிவான சட்டம் வரும் என்று நீண்ட நாட்களாக எதிர்பார்த்தவண்ணம் இருப்பதால் இதை எப்போது கொண்டு வர அரசு ஏற்பாடு செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, the Madras Agricultural Tenants Bill was examined in consultation with the Board of Revenue and the Director of Land Reforms (Planning

Commission). The Bill is now being examined further. It has also been decided to watch for some time the progress of the implementation of the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969 and then think of undertaking this legislation. Necessary follow-up action to implement the above mentioned Act, viz., Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Act, is being taken.

### அரிசனங்களுக்கு குடிசைத் தொழில் கூட்டுறவு சங்கங்கள்

* 155 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசனங்கள் நலனுக்காக குடிசைத் தொழில் கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் அரசுக்கு உண்டா?

(இ) ஆம் எனில், எந்தெந்த குடிசைத் தொழில்கள்?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** (அ) தமிழ்நாடு அரசு ஏற்கனவே பல குடிசைத் தொழில் கூட்டுறவு சங்கங்கள் அரிசனங்களின் நலனுக்காக அரிசன நல நிதியிலிருந்து ஏற்படுத்தியுள்ளது. அவை மாநிலத்தின் பலவிடங்களில் இயங்கி வருகின்றன. மேலும் புதிய குடிசைத் தொழில் கூட்டுறவு சங்கங்கள் திறப்பது நிதி நிலையையும், தேவையையும் பொருத்து உள்ளது.

(இ) கீழ்க்கண்ட தொழில்களில் பெரும்பாலும் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கங்கள் அரிசனங்களுக்காக ஏற்படுத்தப் படுகின்றன:

1. தோல் பதனிடுதல்.
2. பனை ஓலைப் பொருள் உற்பத்தி செய்தல்.
3. சுண்ணாம்பு உற்பத்தி.
4. செங்கல்லும் ஓடும் உற்பத்தி செய்தல்.
5. எண்ணெ உற்பத்தி செய்தல்.
6. பாய் நெய்தல்.
7. துணி, கம்பளி போன்றவை நெய்தல்.
8. பிரம்பு மூங்கில் பொருள் உற்பத்தி செய்தல்.
9. கைக்குத்தலரிசி உற்பத்தி.
10. தோல் பொருட்கள் உற்பத்தி.
11. உப்பு உற்பத்தி.
12. பனைநார் போன்றவற்றிலிருந்து கயிறு போன்ற பொருள் உற்பத்தி.
13. தச்சுவேலை.
14. கருமான் வேலை (அல்லது) கொல்லன் வேலை.
15. தேனீ வளர்த்தல்.
16. காகிதம் போன்ற எழுதுபொருள் உற்பத்தி.
17. தீப் பெட்டி உற்பத்தி பிறவும்.



**திரு. ந. வீராசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரிசனங்கள் கூட்டுறவுத் துறையில் சில தொழில்களைச் செய்யலாம் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட தொழில்களை அவர்கள் துவக்க வேண்டுமென்று சொன்னால், குறிப்பிட்ட பணம் கட்டவேண்டுமென்று இருக்கிறது. பெரும்பாலான அரசன மக்கள் அந்த முன்பணத்தைக் கட்ட வாய்ப்பு இல்லாத காரணத்தால் அவர்கள் தொழில்களைச் செய்ய வாய்ப்பு இல்லாத நிலைமை இருக்கிறது. எனவே, அரிசனங்கள் இப்படிப்பட்ட தொழில்களை ஆரம்பிக்கும் நேரத்தில் முன்பணம் தேவையில்லை, தொழில் செய்யும்போது அதிலிருந்து ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் பிடித்துக் கொள்ளலாம் என்ற முறையைக் கடைப்பிடிக்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** அது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

**திரு. கே. பி. எஸ். மணி:** இந்தக் குடிசைத் தொழில்கள் பூராவும் அரிசன இலாகாவின் மூலமாக நடத்தப்பட்டாலும் அந்தத் தொழில்களிலே தலைவர்களாக ஜாதி இந்துக்களும், அரிசனங்கள் கூலியாட்களாகத்தான் இருப்பதும் அரசாங்கத் திற்குத் தெரியுமா? அது பற்றி ஏதேனும் புகார் வந்திருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** அப்படிப் பட்ட புகார் எதுவும் இதுவரை அரசாங்கத்திற்கு வரவில்லை.

### புதிய ரக நெல்

* 156 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் பயிரிடுவதற்கு ஏற்ற புதியரக நெல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** (அ) & (இ) மதுரை மாவட்டத்தில் பயிரிடுவதற்கு ஏற்ற புதிய ரக நெல் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் ஏ.டி.டி. 27 ATD 27 பி.வி.ஆர். 1 P. V. R. 1 ஐ.ஆர். 8 IR 8 ஐ.ஆர். 5 IR 5. ஆகிய புதியரகங்கள் அந்த மாவட்டத்தில் பயிரிடுவதற்கு ஏற்றதா யுள்ளன.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** இந்த மாவட்டத்திலே பயிரிடு வதற்காக புதிய ரக நெல்கள் ஜெயா, பத்மா என்ற இரண்டு வகை நெல்கள் கண்டு பிடிக்கப்பட்டதாகத் தெரிகிறது. அதைப் பற்றிய செய்தி கிடைத்த பின்னர்தான் இந்தக் கேள்வி கொடுக்கப்பட்டது. அந்த இரண்டு ரக நெல்களின் சிறப்பு அம்சம் பற்றிச் சொல்ல முடியுமா?

*மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :* ஜெயா, பத்மா என்ற இரண்டு வகை புதிய ரக நெல்கள் கண்டுபிடிக்கப் பட்டிருப்பது உண்மைதான். அது குறிப்பிட்ட மதுரை மாவட்டத்திற்கு மாத்திரமல்ல. அதை எந்த மாவட்டத்திலும் பயிரிடலாம் என்ற முறையில்தான் கண்டு பிடிக்கப் பட்டிருப்பதாகத் தெரிகிறது. தஞ்சை மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் ஜெயா, பத்மா என்ற புதிய ரக நெல்லைப் பயிரிட திட்ட மிட்டிருக்கிறது.

*திரு. பி. ஜி. கருத்திருமன் :* புதிய ரக நெல்லைப் பற்றிக் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. நானே நான்கு மூட்டை புதுரக நெல் விதையை அமெரிக்காவிலிருந்து கொண்டு வந்து அபிவிருத்தி செய்து கொடுத்திருக்கிறேன் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

*மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :* இது பற்றி ஏற்கனவே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்னிடம் நேரில் கூறியிருக்கிறார்கள். அதைப் பற்றி ஆராய்ந்து அனுப்புமாறு டைரக்டர் அவர்களைக் கேட்டிருக்கிறோம். இன்னும் பதில் வரவில்லை.

*திரு. பி. ஜி. கருத்திருமன் :* அமைச்சர் அவர்களிடத்திலே நேரிலே சொல்லியும் இவ்வளவு நாள் ஆகிறது. விதையை வாங்கி எங்கே அனுப்பியிருக்கிறார்கள். எப்போது வாங்கி எங்கே அனுப்பினார்கள் ? எப்போது பதில் வரும் ?

*திரு. ந. வீராசாமி :* ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* கேள்வி நேரத்திலே பாயின்ட் ஆப் ஆர்டர் கிடையாது.

*திரு. ந. வீராசாமி :* எதிர்க் கட்சிக்காரர்கள் என்றால் வாய்ப்பு கொடுக்கின்றீர்கள் . . . .

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* கேள்வி எண் 157—மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

THIRU K. VINAYAKAM : Sir, I want to put a supplementary question in connection with the previous question. Sir, I am appealing to you. This is the last day and hon. Members are eager to put more supplementary questions and elicit answers. You have to be helpful and you cannot be like this. There is enough time . . . .

MR. SPEAKER : No time.

THIRU K. VINAYAKAM : Sir, many hon. Members are absent and most of our Party Members are not here.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* ஒரு மணி நேரம் கேள்வி நேரம். ஒரு மணி நேரத்திற்குள் எவ்வளவு கேள்விகளுக்குத் துணைக் கேள்விகள் கேட்க முடிகிறதோ, அவ்வளவு கேள்விகளைக் கேட்கலாம். அதற்குப் பிறகு உள்ள கேள்விகளுக்கு விடைகளை





அச்சடித்துக் கொடுப்பதற்கு உறுப்பினர்கள் ஒத்துக் கொள்ளுவதாக இருந்தால் எத்தனை துணைக் கேள்விகள் வேண்டு மென்றாலும் கேட்கலாம்.

### INTENSIVE AGRICULTURAL DEVELOPMENT PROGRAMME

* 157 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Government proposes to extend progressively the intensive agricultural development programme now being implemented in Thanjavur district to some more districts; and

(*b*) if so, when, and with what prospects?

*மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :* (அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ள மாவட்ட முழுமுற வேளாண்மைத் திட்டத்தை மேலும் சில மாவட்டங் களுக்கு நீட்டிக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசிலனையில் இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

THIRU K. VINAYAKAM : Sir, the Intensive Agricultural Development Programme has been there for many years. What is the sanctity behind that scheme and why should it be concentrated in the Thanjavur district only and why should it not be extended to other neighbouring districts ?

*மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :* குறிப்பாக, 13—4—1960-ம் ஆண்டுதான் இந்தத் திட்டம் துவக்கப் பட்டது. முதலிலே 20 பிளாக்கில் அமல்படுத்தப்பட்டது. அதில் 20 சதவிகிதம் சாகுபடி செய்ய வேண்டுமென்று திட்டமிட்டுச் செய்தும் பூரணமாகச் செய்யப்படவில்லை. பிறகு 36 பிளாக்கு களுக்கு விஸ்தரிக்கப்பட்டு 13.4 லட்சம் ஏக்கர்களுக்கு விரிவாக்கப் பட்டது. இதிலே இரண்டு ரகமான ஸ்கீம் இருக்கிறது. ஸ்கீம் ஒன்று தஞ்சைக்கு மாத்திரம். 25 சதவிகிதம் நமது சர்க்காரும் 75 சத விகிதம் மத்திய சர்க்காரும் செலவை ஏற்றுக்கொள்ளும் காரணத்தால், இதைத் தஞ்சையில் மாத்திரம் வைத்திருக்கிறோம். மற்றப்படி நான்கு மாவட்டங்களில் தீவிர சாகுபடித் திட்டத்தினை ஏற்றுக் கொள்ளும் வகையில் மதுரை, செங்கற்பட்டு, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மாநில சர்க்காரின் சார்பில் ஏற்றுக் கொள்ளுகின்ற வகையில் இன்னொரு திட்டம் தயாரிக்கப்பட்டு தீவிர சாகுபடித் திட்டம் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

### தஞ்சை மாவட்டத்தில் தானியக் கிடங்கு

* 158 *வினா.*—*திரு. என். கிட்டப்பா :* மாண்புமிகு உணவு, வணிகவரித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் புதிதாக தானியக்கிடங்கு ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் அரசினருக்கு உண்டா ?

கொண்டோம். அந்த விதத்தில் நஷ்டம் இல்லை. அவர்கள் ரூ. 26,010.23 பைசா கொடுக்கவேண்டுமென்று கேட்டார்கள். அதற்கு பல்வேறு காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். வட்டி, கிடங்கு வாடகை, அட்வர்டைஸ்மெண்ட் சார்ஜஸ், டிரான்ஸ்போர்ட் சார்ஜஸ் Paid by the society for delivering unsold sugar at Arcot and Vaniyambadi என்று இப்படி கேட்டார்கள். ஆனால் அரசாங்கம் எடுத்துக்கொண்டு போவதற்குண்டான கட்டணத்தை மட்டும் கொடுத்து விட்டு வேறு தனியாக எதுவும் கொடுப்பதற்கில்லை என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

THIRU K. VINAYAKAM: Whereas this society has incurred loss and whereas they have advanced sufficient justifiable reasons for reimbursement of loss incurred, what is it that stands in the way of Government to refund or reimburse that loss?

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:* மொத்த வியாபாரங்கள் சட்டத்தின்கீழ் அரசாங்கத்தோடு அவர்கள் ஒரு ஒப்பந்தத்திற்கு வந்திருக்கவேண்டும். ஆனால் அந்த ஒப்பந்தம் கையெழுத்தாக வில்லை. அந்த ஒப்பந்தம் கையெழுத்தாகியிருக்குமானால் அரசாங்கம் அவர்களுக்கு விற்றுவிட்டால் முழுப் பொறுப்பும் வாங்கியவர்களைத்தான் சேருமே தவிர விற்றவர்களைச் சேராது. அந்த ஒப்பந்தம் கையெழுத்தாகவில்லை. கொடுத்ததைத் திரும்ப எடுத்துக்கொள்கிறோம் என்று சொன்னேன். நஷ்டம் வட்டியும், கொடவுன் வாடகையுந்தான்.

### பனியன் (பின்னல்) ஏற்றுமதி

*159 வினா.—திரு. சு. துரைசாமி:* மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பனியன் (பின்னல்) தயார் செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

*மாண்புமிகு திரு. செ. மாதவன்:* அத்தகைய குறிப்பு ஏதும் தற்சமயம் இல்லை.

*திரு. சு. துரைசாமி:* திருப்பூர் நகரில் ஏறத்தாழ 500 பனியன் பாக்டரிகள் இருக்கின்றன. அந்தத் துணிகளைப் பம்பாயிலுள்ள வியாபாரிகள் வாங்கி ஆப்பிரிக்கா போன்ற அயல்நாடுகளுக்கு அனுப்பி நல்ல லாபம் சம்பாதிக்கிறார்கள். ஆகவே அரசாங்கமே அத்துறையை அபிவிருத்தி செய்வதற்கேற்றாற்போல் ஒரு கார்ப்பரேஷனை அமைத்து, அவ்வாறு தயாரிக்கிற துணிகளை வாங்கி அயல்நாடுகளுக்கு விற்றால், அந்தத் தொழிலும் நன்கு சீராக நடைபெறும், நம் நாட்டுக்கும் அன்னியச் செலாவணி கிடைக்க வாய்ப்பாக இருக்கும். ஆகவே அதற்கு இந்த அரசாங்கம் முன் வருமா?

*மாண்புமிகு திரு. செ. மாதவன்:* தனியார் துறையில் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களை வெளிநாட்டுச் சந்தைகளுக்கு அனுப்புவதில் எக்ஸ்போர்ட் ப்ரமோஷன் கவுன்ஸில் இப்போதே



உதவி செய்து வருகிறது. உறுப்பினர் அவர்கள் அந்தச் சட்டமன்றத் தொகுதி உறுப்பினராவார்கள். அங்குள்ள வணிகப் பெருங்குடி மக்கள் என்னென்ன உதவிகள் வேண்டுமென்று கேட்கிறார்களோ, அவற்றை எக்ஸ்போர்ட் ப்ரமோஷன் கவுன்ஸில் மூலம் பெறுவதற்கு வாய்ப்பிருக்கிறது.

### காரைக்குடிக்கருகில் நிலக்கரிப் படிவங்கள்.

**160 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன்:* மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

காரைக்குடி அருகே நிலக்கரிப் படிவங்கள் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டதையொட்டி அவைகளைத் தோண்டி எடுப்பதற்கான முயற்சிகளில் எந்த அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது?

*மாண்புமிகு திரு. செ. மாதவன்:* இராமநாதபுரம் மாவட்டத்தில், காரைக்குடியில் நிலக்கரி இருப்பது குறித்து மாநிலக் கனிப்பொருள் ஆராய்ச்சிப் பிரிவினால் ஆய்வு செய்யப்பட்டது. இந்தப் பகுதியில் நிலக்கரி கீற்றுகளாகவும், சிதறியும் இருந்ததேயன்றி அடர்த்தியாகக் காணப்படவில்லை என்று தெரியவந்தது. இது மிகுந்த ஆழத்திலேயே காணப்பட்டதாகவும், பொருளளவிற்கு கிடைக்காததாலும், இதனை அகழ்ந்தெடுக்கும் முயற்சியில் அரசாங்கம் மேற்கொண்டு ஈடுபடவில்லை.

### *Death of prisoner in Coimbatore Central Jail*

*161 *Q.*—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Industries be pleased to state whether any prisoner was found dead in the Central Jail at Coimbatore about the 14th November 1968?

*மாண்புமிகு திரு. செ. மாதவன்:* கோயம்புத்தூர் மத்தியச் சிறைச்சாலையில், 10—11—1968 அன்று இரவு சின்ன கவுண்டர் என்ற பெயருடைய சுமார் 65 வயதுள்ள 54885-ம் எண் கைதி இறந்துகிடக்கக் காணப்பட்டார்.

*திரு. என். எஸ். வி. சித்தன்:* அந்தக் கைதி இறந்ததின் மீது ஏதாவது விசாரணை செய்யப்பட்டதா? அந்த விசாரணையின் முடிவு என்ன?

THE HON. THIRU S. MADHAVAN: It has been found that the prisoner would appear to have died of coronary thrombosis.

THIRU K. VINAYAKAM: Is the Hon. Minister aware of the fact that reports go to show that under pressure, under mal-treatment by the jail warders, he has been driven to the stage of committing suicide?

THE HON. THIRU S. MADHAVAN: This is a serious allegation against an officer of Government. If the hon. Member is prepared to give evidence to prove it, we will order for an enquiry.

[1969 ஆகஸ்ட் 27

(இ) ஆம் எனில், எங்கு ஏற்படுத்தப்படும் ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. என். கிட்டப்பா :** தமிழகத்தின் தலைநகராகிய சென்னை நகரிலாவது மத்திய அரசிலிருந்து ஒரே நேரத்தில் அனுப்பப்படும் தானியத்தை சேமித்து வைக்க எ.ஆர்.ஸி. அமைப்பின் மூலமாக தானியக் கிடங்குகள் நிறுவ அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தற்சமயம் தேவை இல்லை என்று அரசு கருதியதால் அதைப்பற்றிய ஆலோசனை ஒன்றுமில்லை என்று சொன்னேன்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தற்போது தமிழகத்தில் எங்கெங்கு இப்படிப்பட்ட உணவு சேமிப்பு நிலையங்கள் இருக்கின்றன ? மேலும் இவற்றை விரிவாக்குவதற்கு அரசுக்கு ஏதாவது திட்டமுண்டா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தஞ்சை, மன்னார்குடி, திருச்சி ஆகிய ஊர்களில் ஐம்பதாயிரம், ஐம்பதாயிரம் திறன் கொண்ட கிடங்குகள் நம்மிடம் இருக்கின்றன. அதைத் தவிர எல்லா மாவட்டங்களிலும் நெல் அல்லது தானியங்களைச் சேமித்து வைக்க கிடங்குகள் நமக்கு இருக்கின்றன.

### *Procurement of Paddy in Venkadathan Thursiyur*

*181 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state the target fixed for procurement of paddy for Venkadathan, Thursiyur in Tiruchirappalli District in 1968 and the quantity realised ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** 1968-ஆம் ஆண்டு வேங்கிடத்தான் துறையூரில் நெல் கொள்முதல் இலக்கின் அளவும், கொள்முதல் செய்த அளவும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| | இலக்கு | கொள்முதல் செய்தது |
|---|---|---|
| 1968 சம்பா | 4,135 மூட்டை நெல் | 712 மூட்டை நெல் |
| 1968 குறுவை | 1,218 மூட்டை நெல் | 500 மூட்டை நெல் |
| மொத்தம் | 5,353 மூட்டை நெல் | 1,212 மூட்டை நெல் |

Dr. H V. HANDE : What is the reason for this difference between the target set forth and the physical target that we have achieved?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நெல் கொள்முதலாகாதற்கு சரியான விடையில்லை. இருந்தாலும் அதற்குக் காரணம், உற்பத்திக் குறைவுதான்.



1969 ஆகஸ்ட் 27]

**திரு. டி. மார்டின் :** நம் மாநிலத்தில் பல மாவட்டங்கள் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. ஆகவே, அப்படி பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ள கிராமங்கள், வட்டங்கள், இடங்கள் என்று குறிப்பிடப்படுகிற அந்த இடங்களிலாவது இந்தக் கொள்முதலை இந்த ஆண்டு நிறுத்தி வைக்க அரசுக்கு உத்தேசமுண்டா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கொள்முதல் எங்கு நடைபெறும் என்று கேட்டால் எங்கு விளைந்திருக்கிறதோ, அங்குதான் கொள்முதல் நடைபெறும்.

Dr. H. V. HANDE : My information is that there is good deal of division of crops from paddy. Is that information correct? If so what is the action the Government propose to take with regard to landlords who own 5 acres, 3 acres, etc., who depend on the revenue from their acreage and who divert the crop? Under the Cultivating Tenants Protection Act, if they change over to some other crop, no action could be taken. Will the Government come forward and say clearly that such of those landlords who divert the crop from paddy, will not be given such protection under the Cultivating Tenants Protection Act?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கொள்கை பூராவையுமே கேள்வியாகக் கேட்கிறீர்களே.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ஒரு நீண்ட கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். ஒரு தானியம் பயிரிடுகிறவர்கள் இன்னொரு தானியத்தைப் பயிரிடப் போவதைத் தடுப்பதற்கு அரசுக்கு உரிமை இல்லை. ஆனால் இந்த ஆண்டு அப்படி வேறு தானியத்திற்குப் போனவர்கள் பட்டபாட்டை நாம் அனைவரும் அறிவோம்.

### சர்க்கரை விலை வேறுபாட்டால் ஏற்பட்ட விரயம்

*182 வினா—திரு. என். எஸ். வி சித்தன் : மாண்புமிகு உணவு, வணிகவரித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சர்க்கரை விலைகளின் வேறுபாட்டினால் ஏற்பட்ட விரயத்தை ஈடு செய்யுமாறு வட ஆற்காடு மாவட்டக் கூட்டுறவு வழங்கல்—விற்பனைச் சங்கம் அரசைக் கேட்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ஆம்.

**திரு. என் எஸ். வி. சித்தன் :** இதுமாதிரி சர்க்கரை விலை வேறுபாட்டால் ஏற்பட்ட விரயம் எவ்வளவு ? அந்தக் கோரிக்கை மீது எடுத்த முடிவு என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** சர்க்கரை விலை வேறுபாட்டால் விரயம் அரசுக்கு ஏற்பட்டது என்று சொல்வதற்கில்லை. ஆனால் அவர்களுக்கு எந்த விலைக்குக் கொடுத்தோமோ, அந்த மொத்த ஸ்டாக்கையும் கொடுத்த விலைக்கே திரும்ப எடுத்துக்

THIRU K. VINAYAKAM : I take the challenge from the Hon. Minister. What exactly does the Hon. Minister want? When I ask him a question, he says it is a serious charge. I say that I am now taking responsibility for the serious charge.

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** *கேள்வியில் நாம் ஏதாவது கருத்துக்களைச் சொன்னால், ஏதாவது நிகழ்ச்சியைச் சொன்னால், அந்த நிகழ்ச்சிகளுக்கு கேட்கிற உறுப்பினர் அவர்கள் பொறுப் பேற்றுக்கொள்ளவேண்டுமென்றிருக்கிறது. அவர்கள் கொடுக்கிற ஸ்டேட்மென்ட்டுக்கு பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்.*

***மாண்புமிகு திரு. செ. மாதவன் :*** *அறைகூவல் விடுவதாக தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது. எங்களுக்கு கிடைத்துள்ள அறிக்கைப்படி, கோட்டாட்சித் தலைவர் விசாரணைப்படி ஒரு வியாதி காரணமாக இறந்திருக்கிறார் என்பது. உறுப்பினர் அவர்கள் ஒரு குறிப்பிட்ட அதிகாரிமேல் க்ரிமினல் குற்றச்சாட்டு சொல்கிறார்கள். அவர்கள் எழுதித் தந்து, ஆதாரம் இருப்பதாகச் சொன்னால், அதுபற்றி விசாரிக்க இந்த அரசாங்கம் தயாராக யிருக்கிறது. அறைகூவல் விடுவதாகத் தவறாக நினைக்க வேண்டாம்.*

### *Semi-permanent construction in building programme*

* 162 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state the particulars of the semi-permanent construction in building programme adopted by the Government?

***மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :*** *கட்டட வேலைத் திட்டங்களுக்காக திட்டச் செலவு அதிகரித்துக் கொண்டே போகும் போக்கினைத் தடுத்து நிறுத்தும் நோக்கத்துடனும், அதே நேரத்தில் வெவ்வேறு துறைகளின் கட்டடத் தேவைகளை வரை யறைக்குட்பட்ட திட்டச் செலவிற்குள் நிறைவேற்றி முடிப்பதற்கு உதவும் வகையிலும், 1966 ஜூலையில் அரசாங்கம் கீழ்க்கண்ட வகையில் உத்தரவிட்டது.*

*இனி அரசாங்கச் செலவில் கட்டப்படவிருக்கும் கட்டடங்கள் அனைத்தும் கல்லால் கட்டப்பட்ட பக்கச்சுவர் கொண்டதாய் கல்நார் தகடு அல்லது ஓடு வேய்ந்த கூரையுடன் கூடிய, நீளவாட்டில் அமைந்த ஓரளவு நிலையான கட்டடங்களாகவே இருக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டது.*

### *மாயூரம் தொகுதியில் பாசன வசதி*

* *163 வினா.—**திரு. என். கிட்டப்பா :*** *மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மாயூரம் தொகுதியில் ஓடிக்கொண்டிருக்கும் காவிரியில் ராஜாத் தோட்டம் அருகில் ஒரு அணை கட்டி, அதிலிருந்து வாய்க் கால் வெட்டி பழங்காவிரியில் இணைத்து பாசன வசதி செய்து தரக் கோரி அரசினருக்கு விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா ?*





*(இ) ஆமெனில், அதன் பேரில் அரசினர் எடுத்துக்கொண்ட நடவடிக்கை யாது ?*

***மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :*** *(அ) இல்லை.*

*(இ) இக்கேள்விக்கு இடமில்லை.*

***திரு. என். கிட்டப்பா :*** *தலைவரவர்களே, மாயவரம் நகரத்தில் மையத்தின் குறுக்கே ஓடிக்கொண்டிருக்கும் பழங்காவிரியாற்றின் மூலம் பாசன வசதியை விவசாயப் பெருங்குடி மக்கள் பயன் படுத்திக்கொள்ளுவார்கள். அது நகரத்தின் மையத்தில் ஓடிக் கொண்டிருப்பதால் மிகவும் அதிகமாகத் தூர்ந்து போய்விட்டது. எனவே, இவ்வாறு செய்யவேண்டுமென்று கோரிக்கையை அவர்கள் விடுத்தார்களே, அதை ஆய்வு செய்து அமைச்சரவர்கள் ஆவன செய்ய முன்வருவார்களா எனக் கேட்க விரும்புகிறேன்.*

***மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :*** *மாயவரம் நகர சபை எல்லைக்குள் இருக்கும் இந்த வாய்க்காலிலே,*

To desilt the Plan Cauvery Channel, branch of Cauvery in Mayuram municipal limits, to evict the encroachment on either side of the channel and to widen the Palan Cauvery to standards in this reach, and in case the above proposals are not feasible, to shift the head of the Palan Cauvery Channel away from municipal limits.

*இதைப்பற்றி எக்ஸிக்யூட்டிவ் என்ஜினியர் அவர்கள் ஒரு திட்டத்தைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அது பரிசீலனை செய்யப் பட்டு வருகிறது. அதற்கான முடிவுகள் எடுக்கப்பட்ட பிறகு, நடவடிக்கைகள் எடுக்கப்படும்.*

### *உளுந்தூர்ப்பேட்டையில் விமான தளம்*

* *164 வினா.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :*** *மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உளுந்தூர்ப்பேட்டையில் விமான தளம் அமைக்கும் விஷய மாக மாநில சர்க்கார் மத்திய சர்க்காருக்கு சிபார்சு செய்ய உத் தேசம் உண்டா ?*

***மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :*** *அம்மாதிரி செயற் குறிப்பு ஏதும் தற்போது இல்லை.*

***திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :*** *தலைவரவர்களே, ஏற்கெனவே, நம்முடைய இந்திய தேசத்தின் முடிசூடா மன்னரும், இந்திய தேசத்தின் பிரதமரும் ஆன மறைந்த மாமேதை ஜவஹர்லால்ஜி அவர்கள் உளுந்தூர்ப்பேட்டையில் இறங்கிய இடத்தை விமான தளம் ஆக்க வேண்டுமென்று பலர் கருத்துக் கொண்டிருந்தார்கள். அதை இப்பொழுதிருக்கும் பிரதமரான இந்திராகாந்தி அவர்களும் மற்றவர்களும் தடுக்கமாட்டார்கள், அதைப் போடுவதற்கு ஆட்சே பிக்க மாட்டார்கள். ஆகவே, நம்முடைய மாநிலத்திற்கும்,*

[1969 ஆகஸ்ட் 27

மேலும் ஒரு தளமாக அதை அமைப்பதற்கு ஆட்சேபணை இல்லை. ஆகவே, நம்முடைய இந்த விமான தளத்தை உளுந்தூர்ப்பேட்டையில் அமைக்க திரும்பவும் மத்திய சர்க்காரை இந்த அரசாங்கம் வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இங்கு பாதுகாப்புத் துறையின் பொறுப்பில் ஏற்கெனவே விமான தளம் ஒன்று உள்ளது. இந்த விமான தளம் 168.91 ஏக்கரா பரப்பளவு கொண்டது. இது குறித்து விமானக்கூட கட்டுப்பாடு அதிகாரியுடன் கலந்தாலோசிக்கப்பட்டது. விமானக்கூட திட்டத் தொகுதியில் உள்ள விமான தளத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு எதுவுமில்லை என்று விமானக் கூட கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவித்துள்ளார். எனவே, அரசாங்கம் சிபாரிசு செய்யத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

### பவானி நகரில் பவானி, காவிரி ஆறுகளின் குறுக்கே பாலங்கள்

*** 165 வினா.—திரு. ஏ. எம். இராஜா :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி நகரில், பவானி ஆறு, காவிரி ஆறு ஆகியவற்றின் மீது கட்டப்பட்டுள்ள பாலங்களை அகலப்படுத்தும் செயற்குறிப்பு உள்ளதா ?

(இ) ஆம் எனின், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) காவிரி, பவானி ஆறுகளின் மீது தற்போதுள்ள இரு பாலங்களுக்குப் பதிலாக, இவ்விரு ஆறுகளும் கூடுமிடத்தில் ஒரே பாலம் கட்டுவதற்கான செயற்குறிப்பு உள்ளது.

(இ) இத்திட்டத்தை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளுமாறு இந்திய அரசுக்கு எழுதப்பட்டுள்ளது. மேற்சொன்ன வேலையைப் புலனாய்வு செய்வதற்காக ரூ. 10,000 செலவுக்கு இந்திய அரசு 1968 மே மாதத்தில் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இந்த வேலைக்காக ஓர் உறுதி செலவு மதிப்பீடும் ஏற்புக்காக இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லுகிற நேரத்திலே, ஒரு பாலத்தை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக்கொள்ள இருப்பதாகச் சிபாரிசு செய்திருப்பதாகக் கூறினார்கள். ஒருவேளை இந்தியப் பேரரசு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இந்தப் பாலத்தை எடுத்துக்கொள்ள மறுத்தால், விட்டுவிட்டால் அதை மாநில அரசே செய்து கொடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மத்திய அரசு மறுக்காது என்று எதிர்பார்க்கிறோம்.



1969 ஆகஸ்ட் 27]

### *Kundah Water for Coimbatore City*

* 183 *Q.*—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to draw water from the Kundah to augment the protected water-supply to Coimbatore City?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தற்பொழுது இல்லை.

### *Municipal Revenues*

* 166 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) Whether the Municipal Commissioners have forwarded any joint resolution of suggestions regarding enhancement of Municipal Revenues; and

(*b*) if so, the particulars thereof?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) ஆம்.

(இ) உரிய ஆதாயம் தரும் தொழில்களைப் பெருக்குவதற்காகப் பின்வரும் கருத்துக்கள் கூறப்பட்டன.

( i ) கடைகளை ஏற்படுத்துதல்.

( ii ) முக்கியமான இடங்களில் வாணிகத்திற்குரிய கட்டிடங்களைக் கட்டுதல்.

( iii ) பெட்ரோல் விற்குமிடங்களை நடத்துதல். பிறதொடர்பான உயவெண்ணெய்களையும் மோட்டார் வண்டிகளுக்கான உதிரி பாகங்களையும் விற்பனை செய்தல்.

( iv ) தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்குக் குத்தகைக்கு விடுவதற்காக மாணவர் இல்லங்களும் தங்கும் விடுதிகளும் கட்டுதல்.

( v) சிமிட்டி, கல்நார் தகடுகள் முதலிய கட்டுப்பாட்டுக்குட்பட்ட பொருள்களை விற்பனை செய்தல்.

DR. H. V. HANDE : Sir, have these suggestions been examined by the Government and, if so, do the Government propose to accept them and have the Government examined the levy of octroi duty on petrol and other things to augment the revenue of municipalities? Octroi can be levied if the Central Government or State Government permit the levy by municipalities.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** வரிவிதிப்பது சம்பந்தமாகக் கேட்டிருக்கிறார்கள். ஆனால் கொடுக்கப்பட்ட கருத்துக்களிலே அவை போன்ற பொருள்களை விற்பனை செய்கிறார்கள் என்ற சிபாரிசைத்தான் அவர்கள் செய்திருக்கிறார்கள். வரிவிதிப்பதைப்பற்றிப் பிரச்சனை எழவில்லை. எவை எவை பின்பற்றப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். கடைகளை ஏற்படுத்துதல், முக்கியமான இடங்களில் வாணிகத்திற்கேற்ற கட்டடங்களைக் கட்டுதல் போன்ற கருத்துக்கள்

[1969 ஆகஸ்ட் 27

கூறப்பட்டன. நாம் முடிந்த அளவுக்கு உதவி செய்ய முன் வருகிறோம். இவைகளை ஏற்று நடத்த மாநகராட்சி அல்லது நகராட்சியின் நிதிநிலை இடம் கொடுக்க வேண்டும். இப்பொழுது பல்வேறு இடங்களிலிருந்து அரசாங்கத்தின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றக் கடன் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் கூடுதலான நிதியை வங்கிகளின் மூலம் கடனாகப் பெற்றுக்கொண்டு, வருமானம் வரத்தக்க இனங்களை ஏற்று நடத்தவும், முயற்சிகளை மேற்கொள்ளத் தகுந்தவைகளில் நாம் இப்பொழுது முழுமனதுடன் கவனம் செலுத்தி வருகிறோம்.

**திரு. ந. வீராசாமி:** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கட்டிடங்கள் கட்டுவது போன்ற குறிப்புகளைத் தந்திருப்பதாகச் சொன்னார்கள். நகராட்சி மன்றங்களில் இருக்கக்கூடிய டவுன்பஸ் சர்வீஸ்களைவிட அரசாங்கத்தைக் கோரியிருக்கிறார்களா? அப்படிப்பட்ட வழிவகைகளைச் செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** மூலக்கேள்வியோடு தொடர்புடையது அல்ல.

THIRU K. VINAYAKAM: Among the suggestions made in the joint resolution was there any suggestion for the conduct of cinema theatres by the municipal authorities? Was any suggestion made by the Municipal Commissioners regarding the levy of octroiduty, a tax on people who come into and go out of the town and, if so, has that suggestion also been examined along with the other suggestion?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** சொந்தமாகக் கட்டிடங்கள் கட்டுவதுபற்றிய பரிந்துரையை இங்கே கூடிய அந்தக் குழுவானது நமக்கு சிபார்சு செய்து அனுப்பவில்லை. ஆகவே, அதுபற்றி தகவல் இல்லை. தனிக்கேள்விபோட்டால் பதில் தரப்படும்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி:** தலைவரவர்களே, இந்தக் குறிப்பிலே உள்ள தொழில்களை அதாவது, கட்டிடங்களைக் கட்டிவிட, பெட்ரோல் பங்க் நடத்துவது போன்றவைகளுக்கு அரசாங்கம் நகரசபைக்கு உதவி செய்கிற வகையில் பண உதவி செய்ய உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** ஆண்டுதோறும் நகராட்சிக்கு மானியமாகவும், கடனாகவும் வழங்குவதற்காக நம்முடைய நிதிநிலையிலே ஓரளவு தொகை ஒதுக்கப்படுகிறது. அந்தத் தொகை, அவர்கள் கேட்டுக்கொள்ளுகின்ற அடிப்படையில், இயன்ற அளவுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டும்.



1969 ஆகஸ்ட் 27]

## மதுரை நகரசபை

* 167 வினா.—திருமதி கே. பி. ஜானகியம்மாள்:
திரு. என். எஸ். வி. சித்தன்: } மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை நகரவையினை கார்ப்பரேஷன் ஆக்குவது சம்பந்தமாக அந்த நகரவையில் 17—6—1966-ல் நிறைவேற்றப் பட்ட தீர்மானம் எண் 551-ம் நகரவைத் தலைவரிடமிருந்து 5—3—1966-ம் தேதியிட்ட கடிதமும் அரசாங்கத்திற்கு வந்துள்ளனவா?

(இ) ஆம் எனில், அவைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

(உ) எப்பொழுது கார்ப்பரேஷன் ஆக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** (அ) வினாவில் கண்ட நகரவைத் தீர்மானமும் நகரவைத் தலைவரின் கடிதமும் 1966-ம் ஆண்டில் அரசிற்கு வந்ததாக தெரியவில்லை. ஆனால், மதுரை நகராட்சி மன்றம் 25—5—1967 அன்று நிறைவேற்றிய 560-ம் எண் தீர்மானம் நகராட்சி ஆணையாளரின் 21—6—1967 தேதியிட்ட 31135/67 எண் கடிதத்துடன் கிடைக்கப்பெற்றது.

(இ) மற்றும் (உ) மதுரை நகராட்சி மன்றத்தின் வேண்டு கோளை அரசாங்கம் மறுத்துவிட்டது.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள்:** தலைவரவர்களே, மதுரை நகரசபை சென்னை நகரத்திற்கு அடுத்த பெரிய நகரம். மேலும் அது விஸ்தரித்துக் கொண்டே வருகிறது. ஜனத்தொகையும் வருவாயும் அதற்குத் தகுந்தாற்போல் விஸ்தரித்துக்கொண்டு வருகிறது. இப்படி அதிகப்படியாக விஸ்தரித்துவரும் அளவுக்கு மக்களுக்கு வசதி செய்து கொடுக்க அந்த மதுரை நகரசபை கார்ப்போரேஷனாக்கப்பட்டால்தான் சாத்தியம் என்ற நிலையை அங்கிருக்கும் நகர சபை உறுப்பினர்களும் சேர்மனும் மக்களும் எதிர் பார்க்கக் கூடிய ஒரு விஷயமாக இருப்பதால் அதை மறுபரிசிலனை செய்து அரசாங்கம் மதுரை நகராட்சியைக் கார்ப்போரேஷனாக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** தலைவர் அவர்களே, அம்மையார் அவர்களே, மதுரை நகரம் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது என்றும், அதனுடைய தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்றும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இப்பொழுது இருக்ககூடிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நிதி இல்லாமல் திண்டாடுகிற நிலைமையை நாம் பார்க்கிறோம். மதுரையை மாநகராட்சியாக மாற்றுவதன் மூலம் அதற்குப் புதிதாக நிதி வசதி எதுவும் கிடைத்துவிடப் போவதில்லை. ஆகவே, மாநகராட்சியாக மாற்றுகிறபோது நிதி, வருவாய் எந்த அளவிற்குப் பெருகும் என்று எதிர்பார்ப்போமானால் மதுரை

மாநகரத்திலே அதற்கான வாய்ப்பு இல்லை. ஆகவே, அதை மாநகராட்சியாக ஆக்கினால் நிர்வாகச் செலவு மேலும் கூடுமே தவிர, ஆக்க வேலைகள் அதிகமாக நடைபெறாது என்று கருதுகிற காரணத்தினால்தான் காலம் வருகிற வரையிலும் காத்திருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ். அக்னிராஜு :** மூன்று ஆண்டுகளுக்கு முன்னால், மாமதுரைத் திட்டம், 'கிரேட்டர் மதுரை' என்று ஒரு திட்டத்தை விரிவாக கொண்டு வந்தார்கள். அதன்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா, முத்துசாமி :** அதுபற்றிய தகவல் இல்லை.

### கிராமங்களிலுள்ள சாலைகள்

* 168 **வினா—திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமங்களில் சாலைகள் அமைப்பதற்கான இடம் பெறுவதில் உள்ள இடர்பாடுகளைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தேவையானபோதெல்லாம் ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய சாலைகள் போடுவதற்கு வேண்டிய நிலத்தை ஆர்ஜிதம் செய்ய நில ஆர்ஜிதச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இணைப்புச்சாலைகள் அமைக்க நிலங்கள் கொடையாகப் பெறப்படுகின்றன.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, பல கிராமங்கள் சாலை வசதி பெறாமல் இருப்பதற்குக் காரணம் அந்த நிலங்களை ஒரு சிலர் விட மறுப்பதுதான். அதை மறுக்கக்கூடியவர்களிடமிருந்து ஹைவேஸ்ஸுக்கு எடுக்கிற மாதிரி, கிராமப் பஞ்சாயத்து யூனியன்கள் தீர்மானம் போட்டு அதைக் கையகப்படுத்தச் செய்யும் ஏற்பாடு அரசிடம் உண்டா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** நிலங்களைக் கையகப்படுத்துவதற்கான சட்டதிட்டங்கள், விதிகள் இப்பொழுதே இருக்கின்றன. எந்தக் குறிப்பிட்ட இடத்திலே அப்படிப்பட்ட சங்கடங்கள் இருக்கின்றன என்று தெரிந்தால், அவைகளைப்பற்றி விவரங்கள் சேகரித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. இரா. சௌந்தரராஜமூப்பனார் :** தலைவர் அவர்களே. நிதி வசதியோடிருக்கிற ஊராட்சி மன்றமோ, அல்லது ஊராட்சி ஒன்றியமோ சாலைகளுக்காக நிலம் ஆர்ஜிதம் உடன்செய்ய முடியாத இடங்களிலே விலை கொடுத்து வாங்குவதற்கு பொதுவான அனுமதியை அரசு வழங்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** நில ஆர்ஜிதம் செய்யப்படுவது என்பது நிலத்தை அவர்கள் தாங்களாகவே கொடுக்கமுன் வராதபோது ஏற்படுகிற பிரச்சனை, அதைத் தாங்களாகவே



கொடுக்க அவர்கள் முன்வந்தால் அதைப் பேச்சு வார்த்தையின் மூலமாகவே தீர்த்துக்கொள்வதில் தடை ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

### பழநி நகரசபை

* 169 **வினா—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழநி நகரசபையில் பணிபுரியும் நகர சுத்தித் தொழிலாளர்கள் மற்றும் எழுத்தர்கள், அதிகாரிகளுக்கு 1968, நவம்பர், மாதச் சம்பளம், டிசம்பர் மாதம் எந்தெந்தத் தேதியில் வழங்கப்பட்டது?

(இ) காலதாமதத்துக்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) துப்புரவுத் தொழிலாளர்களுக்கு 3-12-1968 தேதியன்றும், எஞ்சிய பணியாளர்களுக்கு 7-12-1968, 9-12-1968 தேதிகளிலும் சம்பளம் கொடுக்கப்பட்டது.

(இ) 1968, டிசம்பர் 1-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை. துப்புரவுத் தொழிலாளர்களுக்கு ஒவ்வொரு திங்களிலும் இரண்டாவது வேலை நாளன்று சம்பளம் கொடுப்பது வழக்கம். எனவே, அவர்களைப் பொறுத்தவரையில் தாமதம் ஏதும் ஏற்படவில்லை. எஞ்சிய பணியாளர்களைப் பொறுத்தவரையில், நிதிப் பற்றுக்குறையினால், சம்பளம் கொடுப்பதில் சில நாட்கள் தாமதமேற்பட்டது.

**திரு. என். எஸ். வி சித்தன் :** பேரவைத் தலைவரவர்களே, விலைவாசிகளும், வாழ்க்கைச் செலவுகளும் உயர்ந்து வருகிற இந்த நாளிலே இந்த மாதிரி காலத்தாழ்த்திக் கொடுப்பதாலே, பணியாளர்கள் பெரிதும் அல்லல்படுகிறார்கள். ஆகவே, இனிமேல் இது மாதிரி நடக்காமல் இருக்க முன்னாலே அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** 7-ம் தேதி கொடுக்கப்பட்டிருக்கிற சம்பளம் மிகவும் காலதாமதமாகக் கொடுக்கப்பட்டது என்று கருதப்படமுடியாது, பொதுவாக, நிதிப்பற்றுக் குறை ஏற்படுகின்றபோது அதை அரசாங்கத்திடமிருந்து முன்பணமாகவோ, அல்லது வேறு வழிகளிலோ ஈடுகட்டித் தரவேண்டிய நிலையிலே நகராட்சிகள் இருப்பதாலே தான் இந்த நிலைமையே தவிர, கையிலே பணம் இருக்கும்பொழுது நிச்சயமாக உடனடியாக வழங்குவார்கள்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது டிசம்பர் மாதம் ஞாயிற்றுக்கிழமை என்றார்கள். எத்தனையோ பேர் சனிக்கிழமையிலே சம்பளம் வாங்கிவிடுகிறார்கள். ஆனால், இந்த நகரசுத்தி தொழிலாளர்களுக்குத்தானா இந்தச் சட்டம் விதிக்கப்படுகிறது?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** நகராட்சி அலுவலகத்தின் 19-12-1962 தேதியிட்ட, 14/62 எண்ணுள்ள ஆணையின்படி எழுத்தர், ஏனைய அதிகாரிகள், துப்புரவுத் தொழிலாளர்கள் ஆகியோர்கள்

[1969 ஆகஸ்ட் 27

சம்பளம் அடுத்த மாத முதல் வேலை நாளுக்கு அடுத்த நாள் கொடுக்கவேண்டுமென்று பழநி நகராட்சி மன்றமே அந்த முடிவெடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த வகையிலே கொடுக்கப்பட்டது. (குறுக்கீடு) முதல் வேலை நாளுக்கு அடுத்த வேலை நாள் என்று சொல்லப்பட்டதனால், முதல் நாள் ஞாயிற்றுக்கிழமையாகப் போய்விட்டதால் அடுத்த இரண்டாவது வேலை நாள் செவ்வாய்க்கிழமை கொடுக்கப்பட்டது.

**திரு. எம். சுரேந்திரன் :** சபாநாயகர் அவர்களே, சம்பளம் கொடுப்பதிலும் 7-ம் தேதி கொடுப்பது அவ்வளவு அதிக அளவு காலதாமதம் அல்ல என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே சொல்லப்பட்டதைப்போல, விலைவாசிகள் ஏறி இருக்கிற நேரத்திலே ஒரு மணி நேரம் தாமதப்பட்டாலும் அது துன்பத்தை உண்டாக்கும் என்பது அமைச்சருக்கு தெரியுமா, தெரியாதா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** கனம் உறுப்பினர் அவர்களுக்கு ஏழைத் தொழிலாளர்கள்மீது இருக்கிற அக்கறையைப் போல, ஆயிரம் மடங்கு அதிகமாக அமைச்சர்களுக்கு இருக்கிறது. இது அவர்களுடைய சோதனைக் கட்டமாக நான் கருதவில்லை. நிதி நிலை இல்லாமல் நகராட்சி மன்றம் தடுமாறுகிறபோது வேறு வழி இல்லாமல் அந்தத் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. பணம் இருந்திருந்தால் நிச்சயம் கொடுத்திருப்பார்கள். ஆகவே, தொழிலாளர்கள் நலனிலே எங்களுக்கும் அக்கறை இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** எனக்குக் கிடைத்த தகவலின்படி ஒருசில நகராட்சிகளிலே, ஒருசில மாதங்கள் கழித்துக் கூடக் கொடுத்திருக்கிறார்கள்—பெயர்கள் இப்பொழுது நினைவில்லை—ஆக இது மாதிரி நடைபெறாமல் இருப்பதற்கு அரசாங்கம் மற்றச் செலவுகளைக் குறைத்து வழிவகை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** எந்தெந்த நகராட்சிகளிலே அப்படிப்பட்ட சங்கடம் என்கின்ற விவரம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களாலும் கொடுக்கப்படவில்லை, என்னிடத்திலும் இல்லை. ஆனால், நிதிப் பற்றாக்குறை ஏற்படுகிற காரணத்தாலே வேறு இனங்களிலே குறைத்துக்கொண்டு இதற்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. இதுபோன்ற தேவையும் ஏற்படுகின்றபோது சிலவற்றை குறைக்கலாம் என்றால், வேறு இனங்களைக் குறைக்கலாம் என்றால், அதற்கும் நிதி அதிகமாக ஒதுக்க வேண்டுமென்ற கூற்றை இங்கே பார்க்கிறோம்.



1969 ஆகஸ்ட் 27]

## கத்தேரி பஞ்சாயத்திலுள்ள பெரிய பள்ளத்தில் குறுக்கே பாலம்

* 170. வினா—**திரு. அ. ஆறுமுகம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்ககிரி வட்டம், கத்தேரி பஞ்சாயத்தில் உள்ள பெரிய பள்ளத்தில் பாலம் கட்டுவதற்கான சர்வே சமீபத்தில் எடுத்தது எந்த நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** பெரிய பள்ளம் ஆற்றின் மேல் ஓர் உயர் மட்ட பாலம் கட்ட ரூபாய் மூன்று லட்சம் செலவாகலாம். தற்போது அங்கு இருக்கும் போக்குவரத்து ஓர் உயர்மட்ட பாலம் கட்டப் போதுமானதாய் இல்லை, அரசாங்கத்திடம் தற்போது போதிய நிதிவசதி இல்லாத காரணத்தால், இத்திட்டத்தை நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள இயலவில்லை.

## கதர் கிராமம் தொழில் வாரியம், திருப்பூர்

* 171 வினா—**திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரில் தமிழ்நாடு காதி வில்லேஜ் இண்டஸ்டிரீஸ்க்கு சொந்தமான இடம் இருந்தும் பிரிண்டிங், டையிங், குடோன் ஆகியவை இன்னும் வாடகைக் கட்டிடத்தில் இருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், எதனால்?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) ஆம்.

(இ) திருப்பூரில் கதர் கிராமத் தொழில் வாரியத்திற்குச் சொந்தமான இடத்தில் மூன்று கட்டடங்கள் கட்டப்பெற்று, வாரியத்தின் மாவட்டக் கதர் கிராமத் தொழில் அலுவலகமும், மையக் கதர் அலுவலகமும், தையல் நிலையமும் இயங்கி வருகின்றன. ஆனால் சாய அச்சு வெளுத்தல் அலகுக்கும், மத்திய கதர் கிடங்கிற்கும், தற்போது தகுந்த கட்டிடம் இல்லாததால் இன்னும் மாற்றப்படவில்லை.

**திரு. கே. என். குமாரசாமி :** எவ்வளவு நாட்களாக, எவ்வளவு காலமாக அந்த வாடகைக் கட்டிடத்திலே அந்த அச்சுப் பிரிவு இருக்கிறது? ஆனால், வேறு சிலவற்றிற்கு இடம் பெற்றுள்ளதாகச் சொல்லப்பட்டதே, ஏன் இதற்கும் சேர்த்து அந்த கட்டடத்தை கட்டிக் இருக்கக் கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** ஒரே சமயத்திலே அதிகமாகக் கட்டுவதற்குத் தேவையான நிதி அப்பொழுது இல்லாமல் இருக்கலாம். ஆனால் இப்பொழுது அதற்கான கட்டடம் கட்டப்

பட்டிருக்கிறது. வாரியத்தின் மனையில் மண்டலத் துணை இயக்குநர் அலுவலகம் மாவட்டக் கதர் கிராமத் தொழில் அலுவலகம் ஆகியவைகளுக்காக கட்டடம் வேண்டுமென்று ஒரு இலட்சத்து ஏழு ஆயிரம் செலவில் இப்பொழுது கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. அது நிறைவேற்றப்பட்டவுடன் புதிய கட்டடத்திற்கு இப்பொழுதைய கிடங்குகள் மாற்றப்படும்.

### கோவை நகரில் மாணவர்களுக்குத் தனி பேருந்து

* 172 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் 1967-ம் ஆண்டில் கோவை நகரில் மாணவர்கள் மாணவியர்களுக்குத் தனி பஸ்விட வேண்டும் எனக் கேட்டு விண்ணப்பம் ஏதேனும் சட்டப் பேரவை உறுப்பினரிடம் இருந்து வந்ததா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** விண்ணப்பம் வந்தது.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விண்ணப்பம் வந்தது என்று தெரிவித்தார்கள். அந்த விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து விரைவிலே நடவடிக்கை எடுக்கமுன் வருவார்களா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** பேரவைத் தலைவர் அவர்களே, கோவை நகரில் பஸ் போக்குவரத்து நாட்டுடைமையாக்கப்பட்ட ஒன்று அல்ல. எனவே, அரசு எதுவரை பஸ்களை விட்டது என்ற பிரச்சனை எழவில்லை, எண்ணமும் இல்லை.

DR. H. V. HANDE : Is it a fact that the Government of late have taken a decision to sop students specials? If so, may I know the reasons therefor? Do the Government know that this is causing great inconvenience to students and principals of colleges also will not be able to handle the situation?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக் கேள்வி, கோவை மாவட்டத்தைப் பற்றியது.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** கோவை நகரத்தில் பஸ் போக்குவரத்து நாட்டுடைமையாக்கப்படவில்லை. எனவே, மாணவர்களுக்கு என்று தனியாக பஸ்கள் விடப்படவுமில்லை, அவைகள் எடுக்கப்படவுமில்லை.

**திரு. சு. துரைசாமி :** கோவை நகரத்தில் இருக்கிற கல்லூரிகளுக்கு ஆண்களும், அதைப் போல மகளிர்களும் செல்வதற்கு, அதாவது 9 மணியிலிருந்து 10 மணி வரை மிகுந்த நெருக்கடி இருக்கிறது. அந்த நேரத்தில் கல்லூரிகள் இருக்கிற இடங்களுக்கு மட்டும் தனியாக பஸ்கள் போவதன் மூலம், ஒரு டிரிப் அடிப்பதன் மூலம், மிகவும் வசதியாக இருக்கும். ஆகவே, தனிப்பட்ட பஸ்கள் விடுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** நகர பஸ் அதிபர்களுடைய மாநாடு ஒன்றை கலெக்டர் கூட்டி வைத்துப் பேச்சு நடத்தியதன் பயனாக இரண்டு முடிவுகளை பஸ் அதிபர்கள் ஒப்புக் கொண்டார்கள். அவை என்னவென்றால், முதலில் காலை 8½ மணி முதல் 11½ மணி வரையில், மாலை 4 மணி முதல் 6 மணி வரையில், அதாவது மாணவ மாணவியர்களுக்குப் போக்குவரத்து மிக்க தேவைப்படுகிற நேரங்களிலே பஸ்களில் அதிகப் பேர்களை ஏற்றிச் செல்லவேண்டும் என்பது. அதாவது, நின்று கொண்டு பிரயாணம் செய்பவர்களுடைய எண்ணிக்கை 20-லிருந்து 25 ஆக உயர்த்தப்பட வேண்டுமென்பது, அதோடு, 28-9-1968-ல் அரசு ஆணை ஒன்று பிறப்பித்திருக்கிறது. அதன் பயனாக, பஸ்கள் நிற்கும் இடங்கள் கூடியவரை மாணவர்களுக்கு வசதியாக இருக்கும் பொருட்டு திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதும், மேலும் புதிய வழித் தடங்களை தேற்றுவிக்கும் பொழுது கல்லூரிகள். பள்ளிகள் இருக்கும் வழியாகச் செல்ல வேண்டும் என்பதும் வற்புறுத்தப் பட்டிருக்கிறது. இவ்வாறு இரண்டு ஆணைகள், பிறப்பிக்கப் பட்டுள்ளன. மேலும், கோவை நகர மாணவர்களுக்கு அரசு எந்த வகையிலே உதவ வேண்டும் என்ற பிரச்சனையெல்லாம் ஆய்வில் இருக்கின்றன.

### சென்னை மாநகரில் டாக்ஸி, ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் வேலை நிறுத்தம்

* 173 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 27-2-1969-ஆம் தேதியன்று சென்னையில் டாக்சி, ஆட்டோ ரிக்ஷா தொழிலாளர்கள் ஸ்ட்ரைக் செய்தனரா?

(இ) ஆம் எனில், காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) ஆம்.

(இ) போக்குவரத்துக்குத் தடங்கல் விளைவித்த வாடகை கார் டிரைவர் ஒருவர் கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்ற வகையில் வேலை நிறுத்தம் செய்யப்பட்டது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கைது செய்யப்பட்ட காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** பேரவைத் தலைவர் அவர்களே, வாடகைக் காரினுடைய அந்த டிரைவர் 'நோ பார்க்கிங்', அதாவது நிறுத்தக் கூடாது என்று குறிப்பிட்ட இடத்தில் நிறுத்தி வைத்திருந்தார். அங்கு வந்த ரிசர்வ் இன்ஸ்பெக்டர் நிறுத்திவைக்க வேண்டாம் என்று சொன்னார். டிரைவர் அதற்கு இசையவில்லை. எனவே, இன்ஸ்பெக்டர் அந்தக் காரைத் தள்ளினார். இன்னொரு டிரைவர் வந்து அதைத் தடுத்தார். ஆகவே, தகராறு மூண்டு, வளர்ந்து, ஒரு நாளைக்குப்பின் ஓய்ந்து விட்டது.

—

[1969 ஆகஸ்ட் 27.

**திரு. டி. மார்டின் :** மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார், சென்னை மாநகரத்தில் ஓடுகின்ற டாக்ஸிகள் ஒரு இடத்திலிருந்து ஒரு இடம் போவதற்குச் சாதாரணமாக எல்லா வண்டிகளிலும் பொருத்தப்பட்டிருக்கிற மீட்டர்கள் ஒன்றுக்கு ஒன்று முரணுகை, அதாவது 40 பைசா வரைக்கும் முரணுகை இருக்கிற காரணத்தினுல். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக்கேள்வியை விட்டு தொலைவிலே போகின்றீர்கள். இது ஸ்ட்ரைக்கைப் பற்றிய கேள்வி.

THIRU T. MARTIN : It affects everybody. Everybody is not travelling by bus. The Hon. Minister is well verses and he can answer.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது வேலை நிறுத்தம் பற்றிய கேள்வி.

**திரு. டி. மார்டின் :** வேலை நிறுத்தத்திற்குக் காரணமே இது தான். மீட்டர் சரியாக வேலை செய்யாததினுல் சில குழப்பங்கள் ஏற்படுகின்றன . . .

**மாண்புமிகு திரு. மு. கருணுநிதி :** தலைவர் அவர்களே, மீட்டர் முன்னுக்குப் பின் முரணுகை இருக்கிறது என்பதைவிட, இந்த மூலக் கேள்விக்கும் உப கேள்விக்கும் முன் பின் முரணுகை இருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஸ்ட்ரைக் ஏற்படுவதற்கு மீட்டர் சரியாக இல்லாத காரணம் தான் என்பது சர்க்காருக்குத் தெரியுமா? தெரிந்திருந்தால் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள்?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் :** பேரவைத் தலைவர் அவர்களே, பதில் கூறும்பொழுது நான் சொன்னேன். இதில் மீட்டர் பிரச்னை இல்லை. 'நோ பார்க்கிங்' என்ற ஆங்கிலத்தில் சொல்லக்கூடிய, அதாவது நிற்கக்கூடாது என்று தடுக்கப்பட்டிருக்கிற இடத்தில் ஒரு வாடகைக் கார் நின்று கொண்டிருந்தது. அங்கே அதை நிறுத்த வேண்டாம் என்று இன்ஸ்பெக்டர் சொன்னுர், அதற்குப் பின்னுள்ள வரலாற்றை முன்பே நான் சொன்னேன்.

**திரு. கே. என். குமாரசாமி :** டாக்ஸியில் போகிறவர்கள் 'நோ பார்க்கிங்' இடத்தில் கொண்டு போய் நிறுத்தச் சொல்வதனுல், டிரைவர் மறுக்காமல் அந்த இடத்தில் கொண்டுபோய் நிறுத்த வேண்டிய சங்கடம் வருகிறதே தவிர, வேறு ஒன்றுமில்லை. அதனுல் குறிப்பிட்ட பல இடங்களில் 'நோ பார்க்கிங்' என்று போட்டிருப்பது பொது மக்களுக்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. ஆகவே, என்ன செய்தால் சரியாக இருக்கும் என்பதுபற்றி அரசு முடிவு செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் :** தலைவர் அவர்களே, 'நோ பார்க்கிங்' என்று போட்ட இடங்களில் போய் பிரயாணிகள் நின்றுர்கள் அல்லது இறக்கப்பட்டார்கள் என்று சொல்லவில்லை.



1969 ஆகஸ்ட் 27]

ஒரு கார் நின்று கொண்டிருந்தது. அதை அந்த இடத்தில் நிறுத்த வேண்டாம், அகற்றிவிடுங்கள் என்று ரிசர்வ் இன்ஸ்பெக்டர் சொன்னுர். அதற்கு டிரைவர் இசையவில்லை. உடனே ரிசர்வ் இன்ஸ்பெக்டர் அந்தக் காரை தள்ளி நிற்கக்கூடிய இடத்திற்குக் கொண்டு போனுர். இன்னெருவர் டிரைவர் தடுத்தார். தகராறு முற்றி வளர்ந்தது. அந்தத் தகராறு பிறகு ஓய்ந்துவிட்டது.

## மதுரையில் நகரப் பேருந்துகள்

***174 வினு—திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை நகர் எல்லைக்குள் நகரப் பேருந்துகள் ( . City buses ) விடுவதற்கு டி.வி.எஸ். தவிர, வேறு பஸ் கம்பெனிகள் விண்ணப்பித்துள்ளனவா?

(இ) ஆம் எனில், அனுமதியளிக்கும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் :** (அ) ஆம்.

(இ) மதுரை நகரில் நகரப் பேருந்து ஓட்டுவதற்காக மதுரை சதர்ன் ரோட்வேஸ் நீங்கலாக, உடைமையாளர்கள் ஒன்பது பேருக்கு ஆளுக்கு ஒரு பேருந்து வீதம் இயக்குவதற்கு அனுமதி சீட்டு வழங்கப்பட்டுள்ளது.

**திரு. பி. எஸ். மணியன் :** மதுரை நகரத்திற்குச் சுற்றிலும் இருக்கக்கூடிய கிராமங்கள் மதுரை நகரத்தோடு இணையக்கூடிய அளவுக்கு மதுரை நகரம் விரிவு அடைந்து வருகிறது. ஆகவே, நகர எல்லைக்குள் மட்டுமின்றி, நகரைச் சுற்றிலும் குறிப்பிடப்பட்ட 15 மைல் தூரத்திற்கு டவுன் பஸ் விடுவதற்கு அரசு உத்தரவிடுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் :** நகர பஸ் என்று நான் சொன்னபொழுது நகரத்திற்குள்ளே ஓடுகிற பஸ்கள் என்று பொருள்படச் சொல்லவில்லை. நகர பஸ்கள், குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றுல், பணைக்காடு, ஆனைக்கால் என்ற இடங்களுக்குப் போகிறது. திருப்பரங்குன்றத்திற்குப் போகிறது. நகரத்து எல்லைக்கு அப்பாலுள்ள இடங்களுக்கும் நகர பஸ்கள் என்ற பெயருள்ள பஸ்கள் போகின்றன.

## சென்னை பழநி விரைவு பேருந்து

***184 வினு—திரு. கு. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

இரவு நேரங்களில் பழனிக்கும் சென்னைக்கும் அரசு துரித பேருந்து வண்டி விடும் உத்தேசம் ஏதேனும் உண்டா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் :** இப்பொழுது இல்லை.

[1969 ஆகஸ்ட் 27

**திரு. கு. கிருஷ்ணமூர்த்தி :** பழனியிலிருந்து நேராக பேருந்து சென்னைக்கு வரவேண்டுமென்றால், திருச்சி வந்து வரவேண்டியிருக்கிறது. ஆகவே, பழனியிலிருந்தே நேராக இரவு பஸ்ஸாவது விடுவதற்கு அரசாங்கம் அனுமதி அளிக்குமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** பேரவைத் தலைவர் அவர்களே, பகல் நேரத்தில் புறப்பட்டு வருவதற்கும், பிரயாணம் செய்வதற்கும் வேண்டிய வசதிகள் இருக்கின்றன. இரவு நேரத்திலுள்ள பஸ்களைப் பொறுத்து, இரவு நேரத்தில் பஸ்கள் விட வேண்டுமென்றால், பணிமனை இருக்கவேண்டும், பஸ்களை நிறுத்துவதற்கு, பழுதுபார்ப்பதற்கு டெப்போ வேண்டும். அப்படிப்பட்ட டெப்போ இல்லாத காரணத்தினால், இந்தப் பிரச்சினையை இப்பொழுது எடுத்துக்கொண்டு, தீர்க்க முடியாமல் இருக்கிறது. உரிய காலத்தில் பழனியிலிருந்துகூட இரவு நேரத்தில் விரைவு பஸ்கள் விடுவது பற்றி இந்த அரசு ஆராயும்.

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** தமிழகத்தில் எந்தெந்த இடங்களில் எல்லாம் இரவு நேரத்தில் விரைவு வண்டிகள், (எக்ஸ்பிரஸ் வண்டிகள்) விட திட்டமிடப்பட்டுள்ளது? நாகர்கோவிலிருந்து தூத்துக்குடிக்கு விரைவு வண்டி பகலிலும் இரவிலும் விட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** இது பழனியைப் பொருத்த கேள்வி. நாகர்கோவிலிருந்து தூத்துக்குடி வரும் வழியிலே பழனி என்ற ஊர் இருப்பதாக நான் கேள்விப்படவில்லை.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister for Transport whether there is any proposal to run a night express bus from Madras to Bangalore?

THE HON. THIRU SI. PA. ADITANAR : Sir, the proposal is under very active consideration. I can assure the hon. Member that night express buses between Madras and Bangalore will soon come into operation.

### ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிளில் செல்வோர்

* 185 வினா—**திரு. எம். அப்துல் கபூர்சாகிப் :** மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் வினா எண். 459-க்கு 27—11—1967-ல் பேரவையில் அளிக்கப்பட்ட விடையை யொட்டி தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிளில் போகும் நபர்கள் தலைக் கவசம் (ஹெல்மெட்) போட வேண்டும் என்பதைக் கட்டாயப் படுத்தும் உத்தேசம் தற்போது எந்த நிலையிலுள்ளது?

**மாண்புமிகு திரு. சி. பா ஆதித்தனார் :** ஸ்கூட்டர்களிலும், மோட்டார் சைக்கிள்களிலும் செல்பவர்கள் தலைக்கவசம் அணிய வேண்டும் என்று ஆணை பிறப்பிப்பதற்கான செயற்குறிப்பு தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது.



1969 ஆகஸ்ட் 27]

### தீப்பிடிக்காத வீடுகள்

*175 வினா.—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குறைந்த செலவில் தீப்பிடிக்காத வீடுகள் கட்டுவது குறித்து தொழிலதிபர் திரு. ஜி. டி. நாயுடு அவர்களால் தயாரிக்கப்பட்ட திட்டம் ஏதேனும் அரசினர்க்குக் கிடைக்கப் பெற்றதா?

(இ) ஆம் எனில், அதன் மீது செய்யப்பட்ட பரிசிலனையின் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** (அ) ஆம்.

(இ) மாநில வீட்டு வசதி வாரியம், சோதனை அடிப்படையில் எப் 1. ஜி 1. எச் 1. வகைகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு குடியிருப்பு வீதம் மொத்தம் 3 குடியிருப்புகளைக் கட்டியுள்ளது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த காலத்தில் தீப்பிடிக்காத வீடுகள் கட்டுவதிலே ஆகும் செலவை விட மிகக் குறைந்த செலவில் திரு. ஜி. டி. நாயுடு அவர்களால் வீடு கட்ட முடியும் என்று உருவாக்கப் பட்டிருக்கிறது. அமைப்பு முறையிலும் இலகுவாக இருப்பதாகச் சொல்லப் பட்டதே, அதை ஏற்று நம் அரசு செயல்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, மத்திய சர்க்காரின் ஆளுகையில் இருக்கிற நேஷனல் பில்டிங் கார்ப்பொரேஷன் என்கிற நிறுவனம் இந்த திரு. ஜி. டி. நாயுடு அவர்களுடைய வீட்டிலே புதுமை எதுவும் இல்லை என்று அபிப்பிராயப் படுகிறார்கள். நம் அரசாங்கத்தில் அப்படிப்பட்ட வீடு பற்றி, பேரறிஞர் அண்ணா காலத்திலேயே பரீட்சார்த்தமாக மூன்று குடியிருப்புக்கள் கட்டிப் பார்க்கச் சொல்லியிருக்கிறார்கள். அது 'ஹட் ட்வெல்லர்ஸ்'-க்கு, அதாவது குடிசை வாழ்வோருக்கு ஒத்து வருகிறதா, அது வெயில், மழை, காற்று இவற்றைத் தாங்குகிறதா என்று பார்க்க வேண்டும் என்று மூன்று குடியிருப்புக்களைக் கட்டி, பரிட்சை பார்க்கிறார்கள். அது பற்றிய முடிவு தெரிந்த பிறகு, அது சம்பந்தமாக ஒரு முடிவு செய்யப்படும். இந்த வீட்டை விலை குறைவாகக் கட்டலாம் என்று திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், அது சதுர அடிக்கு ரூ. 3.60 செலவு ஆகிறது என்றும் குறிப்பிட்டார்கள். ஆனால் அப்படி வீடு கட்டும் போது, அதற்கு 'லெவலிங் சார்ஜ்' சமப்படுத்தும் செலவு, அஸ்திவாரம் போடப்பட வேண்டிய செலவு இவையெல்லாம் நீக்கப் பட்டு, வீடு மட்டும் கட்டுவதற்கு ஆகிற செலவே ரூ. 3.60 ஆகிறது. அஸ்திவாரம் போட்டு, சமப்படுத்திச் செய்தால் ஒரு சதுர அடிக்கு 8.25 ரூபாய் ஆகிறது. ஆகவே, இவர்களுடைய வீடு லாபமா அல்லது இல்லையா என்று பரிசீலிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

[1969 ஆகஸ்ட் 27

திரு. கே. விநாயகம் : சார், உயர்திரு ஜி. டி. நாயுடு அவர்கள் கட்டிக் காட்டிய வீடு, தீப்பிடிக்காத வீடு என்று அல்ல, திடீர் என்று கட்டும் வீடு என்று தான் விளம்பரங்கள் வந்திருக்கின்றன. It is a Quick Construction house, but not a fire-proof house. அது உண்மைதானா என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் ஒரு வீட்டை ஒரே நாளில் கட்டலாம் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால், வீட்டு வசதி வாரியம் 100 வீடுகளை 30 நாட்களில் கட்டலாம் என்று சொல்வதால், அது ஒரு நாளுக்கு மூன்று வீடுகள் அளவில் வருகிறது. ஆகவே, கட்டிப் பார்த்து, சரியா இல்லையா என்பதைப் பரிசீலிக்க இருக்கிறது.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் கட்டும் வீட்டிற்கும், வீட்டு வசதி வாரியம் கட்டும் வீட்டிற்கும் எந்த அளவில் பணத்தில் வித்தியாசம் இருக்கிறது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அதிகமான வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை. பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறார்கள். நான் முன்பு சொன்னபடி, அஸ்திவாரம், சமப்படுத்துவது இவையில்லாமல், செலவு ஒரு சதுர அடிக்கு ரூ. 3.60 ஆகிறது. அதே சமயத்தில், அவற்றைச் செய்து கட்டினால் ஒரு சதுர அடிக்கு ரூ. 8.25 என்ற அளவுக்கு வருகிறது. வீட்டு வசதி வாரியத்தில் கட்டுவதற்கு ஒரு சதுர அடிக்கு ரூ. 6.50 அல்லது 7 என்று சொல்லுகிறார்கள். இதெல்லாம் பரிசீலனையில் இருக்கிறது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்தத் தீப்பிடிக்காத வீடுகள் திரு.ஜி.டி. நாயுடு அவர்களால் கட்டப் பட்டபோது, அதை ஒரே நாளில் கட்டலாம் என்றார்கள். அதை முன்னாள் முதல்வர், பேரறிஞர் அண்ணா அவர்கள் பார்வையிட்ட போதும், அஸ்திவாரம் இல்லாமல் ஒரே நாளில் கட்டப்படுகிறது என்று சொல்லப்பட்டது. அது தீயைத் தாங்கினாலும், தாங்கா விட்டாலும், வெள்ளத்தைத் தாங்குமா, இல்லை வெள்ளத்தில் படகு போல மிதக்க ஆரம்பித்து விடுமா என்ற பயம் இருந்தது. அஸ்தி வாரத்துடனும், தீப் பிடித்தால் விபத்து நேராமல் இருக்கும் வகையிலும், அதிகம் செலவானாலும் பரவாயில்லை, இப்பொழுது ரூ. 400-ல் கட்டப்படுகிற வீடுகளுக்கு ரூ. 800 ஆனாலும், அந்த அளவில் சர்க்கார் திட்டமிட்டு, கட்ட முன்வந்து வேலைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

வெளிக் குறியிடப்படாத வினாக்களும் விடைகளும்
வாணியம்பாடி சென்னை விரைவு பேருந்து

வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப் பாரா—

வாணியம்பாடியிலிருந்து சென்னைக்கு, எக்ஸ்பிரஸ் பஸ் விடு தற்காக உத்தேசம் ஏதேனும் உண்டா?

விடை.—இல்லை.



1969 ஆகஸ்ட் 27]

சத்திரப் பட்டியில் அரிசி வழங்கும் முறை

2. வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு உணவு-வணிக வரித்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜபாளையம் அருகிலுள்ள சத்திரப்பட்டியில் இது வரை வழங்கி வந்த அரிசி வழங்கு முறை திடீரென்று 1969 பிப்ரவரி 3-வது வாரத்தில் நிறுத்தப்பட்டுள்ளது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம்?

விடை.—(அ) & (இ) சட்டபூர்வமான பங்கீடு அமுலில் உள்ள இடங்களில், மக்களுக்கு உணவுகள் தனியார் வழங்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுள்ளது. குடும்பக் கார்டு அமுலில் இருக்கும் இடங்களில் தனியார் வியாபாரத்திற்கு எவ்விதத் தடையும் இல்லை. குடும்பக் கார்டு உள்ள இடங்களில் உள்ளவர்களை வெளிச் சந்தையில் உணவு தான்யங்களை வாங்கி உபயோகிக்க எவ்விதத் தடையும் இல்லை. ஆகவே, அந்த இடங்களில் அறுவடை உள்ள போதும். உணவு தான்யங்கள் வெளிச் சந்தையில் தாராளமாகக் கிடைக்கும் போதும் அதற்குத் தகுந்தாற்போலவும் அரசாங்கத்தின் கை யிருப்பை ஒட்டியும் மக்களுக்கு வழங்கும் உணவுப் பொருள்களின் அளவு மாற்றப் படுகிறது, அல்லது உணவுப் பொருள்கள் வழங்கு வது நிறுத்தப்படுகிறது. குடும்பக் கார்டு அமுலில் உள்ள இடங்க ளில் அறுவடை நடைபெறுகின்றதா என்பதையும் வெளிச் சந்தை யில் உணவு தான்யங்கள் கிடைக்கின்றதா என்பதையும், அரசாங் கத்தின் கையிருப்பு முதலியவைகளை பொறுத்தும் தான்யங்களின் அளவை கூட்டியோ குறைத்தோ வழங்குவது அல்ல அரிசி விநியோ கத்தை நிறுத்துவது போன்ற பொறுப்பு மாவட்ட ஆட்சியாளர் களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இதை ஒட்டி சத்திரப்பட்டியில் அந்த விநியோகம் 1969 பிப்ரவரி மூன்றவது வாரத்தில் நிறுத்தப்பட்டது. பிப்ரவரி கடைசி வாரத்திலிருந்து அரிசி விநியோகம் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது.

கோவை விவசாய இலாகா

3 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை விவசாய இலாகாவில் போரிங் மிஷின் வாடகைக்கு விடும் திட்டத்தின் மூலம் கடந்த 1965-1966 ஆகிய இரண்டு ஆண்டுகளில், தனித்தனியே வசூலிக்கப்பட்ட வாடகை எவ்வளவு ?

(இ) இந்த வருடங்களில் வாடகை பாக்கி ஏதேனும் உண்டா ?

(உ) ஆம் எனில், யார் யாரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டி யுள்ளது?

விடை.—

(அ) 1965—ரூபாய் 9,465.00
1966—ரூபாய் 9,661.05

(இ) & (உ) தனிப்பட்டவர் எவரிடமிருந்தும் வாடகை பாக்கி இல்லை.

### தொரனூர்-சொக்கனூர் சாலை

4. வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

திருப்பூர் யூனியன், தொரனூரிலிருந்து சொக்கனூர் செல்லும் பாதையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

**விடை.**—திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த தொரனூரிலிருந்து சொக்கனூர்க்குச் செல்லும் சாலையை அகலப்படுத்தும் செயற்குறிப்பு எதுவும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

### பெரியதாழையில் குளிர்சாதன நிலையம்

5 வினா—திரு. டி. மார்டின் : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்திலுள்ள-பெரியதாழை என்னும் மீனவர் கிராமத்தில் (Cold Storage Plant) நிறுவும் உத்தேசம் ஏதேனும் தமிழக அரசுக்கு உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை.—(அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

(a) No.
(b) Does not arise.

### களக்காடு, அருகிலுள்ள மலையருவி

6. வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு பதிலளிப்பாரா—

நெல்லை மாவட்டம் களக்காடு அருகேயுள்ள மலையிலிருந்து விழும் அருவியை குற்றாலம் போன்ற வாசஸ்தலமாக மாற்ற அரசு முயற்சிகள் மேற்கொள்ளும் உத்தேசமுண்டா ?

**விடை.**—இத்தகைய உத்தேசம் எதுவும் அரசிடம் இல்லை



### *Deputation of Collector of Kanyakumari to England*

7. *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

Whether the Government has sanctioned the deputation of the Collector of Kanyakumari to England in September, 1968?

*A.*—Yes.

Thiru C. N. Raghavan, I.A.S., formerly Collector of Kanyakumari was selected by the Government of India for deputation to United Kingdom in connection with his nomination for the Visiting Fellowship at Queen Elizabeth House, Oxford, for the academic year i.e. 30th September 1968. The State Government accordingly sanctioned the deputation.

**விடை.**—ஆம். படிப்பு உதவிக்கிழி பெற்றுப் பயிற்சி பெறுவதற்கு நியமனம் செய்கின்றதையொட்டி முகமையில் இங்கிலாந்துக்குச் சென்று, ஆக்ஸ்போர்டிலுள்ள ராணி எலிசபெத் வீடுதியில் 30-9-1968 முதல் ஓர் ஆண்டுக் காலம் தங்கிப் பயிற்சி பெற, கன்னியாகுமரி மாவட்டத்தின் முன்னாள் கலெக்டர் திரு. சி. என். ராகவன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் இந்திய அரசாங்கத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதற்கேற்ப தமிழ்நாட்டு அரசாங்கம் அவர் முகமையில் செல்வதற்கு அனுமதியளித்துள்ளது.

### *Conference of Ministers of Animal Husbandry at New Delhi*

8 *Q.*—THIRU N. S. V. CHITRAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

Whether State representatives are to attend the Conference of Ministers of Animal Husbandry at New Delhi held about the 29th July 1968?

A.—Yes. The Director of Animal Husbandry, the Commissioner for Milk Production and Livestock Development, the Secretary to Government in the Agriculture Department and the Minister for Agriculture attended the conference of State Ministers of Animal Husbandry held at New Delhi on 29th July 1968.

ஆம், புது டில்லியில் 29-7-1968 அன்று நடைபெற்ற மாநிலக் கால்நடை வளர்ப்புத்துறை அமைச்சர்கள் மாநாட்டில், கால்நடை வளர்ப்புத்துறை இயக்குநர், பால் உற்பத்தி கால்நடை, மேம்பாட்டு ஆணையர், அரசாங்க வேளாண்மைத் துறைச் செயலாளர், வேளாண்மைத்துறை அமைச்சர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### *Floricultural Gardens*

9 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

The places where the Agriculture Department has opened Floricultural gardens in this state?

[1969 ஆகஸ்ட் 27

A.—The Agriculture Department has not opened any Floriculture gardens so far.

வேளாண்மைத்துறை இதுவரை மலர்ச்செடி வளர்ப்புத் தோட்டங்கள் எதையும் தொடங்கவில்லை.

*Dindigul Municipality*

10 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

Whether the Madras High Court has quashed the Madras Government order delimiting the Municipal wards of Dindigul about the 11th November 1968 ?

*A.*—The High Court in its judgment, dated 5th November 1968 has quashed the Government Order Ms. No. 2146, Rural Development and Local Administration, dated 22nd November 1967 relating to Dindigul Municipality in so far as it relates to 27 wards (out of 30) and the reservation of ward No. 20 for a woman member.

திண்டுக்கல் நகரசபை சம்பந்தப்பட்ட 22-11-1967 தேதிய கிராம வளர்ச்சி உள்ளாட்சித்துறை அரசு ஆணை எண். (நிலை) 2146-யை இருபத்தேழு வார்டுகளைப் பொருத்த வரையிலும் பெண் அங்கத்தினருக்கு ஒதுக்கப்பட்ட 20-ம் வார்டு பொருத்தவரையிலும் உயர்நீதி மன்றம் தனது 5-11-1968 தேதிய தீர்ப்பில் ரத்து செய்தது.

*Kothwal Market*

Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to change the Kothwal Market from its present location in Madras to some other suitable place; and

(*b*) If, so, when it will be changed?

A.—(*a*) No.

(*b*) Does not arise.

*(அ) இல்லை.*

*(இ) இந்த வினா எழவில்லை.*

*சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி*

**வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரிக்கு தோலுரிவை பயிற்சி வகுப்பில் சேர 1968-69-ல் மாணவர்களிடமிருந்து வந்த மனுக்கள் எத்தனை?*



1969 ஆகஸ்ட் 27]

*(இ) அதில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் எத்தனை பேர்?*

**விடை.—**

*(அ) 17 பேர்கள்.*

*(இ) 17 பேர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.*

(*a*) 17 persons.

(*b*) All the 17 persons were admitted.

*[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]*

*3. அவையுரிமைக் கேள்வி*

***அமைச்சர் டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து அவர்கள் பேரவைக்குத் தவறான புள்ளி விவரங்கள் கொடுத்ததாக சொல்லப்பட்டது குறித்து.***

* THIRU T. MARTIN : Hon. Speaker, Sir, with the leave granted by the Chair, I move the Privilege Motion. . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** *நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள் ?*

THIRU T. MARTIN : Sir, I wish to raise the following matter of privilege under rule 184 of the Tamil Nadu Legislative Assembly Rules.

On 25th August 1969 during the discussion on the Appropriation Bill relating to the Suplementary Demands for 1969-70 in the Tamil Nadu Assembly the Leader of the Opposition mentioned about the selection of candidates for admission in medical college. The Hon. Minister Mrs. Satyavanimuthu, Minister for Harijan Welfare, who held the portfolio of Health till recently, appears to have pointed out in the House that there were forty writ petitions field last year in the High Court and now five or six cases of complaints are filed before the High Court regarding the selection and admission in medical colleges. The real fact is last year there were about 175 cases and this year about 20 cases admitted by the High Court. The High Court ordered the selection and admission of two aggrieved petitioners. That being so, the Hon. Minister has misled the House by giving misleading and incorrect figures. I submit that *prima facie* a breach of privilege has been committed by the Hon. Minister Mrs. Satyavanimuthu, Minister for Harijan Welfare, and that the matter may be taken note of by the Hon. Speaker and the House.

Mr. Speaker, Sir, regarding admission of students in Government medical colleges, the Hon. Leader of the House drew

இருக்கிற உறுப்பினர்களின் பொறுமை பொறுப்பானது என தங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, நான் என்னுடைய கடைமையை ஆற்ற வேண்டும். உறுப்பினர் அவர்கள் கூறவேண்டிய கருத்தை, சுருக்கமாக, தெளிவாகக் கூறலாம். அதை விட்டு, வேறு பிரச்சினைக்குப் போக வேண்டாம்.

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, even when I started to move my motion, immediately the Hon. Speaker has come forward. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, நீங்கள் உங்களுடைய பேச்சைத் தொடங்குங்கள்.

THIRU T. MARTIN : Sir, by this time I would have finished the matter. Sir, during the debate on the 25th instant the hon. the Leader of the Opposition made a mention about the injustice done to dserving candidates who have secured 'D' pluses in their subjects and who have got sufficient marks in the interview and who have been refused admission in the medical colleges this year for some reason. He also stated that one girl from the Coimbatore district who had secured 3 'D' pluses was not selected. Mr. Speaker, Sir, at that time from the Treasury Benches, one Hon. Minister after another came forward to justify the selections done this year. But, at the same time, Sir, an impression was sought to be created in the minds of the Members of the House that every thing was done in order, everything was done perfectly, merit had been recognised and no injustice had been done to any candidate . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மார்ட்டின் அவர்கள் இப்போது இங்கே அமர்ந்திருக்கின்ற அமைச்சர்கள் எல்லோர் மீதும் உரிமைப் பிரச்சினை கொண்டுவரவில்லை. அவர் உரிமைப் பிரச்சினை கொண்டுவந்திருப்பது வேளாண்மை, அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள்மீதுதான். அந்த அமைச்சர் கூறியது தவறான புள்ளிவிவரம் என்ற ஒன்றைமட்டும் குறித்து உரிமைப் பிரச்சினை வந்திருக்கிறது. அதைவிட்டுவிட்டு, 'அன்றைக்கு எதிர்க் கட்சித் தலைவர் என்ன சொன்னார், அதற்கு அமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்?' என்ற வாதம் எல்லாம் இப்போது இங்கே வரக் கூடாது. இப்போது இங்கே கொண்டு வந்திருப்பது வேளாண்மை, அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள்மீது உரிமைப் பிரச்சினை மட்டும்தான்.

THIRU T. MARTIN : Therefore on 25th instant, an impression was sought to be created in the minds of the Members of this House that everything was done perfectly. But at the same time Sir, in the High Court about 45 persons filed writ petitions seeking justice in the hands of the courts. Out of 45 writ petitions 25 were dismissed and even in respect of those 25 cases the Government Pleader was nothing the dismissal and naturally the Government would have been informed about that and about 20 cases were admitted by the High Court and the Government had filed counters therein. In respect of those 20 cases, I myself personally appeared in 2 cases. Mr. Speaker, Sir, with your kind permission I want to mention that in W.P. No. 2385 a backward class boy who has secured . . . . .



மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீதிமன்றத்திற்கு எத்தனை வழக்குகள் வந்தன, எத்தனை ஏற்றுக்கொள்ளப்பட்டன, எத்தனை தள்ளுபடி செய்யப்பட்டன, என்ன தீர்ப்பு கொடுத்தார்கள், அது நியாயமாக நடந்ததா, இல்லையா என்பதல்ல வாதம். இங்கே எழுப்பப்பட்டிருப்பது இந்த மன்றத்திலே அமைச்சர் அவர்கள் கொடுத்தது தவறான தகவல். நீதிமன்றத்திலே செய்தது எல்லாம் சரியா, தவறு என்பதல்ல இங்குள்ள வாதம். சென்ற ஆண்டு எத்தனை வழக்குகள் வந்தன, இந்த ஆண்டு எத்தனை வழக்குகள் வந்தன என்ற தகவல்தான் இங்கே சொல்லப்பட வேண்டும். அதுவன்றி, வழக்குகள் நியாயமாக நடந்தனவா, இல்லையா, ஹைக்கோர்ட்டில் கொடுத்த தீர்ப்பு என்ன என்பதல்ல இங்குள்ள வாதம்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அன்று கொடுத்த புள்ளிவிவரங்கள் தவறானவை என்ற அடிப்படையில், இந்த அவையின் உரிமை எந்த அளவில், எந்த முறையில் பாதிக்கப்பட்டிருக்கின்றது என்பதை மட்டும்தான் உறுப்பினர் அவர்கள் சொல்ல வேண்டுமேயொழிய, மற்றவற்றைச் சொல்வதற்கு உரிமை இல்லை. தவறான புள்ளி விவரத்தினால், எந்த வகையில், இந்த அவையின் உரிமை பாதிக்கப் பட்டிருக்கிறது என்பதற்கு மட்டும் உறுப்பினர் அவர்கள் விளக்கம் சொல்வது பொருத்தமாக இருக்கும்.

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, out of these 20 cases 2 cases were allowed by the High Court and the High Court has also ordered that two petitioners should be admitted by the Selection Committee . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மீண்டும் மீண்டும் திரு. மார்ட்டின் அவர்களை வேண்டிக் கொள்வதெல்லாம், எப்படித் தவறான புள்ளிவிவரத்தினால் இந்த அவையின் உரிமை மீறப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் விளக்குங்கள், நீதிமன்றத்தின் நிலைமையைப்பற்றி இந்த அவைக்குக் கேள்வி இல்லை. வழக்குமன்றத்தில் இத்தனை வழக்குகள் வந்தன, இத்தனை தள்ளுபடி செய்யப்பட்டன, என்பதல்ல பிரச்சனை. பேரவை உரிமை எப்படி மீறப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்ல வேண்டும். திரு. மார்ட்டின் அவர்கள் முதலில் கூறியது மட்டும் போதும் என்று கருதுகிறேன். அன்று அமைச்சர் அவர்கள் தவறான புள்ளிவிவரத்தைக் கொடுத்தார்கள் என்ற ஒன்றை மட்டும்தான் சொல்ல வேண்டும். திரு. மார்ட்டின்

[1969 ஆகஸ்ட் 27

அவர்கள் மீண்டும் மீண்டும் மற்ற தகவல்களைப்பற்றிப் பேசிக் கொண்டே போனால், அவையினுடைய நிகழ்ச்சிகளை, அலுவல்களை தடைப்படுத்துவதுதான் உறுப்பினருடைய நோக்கமாக இருக்கும் என்று கருத இடம் இருக்கிறது.

THIRU T. MARTIN : That being the case, when so many petitioners have approached this year also the High Court to seek justice the Hon. Minister's statement here that there are only five or six cases in the Court, is clearly intended to create an impression in the minds of the Members of the House that in this year, all the candidates were satisfied with the selection and that the Selection Committee has done its work properly. Mr. Speaker, Sir, the statement of the Hon. Minister, who until recently was holding the Health portfolio is not correct. The Hon. Minister should be in a position to tell correctly the number of cases filed in the High Court and also the disposal of the cases by the High Court. Therefore, with very great respect, I submit that the Hon. Minister's statement should not be considered as an inadvertent error or some clerical error. It is, in my submission, a deliberate statement, a wanton statement, which has been made in this House. It is calculated to create an impression among the public that this year everybody is satisfied with the selection. Therefore, I submit that there is a *prima facie* case of breach of privilege and I bring it to the notice of the Hon. Speaker and the House for proper action.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்டின் அவர்கள், நான் அன்றையதினம் மருத்துவக் கல்லூரி அட்மிஷன் சம்பந்தமாக வழக்கு மன்றத்திற்குச் சென்ற வழக்குகளின் எண்ணிக்கையை வேண்டுமென்றே குறைத்துச் சொன்னதாகக் குறிப்பிட்டார்கள். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு வழக்கு மன்றத்திற்குச் சென்ற வழக்குகளின் எண்ணிக்கை குறைவு என்பதைச் சுட்டிக்காட்டித் தான் பொதுவாக நான் குறிப்பிட்டேன். உரிமைப் பிரச்சினையைக் கொடுத்து அவர் பேசுகின்றபோதுகூட சென்ற ஆண்டு 175 வழக்குகள் சென்றன. இந்த ஆண்டு 120 என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களது புள்ளிவிவரப்படியே பார்த்தாலும்கூட நான் அன்றையதினம் குறிப்பிட்டதைப்போல சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு வழக்குகள் குறைவுதான். ஆயினும் திரு. மார்டின் அவர்கள் கொடுத்த புள்ளிவிவரம் கூடத் தவறானது. நான் இலாக்காவில் இருந்து சரியான புள்ளிவிவரம் கோரியதில்—கடந்த ஆண்டு 213 வழக்குகள் சென்றன. இந்த ஆண்டு 25 வழக்குகள் சென்றுள்ளன என்று தெரிகிறது. இந்தச் சரியான புள்ளிவிவரப்படியும் நான் அன்று இந்த அவையில் சென்ற ஆண்டு சென்ற வழக்குகளைவிட இந்த ஆண்டு சென்ற வழக்குகள் குறைவு என்று சொன்னது உண்மையேதான் என்பது புலனாகிறது. இதைத்தான் நான் அன்றைக்கு வலியுறுத்திச் சுட்டிக்காட்டினேன். இப்போதும் கூற விரும்புகிறேன். வேண்டுமென்றே இந்த கண்ணியமிக்க



1969 ஆகஸ்ட் 27] [டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து]

அவைக்கு—கவனத்தை வேறு திசையில் திருப்ப வேண்டுமென்று நான் ஒரு தவறான கருத்தைச் சொல்லவில்லை. மீண்டும், மீண்டும் கூறிக்கொள்ள விரும்புவது எல்லாம், தவறான புள்ளிவிவரத்தைச் சொல்லவேண்டுமென்ற நோக்கம் இல்லை. 40 என்பது 120 ஆக, இருந்தாலும் கூட—சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு வழக்கு மன்றத்திற்குச் சென்ற எண்ணிக்கை குறைவு என்பது உண்மை தான் ஆகவே உரிமைப் பிரச்சினை எழவில்லை. உள்ளபடியே அவர்கள் உரிமைப் பிரச்சினை கொண்டு வருகிறார்கள் என்றபோது ஏதோ என்று நினைத்தேன். மலையைக் கெல்லி எலியைப் பிடிப்பது போல இந்த எண்ணிக்கையையே திருப்பித் திருப்பிச் சொன்னார் கள். வாதத்திற்குச் சொன்னது—வேண்டுமென்றே சொன்னது அல்ல, என்னுடைய வாதம் சரியானது தான், ஆகவே இதை உரிமைப் பிரச்சினையாக எடுத்துக்கொள்ளவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நம்முடைய அவைக்குக் கொடுக்கப்படுகிற தகவல்கள் சரியானவையாக இருக்கவேண்டும் என்பதில் ஐயமில்லை. தவறான தகவல்களைக் கொடுப்பது அவை உரிமையை மீறியதாகத்தான் ஆகும். ஆனால் இதுபோன்ற பிரச்சினைகளில் என்ன நிலையை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை 'மேஸ் பார்லிமெண்டரி ப்ராக்டீசில்' பார்த்தால்

The House may treat the making of a deliberately misleading statement as a contempt

என்பதாக, வேண்டுமென்றே தவறான தகவல்களைக் கொடுப்பது உரிமையை மீறியதாகச் சொல்கிறார்கள். அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுக்கிறபோது வேண்டுமென்று கொடுக்கவில்லை என்றார்கள். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு குறைவு என்கிற உண்மையச் சொன்னதாகச் சொன்னார்கள். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு குறைவு என்பதும் உண்மையாக இருக்கிறது. ஆகவே இதில் எந்தவிதமான உரிமையும் இல்லை என்று கூறி என் தீர்ப்பை அளிக்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே நான் தங்களுடைய தீர்ப்பைப் பற்றிப் பேசவில்லை. அன்றைக்கு அமைச்சர் அவர்கள் பேசும்போது மார்க்குகளில் தவறு நடந்திருக்குமானால் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எதிர்க்கட்சித் தலைவர் தயவு செய்து உட்காரவேண்டும். திரு. மார்டின் அவர்கள் குறிப்பிட்ட ஒன்றைப்பற்றி உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார்கள். இதைப் போலவே வேறு துறை சம்பந்தமாக எதாவது எழுப்பவேண்டுமென்றால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அவற்றுக்குத் தனியாக உரிமைப் பிரச்சினை கொண்டு வந்து விவாதிப்பதுதான் முறை. இப்போது அதைப்பற்றிப் பேசமுற்படுவது அவை நடைமுறைக்கு நல்லது அல்ல என்று தெரிவிக்கிறேன். நாளைக்குக் கொண்டு வாருங்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நாளைக்கு சட்டமன்றம் கிடையாது. மீண்டும் கூடுகிறபோது இதை நான் கொண்டுவந்தால் காலம் கடந்துவிட்டது என்று தள்ளிவிடாமல் இருக்க நீங்கள் உறுதி கொடுத்தால் தனியாகவே கொண்டுவர எனக்கு ஆட்சேபணை இல்லை. வேறு நேரம் இல்லாததால் இப்போது தான் சொல்ல நேரிடுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் நேற்று சில குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள். அந்தக் குற்றச்சாட்டுகளுக்கான ஆதாரங்களை என்னிடம் தாருங்கள். நான் அதுபற்றி அமைச்சர் அவர்கள் தருகிற தகவல்களையும் பெற்று விசாரித்து முடிவு தெரிவிக்கிறேன் என்று சொன்னேன். ஆகவே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்றைக்கு வேண்டுமென்றாலும் அந்தக் குற்றச்சாட்டுகளுக்கான ஆதாரங்களை என்னிடம் தரலாம். அவை நடக்கும்போதுதான் கொடுக்கவேண்டும் என்பதில்லை. நான் கொடுத்த வாக்குறுதியில் இருந்தும் பின்வாங்கவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நீங்களாக அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டீர்கள். நீங்கள் விசாரிக்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை. மருத்துவக் கல்லூரி அட்மிஷன் சம்பந்தமாகப் பல ஊழல்கள் நடந்திருக்கின்றன. அதை விசாரிக்க ஒரு கமிஷன் போடவேண்டும் என்று நான் வற்புறுத்தினேன். நானேதான் கமிஷன், நான் விசாரிக்கிறேன் என்று நீங்களாகவே சொன்னீர்கள். ஆகவே நான் இதுபற்றிய தகவல்களை, ஆதாரங்களைத் தங்களிடம் கொடுத்தாலும் கொடுக்கலாம், கொடுக்காவிட்டாலும் ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேற்று நானே கமிஷன் என்று கூறியதை நீங்கள் மறுக்கவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நீங்களே சொல்லிவிட்டு, நாங்கள் சொல்ல எழுகிறபோது, 'உட்காருங்கள்', 'உட்காருங்கள்' என்று சொல்கிறபோது எப்படிச் சொல்ல முடியும்? நேற்று நீங்கள் கூறியதை மறுக்கவில்லை என்பதனால் நான் அதை ஏற்றுக்கொண்டதாக நீங்கள் சொல்ல முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் கூறியதை நீங்கள் ஏற்றுக்கொண்டீர்கள் என்று சொல்லவில்லை. நான் கூறியபோது நீங்கள் மறுக்கவில்லை. அவையில் நீங்கள் நேற்று கூறிய குற்றச்சாட்டுகளுக்கான ஆதாரங்களை நீங்கள் என்னிடம் கொடுத்தால், அதுபற்றிய தகவல்களை நான் அமைச்சரிடம் இருந்து பெற்று விசாரிக்கப் பின்வாங்கவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் சொன்னது ஒரு கமிஷன் போடவேண்டும் என்பதுதான். கமிஷன் போடட்டும். நான் தக்க ஆதாரங்களைக் கொடுத்து நிரூபிக்கத் தயார். இல்லையென்றால் எந்த தண்டனையையும் ஏற்றுக் கொள்ளத் தயாராய் இருக்கிறேன். இதுதான் நான் அன்றைக்குச் சொன்னது எல்லாம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அன்றைக்கு நடந்த பேச்சுக்கு போகவேண்டியதில்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரித் தேர்வில் எந்த எந்த மாணவர்கள் தாங்கள் பாதிக்கப்பட்டதாக, தங்களுக்கும் குறை இருப்பதாகக் கருதுகிறார்களோ, அவர்கள் இங்கே போடுகிற கமிஷனுக்கு வரவேண்டும் என்பதில்லை. உயர்நீதி மன்றத்திற்கே அவர்கள் சென்று தீர்ப்புகள் பெற்றிருக்கிறார்கள். இந்த ஆண்டு 2 மாணவர்கள் மறுபடியும் தேர்வுக்கு அனுமதிக்கப்படவேண்டுமென்று தீர்ப்புக் பெற்றிருப்பதாகச் சொன்னார்கள். அது உண்மை. ஆனால் இதுபற்றிய உண்மையான நிலை என்னவென்றால் மார்க்கில் தவறுகள் நடந்துவிட்டன என்பதன்காரணமாக அவர்கள் முன்பு விலக்கப்படவில்லை. அவர்கள் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்களா, இல்லையா என்கிற சர்ச்சை எழுந்தபடியால்தான் அந்தப் பட்டியலில் இணைக்கப்படாமல் போய்விட்டது. தாங்கள் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள்தான் என்பதை வழக்குமன்றத்தில் நிரூபித்திருக்கிறார்கள். ஆகவே இப்போது சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு 200-க்கும் மேற்பட்ட வழக்குகள் அனுமதிக்கப்பட்டன. இந்த ஆண்டு 22 வழக்குகள்தான் பதிவாயின என்கிறபோதே குறை உள்ளவர்கள் நீதிமன்றத்தை நாட வாய்ப்பு இருப்பதை உணரலாம். பழைய காலத்தைப்போல அந்த மார்க் லிஸ்டுகள் எரிக்கப்படாமல் வங்கியில் வைக்கப்பட்டிருக்கிற நிலையும், வழக்கு மன்றத்தில் கோருகிறபோது அளிக்கப்படுகிற வசதியும் இருக்கிற காரணத்தினால் தனிக் கமிஷன் தேவை இல்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, ஹைக்கோர்டிலே தீர்ப்புக் கொடுத்துவிட்டார்கள். தவறு என்று சொல்லிவிட்டார்கள் என்று முதலமைச்சர் அவர்களே கூறிகிறார்கள். ஆகவே தவறு என்று அவர்களுடைய தீர்ப்பு இருக்கிறது. தவறு, ஆகவே அட்மிட் செய்துகொள்ளவேண்டுமென்று தீர்ப்புக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறுதான் பதம் . . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மார்க்கில் தவறு என்று தீர்ப்பு அளிக்கப்படவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** போட்ட மார்க்குகளிலே கூட்டுவதில் தவறு இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. சென்ட்ரல் கமிட்டி, கவர்ன்மெண்ட் இத்தனை பேர்கள் இருந்தும் தவறாகப் போய் இருக்கிறது. என்னிடம் மூன்று மனுக்கள் வந்திருக்கின்றன. மூன்று டி-ப்ளஸ் வாங்கியும் கிடைக்கவில்லை. ஆனால் சரியாக மார்க் வாங்காதவர்களுக்கு எல்லாம் கிடைத்து இருக்கிறது. இவையெல்லாம் எப்படி ஏற்பட்டது என்பதைப் பற்றி . . . .

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* நீங்கள் அமைச்சர் அவர்கள் பற்றிச் சொல்லுவது, எண்ணிக்கையில் தப்பான கணக்கைக் கொடுத்திருக்கிறார்கள் என்பது. அதை விட்டு, மற்ற நிகழ்ச்சிகளுக்குப் போகாதீர்கள். 'அமைச்சர் அவர்கள் அவையில் கொடுத்த புள்ளிவிவரம் சரியில்லை அதுதான் உங்களுடைய கருத்து. மற்ற நிகழ்ச்சிகளுக்கெல்லாம், அன்று நடந்த விவரங்களுக்கெல்லாம் செல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU T. MARTIN : Hon. Speaker, even at the outset I crave your indulgence and request you to permit me to explain how the statement has misled the House.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* அமைச்சர் அவர்கள் பேசும் போது, சென்ற ஆண்டில் வந்த வழக்குகள் 40 என்றால், நீங்கள் 170 சொச்சம் என்கிறீர்கள். அதே போல, இந்த ஆண்டு அவர்கள் சொன்னது 4, 5 என்றால், அது அதிகம் என்கிறீர்கள். ஆகவே, அவர்கள் தவறான புள்ளிவிவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள்; இந்த அவையில் அப்படிப்பட்ட தவறான புள்ளிவிவரங்களைக் கொடுத்தல் ஒரு உரிமை மீறியதான செய்கை என்பது உங்களுடைய வாதம். அதற்குப் பிறகு வேறு என்ன விளக்கம் வேண்டும்? பேசிய கருத்துத் தெளிவாக இருக்கிறதே?

THIRU T. MARTIN : Mr. Speaker Sir, I must state my case. . .

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* நீங்கள் கொடுத்தது உங்களுடைய கேஸா அல்லது வேறு ஒருவருடைய கேஸா?

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, should I not give . . .

*திரு. பி. ஜி. கருத்திருமன் :* தலைவர் அவர்களே, தயவுசெய்து உறுப்பினர் அவர்கள் பேசி முடிக்கிறவரைக்கும் அவர் சொல்வதை நீங்கள் கேட்கக் கூடாதா? இதற்கு முன்னால் எல்லாம் என்னென்னவோ 'கோட்' செய்தீர்களே? கொஞ்சம் பொறுமையாகச் சொல்வதைக் கேட்கக் கூடாதா?

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* நான் நான்கு மணி நேரம் காத்திருக்கிறேன். நீங்கள் எல்லாம் இங்கே காத்திருக்கும்போது நானும் காத்திருக்கத் தயார். ஆனால் உறுப்பினர் அவர்கள் சொல்ல வேண்டிய கருத்துக்களை முதலிலேயே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

*திரு. பி. ஜி. கருத்திருமன் :* தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்ல முன்வந்தது, அதைச் சேர்ந்த சில கருத்துக்களாக இருக்கலாம் அல்லவா?

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* அதையொட்டிய கருத்துக்களாக இருந்தால் உறுப்பினர் சொல்லலாம்.



*திரு. பி. ஜி. கருத்திருமன் :* அதையொட்டிய கருத்துக்களைத் தான் சொல்கிறோம். அதைவிட்டு, நாங்கள் தவறான மார்க் போட்டோம் என்று சொல்ல வரவில்லை.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்கிறேன். திரு. மார்ட்டின் அவர்கள் கொண்டு வந்த கருத்தை விட்டு விட்டு, வேறு ஒரு கருத்துக்குப் போக வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். உறுப்பினர் அவர்கள் தம்முடைய கட்சியைக் கலந்து கொண்டு வந்தாரா?. .

*திரு. பி. ஜி. கருத்திருமன் :* எங்கள் கட்சியோடு கலந்துதான் உறுப்பினர் அவர்கள் இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். உறுப்பினரின் கருத்தையொட்டித்தான் பேசுகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* திரு. மார்ட்டின் அவர்கள் இங்கே எழுப்பியிருப்பது, அமைச்சர் அவர்கள் தவறான புள்ளி விவரத்தை இந்த அவைக்குக் கொடுத்திருக்கிறார் என்பது, இந்தப் பிரச்சனையோடு மார்க் போட்ட விவகாரத்தையெல்லாம் இணைத்துப் பேசக் கூடாது. அந்தப் பிரச்சனை யெல்லாம் இதில் வரவில்லை. மார்க் பிரச்சினையை இப்போது எழுப்பக்கூடாது. இந்த உரிமைப் பிரச்சினையோடு வேறான ஒன்றைச் சேர்க்கக்கூடாது. மார்க் விவகாரம் பற்றிப் பேச வேண்டுமென்றால், தனியாக ஒரு உரிமைப் பிரச்சினை கொண்டுவந்து பேசுங்கள்.

*திரு. பி. ஜி. கருத்திருமன் :* தலைவர் அவர்களே, இப்போது மெடிகல் காலேஜ் அட்மிஷன் விஷயம் தவறானது மட்டுமல்ல. அதே சமயத்தில் தவறானதை தவறு என்று சொல்வதற்கு உரிமை இருக்கின்றது. சர்க்கார் தரப்பு இந்தச் சபையில் தவறான புள்ளிவிவரங்களைக் கொடுத்திருக்கிறது. தவறான புள்ளிவிவரங்களை ஹைக் கோர்ட்டுக்குக் கொடுத்தால், வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே, சர்க்கார் செய்தது தவறு என்பதைச் சொல்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* அந்த மாதிரி பேசுவதற்கு நான் அனுமதிக்க முடியாது. உறுப்பினர் அவர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டு உரிமைப் பிரச்சினை எழுப்பியிருக்கிறாரோ, அதைப் பற்றித்தான் பேசவேண்டும். வேறு காரியங்களை இப்போதைக்குப் பேசக்கூடாது. அதைத் தனியாக எழுதிக் கொடுத்துவிட்டுப் பேச வேண்டும். உரிமைப் பிரச்சினையோடு வேறு எதையும் இணைத்துப் பேசக் கூடாது.

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, I want your patience for a few minutes. I will be very brief. I seek your indulgence.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* நீங்கள் என்னுடைய பொறுமையை இண்டல்ஜன்ஸைக் கோருவது ஒருபுறமிருக்க, என்னுடைய பொறுமையைக் காட்டிலும், இந்த மன்றத்தில்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கடந்த நாள் விவாதத்தைத் தொடர்ந்து நடத்த முயல்வது நல்லதல்ல. திரு. மார்டின் அவர்கள் உரிமைப் பிரச்சினையொன்றைக் கொண்டுவந்திருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் கமிஷன் பற்றிச் சொன்னார்கள். அன்றைக்கு நான்தான் கமிஷன் என்று சொன்னபொழுது எதிர்க்கட்சித் தலைவர் ஒன்றும் சொல்லவில்லை. அன்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் "நிரூபிக்க வேண்டுமென்றால் எனக்கும் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். மார்க்குகள் பூராவையும் பப்ளிக் ஆகச் சொல்லுவார்களானால், ஒரு கமிஷன் நியமிப்பார்களேயானால் எல்லாவற்றையும் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன், கமிஷன் போடுகிறேன் என்று சொல்லட்டும்," என்று சொல்லி இருக்கிறார்கள். "அந்தக் கமிஷன் நானேதான்" என்று நான் சொன்னேன். "அப்படியானால் அந்த மார்க்குகள் பூராவையும் சட்டசபையில் வையுங்கள்" என்று சொல்லியிருக்கிறீர்கள். அதற்கு நான் "நான் பொறுப்பேற்றுக் கொள்ளுகிறேன்" என்றால் இந்த மன்றம் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறது என்றுதான் அர்த்தம். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மார்க்கை சட்டசபையில் வையுங்கள் என்று கூறுகிறார்கள். "தவறுகள் என்னென்ன என்பதைத் தாங்கள் என்னிடத்திலே கொடுங்கள். இந்த அவையிலே கூறவேண்டுமென்ற தேவைகூட இல்லை, என்னுடைய அறையிலே வந்து தெளிவாக இன்னின்ன தவறுகள் என்று எழுதிக் கொடுக்கவேண்டும். அப்படிக் கொடுத்தால் அதை விசாரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறேன்." என்று கூறியிருக்கிறேன். அதன்பிறகு எதிர்க்கட்சித் தலைவர் எந்தவிதமான பேச்சும் இந்த அவையிலே அன்று இதைப்பற்றிப் பேசவில்லை. பேசவில்லை என்று சொன்னால் அதை ஒப்புக் கொண்டார்கள் என்று பொருள். ஒப்புக்கொள்ளவில்லையென்று சொன்னால் அன்றைக்கே அவர்கள் அதைச் சொல்லியிருக்கலாம். கமிஷனை, நான் சொன்னேனே அந்தக் கமிஷனை, ஏற்றுக்கொள்கிறார்களா, இல்லையா என்பதை இப்பொழுது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெளிவாகச் சொல்லிவிடுவது நல்லது. அதைவிட்டுவிட்டு மூன்று டி-ப்ளஸ் வாங்கியவனிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது என்று சொல்வதற்கெல்லாம் இது நேரமல்ல. அது நம்முடைய நிகழ்ச்சி நிரலில் இல்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : நீங்கள் எழுந்தால் நாங்கள் உட்கார வேண்டும் என்று சொல்கிறீர்கள். அதோடு தீர்ந்துவிட்டது என்று நினைத்துக்கொள்ளக்கூடாது. தயவுசெய்து நான் சொல்வது என்னவென்றால் . . .

**திரு. ந. வீராசாமி** : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : உட்காருங்கள். தவறு இருக்கிறதா இல்லையா என்று பார்ப்பதற்கு நேரம் இது இல்லை. அது நம்முடைய இன்றைய நிகழ்ச்சி நிரலிலும் இல்லை.



நம்முடைய நிகழ்ச்சி நிரலே வேறு. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பாராளுமன்ற நடைமுறைகளை நன்றாகத் தெரிந்தவர்கள். எந்த நேரத்திலே எதைப்பற்றிப் பேசவேண்டுமென்று தெரிந்தவர்கள். அவர்கள் இப்படிப் பேசுவது முறைதானா? அதற்கெல்லாம் இடம் தர முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். யற்றது என்று தெளிவாக ஏற்கனவே கூறியிருக்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : சர்க்கார் கமிஷனைப் போடுவதற்கு ஏற்றுக்கொள்கிறார்களா? இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அது வேறு. உங்களுக்கும் சர்க்காருக்கும் உள்ள விவகாரம்.

**திரு. வ. ஜார்ஜ்** : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் . . .

**திரு. கொ. இரா. ஞானசம்பந்தன்** : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. ஞானசம்பந்தன் முதலில் என்ன பாயிண்ட் ஆப் ஆர்டர் என்பதைச் சொல்லட்டும்.

**திரு. கொ. இரா. ஞானசம்பந்தன்** : தலைவர் அவர்களே, பல முறைகளிலே இதுபோன்று நடந்திருக்கிறது. பேரவையில் நிகழ்ச்சிகளிலே இல்லாத விஷயங்களை முடிந்துபோன விஷயங்களைப்பற்றிப் பேசி சபையினுடைய அபிப்பிராயத்தைக் கேட்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறதா என்பதற்கு தங்களுடைய தீர்ப்பை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப் பல தடவைகள் நடந்து நானும் பாயிண்ட் ஆப் ஆர்டர் கொண்டு வந்திருக்கிறேன். இதைப்பற்றி தாங்கள் தீர்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நான் தெளிவாகச் சொன்னேன். நிகழ்ச்சி நிரலில் இல்லாதது இது. ஆகவே முறையற்றது என்று தெளிவாக ஏற்கனவே கூறியிருக்கிறேன்

**திரு. வ. ஜார்ஜ்** : சபைத் தலைவர் அவர்களே, சபைத் தலைவர் அவர்கள், இந்தச் சபையிலே நடவடிக்கையிலே வருகிற பிரச்சினைகளைப்பற்றி விசாரிக்க, கமிஷனாக இருப்பதற்கு விதிகள் அனுமதிக்கின்றனவா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: எல்லாம் அனுமதியளிக்கிறது. அடுத்து 41-வது விதியின்கீழ் திரு. பூபதி அவர்கள் அரிசன நலத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு விஷயத்தைக் கொண்டு வருவார்கள்.

### 4. கவன ஈர்ப்பு.

### கோவை வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள் நடத்திய கிளர்ச்சி

**திரு. எம். பூபதி** : தலைவர் அவர்களே, கோவை விவசாயக் கல்லூரி மாணவர்கள் விவசாயப் பட்டதாரிகள் வேலை-விதிமுறைகளைச் சீர்திருத்தம் செய்யக்கோரி காலவரையற்ற

நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அவசரமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த விஷயத்தை மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** வேளாண்மைப் பட்டதாரிகளின் பணி நிலைமைகள் குறித்து கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள் நடத்திய கிளர்ச்சியை அரசின் நாட்டத்திற்கும் கொண்டு வருவதற்காக, திரு. எம். பூபதி, எம்.எல்.ஏ. அவர்கள் மன்றப் பேரவை விதிகளின் 41-வது விதியின்கீழ் அறிவிப்பு ஒன்று கொடுத்துள்ளார். கீழ்க் கண்ட தகவல்களை இம்மன்றப் பேரவை முன் வைக்க நான் விரும்பு கிறேன்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் அடங்கிய முறையீடு ஒன்றை வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள் கொடுத்தனர்.

(1) வேளாண்மைத் துறையைச் சேர்ந்த, ஆசிரியர் பிரிவுகளில் உள்ள கல்லூரித் தலைவர், இணைத் தலைவர், முதல்வர், பேராசிரி யர்கள், இணைப் பேராசிரியர்கள், சிறப்புப் பேராசிரியர்கள், விரி வுரையாளர்கள், உதவி விரிவுரையாளர்கள் முதலான பதவிகளில் வேளாண்மைப் பட்டதாரிகள் மட்டுமே நியமிக்கப்பட வேண்டும்.

(2) முழுமையாக அறிவியல் பாடங்களையே எடுத்துக் கொண்டுள்ள பட்டதாரிகள் வேளாண்மைத் துறையில் நியமிக்கப் படுவது அறவே நிறுத்தப்படவேண்டும்.

(3) வேளாண்மைத் துறை இயக்குநரின் பதவியிலும் வேளாண்மைப் பட்டதாரி ஒருவரையே நியமிக்கவேண்டும்.

(4) வேளாண்மை வளர்ச்சி அதிகாரிகள், மாவட்ட வேளாண்மை அதிகாரிகள், துணை இயக்குநர்கள், இணை இயக்குநர் கள், பேராசிரியர்கள், முதல்வர், இணைத்தலைவர், தலைவர் ஆகி யோரின் சம்பள வீதங்கள் உயர்த்தப்படவேண்டும்.

(5) வேளாண்மைத் துறையில் பணியாற்றுகின்ற வேளாண்மைப் பட்டதாரிகளுக்கு கால்நடைப் பட்டதாரிகளுக்கு அளிக்கப்பட்டதைப் போன்று அரசிதழ் பதவித் தகுதி அளிக்கப் படவேண்டும்.

கோரிக்கைகளை ஆய்வு செய்து வருகையில் கோயம்புத்தூரிலும் மதுரையிலும் உள்ள இரு வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள் ஆகஸ்ட் திங்கள் 16-ம் நாள் முதல் காலவரையறையில்லாது வேலை நிறுத்தம் செய்துள்ளனர் என்ற தகவல் வந்தது. இதைத் தொடர்ந்து 21-8-1969 நாளிலிருந்து இரண்டு கல்லூரிகளிலும் மாற்றுமுறை உண்ணாவிரதம் (Relay Hunger Strike) மேற்கொள்ளப்பட்டது.

மாணவர்களின் கோரிக்கைகளை ஆய்வு செய்கையில் வேளாண் மைத் துறையின் பயிற்சிப் பிரிவுகளுக்கு அறிவியல் பட்டதாரிகளை நியமிப்பது மாணவர்களை உடனடியாகப் பற்றியுள்ள ஒரு கோரிக்கையாகும் என்று கருதப்பட்டது. இத் துறையி





லுள்ள எல்லாப் பதவிகளுக்கும் வேளாண்மைப் பட்டதாரிகள் போதிய அளவு கிட்டாதபோது வேளாண்மைப் பட்டதாரிகளுடன் அறிவியல் பட்டதாரிகளையும் நியமிக்கும் வழக்கம் பல ஆண்டு களுக்கு முன்னர் பின்பற்றப்பட்டு வந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. வேளாண்மைப் பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகரித்ததினால், 30-5-1962 முதல் ஆராய்ச்சி-பயிற்சிப் பிரிவுகளில் ஓர் ஆண்டில் ஏற்படும் மொத்த காலி இடங்களில் 5 சதவீத பதவிகளிலேயே அறிவியல் பட்டதாரிகளை நியமிப்பது அதுவும் எம்.எஸ்.சி. பட்டதாரிகளை மட்டும் நியமிப்பது என்று அரசு முடிவுசெய்தது. இந்த 5 சதவீத நியமனமும் 1-6-1967 முதல் அறவே நிறுத்தப்பட்டது. அதன் பின்னர் அறிவியல் பட்டதாரிகள் எவரும் வேளாண்மைத்துறையில் நேரடியாக நியமனம் செய்யப் படவில்லை. 1967 ஜூன் முதல் வேளாண்மைத் துறையில் அறிவியல் பட்டதாரிகள் நியமனம் செய்யப்படமாட்டார்கள் என்று முறை யான ஆணைகள் தற்போது பிறப்பிக்கப்பட்டுள்ளன. அரசின் இந்த முடிவு மாணவர்களின் முக்கிய கோரிக்கையை நிறைவு செய் வதுடன், இத்துறையில் அவர்கள் பணியாற்ற வருகையில் அவர் களின் நலனைக் காக்கும் கவசமாகவும் அமைந்துள்ளது.

எனவே தற்போதுள்ள சிக்கல், இத் துறையில் முன்னரே சேர்க்கப்பட்டு நாளடைவில் அவர்களது பணி உறுதிப்படுத்தப் பட்ட அல்லது பதவி உயர்வு அளிக்கப்பட்ட அறிவியல் பட்ட தாரிகளைப் பற்றியதேயாகும். இவர்கள் இத் துறையில் முறையாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டு இத்துறையில் பல ஆண்டுகள் சேவை செய்திருப்பதால், அவர்களுடைய நலனும் பாதுகாக்கப்பட வேண்டும். ஏற்கெனவே, பயிற்சிப் பிரிவில் பணியாற்றி வரும் அறிவியல் பட்டதாரிகளை துறையின் ஆராய்ச்சி அல்லது பிற பிரிவுகளில் நிகரான பதவிகளில் நியமிப்பதற்கான இயலும் முறைகளைப் பற்றி அரசு ஆலோசித்து வருகிறது.

சம்பள வீதங்களைத் திருத்தியமைப்பது குறித்த மாணவர் களின் கோரிக்கையைப் பொறுத்தவரை, இது சம்பள ஆணைக்குழு அமைக்கப்பட்டவுடன் அவர்களால் ஆலோசனை செய்யப்பட வேண்டியதாகையால் இக்கோரிக்கையை தனியாக எடுத்துக் கொள்வது இயலாததாகும்.

வேளாண்மைத் துறையில் பணியாற்றும் வேளாண்மைப் பட்ட தாரிகள் அனைவருக்கும் அரசிதழ் பதவி தரவேண்டுமென்ற கடைசி வேண்டுகோளைப் பொறுத்தவரையில் இதனை அரசு இன்னும் ஆலோசனை செய்து வருகிறது. இதில் பல சிக்கல்கள் உள்ளன. அவற்றை விரிவாக ஆராய வேண்டியுள்ளது.

வேளாண்மைப் பட்டதாரிகள் நலனைப் பாதிக்கும் வகையில் வேளாண்மைத் துறையில் அறிவியல் பட்டதாரிகளே நியமிக்கப் படுகின்றனர் என்பதை எதிர்த்துச் செய்யப்பட்டுள்ள முக்கிய மான வேண்டுகோளை முழுவதுமாக அரசு ஏற்றுக்கொண்டுள்ளதை எடுத்துக்கூறி வேலை நிறுத்தத்தை நிறுத்துமாறு மாணவர்களைக்

கேட்டுக்கொள்ளும்படி 2 கல்லூரிகளின் தலைவருக்கும், முதல்வருக்கும் அரசு கட்டளையிட்டது. ஏனைய கோரிக்கைகள் பற்றி அரசு மும்முரமாக ஆலோசித்து வருகிறது, என்றும் மாணவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. மாணவர்கள் வேலை நிறுத்தத்தை நிறுத்த மறுத்து அரசு உடனடியாக அடியிற்கண்ட ஆணைகளைப்பிறப்பிக்க வேண்டுமெனக் கூறினர்.

(1) தற்பொழுதுள்ள வேளாண்மைத் துறை இயக்குநருக்குப் பதிலாக வேளாண்மைப் பட்டதாரி ஒருவரை நியமிக்க வேண்டும்.

(2) கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களிலுள்ள வேளாண்மைக் கல்லூரிகளைச் சேர்ந்த தலைவர், முதல்வர் பதவிகளில் வேளாண்மை பட்டதாரிகளே நியமிக்கப்படவேண்டும் முழுமையாக அறிவியல் பாடங்களில் பட்டம் பெற்றவர்களை நியமிக்கப்படக் கூடாது.

(3) ஆசிரியர்ப் பிரிவில் தற்போதுள்ள அறிவியல் பட்டதாரிகள் அந்தப் பிரிவிலிருந்து மாற்றப்படவேண்டும்.

(4) இத்துறையில் வேளாண்மைப் பட்டதாரிகள் வகிக்கும் அரசிதழ் பதிவு பெறாத பதவிகள் அரசிதழ் பதிவு பெற்ற பதவிகளாக்கப்படவேண்டும்.

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவரும், வேளாண்மைத் துறை இயக்குநரும் மாணவர்களைச் சந்தித்து மாணவர்களின் நேரடியான நலன் குறித்த கோரிக்கைகள் முழுவதும் அரசினால் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்டதால், தங்களுடைய நேரடியான நலன் குறிக்காத கோரிக்கைகளுக்காக போராடும் வகையில் வேலை நிறுத்தம் செய்வதைக் கைவிடவேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். இவ்வாறு உறுதிமொழி அளிக்கப்பட்டிருந்த போதிலும் மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்வதை நிறுத்த மறுத்தனர். எனவே, விடுதிகளையும், கல்லூரிகளையும் மூடிவிடும்படி அவ்விரண்டு கல்லூரித் தலைவருக்கும், முதல்வருக்கும் அரசு கட்டளையிட்டது, கல்லூரிகளும் விடுதிகளும் இப்போது மூடப்பட்டதென்றும், உண்ணாநோன்பு மேற்கொண்ட மாணவர்கள் உட்பட மாணவர்கள் அனைவரும் கல்லூரி வளவுகளைவிட்டு தங்கள் இல்லங்களுக்கு சென்றுள்ளனர் என்றும், தகவல் கிடைத்துள்ளது. எனவே தற்போது அவ்விடங்களில் அமைதி நிலவிவருகிறது. கவலைக்கு இடமில்லை.

**திரு. எம். பூபதி:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் உடனடியாக மாணவர்களையும் அங்கிருக்கின்ற முதல்வர் அவர்களையும் சந்தித்துப் பேசி மீண்டும் கல்லூரிகளைத் திறப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக எடுப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** கல்லூரிகள் மீண்டும் எப்படியும் ஒரு நாளைக்குத் திறக்கப்படும்.





## 5. கல்வி-சுகாதார அமைச்சரின் விளக்க உரை

## தண்ணீர் தட்டுப்பாட்டை நீக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நடைமுறை விதி 82-ன் கீழ் கல்வி சுகாதார அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகருக்கு வேண்டிய தண்ணீர் புழலேரி, சோழவரம், பூண்டி நீர்த்தேக்கங்களில் இருந்து கிட்டுகிறது. வடகிழக்குப் பருவமழை பொய்த்ததால் இம்மாநகரில் கடுமையான தண்ணீர் தட்டுப்பாடு உள்ளது. ரூ. 37.10 லட்சம் செலவில் தாமரைபாக்கம், பஞ்செட்டி பகுதிகளில் ஊற்றுநீர் வாயில்களில் இருந்த தண்ணீர் எடுக்க வகைசெய்யும் ஓர் அவசரத் திட்டத்துக்கு அரசு 1969 பெப்ரவரியில் ஒப்புதல் வழங்கியது. ஊற்று நீர்ப் பிரிவு அமைந்துள்ள கிணறுகளிலிருந்தும் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வெட்டப்பட்ட கிணறுகளிலிருந்தும் நாள்தோறும் சுமார் 222 லட்சம் காலன் தண்ணீர் கிட்டுகிறது. இத்தண்ணீர் புழலேரிக்குச் செல்லும் வாய்க்கால்களில் விடப்பட்டு அங்கிருந்து இம்மாநகரின் பல்வேறு பகுதிகளுக்கு வழங்கப்படுகிறது. இம்மாநகருக்கு மேலும் தண்ணீர் வழங்கப்படுவதற்காக நகரமெங்கும் சாலை ஓரங்களில் உள்ள பொது நிலங்களிலும், மற்ற மாநகராட்சி நிலங்களிலும் கையினால் இயக்கப்படும் சுமார் 12,000 வடிமுனை குழாய் கிணறுகளை வெட்டுவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்திற்கு சுமார் 25 லட்சம் செலவாகும். இவ்வேலையை நிறைவேற்றும் பணி 5 தலைமைப் பொறியாளர்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இம்மாநகரிலுள்ள 5 மண்டலங்கள் ஒவ்வொன்றிலும் அத்தகைய 2,400 கிணறுகள் வெட்டும் பணி தலைமைப் பொறியாளர் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மதுரை நகருக்கு நீர் வடிப்பு வேலை முறைகளிலிருந்து நீர் கிட்டுகிறது. ஆற்றுப்படுகை ஓத நீர் நிறைந்துள்ள போதும் அல்லது மேல் நீரோட்டம் இருக்கும் போது 60 லட்சம் காலன் நீர் இம்மாநகருக்கு நாள்தோறும் கிட்டுகிறது. மற்ற சந்தர்ப்பங்களில் இதிலிருந்து எடுக்கப்படும் தண்ணீர் அளவு நாளொன்றுக்கு 25 லட்சம் காலனாக குறைந்து விடுகிறது. அத்தகைய காலத்தில் இயல்பாக தண்ணீர் வழங்குவதற்காக ஆற்றுப் படுகை ஓதம் பெறும்பொருட்டு 15 அல்லது 20 நாட்களுக்கு ஒருமுறை வைகை நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் விடப்படுகிறது. பாதகமான பருவநிலை காரணமாக அணையில் உள்ள நீர் ஒருமுறை பாசனத்திற்குக்கூடப் போதாது. எனவே 1969 ஜூனில் இருந்து நாளொன்றுக்குக்கிடைக்கும் தண்ணீரின் அளவு 20 லட்சம் காலனாகக் குறைந்துவிட்டது. எனவே ரூ. 9.40 லட்சம் செலவில் 10 ஆழ்துளைக் கிணறுகள் வெட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வேலை 69 ஜூலையில் தொடங்கியது. மேலும் ஒரு துளைக் கிணறு பயனுக்கு வந்துள்ளது. மேலும் 5 கிணறுகள் வெட்டப்பட்டு விரைவிலேயே பயன் படுத்தப்படும். எஞ்சிய கிணறுகள் வெட்டும்

பணி விரைவில் முடிக்கப்பட்டு 1969 செப்டம்பர் முதல் வாரத்திலேயே பயனுக்கு கொண்டு வரப்படும். மேலும் சுமார் 17 லட்சம் செலவு மதிப்பீட்டில் சேகரிப்பு கிணறுத் திட்டத்தின் மூலம் வைகையாற்றில் அடி மட்டத்திலிருந்து தண்ணீர் எடுக்கவும் கருதியுள்ளது. சேகரிப்புக் கிணறு மூலம் நாளொன்றுக்கு 50 லட்சம் காலன் தண்ணீர் கிட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கோயம்புத்தூர் நகராட்சிக்கு வேண்டிய தண்ணீர் கேரள மாநிலத்திலுள்ள சிறுவாணி ஆற்றிலிருந்து கிடைக்கிறது. கோடை மாதங்களில் வழங்கப்படும் தண்ணீர் அளவு 50 லட்சம் காலனிலிருந்து நாளொன்றுக்கு 25 லட்சம் காலனாகக் குறைக்கப்பட வேண்டியுள்ளது. இந்நகரத்திற்கு மேலும் தண்ணீர் வழங்குவதன் பொருட்டு ஆழ்த்துளைக் கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன. சிறுவாணிமலையில் அண்மையில் பெய்த மழை காரணமாக இந்த நகருக்கு இப்போது போதிய அளவிற்கு தண்ணீர் கிட்டுகிறது.

கோயம்புத்தூர் நகருக்குத் தண்ணீர் வழங்க கேரள அரசின் இசைவுடன் தகுந்ததோர் இடத்தில் சிறுவாணி ஆற்றிற்கு குறுக்கே கல்லணை ஒன்று கட்டி சுமார் 9,500 லட்சம் கன அடி நீர் தேக்கி வைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கான நிறுவனச் செலவு ரூ. 481 லட்சமும் ஆண்டொன்றிற்குப் பேணுதல் செலவு ரூ. 4.41 லட்சமும் ஆகுமென மதிப்பிடப்படுகிறது.

DR. H. V. HANDE : Just a suggestion by way of help. Will there be a squad . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 82-ம் விதியின்படி கொடுக்கப்படுகின்ற அறிக்கையின் பேரில் எந்த விதமான விவாதமும் கூடாது; விளக்கமும் கேட்கக் கூடாது.

DR. H. V. HANDE : Just a suggestion. I can prove that on a statement under Rule 82 such a thing was allowed.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நம்முடைய விதிமுறைகளில் இடம் தரவில்லை. அடுத்து அரசினர் தீர்மானம் . . .

DR. H. V. HANDE : On a point of order, Sir, Previously when a similar statement was made, such a thing was allowed. I am not trying to obstruct the proceedings of the House. A number of pumpsets are there which are not functioning. One small squad of engineers. . . .

## 6. அரசினர் தனித் தீர்மானங்கள்

### (i) 1969-ம் ஆண்டு அரசியல் அமைப்பு (22-வது திருத்த) மசோதாவினால் செய்யக் கருதப்பட்டுள்ள திருத்தங்களை உறுதிப்படுத்தல்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, "பாராளுமன்ற அவைகள் இரண்டிலும் நிறைவேற்றப்பட்டு 1969-ம் ஆண்டு அரசியல் அமைப்பு (22-வது திருத்த) மசோதாவினால் செய்யக் கருதப்பட்டுள்ளவையும், இந்திய அரசியல் அமைப்பின் 368-வது பிரிவின் வரம்பு நிபந்தனையின் நோக்கத்தின் கீழ் வருபவையுமான திருத்தங்களை இப்பேரவை இசைவுடன் உறுதிப்படுத்துகிறது" என்ற இந்தத் தீர்மானத்தை இம் மாமன்றம் முழுமனதுடன் நிறைவேற்றித்தரவேண்டுகிறேன்.



தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

### (ii) மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் சொத்து இருப்புகளை வெளியிடுதல்

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களின் சொத்திருப்பு வெளியிடுதல் சம்பந்தப்பட்ட தீர்மானத்தின் நகல், சபையின் எல்லா உறுப்பினர்களுக்கும் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது. எல்லா உறுப்பினர்களும் இந்தத் தீர்மானத்தை ஆழ்ந்து படித்திருப்பார்கள் என்று கருதுகிறேன். இந்தத் தீர்மானத்தை யாதொரு மாற்றமுமின்றி நிறைவேற்றித் தரவேண்டுமென்று இப்பேரவையைக் கேட்டுக் கொள்கிறேன்.

"இந்தியக் குடிமக்கள் மக்களாட்சியோடியைந்த சமுதாயப் பொதுமையறம் காணும் மாபெரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாலும்;

அரசியல், ஒழுக்கம் இவற்றின் உயர்ந்த கோட்பாடுகளின் அடிப்படையில் மக்களாட்சி முறையை நம் நாட்டில் பேணிப் பாவிக்க வேண்டியிருப்பதாலும்;

சட்டமன்ற உறுப்பினர்களாக அல்லது அமைச்சர்களாகப் பதவி வகிக்கும் மக்கள் பிரதிநிதிகள், பொதுநலத்திற்காகவேயன்றி, நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ தாங்கள் நலம் பெறுவதற்கென அப் பதவிகளை வகிக்கவில்லை என்று மக்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்பதாலும்;

சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் ஆகியோரின் அப்பழுக்கற்ற நேர்மை குறித்துப் பொதுமக்களின் மனத்தில் எள்ளளவு ஐயப்பாடும் எழாமல் இருப்பது பொதுநலனுக்கு இன்றியமையாதது என்பதாலும்;

மேற்குறித்த நோக்கம் கைகூடும் பொருட்டு, அமைச்சர்கள், சட்டமன்ற ஈரவைத் தலைவர்கள், உறுப்பினர்கள், ஆகியோர் தங்கள் சொத்திருப்புக்களைக் குறிப்பிட்ட காலமுறைகளில் உரிய அவை முன் தெரிவித்தல் வேண்டுமென இப் பேரவை கருதுவதாலும்;

ஈண்டு, இப்பேரவை, கீழ்வரும் விதிமுறைகளை, சட்டமன்ற ஈரவைத் தலைவர்கள், உறுப்பினர்கள், அமைச்சர்கள் அனைவரும் [illegible] வேண்டுமெனத் தீர்மானிக்கிறது."

[திரு. மு. கருணாநிதி] [1969 ஆகஸ்ட் 27

1. மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் சொத்திருப்புக்களை குறித்த காலத்திற்கொருமுறை வெளியிடுதல்.—

அமைச்சர்கள், சட்டமன்ற ஈரவைத் தலைவர்கள் உட்பட உறுப்பினர்கள் ஒவ்வொருவரும்,

(அ) இத் தீர்மான நாளன்று பதவியில் இருப்பின், அந்நாளின் பின் கூடிய விரைவில், அல்லது

(இ) தீர்மான நாளுக்குப்பின் தேர்ந்தெடுக்கப்பட்டவர், அல்லது நியமனம் செய்யப்பட்டவர், அவ்வாறான பிறகு கூடிய விரைவில்,

(உ) அதன் பின்னரும், மார்ச்சு 31-ம் நாளுடன் முடிவடையும் 12 மாதக்கால முறைதோறும்,

தான் உறுப்பினராயுள்ள அவைக்கு இத்துடன் இணைந்துள்ள படிவத்தில் முறையறிக்கை ஒன்று அனுப்பவேண்டும்.

தனக்குச் சொந்தமான அல்லது ஈட்டிய அல்லது இறங்குரிமையாகக் ( inherited ) கிடைத்த அல்லது தனது பெயரிலோ, தனது குடும்பத்தில் ஓர் உறுப்பினர் பெயரிலோ, குத்தகையின் மேல் அல்லது அடைமானத்தின் மேல் வரப்பெற்ற, சொத்துக்கள் அனைத்தும், அந்த முறையறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். மேலும், அந்தச் சொத்துக்கள் எந்த வழியில், எதன் மூலமாக ஈட்டப்பட்டன அல்லது இறங்குரிமையாகக் கிடைத்தன என்ற விவரங்களும் அந்த முறையறிக்கையில் இடம் பெற வேண்டும்.

2. முறையறிக்கைகள் சட்டமன்றத்தின்முன் வைக்கப்பட வேண்டுமென்பதும் அவை பொது ஆவணங்களாகும் (documents) என்பதும்.—

1-வது பத்தியின்கீழ் அனுப்பப்படும் ஒவ்வொரு முறையறிக்கையும்:—

(1) அது அனுப்பப்பட்ட பிறகு கூடிய விரைவில் சட்டமன்றத்தின் ஈரவைகள் முன்பும் வைக்கப்பட வேண்டும்.

(2) அது பொது ஆவணமாகக் கொள்ளப்பட வேண்டும். அந்த முறையறிக்கை எந்த ஆணையுரிமையருக்கு ( Authority ) அனுப்பப்படுகிறதோ அவர், இது குறித்துத் தாம் விதிக்கும் கட்டு வரம்களுக்குட்பட்டு (கட்டணங்கள் செலுத்துவது உட்பட) கோரிக்கைமீது அந்த முறையறிக்கையின் படியினை வழங்கலாம்.

3. தீர்மானம் முன்மேவி (retrospective) செயல்படல்.—

இந்தத் தீர்மானம் சட்டமன்றத்தில் ஈரவைகளிலும் நிறைவேற்றப்பட்டு, 1967 மார்ச்சு 6-ம் நாளன்றே செயல்முறைக்கு வந்ததாகக் கொள்ளப்படும்.

ஆனால், 1967 ஏப்ரல் 30-ம் நாளன்றும், 1968 ஏப்ரல் 30-ம் நாளன்றும் அனுப்பப்பட்டிருக்க வேண்டிய முறையறிக்கைகள்



1969 ஆகஸ்ட் 27] [திரு. மு. கருணாநிதி]

1969 ஏப்ரல் 30-ம் நாளன்று அனுப்பப்படவேண்டியதாய் இருக்கிற முறையறிக்கைகளுடன் சேர்த்து 1969 செப்டம்பர் 30-ம் நாளன்றோ அல்லது அதற்கு முன்போ அனுப்பப்பட வேண்டும்.

4. இத்தீர்மானத்திற் காணப்பட்டபடி வகை செய்யும் சட்டம் ஒன்றை இயற்றுமாறு மத்திய அரசை இந்த அவை கேட்டுக் கொள்கிறது.

படிவம்

(1-வது பத்தியைப் பார்க்கவும்)

. . . . . ம் ஆண்டு மார்ச் 31-ம் நாளன்றுள்ளபடி சட்டமன்றப் பேரவை/சட்டமன்ற மேலவை உறுப்பினரது அல்லது அமைச்சர்/ சட்டமன்றப் பேரவைத் தலைவரது/சட்டமன்ற மேலவைத் தலைவரது சொத்திருப்புக்கள் பற்றிய விவரக் கணக்கு.

உறுப்பினர் அல்லது அமைச்சர்/<br>சட்டமன்றப் பேரவைத் தலைவர்/<br>சட்டமன்ற மேலவைத் தலைவர் பெயர்<br>தேர்ந்தெடுக்கப்பட்ட நாள் அல்லது<br>நியமனம் செய்யப்பட்ட நாள்

உறுப்பினரின் சொத்திருப்புக்கள்

(1) நிலையியல் சொத்து.

(2) வணிகச் சொத்தினங்கள்—

(அ) பங்குகள்

(ஆ) பங்கிருப்பு

(இ) முன்னணிப் பங்குச் சான்றிதழ்கள்

(ஈ) கூட்டு வணிகச் சொத்து

(உ) ஈட்டுறுதி ஆவணங்கள்

(3) பிற சொத்தினங்கள்—

வங்கி இருப்புக்கள்

(4) அணிகலன்கள், தங்கம், விலைமதிப்புள்ள கற்கள்.

(இவற்றின் கூட்டு மதிப்பு ரூபாய் 10,000-க்கு மேற்பட்டால் மட்டும்)

(5) இயங்கு சொத்துக்கள் (மோட்டார் வண்டிகள் உட்பட)

(இவற்றின் மதிப்பு ரூபாய் 10,000-க்கு மேற்பட்டால் மட்டும்)

(6) உறுப்பினருக்குத் தொடர்புள்ள பொறுப்புரிமை அமைப்புகளின் விவரங்கள்

(7) உறுப்பினர் குறிப்புகள் ஏதேனுமிருப்பின், அவை

[திரு. மு. கருணாநிதி] [1969 ஆகஸ்ட் 27]

### குடும்ப உறுப்பினரின் சொத்திருப்புக்கள்

(1) நிலையியல் சொத்து.

(2) வணிகச் சொத்தினங்கள்.

(அ) பங்குகள்

(ஆ) பங்கிருப்பு

(இ) முன்னணிப் பங்குச் சான்றிதழ்கள்

(ஈ) கூட்டு வணிகச் சொத்து

(உ) ஈட்டுறுதி ஆவணங்கள்

(3) பிற சொத்தினங்கள்—

வங்கி இருப்புக்கள்

(4) அணிகலன்கள், தங்கம், விலைமதிப்புள்ள கற்கள்

(இவற்றின் கூட்டு மதிப்பு ரூபாய் 10,000-க்கு மேற்பட்டால் மட்டும்)

(5) இயங்கு சொத்துக்கள் (மோட்டார் வண்டிகள் உட்பட)

(இவற்றின் கூட்டு மதிப்பு ரூபாய் 10,000-க்கு மேற்பட்டால் மட்டும்)

(6) குடும்ப உறுப்பினருக்குத் தொடர்புள்ள பொறுப்புரிமை அமைப்புகளின் விவரங்கள்.

(7) உறுப்பினர் குறிப்புகள் ஏதேனுமிருப்பின், அவை.

(1) "குடும்ப உறுப்பினர்" என்பது, சட்டமன்ற உறுப்பினரின் அல்லது அவரது மனைவியின் அல்லது கணவரின் இரத்த தொடர்பான அல்லது திருமண வகையிலான உறவினர், என்றும் சட்டமன்ற உறுப்பினரையேச் சார்ந்து வாழ்பவர் என்றும் பொருள்படும்.

(2) "நிலையியல் சொத்து" என்பதில், நிலம், கட்டிடங்கள் ஆகியவை அடங்கும்.

(3) "குறிப்புகள்" என்னும் பத்தியில் உறுப்பினர் ஒருவர், சொத்துக்களை அடைந்த விதத்தை விவரிக்கும் சுருக்கமான குறிப்பு ஒன்றைக் கொடுக்கலாம்.

(4) உறுப்பினர் விரும்பினால், குறிப்புகள் என்னும் பத்தியில், தமக்கும், தம்முடைய குடும்ப உறுப்பினர்களுக்கும் ஏற்பட்ட கடன் பொறுப்புகளையும் விவரிக்கலாம்.

### முறையறிக்கையை அனுப்புவதற்கான நடைமுறை

(1) உறுப்பினர் ஒவ்வொருவரும் மார்ச் 31-ம் நாளுடன் முடிவடையும் கால அளவு குறித்த விவரங்களை அமைத்து இப்படிவத்தில் முறையறிக்கையை அனுப்ப வேண்டும்.



1969 ஆகஸ்ட் 27] [திரு. மு. கருணாநிதி]

(2) உறுப்பினர், இப்படிவத்தில் கேட்டுள்ள விவரங்களையெல்லாம் அமைத்தெழுதிய பின்னர் இப்படிவத்தை ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 30-ம் நாளன்றோ அதற்கு முன்போ தாம் தொடர்பு கொண்ட மன்றத்தின் செயலாளருக்கு அனுப்ப வேண்டும்.

(3) சட்டமன்றப் பேரவைச் செயலாளர் அல்லது சட்டமன்ற மேலவைச் செயலாளர், மேற்சொன்ன முறையறிக்கை வரப் பெற்றதும் அதனை அந்தந்த மன்றத்தின்முன் வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

### உறுதிமொழி

மேலே உள்ள முறையறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள விவரம் நானறிந்தவரை உண்மையானதென்றும், முழுமையானதென்றும் நான் உறுதி கூறுகிறேன்.

இடம் :

கையொப்பம்.

தேதி:

இது பற்றிய விவரங்கள் தீர்மானத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்மானத்தைப்பற்றி அனைத்துக் கட்சித் தலைவர்களுடனும் இரண்டுமுறை கலந்து பேசப்பட்டது. முதலில் அவர்கள் தங்கள் கட்சியைக் கலந்து முடிவினை அறிவிப்பதாகக் கூறினார்கள். பின்னர் 21-ம் தேதி அனைத்துக் கட்சித் தலைவர்களும் தங்களுடைய கட்சியின் கருத்தை எடுத்துச் சொல்லி ஏகோபித்த கருத்தைத் தெரிவித்ததன் பேரில் நான் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறேன். இதை அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

THIRU T. MARTIN : Mr. Speaker, Sir, in the definition clause, a member of the family means any person related whether by blood or marriage to a member of the legislature or to his wife or her husband or wholly dependent on the member of the legislature. என்று போட்டிருக்கிறது. wholly dependent on the member of the Legislature என்பதை நாம் எடுத்து விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், அமைச்சர்களாக இருந்தாலும் சரி அல்லது உறுப்பினர்களாக இருந்தாலும் சரி அவர்கள் தங்கள் தங்கள் பிள்ளைகளுடைய சொத்துக்களையும், அவர்கள் wholly dependent. ஆக இல்லாவிட்டாலும் அவர்கள் தனியாகத் தொழில்கள் நடத்திக்கொண்டிருந்தாலும், அவர்களின் கணக்கு வழக்குகளும், சொத்து விவரங்களும் இந்த அவைக்கு நிச்சயமாக வரவேண்டும். அப்போதுதான் இவ்விதமாக ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருவதில் அர்த்தம் இருக்கும் என்று நான் கருதுகிறேன். இன்று நாம் பார்க்கிறோம். பினாமி டிரான்ஸ்ஸாக்‌ஷன்ஸ் நிறைய நடப்பதை. ஒருவர் தனது சொத்தை மற்றொருவர் பேரில், தூரத்து உறவினர்கள்மீது எழுதி வைத்துக் கொள்ளலாம். அதேமாதிரி அமைச்சர்களும் செய்துகொள்ளலாம்.

[Thiru T. Martin] [1969 ஆகஸ்ட் 27

ஆகவே அம்மாதிரிப்பட்டதொரு நிலை இல்லாமல் தங்கள் குழந்தைகள் யாராகயிருந்தாலும் சரி, அவர்கள் அமைச்சர்களை நம்பி வாழக்கூடியவர்களாக இருந்தாலும் சரி அல்லது உறுப்பினர்களை நம்பி வாழக்கூடியவர்களாக இருந்தாலும் சரி அல்லது பிரிந்து தனியாகத் தொழில்கள் நடத்துபவர்களாக இருந்தாலும் சரி, அவற்றையெல்லாம் இப்போது முதல் கிளாஸில் whether by blood or by marriage என்று சொல்லியிருப்பது போல், தனக்குப் பிறந்த குழந்தைகள் தன் குடும்பத்தை விட்டுப் பிரிந்து போய் தொழில் நடத்தினாலும், தன்னை நம்பி வாழாவிட்டாலும் அவர்களின் சொத்துக் கணக்குகளை இந்த அவைக்குக் கொடுக்க வேண்டும். இத் திருத்தத்தை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். இது நியாயமானதொரு திருத்தமாகும் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அன்றையதினம் அனைத்துக் கட்சித் தலைவர்களிடத்திலும் கருத்துக்கள் பரிமாறப்பட்டு அதற்குப் பிறகு எடுக்க முடிவைத்தான் இங்கு தீர்மானமாகக் கொண்டு வந்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல், பிள்ளைகள் அல்லது மகன்கள் இருப்பார்களேயானால், அதைப் பற்றி அவர்கள் அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு தவறான முறையில் சொத்துக்களை சேர்த்திருப்பார்களேயானால், எந்த நேரத்திலும் அதைச் சுட்டிக்காட்ட உரிமையுள்ளவர்களாக இருக்கிறோம். அதைப்பற்றி எடுத்துப் பேச உரிமையுடையவர்களாக இருக்கிறோம். ஆகவே, இது தேவையில்லை என்று அந்தக் கூட்டத்தில் விடப்பட்டு அந்த முறையில் தான் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகவே இது தேவை இல்லை.

**திரு. என். சங்கரய்யா :** தலைவர் அவர்களே, எங்கள் கட்சித் தலைவர் அவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு நடந்தது பற்றிச் சொன்னார்கள். எங்கள் கட்சியில் விவாதிக்கப்பட்டு, இரண்டு மூன்று யோசனைகளைச் சொல்ல வாய்ப்பில்லாமல் போய் விட்டது. ஆகவே அதைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அணிகலன்கள், தங்கம், விலைமதிப்புள்ள கற்கள் (இவற்றின் கூட்டு மதிப்பு ரூபாய் 10,000-க்கு மேற்பட்டால் மட்டும்) என்றிருக்கிறது. இந்த 10,000 ரூபாய் என்பது, 'ரூ. 5,000-க்கு மேற்பட்டிருந்தால்' என்று இருக்கலாம் என்று கருதுகிறேன். அது அதிகமான தொகையாகத் தெரிகிறது.

அடுத்து, குடும்ப உறுப்பினருக்குத் தொடர்புள்ள பொறுப்புரிமை அமைப்புகளின் விவரங்கள் என்று இருக்கிறது. பலர் கட்சிகளில் பொருளாளர்களாக அல்லது தொழிற் சங்க ஸ்தாபனத்தோடு சம்பந்தப்பட்டிருப்பார்கள். அந்தக் கட்சிகளின் சொத்துக்கள் அல்லது பொருள்களை இவர்கள் வைத்திருப்பார்கள். ஆகவே அவற்றை இதில் எவ்வாறு கொண்டு வருவது அல்லது கொண்டு வராமல் இருப்பது ? இது பற்றியும் விளக்கவேண்டும்.



1969 ஆகஸ்ட் 27]

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, ரூ. 10,000 என்பது இப்போதுள்ள பவுன் விலைக்கு அப்படியொன்றும் அதிகமாகத் தெரியவில்லை. ரூ. 5,000 என்று போடவேண்டிய அவசியமில்லை. மன்ற உறுப்பினர்கள் அனைவரையும் மாண்புமிகு உறுப்பினர் என்றுதான் அழைத்துக் கொண்டிருக்கிறோம். அப்படித் தான் கருதி வருகிறோம். ஆகவே அவர்களைப் பற்றி அதிகமான சந்தேகங்களை எழுப்பிக்கொண்டு போனால் நல்லது அல்ல.

கட்சிகள் பற்றிச் சொன்னார்கள். கட்சிப் பொறுப்பில் இருப்பதற்கும் இதற்கும் தொடர்புபடுத்துவது நல்லதல்ல. ஆகவே அதையும் ஏற்றுக்கொள்வதற்கில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை என் கட்சி சார்பிலும், என் கட்சித் தலைவன் என்ற சார்பிலும் பரிபூர்ணமாக ஏற்றுக்கொள்கிறோம். மேலும் திருத்தங்கள் ஏதாவது செய்யவேண்டுமென்றால் பின்னால் செய்து கொள்ளலாம். ரூ. 10,000 அல்லது ரூ. 2,000 என்றிருந்தாலும் அதைச் சொல்லலாம், அதைப் பெருமையோடு ஏற்றுக்கொள்ளலாம். வெளியில் பார்த்தால் பிரமாதமாகச் சொல்கிறார்கள், என்னைப் பற்றிக்கூட எவ்வளவோ சொல்கிறார்கள். கருத்திருமனுக்கு ஆயிரம் ஏக்கரா இருக்கிறது. அவர் ஒரு ஜமீந்தார் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எங்கள் தகுதி இதில் தெரிந்துவிடும். தவறு என்று தெரிந்தால் அதை எடுத்துச் சொல்ல உரிமை இருக்கிறது. இந்தத் தீர்மானம் வருவதில் எனக்கு சந்தோஷந்தான். இதைக் கொண்டு வருவது மட்டும் போதாது. தவறு செய்பவர்களை, ஏமாற்றுகிறவர்களை, வரியை ஏமாற்றித் தப்புக் கணக்கு கொடுப்பவர்களைச் சர்க்கார் சரியாக கவனித்துக் கொள்ளவேண்டும். இது பீனல் கோட் அல்ல. கோடீஸ்வரர், லட்சாதிபதி என்று ஊரெல்லாம் பேசிக்கொள்கிறார்கள் அல்லவா. சட்டப்படி மட்டும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களுக்கு ஆயிரம் ஏக்கர் இருக்கிறது என்று சொல்கிறார்கள் என்று சொன்னீர்கள் அல்லவா? அதற்காக சந்தேகப்படலாமா?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதற்குப் பட்டா இருக்கவேண்டுமல்லவா ? மகன், மருமகன்களை டைரக்டர்களாகப் போட்டு ட்ரஸ்ட் என்று எழுதி வைக்கலாம் அல்லவா ? ட்ரஸ்ட் பணம் எப்படி வந்தது ? ட்ரஸ்ட்தான் முக்கியமான சமாச்சாரம். ஊரெல்லாம் ட்ரஸ்ட்ஸ் வைத்து, எனக்கு ஒன்றுமேயில்லை, நான் சாதாரணமானவன், என்று சொல்லிக்கொண்டு எப்படி ப்யூக் காரில் போக முடியும்? இவற்றையெல்லாம் முதல் அமைச்சர் அவர்கள் கவனிப்பார்கள் என்று நம்பி இதைப் பரிபூர்ணமாக ஏற்றுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லாக் கட்சித் தலைவர்களும் பேச

வில்லை என்று சொன்னாலும் இதைப்பற்றி இரண்டு நாட்கள் தாங்கள் பல கருத்துக்களை எல்லாம் பரிமாறிக்கொண்டு நீண்ட நேரம் விவாதித்து ஒரு முடிவிற்கு வந்த காரணத்தினால்தான் அனைவரும் பேசுகிற வாய்ப்பை இங்கு ஏற்படுத்திக் கொள்ளவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், யாரும் இதில் விடுபடமாட்டார்கள், அந்தக் கவலை தேவையில்லை. ட்ரஸ்ட் என்று குறிப்பிட்டார்கள். இதெல்லாம் அமைச்சர்களாக வந்த பிறகு, அல்லது உறுப்பினராக வந்த பிறகு எவை எவை நடந்திருக்கின்றன என்பதை அறியத்தான் இந்தத் தீர்மானம் பயன்படும். அதற்கு முன் அவர்கள் அந்தஸ்து என்னவாக இருந்தது என்பதை மறந்து விடக்கூடாது. அதற்கு முன் அவர்களுக்கு இருந்த அந்தஸ்து என்ன, அப்போது அப்படி ட்ரஸ்ட் இருந்ததா என்பதை உலகம் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறது. அனைவரும் நேர்மையான முறையில் கணக்குகளைக் காட்டுகிறோம் என்று உறுதியை அளிக்கிறோம் என்று கையொப்பம் இடுகிறோம். அதற்கு ஊனம் ஏற்படாமல் அனைவரும் நடந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கையில் இத்தீர்மானத்தை அவை முன்னால் வைக்கிறேன்.

*தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக, நிறைவேற்றப்பட்டது.*

THIRU K. VINAYAKAM : On a point of information. We began our sitting at 3 p.m. Now it is 6-15 and I do not know for how long we are going to sit. It may be 10 or 12 O'clock. It is just tea time. Either you adjourn the House for half an hour or instruct the Food Minister to give us coffee and snacks. Then make arrangements for our dinner also.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவையை இப்போது ஒத்திவைத்து . . .

திரு. பி. ஜி. கருத்திருமன் : சர்க்கார் ஏற்பாடு செய்தால் அங்கு போய் சாப்பிட்டு விட்டு வருவார்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : திரு. விநாயகம் அவர்கள் கோரிக்கைப்படி அந்தப் பகுதியில் இருக்கிறவர்களுக்கு நாங்களும், இந்தப் பகுதியில் இருக்கிறவர்களுக்கு அவர்களும் . . . (பலத்த சிரிப்பு)

திரு. கே. விநாயகம் : அதற்கு நான் ஒத்துக்கொள்கிறேன் இந்தப் பகுதியில் இருப்பவர்களுக்கு அவர்கள் தரவேண்டும் அந்தப் பகுதியில் இருப்பவர்களுக்கு நாங்கள் தருகிறோம் சரியாகப் போய்விடும் கணக்கு.

### 7. அரசினர் தீர்மானங்கள்.

#### (i) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIAN : Sir, u rule 21(3) of the Tamil Nadu Assembly Rules, I move—



That item "III" viz., Goverment Motion and item (1) under "IV Government Bills-The Tamil Nadu Agricultural Labourer Fair Wages Bill, 1969 (L.A. Bill No. 20 of 1969)" be taken up for consideration after item (9) i.e., The Tamil Nadu Practitioners of Homoeopathy Bill, 1969 (L.A. Bill No. 11 of 1969) under "IV. Government Bills"

*தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.*

திரு. கரு. சீமைச்சாமி : பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். கணபதியா பிள்ளை ரிப்போர்ட் பேரிலே பேசிய பின்னால் இந்தக் கூலி நிர்ணயச் சட்டத்தை எடுத்துக் கொண்டால் நன்றாக யிருக்கும். அதை நிறைவேற்றிவிட்டு, கணபதியா பிள்ளை ரிப்போர்ட்டை எடுத்துக் கொள்வது சாத்தியமாக இருக்காது. எனவே, கணபதியா பிள்ளை ரிப்போர்ட்டில் பேசிய பிறகு இதை எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டும் பின்னாலே தள்ளி வைக்கப்படுகின்றன.

### 8. அரசினர் மசோதாக்கள்.

#### (i)* தமிழ்நாடு 1969-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண். 21/69).

* மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"தமிழ்நாடு 1969-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) மசோதா * (சட்டப்பேரவை மசோதா எண். 21/69) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

இதனை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளும்பொழுது கீழ்க் கண்ட என்னுடைய கருத்துக்களையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின்படி தமிழ்நாடுச் சட்டம் 1/1959) (பர்ஷேன், கால்காஸ் இன்ன பிறவற்றைப் போன்ற) எரிவாயு 31-3-1969 தேதி வரையில் மூன்று சதவீத பல்முனை விற்பனை வரிக்குட்பட்டது. பொதுவாக எரிவாயு விற்பனை இரண்டு நிலைகளில் நடைபெறுகின்றன. அதாவது, விற்பனை உற்பத்தியாளரிடமிருந்து பங்கிட்டாளருக்கும் பங்கீட்டாளரிடமிருந்து பயன் கொள்வோருக்கும் ஆகிய இரு நிலைகளில் நடைபெறுகிறது. எனவே, 1969 ஏப்ரல் 1-ம் நாள் முதற்கொண்டு பர்ஷேன், கால்காஸ் போன்ற எரிவாயு மீது விதிக்கப்படும் வரி வீதத்தை அதன் முதல் விற்பனை முனையில் ஏழு சதவீத ஒருமுனை வரியாக உயர்த்துவதென்று அரசு முடிவு செய்தது. இதற்காக மேற்படி சட்டத்தின் முதலாவது அட்டவணையில் 67-வது இனத்தைப் புதிதாகச் சேர்த்து மேற்படி சட்டத்தின் 59 (1) பிரிவின்கீழ் அறிவிப்பு ஒன்றை வெளியிடுவதன் மூலமாக இந்த முடிவு செயல் படுத்தப்பட்டுள்ளது.

*21—8—1969-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. ப. உ. சண்முகம்]  [1969 ஆகஸ்ட் 27

முன்பு வெளியிடப்பட்ட அறிவிப்புக்குப் பதிலாக, மசோதா ஒன்று மேற்படி சட்டத்தின் 59-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின்படி, இப்பொழுது நடைபெறும் சட்டமன்றக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்பட வேண்டும். அவ்வண்ணமே மன்றப் பேரவைமுன் வைக்கப்பட்டுள்ள இம் மசோதாவில் இது குறித்த அவசியமான விதித்துறைகள் அடங்கியுள்ளன. இம்மசோதாவை ஏற்று நிறைவேற்றித் தருமாறு உங்களை, இம்மாமன்றத்தை, நான் கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு பிரிவு வாரியாக மசோதா ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, குறுந்தலைப்பு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, "தமிழ் நாடு 1969-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 21/69) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்." என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**(ii)** *தமிழ்நாடு 1969-ம் ஆண்டு மின்சாரம் வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) திருத்த மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 22/69)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு மின்சாரம் வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) திருத்த மசோதா (சட்டப்பேரவை மசோதா எண். 22/69)-வை மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களுக்குப் பதிலாக, மாண்புமிகு அறநிலை அமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்கள்.

*** மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"1969-ம் ஆண்டு தமிழ்நாடு மின்சாரம் வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) திருத்த மசோதா * (சட்டப் பேரவை மசோதா எண். 22/69) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தற்போது செயலில் உள்ள தமிழ்நாடு 1954-ம் ஆண்டு மின்சக்தி வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 29/1954) மின்சார நிறுவனங்களை அரசு மேற்கொள்ள வேண்டிய தேதிக்கு முன்பு, அரசினால் வழங்கப்பட்ட மின்சக்திக்காக, உரிமைதாரர் அரசுக்குச் செலுத்த வேண்டிய தொகை ஏதேனும் இருப்பின், அத் தொகையை அரசினால் மேற்கொள்ளப்

*22—8—1969-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



969 ஆகஸ்ட் 27]  [திரு. கே. வி. சுப்பையா]

ட்ட மின்சார நிறுவனங்களின் உரிமைதாரர்களுக்குக் கொடுக்கப்படும் இழப்பீட்டுத் தொகையில் கழித்துக்கொண்டு கொடுப்பதற்கு வகை செய்கிறது. ஏனெனில் மேற்படிச் சட்டம் இயற்றப்பட்ட பொழுது, மின்சக்தியை உற்பத்தி செய்து மின்சார உரிமதாரர்களுக்கு வழங்கும் பொறுப்பு அரசிடமே இருந்தது.

1957 ஜூலை 1-ம் தேதி முதல் இம் மாநிலத்தில் தமிழ்நாடு மின் வாரியம் அமைக்கப்பட்ட பிறகு மின் வாரியமே உரிமதாரர்களுக்கு மின்சக்தியை வழங்குகின்றது.

இம் மாநிலத்தில் உணவு உற்பத்தியை அதிகரிப்பதன் பொருட்டு, தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள மூன்று தனியார் மின்சார நிறுவனங்களையும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செங்கோட்டை மின்சாரம் வழங்கு நிறுவனத்தையும் கையகப்படுத்துவதற்கு அரசு திட்டமிட்டது. இதற்கிணங்க, நான்கு மின்சார நிறுவனங்களைச் சட்டப்படி மேற்கொள்வதற்கான அறிவிப்புகள் பிறப்பிக்கப்பட்டன. தென் சென்னை மின்சார வழங்கு கழகத்தின் மாயவரம்-மன்னார்குடி-திருவாரூர் மின்சாரம் நிறுவனம் 15—5—1968 அன்று அரசினால் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிறுவனத்திற்கான இறுதி இழப்பீடு 11—9—1969 அன்றோ அல்லது அதற்கு முன்போ கொடுக்கப்படும். ஏனைய மூன்று மின்சார நிறுவனங்களும் தமிழ் நாடு உயர்நீதி மன்றத்தில் ரிட் மனுக்கள் தாக்கல் செய்துள்ளபடியால் கையகப்படுத்துவதற்காக அறிவிக்கப்பட்ட தேதிகளில் அந்த மூன்று மின்சார நிறுவனங்களையும் மேற்கொள்ள இயலவில்லை.

எனவே, மின்சார நிறுவனங்களை மேற்கொள்ளுவதற்கு முன்பு வாரியத்தினால் வழங்கப்பட்ட மின் சக்திக்காக அல்லது அது போன்ற பிறவற்றிற்காக உரிமதாரர்கள் மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகை ஏதேனும் இருப்பின், அத் தொகையை உரிமதாரர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகையில் கழித்துக் கொண்டு கொடுப்பதற்கு அரசுக்கு வகை செய்யும் பொருட்டு, தமிழ்நாடு 1954-ம் ஆண்டு மின்சக்தி வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) சட்டத்தின் 10-வது பிரிவில் உள்ள தொடர்பான பகுதிகளைத் திருத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இம் மசோதாவை ஏற்று நிறைவேற்றித்தர வேண்டுமென இப்பேரவையை நான் கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, பிரிவு வாரியாக மசோதா ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பிரிவு 3, குறுந்தலைப்பு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா:** தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1969-ம் ஆண்டு மின்சாரம் வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 22/1969) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்." என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(iii) ***1969-ம் ஆண்டு நில உடமைகள் (நிறைவேற்றுதல் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) (தமிழ்நாடு திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 16/1969).***

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, I beg to move—

'That the Holdings (Stay of Execution Proceedings) (Tamil Nadu Amendment) Bill, 1969 * (L.A. Bill No. 16 of 1969) be taken into consideration '.

The Holdings (Stay of Execution Proceedings) Act, 1950 (Travancore-Cochin Act VIII of 1950) was in force in the Kanyakumari district and Shencottah taluk at the time of their transfer to this State from the former Travancore-Cochin State in 1956. Consequent on extension to the Schencottah taluk of the Cultivating Tenants Protection and Fair Rtnt Acts by virtue of Madras Act 28 of 1959 with effect from 2nd March 1960, the Holdings (Stay of Execution Proceedings) Act ceased to be in force in that taluk. It is now in force only in the Kanyakumari district.

The Act provides for the stay of proceedings in execution of a decree in a suit for the recovery of possession of a holding, so far as they relate to the delivery of possession of the holding.

The Act is due to expire on the 24th September 1969. The Government had already undertaken necessary legislation for the abolition of certain special tenures prevalent in the Kanyakumari district and for the introduction of ryotwari settlement therein on the lines of the ryotwari settlement prevalent in the rest of the State. The implementation of the connected Acts is not yet complete. The question of abolition of the special tenure relating to Sreepadam lands

(திரு. கரு. சீமைச்சாமி தலைமை)

is also under consideration. In the circumstances, it is considered necessary to extend the life of the Travancore-Cochin Act VIII of 1950, by two years from the 25th September 1969. The Bill seeks to achieve the above object.

I request the House, Sir, to accept the motion.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, பிரிவு வாரியாக மசோதா ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

* Published in the *Fort St. George Gazette* Extraordinary dated 20th August 1969.



பிரிவு 2, குறுந்தலைப்பு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I move—

'That the Holdings (Stay of Execution Proceedings) (Tamil Nadu Amendment) Bill, 1969 (L.A. Bill No. 16 of 1969) be passed.'

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப் பட்டது.

(iv) ***தமிழ் நாடு 1969-ம் ஆண்டு அகதிகள் (நீதி மன்ற நடவடிக்கைகள் தடுப்பு) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 15/1969).***

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே,

"தமிழ் நாடு 1969-ம் ஆண்டு அகதிகள் (நீதிமன்ற நடவடிக்கைகள் தடுப்பு) மசோதாவை* (சட்டப் பேரவை மசோதா எண் 15/1969) இம்மாமன்றம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்." என்று இம் மாமன்றத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

பர்மா புரட்சி அரசு மேற்கொண்டுள்ள நாட்டுடைமைக் கொள்கையினுல் பர்மா வாழ் இந்தியர் பலர் அந்நாட்டை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயமான நிலைமை உருவாகியது. இவர்கள் 1964 ஜூலைத் திங்கள் முதற்கொண்டு இந்தியாவிற்குத் திரும்பத் தொடங்கினர். தங்கள் சொத்துக்கள் அனைத்தையும் பர்மாவிலேயே விட்டுவிட்டு, இந்த அகதிகள் இந்தியாவிற்குக் கையில் சல்லிக் காசின்றி திரும்பினர். இம் மாநிலத்திற்கு வந்து சேர்ந்துள்ள இத்தகைய அகதிகளுக்கு வணிகக் கடன்கள் வழங்குதல், நிலக்குடியேற்றத் திட்டத்தின்கீழ் அவர்களைக் குடியேற்றுதல் போன்ற நடவடிக்கைகளினுல் மறுவாழ்வு மலர அவர்களுக்கு வசதி செய்து கொடுக்கப்பட்டது. இந்த பர்மா இந்தியர்களில் சிலர், பர்மாவில் வாழ்ந்தபோது அவர்களுக்குக் கடன் கொடுத்தவர்களும் இந்தியாவிற்கு வந்து அவர்கள்மீது வழக்குகள் தொடுத்து தங்களுக்குச் சாதகமாக நீதிமன்றக் கட்டளைகள் பெற்று, அந்த நீதிமன்றக் கட்டளைகளை நிறைவேற்றுவதன்மூலம், தாம் முன்பு கொடுத்த கடன் தொகைகளை வசூலிக்க முயன்று வருகின்றனர் என்று, பர்மா அகதிகள் சிலரிடமிருந்து அரசுக்கு முறையீடுகள் வந்தன. இத்தகைய சட்ட நடவடிக்கைகளிலிருந்து தங்களைக் காப்பாற்றுமாறு இந்த அகதிகள் அரசிடம் முறையிட்டனர். கடன் கொடுத்த இவர்கள் இந்த அகதிகளிடமிருந்து கடன் தொகைகளைச் சிவில் நீதிமன்றங்களின் மூலம் வசூலிக்க முயன்று வருகின்றனர் என்று விசாரணையிலிருந்து தெரிய வருகின்றது. கடல் கடந்து, அந்நிய நாடுகளிலே

*20—8—1969-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

பன்னெடுங்காலமாக வாழ்ந்து வாழ்வேராறுந்து விடும் நிலையில், புதிய சூழ்நிலையில் தங்கள் வாழ்க்கையைத் தொடங்கியுள்ள இந்த அகதிகளுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டியது அவசியம் என்று கருதப்படுகிறது. எனவே, தமிழ் நாட்டில் இயல்பாக வாழ்ந்து வரும் அகதி ஒருவர் வெளி நாடு ஒன்றில் வாங்கிய கடன் தொகைகளை வசூலிப்பதற்காக வழக்குத் தொடர்வதைத் தடை செய்வதற்கும் அத்தகைய கடன் தொகைகளை வசூலிக்க நீதி மன்றக் கட்டளைகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளைத் தடைசெய்வதற்கும், அந்த அகதிகள் வெளிநாடு ஒன்றில் வாங்கிய கடன்களை வசூலிப்பதற்காக நீதிமன்றத்தின் முன் முடிவாகாமல் விசாரணையில் நின்று வரும் வழக்குகளையும், விண்ணப்பங்களையும் தள்ளிவிடுவதற்கும் வகை செய்யும் முறையில் சட்டம் ஒன்றை இயற்றுவது அவசியமென அரசு கருதுகிறது. இந்நோக்குடன் இம் மசோதா கொண்டுவரப்படுகிறது.

இம் மசோதாவை ஏற்று நிறைவேற்றித் தருமாறு இம்மாமன்றத்தை நான் கேட்டுக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Sir, this is a very happy measure and I am sure it will receive support from all sections of the House. The most important point which I want to bring to the notice of the Hon. Minister is this. This Bill gives the repatriates a sort of relief from action which the Government may take in a court of law. Actually people will have to pay to the Government. But they are not in a position to pay, because they have spent all the amount. Many of them are in great difficulties and do not have even the wherewithal for eking out normal livelihood. Some of them have taken loans of say one thousand rupees and they have not able to invest it on any remunerative occupation. They have utilised the one thousand rupees for personal expenditure and not for opening any shop, etc. It is said in the Statement of Objects and Reasons.

"It is considered necessary to afford relief to the repatriates, who have been uprooted from their ancestral homes in foreign countries and who have to find an alternative mode of livelihood in new environment. It has therefore been proposed to bring forward legislation to bar institution of suits for recovery of debts. . . ."

I want fresh legislation to see that the amount is written off. They do not have the amount. Instead of going on bringing forward pieces of legislation hereafter for postponement of recovery why not at one stroke write off the whole amount and give them a sense of security so that they can engage themselves in some oher work in the future?

திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, இந்த தமிழ் நாடு 1969 ஆண்டு அகதிகள் நீதிமன்ற நடவடிக்கைகள் தடுப்பு மசோதாவைப் பொறுத்தவரையிலும், இது மிகமிகத் தேவையான



மசோதா என்பதோடு நல்ல முறையிலே அகதிகளுக்கு நிவாரணம் அளிக்கின்றது. அப்படிப்பட்ட மசோதாவை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். எங்களுடைய கட்சியின் சார்பிலே இதை முழுமனதோடு வரவேற்கிறேன். அதே நேரத்திலே நம்முடைய சுதந்திராக் கட்சி உறுப்பினர் மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்லிய கருத்துக்களை அரசு ஆலோசிக்கும் என்று நினைக்கிறேன். இந்த மசோதாவிலே இன்னொரு பயங்கரம் தொக்கி இருக்கிறது. அதைத் தடுக்கக்கூடிய வகையிலே அமைச்சர் அவர்கள் பாதுகாப்பு தருவார்கள் என்று நான் நம்புகிறேன். இந்த மசோதாவைப் பொறுத்தவரையிலும், இது வந்துவிட்ட அகதிகளுக்கு, எந்த நாட்டிலேயிருந்து அவர்கள் அனுப்பப்பட்டார்களோ, அல்லது வந்தார்களோ, அல்லது வரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதோ அவர்கள், பாதிக்கப்பட்டவர்கள், அந்நாட்டவர்களுக்குத் தரவேண்டிய கடன்களுக்காக அவர்கள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்காத வகையில் பாதுகாக்கின்ற அளவிலே அமைந்திருக்கிறது. ஆனால், இந்த மசோதாவால் ஒப்புக்கொள்ளப்படுகின்ற ஒன்று இருக்கிறது. அவர்கள் ஏன் வரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்று அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவின் நோக்கங்களில் கீழ்க்கண்டவாறு சொல்லியிருக்கிறார்கள். 'Consequent on the nationalisation policy followed by the Revolutionary Government of Burma, the Indian nationals in that country had been forced to leave their place of residence and migrate to India leaving behind all their properties.'

ஆகவே, நம்முடைய அரசுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். நாம் உணர்ந்திருக்கிறோம். இந்த அரசு எதிர்க் கட்சியாக இருந்த நேரத்திலே பல முறை, அகதிகள் விட்டுவிட்டு வந்த சொத்துக்களுக்காகப் போராடி வந்தது. தொடர்ந்து போராடுகிறோம். அவர்கள் விட்டுவிட்ட சொத்தைத் திரும்பப் பெறுவதற்கு ஆவன செய்வதற்கு இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்தாக வேண்டியிருக்கிறது. இந்த அரசுக்கு அந்த நடவடிக்கை எடுப்பதற்குவேண்டிய ஆதரவைத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். இந்த அரசு நேரடியாக நடவடிக்கை எடுக்கமுடியாவிட்டாலும் மத்திய சர்க்காரிடம் சொல்லி அந்த நடவடிக்கைகள் எடுக்கவேண்டிய நிலை இருக்கிறது.

இப்படிப்பட்ட மசோதாவைக் கொண்டு வருவோமானால், இந்த மசோதாவினை அடிப்படையாக வைத்து, உங்களுக்குத் தரவேண்டிய சொத்தை நாங்கள் தரமாட்டோம் என்று அந்த வெளிநாடுகள் சொல்லி விடுகிற நிலைமை ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம்தான் எனக்கு இருக்கிறது. அமைச்சரவர்கள் இந்தப் பாதுகாப்பை அவர்களுக்குத் தந்ததைப்போல், இந்த நாட்டுக்குச் சேரவேண்டிய சொத்தை, இந்த அகதிகளுக்குச் சேரவேண்டிய சொத்தை, பல்வேறு காரணங்களாலே, பல்வேறு சூழ்நிலைகளிலே அவர்கள் விட்டுவிட்டு வந்திருக்கிறார்கள்; அவர்கள் அகதிகளாகவே

வந்தால், அகதிகளாகவே ஏற்றுக்கொள்வோம் என்ற நிலை இல்லாமல், அவர்கள் அகதிகளாக வந்தால் கூட இந்த சர்க்கார் அவர்கள் விட்டுவிட்டு வந்த சொத்துக்களைப் போராடிப் பெற்றுத் தரும் என்ற உத்தரவாதத்தை அளிக்கவேண்டும். இந்த மசோதா இந்த அளவிலே நிறைவேற்றப்பட்டாலும் இன்னொரு மசோதாவோ, தீர்மானமோ கொண்டு வந்து, அமைச்சர் அவர்கள், அங்கு விட்டுவிட்டு வந்த நம்மைச் சேர்ந்தவர்களுடைய சொந்த சொத்துக்களுக்கு, வேறு நாட்டிலே நம்மைச் சேர்ந்தவர்கள் விட்டுவிட்டு வந்ததைத் திரும்பப் பெறுவதற்கு வகை செய்ய வேண்டும். அதற்குத் தடையாக இந்த மசோதா நிற்கக் கூடாது. அந்த அளவிலே அமைச்சரவர்கள் கருத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று கோருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, நம்முடைய சுதந்திராக் கட்சித் தலைவர் டாக்டர் ஹாண்டே அவர்களும் நண்பர் திரு. இராமமூர்த்தி அவர்களும் பேசினார்கள். இரண்டு பேர் பேசினதும் இந்த எல்லைக்குள்ளே வருவதல்ல. அதற்குக் கொஞ்சம் பாராட்டும் தெரிவித்தார்கள். நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்களுடைய கருத்து நிரம்ப அபாயகரமான கருத்து. அவர்களுக்கு உதவி செய்யவேண்டியது தான், நிரம்ப நாம் உதவி செய்து வருகிறோம். ஒரு சந்தோஷமான செய்தியை நான் அறிவித்துக்கொள்கிறேன். இப்பொழுது கூட நம்முடைய சென்னை நகரத்திலே அகதிகளுக்கு வீடு கட்டிக்கொடுப்பதற்காக 3 கோடி ரூபாய் திட்டத்திலே வீடுகள் கட்டித் தரவேண்டுமென்று மத்திய சர்க்காரை வேண்டிக் கொண்டதற்கு, மத்திய அரசு இந்தத் திட்டத்திற்கு அனுமதி கொடுத்திருக்கிறது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். பல வகைகளிலே அவர்களுடைய புனர்வாழ்விற்கான காரியங்களிலே நாம் ஈடுபட்டிருக்கிறோம். அந்தக் காரியங்கள் நல்ல முறையிலே நிறைவேறி வருகின்றன என்பதை மத்திய அரசிலிருந்து வருகின்ற அமைச்சர்கள் பாராட்டிவிட்டுப் போனார்கள். இதை மானியமாகவும் கொடுக்கிறோம், கடனாகவும் கொடுக்கிறோம். இம் மசோதா அவர்களுக்கு வரக்கூடிய இன்னலைத் தடுத்து நிறுத்துகிற ஒரு பரிகாரமே தவிர, நாம் இங்குக் கொடுக்கிற கடனையும் கேட்க வேண்டாமென்று சொல்ல ஆரம்பித்தால் எந்தப் புனர்வாழ்வும் செயல்படாமல் போய்விடும். அது பாதகமாக மட்டும் அல்ல, எந்தக் காரியத்திற்கும் நல்லதல்ல என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். இந்த அரசு அதை ஏற்றுக்கொள்வதற்கு இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் இந்த மசோதாவை வரவேற்றார்கள், அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய திரு. இராமமூர்த்தி அவர்கள் இதற்கு இன்னும் கொஞ்சம் அப்பால் போய் இதனால் கெடுதல் வந்து விடுமோ என்று சொன்னார்கள். இதனால் கெடுதல் வருவதற்கு





ஒன்றும் நியாயம் கிடையாது. அங்கிருக்கிற சொத்துக்கள் இங்கு வரவேண்டுமென்ற பிரச்சினை நிரம்ப நாளாக இருக்கிற பிரச்சினை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இதை நம்முடைய முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு அண்ணா அவர்கள் கூட கேட்டார்கள். இது இன்னொரு அரசுக்கும் டெல்லி அரசுக்கும் இருக்க வேண்டிய காரியம். அவர்களுடைய அரசுதான், திரு. இராமமூர்த்தி அவர்களுடைய அரசுதான் மத்தியிலே இருக்கிறது. அவர்கள் தான் இதில் நிரம்ப சிரத்தை காட்ட வேண்டும். அந்த சொத்துக்களைப் பெற வேண்டியதில், பர்மா சர்க்காரைக் கேட்க வேண்டியதில், வெளி இலாகா நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று சொல்லியிருக்கிறேன்.

நம்முடைய நண்பர்கள் சொல்கிற கருத்துக்களை அங்கே பாராளுமன்றத்தில் வலியுறுத்தி, வலிவான நிலைமையை ஏற்படுத்தி, அதற்கு உதவி செய்யவேண்டும். அதற்கு எல்லா விதமான முயற்சிகளையும் செய்வதற்கு இந்த அரசாங்கம் முன்வரும். இதை 'ரைட் ஆஃப்' பண்ணவேண்டும் என்று சொன்னார்கள். அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. தேவையான நேரத்தில் நாம் முடிந்ததைச் செய்து கொண்டுதான் இருக்கிறோம். இதற்கு மட்டுமல்ல. கடன் கொடுக்கும் விவகாரங்களிலே அந்தக் காரியங்கள் செய்யப்படுகின்றனவே தவிர, ஒரு அம்சத்தின் அடிப்படையிலே செய்யப்படுகிறதே தவிர, பொதுவாகச் செய்வது சரியானதல்ல. நான் இந்த மசோதாவை உறுப்பினர்கள் ஆதரித்து, நிறைவேற்றித்தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** "தமிழ்நாடு 1969-ம் ஆண்டு அகதிகள் (நீதி மன்ற நடவடிக்கைகள் தடுப்பு) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 15/1969) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, பிரிவு வாரியாக மசோதா ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவு 2, பிரிவு 3, குறுந்தலைப்பு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டன.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1969-ம் ஆண்டு அகதிகள் (நீதி மன்ற நடவடிக்கைகள் தடுப்பு) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 15/1969) சட்டமாக நிறைவேற்றப்படவேண்டும்." என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(V) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாவது திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 17/69.)

***மாண்புமிகு திரு. மா. முத்துசாமி**: பேரவைத் தலைவர் அவர்களே, 1969-ம் ஆண்டு (சட்டப் பேரவை மசோதா எண் 17/69) ஊராட்சிகள் (இரண்டாவது திருத்த) மசோதா* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என இம்மாமன்றத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற ஊராட்சி தேர்தல் 1965-ம் ஆண்டில் நடைபெற்றது. அநேகமாக தமிழகத்திலுள்ள எல்லா ஊராட்சிகளிலும் தற்போதைய பதவிக்காலம் 2—2—1970 அன்று முடிவடைகிறது. எனவே, 1970-ம் ஆண்டு சனவரி, பிப்ரவரி மாதங்களில் மறு தேர்தல்கள் நடத்தப்படவேண்டும்.

ஊராட்சி தேர்தலுக்கு முன்பாக அரசு உடனடியாகச் செய்ய வேண்டிய காரியங்கள் பல உள்ளன. முதற்கண், திருவிதாங்கூர்-கொச்சி மாநிலத்திலிருந்து நம் தமிழ் நாட்டிற்கு மாற்றப்பட்ட கன்னியாகுமரி, செங்கோட்டை பகுதிகளில் நம் ஊராட்சி அமைப்பை அரசு அமைக்க வேண்டியுள்ளது. தமிழ் நாட்டிற்கு மாற்றப்பட்டுள்ள இந்தப் பகுதிகளில் கிராம ஊராட்சிகள் என்ற அமைப்பு இல்லாமல் எல்லாமே பேரூராட்சிகளாகவே இயங்கி வருகின்றன. 1958-ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகளின் சட்டத்தை அவைகளுக்கு ஏற்ப ஒரு சில மாறுதல்களுடன் அங்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தப் பகுதிகளில் எல்லாம் சிறிய ஊராட்சிகளை அமைக்கும் பணியில் அரசு ஈடுபட வேண்டியிருக்கிறது. தமிழகத்தின் பிற மாவட்டங்களில் இயங்கும் முறையில் இவற்றை சீரமைத்தால் தான் வளர்ச்சி வேலைகள் சிறப்பாகச் செய்ய ஏதுவாகும். எனவே, அதற்கேற்ப தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் கலந்து பரிசீலனை செய்து அரசு நடவடிக்கைகள் எடுக்க வேண்டியுள்ளது. பூர்வாங்க வேலைகளை முடிக்க இவ்வாண்டு இறுதிவரை காலம் தேவைப்படலாம்.

இது தவிர ஊராட்சித் தேர்தலுக்கென தனியாக வாக்காளர் பட்டியல் தயாரிக்க வேண்டியுள்ளது. இதுவரை நடைபெற்ற தேர்தல்களில் சட்ட மன்ற வாக்காளர் பட்டியலைத்தான் பயன்படுத்தி வந்தனர். ஆனால், இப்பட்டியலை ஒவ்வொரு பொதுத் தேர்தல் அல்லது இடைத் தேர்தலுக்கு முன்பு தான் திருத்தி அமைக்கவேண்டுமென இந்திய தேர்தல் ஆணைக் குழு முடிவு செய்துள்ளதால், ஊராட்சிகளுக்கெனத் தனிப் பட்டியல் தயாரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதற்கு வழி செய்யும் வகையில் சென்ற ஆண்டு ஊராட்சிகளின் சட்டம் திருத்தி

---

* 20—8—1969-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



அமைக்கப்பட்டது, மாண்புமிகு அங்கத்தினர்களின் நினைவில் இருக்கலாம். இவ்வாறு தனியாகப் பட்டியலைத் தயார் செய்வதற்கு முன், வீடு வீடாகச் சென்று தகுதி பெற்றவர்களைக் கணக்கு எடுப்பதென்று அரசு முடிவு செய்துள்ளது. இதன் பிறகு வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும். தகுதிபெற்றும் விடுபட்டுள்ளவர்களின் பெயர்களை இப்பட்டியலில் சேர்க்க மீண்டும் ஒரு வாய்ப்பு அளிக்கப்படும். இவ்வாறு தயாரித்து வெளியிடப்படும் இறுதி வாக்காளர் பட்டியல் சீராக அமைந்திருக்கும். வயது வந்தவர்கள் அனைவரும் பங்குபெறும் தேர்தல் நல்ல முறையில் நடைபெற வேண்டுமானால், வாக்காளர் பட்டியல் செம்மையாக இருக்க வேண்டும். தங்கள் தொகுதியில் உள்ள தகுதி பெற்ற வாக்காளர்கள் அனைவருடைய பெயர்களையும் இப்பட்டியலில் சேர்த்துக் கொள்ள அறிவுரை வழங்குமாறு மாண்புமிகு அங்கத்தினர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இப் பட்டியலை தயாரிக்கக் குறைந்தது ஒன்பது மாதங்களாவது ஆகுமெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

புதிதாக நிறுவப்பட்டுள்ள ஊராட்சிகளில் தொகுதிகள் அமைத்தல் பற்றியும் பரிசீலித்து ஆணை பிறப்பிக்கப்பட வேண்டியுள்ளது.

ஊராட்சிகளின் எல்லைகளை மாற்றவும் மற்றும் சிலவற்றைப் பிரிக்கவும் பல வேண்டுகோள்கள் அரசுக்கு வந்துள்ளன. இவை தவிர சில பெரிய பேரூராட்சிகளை நகராட்சிகளாக மாற்றவும் செயற்குறிப்புகள் ஆய்வில் உள்ளன. இவை அனைத்தையும் குறித்தும் அரசு பரிசீலித்து முடிவு எடுக்க அவகாசம் தேவைப்படுகிறது.

இவைகளுக்கெல்லாம் மேலாக திராவிட முன்னேற்றக்கழகமும், ஏனைய கட்சிகளும் நீண்ட காலமாக வற்புறுத்தி வந்து, ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவைகளில் தலைவர்கள் தேர்தல் நேரடியாக மக்களால் நடத்தப்படவேண்டும் என்ற ஒரு கருத்து வலியுறுத்திச் சொல்லப்பட்டு வந்திருக்கிறது. நீண்ட நாட்களாக வலியுறுத்தப்பட்ட கருத்துக்களை ஆராய்ந்து பார்த்து, இந்தத் தேர்தலில் முதல் கட்டமாக இந்த முறை நடைபெறுகிற தேர்தலில் ஊராட்சி மன்றத் தலைவர்களை மட்டும் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற முறையைக் கைக்கொள்ள வேண்டும் (ஆரவாரம்), அதன் பின்னர் அதனுடைய நடைமுறை சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து பார்த்து, அதற்குப் பிறகு அடுத்து வருகிற தேர்தலில் ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்களையும் நேரடியாகவே மக்கள் தேர்ந்தெடுக்கும் முறையைப் பின்பற்ற வேண்டும் என்று அரசு முடிவு எடுத்துள்ளது.

மேலே கண்டவை குறித்து இறுதி முடிவெடுத்து அவைகட்கு ஏற்ப சட்டதிட்டங்களைத் திருத்தி அமைத்து அமல்படுத்த முன்னேடியாகப் பல வேலைகளைச் செய்ய வேண்டியுள்ளது.

இவையெல்லாவற்றையும் கருத்தில் கொண்டு பார்த்தால், மேலே குறிப்பிட்ட காரணங்களுக்காக 1970 சனவரி, பிப்ரவரி மாதங்களில் நடை பெறவேண்டிய நம் ஊராட்சி, ஊராட்சி ஒன்றியத்

தேர்தல்களை ஒரு சில மாதங்களாவது தள்ளி வைத்து ஆக வேண்டும் என்று அரசு முடிவெடுத்துள்ளது. அதுவரை, இன்றைய ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் இவற்றின் ஆட்சிக் காலம் நீடிக்க வகை செய்ய வேண்டும். அவ்வாறு வகை செய்யும் பொருட்டுத்தான் இம் மசோதாவை இம் மாமன்றத்தின் முன் சமர்ப்பித்துள்ளேன். இந்தத் தேர்தல்கள் நடைபெறும் தேதிகள் பின்னர் உரிய காலத்தில் அறிவிக்கப்படும்.

எனவே, மேலே விளக்கிய வேலைகளைச் செய்து முடிக்கின்ற வகையில், அவைகளை நீடிக்கக்கூடிய வகையில், அதற்கு அதிகாரம் வழங்கத்தக்க இந்த மசோதாவை நிறைவேற்றித் தருமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** ஆன் எ பாயிண்டு ஆஃப் இன்பர்மேஷன், ஸார். பஞ்சாயத்துத் தேர்தலில் மக்கள் நேரடியாக வாக்களித்து, தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று சொன்னார்கள். கிராமப் பஞ்சாயத்துகள் மட்டுமா, அல்லது நகரப் பஞ்சாயத்துகள் மட்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** ஊராட்சிகள் என்பது கிராம ஊராட்சிகளும், நகர ஊராட்சிகளும் கொண்டதாகும். நகர ஊராட்சிகளும் ஒன்றியங்களில் அங்கம் வகிக்கின்றன.

*** திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த மசோதாவில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பஞ்சாயத்துகளுடைய ஆட்சிக் காலத்தை நீடிப்பதற்கு சபையினுடைய அனுமதியைக் கோரியிருக்கிறார்கள். அதைப் பொறுத்த வரைக்கும் யாருக்கும் ஆட்சேபணை இல்லை. பல வேலைகள் செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே, காலத்தை நீடித்துக் கொடுப்பதிலே எங்களை பொறுத்தவரையிலே ஆட்சேபணை இல்லை. ஆனால் ஊராட்சிகளுக்கு நேரடித் தேர்தலை வைக்கும்போது ஒன்றியங்களுக்கும் ஏன் நேரடித் தேர்தலை வைத்துப் பார்க்கக்கூடாது என்பதில் அரசாங்கம் நிச்சயம் கவனம் செலுத்த வேண்டும். நான் எதற்காகக் கூறுகிறேன் என்றால், பஞ்சாயத்துத் தேர்தல் ஏற்பட்டதற்குப் பிறகு ஒவ்வொரு கிராமத்திலும் அந்த நேரங்களில் ஏற்பட்டிருக்கிற பிளவுகள், சண்டைகள் கொஞ்ச நஞ்சம் கிடையாது. கிராமங்களைப் பல்வேறு விதமாகப் பிரித்தாகிவிட்டது. ஆள் கட்டு இருந்தால்தான் தேர்தலுக்கு நிற்க முடியும். ஆள்கட்டு இல்லாதவர்கள் தேர்தலுக்கு நிற்கமுடியாது நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே, இதைப்பற்றி ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

ஒரு பகுதியை மாற்றி வைத்து, இன்னொரு பகுதியை மட்டும் அப்படியே வைத்துப் பார்ப்பதற்கு என்ன அவசியம் ஏற்பட்டது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. இரண்டிற்கும் நேரடித் தேர்தல் வைத்துப்பார்த்து, பிறகு விளைவுகள் மோசமாக இருக்குமானால், நிர்வாக சங்கடங்கள் ஏற்படுமானால், அதைத் திரும்பவும் மாற்றிக்கொள்ள முடியும். ஒன்றும் நிரந்தரம் அல்ல. அப்படியே செப்புப் பட்டயத்தில் எழுதிவைப்பதில்லை.





அரசாங்கத்திற்கு வேண்டிய அதிகாரம் இருக்கிறது. சபைக்கு அதிகாரம் இருக்கிறது. ஆக்குவதற்கும், மாற்றுவதற்கும் அதிகாரம் இருக்கும்போது, பஞ்சாயத்து யூனியன்களுக்கும் நேரிடைத் தேர்தலாக ஏன் வைக்கக்கூடாது என்பதை நான் கேட்க விரும்புகிறேன். அதனால் எந்த விதமான சிரமும் ஏற்பட்டுவிடாது. ஏதாவது சிரமம் ஏற்படுமோ என்று பயப்படத்தேவையில்லை. அந்தத் தலைவர் தவறு ஏதாவது செய்தால், நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கு வாய்ப்பில்லை என்று பலர் சொல்கிறார்கள். அரசாங்கத்திற்குத்தான் அதிகாரம் இருக்கிறதே. சரியான முறையில், நடத்தவில்லையென்றால், அப்படிப்பட்டவரைப் பதவியிலிருந்து நீக்க அதிகாரம் இருக்கிறது. கணக்கெடுத்துப் பார்த்தால், தேர்தலுக்குப்பிறகு அப்படித்தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, எவரும் வெளியே போகவில்லை. ஆகவே, பெரிய விளைவுகள், சங்கடங்கள் எதுவும் ஏற்பட்டு விடாது. ஆகவே ஒன்றியங்களுக்கும் நேரிடைத் தேர்தலே வைக்க வேண்டும் என்று மன்றாடிக்கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்னொன்றும் சொல்ல வேண்டும். அசெம்பிளித்தேர்தல் வருகிறது. அப்பொழுது ஒவ்வொரு வோட்டரையும் சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. இந்தப் பஞ்சாயத்து, ஒன்றியத் தேர்தல்களுக்கும் இன்னொரு முறை சந்திக்க இது ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுக்கும். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே வாக்காளர்களை சந்திக்க வேண்டிய நிலை இருக்கும். அப்படி ஒரு வாய்ப்பை அளிக்க கூடாதா என்று கேட்கிறேன். ஒரு தொடர்பு இருக்கும் ஆகையினால் தயவுசெய்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் நேரிடைத் தேர்தல் வைக்க வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

DR. H. V. HANDE : The distinguished member Thiru Marimuthu has raised a controversial point. The present amendment is not only just to postpone the election. They also want to get the rolls up-to-date. As far as the first thing is concerned, there is no problem at all. But I understand a new ingredient has been introduced. While the Hon. Minister was making a statement with regard to this particular Bill, he gave an information that hereafter the Panchayat Presidents will be directly elected but that the Panchayat Union Chairman will continue to be indirectly elected. In spite of what my friend Thiru Marimuthu had said, I am sure this House will accept that is a very dangerous ground on which we are treading. In the process there may be so many malpractices, which connot be envisaged now but will come to surface when we actually embark on the job. They are embarking on this experiment. Even here there is risk. We must of course congratulate that the Government have come this for. I do not know how many States in India have this kind of thing. From the report of the officer who had studied the problem in Madhva Pradesh, I find that no State in India is having such a procedure in the election of Panchayat President. We must congratulate the Government that they have made the right step.

[Dr. H. V. HANDE] [1969 ஆகஸ்ட் 27

With regard to election of Panchayat Union Chairman, I want to suggest one thing. For each Panchayat Union, there are 50 to 60 Panchayats. For the election of Panchayat Union Chairman, why can't we adopt the procedure that we adopt for President's election, I mean the election of President of India. Let each member of the Panchayats constituting the Panchayat Union be invit d to vote. Let us have the procedure which we have for election of President of India. Let the Panchayat Union Chairmain be elected like that. I am making this suggestion and I request Government to examine the same.

I now come to another point. There is the Election Commission of India and they have got branch in each State. In Tamil Nadu there is one IAS Officer, representative of Election Commission of India. We talk of integration. Why can't we have proper liaison between Election Commission's branch in Madras and State elect on machinery? For Corporation or Municipal or Panchayat Union election, we depend on State machinery. State machinery is not having proper liaison with Election Commission representative in the States. We are duplicating our work. For successful election to Assembly, we have got to bring both the machinery into fruitful co-operation. There is the question of expenditure. The amount required to bring the rolls up-to-date for these elections is phenomenal. So I say, there should be better liaison between the Election Commission and State election machinery.

Now, I come to polling booths. In the recent bye-election to the Assembly, when I had gone on election tour, I have found that in some places people had to travel 2 to 3 miles on bullock cart to cast their vote. They have to made through on non-cartable roads. That difficulty is there. You must have a polling booth in every village with a population of 500 . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த மசோதாவைப் பற்றிப் பேசுங்கள். பொதுவாகத் தேர்தல் முறையைப் பற்றிப் பேச வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE: If you take the records of the previous Legislative Assembly, while talking on the Panchayat Bill, hon. Members have talked on several other points. Anyhow I shall be brief and I will not take any extra time, I will cut short. Malpractices of a Panchayat President being whisked away, etc., happen during election of Chairman of Panchayat Union. What is the machinery envisaged to prevent such malpractices? I request the Hon. Minister to consider all these aspects. These could be done subsequently when rules are being framed. What I have suggested may be useful then.

* திரு. டி. மார்டின்: ஸ்பீக்கர், ஸார், பஞ்சாயத்துத் தலைவர்களை மக்களே நேரிடையாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும், அதற்காகத் தேர்தலை ஒத்திப் போடவேண்டும் என்றும், சபையின்



1969 ஆகஸ்ட் 27] [திரு. டி. மார்டின்]

முன்வந்திருக்கும் இந்த மசோதா தேவையில்லை என்று நான் என்னுடைய கட்சியின் சார்பில் சொல்ல விரும்புகிறேன். காரணம் என்னவென்றால், இந்தப் பஞ்சாயத்துத் தலைவர்களையெல்லாம் மக்களே நேரிடையாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்கிற கோரிக்கை கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக இருந்து கொண்டிருக்கிறது. இது பழைய சட்ட மன்றத்திலேயே பேசப் பட்டது. ஆகவே, அதற்கான ஏற்பாடுகளை உடனடியாக ஆறு மாத காலத்தில் செய்ய எந்தக் கஷ்டமும் இருக்காது. பஞ்சாயத்துத் தலைவர்களை மக்களே நேரிடையாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொல்லும்போது, ஊராட்சி ஒன்றியத் தலைவர்களையும் மக்களே நேரிடையாகத் தேர்ந்தெடுக்கலாம். அதைவிட்டு, பஞ்சாயத்துத் தலைவர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்கிற கஷ்டத்தைப் போக்க வேண்டும். இல்லை என்றால், எந்தக் கஷ்டத்தைப் போக்க வேண்டும் என்று நினைத்தோமோ, அதுவே திரும்ப வந்து விடும். அது தொடர்ந்து நீடிக்கும். ஊராட்சி ஒன்றியத் தலைவர் தேர்தல் சமயத்தில் பஞ்சாயத்துத் தலைவர்களைக் கடத்திக் கொண்டு போனது பற்றிய கிரிமினல் வழக்குகள் நீதிமன்றங்களில் வந்து, 'ராங்ஃபுல் கன்பைன்மெண்ட்' என்றெல்லாம், அநேகவிதமான குற்றச்சாட்டுகள் வந்தன, அவற்றின் மேல் தீர்ப்புக்களும் கொடுத்திருக்கிறார்கள்.

ஆனால் அதே நேரத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரை, ஒருசில உறுப்பினர்கள் விரும்பவில்லையென்றால், அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து அவரை வெளியேற்றுகிறார்கள். இப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரின் மேல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து வெளியேற்றுவதில் என்ன நியாயம் இருக்கிறது என்பதை அரசு கவனித்து ஆவன செய்ய வேண்டும். ஆகவே, நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர வழிவகுத்துள்ள செக்ஷனை நீக்கிவிட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

சில நாட்களுக்குமுன் நகரசபைத் தேர்தல்கள் நடந்து முடிந்தன. 1967-ல் பொதுத் தேர்தல் நடந்து, பின்னர் ஒன்றரை ஆண்டுகள் கழித்துத்தான் நடைபெற்றிருக்கின்றன. மேலும் 1967-ன் பொதுத் தேர்தலுக்கு உபயோகப்படுத்தப்பட்ட வாக்காளர் ஜாபிதாவைப் பயன்படுத்தி, அடுத்த ஆறுமாத காலத்திற்குள் இதனை நடத்தியிருக்க முடியும். ஜனநாயகத்தில் தேர்தல்களைத் தள்ளிப்போடுவது நல்லது அல்ல.

புதிதாக ஏற்படுத்தப்படக்கூடிய தலைவர்கள்மீதும், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள்மீதும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து வெளியேற்றி விடுகிறார்கள். இது ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல. மேலும் தேர்தல் காலத்தில் உறுப்பினர்களைக் கடத்திச் சென்று விடுகிறார்கள். ஆகவே, பணம் இல்லாதவர்கள் இனிமேல் தேர்தலில் போட்டியிட முடியாத நிலைமை ஏற்பட்டுக் கொண்டு வருகிறது. மக்களிடத்திலே பழக்கப்பட்டவர்கள்,

[திரு. டி. மார்டின்] [1969 ஆகஸ்ட் 27

மக்களுக்குப் பணிசெய்கிறவர்கள் ஆகியவர்களுக்கு இந்தத் தேர்தல்களில் வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே, மக்களுக்குப் பணியாற்றக்கூடிய வகையில், மக்களுக்குப் பணி செய்யும் வாய்பை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். ஜனநாயகம் நல்ல முறையில் செயல்பட வேண்டுமானால், ஜனநாயகம் கிராம மக்களின் கரங்களுக்குப் போகவேண்டுமென்றால், நேரடித் தேர்தல் கொண்டுவரப்பட வேண்டுமென்றும், காலம் தாழ்த்தாமல் 1970-ம் ஆண்டு ஆரம்பத்திலேயே இந்தத் தேர்தலை நடத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மசோதாவை ஆதரித்து என்னுடைய கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நீண்ட நாட்களாக, ஏழை எளிய மக்கள், கிராம மக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கக்கூடிய இந்த மசோதாவை வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை. கடந்த காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் சாதாரண மக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதைப் பார்த்த பிறகுதான் இதில் கவனம் செலுத்த ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால் சிலர் தவறான வழியில் அங்கத்தினர்களுக்குப் பணம் கொடுத்து, உறுப்பினர்களைக் கடத்திச் செல்கிற நிலைமையும் ஏற்பட்டது. அந்த முறையை முற்றிலும் மாற்றுவதற்கு இந்த மசோதா வகை செய்கிறது. நமது மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களையும் நேரடித் தேர்தல் மூலம் கொண்டு வரவேண்டும் என்று கூறினார். அதை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சட்டமன்றத்தில் தாழ்த்தப்பட்ட இன மக்கள் வருவதற்கு வகை செய்திருக்கிறோம். அதுபோலவே, ஊராட்சி ஒன்றியங்களிலும், ரிசர்வ் ஸ்தானங்களை ஏற்படுத்தி, அந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இடம் ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*THIRU K. S. KOTHANDARAMIAH: Mr. Speaker, Sir, while welcoming the Tamil Nadu Panchayats (Second Amendment) Bill, 1969, I wish to say one or two words. The Hon. Minister wants some time for the conduct of elections and that the time should be extended further. We have no objection to it.

With regard to the second part of the Bill, viz., method of election, I wish to say that if we want to make Panchayats and Panchayat Unions really democratic and useful, there should be direct election not only for the Presidents of Panchayats but also for the Chairman of the Panchayat Union Councils. In this connection, I endorse the views of the hon. Member, Thiru Marimuthu. After seeing the defects and some mal-practices going on



1969 ஆகஸ்ட் 27] [Thiru K. S. Kothandaramiah]

in the elections, I feet that it is better to give up this indirect method of elections and have direct elections for all. I think in the elections held in the year 1955 we had only direct elections and that was very satisfactory and people were very happy about it. I do not know whether that method was given up and the indirect method was taken up. But since the Government have brought forward this Bill to have direct elections, I think we should welcome it and appreciate it. With these words, I conclude my speech.

**திரு. கே. பி. எஸ். மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற மசோதாவை வரவேற்றுச் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். முக்கியமாக, பஞ்சாயத்துத் தலைவர்கள் நேரடித் தேர்தல்மூலம் வந்தால் போதும், ஊராட்சி ஒன்றியத்தைப் பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்ற பாதிக் கிணறு தாண்டிய முறையை அமல்படுத்தினால், முன்னால் இருந்த சிக்கலைக்காட்டிலும், அதிகமான சிக்கல் வரும் என்பதை நான் ஒரு பஞ்சாயத்து யூனியன் தலைவன் என்ற முறையில் சொல்ல விரும்புகிறேன். முன்பு 40, 41 அங்கத்தினர்களைத் திருப்திப்படுத்த வேண்டியிருந்தது. இப்போது மெம்பர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிற தேர்தல் வந்தால் இன்னும் விபரீதமான விளைவுகள்தான் தோன்றும்.

அடுத்தபடியாக, புதிய வாக்காளர் பட்டியல் தயாரிப்பதற்குக் காலதாமதமாகும் என்றார்கள். இன்னும் இரண்டு மாதங்களானாலும் பரவாயில்லை. யூனியன் தலைவர்களும் நேரடியாகத் தேர்தலில் வந்தால் நன்றாக இருக்கும். இதைப் பரீட்சை செய்து பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. 1967-ல் பரீட்சார்த்தமாக என்ன செய்தோமோ அதையே செய்வோம். மக்களை நாம் பரீட்சை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. மக்கள் நல்ல முறையில் செயலாற்றுகிறார்கள். ஆகவே, நேரடியான தேர்தலைக் கொண்டுவருவது தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் வசதியாக இருக்கும். இப்போது 375 பஞ்சாயத்து யூனியன் தலைவர்களிலே இரண்டு தாழ்த்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள்தான் இருக்கிறார்கள். இந்த முறை நீடித்தால் இந்த இருவர் வருவதற்கும் வசதியில்லாமல் போகும். கடந்த ஆண்டு மதிப்பிற்குரிய பேரறிஞர் அண்ணா அவர்களிடத்தில் இதைப்பற்றிச் சொன்னபோது, அவர், சட்டமன்றத்தில் சொல்லி வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். நேரடியாகத் தேர்தல் வந்தால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ரிசர்வ் ஸ்தானங்கள் கொடுக்கப்பட வேண்டும்.

தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒருவர் சேலத்தில் பஞ்சாயத்து யூனியன் தலைவராக வந்ததற்காக, அவர் தலையில் கல்லைப்போட்டு, அவரைக் கொலை செய்ய முயற்சி நடந்தது. அதைப்பற்றி அமைச்சர் அவர்களிடத்திலே ரிப்போர்ட் செய்யப்பட்டு, போலீஸில் ரிப்போர்ட் செய்யப்பட்டு, போலீஸ் நடவடிக்கை

எடுக்கப்பட்டது. அவரைத் தாக்கிய நபருக்கு பின்னர் ஜாமீன் வாங்கப்பட்டிருக்கிறது. முன்னூற்றுஎழுபத்தைந்து பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் என்று வரும்போது குறைந்த பட்சம் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக குறிப்பிட்ட விகிதாசாரம் ஒதுக்கித் தர வேண்டும். அப்படி ஒதுக்கித் தர வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசிலே இதற்கு வழிவகை காணவில்லையென்றால் வேறு எந்த அரசிலும் இதைக் காண இயலாது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இதுபற்றி மற்ற அரசியல் கட்சித் தலைவர்களையும் கலந்தாலோசித்து, பூரணமாக நேரடித் தேர்தல் கொண்டுவரவேண்டுமென்றும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ரிசர்வ் ஸ்தானங்கள் ஒதுக்கப்பட வேண்டுமென்றும் கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. சோ். அழகர்சாமி:* பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய கட்சியின் சார்பாக அவைமுன் வைக்கப்பட்டிருக்கிற மசோதாவை ஆதரித்து யூனியன் தலைவர்களும் மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

ஏனென்றால் பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்தல் காலங்களில் எப்படி நடந்து வருகிறது, தேர்தல் அன்று மெம்பர்களையே தூக்கிக் கொண்டு போகிற நிலை, நிர்ப்பந்தங்கள் செய்து, பலாத்காரமாக மிரட்டுகிற சூழ்நிலை, இதன்காரணமாகப் போராட்டம், கலவரம் எல்லாமே நடந்து வருவதைப் பார்க்கிறோம். ஆகவே இன்று எப்படி பஞ்சாயத்துக்களின் தலைவர் தேர்தல் நேரிடையாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படும்முறையில் வகை செய்யப் பட்டிருக்கிறதோ, அதுபோலவே பஞ்சாயத்து ஒன்றியங்களின் தலைவர்கள் தேர்தலும் மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படுகிற நிலையில் அமையவேண்டும். ஆகவே அமைச்சர் அவர்கள், தேர்தலைக் கொஞ்சகாலத்திற்கு ஒத்திவைத்தாலும் பரவாயில்லை. பஞ்சாயத்துத் தலைவர் தேர்தல், பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர் தேர்தல், ஆகிய இரண்டுமே மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படும் வகையில் சட்டம் கொண்டுவரப்பட வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ஜே. ஜேம்ஸ்:* தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் தேவையைப்பற்றி அமைச்சர் அவர்கள் கூறும்போது கன்னியாகுமரி ஜில்லாவில் இருக்கிற பஞ்சாயத்துக்களை மாற்றி அமைக்க சற்றுக் காலதாமதமாகும் என்று கூறினார்கள். நான் அது சம்பந்தமாக ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் 46 டவுன் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. இந்த 46 டவுன் பஞ்சாயத்துகளும் கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு சேருவதற்குமுன் 1956-ஆம் ஆண்டுக்கு முன்னால் இருந்தே செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. மேலும் குறிப்பாக இந்த மாவட்டத்தில் இருக்கிற கிராமங்கள் நமது தமிழ்நாட்டில் இருக்கிற மற்ற கிராமங்களைப் போன்ற அமைப்பைக்கொண்டவை அல்ல என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். மற்றக் கிராமங்



களில் வீடுகள் ஒன்றோடு ஒன்று சேர்ந்து கூட்டம் கூட்டமாக அமைந்திருக்கின்றன என்றால் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒவ்வொரு வீடும் ஒவ்வொரு தோட்டத்தில் அமைந்திருக்கின்றது. இந்தக் காரணத்தினால் நம்முடைய பஞ்சாயத்துச் சட்டத்தின்கீழ் அவற்றை மாற்றி அமைக்கிற வாய்ப்பு இல்லை என்று நான் அமைச்சர் அவர்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அதோடு இந்த மாவட்டம் தாயகத்துடன் சேர்ந்தவுடன் சென்னை அரசு இதைக் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற டவுன் பஞ்சாயத்துக்களை மாற்றி அமைக்க ஒரு ஸ்பெஷல் ஆபீசரை, நியமித்தார்கள். அவர் ஒரு மகாநாட்டையே கூட்டி இதுபற்றி விரிவாக ஆலோசனை நடத்தியதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். டவுன் பஞ்சாயத்துகளாக இருக்கிற ஒரு அமைப்பை மாற்றுவதனால் அங்குள்ள எந்தக் கிராமத்திற்கும் நன்மை வராது என்ற முடிவுக்கு அந்த மகாநாடு வந்தது. ஆகவே இதையும் கருத்தில் கொண்டு அமைச்சர் அவர்கள் அங்குள்ள டவுன் பஞ்சாயத்துக்களை மாற்றி அமைக்க எடுக்கிற நடவடிக்கையைக் கைவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அங்குள்ள மக்களும்கூட இப்போது இருக்கிற அமைப்பை மாற்றுவதை விரும்பவில்லை. மாற்றுவதனால் பஞ்சாயத்துக்கள் போதுமான நிதி வசதியோடு மக்களுக்குப் பயன் படக்கூடிய காரியங்களைச் செய்ய இயலாது போகும். ஆகவே அமைச்சர் அவர்கள் சிந்தித்துச் சீர்தூக்கி பஞ்சாயத்துக்களையும், மக்கள் பிரதிநிதிகளையும் கலந்து இதுபற்றி மீண்டும் ஒரு நல்ல முடிவு எடுக்க முன்வரவேண்டும். இருக்கிற டவுன் பஞ்சாயத்துகள் அமைப்பை மாற்றத் தேவையில்லை என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

*திரு. பி. ஜி. கருத்திருமன்:* மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இப்போது இருக்கும்படியான மசோதாவில் பஞ்சாயத்துத் தேர்தலை ஒத்தி வைக்கவேண்டுமென்று கோருகிறார்கள். அடுத்து, கொள்கை அளவில் பஞ்சாயத்துக்களின் தலைவர் தேர்தல்கள் மட்டும் மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படுகிற வகையில் அமைத்திருக்கிறார்கள். பஞ்சாயத்து ஒன்றியங்களின் தலைவர் தேர்தல் மாற்றப்படவில்லை. முதல் அமைச்சர் அவர்களுடைய அபிப்பிராயப்படித் தனியாக ஒன்றியங்களின் தலைவர் தேர்தல் என்று மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற முறையில் வைத்தால் பொதுத் தேர்தலைப்போல ஆகிவிடும், செலவு அதிகமாகும் என்று கூறுவதாகத் தெரிகிறது. ஆனால் பஞ்சாயத்துத் தேர்தல், பஞ்சாயத்துத் தலைவர்கள் தேர்தல், பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர்கள் தேர்தல் ஆகிய எல்லாவற்றையும் ஒரே தேதியில் நடத்தி முடிக்கலாம். ஆளைத் தூக்கிக்கொண்டு போவதோ, கலவரம், பலாத்காரம் எல்லாம் ஏற்படவோ வழியின்றிப் போகும். செலவும் இருக்காது. ஒரு நாளில் ஒரே பூத்தில் பஞ்சாயத்து மெம்பர்கள் பெட்டி, தலைவர் பெட்டி, பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர் பெட்டி ஆகிய மூன்றையும் வைத்து ஒரே செலவில் மூன்று தேர்தல்களையும் நடத்திவிடலாம் என்று கருதுகிறேன். பல பிரச்சினைகள் எழுவதற்கு இடமளிக்காது. பணம் விளையாடுவது இருக்காது.

இன்னும் சொல்லப்போனால் பொதுத் தேர்தலோடு கூடவே இதை நடத்திவிடலாம் என்று சொல்ல முடியும். காரணம், எப்படியும் பஞ்சாயத்துத் தலைவர் தேர்தல் மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படுவது போலவே பஞ்சாயத்து ஒன்றியங்களின் தலைவர்களும் மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படுகிற நிலையில்தான் அமையவேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து ஒன்றியங்களின் அமைப்பும் அங்கங்கே சிறிது சிறிது மாற்றியமைக்கப்படவேண்டியதாக இருக்கிறது. இது இன்றியமையாதது. முதலில் ஒருவகையில் அமைத்தார்கள். 1967-க்கும் பிறகு கான்ஸ்டிட்யுவன்ஸிகள் மாற்றப் பட்டிருக்கிறது. இதற்கு ஏற்றாற்போல பஞ்சாயத்து ஒன்றியங் களின் அமைப்பும் மாற்றப்படவேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையில் வயபிள் யூனிட்டாக—தனியாக இயங்கக்கூடிய சக்தி வாய்ந்ததாக —அமையவேண்டும். அப்போதுதான் திறம்பட செயல்பட முடியும். ஒரு பகுதியில் உள்ள இரண்டு கிராமங்களை ஒரு பஞ்சாயத்தோடும், மற்றும் இரண்டு கிராமங்களை வேறு ஒரு பஞ்சாயத்தோடும் சேர்த்தால் நல்லமுறையில் செயல்பட முடியாது போகும். ஆகவே முடிந்தவரையில் பஞ்சாயத்துகளை வயபிள் யூனிட்டாக அமைக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி டவுன் பஞ்சாயத்துக்களை ஐந்தாறு பஞ்சாயத்து களாகப் பிரிப்பதாகச் சொன்னார்கள். பழைய நிலையிலேயே அவை இருப்பது நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன். அவற்றைப் பிரிப்பதாக மனதில் வைத்துள்ள யோசனையைக் கைவிடவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்துத் தேர்தலை ஒத்திவைக்கவேண்டுமென்பதை எதிர்க்கத்தான் வேண்டும். முன்பு ஒத்திவைத்தபோது இந்தத் தேதியில் கண்டிப்பாக நடத்தப்படும் என்று சொன்னார்கள். இப்போது ஒத்திவைக்கக் கோருகிறார்கள். ஒத்திவைப்பதைப் பற்றி இல்லை; ஆனால் இப்போதே இந்த மாதத்திற்குள் நடத்தப் படும் என்கிற முடிவையும் எடுத்துவிடவேண்டும். பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர் தேர்தலையும் நேரிடையாக நடத்த வகை செய்ய வேண்டும், அப்போதுதான் பல தவறுகளுக்கு இடமிருக்காது என்கிற என்னுடைய ஆலோசனையைக் கூறி முடித்துக் கொள்கிறேன்.

* **மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்த மசோதா வின் அடிப்படையில் நான் வெளியிட்ட ஊராட்சி மன்றத் தலைவர் கள் எல்லாம் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்று அரசு முடிவெடுத்திருக்கிறது என்ற வாதத்தை எல்லாக் கட்சித் தலைவர்களும் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டதானது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்ற ஒன்றாகும். ஜனநாயகத்தில் ஒரு படி முன்னேறியிருக்கிறோம் என்பதைத் தெளிவாக எடுத்துக்





காட்டுவதாக அது அமைந்திருக்கிறது. திரு. கே. பி. எஸ். மணி அவர்கள் ஊராட்சி மன்றத் தலைவர்களை நேரிடையாகத் தேர்ந் தெடுக்க வேண்டுமென்று சொல்லிவிட்டு, ஊராட்சி ஒன்றியத் தலைவரை மறைமுகத் தேர்தல் மூலமாகத் தேர்ந்தெடுக்க வேண்டு மென்று சொல்வது அரைக் கிணறு தாண்டுவது போலாகும் என்று சொன்னார்கள். அவர்கள் அதைக் கொஞ்சம் இப்படி மாற்றி யமைத்து, சாண் ஏறி முழம் சறுக்குவதைவிட அங்குலம் அங்குல மாக ஏறுவது சிறப்புடையதாக இருக்கும் என்று கருதுவார்களா னால் அவர்களுடைய ஐயப்பாடு தீர்க்கப்பட்டு விடும் என்று கருது கிறேன். ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் எல்லாம் தமிழகத்திலே 1958-ஆம் ஆண்டுச் சட்டத்தின் அடிப்படையில் நடைபெற்று வருகின்றன என்பதை நாம் அறிவோம். புதிதாக அமைக்கப்பட்டிருக்கிற அமைப்பாகும். இந்தப் பத்து ஆண்டு களில் சட்டத்திலே இருக்கின்ற சங்கடங்களையும், நடைமுறையில் இருக்கின்ற நிர்வாகச்சிக்கல்களையும் பரிசீலித்துப் பார்த்தபின் தான் மக்களாலே ஊராட்சித் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய நிலைமை ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒன்றைத் தீர்மானிக்குமுன் ஒரு முறையல்ல, பலமுறைகள் சிந்தித்துப் பார்க்க வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். "எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு" என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க நாம் ஒரு காரியத் தைச் செய்யப் புகுமுன் ஒரு முறைக்குப் பல முறைகள் சிந்தித்துப் பார்த்து சரியாக இருக்குமா என்றெல்லாம் ஆராய்ந்து பார்த்து செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றோம். இந்திய உபகண்டத் திலே எந்த மாநிலத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, மஹாராஷ் டிரத்தை அல்லது குஜராத்தை அல்லது வேறு எந்த முன்னேறி இருக்கின்ற மாநிலத்தைப் பார்த்தாலும் சரி, நாம் ஏற்றுக் கொண் டிருக்கின்ற முடிவை அவர்கள் இன்னும் எடுத்துக் கொள்ளவில்லை என்பதைப் பார்க்கிறோம். இன்னமும் சொன்னால் உலகத்தினுடைய பல்வேறு நாட்டு வரலாறுகளைத் துருவிப் பார்க்கின்ற நேரத்திலே நேரடியாக ப்ரஸிடென்ஷியல் எலக்ஷன் நடத்தப்படுகின்ற அமெரிக்காவிலேகூட லோக்கல் செல்ப் கவர்ன்மெண்ட் மறை முகமாகத்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறது, அந்த முறையினைதான் பின்பற்றுகிறார்கள், நேரிடைத் தேர்தலை இன்னமும் அவர்கள் பின்பற்றவில்லை.

பெருமையாகச் சொன்னால் உலகத்திற்கு நம்முடைய தமிழகம் வழிகாட்டியாக இருக்கிறது என்று சொல்லிக் கொள்ளலாம். ஊராட்சித் தலைவர்கள் தேர்தலுக்குமட்டும் நேரிடைத் தேர்தல் என்று சொல்லிவிட்டு, ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு அதைத் தள்ளி வைப்பானேன் என்று கேட்டார்கள். இப்பொழுது ஒன்றிய தலைவர்களாக இருக்கின்ற திரு. கே. பி. எஸ். மணி, திரு. சீமைச் சாமி போன்றவர்களுக்கு இதிலே உள்ள சங்கடங்கள் தெரிந் திருக்கும். சட்டமன்றத்திற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்; சட்டமன்றத்திலே நாம் கொள்கைகளை வகுக்கின்

றோம்? அன்றாட நிர்வாகத்தைப்பற்றிய தீர்மானங்கள் நிறைவேற்றுவதைப்பற்றியோ, பணத்தைச் செலவு செய்வதையோ நடவடிக்கையாக இந்தச் சட்ட மன்றம் கொள்ளவில்லை. ஊராட்சி ஒன்றியம்தான் அடிப்படையான அமைப்பாக இருக்கிறது. ஆண்டொன்றுக்குப் பல இலட்சம் ரூபாய்கள் செலவழிக்கக்கூடிய மிக முக்கியமான பொறுப்பிலே ஊராட்சி ஒன்றியம் இருக்கின்றது. ஊராட்சி ஒன்றியத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றவர் சக்தி வாய்ந்தவராக இருக்கவேண்டும்; பல கட்டுக்கோப்புகள் உள்ளவராக இருக்கவேண்டும். அப்படியிருந்தால்தான் நிர்வாகத்தை முறையாக, நடத்திக்கொண்டுபோக முடியும். நேரிடையாகத் தேர்தல் என்று வந்தால் அவருக்குக் கீழே உள்ள பஞ்சாயத்துத் தலைவர்கள் கருத்து வேறுபாடுள்ளவர்களாக இருந்தால் ஒன்று சேர்ந்துகொண்டு எந்தத் தீர்மானத்தையும் நிறைவேற்றவிடாமல் செய்யமுடியும். என்னுடைய தொகுதியிலேகூட ஒரு ஊராட்சி ஒன்றியம் நடைமுறைப்படுத்தப்படமுடியாமல் இன்னமும் வழக்கு மன்றத்திலே வழக்கு நடந்துகொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையையும் நாம் பார்க்கிறோம். இப்படி வருகிற நேரத்திலே அரசாங்கத்தினிடத்திலே அதிகாரம் இருக்கிறதே, அதைப் பயன்படுத்திக் கொள்ளலாமே என்று சொல்லலாம்.

நாம் படிப்படியாக முன்னேறிக் கொண்டிருக்கிறோம். டிசென்ட்ரலைசேஷன் ஆப் பவர்ஸ் என்பதை அடிப்படையாகக் கொண்டு நாம் கீழ் மட்டத்திலே உள்ளவர்களை நல்ல தலைவர்களாக உருவாக்கி அவர்கள்மூலம் அங்கங்கே உள்ள சிறு சிறு பகுதிகளுக்கு ஜனநாயகத்திலே அரசியல் முறையைப் பரவலாக்கிக் கொண்டிருக்கின்றோம். இந்த நோக்கத்துடன் நாம் இயங்கி வருகின்ற நிலையில் டிஸ்கிரஷனரி பவர் என்பதை அரசாங்கம் எடுத்துக் கொண்டு ஒவ்வொன்றிற்கும் நாமே தீர்ப்புக் கொடுக்கின்ற நிலைமை வருமானால் ஊராட்சி ஒன்றியங்கள் இயங்க முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். நாம் புதிய மாற்றத்திற்குத் தாவுகிறோம். அப்பொழுது கொஞ்சம் முன்னெச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

1953-ம் ஆண்டு என்று கருதுகிறேன். தமிழ்நாடு அரசாங்கம் அப்பொழுதிருந்த பஞ்சாயத்து மன்றங்களுக்கு நேரிடையாகத் தலைவர்கள் தேர்தல்களை நடத்தினார்கள். ஆனால் அதற்குப் பிறகு கேபினட் சப்கமிட்டி கூடி நிர்வாகத்திலே இம்முறை சரியாக இல்லை என்று கூறி அந்த முறை கைவிடப்பட்டு விட்டது. அதுவும் நமக்கு ஒரு பாடமாக அமைந்திருக்கிறது. இப்பொழுது நாம் அதைத் துணிந்து மாற்றுவதற்குக் காரணம், இந்தப் பதினைந்து ஆண்டுகளில்—முன்பு இருந்த அரசியல் நிலைமை வேறு—இப்பொழுது ஜனநாயகத்தின் நிலையிலே. மக்கள் நல்ல அறிவைப் பெற்றிருக்கிறார்கள். அரசியல் தெளிவு பெற்றிருக்கிறார்கள். இந்த முறையைக் கொண்டு வருவதின்மூலம் மக்கள் ஒரு புதிய மாற்றத்திற்குத் தயாராகியிருக்கிறார்கள். என்று நாம் உணர்ந்து கொண்டு செயலாற்றுகின்றோம்.





ஆளைத் தூக்கிக்கொண்டு போகிற நிலைமை இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். கடந்த காலத்திலே நிகழ்ந்த சம்பவங்களை இந்த நேரத்திலே எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒப்புக்கொண்டு ஞாபகப்படுத்திக்கொண்டதற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். சில பேர்களை விலைக்கு வாங்கிக்கொண்டு தேர்ந்தெடுத்து விடுவார்கள் என்று சொல்லிவிட முடியாது. தலைவர் ஆகப் போட்டியிடுகின்றவர்களில் சக்தி வாய்ந்தவரை, தொண்டராக இருப்பவரைப் பார்த்துத் தான் மக்கள் தேர்ந்தெடுப்பார்கள். மக்கள் நல்லவரை, வல்லவரைத்தான் தேர்ந்தெடுக்கிறார்கள். அந்தத் தலைவர்களை அவ்வளவு சுலபமாக விலைக்கு வாங்கி விடுவார்கள் என்று சொல்ல முடியாது. அந்த அளவுக்கு உள்ள தலைவர்களை மக்கள் தேர்ந்தெடுப்பார்கள் என்று கூறமுடியாது.

ஊராட்சி மன்றத்தைப் பொறுத்தவரையில் நாள்தோறும் நடைபெறக்கூடிய சிக்கல்கள் அதிகமாக இல்லை. நிர்வாகச் சிக்கல்தான் அதிகமாக இருக்கின்றன. நான்கு, ஐந்து ஆண்டுகளில் இம்முறை சரியாக நடக்கின்றதா என்பதையும், என்ன என்ன சிக்கல்கள் வருகின்றன என்பதை அனுபவத்திலே கண்டு அவ்வப்பொழுது நாம் அதை மாற்றியமைத்து அதற்குப் பின்னாலே ஊராட்சி ஒன்றியத் தலைவர் தேர்தலைப்பற்றிச் சிந்திக்கலாம். இதையே பல்வேறு கோணங்களிலே இருந்து ஒரு முறைக்குப் பல முறைகள் சிந்தித்துப் பார்த்து அமைச்சரவையில் பரிசீலித்து, பல்வேறு தலைவர்களையும் பல்வேறு ஊராட்சி ஒன்றியத் தலைவர்களையும் கேட்டு அறிந்து அதற்குப் பிறகுதான் ஜனநாயகத்திலே ஒரு படி முன்னேற வேண்டுமென்ற அடிப்படையிலே நாம் கொண்டுவருகிறோம்.

தேர்ந்தெடுக்கப்படுகின்ற தலைவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படப்போகிறார்கள். சட்டமன்றத்திலே நம்மைத் தேர்ந்தெடுக்கிறார்கள், நாம் சேர்ந்து அவைத் தலைவரைத் தேர்ந்தெடுக்கின்றோம். சட்டமன்றத்திலே உள்ளவர்களை விலைக்கு வாங்க முடியும் என்று சொல்ல முடியுமா? ஆகவே ஊராட்சித் தலைவர்கள் தங்களுக்குள் ஒரு நல்லவரைத் தேர்ந்தெடுக்கக்கூடிய நிலைமை வரும். ஊராட்சி மன்றத் தலைவர் தேர்தலை நேரிடையாக நடத்தாவிட்டாலும் ஒன்றியத் தலைவர் தேர்தலை அப்படி நடத்தக் கூடாது என்று சொன்னார்கள். பஞ்சாயத்துத் தலைவர் என்றால் 40, 50 பேர்கள்தான் இருப்பார்கள், விலைக்கு வாங்கக்கூடிய சூழ்நிலை ஏற்படலாம், ஆனால் இதிலே 300 பேர்கள், 400 பேர்கள் என்று இருந்தால் அதன்மூலம் அதைத் தவிர்க்கமுடியும் என்று கருதித் தான் சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஊராட்சி மன்றங்களின் உறுப்பினர்களுக்கு வாக்குரிமை, ஒன்றியத் தலைவரைத் தேர்ந்தெடுக்கின்ற உரிமை கொடுத்தால், பஞ்சாயத்து மன்றத்திலே உறுப்பினராக இருப்பவர் ஒன்றியத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படலாம். அதன் காரணமாக அவர் உறுப்பின

ராகவும் இருக்கிறார் என்ற அளவுக்குப் போகும். ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்களாக ஊராட்சி மன்ற உறுப்பினர்களை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றால் 300 பேர்கள், 400 பேர்கள் என்ற அளவிற்கு அக்குழு இருக்குமானால் நிர்வாகத்திலே எவ்வளவு சங்கடங்கள் வரும் என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும். இந்த முறையை நாம் வைத்துப் பார்த்து அதற்குப் பிறகு பார்க்கலாம் என்றால் மக்களிடையே இதைப் பரீட்சித்துப் பார்க்க வேண்டுமா, 67-லேயே பார்த்து விட்டோமே என்று திரு. கே. பி. எஸ். மணி அவர்கள் சொன்னார்கள். மக்களை அல்ல; நிர்வாகத்தைப் பரீட்சித்துப் பார்க்கவேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கிறது.

இப்போதே 375 ஊராட்சி ஒன்றியங்களில் பல்வேறு இடங்களில் இருந்து பல்வேறு சங்கடங்களைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. ஜனநாயக அமைப்பில் உள்ளாட்சித் துறையே முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு இயக்குவதால் தான் ஜனநாயகத்தை வளர்க்க முடியுமேதவிர, அது அதிகாரத்தைப் பிடுங்குவதாக இருக்காது. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். சில ஊராட்சி ஒன்றியங்கள் பெரிய அளவில் இருக்கின்றன. சில சிறிய அளவில் இருக்கின்றன என்றார்கள். ஊராட்சி ஒன்றியங்களை அமைக்கும்போது அவசரத் தேவைகளை முன்னிட்டுச் சில அமைப்புகளை ஏற்படுத்திவிட்டோம். இப்போது அவைகளை முறைப்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். தேர்தலுக்கு முன்னால் அவற்றை முறைப்படுத்தும்
மு. ப. 6-30 காரியங்களைச் செய்கிறோம் என்று சொன்னால், அது எவ்வளவு பெரிய சிக்கலுக்குக் கொண்டுபோய்விடும் என்பது உங்களுக்கே தெரியும். தேர்தல் முடிந்த பிறகு ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கும் ஒன்றியத் தலைவர்களுக்கும் வலிவான அதிகாரங்களைக் கொடுக்க வேண்டுமென்று அரசு விரும்புகிறது. அதற்கேற்ற வகையில் சட்ட திட்டங்களைத் திருத்த வேண்டுமென்று கருதி 'காம்ப்ரஹென்சிவ்' ஆக முழுமையாக மாற்றியமைப்பதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ளுவோம் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தேர்தல் நடைபெறுவதற்கு முன்னால் இந்தக் காரியங்களைச் செய்தோமானால் வழக்கு மன்றத்திற்குப் போய் தேர்தல் நடைபெறுவதே தடுத்து நிறுத்தப்பட்டுவிடும். 'தேர்தலை ஒத்தி வைத்துக் கொண்டே போவது உங்களுக்கு வழக்கமாகப் போய்விட்டது' என்று சில பேர்கள் சொன்னார்கள். இந்தத் தேர்தலை ஒத்திவைப்பதால் அரசுக்கு லாபம் ஒன்றும் இல்லை. இன்னும் சொல்லப்போனால் நஷ்டந்தான். இன்றைக்கு 375 ஊராட்சி ஒன்றியங்களிலே கதர்ச் சட்டை போட்டவர்கள் எத்தனை பேர், கறுப்பு சிகப்பு அணிந்திருப்பவர்கள் எத்தனை பேர் என்ற கணக்கைப் பார்த்தால் தேர்தலைத் தள்ளி வைப்பதால் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குத்தான் லாபம்; தேர்தலை நடத்துவதால்தான் எங்களுக்கு லாபம். ஆகவே,



எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே எங்களை எல்லாம் சீக்கிரம் அனுப்பிவிடுங்கள் என்று சொல்லுவதைப் பார்த்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். ஆனாலும் அதற்கான காரியங்களைச் செய்ய வேண்டியிருப்பதால் இன்னும் கொஞ்ச நாள் அவர்கள் இருக்கட்டும் என்று கொஞ்சம் தள்ளி வைத்திருக்கிறோம். மக்களைச் சந்திப்பதற்கு எங்களுக்குப் பயம் இல்லை. இப்போது நடைபெற்று முடிந்த நகராட்சித் தேர்தல்களே தெளிவாக நிரூபித்திருக்கின்றன. சட்டதிட்டங்களைத் திருத்துகிறபோது அவகாசம் தேவை. வழக்கறிஞர் மார்ட்டின் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. தேர்தலை நடத்தும்போது ஒவ்வொன்றுக்கும் சில காலத்தைக் குறிப்பிட வேண்டும். ஒரு பஞ்சாயத்தைப் பிரிக்கிறோம் என்றால் பிரிப்பதற்கு முன்னால் ஷோ காஸ் நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; அதற்கு இடையிலே இத்தனை நாள் என்று நிர்ணயிக்க வேண்டும். ஒன்றியத்தின் அனுமதி பெற வேண்டும்; பிறகு அரசாங்கத்திற்கு வந்து பரிசீலனை செய்யவேண்டும். இவற்றையெல்லாம் செய்து முடிக்க குறிப்பிட்ட கால எல்லையை நிர்ணயித்துச் செயல்படும் தொல்லை இருக்கிறது.

வாக்காளர் பட்டியலைப் பற்றிச் சொன்னார்கள். இது அகில இந்திய ரீதியில் செய்திருக்கவேண்டிய ஒன்று. அதற்கு, இதற்கு முன்னால் இருந்த எலக்ஷன் கமிஷன் ஒத்துக் கொண்டிருந்தார்கள். இப்போது எங்களுக்கு அதிலே தொடர்பு இல்லை; அது மாநில அரசுக்கு உட்பட்ட காரியங்கள், சட்ட மன்றத் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுகிறபோதுதான் வாக்காளர் பட்டியலைத் திருத்துவோம், மற்ற நேரங்களில் திருத்தமாட்டோம் என்று தெரிவித்து விட்டார்கள். 1967-ம் ஆண்டு தயாரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலை வைத்துக் கொண்டு 1970-ம் ஆண்டில் தேர்தலை நடத்துகிறோம் என்றால் இடையிலே உள்ள மூன்றாண்டுகளில் வாக்களிக்க உரிமை பெற்ற வாக்காளர்கள் நிலை என்னவது என்று எண்ணிப் பார்க்கவேண்டும். தேர்தலின்போது அன்றைய நிலையில் வாக்களிக்க உரிமை பெற்ற அனைவருக்கும் வாக்குரிமை கொடுப்பது கடமையாகும். திரு. ஹாண்டே அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். இவ்வளவு ஒற்றுமை இருக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டு இதிலே கூடத் தொடர்பை மத்தியில் இருந்து பிய்த்துக் கொண்டு போகிறார்களே என்றார்கள். இதை எல்லோரும் சேர்ந்து வற்புறுத்த வேண்டும். குறிப்பாக, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொல்லவேண்டும். வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பதிலேயே இந்த நிலை என்றால் நம்முடைய உறவும் ஒட்டும் எவ்வளவு நாளைக்கு வளரும் என்பதை அவர்கள் வலியுறுத்திச் சொன்னால் சிறப்பாக இருக்கும். பல்வேறு மாநிலங்களில் தற்போது இந்தச் சங்கடங்கள் இருக்கின்றன. மத்திய அரசு பழைய நிலையை வைத்துக் கொள்ளமுடியாது என்று கூறிவிட்டதன் காரணமாக வாக்காளர் பட்டியலில் நாம் இந்தத்

தேர்தலுக்கு முன்னால் ஏற்ற வகையில் திருத்தங்களைச் செய்தாக வேண்டிய பொறுப்பு இருக்கிறது. 'அப்-டு-டேட்' ஆக திருத்தங்களைச் செய்வதற்கு நிச்சயமாக அவகாசம் தேவைப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தையும் செங்கோட்டைப் பகுதியையும் தமிழகத்து முறைப்படி மாற்றியமைக்கவேண்டுமென்று சொன்னதை பெருமதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் அவ்வாறு மாற்றியமைக்கக் கூடாது என்று சொன்னார்கள். அங்குள்ள மாவட்ட வளர்ச்சி மன்றமே மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரும் பரிந்துரைத்திருக்கிறார்கள். ஜேம்ஸ் அவர்கள் அங்கே இதை எதிர்த்தாரா இல்லையா என்பது ஏடுகளைப் புரட்டிப் பார்த்தால்தான் தெரியும். அங்கே ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இன்னொரு காரணத்தையும் சொன்னார்கள்-பிரிக்கக்கூடாது என்பதற்கு. ஆனால் அவர்கள் சொன்ன அந்தக் காரணம் பிரிப்பதற்கு உகந்த காரணம். நகரப் பஞ்சாயத்தாக இருக்கவேண்டும், கிராமப் பஞ்சாயத்தாக இருக்கக்கூடாது—இங்கே போல் அங்கு கிராமங்கள் மொத்தமாக இல்லை, இங்கு ஒரு வீடு, அங்கு ஒரு வீடு என்ற நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது; இங்கே இருக்கின்ற கிராம அமைப்பு இல்லையென்று சொன்னார்கள். கிராம அமைப்புக்கே பொருந்தாதது எப்படி நகர அமைப்புக்குப் பொருந்தி வரும் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. திங்கள் சந்தை எந்த நகராட்சியில் இருந்து 25 மைல் தூரத்திற்கு உள்ள கிராமங்கள் எல்லாம் சேர்ந்து நகரப் பேரூராட்சி என்று சொன்னால் அது எப்படி வயபிள் யூனிட்டாக இருக்க முடியும்? எப்படித் தொடர்புடைய ஒன்றாக இருக்க முடியும்? இந்த நிலையில் அந்தப் பகுதிகளின் அபிவிருத்திக்கு எப்படி முழு கவனத்தையும் செலுத்த முடியும்? ஆகவே, அந்தப் பேரூராட்சிகளைப் பிரித்து அமைக்க வேண்டுமென்பதை அவர்களே ஒத்துக் கொண்டுள்ளார்கள். தற்போது சில பேரூராட்சிகளிலே மாவட்டமே அடங்கிவிடுகின்ற நிலைமை இருக்கிறது. அதை மாற்றியமைத்தாக வேண்டும். அவ்வாறு மாற்றியமைப்பதன் மூலமாகத்தான் கிராமப் பஞ்சாயத்துக்கள் சிறிய சிறிய அளவுக்கு வரும். தேர்தலின்போது கன்னியாகுமரி மாவட்டத்தின் பல பகுதிகளுக்குப் போகும் வாய்ப்புக் கிடைத்தது. பல இடங்களில் பல வசதிகள் ஏற்படாமல் இருப்பதற்குக் காரணமே அங்கே இருக்கும் ஊராட்சி அமைப்பு முறைதான். அதை டி-சென்ட்ரலைசேஷன் பண்ண வேண்டும். அங்கே இருக்கும் தலைவர்களே தற்போதுள்ள முறையில் அந்தப் பகுதிகளின் வளர்ச்சிக்குக் கவனம் செலுத்த முடியாத நிலைமையில் வளர்ச்சி தடைப்படும் நிலைமை இருக்கிறது.

மேலும் நம்முடைய பகுதியோடு சேர்ந்துவிட்ட பிறகு மாநிலத்திலே ஒரு மாவட்டத்திற்கு மட்டும் தனியான ஒரு முறையை வைத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்வது



பொருத்தமுடையதாக இருக்காது. இங்கே இருக்கின்ற சட்டதிட்ட அமைப்புகளை நாம் அமல்படுத்துவதன் மூலந்தான் அதிகாரிகளுக்குக் கூடப் பாதுகாப்புக் கிடைக்கும். நிர்வாக ஒழுங்கும், வசதிகளும் ஏற்படக்கூடிய வகையில் அந்த மாநிலத்தின் பகுதிகளைச் சீராகப் பிரிப்பது அந்தப் பகுதி மக்களுக்கு நன்மை என்ற கருத்திலே செய்யப்படுகிறதே தவிர, வேறு ஒன்றும் இல்லை. இது அரசியல் சூழ்நிலை காரணமாக செய்யப்படுகின்ற காரியம் அல்ல. மாவட்ட வளர்ச்சி மன்றமே தீர்மானித்திருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஊராட்சித் தலைவர்கள், நகராட்சித் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் இதனை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய ஆட்கள் ஒருவரோ இருவரோதான் இருக்கிறார்கள். அவ்வாறு பிரிக்கக் கூடாது என்ற கருத்து இருக்குமானால் அது மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலேயே தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும். ஜேம்ஸ் அவர்கள் சொன்ன கருத்து அவர்களுடைய சொந்தக் கருத்தாக இருக்கலாமே தவிர, மாவட்ட மக்கள் கருத்தைப் பிரதிபலிப்பதாகக் கருத முடியாது.

இந்த ஆண்டு இறுதிக்குள் முடிவுகளை மேற்கொள்ளவேண்டும். தேர்தலை ஒத்தி வைப்பது என்பது நீண்ட காலத்திற்கு அல்ல. 1970-க்குள்ளாக நடந்துவிடுமா என்றார்கள். தேர்தலை நீட்டி வைக்க அதிகாரம் பெறும் காலமே 6 மாத காலந்தான். மூன்று மாதத்திற்கு நீட்டிக்க அரசாங்கத்திற்கே அதிகாரம் இருக்கிறது. 1971-ம் ஆண்டில் நம்முடைய அகில இந்திய குடிமதிப்புக் கணக்கெடுத்தல் இருக்கிறது. அதற்கு முன்னால் தேர்தல் வேலைகளை முடித்தாக வேண்டும். அவசர அவசரமாகச் செய்ய வேண்டிய வேலைகளைச் செய்ய அவகாசம் தேவைப்படுகிறது. இவைகளைக் கருத்தில் கொண்டு பார்த்தால் குறைந்தது சில மாதங்களுக்காவது தள்ளி வைக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது தள்ளி வைக்கப்படும் காலத்திற்குள்ளாக தேர்தல் நடைபெற்று முடிந்துவிடும் என்பதற்கான வாக்குறுதியைத் தருகிறேன்.

'நோ கான்பிடன்ஸ்' முறை பற்றியெல்லாம் சொன்னார்கள். சட்ட திருத்தங்களைச் செய்யும்போது சட்டத்துறை அதைப் பற்றி ஆராய்ந்து, பரிசீலித்து தேவையான முடிவுகள் மேற்கொள்ளப்படும். நாம் இப்போது ஜனநாயகத்தில் ஒரு படி மேலே சென்று ஊராட்சித் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுக்க இருக்கிறோம். இதிலே தமிழகம் மற்ற இடங்களுக்கு வழி காட்டியாக விளங்க வேண்டுமென்ற கருத்தில் இதனை மனப்பூர்வமாக ஏற்று, இந்த மசோதாவைச் சட்ட மன்றம் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த முதல் படி நமக்கு ஒரு படிப்பினையாகக் கிடைத்து அதன் மூலம் உள்ள அனுபவத்தைக் கொண்டு அடுத்து வரும் தேர்தலில் முழுமையான ஜனநாயகத்தை எல்லாயிடங்களிலும்

பரவலாக ஆக்கிக் காட்டி அதன் மூலம் தமிழகம் மற்றவர்களுக்கு வழிகாட்டியாக விளங்கும் ஒரு நிலையை உருவாக்குவோம். திரு. கே. பி. எஸ். மணி அவர்கள் ஒன்று சொன்னார்கள். இப்போதே இரண்டு மூன்று பேர்கள்தான் இருக்கிறோம் என்று சொன்னார்கள். நேரடித் தேர்தல் வைத்தாலும் ரிசர்வேஷன் வேண்டுமென்று சொன்னார்கள். நேரடித் தேர்தலில் அந்த மூன்று பேர்கள் கூட இல்லாது போகக்கூடிய நிலை ஏற்பட்டுவிடக்கூடாது. அப்படி நேரடித் தேர்தல் மூலம் வருகிற அளவிற்கு ஜாதி இந்துக்கள் உங்களை விட்டுவிடுவார்கள் என்று தயவுசெய்து கருதாதீர்கள். இன்னும் நம்மை அடக்கி ஆண்டு கொண்டிருக்கிறார்கள். அதை மனப்பூர்வமாக சொல்கிறேன். காலம் வரும் வரை கனிந்திருங்கள். உங்களைப் போல் திறமையாக எல்லாக் காரியங்களையும் செய்து வெற்றி பெறமுடியும் என்று சொல்ல முடியாது. திரு. கே. பி. எஸ். மணி போன்றவர்கள் பொறுமை காட்டவேண்டும். படிப்படியாக வளருகிற நிலையில், இடையில் உள்ள பாகுபாடுகள் குறையக் குறைய தானாக அந்த நிலை வரும். அதுவரை பொறுமையாக இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த மசோதாவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, காலத்தை அதிகமாக எடுத்துக் கொண்டதற்கு மன்னிக்கும்படி அவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒரு நீண்ட கொள்கை விளக்கத்தை அளித்தார்கள். நன்றி. அவர்கள் கொடுக்கவேண்டிய விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார்கள். நாங்கள் சொல்லவேண்டியதை நாங்கள் சொல்கிறோம். சில டவுன் பஞ்சாயத்துக்கள் முனிசிப்பாலிட்டியாக ஆகும் நிலையில் இருக்கின்றன. அதைத் தேர்தலுக்கு முன்னால் செய்யப் போகிறார்களா? பத்துப் பதினைந்து டவுன் பஞ்சாயத்துக்கள் முனிசிப்பாலிட்டியாக ஆகும் நிலையில் இருக்கின்றன. பஞ்சாயத்து தேர்தலுக்குப் பிறகு செய்தால் அவற்றை மீண்டும் மாற்றியமைக்க வேண்டியிருக்கும். ஆகவே, அதைப் பற்றி எப்போது நோட்டிஃபை செய்யப்போகிறீர்கள் ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அதைப்பற்றி முன்னுரையிலேயே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். சில பேரூராட்சிகளை நகராட்சிகளாக மாற்றவேண்டுமென்ற செயற்குறிப்பு இருக்கிறது. அதுபற்றி முடிவு எடுப்பதற்கு இருக்கிறது. எவை எவற்றை எடுப்பதற்கு முடிவு எடுக்கப்படுகிறதோ அவை பற்றி அறிவிக்கப் படும். தேர்தல் நடத்துகிற அளவிற்கு விட்டுவிட்டு பிறகு நகராட்சிகளாக மாற்றவேண்டியதில்லை. எவை எவற்றை அப்படி மாற்றவேண்டுமென்று கருதுகிறோமோ, அவைகள் பற்றி விரைவாக அறிவிக்கப்படும். அந்தயிடங்களில் தேர்தல் இல்லாத அளவிற்கு





**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர்கள் சொல்வது முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது. முனிசிப்பாலிட்டியாக மாற்றுவது என்றால் ஒன்றியத்தை மாற்றியமைக்கவேண்டும் அல்லவா? முனிசிப்பாலிட்டியாக டிக்ளேர் செய்துவிட்டால் சில பஞ்சாயத்துக்களை எடுக்கவேண்டும், பல பஞ்சாயத்துக்களைச் சேர்க்க வேண்டும். அப்படிச் செய்வதற்கு அதிகாரம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** ஏற்கனவே இந்தப் பத்து ஆண்டுகளில் எவ்வளவோ பேரூராட்சிகளை நகராட்சிகளாக மாற்றியிருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களின் தொகுதியான சத்தியமங்கலம் நகராட்சியாக மாறுவதின்மூலம் ஒன்றியத்தில் பெரிய மாற்றம் வந்துவிடாது. அதற்குச் சட்டதிட்டங்கள், விதிமுறைகள் இருக்கின்றன.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அறுபதாயிரம் பேர்கள் உடையது ஒன்றியம். முனிசிப்பாலிட்டியாக மாற்றும்போது சில பஞ்சாயத்துக்கள் சேர்க்கப்பட வேண்டும், சில எடுக்கப்பட வேண்டும். ஏற்கனவே உள்ளவற்றைச் சிலவற்றை எடுத்துவிடுவதால் வருமானம் குறையும். அதற்காகத்தான் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** சில ஊராட்சி ஒன்றியங்களில் பத்து ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. சிலவற்றில் கூடுதலாக இருக்கின்றன. நமது மாநிலத்தில் உத்தரமேரூர் ஊராட்சி ஒன்றியம்தான் பெரிய ஒன்றியம். அதில் 74 ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. இடப்பாடி ஒன்றியத்தை எடுத்துக்கொண்டால், அது 10 அல்லது 12 ஊராட்சிமன்றங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது. ஆனால் அதுவும் நடந்து கொண்டிருக்கிறது. அறுபதாயிரம் மக்கள் தொகையைக் கொண்டதுதான் ஒன்றியம் என்று எல்லை வகுத்துக் கொள்ளவில்லை. சிலயிடங்களில் 50,000 மக்கள் தொகை இருக்கிறது, சிலயிடங்களில் ஒரு லட்சம் மக்கள் தொகை இருக்கிறது. அந்த டிஸ்பாரிட்டி இப்போதே இருக்கிறது. ஆகவே, நகராட்சிமன்றமாக அமைவதால் ஒன்றியம் ஒரு பாதகத்திற்கும் உள்ளாகிவிடாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நம்பரைப் பொறுத்தல்ல சொல்வது. வரவைப் பொறுத்தும் இருக்கிறது. சத்தியமங்கலத்தை பவானிசாகரில் இருந்து எடுத்துவிட்டால் 30,000 ஜனத்தொகை குறையுமே.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அறுபதாயிரம் மக்கள் தொகை கொண்ட ஊராட்சி ஒன்றியங்கள் கூட இப்போது செயல்பட்டுவருகின்றன.

**திரு. கே. விநாயகம் :** இந்த பஞ்சாயத்துச் சட்டம்பற்றிக் கேள்வி நேரத்தில் விவாதத்திற்கு வந்திருக்கிறது. அப்போது அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக இருந்தார்கள். பஞ்சாயத்துக்கு தேர்தல் நேரடியாக வைப்பதா மக்களிடம் அல்லது ஒன்றியத்

சொல்லவில்லை. எனவே, அதை உரிமைப் பிரச்சினை என்று கருதிச் சொல்லிவிடாதீர்கள். பெரிய அமைப்பு இருப்பதை எடுத்துச் சொல்லத்தான் இதைச் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1969-ம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 17/1969) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு பிரிவு வாரியாக மசோதா ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவு 2, குறுந்தலைப்பு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1969-ம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 17/1969) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**(iv) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 19/1969).**

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, I beg to move—

"That the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill 1969,* be taken into consideration."

The Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963) applies to all iruwaram inam estates, part-village inam estates and certain whole inam villages in the merged territory of Pudukkottai specified in Schedule I of the Act. Other categories of inams are dealt with under the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 30 of 1963). There have been repeated representations to the Government by the ryots of Pudukkottai area that most of the inams which have been dealt with under the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 30 of 1963) and part-inam villages

* Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 21st August 1969.



and that they should also be brought within the scope of Tamil Nadu Act 26 of 1963. The inamdars also preferred counter representations contending that even the villages already brought within the scope of Tamil Nadu Act 26 of 1963 should be taken away from its purview. The Government considered both the representations and appointed a Special Officer to investigate into the tenure of these inams in Pudukkottai area. The Special Officer has, after a thorough examination of the whole matter, recommended that 116 part-inam villages will have to be brought within the purview of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963). The Government have decided to accept the recommendation of the Special Officer and to bring these 116 part-inam villages within the purview of Tamil Nadu Act 26 of 1963 and to amend the Act suitably.

All these 116 part-inams which are proposed to be brought within the purview of Tamil Nadu Act 26 of 1963 are now treated as minor inams. They have already vested in the Government under the provisions of the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 30 of 1963), on the "appointed day" under that Act. The appointed day under Madras Act 30 of 1963 is the 15th February 1965. But in the case of minor inams in the Pudukkottai area, the settlement of which under the Pudukkottai settlement of Inams Act, 1955 (Madras Act XXIII of 1955) was published later than the 15th February 1965, the appointed day is the date of publication of such settlement. The question as to how the proceedings already taken or pending under Madras Act 30 of 1963 should be treated has been examined. The Government have decided that the amending legislation should be deemed to have come into force in respect of these part-inams on the "appointed day" under Madras Act 30 of 1963 subject to a proviso that, where in respect of any such inam estate the operation of the Act has been stayed or interrupted, then the date from which the Government are in uninterrupted possession should be the date on which the Act should be deemed to have come into force in respect of such inam estate. It is also proposed that every order passed in any proceeding taken under the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963, and the Madras Inams (Supplementary) Act, 1963 shall be deemed to be of no effect and any such proceeding pending on the date of the publication of the proposed Act in respect of any such estate should abate and the amount paid, if any, under Madras Act 30 of 1963 to any person should be recovered with interest as if it were an arrear of land revenue.

Sir, I have now briefly indicated the object of the legislation. I request the House to accept the motion.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். கனம் சபாநாயகரவர்களைப் பார்த்தால் கொஞ்சம் பயமாக இருக்கிறது. கிளாக்கிலேயே அவரது கண் இருக்கிறது. இன்று முக்கியமாக

திற்கான தேர்தலை நேரடியாக வைப்பதா என்பதுபற்றியெல்லாம் பேசும்போது அவர்கள் ஒரு உறுதி கொடுத்திருக்கிறார்கள் இந்த சபையில். அதற்கான சட்டம் கொண்டுவரும்போது எல்லாக் கட்சித் தலைவர்களுடனும் கலந்து பேசி ஆலோசனை கேட்டு ஒரு 'கான்ஸன்ஸஸ் ஆஃப் ஒப்பீனியன்' வந்த பிறகுதான் சட்டத்தைக் கொண்டு வரப்போகிறோம் என்று சொன்ன ஞாபகம் எனக்கு இருக்கிறது, அமைச்சர் அவர்களுக்கும் அது நினைவிருக்கும் என்று கருதுகிறேன். அப்படியிருக்க இவ்வளவு சீக்கிரமாக ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து யாரையும் கலக்காமல் மசோதாவை விவாதத்திற்குக் கொண்டுவந்து இதை ஏற்றுக்கொள்ளவேண்டும், இல்லையென்றால் எங்களுக்குப் பலம் இருக்கிறது நீங்கள் தோற்றுப் போகவேண்டும் என்ற நிலையை உண்டாக்கக் கூடாது. ஏன் மற்றவர்களிடம் கலந்து பேசவில்லை? அப்படிப் பேசியிருந்தால் பத்து நிமிடத்தில் இந்த பில்லை பாஸ் செய்திருக்கலாம். பேசுவதற்கும் டைம் கொடுப்பதில்லை, அபிப்பிராயம் சொல்வதற்கும் இடம் கொடுப்பதில்லை, நேரம் இல்லை என்று சொல்லி விடுகிறார்கள். என்னைக் கேட்க வேண்டியதில்லை, நான் சின்ன ஆள். மற்றவர்களைக் கேட்டார்களா? கட்சித் தலைவர்களிடம் கேட்டு அவர்கள் அனுமதி தந்தார்களா? என்று கேட்கிறேன்.

*** மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** ஏற்கனவே ஒரு முறை திரு. முருகேச முதலியார் ரிப்போர்ட் பற்றி பேசும்போது எல்லாக் கட்சித் தலைவர்களையும் வைத்துக்கொண்டு எப்படி எப்படி தேர்தல் நடத்துவது என்பதுபற்றி விவாதிக்கப்பட்டது. திரு. விநாயகத்திற்கு அதில் இடமில்லை. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் வந்திருப்பார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் திரு. விநாயகத்தினிடம் சொல்லாத குறையை அவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும். அப்போது அதுபற்றி விவாதிக்கப்பட்டது. திரு. முருகேச முதலியார் ரிப்போர்ட் பற்றி விவாதிக்கப்பட்டபோது எல்லாக் கட்சித் தலைவர்களும் வந்திருந்தார்கள். தேர்தலை எப்படி நடத்தலாம், நேரடியாக நடத்தலாமா அல்லது மறைமுகமாக நடத்தலாமா என்பதுபற்றிய கருத்துக்கள் அப்போது பரிமாறிக்கொள்ளப்பட்டன. எல்லா உறுப்பினர்களும் இதை வரவேற்கிறோம் என்று சொன்னார்களே தவிர, இந்த மாற்றத்தை வரவேற்கிறோம் என்று சொன்னார்களே தவிர வேறொன்றுமில்லை. பலம் இருக்கிறது என்ற காரணத்திற்காகச் செய்வதல்ல இது. நீங்கள் நினைத்த ஒன்றை நாங்கள் செயல்படுத்த வரும்போது அதற்கு ஆக்கமும், உற்சாகமும் கொடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, ஒரு தன்னிலை விளக்கம். அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது அண்மையில் நடந்த மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் இந்தத் தீர்மானம் நிறைவேறியதாகக் கூறினார்கள். அம்மாதிரியான ஒரு தீர்மானம் நிறைவேற்றியதை அந்த வளர்ச்சி மன்றக் கூட்டம்



நடந்ததற்கு சில நாட்களுக்கு பின்பு நானும் பத்திரிகையில் பார்த்தேன். அந்த வளர்ச்சி மன்றக் கூட்ட அஜெண்டாவில் இந்த விஷயம் குறிப்பிடப்படவில்லை. அக்கூட்ட முற்பகுதியில் நானும் இருந்தேன். நான் இருந்தபோது இந்த விஷயம் எடுக்கப்படவும் இல்லை. அஜெண்டாவில் இல்லாததால் இந்த விஷயம் அந்தக் கூட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்ற விவரம் எனக்கும் அந்தக் கூட்டத்தில் பங்கு கொண்ட இதர உறுப்பினர்களுக்கும் தெரியாது. அதுமட்டுமல்ல. அந்தக் கூட்டத்தில் நான்-அஃபிஷியல் மெம்பர்ஸ் அநேகமாக ஆஜராகவில்லை. அமைச்சர் அவர்கள் கூறினார்களோ இல்லையோ தெரியவில்லை. அப்படி வளர்ச்சி மன்றத்தில் நிறைவேற்றினாலும் கூட, 46 ஊராட்சிமன்றங்கள் இருக்கின்றன. அந்த 46 ஊராட்சிமன்றத் தலைவர்களும் அந்த வளர்ச்சி மன்றத்தில் உறுப்பினர்கள் அல்ல. ஒருவேளை அந்த வளர்ச்சி மன்றம் நிறைவேற்றியிருந்தாலும் கூட அந்த ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு சம்பந்தமில்லாமல் இந்தத் தீர்மானம் நிறைவேறியிருக்கின்றது. ஆகவே, நான் அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்வது என்னவென்றால், சட்ட மன்ற உறுப்பினர்கள் அந்தக் கூட்டத்தில் இல்லை. ஊராட்சி மன்றத் தலைவர்களும் இல்லை. ஆகவே, அதை மறுபரிசீலனை செய்ய, ஊராட்சி மன்றத் தலைவர்களையும், சட்டமன்றத் தலைவர்களையும் கூட்டி, அந்தக் கூட்டத்தில் தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பி, அதன்மீது அரசு நடவடிக்கை எடுத்தால் நன்றாகயிருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இன்னொரு விஷயம், அமைச்சரவர்கள் கூறினார்கள். திங்கள் சந்தை 25 மைல் விஸ்தீரணத்தில் இருக்கிறது என்று கூறினார்கள். ஒருவேளை தலைக்குளம் கிராமத்தை நினைவில் வைத்துச் சொல்லியிருக்கலாம் என்று கருதுகிறேன், திங்கள்சந்தை அப்படியில்லை. நான் கூற விரும்புவது, கன்னியாகுமரி மாவட்டத்தில் நீளம் 36 மைல், அகலம் 20 மைல், இதற்குள்ளே 46 ஊராட்சி மன்றங்கள் செயல்படுகின்றன. எந்த ஒன்றியமும் அமைச்சர் கூறிய தூரத்தில் இல்லை என்று எடுத்துச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** தலைவரவர்களே, வளர்ச்சி மன்றத்தைப் பற்றிச் சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர்களும், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் செல்லவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் செல்லாமலிருந்தால் கூட்டமே நடந்திராது. அந்தக் கூட்டம் நடந்ததற்கான விவரங்கள் என்னிடத்தில் இல்லை. வட்டார வளர்ச்சி மன்றத்தில் இருந்து வந்திருக்கும் தீர்மானத்தைச் சொன்னேனே தவிர, அதை முதலிலே இருந்து பார்க்க வேண்டிய பொறுப்பு திரு. ஜேம்ஸ் அவர்களைச் சார்ந்த பொறுப்பு, என்னுடையது அல்ல. திங்கள் சந்தையைப்பற்றிக் கூறியது, பெரிய அளவைச் சொன்னேனே தவிர, நான் டேப்பை வைத்துக் கொண்டு அளந்து பார்த்துச்

கணபதியாப் பிள்ளை ரிப்போர்ட்டை டிஸ்கஸ் செய்ய வேண்டும். அதன்பேரிலே மசோதா இருக்கிறது. இன்னும் பல லெஃப்ட் ஓவரானவைகள் எல்லாம் இருக்கின்றன. இப்படியே போய்க் கொண்டிருக்கிறது. எனவே, நாளைக்கு வைத்துக்கொண்டால் என்ன ? கல்யாண வீட்டிற்கு எங்கேயாவது போக வேண்டு மென்றால் அதை ஒற்றிப்போட ஏற்பாடு செய்யலாமா ? இவ்வளவு மோசமாக இருக்கிறது. பிஸினஸ் அட்வைசரி கமிட்டியிலே நாங்கள் எல்லோரும் பேசிக்கொள்ளலாம். இருந்தாலும்கூட, இன்றைக்கு ஒரு பரிகாரத்தைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். நாளைக்கு வைத்துக் கொண்டால் என்ன ? இப்படியே போய்க்கொண்டிருந்தால் இராத்திரி 10 மணி ஆகிவிடும். கோரம் இருக்கும் என்று நினைக்கிறேன். டிக்கெட்டுகளை அத்தனை பேரும் எடுத்திருப்பார்களா ? அதனால் தெளிவான முடிவுக்கு வரும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகரவர்களே, என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், இந்தப் பில்லை முடித்துக்கொண்டு, கணபதியாப் பிள்ளை ரிப்போர்ட்டை இப்பொழுது எடுத்துக் கொண்டு ரீப்ளேஸ் பண்ணலாம். பாக்கியிருப்பதை அடுத்த செஷனுக்கு வைத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கணபதியாப் பிள்ளை ரிப்போர்ட்டையும், நியாயக் கூலி மசோதாவையும் காலையிலே வைத்துக்கொண்டு, மற்ற எல்லா மசோதாக்களையும் எடுத்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவரவர்களே, இன்றிருக்கும் மசோதாக்களை வரிசைப்படி எடுத்துக்கொண்டு, அடுத்தபடியாக, எல். எம். பாங்க் மசோதாவோடு இன்றைக்கு முடித்துக்கொண்டு, நாளைக்கு கணபதியா பிள்ளை ரிப்போர்ட்டை யும், தொடர்ந்து வரும் மசோதாவையும் எடுத்துக்கொள்ளலாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பாங்க் மசோதாகூட நாளைக்கு வைத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நாளைக்கு முடியாது. இதே போல ஆகிவிடும். ஏழரை மணிவரைக்கும் நாங்களும் இருக்கிறோம்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** பேரவைத் தலைவரவர்களே, இந்த மசோதாவை நான் முழுமனதுடன் வரவேற்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருத்தம் கொடுத்திருக் கிறீர்கள். திருத்தத்திலே பேசப்போகிறீர்களா ?

**திரு. ஆ. கு. சுப்பையா :** கொஞ்சம் பேசலாம் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருத்தத்தை எடுத்துக் கொள்ளும்பொழுது பேசிக்கொள்ளலாமே.





**திரு. ஆ. கு. சுப்பையா :** நாலு வார்த்தைகள் சொல்லி விடுகிறேன். தலைவரவர்களே, இந்த மசோதா இன்றைய தினம் சட்டமாகப் போவதை நான் வரவேற்கிறேன். இந்த இனும் ஒழிப்புச் சட்டம் 63-ஆம் வருஷம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்டது. அந்தச் சமயத்தில் இம்மாதிரியாக புதுக்கோட்டை பிரதேசத்தில் நூற்றுக்கணக்கான கிராமங்கள் விடப்பட்டிருக்கின்றன. அந்த இனும் கிராமங்களையெல்லாம் இதில் கொண்டுவர வேண்டுமென்று அன்று நாங்கள் ஆலோசனை சொன்னோம். நாங்கள் மாத்திரம் சொல்லவில்லை, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். என்ன காரணமோ அன்றிருந்த அரசாங்கம் அதை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்கள். அதன் விளைவாக அந்தப் புதுக்கோட்டைப் பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். புதிய அரசாங்கம் வந்த பிறகு காலம்சென்ற முதல்வர் அண்ணா அவர்களைச் சந்தித்து அந்தப் பிரதேசத்து விவசாயிகள் சார்பில் பேசிய பொழுது மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களையும் கலந்து கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு உறுதி கூறினார்கள். அதன் பிறகுதான் ஒரு ஸ்பெஷல் ஆபீஸரை போட்டு, அந்த புதுக் கோட்டைப் பிரதேசத்தைப் பரிசீலனைச் செய்யச் சொல்லி, இன்றைய தினம் அந்த ஸ்பெஷல் ஆபீஸர் அவர்கள் வைத்திருக்கின்ற அறிக்கையை அனுசரித்து, இந்த மசோதா கொண்டு வரப்படுகிறது. அவ்வாறு கொண்டு வரும்போது அந்த பிரதேசத்தில் பன்னெடுங்காலமாக விவசாயம் செய்து கொண்டிருக்கிற விவசாயிகளுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லாத அளவிற்கு இந்த மசோதா அமையவேண்டுமென்ற நோக்கிலேதான் நம்முடைய சபை இதைப் பரிசீலனைச் செய்தாக வேண்டும். அந்த முறையிலே இன்றையதினம் இரண்டொரு திருத்தங்களைக் கொடுத்திருக்கிறேன். திருத்தம் சம்பந்தமாக பேசும்போது நான் விவரமாகப் பேசுகிறேன். ஆகவே, இந்த மசோதாவை ஆதரித்து, பிறகு என் திருத்தத்தின்மீது பேசும் போது என் யோசனைகளைச் சொல்லுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2, 3, 4 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறை வேற்றப்பட்டன.

### பிரிவு 5

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 5 மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, என் பெயரிலுள்ள கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்.

In the proposed new section 73-B of the Principal Act—

(i) delete item (i) of sub-section (1) and substitute the following, namely :—

the provisions of the said Act shall be deemed never to have applied to Pudukottai Inam estate specified in Schedule I-A and every order passed in any proceeding taken under the said Acts in respect of that Inam estate or any order or decree or adjudication of any civil, criminal and revenue courts passed pursuant to or based upon the provisions of the said Act shall be deemed to be of no effect and if any proceedings pursuant to or based upon the said Acts are pending on the date of the publication of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Act, 1969 in the *Fort St. George Gazette*, such proceeding shall abate;

(ii) After sub-section (2) of the proposed new section 73-B, *add* the following sub-section (3) namely—

" whenever it is found that an area or a territory to be an Inam area and that it was omitted to be included in Schedule I-A, the Government, may from time to time, by notification direct that such area shall form part of Schedule I-A; and

(iii) Renumber sub-section (3) as sub-section (4).

திரு. என். சங்கரய்யா : இந்தத் திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, இந்த மசோதா வருவதற்கு முன்னால் அந்த புதுக்கோட்டை பிரதேசத்தில் இனும்தார்கள் விவசாயிகளை பலவந்தமாக வெளியேற்றியது மாத்திரமல்லாமல், பலவிதமான வழக்குகள் தொடர்ந்து, சிவில், கிரிமினல் வழக்குகள் மூலமாகவும் விவசாயிகள் இன்றையதினம் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அம்மாதிரி அல்லற்படுபவர்களுக்கு இந்தச் சட்டம் பொருந்தும்படியான முறையில் இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொண்டு சட்டமாக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. என். சங்கரய்யா :** பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது திரு. ஏ. கே. சுப்பையா அவர்கள் பிரேரேபித்திருக்கிற திருத்தத்தை அரசாங்கம் பரிசீலித்து ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சில வார்த்தைகள் கூறுவதற்கு நிற்கிறேன். இந்த மசோதா கொண்டு வரப்படுவதாலே, புதுக்கோட்டைப் பிரதேசத்திலே ஏற்கனவே, மைனர் இனும் என்று ஒதுக்கப்பட்ட, சுமார் 116 பார்ட் இனும்களை இப்பொழுது நாம் விசேஷ அதிகாரி அவர்களுடைய பரிசீலனையின் விளைவாக, இந்த இனும் ஒழிப்பு சட்டத்தின்கீழே கொண்டு வரமுடிகிறது. அதற்காக இப்பொழுது மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. புதுக்கோட்டையிலே



இருக்கிற இனும்தார்களைப் பொறுத்தவரையிலே அங்கிருக்கக்கூடிய இனும்கள் அனைத்துமே இதன்கீழ் வரப்படவேண்டுமென்ற வாதம் விவசாயிகளிடம் அழுத்தமாக இருக்கிறது. இப்பொழுது 116 பார்ட் இனும்களைக் கொண்டு வருவதற்கு தகுதிதான் என்று அதிகாரியினுடைய ரிப்போர்ட்டிலே இருக்கிறது. இதைத் தவிர இதர புதுக்கோட்டை இனும்களும் இப்படி வரவேண்டுமென்பது விவசாயிகளுடைய அழுத்தமான வாதமாக இருக்கிறது. அதற்காகத்தான் அவர்கள் தொடர்ச்சியாக கிளர்ச்சி செய்து வந்தார்கள். இதற்கு முந்திய அரசு இருந்த நிலைமையிலே, இவைகள் பார்ட் இனும்கள் அல்ல என்று அவர்கள் ஒரு முடிவு எடுத்தார்கள். ஆனால், எவ்வாறு இன்றைக்கு விவசாயிகளுடைய போராட்டத்திற்குப் பிறகு அதை நாம் மறுபடி பரிசிலனை செய்யும்போது இவைகள் பார்ட் இனும்களின்கீழ் வரப்படவேண்டுமென்று முடிவுக்கு வந்திருக்கிறோமோ, அதைப்போல் இன்னும் பல கிராமங்கள் உண்மையிலே விவசாயிகள், தங்களுடைய கட்சியை, அவை பார்ட் இனும்கள் என்பதை நிரூபிக்கமுடியாமல் போன காரணங்களினால், ஒருவேளை இந்த சட்டத்திலே அந்த ஒன்று என்ற ஷெடியூலிலே வரமுடியாமல் போயிருக்கலாம். ஆகவே, இன்றைக்கு நம்முடைய மனதை மூடிவிடாமல் இந்த பிரச்சினையைப் பொறுத்தவரையிலே ஏற்கனவே சச்சரவுகளில் உள்ள 116 பார்ட் இனும்களை எவ்வாறு ஏற்றுக்கொள்ளுகிறோமோ, அதேபோல் புதுக்கோட்டை பகுதிகளில் இருக்கக்கூடிய இனும்கள் பூராவையுமே பார்ட் இனும்கள் என்று தொடர்ந்து எடுத்துவர ஏற்பாடு செய்யவேண்டும். அவ்வாறு அதைக் கொண்டு வந்ததன் காரணமாக, ஏற்கனவே மைனர் இனும்கள் என்று கொண்டு வந்ததன் காரணமாக, ஒருசில நடவடிக்கைகள் பற்றித்தான் அவசரச் சட்டம் கூறுகின்றது. ஆனால், சிவில் அல்லது ரெவினியூ கோட்டுகளிலே இவைகளை கொண்டு செல்வதால் ஏற்பட்டிருக்கக்கூடிய, கிரிமினல் வியாஜ்யம் இவைகளுக்குப் பிறகு, இன்றைக்கு மைனர் இனும் இல்லை என்று அரசாங்கம் முடிவு செய்யும்போது அவைகளை ரத்து செய்து, அவைகளுடைய பூரணமான பலனையும் இந்த 116 பார்ட் கிராமங்களுக்குக் கிடைக்கும்படியாக செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே இனும் ஒழிப்பு சட்டத்திலே நாம் ஏன் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வருகிறோம் என்று சரியாகப் புரிந்து கொண்டால் இப்படிப்பட்ட ஒரு திருத்தமே தேவை இல்லாமல் இருக்கும். மூன்று சட்டங்கள் போட்டிருக்கிறோம். 26-வது சட்டம், 30-வது சட்டம், 31-வது சட்டம். 26-30 இவைகளில் இனும், மைனர் இனும் இரண்டு வரும். இரண்டிலே வந்தாலும் கூட 31-வது சட்டத்தின் கீழே இரயத்துவாரி நிலச்சுவான்தார்கள் குறிப்பிட்ட டிரிபியூனலுக்குச் சென்று அதை இந்தச் சட்டமாக போட்டிருக்கவேண்டுமென்று வாதாடிக் கொள்ளுவதற்கு ஏற்கனவே உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. புதுக்கோட்டையிலே இருப்பதிலே, நூற்றுக்கணக்கான இனும்

கிராமங்கள், அவை பகுதி இனாம்களாக இருந்தாலும்கூட விவசாயிகளுக்குச் சில பாதகங்கள் ஏற்பட்டிருக்கும். இது முன்னாலேயே எழுப்பப்பட்டது. அப்பொழுது சொல்லப்பட்ட பதிலெல்லாம் இதிலே ஒன்றும் பாதகம் இல்லை. 31-வது சட்டத்தின் கீழே உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது, அந்தச் சட்டத்தின் கீழே மனுப்போட்டு 26-வது சட்டத்தின் கீழ் வரும் என்று தீர்ப்பு வாங்கிவிட்டால் விவசாயிகளுக்கு நன்மை என்பது. புதிய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு விவசாயிகள் நீதிமன்றத்திற்கு வராது நாமே பரிசீலித்து, பகுதி இனாம்களை 26-வது சட்டத்திலே கொண்டுவந்து முடிவெடுக்கத்தான் இந்தத் திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே, இதற்கும் அந்தக் கோர்ட்டு புரொசீடிங்ஸ்களுக்கும் சம்பந்தமே கிடையாது. ஆகவே, இம்மசோதாவிலே எதற்கும் சிவில் கோர்ட்டுகளுக்குச் செல்லாத அளவிற்கு பாது காப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி கொடுக்கப்பட்டாலும் சில காரியங்களுக்கு சிவில் நீதிமன்றங்களுக்கு கிரிமினல் நீதி மன்றங்களுக்குப் போவதை நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டம் கொடுத்திருக்கிறது. அதை நாம் மறுக்கவே முடியாது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், இந்தச் சட்டங்கள் எல்லாம் யாருக்கு இரயத்துவாரிபட்டா என்றுதான் சொல்ல முடியும். ஆனால், அந்த நிலச்சுவாந்தார்கள் நீதி மன்றத்திற்குச் சென்று, யார் அனுபவத்திலே இருக்கிறது என்பதை மட்டும் அந்த வழக்கறிஞர் திறமையாக அந்த வாதத்தை எழுப்புவாரானால் சிவில் கோர்ட்டுக்கும் செல்லலாம். யாரும் அதைத் தடுக்க முடியாது. சூட் ஃபார் இன்ஜங்ஷன் போடுவார்களானால், இந்தச் சட்டம் போட்டாலும் சரி, எந்தச் சட்டம் போட்டாலும் சரி, சிவில் கோர்ட்டினுடைய அனுமதியைப் பெறுவதை நம்மாலே தடுக்க முடியாது. யார் அனுபவத்திலே இருக்கிறது என்று கேட்டு சூட் ஃபார் இன்ஜங்கஷனுக்காக நீதிமன்றத்திற்குச் செல்கிறார்கள். கிரிமினல் கோர்ட்டுகளுக்குத் தக்ராறுகள் செல்லுகின்றன. இதற்காக இந்தச் சட்டம் கொண்டு வந்தாலும் செல்லாது, அல்லது வேறு எதைச் செய்தாலும் செல்லாது. இது அல்ல பரிகாரம், அதற்கு வேறு பரிகாரங்கள் இருக்கின்றன. இந்த தலைவர்களிடத்திலே பேசி இருக்கிறேன். அவர்களெல்லாம் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். யாருடைய அனுபவத்திலே இருக்கிறது என்பதைத் தீர்ப்பதற்கு நாம் வேறு ஏற்பாடு செய்யலாம், இந்தச் சட்டத்திலே இருப்பதே போதும் என்று நான் சொல்லியிருக்கிறேன். அவர்கள் நினைப்பதைப் போல் கிரிமினல் கோர்ட் புரஸீடிங்ஸை நிறுத்தி விடலாம், சிவில் கோர்ட் புரஸீடிங்ஸை நிறுத்திவிடலாம் என்று யாரும் நினைக்க முடியாது. அது முடியவே முடியாது. எனவே, அவர்களுக்கு இருக்கிற உண்மையான சிரமத்தை நாங்கள் உணருகிறோம். சிவில் கோர்ட்டுக்குச் சென்றால் காலந்தாழ்த்துகிற நிலைமை இருக்கிறது. அது அரசியல் அமைப்புச் சட்டத்திலே இருக்கிற கோளாறு. இன்றைக்கு மூன்று சட்டங்களும் தலைமை நீதிமன்றத்திலே, டெல்லியிலே இருக்கின்றன. இந்தக் கால



தாமதத்தைப்பற்றி நம்மால் ஒன்றும் செய்யமுடியாது. 1960-ம் ஆண்டிலே இது தயாரிக்கப்பட்டது. 1963-ம் ஆண்டிலே பாஸ் செய்யப்பட்டது. 1965-ம் ஆண்டிலே நோடிஃபிகேஷன் செய்யப் பட்டது. 1969-ம் ஆண்டிலே இன்றைக்கும் முடிவு பெறாமல் இந்திய தலைமை நீதி மன்றத்திலே இருக்கிறது. அது அரசியல் அமைப்பு சட்டத்திலே இருக்கிற குறை. நம்மாலே அதைத் தவிர்க்க முடியாது. இந்த சிரமத்தைக் குறைப்பதற்கு வேறு சில பரிகாரங்களை நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சி நண்பர் சுப்பையா அவர்களிடத்திலே ஏற்கனவே பேசி இருக்கிறேன். அப்படிப்பட்ட ஏற்பாடுகளை இருக்கிற சட்டத்திற்குள்ளாக செய்துகொள்வதுதான் சிறந்த பரிகாரமாக இருக்கும் என்று சொல்லி, இதை வற்புறுத்த வேண்டாமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா அவர்களின் திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 5 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவுகள் 6, 7 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டன.

குறுந்தலைப்பு, முகப்புரை, நெடுந்தலைப்பு இவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : " 1969-ம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண். 19/69) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும் "

என முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, மசோதா சட்ட மாக நிறைவேற்றப்பட்டது.

### 7. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி:

### (i) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்—தொடர்ச்சி.

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN : Sir, I move—

' That item No. III viz., ' Government Motion ' and items Nos. (1), (8) and (10) under " Item IV—Government Bills " be taken up the next day.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

9. அறிவிப்பு

தமிழ்நாடு 1969-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் மசோதா

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ் நாடு 1969-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் மசோதாவை சட்டப் பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

8. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி

(vii) தமிழ்நாடு 1969-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் மசோதா (சட்டப் பேரவை எண் 11/69).

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN : Mr. Speaker, Sir, I move—

"That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of 24 members (16 members from the Assembly and eight members from the Council) to consider the Tamil Nadu Practitioners of Homoeopathy Bill,* 1969 (L.A. Bill No. 11 of 1969) and that the following Members of this House be selected to serve on such a Joint Select Committee :—

1. Hon. Thirumathi Sathyavanimuthu
2. Thiru M. Metha
3. Thiru P. Jayaraman
4. Thiru V. Gingee Munuswami
5. Thiru K. R. Govindan
6. Thirumathi V. P. Palaniammal
7. Thiru M. C. Balan
8. Thiru T. P. Alagamuthu
9. Thiru K . Vinayakam
10. Thiru S. Ramalingam
11. Thiru K. Ramamoorthi
12. Thiru N. S. V. Chithan
13. Thiru P. K. Mookiah Thevar
14. Thiru M. Surendran
15. Haji M. M. Peer Mohammed
16. Thiru C. Govindarajan."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களை இக்கூட்டு ஆய்வுக் குழுவின் உறுப்பினராக நான் நியமிக்கின்றேன்.

*Published in the *Fovt St. George Gazette* Extraordinary dated 31st March 1969.



6. அரசினர் தனித் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(iii) தமிழ் நாடு கூட்டுறவு மத்திய நில அடைமான வங்கி வெளியிட்டுள்ள கடன் ஈட்டுறுதி ஆவணங்கள் குறித்து தமிழ் நாடு அரசு அளிக்கும் அதிக அளவு உத்திரவாதத் தொகையை அதிகரித்தல்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :—

"தமிழ் நாடு கூட்டுறவு மத்திய நில அடமான வங்கியினால், வெளியிடப்பட்டுள்ள கடன் ஈட்டுறுதி ஆவணங்கள், (பத்திரங்கள், டிபென்சர்ஸ்) குறித்து தமிழ் நாடு அரசு அளிக்கும் அதிக அளவு உத்திரவாதத் தொகையை 1934-ம் ஆண்டு தமிழ் நாடு கூட்டுறவு நில அடமான வங்கிகள் சட்டத்தின் 6-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் கீழ் ரூ. 75 கோடி (ரூபாய் 75 கோடி மட்டும்) மொத்த முகமதிப்பு வரையில் அதிகரிக்கலாமென்று மாநில அரசுக்கு இப் பேரவை பரிந்துரைக்கிறது. வங்கி அவ்வப்போது மீட்டுக் கொள்ளும் கடன், ஈட்டுறுதி ஆவணங்கள் இதில் அடங்கா. இத் தகைய கடன், ஈட்டுறுதி ஆவணங்கள் அவை வெளியிடப்பட்ட நாளிலிருந்து 25 ஆண்டுகளுக்கு மேற்படாத கால அளவுக்கு வெளியிடப்பட்டதாக இருக்க வேண்டும். 'ஒவ்வொரு முறை எழுப்பப் படும் ஈட்டுறுதி ஆவணத் தொகுதி குறித்தும் இந்திய ரிசர்வ் வங்கியினால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள வட்டி வீதத்திற்கு மேற் படாத வட்டி வீதமே இந்தக் கடன் ஈட்டுறுதி ஆவணங்கள் முடிவு செய்யப்படவேண்டும்."

இந்தத் தீர்மானத்தை இப்பொழுது அரசு கொடுத்திருக்கிறது. நில அடமான வங்கிகள் எழுப்புகின்ற டிபென்சர்ஸுக்கு ரூ. 45 கோடிக்கு கொடுத்திருக்கப்பட்ட காரண்டியை ரூ. 75 கோடியாக உயர்த்தவேண்டும், காரண்டியை உயர்த்தவேண்டும் என்பது தான் இந்தத் தீர்மானத்தினுடைய கருத்து. இதில் எந்த விதமான விவாதத்திற்கும் இடமில்லை.

DR. H. V. HANDE : Sir, I wish to offer only one suggestion. I hear a lot of complaints particularly from the drought affected areas that the farmers have not been disbursed loans by the Land Mortage Banks even though the loans have been sanctioned. It has been pending for more than six months with the result that they have been put to much distress and difficulties. Wells have been dug half-way but no money has been given by the Land Mortage Banks.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கூட்டுறவு நில அடமான வங்கிகள் (திருத்த) மசோதா நாளைக்கு வருகிறது. நாளைக்கு இதுபற்றி நிறையப் பேசலாமே?

DR. H. V. HANDE : Sir, I am talking only on the Resolution and the point I am going to raise is connected with the Resolution and not with the Bill. I cannot speak on the point

during the discussion on the Bill as it would then become irrelevant. I will finish my speech in one or two sentences. I am glad that the guarantee amount has been increased to Rs. 75 crores. But there is imperative need for expediting the long term loans at least before the monsoon sets in and before that, proper orders may be issued.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்** : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு புகாரைச் சொன்னார்கள். ஏனென்றால், கடந்த ஏப்ரல், மே ஜூன், ஜூலை, ஆகஸ்டு, ஆகிய ஐந்து மாதங்களில் கூட்டுறவு நில அடமான வங்கியினால் கொடுக்கப்பட்ட கடன் தொகை, பல வருடங்களை ஒப்பிட்டுப்பார்க்கும்பொழுது, குறைவாக இருக்கிறது என்ற எண்ணத்தில் சொல்கிறார்கள் என்று கருதுகிறேன். அப்படியானால், எந்த வருடத்தை எடுத்துக் கொண்டாலும், 5 மாதங்களில் எழுப்பப்பட்ட கடன் தொகை இந்த வருடம் தான் அதிகம், கொடுக்கப்பட்ட கடனும் இந்த வருடம் தான் அதிகம். 1966-ம் ஆண்டில் 5 மாதங்களில் ஒரு கோடி மட்டுமே கடன் எழுப்பப்பட்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் சென்ற வருடத்தை ஒப்பிட்டுச் சொல்லவில்லை. அதைவிட இந்த வருடம் அதிகக் கடன் கொடுத்திருக்கிறோம். இந்த வருடம் ரூ. 3½ கோடி கடன் கொடுத்திருக்கிறோம். 1966-ம் ஆண்டைப் போல 3 மடங்கு அதிகமாகக் கொடுத்திருக்கிறோம். சென்ற வருடத்தைவிட அதிகம். புள்ளிவிவரங்களை நாளைக்கு விவரமாகச் சொல்கிறேன்.

DR. H.V. HANDE : Sir, it is true that it is better than it was in the previous year. But my only submission is that after getting the increased amount of Rs. 75 crores, the Banks should expedite the sanction of the loan amount and see that there is no further delay in the matter.

அரசினர் தனித் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

### 7. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

**(ii) தமிழ் நாடு மின்சாரவாரியத்திற்கு ஒரு சமயத்தில் கடனாக இருக்கக்கூடிய தொகையை நிர்ணயித்தல்.**

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"1948-ம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின் (மத்திய சட்டம் 54/1948) 65-வது பிரிவின் (1) உட்பிரிவின்படி தமிழ் நாடு மின்சார வாரியத்திற்கு ஒரு சமயத்தில் கடனாக 70 கோடி ரூபாய் இருக்கலாம் என்று மேற்படி சட்டத்தின் அதே பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின் படி முடிவு செய்யும் மாநில அரசின் செயற்குறிப்பு ஏற்கப்படலாம்."



தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(iii) தமிழ் நாடு 1948-ம் ஆண்டு எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விதிகளுக்கு செய்யவிருக்கும் வரைவு திருத்தம்.**

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்** : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"வருவாய்த் துறையின் 21—12—1949 நாளிட்ட அறிவிப்புடன் 27—12—1949 நாளிட்ட தமிழ் நாடு அரசிதழின் I-ம் பாகத்தைச் சேர்ந்த விதிகள் இணைப்பில் கண்ட 397-398 பக்கங்களிலே (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்டு பின்னர் திருத்தப்பட்டுள்ள விதிகளில் கீழ்க்கண்ட வரைவு திருத்தத்தைச் செய்யக் கருதியுள்ளது. தமிழ் நாடு 1948-ம் ஆண்டு (எஸ்டேட்டுகள் ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 26/1948) 40-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கியுள்ள அதிகாரங்களைக்கொண்டு அத் திருத்தத்தைச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. அத்திருத்தத்தை இப்பேரவை ஏற்றுக் கொள்ளலாம்."

### வரைவுத் திருத்தம்.

மேற்படி விதிகளிலே 6-வது விதியைச் சேர்ந்த (1) துணை விதியில் கீழ்க்கண்ட வரம்பு நிபந்தனையைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். அதாவது—

"ஆனால், நிறுவனத் தலைவர் உரிய வயது அடையாதவராய் இருந்தாலும், இந்த துணை விதியில் விதித்துள்ள நடைமுறையை பின்பற்றுவதனால் நிறுவன நலன் பாதிக்கப்படுகிறது அல்லது பாதிக்கப்படக் கூடும் என்று கருதப்பட்டால் 38-வது பிரிவைச் சேர்ந்த (1), (2) உட்பிரிவுகளின் கீழ் அந்த நிறுவனங்களுக்குச் செலுத்தத்தக்க தொகை, அதிகார வரம்புடைய நாட்டில் நீதி மன்றத்தில் கையடை செய்யப்படலாம்."

அதாவது 'டெபாஸிடெட் இன் தி கோர்ட்ஸ்.'

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(iv) தமிழ் நாடு 1965-ம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (உபரி நிலங்களை ஒருவகை செய்தல்) விதிகளின் கீழ் செய்யப்படவிருக்கும் வரைவு திருத்தம்.**

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I move—

"That the following amendment * to the Madras Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1965 published with Revenue Department Notification, S.R.O. No. A-1240 of 1965, dated the 25th November 1965, at pages 1284–1296 of Part V of

* Printed as Appendix on pages 551–552

the Fort St. George Gazette, dated the 1st December 1965, as subsequently amended which it is proposed to issue under sub-section (1) of section 94 of the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act 1961 (Madras Act 58 of 1961) be approved as required by the proviso to the said sub-section.

Under Rule 5 (1) (1) of the Madras Land Reforms (Disposal of Surplus Land) Rules, 1965 a person who is completely dis-possessed of his holding by virtue of the provisions of the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 gets first preference in the matter of assignment of surplus lands. Persons displaced as a result of execution of any irrigation or hydro-electric project are not now eligible for assignment of surplus lands. It is therefore, proposed to amend rule 5 (1) (1) of the Madras Land Reforms (Disposal of Surplus Land) Rules 1965 so as to make these persons also eligible for assignment of surplus lands.

Rule 8 (4) of the rules require that the Authorised Officer should submit proposals for assignment of surplus lands to the District Revenue Officer.

Under Rule 8 (5) the District Revenue Officers are the assign-ing authorities in respect of these lands. Against the orders of the District Revenue Officer an appeal lies to the Land Commissioner. It is also open to the Land Commissioner to call for and examine the records of the District Revenue Officers in respect of any proceedings under these rules and to revise the orders. It is also open to the Land Commissioner or the Government to cancel or modify any assignment made under these rules, if it is found that it was made under a mistake of fact or owing to mis-representation or fraud or that there was a material irregularity in the procedure or that the extent assigned together with other lands if any held by the assignee (other than a co-operative society) was in excess of five standard acres.

I request hon. Member Thiru K. Vinayakam to listen, to what I say. We are now giving power to the Authorised Officer also. The District Revenue Officer becomes appellate authority. Let me now continue.

In the light of experience gained in the assignment and disposal of appeals and revision petitions, it has been proposed to empower the Authorised Officers (Land Reforms) to sanction assignment of surplus lands and to make provision for an appeal to the District Revenue Officers and revision to the Land Commission/Govern-ment. Consequential amendments have been made to Rules 2, 8, 10, 11 and 12 of the rules and to forms B, C and F appended to the rules.

Sir, I request the House to accept the motion.

*தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.*



*மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை காலை 9 மணியளவில் கூடும்.*

*பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.*

## A. Statutory Rules and Orders.

@ 114. Notification issued with G.O. Ms. No. 2237, Public (Services-A),, dated the 19th November 1968 in regard to an amendment to the Madras Public Service Commission Regulations 1954, published at pages 759 to 768 of Part I of the *Fort St. George Gazette*, dated the 9th June 1954 relating to the inclusion of Development Assistant in Cinchona Department within the Commission's purview. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]

@ 115. Notification issued with G.O. Ms. 2223, Public (Services-A), dated the 16th November 1968 in regard to an amendment to the Madras Public Service Commission Regulations 1954, published at pages 759 to 768 of Part I of the *Fort St. George Gazette*, dated the 9th June 1954, relating to the Madras General Subordinate Service relating to inclusion of posts of General Foreman, Foreman-Instructor and Instructor in Govern-ment Colleges of Engineering and Technology. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]

@ 116. Notification issued with G.O. Ms. No. 341, Public (Services-A), dated the 19th February 1969 in regard to an amendment to the Madras Public Service Commission Regulations, 1954, published with Public (Services) Department Notification No. 50, dated the 5th May 1954 at pages 759 to 768 of Part I of the *Fort St. George Gazette*, dated the 9th June 1954. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India].

@ 117. Notification issued with G.O. Ms. No. 2224, Public (Services-A), dated the 16th November 1968 in regard to an amendment to the Madras Public Service Commission Regulations, 1954, published with Public (Services) Department Notification No. 50, dated the 5th May 1954 at pages 759 to 768 of Part I of the *Fort St. George Gazette*, dated the 9th June 1954. [ Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]

@ 118. Notification issued with G.O. Ms. No. 342, Public (Service-A), dated the 19th February 1969, in regard to an amend-ment to the Madras Public Service Commission Regulations, 1954, published with Public (Services) Department Notification No. 50,

dated the 5th May 1954 at pages 759 to 768 of Part I of the *Fort St. George Gazette*, dated the 9th June 1954 [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India].

@ 119. Notification issued with G.O. Ms. No. 295, Local Administration, dated the 22nd February 1969, in regard to an amendment to the rules relating to the appointment and punishment of officers and servants of Municipal Councils published at pages 453–454 of Part I-A of the *Fort St. George Gazette*, dated the 1st September, 1936. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act 1920 (Madras Act V of 1920).]

B. *Reports, Notifications and other papers.*

59. List of Unstarred Questions and Answers from Nos. 1 to 12.

* 60. Annexure to the Tamil Nadu Panchayats (Second Amendment) Bill, 1969 (L.A. Bill No. 17 of 1969).



APPENDIX.

[*Vide* foot-note on page

DRAFT AMENDMENT.

In the said rules,—

(1) in rule 2, for clause (*b*), the following clause shall be substituted namely :—

" (*b*) 'District Revenue Officer' means in the case of Kanyakumari and Dharmapuri districts, the Collector of the district concerned,";

(2) in rule 5, in sub-rule (1), in clause (i) the words as a result of execution of any irrigation or hydro-electric project." shall be added at the end;

(3) in rule 8,—

(*a*) for sub-rules (4) and (5), the following sub-rule shall be substituted, namely :—

"(4) The Authorised Officer shall then consider the respective claims of the applicants and pass orders. The orders passed by the Authorized Officers shall be communicated to all the applicants and objectors.";

(*b*) in sub-rule (6), for the words "On receipt of the orders of the District revenue Officer assigning a surplus land", the words, brackets and figure "After passing orders under sub-rule (4)" shall be substituted.

(4) in rule 10,—

(*a*) in sub-rule (i),—

(i) for the words, figures and brackets "District Revenue Officer under rule 8 (5)", the words, figures and brackets "Authorized Officer under rule 8 (4)" shall be substituted;

(ii) for the words "Land Commissioner", in the two places where they occur, the words "District Revenue Officer" shall be substituted;

(*b*) in sub-rule (3), for the words "Land Commissioner" the words "District Revenue Officer" shall be substituted;

(5) for rule 11, the following rule shall be substituted, namely :—

" 11. *Revision.*—(1) The order of the Authorized Officer, if no appeal is presented, or of the District Revenue Officer, if an appeal is presented, shall, subject to the provisions of sub-rules (2) to (6) be final.

(2) If in a case where no appeal has been presented under rule 10, at any time within three years of the date of the order of assignment, the District Revenue Officer is satisfied that there has been a material irregularity in the procedure or that the order was grossly inequitable or that it was passed under a mistake of fact or owing to fraud or misrepresentation or that the extent

assigned togther with other lands, if any, held by the assignee (other than a Co-operative Society) was in excess of five Standard acres, he may set aside, cancel or in any way modify the order.

(3) The Land Commissioner may at any time within five years of the date of the order of assignment set aside,, cancel or in any way modify the order of assignment if he is satisfied that the order was grossly inequitable or there has been a material irregularity in the procedure, or that it was passed under a mistake of fact or owing to fraud or mis-representation or that the extent assigned together with other lands, if any, held by the assignee (other than a Co-operative society) was in excess of five Standard acres.

(4) The Government may, at any time, within five years, from the date of the order of assignment set aside, cancel or in any way modify the order of the Land Commissioner if they are satisfied that the order was grossly inequitable or there has been a material irregularity in the procedure, or where it was passed under a mistake of fact or owing to fraud or mis-representation.

(5) The authorities competent to pass orders in revision under this rule may also grant stay, pending orders in revision.

(6) No order under this rule shall be passed without giving an opportunity to the assignee of being heard.";

(6) for rule 12, the following rule shall be substituted, namely :—

" 12. *Effect of cancellation or modification of assignment*— In the event of the modification or cancellation of an assignment, the land assigned shall be resumed from the assignee, either in part or in full, as the case may be, and on such resumption the assignee shall not be entitled to compensation for any improvement effected by him on the land. The value of the land, buildings and trees thereon paid by him may at the discretion of the assignee be refunded to him, in part or in full. The assignee shall also be liable for damages, if any, caused by him to the land and the compensation for the damages shall be recovered from him by deduction from the value of the land, buildings and trees thereon paid by him. If the compensation for the damages exceed the value of the land, buildings and trees thereon paid by him, such excess shall be recovered from him as if it were an arrear of land revenue."

(7) in Form B, in paragraph (2), in item (i) the words " or as a result of execution of any irrigation or hydro-electric project", shall be added at the end;

(8) in Form C, in item 4, the words " or as a result of execution of any irrigation or hydro-electric project ", shall be added at the end;

(9) in Form F, for the words " Governor of Madras " wherever they occur, the words " Governor of Tamil Nadu " shall be substtiuted.

## தமிழ் நாடு சட்டப் பேரவை

---

### வியாழக்கிழமை, 1969 ஆகஸ்ட் 28

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. அரசினர் தீர்மானங்கள்.

#### (அ) வினா நேரத்தை நிறுத்தி வைத்தல்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தமிழ் நாடு சட்டப் பேரவை நடைமுறை விதிகள் 22-வது பிரிவின்கீழ், இன்று கேள்வி நேரத்தை நிறுத்திவிட்டு, மற்ற இனங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

#### (ஆ) விதி 23-ஐத் தளர்த்தல்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இன்று சட்டப் பேரவை 23-வது விதியைத் தளர்த்திவிட்டு மற்ற அரசினர் அலுவல்களை நடத்தவேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

### 2. அரசினர் மசோதா.

#### தமிழ் நாடு 1969-ம் ஆண்டு கூட்டுறவு நில அடைமான வங்கிகள் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 12/69).

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :**

" தமிழ் நாடு 1969-ம் ஆண்டு கூட்டுறவு நில அடைமான வங்கிகள் (திருத்த) மசோதா * (சட்டப் பேரவை மசோதா எண் 12/69) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் " என்று கோருகிறேன்.

THIRU N. S. V. CHITHAN : Sir, I move the following amendment standing in my name :—

" That the Tamil Nadu Land Mortgage Banks (Amendment) Bill, 1969 (L.A. Bill No. 12 of 1969) be referred to a Select Committee consisting of the following Members of the Assembly (names to be furnished later)".

---

* 16—8—1969-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

[1969 ஆகஸ்ட் 28

THIRU R. RAMACHANDRA DORAI: I second the amendment, Sir.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவிற்கு இது மட்டுமல்ல, இன்னும் பல திருத்தங்கள் மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். எனவே, இதைப்பற்றியும் அவர்கள் கொடுத்திருக்கிற மற்ற திருத்தங்களைப் பற்றியும் தங்கள் கருத்துக்களைச் சொல்வார்களானால் பிறகு இறுதி விளக்கம் தேவைப்படுமானால் கூறுவதற்கு நான் சித்தமாக இருக்கிறேன். ஒன்று மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மதிப்பிற்குரிய உறுப்பினர்களுடைய திருத்தங்களை எல்லாம் அரசு ஆராய்ந்து பார்த்து, அவற்றிலே ஏற்றுக்கொள்ளத் தக்கவை அரசினரின் அதிகாரபூர்வமான திருத்தங்களாகக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. எனவே, அரசினருடைய திருத்தங்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொடக்க உரையாக நீங்கள் ஏதேனும் சொல்ல விரும்புகிறீர்களா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** இல்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை இன்றையதினம் வளர்ந்து விரிந்து வருகின்ற ஒரு துறையாக நம்முடைய வாழ்க்கையோடு இணைந்துவிட்ட ஒரு துறையாக இருந்து வருகிறது. மேலும் இந்தத் துறை சிறப்பாக இயங்கவேண்டுமென்பதிலே நம்மிடையே கருத்து வேறுபாடு கிடையாது. இந்தச் சமயத்தில் ஒரு ஆங்கில அறிஞர் கூறிய கருத்தை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இந்திய விவசாயி கடனிலே பிறந்து, கடனிலே வாழ்ந்து, கடனிலே மடிகின்றான் என்று சொன்னதுபோல், விவசாயிகள் நிலத்திலே விவசாயம் செய்யவேண்டுமென்றாலும் கிணறு வெட்டுவது போன்ற அபிவிருத்தி செய்யவேண்டுமென்றாலும் தனிப்பட்டவர்களிடமிருந்து அதிக வட்டிக்குக் கடன் பெறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இதனால் விவசாயி பல தொல்லைகளுக்கு ஆளாக நேரிடுகிறது.

இந்தக் கூட்டுறவு நில அடைமான வங்கிச் சட்டம், 1934-ம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. ஆனால், இப்போது நிலவள வங்கி என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. பொதுவாக நில அடைமானம் என்ற பெயரே பொருத்தமாகவே இல்லை. எனவே நிலவள வங்கி என்ற பெயர் மாற்றம் செய்வதிலே யாருக்கும் எந்தவித ஆட்சேபணையும் இல்லை. முன்பு கூட்டுறவுத்துறை அமைச்சராக இருந்து, இப்போது சட்ட அமைச்சராக இருக்கிற மாண்புமிகு திரு. மாதவன் அவர்கள் கூட்டுறவுத்

[*குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி* இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



1969 ஆகஸ்ட் 28] [திரு. என். எஸ். வி. சித்தன்]

துறையைப் பரிசீலிப்பதற்கும் இந்தத் துறை சம்பந்தப்பட்ட கருத்துக்களைச் சொல்வதற்கும் திரு. சந்தானம் அவர்களின் தலைமையின் கீழ் ஒரு குழுவை நியமித்தார்கள். எங்களுடைய தகவல்படி சந்தானம் குழு, அறிக்கை கொடுத்திருக்கிறது என்று தெரிகிறது. அதிலே அவர்கள் கூட்டுறவுத்துறையிலே என்னென்ன செய்யவேண்டுமென்று சொல்லியிருப்பார்கள். எனவே, அந்த அறிக்கையை அவையின்முன் வைத்துவிட்டு அதற்குப்பிறகு இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கலாம்.

ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு நில அடைமான வங்கி வருவதற்கு இந்தத் திருத்த மசோதா கொண்டுவரப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நில அடைமான வங்கிகளிலே காலம் தாழ்த்தப்பட்டு கடன் வழங்கப்பட்டு வருகிறது. ஒரு வட்டத்திற்கு ஒரு வங்கி என்ற திருத்தத்தைச் செய்வதைவிட விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற கடன்கள், காலதாமதம் இல்லாமல் விரைவில் பணம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சென்ற 8, 9 ஆண்டுகளாகவே விவசாயிகளுக்குப் போதுமான அளவில் கடன் கொடுக்கப்படவில்லை. இதைப்பற்றி டாக்டர் ஹாண்டே அவர்கள் கூறியபோது, சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு அதிகமாகவே பணம் ஒதுக்கியிருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 7, 8 மாதங்களாகவே கடன் சரியாக விவசாயிகளுக்குப் பட்டுவாடா செய்யப்படவில்லை. நான் பொறுப்பு ஏற்றிருக்கிற திருமங்கலம் கூட்டுறவு வங்கியிலே 7, 8 மாதங்களுக்கு முன் ரூ. 3,64,300-க்குக் கடன் மனுக்கள் போட்டும், பத்திரங்களெல்லாம் பதித்தும்கூட இன்னும் பணம் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. இந்த நிலையில் மேலும் மேலும் புதிதாக வங்கிகள் திறக்கப்படாவிட்டாலும், விரைவாகக் கடன் வழங்குவதற்கு வகைசெய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதற்காக, குறிப்பிட்ட காலவரையறை வைத்து, மனு போட்ட ஒன்றிரண்டு மாத காலத்திற்குள் பணம் கொடுக்கப்படவேண்டுமென்ற முறையில் ஏற்பாடு செய்யவேண்டும். இந்த மசோதாவை ஒவ்வொரு அங்கமாகப் பிரித்துப் பார்க்கிறபோது, இதிலே அரசாங்கத்தினுடைய பதட்ட நிலையைத்தான் காண்கிறோம். நில அடைமான வங்கியில் உள்ளவர்களையும், கூட்டுறவுத் துறையில் உள்ளவர்களையும் கலந்து அவர்களுடைய கருத்துக்களையும், பொது மக்களுடைய கருத்துக்களையும் கேட்டு அர அமா ஆராய்ந்து அதற்குப் பிறகு இதைக் கொண்டுவந்திருக்கலாம். இப்படி அவசரமாக இந்த மசோதாவைக் கொண்டுவருவதாலே இதில் புதிய நன்மை ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை.

நில அடைமான வங்கியில் குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு சலுகைகள் இருப்பதைப் பூராவும் மாற்றி ஆளும் கட்சியில் இருப்பவர்கள் சலுகைகள் அதிகமாகப்பெற திருத்தங்கள் செய்வதாகத் தெரிகிறது. தன் இச்சையாக இயங்கிக்கொண்டு

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1969 ஆகஸ்ட் 28

வருகிற ஸ்தாபனத்தைத் தங்களுடைய யதேச்சாதிகாரத்திற்குக் கொண்டுவருவார்களோ என்று கருதவேண்டியிருக்கிறது. எனவே கட்சிக் கண்ணோட்டத்தோடு இல்லாமல், எடுத்தேன் கவிழ்த்தேன் என்றில்லாமல், அலசி ஆராயவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொல்வார்கள் என்று எனக்குத் தெரியும். மத்திய அரசாங்கத்தினுடைய ஒப்புதலைப் பெற்றுத்தான் கொண்டுவந்தோம் என்று சொல்லலாம். மத்திய அரசினுடைய ஒப்புதலைப் பெற்றாலும்கூட, இதைப் பொறுக்குக் குழுவிற்கு விட்டு ஆர அமர அலசிப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவர் அவர்களே, கிராம மக்கள் தங்களுடைய கடன் வசதிகளைக் கூட்டுறவுத் துறையின் மூலம் பெற்று, தங்களுடைய வருவாயைப் பெருக்கிக்கொள்வதற்கேற்ற வகையில் கூட்டுறவு நில அடைமான வங்கிகள் சட்டத்திற்குப் பல திருத்தங்களைச் செய்து, திருத்த மசோதா கொண்டுவந்திருக்கும் முயற்சியை நான் பாராட்டுகிறேன்.

கூட்டுறவுத் துறைதான் இன்றைக்குக் கிராமப் புறங்களில் மக்களுக்கு வேண்டிய கடன் வசதிகளைக் கொடுத்து விவசாயத்தைப் பெருக்குவதற்கு உறுதுணையாக இருக்கிறதென்பதை இந்தச் சபை ஒருமனதாக ஒப்புக்கொள்ளும் என்று நான் நம்புகிறேன். இருந்தாலும், விவசாயத்திற்குத் தேவையான அத்தனை கடன் வசதிகளையும் செய்து கொடுக்கக்கூடிய நிலையில் இன்றைக்குக் கூட்டுறவு இயக்கம் இல்லை; அது அவ்வளவு சக்தி பெற்றிருக்கவில்லை. அதனால், தனியார்களையும் நம்பி வாழ வேண்டிய நிலையில் இன்றைக்கு விவசாயிகள் இருக்கின்றார்கள். அவர்களுடைய முழுத் தேவையையும் கூட்டுறவுத் துறையால் பூர்த்தி செய்ய முடியவில்லை. அரசாங்கம் இப்பொழுது மேற்கொண்டுள்ள இந்த முயற்சியின் பயனாக விவசாயத் துறையில் ஈடுபட்டிருக்கக்கூடிய அத்தனை மக்களுக்கும் தேவையான கடன் வசதிகளைக் கூட்டுறவுத் துறையே கொடுப்பதற்கான நிலையை எய்துவதற்கு ஒரு முன்னோடி ஏற்பாடு, முன் முயற்சி என்று இதை நான் கருதுகிறேன்.

இப்பொழுது இங்கு கொண்டுவந்திருக்கக்கூடிய திருத்த மசோதா, நில அடைமான வங்கிகள் சட்டத்திற்குரிய திருத்த மசோதாவாக இருக்கிறது. ஆனால், கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்திற்குக் கொண்டுவரப்பட்ட திருத்த மசோதா அல்ல. ஆகவே, இந்தத் திருத்தத்தின் மூலம் கூட்டுறவுத் துறையில் பெரியதொரு மாற்றம் ஏற்பட்டுவிடும் என்று நான் கருதவில்லை. மாற்றத்திற்கான ஒரு அடிப்படையை நாம் இதன் மூலம் ஏற்படுத்துகின்றோம் என்றுதான் பொருள். 'நில அடைமான வங்கி' என்பதை 'நில வள வங்கி' என்று பெயர் மாற்றம் செய்கின்றோம். பெயர் மாற்றத்தோடு சில திருத்தங்களையும் செய்கின்



1969 ஆகஸ்ட் 28] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

றோம். இன்றைக்கிருக்கும் அமைப்பு முறையை மாற்றி, புதிதாக, உழைப்பதில் ஆர்வமுள்ள இளைஞர்களை வைத்து, காரியங்கள் வேகமாக நடைபெறுவதற்கும், அவர்களுக்கு இருக்கின்ற 'ஏரியா ஆஃப் ஆபரேஷ'னைக் குறைத்து, சிறிய எல்லையில் அதிகக் கவனம் செலுத்தும் முறையிலும், நேற்று கொண்டுவந்த தீர்மானத்தின்படி இன்னும் அதிகப்படியான தொகைகளை நில வள வங்கிக்குக் கொடுப்பதற்கான வழிவகைகளைக் காண்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே, விவசாயிகளுக்கு நாம் கடன் வசதிகளை அளிக்கின்றபோது, கூட்டுறவில் இரண்டு ஏஜென்ஸிகள் இருக்கவேண்டியது அவசியந்தானா, நில வள வங்கி என்ற ஒன்றும், கூட்டுறவுச் சங்கம் என்ற ஒன்றும் தனித்தனியாக இயங்க வேண்டியது அவசியந்தானா, கிராம மக்கள் இரண்டு ஸ்தாபனங்களில் தங்களுடைய தேவைக்கு அணுக வேண்டியது அவசியம்தானா, ஒரே ஸ்தாபனத்திடம் தங்களுடைய தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளக் கூடாதா என்பதை அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

கிராமக் கூட்டுறவு நாணயச் சங்கங்களில் குறுகிய காலக் கடன்கள் கொடுக்கின்றார்கள். விவசாயிகள் உரம் வாங்கிக் கொள்வதற்கும், விவசாயச் செலவு செய்துகொள்வதற்கும் வேண்டிய கடன் வசதியை, மூன்று வருஷக் கடன், ஐந்து வருஷக் கடன் என்று அவர்கள் கொடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். இப்பொழுது யூனியன் மட்டத்தில் அமைக்கக்கூடிய இந்த நில வள வங்கி, விவசாயக் கிணறு வெட்டுவதற்கு, பம்ப் செட் வைப்பதற்கு ஆகிய இம்மாதிரி பல்வேறு காரியங்களை விவசாயிகள் செய்து கொள்ளுவதற்கு இந்த மசோதாவில் நாம் வகை செய்ய இருக்கின்றோம். இதைத்தான் நில அடைமான வங்கிகள் முன்பு செய்துகொண்டு வந்தன. இப்பொழுது கூட்டுறவு சென்ட்ரல் பாங்க் என்ற மத்திய சங்கம் இயங்கிக்கொண்டிருக்கிறது. அதன் நடவடிக்கைகளையும், நில அடைமான வங்கிகளினுடைய நடவடிக்கைகளையும் ஒன்றாக இணைத்து, ஒரே சங்கமாக யூனியன் மட்டத்தில் வைத்து, அதன் மூலமாக நீண்ட காலக் கடன்களையும் குறுகிய காலக் கடன்களையும் கொடுக்க ஏன் முயற்சி எடுக்கக் கூடாது? இரண்டு விதமான நிர்வாக இயந்திரங்களை வைத்துக் கொள்ள வேண்டியது இல்லை. நிர்வாகச் செலவுகளைக் குறைத்து விடக்கூடிய முறையில் இத்தகைய ஏற்பாட்டைச் செய்வதுபற்றி அரசாங்கம் ஆலோசிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். ஒருங்கிணைப்பதன் மூலம், நிர்வாகச் செலவுகளைக் குறைக்க முடியும். இப்படி ஒருங்கிணைக்கப்பட்ட யூனியன் லெவலில் உள்ள மத்திய சங்கம், கிராமத்தில் ஒரு கிளையை ஏற்படுத்தினால், அந்தக் கிராமத்திலிருக்கும் விவசாயி அங்கேயே தன்னுடைய கடன் தேவைகளையெல்லாம் பூர்த்திசெய்து கொள்ளலாம். அப்படியில்லாத நிலையில் யூனியனுக்குச் செல்ல வேண்டி ஏற்படுகிறது. கிராமத்திலுள்ள விவசாயி, அந்தக் கிராமத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர், செயலாளர்

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1969 ஆகஸ்ட் 28

ஆகியவர்களோடு மட்டும் தொடர்பு கொள்ளும் வண்ணம் ஏன் இவைகளையெல்லாம் ஒருங்கிணைக்கக் கூடாது என்று அரசாங்கம் யோசிக்கவேண்டும். அம்மாதிரி செய்வது நலமாக இருக்கும். நில வள வங்கியின் செயல்களையும் கூட்டுறவுச் சங்கத்தின் செயல்களையும் ஒன்றாக இணைத்து ஒரு காம்ப்ரஹென்ஸிவ் சட்டம் கொண்டுவர அரசாங்கம் முயற்சிக்க வேண்டும் என்று தாழ்மையோடு நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அதோடு மட்டுமல்ல. கிராமக் கூட்டுறவு சங்கங்களைப் பொறுத்த வரையில், ஐந்தாறு, பத்து சங்கங்களுக்கு ஒரு சூபர்வைசர் நியமிக்கப்பட்டு இருப்பதால், கடன் மனுக்களைப் பெற்று, விவசாயிகளுக்குக் கடன் வாங்கிக் கொடுப்பதற்குச் சிரமமாக இருக்கிறது. 'வயபிள் யூனிட்' என்ற வகையில் இரண்டு மூன்று கிராமங்களை இணைத்துவைத்து அதற்கு ஒரு சூபர்வைசர் நியமித்தால் நல்ல முறையில் இயங்க முடியும். நான் சற்று முன் குறிப்பிட்டபடி, இந்த இரண்டுவித சங்கங்களையும் ஒன்றாக இணைத்து, அதற்கு ஒரு 'பெயிட் செக்ரடரி'— ஜூனியர் இன்ஸ்பெக்டர் லெவலிலோ ஸீனியர் இன்ஸ்பெக்டர் லெவலிலோ நியமிப்பது நல்லதாக இருக்கும். கமர்ஷியல் பாங்கில் இருக்கும் ஏஜெண்டு எப்படி அந்த பாங்கு சம்பந்தமான எல்லா நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாளராக இருக்கிறாரோ, அம்மாதிரி இந்த இணைக்கப்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கும், இரண்டு, மூன்று கிராமங்களைக் கொண்ட ஒவ்வொரு வயபிள் யூனிட்டுக்கும் நியமிக்கப்படும் செயலாளரைப் பொறுப்பாக வைத்து, டைரக்டர்கள் போர்டை அந்தச் செயலாளருக்கு உதவிகரமாக இருக்கும்படிச் செய்தால், பணம் 'மிஸ்-யூஸ்' செய்யப்படுகிறது போன்ற தவறுகளுக்கு இடம் இல்லாமலிருக்க முடியும் என்பது என்னுடைய கருத்தாகும். இதையும் அமைச்சர் அவர்கள் புனர்பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமத்திலுள்ளவர்களுக்குப் பணத்தைக் கொடுப்பதற்காக வெளியிலே யாரிடத்திலாவது கடன் வாங்கிக் கொண்டுவந்து கொடுக்கும் நிலையில் இருக்கிறோம். இதையும் நாம் படிப்படியாகக் குறைக்கவேண்டும். 'கூட்டுறவு' என்னும் வார்த்தையின் உண்மையான அர்த்தத்தை மக்கள் புரிந்துகொள்ளச் செய்ய வேண்டும். நமக்கு இருக்கும் சக்தியை நாமே நமக்குத் தேவையான அளவு பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்னும் அந்த 'ஸ்பிரிட்' கூட்டுறவு இயக்கத்தில் இருப்பதாக நான் கருதவில்லை. கூட்டுறவு இயக்கத்தில் சேர்ந்திருக்கும் விவசாயி என்ன கருதுகிறான் என்றால், ஏதோ அரசாங்கம் எங்கிருந்தோ கொண்டுவந்து நமக்குக் கடனைக் கொடுக்கிறது என்று கருதுகிறானே தவிர, தன்னுடைய இயக்கம் என்ற ஸ்பிரிட் இன்னும் பரந்த அளவில் வளரவில்லை என்பதை நாம் எல்லோரும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். விவசாயிகள் அத்தனை பேரையும் கூட்டுறவு இயக்கத்தில் அங்கத்தினர்களாக்கிவிட்டோம் என்று நாம் பேசினாலும், கூட்டுறவினுடைய உண்மையான



1969 ஆகஸ்ட் 28] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

ஸ்பிரிட்டை எல்லோரும் உணர்ந்து கொண்டிருப்பதாக நான் கருதவில்லை, இது உண்மை. ஆகவே, என்ன செய்யவேண்டும்? கிராமங்களில் இருக்கின்ற வசதிகளையெல்லாம் ஒன்று திரட்டக் கூடிய சக்தியாக கூட்டுறவு இயக்கம் கிராமத்திலே ஏற்பட வேண்டும். பல்வேறு துறைகளில் நாம் முன்னேற்றம் கண்டிருக்கிறோம். விவசாயத்தைப் பெருக்கிக்கொண்டிருக்கிறோம், விஞ்ஞான ரீதியில் உற்பத்தியைப் பெருக்கிக்கொண்டிருக்கிறோம். இம்மாதிரி செய்யும்போது, பல்வேறு விவசாயிகளிடத்தில் பண வசதி போதவில்லையென்றாலும், ஒருசிலரிடத்தில் பண வசதி பெருகியிருக்கிறது என்ற கருத்தை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். ஆகவே, கிராமப் புறங்களில் இம்மாதிரி மீதம் ஏற்படும் பணத்தை அந்தக் கிராமத்தில் இருக்கும் கூட்டுறவு வங்கியில் போட்டு, தேவையானபோது திரும்ப எடுத்துக் கொள்வதற்கான ஒரு பழக்கவழக்கத்தைத்தான் நாம் கொண்டு வர வேண்டும். ஆகவே, கிராமங்களில் இருக்கும் பண வசதியையெல்லாம் ஒன்று திரட்டக்கூடிய ஒரு வங்கியாக, ஒரு ஸ்தாபனமாக இந்த இயக்கம் இயங்க ஆவன செய்ய வேண்டும். விவசாயிகளுடைய சக்தியைக் கொண்டே விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்கிக்கொள்ள இந்த இயக்கம் பயன்பட வேண்டும். இந்தத் திருத்த மசோதா அந்த வகையில் முதல் 'ஸ்டெப்' எடுத்து வைத்திருப்பதாக நான் கருதுகிறேன். அதை நோக்கி நமது மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் வேகமாக இந்தக் காரியங்களைச் செய்யவேண்டும். கிராமத்தில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கான வகையில், தங்களைத் தாங்களே வளர்த்துக்கொள்வதற்கான சக்தியை, எண்ணத்தை உண்டாக்குவதற்கு முற்படவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகளுக்கு இன்றைக்கிருக்கும் சங்கடங்களைக் குறைத்து, கடன் வசதிகளைப் பெருக்கவேண்டும். முன்னால் பேசிய உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள், அங்கீகரிக்கப்பட்டு பல மாதங்கள் ஆகியும் கடன்கள் விநியோகிக்கப்படவில்லை என்று. அந்த நிலை இருக்கக்கூடாது. நில அடைமான வங்கிகள் டிபெஞ்சர்ஸ் எழுப்புவதற்கு கவர்ன்மெண்ட் காரண்டி இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே, இனிமேல் அது நடக்காது என்பதற்கு சர்க்கார் உத்தரவாதம் கொடுக்க வேண்டும். டிபெஞ்சர்ஸ் மூலம் தொகை எழுப்புவதற்குப் பதிலாக டெபாசிட்களை ஈர்க்கும் வகையில் கிராம வங்கிகள் செயல்பட வேண்டும். இந்த வகையில் கிராம வங்கிகளை ஊக்குவிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டும். இதை முதல்படியாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த எண்ணத்தோடு இந்தச் சட்டத்தைக் கொண்டுவரும் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

DR. H. V. HANDE: While I appreciate the efforts taken by the Hon. Minister to make this amendment

and to help the small farmers, I am very sorry to find that no amendment has been introduced to incorporate the salient features of the Santhanam Committee's Report. The report has already been printed, though copies have not been circulated to the members. I am given to understand that the Government have taken a decision on some salient features of the Report. I am also given to understand that a few months ago or a few weeks ago the Government of Tamil Nadu sent a draft ordinance to the Central Ministry incorporating in it some of the salient features of the Santhanam Committee's Report, especially the recommendation that the term of office of the members of the board must not exceed two terms of three years each. (The Leader of the Opposition was seen talking to a Minister.) The Leader of the Opposition's talk is disburbing and I am not able to catch your ear and the ear of the Minister also. The most important point is that in this ordinance a section has been incorporated prohibiting members from being on the board for more than six years or two terms of three years each. I believe this ordinance was sent to the Centre. This news came out when the Hon. Mr. Gurupadaswami was in Madras City and he gave a press interview or addressed some meeting. It was also published in some newspapers that such an ordinance had been sent and that the Central Government was considering it sympathetically. Having drafted an ordinance and sent it to the Central Government, what does it mean if the Government do not propose to bring it before this House? Why should the Government treat this House so contemptuously? Why should they send an ordinance to the Centre and not think of bringing it in the form of a Bill? Normally, when an ordinance is promulgated, it is brought in the form of a Bill immediately after the Legislature meets and the approval of the Legislature is sought. It is really a point to which I take very serious objection. It is only an example to show that the Minister concerned has not bothered to take this Assembly into confidence. That is my serious charge against the Ministry.

*மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, அது என்ன 'பில்'? அப்படி ஒன்றும் போனதாகத் தெரியவில்லை. இரண்டு டெர்ம்ஸுக்குத்தான் இருக்க வேண்டும் என்று கோவாபரேடிவ் சொசைடி ஆக்டில் சேர்த்து அனுப்பியதாக எனக்கு இன்ஃபர்மேஷன் இல்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வது தவறானதாக இருக்கும். அங்கத்தினர் அவர்கள் எப்படித் தவறாகப் புரிந்துகொண்டு சொன்னாரோ? மத்திய அமைச்சர் அவர்களுடைய செய்தி பரிசீலிக்கப்பட்டது என்பது தான். எனக்குத் தெரிந்தவரையில், நம்முடைய அரசாங்கம் சந்தானம் கமிட்டி ரிப்போர்ட்டையொட்டி அப்படி ஒரு ஆர்டினன்ஸ் தயார் செய்யவில்லை.

Dr. H. V. HANDE: My point is that the Central Minister made a statement in Madras City and it has aroused some misgivings in the minds of the hon. Members and in the minds



of the people also. I do not know to what extent that ordinance is at variance with the Bill. My submission is that, when the ordinance has been sent to the Centre, the earliest opportunity should have been taken to bring it before the Legislature in the form of a Bill and its approval taken. Why was the ordinance not brought in the form of a Bill? Suppose the Assembly had not met. What would have happened?

*மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதை கன்கரன்ஸ் வாங்குவதற்கு அனுப்பி நாம் பிரசிடெண்டின் சம்மதம் வாங்க வேண்டும். நாம் பின்பற்றக்கூடிய கொள்கையை முன்கூட்டியே அனுப்பிவிட்டோம். இப்படி முதலில் கொடுத்துவிட்டால் பின்னால் தகராறு வராது. அதேபோல், நாம் அனுப்பியதை வேறுவிதமாக மாற்றியபிறகு இந்தச் சட்டமன்றத்திற்குக் கொண்டுவர உரிமை இருக்கின்றது. ஆர்டினன்ஸ் ப்ரொமல்கேட் பண்ணவில்லை. அவர்கள் சொன்ன மாறுபாடுகளைச் செய்தால் அவர்களுடைய கன்ஸெண்ட் கிடைத்துவிடும். இந்த இரண்டு டெர்ம்ஸுக்கும் மேலே நீடிப்பதை நீக்கிவிட அந்தச் சட்டம் கொண்டுவந்ததுபோலவே சொல்கிறார்கள். எனக்குத் தெரிந்தவரையில், அப்படி இல்லை. இந்த அரசாங்கம் முடிவு எடுக்கவில்லை. சட்டமன்றத்திலிருந்து மறைப்பதற்காக, விட்டுவிடுவதற்காக எதையும் செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Dr. H. V. HANDE: After the explanation of the Minister, I leave the controversy at that. I would like the Hon. Minister for Co-operation to tell us in his reply whether he is likely to bring forward another Bill incorporating in it the salient features of the Santhanam Committee's Report.

Another point which I think is very important is this. It is a laudable idea that we are trying to give representation for Scheduled Castes, Depressed Classes and the Backward Community. While doing this I want to strike a note of warning. There may be a tendency on the part of the department or the Ministry concerned to pack the whole board with persons who would accept whatever the Ministry says, with yes-men. That risk is there. Whichever be the ruling party or whoever be the minister there is the very serious risk of packing the board with yes-men who would simply sign whatever the minister says and who would have lost the freedom with which they should take decisions. We should take particular care to see that persons with independent mentality and who know the sphere are introduced. Otherwise there is a very serious possibility of giving representation to official patronage and for extra co-operative considerations which will make these boards a hotbed of nepotism and even unabashed corruption. This is a very serious possibility and this is a dangerous trend which should be avoided.

There are certain other things which I shall take up when I move my amendments. I do not want to take up the time of the House any more in the general discussion.

**திரு. க. இராமமூர்த்தி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவின்மீதான எங்கள் கட்சியின் சார்பில் கொடுக்கப் பட்டிருக்கின்ற திருத்தம், இது ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பப்பட வேண்டுமென்பது. அதை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மசோதா இன்றைய தினம் இந்தச் சூழ்நிலையில் தேவையா என்பதைக் குறித்து நாம் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இதைப் பொறுத்தவரையில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பின்னாலே கூட்டுறவுச் சட்டத்தையே மாற்றியமைத்து அல்லது ஒழுங்குபடுத்தி அல்லது புதிய கூட்டுறவுச் சட்டத்தை இந்தப் பேரவை நிறைவேற்றுகிற சூழ்நிலை இருக்கும் தன்மையிலே, நில அடைமான வங்கிகளுக்காக இன்றையச் சூழ்நிலையில், புதியதாக மசோதா தேவையா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த மசோதா எந்தக் காரணத்திற்காக, எப்படிப்பட்ட காரணங்களுக் காக வருகிறது என்பதையும் இந்தப் பேரவை பரிசீலிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவைக் கொண்டு வருவ தற்கான காரணங்களைச் சொல்கிற நோக்கில்,

" ... for the purpose of avoiding delay and expenses now incurred by agriculturists. This Bill seeks to implement the policy in the said note and provides for other incidental matters"

என்று சொல்லியிருக்கிறார்கள். இன்றையதினம் இருக்கிற சட்டத்திலே என்ன குறை இருக்கிறது? அந்தச் சட்டம் இந்தக் குறைகளைப் போக்க முடியாத நிலையில் இன்னின்ன இடத்தில் குறுக்கிடுகிறது என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்க வேண்டும். இன்னின்ன இடத்தில் இன்னின்ன குறைகள் உள்ளன என்பதைத் தெளிவாக மசோதாவில் சொல்லியிருக்க வேண்டும், ஆனால் அப்படிச் சொல்லவில்லை. இப்போது இருக்கின்ற சட்டத்திலே அப்படி ஒரு ஓட்டை இல்லை. இருக்கின்ற சட்டத்திலே, நாம் விரும்புகின்ற நோக்கங்களை அமல்படுத்துவதிலே வழிவகை காண வேண்டுமேயொழிய, சட்டம் குறுக்கிடுகிறது என்று இல்லாத ஒன்றைச் சொல்லக்கூடாது என்பதை இந்தப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இன்னொரு கற்பனையான எண்ணம் நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. அந்த எண்ணம் இன்றையதினம் இயங்குகிற கூட்டுறவு வங்கிகள் மூலமாகச் சிறு நிலச் சொந்தக்காரர்களுக்கு நிவாரணம் கிடைப்ப தில்லை. போதிய அளவில் கடன்கள் கிடைப்பதில்லை என்ற எண்ணம் நாட்டில் உலவவிடப்பட்டிருக்கிறது. அது மிகமிகத் தவறான எண்ணம் என்பதை என் கட்சியின் சார்பில் நான் தெரிவிக்க விரும்புகிறேன். இது சம்பந்தமாகச் சில புள்ளி விவரங்களையும் கொடுக்கவிரும்புகிறேன். 1—4—1968 முதல் 31—3—1969 வரை நில அடைமான வங்கிகள் எப்படிக் கடன்கள் கொடுத்து வந்திருக்கின்றன என்பதைப் பரிசீலிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். மூன்று ஏக்கர்வரை நிலமுள்ள சிறுநிலச் சுவான்தார்கள் 9,917 பேர்களுக்கு 2,90,00,589 ரூபாய் கட்டுகை நில





அடைமான வங்கிகள் அளித்திருக்கின்றன. மூன்று ஏக்கர் முதல் ஐந்து ஏக்கர்வரை நிலம் படைத்துள்ள சிறுநிலக்காரர்கள் 9,135 பேர்களுக்கு 3,52,33,539 ரூபாய் கொடுத்திருக்கிறது. ஐந்து ஏக்கர் முதல் பத்து ஏக்கர்வரை நிலம் உடைய 7,948 பேர்களுக்கு 4,11,95,565 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. பத்து ஏக்கர் முதல் 15 ஏக்கர்வரை நிலம் உடைய 2,700 பேர்களுக்கு 1,86,46,851 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. பதினைந்து ஏக்கர் முதல் 20 ஏக்கர்வரை நிலம் உடைய 1,018 பேர்களுக்கு 80,36,163 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. இருபது ஏக்கராவுக்கு மேல் நிலம் உடைய 1,091 பேர்களுக்கு 1,31,06,731 ரூபாய் கொடுக்கப் பட்டிருக்கிறது. எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால் இன்றைய தினம் இயங்குகிற நில அடைமான வங்கிகளின்மூலம் சிறுநிலக்காரர்கள் யாரும் பலன் பெறவில்லை என்கிற கருத்து தவறானதாகும். இப்போதுள்ள வங்கிகள் சிறப்பான முறையில் சிறுநிலக்காரர்களுக்கும் பயன்படத்தக்க வகையில்தான் தொண் டாற்றி வருகின்றன. அதே நேரத்தில் இன்னும் அதிகமான பேர் களுக்கு நன்மை கிடைக்கக்கூடிய வகையில் தொண்டாற்ற வேண்டு மென்று நாம் நினைப்போமானால் அதற்கு வேண்டிய வசதிகளை நாம் செய்து கொடுக்கவேண்டுமே தவிர, வேறு இப்படிப்பட்ட ஒரு மசோதாவைக் கொண்டுவரவேண்டிய அவசியம் இல்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லவிரும்புகிறேன். ப்ளாக் லெவல் பாங்க் என்று சொல்கிறார்கள். ஒவ்வொரு ப்ளாக்கிற்கும் ஒரு நில அடைமான வங்கி வைக்கவேண்டுமென்றால் அதற்கு வேண்டிய பண வசதி, அதற்கு வேண்டிய கட்டட வசதி ஆகியவற்றை நாம் செய்துகொடுக்க வேண்டும். அப்படிச் செய்துகொடுத்தால் இப்போதுள்ள சட்டப்படியே நாம் நினைக்கிற வசதிகளை மக்களுக்கு, ஏழை உழவர்களுக்குச் செய்துகொடுக்க முடியும். இதற்கென்று தனியாக ஒரு மசோதா தேவையில்லை. மேலும் இந்த மசோதாவிலும் அப்படிப்பட்ட ஒரு வழியும் இல்லை.

மேலும் இந்த மசோதா இந்த அவையில் அறிமுகம் செய்யப் பட்ட அன்று இருந்த சூழ்நிலை இன்றைக்குப் பெரும் அளவு மாறியிருக்கிறது. இதன்காரணமாக அரசாங்கத் தரப்பில் இருந்தே பல திருத்தங்கள் கொண்டுவரப்பட்டிருப்பதையும் பார்க்கலாம். ஆகவே இந்த மசோதாவிற்கு அவசியம் இல்லை.

இந்த மசோதாவில் இருக்கக்கூடிய சில குறிப்பிட்ட விதிகளைப் பார்க்கிறபோது எனக்கு ஒரு அச்சம் இருக்கிறது. இந்த இலாக்காவினர்—இந்தத் துறைக்குப் பொறுப்பேற்று இருக்கிற வர்கள்—இன்றையதினம் இந்த வங்கிகளை நடத்துகிறவர்களிடம் சில காரியங்களைச் செய்யச் சொல்லி, அவற்றை நடத்த முடியாத சூழ்நிலையை அவர்கள் எடுத்துக்காட்டிவிட்டார்கள் என்கிற கோபத்தின் மீது இப்படிப்பட்ட ஒரு மசோதா கொண்டுவரப் படுகிறதோ என்கிற ஐயத்தைச் சொல்லாமல் இருக்க முடியாது.

[திரு. க. இராமமூர்த்தி] [1969 ஆகஸ்ட் 28

அந்த அந்த ஷரத்து வருகிறபோது அதை நான் விரிவாகச் சொல்கிறேன். இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் இது தேவையற்ற ஒன்று. தேவையற்ற ஒன்று என்பதுமட்டும் அல்ல. எந்த நோக்கத்திற்காகக் கொண்டு வரப்படுகிறதோ அந்த நோக்கம் இதன்மூலம் ஈடேறப் போவதில்லை. இன்றுள்ள சட்டம் மூலமாகவே அதைச் செய்துகொள்ளலாம். ஆகவே இது தேவையற்றது. வாபஸ் பெறவேண்டும். இல்லையென்றாலும் இதை ஒரு பொறுக்குக் கமிட்டி பரிசீலிக்கின்ற அளவில் அனுப்பிவைக்க வேண்டுமென்று சொல்லி முடிக்கிறேன். வணக்கம்.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குமுன் பேசிய என் கட்சி உறுப்பினர் கூறிய கருத்துக்களை ஒட்டி எனது கருத்துக்கள் சிலவற்றை வைக்க விரும்புகிறேன்.

"*Apointment of Executive Officer and Manager.*—(1) The State Government may appoint an executive officer for the State Land Development Bank or a manager for any primary land development bank for the purpose of safeguarding the interest of the shareholders or members . . ."

என்று பிரிவு 3-ஸி-யில் போடப்பட்டிருக்கிறது. இந்த எக்ஸிக்யூடிவ் ஆபீசர்கள், மானேஜர்கள் எந்த அடிப்படையில் நியமிக்கப்படப் போகிறார்கள் என்பதைப் பார்க்கிறபோது அவர்கள் சர்க்கார் ஊழியர்களாக அமையப்போகிறார்களா அல்லது சர்க்கார் ஊழியர்கள் என்ற முறையில் இல்லாது தனியார்கள் எக்சிக்யூடிவ் ஆபீசர்களாகவும், மானேஜர்களாகவும் நியமிக்கப்படப் போகிறார்களா என்பதை அறியவிரும்புகிறேன். குறிப்பாக அப்படி வருகிறவர்கள் சர்க்கார் ஊழியர்களாக இருந்தால் ஓரளவு எந்த நோக்கத்திற்காகப் போடுகிறோமோ அது நிறைவேறலாம். அப்படியின்றித் தனியார்கள் நியமிக்கப்படுவார்கள் என்றால் அது உண்மையில் கட்சிநோக்கத்தோடு ஆற்றப்படுகிற பணியாகப் போய்விடும். ஏதாவது சொஸைடிகள் சரியான முறையில் நடக்கவில்லை என்றால் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள விதிமுறைகள் இடம் கொடுக்கிறபோது எக்சிக்யூடிவ் ஆபீசர்கள், மானேஜர்களை நியமிக்கவேண்டும் என்பது தேவைதானா என்பதை ஆட்சியாளர்கள் சிந்திக்கவேண்டும். இப்படி நியமிப்பது வங்கியின் நிர்வாகத்தில் தலையிடுவதாக ஆகாதா, அதனுடைய சுதந்திரத்தைக் குலைப்பதாக ஆகாதா என்பதையும் யோசிக்க வேண்டும்.

அடுத்தபடியாக தேர்தல் முறை. பிரிவு—பி-ல் The election of the members of the Board in respect of each district shall be held at a meeting of the presidents of the primary land development banks in that district, at such place and at such time as may be fixed by the State Government or any officer authorised by the State Government and shall be conducted in the manner prescribed."



1969 ஆகஸ்ட் 28] [திரு. டி. மார்டின்]

என்று இருக்கிறது. இதன்படி தேர்தல் நடக்கிற நேரத்தில் எல்லா ப்ரைமரி பாங்குகளுக்கும் தேர்தல் நடக்காது, ஒரு சில பாங்குகளுக்கு நடந்து ஒருசிலவற்றுக்கு நடக்காமல் இருந்தால் அந்த நேரத்தில் இந்தத் தேர்தல் நடக்குமா? அல்லது எல்லா ப்ரைமரி பாங்குகளின் தேர்தலும் நடந்து முடிந்த பிறகுதான் இந்தத் தேர்தல் நடக்குமா என்பதை விளக்கவேண்டும். ஆகவே இதையும் கவனித்துச் செய்யவேண்டுமென்று சொல்லி அமர்கிறேன்.

திரு. கொளத்தூர் கோதண்டம் : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நில வள வங்கி மசோதாவை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். முன்னாலே பேசிய அருமை எதிர்க்கட்சி நண்பர்கள் இந்த மசோதாவைப் பார்க்கிறபொழுதே இது அரசியல் கண்ணோட்டத்தோடு கொண்டுவரப்பட்டிருக்கிறது என்ற பெரிய குற்றச்சாட்டை ஆரம்ப முதல் கடைசி வரையில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். முன்னாலே பேசிய திரு. சித்தன் அவர்கள், இந்தத் துறை தன்னிச்சையாகச் செயல்படுகிறது என்றும் இது வருகிற காரணத்தினாலே விவசாயிகளுக்கு எந்தவிதமான நன்மையும் இல்லையென்றும் அவர்களுடைய கருத்தைச் சொன்னார்கள். இந்த மசோதாவானது ஊராட்சி ஒன்றிய எல்லைக்குட்பட்டுச் செயல்படுகின்ற அளவிலே செயல்படவேண்டுமென்ற எண்ணத்தாலே கொண்டுவரப்பட்டிருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் இன்றைய தினம் பிரைமரி லேண்ட் மார்ட்கேஜ் பேங்க்ஸ் என்று சொல்லக்கூடியவை தலைமையிடங்களிலே இருக்கின்ற காரணத்தாலே விவசாயிகள் கடன்கள் பெறவேண்டுமானால், திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னதைப்போன்று, 3 ஏக்கர், 5 ஏக்கர், 7 ஏக்கர், 10 ஏக்கர் என்ற விகிதாசாரம் இருந்தாலும் கூட சாதாரணமாகச் செல்லவேண்டிய தூரத்தையும் அதற்காகச் செலவிடவேண்டிய நேரத்தையும் மற்றவற்றையும் எண்ணிப் பார்க்கிறபோது ஊராட்சி ஒன்றியத் தலைமை இடங்களிலே இவற்றை ஏற்படுத்துவதில் எவ்வளவு நன்மைகள் ஏற்படப் போகின்றன என்பதைப் பார்க்கவேண்டும். அருமை நண்பர்களுக்கு ஏற்பட்ட அச்சம் எதன் காரணமாக ஏற்பட்டதோ தெரியவில்லை. இந்தத் திட்டம் செயல்படவேண்டுமென்று இந்திய அரசே தீர்மானித்தது என்று அவர்களே சொன்னார்கள். டில்லியிலே நடைபெற்ற கூட்டுறவுப் பதிவாளர்கள் மாநாட்டிலும், சென்னையிலே நடைபெற்ற எல்லா முதலமைச்சர்கள் மாநாட்டிலும், பெங்களூரிலே நடைபெற்ற கூட்டுறவுத் துறை அமைச்சர்கள் மாநாட்டிலும் இப்படி நில வள வங்கிகள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும், அதன் காரணமாக எல்லா விவசாயிகளுக்கும் இவை பயன்படவேண்டுமென்றும் கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

இந்த மசோதாவை நிறைவேற்றுவதன் காரணமாக ஏழை விவசாயிகள் நல்ல பல வாய்ப்புக்களைப் பெறுகின்றார்கள். சிறிய சிறிய விவசாயிகள் 3 ஏக்கர் மட்டுமல்ல, ஒரு ஏக்கர் வைத்திருக்

இன்றவர்கள்கூட கடன் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பாங்குகளில் என்ன என்ன முறைகள்மூலம் சிரமங்களைத் தவிர்க்கலாம் என்று பார்க்க வேண்டும். அவர்களுக்கு இருக்கிற எண்ணம் எல்லாம் யார் யார் வருவார்களோ என்பதுதான். மக்கள் யார் யாரைத் தேர்ந்தெடுக்கிறார்களோ அவர்கள்தான் வருவார்கள். அதுபற்றி அவர்கள் கவலை கொள்ளத் தேவையில்லை. பல கூட்டுறவு வங்கிகள் பல இடங்களிலே செயல்பட்டு வருகின்றன. நகரத்திலே கூட்டுறவு மத்திய பாங்கின் கிளை, அர்பன் பாங்கின் கிளை, லேண்ட் மார்ட்கேஜ் பாங்க் இவையெல்லாம் செயல்பட்டுக்கொண்டு வருகின்றன. இவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து ஒரு வங்கியின்கீழ் செயல்படுகிற வகையிலே கொண்டுவருவது நல்லது. அதிலே நீண்ட காலக் கடன்பற்றித்தான் சொல்லியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் குறுகிய காலக் கடன்கூட கொடுக்கக்கூடிய வகையில் ஏற்பாடு செய்யப்படுமானால் விவசாயிகள் நல்ல முறையில் கடன் வசதிகளைப் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

இறுதியாக என்னுடைய யோசனை, கூட்டுறவு வங்கிகளில் விவசாயத்திற்கு மட்டும்தான் கடன் கொடுக்கிறார்களே தவிர, மற்ற விவகாரங்களுக்குக் கடன் கொடுக்கக்கூடிய நிலைமை இல்லை. விவசாயிகள் தங்களுக்கு வேண்டிய கடனை நிலத்தை அபிவிருத்தி செய்வதற்கோ டிராக்டர்கள் வாங்குவதற்கோ அல்லது கிணறுகள் வெட்டுவதற்கோமட்டும்தான் பணம் கொடுக்கிறார்கள். ஒருவனுக்கு நிலம்மட்டும் இருந்து வேறு தொழில் செய்யவேண்டுமானால் நிலத்தை வேறு இடத்திலே வைத்து வட்டிக்குப் பணம் வாங்கும் நிலைமை ஏற்படுகிறது. விவசாயிகளுக்கு நிலத்தை ஈடு செய்து கொண்டு டிராக்டர்கள், மற்ற விவசாயக் காரியங்களுக்குப் பணம் கொடுப்பதைப் போல் மற்றக் காரியங்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இருக்கின்ற சட்டதிட்டங்களை மாற்றியமைத்து காலா காலத்திலே கடன்கள் விவசாயிகளுக்குச் சேரும்படி செய்வதற்கு ஊராட்சி ஒன்றிய அளவிலே இந்த நில வள வங்கிகளை உடனடியாக நிறுவுவதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. சி. கிருஷ்ணமூர்த்தி :** தலைவர் அவர்களே, இந்த நில வள வங்கி மசோதாவை ஆதரித்துச் சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். லேண்ட் டெவலப்மெண்ட் பாங்க் என்ற முறையிலே லேண்ட் மார்ட்கேஜ் பாங்க் ஆக இருந்ததை மாற்றித் திருத்தம் கொண்டுவந்திருக்கிறார்கள். இது கூட்டுறவு ஸ்தாபனத்திற்கு ஒரு முதல்படியாக அமைந்திருக்கிறது. இதற்கு முன்பு இருந்தது நில அடைமான பாங்க் என்பதுதான். மூன்று ஏக்கர், 5 ஏக்கர் என்றெல்லாம் முன்னாலே பேசியவர்கள் புள்ளி விவரங்கள் சொன்னார்கள். நிலம் இருப்பவர்களுக்குத்தான் முன்பு



எல்லாம் கடன் உண்டு. மூன்று ஏக்கர் நிலம் இருப்பவருக்குக் கடன் வழங்கலாம். ஆனால் 30 ஏக்கர் சாகுபடி செய்கிறவனுக்கு நில அடைமான பாங்கியில் கடன் வழங்க முடியாது. அதற்கும் கடன் கொடுக்கக்கூடிய முறையில் செய்கிற வகையில் நில வள வங்கி என்று இப்பொழுது மாற்றியமைக்கப்பட்டு இருக்கிறது . . .

**திரு. க. இராமமூர்த்தி :** ஒரு விளக்கம் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர்கள் பேசட்டும், பிறகு சொல்லுங்கள்.

**திரு. சி. கிருஷ்ணமூர்த்தி :** கூட்டுறவு ஸ்தாபனத்திலே நல்ல மாறுதல் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. கூட்டுறவு மானியத்திலே பேசும்பொழுது இந்தத் துறையிலே உள்ள சட்டதிட்டங்களை மாற்றியமைக்க வேண்டுமென்று எல்லா அரசியல் கட்சிக் காரர்களும் பேசினார்கள். இப்பொழுது முதல்படியாக நில வள வங்கி ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு ஒன்று என்ற முறையில் கொண்டுவரப்பட்டிருப்பதை நாம் பாராட்டவேண்டும். நில அடைமான வங்கி என்பது ஒரு தாலூகாவுக்கு ஒன்று இருக்கிறது. நீண்டகாலக் கடன் கொடுக்கும்பொழுது விவசாயிகளுக்குக் காலாகாலத்தில் கிடைக்கவில்லை என்ற புகார் இருப்பதை ஏற்றுக் கொள்கிற நேரத்திலே இந்த மாறுதலை எல்லோரும் வரவேற்க வேண்டும். இதை செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டும் என்று சொன்னார்கள். இப்படி ஒவ்வொன்றையும் நாம் செலக்ட் கமிட்டி என்று சொல்லி அனுப்பிக்கொண்டிருந்தால் எந்தக் காரியத்திலேயும் காலதாமதம் இருக்கும். மக்கள் பலனை அனுபவிக்க முடியாத நிலைமைக்கு அது போய்விடும். விவசாயிகளுக்குப் பல கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொடுக்க இருக்கிறார்கள். தாலூகாவுக்கு ஒன்று என்ற முறையில் நில அடைமான வங்கிகளை வைத்துக்கொண்டிருந்தால் அந்தத் தொகை விவசாயிகளுக்கு போய்ச் சேராது. பிறகு பழைய பையிலே புதிய ரசத்தை ஊற்றினால் பையும் பாழ்; ரசமும் பாழ்; என்பதைப் போன்று ஆகிவிடும். எனவே நல்லமுறையிலே உரிய காலத்திலே மக்களுக்கு அந்தப் பணம் கிடைக்கக்கூடிய முறையிலே இந்தத் திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால் நீண்ட காலக் கடன், குறுகிய காலக் கடன், மார்க்கட்டிங் சொஸைடி, மத்திய காலக் கடன் எல்லா வகையிலேயும் இந்த நில வள வங்கிகள் செயல்படும்படி செய்யவேண்டுமென்பதுதான். வங்கியில் எல்லாம் கூட்டுறவு சம்பந்தமான காரியங்களாக நடைபெற வேண்டுமென்ற கருத்து. அதைக் கொண்டுவருவதற்கு அடிப்படையாகத்தான் நிலவள வங்கி என்று மாறுபடுத்திக் கொண்டுவந்திருக்கிறார்கள். எதிர்க்கட்சி நண்பர்கள் சிலரும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அரசியல் நோக்கம் என்று சொன்னார்கள். தற்போது இருக்கிற நில அடைமான வங்கியில் நீங்கள்தான் இருக்கின்றீர்கள். அதிலே இருக்கின்றவர்கள் மீண்டும் தேர்தலுக்கு நின்று வரும்போது நீங்களும் வரத்தான்

[திரு. சி. கிருஷ்ணமூர்த்தி] [1969 ஆகஸ்ட் 28

போகிறீர்கள். இதிலே அரசியல் நோக்கம் இல்லை. லாண்டு மார்ட்கேஜ் பாங்கை நிலவள வங்கி என்று மாற்றும்போது அவர்களுக்கு ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது. நிலவள வங்கி அமைப்பதை செலக்ட் கமிட்டிக்கு விட்டுக் காலதாமதம் செய்யாமல் உடனடியாக மசோதாவை நிறைவேற்றிச் செயல் படுத்த வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மேலவைக்குச் செல்ல இருக்கின்ற காரணத்தால் நடைமுறை விதி 82-ன்கீழ் இப்பொழுது ஒரு அறிக்கையை அளிப்பார்கள்.

### 3. நடைமுறைக் கேள்விகள்.

### )ஒரு பொருள் குறித்த விவாதத்திற்கிடையில் வேறு பொருள் குறித்த விளக்க உரையை அமைச்சர் நிகழ்த்த அனுமதித்தல்.

THIRU K. VINAYAKAM : Sir, on a point of order. Whatever it is, he is going to intervene. The matter he is going to raise must be concerned with this Bill only and the Rules are very clear about it. We are in possession of this Bill and if he is going to say something about it we have no authority to say anything against it. Please show me the rules under which he can bring another matter which has nothing to do with the Bill under discussion.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 82-ம் விதியின்படி அமைச்சர் ஒரு அறிக்கையை பேரவைத் தலைவர் அனுமதி பெற்று அளிக்கலாம் என்று இருக்கிறது.

'A statement may be made by a Minister on a matter of public importance with the consent of the Speaker.'

என்று இருக்கிறது.

'There shall be no debate on such statement at the time it is made.'

என்றும் கூறப்பட்டிருக்கிறது. பேரவைத் தலைவர் அனுமதி பெற்றுக்கொண்டு வரலாம் என்று இருக்கிறது. இடையிலே கொண்டுவரக்கூடாது என்றெல்லாம் ஒன்றும் இல்லை.

உதாரணமாக, இரண்டாவது நிதிநிலை அறிக்கையை ஒட்டி மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். ஒரு நாள் கல்வி மானியம்பற்றிய விவாதம் காலை 9 மணிக்குத் தொடங்கிப் பிற்பகல் 1½ மணிவரை தொடர்ந்து நடைபெறுகிறது. அன்று அமைச்சர் அவர்கள் ஏதாவது அறிக்கை 82-ம் விதியின்கீழ் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் விவாதத்திற்கு இடையிலேயே அறிக்கையை அளிக்க வாய்ப்பு அளிக்கிறோம். கல்வி மானியம்பற்றிய விவாதம் நடைபெறுகிற காலத்திலே அந்த மானியப் பொருள்பற்றித்தான்



1969 ஆகஸ்ட் 28] [பேரவைத் தலைவர்]

அறிக்கை அளிக்க வேண்டுமென்று இல்லை. வேறு பொருள்பற்றி விதி 82-ன்கீழ் அமைச்சர் ஒரு அறிக்கையை அளிக்க அனுமதி தரப்பட்டிருக்கிறது. ஆகவே, இப்போது அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையை விதி 82-ன்கீழ் கொடுப்பதில் எந்தவிதமான முறை கேடும் இல்லை.

THIRU K. VINAYAKAM : But it must be a matter of public importance only. In his own interest he wants to go to the other House.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பொதுமக்களுக்குத் தேவையானவைதான் அறிக்கையாகக் கொடுக்கப்படும்.

**திரு. கோ. பூவராகன் :** சட்டசபையிலே ஒரு கன்வென்ஷன், மரபு இருக்கிறது. அந்த மரபையொட்டி நடப்பது சிறந்ததாக இருக்கும். சட்டத்தைப் பார்த்து நடப்பது என்று சொன்னால் பொருத்தமாக இருக்காது. மந்திரிகளுக்கோ, உறுப்பினர்களுக்கோ எந்தச் சமயத்தில் வேண்டுமானாலும் கருத்தைத் தெரிவிக்க உரிமை இருக்கிறது. ஆனால் நடக்கின்ற நிகழ்ச்சிக்கு இடையே குறுக்கிடக் கூடாது. அவ்வாறு குறுக்கிட்டால் அந்தப் பொருளை ஒட்டியதாக இருக்க வேண்டும். இதற்குச் சபாநாயகர் அவர்கள் விளக்கம் கொடுப்பார்களா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு விளக்கமும் கொடுத்தேன். பல முறை நிதிநிலை அறிக்கையின்பேரில் விவாதம் நடக்கின்ற நேரத்தில் ஒரு நாள் கல்விபற்றிய மானிய விவாதம் நடைபெறுகிறது என்று சொன்னால் அன்று அமைச்சர் அவர்கள் பொதுமக்களுக்குச் சொல்ல வேண்டிய முக்கியமான தகவல்களை அறிக்கை மூலமாகக் கொடுக்க விதிமுறைகளில் இடம் தரப்பட்டிருக்கிறது. இடையிலே குறுக்கிட்டு அவ்வாறு அறிக்கை அளிக்க அனுமதிக்கும் முறை இந்த அவையிலே கடைபிடிக்கப்பட்டு வருகின்ற ஒன்றுதான். அவ்வாறு கொடுக்கின்ற அறிக்கை, விவாதத்தில் இருக்கக்கூடிய பொருளாகத்தான் இருக்கவேண்டுமென்றில்லை, வேறு பொருளாகவும் இருக்கலாம். அமைச்சர் அவர்கள் 'மேலவைக்குச் செல்லவிருக்கிறார்' என்ற அந்தத் தொடரை வைத்துக்கொண்டு இவ்வாறு பிரச்சினையை எழுப்புகிறார்கள் என்று கருதுகிறேன். அது அல்ல காரணம். கொடுக்கக்கூடாது என்ற மரபு இல்லை; கொடுக்கின்ற மரபு இருந்திருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அமைச்சர் அவர்கள் 82-வது விதியின்கீழ் எப்போது வேண்டுமானாலும் அறிக்கை கொடுக்க உரிமை இருக்கிறது என்றார்கள். அது பப்ளிக் இம்பார்ட்டன்ஸ் ஆக இருந்து கொடுப்பதைப்பற்றி எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. மேல்சபை நடந்து கொண்டிருக்கிறது. அங்கும் அமைச்சர் அவர்கள் போகவேண்டும். ஒரு சந்தேகம். அங்கே உள்ள அவசரத்திற்காக முதலில் சட்டசபையில் இதைக் கொண்டு

வருகிறாரா? மேற்கு வங்காளத்தில் மேல்சபையே வேண்டாமென்று சொன்னார்கள். இங்கும் அப்படி வரப் போகிறதோ என்னவோ. மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய வகையில் பப்ளிக் இம்பார்ட்டன்ஸ் ஆக இருந்தால் சரி.

*திரு. கோ. பூவராகன்:* சபாநாயகர் அவர்கள் இவ்வாறு ஏற்கனவே நடந்திருக்கிறது என்று சொன்னார்கள். என்னுடைய நினைவு அப்படியல்ல. எப்போது இவ்வாறு ஒரு நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கும்போது இடையில் அது சம்பந்தப்படாத அறிக்கை அளிக்கப்பட்டது என்பதை சட்டசபை உறுப்பினர்களுக்கும், சபைக்கும் தெரிவித்தால் நல்லது. இப்போதே இல்லாவிட்டாலும் அடுத்த கூட்டத் தொடர் வரும்போதாவது தெரிவித்தால் நலமாக இருக்கும்.

THIRU T. MARTIN: Sir, I want to know how many times the rules could be suspended like this because now we are proceeding with the discussion on the Bill.

THE HON. THIRU K. A. MATHIALAGAN: The Minister has got the right to intervene with the consent of the Hon. Speaker.

THIRU T. MARTIN: I am addressing the Chair. I want to know from the Chair, how many times the rules could be suspended like this.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* இடையிலே குறுக்கிட்டு ஒரு அறிக்கை கொடுப்பதற்கு விதிகளில் இடம் தரப்பட்டிருக்கிறது. மானியக் கோரிக்கைகள்மீது விவாதம் நடைபெறுகின்ற நேரத்தில் ஒரு நாள் தொழில்பற்றிய மானியம் முழுக்க முழுக்க நடைபெறுகிறது. ஒருநாள் கல்விபற்றிய மானியம் முழுக்க முழுக்க நடைபெறுகிறது. முக்கியமான செய்தியைப்பற்றி அமைச்சர் அவர்கள் அறிக்கை கொடுக்க 82-வது விதி இடம் தருகிறது. இதிலே எந்தவிதமான மரபும் மீறப்படவில்லை. திரு. பூவராகன் அவர்களுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சியைப் பிறகு எடுத்துக் காட்டுகிறேன்.

*திரு. டி. மார்டின்:* தங்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அதே நேரத்தில் . . . .

Then how can he intervene and make a statement?

*திரு. நா. வீராசாமி:* ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். நீங்கள் ஒரு தீர்ப்புக் கொடுத்ததற்குப் பிறகு அதையே திரும்பத் திரும்பப் பேசுவது முறைதானா?

THIRU T. MARTIN: Sir, I am not questioning your ruling. I accept your ruling. But if this is extended. . . .

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* தவறாக எதுவும் நடக்கவில்லை என்று சொன்னேன். அதற்குப் பிறகும் 'தொடர்வது' என்று சொன்னால் எப்படி?



*திரு. டி. மார்டின்:* காலையில் கேள்வி நேரத்தை இல்லையென்று சொல்லிவிட்டீர்களே.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* இப்பொழுது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் விதி 82-ன்கீழ் ஒரு அறிக்கையை அளிப்பார்கள்.

### 4. நிதி அமைச்சரின் விளக்க உரை ஐந்தாவது நிதிக்குழுவின் பரிந்துரைகள்குறித்து.

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Sir, I rise to make a statement on the recommendations of the Fifth Finance Commission whose acceptance has been announced by the Government of India. At the outset, I may point out that the Government of Tamil Nadu is deeply distressed at the recommendations. In respect of devolution of major taxes like Income-tax, Excise and additional excise duties on Sugar, Textiles or Tobacco the percentage share of the State has declined. In respect of Income-tax, our share has declined from 8.34 per cent to 8.18 per cent; in respect of excise from 7.18 per cent to 6.5 per cent and in respect of additional excise duties, from 11 to 9.63 per cent. On top of this, the deficit grant for the five years 1969-1974 has also been reduced from Rs. 34 crores to Rs. 22 crores. Out of the total transfer of resources of Rs. 4,266 crores as a result of the award, this State is to get only Rs. 295 crores, i.e., 6.9 per cent as against 7.2 per cent under the previous award. As against a requirement estimated by us at Rs. 718 crores the Commission has awarded only Rs. 295 crores for the period 1969-1974. We are therefore seriously concerned to note that far from there being an improvement in the State's financial position, the State will run into serious financial difficulties as a result of the unfair and unfavourable settlement given by the Tyagi Commission and endorsed by the Government of India.

This is all the more surprising considering the liberality with which the Finance Commission has endowed certain States like Maharashtra, Gujarat, Bihar, Uttar Pradesh and Punjab with surpluses of the order of Rs. 1,200 crores as a result of its scheme of devolution. Instead of utilising the mechanism of fiscal devolution as an instrument of equalisation, some of the richer States have become richer in the process. The Government of Tamil Nadu is at a loss to know the exact basis on which the Commission framed its estimates for the State which has resulted in this scheme of devolution and deficit grant. We feel that instead of encouraging financial prudence and recognising the tax efforts of the State, the Finance Commission has penalised us for both. Our reading of the report shows that our legitimate plea for covering the cost of increasing of emoluments of our employees has not been covered by the award whereas similarly placed States who increased the emoluments before the award have been given suitable compensation. Our relatively economic levels of expenditure as a result of prudent

financial management have been taken as the basis for their forecasts and our bold tax effort for the Plan appropriated for the purpose of meeting the non-plan gap in the revenue account. The resulting situation has, in our view, placed us at a double disadvantage and very seriously handicapped our opportunities for development in the coming five years. The State Government therefore proposes to raise this matter at the highest level with the Prime Minister of India.

The State Government feels that the basis for the allocation of Central assistance for the Plan can no longer continue to be the same as now keeping in view the changed circumstances as a result of the Finance Commission's award. The surpluses that have now been given to a few favoured States should be taken into consideration and the pool of the central assistance for the rest of the States enlarged suitably. This issue gains particular significance in view of the fact that the central assistance for our Plan has been sharply cut down from Rs. 250 crores to Rs. 202 crores in the draft plan. We purpose to raise this issue also with the Planning Commission.

The State Government feels that the present unfortunate impasse is a result of a mechanical and unimaginative view of the problems of a federal economy and reiterates its suggestion that the whole problem be remitted to a highpowered Centre-State relations Commission.

DR. H. V. HANDE: Under Rule 83, sub-rule (4) I want to speak a few words. I think we are on the last day of this session. The Hon. Finance Minister has made an important statement, under Rule 82. To express the displeasure of the whole House at the cavalier manner in which this State has been treated by the Fifth Finance Commission, I think we may be allotted half a day or another day for discussion of the report of the Finance Commission. What they had given by way of drought relief, they have taken by this report. If we discuss the subject, we may express our displeasure and dissatisfaction at the decision of the Finance Commission.

முற்பகல் 10-00 திரு. பி. ஜி. கருத்திருமன்: தலைவர் அவர்களே, பப்ளிக் டிஸ்பார்ட்டன்ஸ் என்று சொன்னேன். சொல்வதுபற்றி ஆட்சேபணையில்லை. இது ஏற்கனவே பத்திரிகையில் வந்திருக்கிறது. ஒன்பது மணிக்கு அவர்கள் வந்தவுடன் கொடுத்திருக்கலாம். ஆனால், சபை நடவடிக்கைகளை இடைமறித்து கொடுத்திருக்கிறார்கள். இதன் மீது சபாநாயகர் அவர்கள் தீர்ப்பு கொடுக்கவேண்டும். பெரிய விஷயத்தைத் தனியாக வைத்துப் பேசுவதை விட்டு விட்டு மத்திய சர்க்காரின் மீது குற்றஞ்சாட்டும் வகையில் இது வந்திருக்கிறது. மத்திய சர்க்கார் மீது குற்றஞ்சாட்டுவதற்காக மத்திய சர்க்கார் அதைச் செய்துவிட்டார்கள், இதைச் செய்துவிட்டார்கள் என்று சொல்வதற்கு, இடையில் புகுவது சரியல்ல. 82-வது விதி என்றால் திடீரென்று யாராவது இறந்துவிட்டால் கொண்டுவருவது.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: இறந்த செய்தி அறிவிப்பது மட்டும் அதில் வருவது என்றில்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு அது நன்றாகத் தெரியும். முக்கியமான தகவலைக் கொடுக்க, 82-வது விதியின்கீழ் கொடுக்கப்படுகிறது. இறந்தவர் செய்தி பற்றிக் குறிப்பிடுவது மட்டுமல்ல, 82-வது விதியின்கீழ் வருவது. டாக்டர் ஹாண்டே அவர்கள் இதுபற்றி விவாதிக்க நேரம் தேவை என்று சொன்னார்கள். அதுபற்றி அவை முன்னவருடன் கலந்து கொண்டு என்ன செய்யலாம் என்று பிறகு சொல்கிறேன்.

THIRU K. VINAYAKAM: On a point of clarification, Sir. I am not going to raise a debate on what the Hon. Minister has said. What I say is, he must have made arrangements to circulate a copy of the Finance Commission's recommendations, to all of us. What he has said is an indictment against the Central Government not helping this State in their requirements. How can we agree with the Hon. Minister? We have not been given a copy of the recommendations of the Finance Commission.

THE HON. THIRU K. A. MATHIALAGAN: I shall make arrangements for it.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஹாண்டே அவர்கள் கருத்து வழங்குவதற்கு நேரம் இல்லை என்று சொன்னார்கள். அதற்கு வாய்ப்பளிக்க முடியுமா என்பதுபற்றி அவை முன்னவருடன் கலந்து கொண்டு தீர்ப்பளிக்கிறேன்.

THIRU K. VINAYAKAM: It is charging Government of India for their lapses. All of a sudden the Hon. Minister has launched an attack, a surprise attack on the Centre, in spite of their helping them during the recent drought. (Thiru Aladi Aruna: We are entitled for it) I know you got votes also. That apart, what I want to say is that the Hon. Finance Minister should have supplied us with a copy of the recommendations of the Finance Commission.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பு வேண்டுமென்று சொல்கிறீர்கள். அவை முன்னவருடன் கலந்து கொண்டு முடிவை அறிவிக்கிறேன்.

THIRU K. VINAYAKAM: Then let the Hon. Minister withdraw his statement. His statement is so damaging. In the interest of the State and unity of India, I say this. After all, we are also component parts of the State. He cannot run away with such a statement and asking us to gulp it.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை முன்னவருடன் கலந்து கொண்டு அறிவிக்கிறேன்.

THIRU K. VINAYAKAM: Till then, let not the statement be made public.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** குறுக்கே புகுந்து செய்வதுபற்றிச் சொல்லவில்லை, இதை சர்குலேட் செய்திருக்கலாம். சட்டசபை முடியும்போது ஸ்டேட்மென்ட் கொடுத்திருக்கலாம். கொள் என்றால் வாயைத் திறப்பது, கடிவாளம் என்றால் வாயை மூடிக்கொள்வது என்ற நிலை கூடாது. நான் சொல்வது . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதன் மீது விவாதம் தொடங்கமுடியாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஒரு சிக்கலில் கொண்டு வந்து வைப்பதில் சர்க்கார் கெட்டிக்காரராகயிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** சாதாரணமாக அமைச்சர்களுக்கு உள்ள உரிமையாகும் இது. ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை இந்த மன்றத்திற்கு அறிவிக்கவேண்டும். நேற்றுதான் அதிகாரபூர்வமாகக் கிடைத்தது. பத்திரிகைகளில் வந்தது அதிகாரபூர்வமற்ற தகவல். நகைச் சுவையாகச் சொல்வதுபோல் சொன்னார்கள். யாராவது செத்துப் போனால்தான் இவ்விதியின்கீழ் சொல்லலாம் என்று. இதுவும் இறந்துவிட்டதுதான். கூட்டாட்சி முறை செத்து விட்டது . . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கூட்டாட்சி முறை இறந்து விட்டது என்று சொல்கிறார்கள். It is against the Constitution. He must withdraw it. கூட்டாட்சி முறை இறந்துவிட்டது என்று சொல்கிறார்கள். அதுபற்றி உங்கள் தீர்ப்பு என்ன ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த ரிப்போர்ட்டை வைத்துச் சொல்கிறேன். கூட்டாட்சி முறை இறந்து விட்டது . . .

**திரு. கே. விநாயகம் :** எப்போது கருமாதி வைத்துக்கொள்ளப் போகிறீர்கள் ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அப்படி இறந்துபோய் விட்டது என்றால் ஒரு அனுதாபத் தீர்மானம் கொண்டு வாருங்கள். கூட்டாட்சி முறை இறந்துவிட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். அதன்மீது தங்கள் தீர்ப்பு என்ன என்பதை தயவுசெய்து அறிவிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது அரசியல் கட்சிக்காரர்கள் பேச்சு. அவைத் தலைவருக்கும் அதற்கும் சம்பந்தமில்லை. அவர்கள், இறந்து விட்டது என்று சொல்ல, எப்போது கருமாதி வைத்துக் கொள்ளப்போகிறீர்கள் என்று நீங்கள் கேட்க, இந்த வாதங்கள் உங்களுக்குள் நடக்கவேண்டியவை. அவை சபையில் சொல்ல வேண்டாத நிகழ்ச்சிகள். ஆகவே, அதுகுறித்து தீர்ப்பு கொடுக்க வேண்டியதில்லை.



## 2. அரசினர் மசோதா—தொடர்ச்சி.

### தமிழ் நாடு 1969-ம் ஆண்டு கூட்டுறவு நில அடைமான வங்கிகள் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 12/69).

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நில அடைமான வங்கிகள் (திருத்த) மசோதாவை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். நில அடைமான வங்கி என்பதை நிலவள வங்கி என்று மாற்றுவதை நான் பாராட்டுகிறேன். ஏனென்றால், அடைமான காலத்திலே யிருந்து வளமான காலத்திற்கு வந்திருக்கிறோம் என்பதை உணர்த்தவே நிலவள வங்கி என்ற பெயர் மாற்றம் என்பதை உண்மையிலேயே பாராட்டுகிறேன். இப்பொழுது ஏராளமான பணத்தை நாம் விவசாயிகளுக்குச் செலவழிக்கிறோம். அதுவும் விவசாயப் பெருங்குடி மக்களிடத்திலே இவ்வளவு செலவை நாம் செய்கிறபொழுது அவர்களுக்கு ஒரு பாங்கிங் ஹேபிட், அதாவது கொடுக்கல் வாங்கும் பழக்கத்தை பாங்கின் மூலம் ஏற்படுத்த ஊராட்சி ஒன்றிய அளவில் வங்கிகள் தேவை என்பதை மறுத்துப் பயனில்லை. இன்னொரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சிறு நிலச்சுவான்தாரர்களுக்கு உதவும் வகையிலும், தாழ்த்தப்பட்ட மக்களை அந்தப் பாங்குகளின் நிர்வாகத்திலே சேர்த்துக்கொள்ளும் வகையிலும் இது அமைந்திருப்பதைப் பாராட்டுகிறேன். பாங்குகளின் அமைப்பு முறையிலே நாம் எதிர்பார்ப்பது தமிழ்நாட்டிலே பொருளாதாரப் புரட்சியை உருவாக்கும் என்பதாகும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயிகளுக்கு அரசாங்கமே, அதாவது இந்தியப் பேரரசே செலவழிக்க எண்ணியிருப்பது 2,217 கோடி ரூபாய், விவசாயி களுக்கு வங்கிகளின் மூலமாகத் தர ( Institutional finance எண்ணியிருப்பது 1,450 கோடி ரூபாய். Agricultural Refinance Corporation மூலமாக 200 கோடி ரூபாய் தரத் திட்டமிட்டிருக்கிறார்கள். அக்ரோ-இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பொரேஷன் மூலமாக 250 கோடி ரூபாய் செலவழிக்கத் திட்டமிட்டிருக் கிறார்கள். Land Development Bank மூலமாக 200 கோடி ரூபாய் செலவழிக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். இப்படி ஏராளமான பணத்தைக் குறுகிய காலத்தில் கொடுக்க வேண்டு மென்றால், நாம் நிறைய ஊராட்சி ஒன்றிய அளவில் ஏற்படுத்தும் வங்கிகள் மூலமாகத்தான் தர முடியும். அதற்கான ஏற்பாடுகளை முன்னால் செய்து விட்டால், நிதி வசதியைப் பயன்படுத்தி நல்ல விவசாயத்தைச் செய்து கொடுக்க விவசாயிகளால் முடியும் என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக, பேங்குகளில் நிர்வாகஸ்தர்களை அமைக்கும் பொழுது சர்க்காரிலிருந்து அமைக்கப்பட்டாலும், இன்னும் மற்ற நிறுவனங்களிலிருந்தும் கொண்டு வரலாம். நான் ஒன்றைக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இப்பொழுது இருக்கும் லேண்ட் மார்ட்கேஜ் பாங்குகளில் சர்க்கார் அதிகாரிகளை மட்டும் போடுவதால் சில சங்கடங்கள் இருக்கின்றன. எனவே, வங்கிகளை

[திரு. எஸ். இராமச்சந்திரன்] [1969 ஆகஸ்ட் 28

நிர்வாகப் படுத்தும் அறிவும், அதற்கான பயிற்சியும், பக்குவமும் பெற்ற வெளியார்களைப் போட்டுத்தான் ஆகவேண்டும். அப்பொழுதுதான் வங்கிகள் நன்றாக நடைபெறும். சர்க்கார் துறையில்தான் நியமிக்கப்பட வேண்டுமென்ற கருத்து நடைமுறைக்கு ஒவ்வாதது, அது நல்ல கருத்தும் அல்ல. நான் சொல்வது Besides deputation, direct recruitment also must be there என்பதாகும்.

நம்முடைய எதிர்க்கட்சியிலேயுள்ள உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது, மாண்புமிகு திரு. மார்டின் அவர்கள் பேசும் பொழுது, நேரடியாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்று சொன்னார்கள். திறமைசாலிகளை நேரடியாக எடுத்துக் கொண்டாலும் அது நல்லமுறையிலே இருக்கும், அதில் எந்த விதமான அரசியலும் இல்லை என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

வங்கிகள், நிலமுள்ளவர்கள் மட்டும் பயன்படுத்தும் வகையில் அமைந்திருக்கின்றன. ஆனால் இப்படிப்பட்ட சாதாரணமாக உள்ள வங்கிகளின் நோக்கம், முன்பணமாகக் கொடுப்பதுபற்றி ஒன்றைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். குத்தகையின் மூலம் பயிரிடும் விவசாயிகள், சாதாரண விவசாயக் கூலிகள் இவர்களெல்லாம் நிலம் வாங்குவதற்கு எந்த பாங்கிலும் பணம் தர முடியவில்லை. எனவே, அவர்கள் வட்டிக்கடைக்காரர்களிடம் சென்று 4 வட்டி, 5 வட்டி என்று பணத்தைப் பெற்றுக்கொண்டு அதற்குப்பிறகு நிலம் வாங்க வேண்டியிருக்கிறது. முன் பணம் கொடுக்கும்பொழுது, நிலங்களை பாங்குகளே வாங்கி அதைத் தவணைக் காலங்களில் கொடுத்து, வருவாய் கிடைக்கும் காலங்களில் அடைக்கின்ற வகையில் வழிவகைகள் செய்ய முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும். ஹயர் பர்சேஸ் சிஸ்டம் மூலம் வீடுகள் கட்ட கடன் கொடுக்கிறோம். அதை 20 ஆண்டுகளில் திருப்பிக் கேட்கிறோம். அதேபோல் ஒரு லாரி வாங்குவதற்கோ, மெஷினரி வாங்குவதற்கோ, மோட்டார் கார் வாங்குவதற்கோ ப்ராபர்ட்டியை வைத்துக்கொண்டு கொடுக்கிறார்கள். அதைப் போலவே, நிலமற்ற விவசாயிகளுக்கு, குத்தகை விவசாயிகளுக்கு, ஏழை விவசாயிகளுக்கு, நிலத்தை குறைந்த வட்டிக்குக் கடனாகக் கொடுத்து, நிலத்தைச் சொந்தமாகத் தருவதற்கு ஏற்பாடு செய்து தர முடியுமா என்பதைக் கவனித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இப்படிப்பட்ட பாங்குகள் உண்மையிலேயே தாழ்த்தப்பட்ட, ஏழை எளிய மக்களை முன்னேற்ற, ஜனநாயக சோஷலிசத்தைக் கொண்டுவருவதற்கான முதல் நடவடிக்கை. ஆகையால், ஜனநாயக சோஷலிசத்தைப் பேசுபவர்கள் இதற்கு நிறைய ஆதரவு தருவார்கள் என்ற நம்பிக்கையோடு இந்த பாங்கு நல்ல வளம் பெற வேண்டும், நல்ல முறையில் நடைபெற வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.



[1969 ஆகஸ்ட் 28 [திரு. பி. ஜி. கருத்திருமன்]

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** சபாநாயகரவர்களே, இப்பொழுது கொண்டுவந்திருக்கும்படியான இந்த மசோதா ஜனநாயக சோஷலிசம் வருவதற்கு வர வேண்டுமென்று எதிர்க்கட்சியிலேயிருக்கும் அங்கத்தினர்கள் சொன்னார்கள். எப்பொழுது இந்த ஞானோதயம் உதயமாயிற்று என்று தெரியவில்லை. இப்பொழுதாவது ஜனநாயக சோஷலிசத்தைப் புரிந்துகொண்டு பேசுகிறார்களா, புரியாமல் பேசுகிறார்களா என்று விளங்கவில்லை. இருந்தாலும் பாதகமில்லை. சந்தர்ப்பத்திற்குத் தகுந்தவாறு பேசிக்கொள்ளலாம் என்று சட்டமன்றம் அனுமதிக்கிறது.

இந்த மசோதா இருக்கிறதே, இதை இவ்வளவு அவசர அவசரமாக, இவ்வளவு திடீரென்று இவ்வளவு நெருக்கத்திலே கொண்டுவரவேண்டிய அவசியமில்லை. அதற்குத்தான் நாங்கள் சிக்கல் என்று சொன்னோம். அமைச்சரவர்கள் அறிக்கையைச் சமர்ப்பித்தார்கள். நேற்றே முடிய வேண்டிய விஷயம் என்று சொன்னோம். இன்றைக்குக் கொண்டு வந்திருக்கும் இந்த மசோதாவின்மீது நான்கு நாட்கள் விவாதம் நடத்தினாலும்கூட, முடியாமல், விவாதங்கள் செய்ய வேண்டிய காரியங்கள், பொறுப்புக்கள் எல்லாம் இருக்கின்றன. மசோதாவின் முக்கியத்தைப்பற்றிச் சொன்னால், எந்த ஆதாரத்தை வைத்துக் கொண்டு பேசுகிறீர்கள் என்று சொல்லலாம். எங்களுக்கும் பொதுவாக, எல்லோரிடத்திலும் பழக்கம், தொடர்பு இருக்கிறது. அதிகாரிகளைச் சந்திக்கும் வாய்ப்பிருக்கிறது. சொல்லும் சந்தர்ப்பம் இருக்கிறது. மசோதா வருவதற்கு முன்பு சம்பந்தப்பட்ட கோவாப்பரேட்டிவ் ரிஜிஸ்திரார் அவர்களைக் கலந்தார்களா? அவர்களுடைய கருத்து இருக்கிறதா? மசோதா வருவதற்கு முன் யார் யாரைக் கலக்க வேண்டும், எந்தெந்த நிலையிலே கலக்க வேண்டும், யார் யார் அபிப்பிராயத்தைக் கேட்க வேண்டும், பொது ஜனக் கருத்து என்ன என்பது முக்கியம். அதைவிட்டுவிட்டு, எங்களுக்குப் பலம் இருக்கிறது, 138 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால், அது வேறு விஷயம். அது ஜனநாயகம் அல்ல, சர்வாதிகார ஜனநாயகம்.

இந்த மசோதாவைப்பற்றி முதலமைச்சரவர்களுடன் பேசும் பொழுது, இப்பொழுதிருக்கும் சலுகைகள் ஏழை விவசாயிகளுக்குக் கிடைக்காது, எனவே இப்பொழுதே நடத்தி விடலாம் என்று சொன்னார்கள். திருத்தத்தைப் பார்த்தால் அப்படி ஏழைகளுக்கு வங்கிகள் உதவி செய்ய வேண்டும். ஆனால், நில அடைமான வங்கிகள் மூலம் எல்லோருக்கும் வசதி கொடுக்க வேண்டுமென்ற நிலை அதில் இல்லை. அதிகாரிகளை எடுத்துக்கொள்ளவே இம்மாதிரி சட்டத்தைக் கொண்டுவந்தது, அரசியல் நோக்கத்தோடு தான். இதில் அரசியல் நோக்கத்தைத் தவிர, ஆளும்கட்சியானது ஆட்சியைப் பிடிப்பதற்காக, நில அடைமான வங்கியைக் கொண்டு வருவதைத் தவிர வேறு எந்த நோக்கமும் இல்லை என்று குற்றஞ்

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவர் அவர்களே, ஆன் எ பாயின்ட் ஆஃப் கிளாரிஃபிகேஷன். இந்த மசோதாவின்மீது பேசுகையில் ஆளும் கட்சி உறுப்பினரான திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இந்த மசோதாவே நிலவள வங்கிகள் என்ற அளவிலே வந்திருக்கிறது, இந்த மசோதா நிலமற்ற விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதற்கு வழிவகை செய்தாக வேண்டுமென்று சொன்னார்கள். இந்த மசோதாவிலே அது இடம் பெறவில்லை, அப்படி இதிலே இருந்தால் எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை. அதை அவர்கள் சொல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அப்படி இடம் பெறவில்லையென்ற அந்த ஒரு காரணமே போதும், இது செலக்ட் கமிட்டிக்கு அனுப்பப்பட வேண்டுமென்பதற்கு. ஏனென்றால் அதையும் சேர்த்து, செலக்ட் கமிட்டி மசோதாவிலே கொண்டுவரலாம். ஆகவே, நண்பர் அவர்கள் என்னுடைய கருத்தையும் ஆதரிக்கிறார்கள். அவர்கள் இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்புவதற்கு என்னோடு ஒத்துழைப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

அமைச்சர் அவர்கள் சென்ற தொடர் கூட்டத்திலேயே சொன்னார்கள். நான் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் ஒவ்வொரு நில அடைமான வங்கி ஏற்படுத்துவதற்கு வழிவகை செய்வேன். இல்லையென்றால் இந்தப் பதவியை விட்டு வெளியேறுவேன் என்ற உறுதியைத் தந்தார்கள். ஆனால் ஒவ்வொரு தொகுதியிலும் ஏற்படுத்தப்படவில்லை. ஒருவேளை அந்த நிலைமை வந்துவிடப் போகிறது என்ற பயத்திலே இந்த மசோதா வந்திருக்கிறதோ என்று தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்ற போது இந்த சட்டம் இனிப்பாக இருக்கிறது, ஆனால் உள்ளே மருந்து இருக்கிறது என்று சொன்னார்கள். மேலும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கிறேன் என்றும் சொன்னார்கள். ஆனால் அவர்கள், அருள்கூர்ந்து சந்தேகக் கண்கொண்டு பார்க்காமல், இதிலே உள்ளபடியே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்ற கருத்தை மட்டும் பார்க்கவேண்டும். இதைக் கொண்டுவந்ததைப் பற்றி அவர்கள் உயர்வாகவோ, அல்லது உயர்வாகப் பேசுகின்றதைப் போலவோ . . .

**திரு. கே. விநாயகம்:** சார், இது உள்நோக்கம் கற்பித்து . . .

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** ஆக, உயர்வாகவே சொன்னார்கள். மிக்க நன்றி.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** நான் இருக்கிற உண்மையை அப்படியே பேசினேன். நான் உண்மையாக அவர்களுடைய கெட்டிக்காரத்தனத்தைப் பற்றித்தான் பேசினேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இதுவரையிலே உண்மையாகவே என்னை உயர்வாகப் பேசினார்கள் என்று கேட்கும்போது என் நெஞ்சம் எவ்வளவு மகிழ்ச்சி அடையும் என்பதை நான் சொல்லவேண்டியதில்லை.





முதலிலே, என்னுடைய நண்பர் திரு. சித்தன் அவர்கள் சொன்னபோது, ஏற்கனவே சந்தானம் கமிட்டி ஒன்று இருக்கிறதே, ஆகையினால் அதன் அறிக்கை வரும் வரையிலும் காத்திருக்கக்கூடாதா என்று ஏதோ கேட்டார்கள். சந்தானம் கமிட்டியிலே அவர்கள் கேட்டது, டேர்ம்ஸ் ஆப் ரெஃபரன்ஸிலே எதைப் பற்றிச் சிபாரிசுகள் செய்யக் கோரினேமென்றால், எம்.சி.எஸ். ஆக்ட் என்ற கோவாப்பரேட்டிவ் சட்டம் பற்றியது. கோவாப்பரேட்டிவ் சங்கங்களுக்கு இரண்டு சட்டங்கள் இருக்கின்றன தமிழகத்திலே. ஒன்று, பொதுவான கூட்டுறவு சங்கச் சட்டம். அதிலே 122 பிரிவுகள் இருக்கின்றன. அவைகளுக்குத் திருத்தம் என்னென்ன வேண்டுமென்பதுதான் சந்தானம் கமிட்டியிடம் கேட்டுக்கொண்டது. ஆனால், பொதுவாக கூட்டுறவுத் துறையின் இயக்கத்தை பற்றியும், சொல்லச் சொல்லியிருந்தது. அவர்கள் அதைப்பற்றியும் கூறி இருந்தார்கள். ஆனால் டேர்ம்ஸ் ஆப் ரெஃபரன்ஸ் என்பதிலே அவைகள் இல்லை. இவர்களிடத்திலே சொல்ல விரும்புவது எல்லாம், பொதுவான கூட்டுறவு சங்கச் சட்டத்திற்கும் திருத்தம் ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது. அந்த சட்டம் நீண்ட திருத்தமாக இருக்கிறது. 1961-ல் எப்படி காங்கிரஸ் கட்சி அந்த சட்டத்தைத் திருத்தி அமைத்ததோ, அதற்குப் பிறகு உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்புகள், அந்த சட்டத்தில் உள்ள ஓட்டை உடைசல்களை எல்லாம் சுட்டிக்காட்டி இருக்கின்றன அல்லவா. அவைகளை எல்லாம் திருத்துகின்ற வகையிலேயும் சந்தானம் கமிட்டி அவர்கள் செய்த சிபாரிசுகளின் அடிப்படையிலும், அதே போல் மத்திய அரசு அமைச்சர்களும், மாநில அரசு அமைச்சர்களும் ஒன்றாகக் கூடிச் சில தீர்மானங்களை எடுத்தார்கள் அல்லவா. அந்த அடிப்படையிலும், ரிஜிஸ்டிரார் ஆப் கோவாப்பரேடிவ் சொசைட்டீஸ் மாநாடு இந்த ஆண்டு ஜூன் மாதம் நடந்ததல்லவா, அந்த மாநாட்டில் எடுத்த முடிவுகளின் அடிப்படையிலும் இவைகள் எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு அந்தத் திருத்தங்கள் இங்கே வரும். அந்த திருத்தச் சட்டம் வருகின்ற போது, அந்த திருத்தச் சட்டம் நீண்ட திருத்தச் சட்டமாக இருக்கும் என்ற எண்ணத்தினால் அதை ஆய்வுக் குழுவிற்கு அனுப்புவதற்கு நான் இப்பொழுது எண்ணி இருக்கிறேன். ஆனால் சின்னஞ்சிறு மசோதா என்று சொல்கின்ற போது. ஒன்றாகத் தொகுத்து, விளக்கத்தைச் சொல்லிவிட்டால், இதிலே ஆழமாகவோ, அல்லது நீளமாகவோ அல்லது பெரும் மாறுதல்கள் இந்த மசோதாவின் அடிப்படையில் இல்லை என்பது திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னபடி உண்மையாகவே இருக்கும் என்பதைத் தெரிந்துகொள்ள முடியும்.

எனது நண்பர் திரு. சித்தன் அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். கிளைகள் திறப்பதின் மூலமாகவே எப்படி விவசாயிகளின் தொல்லைகளை ஒழித்துக் கட்டமுடியும் என்று கேட்டார்கள். அந்தப்பற்றி விரிவாக ஆராய்ந்து, நல்ல முடிவுகள் எடுக்கப்

பட்டிருக்கின்றன. ஏற்கனவே, நான் சென்ற சட்டமன்றக் கூட்டத்திலே சொன்னேன், பிளாக்குகள்தோறும் அதாவது ஒன்றிப்புகள்தோறும் நாம் இந்தக் கிளைகளைத் திறப்பதன்மூலம் விவசாயிகளுக்கு அலேச்சலும் தொல்லேயும் செலவும் வெகுவாகக் குறையும் என்று. அது கொள்கை அளவிலே சென்ற மார்ச் மாதம் இந்த சட்டமன்றத்திலே வைக்கப்பட்டது. இப்பொழுது, அதற்குப் பிறகு ஜூன் மாதம் 31-ம் தேதி அன்று, ஜூலே மாதம் 1-ம் தேதி அன்று—சென்ற மாதம் 1-ம் தேதியன்று தான்—மத்திய அமைச்சர் களும், மத்திய அரசிலே கூட்டுறவுத்துறை அமைச்சரவர்களும் இந்த மாநிலத்திலுள்ள எல்லா அமைச்சர்களும் கூடிப் பேசி ஒருமித்த கருத்தைத் தெரிவித்தும், அதிகப்படியான கிளைகளைத் திறப்பதன்மூலம் தான் இந்த உழவர்களுக்கு—உண்மையாக இப்பொழுது அவர்களுக்கு—ஏற்பட்டிருக்கிற தொல்லேகளேயும் துயரத்தையும் நீக்க முடியும் என்று தீர்மானம் போடப்பட்டது. ஒரு வேளே நான் வாசித்தால் நம்புவீர்கள் நான் சொல்வதை. ஆகவே, அனுமதியோடு வாசிக்கிறேன். சந்தேகக் கண்ணேடு பார்க்கிறேன் என்று எதிர்க் கட்சித் தலேவர் அவர்கள் சொன்னதால், வாசித்துவிடுவது நல்லது. உங்களுக்கும் என்மீது நம்பிக்கை பிறக்க முடியும். இது ஒரு தீர்மானம் என்பதல்ல. இதற்குப் பெயர் பரிந்துரை என்பது. ஆனுலும் ஒருமித்த வகையில் ஒரு பரிந்துரையைச் செய்யும்போது, உள்ளபடியே அது தீர்மானந்தான்.

The land development banks should come as near to the cultivators as possible நில வள வங்கிகள் உழவர்கள் இருக்கும் இடத்திற்குப் போக வேண்டும். உழவர்கள், வேளாண்மை செய்பவர்கள், நெடுந் தொலேவு அலேந்து, வங்கிகளுக்குச் செல்ல வேண்டியிருப்பதால், அதிக சிரமங்கள் ஏற்படுகின்றன. ஆகவே,

by increasing the number of branches of the land development banks

நில வள வங்கிகள் உழவர்கள் இருக்கும் இடத்திற்குச் செல்வது, ப்ரைமரி பாங்கிகளேக் கூட்டுவதன் மூலம் வங்கிகள் கிராமத்திற்குச் செல்ல முடியும். அதே சமயத்தில் consistent with the viability standards அதுதான் நண்பர் திரு. இராமமூர்த்தி குறிப்பிட்டுச் சொன்னுர்கள். கிளைகளேத் திறந்து கொண்டு போகும்போது, அவை தன் காலிலே நிற்குமா என்று கவனித்துச் செய்ய வேண்டும் என்று சொன்னுர்கள். இப்பொழுதே அவைகள் போதுமான அளவில் விவசாயிகளுக்குக் கடன்கள் கொடுக்க முடியாமல், தன் காலிலே நிற்க முடியாமல் இருக்கின்றன என்றுர்கள். எது தன் காலிலே நிற்கக்கூடியது, ஒரு 'வயபிள்' என்பதற்கு இலக்கணத்தை வகுத்துக் கொடுத்திருக்கிறுர்கள். ஏதோ சந்தேகக் கண்ணேடு கொடுப்பதையெல்லாம் பார்க்க வேண்டாம். இங்கேயிருக்கிறது. வாசிக்கச் சொன்னுல் வாசிக்கிறேன். புத்தகத்தில் இருக்கிறது. வாசிக்க முடியும். 1968-ம் ஆண்டு சென்னேயிலே, முதல் அமைச்சர்கள், கூட்டுறவு அமைச்சர்கள்,





மத்திய சர்க்கார் அமைச்சர்கள், இவர்கள் கூடி, எது 'வயபிலிடி', நிலவள வங்கி தன் காலில் நிற்பது என்றுல் என்ன என்பதை விளக்க, ரூ. 20 லட்சத்திற்கு வரவு செலவு செய்யக் கூடியவைகளாக இருக்க வேண்டும், நிலுவை நிற்கக்கூடிய அளவு, ரூ. 20 லட்சமாக இருக்க வேண்டும். இப்பொழுது இல்லே யென்றுலும், ஒரு சில வருஷங்களில் அந்த அளவில் கடன் கொடுத்து வாங்கக் கூடிய வங்கிகள் தன் காலில் நிற்கக்கூடிய வங்கிகள் என்று இலக்கணம் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, நேற்றுத் தான் நீங்கள் அருள்கூர்ந்து ரூ. 75 கோடி அளவிற்கு அனுமதி அளித்திருக்கிறீர்கள். ரூ. 75 கோடியளவிற்குக் கடன் வழங்கப் போகிறது. அந்தக் கடனுக்கே நேற்றைக்குத்தான் அனுமதி அளித்திருக்கிறீர்கள். இருபது லட்சத்திற்கு நிலுவை என்றுல், அதை ஒரு ஐந்தால் பெருக்கினுல், எத்தனேயோ வங்கிகளுக்கு இடம் இல்லேயா? நம்முடைய தமிழகத்தில் 375 பிளாக்குகள் இருக்கின்றன. ஐந்தால் பெருக்கும்போது, எவ்வளவோ வருகிறது. (குறுக்கீடு) திரு. வீராசாமி, எனக்கு கணக்குத் தட்டுப்படும் போதெல்லாம், அவர்கள் சொல்லிக் கொடுப்பார்கள். நேற்றுத்தான் நீங்கள் அனுமதி கொடுத்திருக்கிறீர்கள். நண்பர் விநயகம் அவர்களுக்குச் சொல்லுகிறேன். (குறுக்கீடு : நீங்கள் பேசுங்கள்) ரூ. 75 கோடி அளவிற்கு அனுமதி அளித்திருக்கிறீர்கள். வங்கிகள் கொடுக்கும் பணமெல்லாம், ஏறத்தாழ எல்லாம், ரிசர்வ் பாங்கியில் கடனுக வாங்கி உழவர்களுக்குக் கொடுக்கிறேம். ரூ. 75 கோடி அளவிற்கு இந்த ஆண்டு உயரும் என்று நேற்றுத்தான் முறையான அனுமதி பெற்றேன். ரூ. 75 கோடி என்று சொல்லும்போது, ஒரு ரூ. 20 லட்சம் அளவில் கொடுத்தால், அது தன் காலில் நிற்கக்கூடியது. என்று தங்களுடைய (காங்கிரஸ்) அமைச்சர்கள் தான் முடிவு செய்திருக்கிறுர்கள். ஆகவே, 375 வங்கிகளுக்கு இப்பொழுதே இடம் இருக்கிறது. இன்னும் அதிகமாகவும் வர இடம் இருக்கிறது. நான் இன்றைக்குக் கொடுக்கக் கூடிய வாக்குறுதியெல்லாம், எந்த ஒரு கிளேயும் 'வயபிள்' ஆக, தன் காலில் நிற்கக் கூடியதாக இல்லேயென்றுல், அப்படிப்பட்ட கிளேயைத் திறக்க மாட்டேன் என்கிற வாக்குறுதியைக் கொடுத்தால், தங்களுக்கு மன நிறைவு கிடைக்குமா? கிடைக்கும் என்றுல், அந்த வாக்குறுதியை இப்பொழுதே கொடுக்கிறேன். தன் காலில் நிற்கக்கூடிய கிளேகளே மட்டும் திறக்க வேண்டுமே அல்லாது, வேறு இல்லே. நட்டம் வரும் என்றுல், யாருக்கு நன்மை செய்ய முடியும்? மக்களிடம் பொதுப் பணத்தை வாங்கி, வரி வாங்கி அந்தப் பணத்தை ஒரு சிலருக்குக் கொடுப்பதனுல் நட்டம் வருமானுல், அந்த நட்டத்தை மக்கள் தாங்குகிறுர்கள் என்று பொருள். அப்படிப்பட்ட நட்டத்தை உண்டாக்க மாட்டேன் என்கிற வாக்குறுதியைக் கொடுக்கிறேன்.

திரு. மாரிமுத்து அவர்கள் ஒரு முக்கியமான கருத்தைச் சொன்னுர்கள். ஏன் பற்பல பாங்குகள்? என்று கேட்டார்கள். உண்மை. பாங்கிகள் இரண்டு வகைப்படும். இன்றைக்கு நாம்

சாட்ட விரும்புகிறேன். முதலிலே நாமினேஷன் போட்டு இஷ்டம் போல் கோவாப்ஷன் செய்து கொள்ளலாம். எக்ஸிகியூட்டிவ் ஆபீசரை பாங்குகள் இஷ்டப்பட்டால் போட்டுக்கொள்ளலாம் என்றால், யார் பூனைக்கு மணி கட்டுவது? நேற்று முதலமைச்சரவர்களைச் சந்தித்து, இதை ஒற்றிப் போட வேண்டுமென்று சொன்ன நேரத்தில் எக்ஸிகியூட்டிவ் ஆபீசர் கிடையாது என்று பேசினார்கள். அப்படி இதிலே கிடையாது.

இதைக் கொண்டுவந்திருக்கும்படியான கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் சாதாரணமானவர் அல்ல, ரொம்ப கெட்டிக்காரர். எந்த விஷயத்தை எப்படிக் கொண்டுவரலாம் என்ற சாமர்த்தியத்தை பெற்றவர்கள். மிகவும் கெட்டிக்காரர். எதிலே, எப்படி, எதை வேண்டுமானாலும் செய்கிற சாமர்த்தியம் உள்ளவர். அது உலகமே அறிந்த விஷயம். தமிழ்நாட்டிற்கு நன்றாகத் தெரியும். அவருடைய சாமர்த்தியத்தைத்தான் சொல்லுகிறேன். அவருடைய சாமர்த்தியத்தை, நல்ல காரியத்தைப்பற்றிச் சொல்லும்பொழுது அவர்கள் அனுபவிக்கிறார்களா இல்லையா என்பதைப் பார்த்தேன். மிகவும் அனுபவித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். எங்களுக்குள்ள சந்தேகம் என்னவென்றால், அவர் கொண்டு வருவதெல்லாம் இரண்டு நோக்கங்களுடன் கொண்டு வருகிறார்கள். ஒரு நோக்கம், இதற்குப் பொதுமக்களுடைய ஆதரவு இருக்கிறது, நன்மை செய்கிறோம் என்று வெளியிலே காட்டுவது. 'ஷுகர் கோட்டெட் பில்' என்கிறார்களே, வெளியிலே இனிப்பாக இருக்கும் உள்ளே கசப்பாக இருக்கும். ஷுகர் கோட் கொடுப்பது, உள்ளே பூரா கசப்பாக இருக்கும். ஜனநாயக சோஷலிச சமதர்மத்தை ஏற்படுத்துவது, பாங்குகளைத் தேசிய உடைமைகளாக ஆக்குவது இது என்னும் ஷுகர் கோட். ஆனால் வேறு ஏதோ அரசியல் காரணம், கூட்டுறவிலே செல்வாக்குள்ளவர்களைத் தொலைத்து விடச் செய்வது. இது ஹிட்லரைக் கூட மிஞ்சி விட்டது. ஹிட்லர், நான் நேரடியாக இப்படித்தான் செய்கிறேன் என்று சொல்லிவிட்டுத்தான் செய்தான். இது ஹிட்லரைக்கூட மீறி விட்ட நிலையிலிருக்கிறது. (மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: ஒரு நாளைக்கு ஒரு ஹிட்லர் வருகிறதே!) அவர் என்ன சொல்லுகிறார் என்றால், என்னைத்தானே ஹிட்லர் என்று சொன்னீர்கள். அது எனக்காகத்தான் இருக்க வேண்டும், என்று கருதுகிறார்கள். நான் சொல்லுகிறேன், ஹிட்லர் நெம்பர் 2 என்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர்கள் உட்கார்ந்து கொண்டு பேசிக்கொண்டிருப்பதற்கு நாம் பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** பேசவில்லை அல்லவா? நானா பேசுகிறேன்? ஆகவே, இப்படிப்பட்ட சட்டத்தைத் தயவுசெய்து பொறுக்குக் கமிட்டிக்கு விட்டு, இன்னொன்றின் மூலமாக இந்த சர்க்கார் தப்பித்துக் கொள்ளலாம். விவசாயிகளுக்குக் கடன்





கொடுப்பதிலே ரூல்ஸ் மாதிரி போட்டு, கொடுக்கலாம் என்ற அதிகாரத்தை எடுத்துக் கொள்ளட்டும். அவர்கள் மேல் இருக்கும்படியான அனுதாபத்தை எடுத்துக்கொள்ளட்டும், அவர்களுடைய கஷ்டத்தை நீக்கவேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டார்கள் என்ற பெயரை எடுத்துக்கொள்ளட்டும். இதுமாதிரி சட்டத்தை வைத்துக் கொண்டு அரசினர் செல்லாமல் பொறுக்குக் கமிட்டிக்குச் செல்லவேண்டு மென்று பரிபூரணமாகச் சொல்கிறேன். அங்கு மெஜாரிட்டி இஷ்டப்படிச் செய்யட்டும். இந்த எக்ஸிக்யூடிவ் ஆபிஸர்களைப் போடுவதை எல்லாம் நிறுத்திவிட வேண்டும், நாமினேஷன் போடுவதை எல்லாம் எடுத்துவிட வேண்டும். இதையெல்லாம் எடுத்துவிடுவதாக இப்பொழுதே பதில் சொன்னால்தான் இந்த சட்டத்தை விவாதிப்பதற்கு நாங்கள் அனுமதிக்க முடியும். இல்லாவிட்டால், இவர்கள் போக்குப்படியே நடத்திக்கொள்ளட்டும் நாங்கள் வெளியே நிற்கிறோம். இவர்கள் நிறைவேற்றிக் கொள்ளட்டும். பிறகு பாக்கி இருக்கும்படியானவற்றிலே கலந்து கொள்ளும்படியான நிலையிலே இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவர்கள் ஏழை எளியவர்களுக்காகப் பேசுவதிலே கெட்டிக்காரர்கள். இவர்களைப் போல் விளம்பரம் கொடுக்க ஒருவன் இது வரையில் இல்லை. ஒருவன் தோன்றினான், கோயபல்ஸ் என்று. அவனையும் மிஞ்சிவிட்டார்கள் இவர்கள். ஆக, அவ்வளவு தூரம் குற்றச்சாட்டுச் சொல்லும்படியான நிலையிலே கெட்டிக்காரர்களாக ஆகிவிட்டார்கள். எங்களுடைய கட்சியினுடைய ஆர்வமெல்லாம் ஏழை எளியவர்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்பதுதான். பாக்கி எல்லோருக்கும் செய்கிறோம் என்று செய்துகொடுக்க வேண்டியதுதான். இருந்தாலும் கூட அதைச் சாக்காக வைத்து, எதையும் செய்யக் கூடாது.

ஏற்கனவே இருக்கும்படியான திட்டத்தை, தமிழ்நாட்டிலே தான் இந்த கூட்டுறவு சங்கம் மிகமிகச் சிறப்பாக இருக்கிறது என்பதை காலஞ்சென்ற, ஆசிய ஜோதி, பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் பாராளுமன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். அவ்வளவு சிறப்பாக அமைந்தது கூட்டுறவு இயக்கம், இந்த நில அடைமான வங்கிகள் திட்டம். (குறுக்கீடு) தவறு இருந்தால் நடவடிக்கை எடுக்கட்டும், வேண்டாமென்று சொல்லவில்லை. அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த திட்டத்தை மறைமுகமாக ஒழித்துக் கட்டுவதற்காகத்தான் இந்த மசோதா என்ற குற்றச்சாட்டை நான் சாட்டாமல் இருக்க முடியாது. ஆகவே, இது ஆற அமர இருந்து யோசிக்கவேண்டிய சட்டம், எல்லோரையும் கலந்து யோசிக்க வேண்டிய சட்டம், இந்த மாநிலத்திலுள்ள எல்லா வங்கிகளிலும் உள்ள பிரதிநிதிகளைக் கலந்து, அவர்கள் ஆலோசனைகளை எடுத்துக்கொள்ளவேண்டிய சட்டம். ஆகவே, பொறுக்குக் கமிட்டிக்குத்தான் விட்டாக வேண்டுமென்று கூறி, நான் உரையை முடிக்கிறேன்.

[திரு. சி. பா. ஆதித்தனார்] [1969 ஆகஸ்ட் 28

மசோதா கொண்டு வந்திருப்பது, பேசுவது, எதைக்குறித்து? நீண்ட காலக் கடன் கொடுக்கும் வங்கிகளைப் பற்றிப் பேசுகிறோம். இதற்கு 1934-ல் தனிச் சட்டம் ஏற்பட்டது. அந்தச் சட்டத்தின் திருத்தம் பற்றி அப்பொழுது பேசுகிறேன். பாங்குகள் லாண்ட் மார்ட்கேஜ் பாங்க்ஸ், குறுகிய காலக் கடன் கொடுப்பவை, நகரங்களில் கடன்கள் கொடுப்பவை, அர்பன் பாங்க்ஸ், வீடுகளுக்குக் கொடுப்பவை, ஹவுசிங் லோன்ஸ், இப்படிப் பல தரப்பட்ட பாங்குகள் இருக்கின்றன. அவர்கள் ஒரு நல்ல கருத்தைச் சொன்னார்கள், ஒரே ஊரில் நாலு கூட்டுறவு வங்கிகள் இருக்கின்றனவே என்று. ஒன்று நீண்ட காலக் கடன் கொடுப்பவை, இன்னொன்று குறுகிய காலக் கடன் கொடுப்பவை, மற்றொன்று, வீட்டின் மீது கடன் கொடுப்பவை, வேறொன்று நகரத்தில் கடன்கள் கொடுப்பவை, இப்படி நான்கு வகையான வங்கிகள் இருக்கின்றன. அவை ஒரே இடத்தில் தேவையில்லை, அவற்றை ஒருவகைப்படுத்த வேண்டும் என்றார்கள். அந்தக் கருத்து ஏற்கனவே கூட்டுறவு இயக்கம் பற்றி இருக்கிறது. அதை இன்றைக்கு இந்த மசோதாவில் ஆலோசிக்க இடம் இல்லை.

டாக்டர் ஹாண்டே ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதாவது, எந்த ஒரு நிர்வாகியும், வங்கிகளிலாகட்டும், கூட்டுறவுச் சங்கங்களிலாகட்டும், ஆறு வருஷத்திற்கு மேல் இருக்கக் கூடாது என்றார்கள். அது ஒரு நல்ல கொள்கை. அதை ஏன் அமுல்படுத்தக் கூடாது, இதிலேயே இடம் செய்யக் கூடாதா என்று கேட்டார்கள். ஆறு வருஷத்திற்கு மேல் ஒருவரை, நீண்டு நிலைத்து இருப்பவரை, 'ஆக்கிரமித்து' என்று சொல்வதைவிட, 'நிரந்தரமாக இருப்பவரை' என்று சொல்லலாம், அப்படிப்பட்டவரை நீக்க வேண்டும் என்றார்கள். அதே சமயத்தில், ஒருவருக்கு கூட்டுறவுத் துறையில் அனுபவம் ஆறு ஆண்டு கிடைத்தவுடனே, 'உன்னுடைய சேவை கூட்டுறவுச் சங்கத்திற்குத் தேவையில்லை, போ' என்று சொல்ல வேண்டுமா, என்ற எதிர் வாதமும் இருக்கிறது. அதோடு அப்படிப்பட்ட வகையில் சட்டத்தைச் செய்தால், அந்தச் சட்டம் செல்லுபடியாகுமா? ஆறு வருஷத்திற்கு மேல் ஒருவர் இருக்கக் கூடாது என்று சொன்னால், ஒருவருக்கும் மற்றவருக்கும் வேற்றுமை காட்டுவதாக இருக்கிறது என்று அந்த அடிப்படையில் வழக்கு கோர்ட்டுக்குப் போகாதா? இதையெல்லாம் அலசி ஆராய்ந்து பார்த்து, ஏற்றுக்கொள்வதா இல்லையா என்று முடிவு செய்து, பொதுக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வரும்போது, அதை ஆய்வுக் குழுவுக்கு அனுப்பி ஆராய்ந்து பார்க்க முடியும். பொது மக்களுடைய கருத்துக்கும் அனுப்பி, அதைத் தெரிந்து கொள்ள முடியும். டாக்டர் ஹாண்டே கூறிய கருத்து ஒரு நல்ல கருத்து, வரவேற்கக் கூடியது. ஒரு உண்மையைச் சொல்லி விடுகிறேன். பம்பாயில், அப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டு வந்து, நிறைவேற்றி, ஆறு வருஷங்களுக்கு மேல் ஆகியும், அமுலாக்க நாள் குறிப்பிடாமல், அப்படி அந்த நாள் குறிப்பிடுவதாக இருந்தால், கோர்ட்டுக்குப்



1969 ஆகஸ்ட் 28] [திரு. சி. பா. ஆதித்தனார்]

போவோம் என்ற அளவிற்கு அறிக்கை கொடுக்கப்பட்டு, அந்த நிலையில் இருக்கிறது. அந்தச் சட்டமும் இங்கே கையில் இருக்கிறது. அதையும் பார்க்க வேண்டும். என்ன ஆகிறது? கோர்ட்டுக்குப் போனால், விரைவில் முடியாமல், கொண்டு வந்தும், நிறைவேற்ற நாள் குறிப்பிடாமல் வைத்திருப்பதையும் பார்க்கிறோம்.

டாக்டர் . . . நண்பர் ராமமூர்த்தி . . . (குறுக்கீடு) இல்லை, டாக்டர் ஹாண்டே என்று ஆரம்பித்தேன், அதில் முதலில் டாக்டர் என்பதை விட்டு விட்டு மதிப்பிற்குரிய திரு. ராமமூர்த்தி என்று கொள்ள வேண்டும். திரு. ராமமூர்த்தி குறிப்பிடும்போது, சொன்னார்கள், 'இது தேவைதானா, அவசியம்தானா, இதில் புதிதாக ஒன்றையும் காணோமே?' என்றெல்லாம் சொன்னார்கள். அப்படி ஒன்றும் இல்லையென்று சொன்னால், அதைப் பொறுக்கு ஆய்வுக் குழுவுக்கல்லவா அனுப்ப வேண்டும்? உறுப்பினர் அவர்கள், 'இதனால் உழவர்களுக்குப் பணம் கிடைக்கச் செய்ய முடியுமா?' என்று கேட்டார்கள். உழவர்களுக்குப் பணம் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டுதான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக, திரு. மார்டின் அவர்கள் இரண்டொன்றைக் குறிப்பிட்டுக் கேட்டார்கள். நிர்வாக அதிகாரி என்றும், மானேஜர் என்றும் வங்கிக்கு நிர்வாகிகள் தேவைதானா என்று கேட்டார்கள். சில சில காரணங்களுக்காகத் தேவைப்படுகிறபோது இவர்களை நியமிக்கலாம். ஒன்றைக் குறிப்பாக எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஒரு பிரைமரி பாங்கில், நிலவள வங்கியில் வரவேண்டிய தொகை 15 சதவீதத்திற்கு, தொகை நிலுவையாக இருக்குமானால், அந்த வங்கிக்கு ரிசர்வ் வங்கியிலிருந்து மேற்கொண்டு கடன் வழங்க முடியாது என்று தெரிவித்திருக்கிறார்கள். இப்போது அப்படிப்பட்டவை 14, 15 வங்கிகள் இருக்கின்றன. ரிசர்வ் வங்கியின் திட்டத்தின்படி அவைகளைக் கலைத்துவிட வேண்டும், இல்லையானால் அவைகளுக்கு ரிசர்வ் வங்கியிலிருந்து பணம் கிடைக்காது. நாம் நம்முடைய அரசாங்கத்தின் பணத்தைப் பெருவாரியாகக் கொடுத்துவிடவில்லை. நாம் ரிசர்வ் வங்கியிலிருந்து கடன் வாங்கி, இந்த வங்கிகளுக்குக் கொடுக்கிறோம். நாம் இந்த வங்கிகளுக்கு ரூ. 4.6 கோடி அளவிற்குப் பணத்தைக் கொடுத்து, அதைப்போல மூன்று மடங்கு பணத்தை ரிசர்வ் வங்கியிலிருந்து பெற வழி செய்திருக்கிறோம். எந்த ஒரு வங்கியில் நிலுவை 15 விழுக்காடு இருக்குமானால் அதற்கு மேற்கொண்டு ரிசர்வ் வங்கியிலிருந்து பணம் கிடைக்க முடியாத நிலைமை ஏற்படும்போது, நாம் என்ன செய்ய முடியும்? அப்படிப்பட்ட வங்கிகளைக் கலைத்துவிட வேண்டுமென்பது, ஜனநாயக சோஷலிசத்திலே நம்பிக்கையுள்ள எனக்கு நம்பிக்கையில்லை. தேவையானபோது ஒரு மானேஜரைப் போட்டு பணம் வசூல் செய்யவேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது.

இரண்டாவதாக, திரு. மார்டின் அவர்கள் தேர்தல் முறையைப் பற்றிக் கேட்டார்கள். இந்த விஷயம் ஏற்கெனவே அமைச்சர்கள் மாநாட்டில் முடிவெடுக்கப்பட்டுவிட்டது. நான் அமைச்சர்கள் என்று சொல்லும்போது, தமிழக அமைச்சர்களைப்பற்றிக் குறிப்பிடவில்லை. தமிழக அமைச்சரவையிலே நான் சிறியவன். சென்ற ஆண்டிலே எல்லா மாநிலங்களின் கூட்டுறவு அமைச்சர்கள், பெருவாரியான காங்கிரஸ் மாநிலங்களிலுள்ள கூட்டுறவு அமைச்சர்கள், மத்திய அமைச்சர்கள் எல்லோரும் சேர்ந்து எடுத்த முடிவில், தேர்தல் நடத்துவது சங்கத்தின் தலைவர் கையில் விடப்படாமல், ஒரு தனி அதிகாரி கையில் விடப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டது. அதாவது மகாராஷ்டிரத்தில் நடந்தபடி, கலெக்டர் அவர்கள்தான் தேர்தலை நடத்த வேண்டும். அந்தந்த மாவட்டத்திலிருக்கிற பிரதிநிதிகள் ஓட்டுக்களைப் போட்டுவிடுவார்கள். இதனால் செலவு குறைவாகவும் இருக்கும், தேர்தல் ஒழுங்காகவும் இருக்கும்.

அடுத்தபடி, திரு. கொளத்தூர் கோதண்டம் அவர்களும், திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் எவ்வளவோ பெரிய நன்மைகளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இதை நல்லெண்ணத்தோடு வரவேற்றார்கள். அவர்கள் நியமனம் பற்றிச் சொன்னார்கள். நியமனம் என்பது நான் சொன்னது அல்ல. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே 1961-வது வருட சட்டத்திலேயே அது இருக்கிறதே, அதற்கு நாம் என்ன செய்வது?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி செய்ததெல்லாம் தவறு. நீங்கள் தனியாக உங்களுடைய தீட்சண்யத்தை உபயோகப்படுத்திச் செய்யுங்களேன். அல்லது காங்கிரஸ் கட்சி செய்ததை நாங்களும் செய்கிறோம் என்று சொல்லுங்கள். ஒரு நேரத்தில் காங்கிரஸ் கட்சியை மட்டம் தட்டிப் பேசிவிட்டு, மற்றொரு இடத்தில் காங்கிரஸ் கட்சி செய்தது, அதனால் நாங்கள் செய்கிறோம் என்கிறீர்கள். இந்த ஞானோதயம் எப்போது வந்தது?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி செய்த பல நல்ல காரியங்களில் இது ஒன்று. (காங்கிரஸ் தரப்பில் ஆரவாரம்.) இதில் நியமனம் எதற்காக என்பதைக் குறிப்பிட்டிருக்கிறோம். ஒன்று, ரிஜிஸ்ட்ரார் ஆஃப் கோவாபரேடிவ் சொசைடீஸ், மற்றும் இரண்டு பேரை கடன் பத்திரங்களுக்காக நியமிக்கிறோம். மேலும் சிறிய விவசாயிகளுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும், சமுதாயத்தில் பெருவாரியானவர்களுக்கும் உதவ வேண்டுமென்ற எண்ணத்தில் நியமனம் செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் சொன்னதாக நீங்கள் கருதிவிட வேண்டாம். மத்திய அமைச்சர்களும், பெருவாரியான காங்கிரஸ் மாநிலங்களிலுள்ள அமைச்சர்களும் கூடி எடுத்த முடிவை அடியேன் நிறைவேற்ற முயலுகிறேன்.





ஆகவே, அருள்கூர்ந்து சந்தேகக் கண்கொண்டு பார்க்க இடமில்லை. 45 கோடியை 65 கோடி ரூபாயாக ஆக்கி, இதை உழவர்களுக்குப் பயன்படவும் செய்கிறோம் என்றால், இது அரசியல் நோக்கமாக இருக்கும் என்று யாரும் எண்ணவேண்டாம். கூட்டுறவுத் துறையிலே நிலவள வங்கிகளின் நோக்கம், விவசாயிகள் இன்றைக்குப் படுகிற தொல்லைகள் நீக்கப்பட வேண்டும் என்பதுதான். நிலவள வங்கிகள் எல்லாம் கிராமத்திற்குப் போக வேண்டும், விவசாயிகளுக்கு உதவ வேண்டும் என்று பெரிய பெரியவர்கள் எல்லாம் சொன்னதையடுத்து, நாம் செய்கிறோம். ஒரு உழவன் படுகிற கஷ்டத்தைத் தீர்ப்பது அரசியல் நோக்கம் என்று சொன்னால் அது அரசியலாகவே இருக்கட்டும். நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். பொதுமக்கள் என்ன சொல்வார்கள்?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய தனிப்பெரும் சாமர்த்தியத்தைக் காட்டுவதாக எண்ணிக்கொண்டு, இதை அரசியல் நோக்கம் என்று பொதுமக்கள் எண்ணிக்கொண்டால், ஏற்றுக் கொள்கிறேன் என்கிறார்கள். அமைச்சர் அவர்கள்; மேலே சர்க்கரையைப் பூசி, உள்ளூர கொஞ்சம் கசப்பை வைத்திருக்கிறார்கள் என்று சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவர் அவர்களே, இதன் நோக்கம் என்னவென்றால், கிராமப்புறத்தில் உள்ள உழவர்களுக்கு இருக்கின்ற ஏதாவது தொல்லையை நீக்க இதில் இடமிருக்கிறதா என்பதுதான். இதில் அரசியல் இருக்கிறதென்றால், இருந்துவிட்டுப் போகட்டும். நல்ல, பழுத்த அரசியல்வாதிகள், மத்தியிலே அமைச்சராக இருக்கிறவர் ஏற்றுக்கொள்கிறார். அவருடைய பெயரை நான் குறிப்பிட விரும்பவில்லை. மிகப் பெரியவர், மத்தியிலே அமைச்சராக இருக்கிறவர் என்று சொல்கிறேன். அவருடைய பெயரை விட்டுவிட்டதற்குக் காரணம் அவருடைய பெயரைச் சொன்னால் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தவறாக என்னை நினைத்துவிடக்கூடாதே என்பதற்காகத்தான். (திரு. பி. ஜி. கருத்திருமன்: அவர் பெயரை நீங்கள் குறிப்பிடலாம்.) கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அந்தப் பெரியவருடைய பெயரைக் குறிப்பிடுங்கள் என்று அனுமதி அளித்துவிட்டார். அந்தப் பழுத்த அரசியல்வாதி, பெரியவர், திறமைமிக்க திரு. ஜகஜீவன்ராம் அவர்கள், இதில் அடங்கியிருக்கும் பிரிவுகள் இன்றியமையாதவை என்று குறிப்பிட்டிருக்கிறார்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அவர் சொல்வதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** அதற்குத்தான் பெயரைச் சொல்ல நான் தயங்கினேன். அவர்கள் எல்லாம் சொல்லியவற்றை 'அரசியல்' என்று கருத வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

45 கோடியாக இருந்தது 70 கோடியாக உயர்ந்திருக்கிறது. சுமார் முப்பது கோடி ரூபாய் அளவில் அதிகப்படியாகப் பணம் கிடைக்கச் செய்வதில் அரசியல் நோக்கம் இருக்கிறதென்றால், அது அரசியலாகவே இருக்கட்டும். நான் சொல்லிக்கொள்வதெல்லாம்.

“இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு”

என்பதுதான். ரிசர்வ் பாங்க் பணம் கொடுக்கிறார்கள். அதைப் பெற்று, கிராமப்புறங்களில் துன்பத்திலும், துயரத்திலும் வாடிக் கொண்டிருக்கும் உழவர்களுக்குக் கிடைக்கச் செய்வதில் நாம் வெற்றி பெற்றுவிட்டால், நான் சிறந்த பயனை, நான் சிறந்த வெற்றியைப் பெற்றுவிட்டதாகக் கருதி மகிழ்ச்சியடைவேன். ஏழு பிரிவுகளைக் கொண்ட மசோதாவை இன்னும் விரிவாக ஆராய பொறுக்குக் குழுவுக்கு அனுப்பச் சித்தமாக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Sir, may I know from the Hon. Minister, what are the contents of the Ordinance that the Tamil Nadu Government had sent to the Central Government and whether there is a great deal of deviation? Will the Hon. Minister please give details about it?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ஏற்கனவே அவசரச் சட்டமாக எதைக் கொண்டுவர விரும்பினோமோ அதுதான் மசோதா உருவில் வந்திருக்கிறது. திரு. இராமமூர்த்தி அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, சில திருத்தங்கள் புதியதாக நானும் ஆராய்ந்து பார்த்து அவை அவசியம்தான் என்று கருதிய படியால் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்த இரண்டொரு திருத் தங்களைத் தவிர மற்றவை எல்லாம் அவசரச் சட்டத்தில் இருந்த படியேதான் இருக்கின்றன. அந்த அவசரச் சட்டத்தை மத்திய அரசாங்கத்தின் கூட்டுறவுத்துறை ஒப்புக்கொண்டது. சமுதாயத் துறை ஏற்றுக்கொண்டது. விவசாயத்துறை ஏற்றுக்கொண்டது. சட்டத்துறையும், நீதித்துறையும் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. அது நமக்குக் கிடைப்பதற்குச் சிறிது காலம் ஆகிவிட்டதால் அவசரச் சட்டமாக வராது—இந்த இரண்டு திருத்தங்களையும் சேர்த்து மசோதாவாக இந்த அவைக்கே கொண்டுவர முடிவு செய்து இப்போது பேரவைமுன்பு வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி: இந்த மசோதாவின் நோக்கமே உழவர்களுக்கு நன்மை செய்வதுதான் என்று சொன்னார்கள். ஒரே ஒரு விளக்கத்தை மட்டும் நான் அமைச்சரிடம் கேட்கிறேன். இந்த மசோதாவில் உள்ள எந்தப் பிரிவு நம்முடைய நோக்கத்திற்கு வகை செய்கிறது? ஏற்கனவே இருக்கிற சட்டத்தின் எந்த எந்தப் பிரிவுகள் இந்த நோக்கத்திற்குத் தடையாக இருக்கின்றன என்பதை விளக்குவார்களா?



மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: கிட்டத்தட்ட இந்த மசோதாவில் உள்ள ஒவ்வொரு பிரிவும் நம்முடைய நோக்கத் திற்கு வழி செய்கின்றன. குறிப்பாக மானேஜர்கள், எக்சிக்யூடிவ் ஆபிசர்கள் ஏன் போடவேண்டும் என்றார்கள். பதினைந்து பேர் களிடம் இருந்து கொடுத்த கடன் வராது நிலுவை நிற்குமானால் அந்தக் கிராமத்தில் உள்ள மற்றவர்களுக்குக் கடன் வசதி அற்றுப் போகிற நிலை உண்டாகிவிடும். அதைத் தவிர்ப்பது நம் நோக்கம் அல்லவா? ப்ளாக் லெவலில் முன்னால் இருந்த சட்டத்தின் குறை பாடுகளைத் தீர்ப்பதற்கும் இந்த மசோதா வழிசெய்கிறது. ரிசர்வ் பாங்கிடம் இருந்து பெறுகிற பணத்தை உடனடியாக உழவர் களுக்குக் கிடைக்கச் செய்வதன்மூலம் ‘காலத்தால் செய்த உதவி யாக’ நன்மை அளிக்கக் கூடியதாக ஆகாதா?

திரு. டி. மார்டின்: தேர்தலைப்பற்றி நான் குறிப்பிட்டபோது இதை யார் நடத்துவார்கள் என்று கேட்டதாக அமைச்சர் அவர்கள் கருதியிருக்கிறார்கள். நான் குறிப்பிட்டது க்ளாஸ் 3-பி-இல் உள்ள ஒரு குறையைப்பற்றி—

‘The election of the members of the Board in respect of each district shall be held at a meeting of the presidents of the primary land development banks in that district .........’

என்பதாக இருக்கிறது. ஒரு சில ப்ரைமரி பாங்க் தேர்தல் நடந்து, ஒரு சில ப்ரைமரி பாங்க் தேர்தல் நடத்தப்படாமல் இருந்தால் அந்த நேரத்தில் இந்தத் தேர்தல் நடக்குமா? அல்லது ப்ரைமரி பாங்க் எல்லாவற்றின் தேர்தலும் நடந்த பிறகு இந்தத் தேர்தல் நடத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: அரசினர் திருத்தத்தில் டெலிகேட்ஸ் என்று மாற்றியிருக்கிறோம். ஆகவே தேர்தலில் எந்தவிதமான சங்கடமும் இருக்காது.

ஒரு நண்பர் கூடச் சொன்னார்கள். பெயர் ஞாபகமில்லை. இப் போதுள்ள நில அடைமான வங்கிகளின் நிர்வாகியோடு எனக்குக் கருத்து வேற்றுமை இருந்ததாகவும், அதன் காரணமாகத்தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டதாகவும் சொன்னார். அது உண்மை அல்ல. உண்மைக் கலப்பு இல்லை என்றே இன்னும் சொல்லப் போனால் குறிப்பிடலாம். இப்போதுள்ள நில அடைமான வங்கித் தலைவர் பலமுறை என்னைச் சந்தித்திருக்கிறார்கள். இந்த மசோதாவைப்பற்றி அவரிடம் பலமுறை நான் கலந்து பேசியிருக்கிறேன். அவரிடம் எனக்குக் கருத்து வேற்றுமை இல்லை. எந்த வீராப்பும் எனக்குக் கிடையாது. உள்ளபடியே நான் இப் போதுள்ள வங்கித் தலைவரைப் பாராட்டுகிறேன். மிக நல்லவர் களாக, திறம்பட நிர்வாகத்தை நடத்துகின்றவர்களாக இருக் கிறார்கள். எதிர்க் கட்சியினர்களின் மகிழ்ச்சிக்காக புகழ்ச்சியாகச் சொல்லவில்லை. பெங்களூரில் நடந்த மகாநாட்டிலேயே நான் எடுத்துச் சொன்னேன். ‘எங்கள் மாநிலத்தில் நில அடைமான

வங்கியை நடத்துகிறவர் மிகவும் நல்லவர். மிகவும் திறமை உள்ளவர்', என்று சொன்னேன். ஆகவே நில அடைமான வங்கித் தலைவருக்கும் எனக்கும் கருத்துவேறுபாடு கிடையாது. அவர்கள் மீது பற்றும், அன்பும் கொண்டவனாகத்தான் நான் இருக்கிறேன் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இப்போதுள்ள நில அடைமான வங்கியின் தலைவரோடு கலந்துகொண்டுதான் இந்த மசோதாவைக் கொண்டுவருவதாகச் சொன்னார்கள். இந்த மசோதாவின் திருத்தங்கள் முழுமையும் அவர் ஏற்றுக் கொண்டாரா? அல்லது சிலவற்றை ஏற்றுக்கொண்டு சிலவற்றை எதிர்த்தாரா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** எங்கள் இரண்டு பேர்களுக்கும் நடந்த பேச்சுவார்த்தைகள் எழுத்து உருவத்தில் இல்லை. ஆகவே நான் ஏதாவது சொல்ல—உடனே எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அவரிடம் அதற்கு மறுப்பு விடச்சொல்ல—இப்படியாக நான் ஒரு வாதத்தில் இறங்க விரும்பவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இப்போது இருக்கும்படியான பிரச்சினை என் கட்சியின் நிலையைத் தெளிவாகச் சொல்வதானால் இந்தச் சட்டம் ஏழைகளுக்கு நன்மை அளிக்காது என்பதுதான். ஏற்கனவே இருந்த சட்டத்தில் பல நன்மைகள் தொடர்ந்து இருந்து வந்திருக்கின்றன என்று அமைச்சர் சொன்னதற்கு நன்றி. நான் குறிப்பிடுவது எல்லாம் எந்த வங்கியாவது சரியாக நடக்கவில்லை என்றால் அதை சூப்பர்சீட் பண்ணுவதற்கு, கலைப்பதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. எக்சிக்யூடிவ் ஆபீசர், மானேஜர் என்று போடுவது அவசியம் இல்லை. இதைப் போடுவது என்பதுதான் அரசியல். இதை எதிர்க்கிறோம். ஏழை விவசாயிகளுக்கு உதவுவது என்பதை அப்படியே வரவேற்கிறேன். ஆனால் தெள்ளத்தெளிவாக இந்த எக்சிக்யூடிவ் ஆபிசர், மானேஜர் என்று போடுவதை எதிர்க்கிறேன். ஆகவே தான் இது பொறுக்குக் கமிட்டிக்குப் போக வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டியிருக்கிறது.

**திரு. நா. வீராசாமி :** பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷன் சார், எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். எதிர்க் கட்சித் தலைவர் பேசும் பொழுது, மத்திய அமைச்சர் சொன்னாலும் அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை, அவர்களுக்கும் எனக்கும் 1967-ல் இருந்தே கருத்து வேறுபாடு என்று சொன்னார்கள். மத்திய அமைச்சர்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை ஆதரிக்கிறார்கள் என்பதால் அவர்களுக்குக் கருத்து வேறுபாடு ஏற்பட்டதா அல்லது வேறு ஏதாவது காரணத்தால் கருத்து வேறுபாடு ஏற்பட்டதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



*** மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நில அடைமான வங்கி என்ற பெயரை மாற்றி இப்பொழுது புதிய சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவைப் பொறுத்தவரையிலும் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒன்றை மட்டும் வலியுறுத்துவதாகச் சொன்னார்கள். சில பேர்களுக்கு அதிலே சந்தேகம் இருக்கிறது என்று சொன்னார்கள். நேற்று மேல்சபையிலே எதிர்க் கட்சித் தலைவரும் நம்முடைய முதலமைச்சர் அவர்களும் இதுபற்றிக் கலந்து பேசினார்கள். நாம் இன்றைக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தை வைத்துக் கொண்டு வங்கிகள் சரியாக நடைபெறாவிட்டால் சூப்பர்-சீட் செய்துவிடக்கூடிய அளவில் அதிகாரம் இருக்கிறது. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அதுதான் தொடர்ந்து இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இதிலே உள்ள சிக்கல்களைப்பற்றியும் அவர்கள் உணர வேண்டும். எல்லாத் தவறுகளையும் செய்துவிட்டு, சூப்பர்சீட் ஏன் பண்ணக் கூடாது என்று காரணம் கேட்டு ஒரு வாய்ப்பு அவர்களுக்குக் கொடுத்து, நாம் அனுப்புகின்ற ஷோ-காஸ் நோட்டீஸுக்குக்கூட அவர்கள் இடந்தராத அளவுக்கு அதைத் தடுப்பதற்காக உடனே நீதிமன்றத்திற்குச் செல்கின்றனர். அதன் விளைவாகத் தவறு செய்துவிட்டால் அவர்களைப் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்று அரசு முடிவுக்கு வந்தாலும் பல ஆண்டுக் காலமாக நீதி மன்றத்திலே சென்று அவர்கள் இடைக்காலத் தடை உத்திரவு வாங்கி, நம்முடைய நடவடிக்கையைச் செயல்படுத்த முடியாமல் தடுப்பதற்கு அவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகின்ற நேரத்திலே என்ன செய்யலாம் என்பதையும் நாம் யோசிக்க வேண்டும். மாவட்ட அளவிலே இருக்கக்கூடிய கூட்டுறவு வங்கிகள் எல்லாம் வங்கிகளுடைய செக்ரட்டரியைப் போடுகிறார்கள். நாமும் டெபுடி ரிஜிஸ்திரார் அளவிலே அதே வங்கியிலே பணியாற்றக்கூடிய அளவிலே போடுகிறோம். ஆக இரண்டு அலுவலர்கள் போட்டு இருக்கிறோம்.

நாம் ஒன்றும் புதிதாக இந்தச் சட்டத்திலே கொண்டுவந்துவிட்டோம் என்று வாதாடுவது சரியல்ல. டிஸ்ட்ரிக்ட் சென்ட்ரல் கோவாப்ரேடிவ் பாங்குகளுக்கு நாமே அலுவலர்களைப் போட்டிருக்கிறோம். சென்ட்ரல் லேண்ட் மார்ட்கேஜ் பாங்குகளுக்கும்கூட சென்ற ஆண்டு இதுபோன்ற நிலைமைகள் ஏற்பட்டு வேலைப் பளு அதிகமாகிவிட்டதன் காரணமாக அவர்கள் செக்ரட்டரியோடு கூட நாமும் ஒரு ஜாயிண்ட் ரிஜிஸ்திரார் போட வேண்டுமென்று பேச்சு வார்த்தைகள் நடத்தினார்கள். புதிய பதவியைப் போடுவதினாலேயே அதிகாரத்தை நாம் எடுத்துக் கொள்கிறோம் என்று யூகிக்கக்கூடாது. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிடம் பொறுப்புகள் ஒப்படைக்கப்படுகின்றன. அதிகாரிகளை அனுப்புவதனாலே அது ஜனநாயக முறையா என்று சொன்னார்கள். அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை மதிக்கிறது. அவர்களிடமிருந்து உரிமைகளைப் பிடுங்க வேண்டுமென்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை.

[திரு. செ. மாதவன்] [1969 ஆகஸ்ட் 28

கிளாஸ் 3 (சி)-யை ஆழ்ந்து படித்துப் பார்த்தால் விளக்கமாகப் போட்டு இருக்கிறோம். என்ன என்ன சூழ்நிலையில் என்று இருக்கிறது. அதைப் பார்க்க வேண்டும். 'For reducing the overdues of the bank' என்று போடப்பட்டிருக்கிறது. எனவே சர்க்காரே முழு அதிகாரத்தையும் எடுத்துக் கொள்கிறது என்றோ அல்லது அதிகாரிகள் எடுத்துக் கொள்கிறார்கள் என்றோ முடிவுக்கு வந்துவிடக் கூடாது. சென்ட்ரல் கோவாப்ரேடிவ் பாங்க் கடன் கொடுக்கும்பொழுது ரிசர்வ் பாங்க் கட்டுப்பாடு வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்ட வங்கியிலேயும் அதற்குக் கீழே உள்ள சொசைடிகளிலும் கூட குறிப்பிட்ட அளவுக்குப் பாக்கி இருக்குமானால் மேற்கொண்டு மாநில பாங்கு கடன் கொடுக்கக் கூடாது என்று ரிசர்வ் பாங்க் சொல்லுகிறது. ஆகவே அப்படிப் பாக்கி இருந்தால்–தலைவராக இருக்கிறவர் பினாமியாக யார் யார் பேரிலோ கடன் வாங்கிக்கொண்டு இருக்கிற நிலைமைகள் உண்டு; இந்த ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகு அதன்மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் காரணமாக எத்தனையோ பேர் தற்கொலைகள் செய்து கொண்டது நமக்குத் தெரியும். எப்படி வசூலிக்க வேண்டும் என்று பார்ப்பதற்கு இந்த மசோதா வழி செய்கிறது. 'For reducing the overdues of the bank என்று மட்டுமல்ல 'For improving the efficiency of the administration of the bank' என்றும் போட்டிருக்கிறோம். வங்கிகளை சிறிய சிறிய வட்டார அளவிலே இருந்து வருவதைப் போன்று பஞ்சாயத்து அளவிலே கொண்டுவரப் போகிறோம். எனவே ஏராளமான வங்கிகள் தோன்றப் போகின்றன. அங்கே யெல்லாம் தவறுகள் ஏற்பட்டால் சூப்பர்சீட் செய்வது என்ற முறையை வைத்துக் கொண்டால் அதன் காரணமாக காலதாமதம் ஏற்பட்டு கடைசியில் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க முடியாத பாதகமான சூழ்நிலைகள் எல்லாம் ஏற்படலாம். அந்தச் சமயத்திலே நாமே ஒரு அலுவலரை அனுப்பி அவர்களுக்குப் பயன் கிடைப்பதற்கான வழியைச் செய்ய வேண்டுமென்ற ஒரு நல்ல எண்ணத்தோடு தான் இந்தப் பிரிவு இதிலே சேர்க்கப்பட்டிருக்கிறது. நல்லவர்களை உதாசீனப்படுத்திவிடாமல் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதன்பேரில் அமைச்சர் அவர்கள் திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். அலுவலர் போடுவதற்கு முன்னால் வங்கிகளில் உள்ளவர்களைக் கலந்து கொண்டு அனுப்பவேண்டுமென்று மேல்சபை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அதை ஏற்றுக்கொண்டு நாங்களும் திருத்தம் கொடுத்திருக்கிறோம். அதற்கு மேலும் சந்தேகம் ஏற்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் கருதமாட்டார்கள் என்று நினைக்கிறேன். நிர்வாக முறையிலே அங்கேயிருக்கிற பொதுமக்கள் பிரதிநிதிகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்க அரசாங்கத்தின் சார்பிலே உறுதிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன். விதிமுறைகளைப் போடுவதிலே எந்த எந்த அளவுக்கு, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடைய அதிகாரத்தைக் குறைக்காத அளவுக்கு, நல்ல முறையிலே போட முடியுமோ அந்த அளவுக்குப்



1969 ஆகஸ்ட் 28] [திரு. செ. மாதவன்]

போடுவோம் என்ற உறுதியைக் கூறிக் கொண்டு இதிலே ஆட்சேபனை எழுப்பப்படுவதாலே இந்த நல்ல சட்டம் நிறைவேற்றப்படாமல் தடுக்கப்பட வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு இந்த மசோதாவை எல்லோரும் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU N. S. V. CHITHAN: Sir, I am not pressing my amendment.

திரு. என். எஸ். வி. சித்தன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியோடு திரும்பப்பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர். பேரவை முன்னுள்ள கேள்வி

"தமிழ் நாடு 1969-ம் ஆண்டு கூட்டுறவு நில அடைமான வங்கிகள் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 12/69) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 3

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி :—

"பிரிவு 3 மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

THIRU K. RAMAMOORTHI: Sir, I move the following amendments :—

'(i) In sub-clause (1) of clause 3, for the words "Tamil Nadu Co-operative State Land Development Bank, Limited" substitute the words "Tamil Nadu Co-operative Land Development, Bank, Limited".'

'(ii) In the proposed new clause (ff) delete the words "owning or cultivating one hectare of land or less" and add the following :—

"who is neither an income-tax assessee nor the recipient of income from other sources and owns or cultivates one hectare of land or less".'

THIRU N. S. V. CHITHAN: Sir, I second the amendments.

திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, என்னுடைய இரண்டு திருத்தங்களும் மிக மிகத் தேவையானதும் அவசியமானதும் ஆகும் என்பதை அவற்றைப் படிக்கின்ற நேரத்திலே தெரிந்துகொள்ளலாம். முதல் திருத்தம் தமிழ்நாடு கூட்டுறவு மாநில நில வள வங்கி என்ற பொருள் வருகின்ற முறையில் பெயர்

[திரு. க. இராமமூர்த்தி] [1969 ஆகஸ்ட் 28

குறிப்பிடப்பட்டிருக்கிறது. என்னுடைய திருத்தத்திலே தமிழ்நாடு கூட்டுறவு நில வள வங்கி என்பதாகப் பெயரிடப்பட வேண்டுமென்று கொடுத்திருக்கிறேன். இதிலே மாநிலம் என்ற சொல் என்ன காரணத்திற்காக வந்திருக்கிறது என்று தெரியவில்லை.

தமிழ்நாடு என்றாலே அது மாநிலத்தைத்தான் குறிப்பிடுகிறது. தமிழ்நாடு என்ற சொல், கூட்டுறவு என்ற சொல், அதற்குப் பின்னால் மாநிலம் என்ற வார்த்தை இருக்குமானால் திரும்பத் திரும்ப இரண்டு மூன்று முறை சொல்லுகின்ற அளவிலே அமைகிறது. நிலவள வங்கி என்ற பெயரை எழுதுகிறபோது தமிழ்நாடு மாநிலம்—கூட்டுறவு மாநில நிலவள வங்கி என்று திரும்பத் திரும்ப வருவதால் என்னுடைய திருத்தம் தேவையான திருத்தமாகும். ஆகவே, ஸ்டேட் என்ற வார்த்தையை நீக்கிவிட்டு 'தமிழ்நாடு கோவாப்பரேட்டிவ் லாண்ட் டெவலப்மென்ட் பாங்க்' என்று இருக்க வேண்டுமென்ற முறையிலே என்னுடைய திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, ஸ்மால் ஃபார்மர்ஸ் என்பதற்குச் சட்டத்திலே வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. சிறு விவசாயிகள் யார் என்று பார்க்கும்போது அவர்கள் இரண்டு ஏக்கர், ஐந்து ஏக்கர்களுக்குள்ளாக நிலம் வைத்திருக்க வேண்டும் என்று இருக்கிறது. கிராமத்திலே சில பணக்காரர்கள் பொழுதுபோக்காக நிலம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நகரத்திலே இருப்பவர்கள் சேர்க்கின்ற பணத்திலே இரண்டு ஏக்கர், ஐந்து ஏக்கர் என்று கிராமங்களிலே நிலம் வாங்கி வைத்துக் கொள்ளும் நிலைமை இருக்கிறது. சிறு விவசாயிகளுக்கு நன்மை என்று சொல்லும்போது பணம் படைத்தவர்கள் சிறிது நிலம் வைத்திருந்தாலும் அவர்களும் இந்த மாதிரிக் கடன்களைப் பெறக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் விவசாயி என்று சொல்லும்போது அவன் வேறு சொத்து இல்லாத விவசாயியாக, இருக்க வேண்டும். வேறு வருவாய் இருந்தாலும் அவர்களுக்குக் கடன் கொடுக்கக் கூடாது. அவ்வாறு இல்லாமல் நிலத்தைக் காட்டி அரசிடம் இருந்து கடனைப் பெறும் வாய்ப்பை அளிக்கும் வகையில் இந்த மசோதா அமைந்திருக்கிறது. அந்த வாய்ப்பு தவிர்க்கப்பட வேண்டும். உண்மையிலேயே ஏழை விவசாயிகளுக்கு, வேறு வருவாய் இல்லாத விவசாயிகளுக்குப் பயன்படும் நிலைமையில் இருக்க வேண்டும். என்னுடைய திருத்தம் அந்த அடிப்படையில் அமைந்திருக்கிறது. என்னுடைய திருத்தம் மிக மிகத் தேவையான திருத்தம். சோஷலிசத்திலே நம்பிக்கை கொண்டிருப்பதாகக் கூறினார்கள். அந்த நம்பிக்கையைப் பூரணமாக நிறைவேற்றுகின்ற வகையிலே என்னுடைய திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.



1969 ஆகஸ்ட் 28]

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவர் அவர்களே, முதல் திருத்தம் தமிழ்நாடு மாநில கூட்டுறவு நிலவள வங்கி என்ற சொல்லைப் பொறுத்தது. அதன் முழுப் பெயர் என்ன என்று மூன்றாவது பிரிவில் கூறப்பட்டிருக்கிறது. 'தமிழ்நாடு கோவாப்பரேட்டிவ் ஸ்டேட் லாண்ட் டெவலப்மென்ட் பாங்கு' என்பது முழுப் பெயர். முழுப் பெயருக்குச் சிறு பெயராகச் சொல்லும்போது 'தமிழ்நாடு' என்று சொல்லாமல் 'மாநில வங்கி' என்று சொல்லப்படுகிறது. பிரைமரி வங்கிகளும் தமிழ்நாட்டில் இருக்கும் காரணத்தால் 'தமிழ்நாடு வங்கி' என்று சொல்லும்போது குழப்பம் ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான் சொல்லுக்கும் அழகாக, கருத்துக்கும் ஏற்றதாக இருக்க வேண்டுமென்ற முறையிலே 'ஸ்டேட் பாங்க்', 'பிரைமரி பாங்க்' என்று சொல்லுகிறோம். ஒவ்வொரு நேரத்திலும் 'தமிழ்நாடு' என்று சொல்லத் தேவையில்லை. மற்ற மாநிலங்களில் இந்தச் சட்டத்தை இயற்றியபோது எப்படிச் சொல்லி இருக்கிறார்கள் என்பதற்கு எடுத்துக் காட்டாக மகாராஷ்டிரா கோவாப்பரேட்டிவ் சொசைட்டிஸ் ஆக்டைப் படிக்கிறேன்.

"There shall be a State Land Development Bank of the State of Maharashtra and as many primary development banks as may be deemed necessary". என்பதாக மகாராஷ்டிரச் சட்டத்திலே ஒவ்வொரு முறையும் 'ஸ்டேட் லாண்ட் டெவலப்மென்ட் பாங்க்'—'மாநில நிலவள வங்கி' என்றுதான் கூறியிருக்கிறார்கள். ஒவ்வொரு முறையும் 'மகாராஷ்டிரா', 'மகாராஷ்டிரா' என்று திரும்பத் திரும்பச் சொல்லுவதில்லை. ஒருமைப்பாட்டுக்காக என்று சொன்னார்கள். திரும்பத் திரும்ப 'தமிழ்நாடு' என்று சொன்னால்கூட அது ஒருமைப்பாட்டைக் கெடுக்க முடியும். தமிழ்நாட்டிலேயே இரண்டு வகையான வங்கிகள் இருக்கின்றன. ஒன்று, 'மாநில வங்கி', மற்றது, 'அடிப்படை வங்கி'. இது சொல்லுக்கு அழகாகவும், கருத்துக்கு ஏற்றதாகவும் இருப்பதால் திருத்தத்தை ஏற்றுக் கொள்ளுவதற்கில்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** குறிப்பிட்ட திருத்தத்திலே, 'தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி' என்று வருகிறது. பிரைமரி பாங்குகளைப் பொறுத்தவரை அது எந்த ஊரில் இருக்கிறதோ அதை வைத்து—'திண்டிவனம் கூட்டுறவு நிலவள வங்கி' என்று கூறலாம். ஸ்டேட் ஆப் மகாராஷ்டிரா நிலை வேறு. தமிழ்நாடு முழுமைக்கும் சொல்லி இருக்கும் நேரத்திலே, 'தமிழ்நாடு கூட்டுறவு மாநில பாங்கு' என்பது அவ்வளவு பொருத்தமானதாக இல்லை. ஊருக்கு ஊர் வங்கி இருந்தால் அந்தந்த ஊர்ப் பெயரை வைத்து அழைக்கலாம். திண்டிவனம், கடலூர் என்ற பெயரை முன்னால் வைத்துக் கூறலாம். ஆகவே, என்னுடைய திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** மீண்டும் விவாதத்தை எடுத்ததால் நான் இன்னொன்றையும் சொல்லுகிறேன். முன்னால் இதே வங்கிக்குப் பெயர், 'மெட்ராஸ் சென்ட்ரல் லாண்ட்

[திரு. சி. பா. ஆதித்தனுர்] [1969 ஆகஸ்ட் 28

மார்ட்கேஜ் பாங்க்' என்று இருந்தது. 'மெட்ருஸ்' என்பதைத் 'தமிழ்நாடு' என்று ஆக்கினேம். 'சென்ட்ரல்' என்ற சொல்லுக்கு ஒரு சொல் தேவைப்படுகிறது. அதை 'ஸ்டேட்' என்று ஆக்கினேம். மற்ற மாநிலங்களிலும் இதே படிதான் இருந்து கொண்டிருக்கிறது. 'நிலவள வங்கி' என்று சொல்லும்போது ஸ்டேட் பாங்கா, பிரைமரி பாங்கா என்று கேட்பார்கள். இன்ன ஊர் வங்கி என்று சொன்னுல் பொருத்தமாக இருக்காது. நாம் மற்ற மாநிலங்களுடனும் ஒத்துப் போகலாமே, ஒருமைப் பாட்டுக்கு உகந்ததாக இருக்கும் என்ற காரணத்தால் சொல் லுக்கும் அழகாக, கருத்துக்கும் ஏற்றதாக இருப்பதால் இப்படியே வைத்துக் கொள்ளலாம்.

திரு. க. இராமமூர்த்தி : 'தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி வங்கி' என்பதாகத்தான் இருக்கிறது. 'மாநில வங்கி' என்று இல்லை.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : 'கூட்டுறவு' என்பதைக் கூடத் திரும்பத் திரும்பச் சொல்லுவதில்லை. 'ஸ்டேட் லாண்ட் டெவலப்மென்ட் பாங்க்', 'பிரைமரி டெவலப்மென்ட் பாங்க்' என்று சொல்லுகிறேம். மற்ற மாநிலங்களுடன் ஒத்துப் போவதில் தவறு இல்லை. பேச்சு வழக்கிற்கும் உகந்ததாக இருக்கிறது.

அடுத்தாற்போல் சிறு விவசாயிகள் யார் என்பதைப் பற்றி ஒரு திருத்தம் கொடுத்திருக்கிருர்கள். நான் குறிப்பிட்டிருப்பது— யாராவது இரண்டரை ஏக்கருக்குக் குறைவாக நிலம் உடையவர்களாக இருந்தாலும், நிலமே இல்லாமல் பயிரிடுகின்ற வர்களாக இருந்தாலும் அவர்கள் சிறு விவசாயிகள் என்ற சொல்லுக்கு ஏற்றவர்கள் என்று சொல்லியிருக்கிறேன். குழுவில் இடம் பெற வேண்டுமென்பதற்காகத்தான் 'ஸ்மால் ஃபார்மர்ஸ்' என்பதை அப்படிக் குறிப்பிட்டிருக்கிறேம். கடன் கொடுப்ப தற்காக அல்ல. வேறு வருமானம் இல்லாதவர்களாக இருக்க வேண்டுமென்று சொன்னுர்கள். இதே பிரச்சினையை மாநில வங்கித் தலைவரிடம் பேசியபோது சுட்டிக் காட்டினேன். இப்போது யாராவது கடன் வாங்குவதாக இருந்தால் கூட ரூரல் டிபென்சர்ஸ் வாங்க வேண்டுமென்று கட்டாயமாகவே வாங்கச் சொல்லுகிறேமே, அப்படி வாங்குகின்றபோது அவர்களும் வருவாய் உடையவர்களாக ஆகிவிடுவார்களே, இதர சொத்துக்கள் உடையவர்களாக ஆகி விடுவார்களே, அவர்களுக்குக் கடன் கொடுப்பதைத் தடுக்க வேண்டுமா என்று கேட்டார்கள். நான், இருக்கிறபடியே இருக்கட்டும் என்று சொல்லிவிட்டேன். ஆகவே, திருத்தத்தை விட்டுவிடுவது நலம் என்று சொல்லி திருத்தத்தை வற்புறுத்தவேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

THIRU K. RAMAMOORTHI : I have given two amendments.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரே அமென்ட்மென்ட்தான் கொடுத்திருக்கிறீர்கள். தனித்தனியாகக் கொடுக்கவில்லை.



1969 ஆகஸ்ட் 28]

திரு. க. இராமமூர்த்தி : முதல் பகுதியைப் பொறுத்தவரையில் அமைச்சர் அவர்களின் நிலைக்கு விட்டு விடுகிறேன். இரண்டாவது பகுதியை, அவர்களின் உறுதியை மேற்கொண்டு வற்புறுத்தவில்லை.

திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 4

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 4 மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".

THIRU K. RAMAMOORTHI : Sir, I move the following amendment :—

"In clause 4 for the words "State Land Development Bank" substitute the words "Tamil Nadu Land Development Bank".

THIRU N. S. V. CHITHAN : I second the amendment.

திரு. க. இராமமூர்த்தி : இதற்கான விவாதம் ஏற்கனவே நடைபெற்றுவிட்டது. எனது திருத்தத்தையும் வாபஸ் வாங்கிக் கொண்டிருக்கிறேன்.

திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 4 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 5.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 5 மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".

அரசினர் திருத்தம் . . . .

3. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ii) வரிசைக்கிரமத்தில் திருத்தங்களை முன்மொழிவது குறித்து.

திரு. க. இராமமூர்த்தி : ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் ; இந்தப் பிரிவின் மீது நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதற்குப் பிறகு அரசுத் தரப்பிலிருந்து இந்தப் பிரிவிற்குத் திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எப்போது வேண்டுமானுலும் அரசுக்குத் திருத்தங்கள் கொடுக்க உரிமை இருந்தாலும்கூட வரிசைக்கிரமத்தில் நான்தான் முதலில் கொடுத்திருக்கிறேன். ஏற்கனவே முன்னுள் முதலமைச்சராக இருந்த அண்ணு அவர்கள்

ஒரு வழி வகுத்திருக்கிறார்கள். தமிழ்நாடு பெயர் மாற்றத் தீர்மானத்தின்மீது திருத்தங்கள் கொடுக்கப்பட்டபோது இப் பகுதியில் இருந்து கொடுக்கப்பட்ட திருத்தம் அவர்கள் வாயிலாக வந்தது. அப்படிச் செய்வதற்கு முன்னால் திருத்தங்கள் கொடுத்தவர்களை அழைத்துப் பேசி ஒருமித்த கருத்துக்கு வந்தார்கள். அதேபோல் இதுபற்றியும் எங்களைக் கலந்து நாங்கள் கொண்டு வருகிறோம் என்று சொல்லியிருக்கலாம். அல்லது சபாநாயகர் அவர்கள் என் அமென்மென்டை மூவ் செய்ய அனுமதி தந்தால் நாங்கள் இதை முன்னமேயே கொண்டு வந்திருக்கிறோம் என்பது அவைக்கும் வெளியில் இருப்பவர்களுக்கும் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல. அமைச்சர் அவர்கள் திருத்தம் கொடுக்கும்போது அதுபற்றிக் கலந்து கொண்டு கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். அது உங்களுக்கு இடையே உள்ள உறவை ஒட்டியது. இங்கு திருத்தங்கள் வந்திருக்கின்றன. முறைகேடுகள் ஏதாவது இருந்தால் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பலாம். அரசினர் தரப்பிலிருந்து வரும் திருத்தங்களைத்தான் முதலில் எடுத்துக் கொள்வது வழக்கம், மரபு.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சர்க்கார் எப்போது வேண்டுமானாலும் திருத்தங்கள் கொண்டுவரலாம். முதலில் கொடுத்தது முதலில் வரவேண்டும். உறவுமுறைப்பற்றிச் சொன்னார்கள். நல்ல உறவு என்றால், எதிர்க் கட்சியினர் கொண்டு வந்திருக்கிறார்களே, அதை ஏற்றுக்கொள்கிறோம் என்றால் சந்தோஷம்.

**திரு. கே. விநாயகம் :** நேற்று ஐந்தாண்டுத்திட்டம் பற்றி விவாதிக்கப்பட்டது. நான்தான் முதலில் திருத்தம் கொடுத்தேன், சேலம் ஸ்டீல் ப்ளான்டை கொண்டுவர வேண்டுமென்று அரசாங்கம் வற்புறுத்தவேண்டுமென்று சொன்னேன். நான் கொடுத்ததற்குப் பிறகுதான் அரசு தரப்பில் திருத்தம் கொடுத்தார்கள் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை முதல் நாளே இந்த அவையில் முன்மொழிந்துவிட்டீர்கள். பிறகுதான் அமைச்சர் அவர்களின் திருத்தம் வந்தது. முதலிலேயே முன்மொழிந்ததால் முதல் இடம் கொடுக்கப்பட்டது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முதலில் கொடுக்கப்பட்டது திரு. இராமமூர்த்தி அவர்களின் திருத்தமா அல்லது சர்க்கார் திருத்தமா? தயவு செய்து அதைச் சொல்லுங்கள். இல்லை உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது என்று சொன்னால், சரி.

* **மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சட்டங்களுக்குத் திருத்தங்கள் கொண்டுவரும்போது சில கன்வென்ஷன்களைப் பின்பற்றுகிறோம் என்று சொன்னார்கள். அவற்றை நாங்கள் பின்பற்றவில்லை என்று நினைத்துவிடக் கூடாது. திருத்தங்கள் கொடுக்கும்போது எதிர்க்கட்சியிலிருந்து கொடுக்கப்படக்கூடிய திருத்தங்கள் மிகத் தெளிவாக அமையுமானால், பொருத்தமாக அமையுமானால் நாங்கள் அப்படியே ஏற்றுக்கொள்வோம். எனக்கு





நினைவில் இருக்கிறது, அந்தத் தரப்பில் நாங்கள் இருந்தபொழுது கொடுக்கப்பட்டதொரு திருத்தத்தை அப்போதைய சட்ட அமைச்சர் திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்கள் விவாதம் இல்லாமலேயே உடனடியாக ஒப்புக் கொண்டார்கள். கருத்தை ஏற்றுக் கொண்டு வார்த்தைகள் எப்படி இருக்கவேண்டும் என்பதில் சிறிய கருத்து வேறுபாடு இருந்தால் இந்த முறையைப் பின்பற்றுகிறோம். அது பாரம்பரியமாகப் பின்பற்றப்பட்டு வருகிறது. நேற்று, முதல் அமைச்சர் அவர்கள், கீழ் சபை எதிர்க் கட்சித் தலைவர் அவர்களிடத்தில் சொல்லிவிடுங்கள் என்று சொன்னார்கள். கருத்தை ஒப்புக்கொண்டுள்ளோம். சட்டத்துறை கொடுக்கக்கூடிய முறையில் கொண்டு வந்திருக்கிறோம். நீங்கள் கொடுத்துள்ள திருத்தத்தை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்பதல்ல. பிடிவாதமாக எங்கள் திருத்தத்தைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்தில் இது கொண்டுவரப்படவில்லை. கருத்தை ஏற்றுக்கொண்டு வார்த்தைகளை மட்டும் மாற்றியிருக்கிறார்கள். ஆகவே, அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**திரு. கே. விநாயகம் :** ஒருவேளை நாங்கள் கொடுத்திருக்கிற திருத்தம் all comprehensive ஆக இல்லாமலிருக்கலாம், அரசாங்கத்திலிருந்து கொடுத்துள்ளது all comprehensive ஆக இருக்கலாம். முதலில் யார் திருத்தம் கொடுத்திருக்கிறார்களோ அதை எடுத்து விவாதித்து அதைத் தோற்கடித்த பிறகு, நாங்கள் கொண்டு வந்திருப்பதுதான் சரியாக இருக்கிறது என்று சொல்வதுதான் முறையாதலால் முதலில் இதை அனுமதிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவைக்கு வரும்போது அமைச்சர் அவர்களும், உறுப்பினர்களும் திருத்தங்கள் கொடுக்கும் போது அமைச்சர் அவர்கள் கொடுக்கும் திருத்தத்திற்குத்தான் முதலில் இடம் கொடுப்பது என்பது மரபு.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நாங்கள்தான், எதிர்க்கட்சிதான் தங்கள் செல்லப்பிள்ளை. எங்களுடைய உரிமைகளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு தங்களுடையது.

**திரு. க. இராமமூர்த்தி :** ரெஸல்யூஷன்ஸ், மற்றவைகளுக்கு திருத்தம் கொடுப்பதில் அமைச்சர்கள் முன்வரிசை பெறுகிறார்கள். ஆனால் பில்களைப் பொறுத்தவரையில், நாங்கள் முதலில் திருத்தங்கள் கொடுத்திருந்தால் முதல் இடம் எங்களுக்குக் கொடுக்க வேண்டும்.

## 2. அரசினர் மசோதா—தொடர்ச்சி.

### தமிழ் நாடு 1969-ம் ஆண்டு கூட்டுறவு நில அடைமான வங்கிகள் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 12/69)

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, ஐந்தாவது பிரிவில் ப்ரைமரி பாங்க் "பிரசிடென்ட்ஸ்" என்பதற்குப் பதிலாக "டெலிகேட்ஸ்" என்ற வார்த்தையையும், Provided also that the number of nominated members shall not

exceed one-fifth of the total number of members of the Board என்ற புதுப் பகுதியையும், 3(ஸி)-இல் Provided that such power shall be exercised after consulting the bank concerned என்பதையும் அதற்குத் தகுந்தாற்போல் "கோ ஆப்டட்" என்ற சொல்லை விட்டுவிடுகிற திருத்தத்தையும் நான் முன்மொழிகிறேன்.

THIRU K. RAMAMOORTHI: Sir, I move the following amendment:—

In the proposed new Chapter I-A:

(i) Delete sub-section (1) of Section 3-A and re-number sub-sections (2) and (3) as sub-sections (1) and (2).

மு.ப. 11-30 (ii) In the re-numbered sub-section (2), after the words "to be elected", delete the words "co-opted" and add at the end the following:

"at the ratio of 5 : 1".

(iii) Sub-sections (4) and (5) of Section 3-A shall be re-numbered as sub-sections (3) and (4).

(iv) Delete the proposed Section 3-B.

(v) Delete the proposed Section 3-C.

(vi) Renumber the Section 3-D as Section 3-B and add the following words at the end:

"and for the discharge of prior debts on the land mortgaged".

(vii) Re-number the Section 3-E as Section 3-C.

(viii) Delete the Section 3-F.

In the proposed new Chapter I-A, wherever the words "State Land Development Bank" occur, delete the word "State" and insert the words "Tamil Nadu".

The amendments were duly seconded.

DR. H. V. HANDE: Sir, I move the following amendment:—

In the proposed new Chapter I-A, (i) insert the following as third proviso to sub-section 3 of Section 3-A:

"Notwithstanding anything in the foregoing proviso, no person who has been a member of the committee of the State Land Development Bank, Consecutively for a period of more than six years immediately preceding the date of commencement of the Amendment Act shall cease to hold office as such forthwith."

(ii) Delete Section 3-B

(iii) Delete Section 3-C.

(iv) Insert the following as item (vi) to Section 3-F.

"For the purpose of ensuring that not less than seventy-five per cent of the loans are issued only to the farmers, owning less than five hectares of land."



THIRU SOWDI S. SUNDARA BHARATI: I second the amendment.

THIRU N. S. V. CHITHAN: Sir, I move the following amendment:—

In the proposed new Chapter I-A in Section 3-B after the words "in that district" delete the words "at such place. . . . . . . . . . . . . manner prescribed".

The amendment was duly seconded.

*திரு. க. இராமமூர்த்தி:* தலைவரவர்களே, என்னுடைய திருத்தங்களைப் பொறுத்தவரையில் நான் என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் திருத்தங்களைப் பொறுத்தவரையில் முதலிடம் பெற்றிருப்பது இந்த எல்லாப் பிரிவுகளுக்கும் எண்களை மாற்ற வேண்டுமென்பதாகும். சர்க்கார் தரப்பில் அதை ஏற்றால் ஏற்படும் நிலை. ஆகவே, அதைப் பொறுத்தவரையில் சர்க்கார் தரப்பிலே, அரசுத் தரப்பிலே சொன்னாலொழிய அதைப்பற்றி அதிகமாகப் பேசுவதற்கு ஒன்றுமில்லை என்று இந்தத் திருத்தத்தை அந்த அளவில் விடுகிறேன். அவர்கள் பதில் சொன்ன பிறகு நான் பேச வேண்டிய நிலையில் இருக்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* அமைச்சரவர்கள் பேசிய பிறகு நீங்கள் பேச முடியாது. விளக்கம்தான் கேட்க முடியும்.

*திரு. க. இராமமூர்த்தி:* என்னுடைய திருத்தம் ஏற்கப்பட்டால் இந்த முதல் பிரிவு தேவையாகிறது. அந்தப் பிரிவின்படி மசோதாவில் வருகிற மற்ற பிரிவுகளுக்கு எண்ணிக்கையிட வேண்டிய நிலையிருக்கிறது. எனவே, அந்த முதல் திருத்தம் முக்கியத்துவம் பெறுகிறது.

அடுத்த திருத்தம், 'கோவாப்டெட்' என்ற வார்த்தையை விட வேண்டுமென்பதாகும். அதாவது 'to be elected' -க்குப் பிறகு அந்த வார்த்தையை விட்டுவிட வேண்டுமென்பதாகும்.

The Board shall consist of such number of members to be elected, co-opted and nominated, as may be prescribed.

என்பதாக இருக்கிறது. இந்த 'கோவாப்டெட்' என்ற வார்த்தை தேவையில்லாத சூழ்நிலையில் இடம் பெறுகிறது. ஆரம்ப காலத்திலேயே போர்டுக்கு இருக்கும்பொழுது கோவாப்டெட் என்ற நிலைமை வரவேண்டியதில்லை. நாமினேஷனிலேயே வந்து விடுகிறது. சீரான முறையிலே அல்லது போதுமான அவகாசத்திலே தயாரிக்காமல், அவசரம் அவசரமாகத் தயாரிக்கப்பட்டு விட்டது என்பதற்கு, இப்படிப்பட்ட வார்த்தை இடம் பெற்றிருப்பதே மிகப் பெரிய சான்றாகும். அவசரம் அவசரமாகத் தயாரிக்கப்பட்ட மசோதாவிலே இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டு விட்டது என்பதை முன் கூட்டியே உணர்ந்த காரணத்தால் திருத்தத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்தத் திருத்தத்தின்

மீது அதிகமாகப் பேச வேண்டிய அவசியமில்லை. என்னுடைய திருத்தத்தைப் பார்த்த பிறகுதான் இப்படிக் கொண்டு வந்திருப்பார்கள் என்று எண்ணுகிறேன். ஏனென்றால், அந்தத் திருத்தம் எல்லா அங்கத்தினர்களுக்கும், எல்லா அமைச்சர்களுக்கும் தரப்பட்டு விட்டது. அதற்குப் பின்னால், அதை மாற்றிக் கொள்ள, திருத்தத்தைக் கொண்டு வந்ததற்கு அரசைப் பாராட்டுகிறேன்.

அடுத்த திருத்தம், அதே பிரிவுகளிலே கடைசியாக

" add at the end the following :

" at the ratio of 5 : 1 "

என்பதாகச் சொல்லியிருக்கிறேன். அந்தத் திருத்தமும் அரசுத் தரப்பிலே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இது என்னுடைய திருத்தத்தை மிகுந்த அளவிலே படித்துப் பார்த்து அதை ஏற்றுக் கொண்டிருப்பதற்காக நான் பெருமையடைகிறேன். காரணம் என்னவென்றால், நான் என்ன விகிதாச்சாரத்தைச் சொல்லியிருக்கிறேனோ அதே விகிதாச்சாரத்தை இன்று நான் சொல்லியிருப்பதை அமைச்சரவர்கள் ஏற்றுக் கொண்டு, அதை அவர்களுடைய திருத்தமாகக் கொண்டு வந்ததற்காகப் பெருமையடைகிறேன். இந்த அரசு அந்த நிலைமைகளிலே, கௌரவத்தைப் பற்றிச் சிந்திக்காமல், மற்றவர்கள் சொன்னாலும், மற்றவர்கள் சொன்னார்கள் என்று தெரிவிக்காவிட்டாலும்கூட, அதை ஏற்றுக் கொண்டார்கள் என்ற அளவிலே நான் பாராட்டுகிறேன்.

அடுத்த என்னுடைய திருத்தம்,

Sub-sections (4) and (5) of Section 3-A shall be re-numbered as sub-sections (3) and (4).

இந்தத் திருத்தம் இப்பொழுது இந்த நிலைமைகளிலே அவசியமில்லை. ஆகவே அதை விட்டுவிடுகிறேன். அதற்கடுத்த திருத்தம் 3-பி என்ற பிரிவாகும். இந்த 3-பி தேர்தலைப் பொறுத்தது. தேர்தலைப் பொறுத்தவரையிலே, . The election of the members of the Board in respect of each district shall be held at a meeting of the presidents of the primary land development banks in that district, at such place and at such time as may be fixed by the State Government or any officer authorised by the State Government and shall be conducted in the manner prescribed.

என்பதாக இருக்கிறது. இந்தத் திருத்தத்தைப் பார்த்தாலே இந்த மசோதாவினுடைய இந்தப் பிரிவுக்கே இன்றையதினம் அவசியமில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். அதற்குக் காரணம் என்னவென்றால், இன்று இந்தத் திருத்தத்திலும் கூட, இந்தத் தேர்தல் நடத்துகின்ற முறையைப் பொறுத்த வரையிலும் டெலிகேட்டுகள்தான் தலைவர் தேர்தலில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். நேரடியான முறையிலே இருக்கிறது என்பதை விளக்க அந்தத் திருத்தம் என்னால் கொடுக்கப்பட்டது. நான் குறிப்பிட்ட அந்த வார்த்தைகளிலே





அந்தத் திருத்தத்தை நான் சொல்லவில்லை என்றாலும் கூட அந்தக் கருத்திலேதான் நான் அந்தத் திருத்தத்தைக் கொடுத்தேன். இன்று அந்தக் கருத்தை, சர்க்கார் தரப்பிலே, அரசு தரப்பிலே ஏற்றுக் கொண்டிருப்பதால் என்னுடைய திருத்தத்தை நான் வலியுறுத்தவில்லை. நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்று அந்தத் தேர்தலில் பங்கு கொள்பவர்கள், தேர்தலிலே வாக்களிப்பவர்கள் டெலிகேட்டுகள்தான். இப்பொழுதிருக்கும் சட்டத்திலேயே டெலிகேட்டுகள் வாக்களிப்பதற்கான உரிமையைப் பெற்றிருக்கிறார்கள். எனவே, அதற்காகத் தனியான பிரிவு இந்த மசோதாவிலே இடம் பெறத் தேவையில்லை. என்னுடைய அடுத்த திருத்தம். ' Delete the proposed section 3-C என்பதாகும். இந்த 3-சி என்பது, இந்தப் பிரிவு மிக மிக முக்கியமான பிரிவு. இதைப்பற்றி சட்ட அமைச்சரவர்களும், கூட்டுறவு அமைச்சரவர்களும் வெகுவாக விளக்கம் தந்து விட்டார்கள். அதைப்பற்றி ஒன்றை மட்டும் கூற விரும்புகிறேன். இப்படிப்பட்ட பிரிவு எந்த விதமான காரணத்திற்காகவோ, எந்தவிதமான சூழ்நிலையிலே ஏற்பட்ட காரணத்திற்காகவோ கொண்டு வரப்படவில்லை. ஏதோ நாங்களாகவே நினைத்தோம், இதுதான் நன்மை என்பதைச் சொன்னார்கள். ஒன்றை மட்டும் குறிப்பிட ஆசைப்படுகிறேன். இந்தப் பிரிவைப் பொறுத்தவரையிலே, ஒரு ஜாயிண்ட் ரிஜிஸ்தரார் அளவிலேயுள்ள ஒருவரை அந்தப் பதவியிலே, தகுதி படைத்த ஒருவரை இந்தக் கூட்டுறவு வங்கியிலே சீஃப் எக்ஸிகியூட்டிவ் ஆபீசராக இடம் பெற வேண்டுமென்று சொல்லி இந்தத் தரப்பிலேயிருந்து அந்த மாநில வங்கிக்கு தாக்கீது அனுப்பப்பட்டது. அவர்கள் அதை மறுத்து விட்டார்கள். அப்படிப்பட்ட ஆலோசனையை ஏற்க மறுத்து விட்டார்கள். இந்தச் சூழ்நிலையிலே இந்தச் சட்டம் வந்திருக்கிறது, மசோதா வந்திருக்கிறது. இந்தச் சூழ்நிலைக்கும், மசோதா இன்று வருகிற நிலைமைக்கும் இணைப்புக் கொடுத்தால் இருக்கக்கூடிய விவரம் தெரியும். சாதாரணமாக அது நடைபெற்ற சில நாட்களுக்குப் பிறகு, ஒன்றிரண்டு மாதங்களுக்குள் இந்த நிலைமை ஏற்பட்டிருப்பது நிச்சயமாக, நாங்கள் சொல்வதை ஏற்க மறுக்கிறீர்களா, நாங்கள் என்ன செய்கிறோம் பார் என்னும் அளவிலே இந்த மசோதா இடம் பெற்றிருக்கிறதோ என்ற ஐயப்பாடு இருக்கிறது. சீஃப் எக்ஸிகியூட்டிவ் ஆபீசரால் என்னென்ன நன்மைகள் இருக்கின்றன என்பதைப்பற்றி இன்றுள்ள கூட்டுறவுச் சட்டத்திலேயே அதற்கான வழிவகைகள் இருக்கின்றன. கூட்டுறவுச் சங்கத்தின் 72-வது பிரிவு, இதை மிக அழகாகத், தெளிவாகச் சொல்லியிருக்கிறது. ஆனால், இதிலே நடவடிக்கை எடுப்பதிலே எப்படிப்பட்ட சிக்கல்கள் வரும் என்பதைச் சொன்னார்கள். ஆனால் அப்படி சூப்பர்செஷன் நடவடிக்கை எடுப்பதிலே, சூப்பர்செஷன் எடுக்கின்ற முறையிலே மிகுந்த காலதாமதம் ஆகிறது. அதை நான் இந்த நேரத்திலே வலியுறுத்தாமல் இருக்க முடியாது. அப்படி மிகுந்த காலதாமதமாவதற்குக் காரணமே அந்த இலாக்கா இயங்குகின்ற முறை

[திரு. க. இராமமூர்த்தி] [1969 ஆகஸ்ட் 28

என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த இலாக்காவிலே, எந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அது உடனடியாக எடுக்கப்படுவதில்லை. குறிப்பாக, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த திண்டிவனம் நகரக் கூட்டுறவு வங்கியைப் பற்றியே நான் சொல்ல முடியும். அதைப்பற்றித் தகுந்த ஆதாரங்களோடு நான் அமைச்சர் அவர்களிடம் தகவல் கொடுத்தேன். சென்ற மார்ச் மாதம் அதைக் கொடுத்தேன். இப்பொழுதுதான் 4, 5 நாட்களுக்குள்ளாக அந்த வங்கி சூப்பர்சீட் செய்யப்பட்டிருக்கிறது. இது பற்றிய கடிதப் போக்குவரத்து, விசாரணை நடைபெறுகின்ற முறை இவைகளெல்லாம் மிகுந்த காலதாமதத்தை உண்டாக்குகிறது. ஆகவே, அந்த இலாகாவைத் திருத்தி அமைத்து, மாற்ற வேண்டுமே தவிர, அதற்காக ஒரு தனிப் பிரிவாகக் கொண்டு வந்து அதை மசோதாவாகக் கொண்டுவந்து நிறைவேற்றுவது என்பது சரியல்ல என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, என்னுடைய திருத்தம்—

Renumber section 3-D as section 3-B and add the following words at the end :—

" and for the discharge of prior debts on the land mortgaged ".

இந்த 3-டி பிரிவு மிகமிக முக்கியமான பிரிவாகும். இது என்னென்ன காரணங்களுக்காக இந்த நிலவள வங்கி கடன் கொடுக்க இருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்தி இருக்கிறது. அந்தக் காரணங்களைச் சொல்லுகின்ற நேரத்திலே

The loans which may be granted by a Primary Land Development Bank or the State Land Development Bank shall relate to such purposes pertaining to development of lands may be prescribed என்பதாக இருக்கிறது. நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புவது இந்தச் சட்டம் எந்த விதத்திலும், ஏற்கனவே, விவசாயிகள் அல்லது, நிலம் படைத்தவர்கள், அல்லது நில வள வங்கிகளிலே கடன் கொடுத்தவர்கள் தாங்கள் ஏற்கனவே பெற்றிருக்கிற கடன்களை அல்லது தங்களுடைய முந்திய கடன்களைத் தீர்ப்பதற்காக இந்த நில வள வங்கியிலே கடன் வாங்குவதற்கு வழி வகை செய்யவில்லை யென்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்ட வழிவகை செய்ய வேண்டுமென்பதிலே எனக்கும் இங்கே இருக்கிற ஆளும் கட்சியினருக்கும் எந்தவித வேறுபாடும் இருக்காது என்று நம்புகிறேன். ஆகவே, அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டால்தான் இந்த மசோதா உண்மையில் விவசாயிகளுக்கு நன்மை செய்கின்ற மசோதாவாக இருக்கலாம் என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைன்று, இன்றைய . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சுருக்கமாகச் சொல்லுங்கள், இப்பொழுதே மணி 12 ஆகிவிட்டது.



1969 ஆகஸ்ட் 28]

**திரு. க. இராமமூர்த்தி :** நிறைய திருத்தங்கள் இருக்கின்றன, ஆகவேதான் நேரமாகிறது. சுருக்கமாக முடித்துவிடுகிறேன்.

இன்றைய தினம், போக்கியம், ஒத்தி போன்ற கடன்களைப் பெற்றுள்ள விவசாயிகள் அந்த நில வள வங்கியிலே கடன் பெற வேண்டுமானால் அந்தக் கடனைப் பைசல் செய்துவிட்டுத்தான், கடனைக் கொடுத்துவிட்டுத்தான், போக்கியத்தை மீட்டுவிட்டுத்தான் இந்த வங்கியிலே கடன் பெற முடியும். ஆனால், இந்த வங்கி கடன் பெறாமல் அந்த போக்கியத்தைத் தீர்ப்பது அல்லது பைசல் செய்வது என்பது சாதாரண விவசாயிகளால் முடியாது என்பதோடு மட்டுமல்ல, இந்த நில வள வங்கியிலே அந்தக் கடன் பெற்று போக்கியத்தைத் தீர்ப்பதற்கு இடையிலே இன்னொரு கடன் தருகின்ற முதலாளிகளை அந்த விவசாயிகள் அணுக வேண்டியிருக்கிறது, அவர்களிடம் செல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. இங்கே இருக்கிற அனைவருக்கும் தெரியும், அமைச்சர்களுக்கும் தெரியும், அந்த மாதிரி நேரத்திலே அவர்களுக்கு வட்டி விதங்கள் எந்த அளவிலே விதிக்கப்படுகிறது என்பது. அப்படிப்பட்ட இன்னல்களுக்கு விவசாயிகளை ஆளாக்காமல் இருப்பதற்காகவே இந்த மசோதாவிலே முந்தைய கடன்களை பைசல் செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய திருத்தம்

Re-number Section 3-E as Section 3-C

என்பதாகும். அதற்கு இப்பொழுது அவசியம் இல்லை. சர்க்கார் ஏற்றுக் கொண்டால்தான் என்னுடைய திருத்தத்திற்கு அவசியம் ஏற்படுகிறது.

அடுத்து என்னுடைய திருத்தம் இந்த மசோதாவினுடைய 3-எப் என்ற பிரிவை விட்டுவிட வேண்டுமென்பதாகும். இந்த 3-எப் என்கின்ற பிரிவு இந்த நில வள வங்கிக்கான தேர்தலை எந்த முறையிலே வைத்துக்கொள்வது என்று தேர்தல் நடை முறைகளைக் குறிப்பிடுகின்றது. இதைப் பொறுத்தவரையிலும் நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தப் பிரிவுக்கு அவசியமே இல்லாத நிலைமை இன்றைய தினம் இருக்கிறது. ஏற்கனவே இந்தத் தேர்தலை எப்படி நடத்த வேண்டுமென்ற முறையில் இன்றைய தினம் இருக்கிற கூட்டுறவு சட்டத்தினுடைய 27-வது பிரிவு அமைந்திருக்கிறது. ஆகவே, கூட்டுறவுச் சட்டத்தினுடைய 27-வது விதியிலே தேர்தல் எப்படி நடத்த வேண்டுமென்று நாம் குறிப்பிட்டுவிட்டு அதையே இன்னொரு மசோதாவிலே கொண்டு வந்து இப்படித்தான் தேர்தலை நடத்த வேண்டுமென்று அதே முறைகளைக் கொண்டு வருவது தேவையற்ற ஒன்றாகும். ஒன்றையே திரும்பத் திரும்பப் படிப்பதற்கும் வழக்கறிஞர்களுக்கு வேண்டுமானால் நிறைய வேலை இருக்குமே தவிர, இதில் அவசியம் இல்லை. அவசியம் இல்லாத ஒன்றைக் கொண்டு வருவதால் இந்த மசோதா

[திரு. க. இராமமூர்த்தி] [1969 ஆகஸ்ட் 28

வினுடைய அளவும்கூட அதிகமாகிறது. ஆகவே, தேவையற்ற அந்த உட்பிரிவையும் விட்டுவிட வேண்டுமென்று சொல்லி, என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

DR. H. V. HANDE : I shall be very brief in my remarks and I shall not take up much of the time of the House. I have proposed four amendments. The first amendment proposes the insertion of the following as the third proviso to sub-section (3) of section 3-A in the proposed new chapter I-A :—

"Notwithstanding anything in the foregoing proviso, no person who has been a member of the committee of the State Land Development Bank consecutively for a period of more than six years immediately preceding the date of commencement of the Amendment Act shall cease to hold office as such forthwith."

I have referred to this in the general discussion. After the reply of the Minister I have one or two misgivings. We have a number of persons sitting as directors of these banks. During the discussion which we had in 1967 and the subsequent discussion which we had in 1968 on the Demand for Grants, I have clearly explained how many of these persons are responsible for bringing discredit to this wonderful organisation called the co-operative movement. Afterwards the Minister agreed to appoint a committee. The Committee was in response to our request in this House and we are grateful to the Ministry for appointing the Committee, though we have been asking for such a committee for a number of years. I want this Ministry to find out ways and means of implementing the recommendations of the Committee. The Minister said that such a provision might be declared *ultra vires*. Will it not be possible to consult the Law Department on how best we can get over the legal lacuna so that we can clean the Augean stables of the acts of omission and commission?

My second amendment proposes the deletion of clause 3-B. The clause says that the election of the members of the Board in respect of each district shall be held at a meeting of the presidents of the primary land development banks in that district, at such place and at such time as may be fixed by the State Government or any officer authorised by the State Government and shall be conducted in the manner prescribed. My question is: Why this sort of Statism? Why should we not ask the board itself to conduct the election and thus give greater autonomy and freedom to the board? For everything they will have to rush to the central point, namely the Government. This is an example of overtone of Statism. For the same reason I have suggested the deletion of the clause.

Clause 3-C refers to so many things. The most important point is that the State Government may appoint executive officers and managers for the banks. This was explained, but



1969 ஆகஸ்ட் 28]

the Minister for Law thought that these powers were absolutely necessary. This is not a clause providing for supercession. The reply of the Minister looked as though it is an argument for supercession. No question of supercession comes in. It is a question of conducting and supervising the work of the banks so that the work may be done properly. If the Government appoints these officers, they will be receiving directions from the Government and will be interfering with the day to day administration of the organisation which will cut at the very root of the freedom of approach to the problems and the very concept of the co-operative movement.

Therefore, I object to the principle of the State Government appointing the Executive Officer or Managers of the Land Development Banks. I would request the Government to leave this function of appointment of the Chief Executive to the Management itself and let there be no unnecessary interference in every act of internal management. There are already statutory rules of service conditions of employees of Land Mortgagee Banks. So this provision is also redundant, and I suggest that it should be deleted.

Then I come to my fourth amendment, namely :—

'Insert the following as item (vi) to section 3-F :

"For the purpose of ensuring that not less than seventy-five per cent of the loans are issued only to the farmers, owning less than five hectares of land."

Sir, the very idea of bringing forward this Bill is to help the small farmers and therefore, representatives of the small farmers are going to be in the Board of Directors. My submission is that we should make a statutory provision that 75 per cent of the small farmers owning less than five hectares of land should be given representation. If that is done, that will solve our problem. One supreme test of the Land Development Bank is, how far it helps the small land-holder in securing long term loans. Mere packing the Board with representatives of scheduled caste, etc., will not achieve this miracle. But a mere purposeful working and operative procedure is that it should be laid down that not less than 75 per cent of the funds of the Land Development Bank should be given only to the small landholders. The procedural bottlenecks like obtaining title certificates dating to Settlement Record 1910-11 should be modified suitably. Even now it is not too late to accept my amendment or the Government themselves can bring forward such an amendment. My only object is that my amendment should be incorporated in the Bill. Thank you, Sir.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நண்பர் திரு. ராமமூர்த்தி அவர்கள் கொடுத்திருக்கிற திருத்தத் தீர்மானங்களை ஆதரிக்கிறேன். சாப்டர் ஒன்-ஏ-யில் சப்-கிளாஸ் (5)-ல்

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1969 ஆகஸ்ட் 28

"Provided that any primary land development bank may, with the approval of the Registrar, be removed from membership of the State Land Development Bank by a resolution of the Board and any application for obtaining such approval shall be made within two months from the date of registration of the primary land development bank."

என்று இருக்கிறது. அதன்படி எந்தப் பிரதான வங்கியையும், மாநில நிலவள வங்கியின் உறுப்பினரிலிருந்து, நிர்வாகக் குழுவில் ஒரு தீர்மானம் போட்டு, தள்ளி விடலாம் என்று இருக்கிறது. தள்ளுபடி செய்யலாம் என்றால், என்ன குறைபாடுகள் இருந்தால் தள்ளுபடி செய்யலாம் என்ற விவரங்கள் கொடுக்கப் படவில்லை. வங்கியின் உறுப்பினர்களைத் தள்ளுவதற்கு முன்னால் அவர்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுத்து, அதாவது 'ஷோ காஸ் நோட்டீஸ்' கொடுத்து, அதற்கு அவர்கள் என்ன பதில் சொல்லுகிறார்கள் என்று பதில் பெற்ற பிறகு, பதில் சரியாக இல்லையென்றால் தான் தள்ளுபடி செய்யலாம் என்று இருக்க வேண்டும். அதுதான் முறையாக இருக்கும் என்று கருதுகிறேன். இதற்கான விளக்கத்தை அமைச்சர் அவர்கள் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நான் கொடுத்திருக்கிற திருத்தம் கிளாஸ் 3-பி-க்கு எலெக்ஷன் ஆஃப் மெம்பர்ஸ் ஆஃப் போர்டு (3-B)

'The election of the members of the Board in respect of each district shall be held at a meeting of the presidents of the primary land development banks in that district, at such place and at such time as may be fixed by the State Government or any officer authorised by the State Government and shall be conducted in the manner prescribed.'

என்பதிலிருந்து

'at such place and at such time as may be fixed by the State Government or any officer authorised by the State Government and shall be conducted in the manner prescribed'. என்ற பகுதியை நீக்கிவிடவேண்டும் என்று கொடுத்திருக்கிறேன். திரு. இராமமூர்த்தி அவர்கள் இந்தக் கிளாஸையே எடுத்துவிட வேண்டுமென்று சொல்கிறார்கள். நான் குறிப்பிட்டிருக்கிற அந்தப் பகுதியை எடுத்துவிட்டாலே அதற்கு அந்த அர்த்தம்தான் வரும். நிர்வாகக் குழுவின் அங்கத்தினர்கள் எந்த இடத்தில் எப்படித் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று அரசோ அல்லது அதிகாரிகளோ நிர்ணயிக்க வேண்டும் என்ற நிலைமை இருக்கத் தேவையில்லை. ஆகவே, இந்தத் திருத்தத்தை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கிளாஸ் 3-ஸி—அப்பாயிண்டுமெண்டு ஆஃப் எக்ஸிக்யூடிவ் ஆபீசர் அண்டு மானேஜர்—இதைப்பற்றி சட்ட அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்தார்கள். அரசு சார்பில் திருத்தத் தீர்மானமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அரசாங்க அதிகாரிகளை



1969 ஆகஸ்ட் 28] [திரு. என். எஸ். வி. சித்தன்]

எந்த அளவுக்குக் குறைத்துக் கொள்ளவேண்டும் என்பதைப்பற்றி வெளியிலும், மற்ற கூட்டுறவுத் தலைவர்களும் பல முறை கருத்துக்களை எடுத்துரைத்திருக்கிறார்கள். உதாரணத்திற்காக ஒன்று சொல்கிறேன். திட்டக் குழுவின் அங்கத்தினர் திரு. பி. வெங்கடப்பய்யா அவர்கள் தலைமையில் ஒரு குழுவை ரிசர்வ் பாங்கு 1966-ம் ஆண்டில் ஜூலை மாதம் நியமித்தது. அந்தக் குழு கூட்டுறவுத் துறையைப் பற்றி சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறது. ஆல் இந்தியா ரூரல் கிரெடிட் ரெவியூ கமிட்டி என்ற பெயருள்ள குழு ஜூலை 1969-ல் ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறது. ஒரு சிறு பகுதியை வாசித்துவிடுகிறேன், பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியுடன்,

"We have referred earlier to the fact that land development banks depend, in varying degrees, on Government staff for their normal operations. In some States, it is the practice to require all loan applications to be routed through, and recommended by, a Co-operative Sub-Registrar or a Deputy Registrar or other Government functionaries, according to the size of the loan. It is also found that in some cases, the officers engaged on such work are paid for by the Central Land Development Bank fully or in part. We consider it salutary principle that every officer who is engaged on any work connected with Co-operative credit should function only as part of, and under the administrative control of the concerned institution. Except for the public enquiry procedure which in any case, has to be conducted by a Government officer, we do not see any special benefit accruing to the long-term credit structure by the routing of the loan applications through departmental officials. Nor can this be justified on the ground that the State Government guarantee the debentures of the Central Land Development Bank because this is not done in cases where Reserve Bank credit limits are sanctioned on Government guarantee. We therefore, recommend that gradually the banks should reduce their dependence on Government officers for those stages of the loan procedure which can as well be dealt with by institutional staff"

என்று மிகத் தெளிவாகக் கொடுத்திருக்கிறார்கள். புதியதாக எக்ஸிக்யூடிவ் ஆபீசர், மானேஜர் போடுவதற்குச் சொல்லப்படுகிற காரணம்

'for the purpose of safeguarding the interests of the shareholders . . .'

என்று கொடுத்திருக்கிறார்கள். உறுப்பினர்களுடைய அல்லது பங்குதாரர்களுடைய உரிமையைப் பாதுகாத்துக் கொள்வதற்கு போர்டு ஆஃப் டைரக்டர்ஸ் இருக்கிறார்கள். அவர்கள், ஏற்கனவே அந்த உறுப்பினர்கள், பங்குதாரர்களினால்தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் நன்றாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் அவர்களுடைய உரிமைகளைப்பற்றி என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1969 ஆகஸ்ட் 28

அமைச்சர் அவர்கள் மேலவை எதிர்க்கட்சித் தலைவரின் கருத்தைப் பெற்றுக்கொண்ட பின்னரே ஒரு திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னார். அதில்

'Provided that such power shall be exercised after consulting the bank concerned.'

என்று கூறப்பட்டிருக்கிறது. அதற்கு இன்னொரு திருத்தத்தை நான் கோருகிறேன்.

'Provided that such power shall be exercised after getting the consent of the bank concerned.'

என்று திருத்திக் கொள்ளவேண்டும்.

சம்பந்தப்பட்ட வங்கியைக் கலந்துகொண்டு இந்த அதிகாரியை நியமிக்க வேண்டும் என்று சொன்னால், கலந்துகொண்டு என்று சொன்னால், அவர்கள் வேண்டாம், விருப்பம் இல்லை என்று சொல்லி விட்டால், முடிவு என்ன? ஆகவே, வங்கியைக் கலந்து கொண்டு, அவர்களுடைய அனுமதியைப் பெற்ற பின்னாலே போட வேண்டும் என்ற திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கிளாஸ் 3-எஃப்-ல் (Power to make rules)

'The State Government may make rules not inconsistent with this Chapter , . .'

என்று இருக்கிறது.

இதிலும் கூட 'after getting the consent of the bank concerned' என்று திருத்திக்கொள்ளவேண்டும். இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்**: தலைவர் அவர்களே, நண்பர் திரு. ராமமூர்த்தி அவர்கள் முதலில் தொடங்கியபோது, அவர்கள் குறிப்பிட்டவை மிகவும் வரவேற்கத்தக்கவை. அவர்கள் சொன்னார்கள், அரசினரே திருத்தத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் இந்த அரசு கௌரவத்தைக் கருதாமல் ஒரு நல்ல கருத்தை ஏற்றுக்கொண்டார்கள் என்பது தெளிவாகின்றது என்று கூறினார்கள். நல்ல கருத்துக்களாக இருக்குமானால், கௌரவத்தைக் கருதாமல், திருத்தத்தை ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது என்று சொன்னார்கள். மிகவும் வரவேற்கிறேன். நன்றாக எடுத்துச் சொன்னார்கள். அது உள்ளபடியே நடைமுறையில் இருக்கப்பட்ட ஒன்றாகும். நல்ல கருத்துக்கள் எங்கிருந்து வந்தாலும், அவற்றை என்னைப் பொறுத்தவரையிலும், இந்த அமைச்சு ஏற்றுக்கொள்ளும், இந்த அமைச்சரவை ஏற்றுக்கொள்ளும் என்பதை நான் தெளிவுபடுத்திக் கொள்கிறேன். வள்ளுவர் வழி நடந்து செல்லும் இந்த அமைச்சரவை

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்ற குறளைக் கூடவா பின்பற்றாது?





1969 ஆகஸ்ட் 28] [திரு. சி. பா. ஆதித்தனார்]

ஆனால் நண்பர் நல்ல முறையாகச் சொல்லி, ஒரு வெடிகுண்டைத் தூக்கிப் போட்டார்கள், அவசர அவசரமாகக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று. இந்தத் திருத்தம் அவசரமாகக் கொண்டு வந்தது அல்ல. மாண்புமிகு மாதவன் அவர்கள் பல முறை இதைப் பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நிலவள வங்கி பற்றிய ஒரு விழாவின்போதே அவர்களே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையிலே இது செய்யப்பட்டிருக்கிறதே அல்லாது, அவசரமாக இல்லை. அவசரம் என்பதற்கு எடுத்துக்காட்டாக, 'கோ-ஆப்ட்' என்ற சொல்லை விட்டு விட்டு, இப்பொழுது சிந்தித்துச் செய்யப் பட்டிருக்கிறது. முன்னால் நடந்தது அவசரமானது. 'கோ-ஆப்ட்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டது என்றால், நில வள போர்டில் இருப்பவர்கள் ஏதாவது ஒரு சிலரைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்கிற நிலை ஏற்பட்டால், தாழ்த்தப்பட்டவர்களையோ அல்லது வேறு சிறுநிலச் சொந்தக்காரர்களையோ, இப்பொழுது உள்ள போர்டே கூட இரண்டு பேர்களைச் சேர்த்துக் கொள்ளலாம் என்று இருந்ததை, அரசே நியமிக்கட்டும் என்று, நல்ல எண்ணத்தில் திரு. ராமமூர்த்தி அவர்களும், அவர்களுடைய தலைவர் அவர்களும் சொல்லும்போது, அதை ஏற்றுக் கொள்ளாமல் இருக்க முடியாது. முன்னால் சொன்னது இப்பொழுது இருக்கக் கூடிய போர்டே கோ-ஆப்ட் செய்து கொள்ளட்டும் என்று இருந்ததை, வேண்டாம், அரசினரே நியமித்துக் கொள்ளட்டும், என்று எதிர்க் கட்சி அந்த அளவுக்கு அரசின் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்று தெரிந்த பிறகு, அவ்வளவு தூரம் நம்புவார்கள் என்று தெரிந்த பிறகு ஒத்துக்கொள்ளாமல் இருக்க முடியுமா? சந்தேகிக்கலாமா?

மாவட்டப் பிரதிநிதிகள் போர்டில் இருப்பதில், தமிழகம் முழுவதிற்கும், நிர்வாகத்தில் 19 பேர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மூன்று பேர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள். தேர்ந்தெடுக்கப்படும் முறை இப்பொழுது சரியாக இல்லை என்று பல பேர்கள் சொன்னதால், அது செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது மாநிலம் முழுதிலும் உள்ள ப்ரைமரி பாங்குகள் தேர்ந்தெடுக்கிறார்கள். நெல்லை மாவட்டத்திற்கு இரண்டு பேர்கள், சேலம் மாவட்டத்திற்கு இரண்டு பேர்கள் என்று அந்த வகையில் தேர்ந்தெடுக்கிறார்கள். இப்பொழுது நெல்லை மாவட்டத்தவர்கள் சேலம் மாவட்டத்திற்கும் தேர்ந்தெடுக்கும் முறை இருக்கிறது. நெல்லை மாவட்டப் பிரதிநிதிகளை நெல்லை மாவட்டமே தேர்ந்தெடுக்கட்டும் என்ற கருத்து நல்ல கருத்தாக இருக்கிறது. நன்மையாகவும், இலகுவாகவும் இருக்கும் என்று அது பிறப்பிக்கப் பட்டுள்ளது.

இன்னொன்று சொன்னார்கள். மானேஜர்களை ஏன் போட வேண்டும் என்றார்கள். வங்கிகளையே சூபர்ஸீட் செய்து அழித்து விடுவதுதானே என்றார்கள். முன்னாலே மானேஜர்கள் ஏன் போடுகிறோம் என்றால், ஒரு நிலவள வங்கி ப்ளாக்கில் இருக்கும்.

[திரு. சி. பா. ஆதித்தனார்] 1969 ஆகஸ்ட் 28

நிலுவை அதாவது வசூல் செய்யாமல் நின்று போயிருக்கும் அப்படிப்பட்ட தொகை 15 சதவிகிதத்திற்கு மேல் இருந்தால், மேற்கொண்டு செயல் பட முடியாத நிலை ஏற்படுகிறது. ரிசர்வ் பாங்க் விதிகளின்படி, அவர்கள் சொல்லுகின்ற கருத்துக்கள்படி, நிலுவை அதிகமாக இருந்தால், மேற்கொண்டு ரிசர்வ் பாங்க் உதவுவது என்பது முடியாது; அப்படியென்றால், என்ன செய்வது? எனக்குள்ளாக ஒரு மனப்போராட்டம் ஏற்படும்—சூபர்ஸீட் செய்ய வேண்டுமா, சங்கத்தை அழித்து விடவேண்டுமா, அரசினர் கைப்பற்றி விடுவதா, அல்லது ஒரு மானேஜரைப் போட்டு, விரைவாக வசூல் செய்யச் சொல்லுவதா? எனக்குத் தெரிந்த அளவில் விரைவாக வசூல் செய்து, மேலும், ரிசர்வ் பாங்கியிடமிருந்து உதவி பெற்று, உழவர்களுக்குக் கொடுப்பது தான் சிறந்த முறை என்று தோன்றியது. அப்படி நான் மட்டும் சொல்லவில்லை. பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். (ஒரு குரல்: எந்தப் பெரியவர்?) அந்தப் பெரியவர் வருத்தப் படக்கூடாது என்பதற்காகப் பெயரைச் சொல்லவில்லை. (திரு. பி. ஜி. கருத்திருமன்: அவர் பெரியவராகவே இருக்க வேண்டுமே!) பெரியவர் தான், நான் பெரியவர் என்று கருதுவேன். (ஒரு குரல்: பெரியாரா?) பெரியாரை இந்த இடத்தில் குறிப்பிடவில்லை. கூட்டுறவு அனுபவம் உள்ள, பழுத்த அரசியல்வாதி பற்றிச் சொன்னேன். அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். நான் சொல்வதை திரு. ராமமூர்த்தி ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன், மானேஜரை நியமிப்பது பற்றி. சூபர்ஸீடிங் என்பது கோடாரி கொண்டு வெட்டுவது போல. அப்படிப்பட்ட நிலையைச் சீர்திருத்திக் கொள்வது உழவர்களுக்குப் பாதகம் இல்லாமல் இருக்கும் என்பது என்னுடைய எண்ணம்.

பழைய கடன் பற்றிச் சொன்னார்கள். பழைய கடன் இருக்கும் போது புதுக் கடன் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா என்றார்கள். பொதுவாக நிலச் சொந்தக்காரர்கள், கடன் வாங்கும்போது, பழைய கடன் இருக்குமானால், புதுக் கடன் கொடுக்கப்படுமா என்று கேட்டார்கள். ஒன்றைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். நிலவள வங்கிகளை நடத்தும்போது, யாரிடம் பணம் பெருவாரியாக பெறுகிறோம் என்றால், ரிசர்வ் பாங்கியிடமிருந்து. ரிசர்வ் பாங்க் விதி முறைப்படி, அவர்கள் தெளிவாக, சந்தேகத்திற்கு இடமில்லாமல் சொல்லியிருக்கிறார்கள். இனிமேல் நில அடைமான பாங்கியில்லை, நில வள வங்கிகள். நில வள வங்கியென்றால் அது எது எதற்கு கொடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். முன் கடன் இருந்தால் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், முன்னால் கொடுக்கப்பட்ட கடன், நிலத்தை வளப்படுத்த என்ற கடனாக இருந்தால், அதை எடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுவும் பொதுவாக ரிசர்வ் பாங்க் சொல்வதுபோல் போவது நல்லதாக இருக்கும். அவர்கள் தவறாகக் கொஞ்சங்கூடப் போடவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1969 ஆகஸ்ட் 28] [திரு. சி. பா. ஆதித்தனார்]

டாக்டர் ஹாண்டே அவர்கள், ஆறு வருஷத்திற்கு மேல் ஒருவரும் அதிலே நிர்வாகியாக இருக்கக் கூடாது, என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னார்கள். ஆறு வருஷத்திற்கு மேல் தொடர்ந்து இருக்கக் கூடாது என்று அவர்கள் சொல்லும்போது, எனக்கு இருக்கும் எண்ணம் எல்லாம், அதை எதிர்க் கட்சித் தலைவர் ஏற்றுக் கொள்கிறார்களா என்றுதான். அன்போடு கேட்கிறேன். அவர்கள் ஏற்றுக் கொள்ளும் தன்மையில் இருக்கிறார்களா? அது அவர்களுக்கு இனிப்பாக இருக்குமா? டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னது அவர்களுக்கு இனிப்பான கருத்தா? வெளித் தோற்றத்திற்கு ஷுகர் கோடிங்கா? தோற்றத்திலாவது இனிப்பாக இருக்கிறதா?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அமைச்சரவர்கள் எதையோ நினைத்துக்கொண்டு பேசுகிறார்கள். நல்லவர்களாக இருந்தால் எத்தனை ஆண்டுகளாகட்டும், இருக்கட்டும், 10, 20, ஆண்டுகளானாலும் சரியே. ஆனால், கெட்டவர்களாக இருந்தால், இரண்டு வருஷம் கூட இருக்கக் கூடாது. கெட்டவர்கள் ஒரு வருஷத்தில் கூட தூக்கியெறியப் படவேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், நல்லவர்கள் எத்தனை ஆண்டு காலம் வேண்டுமானாலும் நிர்வாகத்தில் இருக்கட்டும் என்கிறார்கள். 10, 15 ஆண்டுகளானாலும் சரி இருக்கட்டும் என்கிறார்கள். அவர்கள் அப்படிச் சொல்வதை டாக்டர் ஹாண்டே அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்களா? (டாக்டர் ஹாண்டே சைகை செய்தார்) ஆகவே, டாக்டர் ஹாண்டே அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், அவர்களுடைய கருத்து நிச்சயமாக ஆராயப்பட வேண்டிய காரியம் என்று மட்டும் சொல்ல வேண்டியிருக்கிறது. அது விவாதிக்கவேண்டியது, சர்ச்சைக்குரிய காரியம். ஆனால், இந்த மசோதாவைப் பொறுத்த வரையில், அது இப்பொழுது தீர்க்க வேண்டியது இல்லை. நீண்ட காலம் சர்ச்சைக்கு உரியது, சர்ச்சை செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. என்னுடைய கருத்து என்னவென்றால், ஒருவர் நல்லவராக இருந்தாலும், நீண்டகாலம் இருப்பது சரியில்லை. ஒரு நல்ல ஆட்சியாக இருந்தாலும், நீண்டகால ஆட்சியாக இருப்பது ஒவ்வாததாக இருக்கும். சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வரும்போது, ஹைகோர்ட் நீதிபதிகள் என்ன சொல்லுவார்கள் என்று ஆராய வேண்டும். சட்ட நிபுணர்கள் என்ன சொல்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். மகாராஷ்ட்ரா சட்ட நிபுணர்களிடம் கேட்டு கருத்து வாங்கிவைத்திருக்கிறேன். மகாராஷ்ட்ரா அரசின் கருத்தையும் வாங்கி வைத்திருக்கிறேன். மைசூரில் உள்ள சட்ட நிபுணர்களுடைய கருத்துக்களையும் வாங்கி வைத்திருக்கிறேன். அவற்றையெல்லாம் அலசி ஆராய்ந்துப் பார்த்து, பின்னால் செலக்ட் கமிட்டிக்கு திருத்தம் போகும்போது, அதைப்பற்றி தீர்த்துக் கொள்ள வேண்டிய காரியம் என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து.

[திரு. சி. பா. ஆதித்தனார்] [1969 ஆகஸ்ட் 28

இன்னும் சொல்வேன். நிலவள வங்கி என்று எடுத்தால் அதில் இன்னும் அர்பன் பாங்க், சென்ட்ரல் பாங்க், க்ரெடிட் சொசைடி, மார்க்கெடிங் சொசைடி என்றெல்லாம் இருக்கின்றன. 22,400 கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அத்தனைக்கும் பொருந்தும் அந்தக் கருத்து. ஆகவே, அவர்கள் சொன்னது ஒரு பொதுவான கருத்து. அதைச் சொன்னார்கள்.

இதற்குத் தனிச் சட்டம் இல்லாதவரையில், கூட்டுறவுச் சட்டங்கள் இதற்குப் பொருந்தும் என்று சொல்லியிருக்கிற நேரத்தில், இதையும் சேர்த்து அது கட்டுப்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், டாக்டர் ஹாண்டே அவர்கள், சிறுசிறு விவசாயிகளுக்குக்கூட உதவ வேண்டுமென்று சொன்னார்கள். சிறு விவசாயி என்றால் 2½ ஏக்கர் நிலம் வைத்திருப்பவரை சிறு விவசாயி என்று நான் சொன்னேன். என்னுடைய கூற்றைக்கூட குடியரசுக் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே இருந்திருந்தால் ஏற்றுக்கொள்ள மாட்டார். அவர் இப்போது அவையில் இல்லை. டாக்டர் ஹாண்டே அவர்கள் 12½ ஏக்கர் நிலம் வைத்திருப்பவரை சிறு விவசாயி என்கிறார். அம்மாதிரியான சிறுசிறு விவசாயிகளுக்கு 75 சதவீத அளவு உதவ வேண்டும் என்கிறார். அவர் சொல்வதை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை. இந்த அரசு சிறுசிறு விவசாயிகளின் அரசு, பாட்டாளி வர்க்கத்தின் அரசு, நடுத்தர வர்க்கத்தின் அரசு, பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்த வழியில் நின்று சிறுசிறு விவசாயிகளுக்காகப் பாடுபடும் அரசு. நான் சொல்லும் 2½ ஏக்கர் நிலம் வைத்திருப்பவரையே சிறு விவசாயி என்று கூற முடியாத நிலை இருக்கும்போது, 12½ ஏக்கர் நிலம் வைத்திருப்பவரை சிறு விவசாயி என்று எப்படிச் சொல்ல முடியும்?

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** தலைவர் அவர்களே, 'நீ என்னுடைய வீட்டிற்கு வந்தால் என்ன கொண்டு வருவாய்' என்று பேசப்படுவதைப்போல் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் 2½ ஏக்கர் உள்ளவர் சிறு விவசாயி என்றார். நான் 12½ ஏக்கர் என்று சொன்னேன். அமைச்சர் அவர்கள் ஒரு ஹெக்டார் என்றார்கள், நான் ஐந்து ஹெக்டார் என்று கூறினேன். அப்படி அமைச்சர் அவர்களுடைய கூற்றுப்படியாவது 2½ ஏக்கர் வைத்திருப்பவர்களுக்குக் கொடுங்கள். அதற்குத் தயாராக இருக்கிறீர்களா? சட்டத்தில் ஏன் அதைக் கொண்டுவரவில்லை? மசோதாவில் ஏன் போடவில்லை? அப்படி ஒரு மசோதா கொண்டு வந்திருந்தால் நலமாக இருந்திருக்குமே.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** டாக்டர் ஹாண்டே அவர்கள், நான் 1 ஹெக்டார் என்று சொன்னதாகவும் அவர் ஐந்து ஹெக்டார் என்று சொன்னதாகவும் சொல்கிறார். ஐந்து ஹெக்டார் அதாவது 12½ ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களை எப்படி சிறு



1969 ஆகஸ்ட் 28] [திரு. சி. பா. ஆதித்தனார்]

விவசாயி என்று கூற முடியும்? சிறு விவசாயிகளுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்பது இந்த அரசினுடைய கருத்து மட்டுமல்ல, ஒரு மாநாடு கூடி, இதைக் கூறியிருக்கிறது.

அடுத்தபடியாக, திரு. சித்தன் அவர்கள், removal of membership என்பதைப்பற்றிச் சொன்னார்கள். இரண்டு மாதத்திற்குள் நிர்வாகக் குழுவானது எந்த ஓர் உறுப்பினரையும் நீக்கிவிடுவதற்கு அதிகாரம் இருக்கிறதே, அந்த அதிகாரம் ரிஜிஸ்தரார் ஆஃப் சொசைடீஸ் அவர்களுடைய சம்மதத்துடன் நியாயமான காரியங்களுக்குத்தான் இருக்கலாம். இப்போதைக்கு இருக்கும் சட்டம் 1961-வது வருடத்திய சட்டம். நல்லவற்றை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்று சொன்னேன். 1961-வது வருடத்திய சட்டத்திலே,

"Provided that a particular member under this Clause may with approval of Registrar be removed from membership by the committee. Any application pertaining to such removal shall be made within two months."

என்று சொல்லப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட ஏற்கெனவே இருப்பதைத்தான் சொல்லியிருக்கிறேன். புதிதாக இப்போது வரப்பட்ட வங்கிகளுக்குப் பாதகமாக ஒன்றும் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆபீசர்கள் கூடுவதைப்பற்றி மீண்டும் சொன்னார்கள். எக்சிக்யூடிவ் ஆபீசர், மானேஜர்கள் பற்றிச் சொன்னார்கள். அத்தனை பேர்களையும் அரசு ஊழியர்களாக மட்டுமே போடப் போகிறீர்களா என்பதற்கு பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். வங்கிகளுக்கு என்று தனிப்பட்ட ஒரு ஆபீசர் கேடரை ஏற்படுத்தி, அதில் உள்ளவர்கள் ஒரு வங்கியிலிருந்து மாற்றப்பட்டவர்களாக இருக்க வேண்டுமென்று பெரியவர்களால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

"The business of co-operative institutions is becoming more and more complex as the economy itself is getting more and more diversified and sophisticated. It is necessary therefore that the co-operative movement should build within itself cadres of personnel with necessary expertise to carry out the business of the institutions in their charge. The elected leadership will no doubt lay lown the broad principles but implementation iargely rests with the paid executives."

இது பெரியவர்களுடைய கருத்து. பாலிசி, கொள்கை அளவில் தான் தேர்ந்தெடுக்கப்பட்ட டைரக்டர்கள் கொள்கை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஒரே கூட்டுறவுச் சங்கத்தில் இருக்கப் பட்டவர்களாக இல்லாமல், மாற்றப்பட்டவர்களாக இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அது ஏற்றுக்கொள்ளப் பட்டாக வேண்டும். அப்படி இருந்தால்தான் அனுபவமும் திறமையும் இருக்கும். அப்படிப்பட்டவர்களை நியமிப்போம். திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்ன கருத்துக்கள் பெரும் பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற காரணத்தால் இதைக்

குறிப்பிடுகிறேன். அவருடைய திருத்தம் சட்டத் துறையால் ஆராயப்பட்டு சொற்கள் சரியாக இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். சொல் வேறுபட்டிருப்பதற்குக் காரணத்தைச் சொன்னார்கள். சட்டத் துறையில் இன்னவாறு சொல்லை மட்டும் மாற்றியிருக்கிறோம். சொல்மாற்றம் மட்டும்தான் உண்டு, பொருள் மாறவில்லை. சொல் மாற்றம் உள்ள அரசினர் திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அமைச்சர் அவர்கள் பேசும் படியான சந்தர்ப்பத்தில் கிளாஸ் 5, 3-ஸி-யிலே,

" provided that such power shall be exercised after consulting the bank concerned " என்று இருக்கிறது என்றார். கன்சல்ட் என்று நோட்டீசைக் கொடுத்துவிட்ட பிறகு, கன்சன்ட் இல்லையென்றால் என்ன செய்வது? ஆகவே, " after consultation and consent of the bank " என்று இருக்க வேண்டும். இது ரொம்ப முக்கியமானது. இதைத்தான் எங்கள் கட்சியின் சார்பில் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு "

" நுண்ணிய நூல்பல கற்பினும் மாற்றுந்தன்
உண்மை யறிவே மிகும் "

என்பதும் தாங்கள் அறிந்ததே. ஆகவே சர்க்கார் இதற்கும் விளக்கம் கொடுத்தால் திருப்திகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் விளக்கம் கேட்டார்கள். மானேஜர் போடப்படும்போது ஒரு பிரைமரி பாங்க், அல்லது சம்பந்தப்பட்ட பாங்க் ஒப்புக் கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். அப்படி சம்பந்தப்பட்ட பாங்க் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று சொன்னால், நாம் என்ன காரணத்திற்காகப் போடுகிறோமோ அது நிறைவேறுமா? அதிக நிலுவை காரணமாக ரிசர்வ் பாங்கிடமிருந்து பணம் கிடைக்காமல், உழவர்களுக்குப் பணம் கொடுக்க முடியாத நிலை ஏற்படுகிறது. நாங்கள் மூன்று நாட்களில் நிலுவையை வசூல் செய்துவிடுகிறோம் என்று சொன்னால், அந்த இடத்தில் அரசு மானேஜர்களைப் போடாது. எங்களுக்கு நிலுவை அதிகமானால் 15 சதவிகிதம், அல்லது 30 சதவிகிதம் கூட வசூலித்துக் கொடுக்கமாட்டோம் என்று சொல்லிவிட்டால் என்ன செய்வது? அந்த நிலைமையை எல்லாம் உத்தேசித்துத்தான் இதைக் கொண்டுவந்திருக்கிறோம்.

**திரு. கே. விநாயகம் :** எங்கள் அபிப்பிராயம் இதுதான்.

You must not only consult but also obtain their consent. If you say merely " consult ", it is only a formality. It is just like calling a man about to be hanged as " dog ", giving him time and then hanging him.





அவர்கள் ஒத்துக் கொள்ளவில்லை என்றால் நேரிடையாகப் பேச வேண்டியதில்லை. இந்தப் பகுதியையே நீக்கிவிடலாம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்த மசோதாவின் கீழ் விதிமுறைகள் வகுக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். அப்போது எந்த எந்த வகையில் கன்சல்டேஷன் செய்ய வேண்டும் என்பது பற்றி யோசித்து விதிமுறைகள் வகுக்கலாம். ஆகவே இப்போதுள்ளபடியே ஏற்றுக்கொள்வது நல்லது என்று கருதுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியை ஏற்றுக்கொள்கிறேன். ஆனாலும் அவர் போய் அந்தக் குழியில் விழுந்துவிட்டார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எந்தக் குழியில் விழுந்து விட்டார்? அதுபோலச் சொல்லக்கூடாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எங்களுடைய அலர்ஜி எல்லாம் இந்த எக்சிக்யூடிவ் ஆபீசர் போடுவது, மானேஜர் போடுவது என்பதுதான். ஆயினும் இதுபற்றி யோசனை செய்துதான் முடிவு எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வாக்குறுதியை ஓரளவு நம்பி முடிக்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** பிரிவு 3-டி பற்றிச் சொல்கிற நேரத்தில் முன் கடன்களைப் பைசல் செய்வதற்கு வழிவகை இல்லை, ரிசர்வ் பாங்க் குறுக்கிடும் என்றார்கள். போக்கியம், ஒத்தி போன்ற நிலையில் நிலங்களை வைத்துவிட்ட பெரும்பான்மையோர்களுக்கு அப்போது இந்தச் சட்டத்தினால் பலனில்லாது போகும், எத்தனையோ விதமான போராட்டங்களை நடத்தி உரிமைகளைப் பெறுகிற இந்த அரசு, இதற்கு ரிசர்வ் பாங்க் ஒத்துக்கொள்ளாது என்றாலும் போராடி இந்த நிலையை ஒத்துக்கொள்ள அமைச்சர் அவர்கள் இதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** ஏற்றுக்கொள்ள முடியாத நிலை இருப்பதுபற்றி வருந்துகிறேன். பழைய கடன்கள் என்கிறபோது அதோடு அமைந்த தவறுகளைத் தவிர்க்க முடியாது. நம்முடைய நோக்கம் நிலம் வளம் பெறவேண்டும், நிலம் பசுமை பெறவேண்டும் என்பதுதான். எனக்கு நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன். இரண்டு மாதத்திற்கு முன்னால் சேலத்தைச் சேர்ந்த ஒருவர் என்னிடம் வந்து முறையிட்டார். நில அடமான வங்கிக்கு மனுச் செய்து 6 மாதம் ஆகிவிட்டது. இன்னும் பணம் கிடைக்கவில்லை, இரண்டு வாரத்தில் என் மகள் திருமணத்தை வைத்திருக்கிறேன், உடனடியாக எனக்குக் கடன் கிடைக்க வழி செய்யுங்கள் என்று முறையிட்டார். இப்படிப் பழைய கடன்கள் என்றால் எது எதற்கோ என்று பெறப்பட்ட நிலை எல்லாம் இருக்கிறது. இப்போதே அடமானம் செய்யப்பட்ட நிலங்கள்மீது விவசாயத்திற்குக் கடன் கொடுக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

DR. H. V. HANDE: The Chief Minister also was good enough to give the assurance that the consent of the bank will be taken. I do not know how far it will be possible to incorporate it in the rules without a specific provision in the Statute. Statute comes under one category and Rules come under a different category. As the Chief Minister has assured us that it will find a place in the rules, we are confident that it will find a place in the rules.

Similarly with regard to granting of loans, will the Minister be pleased to give the assurance that there will be some machinery to supervise and see that the small farmer really gets not less than seventy-five per cent of the loans issued? I am suggesting that this can be included in the rules. The Leader of the Opposition says that it will be difficult to put it in the rules. Will the Minister give the assurance that provision for such a machinery will be made in the rules? I conceded to his definition that 'small farmer' means a person with one hectare of land. Similarly will he concede my point?

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:* தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டது விதிமுறைகள் வகுக்கிறபோது எப்படி எப்படி கன்சல்டேஷன் செய்யலாம் என்பதை வரையறுக்கலாம் என்றேனே தவிர 'கன்சென்ட்' செய்வதற்கு என்று குறிப்பிட வில்லை.

*திரு. க. இராமமூர்த்தி:* நிர்வாகக் குழு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுவதுபற்றி ஒரு திருத்தம் கொடுக்கப்பட்டது. அரசாங்கம் தலையிட்டு எந்த நேரத்தில், எந்த இடத்தில் எப்போது தேர்தலை நடத்த வேண்டும் என்பது பற்றி முடிவு செய்யவேண்டிய அவசியம் என்ன? அவர்களே செய்துகொள்ளக் கூடாதா?

*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:* கூட்டுறவுச் சங்கத் தலைவர்களே தேர்தலை நடத்த அனுமதிக்கக்கூடாது, தனி அதிகாரி தான் அதைச் செய்யவேண்டும் என்பது ஏற்கெனவே முடிவு எடுக்கப்பட்ட ஒன்று. அதன்படி மகாராஷ்டிரத்தில் கலெக்டரே நடத்தவேண்டும் என்றும், ஆந்திராவில் கூட்டுறவு ரிஜிஸ்திரார் நடத்தவேண்டும் என்றும் சட்டத்தில் விதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளே நடத்திக்கொள்வது என்றால் அவர்களுக்கு அதில் ஒட்டுறவு இருக்கிறது, நாமினேஷன் பைல் பண்ணுகிறபோது அவர்கள் சிலவற்றை நிராகரிக்கிற தன்மை இருக்கிறது. ஹோசூரில் 2 மாதத்திற்கு முன்னால் அப்படித் தள்ளிவிட்டார்கள். இதன் காரணமாகத்தான் சங்கத்தில் இருப்பவர்களே நடத்தக்கூடாது, தனிப்பட்டவர் இருந்துதான் நடத்த வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது. தனிப்பட்டவர் என்கிறபோது நாம் இன்னமும் அவர் யார் என்பதுபற்றி முடிவு செய்யவில்லை. மகாராஷ்டிரத்தைப்போல கலெக்டர் இருக்கலாம். அல்லது ஆந்திராவைப் போல கூட்டுறவுத்துறை ஜாயிண்ட் ரிஜிஸ்திரார் இருக்கலாம்.





அடுத்து, டாக்டர் ஹாண்டே அவர்கள் சிறுநிலச் சொந்தக்காரர்கள் என்றால் 2½ ஏக்கரா உள்ளவர்களை வைத்துக்கொள்ள சம்மதித்தார், சந்தோஷம். நடைமுறையில் இப்படிப்பட்ட சிறு நில விவசாயிகளுக்குத்தான் கடன் வழங்குவதில் முதலிடம் அளிக்கப்படும். இந்த வகையில்தான் சீர்திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. ஒரு கிணறு, ஒரு பம்பு செட்டு வைப்பது என்றால் 5 ஏக்கரா முதல் பத்து ஏக்கரா பாசனம் பெறும். இந்த ஐந்து முதல் பத்து ஏக்கராவுக்குச் சொந்தமாக நான்கு விவசாயிகள் இருக்கிறார்கள் என்றால் அந்த நான்கு பேர்களும் சேர்ந்து ஒரு கூட்டுறவு சொஸைட்டியை அமைத்துக்கொள்ள—கடன் கொடுப்பதில் இவர்களுக்கு முதலிடம் கொடுக்க—வழிசெய்யும் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. மேலும் ப்ளாக்குக்கு ஒரு வங்கி என்று ஏற்படுகிற காரணத்தினால் சிறுசிறு விவசாயிகள் அங்கங்கே கடன்பெற நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன.

DR. H. V. HANDE: One clarification.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* எத்தனை முறை விளக்கங்கள் கேட்பது? இதை நான் அனுமதிக்க முடியாது. திரு. இராமமூர்த்தி அவர்கள் தம்முடைய திருத்தத்தை வற்புறுத்துகிறாரா? திரும்பப் பெறுகிறாரா?

THIRU K. RAMAMOORTHI: In view of the Minister's reply and his assurance with regard to my amendment to Clause 3-D, I do not press my amendment.

*திரு. இராமமூர்த்தி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.*

DR. H. V. HANDE: In addition to what the Minister has said, if only he gives an assurance that sevently-five per cent of the funds would be given as loans to small farmers, it will make my job of withdrawing easier. That is my only rcquest.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* என்ன, நீங்கள் உங்கள் திருத்தத்தை வற்புறுத்துகிறீர்களா அல்லது திரும்பப் பெறுகிறீர்களா?

DR. H. V. HANDE: In the hope that he will keep my suggestions in view I beg leave to withdraw my amendment.

*டாக்டர் ஹாண்டே அவர்களின் திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.* பி.ப. 12-30

THIRU N. S. V. CHITHAN: I beg leave to withdraw my amendment.

*திரு. சித்தன் அவர்களுடைய திருத்தமும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.*

*அரசினர் திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.*

பிரிவு 5, திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 6, 7 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

குறுந்தலைப்பு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவர் அவர்களே, "தமிழ் நாடு 1969-ம் ஆண்டு கூட்டுறவு நில அடைமான வங்கிகள் (திருத்த) மசோதா, திருத்தப்பட்டபடி, சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்" எனக் கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா திருத்தப்பட்டபடி, சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவோடு முடிவுறுகின்றன. பேரவை மீண்டும் 11—9—1969 அன்று பகல் 11 மணிக்குக் கூடும்.

பி.ப. 12-32 பின்னர் பேரவை ஒற்றி வைக்கப்பட்டது.

**5. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.**

ஏதுமில்லை.



## HOW TO USE THE INDEX

**The Index is arranged alphabetically. The main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.**

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entries in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main Heading ' Bill(s) '.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the respective Main Headings, i.e., ' Committee(s) ', ' Council(s) ', ' Corporation(s) ', etc.

Various Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under the respective Main Headings.

**All the papers laid on the Table of the House are indexed only under the Main Heading " Papers Laid on the Table ".**

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading " Chair ".

**A list of abbreviations used in the Index is given below :—**

| | |
|---|---|
| A.M. | Adjournment Motion. |
| **Ann.** | ... Announcement. |
| **B.O.H.** | ... **Business of the House.** |
| **C.A.** | ... **Calling Attention to a Matter of Urgent Public Importance.** |
| **C.A. St.** | ... Calling Attention Statement. |
| **Consid.** | ... **Consideration stage of a Bill. This stage includes:**<br>(i) Motion to refer to Select/Joint Select Committee.<br>(ii) Amendment to refer to Select/Joint Select Committee.<br>**(iii) Amendment to circulate.**<br>**(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.** |

(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc.

| | | |
|---|---|---|
| Consid. Cl. | ... | Consideration of clauses of a Bill. |
| D.E.E. | ... | Demands for Excess Expenditure. |
| D.s. S.D. | ... | Discussion for Short Duration on an urgent matter of Administration. |
| D.S.G. | ... | Demands for Supplementary Grants. |
| G.D. | ... | General Discussion. |
| G.A. | ... | Governor's Address. |
| H.A.H. Dis./H.H.D. | ... | Half-hour Discussion. |
| Int. | ... | Introduction stage of a Bill. |
| L.A. | ... | Legislative Assembly. |
| L.C. | ... | Legislative Council. |
| M. | ... | Motion. |
| P.M. | ... | Privilege Motion. |
| R/Res. | ... | Resolution. |
| St. | ... | Statement. |


# Tamil Nadu Legislative Assembly Debates.

SIXTH SESSION OF THE FOURTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

*22nd, 23rd and 25th to 28th August* 1969.

(Volume XXII Nos. 1 to 6).

PAGES.

A

ABDUL GHAFFOOR SAHIB, THIRU M—

Scooter riders and Motor cyclists, helmets ... ... 474

ACT(S)—

Estates (Abolition and conversion into Ryotwari) Act, 1948, draft amendment to rules (R) ... 547

Land—codification ... ... ... ... 451–452

Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961,, amendment to rules (R) ... ... 547–548

ADITANAR THIRU, Si. Pa.—

Casting aspersion on Prime Minister (Point of Order) ... ... ... 60

Co-operative Central Land Mortage Bank, increase in amount of guarantee (R) ... ... ... 545, 546

Five-Year Plan (Fourth), Draft Outline (M) ... 57

Land Mortgage Banks (Amendment) Bill, 1969 ... 553, 554, 580–590, 595, 596, 599–600, 610–616, 617, 618–619, 620

AGRICULTURE—

Department, Coimbatore, hiring of boiring machines 477–478

B—*cont.*


General Sales Tax (Third Amendment) Bill, 1969—
- Consid. ... ... ... ... ... 505–506
- Consid. Cl. ... ... ... ... ...
- Motion to pass ... ... ... ... ...
- Passed ... ... ... ... ... 506

Gudalur Janmam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1969-
- Consid. ... ... ... ... ... 148

Holdings (Stay of Execution Proceedings) (Tamil Nadu Amendment) Bill, 1969—
- Consid. ... ... ... ... ... 508
- Consid. Cl. ... ... ... ... ...
- Motion to pass ... ... ... ... ...
- Passed. ... ... ... ... ... 509

Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1969—
- Consid ... ... ... ... ... 536–539
- Consid. Cl. ... ... ... ... 539–543
- Motion to pass ... ... ... ... ...
- Passed ... ... ... ... ... 543

Land Mortgage Banks (Amendment) Bill, 1969—
- Consid. ... ... ... ... ... 553–568, 575–593
- Consid. Cl. ... ... ... ... ... 593–597 599–620
- Motion to pass ... ... ... ...
- Passed ... ... ... ... ... 620

Panchayats (Second Amendment) Bill, 1969—
- Consid. ... ... ... ... ... 514–536
- Consid. Cl. ... ... ... ... ...
- Motion to pass ... ... ... ... ...
- Passed ... ... ... ... ... 536

Practitioners of Homeopathy Bill, 1969—
- Message from Governor ... ... ... 544
- Consid. ... ... ... ... 544






B—*cont.*

BILLS.


Relief Undertakings (Special Provision) Bill, 1969—
- Consid. ... ... ... ... ... ... 405–431,
- Consid. Cl. ... ... ... ... ... 431–436
- Motion to pass ... ... ... ...
- Passed ... ... ... ... ... 436

Repatriates (Bar of Proceedings) Bill, 1969
- Consid. ... ... ... ... ... 509–513
- Consid. Cl. ... ... ... ... ...
- Motion to pass ... ... ... ... 513
- Passed ... ... ... ... ... 514

BRIDGES AND CULVERTS—
- Across Periapallam in Katheri Panchayat, construction ... ... ... ... ... 469
- in Bhavani, widening ... ... ... ... 412
- on Kallar stream, construction ... ... ... 356–357

BUILDINGS—
- programme, semi-Permanent construction ... 460

BUSINESS OF THE HOUSE ... ... 40, 504–505, 543


C


CALLING ATTENTION—
- Cotton mills, reopening ... ... ... ... 246–248
- Elavirampannai and surrounding villages, unrest and need to restore law and order ... ... ... 361–364
- Pudukkottai Cau...very Cotton Mill, Closure ... 366–370
- Rice, lifting of ban on transport ... ... ... 41–44
- Students of Agricultural College, Coimbatore, indefinite demonstration ... ... ... 491–494
- Water supply position in Madurai and prevalence of jaundice ... ... ... ... 364–366

PAGES.

A—*cont.*

AGRICULTURE—*cont.*

Horticultural gardens, opening ... ... ... 479–480

Intensive Agricultural Development Programme, extension ... ... ... ... ... 455

'Mannargudi formula', salient features ... 450–451

Pineapple cultivation ... ... ... 352–353

Soil Testing Laboratories, establishment in South Arcot District ... ... ... ... 353–354

ALAGARSAMY, THIRU S.—

DSG (First), 1969-70, G. D. ... ... ... 169–170

Panchayats (Second Amendment) Bill, 1969 ... 522

ARUMUGAM, THIRU A.—

Arunthathiars of Pudupatti house-sites ... ... 8–10

Bridge across Periapallam in Katheri Panchayat, construction ... ... ... ... 469

ASAITHAMBI, THIRU A. V. P.—

Interruptions in speeches (point of order) ... ... 66

AVIATION—

Aerodrome in Ulundurpet, construction ... ... 461–462

B

BALAKRISHNAN, THIRU A. G.—

Fire Service personnel, revision of scales of pay ... 444

Inam Lands at Veperi village, assignment ... 349–350

BALASUBRAMANYAN, THIRU A.—

Relief Undertakings (Special Provisions) Bill, 1969 408–410

BEGGARY—

Eradication ... ... ... ... .. ... 125–129

BHUPATHY, THIRU M.—

Cotton mills, reopening (C.A.) ... ... ... 246, 248

Students of Agricultural College, Coimbatore, Indefinite strike (C.A.) ... ... ... ... 491–492, 494

Teachers in City Schools, scale of pay ... ... 214–216

BHUVARAHAN, THIRU G.—

Statement by Minister on a matter which was different from he one unded discussion (point of order) 569, 570



PAGES

B—*cont.*

BILL(S)—

Appropriation (No. 5) Bill, 1969—

Message from Governor ... ... ... 202

Int. ... ... ... ... ... ... 202–203

Consid. ... ... ... ... ... ...

Consid. Cl. ... ... ... ...

Motion to pass ... ... ... ... ...

Passed ... ... ... ... ... ... 248–249

Appropriation (No. 6) Bill, 1969.—

Message from Governor ... ... ... 203

Int. ... ... ... ... ... ... 203

Consid. ... ... ... ... ... 249–280

Consid. Cl. ... ... ... ...

Motion to pass ... ... ... ...

Passed ... ... ... ... ... ... 280

Constitution (Twenty-second) Amendment Bill, 1969, ratification (R) ... ... ... ... 496–497

Contingency Fund (Amendment) Bill, 1969—

Consid. ... ... ... ... 387–404

Consid. Cl. ... ... ... ...

Motion to pass ... ... ... ... ...

Passed ... ... ... ... ... ... 404

Electricity Supply Undertakings (Acquisition) Amendment Bill, 1969—

Int. ... ... ... ... ... ... 44

Consid. ... ... ... ... ... 506–507

Consid. *cl.* ... ... ... ... ... 507–508

Motion to pass ... ... ... ...

Passed ... ... ... ... ... 508

Electricity (Taxation on Consumption) Amendment Bill, 1969—

Consid. ... ... ... ... ... 385–386

Consid. Cl. ... ... ... ...

Motion to pass ... ... ... ...

Passed ... ... ... ... ... 386

BILL(S)—

Electricity Supply Undertakings (Acquisition) Amendment Bill, 1969—*cont.*

PAGES

C—*cont.*

**CHAIR**—*cont.*

Rulings and Observations—*cont.*

*Freedom of speech*—

Members enjoyed freedom of speech, but subject to the rules of procedure ... 394

*Interruptions*—

It is desirable for Members to follow the convention of giving a patient hearing to a Member or Minister and give expression to their views when they get the chance to Speak. It is not in order for Members to indulge in ferquent interruptions and mutual excanges ... 276

It was not in order to interrupt a Member in the middle of his speech. Clarification, if any, had to be sought after the Member had concluded his speech. Or, Members could express their views when they got their chance to speak. 64–66

While dignified and conventional interventions were desirable, unnecessary and frequent interruptions were not in order, Further only when the Minister yielded, a Member could interrupt and make his remarks ... ... ... ... 401–402

*Reference to Officers*—

While reference to names of individuals should be avoided, allegations against the Collectors or Superintendents of Police in their official capacity could be made as the Ministers in charge of the respective portfolios were in the House to reply to the allegations ... ... ... 191

*Decorum*—

*Dignified expressions to be used*—

With reference to certain remarks addressed by the Leader of the Opposition to the Members of the ruling party, the Chair observed that it was not befitting the Leader of the Opposition to use such expressions against the other Members forgetting that they too were Hon'ble Members of the House. ... ... ... 274



PAGES

C—*cont.*

**CHAIR**—*cont.*

Rulings and Observations—*cont.*

Decorum—*cont.*

*Maintenance of dignity of the House*—

Members should conduct themselves in such a manner that the dignity of the House was not jeopardised. They should avoid heat in words, and lay stress on the subject under discussion. Only when a Minister who held the floor yielded, they should interrupt. They should not indulge in frequent interruptions. ... ... ... ... 402

*Mutual Exchanges*—

It is not in order to indulge in mutual exchanges. It is not in order for a Minister and a member to stand and speak at the same time. They should yield the floor to each other for interruption ... ... 396

When the Chair was on its legs, Members should resume their seats. ... ... 401

*Demands for Supplementary Grants*—

*Cut motions*—

Cut Motions were to be moved at the time of Voting on Demands for Grants and not during General discussion. ... ... 150

*Expressions used in he House*—cont.

"அறிவுடைமைக்குப் பொருந்தாது" in the sentence "This will not be in keeping with his wisdom." Held to be parliamentary. ... ... ... ... 23

*Objectionable Expressions*—

"Don't shout Who are you to shout?" சும்மா சத்தம் போடாதே நீ யார் சத்தம் போடுவதற்கு (addressed to the Members of the ruling party by the Leader of the Opposition)–Deprecated. ... ... ... ... 274

"அவர் போய் அந்தக் குழியில் விழுந்துவிட்டார்" (He has fallen into that pit)–Deprecated 617

"நீட்டினீர்கள் கம்பியை" (you lengthened the wire)—the sentence. "We produced the power, you lengthened the Wire"

**CHAIR—**

*Announcements—*

Business of the House, change in order ... ... 40

House Committee, election ... ... ... 360–361

Madurai University Senate, election ... ... 147–148

Privileges committee, election ... ... 560

*Rulings and Observations—*

*Adjournment Motions—*

*Fire accident in Madras City—*

Consent was withheld on the grounds that the matter came within the day-to-day administration of the Government and the Member would have an opportunity to get the information that he wanted through a Call Attention Notice ... ... ... 39

*Harrassment caused by Police to fishermen to Kanyakumari district.*

Consent was withheld on the grounds that the matter came within the day-to-day administration of the Government and there were no specific charges in the motion ... 39

*Non-crushing of sugarcane in Kothari Sugar Mills, at Kattur.*

Consent was withheld on the grounds that it was a private concern and the Member had given notice under Rulel 41 on the same subject ... ... ... 360

*Non-maintenance of law and order in Ezhayiram pannal village.*

Consent was withheld on the ground that the matter came within the day-to-day administration of the Government ... 40

*Amendments—*

Government amendments were, by convention, given precedence ... ... ... ... 598, 599

*Calling Attention—*

*Clarification—*

While a Member could seek clarification he should not make a speach ... ... 369



**CHAIR—cont.**

*Rulings and Observations—cont.*

*Debate—*

After a Minister had spoken on any matter, a Member could only seek clarification and could not make a speech ... ... ... 601

Members need not reply to observations made by Ministers sitting ... ... ... 578

*Allegations—*

On 23rd August 1969, the Chair suggested to the Members that they might follow the practice in vogue in the Lok Sabha, namey, " informing the Chair in advance about their intention to make an allegation against a Member or a Minister so that the concerned Member or Minister might be asked by the Chair to be present in the House on that day to reply tothe allegation " ... ... 178

Should be specific with some basis and not vague ... ... ... ... ... 266, 392, 394, 395

With reference to a suggestion made by a Member that the allegations made by another Member against a Minister and a Member might be converted as a matter of privilege and considered later, so that the time alloted for the discussion on the Supplementary Estimates, might be fully utilized for that purpose, the Chair ruled that when a Member made an allegation there should be sufficient time to reply to the allegation then and there and hence the suggestion made by the Member could not be accepted ... ... 173, 174

*Allotment of time—*

With reference to a complaint made on the floor of the House by a Member about the meagre time allotted for the discussion on a subject, the Chair informed the Member that as a Member of the Business Advisory Committee he should have pressed for more time when he participated in the deliberations of that Committee rather than making an issue out of it on the floor of the House ... ... ... ... 323

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

*Expressions used in the House*—

*Objectionable Expressions*—cont.

meaning 'you laid the wire'—Held to be not a proper expression as it meant in Tamil "You have run away". ... ... ... 317

*Expunction*—

On the 22nd August, the Chair declined to accept the Finance Minister's suggestion to expunge a remark made by a Member of the Congress Party, namely 'just before the Presidential election, you got Rs. 3 crores' (for drought relief) on the ground that such remarks should go on record so that the public and the Central Government might note the nature of the remarks made by Opposition Members. ... ... ... 61

*Minister's statement*—

On a statement made by a Minister under Rule 82, neither a debate nor a clarification nor a suggestion could be permitted. ... 496

*Point of clarification*—

While clarification on a Minister's reply could be sought, suggestions could not be made. ... 278–279

*Point of order*—

It was for the Chair to decide whether a point of order raised by a Member was a point of order or not. ... ... ... ... 279

*Privilege Matters*—

*Alleged furnishing of misleading figures by the Hon. Minister Dr. (Thirumathi) Satyavanimuthu*—

On 27th August 1969 a Member raised a matter of privilege against the Hon. Minister Dr. (Thirumathi) Satyavanimuthu who, while she was Minister in charge of Health, was alleged to have furnished misleading and incorrect figures to the House with regard to the number of writ petitions admitted by the High Court against selectoins to Medical Collegs. He contended that the Minister had therefore committed a breach of privilege.

After hearing the Minister, the Chair held that as the Minister had stated that she had not intended to make a deliberately mislea-



CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

*Privilege Matter*—cont.

*Alleged furnishing of misleading figures by the Hon. Minister Dr. (Thirumathi) Satyavanimuthu*—cont.

ding statement, and as it was a fact that there was a decrease in the number of writ petitions as pointed out by the Minister, there was no breach of privilege. ... 481–487

*Publication of a statement given by the Leader of the Opposition in 'Navasakthi'*—

On 23rd August, 1969, a Member raised a matter of privilege against the Leader of the Opposition and the Editor of a daily 'Navasakthi' for the publication of a statement alleged to have been given by the former in which he had cast reflection on the conduct of the Speaker and imputed partiality to him, besides casting aspersion and attributing motives to the Chief Minister, which he contended constituted a breach of privilege.

After hearing the Leader of the Opposition and the Chief Minister, the Chair deferred its ruling till the next day. ... ... 137–147

On 25th August 1969 the Chair ruled that inasmuch as the Leader of the Opposition had written that the statement was not made by him with any motive, no further action was necessary and the matter so far as it related to him might be dropped.

However, as the newspaper 'Navasakthi' had not expressed any regret, the Chair reserved its ruling in the matter so far as it related to that paper, expecting publication of regret by that paper. ... ... ... ... 243–244

*Procedure*—

*Minister's right to intervene and make a statement on a subject other than the one under discussion*—

When a Government Bill was under discussion the Chair announced that as the Finance Minister had to attend the Council, he would just then make a statement

PAGES

C—*cont.*

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

*Procedure*—cont.

*Minister's right to intervene and make a statement on a subject other than the one under discussion*—cont.

under Rule 82. Some Members of the Opposition took exception to the Minister's intervention to make a statement on a subject other than the one under discussion as the Minister sought to make the statement to suit his convenience to go to the other House and it could not be construed as a matter of public importance on which alone a Minister could make a statement under Rule 82.

The Chair held that with the consent of the Speaker a Minister might make a statement on a matter of public importance at any stage and there was no prohibition against such statements being made in the course of the discussion on any other subject. Such a convention has been followed in the House in the past too. ... 568–570

*Question-hour*—

*Extension*—

With reference to a point of order raised by a Member, the Chair observed that according to the rules, though the first hour was set apart for Questions and Answers, the Chair, in its discretion, coud extend the time. ... ... ... ... ... 26–27

*Questions and Answers*—

*Supplementary questions*—

It was not in order to put a question with a preamble like 'as it is not in accord with fairplay and justice' (நியாயத்திற்கும் நீதிக்கும்பொருந்தாமல் இருப்பதால்) .. 215

Members could olny ask questions, they could not ask the Ministers to give the type of answers that they required. ... ... 210

Members should take responsibility for the statements that they made. ... ... 460

*Long Answers*—

With reference to a point of order raised by a Member about a long answer given by a Minister to a supplementary question and



PAGES

C—cont.

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

*Questions and Answers*—cont.

*Supplementary Questions*—cont.

*Long Answers*—cont.

his suggestion that such answers be laid on the table, the Chair observed that while long answers to main questions could be printed and laid on the Table, it was not feasible to do it in advance in the case of answers to supplementary questions. Moreover, there was no rule prohibiting long answers to supplementary questions. Sometimes, Ministers had to give long answers to please the Members ... ... ... 126–127, 128

*Refusal to answer a question*—

If a Minister did not answer a supplementary question, it did not mean that he did not know the answer. He was at liberty to decline to answer it ... ... ... 20

With reference to a point of order raised by a Member whether a Minister could refuse to answer a question, the Chair observed that as per the rules a Minister miht decline to answer a question on the ground that to answer it would be against public interest. He may also decline to answer it without notice ... ... ... ... 36–37

*Relevancy*—

Supplementaries should relate to the main question and should not be hypothetical. 9, 25, 124, 358, 470, 472

*Supply of full information*—

With reference to points of order raised about a Minister being not in possession of full details to answer supplementary questions, the Chair observed that while a Minister could not be compelled to answer all the questions, it was necessary that the Ministers should obtain all the details relevant to a supplementary question. Keeping in view the expenditure involved in answering a question on the floor of the House, it was imperative on the part of

PAGES

C—*cont.*

COLLEGE(S)—
Agricultural—Coimbatore, indefinite demonstration by students (C.A.) ... ... ... ... 491–494
Madurai Medical College—ragging ... ... 448–449
Veterinary—, admission ... ... 480-481

COMMITTEE—
Constitution of a to examine the use of Textool Factory in Coimbatore ... ... ... ... 328–329

CONFERENCE(S)—
Animal Husbandry Ministers'—particulars ... 479
World Tamil—, expenditure incurred ... ... 1–4

CO-OPERATION—
Co-operative Central Land Mortgage Bank, increase in amount of guarantee (R) ... ... ... 545–546
Nanganallur Co-operative Building Society, election 339–340
North Arcot District Co-operative Marketing Society, request to Government to make good the loss due to sugar price variation ... ... 457–458

D

DAIRIES—
Milk, supply at cheap rate, ... ... ... 116–117

DAM(S)—
Thelur Anicut Scheme, execution ... ... 332

DHANUSHKODI, THIRU P. S.—
Panchayat (Second Amendment) Bill, 1969 ... 520

DISTRICT ADMINISTRATION—
Sathankulam sub-taluk, upgrading ... ... 344-345

DURAISAMY, THIRU S.—
Agriculure Department, Coimbatore, Loaning of Boring machines ... ... 477–478
Drought relief, amount spent ... ... 129–134
Five-Year Plan (Fourth), Draft Outline (M) ... 297–300
Hosiery goods, export ... ... 458–459
Milk, supply at cheap rate ... ... 116–117
Separate bus for students in Coimbatore ... 470–471
Thoranur—Sokkanur road, widening ... ... 478
Tourist Centres, improvements ... ... 12–14



PAGES

E

ELECTRICITY BOARD—
Accountants Association, petition from ... ... 30–31
Chairman, appointment ... ... 341–342
Loan, fixation of maximum amount (R) ... ... 546–547

EMPLOYEES, (GOVERNMENT)—
Drivers and conductors in the State Transport Department, recruitment ... ... 336–338
Fire Service Personnel, revision of scales of pay ... 444
Grama Sevikas and Mukya Sevikas, abolition of posts ... ... ... ... ... 350–352
Houses for ... ... ... ... ... 237–239
Revenue officials in North Arcot District, complaint against ... ... ... 346–347

F

FACTORIES—
Footwear—Production-cum-Training Units, export of products ... ... ... 235–236
Text-tool Factory in Coimbatore District, use ... 328–329

FAMINE—
Drought relief, amount spent ... ... 129–134

FILMS—
Documentary—Free exhibition in rural areas ... 446–447

FINANCIAL BUSINESS—
DEE, 1965–66, Voting ... ... ... 148
Administration of Justice
Agriculture
Capital Outlay on Forests
Capital Outlay on Road Transport Schemes
Cinchona
Commuted Value of Pensions
Co-operation
Elections
Famine Relief
Fisheries
General Sales Tax and other Taxes and Duties —Administration
Irrigation ... ... ... 148

PAGES

CHAIR—*cont.*
*Rulings and Observations*—cont.
*Questions and Answers*—cont.
*Supplementary Questions*—cont.
*Supply of full information*—cont.
the Departments concerned to collect all the relevant data so that the Ministers might be in a position to answer as many supplementaries as possible. The question hour would be purposeful only when the Ministers were able to answer the supplementary questions put on the floor of the House ... ... ... ... 31–32
*Quotation*—
A Member desirous of quoting anything in the House should let the Chair scrutinise it in advance ... ... ... ... ... 152–153
*Member's responsibility*—
While Members read from a newspaper or a notice or any other document, they should take responsibility for their contents as their quotation would be construed as their own speeches. They could not shirk their responsibility in that regard under the pretext that they simply quoted what was said in the notice or paper which was given to them by somebody ... ... 178
*Speech*—
*Freedom of speech*—
The Members enjoyed freedom of speech, but subject to the rules and procedure. ... ... 394

CEEMAICHAMY, THIRU K.—
Appropriation (No. 6) Bill, 1969 ... ... 249–252
House-sites allotted by Housing Board at Madurai, cost ... ... ... ... ... ... ... 239–241
I.N.A. personnel, grant of monetary and ... 114–115
Portraits of Tiruvalluvar, purchase ... ... 359
Sub-Magistrates, etc., age of retirement ... ... 228–229
World Tamil conference, expenditure incurred ... 1–4

CEITHAN, THIRU N. S. V.—
Alagarkoil Devasthanam, improvements ... ... 340–341
All-India Service Officers, decrease in intake from Tamil Nadu ... ... ... 442–443
Beggary, eradication ... ... ... 125–129



PAGES

C—*cont.*

CHITHAN, THIRU N. S. V.—*cont.*
Coal deposits near Karaikudi, mining ... ... 459
Collector of Kanyakumari, deputation to England ... 479
Death of prisoner in Coimbatore Central Jail ... 459–460
Dindigul Municipality, delimitation of wards ... 480
Drought relief, amount spent ... ... 129–134
Falls near Kalakad, development ... ... 478
Floricultural Gardens, opening ... ... 479–480
Food, use of music for augmenting production ... 219–222
Government Bus, free lift for College students ... 124–125
Harijan Welfare Senior Basic School, Sankaralingapram, construction of building ... ... 216–218
Hartal in Koradacheri ... ... ... ... 442
Hotel Industry, Development ... ... ... 10–12
Land Mortgage Banks (Amendment) Bill, 1969 ... 553, 554–556, 593, 601, 607–610, 619
Madurai Municipality, upgrading into Corporation ... ... ... ... ... ... 465–467
Markets around Mada Streets in Mylapore ... 111–113
Ministers of Animal Husbandry, conference of ... 479
Monazite sands, availability in coastal areas ... 231
North Arcot District Co-operative Marketing Society, request to Government for making good the loss due to sugar price variation ... 457–458
Paddy, evolving of new strain ... ... ... 453–455
Palani Municipality, disbursement of salary to staff for November 1968 ... ... ... 467–468
Physical Education Instructors, scales of pay ... 211–212
Raffle tickets, discrepancy ... ... 134–135
Rice shop at Arni, distribution of rice ... ... 327–328
Rubber plantation in Kanyakumari district, extension ... ... 342–344
Taxi and Auto-rikshaw drivers, strike on 27th February 1969 ... ... ... 471–473
Textool Factory in Coimbatore District, use ... 328–329
Thirumangalam Canal Extension upto Thirumangalam ... ... ... 330–331

PAGES

FINANCIAL BUSINESS—*cont.*
Jails
Motor Vehicles Acts—Administrttion
Other Miscellaneous Compensation and Assignments
Public Works—Establishment and Tools and Plant
Public Works—Works
Road Transport Schemes
State Legislature
Stationery and Printing
Welfare of the Scheduled Tribes, Castes and Other Backward Classes
DSG (First), 1969-70, G.D. ... ... 149–196
DSG (First), 1969–70, Voting—
Appropriation to the Contingency Fund ... 202
Capital Outlay on Industrial Development ... 201
Capital Outlay on Irrigation ... ... ... 201
Capital Outlay on Public Works ... ... ... 201
Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... 202
Co-operation ... ... ... ... ... 199
District Administration and Miscellaneous ... 198
Education ... ... ... ... ... ... 198
Famine Relief ... ... ... ... ... 200
Fisheries ... ... ... ... ... 199
General Sales Tax and other Taxes and Duties—Administration ... ... ... ... 197
Head of State, Ministers and Headquarters staff ... 197
Industries ... ... ... ... ... 199
Irrigation ... ... ... ... ... 200
Jails ... ... ... ... ... ... 198
Loans and Advances by the State Government ... 202
Medical ... ... ... ... ... 199
Milk Supply Schemes ... ... ... 198
Milk Supply Schemes ... ... ... ... 198
Miscellaneous ... ... ... ... ... 202



PAGES

FINAANCIAL BUSINESS—*cont.*
DSG (First), 1969–70, Voting—*cont.*
Motor Vehicles Acts—Administration ... 197
Police ... ... ... ... ... ... 198
Public Health ... ... ... ... ... 199
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... 200
Registration Department ... ... ... 197
Road Transport Schemes ... ... ... 200
Stationery and Printing ... ... ... 201
Welfare of the Scheduled Tribes, Castes and other Backward Classes ... ... ... ... 200
FISHERIES—
Cold storage plant, installations in Periathazhai ... 478
Fishing boats around the shores of Rameswaram, Police Protection ... ... ... ... 105
FIVE-YEAR PLAN (FOURTH): 44–97
Draft Outline (M) ... ... ... ... ... 280–322
FOODGRAINS—
Godown in Thanjavur district, opening of a new one ... ... ... ... ... ... 455–456
PADDY—
Exoting of new strain ... ... ... ... 453–455
Procurement from temple lands ... ... ... 226–227
Procurement in Chingleput district ... ... ... 325–327
Procurement in Venkadathan Thuraiyur ... 456–457
RICE—
Distribution at Chatrapatti ... ... ... 477
Lifting of ban on transport ... ... 41–44
Shops at Arni, distribution of rice ... ... 327–328
FOOD—
Use of music for augmenting production ... ... 219–222
Wheat, allotment ... ... ... ... 222–226

## G

GEORGE, THIRU V.—
Chair to function as commission on matters raised on the floor of the House (Point of Order) ... 491

GNANASAMBANDAN, THIRU K. R.—
Discussion on matters which were not in the Agenda and on closed ones (Point of Order) ... ... 491

GOMATHYSANKARA DIKSHIDAR, THIRU G.—
Building programme, semi-permanent construction 460
Dances in hotels in Madras ... ... ... ... 105–111
Fishing boats around the shores of Rameswaram, Police protection ... ... ... ... 105
Government Pleaders and Public Prosecutors, appointment ... ... ... ... ... 227–228
Madras City Improvement Programme, loan from World Bank ... ... ... ... ... 355–356
N.C.C. Director-General, discussion with Government ... ... ... ... ... 445–446
Pandian Express, running ... ... ... 117–129
Revenue officials in North Arcot district, complaint against ... ... ... ... ... ... 346–347
Road-over-bridge near Basin Bridge, cost of reconstion ... ... ... ... ... ... ... 18–18
Uniform for teachers ... ... ... ... 212–214

GOPAL, THIRU M.—
D.S.G. (First), 1969–70, G.D. ... ... ... 165–166

GOVINDARAJAN, THIRU C.—
Drought relief, amount spent ... ... ... 129–134
Five-Year Plan (Fourth), Draft outline (M) ... 307–310
Pudukkottai Kaveri Cotton Mill, closure (C.A.) ... 366–367, 369–370
Relief Undertakings (Special Provisions) Bill, 1969 ... 433

## H

HANDE, DR. H. V.—
Appropriation (No. 6) Bill, 1969 ... ... ... 278
Co-operative Central Land Mortgage Bank, increase in amount of guarantee (R) ... ... 545–546
Drought relief, amount spent ... ... ... 129–134





H—cont.

D.S.G. (First), 1969–70, G.D. ... ... ... 157–158
Electricity (Taxation on Consumption) Amendment Bill, 1969 ... ... ... ... ... 385
Five-Year Plan (Fourth) Draft Outline (M) ... 310–313
Land Mortgage Banks (Amendment) Bill, 1969 559–561, 588, 600, 606–607, 614, 618, 619
Municipal revenues, enhancement ... ... ... 463–464
Nanganallur Co-operative Building Society, election 339–340
Paddy, procurement in Venkadathan Thursiyur ... 456–457
Panchayats (Second Amendment) Bill, 1969 ... 517–518
Questions, supply of full information (Point of order) ... ... ... ... ... ... 31, 32, 38, 39
Relief Undertakings (Special Provisions) Bill, 1969 ... 410–412, 428
Repatriates (Bar of Proceedings) Bill, 1969 ... 510
Statement on the recommendations of the Fifth Finance Commission (Point of clarification) ... 572
Water-supply position in Madurai and prevalence of Jaundice (C.A.) ... ... ... ... 364–466

HARIJAN WELFARE—
Cottage Industries Co-operative Societies for Harijans, details ... ... ... ... ... 452–453

HOSTEL—
Koradacheri ... ... ... ... ... 442

HOSPITALS AND DISPENSARIES—
Ariyalur Government Hospital, X-ray Unit ... 447
Mayuram—, water scarcity ... ... ... 447
Palani,— expansion ... ... ... ... 448

HOTEL(S)—
Dances in City ... ... ... ... ... 105–111
Development of—Industry ... ... ... 10–12

HOUSING—
Arunthathiars of Pudupatti, house-sites for ... 8–10
Fire-proof houses, construction ... ... ... 475–476
House-sites allotted by Housing Board at Madurai, cost ... ... ... ... ... ... 239–241

## I

I.N.A. PERSONNEL—
Grant of monetary aid ... ... ... ... 114–115

INDUSTRIES— ... ... ... ...
Cotton Mills, re-opening (C.A.) ... ... ... 246–248
Pellitisation plant at Salem ... ... ... ... 330

IRRIGATION—
Appakudal tank, supply of water ... ... 123
Mayuram constituency, facilities ... ... 460–461
Periyar Improvement Scheme, execution ... 331–332
River Projects in Hosur taluk ... ... ... 121–122
South Pennar and South Kumara Nadhi in Hosur taluk, connecting of ... ... ... ... 122–123
Thelur Anicut Scheme, execution ... ... 333
Thirumangalam canal, extension upto Thirumangalam ... ... ... ... ... ... 330–331

## J

JAIL (S)—
Coimbatore Central—, death of prisoner ... ... 459–460
Prisoners, remission to ... ... ... ... 229–230

JAMES, THIRU J.—
Panchayats (Second Amendment) Bill, 1969 ... 522–523
534–535

JANAKIAMMAL, THIRUMATHI K. P.—
Government waste lands, tree, plantation in— ... 241
Madurai Municipality, upgrading into Corporation 465–466

JUDICIARY—
Government Pleaders and Public Prosecutors, Satyavanimuthu (Privilege Matter) ... ... 489
Sub-Magistrates, etc., age of retirement ... ... 228–229

## K

KANNAN, THIRU M. R.—
D.S.G. (First), 1969–70, G.D. ... ... ... 166–169

KARUNANIDHI, THIRU M.—
Alleged incorrect statement by Dr. (Thirumathi) Sathyavanimuthu (Privilege Matter) ... ... 489



K—*cont.*

Constitution (Twenty Second) Amendment Bill, 1969, ratification (R) ... ... ... ... 496–497
Disclosure of assets by Members including Ministers and Presiding Officers (R) ... ... ... 497–501
502, 503, 504
D.S.G. (First), 1969–70, G.D. ... ... ... 161, 166,
174, 175, 176, 177, 182–183,
185, 186, 187, 188, 191, 194
Ezhayirampannai and surrounding villages, unrest and need to restore law and order (C.A. St.) ... 361–363
364
Land Mortgage Banks (Amendment) Bill, 1969 ... 617, 618
Obituary Reference—Vasan, Thiru S. S. ... ... 439–440
Publication of a statement by the Leader of the Opposition in 'Navasakthi' (Privilege Matter) 144–147

KARUPPIAH, THIRU A.—
D.S.G. (First), 1969–70, G.D. ... ... ... 155–156

KARUPPIAH, THIRU R.—
Ariyalur Government Hospital, X-ray unit ... 447
Bridge on Kallar Stream, construction ... ... 356–357
Drought relief, amount spent ... ... ... 129–134
Thelur Anicut Scheme, execution ... ... 332

KARUTHIRUMAN, THIRU P. G.—
Alleged incorrect statement by Dr. (Thirumathi) Satyavanimuthu (Privilege Matter) ... ... 483, 488
489
Appropriation (No. 6) Bill, 1969 ... ... 255–276
Contingency Fund (Amendment) Bill, 1969 ... 393, 394
396, 397, 399, 400, 401, 403
Disclosure of assets by Members including Ministers and Presiding Officers (R) ... ... ... 503
D.S.G. (First), 1969–70, G.D. ... ... ... 175
181–193, 194
Five-Year Plan (Fourth) Draft Outline (M) ... 314–322
372, 377–378, 379, 380
Land Mortgage Banks (Amendment) Bill, 1969 577–579
586, 587, 590, 616, 617
Obituary Reference—Vasan, Thiru S. S. ... 440–441
Panchayat (Second Amendment) Bill, 1969 ... 523–524
532, 538

PAGES

Publication of a statement by the Leader of the Opposition in 'Navasakthi' (Privilege Matter) ... 141–144, 245, 246

Questions supply of full information (Point of Order) ... 32, 33, 34–35

Relief Undertakings (Special Provisions) Bill, 1969 ... 417–419, 426–427

Statement by Minister on a matter which was diberent from the one under discussion (Point of Order) ... 569–570

Statement on the recommendations of the Fifth Finance Commission (Point of Clarification) ... 572, 574

KASIRAMAN, THIRU N.—

Bus transport, nationalisation ... 19–23

Kundah water for Coimbatore City ... 463

Quarterly tax for Buses, payment ... 335–336

KATHIRAVAN, THIRU K. M.—

D.S.G. (First), 1969–70, G.D. ... 161–163

KHADI—

Khadi and Village Industries Board, Tiruppur, housing ... 469–470

KITTAPPA, THIRU N.—

Agricultural Schools, particulars ... 6–8

Bus transport, nationalisation ... 28–29

Drought relief, amount spent ... 129–134

Fire proof housing, construction ... 475–476

Foodgrains godown in Thanjavur district, opening of new ... 455–456

Irrigation facilities for Mayuram Constituency ... 460–461

Mayuram Government Hospital, water scarcity ... 447

Streets, change of names in Mayuram ... 443–444

KOTHANDAM, THIRU KOLATHUR—

Director of Medical Education, abolition of post ... 209–211

Drought relief, amount spent ... 129–134

Land Mortgage Banks (Amendment) Bill, 1969 ... 565–566

Paddy, procurement in Chingleput district ... 325–327



PAGES

K—cont.

KOTHANDARAMAN, THIRU V. K.—

Agricultural University, establishment ... 4–6

D.S.G. (First), 1969–70, G.D. ... 158–161

Mineral deposits, details of occurrences ... 230–231

Rice, distribution at Chatrapathi ... 477

Rice, lifting of ban on transport (C.A.) ... 41, 43

Short distance bus fares ... 332–335

Vaniyambadi-Madras express service ... 476

Village roads, laying ... 466–467

KOTHANDARAMIAH, THIRU K. S.—

Contingency Fund (Amendment) Bill, 1969 ... 390–391

Cultivation of "Pineapple" ... 352–353

Five-Year Plan (Fourth), Draft Outline (M) ... 300–301

Panchayats (Second Amendment) Bill, 1969 ... 520–521

River Projects in Hosur taluk ... 121–122

South Pennar and Sanath Kumara Nadhi in Hosur taluk, connecting ... 122–123

KRISHNAMOORTHI, THIRU K.—

Palani Hospital, expansion ... 448

Palani-Madras night Express Service ... 473–474

KRISHNAMURTHI, THIRU C.—

Land Mortgage Banks (Amendment) Bill, 1969 ... 566–568

KRISHNASAMY GOUNDER, THIRU R.—

Five-Year Plan (Fourth), Draft Outline (M) ... 92–97

KUMARASAMY, THIRU K. N.—

D.S.G. (First), 1969–70, G.D. ... 163–165

Khadi and Village Industries Board, Tiruppur, housing. ... 469–470

Relief Undertakings (Special Provisions) Bill, 1969 ... 413–414, 428, 433

L

LABOUR—

Pudukkottai Kaveri Cotton Mill, closure (C.A.) ... 366–370

LANDS—

Dry, assignment in Thanjavur district ... 347–349

Government waste, at Chinna Thadagam area, assignment ... 241

L—*cont.*

LANDS—*cont*

Government waste, tree—plantation in— ... 241
Inam, at Veperi village, assignment ... ... 349–350
Public Trusts, extent of lands owned by ... 236–237
Sugar Factories, lands owned in excess of ceiling limit ... ... ... ... ... 345
Survey, introduction of modern methods ... 242
Temple—, procurement from ... ... ... 226–227

LOANS—

Madras City Improvement Programme, loan from World Bank ... ... ... ... ... 355–356

LOCAL BODIES—

Dindigul Municipality, delimitation of wards ... 480
Madurai Municipality, upgrading as Corporation 465–467
Municipal revenues, enhancement ... ... 463–464
Palani Municipality, disbursement of salary to staff for November 1968 ... ... ... ... 467–468
Streets, change of names in Mayuram ... ... 443–444

M

MADHAVAN, THIRU S.—

Amendments to be taken up in the order of receipt (point of order) ... ... ... ... 598–599
Appropriation (No. 6) Bill, 1969 ... ... 253, 265, 270, 273–274, 276–277
Cotton Mills, reopening (C.A. St.) ... ... 246–248
Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1969 ... ... 541–543
Land Mortgage Banks (Amendment) Bill, 1969 ... 560, 561, 591–593
Relief Undertakings (Special Provisions) Bill, 1969 ... ... ... ... ... 405, 419–426, 429–430, 431–432, 435–436



M—*cont.*

MALAICHAMY, THIRU P.—

Government Employees, houses ... ... 237–239
Madurai Ton bus service, permits for plying of buses ... ... ... ... ... ... 473
Mineral deposits, availability at Azhagarmalai ... 232–234

MANI, THIRU K. B. S.—

Five-Year Plan (Fourth), Draft Outline (H) ... 289–291
Panchayats (Second Amendment) Bill, 1969 ... 521–522

MANIAN, THIRU P. S.—

Documentary films, free exhibition in rural areas ... 446–447
Number plates in cars ... ... ... ... 29–30
Periyar Improvement Scheme, execution ... 331–332

MANICKAVACHAGAM, THIRU R.—

Government waste lands at Chinna Thadagam area, assignment ... ... ... ... 241
Vellimalaipattinam Panchayat, bifurcation ... 357–359

" MANNARGUDI FORMULA "—

See " Agriculture ".

MARIMUTHU, THIRU A.—

Five-Year Plan (Fourth), Draft Outline (M) ... 293–295

MARIMUTHU, THIRU A. R.—

Contingency Fund (Amendment) Bill, 1969 ... 387–389
Five-Year Plan (Fourth), Draft Outline (M) ... 68–72
Land Mortgage Banks (Amendment) Bill, 1969 ... 556–559
Panchayats (Second Amendment) Bill, 1969 ... 516–517

MARKET(S)—

Around Mada Streets in Mylapore ... ... 111–113
Kothaval—shifting ... ... ... ... ... 480

MARTIN, THIRU T.—

Alleged incorrect statement by Dr. (Thirumathi) Satyavanimuthu (Privilege Matter) ... ... 481–486
Cold storage plant, installation in Periyathazhai ... 478
Disclosure of assets by Members including Ministers and Presiding Officers (R) ... ... 501–502

PAGES

Ezhayirampannai and surrounding villages, unrest and need to restore law and order (C.A.) ... 361, 363, 364
Electricity Board, Chairman, appointment ... 341–342
Land Mortgage Banks (Amendment) Bill, 1969 ... 564–565, 589
Madurai Medical College, ragging ... ... 448–449
Panchayats (Second Amendment) Bill, 1969 ... 518–520
Questions, refusal to answer (Point of order) ... 36, 37
Sathankulam sub-taluk, upgrading ... ... 344–345
Teachers, retirement age ... ... ... 449–450

MARUDACHALAM, THIRU N.—
Five-Year Plan (Fourth), Draft Outline (M) ... 303–304

MATHIALAGAN, THIRU K. A.—
Appropriation (No. 5) Bill, 1969 ... ... ... 202–203, 248, 249
Appropriation (No. 6) Bill, 1969 ... ... ... 203, 249, 263–270, 271–272, 275, 277, 278, 280.
Contingency Fund (Amendment) Bill, 1969 ... 387, 395–399, 404

D.E.E. 1965–66—Voting
Voting ... ... ... ... ... ...
Administration of Justice ... ... ... ...
Agriculture ... ... ... ... ...
Capital Outlay on Forests ... ... ... ...
Capital Outlay on Road Transport Schemes ...
Cinchona ... ... ... ... ... ...
Commuted Value of pensions ... ... ...
Co-operation ... ... ... ... ...
Elections ... ... ... ... ... ...
Famine Relief ... ... ... ... ...
Fisheries ... ... ... ... ... ...
General Sales Tax and other Taxes and Duties—
Administration ... ... ... ... ...
Irrigation ... ... ... ... ... ...
Jails ... ... ... ... ... ...
Motor Vehicles Acts—Administration ... ...



MATHIALAGAN, THIRU K. A.—cont.
D.E.E. 1965–66, Voting—cont.
Other Miscellaneous Compensations and Assignments ... ... ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Road Transport Schemes ... ... ... ...
State Legislature ... ... ... ... ...
Stationery and Printing ... ... ... ...
Welfare of the Scheduled Tribes, Castes and other Backward Classes ... ... ... ... 148–149
D.S.G. (First), 1969-70, G.D. ... ... ... 154–155, 183–184, 185, 193, 194–196.

D.S.G. (First), 1969–70, Voting:
Appropriation to the Contingency Fund ... ... 202
Capital Outlay on Industrial Development ... 201
Capital Outlay on Irrigation ... ... ... 201
Capital Outlay on Public Works ... ... ... 201
Capital Outlay on Schemes of Government Trading ... ... ... ... ... 202
Co-operation ... ... ... ... ... 199
District Administration and Miscellaneous ... 198
Education ... ... ... ... ... 198
Famine Relief ... ... ... ... 200
Fisheries ... ... ... ... ... 199
General Sales Tax and Other Taxes and Duties—Administration ... ... ... ... 197
Head of State, Ministers and Headquarters staff ... 197
Industries ... ... ... ... ... ... 199
Irrigation ... ... ... ... ... 200
Jails ... ... ... ... ... 198
Loans and Advances by the State Government ... 202
Medical ... ... ... ... ... 199
Milk Supply Schemes ... ... ... ... 198
Miscellaneous ... ... ... ... ... 201

PAGES

M—cont.

MATHIALAGAN, THIRU K. A.—
D.S.G. (First), 1969-70, Voting—*cont.*
Motor Vehicles Acts—Administration ... 197
Police ... ... ... ... ... ... 198
Public Health ... ... ... ... ... 199
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ... 200
Registration Department ... ... ... 197
Road Transport Schemes ... ... ... ... 200
Stationery and Printing ... ... ... ... 201
Welfare of the Scheduled Tribes, Castes and other Backward Classes ... ... ... ... 200
Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948, draft amendment to rules (K) ... 547
Fifth Finance Commission, recommendations (St.) ... ... ... ... ... ... 571–572, 574
Five-Year Plan (Fourth), Draft Outline (M) ... 44–55, 61, 280–281, 370–383,
Holdings (Stay of execution proceedings) (Tamil Nadu Amendment) Bill, 1969 ... ... ... 508–509
Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1969 ... ... 536–537, 543
Gudalur Janmam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1969 ... ... ... ... 548
Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961, amendment to rules (R) ... ... ... 547–548
Repatriates (Bar of Proceedings) Bill, 1969 ... 509–510 512–513

MEIYAPPAN, THIRU S. — ...
D.S.G. (First), 1969-70, G.D. ... ... ... 173–174, 179–181
Electricity Board Accountants' Association, petition from ... ... ... ... ... ... ... 30–31

MINES AND MINERALS—
Coal deposits near Karaikudi, mining ... ... 459
Mineral deposits, particulars *re.* ... ... ... 230–234

M.L.A.—
Death of—, in General Hospital ... ... 441–442



M—*cont.*

PAGES

MOTION(S)—
Ad. Motion(s):
Failures of Law and Order situation in Ezhayirampannai village ... ... ... ... 40
Fire accident in Madras City ... ... ... 39
Kothari Sugar Factory, Kattur, stoppage of sugarcane crushing ... ... ... ... ... 360
Police harassment of the coastal fishermen in Kanyakumari District ... ... ... ... 30
B.O.H., change in order ... ... ... 504–505, 543
Five-Year Plan (Fourth), Draft Outline ... 44–97, 280–322, 370–384
Suspension of question hour ... ... ... ... 553
Suspension of Rule 23 ... ... ... ... 553
Suspension of Rule 41 (3) ... ... ... ... 361

MURUGESAN, THIRU K.—
Five-Year Plan (Fourth), Draft Outline (M) ... 306–307

MUTHUSWAMY, THIRU M.—
D.S.G. (First), 1969-70, G.D. ... ... ... 170–173, 175–176, 177
Panchayats (Second Amendment) Bill, 1969 ... 514–516, 524–532, 533–534, 535–536

N

NALLASIVAN, THIRU K. R.—
Death of M.L.A. in General Hospital ... ... 441–442
Five-Year Plan (Fourth), Draft Outline (M) ... 304–306 377
Relief Undertakings (Special Provisions) Bill, 1969 412–413

NATIONAL CADET CORPS—
Director-General, discussion with Government ... 445–446

PAGES

NEDUNCHEZHIYAN, THIRU V. R.—
Alleged incorrect statement by Dr. (Thirumathi) Satyavanimuthu (Privilege Matter) ... ... 485
Appropriation (No. 6) Bill, 1969 ... ... ... 278, 279–280
B.O.H., change in order (M) ... ... ... 504–505, 543
D.S.G. (First), 1969–70, G.D. ... ... ... 185–186
Electricity Board, fixation of maximum amount of loan (R) ... ... ... ... ... ... 546
Five-Year Plan (Fourth), Draft Outline (M) ... 321
Practitioners of Homoeopathy Bill, 1969 ... ... 544
Questions, supply of full information (Point of order) ... ... ... ... ... ... 34
Suspension of Question hour (M) ... ... ... 553
Suspension of Rule 23 (M) ... ... ... 553
Suspension of Rule 41 (3) (M) ... ... ... 361
Water supply position in Madras city, Madurai and Coimbatore towns (St.) ... ... ... 495–496
Water-supply position in Madurai and prevalance of jaundice (C.A. St.) ... ... ... ... 365–366

O

OBITUARY REFERENCE—
Vasan, Thiru S. S. ... ... ... ... 439–441

P

PALANIVEL RAJAN, THIRU —
Publication of a statement by the Leader of the Opposition in 'Navasakthi' (Privilege Matter) ... 137–141

PANCHAYAT(S)—
Grants ... ... ... ... ... ... 15–17
Vellimalaipattinam, bifurcation ... ... 357–359

PAPERS LAID ON THE TABLE—
Agricultural Labourer Fair Wages Bill, 1969 ... 323
Appropriation (No. 5) Bill, 1969 ... ... ... 323
Appropriation (No. 6) Bill, 1969 ... ... ... 323



PAGES

PAPERS LAID ON THE TABLE—*cont.*
Commission of Inquiry on the Agrarian Labour Problems of East Thanjavur district, Report ... 98
Contingency Fund Amendment Bill, 1969 ... 329
District Municipalities Act, 1920, notifications ... 97, 550
Electricity Supply Undertaking (Acquisition) Amendment Bill, 1969, with annexure ... 436
Electricity (Taxation on Consumption) Amendment Bill, 1969, with annexure ... ... ... [illegible]
General Sales Tax (Third Amendment) Bill, 1969. 323
Gudalur Janmam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1969, report and proceedings of Select Committee (English and Tamil) ... 203
Holdings (Stay of Execution Proceedings) (Tamil Nadu Amendment) Bill, 1969, with annexure ... 323
Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1969 ... 323
Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1959, annexure ... 436
Panchayats (Second Amendment) Bill, 1969 ... 323
Panchayats (Second Amendment) Bill, 1969, annexure ... ... ... ... ... 550
Public Premises (Eviction of Unauthorised Occupants) Act, 1960, notification ... ... ... 323
Public Service Commission Regulations, notifications ... ... ... ... ... 549–550
Relief Undertakings (Special Provisions) Bill, 1969. 98
Repatriates (Bar of Proceedings) Bill, 1969 ... 323
Unstarred Questions and Answers, list ... 550

PLANTATION—
Rubber Plantation in Kanyakumari District, extension ... ... ... ... ... ... 342–344

POLICE—
Ezhayirampannai and surrounding villages, unrest and need to restore Law and Order (C.A.) ... 361–364

PONNAMBALAM, PULAVAR P.—
Five-Year Plan (Fourth), Draft Outline (M) ... 301–303

PORTRAIT—
Tiruvalluvar—purchase ... ... ... ... 359

P—*cont.*

PAGES

PRIVILEGE—
Alleged incorrect statement by Dr. (Thirumathi) Satyavanimuthu ... ... ... ... 481–491
Publication of a statement made by the Leader of the Opposition in 'Navasakthi' ... ... ... 137–147, 243–246

R

RAFFLES—
Net Profit ... ... ... ... ... 135–137
Tickets, discrepancy ... ... ... ... 134–135

RAILWAYS—
Pandian Express, ... ... ... ... ... 117–120

RAJA, THIRU A. M.—
Appakudal tank, supply of water ... ... 123
Bridges in Bhavani, widening ... ... ... 462
Five-Year Plan (Fourth), Draft Outline (M) ... 62–68
Footwear Production-*cum*-Training Units, export of products ... ... ... ... ... 235–236
Raffles, net profit ... ... ... ... ... 135–137

RAJANGAM, THIRU M.—
Five-Year Plan (Fourth), Draft Outline (M) ... 286–289

RAJANGAM, THIRU N.—
Five-Year Plan (Fourth), Draft Outline (M) ... 90–92

RAMACHANDIRA DURAI, THIRU R.—
D.S.G. (First), 1969–70, G.D. ... ... ... 150, 151–154, 155, 173, 174, 175, 176, 177

RAMACHANDRAN, THIRU S.—
Bus transport, nationalisation ... ... ... 23–26, 26–28
Land Acts, codification ... ... ... ... 461–462
Land Mortgage Banks (Amendment) Bill, 1969 ... 575–576

RAMAMOORTHY, THIRU K.—
Amendments to be taken up in the order of receipt (Point of Order) ... ... ... ... 597–599
Contingency Fund (Amendment) Bill, 1969 ... 389–390
Five-Year Plan (Fourth), Draft Outline (M) ... 281–284



PAGES

R—*cont.*

RAMAMOORTHY, THIRU K.—*cont.*
Land Mortgage Banks (Amendment) Bill, 1969 ... 562–564, 580–588, 593–594, 595–597, 600, 601–606, 617, 618, 619
Questions, supply of full information (Point of Order) ... ... ... ... ... 31–32
Relief Undertakings (Special Provisions) Bill, 1969 ... ... ... 405–407, 417, 427, 431, 432,
Repatriates (Bar of Proceedings) Bill, 1969 ... 510–512

RAMAN, THIRU M.—
Harijan Welfare Schools, house-rent allowance to teachers ... ... ... ... ... ... 218
Valavanur Government High School, science section. 448

RAMAN, THIRU O. P.—
Electricity Supply Undertakings (Acquisition) Amendment Bill, 1969 ... ... ... 44
Electricity (Taxation on Consumption) Amendment Bill, 1969 ... ... ... ... ... ... 385–386
Questions, supply of full information (Point of Order) ... ... ... ... ... ... 33–38

RAMASWAMY GOUNDER, THIRU K. M.—
Sales Tax Appellate Tribunal at Coimbatore ... 14–15

RESOLUTIONS—
Constitution (Twenty-second) Amendment Bill, 1969 —ratification ... ... ... ... ... 496–497
Co-operative Central Land Mortgage Bank, increase in amount of guarantee ... ... ... ... 545–546
Disclosure of assets by Members including Ministers and Presiding Officers ... ... ... ... 497–504
Electricity Board, fixation of maximum amount of loan ... ... ... ... ... ... 546–547
Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948, draft amendment to rules ... ... 547
Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961, amendment to rules ... ... ... 547–548

PAGES

ROAD(S)—
Over-bridge near Basin Bridge, cost of reconstruction ... 18–19
Ring road around Kumbakonam, maintenance ... 120–121
Thoranur–Sokkanur road, widening ... 478
Village—laying ... 466–467

S

SANKARIAH, THIRU N.—
Disclosure of assets by Members including Ministers and Presiding Officers (R) ... 502
Five-Year Plan (Fourth), Draft Outline (M) ... 58–61, 77–83
Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1969 ... 540–541
Lands owned by Sugar Factories in excess of ceiling limit ... 345
Public Trust, extent of lands owned by ... 236–237
Relief Undertakings (Special Provisions) Bill, 1969 428–429, 433–434

SATYAVANIMUTHU, DR. (THIRUMATHI)—
Alleged incorrect statement (Privilege Matter) 486–487
Appropriation (No. 6) Bill, 1969 ... 252–253, 261, 263–264, 265, 266, 267, 273
Students of Agricultural College, Coimbatore, Indefinite demonstration (C.A. St.) ... 492–494

SCHOOL(S)—
Agricultural, particulars ... 6–8
Harijan Welfare Senior Basic, Sankaralingapuram, Construction of building ... 216–218
Valavanur Government High, science section ... 448

SERVICES—
All-India Service Officers, decrease in intake from Tamil Nadu ... 442–443
Collector of Kanyakumari, deputation to England... 479
Director of Medical Education, abolition of post ... 209–211
Physical Education Instructors, scales of pay ... 211–212



PAGES

SHANMUGAM, THIRU P. U.—cont.—
Appropriation (No. 6) Bill, 1969 ... 268, 272
Contingency Fund (Amendment) Bill, 1969, ... 392, 393, 394,
D.S.G. (First), 1969–70, G.D. ... 190, 192, 193
Five-Year Plan (Fourth), Draft Outline (M) ... 319–320
General Sales Tax (Third Amendment) Bill, 1969. 505–506
Questions, supply of full information (Point of Order) ... 32
Rice, lifting of ban on transport (C.A. St.) ... 41–43, 44

SIVASAMI, THIRU M. S.—
Five-Year Plan (Fourth), Draft Outline (M) ... 72–77

SIVASUBRAMANIAM, THIRU S.—
Aerodrome in Ulundurpet, construction ... 461–462
Soil Testing Laboratories, establishment in South Arcot district ... 353–354
Veterinary College, admission ... 480–481

SOUNDARAPANDIAN, THIRU P.—
Cottage Industries Co-operative Societies for Harijans, details ... 452–453
Drought relief, amount spent ... 129–134
Five-Year Plan (Fourth), Draft Outline (M) ... 83–86
Panchayats, grants ... 15–17

STATEMENT—
iFfth Finance Commission, recommendations ... 571–574

STRIKE—
Taxi and Auto-rickshaw drivers ... 471–473

SUBBIAH, THIRU A. K.—
Five-Year Plan (Fourth), Draft Outline (M) ... 86–90
Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1969 ... 539–540
Relief Undertakings (Special Provisions) Bill, 1969 ... 413
Wheat, allotment ... 222–226

PAGES

SUBBIAH, THIRU K. V.—
Appropriation (No. 6) Bill, 1969 ... ... ... ... 257–259
Electricity Supply Undertakings (Acquisition) Amendment Bill, 1969 ... ... ... 506–507, 508

SURENDRAN, THIRU M.—
Five-Year Plan (Fourth), Draft Outline (M) ... 295–297
Relief Undertakings (Special Provisions) Bill, 1969 414–417, 435

SWAMINATHAN, THIRU V.—
Drought relief, amount spent ... ... ... 129–134
Paddy, procurement from temple lands ... ... 226–227
Ring-road around Kumbakonam, maintenance ... 120–121
State Transport Department, recruitment of Conductors and Drivers ... ... ... ... 336–338

T

TAXES—
Quarterly tax for buses, payment 335–336

TEACHER(S)—
City Schools, scale of pay ... ... ... ... 214–216
Harijan Welfare Schools, House rent alloance 218
Retirement age ... ... ... ... ... 449–450
Uniform ... ... ... ... ... 212–214

TEMPLES—
Alagarkoil Devasthanam, improvement ... ... 340–341
Lands, procurement from ... ... ... 226–227

TEXTILES—
Hosiery goods, export ... ... ... ... 458–459

TOURISM—
Tourist Centres, improvements ... ... ... 12–14

TRANSPORT AND COMMUNICATIONS—
Bus transport, natiolisation ... ... ... 19–23
Bus transport, nationalisation ... ... ... 19–23, 26–28, 28–29
Government bus, free lift for college students 124–125



PAGES

TRANSPORT AND COMMUNICATIONS—cont.
Madurai Town bus service, permits for plying of buses ... ... ... ... ... ... 473
Number plates in cars ... ... ... ... 29–30
Palani-Madras night Express Service ... 473–474
Scooter riders and Motor Cyclists, helmets ... 474
Separate bus for students in Coimbatore ... 470–471
Short distance bus fares ... ... ... ... 332–335
Vaniyambadi–Madras Express service ...... ... 476

TRIBUNALS—
Sales Tax Appellate Tribunal at Coimbatore, additional bench ... ... ... ... ... 14–15

U

UNIVERSITIES—
Agricultural, establishment ... ... ... 4–6

V

VARADARAJAN, THIRU N.—
Appropriation (No. 6) Bill, 1969 ... ... ... 253–255

VEERAMANI, THIRU C.—
Five Year Plan (Fourth), Draft Outline (M) ... 291–293

VELAPPAN, THIRU C. V.—
Five-Year Plan (Fourth), Draft Outline (M) ... 284–286

VENKATASWAMY, THIRU B.—
Kothaval market, shifting ... 480

VEZHAVENDAN, THIRU K.—
Pudukottai Caveri Cotton Mills, closure (C.A. St.). 367–369, 369–370

VINAYAKAM, THIRU K.—
Amendments to be taken up in the order of receipt (Point of Order) ... ... ... 598, 599
Appropriation (No. 6) Bill, 1969 ... ... 279
Contingency Fund (Amendment) Bill, 1969 ... 391–392, 393, 394, 395, 396, 397, 399, 402–403

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை

உறுப்பினர்களின் (ஆங்கில அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண். | உறுப்பினர்கள் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | அப்துல் கபூர் சாகிப், எம். | இராணிப்பேட்டை |
| 2 | ஆதித்தனர், சி. பா. (அமைச்சர்) | ஸ்ரீவைகுண்டம் |
| 3 | அக்னிராஜு, எஸ். | திருப்பரங்குன்றம் |
| 4 | அழகமுத்து, து. ப. (அரசாங்க தலைமை ஆளுங்கட்சி இணைப்பாளர்) | உப்பிலியாபுரம் |
| 5 | அழகர்சாமி, சோ. | கோவில்பட்டி |
| 6 | அழகுத்தேவர், எஸ். | சிவகாசி |
| 7 | அலங்காரம், மு. | கடலாடி (செ. வ.) |
| 8 | ஆனந்தன், மு. | ரிஷிவந்தியம் (செ. வ.) |
| 9 | ஆண்டி என்ற குருசாமி, கு. | ஸ்ரீவில்லிப்புத்தூர் (செ. வ.) |
| 10 | அண்ணாமலை, சி. வி. எம். | கடம்பத்தூர் |
| 11 | அண்ணாமலை, வி. டி. | பெரணமல்லூர் |
| 12 | அரங்கநாதன், ஆர். என். | சோளிங்கபுரம் |
| 13 | அரங்கண்ணல், இராம | மயிலாப்பூர் (சென்னை மாநகரம்) |
| 14 | அரசு, அ. பொ | திருவெற்றியூர் |
| 15 | ஆறுமுகம், அ. | எடப்பாடி |
| 16 | ஆறுமுகம், எஸ். | வீரபாண்டி |
| 17 | ஆலடி அருணா, வி. | ஆலங்குளம் |
| 18 | ஆசைத்தம்பி, வ. வி. பி. | எழும்பூர் (சென்னை மாநகரம்) |
| 19 | ஆதிமூலம், டி. எஸ். | சேரன்மாதேவி |
| 20 | பாலன், எம். சி. | நாகர்கோயில் |
| 21 | பாலகிருஷ்ணன், ஏ. கோ. | வானூர் (செ. வ.) |
| 22 | பலராமன், இல. | கணியம்பாடி |
| 23 | பாலசுப்பிரமணியன், எ. | திண்டுக்கல் |
| 24 | பெள்ளி கௌடர், ஜெ. | கூனூர் |
| 25 | பாரதி மோகன், கோ. | குத்தாலம் |
| 26 | பூபதி, எம். | கோயம்புத்தூர்-கிழக்கு |
| 27 | பூவராகன், கோ. | விருத்தாசலம் |
| 28 | போஜன், கே. | உதகமண்டலம் |
| 29 | சீனிமைச்சாமி, கரு. | மானாமதுரை |
| 30 | சிதம்பரநாத நாடார், எ. | கொளச்சல் |
| 31 | சின்னராஜி, சி. கே. | திருப்பத்தூர் |
| 32 | சின்னசாமி, மு. | ஈரோடு |
| 33 | சின்னசாமி, வி. | ஏர்க்காடு (ஆ. வா.) |
| 34 | சித்தன், என். எஸ். வி. | திருமங்கலம் |
| 35 | தனுஷ்கோடி, பி. எஸ். | திருவாரூர் (செ. வ.) |
| 36 | தருமலிங்கம், ந. | திருத்துறைப்பூண்டி |



| தொடர் எண். | உறுப்பினர்கள் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 37 | துரைராஜ், சு. ம. | திருவள்ளூர் (செ. வ.) |
| 38 | துரைபாண்டியன், என். | நாங்குனேரி |
| 39 | துரைராஜ், பி. | சங்கரன்கோவில் (செ. வ.) |
| 40 | துரைசாமி, சு. | திருப்பூர் |
| 41 | துரையரசன், ஆ. | அறந்தாங்கி |
| 42 | எட்மண்ட், ஜி. ஆர். (பேரவைத் துணைத் தலைவர்) | திருச்செந்தூர் |
| 43 | இளம்வழுதி, இரெ. | கடலூர் |
| 44 | எல்லப்பன், பி. எஸ். | அச்சரப்பாக்கம் (செ. வ.) |
| 45 | கணேசன், எல். | ஒரத்தநாடு |
| 46 | கணேசன், எஸ். | செம்பனார்கோவில் |
| 47 | ஜார்ஜ், வ. | பத்மநாபபுரம் |
| 48 | ஞானசம்பந்தன், கொ. இர. | நாகப்பட்டினம் |
| 49 | கோமதிசங்கர தீட்சிதர், க. | அம்பாசமுத்திரம் |
| 50 | கோபால், எம். | குன்றத்தூர் (செ. வ.) |
| 51 | கோவிந்தன், கே. ஆர். | தாரமங்கலம் |
| 52 | கோவிந்தன், புலவர் கா. (பேரவைத் தலைவர்) | செய்யாறு |
| 53 | கோவிந்தராசன், ம. சொ. | மதுரை-சென்ட்ரல் |
| 54 | கோவிந்தராஜன், சி. | நெல்லிக்குப்பம் |
| 55 | கோவிந்தராசன், வி. எஸ். | புரசவாக்கம் (சென்னை மாநகரம்) |
| 56 | கோவிந்தராசுலு, கே. | கோயம்புத்தூர்-மேற்கு |
| 57 | கோவிந்தராசன், ஆ. | புவனகிரி |
| 58 | ஹபிபுல்லா பேக், டாக்டர் | ஹார்பர் (சென்னை மாநகரம்) |
| 59 | ஹாண்டே, டாக்டர் எச். வி. | பார்க் டவுன் (சென்னை மாநகரம்) |
| 60 | இளஞ்செழியன், வீ. சா. | விராலிமலை |
| 61 | இராசரத்தினம், டி. | ஸ்ரீபெரும்புதூர் |
| 62 | ஜேம்ஸ், ஜே. | திருவட்டார் |
| 63 | ஜானகியம்மாள், திருமதி கே. பி. | மதுரை-கிழக்கு |
| 64 | ஜயராஜ், பி. | நன்னிலம் (செ வ.) |
| 65 | ஜயராமன், கி. | சேலம்-1 |
| 66 | ஜெயராமன், பி. | பேர்ணாம்பட்டு (செ, வ.) |
| 67 | கலியமூர்த்தி என்ற மூர்த்தி, ஆ. கு. | ஜெயங்கொண்டம் (செ.வ.) |
| 68 | கனகசபை, ரா. | சிதம்பரம் |
| 69 | கந்தசாமி கவுண்டர், செ. | அரவக்குறிச்சி |
| 70 | கந்தசாமி, எம். | குளித்தலை |
| 71 | கந்தசாமி படையாச்சி, மு. | உளுந்தூர்ப்பேட்டை |
| 72 | கண்ணன், எம். ஆர். | பேசின் பிரிட்ஜ் (சென்னை மாநகரம்) |
| 73 | கண்ணப்பன், எம். | இளையாத்துக்கடவு |
| 74 | கரியமாணிக்கம் அம்பலம், கரு. ராம. | திருவாடானை |

திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, இந்த வாகனங்களைப் பதிவு செய்த எண்களை எழுதும்போது ஒரு குறிப்பிட்ட நிறத்தில், ஒரு குறிப்பிட்ட அளவில் தான் எழுதவேண்டுமென்ற வரையறை உண்டா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : குறிப்பிட்ட நிறத்தில் தான் இருக்கவேண்டும் என்பது எனக்குத் தெரியும். குறிப்பிட்ட அளவிலும் இருக்க வேண்டும் என்றுதான் கருதுகிறேன்.

தமிழ்நாடு மின் கழகக் கணக்காயர் சங்கம்

* 83 விஞ.—திரு. சா. மெய்யப்பன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின் கழகக் கணக்காயர் சங்கத்திலிருந்து 1967 டிசம்பர் மாதத்தில் தமிழக நிர்வாகத்திலுள்ள குறைபாடுகளைக் குறிப்பிட்டும் குறைகளை நீக்க வழிகள் உரைத்தும் ஒரு கோரிக்கை மனு அனுப்பப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன்மேல் என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) அம் மனுவிலுள்ள கோரிக்கைகளின்மேல் நடவடிக்கை எடுப்பதற்காக அம்மனு மின் வாரியத்திற்கு அனுப்பப்பட்டது.

திரு. சா. மெய்யப்பன் : ஐயா, தமிழைப் பாட போதனு மொழியாகக் கொண்டு பயில்கின்றவர்களுக்கு மின்சார இலாக்காவில் வேலை கொடுப்பதற்கும், வேலையில் உள்ளவர்களுக்குத் துரிதமாக உயர்வு கிடைக்கச் செய்யவும் சலுகை அளிப்பதன் மூலம் தமிழ் ஆர்வத்தைப் பரப்ப இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : நிர்வாக சம்பந்தமாகத்தான் சில கோரிக்கைகள் அனுப்பியிருக்கிறார்கள். மின்சார வாரிய விதி 15-ன்படி பரிந்துரைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

DR. H. V. HANDE : While we are glad that it is under the examination of the Government, may we know from the Hon. Minister the exact details of the representations made and what are the main grievances that this Association has placed in the hands of the Government?

THE HON. THIRU O. P. RAMAN : The grievances represented by the workers relate not to appointments but to the administration of the Electricity Board.

DR. H. V. HANDE : My question relates to the petition submitted to the Government and the Hon. Minister has stated that it is under examination. So I want to know what are the main demands contained in that petition submitted to the Government?

THE HON. THIRU O. P. RAMAN : They relate to some of the proposals that should be carried out by the Electricity Board.



DR. H. V. HANDE : What are the proposals?

THE HON. THIRU O. P. RAMAN : Now I do not have details about them.

2. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி

(ii) விஞ நேரத்தில் முழுவிவரங்கள் அளித்தல்.

DR. H. V. HANDE : Sir, on a point of order. When a question has been asked, it is the business of the Department to supply answer for it. Now the Hon. Minister has stated that the petition has been received and it is under examination. If the Department concerned has supplied . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. சட்டமன்ற நிகழ்ச்சி முறையில் தவறுகள் ஏதாவது இருந்தால் அதை பாயின்ட் ஆப் ஆர்டர் சம்பந்தமான விதிகளின் கீழ்க் கொண்டுவரலாம். ஆனால் இது இலாக்காவிடம் இருந்து அமைச்சர்கள் எல்லாத் தகவல்களையும் சேகரித்து துணைக் கேள்வி கேட்கிறபோது அவைக்கு வழங்கவேண்டும் என்பதாகும்.

DR. H. V. HANDE : Sir, I want to clarify the point. Sir, we have come here to get answers for questions. Now, the point is that the petition has been sent to the Hon. Minister and it is under examination. Are we not entitled to know what are their grievances and is it not incumbent on the Ministry to let us know at least what are their grievances? Is it not the duty of the Hon. Minister to pull up the Department whenever they fail to supply answers. Why are we here?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்வதை ஒப்புக்கொள்கிறேன். ஒரு கேள்வி கேட்கப்பட்டால் அது சம்பந்தமான முழு விவரங்களையும் அமைச்சர்கள் இலாக்காவிடம் இருந்து கோரிப் பெறவேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அதுபற்றி பாயிண்ட் ஆர்டர் எழுப்புவது முறையாகாது. சட்டப்பேரவை விதி முறைகளின்படி வேறு வகையில் இதை எழுப்பலாம்.

விஞக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

விஞ நேரத்தில் முழு விவரங்கள் அளித்தல்—தொடர்ச்சி.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, ஒரு விளக்கம். இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் பேரவைத் தலைவர் அவர்களே 'அமைச்சர்கள் ஒரு கேள்வி சம்பந்தப்பட்ட தகவல்களை எல்லாம் சேகரித்து துணைக்கேள்வி கேட்கிறபோது கொடுக்கவேண்டும்'

*1969 ஆகஸ்ட் 22]*

என்பதாக அமைச்சர்களைக் கேட்டுக்கொள்வது சரியாக இருக்காதா? எங்களுடைய உரிமைகளைக் காப்பாற்ற வேண்டியவர்கள் தாங்கள்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய யோசனையை ஏற்றுக்கொள்கிறேன்.

**DR. H. V. HANDE:** Sir, it is the business of the Chair to protect the rights of the hon. Members. Why don't you pull up the Minister. . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் குறிப்பாகச் சுட்டிக்காட்டினேன். அமைச்சர்களுடைய கவனத்திற்கு சட்டப் பேரவை விதிகளின்படி வேறுவகையில் கொண்டுவரலாம். பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்புவது சரியல்ல.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. ஹாண்டே அவர்கள் பேசும்போது அமைச்சர்களிடத்தில் இருந்து பதிலை வரவழைக்கவேண்டும் என்று வற்புறுத்திச் சொன்னார்கள். பதில் சொல்கிற உரிமை, சொல்லாமல் இருக்கிற உரிமை அமைச்சர்களுக்கு இருக்கிறதா இல்லையா?

(டாக்டர் ஹாண்டே, திரு. விநயகம், திரு. கருத்திருமன் ஆகியோர் ஒரே நேரத்தில் எழுந்தார்கள்.)

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அமைச்சர்களைப் பதில் சொல்ல வைக்கின்ற உரிமை இருக்கிறது என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேட்கின்ற வினாக்களுக்கு எல்லாம் அமைச்சர்கள் விடை கொடுத்துத்தான் தீரவேண்டும் என்பது இல்லை. ஆயினும் ஒரு கேள்வி போடப்பட்டால் அதற்கான முழுத் தகவல்களையும் இலாக்காவில் இருந்து அமைச்சர்கள் கோரிப் பெற்றாக வேண்டும். துணைக் கேள்விகள் போடுகிறபோது தேவையான விவரங்களைக் கொடுக்கவேண்டும், ஆகவே, அமைச்சர்கள் கூடுமானவரையில் எவ்வளவு அதிகமான விவரங்களைப் பெற்று துணைக்கேள்விகள் போடுகிறபோது பேரவைக்குத் தருகிறார்களோ அப்போதுதான் அதிகமான பயன் ஏற்படும். கேள்விகளுக்குப் பதில் சேகரிக்க அரசு செலவிடுகிற பணம் எவ்வளவு என்று தெரியும். அப்படி இருக்கிறபோது கேள்விகள் வருகிறபோது அவற்றுக்குப் போதுமான தகவல்களைச் சேகரித்து இலாக்காக்கள் அளிக்கவில்லை என்றால் கேள்வி போட்டுப் பயன் இல்லாத நிலை உருவாகும். ஆகவே துணைக் கேள்விகள் போடுகிறபோது கூடுமான வரையில் அதிகமான விவரங்களைத் தரக்கூடிய வகையில் இலாக்காக்களிடம் இருந்து அதிகமான விவரங்களைப்பெற்று அமைச்சர்கள் வைத்துக்கொள்ள முயற்சிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** பதில் சொல்ல வேண்டிய உரிமை இல்லை என்று அமைச்சர் அவர்கள் அழுத்தமாகச் சொன்னதன் காரணத்தினால்தான் இதை நான் உரிமைப் பிரச்சினையாகக்



*1969 ஆகஸ்ட் 22] [திரு. பி. ஜி. கருத்திருமன்]*

கருதுகிறேன். பதில் சொல்வதற்கு உரிமை இல்லை என்று சொல்வது முறையா?

**THIRU K. VINAYAKAM:** Sir, on a point order. Due to some inadvertence, the Chair has skipped over one question and when we drew his attention to it, he stated that he would take it up after all the other quesions have been answered. Now the Chair has declared that the Question Hour is over. May I know how it is in order for the Chair to say that the Question Hour is over when we are hungrily waiting for an answer to that question.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி கேட்கின்ற நேரத்தில் திரு. கோமதிசங்கர தீட்சிதர் அவர்கள் அவையில் இல்லை. ஆகவே அதை நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன்.

**THE HON. THIRU O. P. RAMAN:** Sir, I want to make a personal explanation.

**MR. SPEAKER:** In the Assembly Rules it is stated—

'A Minister to whom a question or a supplementary question is put may decline to answer it on the ground that to answer it would be against public interest.' 'A Minister to whom a supplementary question is put may decline to answer it without notice.'

ஆக இரண்டும் இருக்கிறது. உரிமை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டியே எல்லாக் கேள்விகளுக்கும் அமைச்சர்கள் பதில் தர மறுக்கிறார்களா என்று கேட்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லாமல் இருப்பதற்கு உரிமை இருக்கிறது என்று வலியுறுத்திச் சொன்னார்கள். எங்களுக்கும் அதைக் கேட்பதற்கு உரிமை இருக்கிறது என்பதை வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்களுக்கு கேட்பதற்கும் உரிமை இருக்கிறது, விடையளிக்காமல் இருப்பதற்கு அமைச்சர்களுக்கும் உரிமை இருக்கிறது . . . .

**திரு. சா. மெய்யப்பன்:** சில கட்டுப்பாடுகளுக்குட்பட்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் நானும் சொல்கிறேன், சில கட்டுப்பாடுகளுக்குட்பட்டுத்தான்.

1. It would be against public interest.
2. Without notice.

என்று விதிகளிலே சொல்லப்பட்டிருக்கிறது. எனவே இவற்றின்கீழ் அமைச்சர்கள் மறுப்பதற்கும் இடம் இருக்கிறது. அது இந்த மன்றத்திலே நடக்கின்ற நிகழ்ச்சிதான். 1957-லே இங்கே பேரவைத் தலைவர் கொடுத்திருக்கின்ற தீர்ப்பு இருக்கிறது.

On a point of order raised by a Member that a supplementary question put had not been answered by the Minister, the Speaker observed that he could not force a Minister to answer any question

and that if he did not answer any question and if the Member was not satisfied with the answer given by the Minister, the Member might put a separate question.

என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆக, கேட்கின்ற கேள்விகளுக்குப் பதில் கொடுக்கவேண்டுமென்று அமைச்சர்களைக் கேட்பதற்கு பேரவைத் தலைவருக்கு அதிகாரம் இல்லை.

THIRU K. VINAYAKAM : On a point of clarification, Sir. I know the implications of the questions that are put. May I ask whether the Hon. Minister is right in having information in his possession in the file readily available on the table of the House and withholding information? Is he right in withholding information when a specific question is put to elaborate the grievances as detailed by the deputationists?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அமைச்சர்களிடத்திலே போடுகின்ற கேள்விகளுக்கு உரிய விடைகளை தக்க துறைகளிலிருந்து சேகரித்துப் பதில் தருகிறார்கள். எந்த ஒரு விடையையும் மறுக்கவேண்டுமென்ற எண்ணம் எந்த அமைச்சருக்கும் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உறுப்பினர்கள் கேட்கின்ற வினாக்களுக்குரிய விடைகளைத் தருவதன்மூலம் தக்க விடைகளைக் கொடுத்ததோடு மட்டுமல்லாமல் அரசுக்கும் எடுக்கப்பட்டிருக்கின்ற நடவடிக்கைகளைப்பற்றிய தகவல்களும் கிடைக்கின்றன என்ற திருப்தியும் ஏற்படுகின்றது. கேள்வி கேட்கின்றவர்கள் விடைக்கு வெகுதூரம் சென்று அந்தச் சொல்லோடு தொடர்புடைய வரலாற்றுக்குக்கூட போய்விடுவார்கள். அவர்களுக்கு அதற்கு உரிமை இருக்கிறது. அமைச்சர்களும் நினைவில் உள்ளவற்றைக் கூடுமானவரையில் சொல்கிறார்கள். தங்கள் கையில் உள்ள விடைகளையும் சொல்கிறார்கள். விடைகள் இல்லாதவற்றிற்குத் தனிக் கேள்வி போட வேண்டுமென்று சொல்கிறார்கள். பொது நன்மைகளைக் கருதி பதில் சொல்வதன்மூலம் பல நிலைமைகள் ஏற்படக்கூடிய சூழ்நிலையிருந்தால் சொல்லாமல் இருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் பதிலை வைத்துக்கொண்டே சொல்லாமல் இருக்கலாமா என்று கேட்டார்கள். அவர்கள் பதில் வைத்திருக்கிறார்கள் என்பதை அவர்கள் எப்படிக் கண்டறிந்தார்கள்? அவர்கள் வைத்திருப்பதைக் கண்டறிவது அவர்களுடைய தவறாகும், கண்டறியத் தக்க வகையில் காட்டியதும் தவறாக இருக்கலாம். உறுப்பினர்களுடைய கருத்துக்களை உள்ளத்தில் வைத்துக்கொண்டு எவ்வளவுக்கெவ்வளவு தெளிவாக விடைகளைச் சொல்லமுடியுமோ அந்த அளவுக்கு இந்த அமைச்சரவை ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கம் சரி. எந்தக் கேள்விக்கும் கேட்ட அளவில் பதில் சொல்லமுடியாது; உப கேள்விகளுக்கு உடனடியாகப் பதில் இருக்கமுடியாது. ஆனால் அமைச்சர் அவர்கள் பதில் தர மறுப்பதற்கே உரிமை இருக்கிறது





என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் தவறாகச் சொல்லியிருந்தாலும் இருக்கலாம். முன்னாள் சபாநாயகர் கொடுத்த தீர்ப்பிலே அமைச்சர்கள் மழுப்பலாம்; மறுக்கலாம் என்று இருக்கிறது. பாராளுமன்றத்திலே சபாநாயகராக இருந்த திரு. அனந்தசயனம் அய்யங்கார் அவர்கள் பாராளுமன்றத்திலே கேட்கின்ற கேள்விகளுக்கு அமைச்சர்கள் நியாயமான, நேர்மையான பதிலைச் சொல்ல உரிமை உடையவர்கள், அமைச்சர்கள் அப்படிச் சொல்லாவிட்டால் அமைச்சராக இருப்பதற்குத் தகுதியற்றவர்கள் என்று தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். கேட்கின்ற கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதில் சொல்லுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள். மக்களுக்கு கடமைப்பட்டிருக்கிறார்கள், மறுக்கமுடியாது, அதற்கு உரிமை கிடையாது என்று சொல்லியிருக்கிறார்கள் ஜனநாயக முறையிலே எல்லாம் சரியாக நடக்கவேண்டுமென்றால் தகவல் இப்பொழுது இல்லை என்று சொல்லலாம் அல்லது நோட்டீஸ் கேட்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாராளுமன்றத்திலே திரு. அனந்தசயனம் அய்யங்கார் சொன்னதைப்பற்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது அவர்கள் அங்கே போயிருக்கும் பழக்கம் இருக்கிற காரணத்தாலே . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் அங்கே இருந்தேன், பழக்கம் என்ன ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இருங்கள் சொல்கிறேன். பாராளுமன்றத்திலே இருப்பதைச் சுட்டிக்காட்டி இங்கே அப்படிச் செய்யவில்லை என்று மறைமுகமாகச் சொல்வதுபோல் படுகிறது. அமைச்சர்கள் கேள்விகளுக்குரிய பதில்களை இலாக்காக்களிலிருந்து வாங்கிக்கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அது வேறு. கொடுக்கிற கேள்விகளுக்குப் பதில்கொடுக்க மறுப்பதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறதா இல்லையா என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். "The Minister is at liberty" என்னை விட ஆங்கிலத்திலே புலமை உள்ளவர்கள், அதிகமாக ஆங்கிலம் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள்.

THIRU K. VINAYAKAM : That is an insinuation. The Hon. Speaker knows much better English than myself. He knows Queen's English and I know King's English.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் யாரைச் சொன்னேன்?

**திரு. கே. விநாயகம்:** என்னைத்தான் சொன்னீர்கள் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அப்படிச் சொன்னவுடன் விநாயகம் அவர்கள் எழுந்திருப்பானேன்? நான் அவர் என்று எங்கே சொன்னேன்? குற்றம் உள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்று கூறுவார்கள். "Liberty" என்றால் என்ன பொருள் என்று எல்லோருக்கும் தெரியும்.

[பேரவைத் தலைவர்] [1969 ஆகஸ்ட் 22

The Minister is at liberty to say that he will not answer a supplementary question. என்று 1957-லே பேரவையை அலங்கரித்த சபாநாயகர் அவர்கள் தீர்ப்பளித்து இருக்கிறார்கள். கேள்விகள் கேட்பதற்கு உரிமை இருக்கிறது, அமைச்சர்கள் விடையளிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்திலே விடை அளிக்க முடியாத நிலைமையும் உண்டு என்பதற்கு நடைமுறை விதிகள் இருக்கின்றன.

(2) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி

(iii) வினாவிற்கு விடையளிக்க அமைச்சர் மறுத்தல்

திரு. டி. மார்டின் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரத்தை வீணாக்கக்கூடாது.

திரு. டி. மார்டின் : நேரத்தை வீணாக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்த விதியின்கீழ் நிற்கிறீர்கள்?

THIRU T. MARTIN : Under Rule 39 (a). I know that the time of the Assembly is precious.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது எல்லாம் வேண்டாம்.

THIRU T. MARTIN : Please allow me. If my mind is goggled, how can I freely express my opinion?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி, நீங்கள் சொல்லுங்கள்.

THIRU T. MARTIN : A Minister to whom a question or supplementary question is put may decline to answer it on the ground. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிலிருந்து நீங்கள் படிக்கிறீர்கள் ?

THIRU T. MARTIN : From the Assembly Rules corrected upto 31st January 1968.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மார்ச் 1968 வரை சரி செய்யப்பட்ட விதிகள் இருக்கின்றன.

திரு. டி. மார்டின் : எங்களுக்கு அச்சடித்து இதைத்தான் கொடுத்து இருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. அதற்குப் பிறகும் கொடுத்து இருக்கிறீர்கள்.

THIRU T. MARTIN : The Hon. Speaker may please pass on that copy to me.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிச் செய்வது வேறு. டிபார்ட்மெண்டிலே ஒவ்வொரு முறையும் அச்சடித்துக் கொடுத்து இருக்கிறார்கள்.

THIRU K. VINAYAKAM : That copy has not been communicated to us.

MR. SPEAKER : No, I think it has been supplied to members.



1969 ஆகஸ்ட் 22]

THIRU T. MARTIN : A Minister to whom a question or supplementary question is put may decline to answer it on the ground . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதைப் படிக்கிறீர்கள் ?

திரு. டி. மார்டின் : ரூல் 39 (எ).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 39(பி) என்று சொன்னீர்களே.

திரு. டி. மார்டின் : ரூல் 39 (எ) என்று சொல்லியிருக்கிறேன் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி, படியுங்கள்.

* THIRU T. MARTIN : Let us calmly approach this problem.

Rule 39 (a) A Minister to whom a question or a supplementary question is put may decline to answer it on the ground that to answer it would be against public interest.

(*b*) A Minister to whom a supplementary question is put may decline to answer it without notice.

The ruling just now quoted by you was given in the year 1957. The present rule 39 (*b*) has been introduced later on. Under the existing rule, the ruling given under a different set of rules cannot hold good. Sir, I want a clear ruling from the Chair regarding this. When a question is put, the Minister can say 'I want notice' or that he will not disclose the information or give the answer, as it would be against public interest. The words used here are 'may decline' and is the Minister right in saying that he *will not* answer ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த மன்றத்தில் 'மே' பற்றிய விவாதம் சென்ற முறையே நடைபெற்றிருக்கிறது. 'மே நாட்' என்று பொருள் பண்ணுவதோடு மட்டுமல்லாமல் உடன்படுகின்ற முறையில்கூடப் பொருள் பண்ணலாம் என்று இந்த அவையிலே அப்போது முதலமைச்சராக இருந்தவர்கள் கூறியிருக்கிறார்கள் என்பதையும் அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே, முன்னே கொடுத்த தீர்ப்புக்கும், சட்டமன்ற விதிமுறைக்கும் மாறுபாடு இல்லை, வேறுபாடு இல்லை. அமைச்சர்கள், அங்கத்தினர்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு விடையளிக்கின்ற நேரத்திலே பொதுநன்மைக்கு உகந்ததாக இருக்காது என்ற காரணத்திற்காக விடையளிக்க மறுக்கலாம். நோட்டீஸ் இல்லாமல் தாங்கள் விடையளிக்க முடியாது என்றும் கூறலாம். இரண்டும் இருக்கிறது. அந்த உரிமையை அமைச்சர் பயன்படுத்த வேண்டுமென்று இப்போதும் நான் சொல்லவில்லை. சில நேரங்களில் அப்படிச் சொல்லுவதற்கு உரிமை இருக்கிறது என்ற சட்டமன்ற விதிமுறையைத்தான் சுட்டிக் காட்டுகிறேன். அதையொட்டி அமைச்சர்கள் கேள்விக்குப் பதில் சொல்ல மறுத்து விட வேண்டுமென்பதை நானும் ஏற்றுக் கொள்ளவில்லை. அமைச்சர்கள் கேட்கப்படுகின்ற கேள்விகளுக்கான பதிலை, விவரங்களை எவ்வளவு விரைவாகப் பெற்றுத் தரமுடியுமோ அவ்வளவு விரைவாகப் பெற்றுத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** என்னைப்பற்றிக் குற்றம் சாட்டப்பட்டு இருப்பதால் ஒரு விளக்கம் தர விரும்புகிறேன். கேட்கப்பட்ட கேள்வி "... நிர்வாகத்திலுள்ள குறைபாடுகளைக் குறிப்பிட்டும் குறைகளை நீக்க வழிகள் உரைத்தும் ஒரு கோரிக்கை அனுப்பப்பட்டதா?" என்பது. அதற்கு விடை "ஆம்" என்று தெளிவாகக் கூறிவிட்டு, "அம்மனுவிலுள்ள கோரிக்கைகளின் மேல் நடவடிக்கை எடுப்பதற்காக அம் மனு மின்சார வாரியத்திற்கு அனுப்பப்பட்டது" என்று பதில் கொடுக்கப்பட்டது. கேட்கப் பட்ட கேள்விக்குத் தேவையான பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே ஒரு துணைக் கேள்வி கேட்டபோது குறிப்பில்லை, தனிக் கேள்வி கேட்டால் விவரம் சொல்ல முடியும் என்று சொன்னால் அதிலே என்ன தவறு இருக்கிறது?

THIRU K. VINAYAKAM: I believe you have closed the issue. If not, please give us an opportunity.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தன்னிலை விளக்கம் அளிக்க அமைச்சர்களுக்கு மட்டுமல்லாது இந்த மன்றத்தில் இருக்கின்ற அத்தனை உறுப்பினர்களுக்கும் உரிமை இருக்கிறது. ஆகவே, தவறான விடை கொடுத்து விட்டார் என்ற காரணத்தை வைத்துப் பேசிய நிலைமையில் அமைச்சர் அவர்கள் தன்னிலை விளக்கம் கொடுக்கிறார்கள். அதிலே தவறு எதுவும் இல்லை.

DR. H. V. HANDE: On a matter of personal explanation. I fully appreciate the answer given by the Minister to my question. I fully agree with what the Leader of the House said viz., that the supplementary question must not be far away from the main question. My supplementary question is a simple one immediately connected with the main question. A petition was given and action has been taken. My supplementary question was what the contents of the petition are. I want a ruling from the Chair whether the question is a direct or routine supplementary question or is it far away from the main question. The Speaker can definitely say that this is a supplementary arising directly from the main answer. Being hard and fast in interpreting the rule will not serve any purpose. We should apply our commonsense also. Commonsense says that it is a direct supplementary. May I request the Chair not to be very critical about such questions?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள், கொடுக்கப்பட்ட கோரிக்கைகளின்பேரில் நடவடிக்கை எடுக்குமாறு இலாகாவுக்கு அனுப்பிவிட்டேன் என்று கூறியிருக்கிறார்கள். நம்மிடத்திலே கூட மனுக் கொடுக்கிறார்கள். நாம் அதை இலாகாவுக்கு அப்படியே அனுப்பிவிடுகிறோம். அந்த மனுக்களிலே என்ன கோரிக்கைகள் இருக்கின்றன் என்பதைப் பார்க்கக்கூடிய நிலை சில நேரத்தில் இருக்கும், சில நேரத்தில் இல்லாது போகும் நிலைமையும் ஏற்படுகிறது. அந்த நிலையில் அந்த மனு இலாகாவுக்கு அனுப்பப்பட்டுவிட்டது என்று சொன்னார்கள். அந்த மனுவில் என்னென்ன கோரிக்கைகள் அடங்கியிருக்கின்றன என்று தனியாகக் கேள்வி போட்டால் தகவலைப் பெற்றுத் தருமாறு கூறுகிறேன்.





**டாக்டர் எச். வி. ஹாண்டே:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய துணைக் கேள்வி மூலக் கேள்வியுடன் தொடர்பு கொண்ட கேள்விதான்.

DR. H. V. HANDE: Sir, I will explain. Does the Speaker think that for answering even a starred question the Minister would not have read the contents of the petition? The very conception of a starred question is to do away with red-tape and compel the attention of the Minister to the question that is asked. The very purpose of my question was to compel the attention of the Minister to the contents of the petition. If a starred question is answered without scrutinising the petition properly, is it within the purview of the Assembly Rules?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்ற விதிமுறைகளுக்கும் இதற்கும் ஒன்றும் இல்லை. கேள்வி கேட்டிருக்கிறார்கள். மனுக் கொடுத்தது ஒரு நேரம், கேள்வி கேட்டது ஒரு நேரம், மனுச் செய்த தேதியில் இலாகாவுக்கு அனுப்பி இருக்கிறார்கள். அதிலே என்னென்ன கோரிக்கைகள் இருக்கின்றன என்று கேட்டதற்கு விவரங்களைக் கொடுக்கக்கூடிய நிலை இல்லை. தனிக் கேள்வி கேட்டால் என்ன கோரிக்கைகள் என்பது பற்றி அமைச்சர் அவர்கள் விடையளிக்க வாய்ப்பு இருக்கிறது.

## (3) ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

### (i) சென்னையில் நிகழ்ந்த தீ விபத்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் அவர்கள் சென்னையில் நிகழ்ந்த ஒரு தீ விபத்தைப் பற்றிக் குறிப்பிட்டு ஒற்றி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது அரசினரின் அன்றாட அலுவல்களுக்கு உட்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 41-வது விதியின் கீழ் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவருவார்களானால் விவரமான அறிக்கையை இந்த அவைக்குப் பெற்றளிக்க வாய்ப்பாக இருக்கும் என்ற காரணத்தால் இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

### கன்னியாகுமரி மாவட்டத்தில் மீனவர்களுக்குப் போலீசாரால் விளைவிக்கப்பட்ட தொல்லைகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திரு. டி. மார்டின் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் மீனவர்களுக்குப் போலீசாரால் விளைவிக்கப்பட்ட தொல்லைகளைப்பற்றி விவாதிக்க ஒரு ஒற்றி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதிலே தெளிவான குற்றச்சாட்டுகள் இல்லை. இதுவும் அரசினரின் அன்றாட அலுவல்களுக்கு உட்பட்டதால் இதற்கும் அனுமதி தர மறுக்கிறேன்.

### ( iii ) ஏழயிரம் பண்ணைக் கிராமத்தில் சட்டம் அமைதி காக்கப்படாமை.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* : மேலும், திரு. மார்டின் அவர்கள் ஏழாயிரம் பண்ணைக் கிராமத்தில் லா அண்டு ஆர்டர் சரியாக நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டைக் கூறி, ஒரு ஒற்றி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இதுவும் அரசினரின் அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்ட காரணத்தால் இதற்கும் அனுமதி தர மறுக்கிறேன்.

### (4) அறிவிப்பு

### பேரவை நிகழ்ச்சிநிரலில் மாற்றம்.

*மாண்புகு பேரவைத் தலைவர்* : சட்டமன்ற தொடர் கூட்டத்தின் நிகழ்ச்சிநிரலில் சிறு மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. அதை அவைக்கு அறிவிக்க விரும்புகிறேன்.

22nd August 1969 (Friday)—Discussion on the Draft Outline of the Fourth Five Year Plan of Tamil Nadu (1969-1974).

23rd August 1969 (Saturday)—(1) Discussion and Voting of Demands—
- (i) for Grants for Excess Expenditure in the year 1965-66;
- (ii) for First Supplementary Statement of Expenditure for the year 1969-1970.

(2) Introduction of Appropriation Bills.
(3) Discussion on the Draft Outline of the Fourth Five-Year Plan (cont.).

24th August 1969 (Sunday)—Holiday.

25th August 1969 (Monday)—(1) Consideration and Passing of Appropriation Bills.
(2) Discussion on Draft Outline of the Fourth Five-Year Plan of Tamil Nadu (1969-1974) (Last day).
(3) Other Official Resolutions and Bills.

26th August 1969 (Tuesday)— Official Resolutions and Bills.

27th August 1969 (Wednesday)—(1) Discussion on the Report of the Commission of Inquiry on the Agrarian Labour Problems of East Thanjavur District by Thiru A. Ganapatia Pillai.

ஆவணி அவிட்டத்தை முன்னிட்டு இன்று மட்டிலும் மாலை 3 மணிக்குச் சட்டமன்றம் கூடும்.

(2) Consideration and Passing of the Bill to replace Ordinance (viz)., " The Tamil Nadu Agricultural Labourer Fair Wages Ordinance, 1969 (Tamil Nadu Ordinance No. 4 of 1969) ", (3) Other Official Business.

The House will sit from 9 a.m. from 22nd to 26th August 1969 and from 3 *p.m. on 27th August* 1969.



### (5) கவன ஈர்ப்பு.

### அரிசிப் போக்குவரத்துக் கட்டுப்பாடு நீக்கமும், அதன் விளைவுகளும்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* : அடுத்து, 41-வது விதியின் கீழ் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் உணவு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டுவருவார்கள் :

**திரு. வி. கே. கோதண்டராமன்** : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் மழையில்லாமல் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ள இந்தச் சமயத்தில், அரிசிப் போக்குவரத்திற்கு இருந்த கட்டுப்பாட்டை எடுத்ததால் ஏற்பட்டுள்ள விளைவுகள் பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உணவு, வணிகவரித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

* **மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்ட எல்லைப்புறங்களிலும் சென்னை மாநகர், கோயம்புத்தூர் நகரின் சுற்றுப்புறங்களிலும் உள்ள சோதனைச் சாவடிகள் தவிர இம் மாநிலத்திலுள்ள மாவட்டங்களுக்கிடையே இருந்த சோதனைச் சாவடிகள் அனைத்தும் 1969 ஜூலை 5-ம் நாள் முதற்கொண்டு அகற்றப்பட்டு விட்டன. அரிசி விலை அதிகரிக்காமல் நிலைப்படுத்தும் நோக்குடன் மாவட்டங்களினிடையே அரிசி தடையின்றி எடுத்துச் செல்வது இயலும் வகையில் சோதனைச் சாவடிகளை எடுத்துவிடும் இந்தத் துணிச்சலான நடவடிக்கையை அரசு மேற்கொண்டது. தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் ஏறத்தாழ 40-லிருந்து 42 லட்சம் டன் வரை அரிசி உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் 1/5 பங்கு மட்டுமே அதாவது 8 லட்சம் டன் அரிசியை மட்டுமே அரசு கொள்முதல் செய்கிறது. எஞ்சிய 32 லட்சம் டன் அரிசி இம் மாநிலத்திற்குக் கிடைக்கிறது. மாவட்டங்களுக்கிடையே உள்ள கட்டுப்பாடுகளை நீக்கிவிட்டால் அந்தந்த வட்டார மக்களின் தேவை, உள்ள இருப்புக்கேற்ப நெல் தடையின்றி எடுத்துச் செல்லப்படும் என்றும் முதலில் விலை திடீரென்று அதிகரித்தாலும் நாளடைவில் அரிசி விலை நிலைத்து விடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

சோதனைச் சாவடிகள் எடுத்துவிடப்பட்ட போதிலும் தமிழ் நாடு 1968-ம் ஆண்டு நெல்—அரிசி (போக்குவரத்துக் கட்டுப்பாட்டு) ஆணை ரத்து செய்யப்படவில்லை. தமிழ் நாடு 1968-ம் ஆண்டு நெல்—அரிசி (போக்குவரத்துக் கட்டுப்பாடு) ஆணை நெல், அரிசி ஆகியவற்றை ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு எடுத்துச் செல்வது குறித்து சில கட்டுப்பாடுகளை விதிக்கிறது. அவ்வாறு எடுத்துச் செல்வதற்கு உரிமையளிக்கும் அனுமதிச் சீட்டு வைத்திருக்காவிட்டால் அதுபற்றி வழக்கு தொடரப்படும் என்றும் அது குறிப்பிடுகிறது, எனவே, அரிசி—நெல் ஆகியவற்றை ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்கு, செல்திறனுள்ள அனுமதிச் சீட்டைத் தொடர்ந்து வைத்து வர வேண்டும் என்பது இதனால் புலனாகும்.

[திரு. ப. உ. சண்முகம்] [1969 ஆகஸ்ட் 22

உரிமம் பெற்ற உணவு தானிய வணிகர்கள் நெல் அல்லது அரிசியை ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு சாலை மூலமாகவோ ரயில் மூலமாகவோ எடுத்துச் செல்ல விரும்பினால் அவர்கள் எடுத்துச் செல்ல விரும்பும் இடத்தைக் குறிப்பிட்டு வட்ட உணவு வழங்கல் அதிகாரிகளிடமிருந்து அனுமதிச் சீட்டு பெறவேண்டும். அனுமதிச் சீட்டின்றி உணவு தானியங்களை எடுத்துச் செல்லும் லாரிகள் கைப்பற்றப்படும். சோதனைச் சாவடிகள் இன்மை, மாவட்டங்களுக்கிடையிலான தடைகளை நீக்கி விட்டது ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொண்டு உணவு தானியங்களை அண்டையிலுள்ள மாநிலங்களுக்குக் கடத்திச் செல்வதையே நோக்கமாகக்கொண்டு மாநில எல்லைப்புறப் பகுதிகளுக்குப் பெரும் அளவில் அரிசி எடுத்துச் செல்லப்படுகிறது என்று புகார் வந்ததனால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த நடவடிக்கைகளினால் மாவட்டங்களுக்கிடையே அரிசி எடுத்துச் செல்லப்படுவதற்கு மீண்டும் கட்டுப்பாடு கொண்டு வரப்பட்டுள்ளது என்று கருத வேண்டியதில்லை.

எல்லைப்புறங்களை விழிப்புடன் கண்காணிக்கும் பொருட்டு குற்றப் புலனாய்வுத் துறையின் கள்ளக்கடத்தல் கண்காணிப்புப் பிரிவை அரசு சீரமைத்துள்ளது. தேவையான சார்நிலைப் பணியாளர்கள், ஜீப் வசதியுடன் காவல்துறை துணைத் தலைவர் பதவி ஒன்றையும் மதுரையில் கூடுதலாகக் காவல் துறை கண்காணிப்பாளர் பதவி ஒன்றையும் ஏற்படுத்தி காவல்துறைப் பிரிவை அரசு மேலும் வலுப்படுத்தியுள்ளது.

மாநில எல்லைகளைச் சுற்றியுள்ள 15 மைல் பகுதி, வரையறுக்கப்பட்ட பகுதியென (Notified area) அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த பகுதிக்குள் உணவு தானியங்கள் எடுத்துச் செல்வது அனுமதிச் சீட்டுகளின் மூலம் முறைப்படுத்தப்படும்.

சோதனைச்சாவடிகளை அகற்றிவிட்டதன் பின்னர் நெல், அரிசி ஆகியவற்றின் விலையில் ஏற்றத்தாழ்வுகள் உள்ளன என்பது இதுவரை கிடைத்துள்ள அறிக்கைகளிலிருந்து தெரிகிறது. வெவ்வேறு மாவட்டங்களில் அரிசி விலை ஒரு நிலைக்கு வரும் அறிகுறிகள் தெரிகின்றன. அடுத்த சில திங்கட்களில் நல்ல மழை பெய்தால் நெல் அதிக அளவில் அங்காடிகளுக்கு வருமென்றும் விலை குறையுமென்றும் பொதுவாகக் கருதப்படுகிறது.

உணவு வழங்கல் சோதனைச்சாவடிகளை எடுத்துவிடுவதாலும், உணவு தானியங்களை எடுத்துச் செல்வது குறித்த கட்டுப்பாடுகளை நீக்கி விட்டதாலும் உணவு தானியங்களின் விலையும் நிலையாக இருக்குமென்பதோடு மாநிலங்களில் நெல், அரிசி ஆகியவை தாராளமாகக் கிடைக்கக்கூடும் என்றும் நம்பப்படுகிறது.

சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டதைப் பயன்படுத்திக் கொண்டு வணிகர்கள் அரிசியிருப்பை முடக்கி வைத்தாலும் பெருமளவில் எல்லைப்புறத்தைத் தாண்டி அரிசியைக் கள்ளத்தனமாகக்



1969 ஆகஸ்ட் 22] [திரு. ப. உ. சண்முகம்]

கடத்திச் செல்வது கண்டுபிடிக்கப்பட்டாலும் நிலைமையை மறு ஆய்வு செய்ய அரசு தயங்காது. நெல், அரிசி ஆகியவற்றின் விலைவாசிப் போக்குகளை அரசு கூர்ந்து கவனித்து வருகிறது. சோதனைச்சாவடிகள் அகற்றப்பட்டதனால் பொதுமக்களின் நலனைப் பாதிக்கும் வகையில் விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படாது என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு நிலைமைக்கேற்ப அரசு மேலும் நடவடிக்கை எடுக்கும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: கொள்முதலுக்கான சரியான கொள்கை இல்லாத நிலையில், மழையும் இல்லாத ஒரு சூழ்நிலையில் இது போன்றதொரு கட்டுப்பாட்டை எடுத்ததின் காரணமாக ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள பல பிரதேசங்களில் எந்தளவிற்கு விலை உயர்ந்திருக்கிறது என்பது கனம் அமைச்சர் அவர்களுக்கும் மிகத் தெட்டத் தெளிவாகத் தெரியும் அல்லவா? இந்த நிலைமையைக் கூர்மையாகக் கண்காணித்து வருகிறோம் என்பது மட்டுமல்ல. ஏற்கனவே இருந்த கட்டுப்பாடு காலத்திலும் கூர்மையாகக் கண்காணித்து வரப்பட்டது. மாநில எல்லைகளில் உள்ள செக் போஸ்ட்கள் உள்ள இடங்களில் ஒரு இடத்திற்குச் சென்றபோது ரூ. 30 கொடுத்ததாகவும் ரூ. 50 கொடுத்தால்தான் சோதனை இல்லாமல் விட முடியும் என்றும் சொல்லத்தக்க அளவிற்குக் கட்டுப்பாடு வந்திருக்கும்போது மாநில எல்லை செக் போஸ்ட்களை மட்டும் நம்பியிருந்தால் அது எந்த அளவிற்கு நல்லமுறையில் இருக்க முடியும் என்று கேட்கிறேன். ஆகவே விலைவாசிகள் உயர்ந்து கொண்டே இருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில், மீண்டும் குறைந்த பட்சம் ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்காவது கொண்டு செல்லக் கூடாது என்ற அடிப்படையிலாவது அந்தக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தக்கூடிய அளவிற்கு அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா?

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: விரிவான அறிக்கை ஒன்றைப் படித்தேன். பிற மாவட்டங்களுக்குச் செல்லும் தடையை நீக்கியதால் சில மாவட்டங்களில் விலை ஏறும், சில மாவட்டங்களில் விலை குறையும். இரண்டையும் இந்த அரசு எதிர்பார்த்துத்தான் இந்தத் தடையை நீக்கியது. அப்படி நீக்கும்போதுகூட தெளிவாக இதை உணர்ந்துதான் நீக்கினோம். இரண்டு வாரங்கள் விலைகள் தடுமாறக்கூடும், பிறகு விலை சரிப்பட்டு விடும் என்ற நம்பிக்கையில்தான் செய்தோம். அதன் விளைவாக இன்றைய தினம் ஏறக்குறைய தமிழ்நாடு எங்கும் ஒரே சீரான நிலை இருப்பதாக எங்களுக்கு வந்திருக்கும் குறிப்புகளிலிருந்து தெரிந்து கொண்டிருக்கிறோம். இதற்கு ஒரு உதாரணம் சொல்லலாம் என்று நினைக்கிறேன். மாடு வைத்திருப்பவர், காலையில் பால் கறக்கும்போது கன்றை அவிழ்த்து விடுகிறார். அப்படி அவிழ்த்து விடப்பட்ட கன்று நேரடியாகத் தாயின் மடிக்கு ஓடுவதில்லை. இரண்டொரு முறை அது துள்ளித் தீர்ந்த பிறகுதான் தாயின் மடிக்குப் போகிறது. அப்படிக் கன்றுக்குட்டி துள்ளி விளையாடுவதுபோல் வியாபாரிகளை அவிழ்த்து விட்டவுடன்

[திரு. ப. உ. சண்முகம்] [1969 ஆகஸ்ட் 22

துள்ளிக்கொண்டு ஓடினார்கள். கன்றை எப்போது இழுத்துப் பிடித்துக் கட்ட வேண்டும் என்பது பால் கறக்கிறவருக்குத் தெரியும். அப்படி எப்போது இழுத்துப் பிடித்துக் கட்டவேண்டும் என்பது அரசுக்குத் தெரியும். அதைத் தவறாமல் செய்யும் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(6) அரசினர் மசோதா.

தமிழ் நாடு 1969-ம் ஆண்டு மின்சாரம் வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) திருத்த மசோதா.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1969-ம் ஆண்டு மின்சாரம் வழங்கு நிறுவனங்கள் (கையகப் படுத்துதல்) திருத்த மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இம் மசோதாவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இம் மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

(7) அரசினர் தீர்மானம்.

தமிழ் நாடு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் திட்ட வரைவின்மீது விவாதம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, "தமிழ் நாடு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் திட்ட வரைவைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்" என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

தலைவர் அவர்களே, ஏற்கெனவே கடந்த மார்ச் திங்கள் ஒரு பெரிய புத்தகம் அச்சடித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது ஒருவேளை மறந்து போயிருக்கும் என்று அதைச் சுருக்கி அதன் சாராம்சங்களை மட்டும் தொகுத்து இப்போதும் கொடுக்கப்பட்டிருக்கிறது. 'An approach to the Fourth Plan' என்று முதல் நான்கு பக்கங்கள் இந்தப் புத்தகத்திலேயே கொடுக்கப்பட்டிருக்கிறது. அது தமிழிலும் இருக்கிறது. அதையும் நான் வைத்திருக்கிறேன். நேரமாகிவிட்டது. "நான்காவது திட்டம் பற்றிய பொது நோக்கு" 'An approach to the Fourth Plan' என்பதில் என் கையெழுத்தும் போடப்பட்டிருக்கிறது. அந்தக் கொள்கை விளக்க உரையை * நான் இந்த மன்றத்தில் நிகழ்த்திய சொற்பொழிவாக, என் சொற்பொழிவின் முதல் பகுதியாகக் கருதி அதைப் பதிவேட்டில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று

* 98-102-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



1969 ஆகஸ்ட் 22] [திரு. கே. ஏ. மதியழகன்]

கேட்டுக்கொண்டு அதிலுள்ள முக்கிய அம்சங்களைப்பற்றி மட்டும் சொல்லி இந்த விவாதத்தைத் தொடங்கி வைக்கலாம் என்று கருதுகிறேன். இத் திட்டம் இங்கு கொடுக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் இது முடியாத ஒரு திட்டமாக இருப்பதால்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது.

நகல் திட்டத்தை அன்றைக்குக் கொடுத்ததற்கு அன்றைக்கு அது முடியாத காரணத்தினால் உங்களது மேலான யோசனைகள், கூறுகிற கருத்துக்கள், இன்னும் இதற்கு இறுதி வடிவம் கொடுக்க மெத்தப் பயன்படும் என்ற காரணத்தால் இந்த விவாதத்தில் நான் மிகவும் உற்சாகம் காட்ட முன் வந்தேன். பொதுவாக, திட்டங்கள் என்பதெல்லாம்கூட, ஏதோ வரையறுக்கப்பட்ட சில சாசனங்கள் அல்ல. கன்டினியூயிங் ப்ராசஸ். நாம் திட்டமிடுகிறோம். அவை சூழ்நிலைக்கேற்ப, சந்தர்ப்பங்களுக்கேற்ப மாறுகின்றன. மாற்றத்தை நாம் விரும்ப வேண்டும். தைரியமாக அவைகளை ஏற்றுக் கொள்ள முன் வர வேண்டும். திட்டங்கள் என்பது வேத ஏடுகள் அல்ல, மாற்றப்படக் கூடாதவை அல்ல. அந்த எண்ணத்திலே நாம் இயட்சியக் குறிக்கோளை, அளவுகளை நோக்கினால் அவ்வப் பொழுது சந்தர்ப்பத்திற்குத் தகுந்தாற்போல், நம்முடைய சமுதாயப் புரட்சியை ஏற்படுத்தி, நாம் வைத்துக்கொண்டிருக்கிற குறிப்பிலே, அவைகளுக்கு மத்தியிலே செய்ய வேண்டியதை மதிப்பீடு செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம். அப்படிப்பட்ட ஒரு மதிப்பீட்டைக் கடந்த காலத்தில், 6 மாத காலத்திலே அந்த மதிப்பீட்டைச் செய்ததன் காரணமாகச் சில குறியீடுகளை நாம் சேரவேண்டிய எல்லைக் கோடுகளை மாற்றியமைத்திருக்கிறோம் என்பதைப் பெருமையோடு இந்த மாமன்றத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தமிழ்நாட்டில் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுக்க வேண்டுமென்ற திட்டம் கூடியமட்டிலே, 1972-ம் வருடத்திற்குள்ளாக எல்லாக் கிராமங்களுக்கும், எல்லாக் குக்கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுக்க வேண்டுமென்பதற்கான திட்டம், இன்றைக்கு இந்தத் திட்டத்திலே செய்யப்பட்ட பெரிய மாறுதலாகும். தமிழ் நாட்டிலுள்ள வறட்சி காரணமாக, படிப்பினை நமக்குச் சொல்லிக் கொடுத்த பாடங்களின் பயனாகத் தமிழ்நாட்டிலேயிருக்கிற எல்லாக் கிராமங்களுக்கும் குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டிய பெரிய மாறுதலைச் செய்திருக்கிறோம். குடிப்பதற்குத் தண்ணீர்கூட கொடுக்க முடியாத அரசாங்கம் போடும் திட்டத்தை ஒரு திட்டம் என்பது தார்மீகப்படிக்கூடத் திட்டம் என்ற நாமத்திலே வைக்கக்கூடிய அருகதையில்லை என்று நான் ஒத்துக் கொள்ளுகிறேன். அது திராவிட முன்னேற்றக் கழகம் தீட்டுகிற திட்டமாகயிருந்தாலும் சரி காங்கிரசார் உருவாக்குகிற திட்டமாகயிருந்தாலும் சரி, அல்லது மதிப்பிற்குரிய கம்யூனிஸ்ட் கட்சி, அல்லது சுதந்திராக் கட்சி அல்லது எந்தக் கட்சியின் பெயராலே இருக்கட்டும், திட்டங்கள் என்று தீட்டிவிட்டு, குடிப்பதற்குக்

[திரு. கே. ஏ. மதியழகன்] [1969 ஆகஸ்ட் 22

கூட தண்ணீர் கொடுக்க முடியாத திட்டமாகயிருந்தால் திட்டமிடுவதற்கு அருகதையில்லை. மாநில அரசாங்கத்தின் திட்டத்தை மட்டும் கருதவில்லை. விவசாய இலாக்காவும், தொழில் இலாக்காவும் வேறு இலாக்காக்களும் தருகின்ற குறிப்புக்களையெல்லாம் ஒன்றாகப் போட்டு வேடிக்கையாக ஜாபிதா உருவாக்குவது திட்டம் அல்ல. திட்டங்கள் என்பது சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கு, குறிப்பிட்ட குறியீட்டு எண்களை வைத்து நாம் போடுகிற கொள்கை விளக்கம்தான். திட்டத்தை எடுத்துக் கொண்டால், மாநிலத்திலே ஒரு திட்டம், இதேபோல் மத்திய அரசாங்கத்திலே ஒரு திட்டம், தனியார் துறையிலே ஒரு திட்டம். இந்த மூன்றும் சேர்ந்து திட்டம். இவைகளைப்பற்றி அடிக்கடி நாம் விமர்சனம் செய்ய வேண்டும். அதனால் என்ன பலன் வந்தது, எவ்வளவு கோடிக்கணக்கான மூலதனம் ஏற்பட்டிருக்கிறது என்று பார்க்க வேண்டும். வளம் என்னவென்று பார்க்க வேண்டும். பலவீனங்கள் என்ன என்பதைப் பார்ப்பதற்கு, விமர்சனத்திற்கு இந்த வாய்ப்புகள் பயன்பட வேண்டுமென்ற கருத்திலேதான் மாமன்றத்திலே இந்த நகல் திட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

கொள்கைகளை வரையறுப்பதிலே 18 வருஷ காலமாகயிருந்த பெரிய கட்சி தவறியதன் காரணத்தினாலே இத்தனை கோளாறுகள், இத்தனை பலவீனங்கள், மந்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இன்றைக்கு இரண்டு விதமாகச் சொல்ல முடியாத அளவிற்கு எல்லோருமே அப்படி முடிவு செய்திருக்கிறார்கள். உதாரணத்திற்காக ஒன்று சொல்லுகிறேன். மாநில, மத்திய சர்க்கார் உறவுகளைப்பற்றிப் பேசுகிறோம். அதிகாரங்களைப்பற்றிப் பேசுகிறோம். திட்டங்களைப்பற்றிப் பேசுகிறோம். திட்டம் போடுவதற்கு முக்கியமான அம்சங்களாகிய **Credit Policy, Fiscal Policy, Foreign exchange** இவைகள் மூன்றும் பொருளாதார அபிவிருத்தியை நிர்ணயிக்கிற அடித்தளமான குறிக்கோளாகும். **Credit policy** பற்றியோ, **Fiscal policy** பற்றியோ, **Foreign exchange** பற்றியோ இந்த மாநில அரசாங்கங்கள் என்பவை பத்திரிகைகளிலே பார்த்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. பெரிய திட்டத்திற்கு மையமான அடித்தளங்களைப் பற்றி டெல்லி நகர பொழுதுபோக்கு நிருபர்களுக்குத் தெரிந்த பிறகு மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்குத் தெரிகிறது. நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில் கூடுகிறது. ஏதோ, வேடிக்கையாக, ஊரிலேயிருக்கிற முதலமைச்சர்களெல்லாம் கூடுகிறார்கள், மாநாடு என்று சொல்லக்கூடிய முறையில் இருக்கிறதே தவிர, கொள்கைகளை நிர்ணயிக்கும் பொழுது எவ்வளவு கடன் வசதி பெறவேண்டும், எந்தமாதிரியான வரிகளைப் போடவேண்டும் என்பதைப்பற்றிச் சொல்வதற்கான வாய்ப்புகள் மாநில அரசாங்கங்களுக்கு இன்றைக்கு இல்லை. நேஷனல் டெவலெப்மெண்ட் கவுன்சில் ஒரு நிரந்தர சபையாக இருக்கவேண்டும், அதற்கு ஒரு செக்ரட்டேரியட் இருக்க வேண்டும், நம்முடைய ஊர் அதிகாரிகள் இருக்க வேண்டும். தொடர்ந்து பல காரியங்களை முடிவு செய்ய வேண்டும். உருவாக்க வேண்டுமென்று வற்புறுத்துவதற்குக் காரணமே இது



1969 ஆகஸ்ட் 22] [திரு. கே. ஏ. மதியழகன்]

தான். இதேமாதிரியாகத் திட்டம் சொல்கிற இலட்சியம் இருக்க வேண்டும். அப்படி லட்சியம் இல்லாமல், இங்குதான் போகப் போகிறோம் என்று தெரியாமல், இந்த ஊருக்குப் போகப் போகிறோம் என்று வழி தெரியாமல் ஆரம்பித்ததன் விளைவுதான், இன்று இப்போது நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்பற்றித் தெரியாமல் இருக்கிறது. ஒவ்வொரு திட்டமும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற வேண்டும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றிச் சொல்லும்பொழுது நம்முடைய திட்டம்பற்றிச் சொல்லவில்லை, மத்திய சர்க்காரின் திட்டம். 1980-ஆம் வருஷத்திலே இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால்; 20 சதவீத மக்கள் மிகவும் ஏழ்மையிலேதான் இருப்பார்கள் என்று இந்தத் திட்டத்திலே போட்டிருக்கிறது. இதற்கு என்ன திட்டம் என்று பெயர்? 1980-ம் வருஷத்திலே 20 சதவீத மக்கள் சாப்பாட்டிற்கு இல்லாமல் இருக்கும்படியான ஒரு நிலை இருக்குமானால் அதற்கு திட்டம் என்று சொல்வதில் என்ன பொருள் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. நான் இதை விமர்சனம் செய்வதற்காகச் சொல்லவில்லை. பல கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்த பிறகும் 20 சதவீத மக்களுக்கு உணவு இல்லை என்று இருப்பதிலே என்ன பொருள்? இந்தக் காரணத்தினாலேதான் இன்று போட்டிருக்கும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வரையீடுகள், மதிப்பீடுகள், அதில் செய்யப்படும் மூலதனம் இவைகளை ஆட்சேபிக்கிறோம். இதை மறுபரிசிலனை செய்ய வேண்டுமென்று மத்திய அரசை நாங்கள் வற்புறுத்தியிருக்கிறோம். இந்த மன்றமும் வற்புறுத்தி உறுதி செய்ய வேண்டுமென்று மனதார விரும்புகிறேன். அதற்கு அப்படிச் செய்ய வேண்டுமென்று சொல்வதற்கு இருக்கும் காரணங்கள், திட்டங்கள் என்பவைகள், **'people-oriented plans'** ஆக மக்களுக்காக இருக்க வேண்டும். எந்தவொரு திட்டமாகயிருந்தாலும், திட்டங்கள் என்பது, புள்ளிவிவரங்கள் என்பவைகள் பண்ணைகள் அல்ல, வேடிக்கையாக நிபுணர்கள் சேர்ந்துகொண்டு ஆராய்ச்சி செய்யும் நிலையம் அல்ல. அந்தத் திட்டங்களை மக்கள் நம்ப மாட்டார்கள். திட்டங்கள் என்றால், அவைகள் வாழ்க்கையின் அத்தியாவசியத் தேவைகளை, உணவு அளிப்பதை, உடை அளிப்பதை, குடியிருக்க வீடு கொடுப்பதை, மருந்து கொடுப்பதை, வேலை வாய்ப்பு கொடுப்பதை, உற்பத்தித் திறனும், உழைப்பிற்கான பலன்களைக் கண்ணெதிராக உடனடியாகக் கொடுப்பவைகளைத்தான் திட்டம் என்று ஏற்றுக்கொள்வார்கள், மற்றவைகளை வேடிக்கையாகச் செய்கிற குறிப்புகள்தான் என்று கருதுவார்கள். இன்றைக்கிருக்கும் திட்டங்கள் மனிதனைப் பார்க்கவில்லை. தொழிற்சாலையைப் பார்த்திருக்கிறதே தவிர, மனிதனுக்கு முழுவாழ்வு தரக்கூடிய வகையில் அமையவில்லை. இன்றைக்கு, இந்தத் திட்டங்களை இந்த அளவிலே பார்ப்பதற்குப் பதிலாக, உற்பத்தித் திறனையும், ஏற்பட்ட செலவுகளையும், எப்படிப் பகிர்ந்து கொடுப்பது என்பதையும், எவ்வளவு உற்பத்தி வந்திருக்கிறது என்று இந்தக் கணக்கைத்தான் போட்டுக் கொண்டிருக்கிறோமே தவிர, நாட்டிலே

ஏற்பட்ட அதிகரிப்புச் செலவும், ஏழை எளிய மக்களுக்கு, சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களுக்கு எப்படிப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது என்பதற்கும் வாய்ப்பில்லை. இதே போலிருந்தால், மக்களுக்கும் திட்டங்களுக்கும் என்ன சம்பந்தம்? தங்களுக்கு இந்த அடிப்படை வசதிகளைக் கொடுக்கவில்லை என்ற எண்ணத்தில் மக்கள் உணர்வற்றிருக்கிறார்கள், சம்பந்தப்படுத்திக் கொள்ளவில்லை. அவர்களைக் கிளர்ந்தெழச் செய்ய வேண்டும், புதிய சமுதாயமாக மாற்றி, அவர்களின் உழைப்பை, ஆற்றலை, இன்பத்தைப் பெருக்கச் செய்வதற்கு நாம் புரட்சிக் கதாபாத்திரங்கள் என்ற உணர்வை எழுப்ப வேண்டும். இருபதாண்டுக் காலமாக நாம் எழுச்சியைத் தரவில்லை. இந்த எழுச்சியை தூண்டுவதற்கானத் திட்டங்களாக இன்று வருகிற திட்டங்கள் அமைய வேண்டும்.

இன்றைக்குத் தனியார் துறையைப் பொறுத்தவரையிலே தனியார் துறையை ஆதரிப்பது அல்ல இந்த அரசு. ஆனால் பொதுத் துறைக்கு ஊனம் வராத வகையிலே தனியார் துறையினும் சில இடங்களிலே சில விதமான நம்பிக்கைகளைக் கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் முன் வரும் என்பதைத்தான் என்னுடைய உரையிலே தனியாகக் கூறி இருக்கிறேன். இன்றைக்கு முக்கியமான அம்சம் மத்திய அரசாங்கத்திலே இருக்கிற பொதுத்துறை. இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையிலே தமிழ் நாடு அரசுக்கு நிரம்பக் கவலை தருவது, இந்தப் பொதுத் துறையிலே நம்முடைய மாநிலத்திற்கு வருவது ஒன்று கூட எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பது, சேலம் ஸ்டீல் பிளாண்ட், சேது சமுத்திரம் திட்டம், அதே மாதிரியாக செக்கண்ட் மைன் கட், நெய்வேலி; பெட்ரோ-கெமிக்கல் பிளாண்ட், கல்பாக்கம் செகண்ட் ஸ்டேஜ் என்ற இந்த திட்டங்கள் இந்த திட்டத்திலே சேர்க்கப்பட்டால்தான் இன்னும் குறைந்தது 10 வருடத்திற்குள்ளாவது இவை உருவாவதற்கான சூழ்நிலை ஏற்படும். இன்றைக்கே இவைகளைத் தள்ளி வைக்கிறோம் என்றால் இன்னும் 15 வருடத்திற்கு இவைகளைத் தள்ளி வைக்கிறோம் என்றுதான் பொருள். இதிலே மத்திய அரசினுடைய போக்கு, திட்டத்திலே இவைகள் இடம் பெறாதது, மாநில அரசுக்குக் கவலையை அளிக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுக்கப்படுகிற நேரத்திலே இவைகள் வரவேண்டுமென்பதற்காக இந்த மாமன்றம் வற்புறுத்த வேண்டும்.

நிதி ஆதாரங்களைப் பற்றிப் பேசப்படுகின்றது. இதுவும் அப்படித்தான். மாவுக்குத் தகுந்த தோசை செய்கிறார்கள், மாவை எப்படிச் செய்ய வேண்டுமென்பதற்கான ஆதாரங்களைத் தேடாமல், அதைப் பெருக்க. . . . . (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர் மாவு இல்லாமலே தோசை செய்யமுடியுமென்கிறார்கள். ஒருவேளை கம்பன் கண்ட . . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** மாவு இல்லாமல் தோசை சுட முடியுமா? மாவுக்கு ஏற்ற தோசைதான் சுடவேண்டும் என்றேன்.





**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** என்னுடைய கவலை எல்லாம் 20 ஆண்டு காலமாக, இந்தத் திட்டங்களைத் தீட்டுவதற்கு வாய்ப்பாக அதிகாரத்திலே இருந்த கட்சி, அல்லது அந்த கட்சியினுடைய தலைமையின் ஊசலாட்டமான போக்குகள், அதனுடைய பலவீனமான, சஞ்சலமான கொள்கைகள், இவைகள் தான் இன்றைக்கு நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கு எதிராக இருக்கின்றன என்பதேயாகும். அதுதான் காரணம் என்று நான் பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறேன். அதற்கு இருக்கிற காரணம் மந்தம் என்று சொல்கிறோம். விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. இவ்வளவு பெரிய உற்பத்தி, உற்பத்தி என்று புள்ளி விவரங்கள் தான் உற்பத்தி ஆகியிருக்கின்றனவே தவிர, ஏராளமான, பம்பர் கிராப், அமோக விளைச்சல் என்று சொல்கிறோம். இன்னொரு பக்கத்திலே விலைவாசி ஏறுகிறது நாட்டிலே என்று எல்லாவிதமான எல்லா பக்கங்களிலும் கவன ஈர்ப்புத் தீர்மானம் வருகிறது. ஒரு பக்கத்திலே தொழிலாளி-முதலாளி உறவுமுறைகளைப் பற்றிப் பேசுகிறோம். இன்னொரு பக்கத்திலே வேலை நிறுத்தம், லாக்-அவுட் வருகிறது. ஒரு பக்கத்திலே மாநில அரசு மத்திய அரசு உறவைப் பற்றிப் பேசுகிறோம். மத்திய அரசினுடைய டெஃபிஸிட் பினான்ஸிங்கினாலே, வரிகளைப் போடுவதால் விலை ஒரு பக்கம் ஏறுகிறது. டியர்னஸ் அலவன்ஸ் கொடுக்கிறார்கள். மத்திய அரசு ஊழியர்களுக்கு அவர்கள் டியர்னஸ் அலவன்ஸ் கொடுக்கும்போது நம்மவர்களுக்குக் கொடுத்த பணம் கேட்டால் இல்லையென்று சொல்லுகிறார்கள். நான் உறவுகளைப்பற்றி சொல்கிறேன். இந்தத் திட்டங்கள் ஊசலாட்டமான, பலவீனங்களாலே ஆக்கப்பட்டிருப்பதனாலே மத்திய அரசினுடைய வரிக்கொள்கை பாதிக்கப்பட்டிருக்கிறது. விலைவாசி ஏறுவதால் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் தகராறு வருகிறது. மாநில அரசுக்கும் அவர்கள் ஊழியர்களுக்குமே தகராறு வருகிறது. இப்படி சமூகப் பிரச்சினைகளாக உருவாகிறவை இந்தக் கொள்கையினாலேதான். இப்படித் திட்டமிட்டிருக்கிறோமே. பெரிய மாறுதல் என்று சொல்லி 20 ஆண்டுக் காலம் நிலச் சீர்திருத்தம் செய்தார்கள். இன்றைக்கு குடியானவன், நிலத்திலே உழுகிறவன் எந்த அளவுக்குப் பலன் பெற்றான்? தொழிலாளர் நலன்களுக்காகப் பல காரியங்களைச் செய்கிறோம் என்று சொன்னார்கள். அந்த நிலங்கள் எல்லாம் யாருக்குப் போய்ச் சேர்ந்தன? நாட்டிலே இருக்கிற 75 பெரிய குடும்பக்காரர்களுக்கும் வெளிநாட்டிலே இருக்கிறவர்களுக்கும் அருமையான கலப்புத் திருமணம் போல கிடைத்திருக்கிறதே தவிர, 20 ஆண்டுகளிலே என்ன பயன் ஏற்பட்டது என்பதை சரியாகச் சொல்லமுடியவில்லை. வர்த்தகர்கள் இருக்கிறார்கள், நாம் பேசுகிறோம், கள்ளக் கடத்தலைப்பற்றி பேசுகிறோம், விலைவாசி உயர்வைப் பற்றிப் பேசுகிறோம், பிளாக் மார்க்கெட்டைப் பற்றிப் பேசுகிறோம், இந்த நாட்டிலே விலைவாசியைக் குறைக்க வேண்டும், உற்பத்தியான பொருள்கள் எல்லாம் சாதாரண, பாமர மக்கள் நியாயமான விலையில் வாங்க வேண்டுமென்று சொல்லுகிற நேரத்தில், வர்த்தகச் சூதாடிகளிடத்திலும், கள்ள

மார்க்கெட்காரர்களிடத்திலும், வரியை ஏய்ப்பவர்களிடத்திலும் சமுதாயத்திலே அரசாங்கத்தை பொம்மையாக ஆட்டுவிப்பவரிடத்திலும்தான் பலன்கள் போய் விட்டனவே தவிர, இன்றைக்கு சாதாரண மக்கள் இந்த பலன்களை அடைய முடிந்ததா என்றே நான் கேட்க விரும்புகிறேன். நாட்டு மக்களுடைய அடிப்படைத் தேவைகளை ஆராயக் கடமைப்பட்டிருக்கிறேன். நிதி ஆதாரங்கள் வேண்டும், வேண்டும் என்று நாம் கேட்கிறோம்.

ஏன் இவ்வளவு காலமாகக் காரியங்கள் செய்யப்படவில்லை? பாங்குகளைத் தேசியமயமாக்கவேண்டுமென்று நான் சேர்ந்திருக்கிற கட்சி தன்னுடைய தேர்தல் அறிக்கையிலே பிரகடனம் செய்தது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் முதலமைச்சர்கள் மாநாட்டிலே டெல்லியிலே, பாங்குகளை தேசியமயமாக்க வேண்டுமென்று அழுத்தமாக வற்புறுத்தினார்கள். நல்லகாலம், இன்றைக்கு ஏதோ தோற்றம் மாறி இருக்கிறது. அம்மையார் அவர்கள், பிரதம மந்திரி அவர்கள் தேசியமயமாக்க முன்வந்திருக்கிறார்கள். (குறுக்கீடு) வாழ்க என்று நான் சொல்கிறேன். நல்லதுதான். ஆனால், பாங்குகள் தேசியமயமானது இன்றைக்கு சர்வரோக நிவாரணி அல்ல. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கடிதாசி எழுதினார்கள். அம்மையார் அவர்கள் பதில் எழுதி இருக்கிறார்கள். அரசியல் சூதாட்டத்திற்கு, யாருக்கும் மகுடாபிஷேகம் நடத்துவதற்கு என்பதற்கான வாய்ப்பாக இது கருதப்படுமானால் இந்த நாட்டு மக்கள் மன்னிக்க மாட்டார்கள். பிரதம மந்திரி இந்திராகாந்தி அவர்களுக்குத் தமிழகத்தின் சார்பிலே இதை எடுத்துச் சொல்லி இருக்கிறோம். இன்றைக்கு ரூ. 2,500 கோடி சில பேரிடத்திலே அகப்பட்டு ஏகபோகமாக இருக்கிறது என்றால் அது மாறியாக வேண்டும், மாற்றிவிட்டோம். ஆகவே, தேசியமயமாக்கப்பட்ட பிறகு, மாநிலங்களினுடைய நலன்களுக்கு வழிவகைகள் செய்யப்படவேண்டும். அதுவும் இன்னொரு இன்ஷூரன்ஸ் கம்பெனியாகி விடக் கூடாது. எல். ஐ. சி. போல் ஆகிவிடக் கூடாது. மெக்கா, ஜெரூசலம் போல, அந்தப் புனித ஸ்தலங்கள் போல, பம்பாய் மாநிலத்திலேதான் இருக்கிறது, டெல்லி மாநிலத்திலேதான் இருக்கிறது, வர்த்தகக் குடும்பங்கள். ஏற்கெனவே இருக்கிற வர்த்தகக் குடும்பங்கள் கையிலே இந்த அதிகாரங்கள் சிக்கிவிடக் கூடாது. நம்முடைய மாநிலத்தினுடைய வளர்ச்சிகளைப் பிரதிபலிப்பதாக இந்த பாங்குகள் தேசியமயம் இருக்க வேண்டும்.

அதே மாதிரி உற்பத்திச் சாதனங்களை தேசியமயமாக்கி இருக்கலாம். எத்தனை மாதிரியான வாய்ப்புகள் எல்லாம் இருக்கின்றன? இலாபத்திற்கு ஒரு உச்ச வரம்பு என்று வைத்திருக்கலாம். ஏற்றுமதி இறக்குமதி வியாபாரங்களை, வெளிநாட்டு வர்த்தகங்களை தேசியமயமாக்கியிருக்கலாம். இதற்கான வாய்ப்புகள் இன்றைக்குத் தோற்றுவிக்கப்படுகின்றன. இவைகளையெல்லாம் 18 ஆண்டுகளாகச் செய்யாமல் தாமதப்படுத்திவிட்டோம். மீண்டும் தாமதப்படுத்த வேண்டாம் என்பதற்காகத் தான் சொல்கிறேன்.



மேல்சபையிலே ஒரு சாமியார், ஒரு தம்பிரான் உணவு தானிய வர்த்தகத்தையேகூட தேசியமயமாக்கவேண்டும். அரசு வாணிகமாக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார். குன்றக்குடி அடிகளார்தான் அவ்வாறு கூறியிருக்கிறார். நான் ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், அப்படிச் சாமியார்கள், மடத்திலே இருப்பவர்கள் எல்லாம் வந்து சொல்லுகிற அளவுக்கு இன்றைக்கு ஒரு புரட்சிகரமான கொள்கை உருவாகியிருக்கிறது. இவைகள் எல்லாம் 18, 20 வருஷங்களாகக் காலதாமதப்படுத்தப்பட்டன. இவைகளுக்கான வாய்ப்புகளை ஏற்கனவே பெற்றிருக்க வேண்டும்.

நம்முடைய மறைந்த மாண்புமிகு பேரறிஞர் அண்ணா அவர்கள் இரண்டு—மூன்று யோசனைகளைச் சொன்னார்கள். பாதுகாப்புக்கான செலவுகளை, அங்கு விரயமாகிற செலவுகளை குறைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டதா? அதேமாதிரி பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் செலவுகளை எல்லாம் குறைக்கவேண்டும். டூப்ளிசிட்டி இன் அட்மினிஸ்ட்ரேஷன், சில இரட்டை முறைகள், இவைகளையும் போக்கவேண்டும். இங்கே ஒரு கல்வித் துறை, அங்கே ஒரு கல்வித் துறை; இங்கே ஒரு சுகாதாரத் துறை, அங்கே ஒரு சுகாதாரத் துறை; இங்கே ஒரு பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட், அங்கே ஒரு பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட். கன்கரன்ட்லிஸ்டு என்று வைத்திருக்கிறார்கள். 'கன்கரன்டை' மாற்றச் சொல்லவில்லை. இந்த நிலைமைகள் எல்லாம் ஏழைகளைச் சிரமப்படுத்துகின்றன. இதற்கெல்லாம், குடிதண்ணீர் இல்லை என்று பொருள், மருந்து இல்லை என்று பொருள், சமுதாயம் சீர் செய்யப்படவில்லை என்று பொருள். இந்த யோசனைகளை எல்லாம் அவர்கள் சொன்னார்கள். அவைகள் எல்லாம் எடுத்துக் கொள்ளப்படவே இல்லை. அவைகளுக்கான வாய்ப்புகளை நாம் ஆராயவே இல்லை.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் இருக்கின்றன. பொதுத் துறையிலே நெய்வேலி நிலக்கரி தொழிற்சாலை இருக்கிறது. அதையெல்லாம் நம்மிடத்திலே கொடுத்துவிடலாம். அந்தந்த மாநிலத்திலே இன்னும் நிரம்ப நல்ல வகையிலே நிர்வாகம் செய்யலாம். இன்னும் இலாபம் பெறலாம். இப்படிப்பட்ட ஒரு நிலையை இன்றைக்கு மத்திய அரசு செய்ய வேண்டும். அதேமாதிரிதான் இந்த கொள்கைகள் மாறவேண்டியிருக்கின்றன. நான் இந்த செயற்குறிப்பிலே ஒரு பகுதியிலே கூட கருத்து தெரிவித்திருக்கிறேன். இவைகளைச் செயல்படுத்துவதற்கு நம்முடைய நிர்வாக இயந்திரம் சீர்திருத்தப்படவேண்டும். அது என்னுடைய முன்னுரையிலே இல்லை. நம்முடைய நிர்வாக இயந்திரமே கூட நன்றாகச் செயல்படவேண்டும். அதற்காகத்தான் ரெவினியூ போர்டை எல்லாம் எடுத்து விட வேண்டுமென்று திட்டம் தீட்டினோம். இவைகளையெல்லாம் இந்த திட்டத்திலே வருகிற அம்சங்கள்கான். இந்தப் பகுதியையும் என்னுடைய உரையிலே இணைத்துக் கொள்ளலாம். அரசியல்வாதிகள் இதிலே சேரவே கூடாது என்று ஒரு வாதம். இது இன்னொரு முக்கியமான அம்சம். கலெக்டர்கள் என்றால் தனி என்றெல்லாம் இருப்பதாலே தான் இவ்வளவு கோடிக்

கணக்காகப் போய்விட்டது. அரசியல்வாதிகளை விட்டுவிட்டு வேறு யார் இந்த நாட்டிலே இன்றைக்கு திட்டத்தை செயல்படுத்துகிறார்கள்? சமூக, பொருளாதார, எல்லாவிதமான திட்டங்களையும் தீட்டுவது அரசியல்வாதிகள் தான். மடாதிபதிகளா, மகந்துகளா, சாமியார்களா? வேறு எங்கோ தவம் செய்துகொண்டிருப்பவர்களா, அல்லது கற்பனையில் இருப்பவர்களா தீட்டுகிறார்கள்? அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆனால் அரசியல்வாதிகள் தான் மக்களின் எண்ணத்தைப் பிரதிபலிக்கிறார்கள், திட்டத்தைத் தீட்டுகிறார்கள். நீங்களும் அரசியல்வாதிகள்தான், நாங்களும் அரசியல்வாதிதான். "மேன் ஈஸ் எ பொலிடிகல் அனிமல்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அரிஸ்டாடல் சொன்னார்கள். அனாதிகாலத்திலிருந்தே சொன்னார்கள். இன்றைக்கு 20 ஆண்டு காலமாக இந்த உயிர் சக்தியான திட்டங்கள், ஜீவ சக்தியான திட்டங்கள் நல்ல நிலைமையில் வருவதில்லை. அரசியல்வாதிகள் இதில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. திட்டத்தை உருவாக்குகின்ற நேரத்தில் அரசியல்வாதிகள் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. அரசியல்வாதிகள் என்றால், எந்தக் கட்சியில் இருந்தாலும் சரி, கதர் சட்டை போட்ட கட்சியாக இருந்தாலும் சரி, கைத்தறிச் சட்டை போட்ட கட்சியாக இருந்தாலும் சரி, அந்தந்த இடங்களில் இருக்கிற மக்களுடைய எண்ணங்களைப் பிரதிபலிப்பவர்கள் இந்த அரசியல்வாதிகள் தான். அதிகாரிகளுக்கு இந்த மாற்றம் ஏற்படவேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேன். நான் உறுதியாகச் சொல்லுகிறேன், பொலிடிகல் விங்தான் இந்தத் திட்டங்களைத் தீட்ட முடியும். அவர்களிடையேதான் மக்களுடைய எண்ணங்கள், ஆர்வங்கள் பிரதிபலிக்க முடியும் வட்டச் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்து யூனியன்களில் இருப்பவர்கள் இவர்களிடையே தான் திட்டத்தைப்பற்றிய எண்ணங்கள் இருக்கும்.

நான் ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சொல்கிறேன் என்று நினைக்கவேண்டியதில்லை. ஏதோ ஒரு பெரிய விஷயம் அகப்பட்டுக் கொண்டு விட்டதுபோல் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கருதிக்கொள்ளத் தேவையில்லை. பீபிள்ஸ் பார்டிஸிபேஷன் என்றெல்லாம் டெல்லியிலுள்ள தலைவர்கள் ரொம்பப் பெருமையாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். பீபிள் என்றால் யார்? ஒன்றுக்கும் உதவாதவர்களா பீபிள்? சமூகத்திலுள்ள எண்ணங்கள், ஆர்வங்கள் அவர்களிடத்திலேயும், அவர்களுடைய பிரதிநிதிகளிடத்திலேயும் தான் பிரதிபலிக்கின்றன. அதிகாரிகள் இருக்கிறார்கள், கலெக்டர் இருக்கிறார், தாசில்தார் இருக்கிறார். என்ஜினீயர் இருக்கிறார். மக்களுடைய பிரதிநிதிகளிடையே உள்ள எண்ணங்களை நிறைவேற்றவேண்டும். ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான மக்கள் பங்கு கொள்கிற பெரிய ஒரு புரட்சிகரமான இயக்கமாக இந்தத் திட்டம் மாறவேண்டும். இல்லாவிட்டால், 10, 15 பஞ்சாங்கமாகத்தான் இருக்கும். இதிலே





ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. திட்டம் போட்டோம். ரூ. 624 கோடிக்குப் போட்டோம். என்ன ஆயிற்று? திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முகூர்த்தம் வைப்பதற்கு இன்னும் நாள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதைக் கூடக் குறைத்துவிட்டார்கள். ரூ. 215 கோடிக்கு நாம் செலவு செய்யவேண்டும். மத்திய அரசு ரூ. 202 கோடி உதவி செய்வதாக இருக்கிறார்கள். நாம் ரூ. 85 கோடிக்கு எப்படியாவது பார்த்து ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். மொத்தம் ரூ. 502 கோடியாகிறது. ரூ. 624 கோடி அளவுக்கு முடியாமல் இருக்கிறது. ரூ. 575 கோடி அளவுக்காவது இருக்கவேண்டும் என்று நாம் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். இறுதி முடிவு எடுக்கவில்லை. உங்களுடைய தயவு செய்திருக்குமானால், உங்களுடைய நல்ல செல்வாக்கு, நல்லெண்ணம் இருக்குமானால், இது கொஞ்சம் அதிகமாகும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

பாங்குகள் நாஷனலைஸ் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளில் இருக்கிற பணத்திற்கும் நாம் கணக்கு பெற்றுக்கொள்ளவேண்டும். நம்முடைய பிரதம மந்திரி அவர்கள்--எல்லோருக்கும் தான், இந்த நாட்டிற்கே தான் அவர் பிரதம மந்திரி—பாங்குகளை தேசியமயமாக்கியது ஒரு முற்போக்கான செயல். ஆனால், காலம் கடந்ததுதான். பரவாயில்லை. அந்த அம்மாள் தைரியமாகப் பாங்குகளை நாஷனலைஸ் செய்துவிட்டார்கள்.

THIRU K. VINAYAKAM : I do not want the Hon. Minister to give a wrong impression, to the public. It is not the Prime Minister that is responsible. It is the party that is behind her namely the All-India Congress Committee which met at Bangalore and which resolved unanimously to direct her to take over all these banks under nationalisation. It is the prerogative of the party that is in power. We gave the direction and she implemented it. Let her not run away with the feeling that she alone is responsible for nationalisation of banks. Let not the Finance Minister here also back her up.

திரு. என். சங்கரய்யா: காங்கிரஸ் கட்சிதான் இதற்குப் பொறுப்பு என்று சொல்லவேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள். ஆனால், காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. நிஜலிங்கப்பா அவர்கள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் பெங்களூரில் நடந்த பிறகு டெல்லியில் நடந்த ரோட்டரி கிளப் கூட்டத்தில்

**The Congress Party is in no hurry to nationalise banks.**

என்று பகிரங்கமாகக் கூறியிருக்கிறார்கள். அப்படியானால் காங்கிரஸ் கட்சி அதற்கு எவ்வாறு பொறுப்பாகும்?

திரு. பி. ஜி. கருத்திருமன்: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், நிஜலிங்கப்பா அவர்கள் டெல்லியில் சொன்னார்கள் என்று கூறினார்கள். முதலில் முதல் அமைச்சர் அவர்கள் காபினட் எக்ஸ்பான்ஷன் இல்லை என்று சொன்னார்கள். அடுத்த நாள் மூன்று அமைச்சர்களைப் போட்டார்கள். அது எந்த முறையில்?

[Thiru K. Vinayakam] [1969 ஆகஸ்ட் 22

Our first concern must be agriculture. The greatest culture as far as I am concerned is agriculture. Agriculture must be revolutionised. You are only talking of the green revolution. You are saying that double-cropping is an innovation by the party that is now in power. Double-cropping was there even before Adam and Eve. From the time the people knew anything about agriculture, this double-cropping had been there. Don't tell us that the high yielding variety has been discovered by you. Who discovered ADT 27? Did you discover it? The Congress Party when it was in power conducted a series of experiments at Aduthurai and finally arrived at ADT 27. You want the people and the country to believe that you have discovered ADT 27, CO 2, and IR 8. This is not the way to mislead the people. First you should advise your own Leftist Friends who have taken up the cudgels against the use of tractors.

*திரு. என். சங்கரய்யா:* கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த நாங்கள் விஞ்ஞான முன்னேற்றத்திற்குத் தடையாக இல்லை. அதே சமயத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி நாட்டில் மக்கள் வறுமையில் வாடும் நிலை வரக்கூடாது என்பதற்காக ஆட்சேபிக்கிறோம். வேலை வாய்ப்பை அளிக்கும் இதர திட்டங்களை மேற்கொண்டால் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை.

*திரு. கே. விநயகம்:* வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவது நம் கொள்கைதான். ஆயினும் உற்பத்திப் பெருக்கம் மிக முக்கியமானது. இந்த நிலையில் உற்பத்திப் பெருக்கத்தைத் தடைசெய்யும் இந்தப் போராட்டத்தைவிட வேறு அநியாயம் இந்த நாட்டில் எதுவும் கிடையாது என்பது என்னுடைய கருத்து. You can find alternative jobs for those who will be thrown out of employment on account of the use of tractors. That is a different thing.

THE HON. THIRU SI PA. ADITANAR: On a point of clarification. The hon. and learned Member said that double cropping was in existence even before Adam and Eve were born. If double-cropping was in existence before Adam and Eve, who did the double-cropping?

THIRU K. VINAYAKAM: My friend Mr. Aditan, I thought, is a very well read, educated man who will appreciate a saying from the Biblical days. When we want to refer to anything ancient, we use the expression 'Adam and Eve'. It does not mean that double-cropping was in existence during the time of Adam and Eve, and that we, Mr. Aditanar and Vinayakam, are their grand-children!

*திரு. மு. ச. சிவசாமி:* கூட்டுறவு அமைச்சர் பெயர் திரு. ஆதித்தனார் என்றே ரெக்கார்டுகளில் இருக்கின்றது. அதை வேறு விதமாகச் சொல்லலாமா என்பது என் கேள்வி.



1969 ஆகஸ்ட் 22]

*திரு. கே. விநயகம்:* 'னார்' வேண்டுமென்றாலும் சேர்த்துக் கொள்ளுங்கள். என்னுடைய பழைய நண்பர் என்ற முறையில் ஆதித்தன் என்று சொன்னேன். உங்களோடு சேர்ந்த பிறகு 'னார்' சேர்ந்து விட்டது. ஆதித்தனார் என்று வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளலாம்.

Let us not waste our time on this.

As far as industrial development of the State is concerned, the party that is in power has well pointed out to the Centre that the Salem steel plant is very important and that it has got to be included in this Plan. There is no mincing as far as this matter is concerned. The Congress Government when it was in power initiated the entire proceeding with regard to the availability of iron content in the Salem ore and the establishment of the Salem steel plant. Now that you are in power, you have got to urge the Central Government to take it up in the Fourth Five Year Plan itself with its own resources. I have given notice of an amendment to the motion. I hope the House is in possession of it. It reads as follows:

Add at the end the following:

"and after such consideration this House recommends to the State Government to urge upon the Central Government to take up the implementation of Salem Steel Plant immediately in the first year of the Fourth Five Year Plan with its own resources." We must urge upon them to spend. We should not complain afterwards: 'They have refused. They have promised the Steel plant to the people. Why should we not throw away our money?' That should not be our attitude. If you have any influence with the Centre, you should try to get the steel plant implemented during the Fourth Plan period. Never mind about your charges against the Centre. The party in power has been saying that the North is not doing it, the Central Government is not very helpful to us, the Central Government refuses everything and they do not come to our aid. That is a slogan with which I am tired. There are many industries which you could have started within your own limits, with the capacity and finances available with you. We have been suggesting year in and year out on the floor of this House that many industries could be started. They may not be heavy industries, but large-scale and small-scale industries. What is the balance sheet of your administration? How many industries have you started from the day you assumed office? You cannot boast of even one. On the other hand you have been saying that private enterpreneurs have applied and that thirteen applications are pending. Which private individual will come forward to start an industry in your regime? There is no law and order in the State. The moment anybody comes forward to invest 20 lakhs or 30 lakhs, there are your colleagues to create trouble. Gheraoing, which was far away in West Bengal, has come into vogue. The moment any individual starts an industry in the interests of the State and the country, a labour union is started. I start one, you start one and our Friends o fthe Communist Party start one, we quarrel among ourselves, the police does not come to our aid, the capitalist is terrorised

1969 ஆகஸ்ட் 22] [பேரவைத் தலைவர்]

இருக்கிறார்கள். ஆகவே, உறுப்பினர்கள் தங்களுடைய நேரத்தை எவ்வளவு குறைத்துக்கொள்ள முடியுமோ அவ்வளவு குறைத்துக் கொண்டால் நல்லது. திரு. விநாயகம் அவர்கள் 20 நிமிட நேரம் பேசுவார்கள்.

THIRU K. VINAYAKAM : Mr. Speaker, Sir, I have very great pleasure in joining this discussion about the draft Fourth Five-Year Plan of our State. I would like to congratulate the department for having produced a big bulky volume which details many aspects of our plan and at the same time for having produced a summary, just on the eve of this discussion, to enable members to have a cursory view of the entire perspective before us.

I am not one of those who is against planning. As a great economist had pointed out in the past " either we plan or we must be prepared to perish ". There is nothing wrong of the authors who conceived of this Plan. What is the close link between the plan and the party in power here? The party in power here have a egalitarian society in perspective. They gave an impression to the public that the moment they came to power, everything will be available in plenty for the mere asking, that prices will come down the moment they step into the legislature. But what do we find now. Prices are soaring up. After creating that grandiose impression among the people, after giving them a perspective or egalitarian society. They came to power ; I mean the D.M.K. came to power. Believing their promises, they were voted to power by the people. They must know what was the condition of the people when they took over power in this State? Have the promises been fulfilled? No. It has come to shibboleth. What is the economic condition of the people? Have they now plenty? Have they the rudimentary necessities like food, clothing and houses to live in? We must look at that picture, as an economist. I know the Hon. Finance Minister is a student of economics. He has studied economics well. It is not politics that he should talk but he should look at this question from economic point of view, and not as though what all we had done are wrong. I am not arguing here as a politician but as an economist. While offering my criticism, I am doing so as an economist would have done, faced with the present problem. That is why I say, this party gave a wrong impression to the people, they promised them grandiose things. They promised the people that they will get anything for the more asking, that they will have good water, that they will have enough food, clothing etc. But when they come to realities, when they begin to actually administer things, they find it difficult. Talking to illiterate men in platform is one thing. But when you actually are beset with governmental work, when you come to realities, what is the position now? What has this Government been able to do and what is it they had done? Government is a continuous affair. Yesterday we were here, today you are here and tomorrow somebody will be there. It is a continuous process. Similarly planning is a continuous process. Planning is done for the entire nation and not for one State alone. The entire nation's perspective must be before us when we talk of planning. You said that you will change the entire plan when you come to power. Now you want a plan for Rs. 600



1969 ஆகஸ்ட் 22] [Thiru K. Vinayakam]

crores. But how much money you have locked up in your pet cshemes ? You are wasting so much money in the one rupee measure rice scheme. It is because you promised the unenlightened public that the moment you come to power, you will give rice at one rupee per measure to one and all ? You are now clinging to that scheme ? But at whose cost ? At the cost of the exchequer of our State. Rs. 10 crores will be the money that will be going into the drains for this pet concept of your planning viz., one rupee a measure scheme. You have your own views just as I have my own views. You are deceiving the people.

THE HON. THIRU SI. PA. ADITANAR : May I seek a clarification ? Is the hon. Member speaking according to his conscience or according to his party dictates ? He is advocating costly rice. The D.M.K. is wedded to the principle of cheap rice, cheap food. My learned friend is advocating higher price for rice, for costly rice and costly food. May I know whether in this aspect, he is talking according to his conscience or according to his party dictates ?

THIRU K. VINAYAKAM : As I have said in the beginning, I am talking as an economist. An economist has no conscience. It is only the politician that has conscience. I know how you stand to gain by leaning to the party at Delhi.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அரசியல்வாதி இல்லையா?

THIRU K. VINAYAKAM : I am looking at this problem as an economist would consider it. When I am on my legs, I have forgotten I am a politician.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பொருளாதாரம் உங்கள் அரசியலை ஒட்டியதும் இல்லையா?

THIRU K. VINAYAKAM : That is not your concern.

There is a talk of regional imbalances in our country. Who could help this, Sir? These imbalances were there for the past forty or fifty years and they have not been ushered in suddenly. Even when the Britishers were ruling, there were only three States which were forward in the matter of industries, Bombay and Bengal and Madras came last. In the last twenty years we have brought Madras to a place of equality on the economic map of India. We are minimising the effect of the regional imbalances and we ourselves initiated discussion with the Centre that the State should be put on a proper economic basis.

[திரு. செஞ்சி வெ. முனுசாமி—தலைமை]

Now I come to the financial commitment. The late Chief Minister Thiru C. N. Annadurai wanted the write-off of some loans. I understand that. But are we succeeding? You should take up the matter with the Finance Minister of the Centre, with whom you are in a position to have your own way and try to convince her that this request should be granted. Our State is after all an agricultural State primarily. We are now trying to convert it into an industrial State also if possible.

and he wants to give it up. That is the position obtaining in our country. You must create a suitable environment for the enterpreneurs to sink money and start industries. Are we to be happy that he is a Minister, I am an Assembly Member and that you are the Speaker? Are we going to run away with the impression that you have created a healthy environment where law and order is properly maintained so as to attract the capitalist or the entrepreneur to come and risk his money in our State?

I believe, Sir, the Hon. Minister for Finance is a very intelligent person and he knows what I am talking about.

Finally I come to the food policy. I am very much pained to say that the Party in power is going in the wrong tract. They talk about cheap rice and the Hon. Thiru Aditanar has levelled a charge against me that I am for costlier rice. I say that the costlier rice may be supplied to those who want to purchase it. Now your policy is to supply cheap rice. Why not you give it to the entire State and that is my question. You have promised it to the entire State and now you want to run away by saying that the Congress Party while in power introduced statutory rationing only in Madras City and Coimbatore. Why do you want to take shelter under that plea. They had done it according to the situation obtaining in those days. But what have you stated to the electorate? Did you say that you would only copy what the Congress Party had done? No, you have stated that you would supply one-rupee-rice from Kanyakumari to Tirutani. So you have to be blamed for that. Now you can say to the people that it is impossible to give it to all the people. Be honest to yourself and do not play this political drama before the people.

Now I come to the drought problem. Of course there has been drought. Do I differ from you? No. But how have you to tackle this problem? You chose Madurantakam and approached the Prime Minister to visit it. Then one day you collected 2,000 workers—I know from where they had come; they did not work the previous day but came only that day who had shovels and crowbars in their hands and the moment the Prime Minister left Madurantakam, they went away and you did not even pay wages to them. I know you very well and I have been living in this State for a longer time than most of you and I have also been a Member of this House for a long time. But this is not the way you should cheat the Central Government.

* THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, on a point of order. I think, what is implied in the hon. Member's speech is that the Prime Minister of India is capable of being misled and such an implication is possible to-day—Probably my hon. Friend would not have made the allegation two days ago. He has implied that this great Lady who came here was capable of being misled. I ask, Mr. Chairman, is it right that such an aspersion can be cast on the Prime Minister even in an implied manner as he has done

THIRU K. VINAYAKAM : Sir, let me explain my point. There is no insinuation against the Prime Minister. My insinuation is against the Party that is in power.





THE HON. THIRU K. A. MATHIALAGAN : Can an hon. Member make an insinuation against the Party in power also?

THIRU K. VINAYAKAM : That is my charge.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செஞ்சி வெ. முனுசாமி): மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எழுப்பியது ஒழுங்குப் பிரச்சினையில் வராது என்றாலும் பிரதம மந்திரி இங்கு வந்திருந்தபொழுது தமிழக அரசு நடந்துகொண்ட முறையினைப்பற்றி இந்த மன்றத்திலே எழுப்புகின்ற பிரச்சினைகள் இந்த முறையில் இருந்தால், அவை அங்கே சென்றால் அது நன்றாக இருக்காது. எனவே இது போன்ற வார்த்தைகளைப் பேசக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : I will change it. I will put it in such a manner that it will not offend you or the Prime Minister. Sir, actually no drought relief work was carried out. In fact, she pertinently pointed out some green patches and some good crops in Madurantakam and Chingleput. In spite of that just before the Presidential election, you got Rs. 3 crores. I know how the drought relief work has been carried out there. It has not been properly executed and it is only a waste.

THIRU N. SANKARIAH : Just before the Presidential election the Government got Rs. 3 crores'. என்று கூறியிருக்கிறார்கள். ஜனாதிபதித் தேர்தலுக்காக லஞ்சம் முதலிய குற்றங்களை மத்திய அரசாங்கம் செய்ததாகக் கூறுகிறார்கள். இது முறைதானா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக மூன்று கோடி ரூபாய் கொடுத்தார்கள். அதைத் தவறான எண்ணத்தோடு இந்தியப் பிரதமர் கொடுத்தார்கள் என்று கூறியிருக்கிறார்கள். அதை அவர்கள் வாபஸ் பெறவேண்டும். அவர்கள் அதைத் திரும்பப் பெறவில்லையென்றால் இந்த மன்றத்தின் குறிப்பிலிருந்து அவற்றை எடுத்துவிட வேண்டும். அது தவறான கருத்து. அவர்கள் பேசியது சரியானதல்ல, நம்முடைய மரபுக்கு உகந்தது அல்ல. வேறு எந்த அர்த்தத்திலேயும் அவர்கள் சொல்லியிருக்க முடியாது. இதற்குத் தாங்கள் தீர்ப்பு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செஞ்சி வெ. முனுசாமி) : இந்தப் பிரச்சினையை எழுப்பாமல் இருந்தால் நல்லது என்று சொல்லியிருக்கிறேன். ஆனால் கிளப்பியிருக்கிறார்கள். மத்திய அரசு மாநில அரசுக்குத் தொடர்ச்சியாகத் தந்துகொண்டிருக்கிறது. மூன்று கோடி தந்திருக்கிறது. மூன்று கோடியை ஜனாதிபதி தேர்தலுக்காகக் கொடுத்ததாகச் சொல்வது சரியல்ல. இதுபோன்ற நிகழ்ச்சிகள் இங்கே நடந்தன என்று நடவடிக்கைக் குறிப்பில் இருந்தால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எப்படிப் பேசியிருக்கிறார்கள் என்பது பொதுமக்களுக்கும் மத்திய அரசிற்கும் தெரியும். எனவே நடவடிக்கைக் குறிப்பில் இருக்கட்டும்.

THIRU K. VINAYAKAM : Sir, if I am to trust my memory—I am sure my memory is always good—I have only stated just before the Presidential election' and I have only pointed out when the amount was given. After all, she is my Prime Minister.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செஞ்சி வெ. முனுசாமி) : அடுத்து ஏ. எம். இராஜா.

(திரு. இராஜா அவர்கள் எழுந்தார்கள்)

THIRU K. VINAYAKAM : Sir, just a minute.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செஞ்சி வெ. முனுசாமி) : உறுப்பினர் அவர்களுக்கு 20 நிமிடம் கொடுக்கப்பட்டது. அவர்கள் 11-20-க்கு ஆரம்பித்தார்கள். 11.47 ஆகிறது. கூடுதலாக 7 நிமிடங்கள் தரப்பட்டு இருக்கிறது. ஆகவே மேற்கொண்டு பேச அனுமதிப்பதற்கில்லை. திரு. ஏ. எம். இராஜா அவர்கள் தொடர்ந்து பேசுவார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அவர்கள் முடித்துவிடப் போகிறார்கள். மேற்கொண்டு 5 நிமிடம் கொடுத்தாலும் பாவாயில்லை, கொடுக்கலாம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செஞ்சி வெ. முனுசாமி) : எதிர்க்கட்சித் தலைவருக்கு ஒன்று தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுக்கு 20 நிமிடங்கள் கொடுக்கப்பட்டன. மேற்கொண்டு 5 நிமிடங்கள் அல்ல, 7 நிமிடங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அவர்களும் பேசி இருக்கிறார்கள். அடுத்தவரைப் பேச இப்பொழுது அழைத்திருக்கிறேன். எனவே, மேற்கொண்டும் அனுமதிக்க முடியாது. திரு. ஏ. எம். இராஜா அவர்கள் இப்பொழுது பேசலாம்.

THIRU K. VINAYAKAM : Sir, let me finish my speech. This is not the way how you should hustle me. I am making a point to help this Government. I am only trying to support this Government. If they are touchy.....

MR. CAIRMAN (Thiru Gingee V. Munusamy) : Opportunities must be given to all the hon. Members. An opportunity has already been given to the hon. Member and he has utilised that opportunity. I would not give further time to him. Let the hon. Member, Thiru Raja, continue his speech.

* திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, கனம் நிதியமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற அறிக்கையை ஆதரித்துச் சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாட்டில் ஏற்படப்போகும் மாறுதல்களை எண்ணிப் புகுமுன் இந்திய உபகண்டத்தின் இன்றைய அரசியல் நிலையையும் எண்ணிப் பார்க்க வேண்டும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடியும் வரையிலும் மாநிலங்களிலேயும் மத்தியிலேயும் காங்கிரஸ் கட்சி



தான் ஆட்சிப்பொறுப்பிலே இருந்தது. மத்தியில் இருந்த காங்கிரஸ் கட்சி மாநிலங்களிலேயும் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காரணத்தாலே காங்கிரஸ் கட்சி தன்னுடைய பொருளாதாரக் கொள்கையை நடைமுறைக்குக் கொண்டுவரத் திட்டங்கள் தீட்டி மாநிலங்களிலே நிறைவேற்றி வந்தது.

ஆனால் இன்று அரசியல் நிலைமை மாறி இருக்கிறது. பல்வேறு மாநிலங்களில் காங்கிரஸ் அல்லாத கட்சிகள் ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தப்பட்டிருக்கின்றன. மத்தியில் காங்கிரஸ் கட்சி ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தப்பட்டிருக்கிறது. இன்று இந்திய உபகண்டம் முழுமையும் திட்டங்கள் தீட்டுவது இந்தியப் பேரரசின் கையில் இருக்கிறது. இந்தியப் பேரரசை ஆளுகின்றவர்கள் காங்கிரஸ்காரர்கள். அவர்கள் மக்களிடம் ஒருவிதமான பொருளாதாரக் கொள்கையைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பொருளாதாரக் கொள்கைக்கு ஏற்ப திட்டங்களைத் தீட்டித் தருகிறார்கள். அந்தத் திட்டங்களை காங்கிரஸ் அல்லாத மற்ற கட்சிகள் நிறைவேற்ற வேண்டுமென்ற நிர்ப்பந்த நிலையில்தான் இன்றைய அரசியல் நிலை இருக்கிறது. இந்த நிலை மாற்றப்பட்டாக வேண்டும். இந்தியப் பேரரசு திட்டங்களைத் தீட்டுவது உடனடியாக நிறுத்தப்பட்டாக வேண்டும். அந்த உரிமையை அவர்களிடம் இருந்து எடுத்துவிட்டு அந்தந்த மாநிலங்களே அவரவர்களுடைய திட்டங்களைத் தீட்டிக்கொள்ளவேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டால்தான் இந்த நாட்டில் உண்மையான திட்டங்கள் தீட்டப்படும். மக்களுக்குத் தேவையான, வளர்ச்சிக்கான திட்டங்கள் தீட்டப்படும். ஆகவே, முதற்படியாக இந்தியப் பேரரசு வைத்திருக்கின்ற திட்டக் கமிஷனை உடனடியாக ரத்து செய்து விட்டு மாநிலங்களில் திட்டக் குழுவை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன். ஆனால் மதிப்பிற்குரிய காங்கிரஸ் நண்பர்கள் கூறுவார்கள்—எல்லாக் கட்சிகளுமே நாட்டு நலனுக்காக, மக்கள் நலனுக்காகத்தான் திட்டங்களைத் தீட்டுகின்றன என்று.

நான் இதற்கு ஒரு உதாரணத்தைக் கூற விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் விநயகம் அவர்கள் கூடக் கூறினார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தப்படுவதற்கு முன்னால் தேர்தல் நேரத்தில் பல வாக்குறுதிகளைக் கொடுத்தனர். அந்த வாக்குறுதிகளில் ஒன்றுதான் படியரிசித் திட்டம். அந்தப் படியரிசி திட்டம் நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு முதற்படியாக கோவையிலும், சென்னையிலும் செயற்படுத்தினோம். ஆனால், காங்கிரஸ்காரர்கள் அதை ஏளனம் செய்கிறார்கள்; தேவையற்ற திட்டம், அவசியமற்ற திட்டம் என்றெல்லாம் குற்றம் சாட்டுகிறார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அது தேவையற்ற திட்டம், அவசியமற்ற திட்டம் என்று எந்த இடத்தில் சொல்லியிருக்கிறோம் என்பதைத் தயவு செய்து அவர்கள் நிரூபிக்க வேண்டும். அது எல்லா இடங்களுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்று நாங்கள் சொல்லியிருக்கிறோமே தவிர, அது தேவையற்ற திட்டம் என்று எங்கே சொல்லியிருக்கிறோம் என்பதை அவர்கள் கூற வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செஞ்சி வெ. முனுசாமி) : சட்டப் பேரவை விதிகளின்படி ஒரு உறுப்பினர் பேசுகின்றபோது இடையே குறுக்கிடக்கூடாது. பேசிய பிறகு ஏதாவது விளக்கம் வேண்டுமென்றால் கேட்டு அதற்கு வேண்டுமானால் பேசிய உறுப்பினர் பதில் அளிக்களாமே தவிர, இடையே குறுக்கே கேள்வி கேட்பது சரியாக இருக்காது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அவர் பேசி முடித்த பிறகு இறுதியாக அவருடைய கேள்வியைக் கேட்கலாம்.

THIRU K. VINAYAKAM : When I was on my legs, I tolerated the interruption of the Hon. Minister for Co-operation as well as many members. I did not question it. When now a wrong impression is being created, the Hon. Leader of the Opposition feels the necessity to intervene to put forth his views to correct the wrong impression. Is it right for you, Sir, to say that he should not do so?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செஞ்சி வெ. முனுசாமி) : மாண்புமிகு விநாயகம் அவர்கள் பேசும்போது அந்தப் பேச்சின் ஒரு பகுதியை எக்ஸ்பஞ்ச் பண்ண வேண்டுமென்றும், ஒழுங்கு முறைக்கு மீறியதாக ஒரு பகுதி இருக்கிறது என்பதைப் பற்றியும் இரு அமைச்சர்கள் தலையிட்டிருக்கிறார்கள். உங்களுடைய பேச்சிலே குறுக்கே கேள்வி கேட்கும் முறையிலே யாரும் குறுக்கிடவில்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : உங்களுடைய கட்சியின் சாதனைகளைப் பற்றி எவ்வளவு வேண்டுமென்றாலும் வானளாவப் புகழ்ந்து பேசிக் கொள்ளுங்கள். எங்களுடைய கட்சியைப் பற்றித் தவறாகச் சொன்னால் அதை நாங்கள் கேட்டுக்கொண்டு சும்மா இருக்க முடியாது

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செஞ்சி வெ. முனுசாமி) : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நன்றாக அறிவார்கள்—எதிர்க்கட்சிகள் ஆளும் கட்சிபற்றியும், ஆளும் கட்சி எதிர்க்கட்சிபற்றியும் பேசுவது வழக்கமாக நடந்துவரும் சம்பிரதாயந்தான். ஆகவே, இப்படி நடுவே கேள்விகள் கேட்டுக் குறுக்கிடுவது சரியல்ல.

திரு. ஏ. எம். இராஜா : எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் விநாயகம் அவர்கள் தன்னுடைய பேச்சில் குறிப்பிட்டார்கள், அதைத்தான் நான் குறிப்பிடுகிறேன். படியரிசித் திட்டத்தைத்



திராவிட முன்னேற்றக் கழகம் நிறைவேற்றும் வகையில் முதற்படியாக சென்னையிலும் கோவையிலும் அமல் செய்தது. மாற்றுக் கட்சிக்காரர்கள், குறிப்பாக, காங்கிரஸ் கட்சிக்காரர்கள், இது தேவையற்ற திட்டம், அதிகச் செலவை ஏற்படுத்தக் கூடிய திட்டம், அந்தத் திட்டம் மக்களுக்கு இந்த நேரத்தில் தேவையில்லை என்று கூறினார்கள். அதைத்தான் நான் கூறினேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : எங்கே அப்படிக் கூறினோம் என்று கேட்கிறேன்? தமிழ்நாடு முழுவதும் ஏன் விஸ்தரிக்கவில்லை என்று தான் கேட்டோம். ஆகவே, உறுப்பினர் மறுபடியும் மறுபடியும் இப்படிப் பேசிக் கொண்டிருந்தால் நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

திரு. ஏ. எம். இராஜா : இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதால் 10 கோடி ரூபாய் அதிகமாகச் செலவாகிறது, அந்தத் தொகையை மத்திய அரசு கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டோம். அப்போதும் கேட்டார்கள்—எங்களைக் கேட்டா இந்தத் திட்டத்தைத் தீட்டினார்கள் என்று. உங்களைக் கேட்டுத் திட்டம் தீட்ட நாங்கள் என்ன உங்கள் அடிமைகளா? கடந்த 20 ஆண்டு காலமாக காங்கிரஸ் அரசு மாநிலங்களிலும், மத்தியிலும் ஆட்சிப் பொறுப்பில் இருந்திருக்கிறது. பல கோடி ரூபாயைத் திட்டம் என்ற முறையிலே செலவு செய்திருக்கிறார்கள். குடிக்கக் கூடத் தண்ணீர் கிடையாது நாட்டிலே.

(காங்கிரஸ் கட்சித் தரப்பில் பல உறுப்பினர்கள்: சென்னையிலே தண்ணீர் இல்லையே, கார்ப்பரேஷன் என்ன செய்கிறது?)

திரு. பி. ஜி. கருத்திருமன் : கடந்த பத்து வருஷமாகக் கார்ப்பரேஷனில் நீங்கள் என்ன செய்தீர்கள்? நேற்றுத்தான் என்னவோ 12,000 கிணறுகளைத் தோண்டப் போகிறோம் என்று சொன்னீர்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செஞ்சி வெ. முனுசாமி) : மாண்புமிகு உறுப்பினர்கள் தயவு செய்து மன்ற ஒழுங்கைக் காப்பாற்றும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஏ. எம். இராஜா : இதுபோன்று இந்தியப் பேரரசு தன்னுடைய திட்டங்களை—நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தீட்டும்போது மாநிலங்களும் அந்தத் திட்டங்களில் பங்கேற்கும் அளவுக்கான உரிமையைக் கொடுக்க மறுக்கிறது. மாநில அரசின் உரிமைகளை மத்தியில் இருக்கின்ற காங்கிரஸ் அரசு . . . .

திரு. பி. ஜி. கருத்திருமன் : காங்கிரஸ் கட்சியைப் பற்றிச் சொல்வார்களேயானால் நாங்களும் தலையிட வேண்டியிருக்கும். மறுபடியும் நையாண்டி பேசிக் கொண்டு போனால் நாங்களும் தலையிட வேண்டியிருக்கும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** திரு. விநாயகம் அவர்களோடு நான் விவகாரம் செய்ய விரும்பவில்லை. இலவசக் கல்வியை திரு. காமராஜ் அவர்கள் கொண்டு வந்தார்கள் என்று சொல்லும்பொழுது (திரு. கே. விநாயகம் : அவர் இனிஷியேட் செய்தார்) காமராஜ் மட்டும்தானா, காங்கிரஸ் கட்சியையும் தான் சேர்த்துக்கொள்வது தானே? அது மாதிரி, இந்திரா காந்தி அம்மையார் என்றால் ஒரு அடையாளமாகத் தான் சொன்னேனே தவிர, வேறு ஒன்றுமில்லை. நாங்கள் முன்பே சொன்னோம். இப்பொழுதுதான் அம்மையார் அவர்கள் விழித்துக் கொண்டார்கள். நாஷனல் டெவலப்மெண்டு கவுன்சில் கூட்டத்தில் சொன்னோம். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இப்பொழுது இல்லை. நம்முடைய நண்பர் கட்சியைச் சேர்ந்த திரு. ஜோதி பாசு அவர்கள் அங்கே பேசினார்கள். அப்பொழுதே ஒரு ஊசலாட்டம் இருந்தது. இது கட்சிக்குள் இருக்கிற உட்கட்சிப் போராட்டத்தின் கண்ணாமூச்சி விளையாட்டாக முடிந்து விடக்கூடாது. இது காரியங்களின் துவக்கம் தான். பாங்கு நாஷனலைசேஷன் என்றால், முடிவு இல்லை. எல்லாக் காரியங்களையும் இனிதான் செய்து முடிக்க வேண்டும்.

நாம் கொள்கைகளை மாற்றிக்கொள்வதற்குத் தயாராக இருக்க வேண்டும். ஒரு புதிய தோற்றம், ஒரு புதிய நோக்கம் தேவை. ஃப்ரெஷ் லுக் தேவை (திரு. கே. விநாயகம் : நியூ லுக்) இந்த 20 ஆண்டு காலமாகப் பார்க்காத அந்த லுக்கைப் பார்க்க வேண்டும். இன்றைக்கு இந்த விவகாரத்தில் போட்டா போட்டி ஏற்படுவது நல்லதல்ல. நாடு முன்னேறவேண்டும். பூஜா மாடத்தில் யார் இருக்கவேண்டும் என்பதிலே சர்ச்சை. ஜனாதிபதி தேர்தலைப் பார்த்திருக்கிறோம். சிறு கூடாரங்களில் மாறுதல், இந்த நாடகத்தில் கதாபாத்திரம் மாறுதல், நேற்று ஒரு பாத்திரம், முந்தா நாள் ஒரு பாத்திரம். நாளைக்கு ஒரு பாத்திரம். இந்த பொருளாதாரப் போராட்டங்கள் கூர்மையாகிக் கொண்டு வருகின்றன. சென்ற 20 ஆண்டு காலமாக நல்ல கொள்கைகளைக் கடைப்பிடிக்காமல், எதேச்சாதிகாரப் பாதையில் சென்றதினால் தான், திட்டவட்டமான கொள்கை இல்லாததினால் தான், கோடிக் கணக்கான மக்கள் விரும்பும் சமூக, பொருளாதாரப் புரட்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகச் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யவில்லை. காங்கிரஸ் என்று வேண்டுமானால் சொல்லவில்லை. இந்தத் திட்டங்களுக்கு யார் பொறுப்பாளியோ, யார் கரங்களில் கோடிக்கணக்கான ரூபாய் ஒப்படைக்கப் பட்டதோ, யார் கரங்களிலே இப்படிப்பட்ட பெரிய காரியங்கள் ஒப்படைக்கப்பட்டனவோ, அவர்கள் இதில் தவறிவிட்டார்கள். ஆகவே, இந்தக் கொள்கை மதிப்பீடுகள் மாறவேண்டும். கொள்கைகளை மந்திரிகள்தான் நிர்ணயிக்கவேண்டும். கொள்கை பக்கத்திலுள்ள தோழர்கள் தான் நிர்ணயிக்கவேண்டும். கொள்கைகள் நிர்ணயிப்பதை இங்கே உட்கார்ந்துகொண்டிருக்கும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளிடம் விட்டுவிடுவோம் என்றால், அது





ஜனநாயகமாகாது, மக்களுடைய எண்ணத்தை, ஆர்வங்களைப் பிரதிபலிப்பது ஆகாது. அதிகாரிகள் விளக்கங்களைச் சொல்லலாம், திட்டங்களை நிறைவேற்றும் செயல்முறைகளைப் பற்றிச் சொல்லலாம். நாட்டின் தலைவர்கள் தான் இந்தத் திட்டத்தின் இயக்கத்தை ஏற்று நடத்தவேண்டும், அவர்கள் தான் திட்டங்கள் உருவாக்கவேண்டும். திட்டங்களைத் தீட்டுவதை ஐ.ஏ.எஸ். அதிகாரிகளிடத்திலோ, பொருளாதார நிபுணர்களிடத்திலோ அல்லது கீழே உள்ள அதிகாரிகளிடத்திலோ விட்டுவிடுவது என்பது சமூகத்திற்கே ஒரு அபாயம் என்று கருதுகிறேன். மக்களுடைய எண்ணங்கள் இந்தத் திட்டங்களை உருவாக்கக்கூடிய விவாதத்தில் பிரதிபலிக்கவேண்டும். வெறும் புத்தகங்களில் திட்டங்களை உருவாக்கிவிட முடியாது. இவைகளைக் கூட மாற்றி, எறிந்துவிட்டு, எத்தனையோ மாதிரி புதியதாக உண்டாக்கி யிருக்கலாம்.

இன்றைக்கு அப்படித்தான் மாற்றவேண்டும். எல்லாக் கிராமங் களுக்கும் மின்சாரம், எல்லாக் கிராமங்களுக்கும் குடி நீர் என்று புத்தகம் அச்சடித்துச் சொல்லிவிட்டோமே, முன்னாலேயே சொல்லி விட்டோமே என்று சொல்லிக் கொண்டிருக்க முடியாது. அந்தந்த நேரத்திற்குத் தக்கபடி, திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். அப்போதுதான் மக்களுக்கு உண்மையான சேவை செய்தவர் களாக ஆவோம். இதில் கட்சி மாச்சரியம் ஒன்றும் இல்லை. நாம் சுயராஜ்யத்தைப் பெற்றிருக்கிறோம். திரு. விநாயகம் அவர்களும் எங்களோடு இருந்தவர்தான். திரு. கருத்திருமன் அவர்கள் ஜெயிலுக்குப் போனார்களோ, இல்லையோ எனக்குத் தெரியாது. (சிரிப்பு) போகவில்லைபோல்தான் தோன்றுகிறது (சிரிப்பு). நான் பதினொரு முறை ஜெயிலுக்குப் போயிருக்கிறேன். நான் சட்ட மன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் ஒரு வருஷ காலம் ஜெயிலில் இருந்திருக்கிறேன். சுதந்திரம் பெற்று இருபது ஆண்டு களாகியும் நாம் இன்னும் முன்னேறவில்லை. பொருளாதார சுதந்திரத்திற்கும், சமுதாய சுதந்திரத்திற்குமான அடித்தளத்தை நாம் அமைக்க வேண்டும். இன்றைக்கு ஒரு புதிய குறி தென்படு கிறது. இப்போது இருக்கிற காலக்குறி மாறட்டும். 'இங்கே கிரகங்கள் மாறுகின்றன, அங்கே கிரகங்கள் மாறுகின்றன' என்று ஜோஸ்யர்கள்தான் கூறுவார்கள். ஜோஸ்யத்தில் நம்பிக்கை யுள்ளவர்கள் அதைப் பார்த்துக்கொள்ளட்டும். பல கோடி மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டும். வறுமை நிர்மூலமாக்கப்பட வேண்டும். நல்ல முடிவை ஏற்படுத்துகிற நல்ல சம்பவங்களை நாம் முகமலர்ச்சியுடன் வரவேற்று, நல்ல கருத்துக்களை எடுத்துரைத்ததன்மூலம், அந்தக் கருத்துக்களுக்கு வலுவூட்டி, அற்புதமான படைப்பாகப் படைக்க வேண்டுமென்று கூறி, விவாதத்தை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு மணி நேரம் இருக்கிறது. இன்னும் 9 நபர்கள் பேசுவதற்கு பெயர் கொடுத்

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். இந்த மன்றத்தில் எந்தக் கட்சியைப் பற்றியும் பேச உரிமை இருக்கும்போது இன்ன கட்சியைப் பற்றி பேசக்கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுவது, அங்கத்தினர் பேசிக் கொண்டிருக்கும்போது இடையிடையே குறுக்கிட்டு அவருடைய நேரத்தை வெட்டுவது ஒழுங்கான முறையல்ல. அவ்வாறு குறுக்கே தலையிடாது இருக்கும்படி சபாநாயகர் அவர்கள் கவனித்துக் கொள்ளவேண்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. செஞ்சி வெ. முனுசாமி):** ஒரு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது இன்னொரு உறுப்பினர் குறுக்கிடக்கூடாது என்று விதிமுறைகள் தெளிவாக இருக்கின்றன. இப்படிப்பட்ட நேரத்தில் ஒவ்வொரு கட்சியினருக்கும் பேச வாய்ப்பு இருக்கும் நிலையில் ஒரு கட்சியைச் சேர்ந்தவர் பேசிய பிறகு இன்னொரு கட்சியைச் சேர்ந்தவர் பேசும்போது அதற்கு விளக்கம் கேட்கவோ, சொல்லவோ வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இப்படிக் குறுக்கிட்டுப் பேசுவது முறையாக இருக்காது என்று கூறி இனியாவது அமைதி காட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஏ. எம். இராஜா :** இந்தியப் பேரரசு திட்டங்களுக்காக மாநில அரசுகளுக்கு முதலில் கொடுப்பதாக ஒப்புக் கொண்ட தொகைகளைப் பின்னர் கொடுப்பதில்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை எடுத்துக் கொண்டால் கூட முதலில் நமக்கு 250 கோடி ரூபாய் கொடுப்பதாக ஒப்புக் கொண்டார்கள். இப்போது எங்களால் 250 கோடி கொடுக்க முடியாது, 202 கோடி ரூபாய்தான் கொடுக்க முடியும் என்று கூறுகிறார்கள். சென்ற ஆண்டு திட்டத்திலே நமக்கு வரவேண்டிய 44 கோடியிலே 40 கோடிதான் வந்திருக்கிறது. காலஞ்சென்ற பேரறிஞர் அண்ணா அவர்களே நிதிநிலை அறிக்கையில் இதுபற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தக் குறைபாடுகளைப் போக்க ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நியமிக்கப்படுகிற நிதி ஆணைக் குழுவை நிரந்தரமாகச் செயல்படச் செய்யவேண்டும். அதற்கான வழிமுறைகளைக் காண வேண்டும். மாநிலங்களின் தேவைகளை அந்தந்த மாநில அரசுதான் உணர முடியும். தமிழ் நாட்டைப் பொருத்தவரை தமிழக அரசு 624 கோடி ரூபாய்க்குத் திட்டங்களைத் தீட்டி அனுப்பியிருக்கிறது. இந்தியப் பேரரசு 'உங்களுடைய திட்டங்கள் அதிகமாக இருக்கிறது, குறைத்துக் கொள்ளுங்கள்' என்று கூறி 502 கோடி ரூபாயாகக் குறைத்திருக்கிறது. நாம் நம்முடைய மாநிலத்தில் இருக்கின்ற கிராமங்கள் அனைத்துக்கும் குடிதண்ணீர் வழங்க முடிவு செய்திருக்கிறோம். இதுபோன்று மாநிலத்தின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதாகக் கூறியிருக்கிறோம். அத்தகைய வாக்குறுதியைக் கொடுத்திருக்கிறோம். இதற்கு நமக்கு



ஆயிரம் கோடி ரூபாய் தேவைப்படுகிறது. அப்படி ஆயிரம் கோடி ரூபாய்க்குத் திட்டம் தீட்டினால்தான் நம்முடைய தேவைகளில் ஒரு பகுதியைப் பூர்த்தி செய்ய முடியும்.

மேலும் தொழில் துறையை எடுத்துக் கொண்டால் தற்போது மத்திய அரசு ஆதரவு பெற்ற திட்டங்கள் ஒன்றுகூட இல்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறைந்தது 100 கோடி ரூபாய் அளவுக்காவது மத்திய அரசு ஆதரவு பெற்ற திட்டங்கள் இருந்திருக்க வேண்டும். அது மறுக்கப்பட்டிருக்கிறது. நமக்குக் கொடுக்க வேண்டிய நிதியைக் குறைக்கிறார்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்போது 10.8 சதவிகிதம் நிதி கொடுத்தார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 5.7 சதவிகிதம் என்ற அளவில் குறைந்திருக்கிறது.

இதற்குக் காரணம் என்ன? காரணம், இந்தியப் பேரரசில் உட்கார்ந்திருப்பவர்கள் வேறு கட்சிக்காரர்களாக இருக்கிறார்கள். மாநிலங்களில் வேறு கட்சிகள் இருக்கின்றன. ஆகவே நான் கூறுவது என்னவென்றால், இந்தியப் பேரரசின் உரிமைகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும். இந்தியப் பேரரசின் அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும். இந்தியப் பேரரசு தன் செலவிற்கு எவ்வளவு தேவைப்படுகிறதோ அந்த அளவிற்கு மாநிலங்களிடமிருந்து மானியமாகப் பெற்றுக்கொண்டு மற்ற அனைத்து வசதிகளையும், வளமான வரித்துறைகள் அனைத்தையும் மாநிலங்களுக்கு மாற்றிவிட வேண்டும். அப்படிச் செய்தால்தான் தமிழகத்தைப் பொறுத்தவரையில் வளமான திட்டங்களைத் தீட்டமுடியும். இந்நேரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டுள்ளதை இங்கு குறிப்பிட்டுவிட்டு என் உரையை முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். "ஒற்றுமையின் பெயரால் பிறரை ஆளடிமையாக்கிட முனைந்திருக்கின்றோம். ஒருமைப்பாட்டினை உருவாக்கிடும் போராவலின் முனைப்பால் நாட்டின் ஓர் அங்கத்தினைப் பிறிதோர் பரப்பின் அடிமைக்காடென மாற்றிடும் நிலை உருவாகிடும் என்பதைத் தெரிந்திருக்கலாம், தெரியாமலுமிருக்கலாம். இதனை அறிந்து செய்திடினும் சரியே—அறியாமல் ஆணவத்தின் மேலீட்டால் புரிந்திடினும் ஆகட்டும், கொத்தடிமைத்தனத்திற்கு எப்படி நாம் துணை நின்றிட முடியும் என்று கேட்கிறேன்.

பயணத்தின் முடிவு—இலட்சிய முகடு எத்துணைப் புனிதமாகவேனும் இருந்திட்டும். பாரெங்கும் பெருமதிப்புப் பெற்றிடுவோம் என்பதையும் ஒப்பிடுகின்றோம். ஆனால் அதன் விளைவும் பயனும் எம்மை கொத்தடிமை யாக்கிவிடும் என்றால் எப்படி ஒப்பிட முடியும்? துடிக்காமல்—துடிதுடித்துக் கண்டித்துத் தடுத்திடாமல் இருந்திடுவோமோ? நடவாது அது" என்று கூறியிருக்கிறார்கள்.

சமீபத்தில் கேரள அமைச்சரான திரு. மத்தாய் மஞ்சூரான் அவர்கள் பேசும்போது ஒரு கருத்தைக் கூறியிருக்கிறார்கள். கேரளத்திற்கு சுயநிர்ணய உரிமையையும் சுதந்திரத்தையும் அளித்தால்தான் தொழிலாளர் பிரச்சினையையும் மற்ற மாநிலப் பிரச்சினைகளையும் முழுமையாகத் தீர்க்க முடியும் என்று கூறியிருக்கிறார்கள். அதற்காக பாடுபடுவோம் என்றும் கூறியிருக்கிறார்கள். இந்நிலையில் நான் இந்தியப் பேரரசை ஞாபகப்படுத்தக் கூடியதெல்லாம், இந்தியப் பேரரசு முறையாக, நியாயமாக தமிழகத்திற்குக் கிடைக்கவேண்டிய பங்கை கொடுக்காவிட்டால் நிச்சயமாக இந்தியப் பேரரசு இந்தியப் பேரரசாக இருக்காது, தமிழகம் தன்னாட்சி பெற்று விளங்கும் (ஆரவாரம்) என்று கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, தமிழகத்தின் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை இந்த சபை பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. இத்திட்டம் பற்றி என்னுடைய கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக இத்திட்டம் முழுமையும் மாற்றப்பட்டு புதிய ஒரு திட்டம் வகுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துவதின் பேரில் திட்டத்திற்குள்ளே சென்று நான் ஆராயாமல் கொள்கையைப் பற்றி மட்டும் இந்த சந்தர்ப்பத்தில் பேச விரும்புகிறேன். நிதி அமைச்சர் அவர்கள் இதைப் பற்றி முன்னால் பேசியபோது வெகு தீவிரமான கொள்கைகளை எல்லாம் வெளியிட்டார்கள். அவற்றை அப்படியே நான் ஆதரிக்கிறேன். ஆனால் அவர்கள் குறிப்பிடுகிற போது இந்தத் திட்டத்தைப் போடும்போது எந்தவிதமான லட்சியமும் இல்லாமல் போட்டிருக்கிறார்கள் என்று கூறினார்கள். அப்படியல்ல. திட்டத்திற்கு ஒரு லட்சியத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். எதை அடைவதற்காக இதைப் போடுகிறோம் என்று ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த இலட்சியத்தை அடைந்தார்களா என்று பார்த்தால் அந்த லட்சியத்தை அடையவில்லை. அப்படி ஏன் அதை அடையவில்லை என்பதைப் பரிசீலிப்பதுதான் இன்று இச்சபையின் நோக்கமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அந்த இலட்சியத்தை அடையாத காரணத்தினால் நாட்டில் என்னென்ன நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நாம் உன்னிப்பாக கவனித்துக் கொண்டு வருகிறோம்.

நாட்டில் இன்று தொழில் மந்தம் ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தொழில் மந்தத்தை எப்படிப் போக்குவது? எப்படி இந்தப் பொருளாதார சீர்குலைவைத் தடுத்து நல்லமுறையில் பொருளாதார அமைப்பை அமைப்பது என்ற கண்ணோட்டத்தோடும் எப்படி இந்நாட்டிலுள்ள வறுமையை எதிர்த்துப் போராடுவது, எப்படி இந்த நாட்டிலுள்ள கீழ் தட்டிலுள்ள, அடித்தட்டிலுள்ள மக்களின் உய்வுக்காக வழி காட்டுவது என்பதைப் பற்றித்தான் இத் திட்டத்தின் முழு கவனம் செல்லவேண்டும். அந்த அளவில்





தான் இந்தத் திட்டமும் இருக்கவேண்டும் நம் தேசிய வருவாய் 1960-61-ல் 14,140 கோடி ரூபாயாக இருந்தது. மூன்றாவது திட்டம் முடிவடையும்போது அது 15,930 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. ஆனால் தனி நபர் வருவாய் கடைசியில் 325 ரூபாயாகத்தான் இருந்துவருகின்றது. இந்த வளர்ச்சி போதுமா? 1960-61-லும் ரூ. 325, 1965—66-லும் ரூ. 326 என்றுதான் இருக்கிறது. வருவாய் அதிகரித்திருந்தபோதிலும் ஜனத்தொகையின் வளர்ச்சி அதைச் சாப்பிட்டு விட்டது. இந்த அளவிற்கு நம் தேசிய வருவாய் இருந்தால் நம் நாட்டிலுள்ள வறுமையைப் போக்கிட முடியுமா? என்று பார்த்தால் முடியாது. ஆகவே, நம் தேசிய வருவாயை அதிகரிக்க நாம் ஒரு திட்டம் போடவேண்டும். எந்த முறையில் நாம் திட்டமிட்டால் நம் தேசிய வருவாயைப் பெருக்க முடியும், எப்படி நாட்டிலுள்ள வறுமையைப் போக்க முடியும் என்பதுதான் இன்று நம் முன் உள்ள பிரச்சினை. அதற்கு நாம் உள்நாட்டில் எவ்வளவு தொகையைச் சேகரிக்க முடியும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

நமது வருவாய் கிட்டத்தட்ட 16,000 கோடி ரூபாய் என்றிருக்கும்போது நம் மக்கள் தங்கள் செலவுகள் போக, உணவு, உடை இவற்றிற்கான செலவுகள் எல்லாம் போக எவ்வளவு மிச்சப்படுத்த முடியும் என்பதை கணக்கில் எடுத்துக்கொண்டு தான் நாம் திட்டம் தீட்ட வேண்டியிருக்கிறது. நாம் திட்டம் தீட்டும்போது, நம் தேவைகள் என்ன, நம் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு எந்தளவிற்கு நாம் சக்தியுடையவர்களாக இருக்கிறோம் என்று பார்த்தால் சிறிது சிரமமாகத்தான் இருக்கிறது. நாம் இஷ்டப்படி 5,000 கோடி ரூபாய் போட்டு விடலாம் என்று கூறிக் கொண்டிருக்க முடியாது.

நம் தமிழகத்தின் தேவை என்னவென்று பார்த்தால் இங்குள்ள விவசாயத் துறையை முதலில் எடுத்துக்கொள்ளவேண்டும். என்னைப் பொறுத்தமட்டில் நமது திட்ட இலட்சியத்தை அடைய முடியாமல் போனதற்குக் காரணம் விவசாயத்தில் நாம்போதிய கவனம் செலுத்தவில்லை என்பதுதான். நம் நாட்டில் 70 சதவிகிதத்தினர் விவசாயத்தைத்தான் நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி விவசாயத்தை நம்பியிருப்பவர்களின் வாங்கும் சக்தி அதிகரிக்காமல் இருப்பதினால்தான் இன்று தொழில் துறையில் மந்தம் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம். சாமான்களை வாங்கக் கூடிய சக்தி சாதாரண மக்களிடம் இல்லை என்பதால்தான் தொழில் மந்தம் ஏற்பட்டிருக்கிறது. நாட்டிலுள்ள 30 சதவிகிதத்தினரிடமிருந்து பட்டும் மூலதனத்தை சேகரிக்க முற்பட்டால் தேவையான அளவிற்குக் கிடைக்காது. ஆகவே, நாட்டிலுள்ள எல்லா மக்களிடமிருந்து மூலதனம் பெற, அவர்களிடம் சேமிப்பை ஏற்படுத்துவதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டும். குறிப்பாக, விவசாயிகளிடம் இருந்து அந்த மூலதனத்தைப் பெறக்கூடிய அளவில்

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1969 ஆகஸ்ட் 22

நிலைமை இருக்கவேண்டும். மேலை நாடுகளில் தொழில் புரட்சி நடந்த காலத்தில் எப்படி மூலதனம் சேகரம் செய்தார்கள் என்பதையொட்டி இந்தக் காலத்தில் மூலதனத்தை சேர்க்க முடியாது. அப்போது குறைந்த அளவில் சம்பளத்தைக் கொடுத்து மூலதனம் சேகரித்து தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தினார்கள். ஆனால் இன்றைய நிலைமையில் அது முடியாது. வளர்ந்துள்ள இன்றைய சமுதாயத்தில், அறிவு பெருகியுள்ள இன்றைய சமுதாயத்தில் பழைய கொள்கையைப் புகுத்தி மூலதனத்தை சேகரிக்க முடியாது.

இந்தியாவைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் நம் மூலதனத்தை பெருக்கவேண்டுமென்றால் விவசாயத்தைப் பெருக்கினால்தான், நம் அடிப்படைத் தொழிலான விவசாயத்தில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தினால்தான் இதரத் தொழில்களும் வளர்ச்சியடையும், மூலதனமும் கிடைக்க வழி ஏற்படும். இல்லாவிடில் நமக்குத் தேவையான மூலதனம் கிடைக்காது. அதோடு நம் நாட்டில் விவசாய முன்னேற்றம் ஏற்படாவிட்டால் தொழில்கள் வளர்ச்சியடையாது. தொழில் வளர்ச்சி ஏற்பட விவசாயம்தான் இன்று அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளது. ஆகவே நான் சொல்வது என்னவெனில், விவசாயத்திற்கும் விவசாயத்திற்கு உறுதுணையாக உள்ள தொழில்களுக்கும்தான் ஐந்தாண்டுகளுக்கு திட்டம் தீட்டவேண்டும். அதற்குப் பிறகுதான் மற்றத் துறைகளில் கவனம் செலுத்த வேண்டும். இல்லாவிடில் விவசாயத்துறையில் முன்னேற்றம் காணவும் முடியாது, மூலதனமும் கிடைக்காது. நான் விவசாயி என்ற முறையில் இதைச் சொல்லவில்லை. தொழில் வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணம் விவசாய வளர்ச்சிதான். நம் நாட்டிலுள்ள 70 சதவிகிதம் மக்களிடமிருந்து பணம் புரளவேண்டும். அப்போதுதான் நாம் நமக்கு வேண்டிய மூலதனத்தைத் திரட்ட முடியும். அப்போதுதான் தொழில் துறை வளர முடியும். ஆகவே, இந்தத் திட்டத்தை தள்ளி வைத்து விட்டு புதிய ஒரு திட்டத்தை விவசாயத்தை முன் நின்று செய்யவேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரையில் விவசாயத்திற்கு என்னென்ன தேவை என்று கணக்கிட்டுப் பார்த்தால், இன்று சாகுபடி செய்யக்கூடிய இடம் 1½ கோடி ஏக்கர் இருக்கிறது. அதிலே, தண்ணீர் பாசன வசதி பெற்ற நிலங்கள் 60 இலட்சம் ஏக்கர்கள். பாசன வசதி பெறாதவை பாக்கியுள்ள நிலங்கள். 60 இலட்சம் ஏக்கர்கள் போக, 1½ கோடியிலே 90 இலட்சம் ஏக்கர்களுக்குப் பாசன வசதியில்லாமல் இருக்கிறது. ஆதலால், சாகுபடி செய்வதற்கு லாயக்கான தரிசு நிலங்கள், சர்க்கார் நிலங்கள் மட்டுமல்ல, தனியார் பட்டா வைத்திருக்கும் நிலங்களையும் சேர்த்து 60 இலட்சம் ஏக்கராக்கள் தரிசாகக் கிடக்கின்றன. விவசாயம் செய்ய மக்கள் தயாராகயிருக்கிறார்கள். நாட்டிலே உணவு நெருக்கடி அதிகமாக இருக்கிறது.



1969 ஆகஸ்ட் 22] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

வேலை செய்ய மனிதன் இருக்கிறான். தேவை அதிகமாகி, உணவுப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. எனவே, இந்த நிலங்களையெல்லாம் சாகுபடி செய்வதற்குத் திட்டம் போட்டால் 3,000 கோடி ரூபாய் தமிழகத்திற்கு மட்டும் தேவைப்படுகிறது. இதற்கெல்லாம் பாசன வசதி செய்து கொடுத்துச் செய்வதற்கு, இயந்திரங்களுக்காகச் சொல்லவில்லை, இந்த 3,000 கோடி ரூபாயையும் போட்டு ஐந்தாண்டு அல்லது பத்தாண்டுத் திட்டத்திலே நிறைவேற்றியாக வேண்டும். இப்பொழுது என்ன நடக்கிறது? 502 கோடி ரூபாயில் திட்டம் தீட்டு என்று மத்திய சர்க்காரில் சொல்லுகிறார்கள். 575 கோடி ரூபாய்க்குச் செய்யப் போகிறோம் என்று இந்த அரசாங்கம் கருதுகிறது. ஆனால் நம்மிடத்திலே கொடுக்கப்பட்டிருப்பது 624 கோடி ரூபாய்க்கு. இதில் எந்த திட்டத்தை நிறைவேற்றப்போகிறோம் என்று புரியாமலே இந்தத் திட்டத்தைப்பற்றி நான் என்ன சொல்வது என்று புரியவில்லை. மத்திய சர்க்கார் 502 கோடி ரூபாய்க்கு வரக்களித்திருக்கிறார்கள். இதை அப்படியே விவசாயத்திற்குப் போட்டால், ஆறைந்து, முப்பது என்று வைத்தால், முப்பது ஆண்டுகள் ஆகும். ஆகவே, இந்த 500 கோடியோடு எல்லா வசதிகளையும் சேர்த்து 1,000 கோடி ரூபாயில் திட்டத்தை, கிராமப்புற மக்களுக்கு வசதி செய்து தரும் திட்டத்தைப்போட்டு விவசாயத்திற்காக நீங்கள் நிறைவேற்றினால் உங்களுக்கு அந்த மூலதனம் அடுத்து ஐந்தாண்டுகளிலே கிடைத்துவிடும். நீங்கள் பணத்தைத் தொழிலிலே போட்டீர்களானால், கன்ஸ்யூமர்ஸ் குட்ஸ் கிடைக்க வேண்டும், சாமான்களின் விலையைக் குறைக்கவேண்டும். ஆகவே, தொழிலிலே போடுவதைவிட, விவசாயத்தை அபிவிருத்தி செய்வதன்மூலம்தான், நாட்டிலேயிருக்கும் அத்தனை மக்களுக்கும் உணவு, குறைந்த விலையில் உடை, வேலை வாய்ப்பு கொடுக்க முடியும். பெருந் தொழிலில் ஒருவருக்கு குறைந்தபட்சம் 10,000 ரூபாயாவது மூலதனம் செய்ய வேண்டும். சிறு தொழில்களுக்கு அவ்வளவு செய்யத் தேவையில்லை. ஆகவே, இதில் கவனம் செலுத்தினால் எல்லோருக்கும் வேலை வாய்ப்புக் கொடுக்க முடியும். அதோடு, போட்ட பணத்திற்கு அடுத்த ஆண்டே பலன் கிடைக்கும். விவசாயத்தில் இன்று பணம் போட்டால் அடுத்த மூன்று மாதங்களில் அறுவடை, அதிகமாகப் போனால் 6 மாதங்களில் அறுவடை எவ்வளவு பணம் விவசாயத்தில் போடுகிறோமோ அவ்வளவுக்கும் உடனடியாக வருவாய் கிடைக்கிறது. இவ்வாறு செய்தால் உணவுப் பொருட்களைக் குறைந்த விலையில் எல்லா மக்களுக்கும் கொடுக்க முடியும். ஆகவே, இந்தத் திட்டத்தை, விவசாயத் திட்டமாக மாற்றிச் செய்ய வேண்டும். எனவே, தொழிலில் மூலதனத்தைப் போடுவதற்குப் பதிலாக, விவசாயத்திற்குப் போட வேண்டும்.

ஆகவே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் விவசாயத்திற்குத் தேவையான பாசனத்திற்கான மின் சக்தி போக்குவரத்து இதற்காகத்தான் இருக்கவேண்டுமே தவிர, பாக்கி திட்டங்களை ஒதுக்கி

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1969 ஆகஸ்ட் 22

விடவேண்டும். கல்விக்காக 53 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கல்வி அபிவிருத்திக்கு என்ன செய்யப் போகிறோம்? இப்பொழுதிருக்கும் கல்வி முறையே தப்பு. கல்வி முறையையே அடியோடு மாற்றியாகவேண்டும். அதற்காக என்ன கட்டிடங்கள் வேண்டிக்கிடக்கிறது? நாட்டிலேயுள்ள கோடிக் கணக்கான மக்கள் இன்றைக்குப் பிளாட்பாரத்திலே படுத்துக்கிடக்கிறார்கள். அவர்களுக்கு குடிப்பதற்குக் கஞ்சி இல்லை, அவர்களுக்கு வேலையில்லை, அப்படியிருக்கும்பொழுது ஏழடுக்கு மாளிகையை ஏன் கட்ட வேண்டும்? டெட் கேபிடலில் முதலீடு போடுவது நியாயமாகாது. இருபதாண்டுக்காலத்திற்குப் பின்னும் இந்த நாட்டில் வறுமையிருக்கிறது. இன்னும் ஒரு பத்தாண்டுக் காலத்திற்குக் கீற்றுக் கொட்டகையைப் போட்டுக்கொண்டு பள்ளிகளை நடத்திக் கொள்ளட்டுமே. எனவே, இதைத் தவிர்த்து விவசாயப் பெருக்கத்திற்காக நாம் பாடுபட வேண்டும். நாட்டிலே அப்பொழுதுதான் புரட்சி ஏற்படும். பசுமைப்புரட்சி என்று சொன்னால் அப்போதுதான் ஏற்படும். அதுமட்டுமல்ல, இன்னும் சில காரியங்களை நாம் செய்ய வேண்டியிருக்கிறது.

நிலச்சீர்திருத்தம் சம்பந்தமாக நாம் சில காரியங்களைச் செய்ய வேண்டும். அதற்கு உடனடியாகச் சட்டங்கள் போட வேண்டும். விரிவான நிலச் சீர்திருத்தங்களைச் செய்யவேண்டும். நிலங்கள் துண்டு துண்டாக இருக்கக்கூடாது. நிலச் சொந்தக்காரர்களின் நிலம் ஒரேயிடத்தில் இருக்கவேண்டும். மினிமம் வேஜஸ் ஃபார் அக்ரிகல்சர், கன்ஸாலிடேஷன் ஆஃப் ஹோல்டிங்ஸ் இந்தத் திட்டங்களை நிறைவேற்றி, இதை ஒரு விவசாயத் திட்டமாகப் போட்டால், நாட்டிலே நல்லமுறையில் விவசாயம் நடக்கும். பசுமைப் புரட்சி என்று சொல்லுகிறார்கள். அந்தப் பசுமைப்புரட்சி அப்பொழுதுதான் நடக்கும். அந்தப் புரட்சியின் மூலம் தொழில் நடக்கிற நாடாக இந்த நாட்டை ஆக்குவதற்கு அரசு முற்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொண்டு அமர்கிறேன்.

* **திரு. மு. ச. சிவசாமி:** தலைவரவர்களே, தமிழக அரசின் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை, தமிழக அரசு தீர ஆராய்ந்து முடிவெடுத்திருக்கிறது என்பது வேளாண்மை, சிறுபாசனத் துறைக்கு 60 கோடி ரூபாயும், மின் சக்திக்கு 160 கோடி ரூபாயும், குடிநீர் வழங்குவதற்காக 55 கோடி ரூபாயும், கல்விக்காக 53 கோடி ரூபாயும் ஒதுக்கியிருப்பதிலிருந்து நன்கு தெரிகிறது. இந்தத் திட்டத்தின் மூலபுருஷர்களான, இதைத் தயாரித்த அமைச்சர்களுக்கும், குறிப்பாக நிதி இலாக்கா செயலாளருக்கும் நான் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றுள்ள நாட்டின் நிலைமையில் உணவுப்பொருள்களை எவ்வளவு அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டுமென்பதை மனத்தில் வைத்து அதற்காக 60 கோடி ரூபாயும், உணவு உற்பத்தியைப்



1969 ஆகஸ்ட் 22] [திரு. மு. ச. சிவசாமி]

பெருக்குவதற்கும், தொழில் வளத்தைப் பெருக்குவதற்கும் மின்சாரம் எவ்வளவு அவசியம் என்பதைக் கணக்கிட்டு அதற்காக 169 கோடி ரூபாயும், இன்றையதினம் மக்களுடைய முக்கிய பிரச்சினையான குடிநீரை வழங்குவதை மனத்தில் வைத்து அதற்காக 55 கோடி ரூபாயும் நான்காவது ஐந்தாண்டுத்திட்டத்திலே ஒதுக்கிய தொகைகளில் இந்த நான்கு இனங்களுக்கும் பங்கிட்டு ஒதுக்கியிருப்பதிலிருந்து இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டம், தமிழக அரசு தயாரித்திருக்கின்ற இந்தத் திட்டம், மக்களின் தேவையை மனத்தில் வைத்துத் தீட்டப்பட்டிருக்கிறது என்பது நன்கு புலனாகிறது. அதேநேரத்தில், உணவு உற்பத்தியைப் பற்றி நிதி அமைச்சரவர்கள் அறிக்கையில், இன்று உணவு உற்பத்தி 58 இலட்சம் டன் என்றும், திட்டத்தின் லட்சியம் 79 லட்சம் டன் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஐந்தாண்டுகளில் நாம் அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டிய உணவுப் பொருள்களின் அளவு 21 லட்சம் டன் ஆகும். இதற்காக இந்தத் திட்டத்தில் 1 லட்சத்து 5 ஆயிரம் கிணறுகள் தோண்டுவதற்கும், ஆழப்படுத்துவதற்கும் திட்டமிட்டிருக்கிறார்கள். இது மிக மிக வரவேற்கத் தக்கது.

அத்துடன் நம்முடைய தமிழகத்திலேயிருக்கின்ற 27,000 ஏரிகளுக்கு 14 கோடி ரூபாய் செலவு செய்து அவைகளை மேம்படுத்துவதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். கடந்த மூன்றாவது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் குளங்களை மேம்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட தொகைகளில் எப்படிச் செலவழிக்கப்பட்டன என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லித் தீரவேண்டிய நிலை இருக்கிறது. ஏரிகளை மேம்படுத்துவதற்காக என்று திட்டம் வகுத்து, அதைச் செயல்படுத்துகின்ற நேரத்தில் அங்கிருக்கின்ற குளங்களின் கரைகளை, கண்ணுக்கு மண் தூவுவதைப்போல் கரைகளுக்கும் மண்ணை அள்ளிப் போட்டார்களே தவிர அந்தக் குளம் எவ்வளவு ஆழம் இருக்கிறது என்று கணக்குப் பார்த்துச் செய்தார்களா என்றால் இல்லை. பொதுவாகத் தென்பகுதியிலிருக்கின்ற, குறிப்பாக மதுரை, இராமனாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் கரிசல் பூமியாக இருக்கிறது, மானாவாரிக் குளங்களாக இருக்கின்றன. அந்தக் குளங்கள் மேடாகி, குளங்களின் கரைகளும்—நீர்பரப்பளவும் சமநிலையாகத் தெரியும். இந்த நிலையில் ஆயிரக்கணக்கான குளங்கள் இருக்கின்றன. எனவே, இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது, 14 கோடி ரூபாயையும் கரைகளை செப்பனிடுவதில் கவனம் செலுத்த, தண்ணீர் போகக் கூடிய கேட்ச்மெண்ட் ஏரியாக்களை ஆழப்படுத்தினால் உபயோககரமாக இருக்குமே தவிர ஏதோ திட்டங்களை தயாரித்தோம், கரைகளுக்கு மண்ணை அள்ளிப் போட்டோம், திட்டம் நிறைவேறியது என்று அதிகாரிகள் கருதினால், இந்த 14 கோடி ரூபாயும் விரயம்தான் என்பதை அனுபவ ரீதியாகக் கூறுகிறேன். இந்த 14 கோடி ரூபாயையும் செலவு செய்கின்ற காலத்தில், குறிப்பாக

[திரு. மு. ச. சிவசாமி] [1969 ஆகஸ்ட் 22

காச்மெண்ட் ஏரியாக்களை ஆழப்படுத்துவதற்கு முக்கியத்துவம் கொடுத்தால்தான் இந்த திட்டம் நல்லமுறையில் நிறைவேறும் என்பதை நான் இந்த சந்தர்பபத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நம் திட்டத்தில் அதிகமாக உற்பத்தி செய்யவேண்டியது 21 இலட்சம் டன்கள் உணவுப் பொருள்கள். குறிப்பாக, மேற்கு தொடர்ச்சி மலையை எடுத்துக் கொண்டால், 200 அடி உயரத்திலிருந்து 1,000 அடி உயரமுள்ள பிரதேசங்களை நாம் பார்ப்போமானால், அங்கே குத்துச் செடிகளாக 5 அடியிலிருந்து 10 அடி உள்ள செடிகளைத்தான் காண முடியும். வனம் என்று கருதக்கூடிய அளவுக்கு 40 அடி, 50 அடி, 60 அடி அளவு மரங்கள் அங்கே இல்லை. 10, 15 அடி செடிகளாலே வன உற்பத்தி பெருகுமா என்றால் இல்லை. அங்கு புதர் பகுதிகளாக இருக்கிற பகுதிகளை அழித்து, மரச்சீனியை பயிரிடுவோமானால், 21 இலட்சம் என்ன 41 இலட்சம் டன் அளவு கூட அதிகரிக்க முடியும் என்பதை நான் அரசாங்கத்திற்குக் கூறவிரும்புகிறேன். இந்தத் திட்டத்தில் கிணறுகளை வெட்டினோம். ஆழப்படுத்தினோம், குளங்களுக்கு மண் போட்டோம் என்று கூறினாலும் அப்படிக் கருதுவார்களானாலும், அதை ஏற்றுக் கொள்ள முடியாமல் இருக்க முடியுமே ஒழிய நடைமுறைக்கு உதவாமல் இருக்கும். நடைமுறையில் 21 இலட்சம் டன்னை பூர்த்தி செய்ய வேண்டுமானால் தனியாக இருக்கிற 200 அடி முதல், 500 அடி வரை உள்ள பகுதிகளிலுள்ள வனங்களிலுள்ள புதர் செடிகளை எல்லாம் அழிக்கவேண்டும். அங்கு மரச்சீனியைப் பயிரிட்டால் இலட்சக் கணக்கான டன்களுக்கு உற்பத்தி செய்யமுடியும். இப்பொழுது இருக்கிற 200 அடிக்குமேல் ஆயிரம் அடிக்குள் இருக்கிற பிரதேசங்களில்கூட சொந்த நிலம் வைத்திருப்பவர்கள் மரச்சீனி, சோளம் பயிரிட்டு நல்ல மகசூல் எடுக்கிறார்கள். இதை கவனத்தில் வைத்து வன இலாகா கொஞ்சம் விட்டுக்கொடுத்து, இது எங்களுடைய ஆதிக்கத்தில் இருக்கிறது, இதை நாங்கள் விட்டுக் கொடுப்பதா என்று டிபார்ட்மெண்டல் சண்டை நடத்தாமல் திட்டத்தை பூர்த்தி செய்யவேண்டும்.

பாசன வகைக்காக 39 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் அவனாசி திட்டத்திற்கு 4 கோடியும், பாலாறு பொறந்தலையாறு திட்டத்திற்கு 2.56 கோடியும் பரப்பலாறு திட்டத்திற்கு 1.08 கோடியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் முதலாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்க்கப்பட்டு, கைவிடப்பட்டு, 1968-ம் ஆண்டில் நெல்லை மாவட்ட கலெக்டரால் மீண்டும் பரிசீலனை செய்யப்பட அரசுக்கு சிபாரிசு செய்யப்பட்ட கீரியாறு திட்டத்தினைப் பற்றி நிதி அமைச்சருடைய அறிக்கையில் எதுவுமே குறிப்பிடப்படவில்லை. நெல்லை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் இப்பொழுது ட்ரௌட் ஏரியா, ட்ரௌட் ஏரியா என்று கூறுகிறார்கள். ஆனால் நெல்லை, இராமநாதபுரம் மாவட்டத்தில்



1969 ஆகஸ்ட் 22] [திரு. மு. ச. சிவசாமி]

முறையே கோயில்பட்டி, சங்கரன்கோயில், முதுகுளத்தூர் ஆகிய மூன்று பகுதிகளும் நிரந்தர வறண்ட பிரதேசங்கள். ஆண்டுதோறும் மழை இல்லை, பஞ்சம், பஞ்சம் என்று கூப்பாடு எழுப்பப்படுகின்ற இடம் இந்த மூன்று தாலுகாக்களாகும். வைப்பாறு என்ற நதி அங்கே ஓடுகிறது. இந்த கீரியாறு திட்டத்தை அமலுக்குக் கொண்டு வந்தால்—39 கோடி ரூபாய் அளவுள்ள திட்டத்தில் 5, 6 கோடியளவுள்ள இந்தத் திட்டத்தை அமலுக்குக் கொண்டுவந்தால் —நல்ல செழிப்பான கரிசல் மண் பிரதேசத்தை இரு போக நஞ்சைக்குக் கொண்டுவரமுடியும் என்று அரசுக்குச் சொல்ல விரும்புகிறேன். ஐந்து இலட்சம் ஏக்கர் புஞ்சை நிலங்களுக்கு முறையான தண்ணீரைச் செலுத்தினால் குறைந்த பட்சம் 7 இலட்சம் டன் நெல்லை அதிகமாக உற்பத்தி செய்து, 21 இலட்சம் டன்னை பூர்த்தி செய்ய முடியும். அந்த முறையில் மிகமிக பின் தங்கியிருக்கிற சங்கரன்கோயில், கோயில்பட்டி, முதுகுளத்தூர் ஆகிய பகுதிகளை கவனிக்க வேண்டும். ஆண்டுதோறும் பஞ்சம், பஞ்சம் என்று கூப்பாடு எழுகின்ற இந்த பகுதிகளுக்கு ஒரு வரப்பிரசாதம் கொடுக்கின்ற அளவிலே இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நான் குறிப்பிட்ட கீரியாறு திட்டத்தைச் சேர்க்கவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் அரசினரைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, குடிநீர் திட்டத்தைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியாகிய தூத்துக்குடி நகரம் கடற்கரை பிரதேசத்தில் இருக்கிறது. 40,000 மக்கள் இருந்த காலத்தில் அங்கே குடி தண்ணீர் திட்டம் கொண்டு வரப்பட்டு அது 40 ஆண்டுகளாகிறது. இன்றையதினம் அங்கு 1.6 இலட்சம் மக்கள் இருக்கிறார்கள். தண்ணீர் இருப்பதோ 40 ஆயிரம் மக்களுக்குத் தான். இந்த சந்தர்ப்பத்தில் தூத்துக்குடியில் தனியாக துறைமுக தண்ணீர் திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறது. அதன் மூலம் நாள் ஒன்றுக்கு 30 இலட்சம் கேலன் தண்ணீர் அங்கே வந்து கொண்டிருக்கிறது. ஆனால் இந்தத் துறைமுகத் திட்டத்தை 1972-க்குள் நிறைவேற்றினால்கூடத் துறைமுகத்துக்குத் தேவைப்படும் ஒரு மில்லியன் காலன் தண்ணீர்போக எஞ்சுவதில் 10 இலட்சம் காலன் தண்ணீர் தூத்துக்குடிக்குக் கொடுப்பதற்கு நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் வழி செய்யவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மின் சக்திக்காக 169 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னேன். அதில் தூத்துக்குடி அனல் மின்சாரத்தைப் பற்றி நிதி அமைச்சருடைய அறிக்கையில் என்ன இருக்கிறது. 'இந்திய அரசு ஆவன செய்யவேண்டியது அவசியமாகிறது' என்று தான் வருகிறது. தூத்துக்குடியில் அனல் மின்சாரத் திட்டத்தை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் போராடிச் சேர்க்கவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் நான் நமது சர்க்காரை கேட்டுக் கொள்கிறேன்.

மீன் துறைக்கு ரூபாய் 16 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. மீனவர்கள் மத்தியில் இன்றையதினம் பெரும் குறையாக இருப்பது விசைப் படகுகள் இல்லை, விசைப் படகுகள் இல்லை என்பது. ஆண்டு ஒன்றுக்கு 902 படகுகள்தான் இப்பொழுது தயாரித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆயிரம் படகுகள் தயாரிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. 98 படகுகள் அதிகமாக தயாரிப்பதன்மூலம் மீனவர்களுடைய குறைகளைப் போக்கமுடியுமா என்றால் முடியாது. இன்றையதினம் உணவு உற்பத்தியில் உப பொருளாக இருக்கக்கூடிய மீன் தொழிலை வளர்ப்பதற்கு குறைந்தபட்சம் ஆண்டொன்றுக்கு 1,500 படகுகளாவது கட்டுகின்ற முறையில் திட்டத்தை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 4 டிராலர்கள் வாங்குவதாக இருக்கிறது. ஆழ் கடலிலேதான் அதிகமாக மீன் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். மத்திய சர்க்கார் தூத்துக்குடியில் ஒரே ஒரு டிராலரை வைத்துக் கொண்டு நாள் ஒன்றுக்கு 2 டன் மீன் பிடிக்கிறார்கள். ஆகையால் 4-க்குப் பதில் 10 அல்லது, 8 டிராலர்களாக திட்டத்தை மாற்றி அமைத்தால் அதன்மூலம் பல இலட்சக்கணக்கான ரூபாய்கள் தமிழக அரசுக்கு இலாபம் கிடைக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.

தூத்துக்குடியிலிருந்து 10 மைலில், திருச்செந்தூரிலிருந்து 15 மைலில், கன்னியாகுமரியிலிருந்து 20 மைலில் பாக்டரி ஷிப்கள் என்ற ஷிப்களைக் கொண்டு நார்வேக்காரர்களும், ஜப்பானியர்களும் மீன்பிடித்து, அங்கேயே டப்பாக்களில் அடைத்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். தமிழகத்தில் தூத்துக்குடிக்கு 10 மைல் தூரத்தில் நார்வேக்காரர்கள், ஜப்பானியர்கள் மீன் பிடிக்கிறார்கள். நாம் ஒரு பாக்டரி ஷிப்பை வாங்கி அந்த தொழிலை நடத்தினால் வெளிநாட்டுச் செலாவணியும் அதிகமாக பெற முடியும், தமிழகத்திற்கும் அதிகமாக இலாபம் கிடைக்கும் என்று கூறிக்கொண்டு இரண்டே இரண்டு வார்த்தைகளைக் கூறி முடித்துக்கொள்ளுகிறேன்.

ரோடுக்காக 21 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிகமான, நெரிசலான போக்குவரத்து திருச்சிக்கும் சென்னைக்கும் மத்தியில் இருக்கிறது. தினசரி ஆக்ஸிடெண்டுகள்; தினசரி 10 லாரிகள் கவிழ்கின்றன இந்த வழியில். நான் சமீபத்தில் ஜெர்மன் நாட்டிற்கு சென்றபோது அங்கே இருக்கிற ரோடுகள் நூல் பிடித்ததுபோல் நேராக இருப்பதைப் பார்த்தேன். போவதற்கு ஒரு பாதை, வருவதற்கு ஒரு பாதை, மத்தியிலே ஒரு வழி. ரோடு ஐலண்டு என்று சொல்லப்படுவதைப்போல் இருக்கிறது. 40 மைலுக்குக் குறைவாக போவதற்கு ஒரு லைன், 40 மைல் வேகத்திற்குமேல் போவதற்கு ஒரு லைன் என்று வைத்திருக்கிறார்கள். நாம் தமிழகமெங்கும் அதைப்போல் மாற்றி அமைக்கா





விட்டாலும்; நாஷனல் ஹைவேஸ் டிபார்ட்மெண்டின் மேற்பார்வையில் இருக்கிற சென்னை—திருச்சி பாதையினை—200 மைல் பாதையினை—இன்னும் கொஞ்சம் அகலப்படுத்தி, இரண்டாக பிரித்து, வளைவுகளை நேராக்கி, அந்த முறையைக் கொண்டு வந்தால் நம்முடைய நாட்டில் இந்த விதமாக நடந்துகொண்டிருக்கிற இந்த விபத்துக்களைத் தடுப்பதற்கு வழி இருக்கும். இவைகளையெல்லாம் கருத்தில்கொண்டு இந்த திட்டத்தில் நான் கூறிய கருத்துக்களை ஒருசில சேர்க்கவேண்டுமென்று கோரி முடித்துக்கொள்கிறேன்.

* திரு. என். சங்கரய்யா: தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய வரைவு குறித்து நடக்கக்கூடிய இந்த விவாதத்தில் இந்த மாநிலத்தினுடைய எதிர்காலம், அகில இந்தியாவிலே போடப்படக்கூடிய திட்டங்களைச் சேர்ந்திருக்கக்கூடிய காரணத்தினால், மாநிலங்களினுடைய பொருளாதாரக் கொள்கைகள், இந்திய ரீதியிலே போடப்படக்கூடிய பொருளாதாரக் கொள்கைகளை சேர்ந்திருப்பதனால் அதைப் பற்றியும் நாம் கவலைப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கடந்த காலத்தில் நாட்டு அரசாங்கத்தை நடத்தி வந்த காங்கிரஸ்காரர்களைப்பற்றிக் குறிப்பிட்டு வந்தார்கள். ஏன் இவ்வாறு மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றியும் நாடு இப்படிப்பட்ட மோசமான நிலையில் இருக்கிறது என்று சொன்னால் அதற்கு நம்முடைய நாட்டிலே மேலை நாடுகளைச் சேர்ந்த தனிப்பட்ட பெரு முதலாளிகளுடைய முதலீடுகள், மிகக் கணிசமான அளவிலே இருக்கின்றன. தேயிலை, சணல், பெட்ரோல் இரசாயனங்கள் ஆகிய தொழில்களில் அவர்கள் முதலீடு அதிகமாக இருக்கிறது. அவர்கள் ஏராளமான இலாபங்களை சம்பாதிக்கிறார்கள் இங்கு. இதனால் இந்த தேசத்தினுடைய பொருளாதாரம் பாதிக்கப்படுகிறது. இதனுடைய விளைவு என்ன என்று சொன்னால் 1955-ம் ஆண்டிலே இந்திய அரசாங்கம் வாங்கியிருந்த கடன், பப்ளிக் டெட் என்பது, அந்நிய நாடுகளிலிருந்து வாங்கிய கடன் ஒரு சதவிகிதத்திற்கும் குறைவாக இருந்தது. ஆனால், இப்பொழுது 1966-ம் ஆண்டு மார்ச்சில் இந்திய அரசாங்கம் வாங்கியிருக்கக்கூடிய கடன்களில் மொத்தத்தில் 32 சதவிகிதம் அயல் நாடுகளிலிருந்து பெறக்கூடிய அளவுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதுவும் ரூபாய் நாணயத்தின் மதிப்பு குறைக்கப்பட்ட பிறகு இந்திய அரசின் மொத்தக் கடனில் 45 சதவிகிதம் அயல்நாடுகளுக்கு, அயல்நாட்டு முதலாளிகளுக்கு கொடுக்கவேண்டிய கடமை இருக்கிறது. இப்படி அதிகப்படியான அளவுக்கு சார்பு நிலை ஒரு நாட்டிற்கு இருந்தால், அது ஒரு நாட்டினுடைய பொருளாதாரத்தை எவ்வளவு தூரம் பாதிக்கக்கூடியதாக இருக்கும் என்பதை நாம் சற்று ஆழ்ந்து சிந்தித்துப்பார்க்கவேண்டும். இப்பொழுது இதனால் எப்படிப்

[திரு. என். சங்கரய்யா] [1969 ஆகஸ்ட் 22

பட்ட விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன? மிக்ஸட் எகானமி, கலப்புப் பொருளாதாரத்தை நடத்துவதாக இந்தியப் பேரரசு கூறுகிறது. இது சோஷலிசமும் அல்ல, முதலாளித்துவமும் அல்ல. இது ஒரு மிக்ஸட் எகானமி, கலப்பு பொருளாதாரம் என்று சொல்கிறார்கள். ஆனால், எந்த ஒரு கொள்கையினுடைய விளைவையும் நிர்ணயிப்பதற்கு அது நடைமுறையில் எவ்வாறு விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். அப்படிப் பார்த்தால் இந்திய அரசு சென்று கொண்டிருக்கக்கூடிய மூன்றாவது பாதை, அதாவது மிக்ஸட் எகானமியினால் என்ன விளைவு ஏற்பட்டிருக்கிறது? நாட்டில் இருக்கக்கூடிய தனியார் துறையில் இருக்கக்கூடிய சகல தொழில்களையும் எடுத்துக்கொண்டால், சகல தனியார் துறைகளிலும் இருக்கக்கூடிய அவர்களுடைய சொத்து மதிப்பீட்டிலே 47 சதவிகிதம் சொத்தை 75 ஏகபோக முதலாளிகள் வைத்துக்கொண்டு வருகிறார்கள். காங்கிரஸ் நண்பர்கள் கூறுவார்கள். அதைப் போலவே சுதந்திராக் கட்சி நண்பர்களும் கூறுவார்கள். தனிப்பட்ட முதலாளித்துவ வளர்ச்சியிலே, ஃப்ரீடிரேட், சுயேச்சையான வியாபாரத்தில், சுயேச்சையான தொழில்களினால் ஏராளமான தொழில்கள் பெருகியிருக்கின்றன, தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்று கூறுவார்கள். 20 ஆண்டு காலமாக இருக்கக்கூடிய தனியார் துறையில் 47 சதவிகிதம் சொத்துக்களை 75 ஏகபோக முதலாளிகள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். தனியார் துறையிலே இருக்கக்கூடிய மொத்தம் பெய்ட்-அப் காபிடலில் செலுத்தப்பட்ட மூலதனத்தில் 75 ஏகபோக முதலாளிக் குடும்பங்கள் 44 சதவிகிதத்தைப் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்திய அரசு ஏதோ ஒரு பிரம்மாண்டமான மூன்றாவது பாதையிலே சென்று கொண்டிருக்கிறோம் என்று சொன்னால், நடைமுறையில் அதனால் என்ன விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைப் பார்க்கவேண்டும். எழுபத்தைந்து முதலாளிகள் ஏகபோக ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, உண்மையிலே பார்க்கப்போனால், இந்த நாட்டில் தொழில் துறை வளரவில்லை, அதனுடைய வருமானமும் உயரவில்லை. இதனுடைய விளைவுகளை நாம் நன்றாகப் பார்க்க முடியும்.

1950-ம் ஆண்டு நாட்டிலுள்ள குடிமகனின் சராசரி வருமானத்தை 1975-ம் வருடத்திற்குள் இரட்டிப்பாக ஆக்கிவிட வேண்டும் என்று இந்திய அரசாங்கம் குறிக்கோளாக வைத்துக் கொண்டார்கள். அதாவது, 25 ஆண்டு காலத்தில் 1950-ம் ஆண்டில் இருந்த சராசரி நபர் வருமானத்தை இரட்டிப்பாக்க வேண்டும் என்பது குறிக்கோள். தற்பொழுது மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட பிறகு திட்டத்தினுடைய வளர்ச்சியினால் நாம் எதிர்பார்த்த பலன் இல்லை. 3.2 சதவிகிதம் வளர்ச்சியை எதிர்பார்த்தோம் ஆண்டு தோறும். ஆனால், ஏற்பட்ட வளர்ச்சி 1.29 சதவிகிதம்தான். இதன் விளைவு என்ன தெரியுமா?



1969 ஆகஸ்ட் 22] [திரு. என். சங்கரய்யா]

தேசிய சராசரி நபர் வருமானத்தை 1975-ம் ஆண்டிற்குள் இரட்டிப்பாக ஆக்கலாம் என்பது முடியாத காரியமாகிவிட்ட பிறகு, கிறிஸ்துவுக்குப் பிறகு 2005 வருஷங்களில் இந்த லட்சியத்தை எட்டிப் பிடிக்க முடியும் என்று இந்த நாட்டின் காங்கிரஸ் ஆட்சியின் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. இப்படி ஆமைவேகத்தில் போனால், இந்த நாட்டிலுள்ள மக்கள் பொறுத்துக்கொண்டிருப்பார்களா? அல்லது பொறுத்துக்கொண்டிருக்கக்கூடிய இப்படிப்பட்ட நிலைமையை உண்டாக்கிய ஆட்சியைத்தான் சகித்துக் கொண்டிருப்பார்களா? நிச்சயமாக மாட்டார்கள். நாட்டிலுள்ள மக்கள் தொகை வளர்ந்துவரக் கூடிய சூழ்நிலையில், முதலாளித்துவப் பாதையிலோ அல்லது மிக்ஸட் எகானமி என்ற மூன்றாவது பாதையிலோ செல்வதை விட்டுவிட்டு, உண்மையிலேயே நாம் சோஷலிஸ பாதையில் செல்வதன் மூலம்தான் இந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியும்.

இன்னொன்று. நாட்டின் சேமிப்பைப் பற்றி கூறப்படுகிறது. நாட்டில் சேமிப்பு வளர்ச்சி ஏற்படவேண்டுமென்றால், தொழில் வளர்ச்சி ஏற்படவேண்டும், முதலீடு அதிகமாகப் போடவேண்டும். விலைவாசி உயர்ந்திருக்கக்கூடிய காரணத்தினால், வேலையில்லா திண்டாட்டத்தினால் மக்களுடைய வருமானம் உண்மையிலேயே குறைந்துவிட்டது. இந்த சூழ்நிலையில் சேமிப்பை எப்படி பெருக்க முடியும்? ஆகவேதான் மார்க்ஸிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி அடிப்படையில் சில காரியங்களைச் செய்யவேண்டும் என்று கூறுகிறது. அயல் நாட்டுத் தொழில் முதலாளிகள் முதலீடுகள் செய்யப்பட்டதிலிருந்து லாபத்தை எடுத்துச் செல்வதைத் தடைப்படுத்தவேண்டும். அதுமட்டுமல்ல. இன்றைக்கு இந்த நாடு பிற நாடுகளைச் சார்ந்திருக்கிற நிலைமையை அதிகமான அளவுக்குக் குறைக்கவேண்டும். மூல இயந்திரங்கள் பெறுவது, தொழில் நுணுக்க அறிவைப் பெறுவது, முதலியவைகளை வியாபார அடிப்படையிலேதான் அயல் நாடுகளிலிருந்து பெறவேண்டுமே தவிர, பிற நாடுகளை அதிகமாகச் சார்ந்திருக்கும் நிலை நீடித்தால், இந்தியாவின் பொருளாதார சுதந்திரத்திற்கே, அரசியல் சுதந்திரத்திற்கே வரக்கூடிய ஆபத்தை தவிர்க்க முடியாது என்று எங்கள் கட்சி நாட்டு மக்களை எச்சரித்துக்கொண்டு வருகிறது.

தமிழ் நாட்டின் நிலைமையை எடுத்துக்கொள்வோம். எனக்கு முன்பு திரு. மாரிமுத்து அவர்கள் விவசாயிகளைப் பற்றிப் பேசினார்கள். நாங்கள் வேறு கோணத்திலிருந்து பார்க்கிறோம். தமிழ் நாட்டில் 28 லட்சம் விவசாயத் தொழிலாளிகள் இருக்கிறார்கள் என்று கணபதியாப் பிள்ளை கமிஷன் அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய ஏழை விவசாயிகளை, குத்தகை விவசாயிகளை கணக்கில் எடுத்துக்கொண்டால், மொத்த ஜனத்தொகையில் 100-க்கு 70 பேர்கள் இருக்கிறார்கள். 20 ஆண்டு காலத்தில் நிலச் சீர்திருத்தச் சட்டம் என்ன

D
V211, 31 'N69
3 N70 . 22 ; 31



V—cont.

| | PAGES |
|---|---|
| VINAYAKAM, Thiru K.—*cont.* | |
| D.E.E., 1965-66—Voting ... ... ... | 148, 149 |
| Drought reief, amount spent ... ... ... | 129–134 |
| Dry lands, assignment in Thanjavur district ... | 347–349 |
| Five-Year Plan (Fourth), Draft Outline (M) ... | 56–62, 64, 376,383 |
| Intensive Agricultural Development Programme, extension ... ... ... ... ... | 455 |
| Land Mortgage Banks (Amendment) Bill, 1969 ... | 616–617 |
| 'Mannargudi form' Assessment features ... ... | 450–451 |
| Panchayats (Second Amendment), Bill, 1969 ... | 533–534 |
| Pelletisation Plant at Salem ... ... ... | 330 |
| Posts of Grama Sevikas and Mukya Sevikas, abolition ... ... ... | 350–352 |
| Prisoners, remission to ... ... ... | 229–230 |
| Question hour, extension (Point of Order) ... | 26 |
| Questions answering of (Point of Order) ... ... | 33, 34 |
| Statement by Minister on a matter outside the one under discussion (Point of Order) ... ... | 568 |
| Statement on the recommendations of the Fifth Finance Commission—Clarification ... ... | 573 |
| Supplementary Demands, moving of cut motions (Point of Order) ... ... ... ... ... | 150 |
| Survey of Lands, introduction of modern methods | 242 |

W

| | |
|---|---|
| **WATER-FALLS—** | |
| Falls near Kalakad, development ... ... | 478 |
| **WATER-SUPPLY—** | |
| Deteriorating position and prevalence of jaundice in Madurai (C.A.) ... ... ... ... ... | 364–366 |
| Kundah water for Coimbatore City ... ... | 463 |
| Position in Madras City, Madurai and Coimbatore towns (St.) ... ... ... ... ... | 495–446 |

61463